9-6.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஸ்ரீ பகவத்கீதை

கீதார்த்த தீபிகை என்கிற உரையுடன்

[1-முதல் 10-அத்தியாயங்கள் அடங்கியது.]

(முதல் புத்தகம்)

இதில்

ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ மாத்துவர், ஸ்ரீ தரர், ஸ்ரீ ராகவேந்திரர், ஸ்ரீ மதுஸூதன சரஸ்வதி, ஸ்ரீ ஆநந்த கிரி சுவாமிகள் முதலியோரது பாஷ்யங்களும் வியாக்கியானங்களும் அடங்கியுள்ளன.

இயற்றியவர்:

கோயமுத்தூர் V. குப்புசாமி அய்யர்.

பதிப்பாசிரியர்கள்:

S. G. அய்யர் கம்பெனியார்

விற்பனையாளர்:

பாலாஜீ அண்டு கம்பெனி,

நெ. 8, ராஜரத்தினம் தெரு, கீழ்ப்பாக்கம்,

சென்னை.

இதன் விலை] [ரூபா 12-0-0.

பதிப்பு 1944

श्रीमते वासुदेवाय नमः.

अनुमोदनश्लोकाः

म-रा-श्री, वो-नूसि. वेङ्कटरमणार्यकृतिः.

अनायासाद्द्रुततत्त्वजिज्ञासूनां सतां मुदे ।
[illegible] भाष्याणि व्याख्या[illegible]वल्लीमृतैः ॥
कृष्णद्वैपायनरचितसिद्धान्तत्रयबोधिका ।
श्रीतात्पर्यविदीपिका जीयादाचन्द्रतारकम् ।

मन्नार्गुडि

ब्र - श्री, रामचन्द्रशास्त्रिकृतिः.

अविद्यातिमिरान्धानां देहिनां तत्त्वसिद्धये ।
कृष्णद्वैपायननिहिता जीयात्तात्पर्यदीपिका ॥
मतत्रयसिद्धान्तज्ञजुष्टा श्रीतात्पर्यदीपिका ।
जीयादाकल्पमुत्तमा निर्वाणानन्ददायिनी ॥

मैसूर्,

ब्र - श्री, श्रीनिवासाचार्यकृतिः.

[illegible]
[illegible] सेतिहासा
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible] भाष्य[illegible] ॥

சாற்றுக்கவிகள்.

[illegible]

சாற்றுக்கவிகள்.

தில்லையம்பூர் இயற்றமிழ் வித்துவான்

ம-ா-ா-ஸ்ரீ

வெங்கடராமய்யங்கா ரியற்றியவை.

கழிநெடி லாசிரியம்.

உயர்வுபெறுந் தமிழ்நாட்டிற் செழுமறையோ
ருபநிடத மொருங்கு தேர்ந்தே
யுயர்வுமிகுந் தம்முதர நோய்தொலைப்பா
னலைந்துநித மருளிற்குன்றி
மயர்வழிக்கத் தம்மவர்க்கே மனமிரங்கார்
கல்வியினு மகிழ்ந்துநாளு
நயமுணர்த்தப் பிறர்க்கறிவி னுழைப்பவர்தங்
கல்விவகை நன்காமன்றே. க.

அன்றிருந்தார் தொன்முனிவ ரனைத்துணர்வு
மளிக்கவரு மறிவுதாங்கி
யின்றறிந்தே யிருட்டகற்றுங் கைவிளக்காங்
கீதையுரை யிரங்கித்தந்தார்
நன்றிருந்தே பார்த்திடுமின் றமிழ்நடையுஞ்
சுலபமதா நவின்றதூயோன்
வென்றிமிகுஞ் சோணாட்டுக் குப்புசாமி
வேதியனும் விபுதர்கோனே. உ.

கோயமுத்தூர் நேட்டிவ் ஐஸ்கூல் தமிழ்முனிஷி

ம-ா-ா-ஸ்ரீ, முத்துசாமி அய்யர் அவர்க ளியற்றிய

அகவல்

ஓதைநெடுங்கட லாடையுடுத்த
மேதகுபுவிக்க ணான் வெய்துறுமாந்தர்
பேதிருண்மூலப் பெருபிழம்பிடைபடிஇ
யோதிடுதகைமூன் றுரைகரணம்பொறி
தம்மிலுமூன்று தளையுமவர்க்கொடு
விம்மியவினைநாண் வீக்கிடாயாப்புறூஉ
தாபத்திரயத் தழலிடைப்புழுவாய்
சோபத்தினிலே தோய்ந்துமருண்டெனும்
பிறவியுமிறுமாம் பீழையொறுக்கி
மறுவிறனுணர்வுறூஉ மாண்சிவம்பெறவருள்
கொண்டுசெங்கமலை தன்கொழுனனாதி
தண்டொடுநேமி தாங்கியவெம்பரன்
அண்டர்கணாயக னுயரிலனையெலா
முண்டவன்வாய்மலர்ந் துசிதவருச்சுனன்
கருத்தொடுவினவக் கசடறுஞானப்
பொருட்கதிர்விரித்த புனிதநற்கீதைக்
கறநிலைவீடுண ரான்றோர்செய்யுரைத்
திறனெலாஞ்சேரத் திரட்டிவிளக்கியே
நல்வகைச்சேரநன் னாட்டினுளுதித்துவாழ்
சொல்வளக்கோயமுத் தூரினினிலவுவோன்
பல்லுயிர்க்குபகரிப் பனாடற்பயனென
சொல்லுநூற்கொக்கவே தொல்லுலகுக்குந்
குப்புசாமிப்பெயர் கொண்டிடுவேதிய
நற்புதன்செய்தபோ னன்றியார்செய்வரே.

[illegible]

[illegible]

अवतारिका.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

---

* வ சபதம் ஐவ ; என்கிற அர்த்தத்தில் கிரகிக்கத்தக்கது.

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।

[illegible]

அவதாரிகை.

நன்மையளிக்கவென்று நாரணனவதரித்து
மன்னுபூவுலகிற்காக்ஷி வரைவிலாதெல்லோருக்கும்
தன்மையாய்விளக்கிநல்ல தத்துவவுபதேசத்தைப்
பன்னுமாவாசுதேவன் பதத்தினைப் போற்றிபோற்றி.

நேத்தியாம்வேதாந்த வாக்குக்குமெட்டாத
நிர்குணாநந்த பரமே :
நெய்யுவெண்ணெயுநிகர் நேசமாம்ஜீவேச
நேர்மையாயுறு மாயமே :
எள்ளிலெண்ணெயுமேல் எங்குமேபரவிடும்
ஏகநாயக போதமே :
எண்ணிடத்தொலையாத எத்தனையோவஸ்துவாய்
என்றிடுசிதா நந்தமே :
பரிபூரணஅத்துவைத சச்சிதானந்தகன
பரதத்துவமெஞ் ஞானமே :
படைத்தன்முதல்செய்யினும் பற்றின்றிசாக்ஷியாய்
பார்க்கின்ற சைதன்னியமே :
வேதோபநிடதமெனும் வேதாந்தசாரமாம்
கீதோபதேச விதமே :
பாஷ்யவ்யாக்யாநாதி அர்த்தசங்கிரகமும்
பாங்கான்தமிழ் நடையிலே :
கிளர்மைசேர்பண்டிதர்கள் பார்த்தியற்றியவிந்த
கீதார்த்த தீபிகையினை :
பரமார்த்தமென்னப் படித்துளோர்க்கின்புற
பரமபதம்நீ யருள்வையே.

வி. கு.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம: ||

முகவுரை.

சகலமான பிராணிகளும், சுகாநுபவங்களினால், ஆநந்தத்தை அடைய விரும்புகின்றனவென்பதை நாம் நிமிஷந்தோறும் கண்டுகொண்டேயிருக்கிறோம். அதிலும் ஞியானத்தோடு கூடிய மனுஷிய ஜென்மத்தை அடைந்திருக்கும் நாம், அச்சுகாநுபவங்களினால் அடையப்படும் ஆநந்தம், சாசுவதமானதாகவிருக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.

இப்படிப்பட்ட ஸ்திரமான ஆநந்தமின்னதென்பதை அறியும்படியான ஞியானமும், அதை அடையும் வழி இன்னதென்று காட்டும் சுருதி ஸ்மிருதி முதலான பிரமாணங்களும், நமக்கு அளிக்கப்பட்டிருந்தும், அவற்றை ஆராய்ந்தறியாமல், பெரும்பாலோர் இவ்வுலக விஷயங்களில் அந்த சாச்சுவதமான ஆநந்தமிருப்பதாக பிரமித்து, சிற்றின்பங்களை ஒவ்வொன்றாய் பல ஜென்மங்களில் அநுபவித்து பார்த்த பிறகுதான் அவைகளில் அச்சுகமில்லை என்கிற ஞியானத்தை அடைகிறார்கள். ஆகையால் விவேகத்தோடு கூடியவர்கள் அந்த சாச்வதமான சுகமின்னதென்பதை சாஸ்திரப் பிரமாணங்களால் தெரிந்து இந்த ஜன்மத்திலேயே அதை அடைய முயலவேண்டியது அவசியமல்லவா ?

வாஸ்தவத்தில் கோரத்தகுந்ததெதுவோ அதைவிட்டு கோரத்தகாததைக் கோருவது லோக சுபாவமாதலால், சுகத்தின் தாரதம்மியத்தை விசாரித்து ஆராய்ந்தறியவேண்டியது அவசியமாகவாகிறது.

சுகமானது உத்தமம், மத்திமம் அதமம் என மூன்று வகைப்படும். இவைகளில் அதம மத்திம சுகங்கள் பல உள்பிரிவுகளை யுடையனவாகிலும் அந்த உள்பிரிவுகளைப்பற்றி விசாரிக்க இப்போது அவசியமுமில்லை. பொதுவாய் விசாரிப்பதே போதுமானதாயு மிருக்கிறது.

அதமசுகமெதுவென்றால், இவ்வுலகத்தில் காதுகளால் வீணை முதலிய வாத்தியாதிகளைக் கேட்பதினாலும், கண்களால் விநோதமான ரூபாதிகளைப் பார்ப்பதினாலும், மூக்குகளால் புஷ்பாதி வாசனைகளை கிரகிப்பதினாலும், நாவினால் பழம் முதலியவைகளை ருசிபார்ப்பதினாலும், துவக்கில் சந்தனம் முதலியவைகளை பூசிக்கொள்ளுவதினாலும் பின்னுமிப்படியே தன கனக வஸ்து

வாகன புத்திர மித்திர களத்திராதிகளுடன் கூடியிருப்பதினாலும் உண்டாகிற மனுஷியாநந்த மென்று சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டசுகமே.

பெரும்பாலோரால் விரும்பப்படுகிற இவ்வுலகசுகத்தை அதமமென்று எப்படிச் சொல்லலாமென்றால், அப்படிச் சொல்லப் பலமுகாந்திரங்களுண்டு. அவைகளில் சிலதை இவ்விடத்தி லுதாரணமாய் எடுத்துச்சொல்வோம்.

1. அது ஸ்திரமா யிருக்கத்தக்கதல்ல. எப்படியென்றால், வீணை முதலிய வாத்தியாதிகளைக் கேட்கிறவரையிலும் விநோதமான ரூபாதிகளைப் பார்க்கிறவரையிலும் புஷ்பாதிகளை முகருகிறவரையிலும் பழம் முதலியவைகள் நாக்கில் சம்பந்தித்திருக்கிறவரையிலும் சந்தனாதிகளை தேகத்தில் பூசியிருக்கிற வரையிலும் தன கனக வஸ்து வாகன புத்திர மித்திர களத்திராதிகளுக்குத் தீங்கு நேரிடாதிருக்கிற வரையிலும் ஏதோ சுவற்பகாலம் சுகமிருக்குமானாலும் அச் சுகம் நீடித்திராது. மேலும் இப்படிப்பட்டசுக மனுபவிக்கும் காலத்திலேயே தற்செயலாய் நேரிடும் துக்க சம்பந்தத்தினால் அச் சுகம்கூட மாறிப்போகிறது.

2. இப்படிப்பட்ட விஷய சுகமானது எல்லோருக்கும் சமமாயிருப்பதாகச் சொல்லலா மென்றால் அப்படியுமில்லை. ஒருவனுக்கு சுககரமாயிருக்கிற ஆகாராதி வஸ்துக்கள் மற்றொருவனுக்கு சுககரமா யிருக்கவில்லை.

3. சிலருக்கு சுவற்பகாலமாவ திருக்கிறதாகச் சொல்லப்பட்ட அந்த சுகமானது துக்கக் கலப்பற்றதாக விருக்கிறதோ வென்றால், அப்படியுமில்லை. இராஜாவாகவிருந்து சகல பாக்கியங்களையும் அனுபவிக்கிற காலத்திலேயே தன் வம்சவிருத்திக்குப் புத்திர னில்லையென்றும், நித்திய தரித்திரனாயிருக்கிறவன் புத்திரபாக்கிய முண்டாச்சு தென்று சந்தோஷமடையும் காலத்திலேயே இக்குழந்தைகளை ரக்ஷிக்க தனமில்லையே என்றும், சுகத்தைக் கொடுக்கத்தக்க சகல சம்பத்திருந்தும் அவைகளை அனுபவிக்க ஏதுவில்லாமல் வியாதியினால் பீடிக்கப்படுகிறேனென்றும், பின்னுமிப்படியே ஒவ்வொருவனும் சுகத்துடன் துக்கத்தைக் கலந்தே அனுபவிக்கிறான்.

ஆகையால், பலரால் விரும்பப்படுகிறதானாலும் இந்த உலக சுகம் வாஸ்தவமான சுகமல்ல. ஆனால் உலகத்தில் இதை சுகமென்று வியவகரிக்கிறார்களே வென்றால், வாஸ்தவத்தை யறியாததினால் அப்படி வியவகரிக்கப்படுகிறது. எப்படி என்றால், இராஜாவாயிருப்பது அதிக சுகமென்று சொல்வோமானால், அவ்வரசனுக்கும் பலவித துக்கங்களிருக்கின்றன. அவனுடைத்தாயிருக்கிற சேவகர்கள் புத்திர மித்திர களத்திராதிகள் வாகனாதிகள் இவைகள் மூலமாயும், சத்துருக்கள் மூலமாயும், நோய் பசி தாகம் முதலியவைகள் மூலமாயும், தன் தேசத்திலுண்டாகும் க்ஷாமம் முதலியவைகள் மூலமாயும், தனக்குச் சமானமானவர்கள் குரு மற்றுமுள்ள பெரியோர்கள் இவர்

கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய மரியாதை பூஜை முதலியவைகளில்
குறைவுண்டாகாமல் நடக்கவேண்டியதின் மூலமாயும், துக்க மெவ்வளவுண்
டாகுமோ அவ்வளவு சுகமுண்டாக ஏதுவில்லை. இப்படியே நடக்க சக்தி
யற்றவன் நடப்பவனையும் நடக்கிறவன் வாகனாதிகளில் சவாரிபோகிறவனை
யும் சுகி என்று வியவகரித்தாலும் வாஸ்தவத்தில் அவர்களை சுகிகளென்று
சொல்ல இடமில்லை. ஆகையால், இந்த உலகசுகத்தை அதமமென்றே
சொல்ல வேண்டும்.

மத்தியம சுக மெதுவென்றால், இவ்வுலகத்தில் சிரத்தையோடு
தேவதைகளை யுத்தேசித்தும் பலனை யுத்தேசித்தும் செய்கிற வேதோக்த
மான நித்திய நைமித்திக கருமங்கள், சத்பாத்திரத்தில் செய்யப்படும்
தானம், தேவாலய பிரதிஷ்டை, சத்திரம் சாவடி தண்ணீர்ப்பந்தல் முத
லியவை கட்டிவைத்தல், தடாகாதிகள் வெட்டிவைத்தல், தேவாலயம் சத்
திரம் தண்ணீர்ப்பந்தல் முதலியவைகளில் பூஜை அன்னதான முதலியன
நடப்பித்தல், முதலாயுள்ள புண்ணிய கருமங்களினால், அக்கருமங்களுக்குத்
தக்கபடி பலன்களை அனுபவிக்க சுவர்க்கலோகம் முதலிய லோகங்களில்
தேவசரீரமடைந்து, அந்த லோகங்களில் அனுபவிக்கத் தக்கதாயும் துக்கக்
கலப்பற்றதாயும் எப்போதும் சந்தோஷமுள்ளதாயும் வியாதி முதலிய துக்க
மில்லாததாயும், இப்பூலோக சுகத்தைவிட பலமடங்கு சிரேஷ்டமானதாயும்,
தேவாநந்தமென்று சுருதி ஸ்மிருதி புராணாதிகளில் சொல்லப்பட்டதாயு
முள்ள சுகமே. இந்த சுவர்க்காதி லோகங்களில் அனுபவிக்கப்படும் சுகத்
தை மத்தியம சுகமென்று எப்படி சொல்லலா மென்றாலோ, இது அழி
வற்ற சுகமல்லாததினால்தான். ஏனென்றால், எந்த புண்ணிய கருமத்தின்
பலனை அனுபவிக்க எந்தலோகத்தை ஒருவன் அடைந்தானோ, அந்த லோகத்
தில் அந்த புண்ணிய கருமத்திற்காகக் குறிப்பிட்டிருக்கிற காலம்வரையில்
தான் அந்த லோகசுகத்தை அனுபவிக்கலாம். அந்தப் புண்ணியத்தின்
பலனை அனுபவிக்கக் குறித்தகாலம் முடிந்தவுடனே “யாவத்ஸம்பா
தமுஷித்வா அதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே” “க்ஷீணே
புண்யே மர்த்யலோகம் விஶந்தி” என்கிற பிரமாணப்படிக்கு அவன்
இந்த மனுஷிய லோகத்தில் ஜநித்து, மறுபடியும் இந்த உலகத்தின் சுகதுக்
காதிகளையே அனுபவிக்க வேண்டியவனாயிருக்கிறானதினால்தான்.

உத்தமசுக மெதுவென்றால், ஸர்வசிரேஷ்டமான மோக்ஷமே. மோக்ஷ
மென்கிற பதத்திற்கு விடுதலை யடைகிறதென்பதே சரியான அர்த்தம். எதி
லிருந்து விடுதலையடைகிற தென்றால், ஜனனமரணங்களாகிற சம்சார துக்
கத்திலிருந்துதான். இந்த ஜனனமரணம் எப்படி துக்கமானதென்றாலோ,
மலமூத்திர இரக்த மாம்சம் முதலியவைகளால் நிறைந்ததாகிய தாயின் கருப்

பாசயத்தில் கட்டுண்டிருப்பதும் துக்கமே. அக்கருப்பத்திலிருந்து தலை கீழாய் பல துன்பங்களையடைந்து பூமியில் பிறப்பதும் துக்கமே. பிறந்த பிறகு பால்லிய கௌமார யௌவன வார்த்தக தசைகளில் பசி தாகம் வியாதி குடும்ப சம்ரக்ஷணை குடும்ப வியோகம் அசக்தி முதலியவைகளும் துக்கமே. கடைசியாய் மரணாவஸ்தையும் துக்கமே. ஆகையால், இச்சம்சாரம் துக்கமென்று சொல்லப்பட்டது. அதிலிருந்து விடுபடுவதாகிய மோக்ஷமானது அழிவற்றதாகிய நித்தியாநந்தமென்றும் பிரம்மாநந்தமென்றும் சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகளில் பிரசித்தமாயிருக்கிறது.

சுகமானது இப்படி மூன்றுவித தாரதம்மிய முடையதாயிருப்பதினாலே, ஒவ்வொருவனும் உத்தம சுகமடைய முயலவேண்டுமேயன்றி மற்றசுகங்களை விரும்பக்கூடாது. அதையடைய முயற்சிசெய்துவந்தால் அவனவன் முயற்சிக்குத் தக்கபடி இந்த ஜன்மத்திலேயேயாவது "பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே" என்கிற பிரமாணப்படிக்கு சில ஜன்மங்களுக்குப் பிறகாவது உத்தம சுகமடையலாம். மத்தியமாதம சுகங்களைக் கோரி அவைகளிலேயே பற்றுள்ளவன் அநேககோடி ஜன்மங்களை எடுத்தாலும் உத்தம சுகமடையமாட்டான்.

ஆகையால், இந்த உத்தம சுகமடைய சாதனமெது என்பதை இப்போது விசாரிக்கவேண்டியதாகிறது. நேரான ஸாதனம் ஞானமாயும் பரம்பரையான ஸாதனம் நிஷ்காமகருமங்களாயு மிருக்கின்றன. அச்சாதனங்களை அடையும் மார்க்கத்தை நமக்கு வெளிப்படுத்துவதில் முக்கியமும் சருவசிரேஷ்டமுமான பிரமாணம் சுருதியே. சுருதி என்பது வேதமென்றறிக. வேதமானது கருமகாண்டம் ஞானகாண்டமென இருவகைப்படும். நித்திய நைமித்திக கருமங்களைப்பற்றியும் அவைகளை அநுஷ்டிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் சொல்லுகிற பாகம் கருமகாண்டமென்றும், எது மோக்ஷத்திற்கு நேரான சாதனமோ, அந்த ஞானத்தை உண்டாக்குகிறவும் வேதாந்தமென்று சொல்லப்படுகிறவுமான பாகம் ஞானகாண்டமென்றும் சொல்லப்படுகிறது. இக்கருமகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற நித்திய நைமித்திக கருமங்களை அவைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற பலனை அடையவேண்டுமென்கிற கோரிக்கையுடன் செய்தால் மத்தியம சுகமடையலாம்; பலனில் அபேக்ஷையில்லாமல் விதிப்படி செய்து ஈசுவரார்ப்பணம் செய்துவந்தால், அதினால் சித்தசுத்தியும் சித்தசுத்தியினால் ஞானமும் ஞானத்தினால் மோக்ஷமுமடையலாம்.

விஸ்தாரமாயும் மகாத்துமாக்களுக்கே அர்த்தமாகக் கூடியதாயும் உத்தமசுக மடைவிக்க முக்கிய சாதனத்தை வெளிப்படுத்துகிறதாயு மிருக்கிற வேதாந்தமாகிய உபநிஷத்துகளி னர்த்தங்களைப் பூர்ணமாய் அறிந்துகொள்

ஞும் சக்தி நமக்கில்லையே என்றாலோ, இக்கொடுமையான கலியுகத்தில் நாமிப்படிப்பட்ட நிலைமைக்கு வருவோமென்பதை யுத்தேசித்தே சாக்ஷாத் மகாவிஷ்ணுவானவர் கிருஷ்ணாவதாரம் செய்திருந்த காலத்தில் அர்ச்சுனனை நிமித்தமாகக்கொண்டு சகலரும் கடைத்தேற சுலபமா யிருக்கும்பொருட்டு வேதாந்தார்த்தங்களின் சாரமாகிய கீதா சாஸ்திரத்தை உபதேசித்திருக்கிறார்.

மகாவிஷ்ணுவானவர் கிருஷ்ணாவதாரம் செய்ய வேண்டியதென்ன? அவர் அர்ச்சுனனை நிமித்தமாகக் கொண்டு உபதேசிக்க வேண்டியதென்ன? என்றாலோ, இவ்விஷயம் சாதாரணமாய் பலருக்குத் தெரிந்திருந்தாலும் தெரியாத சிலர்பொருட்டு அச்சரித்திரத்தை இவ்விடத்தில் சுருக்கிச் சொல்லுவோம். “𑌯𑌦𑌾𑌯𑌦𑌾𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 । 𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 । 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇” (இந்த பகவத்கீதை 4-வது அத்தியாயம், 7, 8-சுலோகங்களைப் பார்க்க,) என்கிற பகவத் வாக்கியப்படிக்கு துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்திற்காகவும் யாதவ வம்சத்தில் பிறந்திருந்தவர்களும் மகாபக்தர்களுமான வசுதேவர், தேவகீ, இவர்களுடைய இஷ்டபூர்த்திக்காகவும் அவர்களுக்குப் புத்திரனாக அவதாரம்செய்தார்.

அக்காலத்தில் அஸ்தினாபுரத்தை யாண்டுவந்த சந்திரவம்சத் தரசர்களின் சந்ததியில் திருதராஷ்ட்ரனென்றும் பாண்டு என்றும் இரு சகோதிரர்களிருந்தார்கள். திருதராஷ்ட்ரன் பிறவிக்குருடன். அவன் பட்டத்திற்கு அருகனல்லாவிட்டாலும் தம்பியான பாண்டு தமையனிடத்திலுள்ள பக்ஷத்தினால் தமயனை ராஜாவாக்கித் தான் இளவரசானான். சிலகாலத்திற்குப் பிறகு இறந்துபோனான். இந்த பாண்டுவுக்கு, தருமபுத்திரர், பீமசேனன், அர்ச்சுனன், நகுலன், சகதேவன், என ஐந்து குமாரர்களும், திருதராஷ்ட்ரனுக்கு துர்யோதனன் முதலிய நூறு குமாரர்களு மிருந்தார்கள். பாண்டு குமாரர்கள் வித்தையிலும் வல்லமையிலும் பெருந்தன்மையிலும் புத்தியிலும் சகலவித நற்குணங்களிலும் துர்யோதனாதிகளைவிட சிரேஷ்டர்களாயும் சகலராலும் புகழப்படத் தக்கவர்களாயு மிருந்ததினால் தன் தகப்பனுக்குப் பிறகு இராஜ்ஜியம் தனக்குக் கிடைக்காமல் போய்விடுமென்கிற பயத்தினால் துர்யோதனன் இவர்களை விரோதித்து தந்திரமாய்க் கொன்றுவிடவும் எண்ணங்கொண்டான். தன் குமாரன் பாண்டவர்களை விரோதிக்கிறானென்கிற சங்கதியை திருதராஷ்ட்ரன் அறிந்து பாண்டவர்களுக்கும் பாதி இராஜ்ஜியத்தைக் கொடுத்து, இந்திரப்பிரஸ்தமென்கிற பட்டணத்தில் அவர்களை வசிக்கச்செய்தான். துர்யோதனன் அத்துடன் திருப்தியடையாமல் பாண்ட

வர்களைக் கொன்றுவிடப் பலவித முயற்சி செய்தும் பயன்படாததினால் அவர்களை அடுத்து அவர்களிடத்தில் சிநேகம் பாராட்டிக் கடைசியில் மோசடியாய் தருமபுத்திரரைச் சூதாட்டத்திற் குட்படுத்தி, தனக்கு (துர்யோதனனுக்கு) அம்மானான சகுனி என்பவனைக் கொண்டு மாயச்சூதாடுவித்து, பாண்டவர்களுடைய சகல சொத்துக்களையும் அபகரித்துக்கொண்டது மல்லாமல் பாண்டவர்களையும் அவர்களுடைய பத்தினியும் பதிவிரதாசிரோன்மணியுமாகிய திரௌபதியையும் சபையில் மானபங்கம் செய்தான். பீஷ்மாசாரியார் முதலான பெரியோர்களுடைய வேண்டுதலின்பேரில் பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் காட்டில் சஞ்சரித்துப் பதின்மூன்றாவது வருஷம் தனக்கு (துர்யோதனனுக்கு)த் தென்படாதவிடத்தில் வசித்துப் பிறகு வந்தால் பாதிராஜ்ஜியம் கொடுக்கிறதாக துர்யோதனன் உடன்பட்டான். மகா பலசாலிகளானாலும் தருமமென்கிற கயிற்றால் கட்டுண்ட பாண்டவர்கள் காட்டுக்குச்சென்று நிபந்தனை தப்பாமல் பதின்மூன்றுவருஷம் காடுமலை முதலிய விடங்களில் சஞ்சரித்து பிறகு பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படி துர்யோதனனைக் கேட்டனுப்பினார்கள். அதற்கவன் சம்மதிக்கவில்லை. பிறகு தங்களுக்கு அம்மான் பிள்ளையும் தங்களிடத்தில் அதிக வாத்ஸல்லியமுடையவருமான கிருஷ்ண பகவானைப் பிரார்த்தித்து அவர் மூலமாயும் துர்யோதனனை பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படி கேட்டனுப்பினார்கள். துர்யோதனன் ஊசிகுத்துமிடமுள்ள பூமிகூட கொடுக்க மனதில்லை என்றான். அதின் பிறகு இருகக்ஷியாரும் யுத்தம் செய்யவேண்டியதாய் நேரிட்டது. இந்த யுத்தத்திற்கு பாரத யுத்தமென்று பெயர்.

இந்த யுத்தத் துவக்கத்தில் இருதாரத்துச் சேனைகளும் யுத்தகளத்தில் நிற்கும்போது, அச்சேனைகளை அர்ச்சுனன் பார்த்து இருதாரச் சேனைகளிலுமுள்ளவர்களில் பெரும்பாலும் தன் பந்துக்களும் சிநேகிதர்களும் குருக்களுமா யிருக்கக்கண்டு, பரிதாபமடைந்து தனக்கு சாரதியாக விருந்தருளிய ஸ்ரீகிருஷ்ணபகவானை நோக்கி, நான் இந்தச் சேனைகளைக் கொல்லத் துணியேன், குருமுதலிய பந்துக்களைக் கொன்றால் நரகமடைவேன், எனக்கு இராஜ்ஜியம் வேண்டாம், காட்டுக்கே மறுபடி செல்வேனென்றான். அந்த வார்த்தைகளைக் கேட்ட கிருஷ்ணபகவானனவர் அர்ச்சுனனுடைய சோக மோகத்தையும் அப்படியே சகலமான பெயர்களுடைய சோகமோகங்களையும் போக்கி அவர்களைக் கடைத்தேறும்படிசெய்யும் பொருட்டு, வருணாசிரம தருமங்களையும், அவனவனுடைய வருணாசிரமதருமத்தை விட்டவன் நரகமடைவானென்பதையும், ஆத்மாநாத்ம விவேகத்தையும், உத்தம சுகத்தை யடைய வேண்டியதற்கான ஞான கருமமார்க்கங்களையும் உபதேசித்தார். ஆகையால், இந்த கிரந்தமானது பகவானான கிருஷ்ணசுவாமியினா லுபதேசிக்கப்பட்டபடியால் பகவத்கீதை யென்றும், வேதாந்தார்த்தங்களைத் திரட்டிச்

சொல்லியிருக்கிறபடியால் உபநிஷத் என்றும், பரபிரம்மத்தைத் தெரிவிக்கிற வித்தையா யிருக்கிறதினால் பிரம்ம வித்தையென்றும், ஆத்மாநாத்ம விவேகத்தை விளக்குகிற சாங்கிய யோகமும் கருமயோகமும் சொல்லப்பட்டிருக்கிறதினால் யோக சாஸ்திரமென்றும், கிருஷ்ண பகவானுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த உத்தரப் பிரத்தியுத்தரங்களா யிருக்கிறதினால் கிருஷ்ணார்ச்சுனஸம்வாதமென்றும் சொல்லப்படுகிறது.

பாரதயுத்தத்தில் நடக்கும் சகல சங்கதிகளையும் உடனுக்குடனே திருதராஷ்டரனுக்குச் சொல்லும்படியாய் மகாவிஷ்ணு அம்சத்தினால் அவதாரம் செய்த வேதவியாச மகரிஷியினால் அநுக்கிரகமும் ஞானக்கண்ணும் பெற்ற சஞ்சயனென்பவரால் இந்த உபதேசம் முழுவதும் திருதராஷ்டரனுக்குச் சொல்லப்பட்டது. வேதவியாச மகரிஷியானவர் மகாபாரத மென்கிற கிரந்தம் செய்தபோது இந்த கீதையை மகா பாரதத்துடன் சேர்த்தார். அப்படி சேர்த்தே ஐயாயிர வருஷங்களுக்கு அதிகமா யிருக்கவேண்டும். அதற்குப் பிந்தியகாலத்தில் இந்த சாஸ்திரார்த்தத்தைச் சரியாய்த் தெரிந்து கொள்ளும் சக்தி ஜனங்களிடத்தில் குறைந்துபோனபடியால், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமியவர்கள் இந்த கீதார்த்தத்தை விவரித்துக்காட்டி அத்துவைத மத சித்தாந்தத்திற் கிணங்கவும், அதற்குச் சிலகாலத்திற்கு பிறகு ஸ்ரீமத் இராமாநுஜாசாரிய சுவாமியவர்கள் விசிஷ்டாத்துவைத மத சித்தாந்தத்திற் கிணங்கவும், ஸ்ரீமத் மத்துவாசாரிய சுவாமிகள் துவைதமத சித்தாந்தத்திற் கிணங்கவும் பாஷியம் செய்தார்கள். அப்பாஷியங்களின் அர்த்தங்களைக்கூடத் தெரிந்துகொள்ளும் சக்தி ஜனங்களிடத்தில் குறைவுபடவே, அந்தந்த மதத்தைப் பின்பற்றிய சில மகான்கள் அந்தந்த மதத்தை யனுசரித்து மூலத்திற்கு வியாக்கியானங்களும் பாஷியங்களுக்கு (டீகாவென்று வழங்குகிற) வியாக்கியானங்களும் செய்தார்கள். இக்காலத்திலோ, வைதீக மார்க்கத்திலுள்ள வயதுசென்ற சிலர் தவிர மற்றவர்களிடத்தில் சம்ஸ்கிருதவித்பத்தி விசேஷமாயில்லாமையால் அவர்களின்பொருட்டு பிராகிருத பாஷையில் மொழிபெயர்ப்பது அவசியமாயிற்று. அப்படியே உத்கிருஷ்டமான இக்கிரந்தமானது யூரோப்ய தேசத்தில் கிரீக், ஜர்மன், லாட்டின், இங்கிலீஷ் பிர்ஞ்சு முதலிய பாஷைகளிலும், இந்த தேசத்தில் இங்கிலீஷ் தெலுங்கு கன்னடம் தமிழ் முதலிய பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அம்மொழிபெயர்ப்புகளைவிட இக்கிரந்தத்தினு லதிகப் பிரயோஜன முண்டென்பதை இதைப் பார்த்தமாத்திரத்தில் சகலரும் தெரிந்துகொள்ளலாம். அதாவது, மூலசுலோகங்களும் பத பதார்த்தங்களும் பொழிப்புரையும் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளிலிருந்து பேதப்பட்டிருக்கிற விஷயங்களில் பிரசித்தமான மேல்கண்ட மூன்றுமத பாஷியங்களினுடையவும், அத்துவைத மத

சித்தாந்தத்தை அனுசரித்து ஸ்ரீதரஸ்வாமிகளும், த்வைத சித்தாந்தத்தை யனுசரித்து இராகவேந்திர சுவாமிகளுஞ் செய்திருக்கிற வியாக்கியானங்களுடையவும் முக்கியமான தாத்பரியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த பாஷியங்களுடையவும் வியாக்கியானங்களுடையவும் தாத்பரியங்கள் சில பதங்கள் விஷயத்தில்மட்டும் பேதப்படு மிடங்களில், அந்தப் பதங்களுக்கு அடையாளமிட்டு பேதமுள்ள அர்த்தங்கள் அந்தப் பக்கத்தின் அடியில் குறித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அத்வைத மதத்தை அநுசரித்த மதுசூதன சரஸ்வதி என்பவருடைய வியாக்கியானத்தி லிருந்தும் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளுடைய கீதாபாஷியத்திற்கு ஆநந்தகிரி என்பவர் செய்திருக்கிற டீகாவிலிருந்தும் சில அர்த்தபேதங்கள் சிலவிடங்களில் வெளிப் படுத்தப்பட் டிருக்கின்றன. பாஷியங்களை யாவது வியாக்கியானங்களையாவது பூர்ணமாய் மொழிபெயர்த் திருப்பதாக கிரகிக்கக் கூடாது. அப்படிச் செய்வதினால் அதிகமாய்ப் பெருகுமென் றெண்ணி அந்தந்த தாத்பரியங்கள் கூடியவரையில் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றன. பாஷிய வியாக்கியானங்களில் குறிப்பிட்ட சுருதி ஸ்மிருதி புராணாதி வாக்கியங்களும் அவைகளுக்கு அர்த்தங்களும் அவ்வவ்விடங்களி லெழுதப்பட்டிருக்கின்றன. பெரியோர்களால் நான் தெரிந்து குறிப்பு போட்டிருந்தவைகளும் உபயோகமா யிருக்கலாமென்று நான் எண்ணினவைகளுமான சில அபிப்பிராயங்களும் சுருதி ஸ்மிருதி புராணாதி வாக்கியங்களும் அவசியமானவைகளுக்கு அர்த்தங்களும் சில சுலோகங்களின் அடியிலெழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீதர சுவாமிகளுடைய வியாக்கியானத்தை அனுசரித்தே பெரும்பாலும் பதவுரை பொழிப்புரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஏதாவதொரு மதத்தை சிலாகித்து அல்லது தூஷித்துச்சொல்ல எண்ணம் கொள்ளவுமில்லை, அப்படிச் செய்யவுமில்லை. அந்தந்த மதசுவரூபம் தெரிந்தவரையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தக் கிரந்தத்தைச்செய்து இதனால் கீர்த்தி அடையவேண்டுமென்கிற எண்ணம்கொண்டு இதில் நான் பிரவிருத்திக்கவில்லை. கீதா சாஸ்திரமானது மோக்ஷ சுகத்திற்கு வழிகாட்டி யானதென்று பெரியோர்களால் அறிந்து அதை மனனம் செய்யத்தொடங்கினதில் சிரேஷ்டமான தத்துவார்த்தங்கள் என் அற்பபுத்தியில் நிலை நிற்காமையால் எழுதி மனனம் செய்யலாமென்று தொடங்கினேன். பிறகு பிரசித்தமான மூன்று சித்தாந்தங்களையும் விசாரிக்க புத்தியுண்டானமையால் அவைகளை விசாரித்து எழுதினேன். அப்படி எழுதினது என்னைவிட அற்பஞ்ஞானமுள்ளவர்களுக்கு முபயோகமாகலாமென்றெண்ணி அச்சிடத் துணிந்தேன்.

இவ்வளவும் செய்வதற்கு என் சாமர்த்தியமே காரணமென்று மலைக்க

வேண்டாம். ஒரு பாஷையிலாவது நான் போதுமான ஞானமுள்ளவனல்ல. அப்படியிருந்தும் இவ்வளவு பெரிதான காரியத்தில் தலையிடலாமாவென்றால், ஈசுவராநுக்கிரகமும் மகாவித்வான்களுடைய உதவியு முண்டானபோது என்னைவிட கிஞ்சிக்ஞனும் சமர்த்தனாவான்.

இந்த கிரந்தத்தைத் துடங்க முதல் காரணமானவர் கோயமுத்தூர் வாசியாயிருந்தவரும், கொச்சி புதுக்கோட்டை முதலிய சமஸ்தான வித்வானும், திருமத சித்தாந்தங்களை அறிந்தவருமான ப்ரஹ்ம-ஸ்ரீ வெங்கிட்ட ரமணாசார் அவர்கள்தான். அந்த மகானுடைய சகாயத்தினால் மொழி பெயர்க்கப்பட்ட இந்த கிரந்தத்தை பூர்ணமாய் ஒத்துப் பார்ப்பதற்குள்ளாக அவர் வைகுண்டபதவியை அடைந்தார். அந்த மனவருத்தத்தினால் இந்த கிரந்தத்தை அவ்வளவுடன் கைநழுவ விடத்தக்க நிலைக்கு வந்துவிட்டேன். அப்படியிருக்க ஈசுவராநுக்கிரக பெலத்தால் விசேஷ பிரக்ஞையும் சுகுணமுமுள்ளவரும் திருநெல்வேலி ஜில்லா கல்லடக்குருச்சி அக்கிரகாரவாசியும் இப்போது காசியில் பண்டித சுவாமிகளென்று பிரசித்திபெற்று பரமஹம்ஸரா யிருக்கிற பூர்வாசிரமத்தில் ராமதீக்ஷிதர் என்கிற பெயருடையவருடைய மூன்றாவது குமாரருமான ப்ரஹ்ம-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளுடைய சகாயம் கிடைக்கப்பெற்றேன்.

இவ்விஷயத்தில் கோயமுத்தூர் வாசியான தெக்கலூர் ப்ரஹ்ம-ஸ்ரீ ராமாசாரியார் குமாரரும், பண்டிதருமான அகோபலாசாரியார் அவர்களுடைய சகாயமும், மத்துவமத சித்தாந்த விஷயமாக சில சமயங்களில் கிடைத்தது.

பின்னும் இக்கிரந்தம் எழுதத்தொடங்கினது முதல் எழுதின ஒவ்வொரு பாகத்தையும் பரிசோதனை செய்து பிழைகளை நீக்கி குணங்களைச் சேர்க்கும் விஷயத்தில் யுக்தாயுக்தங்களை எடுத்துக் காட்டியும் வாசகப்பிழை எழுத்துப்பிழைகளைத் திருத்துவித்தும் அப்படியே அச்சிட்டுவரும் ஒவ்வொரு புரூப் ஷீட்டுகளைப் பரிசோதித்தும் வந்தவர்களும் வைதீக லௌகீக பரிக்ஞானமுள்ளவர்களும் நல்ல விவேகிகளும் வேதாந்த விசாரம் செய்தும் இன்னும் செய்துகொண்டுமிருக்கிறவர்களும் எனக்கு அத்தியந்த சிநேகிதர்களுமான இரண்டு கனவான்களுடைய பெயரை வெளியிட அவர்களுக் கிஷ்டமில்லாவிட்டாலும் இவ்விடத்தில் வெளியிடாமலிருக்க என் மனம் கொள்ளவில்லை. அவர்களாரென்றால், கோயமுத்தூர் வாசியும் கோயமுத்தூர் சப்கலெக்டர் ஆபீஸ் சிரஸ்ததாராகவிருந்து இப்போது பென்ஷன் வாங்குகிறவரும் ஆச்சரியதர்ப்பணமென்னும் கிரந்தத்திற்குக் கருத்தாவுமான ம-ள-ள-ஸ்ரீ பொன்முடி வெங்கட்டரமணய்யர் அவர்களும், டிப்டி

முகவுரை.

கலெக்ட்டர் உத்தியோகத்திலிருந்து இப்போது பென்ஷன் வாங்குகிற ம-ா-ா-ஸ்ரீ வெங்கடேசய்யர் அவர்களுமே. இக்கனவான்களுடைய விலை மதிப்புக்கெட்டாத உதவிக்கு நன்றியறிதலைச் செலுத்தி வந்தனம் செய்வதைத்தவிர வேறு பிரத்தியுபகாரம் செய்ய நான் அருகனல்ல. இவ்வளவு பரிசோதனை செய்யப்பட்டிருந்தாலும் இதில் தப்பிதமில்லையென்று சொல்ல நான் துணியவில்லை. பலதப்பிதங்கள் விவேகிகளுக்குத் தென்படக்கூடும். ஆனால் அதற்காக நான் சங்கோசப்படவில்லை. ஏனென்றால், குற்றங்களை நீக்கி குணங்களை கிரகிப்பதும் பிசகுகண்டால் அதை யெடுத்துக்காட்டி திருத்துவிப்பதும் விவேகிகளுடைய சுபாவமானதால்தான். பிழைகளை யெடுத்துரைக்கும் விவேகிகளுக்கு மனப்பூர்வமாய் வந்தனம் செலுத்துவேன்.

தாரண௵
ஐப்பசி௴

வி. கு.

ஸ்ரீ ஜயத்ஸுதயே நம: ||

மதத்திரயசித்தாந்த சங்கிரகம்.

அத்துவைதம்.

பிரம்மமொன்றே சத்தியமா யுள்ளது.

இரண்டாவது வஸ்து வாஸ்தவமாயில்லை. அதாவது—ஜீவஜடப் பிரபஞ்சங்கள் தோற்றமேயன்றி உண்மையானவையல்ல. பிரம்மமோ நிர்குணமாயும் நிராகாரமாயும் விகாரமற்றதாயும் சச்சிதானந்த கனமாயும் எங்கும் நிறைந்ததாயும் பற்றற்றதாயும் சுவப்பிரகாசமாயு மிருக்கிறது. அப்பிரம்மமே ஜீவனாகவும் ஈசுவரனாகவும் சகலப் பிரபஞ்சமாகவும் தோற்றுகிறது. அத்தோற்றமானது அனாதி மாயையினா லுண்டானது. பரமார்த்த தெசையில் ஜீவன் ஈசுவரன் மாயை ஜீவேசுவரபேதம் மாயாகாரியமான இப்பிரபஞ்சம் இவைகள் வாஸ்தவமே. இவைகளை அநாதி என்று ஏன் சொல்லவேண்டிய தென்றால், அவைகள் ஒருகாலத்தி லுண்டானவைக ளென்று குறிப்பிடத்தக்கவை யல்லவானதினால்தான்.

மாயையினிடத்தில் சகல வஸ்துக்களையும் தோற்றுவிக்கிற தாகிய விக்ஷேப சக்தியென்றும், வஸ்துக்களின் சுவபாவத்தை தோன்றவொட்டாமல் மறைக்கிறதாகிய ஆவரண சக்தியென்றும் இரண்டுவித சக்திகளுண்டு. விக்ஷேப சக்தியை மாயை என்றும் ஆவரண சக்தியை அவித்தையென்றும் சொல்லுவதுண்டு. சைதன்னிய (சுத்தப் பிரம்மம்) மானது மாயை சம்பந்தத்தினால் ஈசுவரனென்றும் அவித்தியா சம்பந்தத்தினால் ஜீவனென்றும் வியவகரிக்கப்படுகிறது. இச்சம்பந்தமும் அநாதியே. விக்ஷேப சக்தியான மாயா சம்பந்தமுடைய ஈசுவரன் சருவக்ஞன். ஆவரண சக்தியான அவித்தியா சம்பந்தமுடைய ஜீவன் கிஞ்சிக்ஞன். அதாவது—அற்ப ஞானமுடையவன். ஆனதால் பெத்தனாயிருக்கிறான்.

இந்த பெந்தத்திலிருந்து நிவிருத்தியடைய வேண்டுமானால், வேதோக்தமான நித்திய நைமித்திக கருமங்களை ஈசுவரார்ப்பணமாய்ச் செய்வதினாலும் பகவத்பக்தி செய்வதினாலும் சித்தசுத்தியையடைந்து சத்குருவினா லுபதேசிக்கப்படும் "தத்த்வமஸி" (தத்துவமஸி முதலிய மகா வாக்கியார்த்தமாகிய ஜீவேசுவராபேதத்தை சிரவணம் செய்து அடிக்கடி சிந்திப்பதாகிய மனனத்

தையு மிடைவிடாமல் சிந்திப்பதாகிய நிதித்தியாசத்தையும் அநுஷ்டிக்க வேண்டும். அப்படிச் செய்துவந்தால் பிரத்தியக்ஷமா யுண்டாகும் " ஸஹம் ப்ரஹ்மாஸ்மி" அகம் பிரம்மாஸ்மி என்கிற மகா வாக்கியத்தின் அர்த்தமாகிய ஜீவேசுவரா பேதானுபவத்தினால் பிரபஞ்சவாசனையும் சகல கருமங்களும் நசித்து, தன் வாஸ்தவ சுவரூபமும் ஆநந்தரூபமாகிய பிர்மசுவரூபமாகிறான். இதுதான் முக்தியென்று சொல்லப்படுகிறது.

இந்த முக்தியானது ஜீவன் முக்தியென்றும் விதேக கைவல்லியமென்றும் இருவகைப்படும். மேற்சொல்லியபடி தானே பிரம்ம மென்கிற அநுபவ பெலத்தினாலே பிராரப்தம் தவிர மற்ற சகல கருமங்களும் அவைகளுக்குக் காரணமாகிய அவித்தையும் நசித்து இத்தேகத்திற்குக் காரணமான பிராரப்தம் நசிக்கிறவரையில், சகல பற்றுகளும் அற்றவனானாலும் பற்றுள்ளவனைப்போல் பிறருக்குக் காணும் நிலைமையே ஜீவன் முக்திதசை. இந்த ஸ்தூலதேகமும் சூக்ஷம தேகமும் காரண தேகமும் நசித்து பிரம்மமாக விருக்கும் நிலைமையே விதேக கைவல்லியம்.

இவையன்றி கிரம முக்தி என்றொரு வகையுமுண்டு. அதாவது, சகுணப் பிரம்மமென்கிற ஈசுவரோபாசனை பஞ்சாக்கினி வித்தை முதலியவைகளால் ஈசுவரானுக்கிரகம் பெற்று இத்தேகம் போனவுடன் அர்ச்சிராதி மார்க்கமாய் *பிரம்மலோகம் சென்று பிரம்மாவினால் உபதேசம்பெற்று பிரம்மாவுடன் விதேக கைவல்லிய மடைவதே.

" தத்த்வமஸி " தத்துவமஸி வாக்கியத்தின் அர்த்த மென்னவெனில், தத்=அது (சருவக்ஞான ஈசுவரன்), த்வம்=நீ (கிஞ்சிக்ஞான ஜீவன்), அஸி=இருக்கிறாய், அதாவது—ஜீவனாகிய நீ ஈசுவரனா யிருக்கிறா யென்பதே. இதின் தாத்பரிய மென்னவென்றால், ஜீவனாகிய உனக்குள்ள உபாதியான அவித்தையையும் ஈசுவரனுடைய உபாதியான மாயையையும் விலக்கிப் பார்த்தால் இவ்விரண்டு மொன்றே என்பது தான்.

விசிஷ்டாத்வைதம்.

ஈசுவரன் ஜீவர்கள் ஜடப்பிரபஞ்சம் இவர்கள் தனித்தனியாகவும் வாஸ்தவமாகவு மிருக்கிறார்கள். ஈசுவரன் சருவஞானம் சத்திய சங்கற்பம் முதலிய அநந்த கல்லியாண குணகெண நிதியாகவும் சருவசுவதந்திரனாகவும் ஜீவ

---

* இந்த மார்க்க மின்ன தென்பதை இப்புத்தகத்தில் 8-வது அத்தியாயம் 23 சுலோகத்தின்கீழ் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜடப்பிரபஞ்சங்களுக்கு அந்தரியாமியாகவும், அவைகளுக்குச் சரீரியாகவும் நியாமகனுகவும் சேஷியாகவு * மிருக்கிறார்.

ஜீவர்கள் ஈசுவரனுடைய அம்சர்களாகவும் சரீரமாகவும் சேஷமாக வும்† ஞானத்தை குணமா யுடையவர்களாகவும் அணுக்களாகவும் இருக்கிறார் கள். அநாதி கருமமென்கிற அவித்தையினுல் தங்களுடைய குணமாகிய ஞானம் குறைந்து சமுசாரிகளாக இருக்கிறார்கள். இவர்கள் பகவதாராதன ரூபமாகச் செய்யப்பட்ட நித்திய நைமித்திககருமங்களாலும் பக்தி பிரபத்தி இவைகளாலும் ஜீவேசுவரர்களுடைய யதார்த்த ஞானத்தினுலும் சுவசுவ ரூபாநு சந்தானத்தினுலும் பிரகிருதி சம்பந்தம் நீங்கி சுவசுவரூபமடை கிறார்கள். இதுதான் கைவல்லியமென்று சொல்லப்படுகிறது. பிரகிருதி விமுக்த ஆத்ம சுவரூபமடைந்த இந்த அவஸ்தையில் ஜீவர்களுடைய ஞான குணம் விகாஸத்தையடைந்து சகலத்தையும் அறிவார்கள். இதன்பிறகு பகவத்தியானுதிகளினுல் வைகுண்டத்தில் பகவானுடைய சரீரத்திற்கு சம மாகிய அப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரகங்களை யுடையவர்களாய் பகவத்சந்நிதி முதலியவைகளா லுண்டாகும் பரமாநந்தத்தை அனுபவிக் கிறார்கள். இதுதான் முக்தியெனப் படுகிறது. "தத்வமஸி" தத்துவமஸி முதலிய அபேதவாக்கியங்களுக்கோவெனில் சூக்ஷ்மசித் அசித்விசிஷ்டனை (சரீரியான) ஈசுவரனுக்கும் ஸ்தூலசித் அசித் விசிஷ்டனை (சரீரியான) ஈசுவரனுக்கும் அபேதமர்த்த மாகையால் விசிஷ்டாத்துவைதமென்று பெயர் வந்தது.

மத்துவ மதம்.

ஐந்து பேதங்கள் ‡ வாஸ்தவமாயும் அநாதியாயு மிருக்கின்றன. ஜீவர் கள் நித்திய சமுசாரிகள், நித்திய நரகிகள், முக்தி யோக்கியர்களென, மூவ் வகைப் பட்டவர்கள். ¶ இந்த ஒவ்வொரு வகையிலும் பல பிரிவுகளுண்டு. ஜீவர்களுடைய சுவரூபத்திலும் மனுஷிய பசுபக்ஷியாதி பேதங்களுண்டு.

---

*-† சேஷ சேஷி பாவ மின்னதென்பதை இந்த புஸ்தகம் 7-வது அத். 7-வது சுலோகத்தின் கீழ்பார்க்க.

‡ இப்பேதங்களின் விவரம் இப்புஸ்தகம் 6-வது அத். 8-வது சுலோகத்தின் கீழ் பார்க்க.

¶ ஜீவபேதத்தைப்பற்றிய விஷயம் இப்புஸ்தகம் 17-வது அத். 3-வது சுலோ கத்தின் கீழ்பார்க்க.

முக்தி யோக்கியர்கள் தவிர மற்றவகை ஜீவர்களுக்கு முக்தி என்பதேயில்லை. முக்தி யோக்கியர்களான ஜீவர்களில் தங்கள் தங்கள் சுவரூபம் (மனுஷிய பசுபக்ஷியாதிகளில்) எதுவோ அந்த சுவரூபத்துடன் முக்தியடைகிறார்கள். முக்தியில் அவரவர்களுடைய உபாசனைக்குத் தக்கபடி ஆநந்தத்தில் தாரதம்மியமுண்டு. முக்தியடைவதற்கு மேல்கண்ட பஞ்சபேதஞானம் சாதனமானது. "தத்ஸ்வமஸி" தத்துவமஸி வாக்கியத்திற்கு நீ ஈசுவரனுக்குச் சமானமான ரூபமுடையவனாயிருக்கிறாய் என்று அர்த்தம்.

மற்ற விஷயங்களில் பெரும்பாலும் விசிஷ்டாத்துவைத மதத்தை யொத்ததே.

மதத்திரய சித்தாந்த சங்கிரகம்

முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑍐 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌰𑌂𑌭𑌃.

𑌧𑌰𑍋𑌵𑌾𑌚.

𑌭𑌗𑌵𑌨𑍍𑌪𑌰𑌮𑍇𑌶𑌾𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌂 𑌭𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑌥𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌹𑍇 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥ ௧॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌵𑌾𑌚.

𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌂 𑌭𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌹𑌿 𑌗𑍀𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌰𑌤𑌃 𑌸𑌦𑌾 ।
𑌸 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌸𑍁𑌖𑍀 𑌲𑍋𑌕𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌨𑍋𑌪𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥ ௨॥

𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑌾𑌦𑌿𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌗𑍀𑌤𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 ।
𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌲𑌿𑌨𑍀𑌦𑌲𑌮𑌮𑍍𑌬𑍁𑌵𑌤𑍍 ॥ ௩॥

𑌗𑍀𑌤𑌾𑌯𑌾𑌃 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌾𑌠𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌤𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌯𑌾𑌗𑌾𑌦𑍀𑌨𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌵𑍈 ॥ ௪॥

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚 𑌋𑌷𑌯𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑌨𑍍𑌨𑌗𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌗𑍋𑌪𑌾𑌲𑌾 𑌗𑍋𑌪𑌿𑌕𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌨𑌾𑌰𑌦𑍋𑌦𑍍𑌧𑌵𑌪𑌾𑌰𑍍𑌷𑌦𑍈𑌃 ॥ ௫॥

𑌸𑌹𑌾𑌯𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌗𑍀𑌤𑌾 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌯𑌤𑍍𑌰 𑌗𑍀𑌤𑌾𑌵𑌿𑌚𑌾𑌰𑌂 𑌚 𑌪𑌠𑌨𑌂 𑌪𑌾𑌠𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ॥ ௬॥

𑌤𑌤𑍍𑌰𑌾𑌹𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌪𑍃𑌥𑍍𑌵𑌿 𑌨𑌿𑌵𑌸𑌾𑌮𑌿 𑌸𑌦𑍈𑌵 𑌹𑌿 ।
𑌗𑍀𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌽𑌹𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌿 𑌗𑍀𑌤𑌾 𑌮𑍇 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌗𑍃𑌹𑌮𑍍 ॥ ௭॥

𑌗𑍀𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌪𑌾𑌲𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌗𑍀𑌤𑌾 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌾 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ௮॥

𑌅𑌰𑍍𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌚𑍍𑌯𑌪𑌦𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 ।
𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑍇𑌨 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇𑌨 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑍍𑌵𑌮𑍁𑌖𑌤𑍋𑌽𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 ॥ ௯॥

𑌵𑍇𑌦𑌤𑍍𑌰𑌯𑍀 𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌯𑍁𑌤𑌾 ।
𑌯𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌜𑌪𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌰𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌮𑌾𑌨𑌸𑌃 ॥ ௰॥

ஜ்ஞாநஸித்திம் ஸ லபதே ததோ யாதி பரம் பதம் |
பாடேऽஸமர்த: ஸம்பூர்ணே ததோऽர்தம் பாடமாசரேத் ||௧௧||

ததா கோதாநஜம் புண்யம் லபதே நாத்ர ஸம்ஶய: |
த்ரிபாகம் படமாநஸ்து கங்காஸ்நாநபலம் லபேத் || ௧௨||

ஷடம்ஶம் ஜபமாநஸ்து ஸோமயாகபலம் லபேத் |
ஏகாத்யாயம் து யோ நித்யம் படதே பக்திஸம்யுத: || ௧௩||

ருத்ரலோகமவாப்நோதி கணோ பூத்வா வஸேச்சிரம் |
அத்யாயம் ஶ்லோகபாதம் வா நித்யம் ய: படதே நர: || ௧௪||

ஸ யாதி நரதாம் யாவந்மந்வந்தரம் வஸுந்தரே |
கீதாயா: ஶ்லோகதஶகம் ஸப்த பஞ்ச சதுஷ்டயம் || ௧௫||

த்வௌ த்ரீநேகம் ததர்தம் வா ஶ்லோகாநாம் ய: படேந்நர: |
சந்த்ரலோகமவாப்நோதி வர்ஷாணாமயுதம் த்ருவம் || ௧௬||

கீதாபாடஸமாயுக்தோ ம்ருதோ மாநுஷதாம் வ்ரஜேத் |
கீதாப்யாஸம் புந: க்ருத்வா லபதே முக்திமுத்தமாம் || ௧௭||

கீதேத்யுச்சாரஸம்யுக்தோ ம்ரியமாணோ கதிம் லபேத் |
கீதார்தஶ்ரவணாஸக்தோ மஹாபாபயுதோऽபி வா ||௧௮||

வைகுண்டம் ஸமவாப்நோதி விஷ்ணுநா ஸஹ மோததே |
கீதார்தம் த்யாயதே நித்யம் க்ருத்வா கர்மாணி பூரிஶ: ||௧௯||

ஜீவந்முக்தஸ்ஸ விஜ்ஞேயோ தேஹாந்தே பரமம் பதம் |
கீதாமாஶ்ரித்ய பஹவோ பூபுஜோ ஜநகாதய: || ௨௦||

நிர்தூதகல்மஷா லோகே கீதாயாதா: பரம் பதம் |
கீதாயா: படநம் க்ருத்வா மாஹாத்ம்யம் நைவ ய: படேத் ||௨௧||

வ்ருதா பாடோ பவேத்தஸ்ய ஶ்ரம ஏவ ஹ்யுதாஹ்ருத: |
ஏதந்மாஹாத்ம்யஸம்யுக்தம் கீதாப்யாஸம் கரோதி ய: ||௨௨||
ஸ தத்பலமவாப்நோதி துர்லபாம் கதிமாப்நுயாத் || ௨௨½||

ஸூத உவாச.

மாஹாத்ம்யமேதத்கீதாயா மயா ப்ரோக்தம் ஸநாதநம் |
கீதாந்தே ச படேத்யஸ்து யதுக்தம் தத்பலம் லபேத் || ௨௩½||

இதி ஶ்ரீகீதாமாஹாத்ம்யம் ஸம்பூர்ணம்.

ஶ்ரீக்ருஷ்ணார்பணமஸ்து.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾 𑌪𑌠𑌨𑌾𑌰𑌂𑌭𑌸𑌮𑌯𑍇 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯

𑌅𑌂𑌗𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑌯𑌃

𑍐 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

𑌅𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌮𑌾𑌲𑌾𑌮𑌂𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸 𑌋𑌷𑌿𑌃 । 𑌅𑌨𑍁𑌷𑍍𑌟𑍁𑌪𑍍𑌛𑌨𑍍𑌦𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌤𑌾 । 𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌵𑌶𑍋𑌚𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌾𑌦𑌾𑌂𑌶𑍍𑌚𑌭𑌾𑌷𑌸𑍇 𑌇𑌤𑌿𑌬𑍀𑌜𑌮𑍍 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂𑌶𑌰𑌣𑌂𑌵𑍍𑌰𑌜 𑌇𑌤𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 ॥ 𑌅𑌹𑌂𑌤𑍍𑌵𑌾𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌶𑍁𑌚 𑌇𑌤𑌿𑌕𑍀𑌲𑌕𑌮𑍍 ॥ 𑌨𑍈𑌨𑌂𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑍈𑌨𑌂𑌦𑌹𑌤𑌿𑌪𑌾𑌵𑌕 𑌇𑌤𑍍𑌯𑌂𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌮𑌃 ॥ 𑌨𑌚𑍈𑌨𑌂𑌕𑍍𑌲𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑍋𑌨 𑌶𑍋𑌷𑌯𑌤𑌿𑌮𑌾𑌰𑍁𑌤 𑌇𑌤𑌿𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 ॥ 𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌦𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌕𑍍𑌲𑍇𑌦𑍍𑌯𑍋𑌽 𑌶𑍋𑌷𑍍𑌯𑌏𑌵𑌚 𑌇𑌤𑌿 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌮𑌃॥ 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌣𑍁 𑌰𑌚𑌲𑍋𑌽𑌯𑌂𑌸𑌨𑌾𑌤𑌨 𑌇𑌤𑍍𑌯𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌮𑌃 ॥ 𑌪𑌶𑍍𑌯𑌮𑍇𑌪𑌾𑌰𑍍𑌥𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌶𑌤𑌶𑍋𑌽𑌥𑌸𑌹𑌸𑍍𑌰𑌶 𑌇𑌤𑌿𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌮𑌃॥ 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿𑌚 𑌇𑌤𑌿 𑌕𑌰𑌤𑌲𑌕𑌰𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌮𑌃.

𑌇𑌤𑌿 𑌕𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑌃.

𑌅𑌥 𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌃

𑌨𑍈𑌨𑌂𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑍈𑌨𑌂𑌦𑌹𑌤𑌿 𑌪𑌾𑌵𑌕 𑌇𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌾𑌯𑌨𑌮𑌃 ॥ 𑌨𑌚𑍈𑌨𑌂𑌕𑍍𑌲𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑍋 𑌨𑌶𑍋𑌷𑌯𑌤𑌿𑌮𑌾𑌰𑍁𑌤 𑌇𑌤𑌿 𑌶𑌿𑌰𑌸𑍇𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ 𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌦𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌕𑍍𑌲𑍇𑌦𑍍𑌯𑍋𑌽 𑌶𑍋𑌷𑍍𑌯𑌏𑌵𑌚 𑌇𑌤𑌿 𑌶𑌿𑌖𑌾𑌯𑍈𑌵𑌷𑌟𑍍 ॥ 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌰𑌚𑌲𑍋𑌽𑌯𑌂𑌸𑌨𑌾𑌤𑌨 𑌇𑌤𑌿𑌕𑌵𑌚𑌾𑌯𑌹𑍁𑌂 ॥ 𑌪𑌶𑍍𑌯𑌮𑍇𑌪𑌾𑌰𑍍𑌥𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌶𑌤𑌶𑍋𑌽𑌥𑌸𑌹𑌸𑍍𑌰𑌶 𑌇𑌤𑌿 𑌨𑍇𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌾𑌯 𑌵𑍌𑌷𑌟𑍍॥ 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿𑌚𑍇𑌤𑌿 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑌫𑌟𑍍॥ 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌪𑌾𑌠𑍇 𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌗𑌃॥

𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑍐॥ 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑌿𑌤𑌾𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇𑌨 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌵𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌗𑍍𑌰𑌥𑌿𑌤𑌾𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 ।
𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌾𑌮𑍃𑌤𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑍀𑌂𑌭𑌗𑌵𑌤𑍀 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌨𑍀𑌂
𑌅𑌮𑍍𑌬𑌤𑍍𑌵𑌾𑌮𑌨𑍁𑌸𑌨𑍍𑌦𑌧𑌾𑌮𑌿 𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑍇 𑌭𑌵𑌦𑍍𑌵𑍇𑌷𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ ௧॥

𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌸 𑌵𑌿𑌶𑌾𑌲𑌬𑍁𑌦𑍍𑌧𑍇
𑌫𑍁𑌲𑍍𑌲𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾 𑌯𑌤𑌪𑌤𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰 ।
𑌯𑍇𑌨 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌭𑌾𑌰𑌤𑌤𑍈𑌲𑌪𑍂𑌰𑍍𑌣𑌃
𑌪𑍍𑌰𑌜𑍍𑌵𑌾𑌲𑌿𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌃 ॥ ௨॥

𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑌾𑌯 𑌤𑍋𑌤𑍍𑌰𑌵𑍇𑌤𑍍𑌰𑍈𑌕𑌪𑌾𑌣𑌯𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌗𑍀𑌤𑌾𑌮𑍃𑌤𑌦𑍁𑌹𑍇 𑌨𑌮𑌃 ॥ ௩॥

𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍋 𑌗𑌾𑌵𑍋 𑌦𑍋𑌗𑍍𑌧𑌾 𑌗𑍋𑌪𑌾𑌲𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ।
𑌪𑌾𑌰𑍍𑌥𑍋𑌵𑌤𑍍𑌸𑌃𑌸𑍁𑌧𑍀𑌰𑍍𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌦𑍁𑌗𑍍𑌧𑌂𑌗𑍀𑌤𑌾𑌮𑍃𑌤𑌂𑌮𑌹𑌤𑍍 ॥ ௪॥

𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍁𑌤𑌂𑌦𑍇𑌵𑌂 𑌕𑌂𑌸𑌚𑌾𑌣𑍂𑌰𑌮𑌰𑍍𑌦𑌨𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌕𑍀𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂𑌵𑌨𑍍𑌦𑍇𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌮𑍍 ॥ ௫॥

𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑍍𑌰𑍋𑌣𑌤𑌟𑌾𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌜𑌲𑌾 𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌾
𑌶𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌹𑌵𑌤𑍀𑌕𑍃𑌪𑍇𑌣𑌵𑌹𑌨𑍀 𑌕𑌰𑍍𑌣𑍇𑌨𑌵𑍇𑌲𑌾𑌕𑍁𑌲𑌾 ।
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌮𑌵𑌿𑌕𑌰𑍍𑌣𑌘𑍋𑌰𑌮𑌕𑌰𑌾 𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀
𑌸𑍋𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌖𑌲𑍁𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑍈𑌰𑌣𑌨𑌦𑍀 𑌕𑍈𑌵𑌰𑍍𑌤𑌕𑌃𑌕𑍇𑌶𑌵𑌃 ॥

𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍍𑌯𑌵𑌚𑌃𑌸𑌰𑍋𑌜𑌮𑌮𑌲𑌂 𑌗𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌗𑌨𑍍𑌧𑍋𑌤𑍍𑌕𑌟𑌂
𑌨𑌾𑌨𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌕𑌕𑍇𑌸𑌰𑌂𑌹𑌰𑌿𑌕𑌥𑌾 𑌸𑌂𑌬𑍋𑌧𑌨𑌾𑌬𑍋𑌧𑌿𑌤𑌮𑍍 ।
𑌲𑍋𑌕𑍇𑌸𑌜𑍍𑌜𑌨𑌷𑌟𑍍𑌪𑌦𑍈𑌰𑌹𑌰𑌹𑌃 𑌪𑍇𑌪𑍀𑌯𑌮𑌾𑌨𑌂𑌮𑍁𑌦𑌾
𑌭𑍂𑌯𑌾𑌦𑍍𑌭𑌾𑌰𑌤𑌪𑌙𑍍𑌕𑌜𑌂𑌕𑌲𑌿𑌮𑌲 𑌪𑍍𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑌿𑌨𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 ॥ ௭॥

𑌮𑍂𑌕𑌂𑌕𑌰𑍋𑌤𑌿𑌵𑌾𑌚𑌾𑌲𑌂 𑌪𑌙𑍍𑌗𑍁𑌂𑌲𑌙𑍍𑌘𑌯𑌤𑍇𑌗𑌿𑌰𑌿𑌮𑍍 ।
𑌯𑌤𑍍𑌕𑍃𑌪𑌾𑌤𑌮𑌹𑌂𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌾𑌧𑌵𑌮𑍍 ॥ ௮॥

𑌯𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑌰𑍁𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌰𑍁𑌤 𑌸𑍍𑌤𑍁𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌤𑌵𑍈
𑌵𑍇𑌦𑍈𑌃𑌸𑌾𑌙𑍍𑌗𑌪𑌦𑌕𑍍𑌰𑌮𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍈𑌰𑍍𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿𑌯𑌂𑌸𑌾𑌮𑌗𑌾𑌃 ।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌤𑌦𑍍𑌗𑌤𑍇𑌨𑌮𑌨𑌸𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌯𑌂𑌯𑍋𑌗𑌿𑌨𑍋
𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂𑌨𑌵𑌿𑌦𑍁𑌃𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑌗𑌣𑌾 𑌦𑍇𑌵𑌾𑌯𑌤𑌸𑍍𑌮𑍈𑌨𑌮𑌃॥ ௯॥

𑌇𑌤𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌮𑍍.

ஶ்ரீ ஶ்ரீதாவம் நாரஸிம்ஹகாரேணவா ஸமாஹ்ருதகாரேணவா
கதம்வ்யாஹரிஸ்தோத்ரம்.

நாரத உவாச.

யதாக்ஷயோऽவ்யயோ விஷ்ணுர் த்யாதவ்யோऽவரஶோபயா ।
ப்ரத்யஹம் சாப்யநாகாரே ததாக்யம் வக்துமர்ஹஸி ॥ ௧॥

தேய ந்யாத்ஸ்யஸ்வஜநா ந த்ஸஹிஸர்வஸர்வவ்ரதா: ।
ஸஹஸ்ரம் ஜீவிதம் தேஷாம் யேத்ஸஸ்வஞ்ஜஸதாசாஸ்த்ரம் ॥ ௨॥

ப்ரஹ்மோவாச.

ஶ்ருணு நாத்யாத்ரம் ப்ரவக்ஷ்யாமி வாஸுதேவஸ்ய கீர்த்திதம் ।
ஶ்ரோதவ்யம் ந த்ஸஸ்ஸஸ்ய கர்மஜாகாரே ப்ரஸீததி ॥ ௩॥

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய நமஸ்ஸர்வாபஹாரிணே ।
நமோ யஜ்ஞவராஹாய கோவிந்தாய நமோ நம: ॥
நமஸ்தே வரதானந்த நமஸ்தே வரதாக்ஷர ॥ ௪॥

நமஸ்தே ஜ்ஞானஸந்தோஹ நமஸ்தே ஜ்ஞானதாயக ।
நமஸ்தே வரதாசிந்த்ய நமஸ்தே வரவர்ஷோத்தம ॥ ௫॥

நமஸ்தே விஶ்வக்ருத்தேவ நமஸ்தே விஶ்வபாவந ।
நமஸ்தே ஸ்தவ்யவிஶ்வநாத நமஸ்தே விஶ்வகாரண ॥ ௬॥

ஜயஸத்யஜகத்ஸாக்ஷின் ஜயஸர்வாத்யஸாயக ।
ஜயவேதாங்கவிச்சேத்ய ஜயஸர்வதஶாயவ ॥ ௭॥

ஜயஸர்வாஶ்ரயாவ்யக்த ஜயஸர்வதஶாயவ ।
ஜயஸூக்ஷ்மசிதானந்த ஜயசித்தநிரஞ்ஜந ॥ ௮॥

ஜயஸ்தஸ்யநிராலம்ப ஜயஶாந்தஸநாதந ।
ஜயநாதஜகத்வ்யஷ்ட ஜயவிஷ்ணோ நமோஸ்துதே ॥ ௯॥

தேவதியுக்தநாஷ்யேஷு ஜகதேதத்சராசரம் ।
யத்கிஞ்சித்த்ருஶ்யதேதேவ ப்ரஹ்மாண்டஸவிஶம் ஜகத் ॥ ௧௦॥

த்வாரவதீம் ஸமந்தாத் த்ருஷ்ட்வா ஸம்ப்ரகாஶிதம் ।
நாயயதேவாரம்ப்ரஹ்ம தேவொவிஶ்வாவஸம் ॥ ௧௧॥

கஸ்ஜானாதிவ் ரவும் யொகிமஸ்ரதீம்ஶ்ரியம் ।
ஸ்வயம்வாரஷம் நித்ய ரவ்ரக்ஷரஜரவ்யம் ॥ ௧௨॥

ஹ்ரஜயொத்த்விரஹிதம் ஸமுவ்ராவிநீஷ்வரம் ।
ஸமுஜ்ஞம் நிகுணம்ஸா ரா நஶரஜாரம்வரம் ॥ ௧௩॥

ஸொயர்ச்வம்ய்ரவம்ஸாஞம் வசணுரசெதரக்ஷயம் ।
ஸ்வதாரெஷயாரச்திரு விருஹரெதேவஶ்ரஸ்யதெ ॥ ௧௪॥

வரம்ஹாவஜானஞ ஸ்வாம்ஹ்ஜஞிஶிவளகஸ: ।
கயம்ஸ்வாஶீஶ்ரஸம்ஸச்க்ஷம் ஸக்ரோஶிவாரஷொத்ர ॥ ௧௫॥

வஷ்வயச்வாஶிஹியுத்த த்வஸமுவிஹசதய: ।
ஸம்கஷுணாஶிஹெதெவ தவயத்வச்ஜிதொரயா ॥ ௧௬॥

க்ஷம் தரஹுஸிதஸ்வும் யக்ஷ்ரதம்நகரதம்ரயா ।
நஸக்ரோஶிவிஹொவஸரகா தவவச்ஜாம்யயொஶிதாம் ॥ ௧௭॥

யக்ஷ்ரதம்ஜவஹொராஶி ஸ்வஸாயம்வாரஷொத்ர: ।
விநிஷ்வாஶயிதம்ஹக்த்வா ஸ்வதஸ்வாம்க்ஷரயாரஹம் ॥ ௧௮॥

ஶிவாராத்ரளவஸம்யாயாம் ஸமுராவஸ்ஸாஸவெஷ்டித: ।
ஸ்வமுாதஹரெஹக்த ஸ்தவாம்வி யாமஹெரர ॥ ௧௯॥

ஸரீரெணதயாவ்ருதி நுவயருாஶிகெஷ்வ ।
யயாஸ்வயிஜமஞாய வ்ருதிராத்யம்தகீரர ॥ ௨௦॥

கிம்தெநநகரதம்க்ரு ஸ்வமுஜொக்ஷாஶிஸாயநம்
யஸ்யவிஷ்ணளஶ்ரஜாஹக்த ஸ்ஸமுகாரமெருஹ்ரெ ॥ ௨௧॥

வச்ஜாம்கதும்தயாஹொத்ரம் கஸ்ரக்நோதிதவாவ்யத ।
ஸ்தம்தவச்ஜிதம்ரஶ்ய தக்ஷ்ரஸநஜொஸ்தெ ॥ ௨௨॥

ஸவம்ரயொக்தம்வாரஹ்ரஹாவ
ராஶ்யஞஹீநஸ்யவாரஸ்ய ஷ்ணெ: ।
த்ஸ்வாஶிஶிஞ்ய:வரரெஸ்வரொஸள
ஸ:ரக்தராமெமுணநரெணஸரக ॥ ௨௩॥

𑌬𑍋𑌧𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌪𑍁𑌰𑌾𑌣
𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂𑌵𑌿𑌮𑌲𑌂𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 ।
𑌸𑌂𑌚𑌿𑌂𑌤𑍍𑌯𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌪𑌰𑌮𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂
𑌕𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌯𑍋𑌗𑍀𑌨𑌲𑌯𑌂𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 ॥ ௨௪॥

𑌇𑌮𑌂𑌸𑍍𑌤𑌵𑌂𑌯𑌸𑍍𑌸𑌤𑌤𑌂𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃
𑌪𑌠𑍇𑌚𑍍𑌚𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌯𑌤𑌃𑌪𑍍𑌰𑌶𑌾𑌂𑌤𑌃 ।
𑌸𑌧𑍂𑌤𑌪𑌾𑌪𑍋𑌵𑌿𑌤𑌤𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌃
𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿𑌲𑍋𑌕𑌂𑌵𑌿𑌤𑌤𑌂𑌮𑍁𑌰𑌾𑌰𑍇𑌃 ॥ ௨௫॥

𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌶𑍇𑌷𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂
𑌧𑌰𑍍𑌮𑌂𑌚𑌕𑌾𑌮𑌞𑍍𑌚𑌤𑌥𑍈𑌵𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑍍 ।
𑌸𑌸𑌰𑍍𑌵𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯𑌪𑌰𑌂𑌪𑍁𑌰𑌾𑌣𑌂
𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌶𑌰𑌣𑌂𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌮𑍍 ॥ ௨௬॥

𑌵𑌿𑌭𑍁𑌂𑌪𑍍𑌰𑌭𑍁𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌧𑌰𑌂𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧
𑌮𑌶𑍇𑌷𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌨𑌾𑌶𑌹𑍇𑌤𑍁𑌮𑍍 ।
𑌯𑍋𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂𑌵𑌿𑌮𑌲𑌂𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨
𑌸𑍍𑌸𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌂𑌗𑌃 ॥ ௨௭॥

𑌇𑌤𑌿 𑌗𑌾𑌰𑍁𑌡𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌾𑌧𑌿𑌕𑌶𑌤𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑌮𑌯𑍇
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌃 𑌪𑌠𑌨𑍀𑌯 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃.

𑌯𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿𑌤𑍃𑌣𑌾𑌯𑌮𑍇𑌨𑍇 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌂𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯𑌚𑌰𑌣𑍌𑌶𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ ௧॥

𑌯𑌤𑍍𑌪𑌦𑌾𑌂𑌭𑍋𑌰𑍁𑌹𑌧𑍍𑌯𑌾𑌨 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌾𑌶𑍇𑌷𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 ।
𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌤𑍋𑌽𑌹𑌂 𑌯𑌾𑌮𑍁𑌨𑍇𑌯𑌂𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ ௨॥

𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌕𑌲𑌾𑌪𑍇𑌨 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌹𑌾𑌰𑌤𑍇𑌨 𑌚 ।
𑌉𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌵𑍇𑌦𑌾𑌯 𑌨𑌮𑍋𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌯𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 ॥ ௩॥

𑌸𑌾𑌰𑌥𑍍𑌯𑌮𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯𑌾𑌦𑍌 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌗𑍀𑌤𑌾𑌮𑍃𑌤𑌂𑌦𑌦𑍌
𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑍋𑌪𑌕𑌾𑌰𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑍇𑌨𑌮𑌃 ॥ ௪॥

𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑌾𑌯 𑌵𑍇𑌤𑍍𑌰𑌤𑍋𑌤𑍍𑌰𑍈𑌕𑌪𑌾𑌣𑌯𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌗𑍀𑌤𑌾𑌮𑍃𑌤𑌦𑍁𑌹𑍇𑌨𑌮𑌃 ॥ ௫॥

𑌕𑌰𑌕𑌮𑌲𑌨𑌿𑌯𑌮𑌿𑌤𑌤𑍋𑌤𑍍𑌰𑌰𑌶𑍍𑌮𑌿𑌃
𑌪𑌰𑌿𑌕𑌲𑌿𑌤𑍋𑌨𑍍𑌨𑌤𑌬𑌰𑍍𑌹𑌿𑌬𑌰𑍍𑌹𑌚𑍂𑌡𑌃 ।
𑌜𑌠𑌰𑌕𑌰𑌗𑍃𑌹𑍀𑌤𑌵𑍇𑌤𑍍𑌰𑌤𑍋𑌤𑍍𑌰𑍋
𑌮𑌮𑌹𑍃𑌦𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌮𑌾𑌤𑌨𑍋𑌤𑍁𑌸𑌾𑌰𑌥𑌿𑌃 ॥ ௬॥

𑌅𑌗𑍍𑌰𑍇𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌕𑌮𑌪𑌿𑌚𑌰𑌣𑌂 𑌜𑌾𑌨𑍁𑌨𑍈𑌕𑍇𑌨𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌂𑌪𑍍𑌰𑌣𑌯𑌰𑌸𑌜𑍁𑌷𑌾 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌃 ।
𑌸𑌵𑍍𑌯𑍇𑌤𑍋𑌤𑍍𑌰𑌂𑌕𑌰𑌸𑌰𑌸𑌿𑌜𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌾
𑌮𑌾𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑍋𑌰𑌥𑌮𑌧𑌿𑌵𑌸𑌨𑍍 𑌪𑌾𑌤𑍁𑌨𑌸𑍍𑌸𑍂𑌤𑌵𑍇𑌷𑌃 ॥ ௭॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌂𑌕𑌮𑌲𑌪𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌰𑌵𑌣𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌮𑍍 ।
𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂𑌜𑌗𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌂 𑌨𑍌𑌮𑌿𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂𑌹𑌰𑌿𑌮𑍍 ॥ ௮॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯𑌯𑌾𑌦𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌨𑌾𑌥𑌾𑌯𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀𑌶𑌾𑌯 𑌨𑌮𑍋𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑌿𑌨𑍇 ॥ ௯॥

ஹரி: ஓம்.

ஶ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஶ்ரீமத்பகவத்கீதாஶாஸ்த்ரம்.

த்ருதராஷ்ட்ர உவாச.

க. தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: ।
மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥

பதச்சேதம்.

1. தர்மக்ஷேத்ரே - குருக்ஷேத்ரே(1) - ஸமவேதா: - யுயுத்ஸவ:, மாமகா:(2) - பாண்டவா: - ச - ஏவ - கிம் - அகுர்வத - ஸஞ்ஜய(3).

அந்வயம்.	அர்த்தம்.
த்ருதராஷ்ட்ர உவாச	திருதராஷ்ட்ரன் சொன்னது
ஹே ஸஞ்ஜய !	ஓ ஸஞ்ஜயா !
தர்மக்ஷேத்ரே	தர்மபூமியாகிய
குருக்ஷேத்ரே	குருக்ஷேத்திரத்தில்
மாமகா:	நம்மவர்களும்
பாண்டவாஶ்ச	பாண்டவர்களும்
யுயுத்ஸவ: ஏவ	யுத்தம்செய்யவிருப்பமுள்ளவர்களாகவே
ஸமவேதா:	சேர்ந்து
கிம் அகுர்வத	என்னசெய்தார்கள் ?

பொழிப்புரை.

திருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை நோக்கிச் சொன்னது.

ஓ ஸஞ்ஜயா! தர்மபூமியாகிய குருக்ஷேத்திரமென்னும் இடத்தில் (என் குமாரன் துர்யோதனன் முதலான) நம்மவர்களும், (என் ஸகோதரன் பாண்டுவின் குமாரர்கள் தர்மபுத்திரன் முதலான) பாண்டவர்களும், யுத்தம் செய்ய விருப்பமுள்ளவர்களாகவே ஒருவரை ஒருவர் சந்தித்த பிறகு என்ன செய்தார்கள் ?

---

(1) **குருக்ஷேத்ரம்** - கௌரவர்கள் பாண்டவர்கள் இவர்களின் ஆதி புருஷன் குரு என்பவர் அநேகம் தர்மம் முதலானவைகளைச் செய்த இடம்.

(2) **மாமகா:** - பாண்டவர்களும் திருதராஷ்ட்ரனைச் சேர்ந்தவர்களாக விருக்க துர்யோதனுதிகளான தன்குமாரர்களை மட்டும் நம்மவர்கள் என்றும், பாண்டவர்களை வேறுபடுத்தியும், சொல்வது திருதராஷ்ட்ரனுடைய பக்ஷபாதத்தையும் துரோகசிந்தனையையும் காட்டுகிறது.

(3) **ஸஞ்ஜய** - ராகத்துவேஷாதிகளை நன்ருய் ஜயித்தவன்.

(ஸ்வ) இந்த கீதாசாஸ்திரமானது ஸ்ரீவேதவ்வியாஸர் அருளிச்செய்த ஸ்ரீமஹாபாரதம் பீஷ்மபர்வத்தில், பகவத்கீதாபர்வம் என்கிற உட்பிரிவில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அந்த ஸ்ரீ மஹாபாரதத்தின் சுருக்கமும், திருதராஷ்ட்ரன், பாண்டு இவர்கள் இன்னுரென்பதும், பாரதயுத்தத்தின் வரலாறும், இப்புஸ்தகத்தின் முகவுரை 9-முதல் 11-வரையுள்ள பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனுல் திருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை இந்த சுலோகத்தில் கண்ட கேள்விபை கேட்கும் காலத்தில், பத்துநாள் யுத்தம் நடந்துவிட்டதாக பாரதத்தில் ஏற்படுவதால், இக்கேள்வியை கேட்ட ஸந்தர்ப்ப பின்னதென்பதை சற்று விரிவாக எடுத்துச் சொல்வது அவசியமாகத் தோற்றுகிறது. அதாவது:-

இருகக்ஷிக்காரர்களாகிய கௌரவர்களும், பாண்டவர்களும், தங்கள் தங்கள் ஸைன்யங்களுடன் யுத்தத்திற்காக குருக்ஷேத்திரத்திற்கு புறப்பட்டுப்போன பிறகு, திருதராஷ்ட்ரன் வியாகூலமுற்றிருந்தான். அப்போது வியாஸமஹரிஷியானவர், அங்கு தோன்றி திருதராஷ்ட்ரனுக்குத் தேறுதலைச் சொல்லி, அவன் பிறவிக்குருடனுனதால் பாரதயுத்தத்தைப்பார்க்க அவனுக்கு அபேக்ஷயிருந்தால் கண்களைக்கொடுப்பதாகச் சொல்ல, அதற்கு அவன் பந்துக்கள் மடிவதைப் பார்க்கத் தனக்கு விருப்பமில்லை என்றும், யுத்தத்தில் நடக்கும் ஸங்கதிகளை, சொல்லக்கேட்டால் போதுமென்றும், பிரார்த்தித்தபடி வியாஸர் ஸஞ்ஜயனுக்கு ஞானக்கண் முதலானவைகளைக் கொடுத்து ஷை யுத்தத்தில் நடக்கும் எல்லா ஸங்கதிகளையும் நடந்தபடி சொல்ல ஏற்படுத்திவிட்டுப்போன பிறகு, திருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை முதலில் பூமி முதலான அண்டங்களைப்பற்றி வினவ, அவைகளைப் பற்றி பூமிபர்வம் என்னும் கண்டத்தில் சொல்லி முடித்தான்.

பிறகு ஸஞ்ஜயன் யுத்தகளத்திற்குப்போய் பத்து நாள் யுத்தம் நடந்து பீஷ்மர் அடிபட்டு விழுந்த ஸங்கதியை, யுத்தகளத்திலிருந்து அவன் ஓடி வந்து திருதராஷ்ட்ரனுக்குச் சொல்வது முதல், பகவத்கீதா பர்வமென்பது ஆரம்பம். அச்சங்கதியைக் கேட்டு திருதராஷ்ட்ரன் பலவாறு புலம்பி, இரு

கக்ஷிக்காரர்களும் யுத்தத்திற்கு தயாரானது முதல் நடந்த ஒவ்வொரு ஸங்கதியையும் கிரமப்படி தனக்குச் சொல்லவேணுமாய் ஸஞ்ஜயனைக் கேட்க, அவன் அவ்வாறே எல்லாவிஷயங்களையும் விஸ்தாரமாய்ச் சொல்லிவந்து யுத்தம் செய்யத்துடங்கின தினத்தில் சூர்யோதயத்திற்கு முன் இருகக்ஷி ஸேனைகளும் யுத்த களத்தில் வந்து ஸந்தித்து ஆரவாரித்ததாகச் சொல்லி முடித்தபொழுது, புத்திரவாஞ்சையினாலும், ராஜ்ய ஆசையினாலும் மயங்கி, தர்மநிலை தவறி, தன் புத்திரனுக்கே ஜயத்தைக்கோரி நிற்கும் திருதராஷ்ட்ரன், மேல் நடந்தவைகளைத் தெரிந்துகொள்ள ஆவலுற்று, இச்சுலோகத்தில் கண்டபடி வினவுகிறான். அதற்கு, பிரத்தியுத்தரமாக ஸ்ரீகிருஷ்ண பகவானால், லோகானுக்ரஹார்த்தமாய் ஸகல வேதாந்த ஸாரத்தையும் திரட்டி அர்ஜுனனுக்கு உபதேசித்த இந்த கீதாசாஸ்திரத்தை பகவானிடத்திலிருந்து ஸஞ்ஜயன் நேரில் கேட்டபடியே திருதராஷ்ட்ரனுக்குச் சொன்னதாக இந்த பகவத்கீதை 18-வது அத்தியாயம், 75-வது சுலோகத்தினால் வெளிப்படுகிறது.

இவ்விதமாய் ஸஞ்ஜயனைக்கொண்டு திருதராஷ்ட்ரனுக்கு இந்த கீதாசாஸ்திரத்தைச் சொல்லும்படி முற்றுமுணர்ந்த ஸ்ரீவேதவ்வியாஸர் ஏற்படுத்தினதின் கருத்து என்னவென்றால், இந்த கீதோபதேசமானது ஏதோ யுத்தகளத்தில் நின்ற க்ஷத்திரியனான அர்ஜுனனுக்கு, யுத்தம் செய்வதின் பொருட்டு மாத்திரம் சொல்லப்பட்டதல்ல, இப்பிரபஞ்சமாகிய அஜ்ஞான இருட்டில் மூழ்கிக்கிடக்கிற ஸகலஜனங்களும் இந்த கீதாசாஸ்திரத்தை கேட்பதினாலும், படிப்பதினாலும், அவரவர்களின், அஜ்ஞானத்தினின்று விடுபட்டு மோக்ஷத்தை நிச்சயமாய் அடைய வழி இதுதான் என்பதை வற்புறுத்திக் காட்டுவதற்காகவே.

இந்த ஸ்ரீபகவத்கீதையில் தத்வோபதேசமானது பின்வருகிற 2-வது அத்தியாயம், 11 - வது சுலோகம் முதற்கொண்டுதான் பகவானால் சொல்லப்பட்டதாயிருக்க, அதற்கு முன்னுள்ள இச்சுலோகங்களின் பிரயோஜனமென்னவென்று யோசிக்குமிடத்து, ஷை 2-வது அத்தியாயம், 11-வது சுலோகம் முதல் உபதேசிக்கப்பட்ட ஆத்மதத்துவமானது சோகமோகங்களின் நிவர்த்திக்காக வாகிறதென்றும், அதற்கு முன்னுள்ள சுலோகங்கள், ஸாதாரணமாய், மனிதர்கள் சோகமோகங்களை அடையும் விதத்தையும், அவைகளின் இயல்பையும், ஜனனமரணமாகிய ஸம்ஸாரத்திற்கு வித்தான அச்சோகமோகங்களை ஜனங்களடைவதினால், விவேகஹீனர்களாகி, அவரவர்களின் ஸ்வதர்மங்களைக் கைவிடவும், பரதர்மங்களைக் கைக்கொள்ளவும், எப்படி தலைப்படுகிறார்கள் என்பதையும், அப்படி ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பதிலும் அகங்கார மமகாரங்களோடு கூடி பலாபேக்ஷை

யுற்று நிற்பதையும், திருஷ்டாந்தமாகக்காட்டி, அவைகளின் நிவர்த்தியை சுலபமாக அடைவிப்பதில் அதிக ஸாதகமாய் இருக்கின்றன வென்பதும் நன்று விளங்கும்.

சிலர் இந்த பகவத்கீதைக்கு கூடமான தாத்பர்யத்தைக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணபகவானை, பரமாத்மாவாகவும், அர்ஜுனனை ஜீவனாகவும் பாண்டவர்களை, தர்மாதி நற்குணங்களாகவும், துர்யோதனாதிகளை காமக்குரோதம் முதலிய துர்குணங்களாகவும், இவ்விருகுணங்களுக்குள் ஒன்றை ஒன்று மேலிட முயல்வதுதான் பாரதயுத்தமாகவும், அந்தயுத்தம் நடக்கும் இடமாகிய குருக்ஷேத்திரம் இந்த தேகமாகவும், முடிவில் மனிதனுடைய நல்லறிவு மேலிட்டு நற்குணங்கள் ஓங்குவதே பாண்டவர்களின் வெற்றியாகவும், நற்குணங்கள் ஸ்வல்பமாயினும் அவை வெற்றிபெறுவதற்குக் காரணம் பகவானைச் சரணமடைவதுதான் என்றும் பாவிக்கிறார்கள். (1)

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚.

௨. 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍀𑌕𑌂 𑌵𑍍𑌯𑍂𑌢𑌂 𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑌂𑌗𑌮𑍍𑌯 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

2. த்ருஷ்ட்வா-து(1)-பாண்டவஅநீகம்-வ்யூடம்-துர்யோதநः(2)-ததா, ஆசார்யம்-உபஸங்கம்ய-ராஜா-வசநம்-அப்ரவீத்.

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚	ஸஞ்ஜயன் சொன்னது
𑌤𑌦𑌾	அப்போது
𑌰𑌾𑌜𑌾	இராஜாவான
𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑌃	துர்யோதனனானவன்
𑌵𑍍𑌯𑍂𑌢𑌂	கிரமவரிசைப்படுத்தப்பட்டிருக்கிற
𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍀𑌕𑌂	பாண்டவர்களுடையஸேனையை
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁	பார்த்தவுடன்
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑍍	ஆசார்யரை
𑌉𑌪𑌸𑌂𑌗𑌮𑍍𑌯	நெருங்கி
𑌵𑌚𑌨𑌮𑍍	(பின் சொல்லப்போகிற) வாக்கியத்தை
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍	சொன்னான்.

ஸஞ்ஜயன் திருதராஷ்ட்ரனை நோக்கிச் சொன்னது.

(இருகக்ஷி ஸேனைகளும் யுத்தகளத்திற் சந்தித்த) அப்பொழுது ராஜாவான துர்யோதனனானவன், கிரமவரிசைப் படுத்தப்பட்டிருக்கிற பாண்

டவர்களுடைய ஸேனையைப் பார்த்தவுடன், துரோணாசார்யர் சமீபத்திற் போய், பின் சொல்லப்போகிற வாக்கியத்தைச் சொன்னான்.

---

(1) து, சப்தப்பிரயோகம், பாண்டவர்கள் தைரியக்குறைவை அடையவில்லை என்றும், துர்யோதனன்தான், மனத்தளர்ச்சியை அடைந்தான் என்றும் குறிப்பிக்கிறது.

(2) ராஜா:—யுத்தத்தில் ஜயிக்கப்பட சிரமஸாத்தியமானவன்.

(ஸ்வ) துர்யோதனன் பாண்டவ ஸைன்யத்தில், கிருஷ்ணார்ஜுனர்களையும், பயங்கரமான பீமனையும், பார்த்த மாத்திரத்தில் அதிபீதி அடைந்ததையும், அதைக் குறிப்பாலறிந்த துரோணாசார்யரிடம், அவன்போய் அதற்கு ஸமாதானமாய்ச் சொல்லும் வார்த்தைகளையும், துர்யோதனன் சொன்னபடியே சொல்லி விடுவது திருதராஷ்ட்ரனுக்கு ஹிதமாய் இருக்குமென்று கருதி, ஸஞ்ஜயன் சொல்லுகிறான். (2)

---

௩ பஶ்யைதாம் பாண்டுபுத்ராணாம் ஆசார்ய மஹதீம் சமூம் ।
வ்யூடாம் த்ருபதபுத்ரேண தவ ஶிஷ்யேண தீமதா ॥

3. பஶ்ய-ஏதாம்(1)-பாண்டு-புத்ராணாம்-ஆசார்ய-மஹதீம்(2)-சமூம், வ்யூடாம்- த்ருபதபுத்ரேண(3)- தவ- ஶிஷ்யேண - தீமதா.

ஆசார்ய!	(துரோண) ஆசார்யரே!
தவ	உம்முடைய
ஶிஷ்யேண	சிஷ்யனாகிய
தீமதா	அதிபுத்திசாலியான
த்ருபதபுத்ரேண	துருபதராஜன் குமாரனாலே
வ்யூடாம்	கிரமவரிசைப்படுத்தப்பட்டிருக்கிற
மஹதீம்	விசாலமான (பெரிதான)
பாண்டுபுத்ராணாம்	பாண்டுபுத்திரர்களுடைய
ஏதாம் சமூம்	இந்த ஸேனையை
பஶ்ய	பாரும்.

(துர்யோதனனானவன் துரோணாசார்யரைப் பார்த்துச் சொல்லும் வார்த்தைகளை, சஞ்ஜயன் திருதராஷ்ட்ரனுக்குச் சொன்னது.)

துரோணுசார்யரே! உம்முடைய சிஷ்யனும் அதிபுத்திசாலியுமான துருபதராஜன் குமாரன் திருஷ்டத்யும்னனாலே, கிரமவரிசைப் படுத்தப்பட்டிருக்கிற விசாலமான பாண்டுகுமாரர்களுடைய இந்த ஸேனையைப் பாரும்.

---

(1) ஏதாம்—என்பது பாண்டவஸைன்யம் பயமின்றி அலக்ஷியமாக சமீபித்து நிற்பதைக் காட்டுகிறது.

(2) மஹதீம்—ஸ்வல்பமான பாண்டவ ஸைன்யத்தை துர்யோதனன் இவ்வாறு சொல்வது, அவனுடைய அதைரியத்தினாலும், மனக்குழப்பத்தினாலும் என்க. ஏனெனில், துர்யோதனன் ஸைன்யம் 11 அக்ஷௌஹிணீ கொண்டது; பாண்டவர்களுடையதோ 7 அக்ஷௌஹிணீதான். ஒரு அக்ஷௌஹிணீ என்பது 21870 தேர்கள், 21870 யானைகள், 65610 குதிரைகள், 109350 காலாட்கள் அடங்கியது. இதேமாதிரி உத்தியோகபர்வம் 185-வது அத்தியாயத்தில் துர்யோதனன் பாண்டவர்கள் ஸைன்யத்தைப் பார்த்து "இது கலக்கமுடியாதது சமுத்திரம்போன்றது" என்றுசொல்வதைப் பார்க்க.

(3) த்ருபதபுத்ரேண-திருஷ்டத்யும்னன் என்று சொல்லாமல் துருபத புத்ரன் என்று துர்யோதனன் குறித்துச் சொல்வதினால், துரோணுசார்யரிடத்தில் துருபத ராஜனுக்கு உண்டான வைரத்தினால், யாகம் செய்து துரோணுசார்யரைக் கொல்வதற்காகவே, இவன் பிறந்திருக்கிறான் என்பதை நினைத்து துர்யோதனன் மனம் கலங்குவதாகக் காட்டுகிறது. (ஸ்ரீமஹாபாரதம் ஆதிபர்வம் 131, 133, 169 அத்தியாயங்களில் கதை வரலாற்றைப் பார்க்க.)

(ஸ்வ) 3-வது முதல் 11-வது சுலோகம் உள்பட துர்யோதனனுடைய வாக்கியங்கள். முடிவில் துர்யோதனன் அடையப்போகிற அபஜயத்திற்கு சூசனையாக எதிரி ஸைன்யத்தைப் பார்த்தமாத்திரத்தில் அவனுக்கு உண்டான மனக்கலக்கம் அவன் வார்த்தைகளினாலேயே, வெளியாகிறது. (3)

---

௪. 𑌅𑌤𑍍𑌰 𑌶𑍂𑌰𑌾 𑌮𑌹𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑌾 𑌭𑍀𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌮𑌾 𑌯𑍁𑌧𑌿 ।
𑌯𑍁𑌯𑍁𑌧𑌾𑌨𑍋 𑌵𑌿𑌰𑌾𑌟𑌶𑍍𑌚 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌰𑌥𑌃 ॥

௫. 𑌧𑍃𑌷𑍍𑌟𑌕𑍇𑌤𑍁𑌶𑍍𑌚𑍇𑌕𑌿𑌤𑌾𑌨𑌃 𑌕𑌾𑌶𑌿𑌰𑌾𑌜𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍁𑌰𑍁𑌜𑌿𑌤𑍍𑌕𑍁𑌨𑍍𑌤𑌿𑌭𑍋𑌜𑌶𑍍𑌚 𑌶𑍈𑌬𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌰𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃 ॥

௬. 𑌯𑍁𑌧𑌾𑌮𑌨𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 𑌉𑌤𑍍𑌤𑌮𑍌𑌜𑌾𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑍋 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 ॥

4. அத்ர - ஶூரா: - மஹேஷ்வாஸா: - பீமார்ஜுனஸமா:(1) - யுதி, யுயுதாந:(2) - விராட:(3) - ச - த்ருபத:(4) - ச - மஹாரத:.

5. த்ருஷ்டகேது:(5) - சேகிதாந:- காஶீராஜ: - ச - வீர்யவாந், புருஜித்(6) - குந்திபோஜ: (7) - ச - ஶைப்ய:(8) - ச-நரபுங்கவ:.

6. யுதாமந்யு:(9) - ச - விக்ராந்த:-உத்தமௌஜா:-(10)-ச-வீர்யவாந், (11)ஸௌபத்ர:-த்ரௌபதேயா:(12)-ச-ஸர்வே-ஏவ-மஹாரதா:(13).

𑌅𑌤𑍍𑌰	இங்கே (பாண்டவஸேனையிலே)
𑌶𑍂𑌰𑌾𑌃	அதிசூரர்களாயும்
𑌮𑌹𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑌾𑌃	பெரியவிற்களையுடையவர்களாயும்
𑌯𑍁𑌧𑌿	யுத்தத்தில்
𑌭𑍀𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌮𑌾𑌃	பீமார்ஜுனர்களுக்குச் சமானருமான
𑌯𑍁𑌯𑍁𑌧𑌾𑌨𑌃	யுயுதானனும் (ஸாத்யகி யென்பது மறுபெயர்)
𑌵𑌿𑌰𑌾𑌟𑌶𑍍𑌚	விராடதேசத்தரசனும்
𑌮𑌹𑌾𑌰𑌥𑌃	மகாரதிகனான
𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌶𑍍𑌚	துருபததேசத்தரசனும்
𑌧𑍃𑌷𑍍𑌟𑌕𑍇𑌤𑍁𑌃	திருஷ்டகேதுவும்
𑌚𑍇𑌕𑌿𑌤𑌾𑌨𑌃	சிகிதானன் புத்திரன் சேகிதானனும்
𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍	வீர்யசாலியான
𑌕𑌾𑌶𑌿𑌰𑌾𑌜𑌶𑍍𑌚	காசிதேசத்தரசனும்
𑌪𑍁𑌰𑍁𑌜𑌿𑌤𑍍	புருஜித்தென்பவனும்
𑌕𑍁𑌨𑍍𑌤𑌿𑌭𑍋𑌜𑌶𑍍𑌚	குந்திபோஜனும்
𑌨𑌰𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃	மனிதச் சிரேஷ்டனான
𑌶𑍈𑌬𑍍𑌯𑌶𑍍𑌚	சைப்பியனென்பவனும்
𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃	பராக்கிரமசாலியான
𑌯𑍁𑌧𑌾𑌮𑌨𑍍𑌯𑍁𑌶𑍍𑌚	யுதாமந்யுவென்பவனும்
𑌉𑌤𑍍𑌤𑌮𑍌𑌜𑌾𑌶𑍍𑌚	உத்தமௌஜஸ்யென்பவனும்
𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍	வல்லமையுள்ள
𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑌃	சுபத்திரைபுத்திரனும்
𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌶𑍍𑌚	திரௌபதிபுத்திரர்களும்
𑌸𑌰𑍍𑌵𑍇	எல்லோரும்
𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 𑌏𑌵	மகாரதிகர்களாகவேயிருக்கிறார்கள்.

இங்கே (பாண்டவஸேனையிலே) அதிசூரர்களாயும், மஹாவில்லாளர்க

ளாயும், யுத்தத்தில் (அதிகவல்லமை பொருந்தியவர்களென்று பெயர் போன) பீமார்ஜுனர்களுக்குச் சமானமானவர்களாயு மிருக்கிற, யுயுதானன், விராடன், மகாரதிகனான துருபதன், திருஷ்டகேது, சேகிதானன் புத்திரன், வீர்யசாலியான காசிராஜன், புருஜித், குந்திபோஜன், மனிதச் சிரேஷ்டனான சைப்பியன், பராக்கிரமசாலியான யுதாமந்யு, உத்தமௌஜஸ், அதிவல்லமையுள்ள சுபத்திரை புத்திரன் அபிமந்யு, திரௌபதி புத்திரர்கள், இவர்களெல்லோரும், மகாரதிகர்களாகவே யிருக்கிறார்கள்.

---

(1) **பீமார்ஜுநஸமா:** - துர்யோதனன் பலமுறை பீமார்ஜுனர்களிடத்தில் உதைபட்டு உயிர்தப்பி ஓடி யிருப்பதை நினைத்து அவர்களை ஜயிப்பது சுலபமல்ல வென்று இப்போது எண்ணுவதாகக் காட்டுகிறது.

(2) **யுயுதாந:**- அதிசயமான யுத்தம் செய்கிறவன்; இவனுக்கு, ஸாத்யகி என்றும் பெயர்.

(3) **விராட:** - யுத்தத்தில் அதிகமாய் பரிஹஸிக்கிறவன் ; இந்த விராடராஜ்யத்தில்தான், பாண்டவர்கள் ஒரு வருஷம் அக்ஞாதவாசம் செய்தது; விராடன் புத்திரி உத்தரையை, அர்ஜுனன் குமாரன் அபிமந்யு, விவாகம் செய்து கொண்டது.

(4) **த்ருபத:**-விருக்ஷக்கொடியோன்; இவன் புத்திரர்கள் திருஷ்டத்யும்னன் (1) சிகண்டி (2); இவனுடைய பெண் திரௌபதி.

(5) **த்ருஷ்டகேது:**-இவன் சேதிதேசத்தரசன், சிசுபாலன் புத்திரன் ; இவன் சகோதரி ச்ருணுமதி என்பவளை நகுலன் விவாகம் செய்து கொண்டது.

(6) **புருஜித்** - அநேகம் பெயர்களை யுத்தத்தில் ஜயித்தவன்; இவன் பின்வருகிற குந்திபோஜனுடைய சகோதரன்.

(7) **குந்திபோஜ:**-யாதவவம்சத்தைச் சேர்ந்தவன்; கிருஷ்ணபகவானுடைய தகப்பனார் வசுதேவருடைய பிதாவின் அத்தை பிள்ளை; இவருக்கு குழந்தை யில்லாததினால் வசுதேவருடைய சகோதரி ப்ருதையை, என்பவளை பெண்ணாக வளர்த்ததால், அவளுக்கு குந்தி என்று பெயர். இந்த ப்ருதைதான், பாண்டவர்களின் தாயார் குந்திதேவி.

(8) **சைப்ய:**-சிபி கோத்திரத்தில் பிறந்தவன்.

(9) **யுதாமந்யு:**-யுத்தத்தில் அதிகமான கோபத்தைக் காட்டுகிறவன்.

(10) **உத்தமௌஜா:**-மேலான ஓஜஸ் (பலம்) உடயவன்.

(11) **ஸௌபத்ர:** - சுபத்திரைக்கு அர்ஜுனனால் பிறந்த அபிமந்யு.

(12) **த்ரௌபதேயா:** – திரௌபதியின் மற்றொரு பெயர் கிருஷ்ணை;

துருபதன் செய்த யாகத்தில் அக்கினியிலிருந்து அவனுக்குண்டானபெண். இவள் பாண்டவர்களை விவாஹம் செய்துகொண்டு இவளிடத்தில் தர்மபுத்திரருக்குப் பிறந்தவன், பிரதிவிந்தியன்; பீமசேனனுக்குப் பிறந்தவன், சுதசோமன்; அர்ஜுநனுக்குப் பிறந்தவன், சுருதகீர்த்தி; நகுலனுக்குப் பிறந்தவன், ஸதாநீகன்; ஸஹதேவனுக்குப் பிறந்தவன், சுருதசேனன்.

(13) ஸர்வஏவ மஹாரதா:-உத்தியோக பர்வத்தில், துர்யோதனனுக்கு பீஷ்மர் பாண்டவஸைன்யத்தில் ரதிகர்கள் மஹாரதிகர்கள் அதிரதாள் இன்னார் என்று சொல்லியிருப்பதில், சேகிதானனை ரதிகனுகமட்டும் குறித்திருக்க, துர்யோதனன் அவனையும் மஹாரதன் என்று சொல்வது துர்யோதனனுக்கு இப்போது உண்டாயிருக்கிற மனக்குழப்பத்தால் என்க.

மஹாரதன், முதலானவர்களின் லக்ஷண மென்னவென்றால்:—

ஆத்மாநம் ஸாரதிம் சாஶ்வாந் ரக்ஷஞ்ஶத்ருஶாயகை: |
யோऽயுதைர்யுத்யதே வீரை: ஸ மஹாரத உச்யதே ||

தன்னையும் ஸாரதியையும் குதிரைகளையும் சத்துருக்களுடைய ஆயுதங்களினால் காயமடையாதபடி ரக்ஷித்துக்கொண்டு பதினாயிரம் சூரர்களோடு எவன் யுத்தம் செய்கிறானோ அவன் மஹாரதன் என்று சொல்லப்படுகிறான்.

ஏகோ தஶஸஹஸ்ராணி யோதயேத்யஸ்து தந்விநாம் |
ஶஸ்த்ரஶாஸ்த்ரப்ரவீணஶ்ச மஹாரத இதி ஸ்ம்ருத: ||

யாவனொருவன் விற்பிடித்து யுத்தஞ்செய்கிற பதினாயிரம் பெயர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்ய வல்லமையும் ஆயுத சாஸ்திரத்தில் அதிகப் பயிற்சியு முள்ளவனோ அவன் மஹாரதிகனென்று சொல்லப்படுகிறான்.

அமிதாந்யோதயேத்யஸ்து ஸம்ப்ரோக்தோऽதிரதஸ்து ஸ: |
ரதீ த்வேகேந யோ யோத்தா தந்ந்யூநோऽர்த்தரத: ஸ்ம்ருத: ||

அளவற்ற ரதிகர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்யும் வல்லமையும் ஆயுதப் பயிற்சியு முள்ளவன், அதிரதனென்றும், ஒரே ரதத்திலிருந்துகொண்டு மற்றொரு ரதத்திலிருக்கின்ற தனக்குச் சமானமான ஒருவனோடு எதிர்த்து யுத்தஞ்செய்கிறவன், ரதி என்றும், அவனுக்குத் தாழ்ந்தவன் அர்த்தரத னென்றும் சொல்லப்படுகிறான். (4-6)

---

௭. அஸ்மாகம் து விஶிஷ்டா யே தாந்நிபோத த்விஜோத்தம |
நாயகா மம ஸைந்யஸ்ய ஸஞ்ஜ்ஞார்த்தம் தாந்ப்ரவீமி தே ||

7. அஸ்மாகம்-து(1)-விஶிஷ்டா:-யே-தாந்-நிபோத-த்விஜோத்தம(2) நாயகா: - மம - ஸைந்யஸ்ய - ஸம்ஜ்ஞார்த்தம் - தாந் - ப்ரவீமி - தே.

𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 !	பிராம்மண சிரேஷ்டரே !
𑌅𑌸𑍍𑌮𑌾𑌕𑌂𑌤𑍁	ஆனால் நம்முடைய பக்ஷத்தில்
𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌃	சிறந்தவர்கள்
𑌯𑍇	எவர்களோ
𑌤𑌾𑌨𑍍	அவர்களை
𑌨𑌿𑌬𑍋𑌧	தெரிந்துகொள்ளும்
𑌮𑌮𑌸𑍈𑌨𑍍𑌯𑌸𑍍𑌯	என்னுடைய ஸேனைக்கு
𑌨𑌾𑌯𑌕𑌾𑌃	தலைவர்கள்
(𑌯𑍇)	(எவர்களோ)
𑌤𑌾𑌨𑍍	அவர்களை
𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌂	ஒரு குறிப்புக்காக
𑌤𑍇	உமக்கு
𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿	சொல்லுகிறேன்

பிராம்மண சிரேஷ்டரான துரோணாசார்யரே! ஆனால் நம்முடைய பக்ஷத்திலும் சிறந்தவர்கள் எவர்களோ, அவர்களைத் தெரிந்துகொள்ளும். என்னுடைய ஸைன்யத்தின் தலைவர்கள் எவர்களோ அவர்களை நான் ஒரு குறிப்புக்காக உமக்கு எடுத்துச் சொல்லுகிறேன்.

---

(1) 𑌤𑍁, சப்தப்பிரயோகம் துர்யோதனன் தனக்கு முன் உண்டான அதைரியத்தை மறைத்து தைரியத்தை மேற்கொள்ளப் பிரயத்தனப்படுவதைக் காட்டுகிறது.

(2) 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 - '𑌧𑌿𑌗𑍍𑌬𑌲𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌬𑌲𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍇𑌜𑍋𑌬𑌲𑌂 𑌬𑌲𑌮𑍍' 'க்ஷத்திரியபலம் பிரயோஜனமில்லை, பிரம்மதேஜோபலம் தான் பலம்.' என்கிறபடி, உம்முடைய பிரம்ம தேஜோபலத்தினாலேயே நீர் எங்களை ரக்ஷித்து சத்துருக்களை ஜயிக்கவல்லவர் அல்லவா? அப்படியிருக்க நான் ஏன் அதைரியப் படவேண்டும் என்று, துர்யோதனன் ஆசார்யரைச் சிலாகித்து உத்ஸாகப் படுத்துகிறான். (7)

---

௮. 𑌭𑌵𑌾𑌨𑍍𑌭𑍀𑌷𑍍𑌮𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚 𑌕𑍃𑌪𑌶𑍍𑌚 𑌸𑌮𑌿𑌤𑌿𑌂𑌜𑌯𑌃 ।
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌮𑌾 𑌵𑌿𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚 𑌸𑍌𑌮𑌦𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌃 ॥ *

௯. 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌚 𑌬𑌹𑌵𑌃 𑌶𑍂𑌰𑌾 𑌮𑌦𑌰𑍍𑌥𑍇 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌹𑌰𑌣𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌾𑌃 ॥

8. பவாந் - பீஷ்மஃ(1)- ச - கர்ணஃ(2)-ச-க்ருபஃ(3)-ச-ஸமிதிஞ்ஜயஃ,
அஶ்வத்தாமா(4) -விகர்ணஃ(5) - ச - ஸௌமதத்திஃ - ஜயத்ரதஃ(6)*
9. அந்யே - ச-பஹவஃ - ஶூராஃ - மதர்தே - த்யக்தஜீவிதாஃ(7),
நாநாஶஸ்த்ரப்ரஹரணாஃ - ஸர்வே - யுத்தவிஶாரதாஃ.

𑌭𑌵𑌾𑌨𑍍	(துரோணாசார்யராகிய) நீரும்
𑌭𑍀𑌷𑍍𑌮𑌶𑍍𑌚	பீஷ்மரும்
𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚	கர்ணனும்
𑌕𑍃𑌪𑌶𑍍𑌚	கிருபாசார்யரும்
𑌸𑌮𑌿𑌤𑌿𑌂𑌜𑌯𑌃	யுத்தத்தில் ஜயசாலியான
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌮𑌾	அசுவத்தாமாவும்
𑌵𑌿𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚	விகர்ணனும்
𑌸𑍌𑌮𑌦𑌤𑍍𑌤𑌿𑌃	சோமதத்தன்குமாரன் பூரிசிரவஸும்
𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌃	ஜயத்ரதனும்
𑌅𑌨𑍍𑌯𑍇 𑌚	பின்னும்
𑌬𑌹𑌵𑌶𑍍𑌶𑍂𑌰𑌾𑌃	அனேக சூரர்களும்
𑌸𑌰𑍍𑌵𑍇	எல்லோரும்
𑌮𑌦𑌰𑍍𑌥𑍇	எனக்காக
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌃	பிராணனைக் கொடுக்கத் துணிந்தவர்களாயும்
𑌨𑌾𑌨𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌹𑌰𑌣𑌾𑌃	அடிப்பதற்கு ஸாதனமான பலவித ஆயுதங்களை உடைத்தானவர்களாயும்
𑌯𑍁𑌦𑍍𑌧𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌾𑌃	யுத்தத்தில் வெகு தேர்ந்தவர்களாயும்
(𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿)	(நிற்கிறார்கள்).

துரோணாசார்யராகிய நீரும், பீஷ்மரும், கர்ணனும், கிருபாசார்யரும், யுத்தத்தில ஜயசாலியான அசுவத்தாமாவும், விகர்ணனும், சோமதத்தன் குமாரன் பூரிசிரவஸும், ஜயத்ரதனும், பின்னும் அனேகசூரர்களும், இவர்கள் எல்லோரும், எனக்காகப் பிராணனைக் கொடுக்கத்துணிந்தவர்களாயும், அடிப்பதற்கு ஸாதனமான பலவித ஆயுதங்களை யுடையவர்களாயும், யுத்தத்தில் வெகு தேர்ந்தவர்களாயும் நிற்கிறார்கள்.

---

* 𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌃 - என்பதற்கு பதிலாக 𑌤𑌥𑍈𑌵 𑌚 என்றொரு பாடம். அதற்கு அப்படியே என்று அர்த்தம்.

(1) பீஷ்மः—பயங்கரமான விருதத்தைக் கொண்டவர். இவர் சாந்தனு மஹாராஜனுக்கு, கங்காதேவியினிடத்தில் பிறந்தவர். இவருக்கு தேவ விருதர் என்று முதலில் பெயர். இவர் தகப்பனர், சத்தியவதியைக் கல்லியாணம் செய்து கொள்ள விரும்பியபோது, அவள் வயிற்றில் உதிக்கும் புத்திரனுக்கு பட்டம் கிடைப்பதானல் மட்டும் சம்மதிப்பதாகச் சொன்னதால், ஷை தேவவிருதர் அதற்கு இணங்கி, தான் கல்லியாணம் செய்து கொள்ளாமல் பிர்ம்மசாரியாகவே இருந்து நல்ல பதவியை அடைவதாக அப்போது பிரதிக்ஞை செய்தார். இந்த பயங்கரமான பிரதிக்ஞையைக் கேட்டு தேவதைகள் முதலானவர்கள் 'இவர் பீஷ்மர்' என்று சொல்ல, அதுமுதல் அவருக்கு பீஷ்மர் என்று பெயர் வழங்கியது. (பாரதம் ஆதிபர்வம் 100—வது அத்தியாயம் பார்க்க.)

(2) கர்ணः—பாண்டவர்கள் தாயார் குந்திதேவிக்கு கல்லியாணமாவதற்கு முன், துர்வாஸ மஹரிஷிக்கு, இவள் செய்த சிஷ்ரூஷையினல் அவர் மகிழ்ந்து, அவளுக்கு அவர் உபதேசித்த மந்திரங்களில் சூர்யனை உத்தேசித்த மந்திரத்தை அவள் உச்சரித்தபோது, சூர்யபகவான் பிரத்தியக்ஷமாகி, அவளிடத்தில் சூர்யனுக்கு இவன் பிறந்தவன்; இவன் ஜநிக்கும்போதே கர்ணகுண்டல கவசத்துடன் பிறந்தவன்; இந்திரன் தன் புத்திரனை அர்ஜுனனுக்கு அனுகூலத்தை உத்தேசித்து பிராம்மணவேஷம் பூண்டு, இவன் கர்ணகுண்டலத்தையும், கவசத்தையும், யாசகம் கேட்டபோது, அவைகளை அறுத்தும் கிழித்தும்கொடுத்தான். இவனுக்கு வஸுஷேணன் என்றும், சூதபுத்திரன் என்றும் பெயர் உண்டு (பாரதம் ஆதிபர்வம் 111—வது அத்தியாயம் பார்க்க.)

(3) க்ருபः—கௌதமருடைய தவத்தை கெடுக்கும் பொருட்டு இந்திரன் ஜாலபதி என்கிற அப்ஸரஸ்திரீயை அனுப்ப, அவளை அவர் பார்த்து மனம் கலங்கினபோது, அவருடைய ரேதஸ் ஒரு நாணல் புதறில் இரண்டாகச் சிதறிவிழ, அதிலிருந்து ஒரு புருஷப் பிரஜையும் ஸ்திரீப்பிரஜையும் உடனே உண்டாயின; அக்குழந்தைகளை அங்கு வேட்டையாட வந்திருந்த சாந்தனு மஹாராஜாவின் மந்திரி, பார்த்து எடுத்துவந்து ராஜாவிடம் ஒப்புவிக்க, ராஜா கிருபையினல் அவர்களை காப்பாற்றி வந்த நிமித்தம் அக்குழந்தைகளுக்கு கிருபன் என்றும், கிருபி என்றும், பெயர் வந்தது. இந்த கிருபி என்பவளைத்தான் துரோணசார்யர் விவாகம் செய்து கொண்டார். (பாரதம் ஆதிபர்வம் 130-வது அத்தியாயம் பார்க்க.)

(4) அஶ்வத்தாமா—இவன் துரோணசார்யருக்கு கிருபி இடம் பிறந்த புத்திரன். இவன் ஜனித்த உடன், தேவலோகத்து குதிரை உச்சை

ஶிரவஸ் போல் கனைத்ததினால், இவனை அசுவத்தாமா என்று கூப்பிடும்படி அசரீரிவாக்கு உண்டாயிற்று. (பாரதம் ஆதிபர்வம் 131 – வது அத்தியாயம் பார்க்க.)

(5) விகர்ணஃ - இவன் துர்யோதனனுடைய தம்பி

(6) ஜயத்ரதஃ - இவன் ஸிந்துதேசத்தரசன்; துர்யோதனனுடைய சகோதரி துச்சலாவின் புருஷன்.

(7) த்யக்தஜீவிதாஃ—என் பொருட்டு பிராணனை விடுகிறதற்குத் தயாராயிருக்கிறவர்கள். (8-9)

---

௧௦. 𑌅𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑌦𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌬𑌲𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌿𑌦𑌮𑍇𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌲𑌂 𑌭𑍀𑌮𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ॥

10. அபர்யாப்தம் (1)- தத் - அஸ்மாகம்- பலம் - பீஷ்மாபிரக்ஷிதம்,
பர்யாப்தம் - து - இதம் - ஏதேஷாம் - பலம் - பீமாபிரக்ஷிதம்.

𑌤𑌤𑍍	அந்த (மேற்சொன்ன சூரர்களோடு கூடின)
𑌅𑌸𑍍𑌮𑌾𑌕𑌂	நம்முடைய
𑌬𑌲𑌂	ஸேனையானது
𑌅𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂	அபரிமிதமாயும்
𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌂	பீஷ்மராலே நன்றாக ரக்ஷிக்கப்பட்டதாயு மிரு[க்கிறது
𑌏𑌤𑍇𑌷𑌾𑌂	இவர்களுடைய
𑌇𑌦𑌂 𑌬𑌲𑌨𑍍𑌤𑍁	இந்த ஸேனையோ
𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂	மிதமானதாயும் (சுவல்பமாயும்)
𑌭𑍀𑌮𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌂	பீமனால் (தான்) காக்கப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன சூரர்களோடு கூடின அந்த நம்முடைய ஸேனையானது அபரிமிதமாய் இருப்பதுமன்றி (அதிபலபராக்கிரம, ஸ்வயேச்சா மரண வரம்பெற்ற, அதிஸூக்ஷ்ம புத்தியை யுடைய) பீஷ்மரால் நன்றாய் ரக்ஷிக்கப்பட்டதாயு மிருக்கிறது. இவர்களுடைய (பாண்டவர்களுடைய) இந்த ஸேனையோ, மிதமானதாயும் (சுவல்பமானதாயும்) அதிக சஞ்சலபுத்தியுள்ள பீமனால்தான் காக்கப்பட்டிருக்கிறது. (அதாவது:-பீஷ்மர் ஒருவராலும் வெல்லமுடியாதவர்; தனக்கு இஷ்டமானபோது, தன் பிராணனைவிட வரம் பெற்றவர்; இவர் தன் கக்ஷியிலிருக்கும்போது தனக்கு ஜயத்திற்கு ஸந்தேகமில்லை என்பது துர்யோதனன் அபிப்பிராயம்.)

இந்தச் சுலோகத்தினால் துர்யோதனன், தன் ஸைன்யம், பாண்டவ ஸைன்யத்தைவிட, அதிக பராக்கிரமம் பொருந்தியதென்றும், அதின்ன காரணத்தினாலென்றும், சொல்வதாகச் சில வியாக்கியான கர்த்தாக்களும், அதற்கு நேர்விரோதமாக வேறு சிலரும், தாத்பர்யம் கொண்டு அவரவர்கள் செய்திருக்கிற அந்வயக்கிரமத்தையும் அவைகளினர்த்தங்களையும் அடியிலெழுதப்பட்டிருக்கின்றன.

(1) மதுஸூதநீ:—அஸ்மாகம் பலம் ஏகாதஶஸம்க்யாகாக்ஷௌஹிணீ பரிகணிதத்வாத் அபரிமிதம் பஹும், பீஷ்மேண ச ப்ரதிதமஹாமஹிம்நா ஸூக்ஷ்மபுத்திநா ஸர்வத: ரக்ஷிதம் பர்யாப்தம் பரேஷாம் பரிபவே ஸமர்த்தம் | ஏதேஷாம் பாண்டவாநாம் து அல்பம் ஸப்தஸம்க்யாகாக்ஷௌஹிணீபரிமிதம் பலம் பீமேந ச சபலபுத்திநா கௌஶலதாதிகுணேந பரிபாலிதம் அபர்யாப்தம் | அஸ்மாநபிபவிதும் அஸமர்த்தமித்யர்த்த: ||

அதாவது, பதினொரு அக்ஷௌஹிணீயோடு கூடி மிகுதியான நம்முடைய இந்த ஸேனை, பிரசித்த மஹாமஹிமையுள்ள ஸூக்ஷ்ம புத்தியையுடைய பீஷ்மரால் எல்லாப் பக்கங்களிலும் ரக்ஷிக்கப்பட்டதாயும், சத்துருக்களை, அவமானப்படுத்துவதில் (வெல்லுவதில்) சாமர்த்தியமுள்ளதாயுமிருக்கிறது. ஏழு அக்ஷௌஹிணீயோடு கூடிய அல்பமான இவர்களுடைய (பாண்டவர்களுடைய) ஸேனையோ, சபல (நிலையில்லாத) புத்தியும், ஸாமர்த்தியக் குறைவுமுள்ள பீமனால் ரக்ஷிக்கப்பட்டதாயும், நம்மை அவமானப்படுத்துவதில் சாமர்த்தியமற்றதாயுமிருக்கிறது.

(2) ததிதம் அஸ்மாகம் பலம் பீஷ்மாதிஷ்டிதம் அபர்யாப்தம் அபரிமிதம், அஜய்யம் அக்ஷோப்யம் | ஏதேஷாம் து பாண்டவாநாம் பலம் பீமேநாபிரக்ஷிதம் பர்யாப்தம் பரிமிதம் | ஸாம்ப்ரதாயிகோ(அ)ர்த்த: ||

அப்பேர்ப்பட்ட இந்த நம்முடைய பலம் பீஷ்மரைப் பிரதானமாய் உடையதாயும், அபரிமிதமாயும், எதிர்க்கமுடியாததாயும், கலக்கமுடியாததாயுமிருக்கிறது. இந்த பாண்டவர்களுடைய ஸைன்யமோ, பீமனால் ரக்ஷிக்கப்பட்டதாயும் மிதமாயுமிருக்கிறது; வெல்லமுடியும் என்பது தாத்பர்யம்.

ஶ்ரீதர: - தத்பாண்டவாநாம் பலம் அபர்யாப்தம் நாலம் அஸ்மாகம் ஸம்ஹாரே | கிந்து தத் பீஷ்மாபிரக்ஷிதோ(அ)ஸ்மாபி: யத்நேந நிவர்த்தநீயமித்யர்த்த: | தத்பாண்டவபலம் பீஷ்மாபிரக்ஷிதம் | இதம் பாண்டவீயம் பலம் ஏதேஷாம் பாண்டவாநாம் பர்யாப்தம் பரிபவே ஸமர்த்தம் பீமோ(அ)திபலபராக்ரமோ(அ)பி ரக்ஷித: ய

ஸைந்ய தத³ஸ்மாகம் ப³லம் பீ⁴மாபி⁴ரக்ஷிதம் யஸ்மாத்³ஹேதோர்யோ
த்³த்⁴யாஸநாதே³தந்நிவ்ருத்த்யர்த²ம் தை: ரக்ஷிதத்வாத³ஸ்மாகம் நகிஞ்
சித³பி ப⁴யகாரணமஸ்தீத்யபி⁴ப்ராய: ॥

அந்தப் பாண்டவர்களுடைய ஸைன்யம் நமக்கு (நம்மை வெல்ல,) போதுமானதல்ல. அந்த ஸைன்யம் எப்படிப்பட்டதென்றால், நம்மால் நன்றாய் ரக்ஷிக்கப்பட்ட பீஷ்மரை நாசகராகவுடையது. இதுதான் பீஷ்மாபிரக்ஷிதம் என்பதின் கருத்து. இந்த நம்முடைய ஸைன்யமோ வென்றால், இந்த பாண்டவர்களை அவமானம் செய்கிறதில் ஸமர்த்தமாயிருக்கிறது. நம்ம ஸைன்யம் எப்படிப்பட்டதென்றால், அவர்களால் (பாண்டவர்களால்) ரக்ஷிக்கப்பட்ட, அதி துர்பலஹ்ருதய பீமனை நாசகனாக உடையது. இதுதான் பீமாபிரக்ஷிதம் என்பதின் கருத்து. எந்தக் காரணத்தினால் அதிக அயோக்கியனான பீமன் தான், இந்த நம்முடைய ஸைன்யத்தை கொல்வதற்காக பாண்டவர்களால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறானோ, அந்தக் காரணத்தினால் நமக்கு பயத்திற்கு கொஞ்சமும் ஹேது இல்லை என்பது கருத்து.

ஶங்கராநந்த³:—அபர்யாப்தம் யாஜாய யதி³த³மஸ்மாகம் நிர
திஶய: ஸைந்யம் தத்³பீ⁴ஷ்மாபி⁴ரக்ஷிதம் பீ⁴ஷ்மேணாபி⁴த: ஶரீரவாக்
ஶஸ்த்ராஸ்த்ரப³லேந ரக்ஷிதம் தச்ச ஜயஸம்பாத³நாய பர்யா
ப்தமேவ ப⁴வதி மஹாபுருஷாஶ்ரய ப³லாத் | தேஷாம் பாண்ட³
வாநாம் து இத³ம் ஸாமர்த்²யஹீநாநாம் ப³லம் பர்யாப்தமபி பீ⁴மே
நாபி⁴ரக்ஷிதம் தச்ச அபர்யாப்தமேவ ப⁴வதி | ஹீநபுருஷா
ஶ்ரயாதி³தி பா⁴வ: ॥

முன் சொன்னவர்களைக் காட்டிலும் பின்னமான, எந்த நம்முடைய ஸேனையானது யுத்தத்தின் பொருட்டு நமக்கு போதாததாயிருக்கிறதோ, அது, சரீரவாக்சஸ்திர அஸ்திர பலங்களைக்கொண்டு, மஹா புருஷரான பீஷ்மரால் ரக்ஷிக்கப்பட்டதாய், நமக்கு ஜயத்தை சம்பாதித்துக் கொடுக்க சாமர்த்தியமுள்ளதாயிருக்கிறது; இந்த, எதிரில் காணப்படுகிற பாண்டவ ஸைன்யமோ, போதுமானதாகவிருந்தும் ஹீன புருஷனை பீமனால் ரக்ஷிக்கப்பட்டிருப்பதினால் அவர்களுக்கு ஜயத்தைக் கொடுக்க சாமர்த்தியமற்றதாக விருக்கிறது.

பா⁴ஷ்யோத்கர்ஷதீ³பிகா —தத்³யேஷாம் ப³லமஸ்மாகம் ப³லம்
ஸைந்யமபி⁴ப⁴வித்தும் அபர்யாப்தமஸமர்த²ம், யதோஸ்மாகம் ப³லம்
பீ⁴ஷ்மேண வ்யாயிதஶரீரேணாதிஶூரேண ரக்ஷிதம் | இத³மஸ்மதீ³யம்
து ப³லமேதேஷாம் ஸைந்யமபி⁴ப⁴வித்தும் பர்யாப்தம் ஸமர்த²ம் |

யத: பரேஷாம் பலம் பீமேநாபிரக்ஷித மித்யர்த: ||

எதிரிகளுடைய அந்த ஸேனை நம்முடைய ஸேனையை அவமானப்படுத்த (வெல்ல) சாமர்த்திய மில்லாததாக விருக்கிறது; என்ன காரணத்தினால்? அதி மஹிமையையுடைய சூரரான பீஷ்மரால் நம்முடைய ஸேனை ரக்ஷிக்கப்பட்டிருப்பதினால்; இந்த நம்முடைய ஸைன்யமோ அவர்களுடைய ஸேனையை அவமானப்படுத்தப் போதுமான சாமர்த்தியமுள்ளதாயிருக்கிறது; என்ன காரணத்தினால் என்றால்? எதிரிகளுடைய ஸைன்யமானது சிறுவனான பீமனால் ரக்ஷிக்கப்பட்டிருப்பதினால்.

2 தத்விவ்ருணோதி — அஸ்மாகம் பலம் பீஷ்மேணாபிரக்ஷிதத்வாத் அபர்யாப்தம், அபர்யாப்தம் அநபிபவநீயம் க்ஷோபயிதுமஶக்யம் | ஏதேஷாம் த்விதம் பரிச்சிந்நம் ஊநம் பரிமிதமிதியாவத் | பீமேநாபிரக்ஷிதத்வாத் பர்யாப்தம், பர்யாப்தமபிபவிதும் க்ஷோபயிதும் ஶக்யம் ச ஶக்யமித்யர்த: ||

நம்முடைய ஸேனை, கண்ணுக்கெட்டாததாயும், பீஷ்மரால் ரக்ஷிக்கப்பட்டதாயு மிருக்கிறபடியால், எதிரிகளால் அவமானப்படுத்த, கலக்க முடியாதது. அவர்களுடைய இந்த ஸேனை, பார்வைக்கு எட்டியதாகவும், அதாவது மிதமாயும், பீமனால் ரக்ஷிக்கப்பட்டதாயு மிருக்கிறபடியால், அவமானப்படுத்தக் கூடியது, கலக்கக்கூடியது, அதாவது வெல்லக்கூடியது.

3 தஸ்மாத் த்வயா அஸ்மாகமிதம் பலமபர்யாப்தம், பரிஸந்நிவிஷ்டத்வாத் ஸர்வம் வ்யாப்தம் ந பவதி, கிம் து ஸ்வல்பமேவ பலம், ஏதேஷாம் து பலம் பரிஸந்நிவிஷ்டத்வாத் வ்யாப்தம் பர்யாப்தம், அத: அஸ்மத்ஸைந்யம் ஏநான் ஜித்வா யுத்தம் கரிஷ்யதீதி க்ருத்வா அஸ்மாகம் வ்யாப்தத்வமிதி பாவ:.

அந்தக் காரணத்தினால் இந்த நம்ம ஸேனை எல்லாப் பக்கங்களிலும் சத்துரு ஸேனையினால் வியாபிக்கப்படக் கூடியதாக வில்லை; ஆகவே நம்முடைய ஸைன்யம்தான் மிகுந்ததாக விருக்கிறதென்பது தாத்பர்யம். இந்த (பாண்டவ) ஸைன்யமோ எல்லாப் பக்கங்களிலும் (சுற்றிலும்) வியாபிக்கப்படக் கூடியதாகவிருக்கிறது. ஆனபடியால் நம்ம ஸைன்யம் மனது வைத்து யுத்தம் செய்யும், நமக்கு பிராபல்லியம் என்பது கருத்து.

ஶ்ரீதர: — தச்ச ததாபூதைர்வீரைர்யுக்தமபி, பீஷ்மேணாபிரக்ஷிதமப்யஸ்மாகம் பலம் ஸைந்யமபர்யாப்தம் தை: ஸஹ யோத்தும் அஸமர்த்தம் பாதி | இதம் து, ஏதேஷாம் பாண்டவாநாம் பலம் பீமேநாபிரக்ஷிதம் ஸத் பர்யாப்தம் ஸமர்த்தம்

भाति । भीष्मस्य उभयपक्षपातित्वात् अस्मत्सैन्यस्य पाण्ड
वसैन्यं प्रति असामर्थ्यं । भीमस्य एकपक्षपातित्वात्
तत्सैन्यस्य अस्मत्सैन्यं प्रति सामर्थ्यं भाति ॥

அப்போர்க்கொத்த வீரர்களோடு கூடியதாயிருந்தும் பீஷ்மனால் ரக்ஷிக்கப்பட்டிருப்பதினால் நமது ஸைன்யம் அவர்களோடு சண்டை செய்ய சாமர்த்தியம் இல்லாததாகத் தோற்றுகிறது. இவர்களுடைய இந்த பாண்டவ ஸைன்யமோ, பீமனால் ரக்ஷிக்கப்பட்டிருப்பதினால் சாமர்த்தியமுள்ளதாகத் தோற்றுகிறது. பீஷ்மர் உபயபக்ஷபாதி யானதினாலே நமது ஸைன்யம் பாண்டவ ஸைன்யத்தை உத்தேசித்து சாமர்த்தியம் இல்லாததாகவும், பீமன் ஏகபக்ஷமாய் இருப்பதினால் அவர்கள் ஸைன்யம் நமது ஸைன்யத்தை உத்தேசித்து சாமர்த்தியம் உள்ளதாயும் தோற்றுகிறது.

(ஸ்வ) இந்த ஸ்லோகத்தினால் துர்யோதனன் சொல்லக் கருதியது இன்னதென்பதை விளக்கும் பொருட்டு பலவிதமாய் அந்வயப்படுத்திச் சொல்லியிருக்கும் மேல் கண்ட தாத்பர்யங்களின் தாரதம்மியங்களை ஆலோசிப்பதற்கு அடியிற் கண்ட விஷயங்கள் முக்கியமாய் கவனிக்கத் தக்கவைகளாகத் தோற்றுகின்றன.

(1) இந்த யுத்தத்துவக்கத்தில் துர்யோதனன் தன் ஸைன்யத்தைப் பழித்தும், எதிரி ஸைன்யத்தை சிலாகித்தும், தன்கக்ஷியில் சேர்ந்தவர்களை அதைரியப்படுத்தியதாகக் கொள்வது அவன் முன் சொல்லியிருக்கும் வார்த்தைகளுக்குப் பொருந்தியதாகத் தோற்றவில்லை.

(2) முன் உத்தியோகபர்வத்தில் பாண்டவர்களை வெல்வது அசாத்தியமென்றும், அதனால் யுத்தம் வேண்டாமென்றும் துர்யோதனனுக்கு மற்றவர்கள் புத்தி சொன்னபோது, அவன் தன் சைன்னியம் அபரிமிதமானதென்றும், தனக்கு வேண்டும்போது தன் உயிரைவிட வரம் பெற்ற பீஷ்மர் தனக்கு ஸேனாதிபதியாக யிருக்கும்போது பயமென்னவென்றும், மறுபடி மேல்படி உத்தியோக பர்வத்தில், ரதாதிரதர்களைச் சொல்லுமிடத்தில் "நீர் ஸேனாதிபதியாக இருக்கும்பொழுது தேவலோக ராஜ்யாதிபத்யம் என்றாலும் கிடைப்பதில் சந்தேகமில்லை" யென்றும் சொல்லி யிருக்கிறான்.

(3) பீஷ்மரை ஒருவரும் வெல்லமுடியாதென்றும், பரசுராமருங்கூட அவரோடு யுத்தம் செய்து ஜயிக்க முடியவில்லை யென்றும் தெரிந்து துர்யோதனன் பீஷ்மப் பிராபல்லியத்தை அநேகவிடங்களில் எடுத்துச் சொல்லி யிருக்கிறான்.

(3) மேலும் இந்த பகவத்கீதாபர்வ ஆரம்பத்தில் யுத்தம் துடங்கின தினத்தில் யுத்தத்திற்காக ஸைன்யவரிசை செய்யும்படி துர்யோதனன் துச்சாதனனிடத்தில் இதற்குச் சற்று முன் சொல்லும்போது "இந்த யுத்தத்தில் நாம் செய்யவேண்டியது, பீஷ்மரைக் காப்பாற்றுவதைத் தவிர முக்கியமானது வேறு ஒன்றுமில்லை. அவரைக் காப்பாற்றிவிட்டால் அவர் பாண்டவர்கள் முதலானவர்களைக் கொன்றுவிடுவார். ஆகையால் நம்ம ஸைன்யத்தாரெல்லாரும், சிகண்டி பீஷ்மரிடம் அணுகாமல் பாதுகாக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறான். இப்போதும் அதே மாதிரி இத னடுத்த 11-வது சுலோகத்தில் "ஆகையால் நீங்கள் எல்லோரும் பீஷ்மரையே பாதுகாருங்கள்" என்று சொல்லுகிறான்.

(4) அல்லாமலும் பின் வருகிற பீஷ்மவதபர்வத்தில் 51-வது அத்தியாயத்தில் 2-ம் நாள் சண்டை தொடங்குவதற்கு முன், துரோணர் கிருபர் முதலானவர்களிடம் துர்யோதனன் போய் "நீங்கள் ஒவ்வொருவரும் தனிமையாகவே பாண்டவர்களை அவர்கள் ஸைன்யத்துடன் கொல்வதற்கு வல்லவர்கள்; அப்படியிருக்க நீங்கள் எல்லோரும் பீஷ்மரும் ஒருமித்துச் சேர்ந்தபோது உங்கள் வல்லமையைச் சொல்லவும் வேண்டுமா" என்று இதே சுலோகம் இதே வாக்கியங்களைச் சொல்லி பீஷ்மரை எல்லோரும் ரக்ஷிக்கும்படி சொல்லி யிருக்கிறான். அந்த விடத்தில், இந்த சுலோகத்தினால் தன் ஸைன்யத்தை துர்யோதனன் சிலாகித்துச் சொல்வதாகக் கொள்வதைத் தவிர, வேறுவிதமாக அர்த்தம் செய்ய இடமில்லாதிருக்கிறது.

(1) **பர்யாப்தம்**-பரி+ஆப்=அடைகிறது; இதனால் கோரிக்கை முடிவடைகிறது. அதாவது போதுமானது என்று ஒரு அர்த்தம்; பர்யாப்தம் என்பதற்கு, வரம்புக்கு உள்பட்டது, அதாவது மிதமானது என்று வேறு ஒருவித அர்த்தமும் வியாக்கியாதாக்கள் செய்திருக்கிறார்கள். அபர்யாப்தம் என்கிற பதத்திற்கு இந்த அர்த்தப்பிரயோகம் "ஜமதக்நயஸ்ய ஸஹஸ்ராநநா" என்று ரகு 1-வது ஸர்கம்-27-வது சுலோகத்தில் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்க.

2. பீஷ்ம பதத்தில் பீம பதம் எப்படி அடங்கியதோ அப்படியே பராக்கிரமத்திலும் பீஷ்மரில் பீமன் அடங்கியவனாகக் கொள்க. (10)

கக. * அயநேஷு ச ஸர்வேஷு யதாபாகமவஸ்திதா: ।
பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி ॥

11. அயநேஷு - ச - ஸர்வேஷு - யதா - பாகம் - அவஸ்திதா:,
பீஷ்மம் - ஏவ - அபிரக்ஷந்து - பவந்த: - ஸர்வே - ஏவ - ஹி.

ஹி	ஆகவே
பவந்த:	நீங்கள்
ஸர்வே ஏவ	எல்லோருமாகவே
ஸர்வேஷு	சகலமான
அயநேஷு ச	(ஸேனைக்குள்பிரவேசிக்கிற)மார்க்கங்களிலும்
யதாபாகம்	அவரவர்களிடத்தில்
அவஸ்திதா:	இருந்தவர்களாய்க்கொண்டு
பீஷ்மமேவ	பீஷ்மரையே
அபிரக்ஷந்து	எல்லாப்பக்கங்களிலும் காக்கவேண்டும்.

(பீஷ்மர்தான் நம்முடைய ஜயத்திற்கு ஆதாரம் என்கிற) இந்தக் காரணத்தினாலே *நீங்கள் எல்லோருமாக, ஸேனைக்குள் பிரவேசிக்கிற சகலமான மார்க்கங்களிலேயும், அவரவர்களுக்கு நேமிக்கப்பட்டிருக்கிற இடத்திலே இருந்துகொண்டு பீஷ்மரையே எல்லாப் பக்கங்களிலும் காக்கவேண்டும்.

---

* அயநேஷுது என்று ஒரு பாடம்.

(ஸ்வ) பீஷ்மர் தன் ஸேனையை ரக்ஷிக்கக்கூடியவர், அவர் ஒருவராலும் வெல்ல முடியாதவர், அவரிருப்பதால் ஜயத்திற்கு சந்தேகமில்லை என்று முன் சுலோகத்தில் துர்யோதனன் சொல்வதாகச் சொல்லிவிட்டு இந்தச் சுலோகத்தில் பீஷ்மரை எல்லோரும் ரக்ஷியுங்கள் என்று இப்போது சொல்வது பொருந்துமாவென்றால், இந்த பகவத்கீதா பர்வ ஆரம்பம் 15-வது அத்தியாயத்தில், துர்யோதனனே அக்காரணத்தைச் சொல்லியிருக்கிறான். அதாவது, பாண்டவர்கள் பக்ஷத்திலுள்ள சிகண்டி என்பவன் முதலில் காசிராஜன் புத்திரி அம்பாவாகவிருந்து அவளுக்கு பீஷ்மரிடத்தில் உண்டான வருத்தத்தினால் அவரைக் கொல்வதற்காகவே தவம் செய்து, துருபதராஜனுக்கு குழந்தையாய்ப் பிறக்கும்போது, ஸ்திரீரூபமாக ஜனித்து, பிறகு ஒரு யக்ஷனின் சகாயத்தின் பேரில், புருஷபாவத்தை அடைந்தவன். இவன் பெண்ணாகமுதலிலிருந்த நிமித்தம் இவன் பேரில் பாணங்களைத் தொடுக்கவும், இவனைக்கொல்லவும், மாட்டேன் என்று பீஷ்மர் பிரதிக்ஞை செய்திருக்கிறார். பீஷ்மரை ஒருவரும்

யுத்தம் செய்து கொல்ல முடியாதானபடியால் இந்த சிகண்டியைக்கொண்டு அவரைக்கொல்ல உத்தேசித்து அர்ஜுனன் சிகண்டியை தானே ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட சிகண்டி பீஷ்மரை அணுகினால் அவர் அவனை எதிர்க்காமலிருந்து விடுவார். அப்போது அவரை அவன் சுலபமாய் அடித்து வீழ்த்தி விடுவானானதால் அந்த சிகண்டி பீஷ்மரை அணுகாமலும் அடிக்காமலுமிருக்கும்படி பாது காக்கும் பொருட்டு துர்யோதனன் தன் ஸைன்யத்திற்கு இந்த சுலோகத்தினால் கட்டளையிடுகிறான். பீஷ்மருக்கும் சிகண்டிக்குமுள்ள வைரம் இன்ன தென்பதையும், சிகண்டி முதலில் பெண்ணாகவிருந்துமாறின வரலாற்றையும், பாரதம் உத்தியோகபர்வ வுட்பிரிவாகிய அம்பா உபாக்கியான பர்வத்தில் பார்க்க. (11)

---

௧௨. தஸ்ய ஸஂஜநயந் ஹர்ஷஂ குருவ்ருத்த: பிதாமஹ: ।
ஸிஂஹநாதஂ விநத்யோச்சை: ஶங்கஂ தத்⁴மௌ ப்ரதாபவாந் ॥

12. தஸ்ய - ஸம்ஜ நயந் - ஹர்ஷம் - குரு வ்ருத்த: - பிதாமஹ:,
ஸிம்ஹநாதம்-விநத்ய-உச்சை:-ஶங்கம்-தத்மௌ-ப்ரதாபவாந்(1).

ப்ரதாபவாந்	அதிக கீர்த்தி பொருந்தினவரும்
குருவ்ருத்த:	குருவம்சத்தாரில் வயது சென்றவருமான
பிதாமஹ:	பாட்டனார் (பீஷ்மர்)
தஸ்ய	அவனுக்கு (துர்யோதனனுக்கு)
ஹர்ஷம்	உத்ஸாஹத்தை
ஸஂஜநயந்	உண்டாக்கிக் கொண்டு
உச்சை:	பெரிதான
ஸிஂஹநாதஂ விநத்ய	{ சிம்மத்தின் ஒலியைப்போலொத்த நாதத்தைச் செய்து
ஶங்கஂ	சங்கத்தை
தத்⁴மௌ	ஊதினார்

அதிக கீர்த்தி பொருந்தினவரும், குருவம்சத்திலுள்ளவர்களுக்குள்ளே வயது சென்றவருமான, பாட்டனார் (முறையுள்ள) பீஷ்மர், அந்த துர்யோதனனுக்கு உத்ஸாஹம் உண்டாகும்படி பெரிதான, சிம்மத்தின் சப்தம்போன்ற சப்தத்தைச்செய்து சங்கத்தை ஊதினார்.

(1) *ப்ரதாபவான்* - என்பது பரசுராமர் முதலானவர்களும் யுத்தம் செய்து ஜயிக்கமுடியாத பீஷ்மருடைய கீர்த்தியைக் குறிக்கிறது.

(ஸ்வ) துர்யோதனனுக்கு உத்ஸாஹத்தை பீஷ்மர் உண்டாக்கிக் கொண்டு சங்கத்தை ஊதினர் என்பது, முன் அவனுக்கு மனத்தளர்ச்சி உண்டாயிருந்ததென்பதை ஸூசிப்பிக்கிறதுடன் துர்யோதனாதிகளுக்கும், பாண்டவர்களுக்கும், பீஷ்மர் பாட்டன் முறையாகவிருந்தும், அவர், அதர்மியான துர்யோதனன் கக்ஷியில் சேர்ந்து அவனுக்குச் சந்தோஷத்தை செய்வதின் காரணம், அவன் திரவ்வியத்தையும் அன்னத்தையும் அடைந்திருப்பதால் அவனுக்கு தன் தேகத்தை அர்பணம் செய்யவேண்டியது தன்னுடைய கடமையென்று பீஷ்மர் நினைத்து யுத்தம் செய்வதாகக் காட்டுகிறது. ஆனல் பீஷ்மர் பாண்டவர்களுக்கு நன்மையை எப்போதும் மனதினல் கோரினவர். (12)

---

௧௩. 𑌤𑌤𑌃 𑌶𑌙𑍍𑌖𑌾𑌶𑍍𑌚 𑌭𑍇𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌣𑌵𑌾𑌨𑌕𑌗𑍋𑌮𑍁𑌖𑌾𑌃 ।
𑌸𑌹𑌸𑍈𑌵𑌾𑌭𑍍𑌯𑌹𑌨𑍍𑌯𑌨𑍍𑌤 𑌸 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑍁𑌮𑍁𑌲𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 ॥

13 ததஃ - ஶங்காஃ - ச - பேர்யஃ - ச - பணவ ஆநககோமுகாஃ
ஸஹஸா - ஏவ - அப்யஹந்யந்த - ஸஃ - ஶப்தஃ - துமுலஃ - அபவத்.

𑌤𑌤𑌃	அதற்கு (பீஷ்மர் சங்கத்தை ஊதினதற்கு) ப்பிறகு
𑌶𑌙𑍍𑌖𑌾𑌶𑍍𑌚	சங்கங்களும்
𑌭𑍇𑌰𑍍𑌯𑌶𑍍𑌚	பேரிகைகளும்
𑌪𑌣𑌵𑌾𑌨𑌕 𑌗𑍋𑌮𑍁𑌖𑌾𑌃	தப்பட்டைகளும், பறைகளும் ஊதுகொம்புகளும்
𑌸𑌹𑌸𑍈𑌵	சீக்கிரமாகத்தானே
𑌅𑌭𑍍𑌯𑌹𑌨𑍍𑌯𑌨𑍍𑌤	முழக்கப்பட்டன
𑌸𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃	அந்தஒலியானது
𑌤𑍁𑌮𑍁𑌲𑌃	எங்கும் பரவினதாக
𑌅𑌭𑌵𑌤𑍍	ஆயிற்று

(பீஷ்மர் சங்கத்தொனி செய்த) பிறகு (கௌரவ சேனையிலுள்ள மற்றவர்களாலே) சங்கங்கள் பேரிகைகள், தப்பட்டைகள், பறைகள் ஊது

கொம்புகள் இவைகள் சீக்கிரமாக முழக்கப்பட்டன; அந்த ஒலியானது எங்கும் பரவினதாகவாயிற்று. (13)

---

௧௪. 𑌤𑌤𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑍈𑌰𑍍𑌹𑌯𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌮𑌾𑌧𑌵𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑌿𑌵𑍍𑌯𑍌 𑌶𑌙𑍍𑌖𑍌 𑌪𑍍𑌰𑌦𑌧𑍍𑌮𑌤𑍁𑌃 ॥

14 ததஃ - ஶ்வேதைஃ - ஹயைஃ-யுக்தே-மஹதி(1)-ஸ்யந்தநே-ஸ்திதௌ, மாதவஃ(2)பாண்டவஃ(3)ச-ஏவ(4)திவ்யௌ(5)ஶங்கௌ(6)ப்ரதத்மதுஃ.

𑌤𑌤𑌃	அதற்குப் பிறகு
𑌶𑍍𑌵𑍇𑌤𑍈𑌃𑌹𑌯𑍈𑌃	வெள்ளைக்குதிரைகளோடு
𑌯𑍁𑌕𑍍𑌤𑍇	கூடிய
𑌮𑌹𑌤𑌿	மஹத்தான
𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑍇	இரதத்திலே
𑌸𑍍𑌥𑌿𑌤𑍌	இருக்கிற
𑌮𑌾𑌧𑌵𑌃	இலக்ஷ்மீபதியான கிருஷ்ணஸ்வாமியும்
𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌶𑍍𑌚𑍈𑌵	பாண்டுபுத்திரனான அர்ஜுனனும்(ஒருமித்து)
𑌦𑌿𑌵𑍍𑌯𑍌	தெய்வத்தன்மை பொருந்திய
𑌶𑌙𑍍𑌖𑍌	சங்கங்களை
𑌪𑍍𑌰𑌦𑌧𑍍𑌮𑌤𑍁𑌃	உரக்க (பலமாக) ஊதினார்கள்.

அதற்குப்பிறகு வெள்ளைக்குதிரைகள் கட்டிய மஹத்தான இரதத்திலேயிருந்துகொண்டு லக்ஷ்மீபதியான கிருஷ்ணஸ்வாமியும் அர்ஜுனனும் ஒருமித்து தெய்வத்தன்மை பொருந்திய சங்கங்களை உரக்க ஊதினார்கள்.

---

(1) மஹதிஸ்யந்தநே—சோமனிடத்திலிருந்து வருணன் பெற்றிருந்த இந்த ரதம் முதலானதுகள், காண்டவம் என்கிறவில், இவைகளை, அக்கினி பகவான், காண்டவ வனதகனகாலத்தில், வருணனிடத்திலிருந்து வாங்கி, அர்ஜுனனுக்குக் கொடுத்தார்; தேவதைகளினாலும் இவைகள் முறியடிக்கவும் நாசம் செய்யவும், முடியாதவைகள்; இந்தரதத்திற்கு எப்போதும், சுத்த வெளுப்பான, மநோவேகமுள்ள, கந்தர்வப்பிறவிக்குதிரைகள் பூட்டப்பட்டுள்ளது; சூரிய தேஜஸ் உடையது; இதே குதிரைகள் கட்டிய இதே ரதத்திலிருந்து கொண்டுதான், ஸ்ரீகிருஷ்ணபகவானும், அர்ஜுன

னும், தேவதைகளுடன் சண்டைசெய்து ஜயித்து, காண்டவ வனத்தை எரித்தது; இவைகள் வேண்டும்போது ஸ்மரித்த மாத்திரத்தில் வந்துவிடும். அதே ரதமும் அந்த மாதவனும் அர்ஜுனனும் சேர்ந்து இப்போதும் யுத்தத்திற்கு வந்தார்கள் என்றால் வெற்றியைப்பற்றிச் சந்தேகமுமுண்டா? ஸ்ரீகிருஷ்ணனிருக்குமிடத்தில் தான் ஜயம்? என்பதை ஸஞ்ஜயன் சூசிப்பிக்கிறான்.

(2) **மாதவ:**—சாந்தோக்கிய உபநிஷத்திலுள்ள, மதுவித்தையென்கிற வேதபாகத்தில் புகழப்பட்டவனானதால், மாதவனென்றும், **மா** = இலக்ஷ்மீ, **தவ:** = பதி (கணவன்) இலக்ஷ்மீபதியானதால் **மாதவனென்**றும், மௌனம், தியானம், யோகம், இவைகளை யுடையவனானதால் மாதவனென்றும், பெயர் வந்தது. பாண்டவஸேனையில், **மாதவன்,** முதலில் சங்கத்தொனி செய்ததாகச் சொன்னது, அவர்தான் பிரதானம், மற்றவர்கள் நிமித்தம் என்பதைக்காட்டுகிறது. இவர் லக்ஷ்மீபதியானதால் இது வரையில் கௌரவர்கள் பக்ஷத்திலிருந்த ராஜலக்ஷ்மியை சங்கத்தொனி செய்து ஆகருஷித்துக் கொண்டுவிட்டார் என்பதை சஞ்ஜயன் சூசிப்பிக்கிறான்.

(3) **பாண்டவ:**—என்பது அர்ஜுனனை மாத்திரம் குறிப்பதாக ஏன் வைத்துக்கொள்ளவேண்டுமென்றால், '**பாண்டவானாம் தநஞ்ஜய:**' என்று பின்னால் சொல்லுகிற பிரகாரம் இவர்கள் இரண்டுபேரும் **நரநாராயண** அவதாரம். ஒரே ரதத்தில் இருவருமாக ஒரே ஆசனத்திலிருந்து கொண்டு மாதவனுடன் இணைபிரியாத பாண்டவன் அர்ஜுனன்தான்.

(4) **ஏவ**—என்பது இந்த விரண்டு சங்கத்தொனியும் தனித்தனியாய் கேட்கவில்லை, இரண்டும் ஒரே காலத்தில் ஒரே தொனியாக விருந்தது என்றும், மாதவனை முதலில் சொன்னதினால் பிராபல்லியம் அவர் சங்கத்தொனிக்குத்தான் என்றும் ஸஞ்ஜயன்எடுத்து காட்டுகிறான்.

(5) **ஸங்கம்**—துக்கத்தை சமனம் செய்வதினால், அல்லது துஷ்டர்களைசாந்தம் பண்ணுவதினால், அல்லது சுகத்தை உண்டுபண்ணுவதினால், சங்கம் என்று பெயர்.

(6) **ப்ரதத்மது:**—என்பதினால் ஒருமித்து மாதவனும் அர்ஜுனனும் செய்த சங்கத்தொனியானது மிகுந்த ஒலியோடு கூடி மற்ற தொனிகளை அமர்த்திக்கொண்டு மேலிட்டு ஓங்கிநின்றதென்பதைக்குறிக்கிறது.

---

(14)

கரு. பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தம் தநஞ்ஜய: |
பௌண்ட்ரம் தத்மௌ மஹாசங்கம் பீமகர்மா வ்ருகோதர: ||

௧௬. அநந்தவிஜயம்ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர: |
நகுல:ஸஹதேவஶ்ச ஸுகோஷமணிபுஷ்பகௌ ||

15 பாஞ்சஜந்யம் - ஹ்ருஷீகேஶ:- தேவதத்தம் - தநஞ்ஜய:,
பௌண்ட்ரம் - தத்மௌ - மஹாஶங்கம் - பீமகர்மா (4) வ்ருகோதர:.
16 அநந்தவிஜயம் - ராஜா (5) - குந்தீபுத்ர: - யுதிஷ்டிர:,
நகுல: - ஸஹதேவ: - ச - ஸுகோஷமணி புஷ்பகௌ.

ஹ்ருஷீகேஶ:	ஹ்ருஷீகேசரான கிருஷ்ணஸ்வாமியானவர்
பாஞ்சஜந்யம்	பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தை
(தத்மௌ)	(ஊதினார்)
தநஞ்ஜய:	அர்ஜுனன்
தேவதத்தம்	தேவதத்தமென்னும் சங்கத்தை
(தத்மௌ)	(ஊதினான்)
பீமகர்மா	பயங்கரமான செய்கையை உடைய
வ்ருகோதர:	பீமசேனன்
பௌண்ட்ரம்	பௌண்ட்ரமென்னும்
மஹாஶங்கம்	பெரிதான சங்கத்தை
தத்மௌ	ஊதினான்
ராஜா	ராஜாவான
குந்தீபுத்ர:	குந்திதேவி புத்திரரான
யுதிஷ்டிர:	யுதிஷ்டிரர் (தருமபுத்திரர்)
அநந்தவிஜயம்	அநந்தவிஜயமென்னும் சங்கத்தை
(தத்மௌ)	(ஊதினார்)
நகுல:	நகுலனும்
ஸஹதேவஶ்ச	சகதேவனும்
ஸுகோஷ	சுகோஷமென்னும் சங்கத்தையும்
மணிபுஷ்பகௌ	மணிபுஷ்பகமென்னும் சங்கத்தையும்
(தத்மது:)	(ஊதினார்கள்)

ஹ்ருஷீகேசரான கிருஷ்ணஸ்வாமியானவர் பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தை (ஊதினார்); அர்ஜுனன் தேவதத்தமென்னும் சங்கத்தை (ஊதினான்); பயங்கரமான செய்கையை உடைய பீமசேனன் பௌண்ட்ரமென்னும் பெரிய சங்கத்தை ஊதினான்; ராஜாவான குந்தி புத்திரர் யுதிஷ்டிரர் (தருமபுத்திரர்) அநந்தவிஜயமென்னும் சங்கத்தை (ஊதி

ஞர்); நகுலன் சுகோஷமென்னுஞ் சங்கத்தையும், சகதேவன் மணி புஷ்பக மென்னும் சங்கத்தையும் (ஊதினார்கள்).

(1) பாஞ்சஜந்யம்—கிருஷ்ணபகவான், தன் குருபுத்திரனை அபகரித்துப்போன, பஞ்சஜனனென்கிற அசுரனுடைய வயிற்றைக்கிழித்து அவனுடைய எலும்பிலிருந்து எடுத்ததினால்பாஞ்சஜன்னியமென்று பெயர் வந்தது.

(2) ஹ்ருஷீகேஶ:=ஹ்ருஷீக=இந்திரியங்களுக்கு, ஈஶ: = (ஸாக்ஷியாயிருப்பதால்) எஜமானனாகிய க்ஷேத்திரக்ஞனாயிருப்பதால் ஹிருஷீகேசனென்றும், இந்திரியங்களை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அவைகளை விஷயங்களில் ஏவுகிற பரமாத்மாவானதினால் ஹிருஷீகேசனென்றும்; சூரியசந்திர ரூபங்களாகவிருக்கிறவராகிய பகவானானவர் அந்த சூரிய சந்திரனுடைய கேசங்கள் (மயிர்) என்று சொல்லப்பட்ட கிரணங்களாலே ஜகத்திற்கு ஜாக்கிரத் ஸுஷுப்தி யவஸ்தைகளினால் சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறதினால் ஹிருஷீகேசனென்றும் பெயர் வந்தது.

(3) தநஞ்ஜய:-இராஜசூய யாகத்திற்காக அநேக ராஜாக்களை ஜயித்து தனங்களைச் சம்பாதித்தவனானதால் தனஞ்ஜயன், அல்லது தனத்திலாசையற்றவனானதால் தனஞ்ஜயனென்றும் பெயர் வந்தது.

(4) வ்ருகோதர:-எதையும் பஸ்மம்செய்யும் "விருக" மென்கிற அக்கினியை வயிற்றிலுடையவன், அல்லது, செந்நாய் வயிறுபோன்ற வயிற்றையுடையவன்.

(5) ராஜா-யுதிஷ்டிரர் (தர்மபுத்திரர்) ராஜஸ்தானத்தை இப்போது அடையாமலிருந்தும், அவரை ராஜா என்று சொல்லுவது,பின்னால் இவர் ராஜ்யாதிபத்தியத்தைநிச்சயமாய் அடையப்போகிறார் என்பதை சூசிப்பிக்கிறது.

(ஸ்வ) இந்தச்சுலோகங்களில் முதலில் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சங்கத்தையும், அதற்கு அடுத்து அர்ஜுனன் சங்கம், பிறகு பீமன் சங்கம் இவ்விதமாய்ச் சொல்வதினால், முன் சொன்ன சங்கத்தொனியில் பின் சொன்ன சங்கத்தின் தொனி அடங்கியதாகக்கொள்க. (15-16)

கஎ. காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிகண்டீ ச மஹாரத: |
த்ருஷ்டத்யும்னோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித: ||

கஅ. த்ருபதோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வஶ: ப்ருதிவீபதே |
ஸௌபத்ரஶ்ச மஹாபாஹு: ஶங்கான் தத்மு: ப்ருதக் ப்ருதக் ||

17. காஶ்ய: - ச - பரமேஷ்வாஸ: - ஶிகண்டீ (1) - ச - மஹாரத:, த்ருஷ்டத்யும்ந: (2) - விராட: - ச - ஸாத்யகி: - ச - அபராஜித:.

18. த்ருபத₃: - த்₃ரௌபதே₃யா: - ச - ஸர்வஶ: - ப்ருதி₂வீபதே, (3)
ஸௌப₄த்₃ர: - ச - மஹாபா₃ஹு:-ஶங்கா₂ந்-த₃த்₄மு:-ப்ருத₂க் - ப்ருத₂க்.

ப்ருதி₂வீபதே	ஓ! திருதராஷ்ட்ர மகாராஜாவே !
பரமேஷ்வாஸ:	சிரேஷ்டமான வில்லையுடைய
காஶ்யஶ்ச	காசீ ராஜனும்
மஹாரத₂:	மகாரதிகனான
ஶிக₂ண்டீ ச	சிகண்டி என்பவனும்
த்₄ருஷ்டத்₃யும்ந:	திருஷ்டத்யும்னனும்
விராடஶ்ச	விராடதேசத்தரசனும்
அபராஜித:	அபஜய மடையாதவனான
ஸாத்யகிஶ்ச	சாத்தியகி என்பவனும்
த்₃ருபத₃:	துருபத ராஜனும்
த்₃ரௌபதே₃யாஶ்ச	திரௌபதியின் குமாரர்களும்
மஹாபா₃ஹு:	தோள் வலிமையுடைய
ஸௌப₄த்₃ரஶ்ச	சுபத்திரை குமாரன் அபிமந்யுவும்
(ஏதே)	(இவர்கள்)
ஸர்வஶ:	எல்லோருமாக
ப்ருத₂க்ப்ருத₂க்	(அவரவர்களின்) தனித்தனியான
ஶங்கா₂ந்	சங்கங்களை
த₃த்₄மு:	ஊதினார்கள்.

ஓ! திருதராஷ்ட்ர மகாராஜாவே! சிரேஷ்டமான வில்லையுடைய காசீ ராஜனும், மகாரதிகனான சிகண்டியும், திருஷ்டத்யும்னனும், விராட ராஜனும், அபஜய மடையாதவனான சாத்தியகியும், துருபத மகாராஜனும், திரௌபதி குமாரர்களும், தோள் வலிவுள்ள அபிமந்யுவும், இவர்களெல்லோருமாக அவரவர்களின் தனித்தனியான சங்கங்களை ஊதினார்கள்.

---

(1) ஶிக₂ண்டீ-முகத்தில் மீசையில்லாதவன், ஶிக₂ண்ட₃ம் ஶ்மஶ்ரு ஶூந்யதா." இவன் பீஷ்மரைக் கொல்வதற்காகவே தபஸ்செய்து ஜனித்து முதலில் பெண்ணாயிருந்து பிறகு புருஷத்வத்தை அடைந்ததைப்பற்றி இந்த அத்தியாயம் 11-வது சுலோகத்தின் கீழ் குறிப்பைப் பார்க்க.

(2) த்₄ருஷ்டத்₃யும்ந:-ஒருவராலும் எதிர்க்கமுடியாதவன்; ஜனிக்கும்போதே ரத்நஹாரம் முதலானதுடன் கூடப்பிறந்தவன்; துரோண

சார்யரைக் கொல்வதற்காகவே, துருபதன் யாகம்செய்து பெற்றவன்.

(3) ப்ருதிவீபதே-திருதராஷ்ட்ரன், இச்சங்கதிகளைக் கேட்கக் கேட்க பெரு மூச்சுவிடுவதை ஸஞ்ஜயன் பார்த்து 'ப்ருதிவீ' பூமியானது எப்படி எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளுகிறதோ அப்படியே நீங்களும் எல்லாதுக்கங்களையும் சகித்துக்கொள்ளவேண்டுமென்பதாக திருதராஷ்ட்ரனுக்கு சூசிப்பிக்கிறான்.

அல்லது பூமியையெல்லாம் ஆளும்படியான இப்போதிருக்கிற உங்கள் பதவி இத்தோடு முடிவாய்விட்டது என்பதாக சூசிப்பிக்கிறதாகவும் கொள்ளலாம். (17-18)

---

௧௯. 𑌸 𑌘𑍋𑌷𑍋 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌦𑌾𑌰𑌯𑌤𑍍 ।
𑌨𑌭𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌚𑍈𑌵 𑌤𑍁𑌮𑍁𑌲𑍋 𑌵𑍍𑌯𑌨𑍁𑌨𑌾𑌦𑌯𑌨𑍍 ॥

19. ஸ: - கோஷ: - தார்தராஷ்ட்ராணாம் - ஹ்ருதயாநி - வ்யதாரயத்,
நப: - ச - ப்ருதிவீம் - ச - ஏவ - துமுல: - வ்யநுநாதயந்.

𑌤𑍁𑌮𑍁𑌲𑌃	எங்கும்பரவின
𑌸𑌃 𑌘𑍋𑌷𑌃 𑌏𑌵	அந்த சப்தம்தான்
𑌨𑌭𑌶𑍍𑌚	ஆகாசத்தையும்
𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌚	பூமியையும்
𑌵𑍍𑌯𑌨𑍁𑌨𑌾𑌦𑌯𑌨𑍍	எதிரொலிக்கும்படி செய்வதாய்
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂	திருதராஷ்ட்ரனைச் சேர்ந்தவர்களுடைய
𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌿	ஹ்ருதயங்களை
𑌵𑍍𑌯𑌦𑌾𑌰𑌯𑌤𑍍	பிளந்தது.

எங்கும் பரவின அந்த (சங்க) சப்தம்தான் ஆகாசத்தையும் பூமியையு மெதிரொலி கொடுக்கும்படி செய்து திருதராஷ்ட்ரனைச்சேர்ந்தவர்களுடைய ஹ்ருதயங்களைப் பிளந்தது.

(ஸ்வ) இந்த சுலோகத்தில் ஸஞ்ஜயன், திருதராஷ்ட்ரனைச்சேர்ந்தவர்களின் ஹிருதயத்தை, மாதவன் செய்த சங்கத்தொனியானது பிளந்தது என்று சொல்வதின் கருத்தென்னவென்றால், இப்போதே அவர்கள் எல்லோரும் இந்த சங்கத்தொனியினால் கொல்லப்பட்டவர்களாய், யுத்தத்தில் அடிபட்டு விழும் வரையில் ஜீவச்சவங்களாக, நின்றார்கள் என்பதுதான். ஏனென்றால் பின்வருகிற 11-வது அத்தியாயம் 33-வது சுலோ

கத்தில் "மயைவைதே நிஹதா: பூர்வமேவ=என்னாலேயே இவர்கள் முன்னமேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள்" என்று பகவான் சொல்லியிருக்கிறார். அப்படி முன்னமேயே கொன்றிருக்கிறேன் என்பது, இந்த சுலோகத்தில் சொல்லுகிற சங்கத்தொனியினால் ஹிருதயம் பிளந்தது என்று சொல்வதைத்தான், குறிப்பதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது.

ஆனால் இந்த 15-18 சுலோகங்களில் பலபேர் சங்கத்தொனி செய்ததாகச்சொல்லப்பட்டிருப்பதால், இந்த 19வது சுலோகத்தில் "ஸ: கோஷ:" என்பது பகவானுடைய சங்கத்தொனியை மட்டும் குறிப்பதாக எப்படி கொள்ளக்கூடுமென்றால் அந்த 15-18 சுலோகங்களின் முடிவில் சொல்லியிருக்கிறபடி பகவானுடைய சங்கத்தொனியில் மற்றதெல்லாம் ஆழ்ந்துபோனதாகக்கொள்ளவேண்டும். மேலும் 14-வது சுலோகத்தில் "ப்ரதத்மது:= ஊக்க ஊதினார்கள்" என்று சொல்லியிருப்பது மேல்சொன்ன தாத்பர்யத்தை ஆதரிப்பதாகத் தோற்றுகிறது. (19)

---

௨௦. அத² வ்யவஸ்தி²தாந் த்³ருஷ்ட்வா தா⁴ர்தராஷ்ட்ராந் கபித்⁴வஜ:।
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே த⁴நுருத்³யம்ய பாண்ட³வ: ॥
௨௧. ஹ்ருஷீகேஶம் ததா³ வாக்யமித³மாஹ மஹீபதே ॥

20. அத²-வ்யவஸ்திதாந்-த்ருஷ்ட்வா - தார்தராஷ்ட்ரான்-கபித்வஜ:(1)
ப்ரவ்ருத்தே - ஶஸ்த்ரஸம்பாதே - தநு:-உத்யம்ய - பாண்டவ:.
21. ஹ்ருஷீகேஶம் - ததா - வாக்யம் - இதம் - ஆஹ - மஹீபதே.

ஹே மஹீபதே	ஓ! திருதராஷ்ட்ர மகாராஜாவே!
அத²	பிறபாடு
கபித்⁴வஜ:	குரங்குக்கொடியோனாகிய
பாண்ட³வ:	பாண்டு புத்திரனான அர்ஜுனன்
வ்யவஸ்தி²தாந்	யுத்தஞ்செய்ய சித்தமாயிருக்கிற
தா⁴ர்தராஷ்ட்ராந்	திருதராஷ்ட்ரனைச் சேர்ந்தவர்களை
த்³ருஷ்ட்வா	பார்த்து
ஶஸ்த்ரஸம்பாதே	ஆயுதப்பிரயோககாலமானது
ப்ரவ்ருத்தே	துடங்கினபோது
த⁴நு:	வில்லை
உத்³யம்ய	உயரவெடுத்துக்கொண்டு
ஹ்ருஷீகேஶம்	கிருஷ்ணஸ்வாமியை (நோக்கி)

ததா	அப்போது
இதம் வாக்யம்	இந்த வார்த்தையை
ஆஹ	சொல்லுகிறான்.

ஓ! திருதராஷ்ட்ர மஹாராஜாவே! பிறகு குரங்குக்கொடியோனாகிய அர்ஜுனன் யுத்தஞ்செய்ய சித்தமாயிருக்கிற துர்யோதனாதிகளைப் பார்த்து ஆயுதப்பிரயோககாலம் தொடங்கின (நெருங்கின) போது, வில்லை உயர வெடுத்துக்கொண்டு கிருஷ்ணஸ்வாமியை நோக்கி அப்போது இந்த (அடியிற் சொல்லப்போகிற) வார்த்தையைச் சொல்லுகிறான்.

---

(1) கபித்வஜ:-பீமசேனனுடைய பிரார்த்தனையின்பேரில் ஹனுமாரானவர் யுத்தத்தில் பாண்டவர்களுக்கு ஜயமுண்டாகும் பொருட்டு அர்ஜுனன் இரதத்தின் கொடியில் வந்திருப்பதாக வரங்கொடுத்திருந்த பிரகாரம், இப்போது வந்திருப்பதால் குரங்குக்கொடியோனென்று சொல்லப்பட்டது. (பாரதம் ஆரண்ணிய பருவத்தில் கடுக-வது. அத்தியாயத்தில் பீமன் மந்தாரபுஷ்பம் கொண்டுவருங் கதையைப்பார்க்க).

(ஸ்வ) ஹனுமார் அர்ஜுனனுடைய தேர்க்கொடியி லிருப்பது எதைக் குறிக்கிறதென்றால், ஸ்ரீராமரிடத்திலிருந்த லக்ஷ்மியாகிய சீதாதேவியை அபஹரித்த இராவணனை இவர் ஹதம் செய்து மறுபடி ஸ்ரீராமரிடம் சேர்ப்பித்ததுபோல் பாண்டவர்களுடைய ராஜ்ஜிய லக்ஷ்மியை அபஹரித்துக் கொண்ட துர்யோதனாதிகளைக்கொன்று பாண்டவர்களுக்குச் சேர்ப்பிப்பது நிச்சயம் என்பதை சூசிப்பிக்கிறது. (20-21)

அர்ஜுந உவாச.

21½. ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேऽச்யுத ||
22. யாவதேதாந்நிரீக்ஷேऽஹம் யோத்துகாமாநவஸ்திதாந் |
கைர்மயா ஸஹ யோத்தவ்யமஸ்மிந் ரணஸமுத்யமே ||

21½. ஸேநயோ: - உபயோ:-மத்யே-ரதம்-ஸ்தாபய-மே-அச்யுத (1)
22. யாவத்-ஏதாந்-நிரீக்ஷே(2)-அஹம்-யோத்துகாமாந்-அவஸ்திதாந்,
கை: - மயா-ஸஹ - யோத்தவ்யம் - அஸ்மிந் - ரணஸமுத்யமே.

அர்ஜுந: உவாச	அர்ஜுனன் சொன்னது
ஹே அச்யுத	அச்சுதனை ஓ! கிருஷ்ணா!

உபயோ: ஸேநயோ:	இரண்டு ஸேனைகளுடைய
மத்யே	மத்தியில்
மே	என்னுடைய
ரதம்	இரதத்தை
ஸ்தாபய	நிறுத்தும்.
அஸ்மிந்	இந்த
ரணஸமுத்யமே	யுத்தத் துவக்கத்தில்
மயா	என்னாலே
கை: ஸஹ	யாரோடு கூட (எதிர்த்து)
யோத்தவ்யம்	யுத்தஞ் செய்யவேணும்
கை:	எவர்களால்
மயா ஸஹ	என்னோடு கூட (எதிர்த்து)
யோத்தவ்யம்	யுத்தஞ் செய்யவேணும்
(இதி)	(என்று, இதற்காக)
யோத்துகாமாந்	யுத்தஞ்செய்ய விச்சையுள்ளவர்களாய்
அவஸ்திதாந்	(இங்கு) நிற்கின்ற
ஏதாந்	இந்த ஜனங்களை
அஹம்	நான்
யாவந்நிரீக்ஷே	பார்க்கப்போகிறேன்.

அர்ஜுனன் சொன்னது

அச்சுதனை ஓ! கிருஷ்ண! இரண்டு ஸேனைகளுக்கும் மத்தியில் என்னுடைய இரதத்தை நிறுத்தும்.

இந்த யுத்தத்துவக்கத்தில், என்னாலே யாரோடுகூட (எதிர்த்து) யுத்தம் செய்யவேணும், எவர்களால் என்னோடுகூட (எதிர்த்து) யுத்தம் செய்யவேணும் என்று இதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, யுத்தம் செய்ய விச்சையுள்ளவர்களாய் (இங்கு) நிற்கின்ற இந்தஜனங்களை நான் பார்க்கப்போகிறேன்.

---

(1) அச்யுத-நாசமற்றவர்; ஸ்வரூபசாமர்த்தியத்திற்கு நாசமில்லாதவர்; தேசகாலவஸ்து இவைகளில் விகாரமற்றவர்; அல்லது தன் ஸ்தானத்திலிருந்து சலிக்காதவராகையால் அச்சுதர் என்றும் கொள்ளலாம்.

(2) நிரீக்ஷே-என்பது நிகழ்காலம் (நடக்கிறகாலம்) ஆனாலும் "யாவத் புராநி பாதயோர்லட்" என்கிற வியாகர்ண சூத்திரப்படி யாவ

ந்நிரீக்ஷே என்று வருகிறபோது பார்க்கப்போகிறேன் என்கிற எதிர்கால த்தை (வரும்காலத்தை) காட்டுகிறது.

(3) ஸஹ-இந்தசப்தத்தை "மயாஸஹ=என்னோடுகூட" "யைஃ ஸஹ-எவர்களோடுகூட" என்று இரண்டு பதங்களுடன் சேர்த்து அந்வயப் படுத்தி "நான் யாரை எதிர்த்து யுத்தம் செய்யவேண்டும், எவர்கள் என்னுடன்கூட எதிர்த்து யுத்தம் செய்யவேண்டும்" என்று வியாக்யா தாக்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(ஸ்வ) இந்த 21½, 22-வது சுலோகங்கள் இரண்டையும், ஆனந்த கிரி மதுசூதனர் இந்த வியாக்கியாதாக்கள் ஒன்று சேர்த்து அந்வயப் படுத் தியிருக்கிறார்கள். பதங்களின் அர்த்தமெல்லாம் ஒன்றுதான்; ஆனால் யா வத்"என்பதற்குமட்டும் எந்தப்பிரதேசமென்றும் அல்லது எவ்வளவு காலம் வரையில் என்றும், அர்த்தம் செய்திருக்கிறார்கள். தாத்பர்ய மென்னவென் றால் "இந்த யுத்தத்துவக்கத்தில் யாரோடு யுத்தம் செய்யவேண்டியது, என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இங்கு நிற்கிற இந்த ஜனங்களை நான் 'யாவந்நிரீக்ஷே'-எதுவரையில் பார்ப்பேனோ அல்லது எந்தவிடத்திலி ருந்து பார்ப்பேனோ "தாவத்" அந்தகாலம்வரையில், அல்லது அந்த விடத் தில், என்ரதத்தை நிறுத்தும்" என்பது:

சங்கரானந்தர், ஸ்ரீதரர் இவர்கள், இந்தவிரண்டு சுலோகங்களுடன் 23 வது சுலோகத்தையும் சேர்த்து அந்வயப்படுத்தியிருப்பதைப்பார்க்க.

(ஸ்வ) அர்ஜுனன் தன் நிலைதப்பி அஹங்காரம் மேலிட்டு சர்வலோக நியந்தாவாகிய பகவானை இவ்விதமாய் ஏவுகிறது என்ன விபரீதம்! இவன் வார்த்தைகளினால் அவருக்குக் கோபமுண்டாகாதிருக்க அச்சுதா! என் றும் சொல்லுகிறான். (22)

உ௩. யொத்ஸ்யமானானவெக்ஷேஹம் யஏதெத்ர ஸமாகதாஃ ।
தார்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தெர் யுத்தெ ப்ரியசிகீர்ஷவஃ ॥

23. யோத்ஸ்யமாநாந்-அவேக்ஷே-அஹம்-யே-ஏதே-அத்ர-ஸமாகதாஃ, தார்தராஷ்ட்ரஸ்ய-துர்புத்தேஃ-யுத்தே-ப்ரியசிகீர்ஷவஃ.

துர்புத்தெஃ	கெட்ட புத்தியையுடைய
தார்தராஷ்ட்ரஸ்ய	திருதராஷ்ட்ர புத்திரன் துர்யோதனனுக்கு
யுத்தெ	யுத்தத்தில்
ப்ரியசிகீர்ஷவஃ	பிரியமானதைச் செய்யக்கருதியவர்களாய்

𑌯 𑌏𑌤𑍇	எந்த இந்த ஜனங்கள்
𑌅𑌤𑍍𑌰	இங்கே
𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃	சேர்ந்திருக்கிறார்களோ
𑌤𑌾𑌨𑍍	அவர்களை
𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑍍	(அதற்காக) யுத்தஞ்செய்யப்போகிறவர்களாக
𑌅𑌹𑌂	நான்
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑍇	காண்கிறேன் (அறிகிறேன்)

கெட்டபுத்தியையுடைய திருதராஷ்ட்ர புத்திரன் துர்யோதனனுக்கு, யுத்தத்தில் பிரியமானதைச் செய்யக்கருதியவர்களாய் எந்த இந்த ஜனங்கள் இங்கே சேர்ந்திருக்கிறார்களோ அவர்களை, அதன்பொருட்டு யுத்தம் செய்யப்போகிறவர்களாக நான் காண்கிறேன்.

(ஸ்வ) அர்ஜுனன் இந்த ச்லோகத்தினால் சொல்வதும், முன் 22 வது ச்லோகத்தினால் சொன்னதும் என்னவென்றால்:- இந்த யுத்தத்துவக்கத்தில் நான் யாரோடுயுத்தம் செய்யவேண்டும், என்னை யெதிர்த்துயுத்தம் செய்யப்போகிறவர்கள் எவர்கள் என்று யுத்தம்செய்வதற்காக வந்திருக்கிற இவர்களை நான் பார்க்கப்போகிறேன்; அதற்காக இரண்டுஸேனைக்கும் மத்தியில் ரதத்தைநிறுத்தும்' என்று முன் ச்லோகத்தில் சொல்லி முடித்தான். ஆனால் இவர்களை எல்லாம் '**யோத்ஸ்யமாநாந்**' என்பது எப்படி உனக்கு துர்யோதனனைத்தவிர வேறுவிரோதிகளில்லையே என்றால், இங்கு துர்யோதனன் கக்ஷியில் வந்திருக்கிற ராஜாக்கள் என்னிடத்தில் அவர்களுக்குள்ள விரோதத்தினால் என்னுடன் சண்டை செய்யப்போகிறவர்கள் அல்ல, துர்யோதனனுடைய கட்டாயத்தின்பேரில் யுத்தத்தில் அவனிஷ்டம் எதுவோ அதைச் செய்வதற்காக இங்கு வந்திருப்பதினால் அவர்கள் என்னை எதிர்த்து யுத்தம் செய்யப்போகிறவர்களாக நான் அறிகிறேன்' என்று இந்த ச்லோகத்தில் சொல்வதாக தாத்பர்யம். (23)

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚.

௨௪. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।
𑌸𑍇𑌨𑌯𑍋𑌰𑍁𑌭𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌰𑌥𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 ॥
௨௫. 𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑍍𑌰𑍋𑌣𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑌮𑌹𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌂 ।
𑌉𑌵𑌾𑌚𑌪𑌾𑌰𑍍𑌥𑌪𑌶𑍍𑌯𑍈𑌤𑌾𑌨𑍍 𑌸𑌮𑌵𑍇𑌤𑌾𑌨𑍍𑌕𑍁𑌰𑍂𑌨𑌿𑌤𑌿 ॥

24. ஏவம்-உக்த:-ஹ்ருஷீகேச: (1) குடாகேசேந (2) பாரத (3), ஸேநயோ:-உபயோ:-மத்யே-ஸ்தாபயித்வா-ரதோத்தமம்.

25. பீஷ்மத்ரோணப்ரமுகத: (4) — ஸர்வேஷாம்-ச-மஹீக்ஷிதாம், உவாச-பார்த (5)-பச்ய-ஏதாந்-ஸமவேதாந்-குரூந் (6)-இதி.

ஸஞ்ஜய உவாச	சஞ்ஜயன் சொன்னது
ஹே பாரத	பரத வம்சத்திலுதித்த திருதராஷ்ட்ரனே!
குடாகேசேந	நித்திரையை ஜயித்த அர்ஜுனனாலே
ஏவம்	இவ்விதமாய்
உக்த:	சொல்லப்பட்ட
ஹ்ருஷீகேச:	கிருஷ்ணஸ்வாமியானவர்
உபயோ: ஸேநயோ:	இருஸேனைகளுடைய
மத்யே	நடுவில்
பீஷ்மத்ரோண ப்ரமுகத:	பீஷ்மத் துரோணர்களுக்கு எதிரிலும்
ஸர்வேஷாம் மஹீக்ஷிதாம் (ப்ரமுகே) ச	எல்லா ராஜாக்களுக்கு எதிரிலும்
ரதோத்தமம்	சிரேஷ்டமான ரதத்தை
ஸ்தாபயித்வா	நிறுத்தி
ஹே பார்த!	ஓ! அர்ஜுனா!
ஸமவேதாந்	சேர்ந்திருக்கிற
ஏதாந் குரூந்	இந்த கௌரவர்களை
பச்ய	பார்
இதி உவாச	என்பதாய் சொன்னார்.

சஞ்ஜயன் சொன்னது.

பரதவம்சத்திலுதித்த திருதராஷ்ட்ரனே! நித்திரையை ஜயித்தவனை அர்ஜுனனாலே இவ்விதமாய்ச் சொல்லப்பட்ட கிருஷ்ணஸ்வாமியானவர் இருஸேனைகளுடைய நடுவில் பீஷ்மர், துரோணர் இவர்களுக்கு எதிரிலும் எல்லா ராஜாக்களுக்கு எதிரிலும், சிரேஷ்டமான ரதத்தை நிறுத்தி, ஓ! அர்ஜுனா! சேர்ந்திருக்கிற இந்தக் கௌரவர்களைப் பாரென்று சொன்னார்.

---

(1) ஹ்ருஷீகேச: இந்த பதத்திற்கு முன் 21-வது ச்லோகம் குறிப்பைப் பார்க்க.

(2) குடாகேசன்—என்றால் நித்திரையை ஜயித்தவன், அல்லது அடர்த்தியான மயிர்களையுடையவன்.

(3) ஹாரத—என்றால் ஹாரதனுடைய வம்சத்தில் பிறந்தவன்; ஹாரதன் என்னும் ராஜன், துஷ்யந்த மஹாராஜனுக்குச் சகுந்தலையிடத்தில் பிறந்தவன். கண்வ மஹரிஷியால் வளர்க்கப்பட்ட சகுந்தலை என்னும் பெண்ணை, காட்டுக்கு வேட்டையாடவந்த துஷ்யந்தன், ஷை கண்வர் ஆச்சிரமத்தில்கண்டு அவரில்லாதபோது அவளை காந்தர்வவிவாகஞ்செய்து கொண்டகாலத்தில், இந்த ஹாரதனை அவள் கர்ப்பத்தில்தரித்தாள். ஹாரதன் பிறந்த பிறகு அக்குழந்தையுடன் சகுந்தலையைக் கண்வர், துஷ்யந்த மகாராஜாவின் அரண்மனைக்கு அனுப்பியபோது, அவர்களை ஷை துஷ்யந்தன் தன் குழந்தையாயும் மனைவியாயும் அங்கீகாரம் செய்யாததினால், அவள் அதிக விசனமுற்று நிற்கையில், ஆகாயவாணிகள் துஷ்யந்தனுக்கு "இக்குழந்தை உன்புத்திரன்தான்" என்றுசொல்லி 'ஆதரித்ததனால்' அக்குழந்தைக்கு ஹாரதன் என்று பெயர்வந்தது. இப்ஹாரதன் அதிக கீர்த்தியுடன் தர்ம ராஜ்ய பரிபாலனம் செய்த நிமித்தம், இவனுடைய வம்சத்தின் சரித்திரத்திற்கு ஹாரதம் என்று பெயர்.

(4) த்ரோணர்—த்ரோணம் என்பது கமண்டலம் போலொத்த ஒரு மரப் பாத்திரத்தின் பெயர். ஹரத்வாஜ மஹரிஷியின் ரேதஸ், மனோவிகாரத்தினால் வெளிப்பட்டபோது அதை அம்மரப்பாத்திரத்தில் ஏந்திவைத்து அதிலிருந்து இவர் உண்டானவரானபடியால் இவருக்கு துரோணர் என்று பெயர்.

(5) பார்த—குந்தியின் பெயர் 'ப்ருதா.' அவள் புத்திரன் பார்த்தன். பார்த்தா என்று சொல்வதால் ஸ்திரீபுத்திசோகமோகத்தை அர்ஜுனன் அடையப்போகிறதாக பகவான் சூசிப்பிக்கிறார்.

(6) குரூந்—என்று அர்ஜுனன் வம்சத்தைக் குறித்துச்சொல்வதால் அவனுக்கு பந்துசோக மோகமுண்டாகப் போகிறதென்பதை முன்னடியே தெரிவிக்கிறது.

(ஸ்வ) இந்த பந்துக்களைப்பார்த்து அர்ஜுனன் இப்போது சோகமோகத்தை நிச்சையமாய் அடையப்போகிறான் என்று தெரிந்து அவன் இஷ்டத்திற்கெல்லாம் முதலில் உடன்பட்டு நடக்கிற சர்வலோக சரண்ணியனாகிய அந்த பகவான் பக்தனுக்காக என்னதான் செய்யமாட்டார்! அவ்வாறே பிறகு சோகமோகக் கடலில் வீழ்கின்ற அர்ஜுனனை அதிலிருந்து கரையேற்றவேண்டி ஆத்மதத்துவத்தை அவனுக்கு உபதேசிக்கத் தருணம் பார்த்து நிற்கிற பகவானுக்கு பக்தாளிடத்தில் என்ன வாத்ஸல்லியம்! அர்

ஜுநனுடைய பாக்கியமே பாக்யம்! அவன் உதித்த இந்த பரதகுலம் செய்த புண்ணியமே புண்ணியம்! என்று சஞ்ஜயன் தனக்குள்ளேயே ஆனந்தப்பட்டுக் கொண்டு "ஓ பாரத"! என்று திருதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்லுகிறான். (24-25)

---

௨௬. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑌿𑌤𑍄𑌨𑌥 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌨𑍍 |
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌨𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍄𑌨𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑌖𑍀𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 ||
௨௭. 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌨𑍍𑌸𑍁𑌹𑍃𑌦𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑍇𑌨𑌯𑍋𑌰𑍁𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 |

26. தத்ர-அபஶ்யத்-ஸ்திதாந்-பார்த:-பித்ரூந்-அத-பிதாமஹாந்,
ஆசார்யாந்-மாதுலாந்-ப்ராத்ரூந்-புத்ராந்-பௌத்ராந்-ஸகீந்-ததா
27. ஶ்வஶுராந்-ஸுஹ்ருத:-ச-ஏவ-ஸேநயோ:-உபயோ:-அபி.

𑌅𑌥	அதற்கு (கிருஷ்ணஸ்வாமி சொன்னதற்கு) பிறகு
𑌪𑌾𑌰𑍍𑌥𑌃	அர்ஜுனன்
𑌤𑌤𑍍𑌰	அவ்விடத்தில்
𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍	இருக்கிற
𑌪𑌿𑌤𑍄𑌨𑍍	தகப்பன்மாரையும்
𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌨𑍍	பாட்டன்மாரையும்
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍	குருக்களையும்
𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌨𑍍	அம்மான்மாரையும்
𑌭𑍍𑌰𑌾𑌤𑍄𑌨𑍍	சகோதரர்களையும்
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍	புத்திரர்களையும்
𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌨𑍍	பேரன்மாரையும்
𑌸𑌖𑍀𑌨𑍍	சிநேகிதர்களையும்
𑌤𑌥𑌾	அப்படியே
𑌉𑌭𑌯𑍋𑌃𑌸𑍇𑌨𑌯𑍋𑌰𑌪𑌿	இருதரத்து ஸேனைகளிலும்
𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌨𑍍	மாமனார்களையும்
𑌸𑍁𑌹𑍃𑌦𑌶𑍍𑌚𑍈𑌵	பிரதிப் பிரயோஜனத்தை யெதிர்பாராத சினேகிதர்களையும்
𑌅𑌪𑌶𑍍𑌯𑌤𑍍	பார்த்தான்

அப்படி கிருஷ்ணஸ்வாமி சொன்னதற்குப்பிறகு அர்ஜுனன் அவ்வி

டத்திலிருக்கிற (பூரிசிரவஸ் போலொத்த) தகப்பன் முறை யுள்ளவர்களையும், (பீஷ்மரைப்போலொத்த) பாட்டன் முறை யுள்ளவர்களையும், (துரோணாசார்யரைப்போலொத்த) குருக்களையும், (சல்லியன் போலொத்த) தாய்மாமன் முறை யுள்ளவர்களையும், (துர்யோதனன் போலொத்த) சகோதரன் முறை யுள்ளவர்களையும், (துர்யோதனன் குமாரன் இலக்ஷ்மணன் போலொத்த) புத்திரன் முறையுள்ளவர்களையும், (இலக்ஷ்மணன் முதலியவர்களின் புத்திரர்களான) பேரன்முறை யுள்ளவர்களையும் (அஸ்வத்தாமா போலொத்த) சிநேகிதர்களையும், அப்படியே இருதாத்து ஸேனைகளிலு மிருக்கிற (துருபதராஜன்போலொத்த) பெண்கொடுத்த மாமனார்களையும், பிரயோஜனத்தையடையலாமென்கிற வெண்ணத்தினால் சிநேகஞ் செய்கிறவர்களைப்போலல்லாத (கிருதவர்மாபோலொத்த) சிநேகிதர்களையும் பார்த்தான். (26—27)

தாந்ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வாந் பந்தூநவஸ்திதாந் ॥
௨௮. க்ருபயா பரயாவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் ।

தாந்-ஸமீக்ஷ்ய-ஸ:-கௌந்தேய:-ஸர்வாந்-பந்தூந்-அவஸ்திதாந்
28. க்ருபயா-பரயா-ஆவிஷ்ட:-விஷீதந்-இதம்-அப்ரவீத்,

ஸ: கௌந்தேய:	குந்திபுத்திரனான அந்த அர்ஜுனன்
அவஸ்திதாந்	நிற்கிற
தாந்	அந்த
ஸர்வாந்	எல்லா
பந்தூந்	பந்துக்களை
ஸமீக்ஷ்ய	நன்றாய்ப்பார்த்து
பரயா	விலக்ஷணமான மோகத்தினால்
க்ருபயா	கிருபையினால்
ஆவிஷ்ட:	பிரவேசிக்கப்பட்டவனாயும்
விஷீதந்	விசனமடைந்தவனாயும்
இதம்	இதை (பின்வருகிற வாக்கியத்தை)
அப்ரவீத்	சொன்னான்.

குந்திபுத்திரனான அந்த அர்ஜுனன் யுத்தகளத்தில் நிற்கிற அந்த எல்லா பந்துக்களையும் நன்றாய்ப் பார்த்து, விலக்ஷணமான கிருபை அதாவது மோகத்தை அடைந்தவனாயும், துக்கத்தை யடைந்தவனாயும் பின் வரும் வாக்கியத்தைச்சொன்னான்.

(ஸ்வ) இந்த சுலோகங்களில் அர்ஜுனன் அந்தஸேனையிலிருக்கிற பிதா, பிதாமஹன், குரு முதலான எல்லா பந்துக்களையும் நன்றாய்ப் பார்த்தான் என்பதினால், இதுவரையில் அவர்களைப்பார்க்கவில்லை இப்போது தான்பார்த்தான் என்கிறதல்ல; இதுவரையில் சத்துருக்களாக பாவித்த இவர்களை இப்போது சோகமோகத்தை அடைந்ததினால், இவர்கள் தன் பந்துக்கள் என்கிற பாவனையுள்ள நினைவை அடைந்தவனாகப் பார்த்தான் என்று தாத்பரியம்.

அர்ஜுனனுக்கு இப்போதுண்டாயிருக்கிற கிருபை லோகப்பிரஸித்தமான கிருபையல்ல விலக்ஷணமானகிருபை. அவன் கிருபை என்று நினைத்திருப்பதே ஒழிய வாஸ்தவமான கிருபையல்ல. அதாவது மோகம்:

பின்வருகிற 2-வது அத்தியாயம் 2, 3-வது சுலோகங்களில் பகவான் 'இந்த கஸ்மலம்' உன்னை எப்படி அடைந்தது என்றும் இந்த 'க்லைப்யத்தை' அடையாதே என்றும் சொல்லியிருப்பதைக்கொண்டு அர்ஜுனனுக்கிப்போதுண்டான மனோநிலை இன்னதென்பதை ஊகிக்கலாம். ஷை சுலோகங்களின் குறிப்பைப்பார்க்க. (27—28)

அர்ஜுந உவாச ||

த்₃ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்தி₂தம் ||
௨௯. ஸீத₃ந்தி மம கா₃த்ராணி முக₂ம் ச பரிஶுஷ்யதி |
வேபது₂ஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ||
௩௦. கா₃ண்டீ₃வம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக் சைவ பரித₃ஹ்யதே |
ந ச ஶக்நோம்யவஸ்தா₂தும் ப்₄ரமதீவ ச மே மந: ||

த்ருஷ்ட்வா-இமம்-ஸ்வஜனம்-க்ருஷ்ண(1)-யுயுத்ஸும்-ஸமுபஸ்திதம்
29. ஸீதந்தி-மம-காத்ராணி-முகம்-ச-பரிஶுஷ்யதி,
வேபது:-ச-ஶரீரே-மே-ரோமஹர்ஷ:-ச-ஜாயதே.
30. காண்டீவம்-ஸ்ரம்ஸதே-ஹஸ்தாத்-த்வக்-ச-ஏவ-பரிதஹ்யதே,
ந-ச-ஶக்னோமி-அவஸ்தாதும்-ப்ரமதி இவ-ச-மே-மன:.

அர்ஜுந உவாச	அர்ஜுனன் சொன்னது
ஹே க்ருஷ்ண	ஓ! கிருஷ்ணா!
யுயுத்ஸும்	யுத்தஞ்செய்ய விச்சையுடையவும்
ஸமுபஸ்தி₂தம்	சேர்ந்து நிற்கிறவுமான
இமம் ஸ்வஜநம்	இந்த பந்துக்களை
த்₃ருஷ்ட்வா	பார்த்து

(ஸ்திதம்)	(நிற்கிற)
மம	என்னுடைய
காத்ராணி	அவயவங்கள்
ஸீதந்தி	சோர்வை யடைகின்றன
முகம் ச	வாயும்
பரிசுஷ்யதி	வறண்டுபோகிறது
மே	என்னுடைய
சரீரே	தேகத்தில்
வேபது:	நடுக்கமும்
ரோமஹர்ஷ: ச	மயிர்க்கூச்சுலும்
ஜாயதே	உண்டாகிறது
காண்டீவம்	காண்டீவமென்கிற என்னுடையவில்
ஹஸ்தாத்	கையிலிருந்து
ஸ்ரம்ஸதே	நழுவுகிறது
த்வக் சைவ	தேகத்தின் மேல்தோலும்
பரிதஹ்யதே	தபிக்கிறது (எரிகிறது)
அவஸ்தாதும்	நிற்கிறதற்கு
ந சக்னோமி	சக்தியற்றவனாகவு மிருக்கிறேன்
மே	என்னுடைய
மந:	மனதானது
ப்ரமதீவ ச	பிரமையடைவதுபோலு மிருக்கின்றது

அர்ஜுனன் (கிருஷ்ணசுவாமியை நோக்கிச்)சொன்னது. ஓ! கிருஷ்ண! யுத்தஞ்செய்ய இச்சையுடன் சேர்ந்து நிற்கிற இந்த பந்துக்களைப் பார்த்து என்னுடைய அவயவங்கள் சோர்வை யடைகின்றன. வாயும் வரண்டு போகிறது. என்னுடைய தேகத்தில் நடுக்கமும் மயிர்க்கூச்சும் உண்டாகிறது. காண்டீவம் கையிலிருந்து நழுவுகிறது. தேகத்தின் மேற்தோலும் எரிகிறது. இரதத்தில் நிற்கிறதற்கு சக்தியற்றவனாகவு மிருகிறேன். என்னுடைய மனதானது பிரமையை யடைவதுபோலு மிருக்கின்றது.

---

(1) க்ருஷ்ண-க்ருஷ்-பூமி, ந-சுகம், பூரூபமாயும் சுகரூபமாயு மிருக்கிறதால், கிருஷ்ணனென்றும்; நீருண்ட மேகம்போற கறுத்த மேனியையுடையவரானதால் கிருஷ்ணனென்றும் பெயர். அல்லது தைத்தியாளை ஸம்ஹரிக்கிறவரானதால் கிருஷ்ணன் என்றும் சொல்லலாம்.

(ஸ்வா) இந்த ஶ்லோகங்களில் அர்ஜுனன் தனக்குண்டாவதாகச் சொல்வதெல்லாம் சோகத்தின் அடையாளங்கள்: அவனுடைய காண்டீவம் கையிலிருந்து நழுவுவது அவன் தன் ஸ்வதர்மத்தைவிட்டு நழுவுகிறான் என்பதை சூசிப்பிக்கிறது. (28½—30)

---

௩௧. 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌿 𑌕𑍇𑌶𑌵 ।
𑌨 𑌚 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑌾𑌹𑌵𑍇 ॥

௩௨. 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌜𑌯𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌨 𑌚 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ।
𑌕𑌿𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌨 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌕𑌿𑌂 𑌭𑍋𑌗𑍈𑌰𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑍇𑌨 𑌵𑌾 ॥

31. நிமித்தாநி-ச-பஶ்யாமி-விபரீதாநி-கேஶவ (1)
ந-ச-ஶ்ரேயஃ-அநு-பஶ்யாமி-ஹத்வா-ஸ்வஜநம்-ஆஹவே.

32. ந-காங்க்ஷே-விஜயம்-க்ருஷ்ண (2) - ந-ச-ராஜ்யம்-ஸுகாநி-ச
கிம்-நஃ-ராஜ்யேந-கோவிந்த (3) கிம்-போகைஃ-ஜீவிதேந-வா

𑌹𑍇 𑌕𑍇𑌶𑌵	ஓ! கேசவா!
𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌚	அபசகுனங்களையும்
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿	காண்கிறேன்.
𑌆𑌹𑌵𑍇	யுத்தத்தில்
𑌸𑍍𑌵𑌜𑌨𑌂	சொந்தபந்துஜனங்களை
𑌹𑌤𑍍𑌵𑌾	கொன்று
𑌅𑌨𑍁	பின்பு
𑌶𑍍𑌰𑍇𑌯𑌃	(அதனால்) நன்மையும்
𑌨 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿	நான் காண்கிறதில்லை
𑌹𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣	ஓ! கிருஷ்ணா!
𑌵𑌿𑌜𑌯𑌂	வெற்றியையாவது
𑌰𑌾𑌜𑍍𑌯𑌞𑍍𑌚	இராஜ்யத்தையாவது
𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍇	நான் விரும்புகிறதில்லை
𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚	சுகங்களையும்
𑌨	விரும்புகிறதில்லை
𑌹𑍇 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦	ஓ! கோவிந்தா!
𑌨𑌃	எங்களுக்கு
𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌨	இராஜ்யத்தினாலே
𑌕𑌿𑌂	என்ன? (பிரயோஜனம்)
𑌭𑍋𑌗𑍈𑌃	போகங்களினாலாவது

ஜீவிதேநவா கிம் — உயிர்வாழ்வதினாலாவது என்ன? (பிரயோஜனம்)

ஓ! கேசவா! அபசகுனங்களையும் காண்கிறேன். யுத்தத்தில் சொந்த பந்துக்களைக் கொன்று பின்பு (அதனால் யாதொரு) நன்மையும் (புருஷார்த்தத்தையும்) நான் காண்கிறதில்லை. ஓ! கிருஷ்ணா! வெற்றியையாவது இராஜ்யத்தையாவது சுகங்களையாவது நான் விரும்புகிறதில்லை. ஓ! கோவிந்தா! எங்களுக்கு இராஜ்யத்தினாலாவது போகங்களினாலாவது உயிர்வாழ்வதினாலாவது, என்ன பிரயோஜனம்?

———

(1) **கேஶவ**-அழகான மயிர்களையுடையவனானதால் கேசவனென்றும், கேசி என்கிற அசுரனைக் கொன்றதினால், கேசவனென்றும், **க:**= பிர்ம்மா, **அ:**=விஷ்ணு **ஈஶ:**=உருத்திரன், இம்மூவரையும், வ=சுவாதீனத்தில் வைத்திருப்பவனானதாற் கேசவனென்றும், **க:**=பிர்ம்மா, **ஈஶ:**= உருத்திரன், இவர்களை (சிருஷ்டியாதி காரியங்களில்) பிரவிருத்தித்திருக்கும்படி யேவுகிறவனானதால் கேசவனென்றும் சொல்லலாம்.

அல்லது "**கேஶவ: க்லேஶநாஶந**" என்பது புராணப் பிரசித்தமானதால் கிலேசத்தை நிவர்த்திசெய்கிறவர். ஆகையால் என் கிலேசத்தையும் நிவர்த்தி செய்யும் என்று அர்ஜுனன் சொல்வதாகவும் சொல்லலாம்.

(2) **க்ருஷ்ண**-பக்தாளுடைய சோகத்தை கருஷிக்கிறவர், அதாவது நாசம் செய்கிறவர் ஆதலால் என்சோகத்தையும் நீக்கும்; அல்லது ஸர்வம், கரோதீதி கிருஷ்ண; எல்லாம் செய்கிறவர் ஆதலால் என் மோகத்திற்கும் காரணம் நீர்தான் என்பதாக விபரீதக்ஞானத்தோடு சொல்வதாகச் சொல்லலாம். மோஹம் என்பது ஜீவனுடைய மனோபாவங்களால் ஜீவன் சிருஷ்டித்துக் கொள்வது (தானாக ஏற்படுத்திக்கொள்வது) கயிற்றை பாம்பு என்று மோகிப்பதுபோல். இது ஈசுவரனுடைய சிருஷ்டியல்ல, இந்த மோகத்திற்கு ஜீவன்தான் உத்திரவாதி. ஏனென்றால் பகுத்தறிவினால், பாம்பு அல்ல கயிறு என்கிற ஞ்யானம் வந்தவுடன் மோகம் நீங்கிப்போகிறது. அதை ஈசுவரனிடத்தில் ஆரோபிப்பது மோகத்தின் லக்ஷணமென்க.

கோவிந்த-வராகரூபமெடுத்து ஜலத்தில் மூழ்கியிருந்த, **கோ**=பூமியை, **விந்த**=அடைந்தவர் (என்றால் வெளிப்படுத்தினவர்) ஆனதால் கோவிந்தரென்றும், அல்லது **கா**ம்+விந்ததி = தேவவாணீம் பிராப்நோதி, வேதத்தை அடைந்தவர் ஆனதால் கோவிந்தர் என்றும், அல்லது **கா:**=பஶூந் **விந்ததி**, பசுக்களை அடைந்தவர் என்றால் சுவாதீனம் செய்துகொண்டவர்

ஆனதால் கோவிந்தன் என்றும் பெயர். பசுக்கள் என்பது ஜீவர்களுக்கும் பெயர்.

---

௩௩. 𑌯𑍇𑌷𑌾𑌮𑌰𑍍𑌥𑍇 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌭𑍋𑌗𑌾𑌃 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ।
𑌤 𑌇𑌮𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌚 ॥

௩௪. 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃 ।
𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌃 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌃 𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌃 𑌶𑍍𑌯𑌾𑌲𑌾𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

33. யேஷாம்-அர்தே-காங்க்ஷிதம்-நஃ-ராஜ்யம்-போகாஃ-ஸுகாநி-ச
தே-இமே-அவஸ்திதாஃ-யுத்தே-ப்ராணாந்-த்யக்த்வா-தநாநி-ச.

34. ஆசார்யாஃ-பிதரஃ-புத்ராஃ-ததா-ஏவ-ச-பிதாமஹாஃ
மாதுலாஃ-ஶ்வஶுராஃ-பௌத்ராஃ-ஸ்யாலாஃ-ஸம்பந்திநஃ-ததா.

𑌯𑍇𑌷𑌾𑌂 𑌅𑌰𑍍𑌥𑍇	ஏவர்பொருட்டு
𑌨𑌃	எங்களுக்கு
𑌰𑌾𑌜𑍍𑌯𑌂	இராஜ்யமானது
𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌂	விரும்பப்படத்தக்கதோ
𑌭𑍋𑌗𑌾𑌃	போகங்களும் (சுகஸாதனவிஷயங்களும்)
𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚	சுகங்களும்
𑌯𑍇𑌷𑌾𑌮𑌰𑍍𑌥𑍇 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑌿	யார்பொருட்டு விரும்பத்தக்கவைகளோ
𑌤𑍇	அப்பேர்க்கொத்த
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃	குருக்கள்
𑌪𑌿𑌤𑌰𑌃	தகப்பன்மார்
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃	புத்திரர்கள்
𑌤𑌥𑍈𑌵 𑌚	அப்படியே
𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃	பாட்டன்மார்
𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌃	அம்மான்மார்
𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌃	மாமனார்கள்
𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌃	பேரன்மார்
𑌶𑍍𑌯𑌾𑌲𑌾𑌃	மைத்துனன்மார்
𑌤𑌥𑌾	அப்படியே
𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑌃	சம்பந்திகள்

ச	இவர்களெல்லோரும்
ப்ராணாந்	உயிரையும்
த⁴நாநி ச	பொருள்களையும்
த்யக்த்வா	விட்டு (விடத்துணிந்து)
யுத்⁴தே	யுத்தகளத்தில்
அவஸ்தி²தா:	நிற்கிறார்கள்.

எவர்பொருட்டு எங்களுக்கு இராஜ்யமும் போகங்களும் (சுகஸாதன விஷயங்களும்) அதனாலுண்டாகும் சுகங்களும் விரும்பத்தக்கவைகளோ அப்பேர்கொத்த குருக்கள் தகப்பன்மார் புத்திரர்கள் அப்படியே பாட்டன்மார் அம்மான்மார் மாமனார்கள் பேரன்மார் மைத்துனன்மார், அப்படியே சம்பந்திகள், இவர்களெல்லோரும் பிராணன்களையும் பொருள்களையும் விட்டு (விடத்துணிந்து) யுத்தகளத்தில் நிற்கிறார்கள். (33-34)

---

௩௫. ஏதாந்ந ஹந்துமிச்சாமி க்⁴நதோ(அ)பி மது⁴ஸூத³ந ।
அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீக்ருதே ॥

35. ஏதாந்-ந-ஹந்தும்-இச்சாமி-க்⁴நத:-அபி-மது⁴ஸூத³ந (1)
அபி-த்ரைலோக்யராஜ்யஸ்ய-ஹேதோ:-கிம்-நு-மஹீக்ருதே.

மது⁴ஸூத³ந	ஓ! கிருஷ்ணா!
க்⁴நதோ(அ)பி	(என்னை) கொல்லுகிறவர்களானபோதிலும்
ஏதாந்	இவர்களை
த்ரைலோக்ய ராஜ்யஸ்ய	மூன்றுலோகத்தின் ராஜ்யாதிபத்தியத்தினுடைய
ஹேதோரபி	நிமித்தியத்தினாலும்
ஹந்தும்	கொல்லுவதற்கு
ந இச்சாமி	நான் விரும்புகிறதில்லை
மஹீக்ருதே	பூமிக்காக
கிம் நு	என்ன?

ஓ! மதுசூதனா! இந்த துர்யோதனாதிகள் என்னைக் கொல்லுகிறவர்களாகவிருந்தபோதிலும், இவர்களை, மூன்றுலோகத்தின் ராஜ்யாதிபத்தி

யத்தினுடைய இலாபத்தின் பொருட்டாகுலுங்கூட கொல்லுவதற்கு நான் விரும்புகிறதில்லே. இந்த பூமிக்காக வென்ன ? என்றால் இந்த அற்ப இராஜ்யத்தின்பொருட்டா அவர்களை நான் கொல்லவிரும்புவேன்? என்பது தாத்பர்யம்.

---

(1) 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 𑌮𑌧𑍁 என்கிற அஸுரனைக் கொன்றவனானதால் இப்பெயர்வந்தது. (35)

---

௩௬. 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌃 𑌕𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌪𑌾𑌪𑌮𑍇𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌹𑌤𑍍𑌵𑍈𑌤𑌾𑌨𑌾𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃 ॥

36. நிஹத்ய-தார்தராஷ்ட்ராந்-ந:-கா-ப்ரீதி:-ஸ்யாத்-ஜநார்த³ந (1) பாபம்-ஏவ(2)-ஆஶ்ரயேத்-அஸ்மாந்-ஹத்வா-ஏதாந்-ஆததாயிந:(3)

𑌹𑍇 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 !	ஓ! ஜநார்த்தன !
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍	திருதராஷ்ட்ரனுடைய புத்திரர்களை
𑌨𑌿𑌹𑌤𑍍𑌯	கொன்று
𑌨𑌃	எங்களுக்கு
𑌕𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃	என்ன சந்தோஷம்
𑌸𑍍𑌯𑌾𑌤𑍍	ஆகப்போகிறது ?
𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃(𑌅𑌪𑌿)	ஆததாயிகளானுலும்
𑌏𑌤𑌾𑌨𑍍	இவர்களை
𑌹𑌤𑍍𑌵𑌾	கொன்று
(𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍)	(நிற்கிற)
𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍	எங்களை
𑌪𑌾𑌪𑌮𑍇𑌵	பாபமே
𑌆𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍	அடையும்

ஓ! ஜநார்த்தன! திருதராஷ்ட்ரனுடைய புத்திரர்களைக் கொன்று எங்களுக்கென்ன சந்தோஷமாகப் போகிறது? ஆததாயிகளானுலும் (ஆததாயிகளானவர்களைக் கொல்லும் விஷயத்தில் தோஷமில்லையாதென்று சொல்லக் கூடுமானபோதிலும்) இவர்களைக் கொன்றுலெங்களைப் பாபமே யடையும்.

---

(1) ஜநார்த்தந—துஷ்டநிக்கிரகம் செய்கிறவரானதினால் ஜநார்த்தன னென்றும், இகத்திலும் பரத்திலும் சௌக்கியங்களைக் கொடுக்கும்பொ ருட்டு ஜனங்களால் யாசிக்கப்படுகிறவரானதினால் ஜநார்த்தனனென்றும் பெயர் ; அல்லது ஜனங்களுக்கு அவரவர்கள் பாபத்திற்குத் தக்கபடி தண் டனையை விதிப்பவரானதால் ஜநார்த்தனன் : ஆகையால் இந்த பாபத்தை நாங்கள் செய்தால் நீர் தண்டிக்காமல் விடுவீரா ? என்பது அர்ஜுனன் தாத் பர்யம்.

(2) ஏவ—இந்த சப்தத்தை 'அஸ்மாந்' என்பதோடு சேர்த்து 'அஸ்மா நேவ' எங்களைத்தான் பாபம் அடையும் அவர்களை அடையாதென்றும், அல்லது 'ஆஸ்ரயேத் ஏவ' என்று எடுத்துக்கொண்டு எங்களைப்பாபம் அடையவே அடையும், அதாவது நிச்சயமாய் அடையும் என்றும் அந்வயப்படுத்தலாம்.

(3) ஆததாயிந:—எவர்கள் ஆததாயிகள் என்றால்:—

"அக்நிதோ கரதஶ்சைவ ஶஸ்த்ரபாணிர் தநாபஹ:। க்ஷேத்ரதாராபஹர்த்தா ச ஷடேதே ஹ்யாததாயிந:॥ (வீட்டுக்கு) நெருப்பு வைத்த வன், (அன்னத்தில்) விஷங்கலந்தவன், ஆயுதத்தினால் கொல்லவந்தவன், பொருளை யபகரித்தவன், மனைவியையபகரித்தவன் இவ்வாறுபெயரும் ஆததாயிகளென்று சொல்லப்படுவார்கள்." இந்த சுலோகத்திற் சொன்ன ஆறுவிதச்செய்கைகளும் துர்யோதனாதிகளால் பாண்டவர்கள் விஷயத்திற் செய்யப்பட்டன. ஆனதால் ஆததாயிக ளென்று சொல்லப்பட்டார்கள். (மகாபாரதம் ஆதிபருவம் 128,148, சபாபர்வம் 76, இந்த அத்தியாயங்களைப் பார்க்க). ஆததாயிகளை கொல்வதில் தோஷமில்லை என்பதற்கு பிரமாணம், ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதேவாவிசாரயந்। நாததாயிவதே தோஷோ ஹந்துர்பவதி கஶ்சந॥ "எதிர்ப்பட்ட ஆததாயிகளை விசாரிக் காமலே கொல்லவேண்டியது. ஆததாயிகளைக் கொன்றவனுக்கு யாதொரு தோஷமுமில்லை."(பத்மபுராணம் சிருஷ்டிகாண்டம் 51 அத்தியாயம் பார்க்க.)

(ஸ்வ) இந்த சுலோகம் இரண்டாவது பாதத்திற்கு ஆனந்தகிரி முத லானவாகள் வேறு இரண்டு விதமாயும், அடியில் கண்டபடி அந்வயம் செய் திருக்கிறார்கள். அதாவது:—

1. "அஸ்மாந்" (யுத்தம் சேய்யாமல் நிற்கிற) எங்களை, "ஹத்வா," கொன்றால், "ஏதாந்", இந்த, "ஆததாயிந:", ஆததாயிகளை, பாபம் அடைய வே அடையும்.

2. "ஏதாந்," குரு சகோதர சுகிருத்பிர ஸ்ருதிகளாகிய இவர்களை "ஹத்வா," கொன்று, "வயம்" நாம், "ஆததாயிந:" ஆததாயிகளாக, 'ஸ்யாம" ஆய்விடுவோம் ; பிறகு பாபம் எங்களைத்தான், அடையும்;

தாத்பர்ய மென்னவென்றால், குருமுதலானவர்களோடு கூடி நிற்கிற ஆததாயிகளான இவர்களை நாம் யுத்தத்தில் கொல்வதினால் அவர்களுக்கு ஆததாயித்துவம் நீங்கி அவர்கள் சுவர்க்கத்தை அடைவார்கள். ஏன் என்றால், "𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌲𑍋𑌕𑍇, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌭𑍇𑌦𑌿𑌨𑍌, 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌡𑍍𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌚, 𑌰𑌣𑍇𑌚𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋𑌹𑌤𑌃" என்கிறபடி, யுத்தத்தில் கொல்லப்பட்டவனுக்கு சுவர்க்கம். ஆகையால் துர்யோதனாதிகளை நாம் யுத்தத்தில் கொல்வதினால் அவர்களுக்கு சுவர்க்கலோகம் கிடைப்பதும், நமக்கு நரகப்பிராப்தி உண்டாவதும் தான் பலன் என்று அர்ஜுனன் சொல்வதாக வாகிறது.

ஆனால் ஆததாயிகளைக் கொல்லுவதில் பாபமில்லை என்று முன் பிரமாணம் சொல்லப்பட்டிருக்கும்போது அர்ஜுனன் துர்யோதனாதிகளாகிய ஆததாயிகளை கொல்லுவதினால் தனக்கு பாபம்தான் உண்டாகுமென்று எப்படிச் சொல்லலாமென்றால், மேலே ஆததாயிகளைக் கொல்லும்படி சொன்ன பிரமாணமானது அர்த்தசாஸ்திர வசனம். அதைவிட மேலானதும் பிராபல்லியமுள்ளதுமான தர்மசாஸ்திர பிரமாணம் "நஹிம்ஸியாத் ஸர்வாபூதாநி" "சர்வப்பிராணிகளை எப்பவும் ஹிம்ஸைசெய்யக்கூடாது" என்றும், "ஸஏவ பாபிஷ்டதமோ யஃ குர்யாத் குலநாசநம்" "எவன் ஒருவன் குலநாசத்தைச்செய்கிறானோ அவன் பாபிகளில் முதன்மையானவன்" என்றுமிருப்பதால் துர்யோதனாதிகளைக்கொன்று குலநாசத்தை யுண்டுபண்ணுவதால் பாபம் அவசியம் தங்களை அடையுமென்பது அர்ஜுனன் தாத்பர்யம். (36)

---

௩௭. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌵𑌯𑌂𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍍𑌵𑌜𑌨𑌂𑌹𑌿 𑌕𑌥𑌂𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑌿𑌨𑌃𑌸𑍍𑌯𑌾𑌮 𑌮𑌾𑌧𑌵 ॥

37. தஸ்மாத்-ந-அர்ஹாஃ-வயம்-ஹந்தும்-தார்தராஷ்ட்ராந்-ஸபாந் ஸ்வஜநம்-ஹி-கதம்-ஹத்வா ஸுகிநஃ-ஸ்யாம-மாதவ (1). [தவாந்

𑌮𑌾𑌧𑌵	ஓ! மாதவா!
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
𑌸𑍍𑌵𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌨𑍍	பந்துக்களோடுகூடிய
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍	திருதராஷ்டரனுடைய புத்திரர்களை
𑌹𑌨𑍍𑌤𑍁𑌂	கொல்லுவதற்கு
𑌵𑌯𑌂	நாங்கள்
𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌃	யோக்கியர்களல்ல

𑌸𑍍𑌵𑌜𑌨𑌂	பந்துக்களை
𑌹𑌤𑍍𑌵𑌾	கொன்று
𑌕𑌥𑌂	எப்படி
𑌸𑍁𑌖𑌿𑌨𑌃	சுகத்தையுடையவர்களாய்
𑌸𑍍𑌯𑌾𑌮	ஆகுவோம் ?

ஓ! மாதவா! ஆகையால் பந்துக்களோடு கூடிய திருதராஷ்ட்ர புத்திரர்களைக் கொல்லுவதற்கு நாங்கள் யோக்கியர்கள் அல்ல. பந்து ஜனங்களைக்கொன்று எப்படி சுகத்தை யுடையவர்களா யாகுவோம் ?

(1) 𑌮𑌾𑌧𑌵—நீர் லக்ஷ்மீபதியானதினால் இந்த அலக்ஷ்மீகிருதமான காரியத்தை நான் செய்வது உமக்கு ஸம்மதமாகுமா என்பது அர்ஜுனன் தாத்பர்யம். (37)

---

௩௮. 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌲𑍋𑌭𑍋𑌪𑌹𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 |
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑍇 𑌚 𑌪𑌾𑌤𑌕𑌮𑍍 ||
௩௯. 𑌕𑌥𑌂 𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌪𑌾𑌪𑌾𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌮𑍍 |
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ||

38. யதி-அபி-ஏதே-ந-பஶ்யந்தி-லோபோபஹதசேதஸ:,
குலக்ஷயக்ருதம்-தோஷம்-மித்ரத்ரோஹே-ச-பாதகம்.
39. கதம்-ந-ஜ்ஞேயம்-அஸ்மாபி:-பாபாத்-(1)அஸ்மாத்-நிவர்திதும்,
குலக்ஷயக்ருதம்-தோஷம்-ப்ரபஶ்யத்பி:-ஜநார்தந (2)

𑌲𑍋𑌭𑍋𑌪𑌹𑌤 𑌚𑍇𑌤𑌸𑌃	பேராசையினால் விவேகமற்றுப்போயிருக்கிற மனதையுடைய
𑌏𑌤𑍇	இவர்கள் (துர்யோதனாதிகள்)
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂	குலநாசத்தினாலுண்டாகும் தோஷத்தையும்
𑌮𑌿𑌤𑍍𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑍇	மித்திரதுரோகத்தில் (விளையும்)
𑌪𑌾𑌤𑌕𑌂𑌚	பாதகத்தையும்
𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌨𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿	தெரிந்துகொள்ளாமற் போனபோதிலும்
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂	குலநாசத்தினா லுண்டாகும்

𑌦𑍋𑌷𑌂	தோஷத்தை (பாபத்தை
𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌭𑌿𑌃	அறிகிற
𑌅𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃	எங்களால்
𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍	இந்தப்பாபத்தினின்றும்
𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌂	நிவர்த்தித்துக்கொள்ள
𑌹𑍇 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 !	ஓ! ஜநார்த்தனு!
𑌕𑌥𑌂	எப்படி
𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂	தெரிந்துகொள்ளாமற்போகக்கூடும்?

(இராஜ்ய) பேராசையினுல் விவேகமற்றுப் போயிருக்கிற மனதை யுடைய துர்யோதனுதிகள், குலநாசத்தினு லுண்டாகும் தோஷத்தையும், மித்திர துரோகத்தினுலுண்டாகும் பாதகத்தையும், தெரிந்து கொள்ளாமற் போனபோதிலும், குலநாசத்தினு லுண்டாகும் தோஷத்தை அறிகிற எங்க ளாலிந்தப் பாபத்திலிருந்து நிவிர்த்தித்துக்கொள்ள ஓ! ஜநார்த்தனு! எப் படி தெரிந்துகொள்ளாமற் போகக்கூடும்?

---

(1) பாபாத்-இந்த பாபம் என்பதற்கு 'பந்துவதத்தை பலனுக வுடைய யுத்தரூபமான பாபம்' என்று ஆனந்தகிரி முதலானவர்கள் அர்த்தம் செய் திருக்கிறுர்கள். ஆனுல் சங்கரானந்தர் "இந்த பாபம்" என்பது 'குலக்ஷய மாகிய பாபம்' என்று அர்த்தம் செய்திருக்கிறுர்.

(2) ஜநார்தந—பாபிஷ்ட ஜனங்களுடைய ஹிருதயத்தில் நீர் பீதியை உண்டாக்குகிறவர்; ஆகையால் பாபம் என்று தெரிந்தே அந்த பாபத்தை ஏப்படி செய்ய மனம்துணியும் என்பது தாத்பர்யம்; அல்லது ஜனங்களை அவரவர்களுடைய பாபங்களுக்குத் தக்கபடி தண்டிப்பவராகையால் இந்த பாபத்தை செய்தால் உம்முடைய தண்டனையிலிருந்து எப்படித் தப்பமுடியு மென்று சொல்வதாகவும் கொள்ளலாம்.

(ஸ்வா)—மூடஜன உசிதமான க்ஷணகாலமிருக்கிற ஆபாஸ ஸுகத் தின் ஆசையினுல், துர்யோதனுதிகள் மதிமயங்கி, குலநாசம் செய்வதில் உண்டாகும்பாபத்தைத் தெரிந்துகொள்ளாததினுல் அப்பாபத்தை செய்ய எத்தனித்தபோதிலும், பந்து வத ரூபமாகிய இந்த குலக்ஷயகிருதபாபம், நிரந்தரமான நரகத்திற்குக் காரணம் என்பதைத் தெரிந்த நாம் அப்பாபத் தை, அறிந்தே செய்வது மகத்தான பாபம்; இதைச் செய்யாமல் நிவர்த்தி செய்துகொள்வதுதான் நம்முடைய விவேகத்தின் பயன் என்பது அர்ஜுனன் தாத்பர்யம். (38-39)

௪௦. 𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌂𑌤𑌿 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇𑌨𑌷𑍍𑌟𑍇𑌕𑍁𑌲𑌂𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ॥

௪௧. 𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌂𑌤𑌿𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ॥

௪௨. 𑌸𑌂𑌕𑌰𑍋𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌚 ।
𑌪𑌤𑌂𑌤𑌿𑌪𑌿𑌤𑌰𑍋𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥

௪௩. 𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌂𑌤𑍇𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ॥

௪௪. 𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌨𑌰𑌕𑍇𑌨𑌿𑌯𑌤𑌂𑌵𑌾𑌸𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 ॥

40. குலக்ஷயே-ப்ரணஶ்யந்தி-குலயர்மாஃ-ஸநாதநாஃ,
யர்மே-நஷ்டே-குலம்-க்ருத்ஸ்நம்-அயர்மஃ-அஹிஹவதி-உத.

41. அயர்மாஹிஹவாத்-க்ருஷ்ண(1)-ப்ரதுஷ்யந்தி-குலஸ்த்ரியஃ,
ஸ்த்ரீஷு-துஷ்டாஸு-வார்ஷ்ணேய(2)-ஜாயதே-வர்ணஸங்கரஃ.

42. ஸங்கரஃ-நரகாய-ஏவ-குலக்நாநாம்-குலஸ்ய-ச
பதந்தி-பிதரஃ-ஹி-ஏஷாம்-லுப்தபிண்டோதக க்ரியாஃ.

43. தோஷைஃ-ஏதைஃ-குலக்நாநாம்-வர்ணஸங்கரகாரகைஃ,
உத்ஸாத்யந்தே-ஜாதியர்மாஃ-குலயர்மாஃ-ச-ஶாஶ்வதாஃ.

44. உத்ஸந்நகுலயர்மாணாம்-மநுஷ்யாணாம்-ஜநார்தந(3)
நரகே-நியதம்-வாஸஃ-ஹவதி-இதி அநுஶுஶ்ரும.

𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇	குலநாசமடைந்தால்
𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃	அனாதியாயிருக்கிற
𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃	குலதர்மங்கள்
𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌂𑌤𑌿	முழுதும் நாசமடையும்
𑌧𑌰𑍍𑌮𑍇𑌨𑌷𑍍𑌟𑍇	(குல) தர்மம் நசித்தால்
𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂𑌕𑍁𑌲𑌂 𑌉𑌤	(பாக்கி) குலமுழுமையையும் கூட
𑌅𑌧𑌰𑍍𑌮𑌃	அதர்மமானது
𑌅𑌭𑌿𑌭𑌵𑌤𑌿	வியாபிக்கும்
𑌹𑍇𑌕𑍃𑌷𑍍𑌣!	ஓ! கிருஷ்ணா!
𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍	அதர்மம் வியாபித்தால்
𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃	குலஸ்திரீகள்
𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌂𑌤𑌿	கற்பழிந்துபோவார்கள்
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁	பெண்கள் கற்பு அழிந்தால்

வர்ணஸங்கர: ஜாயதே	ஜாதிக்கலப்பானது உண்டாகும்
ஹே வார்ஷ்ணேய	ஓ! கிருஷ்ணா!
ஸங்கர:	ஜாதிக்கலப்பானது
குலக்நாநாம்	குலநாசஞ்செய்தவர்களுக்கும்
குலஸ்ய ச	குலத்திற்கும்
நரகாயைவ	நரகஹேதுவேயாகும்
ஏஷாம்	இவர்களுடைய
பிதர:	பிதிர்க்கள்
லுப்தபிண்டோதகக்ரியா:	பிண்ட உதகக் கிரியைகளை இழந்து
பதந்தி ஹி	(நரகத்தில்) விழுவார்கள்
வர்ணஸங்கரகாரகை:	ஜாதிச்சேர்க்கையுண்டுபண்ணுகிறதுகளான
ஏதை:	இந்த
குலக்நாநாம்	குலத்தைக் கெடுத்தவர்களுடைய
தோஷை:	தோஷங்களினாலே
ஶாஶ்வதா:	அநாதியாகவிருக்கிற
ஜாதிதர்மா:	ஜாதி தர்மங்களும்
குலதர்மாஶ்ச	குலதர்மங்களும், ஆச்சிரமதர்மாதிகளும்
உத்ஸாத்யந்தே	அழிக்கப்படுகின்றன
ஹே ஜநார்தந	ஓ! ஜநார்த்தனா!
உத்ஸந்நகுலதர்மாணாம்	குலதர்மங்களையிழந்த
மநுஷ்யாணாம்	மனிதர்களுக்கு
நரகே	நரகத்தில்
நியதம்	எப்பவும்
வாஸ:	வாஸமானது
பவதீதி	உண்டாகுமென்று
அநுஶுஶ்ரும	கேட்டிருக்கிறோம்.

குலம் நாசமடைந்தால் அநாதியாயிருக்கிற குலதர்மங்கள் முழுதும் நாசமடையும். குலதர்மம் நசித்தால், பாக்கிகுல முழுமையையுங்கூட அதர்மமானது வியாபிக்கும். ஓ! கிருஷ்ணா! அதர்மம் வியாபித்தால்

குலஸ்திரீகள் கற்பழிவார்கள். பெண்கள் கற்பு அழிந்தால் ஜாதிக்கலப் புண்டாகும் ஓ! கிருஷ்ண! ஜாதிக்கலப்பானது குலநாசஞ் செய்தவர்களுக் கும் குலத்திற்கும் நரகஹேதுவே ஆகும். இவர்களுடைய பிதிர்க்கள் பிண்டத்தினுலும் (அன்னத்தினுற் செய்யப்படுமுருண்டை) (உ௯-௧) ஜலத் தினுலும் செய்யப்படும் (சிரார்த்த தர்ப்பணுதி) கிரியைகளினு லுண்டாகும் பிரயோஜனத்தை இழந்து நரகத்தில் விழுவார்கள். ஜாதிக்கலப்பை யுண் டுபண்ணுகிறதுகளான இந்த குலத்தைக் கெடுத்தவர்களுடைய தோஷங் களினுலே, அநாதியாயிருக்கிற ஜாதிதர்மங்களும் குலதர்மங்களும் ஆச் சிரம தர்மாதிகளும் அழிக்கப்படுகின்றன. ஓ! ஜநார்த்தனு! குலதர்மங் களை யிழந்த மனிதர்களுக்கு நரகத்தி லெப்பவும் வாஸமான துண்டாகு மென்று கேட்டிருக்கிறோம்.

---

(1) **க்ருஷ்ண**—அதர்மத்தை ஸம்ஹரிக்கிறவர்; அதர்ம நிவர்த்திக்காக அவதரிக்கிற உமக்கு அதர்மம் வியாபிக்கும்படி செய்யும் காரியங்கள் ஸம் மதமாகுமாவென்பது தாத்பரியம்.

(2) **வார்ஷ்ணேய**—வஸுதேவருடைய குலமாகிய விருஷ்ணீ குலத் தில் அவதரித்தவருனதால் வார்ஷ்ணேயர் என்று பெயர். இங்கு அர்ஜு னன் 'வார்ஷ்ணேய' என்று வஸுதேவர் குலத்தைக் குறித்துச் சொல் வது அக்குலத்து ஸ்திரீகளை குருகுலத்தார் விவாகம் செய்துகொண்டிருப் பதால் அக்குலத்து ஸ்திரீகளுக்குப் பழிப்புண்டானுல் அவர்கள் பிறந்த குலமாகிய விருஷ்ணீ குலத்திற்கும், அக்குலத்தினுதித்த உமக்கும், பழிப் பிற்குக் காரணம் ஆகுமென்பதை சூசிப்பிக்கிறது.

(3) **ஜநார்தந**—பகவானுடைய ஆக்ஞா ரூபமான சுருதி ஸ்மிருதிகளை உல்லங்கனம் செய்த பாபிகளை அதற்காக பீடிக்கிறவர்; அதாவது நரகத் தில் தள்ளுகிறவர்; அல்லது எல்லா ஜனங்களாலும், நரகத்திலிருந்து ரக்ஷிக் கப்படும் பொருட்டு யாசிக்கப்படுகிறவர். நரகத்திலிருந்து நிவர்த்தியை உம்மிடத்திலிருந்து எல்லோரும் யாசிப்பதாக விருக்க, நரகத்திற்கு ஹேது வான இந்தக் காரியத்தில் நாம் பிரவிர்த்திப்பது உசிதமாகாது என்பது தாத்பர்யம்.

(ஸ்வா) 40-வது சுலோகத்தில் குலம் நசிப்பதால் குலதர்மங்கள் நசித் துப்போமென்று சொல்வதின் **காரணம்** ஷை தர்மங்களை ஸ்திரீகள் செய்ய அதிகாரிகள் அல்லாததால் அவைகளை அனுஷ்டிக்க கர்த்தாக்கள் இல்லா மல் போவதினுல் என்க. ஷை சுலோகம் 2-வது வரியில் அதர்மம் குலமுழுமையும் வியாபிக்குமென்று சொல்லப்பட்டிருக்கிற குலம், அவசிஷ்ட

குலம்; அதாவது நசித்தவர்கள் போக அக்குலத்தில் பாக்கியுள்ளவர்கள். 41-வது சுலோகத்தில் சொல்லிய வர்ணஸாங்கர்யம் குலத்தைக் கெடுத்தவனுக்கு நரகஹேது எப்படியாகுமென்றால், குலநாசம் செய்த பாபத்திற்கு தண்டனையாக நரகத்தில் அவன் தள்ளப்படுவான் என்பதினால்தான். இந்த குலக்னனுடையவும் குலத்தினுடையவும் பிதிர்க்கள் பிண்டம் முதலிய கிரியைகளற்று நரகத்தில் வீழ்வார்களென்று ஷ சுலோகம் இரண்டாவது வரியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது க்ஷயமடைந்த குலத்தினுடைய பிதிர்க்கள் விஷயத்தில் சொல்வது பொருந்தும். ஏனென்றால் ஷ குலக்ஷயத்தால் ஜாதிக்கலப்புண்டாய் பிண்டம் முதலான கிரியைகளைச் செய்ய சாஸ்திரப்படி யோக்கியர்களான ஸந்ததி இல்லாமற் போவதினால் ஷ பிதிர்க்கள் ஷ கிரியைகளையாவது அவற்றின் பயனையாவது அடையாமல் நரகத்தில் வீழ்கிறார்கள். ஆனால் குலக்னனுடைய பிதிர்க்களும் அப்பிண்டம் முதலான கிரியைகள் இல்லாமல் நரகத்தில் விழக்காரணம் என்னவென்றால் ஷ பிண்டோதகக்கிரியைகள் ஷ வம்சத்தில் கிரமப்படி உதித்தவர்களால் கொடுக்கப்பட்ட போதிலும், அவர்கள் அசுசிகளாகவும், பாபிகளாகவும் இப்போது ஆய்விட்டபடியால் அக்கிரியைகளை பிதிர்க்கள் கிரகித்துக்கொள்ளாமல் போவதினால்தான். (40-44)

---

௪௫. 𑌅𑌹𑍋 𑌬𑌤 𑌮𑌹𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾 𑌵𑌯𑌂 |
𑌯𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍁𑌖𑌲𑍋𑌭𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌃 ||

45. அஹோ-பத-மஹத்-பாபம்-கர்தும்-வ்யவஸிதா:-வயம்.
யத்-ராஜ்யஸுகலோபேந-ஹந்தும் ஸ்வஜநம்-உத்யதா:.

𑌵𑌯𑌂	நாம்
𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍁𑌖 }	{ இராஜ்ய சுக
𑌲𑍋𑌭𑌨 }	{ ஆசையினால்
𑌸𑍍𑌵𑌜𑌨𑌂	பந்துஜநத்தை
𑌹𑌨𑍍𑌤𑍁𑌂	கொல்லுகிறதற்கு
𑌉𑌦𑍍𑌯𑌤𑌾𑌃 (𑌇𑌤𑌿 𑌯𑌤𑍍	துணிந்தோமென்கிறது எதுவோ
(𑌏𑌤𑌤𑍍)	(இந்த)
𑌮𑌹𑌤𑍍𑌪𑌾𑌪𑌂	மஹத்தானபாபத்தை
𑌕𑌰𑍍𑌤𑍁𑌂	செய்ய
𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾𑌃	எத்தனப்பட்டோம்
𑌅𑌹𑍋 𑌬𑌤	மஹாகஷ்டம்.

நாம் ராஜ்ய சுக ஆசையினால் பந்துஜனத்தைக் கொல்லுகிறதற்கு துணிந்தோமென்கிறதாகிய இந்த மஹத்தான பாபத்தை செய்யவும் எத்தனப்பட்டோம். இது மஹாகஷ்டம்!

(ஸ்வ) இந்த சுலோகத்தின் கருத்து என்னவென்றால், முன்சொன்ன சுலோகங்களினால் சுவஜனங்களைக்கொல்வது நரகஹேது என்று யேற்படுவதால், இராஜ்ய ஆசையினால் சுவஜனங்களைக் கொல்லவேண்டுமென்று மனதினால் துணிவதே பாபம் அப்படி சுவஜனவதத்தால் குலக்ஷயமுண்டாகுமென்றும், அதனால் உண்டாகும் பாபம் இன்னதென்றும் தெரிந்தும் அதைச்செய்யவேண்டுமென்று மனதில் நிச்சையம் செய்வதே அதைவிட மஹத்தான பாபம். அத்தோடுநில்லாமல் அதைச்செய்யவும் எத்தனப்பட்டால் அது எவ்வளவு பாபமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? என்பது;

அதாவது பாபகர்மங்களைச்செய்ய மனதில் அபேக்ஷிப்பதே பாபம். அக்கர்மங்கள் பாபம் என்று தெரிந்தும் அவைகளைச்செய்ய அச்சப்படாமல் அவைகளைச் செய்தேதீரவேண்டுமென்று நிச்சையம் செய்துகொள்வது மஹத்தானபாபம். அந்த நிச்சையத்தை கர்மேந்திரியங்களினால் (கைமுதலான அவயவங்களினால்) நிறைவேற்ற ஆரம்பித்தல் அதைவிட மஹா மஹத்தானபாபம் என்பது தாத்பர்யம்.

இந்த சுலோகத்திற்கு அடியில் கண்டபடியும் அன்வயம் செய்யப்படுகிறது:—யத், எந்தக் காரணத்தினாலே; வயம், நாம்; ராஜ்யஸுகலோபேந, இராஜ்ஜிய சுக விருப்பத்தினால்; ஸ்வஜநம் ஹந்தும், பந்துஜனத்தை கொல்லுகிறதற்கு; உத்யதா:, துணிந்தோமோ; (தத்) அந்தக் காரணத்தினாலே; மஹத்பாபம், மஹாபாபத்தை; கர்தும் வ்யவஸிதா:, செய்ய நிச்சயித்தோம். அஹோ (இதென்ன) ஆச்சரியம்; பத, (மகா) கஷ்டம்.

இவ்விதமான குலக்ஷயகிருத பாபத்திற்கு காரணமாக உடன்பட்ட தன்னைதானே அர்ஜுனன் நொந்துகொள்ளுவதையும் பச்சாதாபப்படுவதையும் "அஹோ" "பத" என்கிற வசனங்கள் காட்டுகின்றன. (45)

---

௪௬. யதி மாமப்ரதீகாரமஸஸ்த்ரம் ஸஸ்த்ரபாணய: |
தார்தராஷ்ட்ரா ரணே ஹந்யுஸ்தந்மே க்ஷேமதரம் பவேத் ||

46. யதி-மாம்-அப்ரதீகாரம்-அஸஸ்த்ரம்-ஸஸ்த்ரபாணய:,
தார்தராஷ்ட்ரா:-ரணே-ஹந்யு:-தத்-மே-க்ஷேமதரம்-பவேத்.

அஶஸ்த்ரம்	கையில் ஆயுதமில்லாமலும்
அப்ரதீகாரம்	எதிர்க்காமலுமிருக்கிற
மாம்	என்னை
ஶஸ்த்ரபாணய:	கையில்ஆயுதங்களையுடைத்தாயிருக்கிற
தார்தராஷ்ட்ரா:	திருதராஷ்டரனுடைய புத்திரர்கள்
ரணே	யுத்தத்தில்
ஹந்யு:	கொல்லுவார்களானால்
தத்	அதானது
மே	எனக்கு
க்ஷேமதரம்	அதிகக்ஷேமமாக
பவேத்	ஆகும்.

கையில் ஆயுதமில்லாமலும் எதிர்க்காமலும் இருக்கிற என்னை ஆயுதங்களையுடைத்தாயிருக்கிற திருதராஷ்ட்ர புத்திரர்கள் யுத்தத்தில் கொல்லுவார்களேயானால் அதானது எனக்கு அதிக க்ஷேமமாகும்.

(ஸ்ம்ரு) “ப்ராயஶ்சித்தமகுர்வாணா: பாபேஷு நிரதா நரா: அபஶ்சாத்தாபிந: கஷ்டாந்நிரயாந்யாந்தி தாருணாந்” அதாவது “பாபங்களைச் செய்துகொண்டும், பிராயச்சித்தம் செய்துகொள்ளாமலும், பச்சாத்தாபப் படாமலுமிருக்கிற ஜனங்கள் பயங்கரமாயும் கஷ்டமாயுமிருக்கிற நரகங்களை அடைகிறார்கள்” என்கிறபிரமாணப்படி முன் சொன்ன மஹாபாபத்திற்காக முதலில் ஷை ஶ்லோகத்தில் பச்சாதாபப்பட்டுவிட்டு, பிறகு அர்ஜுனன் இந்த ஶ்லோகத்தில் அந்த பாபத்திற்கு பிராயச்சித்தம் சொல்லுகிறான். அதாவது துர்யோதனாதிகளைக்கொன்று குலநாசம் செய்ய எத்தனித்த மஹாபாபத்திற்கு பிராயச்சித்தம் உயிரை பலி கொடுப்பதுதான்; அப்படி செய்வதினால் ஷை பாபம் நிவர்த்தியாகி பரலோகத்தில் க்ஷேமம் உண்டாகும் என்பது அர்ஜுனன் தாத்பர்யம். (46)

ஸஞ்ஜய உவாச.

௪௭. ஏவமுக்த்வார்ஜுந: ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத்।
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்நமாநஸ:॥

47. ஏவம்-உக்த்வா-அர்ஜுந:-ஸங்க்யே-ரதோபஸ்தே - உபாவிஶத் விஸ்ருஜ்ய-ஸஶரம்-சாபம்-ஶோகஸம்விக்நமாநஸ:.

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚	சஞ்ஜயன்சொன்னது
𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃	அர்ஜுனனானவன்
𑌏𑌵𑌂	இந்தப்பிரகாரம்
𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	சொல்லி
𑌶𑍋𑌕𑌸𑌂𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌾𑌨𑌸𑌃	துக்கத்தினாலே துடிக்கிறமனதுடையவனாய்
𑌸𑌶𑌰𑌂	பாணத்தோடுகூடிய
𑌚𑌾𑌪𑌂	வில்லை
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯	எறிந்து
𑌸𑌂𑌖𑍍𑌯𑍇	யுத்தகளத்தில்
𑌰𑌥𑍋𑌪𑌸𑍍𑌥𑍇	இரதத்தில் (தேர்த்தட்டில்)
𑌉𑌪𑌾𑌵𑌿𑌶𑌤𑍍	உட்கார்ந்தான்.

சஞ்ஜயன் (திருதராஷ்டிரனை நோக்கிச்) சொன்னது :

அர்ஜுனன் இவ்விதமாய்ச் சொல்லி துக்கத்தினாலே துடிக்கிற மனதையுடையவனாய் தன் கையிலிருந்த பாணத்தோடு கூடிய வில்லை யெறிந்துவிட்டு யுத்தகளத்தில் இரதத்தில் தேர்த்தட்டில் உட்கார்ந்தான்.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂
𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇
𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌵𑌿𑌷𑌾𑌦𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮
𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக ப்ரஹ்மவித்யை
யாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன
சம்வாதத்திலே அர்ஜுன விஷாதயோக
மென்கிற முதலாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஸ்ரீ:

த்விதீயோऽத்யாயாரம்ப:

இரண்டாவது அத்யாயம்.

ஸாங்க்யயோகம்.

ஸஞ்ஜய உவாச.

௧. தம் ததா க்ருபயாவிஷ்டம் அஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் |
விஷீதந்தமிதம் வாக்யம் உவாச மதுஸூதந: ||

1. தம்-ததா க்ருபயா(1)-ஆவிஷ்டம்(2)-அஶ்ருபூர்ணகுலேக்ஷணம்,
விஷீதந்தம்-இதம்-வாக்கியம்-உவாச மதுஸூதந:(3).

ஸஞ்ஜய உவாச	சஞ்ஜயன்சொன்னது
ததா க்ருபயா	(முன்சொன்ன) அந்தமாதிரியான கிருபையினால் (மோகத்தினால்)
ஆவிஷ்டம்	பிரவேசிக்கப்பட்டவனும்
அஶ்ருபூர்ணாகுல ஈக்ஷணம்	கண்ணீர்நிறைந்தும், கலங்கியுமுள்ள கண்களோடு கூடினவனும்
விஷீதந்தம்	துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறவனுமான
தம்	அவனை (அர்ஜுனனை நோக்கி)
மதுஸூதந:	கிருஷ்ணஸ்வாமியானவர்
இதம் வாக்யம்	இந்த வார்த்தையை
உவாச	சொன்னார்.

(திருதராஷ்ட்ரனுக்குச்) சஞ்ஜயன் சொன்னது.

(முன் சொன்ன) அந்தமாதிரியான கிருபை, அதாவது மோகத்தினால் பிடிபட்டவனும், கண்கள் கலங்கியும், கண்ணீர் ததும்பிக்கொண்டு மிருக்கிறவனும், துக்கப்பட்டுக்கொண்டு மிருக்கிறவனுமான அவனை (அர்ஜுனனை நோக்கி) கிருஷ்ணஸ்வாமியானவர் (இனிச் சொல்லப்போகிற) இந்த வார்த்தையைச் சொன்னார்.

(1)**தயாக்ருபயா**- 'அந்தமாதிரியான கிருபை,' என்பது முன் 1-வது அத்தியாயம் 27 சுலோகத்தில் சொல்லப்பட்ட 'பரயா க்ருபயா' என்பதைக் குறிக்கிறது. இது வாஸ்தவமான கிருபையல்ல, மோகம், என்பதாக அச்சுலோகத்தின் கீழேயே சொல்லப்பட்டிருக்கிறது.

'க்ருபை' என்பது, "பரது:கப்ரஹாணேச்சா" அதாவது 'மற்றவர்கள் துக்கத்தைப் போக்கவேண்டுமென்கிற இச்சை. அவ்வித லக்ஷணத்தோடு கூடியதல்ல, இது.

(2) **ஆவிஷ்டம்**- என்பதற்கு, பிரவேசித்தல், அல்லது பிடிப்பது, என்பது அர்த்தம்; சாதாரணமாய், பிசாசுபிடித்தவர்களுடைய லக்ஷணங்களாகிய கண்ணீர்விடுவது, துக்கப்படுவது முதலானவைகள் இப்போது, மோகப்பிசாசினால் பிடிபட்ட அர்ஜுனனிடத்திலும் காணப்படுவதால், 'ஆவிஷ்ட' பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

(3) **மதுஸூதந:**-'மது' என்கிற அஸுரனை ஸம்ஹாரம் செய்தவர். அப்படிப்பட்டவருக்கு இந்த மோகப்பிசாசை ஓட்டுவது ஒருபொருட்டா? இந்த மதுசூதனனுடைய வார்த்தைகளாகிய மந்திரம் உச்சரிக்கப்பட்ட மாத்திரத்தில் அந்த மோகமெல்லாம் நீங்கிவிடும். நீ மனோராஜ்யம் பண்ணவேண்டாம், என்று திருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சூசிப்பிக்கிறான். அல்லது 'மது சூதனன்' என்றால், துஷ்ட நிக்கிரஹம் பண்ணுபவர், துஷ்ட நிக்கிரஹத்திற்காகவே, அவதாரம் செய்திருக்கிற இவர், துஷ்டர்களாகிய உன் புத்திரர்களை விடமாட்டார். அவர்களை, லோகானுக்கிரஹத்திற்காக கொல்லவேண்டியது அவசியமென்று சொல்லப்போகிறார் என்பதாக, சஞ்ஜயன் சூசிப்பிப்பதாயும் சொல்லலாம்.

(ஸ்வ) முதலாவது அத்தியாயத்தில், சோகமோகங்கள் உண்டாகும் விதமும் அவைகளின் லக்ஷணங்களும் சொல்லப்பட்டன. இந்த இரண்டாவது அத்தியாய வாரம்பத்தில் சோகமோகத்தினால் ஸ்வதர்மத்தை விட்டு பரதர்மானுஷ்டானப் பிரவிர்த்தியுண்டாவதும், 7வது சுலோகத்தில் சோக மோக நிவிர்த்திக்காக சத்குருவை நாடி சரணாகதி யடையவேண்டிய அவசியத்தையும், 11 முதல் 38-வது சுலோகம் வரையில் அந்த சோக மோகங்களை சாக்ஷாத்தாய் நிவிர்த்தி செய்கிற ஆத்மதத்துவத்தையும், அவ்வாத்மதத்வத்தை ஸ்திரமாயடைவதற்கு ஸாதனமான யோகத்தை 39 முதல் 53 சுலோகங்களிலும், 54 முதல் 72 சுலோகங்களில் ஞானம் நிலைத்த ஸ்திதப்ரஜ்ஞனுடைய லக்ஷணமும், அதை அடைவதற்கான சாதனமும் உபதேசிக்கப்படுகின்றன.

"**தத்வமஸி**" மஹாவாக்யத்தின் "**த்வம்**" பதலக்ஷணம், இந்த

கீதையின் முதல் 6 அத்தியாயங்களிலும், "தத்" பதலக்ஷணம், 6 முதல் 12 அத்தியாயங்களிலும், இவைகளின் ஐக்கியமாகிய "அஸி" பதலக்ஷணம் 12 முதல் 18 அத்தியாயங்களிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. (1)

ஸ்ரீபகவாநுவாச. (1)

உ. குதஸ்த்வா கஶ்மலமிதம் விஷமே ஸமுபஸ்தி²தம் ।
அநார்யஜுஷ்டமஸ்வர்க்³யமகீர்த்திகரமர்ஜுந ॥

2. குதஃ(2)-த்வா-கஶ்மலம்(3)-இதம்-விஷமே(4)-ஸமுபஸ்திதம்,
அநார்யஜுஷ்டம்(5)-அஸ்வர்க்யம்-அகீர்த்திகரம்-அர்ஜுந(6).

ஸ்ரீபகவாநுவாச	பகவானான கிருஷ்ணஸ்வாமி சொன்னது.
ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுனா!
அநார்யஜுஷ்டம்	முமுக்ஷுக்களால் ஸேவிக்கப்படாததும்
அஸ்வர்க்யம்	சுவர்க்கசாதன மல்லாததும்
அகீர்த்திகரம்	கீர்த்தியை உண்டாக்கக்கூடிய தல்லாததுமான
இதம் கஶ்மலம்	இந்த மோகமானது
குதஃ	எந்தக் காரணத்தினாலே
விஷமே	(இந்த) அகாலத்தில்
த்வா	உன்னை
ஸமுபஸ்திதம்	அடைந்தது.

பகவானான கிருஷ்ணஸ்வாமியானவர் (அர்ஜுனனை நோக்கிச்) சொன்னது. ஓ! அர்ஜுனா! மோக்ஷ இச்சையுள்ளவர்களால் ஸேவிக்கப்படாததும், ஸ்வர்க்க ஸாதனமல்லாததும், கீர்த்தியையுண்டாக்கக் கூடியதல்லாததுமான, இந்த மோகமானது என்ன காரணத்தினாலிந்த அகாலத்தில் (இந்த யுத்தகாலத்தில்) உனக்குண்டாயிற்று.

---

(1) பகவாந் - "ஐஶ்வர்யஸ்ய ஸமக்³ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய: । ஜ்ஞாநவைராக்³யயோஶ்சைவ ஷண்ணாம் ப⁴க³ இதீரணா ॥" ஸம்பூர்ணமான அணிமாதி அஷ்டைசுவரியம், வீர்யம், யசஸ், ஸம்பத்து, வைராக்யம், அதேமாதிரி மோக்ஷ ஸாதனமான ஞானம் என்கிற இந்த ஆறுக்கும் பக மென்று பெயர். இதுகள் எக்காலத்திலும் குறையாமல் எவரிடத்தில் இருக்கின்றனவோ அவர்தான் பகவான் என்று சொல்லத் தகுந்தவர். (விஷ்ணுபுரா, அம்ச-6, அத்-5, சுலோ-74. அக்னிபுரா, பிரம்ம

ஞானகண்ட, அத்-378, சுலோ-11 பார்க்க). அல்லது உத்பத்திம் ப்ரளயம் சைவ பூதாநாமாகதிம் கதிம் | வேத்தி வித்யாமவித்யாஞ்ச ஸ வாச்யோ பகவாநிதி ||" பூதங்களின் உற்பத்திகாரணம், பிரளயகாரணம், வரப்போகிற சம்பத்விபத்து, வித்தை, அவித்தை இவைகளை எல்லாம் எவர் அறிகிறாரோ அவர்தான் பகவான் என்று சொல்லத் தகுந்தவர். (விஷ்ணுபுரா, அம்-6, அத்-5, சுலோ-78 பார்க்க.) அப்படிப்பட்ட பகவான் ஸ்ரீ வாசுதேவர்.

(2) **குத:**-எந்தக்காரணத்தினால்? அதாவது மோக்ஷ இச்சையினாலா? அல்லது ஸ்வர்க்க இச்சையினாலா? அல்லது கீர்த்திஇச்சையினாலா? இந்த பந்து விஷயமான மோகம் உனக்கிப்போது உண்டாயிருக்கிறது என்பதாக பகவான் வினவுகிறார். மோக்ஷஸாதனமல்லவென்பதை இந்த அத்தியாயம் 11-31 சுலோகங்களிலும் அஸ்வர்கியம் என்பதை 32-33 சுலோகங்களிலும், அகீர்த்திகரம் என்பதை 34-38-வது வரையிலுள்ள சுலோகங்களிலும் சொல்லி நிரூபிக்கிறார்.

(3) **கச்மலம்** - கம் மலிநீகரோதி, இந்த்ரியவ்யாபாரமிதி, **கச்மலம்**= இந்திரியங்களின் வியாபாரத்தை (சக்தியை) அல்பமாகச் செய்கிறது. **மூர்ச்சா து கஶ்மலம் மோஹ:**-என்கிற அமரகோசவாக்கியத்தைப் பார்க்க. அதாவது மூர்ச்சை, கச்மலம், மோஹம் இவைகள் ஒரே பொருளைக் குறிக்கிற பல பெயர்கள்.

(4) **விஷமே** - யுத்த சங்கடகாலம். யுத்தகளத்தில் இந்த யுத்தத் துவக்கசமயத்தில் அர்ஜுனனுக்கு பந்துக்களைக்கொல்லக் கூடாதென்று உண்டான எண்ணமானது, யுத்த நிச்சயத்திற்கு முந்தி உண்டாயிருந்தால் தகும். அதைவிட்டு ஆதிமுதல் யுத்தம் செய்யவேண்டுமென்றே நிச்சயம் செய்து சகல பிரயத்தினத்துடன் யுத்தகளம் வந்தபிறகு இப்படிப்பட்ட எண்ணம் சஸ்திரபிரயோக ஆரம்பகாலத்தில் உண்டானதினால் "அகாலமென்று" சொல்லப்பட்டது.

(5) **அநார்யஜுஷ்டம்**—பாபகர்மப்ய: தூராத் யாதா: ஆர்யா:, **ஆர்யா:**= பாபகர்மங்களைக் காட்டிலும் தூரமாகப் போகிறவர்கள் ஆர்யர்கள். அதாவது மோக்ஷமார்கத்தையே நாடுகிறவர்கள். அல்லது **அர்யணீய: ஸேவ்யோ வா - ஆர்ய:** = அடையத் தகுந்தவர், பூஜிக்கத் தகுந்தவர்; அநார்ய: என்றால் நீசர்கள்; அநார்யஜுஷ்டம், நீசர்களால் ஸேவிக்கப்படுவது என்றும், அஸ்வர்க்யம் நரகத்தை கொடுப்பது என்றும், அகீர்த்திகரம், அபகீர்த்தியை யுண்டாக்குவதென்றும் வியாக்யாதாக்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(6) *அர்ஜுந*- அர்ஜுந பதத்திற்கு வெளுப்பு என்று அர்த்தம், அர்ஜுந! என்று பகவான் சொல்வதினால் “நீ அதிபரிசுத்தமான அந்தக் கரணத்தையுடையவனல்லவா”? அப்படிப்பட்ட உன்னிடத்தில் இந்த கச்மலம் (மோகம்) எப்படிவந்து சேர்ந்ததென்று அவர் பரிதாபப்படுவதாகக் காட்டுகிறது. “நீ இந்த மோகத்தை இந்த அகாலத்தில் எப்படியடைந்தாய்” என்று பகவான் கேட்காமல் “இந்த மோகம் இந்த அகாலத்தில் உன்னை எப்படி யடைந்தது” என்று கர்த்ருத்வத்தை மோகத்தினிடத்தில் ஆரோபித்துக்கேட்பது, சுபாவமாக அர்ஜுனன் பரிசுத்தமான அந்தக்கரணத்தையுடையவன் இந்த மோகமானது தாத்காலிகமாக அவனிடத்தில் வந்து அடைந்தது என்பதை விளக்குகிறது. அர்ஜுநபதத்திற்கு “𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌭𑌾𑌵! 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣! ‘𑌅𑌹𑌶𑍍𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌹𑌰𑌰𑍍𑌜𑍁𑌨𑌞𑍍𑌚’ 𑌇𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍” என்று பின்வருகிற 18-வது அத்தியாயம் 61 சுலோகத்தின் கீழ் சங்கரபாஷ்யம் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்க. (2)

---

௩. 𑌕𑍍𑌲𑍈𑌬𑍍𑌯𑌂 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌗𑌮𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

3. க்லைப்யம்-மா-ஸ்ம-கம:-பார்த-ந-ஏதத்-த்வயி-உபபத்யதே,
க்ஷுத்ரம்-ஹ்ருதயதௌர்பல்யம்-த்யக்த்வா-உத்திஷ்ட-பரந்தப.

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! அர்ஜுனா
𑌕𑍍𑌲𑍈𑌬𑍍𑌯𑌂	(நபும்ஸகத்வத்தை) அதைர்யத்தை
𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌗𑌮𑌃	அடையாதே
𑌏𑌤𑌤𑍍	இதானது
𑌤𑍍𑌵𑌯𑌿	உன்னிடத்தில்
𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇	தகுந்ததல்ல
𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪	ஓ! சத்துருவை தபிப்பிக்கிறவனே!
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌂	இழிவான
𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌂	மனதிலுள்ள அதைரியத்தை
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	விட்டு
𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠	எழுந்திரு.

ஓ! அர்ஜுனா! அதைரியத்தை அடையாதே. இது உனக்குத் தகுந்ததல்ல. சத்துருவை தபிப்பிக்கிறவனே! இழிவான மனதிலுள்ள அதைரியத்தை விட்டு எழுந்திரு.

(ஸ்வ) இந்த சுலோகத்திலும் இதற்கு முந்திய சுலோகத்திலும் பகவான் அர்ஜுனனுக்கு உண்டாயிருக்கிற யுத்த நிவிர்த்தியின் வாஸ்தவமான காரணம் இன்னதென்பதை எடுத்துக்காட்டி அதன் நிவிர்த்திக்கு ஹேதுவையும் "பரந்தப=சத்துருவைதபிப்பிக்கிறவனே" என்று சொல்வதினால் தெரிவிக்கிறார். அதாவது பாண்டவர்கள் விஷயத்தில் துர்யோதனாதிகள் செய்த தீங்குகளை அர்ஜுனன் நினைத்துப்பார்த்தால் அவர்கள் ஜன்ம பிரப்ருதியான சத்துருக்கள் என்கிற ஸ்மரணையுண்டாய், மோகம் நிவிர்த்தியாய்விடும் என்பது. நீ அஜ்ஞாதவாசகாலத்தில் நபும்ஸகனாகவிருந்ததுபோதும்; மறுபடியும் அதை அடையாதே என்றும் பரிஹஸிக்கிறார். (3)

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚.

௪. 𑌕𑌥𑌂𑌭𑍀𑌷𑍍𑌮𑌮𑌹𑌂𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌦𑍍𑌰𑍋𑌣𑌂𑌚 𑌮𑌧𑌸𑍂𑌦𑌨 ।
𑌇𑌷𑍁𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑌾𑌵𑌰𑌿𑌸𑍂𑌦𑌨 ॥

4. கதம்-பீஷ்மம்-அஹம் ஸங்க்யே-த்ரோணம்ச-மதுஸூதந,
இஷுபிஃ-ப்ரதியோத்ஸ்யாமி-பூஜார்ஹௌ-அரிஸூதந.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌉𑌵𑌾𑌚	அர்ஜுனன் சொன்னது
𑌮𑌧𑌸𑍂𑌦𑌨	ஓ! மதுசூதன !
𑌭𑍀𑌷𑍍𑌮𑌂	பீஷ்மாசாரியரையும்
𑌦𑍍𑌰𑍋𑌣𑌂𑌚	துரோணாசாரியரையும்
𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇	யுத்தத்தில்
𑌅𑌹𑌂	நான்
𑌇𑌷𑍁𑌭𑌿𑌃	பாணங்களால்
𑌕𑌥𑌂	எப்படி
𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿	எதிர்த்துப் போர்செய்வேன்.
𑌅𑌰𑌿𑌸𑍂𑌦𑌨 !	ஓ! அரிசூதன !
(𑌤𑍌)	(அந்த இரண்டுபெயர்களும்)
𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑍌	(புஷ்பங்களால்) பூஜிக்கத்தகுந்தவர்களாக
(𑌭𑌵𑌤𑌃)	(இருக்கிறார்கள்.)

அர்ஜுனன் சொன்னது.

ஓ! மதுசூதன! பீஷ்மாசாரியர் துரோணாசாரியர் இவர்களை நான் யுத்தத்திலெதிர்த்து பாணங்களா லெப்படிப் போர்செய்வேன்? ஓ! அரி

சூதனே! அவ்விரண்டு பெயர்களும், என்னால் புஷ்பங்களைக்கொண்டு பூஜிக்கத்தக்கவர்களாகவிருக்கிறார்கள். (அதாவது மஹானுபாவர்களாகிய என் பாட்டனார் பீஷ்மாசாரியர், எனக்கு வில்வித்தையை கற்பித்துக்கொடுத்த துரோணாசாரியர் இவர்களை நான் புஷ்பங்களினால் அர்ச்சித்து பூஜை செய்யவேண்டியிருக்க, யுத்தத்தில் அவர்கள் பேரில் பாணங்களைப் பிரயோகித்து சண்டை செய்ய என் மனம் துணியவில்லையே! என்று அர்ஜுனன் சொல்லுகிறான்.)

(ஸ்வ) இந்த லோகத்தில், விவேகத்தோடு கூடிய ஜனங்களும்கூட சாதாரணமாய், அவர்களிடத்தில் சோகமோகங்களினால் உண்டாயிருக்கிற தோஷங்களை பெரியவர்கள் எடுத்துக்காட்டி, அதன் நிவிர்த்திக்கு ஹேதுவையும் உபதேசிப்பதனால், முடிவில் விவேகத்தை அடைகிறார்களானாலும், முன் அவர்களுக்குண்டாயிருந்த மோகம் நிச்சேஷமாய் உடனே நீங்காமல் மறுபடியும் மறுபடியும் கொஞ்சம் கொஞ்சம் வந்து மூடுவதால், தங்களுக்கு முன்தோன்றியதே ஞாயமென்கிற பிரமையோடு வியவகரிக்கமுயலுவது எப்படி ஸ்வாபாவிகமோ, அதேமாதிரி இப்போது பகவான் முன் இரண்டு சுலோகங்களில் அர்ஜுனனுக்கு செய்த ஹிதோபதேசத்தினால் அவனுடைய அகங்காரமானது ஒருவாறு அடங்கினபோதிலும், மோகத்தின் சேஷம் இன்னம் அவனிடமிருப்பதால், யுத்தம் செய்யமாட்டேனென்று தான் சொல்வது அதைரியத்தினாலாவது அல்லது மோகத்தினாலாவது அல்லவென்றும், யுத்தத்தினால் உண்டாகும் அநர்த்தத்தை உத்தேசித்து அவ்வித நிவிர்த்தி தனக்குண்டாயிருப்பதாக, இந்த 4, 5, 6 சுலோகங்களில் பிரதியுத்தரம் சொல்லுகிறான். ஆகிலும் அர்ஜுனன் அதிக விவேகத்தோடுகூடிய முமுக்ஷுவானபடியால், பிறகு வாஸ்தவமான பிரஞ்ஞையையடைந்து அடுத்த 7-வது சுலோகத்தில், தர்மம் இன்னது என்கிற விஷயம் தனக்குத்தெரியவில்லை என்பதை ஒப்புக்கொண்டு தனக்கு சிரேயஸ்கரமானதை உபதேசிக்கும்படி தன் குருவாகிய பகவானை சரணாகதியடைந்து பிரார்த்திக்கிறான்.

அர்ஜுனன் இந்த சுலோகத்தில் பகவானை முதலில் ஓ! மதுசூதனா! என்றும், மறுபடி ஓ! அரிசூதனா! என்றும் சொல்வதின் தாத்பரியம் என்னவென்றால்:—நீர் "மது" என்கிற துஷ்டனான சத்துருவை யுத்தம் செய்து ஸம்ஹாரம் செய்தீர். அவ்விதமே நானும் துஷ்டர்களான சத்துருக்களை யுத்தம் செய்து கொல்வது நியாயம். ஆனால் என்னை பால்யம்முதல் எடுத்து வளர்த்து போஷித்து ரக்ஷித்து ஹிதோபதேசங்களைச் சொல்லி ஆதரித்த என் பிதாமஹர் பீஷ்மர், எனக்கு பால்யம்முதல் வில்வித்தை

யைக் கற்பித்து, அதிரகஸ்ஸியமான மந்திரங்களைச் சொல்லிக்கொடுத்து புத்திரனைவிட அதிகமாக பாவித்திருக்கிற துரோணர், இவர்கள் ஏதோ காலகதியினால் எதிர்பக்ஷத்தில் வர நேரிட்டபோதிலும், அவர்கள் நம்முடைய க்ஷேமத்தையே எப்பொழுதும் கோரிக்கொண் டிருப்பவர்களாகையால் அவர்களை நான் எப்படி யுத்தம் செய்துகொல்வது" என்று மயங்குவதாகக்காட்டும் பொருட்டு ஓ! மதுசூதனா! என்றும், மேலும் பூஜிக்கத் தகுந்தவர்களான இவர்களை ராஜ்யபோகாதிகளை அடையவேண்டி, காமக்குரோதத்தினால் கொல்லநான் பிரயத்தனப்படுவது உமக்கு சம்மதமாகுமா ? நீர் அரிசூதனனல்லவா? அதாவது பக்தாளுடைய காமக்குரோதாதிகளை நிச்சேஷமாய் போக்கடிக்கிறவரல்லவா? நானும் உம்முடைய பக்தன்தானே என்பதை வினயமாய் சூசிப்பிக்கும்பொருட்டு ஓ! அரிசூதனா! என்றும் சம்போதிப்பது. "அரிஸூதந:= அரீந், காமாதீந் பக்தாநாம் ஸூதயதீதி: பக்தாளுடைய காமாதி சத்துருக்களைப் போக்கடிக்கிறவர்" என்று **சங்கரானந்தர்** அர்த்தம் செய்திருக்கிறார்: சில வியாக்கியாதாக்கள் "மதுசூதனா" என்று அர்ஜுனன் பகவானைப் பார்த்துச்சொல்வதினால் "நீர் மதுவைப்போலொத்த துஷ்டர்களைக் கொல்லும்படி சொல்வது நியாயம். இப்படிப்பட்ட பூஜ்யர்களான பீஷ்ம துரோணாகளை எப்படி கொல்லும்படி யேவலாம் என்பதாகவும், ஆனால் பூஜார்களாகிய என் மாதுலன் கம்ஸனை நான் கொல்லவில்லையா என்பீரோ, கம்ஸன் ஜன்மபிரபிருதி உம்முடைய சத்துரு, நீர் " அரிசூதன் "! அதாவது சத்துருக்களைக் கொல்லுகிறவர். இவர்கள் அப்படிப்பட்ட சத்துருக்களல்லவே " என்று சொல்வதாகவும் தாத்பரியம் சொல்லுகிறார்கள்.

சில வியாக்யாதாக்கள் அர்ஜுனன் மதுசூதனா, அரிசூதனா என்ற ஓரே அர்த்தமுள்ள வார்த்தைகளை திருப்பிச்சொல்வது அவனுக்குண்டாயிருக்கிற சோகத்தினால் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். (4)

---

௫. குரூநஹத்வா ஹி மஹாநுபாவாந்
ஶ்ரேயோ போக்தும் பைக்ஷமபீஹ லோகே |
ஹத்வார்தகாமாம்ஸ்து குரூநிஹைவ
புஞ்ஜீய போகாந் ருதிரப்ரதிக்தாந் ||

5. குரூந்(1)-அஹத்வா-ஹி-(2).மஹாநுபாவாந்(3) ஶ்ரேய:-போக்தும்-பைக்ஷம்-அபி-இஹ-லோகே ஹத்வா-அர்தகாமாந்(4)-து-குரூந்-இஹ-ஏவ புஞ்ஜீய-போகாந்-ருதிரப்ரதிக்தாந்(5).

𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌨𑍍	அதிக மகிமை பொருந்திய
𑌗𑍁𑌰𑍂𑌨𑍍	ஆசார்யர்களை
𑌅𑌹𑌤𑍍𑌵𑌾	கொல்லாமல்
𑌇𑌹 𑌲𑍋𑌕𑍇	இந்த உலகத்தில்
𑌭𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌪𑌿	(க்ஷத்திரியனுக்குத்தகாத) பிக்ஷான்னம்கூட
𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂	சாப்பிடுகிறதற்கு
𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌹𑌿	நல்லதல்லவா ?
𑌅𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌨𑍍	தர்மாதிபுருஷார்த்தங்களை உபதேசிக்கிற
𑌗𑍁𑌰𑍂𑌨𑍍	ஆசார்யர்களை
𑌹𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁	கொன்றால்
𑌰𑍁𑌧𑌿𑌰𑌪𑍍𑌰𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌨𑍍	(அவர்களுடைய) ரக்தத்தினால் பூசப்பட்ட
𑌭𑍋𑌗𑌾𑌨𑍍	போகங்களை (விஷயங்களை)
𑌇𑌹𑍈𑌵	இந்தலோகத்திலேயே
𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌯	அனுபவிப்பேன்.

அதிக மகிமை பொருந்திய ஆசார்யர்களைக் கொல்லாமல் இந்த உலகத்தில் க்ஷத்திரியனுக்கு நிஷித்தமான பிக்ஷையெடுத்துச் சாப்பிடுவதும்கூட நல்லதல்லவா ? தர்மாதி புருஷார்த்தோபதேசிகளாகிய குருக்களைக் கொன்றால் அவர்களுடைய ரக்தமயமாகிய (என்றால் அவர்களுடைய ரக்தம் சிதறுதலால் அடையப்பெற்ற) நாரகீயமான போகங்களை, இவ்வுலகத்திலேயே அனுபவிப்பேன். (அதாவது யுத்தம் செய்து குருக்களைக்கொன்று நாரகீயமான அனுபவங்களை அனுபவிப்பதைவிட பிக்ஷையெடுத்துச் சாப்பிடுவது நல்லதென்று நினைக்கிறேன் என்பது அர்ஜுனன் தாத்பர்யம்).

---

(1) 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍-இது பஹுவசனம். அதாவது இரண்டுபெயர்களைவிட அதிகப்பட்டவர்களைக் குறிக்கும் வசனம். ஆனால் முன் சுலோகத்தில் பீஷ்மர் துரோணர் இவர்கள் இரண்டு பெயர்களைமட்டும் சொல்லியிருப்பதால் மரியாதையாக அவர்களுக்கு பஹுவசனம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதாகவாவது, அல்லது கிருபர் முதலானவர்களையும் பீஷ்மத் துரோணர்களுடன் சேர்த்து குறிக்கும்பொருட்டு பஹுவசனப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறதாகவாவது கொள்ளலாம்.

(2) 𑌹𑌿-என்பது பிரஸித்தியைக் காட்டுவதாக சில வியாக்யாதாக்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

இந்த "ஹ்ரீ" சப்தத்தை அதற்குப் பின்வருகிற மஹானுபாவான் என்கிற பதத்தோடு சேர்த்து "ஹ்ரீமஹானுபாவான்" என்று ஒரே பதமாக எடுத்துக்கொண்டு, ஹ்ரீர்லஜ்ஜாஸ்யைவஹந்தீதி ஹ்ரீர்மஹா ஸூர்யஹுதாஶவத் அநுபாவ: ஸாமர்த்யம் யேஷாம்தாந்" சீதளத்தைப் போக்கடிக்கிற, சூரியன் அக்னி இவர்களைப்போல சாமர்த்தியமுள்ளவர்கள்; அதாவது அதி தேஜஸ்விகளாகிய அவர்களிடத்தில் தோஷங்கள் எப்படி ஒட்டுகிறதில்லையோ அப்படிப்போல பீஷ்மத் துரோணாதிகளிடத்திலும் தோஷங்கள் ஒட்டுகிறதில்லை என்று, **மதுசூதன ஸரஸ்வதி,** வியாக்கியானம் செய்திருக்கிறார்.

(3) **மஹானுபாவாந்-** எப்படி மஹானுபாவர்கள் என்றால் சுவேச்சாமரணம், நைஷ்டிகப்பிரமசர்யம், சர்வதர்ம பரிக்ஞானம், சர்வசாஸ்த்திரார்த்த சம்பத்து, சுருதாத்தியயனம், தபோநிஷ்டை இவைகளோடு கூடியிருப்பதால் என்க. ஆனால், **இராகவேந்திர சுவாமிகள்,** இந்த பதத்திற்கு ஹரி பக்தி முதலிய குணங்களோடு கூடியவர்கள் என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

(4) **அர்த்தகாமாந்-** இந்தப்பதத்திற்கு பின்வருகிறபடி மூன்றுவிதமான வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.

1 "காமீஜ்ஞாதா அர்த்தாந் தர்மாதி புருஷார்த்தாந் ஶிஷ்யேப்ய: காமயந்தி போதயந்தீதி அர்த்தகாமா: தாந்" காமிதா துவுக்கு ஞானம் என்பது அர்த்தம். தர்மாதி புருஷார்த்தங்களை சிஷ்யர்களுக்கு உபதேசிக்கிற குருக்கள் என்பதாய் **சங்கரானந்தர்,** வியாக்கியானம் செய்திருக்கிறார்.

அர்த்தாநேவ அர்த்தகா: ஸ்வாபேக்ஷிதப்ரத்யய: அர்த்தகாந் தர்மாதி புருஷார்த்தாந் ஸ்வயந்தி போதயந்தி த்யர்த்தகாமா: ஶத்ருத்யேகஸ்ய அபி: ஜ்ஞாநார்த்தகத்வம் | இதி என்றும் சில பண்டிதர்கள் வித்பத்தி செய்கிறார்கள்,

2 இந்த, "அர்த்தகாமாந்" என்கிறபதத்தை பின்வருகிற போகபதத்திற்கு விசேஷணமாகவைத்து **போகா:** = புருஷார்த்தங்கள் என்று அர்த்தம் செய்து கொண்டு "**அர்த்தகாமாந்போகாந்**" என்பதற்கு தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய நான்குவித புருஷார்த்தங்களில் அர்த்த காமரூபங்களாகமட்டு மிருக்கிற புருஷார்த்தங்களை இந்த உலகத்தில் தான், அனுபவிப்பேன், பரலோகத்தில் இல்லை, என்றும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

3. அர்த்தகாமான் என்கிற பதத்தை குரூந் என்பதற்கே விசேஷணமாக வைத்துக்கொண்டு "அர்த்தகாமாந் குரூந்" என்றால் "தநத்தில் இச்சையுள்ள குருக்களை" அதாவது அர்த்த இச்சையினால் துர்யோதனாதிகளுக்கு, இந்த பீஷ்மத் துரோணாதிகள் கட்டுப்பட்டிருப்பதினால், அவனுடைய சகாயத்திற்கு அவர்கள் அவசியம் வந்தே தீருவார்கள் அதனால் அவர்களுடைய வதம் நிச்சயமாய் சம்பவிக்கும் என்கிற தாத்பரியம் கொண்டு அர்ஜுனன் இந்த சுலோகத்தில் அர்த்தகாமான் குரூன் என்று சொல்வதாக சிலர் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

பீஷ்மத்துரோணாதிகளை முதலில் மஹானுபாவர்கள் என்று சொல்லிவிட்டு இப்போது அர்த்தகாமிகள் என்று சொல்லலாமா வென்றால், தாங்கள் அர்த்தத்தினால் துர்யோதனாதிகளுக்கு கட்டுப்பட்டிருப்பதாக யுதிஷ்டிரரிடத்தில் யுத்தத்திற்கு முன் "அர்த்தஸ்ய புருஷோ தாஸ: தாஸஸ்த்வர்த்தோ ந கஸ்யசித் இதி ஸத்யம் மஹாராஜ பத்தோஸ்ம்யர்த்தேந கௌரவை:"= மனுஷ்யன் அர்த்தத்திற்கு தாஸன். அர்த்தம் ஒருவனுக்கும் அடிமைப்பட்டதல்ல, ஓ! ராஜாவே, பணத்தைக்கொண்டு கௌரவர்களால் கட்டப்பட்டவனாக இருக்கிறேன் என்பது ஸத்தியம்" என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

(5) ருதிரப்ரதிக்தாந் - ரக்தத்தினால் பூசப்பட்டவைகள் என்பது பதத்தினுடைய அர்த்தம். ஆனால் வாஸ்தவத்தில் அவைகள் ரக்தத்தினால் பூசப்பட்டவைகளல்ல. குருக்களைக் கொன்றபிறகு அடையும்படியான ராஜ்யபோகங்கள், அவர்களுடைய ரக்தப்பிரவாகமன்றி அடையக்கூடியதல்லவாதலால் அவைகள் ரக்தத்தால் பூசப்பட்ட பதார்த்தங்கள் எப்படி ஜுகுப்ஸிதங்களோ அப்படியே மேற்படி ராஜ்யபோகங்களும் அனுபவிப்பதற்கு ஜுகுப்ஸிதங்கள், யோக்கியமல்லவென்பது கருத்து. இது அதிசயோக்தி அலங்காரம்.

இராகவேந்திர சுவாமிகள், இந்த சுலோகத்திற்கு, ஹரிபக்தி முதலிய குணங்களையுடையவர்களாகிய இப்படிப்பட்ட பெரியோர்கள், இராஜ்யம் தங்களுக்கு நிலைக்கவேண்டுமென்கிற ஆசைகொண்டு யுத்தத்திற்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களென்ன கேட்டபோதிலும் கொடுத்து அவர்களைப் பூஜிக்க வேண்டியவனாயிருக்க அப்படிப்பட்டவர்களிச்சிக்கு மிந்த ராஜ்யத்தை அவர்களைக் கொன்றுவிட்டு நானனுபவிப்பது தர்மமல்லவென்று அர்ஜுனன் சொல்வதாக தாத்பர்யம் செய்திருக்கிறார்.

மூ· 𑌨𑌚𑍈𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌮𑌃𑌕𑌤𑌰𑌨𑍍𑌨𑍋𑌗𑌰𑍀𑌯𑍋
𑌯𑌦𑍍𑌵𑌾𑌜𑌯𑍇𑌮 𑌯𑌦𑌿𑌵𑌾𑌨𑍋𑌜𑌯𑍇𑌯𑍁𑌃 ।
𑌯𑌾𑌨𑍇𑌵𑌹𑌤𑍍𑌵𑌾 𑌨𑌜𑌿𑌜𑍀𑌵𑌿𑌷𑌾𑌮𑌃
𑌤𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍇𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌃 ॥

6. ந-ச-ஏதத்-வித்மஃ-கதரத்-நஃ-கரீயஃ-
யத்வா-ஜயெம-யதி-வா-நஃ-ஜயெயுஃ ।
யாந்-ஏவ-ஹத்வா-ந-ஜிஜீவிஷாமஃ-
தெ-அவஸ்திதாஃ-ப்ரமுகெ-தார்தராஷ்ட்ராஃ ॥

(𑌭𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌯𑍁𑌦𑍍𑌧𑌯𑍋𑌃)	(பிச்சை எடுப்பது யுத்தம்செய்வது இவைகளில்)
𑌕𑌤𑌰𑌤𑍍	எது
𑌨𑌃	எங்களுக்கு
𑌗𑌰𑍀𑌯𑌃	அதிக சிரேஷ்டமோ
𑌏𑌤𑌤𑍍	இதை
(𑌵𑌯𑌂)	(நாம்)
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌮𑌃	அறியோம்
(𑌵𑌯𑌂)	(நாம்)
(𑌤𑌾𑌨𑍍)	(அவர்களை)
𑌜𑌯𑍇𑌮 𑌯𑌦𑍍𑌵𑌾	ஜயிப்போமோ
𑌯𑌦𑌿𑌵𑌾	அல்லது
(𑌤𑍇)	(அவர்கள்)
𑌨𑌃	எங்களை
𑌜𑌯𑍇𑌯𑍁𑌃	ஜயிப்பார்களோ
𑌏𑌤𑌤𑍍	இதையும்
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌮𑌃	அறியோம்
(𑌵𑌯𑌂)	(நாம்)
𑌯𑌾𑌨𑍍	எவர்களை
𑌹𑌤𑍍𑌵𑌾	கொன்று
𑌨 𑌜𑌿𑌜𑍀𑌵𑌿𑌷𑌾𑌮𑌃	உயிர்வாழ விரும்பமாட்டோமோ
𑌤𑍇	அந்த
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾 𑌏𑌵	திருதராஷ்ட்ரனைச்சேர்ந்தவர்களே
𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍇	எதிரில்
𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃	நிற்கிறார்கள்.

(பிச்சையெடுத்துப் பிழைப்பது, ஸ்வதர்மமென்று யுத்தஞ்செய்து ஜயித்து ராஜ்ய போகங்களை அனுபவிப்பது என்கிற இவ்விரண்டிற்குள்) எது எங்களுக்கு அதிக சிரேஷ்டமோ இதை நாம் அறியோம். (மேலும்) நாம் அவர்களை ஜயிப்போமோ அல்லது அவர்கள் எங்களை ஜயிப்பார்களோ அதுவும் நமக்குத் தெரியாது. நாம் எவர்களைக்கொன்று பிறகு உயிர்வாழ விரும்பமாட்டோமோ அந்த திருதராஷ்டிரனைச் சேர்ந்தவர்களே (இந்த யுத்தகளத்தில்) நமக்கு எதிரில் நிற்கிறார்கள்.

இந்த சுலோகத்திற்கு ஸ்ரீதரர் முதலான சில வியாக்கியாதாக்கள் அடியில் கண்டபடி வேறுவிதமாகவும் அர்த்தம் செய்திருக்கிறார்கள் :

“(வயம்)=(நாங்கள்); தாந் = அவர்களை; ஜயேம யதி = ஜயிப்போமோ; யதிவா = அல்லது; தே = அவர்கள்; ந: = எங்களை; ஜயேயு: = ஜயிப்பார்களோ (ஏதயோ: த்வயோ:) = (இந்த இரண்டுகளுக்குள்); கதரத் = எது; ந: = எங்களுக்கு; கரீய: = அதிகமாக; (பவிஷ்யதி) = (வருமோ); ஏதத் = இதை; ந வித்ம: = அறியோம்”.

(ஸ்வ) முன் 5-வது சுலோகத்தில் அர்ஜுனன் சொன்னது என்னவென்றால் “யுத்தம் ஸ்வதர்மமாயிருந்தாலும் அதில் குருக்களைக் கொன்று ராஜ்ய போகங்களை அடைவதைவிட க்ஷத்திரிய தர்மமல்லாத பிக்ஷையெடுத்து ஜீவிப்பது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது” என்பது. ஆனால் இந்த சுலோகத்தில் சொல்வது மேற்சொன்னபடி தனக்குத் தோன்றினபோதிலும் அவ்விரண்டில் எது தங்களுக்கு சிரேஷ்டமாக முடியுமென்பது நிச்சயிக்கக்கூடவில்லை; ஆனால் யுத்தஞ்செய்து போகங்களை அடைவதே சிரேஷ்டமென்று ஒருக்கால் வைத்துக்கொண்டபோதிலும் அந்த போகங்களை நாம் அடைகிறோமென்பதும் உறுதியல்ல; ஏனென்றால் முடிவில் ஜயம் அவர்களுக்கா, நமக்கா என்பது சந்தேகமாயிருப்பதால் என்றும், அல்லது ஜயம் நமக்கே உண்டாவதாக வைத்துக்கொண்டபோதிலும், அதனால் பிரயோஜனமுண்டாவதில்லை, ஏனென்றால் எவர்களன்றியில் நாம் உயிர்வாழ விரும்பமாட்டோமோ அவர்களைக் கொன்றால்தான் அந்த ஜயம் உண்டாகிறதாக விருக்கிறதென்பதும்தான். (6)

எ. கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே
சிஷ்யஸ்தேऽஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥

7\. (1) கார்பண்யதோஷோ பஹதஸ்வபாவ:-
ப்ருச்சாமி-த்வாம்-தர்மஸம்மூடசேதா:(2) |
யத்-ச்ரேய:-ஸ்யாத்-நிச்சிதம் (3)-ப்ரூஹி-தத்-மே-
சிஷ்ய:-தே-அஹம்-சாதி-மாம்-த்வாம்-ப்ரபந்நம்.

கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ: (அஹம்)	க்ருபணத்வம் என்கிற தோஷத்தினுல் கெட்டுப்போன சுபாவத்தையுடைய (நான்)
தர்மஸம்மூடசேதா:	தர்மவிஷயத்தில் சந்தேகமுள்ள மனதை யுடையவனுய்
த்வாம்	உம்மை
ப்ருச்சாமி	கேட்கிறேன்
யத்	எதானது
நிச்சிதம்	நிச்சிதமான (உறுதியான)
ச்ரேய:	நன்மையாக
ஸ்யாத்	ஆகுமோ
தத்	அதை
மே	எனக்கு
ப்ரூஹி	சொல்லும்
தே	உமக்கு
அஹம்	நான்
சிஷ்ய:	சிஷ்யன்
த்வாம்	உம்மை
ப்ரபந்நம்	சரணமாகவடைந்த
மாம்	என்னை
சாதி	அநுக்கிரஹம்பண்ணும்.

க்ருபணத்வம் (ஆத்மஞானமின்மை) என்கிற தோஷத்தினுல் கெட்டுப்போன சுவாபத்தையுடைய நான் தர்மவிஷயத்தில் மனே ஸந்தேகத்தை யுடையவனுய் உம்மை கேட்கிறேன். எதானது (ஸ்ருதி ஸ்ம்ருதிப் பிரமாணப்படி) நிச்சிதமான சிரேயஸோ அதை எனக்குச் சொல்லும். நான் உமக்கு சிஷ்யன் (அல்லவா?) உம்மை சரணுகதியடைந்த என்னை சிக்ஷித்து அநுக்கிரஹம் பண்ணும்.

(1) **கார்பண்யம்**-அர்ஜுனன் தன் குரு முதலானவர்களைக் கொன்று எப்படி ஜீவிப்பேன் என்பதாக அவன் படும் வியஸனம்தான் கார்பண்யம் என்பதாக, **ஸ்ரீதரர்**, முதலான சில வியாக்கியாதாக்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள். ஆனால், ஆநந்தகிரி, முதலானவர்கள். "யோவா ஏதத³க்ஷரம் கா³ர்க்³யவிதி³த்வா அஸ்மால்லோகாத் ப்ரைதி ஸ க்ருபண இதி ச்ருதே:" என்கிற வாக்கியத்தை அனுஸரித்து எவனொருவன் ஆத்மஸ்வரூபத்தை அறியாமல் போகிறானோ அவன் க்ருபணனென்றும், அந்த ஆத்மஸ்வரூபத்தை அறியாததன்மைதான் கார்பண்யம் என்றும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

சாதாரணமாய் லோகத்தில் எவனொருவன் தன் பணத்தை ஸ்வல்பம் கூட சிலவுசெய்ய சஹிக்கமாட்டானோ அவன் க்ருபணன் என்பது பிரஸித்தி. அவ்விதமே எவன் தன்னுடைய அக்ஞான நாசத்தை ஸ்வல்பமும் சஹிக்கிறதில்லையோ அவனும் க்ருபணன். அதாவது ஆத்மஸ்வரூபத்தை மறைக்கிற அக்ஞானத்தை போக்கிக்கொண்டு ஆத்மாவை அறியாதவன் க்ருபணன் என்று சொல்லப்பட்டது.

தோ³ஷம் - என்பதற்கு ஸ்வகுலக்ஷயக்ருதம் என்பதாக அர்த்தம் செய்து கார்பண்யத்தினாலும் தோஷத்தினாலும் உபஹதமான சேதஸ் என்று **ஸ்ரீதரர்** வியாக்கியானம் செய்திருக்கிறார்.

ஸ்வபா⁴வ:-க்ஷத்திரியனுடைய சௌர்யாதி நிலைதான் ஸ்வபாவமென்பதாக **ஸ்ரீதரரும்**, **ஆனந்தகிரி** முதலானவர்கள் மேற்படி பதத்திற்கு அந்தக்கரணமென்றும், அர்த்தம் செய்கிறார்கள். **சங்கராநந்தர்** இந்த பதத்திற்கு "ஆத்மஸ்வரூபமென்று அர்த்தம் செய்துகொண்டு "உபஹதஸ்வபா⁴வ:" மறைக்கப்பட்ட ஆத்மஸ்வரூபத்தை உடையவன் என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்.

(2) **த⁴ர்மம்**- என்றால் அவித்தையினால் ஸம்ஸார சமுத்திரத்தில் தள்ளப்பட்டிருக்கிற புருஷன் எதனால் கரையேற்றப்படுகிறானோ, அதாவது ஸ்வரூபப் பிரகாசத்தையும் ஞானத்தையும் அடைகிறானோ அது தர்மம் என்று **சங்கராநந்தர்** வியாக்கியானம் செய்திருக்கிறார்.

ஆனந்தகிரி "யத்³தா⁴ரயதீதி பரம்ப்³ரஹ்ம" அதாவது எதனால் சகலமும் தரிக்கப்படுகிறதோ, அந்த பரப்ருஹ்மம் என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

சிலர் தர்மமென்றால் தான் செய்யவேண்டிய கடமை என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

(3) நிஸ்சிதம்— இந்த பதத்தையும் ஸ்ரேயஸ் என்கிற பதத்தையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு, **சங்கரானந்தர்**, சுருதி ஸ்மிருதிகளாலும் மஹர்ஷிகளாலும் நிச்சயிக்கப்பட்டதாயும், சிரேயஸ் ஸாதனமாயும், எது இருக்கிறதோ அது என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

ஆனந்தகிரி முதலானவர்கள் “நிச்சிதமான சிரேயஸ்” அதாவது ஐகாந்திகமாயும், ஆத்யந்திகமாயும், அநபேக்ஷிகமாயும் உள்ள சிரேயஸ் எதோ அது என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

ஐகாந்திகம் என்றால் எந்த ஸாதனத்தினால் ஒன்றை அடையக்கூடுமோ அந்த ஸாதனம் ஏற்பட்டவுடன் நிச்சயமாய் எது உண்டாகிறதோ அது.

ஆத்யந்திகம்—என்றால் உண்டாய் மறுபடி அழியாமலிருத்தல்.

அநாபேக்ஷிகம்—என்றால் இதர ஸாதன அபேக்ஷையில்லாதது. (7)

அ· 𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌮𑌾𑌪𑌨𑍁𑌦𑍍𑌯𑌾𑌦𑍍
𑌯𑌚𑍍𑌛𑍋𑌕𑌮𑍁𑌚𑍍𑌛𑍋𑌷𑌣𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑍍 ।
𑌅𑌵𑌾𑌪𑍍𑌯 𑌭𑍂𑌮𑌾𑌵𑌸𑌪𑌤𑍍𑌨𑌮𑍃𑌦𑍍𑌧𑌂
𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌚𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

த. ந-ஹி-ப்ரபஶ்யாமி-மம-அபநுத்யாத்
யத்-ஶோகம்-உச்சோஷணம்-இந்த்ரியாணாம் ।
அவாப்ய-பூமௌ-அஸபத்நம்-ருத்தம்-
ராஜ்யம்-ஸுராணாம்-அபி-ச-ஆதிபத்யம்.

𑌭𑍂𑌮𑍌	இந்த பூலோகத்தில்
𑌅𑌸𑌪𑌤𑍍𑌨𑌂	சத்ரு வற்ற அல்லது எதிரியற்ற
𑌋𑌦𑍍𑌧𑌂	விருத்தியடைந்திருக்கிற
𑌰𑌾𑌜𑍍𑌯𑌂	இராஜ்யத்தையும்
𑌚	அல்லது
𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂	(பரலோகத்தில்) தேவர்களுக்கு
𑌆𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌂	அதிபதியாய் யிருப்பதையும்
𑌅𑌵𑌾𑌪𑍍𑌯	அடைந்து
𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿	இருந்தபோதிலும்
𑌮𑌮	என்னுடைய
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂	இந்திரியங்களுக்கு
𑌉𑌚𑍍𑌛𑍋𑌷𑌣𑌂	வறக்ஷியை உண்டாக்குகிற

ஶோகம்	வ்யஸனத்தை
யத்	எதானது
அபநுத்யாத்	போக்கடிக்குமோ
தத்	அதை
ந ஹி ப்ரபஶ்யாமி	நான் காணவேயில்லை.

இந்த பூலோகத்தில் பகைவரற்ற ஸம்ருத்தியான (செல்வத்தில் நிறைந்த) இராஜ்யாதிபத்தியத்தையும் (பரலோகத்தில்) தேவேந்திர பதவியையுமடைந்திருந்தபோதிலும் இந்திரியங்களுக்கு வறக்ஷியை யுண்டாக்குகிற என்னுடைய வ்யஸனத்தை எதானது போக்கடிக்குமோ அது இன்னதென்று எனக்குத் தெரியவேயில்லை.

(ஸ்வ) முதலாவது அத்தியாயம் முதல் இந்த இரண்டாவது அத்தியாயம் 8 வது சுலோகமுள்பட சொல்லப்பட்ட சுலோகங்களின் தத்வார்த்தம் இன்னதென்று மதுசூதனஸரஸ்வதி வ்யாக்கியானத்தில் சொல்லியிருப்பதை அடியில் சுருக்கமாய் எழுதப்பட்டிருக்கிறது. "முன்சொன்ன கிரந்தத்தினுல் ஸம்ஸார தோஷத்தை நிரூபித்து ஞானுதிகாரி விசேஷணங்கள் சொல்லப்பட்டன. அதில் "ந ச ஶ்ரேயோऽநுபஶ்யாமி" என்கிற சுலோகத்தினுல் நித்தியா நித்திய வஸ்துவிவேகமும்; "ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" என்கிற சுலோகத்தினுல் இஹலோகபலவிராகமும்; "அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ:" என்கிற சுலோகத்தினுல் பரலோகபலவிராகமும்; "நரகே நியதம் வாஸ:" என்கிற சுலோகத்தினுல் ஆத்மா ஸ்தூலசரீரத்தைக் காட்டிலும் வேறு என்றும்; "கிம் நோ ராஜ்யேந" என்கிற சுலோகத்தினுல் ஶமமும்; "கிம் போகை:" என்கிற சுலோகத்தினுல் உமமும்; "யத்யப்யேதே ந பஶ்யந்தி" என்கிற சுலோகத்தினுல் லோப மில்லாமையும்; "தந்மே க்ஷேமதரம் பவேத்" என்கிற சுலோகத்தினுல் திதிக்ஷையும் காண்பிவிக்கப்பட்டன. இந்த இரண்டாவது அத்தியாயத்தில் "ஶ்ரேயோ போக்தும் பைக்ஷ்யமபி" என்கிற சுலோகத்தில் ஸந்யாஸமானது பிரதிபாதிக்கப்பட்டது. "கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ:...ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்;" என்கிற சுலோகத்தினுல் ஸம்ஸாரதோஷங்களை நன்ருயறிந்து விசேஷ வைராக்யத்தை யடைந்தவனுய் 'ஆத்மஞானத்தைத் தேடுகிறவன்' விதிப்படி குருசரணுகதி யடையவேண்டியது அவசியமென்பது காட்டப்பட்டது. "ந ஹி ப்ரபஶ்யாமி" என்கிற சுலோகத்தினுல் இஹாமுத்ரபலபோகவிராகம் ஞானுதிகாரிக்கு அவசியமானதென்றும் காட்டப்பட்டது.

௯. ஏவமுக்த்வா ஹ்ருஷீகேசம் குடாகேச: பரந்தப: |
நயோத்ஸ்ய இதி கோவிந்த முக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ ||

9. ஏவம்-உக்த்வா ஹ்ருஷீகேசம்-குடாகேச:-பரந்தப:
ந-யோத்ஸ்யே-இதி-கோவிந்தம் (1)-உக்த்வா-தூஷ்ணீம்-பபூவ-ஹ. (2)

ஸஞ்ஜய உவாச	ஸஞ்சயன் சொன்னது
பரந்தப:	சத்ருக்களைத் தபிப்பிக்கிற
குடாகேச:	குடாகேசனான அர்ஜுனன்
ஹ்ருஷீகேசம்	ஹ்ருஷீகேசனான கிருஷ்ணஸ்வாமியைப் பார்த்து
ஏவம்	இந்த (முன்சொன்ன) பிரகாரம்
உக்த்வா	சொல்லி
(பூநரபி)	மறுபடியும்
(கோவிந்தம் ப்ரதி)	கோவிந்தனை நோக்கி
நயோத்ஸ்ய இதி	யுத்தஞ் செய்யமாட்டேனென்று
உக்த்வா	சொல்லிவிட்டு
தூஷ்ணீம்	மௌனமாய்
பபூவஹ	இருந்தான்.

ஸஞ்ஜயன் (திருதராஷ்ட்ர மகாராஜாவைப் பார்த்துச்) சொன்னது.

சத்துருக்களைத் தபிப்பிக்கிற தமஸை ஜயித்தவனான அர்ஜுனன் கிருஷ்ணஸ்வாமியைப் பார்த்து முன்சொன்னபிரகாரம் சொல்லி மறுபடியும் கோவிந்தனை நோக்கி 'யுத்தஞ்செய்யமாட்டேன்' என்று சொல்லிவிட்டு மௌனமா யிருந்தான்.

---

(1) கோவிந்தம் - கோபி:, வேதாந்தவாக்யைரேவ, விந்த்யதே, லப்யத, இதி கோவிந்த:—வேதாந்தவாக்கியங்களினாலேயே அடையத் தகுந்தவர்.

(2) ஹ-இதை சில வியாக்கியாதாக்கள் வாக்கியாலங்காரமாக எடுத்துக் கொண்டு அர்த்தம் செய்யாமல் விட்டிருக்கிறார்கள். சிலர் இந்த பதம் ஆச்சரியத்தைக் குறிப்பதாக அர்த்தம் செய்கிறார்கள்.

இந்த - ஹ, என்பதானது அதிக தைரியமும் பலமுமுள்ள அர்ஜுனனுக்குக்கூட அதைரியமுண்டானதைப்பற்றி ஸஞ்சயனுச்சரியப்பட்டானென்பதைக் குறிப்பதாக இராகவேந்திரஸ்வாமிகள் அர்த்தம் செய்திருக்கிறார்.

ஹ்ருஷீகேஶ பதத்திற்கு அர்த்தம் 25 வது பக்கமும், குடாகேஶ பதத்திற்கு 34 வது பக்கமும் பார்க்க.

(ஸ்வ) பகவான் இவ்வளவு ஹிதோபதேசம் செய்தும் அர்ஜுனன் சற்று விவேகத்தோடு கூடினவன்போல் முதலில் பேசிவிட்டு மறுபடி யுத்தம் செய்யமாட்டேனென்று சொல்வது என்ன ஆச்சரியம்! எப்படிப்பட்ட விவேகியையும் தன்வசப்படுத்தும்படியான மோகத்தின் சக்தி என்ன சக்தி என்பது ஸஞ்ஜயன் எண்ணம். இந்த மோகக்கடலிலிருந்து அர்ஜுனனை பகவான் வேதாந்த வாக்கியங்களை உபதேசித்துத்தான் கரையேற்றி தன்னை அடையும்படி செய்யப்போகிறார், வேறுவழியில்லை என்பதை சூசிப்பிக்கிற தற்காக கோவிந்தபதம் பிரயோகிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். (9)

---

௧௦. தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ॥

10. தம்-உவாச-ஹ்ருஷீகேஶ:-(1) ப்ரஹஸந்-(2) இவ-பாரத,
(3) ஸேநயோ:-உபயோ:-மத்யே-விஷீதந்தம்-இதம்-வச:.

ஹ்ருஷீகேஶ:	ஹ்ருஷீகேசரான கிருஷ்ணஸ்வாமியானவர்
உபயோ: ஸேநயோ:	இரண்டு ஸேனைகளினுடைய
மத்யே	மத்தியில்
விஷீதந்தம்	துக்கப்பட்டுக்கொண்டிருக்கிற
தம்	அவனை (அர்ஜுனனை நோக்கி)
ப்ரஹஸந்நிவ	சிரிப்பவர்போல்
ஹே பாரத	ஓ! பரதவம்சத்திலுதித்த அர்ஜுனா! என்று கூப்பிட்டு
இதம் வச:	இந்த (பின் வருகிற) வாக்கியத்தை
உவாச	சொன்னார்.

ஹ்ருஷீகேசரான கிருஷ்ணஸ்வாமியானவர் இரண்டு ஸேனைகளினுடைய மத்தியில் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிற அவனை (அர்ஜுனனை நோக்கி) சிரிக்கிறவர்போல், ஓ! பரதவம்சத்திலுதித்த அர்ஜுனா! என்று கூப்பிட்டு இந்த (பின் வருகிற) வாக்கியத்தைச் சொன்னார்.

---

(1) ஹ்ருஷீகேஶ:- என்கிற இந்த பதத்திற்கு, இந்திரியங்களைச்

சுவாதீனத்தில் வைத்து அவைகளை விஷயங்களில் ஏவுகிற பரமாத்மா என்கிற தாத்பர்யத்தை, பகவான் அர்ஜுனனுக்கு ரதசாரதியாக வீற்றிருப்பதானது சூசிப்பிக்கிறது. சகலப் பிராணிகளையும் பிரேரணை செய்கிற பகவானால் எதுதான் முடியாது என்பது கருத்து.

(2) ப்ரஹஸந்நிவ- பரிஹாஸத்திற்கு பலன் விரோதம் என்பது லோகப்பிரஸித்தம். இந்த பரிஹாஸத்திற்கோ ஞான உத்பத்தி பலன், என்கிற இந்த பேதத்தை "இவ" சப்தம் காட்டுகிறது. சில வியாக்கியாதாக்கள் இந்த "இவ" சப்தத்தை வாக்கிய அலங்காரமாக வைத்து ப்ரஹஸந்நிவ என்பதற்கு பிரஸந்நமுகராய் யிருந்துகொண்டு என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(3) ஸேநயோருபயோர்மத்யே—என்பதினால், அர்ஜுனன் இவ்வித அநுசிதமான காலத்தில் சோகத்தை அடைந்து யுத்தம் செய்யமாட்டேன் என்று சொன்னபோதிலும், அந்த யுத்தகளத்தில் சஸ்திரப்பிரயோக ஆரம்ப காலமாகிய (அதாவது தத்வோபதேசத்திற்கு சாதாரணமாய் யோக்கியமல்லாத காலமாகிய) அந்த சமயத்திலேயே பகவான் பின்வருகிற ஆத்ம தத்துவத்தை உபதேசித்தார் என்று சொல்வது, பகவானுடைய அனுக்கிரஹத்திற்கு எவன் பாத்திரனாகிறானோ அவனுக்கு அவர் ஸன்னிதிமாத்திரத்தில் ஞானப்பிராப்தியை அவர் உண்டுபண்ணும்படியான கருணாநிதி என்பதைக் காட்டுகிறது.

ஸ்ரீபகவானுவாச.

கக. அசோச்யாநந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ।
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுசோசந்தி பண்டிதா: ॥

11. அசோச்யாந்-அந்வசோச:-1-த்வம்-ப்ரஜ்ஞாவாதாந் 2-ச-பாஷஸே கதாஸூந்(3)-அகதாஸூந் (4)-ச-ந-அநுசோசந்தி பண்டிதா:. (5)

ஸ்ரீபகவானுவாச	பகவானான கிருஷ்ணசுவாமியானவர் (அர்ஜுனனை நோக்கி) சொன்னது
த்வம்	நீ
அசோச்யாந்	துக்கப்படத்தகாதவர்களைக் குறித்து
அந்வசோச:	துக்கப்படுகிறாய்
ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச	புத்திமான்களுடைய வார்த்தைகளையும்
பாஷஸே	பேசுகிறாய்

பண்டிதா:	ஞானிகள்
கதாஸூந்	உயிர்போனவர்களைப்பற்றியும்
அகதாஸூம்ச	உயிருடனிருக்கிறவர்களைக் குறித்தும்
நாநுசோசந்தி	துக்கிக்கமாட்டார்கள்.

பகவானுன ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமியானவர் அர்ஜுனனை நோக்கிச் சொன்னது. ஓ! அர்ஜுன! நீ துக்கப்படத்தகாதவர்களைக் குறித்து துக்கப்படுகிறுய். புத்திமான்களுடைய வார்த்தைகளையுஞ் சொல்லுகிறுய். ஆத்மஞானிகள் இறந்தவர்களைக் குறித்தும் உயிருடனிருக்கிறவர்களைக் குறித்தும் துக்கிக்கமாட்டார்கள்.

---

(1) அந்வசோச:-இந்த பதம் இறந்த காலத்தைக் காட்டுகிறது. அதாவது "துக்கப்பட்டாய்" என்று அர்த்தம். ஆனுல் முன் 10 வது ச்லோகத்தில் "விஷீதந்தம்" என்று சொல்லியிருப்பதைக் கொண்டு, அர்ஜுனன் இந்த உபதேசகாலத்திலும் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறுன் என்பதாக வாகிறபடியால், இதை, ஆர்ஷப்பிரயோகமாக வைத்துக் கொண்டு, "துக்கப்படுகிறுய்" என்கிறதாக நிகழ்கால அர்த்தம், வியாக்கியாதாக்கள் செய்திருக்கிறுர்கள்.

(2) ப்ரஜ்ஞாவாதாந்-உன் புத்திக்குத் தோன்றின வார்த்தைகளை என்று மத்துவாசார், ப்ரஜ்ஞ—ஞானிகள், அவாச்யாந்—சொல்லத்தகாத வார்த்தைகளை என்று இராகவேந்திரர், தேகமே ஆத்மாவென்கிற புத்தியையுடையவன் பேசும் வார்த்தைகளை என்று ராமாநுஜர் அர்த்தம் செய்திருக்கிறுர்கள்.

(3) கதாஸூந் - "தேகங்களைக் குறித்து" என்று ராமாநுஜர் அர்த்தஞ் செய்திருக்கிறுர்.

(4) அகதாஸூந் - ஆத்மாக்களைக் குறித்தும் என்று ராமாநுஜர் அர்த்தஞ் செய்கிறுர். வேங்கடநாதர், இந்தப் பதத்திற்கு "ஆஸந்நமரணுள்" அதாவது சமீபத்தில் மரணத்தை அடையப்போகிறவர்கள், என்று அர்த்தஞ் செய்கிறுர்.

உயிருடனிருப்பவர்களைக் குறித்து ஸாதாரணமாய் லோகத்தில் துக்கப்படுவது எப்படி சுவாபாவிகமல்லவோ அப்படியே இறந்துபோனவர்களைக் குறித்து துக்கப்படுவது பண்டிதர்களுக்கு சுவாபாவிகமல்ல, துக்கப்படமாட்டார்கள் என்று சிலர் தாத்பர்யம் செய்திருக்கிறுர்கள்.

(5). பண்டிதா:=எவர்க்கு ஆத்மவிஷயமான ஞானம் உள்ளதோ

அவரே பண்டிதராவர். "வாஞ்ஜ்க்ஹ்யம் நிர்விந்த்யாபால்யேந திஷ்டாஸேத்" என்கிற சுருதிவாக்கியத்தை, ப்ருஹதாரண்யகோபநிஷத் அத். 5. ப்ராம்மணம்-5. மந்திரம் 1-ல் பார்க்க.

(சங்கரபாஷ்யம்). இந்த மாதிரி தான் செய்யவேண்டிய தர்மவிஷயத்தில் மயங்கின மனதை யுடையவனுய், மஹத்தான சோகக்கடலில் மூழ்கியிருக்கிற அர்ஜுனனை, ஆத்ம ஞானத்தினு லன்றி வேறுவிதத்தால் கரையேற்றுவதைக் காணுத பகவான் வாசுதேவர், அர்ஜுனனை நிமித்தமாக கொண்டு, சகல ப்ராணிகளும் கடைத்தேறும் பொருட்டு ஆத்மஞானத்தை இது முதல் உபதேசிக்கிருர்.

பீஷ்மத்ரோணுதியர் யாவராலும் துக்கப்படத்தகாதவர் ; ஏனென்றல் நல்லொழுக்கமுடையவர்: பாரமார்த்திகமாகவும் நித்தியரானவர்: இவர்கள் சாகப்போகிருர்களே அதற்கு நானன்ருே காரணம் என்று துக்கப்படுவதும், ஞானிகளுடைய வார்த்தைகளைப் பேசுவதும், உன்மத்தன்போல் மாறுபாட்டைக் காட்டுகிறது. ஏனென்ருல் பண்டிதர், அதாவது எவர்க்கு ஆத்ம விஷயமான ஞானம் உள்ளதோ அவர், இறந்தவரையும் உயிரோடிருப்பவரையும் குறித்து துக்கப்படமாட்டார். (இரண்டும் அவர்களுக்கு ஸமம் என்பது கருத்து). ஆகையால் நீ மூடனுகிருய் என்றபடி.

(ஸ்வ) இந்த ஸ்லோகம் பீஜமந்திரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது எப்படி மரமானது விரையில் அடங்கியிருக்கின்றதோ அப்படியே கீதாசாஸ்திரம் முழுவதும் இந்த ஸ்லோகத்தில் அடங்கியிருக்கிறதென்க.

அர்ஜுனன் மஹத்தான சோகமோஹக்கடலில் மூழ்கியிருப்பதென்பதும், அதிலிருந்து கரையேற ஆத்மஞானத்தைத் தவிர வேறுவழி இல்லையென்பதும், எப்படி என்கிற விஷயத்தை தெளிவாகவும் விஸ்தாரமாகவும் தெரிந்துகொள்வதற்கு, இந்த பகவத்கீதை 18 அத்தியாயங்களையும், பாஷ்ய வியாக்கியானங்களுடன் நன்ருய் ஆராய்ச்சிசெய்துதான் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமானபோதிலும், அந்த விஷயத்தை சுருக்கமாக இங்கு எடுத்துக் காட்டுவது சற்றே உபயோகமாக விருக்கலாம்.

சோகமோஹமென்பது "நான் இவர்களைச் சேர்ந்தவன் இவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள்" என்கிற இவ்விதமான எண்ணத்தினுல் உண்டாகும் அபிமானமும், அவ்விதமாய் அபிமானம் வைக்கப்பட்ட அவைகளை இழந்துவிடுவதால் உண்டாகும் துக்கமும், "நான் கர்த்தா, நான் போக்தா" என்கிற இவைபோன்ற மற்றும் அனேக விதங்களால் அடையும் ப்ரமையும் தான். இதை நிவர்த்திசெய்யும்படியான ஆத்மஞான மென்பது "தத்வமஸி"

மஹாவாக்கியத்தின் லக்ஷியார்த்தமாகிய ஜீவேச்வர ஐக்கிய ஸாக்ஷாத்காரம் தான்.

ஈசுவரன் யார் என்றால் இந்த ஜகத் முழுவதையும் வியாபித்து ஸ்தூல ஸூக்ஷ்ம பிரபஞ்சத்தையெல்லாம் தன்னுடைய தேகமாக தரித்திருக்கிற பரிபூர்ணமான ப்ரஹ்மம். இந்த ஈசுவரனுக்கு ஸ்தூல ஸூக்ஷ்ம தேகங்கள் எப்படியோ அப்படியே ஜீவர்களாகிய நமக்கும் இந்த ஸ்தூல தேகமும் ஸூக்ஷ்ம தேகமும் உள்ளது. ஸூக்ஷ்ம தேகமென்பது ஞானேந்திரியம், கர்மேந்திரியம், பஞ்சபிராணன், மனசு, புத்தி இவைகளெல்லாம் சேர்ந்தது. இப்படிப்பட்ட தேகங்களோடுகூடிய ஜீவர்களுக்கும் ஈசுவரனுக்குமுள்ள சம்பந்தம் என்னவென்றால், ஈசுவரனுடைய இந்த பிரபஞ்சமாகிய தேகத்தில் ஜீவகோடிகளெல்லாம் அவரவர்களுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம தேகங்களுடன் அணுக்கள்போல் அமைந்திருக்கிறார்கள். இதற்கு உபமானம், ஸ்தூலமாகிய நம்முடைய தேகமே. இதில் எப்படி அனேக கோடி அணுக்கள் தங்கியிருக்கின்றனவோ அப்படியேதான், இந்த அணுக்களுக்கு ஷ டி தேகத்தைத் தவிர அன்னியமான இருப்பாவது, நன்மை தீமை யாவது, எப்படி இல்லையோ அப்படியே இந்த ஜீவர்களாகிய நமக்கும் ஈசுவரனன்றியில் தனிமையான இருப்பு என்பதும், நன்மை தீமை என்பதும், கிடையாது. அவனுடைய பிராணன் தான் இந்த ஜீவர்களுக்கு பிராணன். அவனுடைய தேகமாகிய இந்த லோகத்தின் க்ஷேமமும் நன்மையும் தின்மையும் தான் ஜீவர்களாகிய நம்முடைய க்ஷேமமும் நன்மையும் தின்மையுமாயிருக்கின்றன. ஈசுவரன் சிருஷ்டிகாலத்தில் இந்த ஜனங்களைப் படைத்து அவர்கள் கடைத்தேரும்பொருட்டு வேதசாஸ்திராதிகளை வெளிப்படுத்தியபோது தர்மசாஸ்திரங்கள் என்று சொல்லப்படுகிற வருணாஸ்ரமதர்மங்கள் இன்னதென்று ஏற்படுத்தியிருக்கிறார். அதில் இந்த லோகத்தின் பொதுநன்மையை உண்டாக்குவதுதான் சுவதர்மம் என்பது. அந்தப்படி அவனவனுடைய சுவதர்மத்தை அனுஷ்டிப்பதுதான் பொதுவாக லோகத்திற்கும், அதனால் ஜீவர்களாகிய நமக்கும், நன்மையை உண்டாக்கும். அதைவிட்டு லோகத்தில் மற்றவர்கள் க்ஷேமம் வேறு தன்னுடைய க்ஷேமம் வேறு, என்று தனித்படுத்திக்கொண்டு பொது நன்மையைக் கோராமல் தன்னுடைய நன்மையையே கோருகிறவன், துன்பத்தையும் பந்தத்தையும் அடைகிறான். ஸ்வ பிரயோஜனம் என்பது லோகப் பொதுப் பிரயோஜனத்தில் ஆழ்ந்துவிட வேண்டியது. இப்படிப்பட்ட எண்ணத்தோடு பலாபேக்ஷையை விட்டு லோக நன்மைக்காக அவனவனுடைய ஸ்வதர்மத்தை ஈசுவரார்ப்பணமாகச் செய்துவரவேண்டியதுதான் ஜீவர்கள் கடமை. அப்படிச் செய்துவந்தால் சித்த சுத்தியும், சித்த சுத்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமும் அடைய வழியே ஒழிய வேறு வழியில்லை. இந்த விஷயம்

அர்ஜுனனுக்கு நன்றாய் விளங்கினபிறகுதான் "நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந்மயாச்யுத | ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ" || "நான் உம்முடைய வார்த்தையை நிறைவேற்று கிறேன்" என்று பகவானிடம் சொல்லி மறுபடி அவன் யுத்தம் செய்ய ஆரம்பித்தான்.

இந்த சுலோகத்திலடங்கிய தாத்பர்யத்தை விரித் துரைக்கிற வராக புராணம் இரண்டாவது பாகம் அத்தியாயம் 187 ல் உள்ள அடியிற்கண்ட சுலோகங்களைப் பார்க்க.

அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே |
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: || ௫௨ ||
ம்ருதம் வா யதி வா நஷ்டம் யோ(அ)தீதமநுஶோசதி |
அதித்ராஸாத்ஸுஹ்ருஷ்யந்தி ஸசாபி ந நிவர்த்ததே || ௫௩ ||
அஜரஶ்ச ந்தவஶ்ரீ ச த்ரோகேஷு ஸமாஸமே |
தேவதாஸுரகந்தர்வா நராஶ்ச ம்ருகபக்ஷிண: || ௫௪ ||
ஸர்வே லோகா: ப்ரயாந்தி ஸர்வ: காலேந வீக்ஷதே |
ஜாதஸ்ய ஸர்வஸ்ய ஹி தஸ்ய காலோ ம்ருத்யுர்வஶீக்ருத: ||
ஸர்வம் சைவ மஹத்வம் ச த்ருதாஸு விஹிதேந ச || ௫௫ ||
ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச |
ஶோக: ஶல்யவிஶேஷேண ப்ராயஶ்சித்தேந வர்ஜ்யவா || ௭௫ ||
த்யஜ ஶோகம் மஹாபாஹோ ஶோகஸ்ஸர்வவிநாஶந: |
ஶோகோ ஹந்தி ஶரீராணி வஹ்நிஶ்ஶோகேந நஶ்யதி || ௮௩ ||
ப்ரஜ்ஞாப்ரத்யுயஶ்ச ஶ்ரீ: கீர்த்தி: புஷ்டி: ஸ்ம்ருதிர்தய: |
த்யஜந்தி ஸர்வபூதாநி ஶோகேநாவஹதம் நரம் || ௮௪ ||

நீ துக்கப்படக்கூடாத விஷயத்தைக் குறித்துத் துக்கப்படுகிறாய். விவேகி யாயிருந்தும் அறிந்துகொள்ளவில்லை. இறந்தவர்களைக் குறித்தும், உயிருட னிருக்கிறவர்களைக் குறித்தும் ஞானிகள் துக்கிக்கமாட்டார்கள். (ஏனென் றால் ஞானிகளுக்கு ஸ்நேகிதன், விரோதி என்பவர்களில்லை. ஸ்நேகம்தான் இறந்தவனைக் குறித்து துக்கிக்கவும், விரோதம்தான் இருக்கிறவனைக் குறித்து துக்கிக்கவும் காரணம்.) ௫௨. அஜ்ஞானி இறந்தவர்களைக் குறித்து விசனப்படுகிறான், அதனால் இறந்தவன் திரும்பிவருகிறதில்லை. அநிஷ்ட மடைந்தவனைப் பார்த்து அவன் விரோதி சந்தோஷப்படுகிறான் (௫௩) ஸ்தா வர ஜங்கமங்களோடு கூடிய இம்மூன்று லோகத்திலேயும் மரணமில்லா ததை (ஜந்துக்களை) நான் பார்க்கவில்லை. தேவதைகள், அசுரர்கள், கந்த

ர்வாள், மனுஷியர்கள், மிருகங்கள், பக்ஷிகள் முதலிய வெல்லாஜெந்துக்களும் காலத்திற்குள்ப்பட்டவர்களாய்க் காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் (௫௪) பிறந்திருக்கிற சகல பூதங்களுக்கும் மரணமாகிய காலன் நெருங்கியிருக்கிறான். நிச்சயிக்கப் பட்டிருக்குங்காலத்தி லவசிய மிறந்துபோக வேண்டியதாகவே யிருக்கிறது. (௫௫) பிறந்தவனுக்கிறப்புண்டென்பது நிச்சயம். இறந்தவனுக்குப் பிறப்புண்டென்பதும் நிச்சயம். கருமவிஷேத்தினாலேயும், பிராயச்சித்தத்தினாலேயும் மோக்ஷம் (பிறப்பிறப்பிலிருந்து விடுபடுவது) நிச்சயம். (௭௫.) ஓ பாக்கியவானே! துக்கத்தை விட்டுவிடு துக்கமானது சகலத்தையும் நாசஞ்செய்யத்தக்கது. துக்கமானது தேகத்தை யெரித்து விடும். துக்கத்தினால் புத்தியானது நாசத்தையடையும். (௮௫) துக்கத்தினாலடிபட்ட புருஷனை வெட்கம், தைரியம், தர்மம், ஐசுவரியம், புகழ்ச்சி, நினைப்பு, நன்னடக்கை மற்றயெல்லாதர்மம், இவைகள் தள்ளிவிடுகின்றன (என்றால், அவனிடத்தி லக்குணங்க ளிருக்கமாட்டா தென்பது தாத்பரியம்) (௮௪.) (11)

---

௧௨. 𑌨 𑌤𑍍𑌵𑍇𑌵𑌾𑌹𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌨𑌾𑌸𑌂 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍇𑌮𑍇 𑌜𑌨𑌾𑌧𑌿𑌪𑌾𑌃 ।
𑌨 𑌚𑍈𑌵 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌯𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥

12. ந-து-ஏவ-அஹம்.ஜாது-ந.ஆஸம்-ந-த்வம்-ந-இமே-ஜநாதிபா:
ந-வ-ஏவ.ந-ஹவிஷ்யாம: ஸர்வே-வயம்-அத:-பரம்.

𑌅𑌹𑌂	நான்
𑌜𑌾𑌤𑍁	ஒருகாலத்திலாவது
𑌨𑌾𑌸𑌂 (𑌇𑌤𑌿) 𑌤𑍁 𑌨𑍈𑌵	இல்லாமலிருந்ததேயில்லை
𑌤𑍍𑌵𑌂	நீ
(𑌜𑌾𑌤𑍁)	(ஒருகாலத்திலாவது)
(𑌨𑌾𑌸𑍀𑌰𑌿𑌤𑌿) 𑌨	இல்லாமலிருந்ததேயில்லை
𑌇𑌮𑍇 𑌜𑌨𑌾𑌧𑌿𑌪𑌾𑌃	இந்த ராஜாக்கள்
(𑌜𑌾𑌤𑍁)	(ஒரு காலத்திலாவது)
(𑌨𑌾𑌸𑌨𑍍 𑌇𑌤𑌿) 𑌨	இல்லாதிருந்ததில்லை
𑌵𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇	நாமெல்லோரும்
𑌅𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌚	தேகமழிந்தபின்னும்
𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌨𑍈𑌵	இல்லாமல் போகிறதென்பதேயில்லை

நானும், நீயும், இந்த (யுத்தகளத்திலுள்ள) ராஜாக்களும், நாமெல்லோரும் ஒருகாலத்திலாவது இல்லாமலிருந்ததேயில்லை. தேகமழிந்த பின்பும் நாம் எல்லோரும் இல்லாமற் போவதென்பதே இல்லை (அதாவது இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்கிற முக்காலங்களிலும் நாம் ஆத்ம ஸ்வரூபத்தால் நித்தியர்கள் என்பது பொருள்).

(**ஸ்ரீதரர்**) இந்த சுலோகத்தில் பிரயோகிக்கப் பட்டிருக்கிறபஹு வசனபதங்கள் தேகத்தைப் பற்றியவைகளையன்றி ஆத்மாவைப்பற்றிய வையல்ல. பலதேகங்களிலுமுள்ள ஆத்மா வொன்றுதான்.

(**ராமானுஜர்**) **அஹம்**=சர்வேசுவரனாகிய நான், **ஜாது**=அனாதி கால முதலிதுவரை யொருகாலத்திலாவது, **நாஸம் ஜாது**=இருக்க வில்லை யென்பதில்லை, **த்வம்** **இமே** **ஜநாதிபா:**=நீ முதலிய விந்தச் சகல ராஜாக்களும் (என்றால், என்னுக்ளைக்குட்பட்டு நடக்கப்பட்ட ஜீவர்கள்) **நாஸந் ஜாது**=இருக்கவில்லை யென்பதுமில்லை, **ஸர்வே வயம்**=நான் நீ இவர்களெல்லோரும், **அத: பரம்**=இனிமேலும், **நசைவ நபவிஷ்யா**
ம:=இருப்பதில்லை யென்பதுமில்லை, (என்றால் எப்பவு மிருக்கிறோம்).
இந்த சுலோகத்தின் தாத்பர்ய மென்னவென்றால், சர்வேசுவரனாகிய
நான் எப்படி நித்திய னென்பதிற் சந்தேக மில்லையோ அப்படியே
ஜீவாத்மாக்களாகிய நீங்களும் நித்தியமா யிருக்கிறவர்களென்றறிய
வேண்டியது. இவ்விதமாய்ப் பரமாத்மாவாகிய சர்வேசுவர னிடத்தி
லிருந்து ஜீவாத்மாக்களி லொவ்வொருவருக்கும் பரஸ்பரபேதமானது
வாஸ்தவமென்று கிருஷ்ண ஸ்வாமியினாலேயே சொல்லப்பட்டிருக்கிற
தாகக் காண்கிறது. மோகமடைந்திருக்கிற அர்ஜுனனுக்கு ஆத்ம
சுவரூப நிச்சயமாகிய தத்துவத்தை யுபதேசிக்கிற இந்தச்சமயத்தில்,
நீ நான் இந்த ரர்ஜாக்களென்றும், நாமெல்லோரு மென்றும், பகவான்
சொல்லியிருக்கிறதினாலேயே, இவ்வித பேதமானது வாஸ்தவமாகத்தா னிரு
க்கவேண்டும். "இந்த ஆத்மபேதமானது பொய், உபாதியினாற் கற்பிக்கப்ப
ட்டது" என்னும் பக்ஷத்தில் வாஸ்தவமாக ஆத்மதத்து வோபதேச காலத்
தில், பகவானை கிருஷ்ண ஸ்வாமியானவர், பொய்யானதா யிருக்கிற பேத
ஞானத்தை யுபதெசிப்பாரென்பது அசம்பாவிதமா யிருக்கிறது. மேலு மிப்
படிப்பட்ட பேதமானது எப்பவு முள்ள தென்றே "நித்யோ நித்யாநாம்
சேதநஸ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோவிதததி காமாந்"
நித்தியனாயும் சேதனனாயும் ஒருவனாயுமிருக்கிற எந்த சுவாமியானவர் நித்தி

யாளாயு மனேகர்களாயுமிருக்கிற சேதனுளான ஜீவர்களுக்கு அவரவர்களுடைய இஷ்டங்களைக் கொடுக்கிறுரோ" என்கிற இந்த சுருதிவாக்கியத்தினுலும் வெளியாகிறது. ஜீவேசுவர பேதமானது அக்ஞானத்திலே கற்பிதமானதென்னும்பக்ஷத்தில் சர்வேசுவராரகவும் சுத்தநித்ய சுவரூபராகவும், சுவரூபசாக்ஷாத்காரத்தினுலேயே, அக்ஞானம், அக்ஞானத்தினு லுண்டாகுங் காரியமிவைகளற்றவராகவுமிருக்கிற கிருஷ்ணபகவானுக்கு, நீ — நான் — அவன் என்கிற பேத ஞானம் இப்படிப்பட்ட தத்துவோபதேசகாலத்தி லிருக்கக்கூடாது. பகவானுன கிருஷ்ண ஸ்வாமிக்கு அக்ஞானமு மதன் காரியமுமில்லாவிட்டாலும் தீப்பட்டு வெந்துபோன துணி, பிறகு உபயோகத்திற்கு யோக்யமில்லாவிட்டாலும் பார்வைக்குத் துணிபோற் காணப்படுவதுபோல, அக்ஞான மதன்காரிய மிவைகளுடைய வாசனையினுல் பகவா னுபதேசித்தாரென்னும் பக்ஷத்தில் அதுவும் அசம்பாவிதமே. பரமாத்மாவாகிய கிருஷ்ண ஸ்வாமிக்கு அக்ஞானமாவது அதின்காரியமாவது, அவைகளின் வாசனையாவது எப்பவும் கிடையாது. ஆகையால் கிருஷ்ணஸ்வாமி யானவர், தன்னைத்தவிர வேறேவஸ்துக்கொன்றுமில்லை யென்பதும், இப்போது காணப்படுவதாயு, மிருக்கிறதாயும் சொல்வது, அக்ஞானத்தினுல் கற்பிதமான தென்பதும், வாஸ்தவமாகவிருக்கும்பக்ஷத்தில் தத்துவோபதேசகாலத்தில் அபேதத்தைச் சொல்லாமல் நீ—நான் அவனென்கிற பேதத்தைச் சொல்வாரென்பது பின்னு மசம்பாவிதமா யிருக்கிறது. அக்ஞானம் அதின்காரியங்களிவைக ளற்றிருக்கிற பகவானுக்கு அவைகளின் வாசனைமட்டும் வெந்துபோன துணிபோலிருக்குமென்பதும் சரியல்ல. பகவானுனவர் சர்வக்ஞரென்றும் ஞானத்தையே சுவரூபமாகவுடையவர், மாயாதீதரென்றும் சுருதிப் பிரமாணங்களிற் சொல்லப்பட்டிருக்கிற தாகையால், பகவானுன கிருஷ்ண ஸ்வாமிக்கு அக்ஞான மிருந்ததென்று சொல்லவிடமில்லை. தன்னைத் தவிர வேறேயாதொரு வஸ்துவுமில்லையென்றே யெண்ணியிருப்பாரானுல், தன்னுடைய பிரதிபிம்பத்தைப்போ லிருக்கிற அர்ஜுனனுக்கு உபதேசிப்பதெப்படி? கண்ணுடியிற் காணப்படும் தன்னுடைய ரூபமான பிரதிபிம்பமானது தன்னைவிட அன்னியமல்ல வென்கிற நிச்சயஞானமுடையவன், கண்ணுடியிலுள்ள தன்னுடைய அந்தப் பிரதிபிம்பத்திற்கு உபதேசஞ் செய்தானென்று சொல்லக்கூடுமோ? பகவானைத்தவிர அர்ஜுனன் வேறல்லவென்றுல், ஞானாநந்த சுவரூபியான பகவான்உபதேசஞ் செய்யக் காரணமேயில்லை. அர்ஜுனனைப்போல் பகவானு மக்ஞானியானுல், ஒரு அக்ஞானிக்கு மற்றொரு அக்ஞானி யுபதேசஞ்செய்தல் பிரயோஜனமற்ற தாகையால், உபதேசமு முபதேசம் பெறுவதும் வீணே! ஆகையி

னாலே இந்த சுலோகத்தின் தாத்பரியமானது ஜீவேசுவர பேதத்தையே தெளிவாய் வெளிப்படுகிறது.

(இராகவேந்திரர்) அர்ஜுனன் மோகத்தினால் பந்துக்களை யெப்படிக் கொல்லுகிற தென்கிறதாய் துக்கப்படுகிறானல்லவா! அந்தத் துக்கத்தைப் போக்கடிக்க முந்திய சுலோகம் முதல் தத்துவோபதேசஞ் செய்யப்படுகிறது. நீ துக்கப்படுவது, எதைப்பற்றி? தேகத்தைப்பற்றியா? ஆத்மாவைப்பற்றியா? அல்லது தேகமே ஆத்மாவென்பதைப் பற்றியா? தேகம் போய் விடுகிறதேயென்று விசனமுண்டாயிருந்தால், 'தேஹிநோஸ்மிந் யதா தேஹே'; 'வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய' என்கிற சுலோகங்களிற் சொல்லியபடி ஒரு தேகம்போகிறதும் மற்றொன்று வருகிறதுமாகவே யிருக்கிறபடியால், ஜடமாகிய தேகம் ஒருநாள் அழிவது நிச்சயம். நிச்சயமாயழியுஞ் சுபாவத்தையேயுடைய தேகமானது, நீ விசனப்படுவதினால் அழியாமலிருக்குமோ? ஆகையால் ஜடமான தேகத்தைக் குறித்து நீ விசனப்படக் காரணமில்லை. ஆத்மா போய்விடுகிற தென்பதைப்பற்றி விசனப்படுவதானால், இந்த சுலோகத்தினும் பின் சொல்லப்படும் பல சுலோகங்களினாலும் "நித்யோ நித்யாநாம்" என்கிற சுருதிவாக்யத்தினாலும் பரமாத்மா வெப்படி நித்தியனோ அப்படியே ஜீவனும் நித்தியனென்று சொல்லப்பட்டிருப்பதால் அழிவற்ற சுபாவத்தையுடைய வாத்மாவைக் குறித்து விசனப்படக் காரணமேயில்லை. தேகமே ஆத்மாவென்பதைப் பற்றியதானால் "தேஹிநோஸ்மிந்|வாஸாம்ஸி ஜீர்ணாநி" முதலிய சுலோகங்களினாலும் வேறேயுள்ள சுருதிப் பிரமாணங்களாலும் தேகத்தை அடைவதும் விடுவதும் ஜீவனுடைய காரியமே. தேகமுஞ் ஜீவனு மொன்றானால் தேகம் போனால் ஜீவனும் போய்விடவேண்டியதல்லவா? ஒரு தேகத்தை விடுவதும் வேறுதேகத்தை யடைவதும் ஜீவனுடைய காரியமென்று சொல்லப்பட்டிருப்பதால், தேகமே ஆத்மாவல்ல. ஆகையால் துக்கிப்பதற்குக் காரணமில்லையென்பது தாத்பரியம். இதினால் பகவானைப்போலவே ஜீவனும் அநாதி, நித்யனென்று ஏற்படுகிறது. (12)

---

௧௩. தேஹிநோஸ்மிந் யதாதேஹே கௌமாரம் யௌவநம்ஜரா ।
தயாதேஹாந்தரப்ராப்திர் தீரஸ்தத்ர நமுஹ்யதி ॥

13. தேஹிநஃ-(1) அஸ்மிந்-யதா-தேஹே-கௌமாரம் - யௌவநம்- ஜரா
ததா-தேஹாந்தரப்ராப்திஃ-தீரஃ-தத்ர-(2) ந-முஹ்யதி-[

தேஹிநஃ	தேஹிக்கு (உடலோடுநிற்கும் ஆத்மாவுக்கு)
அஸ்மிந் தேஹே	இந்தத் தேகத்தில்

கௌமாரம்	பால்யமும்
யௌவநம்	யௌவந பருவமும்
ஜரா	விருத்தாப்பியமும் (கிழத்தனமும்)
யதா	எப்படியோ
ததா	அப்படியே
தேஹாந்தரப்ராப்தி:	வேறு தேகம் வருவதும்
தத்ர	அப்படி யிருக்கும்பொழுது
தீர:	ஞானவான்
நமுஹ்யதி	மோகத்தை யடைகிறதில்லை.

தேஹிக்கு (உடலோடு நிற்கும் ஆத்மாவுக்கு), பால்யமும் யௌவநமும், கிழத்தனமும், எப்படியோ (என்றால், வேறுபாடுள்ள இந்தமூன்று அவஸ்தைகளும் ஆத்மா ஒருவனுக்கே, ஒன்றின் பின் ஒன்றாக, ஆத்மா மாறுபடாமலே, வந்து கொண்டிருக்கின்றனவோ) அப்படியே (தான்) இந்த தேகம் போய் மற்றொரு தேகம் வருவதும். அப்படி யிருப்பதினால் (தான்) ஞானிகள் மோஹத்தை அடைகிறதில்லை:

---

(1) தேஹிந:-தேஹாபிமானமுள்ள ஜீவன் என்று, **ஸ்ரீதரர்**, அர்த்தம் செய்திருக்கிறார்.

(2) **தத்ர**-என்பதற்கு "இப்படியிருப்பதினால் அதாவது தேஹம் நசித்தபோதிலும் ஆத்மா மூன்று காலத்திலும் மாறாமல் நித்தியனாயிருப்பதினால்" என்று **சங்கரபாஷ்யம்**.

"தேஹ நசோத்பத்தியில்" என்று **ஸ்ரீதரர், வேங்கடநாதர்** இவர்களும் தாத்பரியம் செய்திருக்கிறார்கள். **சங்கராநந்தர்**, "ஆத்மா நித்திய னென்கிறவிஷயத்தில்" என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

(**சங்கரபாஷ்யம்**) முன்சுலோகத்தில் ஆத்மா நித்தியனென்று சொன்னது எப்படி என்பதாக இந்த சுலோகத்தில் பகவான் திருஷ்டாந்தம் கூறுகிறார். உடம்போடு நிற்கும் ஆத்மாவுக்கு இப்பொழுதுள்ள தேகத்திலே, பால்யாவஸ்தையும், யௌவனாவஸ்தையும், ஜராவஸ்தையும் ஆகிய இம்மூன்றுஅவஸ்தைகளும் ஒன்றற்கொன்று வேறுபட்டவையாம்; அதில் முதல் அவஸ்தை நாசமடையும்போது ஆத்மா நாசத்தை அடைகிறதில்லை. இரண்டாவது அவஸ்தை உண்டாகிறபோது ஆத்மா உண்டாகிறதில்லை. அப்பொழுது என்னவென்றால், பால்யாவஸ்தை மாறினாலும் ஆத்மா மாறுபடாம

லே இரண்டாவது மூன்றாவது அவஸ்தைகளை அடையக்காண்கிறோம், அப்படிப்போலவே ஆத்மா விகாரத்தை அடையாமலே வேறு தேகத்தை அடைகின்றது: அதுயிப்படி இருப்பதனால் தான், ஞானவான் (அதாவது சுருதி, ஸ்ம்ருதி, யுக்திகளினால் ஆத்மாநித்தியன் என்று அறிந்தவன்) மோஹத்தை அடைவதில்லை.

(ஸ்வ) இந்த 11, 12, 13, வது சுலோகங்களில் நிரூபிக்கப்பட்ட விஷயமின்னதென்பதை அடியில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பூலோகத்திலுள்ள சகல ஜனங்களும் "நான்" "நான்" என்று வியவகரித்துக்கொண்டிருப்பதை, நாம் நிமிஷம் தோறும் பார்த்துக்கொண்டிருக்கிறோமல்லவா? அப்படி "நான்" "நான்" என்று வியவகரிப்பது ஸ்தூலமாகிய இந்த தேகம்தான் என்று பாலர்கள் ஒருவேளை நினைப்பார்களே ஒழிய லோகாநுபவமுள்ள ஜனங்கள் அம்மாதிரி நினைப்பார்கள் என்று சொல்ல இடமில்லை. ஏன் யென்றால லோகத்தில் சாதாரணமாய் ஜனங்கள் மரணமடையும் காலத்தில் இந்த தேகத்தை விட்டு பிராணன் போனதாகச்சொல்வதும், அப்படிப்பிராணன் போனதேகத்தை உபயோக மற்றதென்று எடுத்து எரித்து விடுவதும் வழக்கமல்லவா ? ஆகையால் உயிருடனிருக்கும்போது ஸ்தூலமாகிய இந்த தேகத்திற்கு ஆதாரமாய் அதைதறித்து நின்ற " நான்" என்பது எதுவோ அது இந்த தேகத்தைக்காட்டிலும் அன்னியமானதென்பதில் சந்தேகமில்லை. இதுதான் இந்த சுலோகத்தில் தேஹி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த தேகம் அழிந்த பிறகு தேஹி ஒன்று இருப்பதாக நமக்குப் புலப்படாததினால், தேகத்தோடு தேஹியும் நசித்துவிட்டதாக எண்ணி இறந்தவனைப்பற்றி நாம் துக்கிக்கிறோம். அவ்விதமாகவே அர்ஜுநனும் பீஷ்மாதிகளைக் குறித்து " இவர்கள் என்னால் கொல்லப்பட்டு இறந்து போவார்களே. அவர்களில்லாமல் நானிருந்து என்ன பயன்" என்று துக்கிப்பதின் காரணம், அவர்கள் தேகத்திற்கு நாசம் வந்தால் அத்தோடு அவர்கள் போய் விடுகிறார்கள் என்று எண்ணுவதினால்தான்.

எல்லோருக்குமுள்ள இப்படிப்பட்ட சோகத்தை நிவர்த்தி செய்வதற்காக, பகவான், இந்த சுலோகங்களினால் தேஹி நித்தியன், தேகம் நாசமடைந்தபோதிலும் தேஹி நாசமடைகிறதில்லை என்பதாக நிரூபிக்கிறார்: எப்படி என்றால் இறந்து போனவனைப் பற்றியும், உயிருடனிருப்பவனைப் பற்றியும் ஆத்மஞானமுள்ளவர்களுக்கு யாதொரு வித்தியாஸமும் தோன்றாது. ஏன் யென்றால், இந்த தேகம் போனபின் நாம் இல்லாமல் போய் விடுகிறோமென்பதில்லை. இதற்குமுன் நாம், இல்லாதிருந்தோமென்பது மில்லை. ஆகவே

தேஹி திருகாலத்திலும் உள்ளவன், நித்தியன், தேகம் அழிந்த போதிலும் அவன் யாதொரு விகாரத்தையு மடைகிறதில்லை. ஆனால் தேகம் அழிந்த பின்பு தேஹி அழியாமலிருப்பதாக பிரத்யக்ஷமாகக் காணப்பட வில்லையே? என்றால் அதை அனுமானத்தினால் அறியும் பொருட்டு 13வது சுலோகத்தில் "இந்த தேஹி, இந்ததேகத்தோடு கூடியிருக்கும் போதே பால்யம், யௌவனம், விருத்தாப்பியம் முதலான ஒன்றற் கொன்று மாறுபாடுள்ள அவஸ்தைகளை அடைந்து கொண்டிருந்தும்" நான்" என்கிற தேஹி மாறாமலிருப்பது போல இந்த தேகம் போனபின், தேஹிக்கு, வேறு தேகம் வருகிறதாக திருஷ்டாந்தம் கூறப்பட்டது. ஆகையால் இந்த திருஷ்டாந்தத்தைக் கொண்டு தேஹி அதாவது ஆத்மா, நித்தியன் என்று அறிந்து சோகத்தினின்று நிவர்த்தி அடைய வழிகாட்டப்பட்டது. ஆனால் ஆத்மா இன்னவனென்று குறிக்கக் கூடியவனல்ல, இந்திரியங்களுக்கு எட்டக்கூடியவனல்ல; அநாதியான வேதம் கூட ஆத்மாவை "நேதி நேதி" "இதல்ல இதல்ல" என்று சொல்லிக் கூறாமல் காட்டுவது போல, இந்த மூன்று சுலோகங்களினாலும் ஆத்மா ஸ்தூலதேக விலக்ஷணன் என்று காட்டப்பட்டது. (13)

---

௧௪. 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌦𑌾𑌃
𑌆𑌗𑌮𑌾𑌪𑌾𑌯𑌿𑌨𑍋𑌽𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤 ॥

14. மாத்ராஸ்பர்ஶாஃ-து-கௌந்தேய-ஶீதோஷ்ண ஸுகது:க
ஆகமாபாயிந:-அநித்யா:-தாந்-(1) திதிக்ஷஸ்வ-பாரத. [தா:

𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! குந்திபுத்திரா!
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌃	இந்திரியங்களுக்கு விஷயங்களோடு சம்பந்தங்கள்
𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌦𑌾𑌃	சீதம், உஷ்ணம், சுகம், துக்க மிவைகளை கொடுக்கின்றனவாயும்
𑌆𑌗𑌮𑌾𑌪𑌾𑌯𑌿𑌨𑌃	தோன்றி மறையும் தன்மையனவாயும்
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃	அநித்தியமாயுமிருக்கின்றன
(𑌅𑌤𑌃)	ஆகையினாலே
𑌤𑌾𑌨𑍍	அவைகளை (அச் சீதோஷ்ணாதிகளை)
𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! பரதவம்சத்தில் பிறந்தவனே!
𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵	பொறுத்துக்கொள்.

ஓ! அர்ஜுனா! செவிமுதலிய இந்திரியங்கள் சப்தாதிவிஷயங்களுடன் சம்பந்தப்பட்டால், அந்தச் சம்பந்தத்தால், சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், உண்டாக்கின்றன. தோன்றி மறையும் தன்மை யனவாய் அநித்தியமாய் யிருப்பதினாலே, அவைகளை (சீதோஷ்ணாதிகளை) ஓ! பாரதவம்சத்திலுதித்தவனே! பொறுத்துக்கொள். அதாவது அவைகளின் விஷயமாக ஸந்தோஷத்தையாவது துக்கத்தையாவது கொள்ளவேண்டாம் என்பது கருத்து.

---

(1) **தாந்**-என்பது மாத்ராஸ்பர் சங்களைக் குறிப்பதாக, **ஸ்ரீதரர்**, முதலானவர்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்

(**இராகவேந்திரர்**). இந்திரியங்களுக்கு விஷயங்களோடு சம்பந்தமானது சுவபாவமாய் சீதோஷ்ண சுகதுக் காதிகளையுண்டுபண்ணமாட்டாது. ஆனால் விஷயங்களில் அபிமானத்தோடுகூடிய சம்பந்தம்தான் சீதோஷ்ண சுகதுக் காதிகளையுண்டுபண்ணுகிறது. ஆகையினாலே **தாநு**= அப்படிப்பட்ட வபிமானத்தோடுகூடிய விஷயேந்திரிய சம்பந்தங்களை **திதிக்ஷஸ்வ**, விட்டுவிடு.

(**ஸ்வ**) இந்த 14-15வது சுலோகங்களினால் ஆத்மா ஸூக்ஷ்மதேகவிலக்ஷணன் என்று எப்படி நிரூபிக்கப் பட்டிருக்கிறதென்பதைப் பற்றி அடுத்த சுலோகத்தின் கீழ்சொல்லியிருப்பதைப் பார்க்க: அர்ஜுனனை முதலில் கௌந்தேயா! (குந்திபுத்திரா) என்றும், மறுபடி அதே சுலோகத்தில் **𑌭𑌾𑌰𑌤!** என்றும் சொல்வது, நீ உபயகுலசுத்தன், உபயகுல சுத்தனாய் யிருப்பவன்தான் ஞானத்திற்கு அதிகாரி, நீ அப்படிப்பட்டவனாய் யிருப்பதால் உனக்கு இந்த சோகம் தகாது. உன்முன்னோர்கள் போல் நீயும் ஆத்ம ஞானத்தை அடைந்து; அவர்கள் மார்கத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாக வியாக்கியாதாக்கள் தாத்பர்யம் செய்கிறார்கள்.

---

௧௫. 𑌯𑌂 𑌹𑌿 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍍𑌷𑌭 ।
𑌸𑌮𑌦𑍁𑌃𑌖𑌸𑍁𑌖𑌂 𑌧𑍀𑌰𑌂 𑌸𑍋𑌽𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥

15 யம்-ஹி-ந-வ்யயயந்தி-ஏதே-(1) புருஷம் புருஷர்ஷப,
ஸமது:கஸுகம்-தீரம்-(2) ஸ:-அம்ருதத்வாய-கல்பதே.

𑌹𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍍𑌷𑌭 ஓ! புருஷசிரேஷ்டனே!

𑌏𑌤𑍇 இவைகள் (சீதோஷ்ணாதிகள)

ஸமது:கஸுகம்	சுக துக்கங்களை ஸமமாகக்கொண்ட
தீரம்	தீரனை (விவேகியான)
யம் புருஷம்	எந்த புருஷனை
ந வ்யதயந்தி	சலிக்கச்செய்கிறதில்லையோ
ஸ:	அவன்
அம்ருதத்வாய	மோக்ஷத்திற்கு
கல்பதே	தகுந்தவனாகிறான்.

சுகதுக்கங்களை ஸமமாக எண்ணுகிற (அதாவது சுகம் வந்தபோது சந்தோஷமும் துக்கம்வந்தபோது வ்யஸநமும் அடையாமலிருக்கிற) எந்த தீரபுருஷனை (ஞானியை) இவைகள் (முன்சொன்ன சீதோஷ்ணாதிகள்) சலிக்கச் செய்கிறதில்லையோ (பாதிக்கிறதில்லையோ) அவன் மோக்ஷத்திற்குத் தகுந்தவனாகிறான்.

---

(1) ஏதே-என்பது மாத்ராஸ்பர்சங்களைக்குறிப்பதாக, ஸ்ரீதரர், முதலானவர்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(2) தீரம்-நித்தியமான ஆத்மஞான முள்ளவன். அவன் நித்தியமான ஆத்மஸ்வரூபத்தை கண்டறிவதிலே உறுதியாக நிற்பதினால்தான், குளிர் வெப்பம் முதலிய த்வந்தங்கள் அவனை பாதிப்பதில்லை. முன் சுலோகத்தில் சொன்ன திதிக்ஷைமட்டும் மோக்ஷத்தை அடைவதற்கு போதாது, விவேகமும், வைராக்கியமும்கூட வேண்டுமென்பதைக் காட்டுவதற்காக இந்த சுலோகத்தில் "ஸமது:கஸுகம்தீரம்" என்று பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

(ஸ்வ) ஆத்மா, ஸ்தூலதேக விலக்ஷணனென்று முன் சுலோகங்களினால் பகவான் நிரூபித்து பிறகு இந்த 14, 15 சுலோகங்களினால், ஆத்மா ஸூக்ஷ்ம தேகவிலக்ஷண னென்பதையும் நிரூபிக்கிறார்.

ஸூக்ஷ்மதேக மென்பது, ஸூக்ஷ்ம ஆகாசம் முதலான பஞ்சபூதங்களுடைய சேர்க்கையினாலான கண் முதலிய ஐந்து ஞானேந்திரியங்களும், கை முதலிய ஐந்து கர்மேந்திரியங்களும் (ஸ்தூலமான இந்த கண், கைகளல்ல), அபானன் முதலான ஐந்து பிராணன்களும், மனஸ், புத்தி முதலான இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்ததாகிய சரீரந்தான். இதில் பிராணமய மனோமய விக்ஞானமய கோசங்கள் உள்ளன. (இந்த விஷயத்தை விஸ்தாரமாக கைவல்லிய நவநீதம் முதலான தமிழ் கிரந்தங்களிலும் வாசித்தல்

மனனம் * முதலான ஸம்ஸ்கிருத கிரந்தங்களிலும், சிருஷ்டிக்கிரமத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற பாகத்தில் பார்க்கலாம்).

இந்த ஸூக்ஷ்ம தேகமானது, ஸ்தூலமாகிய இந்த கண் முதலானவைகளினால் அறியக்கூடியதல்லவாதலால் அதை அந்த தேகதர்மங்களைக்கொண்டு அறிவிப்பதற்காக ‘‘மாத்ராஸ்பர்ஸாஸ்து’’ என்று பகவான் ஆரம்பிக்கிறார்.

மாத்திரை என்றால் அளவு என்று அர்த்தம். படி முதலானதைப்போல் எதானது ஒரு அளவாக வைத்துக்கொள்ளப்பட்டு, மற்றவைகளை அளவிட சாதகமாக விருக்கின்றதோ அதுதான் மாத்திரை. அப்படியே இந்திரியங்களின் கூட்டமாகிய ஸூக்ஷ்மசரீரத்தைக்கொண்டு சூக்ஷ்மமாகிய பிரபஞ்சத்தை அளந்து அறியவும், அதன் மூலமாக ஆத்மஸ்வரூபக்ஞானத்தை அடையவும் ஸாதனமாக ஷடி சரீரம் ஜீவனுக்கு அமைந்திருப்பதால், இந்திரியங்களை மாத்திரைகள் என்று சொல்லப்பட்டன. இந்த இந்திரியங்களுக்கு, அவைகளின் விஷயங்களாகிய சப்தாதிகளுடன் சம்பந்தம் (ஸ்பர்சம்) உண்டாகும்போது சீதம், உஷ்ணம், சுகம், துக்கம் இவைகளைத்தருகின்றன. குளிர் முதலானவை ஷடி தேகத்திற்கு அனுகூலமாகவிருக்கும்போது சுகமாகவும், பிரதிகூலமாக விருக்கும்போது துக்கமாகவும் ஆகின்றன என்பது தாத்பர்யம். வருகிறதும் போகிறதுமாயிருக்கின்ற, அநித்தியங்களான, இந்த சுகதுக்கங்கள், நித்தியனென்று நிரூபிக்கப்பட்ட இந்த தேஹிக்கு எப்படி இருக்கக்கூடும்? அவைகள் அந்த சூக்ஷ்மதேக தர்மங்களேயொழிய ஆத்மதர்மமல்ல. இப்படியிருந்தும் அந்த சுகதுக்கங்களினால் சந்தோஷத்தையும், வ்யஸநத்தையும் தேஹி (ஆத்மா) அடைகிறான். என்ன காரணத்தினால் என்றால், சூக்ஷ்மசரீரமாகிய உபாதியை ‘‘தான் தன்னுடையது’’ என்று இந்த தேஹி அபிமானிப்பதால் அந்த தேக தர்மங்களும் தனக்குள்ளனவாக பிரமை யடைகிறான்; நிர்மலமான ஸ்படிகத்திற்கு சமீபத்தில் செம்பருத்திப் பூவை வைத்தால் ஸ்படிகம் சிகப்பாய் விட்டதாக ப்ரமையடைவதுபோல் தான். ஆகையால் ஆத்மா ஸூக்ஷ்ம தேஹ விலக்ஷணன் என்பதை அறிந்து, மேற்படி பிரமையிலிருந்து நிவர்த்தி அடைந்து, சுகதுக்காதிகள் ஆத்மாவுக்கில்லை, அதனால் ஆத்மாவாகிய நான் சந்தோஷத்தையாவது வ்யஸநத்தையாவது அடையக்கூடாதென்று நித்தியாத்ம ஸ்வரூபதர்சனத்தினால் உறுதியாக நிற்பவன்தான், மோக்ஷத்தை அடையவல்லவன் என்று பகவான் சொல்லிமுடிக்கிறார். (15)

* இது மூலத்துடன் தமிழில் இந்த கிரந்த கர்த்தாவால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

௧௬. 𑌨𑌾𑌸𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌵𑍋 𑌨𑌾𑌭𑌾𑌵𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌸𑌤𑌃 ।
𑌉𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌯𑍋𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 ॥

16. ந-அஸத:-வித்யதே-பாவ:-ந-அபாவ:-வித்யதே-ஸத:
உபயோ:-அபி-த்ருஷ்ட:-அந்த:-து-அநயோ:-தத்வதர்சிபி:.

𑌅𑌸𑌤𑌃	அஸத்திற்கு (இல்லாததற்கு, பொய்ப் பொருளுக்கு)
𑌭𑌾𑌵𑌃	(வாஸ்தவமான) இருப்பு
𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	இல்லை
𑌸𑌤𑌃	ஸத்திற்கு (இருக்கிறதற்கு, மெய்ப்பொருளுக்கு)
𑌅𑌭𑌾𑌵𑌃	இல்லாமை
𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	இல்லை
𑌅𑌨𑌯𑍋𑌃 𑌉𑌭𑌯𑍋𑌰𑌪𑌿	இவ்விரண்டினுடையவும்
𑌅𑌨𑍍𑌤𑌃	முடிவானது (நிச்சயமானது)
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 𑌤𑍁	தத்வத்தை (ப்ரஹ்மத்தை) அறிந்தவர்களால்தான்
𑌦𑍃𑌷𑍍𑌟𑌃	தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

அஸத்திற்கு (இல்லாததற்கு, பொய்ப்பொருளுக்கு) வாஸ்தவமான இருப்பு என்பது இல்லை. ஸத்திற்கு (இருக்கிறதற்கு, மெய்ப்பொருளுக்கு) இல்லாமை என்பது இல்லை. இவ்விரண்டினுடைய நிச்சயமானது தத்வத்தை (ப்ரஹ்மத்தை) அறிந்தவர்களால்தான் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

(சங்கரபாஷ்யம்) சீதோஷ்ணாதிகளை சோக மோகமன்றியில் ஸகித்துக்கொள்ளவேணு மென்பதற்கு மற்றொரு காரணம், அவை பொய்ப்பொருளாதலால் என்று இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. வ்யவஹார நிலையிலே ஸத்புத்தி, அஸத்புத்தி, என இருவகை புத்தி உண்டு. எதைப்பற்றி நிற்கும் புத்தியானது மாறுபடுகின்றதில்லையோ அது "ஸத்" (மெய்ப்பொருள்). எதைப்பற்றி நிற்கும் புத்தி மாறுபடுகின்றதோ அது "அஸத்" (பொய்ப்பொருள்). இப்படி "ஸத்" "அஸத்" என்கிற பேதம் புத்தியைப் பொருத்து நிற்கின்றது.

மேற்சொன்ன சீதோஷ்ணம் முதலான த்வந்தங்களும், அவற்றின் காரணமான நீர் நெருப்பு முதலியவைகளும் "அஸத்." ஏனென்றால் பிரமாணங்

களைக்கொண்டு ஆராய்ந்தறியும்போது அவைகளுக்கு உண்மை(வாஸ்தவமான இருப்பு) என்பது இல்லை. அவைகள் மாறுதலை அடைந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் இவ்வித மாறுதலை ஆத்மா அடைகிறதில்லை. அதற்கு இல்லாமல்போவதென்பதே இல்லை. இவ்வாறு "ஸத்" "அஸத்" என்கிற "ஆத்மா" "அனாத்மா" இரண்டின் விஷயமாக "அஸத்" என்பது எப்பொழுதும் இல்லாதது தான் என்கிற முடிவான நிர்ணயத்தை தத்துவ தர்சிகள் அறிந்திருக்கிறார்கள். "தத்" என்பது சகலத்திற்கும் பெயர். ஸகலமும் ப்ரஹ்மம் எனவே அதன் பெயர் "தத்" என்பதாம். அதனது தன்மை தத்துவம். அதாவது ப்ரஹ்மம் உள்ளபடி யிருக்கும் தன்மை. அதனைக்காணும் இயல்பை உடையவர்களே தத்வ தர்சிகள். நீயும் தத்வ தர்சிகள் கொள்கையைப்பின்பற்றி சோகத்தையும் மோகத்தையும் விட்டு குளிர் வெப்பம் முதலிய த்வந்தங்கள், விகாரமுள்ள அஸத்துக்களாகவே இருந்து, கானல் ஜலம் போல் பொய்யாகத் தோன்றுகின்றன, என்று மனதில் நிச்சயித்து, தீரத்துவத்தோடு சாந்தனாய் பொருத்துக்கொள்ளவேண்டுமென்பது கருத்து.

(ஸூ) „நாஸதோ வித்யதே பாவ:" என்பதற்கு சீதோஷ்ணாதிகள் ஆத்மாவை சார்ந்தன வல்லவாகையால் அவைகளுக் கிருப்பில்லையென்று ஸ்ரீதரரும், அசேதனங்களாகிய தேகாதிகளுக்கு அவினாசி சுவபாவம் (நாசமடையா திருத்தல்) இல்லையென்று, இராமாநுஜரும், பிரகிருதிக்கு இல்லாமை யில்லை யென்று மத்துவாசாரரும், துஷ்கருமத்தினால் சுகமுண்டாகமாட்டாதென்று இராகவேந்திரரும், „நாபாவோ வித்யதே ஸத:" என்பதற்கு, ஆத்மாவுக்கு, இல்லாமை இல்லையென்று ஸ்ரீதரரும், ஜீவேசுவரருக்கு நாசமடையும் சுவபாவ மில்லையென்று இராமாநுஜரும், ப்ரஹ்மத்திற்கு இல்லாமை இல்லையென்று மத்துவாசாரரும், சத்கருமத்தினால் துக்க முண்டாகமாட்டாதென்று இராகவேந்திரரும் சொல்லியிருக்கிறார்கள். (16)

ஸ்ரீ:

அவிநாஶி து தத்³வித்³தி⁴ யேந ஸர்வமித³ம் ததம்।
விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித்கர்துமர்ஹதி ॥

17 அவிநாஶி-து தத்-வித்தி-யேந(1)-ஸர்வம்-இதம்-(2)ததம்
விநாஶம் அவ்யயஸ்ய-அஸ்ய ந-கஶ்சித்-கர்தும்-அர்ஹதி

இதம்ஸர்வம்	இதெல்லாம் (இந்தஜெகத்தெல்லாம்)
யேந	எந்த ப்ரஹ்மத்தினால்
ததம்	வியாபிக்கப்பட்டிருக்கிறதோ
தத்து	அதையே
அவிநாசி	நாசமற்றதாக (ஸத்தாக)
வித்தி	தெரிந்துகொள்
அவ்யயஸ்ய	(தன்) நிலைமாறாத
அஸ்ய	இதற்கு
விநாசம்	நாசத்தை (இல்லாமையை)
கர்த்தும்	செய்கிறதற்கு
கச்சித்	ஒருவனும்
நார்ஹதி	சக்தனல்ல.

இதெல்லாம் (இந்த ஜெகத்தெல்லாம்) எந்தப் ப்ரஹ்மத்தினால் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அதையே நாசமற்றதாகத் தெரிந்துகொள். தன் நிலைமாறாத இதற்கு நாசத்தை யுண்டுபண்ண வொருவனாலும் முடியாது.

---

(1) **யேந**-என்பதற்கு எந்த சேதனத்தினால், அதாவது ஜீவேச்வரர்களால் என்று **இராமாநுஜரும்,** எந்த ஈசுவரனால் என்று **இராகவேந்திரரும்** அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(2) **இதம்**-என்பதற்கு 'ஜடமான சகலவஸ்துக்களும்' என்று **இராமாநுஜர்** அர்த்தம் செய்திருக்கிறார்.

(***சங்கரபாஷ்யம்***) இந்த சுலோகத்தினால் எப்பொழுதும் ஸத்தாகவே இருப்பது எது என்று சொல்லப்படுகிறது. இதில் பிரயோகிக்கப்பட்டிருக்கிற "து" சப்தமானது அஸத்திலிருந்து ஸத்தை வேறுபடுத்திக்காட்டுகிற பிரிநிலைப் பொருளையுடையது. குடம் முதலானது ஆகாசத்தினால் வியாபிக்கப்பட்டுள்ளதுபோல், ஆகாச முள்பட இந்த ஜகத் முழுவதும், எந்த "ஸத்" என்னும் பெயரை யுடைய ப்ரஹ்மத்தினாலே வியாபிக்கப்பட்டுள்ளதோ அதை அழிவற்றதாகத் தெரிந்துகொள்ளத்தக்கது. இப்படிப்பட்ட ஸத்தாகிய இந்த ப்ரஹ்மம், சரீராதிகளைப்போல், தன் நிலை மாறுகிறதில்லை. ஆகவே, தன் நிலை மாறாத இந்த ப்ரஹ்மத்திற்கு ஒருவராலும் நாசத்தை உண்டாக்க முடியாது. ஆத்மாவுக்கு நாசத்தை உண்டாக்க ஈசுவரனாலும்கூட முடியாது. ஏனெனில் ஆத்மா "ப்ரஹ்மம்." (17)

கஅ. 𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤 𑌇𑌮𑍇 𑌦𑍇𑌹𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃 |
𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑍋𑌽𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤 ||

18. அந்தவந்த:-இமே-தேஹா:(1)-நித்யஸ்ய-உக்தா:-ஶரீரிண:,
அநாஶிந:-அப்ரமேயஸ்ய(2)-தஸ்மாத்-யுத்யஸ்வ-பாரத.

𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯	நித்தியனையும்
𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑌃	நாசமற்றவனையும்
𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯	பிரமாணங்களைக்கொண்டு அறிய முடியாதவ
𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃	தேஹியின் (ஆத்மாவின்) [னையுமுள்ள
𑌇𑌮𑍇 𑌦𑍇𑌹𑌾𑌃	இந்ததேகங்கள்
𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌃	முடிவை யுள்ளவைகளாக
𑌉𑌕𑍍𑌤𑌾𑌃	சொல்லப்பட்டிருக்கின்றன
𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! பரதவம்சத்திற் பிறந்த அர்ஜுனா!
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵	யுத்தஞ்செய்.

நித்யனையும் நாசமற்றவனையும் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களைக் கொண்டு அறியமுடியாதவனையுமுள்ள தேஹியின் (ஆத்மாவின்) இந்த தேஹங்கள் முடிவையுள்ளவைகளாக (ஞானிகளால்) சொல்லப்பட்டிருக்கின்றன. ஓ! பரதவம்சத்திற்பிறந்த அர்ஜுனா! ஆகையினாலே யுத்தஞ்செய்.

---

(1) **தேஹா:**-இந்தத் தேகமென்று குறித்துச் சொல்லப்பட்டதினாலே இந்தத்தேக மழிவுள்ளதென்றும், அழிவற்ற ஒருதேகம் ஜீவனுக்கு முக்தி தசையி லுண்டென்றும் அர்த்தம் செய்யவேண்டுமென்பது, **இராகவேந்திரர்,** தாத்பர்யம்.

(2) **அப்ரமேயஸ்ய**-பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், சப்தம் அருத்தாபத்தி, அநுபலப்தி, ஆகிய இந்த ஆறு பிரமாணங்களாலும் அறியத் தகாதவன் என்று **சங்கரரும்,** காலம், தேசம், ஸ்வரூப மிவைகளினால் அளவிடக்கூடாதவன் என்று **ஸ்ரீதரரும்,** ஜீவனானவன் அறிகிறவனேயன்றி தேகாதிகளைப்போல அறியப்படுகிறவனல்லவென்று **ராமாநுஜரும்,** சர்வ வியாபகனை ஈசுவரனுக்குச் சமானமான ரூபம் முதலியவையுள்ளவன் என்று **இராகவேந்திரரும்** அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(*சங்கரபாஷ்யம்*) இந்த சுலோகத்தினால் “அஸத்” பதார்த்தம் எது என்று சொல்லப்படுகின்றது. நித்தியனான ஆத்மாவின் இந்த (ஸ்தூல ஸூக்ஷ்ம, காரண) சரீரங்கள், ஸ்வப்நத்திலும், இந்திர ஜாலத்திலும், காணப்பட்ட, சரீரங்கள் போல், அழிவையுடையன. அதாவது கானலில் ஜலமிருக்கிறதென்கிற புத்தியானது, தொடர்ச்சியாக விருந்தாலும், பிரத்தியக்ஷாதிப்பிரமாண ஆராய்ச்சியின் முடிவிலே, அந்த புத்தி விட்டுப் போய் கானல் ஜலம் இல்லாமல் போகிறதுபோல், (பொய்ப்பொருளாவது போல்,) இந்த சரீரங்கள் இருக்கின்ற என்கிற புத்தி, ஆராய்ச்சியினால் நீங்கும்போது, சரீரங்களும் அழிவை அடைகின்றன, பொய்ப்பொருளாகின்றன. ஏன் என்றால் இந்த சரீரங்கள் ஆத்மாவினிடத்தில் கானல் ஜலம் போல் தோற்றுகின்றனவே ஒழிய, அவைகளுக்கு வாஸ்தவத்தில் தனிமையான இருப்பு என்பது கிடையாது. ஆத்மா “நித்தியன், நாசமில்லாதவன்” என்று சொல்வது, லோகத்தில் காணப்படுகிற இரண்டுவித நாசமும் ஆத்மாவுக்குக் கிடையாது என்பதைக் காட்டுகிறது. அதாவது சரீரம் சாம்பலாய்ப் போய் மறைந்துபோவது போலொத்த நாசம் ஒன்று: சரீரம் உயிரோடிருக்கும்போதே வியாதி முதலியவற்றால் வேறுவகையாக மாறுவது, மற்றொன்று. ஆத்மா இந்த இரண்டுவித நாசமும் அற்றவன் என்று சொல்லாவிட்டால், பூமி முதலானதுபோல ஆத்மா நித்தியம் என்று தோன்றும்:

“ஆத்மா இவ்விதமாயிருப்பதால் நீ போர்செய்” என்று பகவான் விதிப்பதாகக் கொள்ளக்கூடாது. போர்செய்வதற்கென்றே வந்த அர்ஜுனன், சோக மோகஹங்களால் தடுக்கப்பட்டு நிற்பதால் அவைகளை நீக்குதல்தான் பகவானால் செய்யப்படுகின்றது: போர் செய்யவேண்டுமென்று தானாகவே கைக்கொண்ட சுவதர்மத்திலிருந்து ஒழிவு அடையவேண்டாம் என்பது கருத்து.

(ஸூ) தேகத்தையுடையவன் என்றதினால் அத்துவைத சித்தாந்தப்படிக்கு வ்யவகார தெசையில் ஜீவனாகவும், பாமார்த்த தெசையில் ப்ரஹ்மமாகவும் சொல்லத்தக்கது. (18)

௧௯. 𑌯 𑌏𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌶𑍍𑌚𑌐𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌹𑌤𑌮𑍍 ।
𑌉𑌭𑍌 𑌤𑍌 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌤𑍋 𑌨𑌾𑌯𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 ॥

19. யஃ-ஏநம்-வேத்தி ஹந்தாரம் யஃ-ச-ஏநம் மந்யதே ஹதம்,
உபௌ-தௌ-ந-விஜாநீதஃ-ந-அயம்-ஹந்தி-ந-ஹந்யதே.

யஃ	எவன்
ஏநம்	இவனை (தேஹியை)
ஹந்தாரம்	கொல்லுகிறவனாக
வேத்தி	அறிகிறானோ
யஃ	எவன்
ஏநம்	இவனை
ஹதம்	கொல்லப்பட்டவனாக
மந்யதே	அறிகிறானோ
தாவுபௌ	அவ்விருவரும்
நவிஜாநீதஃ	ஆத்மாவை அறிந்தவர்களல்ல
அயம்	இவன் (ஆத்மா)
நஹந்தி	கொல்லுகிறதுமில்லை
நஹந்யதே	கொல்லப்படுகிறதுமில்லை.

யாவனொருவன் தேஹியாகிய இவனை கொலைத் தொழிலைச் செய்கிறவனாக அறிகிறானோ, எவன், இந்தசரீரம் கொல்லப்படுதலால் தேஹியாகிய இவனை கொலைப்பட்டவனாக அறிகிறானோ, அவ்விருவரும் வாஸ்தவத்தை (ஆத்மாவை) அறிந்தவர்களல்ல. ஆத்மாவாகிய இவன் கொல்லுகிறதுமில்லை, கொல்லப்படுகிறதுமில்லை.

(சங்கரபாஷ்யம்) கீதாசாஸ்திரமானது ஸம்ஸாரத்திற்குக் காரணமான சோகமோகாதிகளின் நிவர்த்தியின் பொருட்டேயொழிய அதில் ப்ரவர்த்திக்கும்படி செய்வதற்கு அன்று என்கிற விஷயத்திற்கு சாக்ஷியாக "**அசோச்யாந்**" முதலாகச் சொல்லப்பட்ட ஆத்மதத்வத்தை ஆதரிக்கும்படியான இரண்டு சுருதிவாக்கியப் பிரமாணங்களை கடோபநிஷத், 2 வது வல்லி, 18, 19 ருக்குக்களிலிருந்து, எடுத்து பகவான் இந்த 19, 20 ஸ்லோகங்களில் சொல்லுகிறார்.

அர்ஜுனன் 'பீஷ்மாதியர்கள் என்னால் யுத்தத்தில் கொல்லப்படுகிறார்கள், நானே அவர்களைக் கொல்பவன்,' என்று நினைக்கிற இந்தபுத்தியானது எப்படி பிசகு என்பது இந்த ஸ்லோகத்தினால் நிரூபிக்கப்படுகிறது. தேகத்தை கொல்லுதலால் "நான் கொல்லப்படுகிறவன் நான் கொல்பவன்" என்று இவ்விதமாக நினைத்து ஆத்மாவை 'நான்' என்னும் எண்ணத்திற்கு எட்டுவதாக அறிகிறவர்கள், ஆத்மா இன்னதென்று ஆராய்ந்து அறியாதவர்களே,

(ஸ்வ) இதுவரையில் சொல்லி வந்த ஆத்மதத்துவமானது ஹூவத் வாக்கிய மானதால் அவைகளே பிரமாணமாக இருந்தபோதிலும், மறுபடியும் அதற்கு சாக்ஷியாக சுருதிவாக்கியங்களை எடுத்துச் சொல்வதின்கருத்தென்னவென்றால், தான் ஸர்வேசுவரனாகவிருந்தாலும் தான்கூட சுருதியைப் பிரமாணமாகக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டி, லோகத்தாரும் அவ்விதமே சுருதிதான் பிரமாணமென்று அறிந்து அதை அநுஷ்டித்துக் கடைத்தேறவேண்டுமென்கிற கருணையால் என்க. ஷை சுருதிவாக்கியங்களை அப்படியேசொல்லாமல் சற்றே மாற்றி ஹூவானால் சொல்லப்பட்டதின் காரணம், இந்த கீதாசாஸ்திரம், சுருதியை ஸ்வரத்துடன் அத்தியயனம் செய்வதற்கு அதிகாரிகள் அல்லாதவர்களுக்கும், பயன்பட வேண்டுமென்கிற கருத்தினால் என்று தோற்றுகிறது.

இந்த சுலோகத்தின் கருத்து அவிவேகிகள் இவன் அவனைக் கொன்றானென்றும், அவனுமிவன் கொல்லப்பட்டானென்றும் நினைக்கிறார்கள். ஆத்மா நித்தியனும் அழிவற்றவனு மாகையால் அந்த ஆத்மா கொல்லுகிறவனுமல்ல ஒருவனாற் கொல்லப்படத் தக்கவனுமல்லவென்பது. (19)

உ௦. நஜாயதெ ம்ரியதெவா கதாசித்
நாயம்ஹூத்வாஹவிதா வாநஹூய: |
அஜொ நித்ய: ஸாஸ்வதொயம் புராணொ
நஹந்யதெ ஹந்யமாநெ ஸரீரெ ||

20. ந-ஜாயதே-ம்ரியதே-வா-கதாசித்
ந-அயம்-ஹூத்வா-ஹவிதா-வா-ந-ஹூய:,
அஜ:-நித்ய:-ஸாஸ்வத:-அயம் புராண:,
ந-ஹந்யதே ஹந்யமாநே-ஸரீரே.

அயம்	இவன் (ஆத்மா)
அஜ:	பிறப்பற்றவன்
நித்ய:	நாசமற்றவன்
ஸாஸ்வத:	சாச்வதமா யிருக்கிறவன்
புராண:	முன்னோன்
(தஸ்மாத்)	ஆகையினாலே
ஸரீரெ	தேகமானது
ஹந்யமாநெ	கொல்லப்பட்டாலும்
அயம்	இவன் (ஆத்மா)

கதாசித்	ஒருபோதும்
ந ஹந்யதே	கொல்லப்படுகிறதில்லை
ந ஜாயதே	பிறக்கிறதுமில்லை
ந ம்ரியதே வா	இறக்கிறதுமில்லை
பூத்வா	உண்டாகி
பூய:	மறுபடி
பவிதா வா ந	இருக்கிறவனாகவுமில்லை.

ஆத்மா பிறப்பற்றவன், நாசமற்றவன், சாச்வதமா யிருக்கிறவன், முன்னோன், ஆகையினாலே தேகமானது கொல்லப்பட்டபோதிலும், ஆத்மா ஒருபோதுங் கொல்லப்படுவதில்லை, பிறக்கிறது மில்லை, இறக்கிறது மில்லை, உண்டாய் மறுபடி யிருக்கிறவனாகவு மில்லை.

(சங்கரபாஷ்யம்) இந்த மந்திரத்தினால் லோகத்தில் வஸ்துக்களுக்குள்ள ஆறுவிகாரங்களும், ஆத்மாவுக் கில்லையென்பது சொல்லப்பட்டது. ஆறு விகாரங்களாவன: பிறப்பு, இருப்பு, வளர்தல், திரிதல் (மற்றொன்றாய் மாறுதல்) தேய்தல், நசித்தல்.

ஆத்மா ஒருகாலத்திலும் பிறப்பதில்லை. ஒருகாலத்திலும் இறப்பதுமில்லை. ஒருகாலத்து பூத்வா= இருந்து பூய:=மறுபடி அபவிதா வா= இல்லாமற் போதலையடைவது ந=இல்லை, இதனால்தான் இறப்பதில்லை என்பது; ஒருகாலத்திலும் நபூத்வா=இல்லாதிருந்து, பூய:= மறுபடியும் பவிதா வா ந= இருக்கிறவனாகவும் இல்லை. இதனால்தான் பிறப்பதில்லை என்பது, ஆதலின் (ஆத்மா இவ்வாறிருத்தலின்) பிறவாதவன், நித்தியன் சாச்வதன் புராணமாய் யுள்ளவன், சரீரம் கொலையுண்ணும் பொழுதும் இவன் கொல்லப்படுவதில்லை. கொல்லப்படுதல் என்பதற்கு நிலைமாறுதல் என்றுகொள்க. பிறவாதவன் என்றதினால் ஆத்மாவுக்கு பிறப்பும், நித்தியன் என்றதினால் இறப்பும், சாச்வதன் என்றதினால் தேய்தலும், புராணன் என்றதினால் வளர்தலும், கொலைப்படுவதில்லை, என்பதினால் மாறுதலும் இந்த விகாரங்கள் ஆத்மாவுக்கில்லை என்றபடி. ஜனனமாகிய முதல்விகாரமும், மரணமாகிய கடைசி விகாரமும் மறுக்கப்படவே எல்லாவிகாரங்களும் மறுக்கப்பட்டனவாகவாகிறது. எவ்வித விகாரமும் ஆத்மாவுக்கில்லை என்பது பொருள். இவ்விதமாக யிருப்பதால் "அவ்விருவரும் அறிகிறதில்லை" என்று முன் சுலோகத்தோடு இந்த சுலோகத்தைச் சேர்த்துக்கொள்க.

(இராகவேந்திரர்) ஈசுவரனைப்போல ஜீவனும் பிறப்பிறப்பு முதலிய

வைகளற்றவன். ஈசுவர சுவரூபத்துக்கு சமமான ரூபமுள்ளவனாகச் சொல்லப்படுகிறான். ஆனால் பிறப்பிறப்புள்ளவனாகச் சொல்லப்படுகிறானே யென்றாலோ, தேகத்தை யடைக்கிறதும் விடுகிறதுமா யிருப்பதால் அக்ஞானிகள் பிறக்கிறா னிறக்கிறானென்று வ்யவகரிக்கிறார்கள். (20

---

௨௧. 𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯 𑌏𑌨𑌮𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌕𑌥𑌂 𑌸 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌕𑌂 𑌘𑌾𑌤𑌯𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌕𑌮𑍍 ॥

21. வேத-அவிநாசிநம்-நித்யம்-யஃ ஏநம்-அஜம்-அவ்யயம்,
கதம்-ஸஃ-புருஷஃ-பார்த-கம்-காதயதி-ஹந்தி-கம்.

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! அர்ஜுனா!
𑌯𑌃 𑌏𑌨𑌂	எவன் இவனை (ஆத்மாவை)
𑌅𑌜𑌂	பிறப்பற்றவனாகவும்
𑌅𑌵𑍍𑌯𑌯𑌂	குறைதலற்றவனாகவும்
𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂	நாசமற்றவனாகவும்
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	மாறுதலற்றவனாகவும்
𑌵𑍇𑌦	அறிகிறானோ
𑌸𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃	அந்தப்புருஷனானவன்
𑌕𑌥𑌂	எப்படி
𑌕𑌂	யாரை
𑌘𑌾𑌤𑌯𑌤𑌿	கொல்லச்செய்கிறான்
𑌕𑌂	யாரை
𑌹𑌨𑍍𑌤𑌿	கொல்லுகிறான்.

ஓ! அர்ஜுனா! எவன் ஆத்மாவைப் பிறப்பற்றவன், குறைதலற்றவன் நாசமற்றவன், மாறுதலற்றவன், என்பதாக அறிகிறானோ அந்தப் புருஷனானவன் யாரையாவது கொல்லவாவது கொல்லச்செய்யவாவது எப்படிக்கூடும் ?

(**இராகவேந்திரர்**). இந்த சுலோகத்திற்கு பரப்ரஹ்மபரமாயும் ஒரு அர்த்தமுண்டு. அதாவது ஓ! அர்ஜுனா! 𑌏𑌨𑌂=பரமாத்மாவை, **𑌅𑌜𑌂**=பிறப்பற்றவன், **𑌅𑌵𑍍𑌯𑌯𑌂**=விகாரமற்றவன், **𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂**=தேகநாசமற்றவன், **𑌨𑌿𑌤𑍍𑌯𑌂**=சுவரூப நாசமற்றவன் என்று, **𑌯𑌃**=எவன், **𑌵𑍇𑌦**=அறிகிறானோ (மற்றவைகளுக்கு முன்சொல்லிய அர்த்தந்தான்.) இப்படி ப்ரஹ்மத்தை எவன் தெரிந்திருக்கிறானோ, அவன், தான் கர்த்தாவல்ல, சர்வத்திற்

கும் கர்த்தா ஈசுவரன்தான் என்கிற ஞானமுடையவனா யிருப்பானானதால் அவனொருவனைக் கொல்லவாவது கொல்லச்செய்யவாவது மாட்டானென்பது தாத்பரியம் (21)

---

௨௨. 𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌯𑌥𑌾 𑌵𑌿𑌹𑌾𑌯
𑌨𑌵𑌾𑌨𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌨𑌰𑍋𑌽𑌪𑌰𑌾𑌣𑌿 ।
𑌤𑌥𑌾 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌸𑌂𑌯𑌾𑌤𑌿 𑌨𑌵𑌾𑌨𑌿 𑌦𑍇𑌹𑍀 ॥

22. வாஸாம்ஸி-ஜீர்ணாநி-யதா-விஹாய-
நவாநி-க்ருஹ்ணாதி-நர:-அபராணி,
ததா-ஶரீராணி-விஹாய-ஜீர்ணாநி-
அந்யாநி-ஸம்யாதி-நவாநி-தேஹீ.

𑌨𑌰𑌃	மனிதன்
𑌯𑌥𑌾	எப்படி
𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿	பழய (கந்தலாயிருக்கிற)
𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿	துணிகளை
𑌵𑌿𑌹𑌾𑌯	விட்டுவிட்டு
𑌨𑌵𑌾𑌨𑌿	புதிய
𑌅𑌪𑌰𑌾𑌣𑌿	வேறு
(𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿)	துணிகளை
𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿	எடுத்துக்கொள்ளுகிறானோ
𑌤𑌥𑌾	அப்படியே
𑌦𑍇𑌹𑍀	தேகத்தை யுடையவன் (ஆத்மா)
𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿	பழய (நோய்ந்துபோன)
𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌿	தேகங்களை
𑌵𑌿𑌹𑌾𑌯	விட்டுவிட்டு
𑌨𑌵𑌾𑌨𑌿	புதிய
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑌿	வேறு
(𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌿)	தேகங்களை
𑌸𑌂𑌯𑌾𑌤𑌿	அடைகிறான்.

மனிதன் எப்படிப் பழயதுணிகளை விட்டு விட்டு வேறு புதிய துணி க எடுத்துக்கொள்ளுகிறானோ, அப்படியே தேகத்தை உடைய ஆத்மாவா

னவன் பழய உடல்களை விட்டு விட்டு வேறு புதிய உடல்களை, தான்மாறுதலடையாமலே யடைகிறான். (22)

---

௨௩. 𑌨𑍈𑌨𑌂 𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑍈𑌨𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌪𑌾𑌵𑌕𑌃 ।
𑌨 𑌚𑍈𑌨𑌂 𑌕𑍍𑌲𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑍋 𑌨 𑌶𑍋𑌷𑌯𑌤𑌿 𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ॥

23. ந-ஏநம்-சிந்தந்தி-ஶஸ்த்ராணி-ந-ஏநம்-தஹதி-பாவக:, ந-ச ஏநம்-க்லேதயந்தி-ஆப:-ந-ஶோஷயதி-மாருத:.

𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿	ஆயுதங்கள்
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை)
𑌨𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿	வெட்டுகிறதில்லை
𑌪𑌾𑌵𑌕𑌃	நெருப்பானது
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை)
𑌨𑌦𑌹𑌤𑌿	எரிக்கிறதில்லை
𑌆𑌪𑌃	ஜலங்கள்
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை)
𑌨𑌕𑍍𑌲𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑌿	நனைக்கிறதில்லை
𑌮𑌾𑌰𑍁𑌤𑌃	வாயு
(𑌏𑌨𑌂)	இவனை (ஆத்மாவை)
𑌨𑌶𑍋𑌷𑌯𑌤𑌿	உலர்த்துகிறதுமில்லை.

ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுகிறதில்லை, நெருப்பு எரிக்கிறதில்லை, தண்ணீர் நனைக்கிறதில்லை, காற்று உலர்த்துகிறதுமில்லை. (23)

---

௨௪. 𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌦𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌕𑍍𑌲𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌶𑍋𑌷𑍍𑌯 𑌏𑌵 𑌚 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌰𑌚𑌲𑍋𑌽𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ॥

24. அச்சேத்ய:-அயம்-அதாஹ்ய:(1) அயம் அக்லேத்ய:-அஶோஷ்ய:-நித்ய:-ஸர்வகத:-ஸ்தாணு:-அசல:-அயம்-ஸநாதந:. [ய-ஏவ-ச

𑌅𑌯𑌂	இவன் (ஆத்மா)
𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌃 𑌏𑌵	வெட்டவேமுடியாதவன்
𑌅𑌯𑌂	இவன் (ஆத்மா)
𑌅𑌦𑌾𑌹𑍍𑌯𑌃 𑌏𑌵	எரிக்கவேமுடியாதவன்
𑌅𑌕𑍍𑌲𑍇𑌦𑍍𑌯𑌃 𑌏𑌵	நனைக்கவேமுடியாதவன்

அஶோஷ்ய ஏவ ச	உலர்த்தவுமே முடியாதவன்
தஸ்மாத்	(ஆகையினாலே)
அயம் நித்ய:	இவன் (ஆத்மா) நித்தியமானவன்
ஸர்வகத:	எங்கும் நிறைந்தவன்
ஸ்தாணு:	ஸ்திரமானவன்
அசல:	சலனமில்லாதவன்
ஸநாதந:	எப்பொழுதுமுள்ளவன்.

(ஆத்மாவாகிய) இவனை வெட்டவேமுடியாது, எரிக்கவே முடியாது நனைக்கவேமுடியாது, உலர்த்தவுமே முடியாது. ஆகையினாலே இவ்வாத்மா நித்தியமானவன், (நித்தியனாதலால்) எங்குமுள்ளவன்; (எங்குமுள்ளவனாதலால்) ஸ்திரமானவன்; (ஸ்திரமானவனாதலால்) சலனமில்லாதவன்; (சலனமில்லாதவனாதலால்) எப்பொழுதுமுள்ளவன், (பழமையானவன்.)

---

(1) **ஸ்தாணு:**— எப்போதுமெங்கும் வியாபித்திருக்கிற ப்ரஹ்மத்தினுடைய ஆதாரத்தின் பேரிலும் அணுவாயுமிருக்கிறவன்.

(**ராமானுஜர்**) இந்த சுலோகத்திற்கும் முந்திய சுலோகத்திற்கும் பேதமென்னவென்றால், முந்தியசுலோகத்தில் ஆத்மாவை வெட்டுகிறது எரிக்கிறது முதலானவைகளைச் செய்யும் சக்தி ஆயுதம் முதலானவைகளுக்கு இல்லையென்பது சொல்லப்பட்டது. ஏன் ஆயுதம் முதலியவைகளுக்குச் சக்தியில்லையென்றாலோ, ஆத்மா ஸ்திரஸ்வபாவ முதலியவைகளையுடையவனானதால் அவன் வெட்டப்படவாவது எரிக்கப்படவாவது தகுந்தவனல்லவென்பஹேது இதிற் சொல்லப்பட்டது. (24)

---

௨௫. அவ்யக்தோऽயமசிந்த்யோऽயமவிகார்யோऽயமுச்யதே ।
தஸ்மாதேவம் விதித்வைநம் நாநுஶோசிதுமர்ஹஸி ॥

25. அவ்யக்த:-அயம்-அசிந்த்ய:-அயம்-அவிகார்ய:-அயம்-உச்யதே
தஸ்மாத்-ஏவம்-விதித்வா-ஏநம்-ந-அநுசோசிதும்-அர்ஹஸி.

அயம்	இவன் (ஆத்மா)
அவ்யக்த:	வ்யக்தமான (கண்ணுக்குத் தக்க) வனன்று
அயம்	இவன் (ஆத்மா)
அசிந்த்ய:	சிந்திக்க (நினைக்க) முடியாதவன்

அயம்	இவன் (ஆத்மா)
அவிகார்ய:	எந்தவிகாரமும் இல்லாதவன்
(இதி)	என்பதாக
உச்யதே	(வேதங்களால்) சொல்லப்படுகிறான்
தஸ்மாத்	ஆகையினாலே
த்வம்	நீ
ஏனம்	இவனை (ஆத்மாவை)
ஏவம்	இவ்விதமாய்
விதித்வா	அறிந்து
அநுசோசிதும்	துக்கிக்கிறதற்கு
நார்ஹஸி	யோக்கியனல்ல.

(ஆத்மாவாகிய) இவன், வ்யக்தமானவனன்று (காணத்தக்கவனன்று,) சிந்திக்கக்கூடியவனன்று, (நினைவுக் கெட்டினவனன்று,) எவ்வித விகாரமுமுளவனன்று, (என்பதாக வேதங்களால்) சொல்லப்படுகிறான். ஆகையினாலே நீ (ஆத்மாவாகிய) இவனை இவ்வாறு அறிந்துகொண்டு (நான் இவர்களைக் கொல்பவன் இவர்கள் என்னால் கொல்லப்படப்போகிறார்கள் என்று) துக்கப்படவேண்டாம்.

(சங்கரபாஷ்யம்.) இந்த ஆத்மா சகல இந்திரியங்களுக்கும் எட்டாததாதலின் அவ்யக்தம் (புலப்படாதது). எது இந்திரியங்களுக்கு எட்டுகின்றதோ அது தான் சிந்திக்கக்கூடியது (நினைவிற்கு எட்டுவதாகும்.) இந்த ஆத்மாவோ இந்திரியங்களுக்கு எட்டாமையால் நினைக்க முடியாதது. இவ்வாத்மா எப்படி பாலானது மோர்ப் பிரை யிடுதல் முதலிவற்றால், வேறுபடுகின்றதோ அப்படி விகாரப்படுவதன்று. அவயவங்களற்றதாலும் அவிகாரியாம். அவயவமில்லாதது ஒன்றும் விகாரப்படும் தன்மையுள்ளதாய்க் காணப்படவில்லை அல்லவா? ஆகையினாலே ஆத்மாவை முன் சொன்ன பிரகாரம் அறிந்து கொண்டு "நான் இவர்களைக் கொல்பவன், இவர்கள் என்னால் கொல்லப்படப்போகிறார்கள்" என்று வருத்தப்படத்தகாது.

"நஜாயதே ம்ரியதேவா" என்று தொடங்குகிற முன் (20-வது) ஸ்லோகத்தினாலேயே ஆத்மா நித்தியனென்பதும் நிர்விகாரியென்பதும் சொல்லப்பட்டிருந்தும் மறுபடி இந்த (21-25) ஸ்லோகங்களில் அதையே திருப்பிச்சொல்வதின் காரணம் என்னவென்றால், ஆத்மவஸ்துவை அறிதல் அதிக துர்லபமாதலின் சிறிதும் தெளிவாய் விளங்காத உண்மையானது ஸம்ஸாரி

கள் புத்திக்கு எப்படியாவது எட்டி ஸம்ஸார நிவ்ருத்தியை அடையும்படி செய்யவேண்டும் என்கிற கருணையால் பகவான் வாசுதேவர் மறுபடியும், மறுபடியும் ஷை விஷயத்தை எடுத்துக்கொண்டு அதே பொருளை வேறு சொற்களால் உணர்த்துவதற்காக என்க.

(இராகவேந்திரர்) இந்த சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கிற விசேஷங்களை யுடைய ஈசுவரன் ஸர்வஸ்வதந்திரன், நானவனுக்கு அதீனனாய் யுத்தஞ்செய்து அவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டியவனென்பதாக நினைத்தால் உனக்குத் துக்கத்திற் கேதுவே யிருக்கமாட்டா தென்பது தாத்பரியம். (25)

---

௨௬. 𑌅𑌥 𑌚𑍈𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌨𑍈𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

26. அத(1)-ச-ஏநம்-நித்யஜாதம்-நித்யம்-வா. மந்யஸே-ம்ருதம்,
ததா-அபி-த்வம்-மஹாபாஹோ-ந-ஏநம்-சோசிதும் அர்ஹஸி.

𑌅𑌥	ஒருக்கால்
𑌤𑍍𑌵𑌂	நீ
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை)
𑌨𑌿𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑌂	எப்போதும் பிறப்புள்ளவனாகவும்
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑍃𑌤𑌂𑌵𑌾	எப்போதும் இறப்புள்ளவனாகவும்
𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿	எண்ணினபோதிலும்
𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋	ஓ! தோள்வலிவுடையவனே!
𑌤𑍍𑌵𑌂	நீ
𑌏𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌂	இந்தமாதிரி துக்கிக்க
𑌨𑌾𑌰𑍍𑌹𑌸𑌿	யோக்கியனல்ல

ஒருக்கால் நீ ஆத்மாவை யெப்போதும் பிறப்பிறப் புடையவனாக எண்ணினபோதிலும், ஓ! அர்ஜுனா இந்தமாதிரி துக்கிக்க நீ யோக்கியனல்ல.

---

(1)𑌅𑌥—என்பது, பிறர்மதத்தை அங்கீகரித்துச் சொல்லும் பொருளுடையது. அதாவது ஆத்மா பற்பல தேகங்கள் உண்டாகும் போது பிறக்கிற தென்றும் அந்தந்த உடல்கள் அழியும் போது இறந்து போகிற தென்றும் ஸாமாந்ய ஜனங்கள் எண்ணுகிறபடி வைத்துக்கொண்டாலும் என்பது தாத்பரியம். இதற்கு, ராமாநுஜர் 'தேகமே ஆத்மா வென்று ஒருக்கால் நினைத்தபோதிலும்' என்று தாத்பரியம் செய்திருக்கிறார். (26)

---

௨௭. 𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑍋 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌚 |
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌽𑌰𑍍𑌥𑍇 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ||

27. ஜாதஸ்ய-ஹி-த்ருவ:-ம்ருத்யு:-த்ருவம்-ஜந்ம-ம்ருதஸ்ய-ச, தஸ்மாத்-அபரிஹார்யே-அர்தே-ந-த்வம்-சோசிதும்-அர்ஹஸி.

𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿	பிறந்தவனுக்கோ
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃	மரணம் நிச்சயம்
𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌚	இறந்தவனுக்கும்
𑌜𑌨𑍍𑌮 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂	பிறப்பு நிச்சயம்
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
𑌅𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍍𑌯𑍇 𑌅𑌰𑍍𑌥𑍇	பரிகரிக்க (தவிர்க்க) முடியாத இந்த விஷயத்தில்
𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌂	நீ துக்கப்படுவதற்கு
𑌨 𑌅𑌰𑍍𑌹𑌸𑌿	யோக்கியனல்ல.

பிறந்தவனுக்கு மரணமும், இறந்தவனுக்குப் பிறப்பும் நிச்சய மாகையால் விலக்கக்கூடாத இவ் விஷயத்தைக் குறித்து நீ துக்கப்படுவது யுக்தமல்ல. (27)

---

௨௮. 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌿 𑌭𑌾𑌰𑌤 |
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌨𑌿𑌧𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾 𑌪𑌰𑌿𑌦𑍇𑌵𑌨𑌾 ||

28. அவ்யக்தாதீநி(1)-பூதாநி(2)-வ்யக்தமத்யாநி-பாரத, அவ்யக்தநிதநாநி-ஏவ-தத்ர-கா-பரிதேவநா.

𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	பூதங்கள் (பிராணிகள்)
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑌿	அவ்யக்தத்தை (காணப்படாமையை) ஆதியாகவும்
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌿	காணப்படுதலை மத்தியாகவும்
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌨𑌿𑌧𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌵	அவ்யக்தத்தையே (காணப்படாமையையே) முடிவாக உடையன
𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! அர்ஜுநா!
𑌤𑌤𑍍𑌰	அவ் விஷயத்திலே
𑌪𑌰𑌿𑌦𑍇𑌵𑌨𑌾 𑌕𑌾	புலம்புகை என்ன ?

பூதங்கள் (பிராணிகள்) ஆதியில் (உற்பத்திக்கு முன்), காணப்படாம லிருந்து, மத்தியில் (உற்பத்திக்கும் மரணத்திற்கும் நடுவில்) சிறிது காலம் காணப்பட்டு, முடிவில் (மரணத்திற்கு பின்பு) மறுபடியும் காணப்படாமலே போகின்றன. ஓ! அர்ஜுநா! அந்த விஷயத்தில் புலம்புகை என்ன ? (அதா

வது முதலில் காணப்படாமல், பின்பு காணப்பட்டு, மறுபடியும் மறைந்து போகின்ற ப்ராந்தியான அந்த பூதங்களைப்பற்றி என்ன புலம்புகை என்பது).

---

(1) அவ்யக்தம் - என்பதற்கு, ப்ரதாநம் (அதாவது ப்ரக்ருதி) என்று, ஸ்ரீதரர் அர்த்தம் செய்திருக்கிறார்.

(1) 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 — என்பதற்கு, நீர் நிலம் முதலிய கார்ய காரணங்களின் சேர்க்கையாலாகிய புத்திர மித்ராதிகள் என்று, சங்கரரும்; 'சரீரங்கள்' (தேகங்கள்) என்று ஸ்ரீதரரும்; 'ப்ருதிவீ' (பூமி) முதலான பூதமயமான சரீரங்கள் என்று மதுஸூதன ஸரஸ்வதியும் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(ஸ்வ) இந்த சுலோகத்தைப்போலொத்ததாகிய:—

"𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑌾𑌪𑌤𑌿𑌤𑌃 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌗𑌤𑌃 ।
𑌨𑌾𑌸𑍌 𑌤𑌵 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍃𑌥𑌾 𑌕𑌾 𑌪𑌰𑌿𑌦𑍇𑌵𑌨𑌾 ॥"

'காணாமையினின்று வந்தவன் மறுபடி காணாமைக்கே சென்றனன். அவன் உன்னைச் சேர்ந்தவனல்லன். நீ அவனைச் சேர்ந்தவனல்லன். வீணாய் என்ன புலம்புதல்' என்கிற புராண வாக்யத்தை (மஹாபாரதத்தில் ஸ்திரீபர்வம் - 2 - 13 யில்) பார்க்க. (28)

---

௨௯. 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍇𑌨𑌮𑍍
𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌦𑍍𑌵𑌦𑌤𑌿 𑌤𑌥𑍈𑌵 𑌚𑌾𑌨𑍍𑌯𑌃 ।
𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌚𑍍𑌚𑍈𑌨𑌮𑌨𑍍𑌯𑌃 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑍇𑌨𑌂 𑌵𑍇𑌦 𑌨𑌚𑍈𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 ॥

29. ஆஶ்சர்யவத்-பஶ்யதி-கஶ்சித்-ஏநம்-
ஆஶ்சர்யவத்-வததி-ததா-ஏவ-ச-அந்ய:,
ஆஶ்சர்யவத்-ச-ஏநம்-அந்ய:-ஶ்ருணோதி-
ஶ்ருத்வா-அபி-ஏநம்-வேத-ந-ச-ஏவ-கஶ்சித்.

𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍	ஒருவன்
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை)
𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍	ஆச்சரியமானதுபோல
𑌪𑌶𑍍𑌯𑌤𑌿	பார்க்கிறான்
𑌤𑌥𑍈𑌵	அப்படியே
𑌅𑌨𑍍𑌯𑌃	மற்றொருவனும்
(𑌏𑌨𑌂)	இவனை (ஆத்மாவை)
𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍	ஆச்சரியமானதுபோல

𑌵𑌦𑌤𑌿	பேசுகிறுன்
𑌚𑌾𑌨𑍍𑌯𑌃	மற்றொருவனும்
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை)
𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍	ஆச்சரியமானதுபோல
𑌶𑍃𑌣𑍋𑌤𑌿	கேட்கிறுன்
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌪𑌿	கேட்டும், பார்த்தும், சொல்லியும்
𑌕𑌶𑍍𑌚𑌿𑌚𑍍 𑌚	(அவர்களில்) ஒருவனும்
𑌏𑌨𑌂	இவனை (ஆத்மாவை அறிகிறதேயில்லை
𑌨𑍈𑌵𑌵𑍇𑌦	(சாக்ஷாத்தாய் அனுபவித் தறிகிறதில்லை.)

ஆத்மாவை யொருவன் ஆச்சரிய வஸ்துவைப்போற் பார்க்கிறுன. (அதாவது ஒருவராலும் முன் பார்க்கப்படாத ஒரு அத்புதமானது, தற்செயலாய்ப் பார்க்கப்படுவதுபோல பார்க்கிறுன்) அப்படியே மற்றொருவன் ஆச்சரிய வஸ்துவைப்போற் சொல்லுகிறுன் ; மற்றொருவன் ஆச்சரியவஸ்துவைப்போல் கேட்கிறுன். கேட்டும், பார்த்தும், சொல்லியும் அவர்களில் ஒருவனும் ஆத்மாவை யுள்ளபடி யறிகிறதே யில்லை. (சாக்ஷாத்தாய் அனுபவிக்கிறதில்லை.)

(சங்கரபாஷ்யம்) இந்த சுலோகத்திற்கு வேறு ஒருவிதமாயும் அர்த்தம் செய்யலாம். அதாவது - ஆத்மாவைப் பார்ப்பவனும், சொல்பவனும், கேட்பவனும் உலகத்தில் ஆச்சரியம்போ லாகிறுர். (பிறரால் ஆச்சரியப்படத்தக்கவ ருகிறுர்). அப்படிப்பட்டவன் பல ஆயிரத்தில் ஒருவனே யாவன். ஆதலால் ஆத்மாவை அறிதல் மிக்க அருமையானது.

(ஸ்ரீதரர்) சாஸ்திரம் ஆசாரியோபதேசம் இவைகளினுல் அடைந்த யோகத்தினுலே ஆத்மாவைப் பார்க்கிற ஒருவன், ஸர்வ வியாபகனுயும் ஞாநாநந்த ஸ்வரூபனுயும், உலக விலக்ஷணனுயும் தன்னு லெப்பவும் பார்க்கப்பட் டிராதவனுயும் அவ்வாத்மா இருப்பதினுலே ஆச்சரியப்படுகிறுன். மற்றொருவன் சாஸ்திராதிகளால் ஆத்மா மேற்சொன்ன விதமான ஸ்வரூபமுடையவனென்று தெரிந்துகொண்டதை யொருவனுக்குச் சொல்லுகிறுன். அப்படிச் சொல்லும்போது தான் தெரிந்து சொல்லுகிற அந்த ஆத்ம ஸ்வரூபத்தை நினைத்து ஆச்சரியப்படுகிறுன். இப்படிச் சொல்வதைக் கேட்டவன் இப்படிப்பட்ட வஸ்து வுண்டாவென்று கேட்டவுடனே ஆச்சரியப்படுகிறுன். இப்படிப் பார்த்தவனுவது, சொன்னவனுவது, கேட்டவனுவது நித்தியாநந்த ஸ்வரூபனுன ஆத்மாவைப் பூரணமா யறிந்தவ னல்ல வென்பது தாத்பர்யம்.

(ஸ்வ) கடோபநிஷத் இரண்டாவது வல்லி ஏழாவது மந்திரம் இந்த சுலோகத்திற் கொத்தது. "𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌯𑌾𑌪𑌿 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌯𑍋 𑌨 𑌲𑌭𑍍𑌯𑌃 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑍋𑌪𑌿 𑌬𑌹𑌵𑍋 𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌃 । 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑍋 𑌵𑌕𑍍𑌤𑌾 𑌕𑍁𑌶𑌲𑍋𑌸𑍍𑌯 𑌲𑌬𑍍𑌧𑌾 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌕𑍁𑌶𑌲𑌾𑌨𑍁𑌶𑌿𑌷𑍍𑌟𑌃 ॥" அந்த ஆத்ம ஸ்வரூபத்தை அநேகர் கேட்கக் கிடையாதவர்களா யிருக்கிறார்கள். அநேகர் கேட்டாலும் அறிந்துகொள்ளும் திறமையற்றவர்களா யிருக்கிறார்கள். இந்த ஆத்மாவை வுபதேசிக்கிறவனும் ஆச்சரியப்படுகிறான். உபதேசம் பெற்றவனும் ஆச்சரியப்படுகிறான். ஆத்மாவை யறிகிறவனும் ஆச்சரியப்படுகிறான்.

பகவான் உபதேசிக்க ஆரம்பித்த ஆத்ம தத்துவ விஷயத்தை இந்த 29, 30 சுலோகங்களோடு சொல்லி முடிக்கிறார். பிரகிருதத்தில் பேசி வருகின்ற இந்த ஆத்மாவை அறிதல் மிக்க அருமையானது. அவன் 'அவ்யக்தனும் அப்பிரமேயனு' மிருப்பதால் அவனை அறிய முடியாததற்குக் காரணமாய் உள்ள மயக்கம் சகல ஜனங்களுக்கும் ஸமானம்தான். அநேக ஜந்மங்களில் செய்த புண்ணிய வசத்தாலன்றி ஆத்மவிசாரம் செய்ய பிரவ்ருத்தி உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட பிரவ்ருத்தி யுண்டாவது அநேகமாயிரம் பெயர்களில் ஒருவனுக்குத் தான். அப்படிப் பிரவ்ருத்திப் பவரில் யாரேனும் ஒருவன் தான் இந்த ஆத்மாவை அத்புதமாகப் பார்க்கிறான், அல்லது சொல்லுகிறான், அல்லது கேட்கிறான். அப்படிப் பார்த்தும், சொல்லியும், கேட்டபோதிலும் இந்த ஆத்மாவை உள்ளபடி அவர்கள் ஸாக்ஷாத்தாய் அனுபவித் தறிகிறதில்லை. அதாவது அப்படி ஸாக்ஷாத்தாய் அறிகிறவர்கள் வெகு துர்லபம் என்பது கருத்து. "𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌯𑌤𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇" என்று பகவான் பின் வருகிற 7 வது அத்தியாயம், 3 வது சுலோகத்தில் சொல்வதைப் பார்க்க. (29)

---

௩௦. 𑌦𑍇𑌹𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌵𑌧𑍍𑌯𑍋𑌯𑌂 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑌤 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

30. தேஹீ-நித்யம்-அவத்ய:-அயம்-தேஹே-ஸர்வஸ்ய-பாரத,
தஸ்மாத்-ஸர்வாணி-பூதாநி-ந-த்வம்-ஶோசிதும்-அர்ஹஸி.

𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! அர்ஜுநா!
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑍇	எல்லாருடைய தேகமானது
(𑌵𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌪𑌿)	கொல்லப்பட்டபோதிலும்
𑌅𑌯𑌂 𑌦𑍇𑌹𑍀	இந்தத் தேகத்தையுடைய ஆத்மாவானவன்
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	ஒருபோதும்

𑌅𑌵𑌧𑍍𑌯𑌃	கொல்லப்படத்தக்கவனல்ல
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	ஸகல பிராணிகளைக் குறித்தும்
𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌂	நீ துக்கப்படுகைக்கு
𑌨𑌾𑌰𑍍𑌹𑌸𑌿	தகுந்தவனல்ல.

ஓ! அர்ஜுனா! எல்லாருடைய தேகமானது கொல்லப்பட்டபோதிலும் இந்த தேகத்தையுடைய ஆத்மாவானவன் ஒருபோதும் கொல்லப்படத்தக்கவனல்ல; ஆகையினாலே (பீஷ்மர் முதலான) எந்தப் பிராணிகளைக் குறித்தும் துக்கப்படுவதற்கு நீ தகுந்தவனல்ல.

---

௩௧. 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

31. ஸ்வதர்மம்-அபி-ச-அவேக்ஷ்ய-ந-விகம்பிதும்-அர்ஹஸி,
தர்ம்யாத்-ஹி-யுத்தாத்-ஶ்ரேய:-அந்யத்-க்ஷத்ரியஸ்ய-ந-வித்யதே.

(𑌤𑍍𑌵𑌂)	நீ
𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂	ஸ்வ (உன்) தருமத்தை
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌅𑌪𑌿 𑌚	நோக்கும்பொழுதும்
𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑍁𑌂	நடுங்க அல்லது தயங்க
𑌨𑌾𑌰𑍍𑌹𑌸𑌿	யோக்கியனல்ல
𑌹𑌿	ஏனென்றால்
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌤𑍍 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍	நியாயமான யுத்தத்தைக்காட்டிலும்
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃	வேறு நன்மையானது
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯	க்ஷத்திரியனுக்கு
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	இல்லை.

நீ உன் வருணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற (அதாவது க்ஷத்திரியனுக்கு யுத்தஞ் செய்வது ஸ்வதருமமானதால்) அந்த தருமத்தை நோக்கும் பொழுதும் யுத்தஞ் செய்யத் தயங்குவது உனக்குச் சரியல்ல. ஏனென்றால் க்ஷத்திரியனுக்கு நியாயமான யுத்தத்தைக் காட்டிலும் நன்மையானது வேறு இல்லை.

(ராமாநுஜர்) அக்கினிஷ்டோமாதி யாகங்களில் பசு ஹிம்ஸை எப்படித் தருமமானதோ, அப்படியே க்ஷத்திரியனாகிய உனக்கு நியாயமாய் நேரிட்டிருக்கிற இந்த யுத்தம் ஸ்வதருமமானதால் அதனால் தோஷம் உண்டாகாது.

(ஸ்வ) பரமார்த்த தத்வத்தை உத்தேசித்து சோகமோகமடைய நியாயமில்லை என்பது மாத்திரமல்ல. நீ, யுத்தம் க்ஷத்திரியதருமம் என்பதையும் ஆலோசித்துப் பார்த்து, க்ஷத்திரியனான உனக்கு இயற்கையாகவே அமைந்துள்ள தருமத்தினின்றும், பின்னிடுதல் தகாது. அந்த யுத்தம் பூமியை ஜயிப்பதன் மூலமாய் தருமத்திற்கும் குடிகளைக் காப்பதற்கும் பயன் படுவதால் நியாயத்தை விட்டு நீங்காத சிறந்த தருமமாம். அந்த நியாயமான யுத்தத்தைக் காட்டிலும் க்ஷத்திரியனுக்கு நன்மையானது வேறு இல்லை என்பது தாத்பர்யம். (31)

---

௩௨. 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾 𑌚𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌪𑌾𑌵𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑍁𑌖𑌿𑌨𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌮𑍀𑌦𑍃𑌶𑌮𑍍 ॥

32. யத்ருச்சயா-ச-உபபந்நம்-ஸ்வர்கத்வாரம்-அபாவ்ருதம்,
ஸுகிநஃ-க்ஷத்திரியாஃ-பார்த-லபந்தே-யுத்தம்-ஈத்ருசம்.

𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! அர்ஜுநா!
𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾	தற்செயலாய்.
𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌂	நேர்ந்திருக்கின்றதும்
𑌅𑌪𑌾𑌵𑍃𑌤𑌂	திறந்துள்ள
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌚	ஸ்வர்க்க வாசலுமான
𑌈𑌦𑍃𑌶𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑌂	இப்படிப்பட்ட யுத்தத்தை
(𑌯𑍇) 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃	எந்த க்ஷத்திரியர்கள்
𑌲𑌭𑌨𑍍𑌤𑍇	அடைகிறார்களோ
𑌤𑍇 𑌸𑍁𑌖𑌿𑌨𑌃	அவர்கள் ஸுகிகள்.

ஓ! அர்ஜுநா! தற்செயலாகவே நேர்ந்திருக்கின்றதும், திறந்திருக்கிற ஸ்வர்க்க வாசலுமான இப்படிப்பட்ட யுத்தத்தைச் செய்கிற க்ஷத்திரியர்கள் ஸுகிகள்; என்றால், தரும யுத்தத்தி லிறந்தவர்களுக்கு ஸ்வர்க்க வாசல் திறந்திருக்கிறதென்பது தாத்பர்யம். (32)

---

௩௩. 𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌤𑌤𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥

33. அத-சேத்-த்வம்-தர்ம்யம்-இமம் ஸங்க்ராமம்-ந-கரிஷ்யஸி,
ததஃ-ஸ்வதர்மம்-கீர்த்திம்-ச-ஹித்வா-பாபம்-அவாப்ஸ்யஸி.

𑌅𑌥	அல்லாமலும்
𑌤𑍍𑌵𑌂	நீ
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌇𑌮𑌂	நியாயமான இந்த

𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌮𑌂	யுத்தத்தை
𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌚𑍇𑌤𑍍	செய்யாமற் போவாயாகில்
𑌤𑌤𑌃	அதனுல்
𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂	ஸ்வதர்மத்தையும்
𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚	புகழையும்
𑌹𑌿𑌤𑍍𑌵𑌾	இழந்து
𑌪𑌾𑌪𑌂	பாபத்தையே
𑌅𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿	அடைவாய்.

ஸ்வர்க்கப் பிரயோஜனத்தை இழப்பதுமாத்திர மல்லாமல் நீ தருமத்தோடு கூடின இந்த யுத்தத்தைச் செய்யாமல் போவாயாகி லதனுலே உன்னுடைய (க்ஷத்திரிய தருமமாகிய) ஸ்வதர்மத்தையும் சிவபிரான் முதலானவர்களை எதிர்த்ததினுல் அடைந்த புகழ்ச்சியையு மிழந்து பாபத்தையே அடைவாய். (33)

---

௩௪. 𑌅𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌽𑌵𑍍𑌯𑌯𑌾𑌮𑌂 ।
𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌰𑌣𑌾𑌦𑌤𑌿𑌰𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

34. அகீர்திம்-ச-அபி-பூதாநி-கதயிஷ்யந்தி-தே-அவ்யயாம்,
ஸம்பாவிதஸ்ய-ச-அகீர்திஃ மரணாத்-அதிரிச்யதே.

𑌅𑌪𑌿 𑌚	மேலும்
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	(பிராணிகள்) ஜனங்கள்
𑌅𑌵𑍍𑌯𑌯𑌾𑌮𑌂	நீண்டகாலம்
𑌤𑍇	உன்னுடைய
𑌅𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚	அபகீர்த்தியையும்
𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿	சொல்லுவார்கள்
𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌸𑍍𑌯	நன்குமதிக்கப்பட்டிருக்கிறவனுக்கு
𑌅𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃	அபகீர்த்தியானது
𑌮𑌰𑌣𑌾𑌤𑍍	மரணத்தைவிட
𑌅𑌤𑌿𑌰𑌿𑌚𑍍𑌯𑌤𑍇	அதிகமாகும்

மேலும், ஜனங்கள் நீண்டகாலம் உன்னுடைய அபகீர்த்தியையுஞ் சொல்லுவார்கள். நன்கு மதிக்கப்பட்டிருக்கிறவனுக்கு அபகீர்த்தியானது மரணத்தைவிட அதிகமாகும். (34)

---

௩௫. 𑌭𑌯𑌾𑌦𑍍𑌰𑌣𑌾𑌦𑍁𑌪𑌰𑌤𑌂 𑌮𑌂𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 ।
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌂 𑌬𑌹𑍁𑌮𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌲𑌾𑌘𑌵𑌮𑍍 ॥

35. பயாத்-ரணாத்-உபரதம்-மம்ஸ்யந்தே-த்வாம்-மஹாரதா:,
யேஷாம்-ச-த்வம்-பஹுமதோ-பூத்வா-யாஸ்யஸி-லாகவம்.

மஹாரதா:	மஹா ரதிகர்கள்
த்வாம்	உன்னை
ரணாத்	யுத்தத்தினின்றும்
பயாத் உபரதம்	பயத்தினாலே பின்னடைந்தவனாக
மம்ஸ்யந்தே	நினைப்பார்கள்
த்வம்	நீ
யேஷாம்	எவர்களிடத்தில்
பஹுமத: (பஹுமான:)	பெருமை பெற்றிருக்கிறாயோ
தே	அவர்களிடத்தில்
பூத்வா ச	மறுபடியும்
லாகவம் யாஸ்யஸி	சிறுமையைப் பெருவாய்.

மகா ரதர்கள் உன்னை யுத்தத்தினின்று பயத்தினால் பின்னடைந்தவனாக நினைப்பவர்கள். நீ எவர்களிடத்தில் பெருமை பெற்றிருக்கிறாயோ அவர்களிடத்தில்இப்பொழுது சிறுமையைப் பெருவாய். (35

---

௩௬. அவாச்யவாதாம்ஶ்ச பஹூந் வதிஷ்யந்தி தவாஹிதா: |
நிந்தந்தஸ்தவ ஸாமர்த்யம் ததோ து:கதரம் நு கிம் ||

36. அவாச்யவாதாந்-ச-பஹூந்-வதிஷ்யந்தி-தவ-அஹிதா:,
நிந்தந்த:-தவ-ஸாமர்த்யம்-தத:-து:கதரம்-நு-கிம்.

தவ அஹிதா:	உன்னுடைய சத்ருக்கள்
தவ ஸாமர்த்யம்	உன்னுடைய ஸாமர்த்தியத்தை
நிந்தந்த:	நிந்திக்கிறவர்களாக
பஹூந்	அநேகமான
அவாச்யவாதாம்ஶ்ச	சொல்லத்தகாத வார்த்தைகளையும்
வதிஷ்யந்தி	சொல்லுவார்கள்
தத:	அதைப் பார்க்கிலும்
து:கதரம்	அதிக துக்கம்
கிம் நு	என்னவிருக்கிறது.

உன்னுடைய சத்ருக்கள் உன்னுடைய ஸாமர்த்தியத்தை நிந்தித்து, சொல்லத்தகாத அநேக வார்த்தைகளையுஞ் சொல்லுவார்கள்; அதைப் பார்க்கிலும் அதிக துக்கமென்ன விருக்கிறது? (46)

௩௭. 𑌹𑌤𑍋 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾 𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌮𑌹𑍀𑌮𑍍
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥

37. ஹதோ.வா.ப்ராப்ஸ்யஸே.ஸ்வர்கம்.ஜித்வா-வா-போக்ஷ்யஸே
தஸ்மாத்-உத்திஷ்ட-கௌந்தேய-யுத்தாய-க்ருதநிஸ்சயஃ.[மஹீம்

(𑌤𑍍𑌵𑌂) 𑌹𑌤𑍋𑌵𑌾	நீ கொல்லப்பட்டாலோ
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿	ஸ்வர்க்கத்தை அடைவாய்
𑌜𑌿𑌤𑍍𑌵𑌾𑌵𑌾	ஜயித்தாலோ
𑌮𑌹𑍀𑌂 𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇	இராஜ்யத்தை அநுபவிப்பாய்
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! அர்ஜுனா!
𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃	போர்செய்ய நிச்சயித்தவனாக
𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠	எழுந்திரு

ஓ! அர்ஜுனா! நீ கொல்லப்பட்டாலோ ஸ்வர்க்கத்தை யடைவாய்; ஜயித்தாலோ இராஜ்யத்தை யனுபவிப்பாய்; ஆகையினாலே, யுத்தத்தின் பொருட்டு நிச்சயஞ் செய்துகொண் டெழுந்திரு. (37)

---

௩௮. 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌸𑌮𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌 𑌜𑌯𑌾𑌜𑌯𑍌 ।
𑌤𑌤𑍋 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵 𑌨𑍈𑌵𑌂 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥*

38. ஸுகது:கே ஸமே.க்ருத்வா(1)-லாபாலாபௌ-ஜயாஜயௌ,
ததஃ-யுத்தாய-யுஜ்யஸ்வ-ந-ஏவம்-பாபம்-அவாப்ஸ்யஸி.

𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇	சுகதுக்கங்களை
𑌸𑌮𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾	ஸமமாக செய்து (எண்ணி)
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌	லாபநஷ்டங்களையும்
𑌜𑌯𑌾𑌜𑌯𑍌	ஜயாபஜயங்களையும்
(𑌸𑌮𑍌 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾)	ஸமமாக (வெண்ணி)
𑌤𑌤𑌃	அதற்குப்பிறகு
𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵	யுத்தத்திற்கு சித்தனாகக்கடவாய்
(𑌤𑍍𑌵𑌂) 𑌏𑌵𑌂 (𑌚𑍇𑌤𑍍)	நீ இவ்வித நிச்சய முடையவனானால்
𑌪𑌾𑌪𑌂 𑌨𑌾𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿	பாபத்தை அடையமாட்டாய்.

---

* 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 என்று ஒரு பாடமுமுண்டு.

சுகதுக்கங்களையும் லாப நஷ்டங்களையும், ஜயாபஜயங்களையும் ஸமமாக பாவித்து (நினைத்து) க்கொண்டு, பிறகு யுத்தத்திற்குச் சித்தனாகக் கடவாய். நீ இப்படிப்பட்ட நிச்சயமுள்ளவனாக (யுத்தம் செய்வாய்) ஆகில் பாபத்தை அடையமாட்டாய்.

---

(1) ஸமே க்ருத்வா-ஸமமாகச் செய்துகொண்டு என்றால், சுகதுக்கம் முதலானதுகளினால், ராகத்வேஷங்களை (விருப்பு வெருப்புகளை) அடையாமல் அவைகளைச் ஸமமாக நினைப்பது என்பது பொருள்.

(ஸ்ரீதரர்) சுக துக்கம், இலாப நஷ்டம், ஜயாபஜயமென்கிற பதார்த்தங்கள் காரணகாரியங்களாக விருக்கின்றன. சுகதுக்கத்திற்குக் காரணம் இலாப நஷ்டம். இலாப நஷ்டத்திற்குக் காரணம் ஜயாபஜயங்கள்; ஆகையால், காரணங்காரிய மிரண்டையும் விட்டுவிட வேண்டுமென்பது தாத்பரியம். (38)

---

௩௯. ஏஷா தே அபிஹிதா ஸாங்க்யே
புத்திர்யோகே த்விமாம் ஶ்ருணு ।
புத்த்யா யுக்தோ யயா பார்த
கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி ॥

39. ஏஷா-தே-அபிஹிதா-ஸாம்க்யே-
புத்திः-யோகே-து-இமாம்-ஶ்ருணு,
புத்த்யா யுக்தः-யயா-பார்த-
கர்மபந்தம்(1)-ப்ரஹாஸ்யஸி.

ஹே பார்த	ஓ! அர்ஜுன!
ஸாங்க்யே	ஆத்மதத்துவத்தில்
ஏஷா புத்திः	இந்த புத்தியானது
தே	உனக்கு
அபிஹிதா	சொல்லப்பட்டது
(த்வம்) யயா புத்த்யா	நீ எப்படிப்பட்ட புத்தியோடு
யுக்தः	கூடினவனானால்
கர்மபந்தம்	கர்மமாகிய கட்டை
ப்ரஹாஸ்யஸி	விடுவாயோ
(தாம்)	அப்படிப்பட்ட
யோகே து	யோக விஷயத்தில்
இமாம் புத்திம் ஶ்ருணு	இந்த (யோக) புத்தியைக் கேள்

ஓ! அர்ஜுனா! ஆத்மதத்துவ விஷயத்தில் இந்தப்புத்தியானது உனக்கு (இதுவரையில்) சொல்லப்பட்டது. எப்படிப்பட்ட புத்தியோடு கூடினவனால் கருமபந்தத்திலிருந்து விடுவித்துக்கொள்ளுவாயோ அப்படிப்பட்ட ஆத்ம ஸ்ரீயாநத்தை அடையவழியாகிய (கரும) யோகவிஷயமான புத்தியைச்சொல்லுகிறேன்—கேள்.

---

(1) கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி - கர்மமயாகிய தர்மம் அதர்மமென்று பெயரையுடைய பந்தத்தை நீக்கிக்கொள்வாய். அதாவது ஈச்வராநுக்கிரஹத்தால் வரும் ஞானத்தைப் பெருவதினாலேயே அந்த பந்தத்தை விலக்கிக்கொள்வாய் என்பது கருத்து.

(ஸ்வ) இந்த ஸ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற சாங்கிய புத்தி யோகபுத்தி என்பது இன்னதென்றும், அவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசமும், தெளிவாய்த்தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஸங்க்யாயதே இதி ஸங்க்யா = நன்றாய்ப் பரமார்த்த தத்துவத்தை எதானது பிரதிபாதிக்கிறதோ (விளக்குகிறதோ) அது ஸங்க்யா, அதாவது உபநிஷத். அந்த உபநிஷத்துக்களால் எந்த பரமார்த்ததத்துவமானது நிரூபிக்கப்படுகிறதோ அது தான் சாங்கிய மென்பது. இவ் ஆத்மதத்வமானது பகவானால் முன் சுலோகங்களில் உணர்த்தப்பட்டதைத்தான் இதில் சாங்கியமென்று சொல்லப்பட்டது. ஆத்மாவுக்கு பிறப்பு முதலிய விகாரங்கள் இல்லாமையினால் ஆத்மா அகர்த்தா என்னும் பிரகரணத்தின் பொருளை ஆராய்ந்து அறிவதால் அவ்வாத்மதத்வ விஷயமாக யாதொரு நிச்சயபுத்தி உண்டாகின்றதோ அது சாங்கிப புத்தியாம்; அது எந்த ஞானிகளுக்கு உறியதோ அவர்கள் சாங்கியர்களாவர். இந்த சாங்கிய புத்தி உண்டாவதற்கு முன் ஆத்மாவை தேகம் முதலியவற்றினின்றும் வேறாகவும், கர்த்தாவாகவும் போக்தாவாகவும் மற்றும் இத்தன்மையதாகவும் பாவித்துக்கொண்டு அதற்குத்தக்கபடி தர்மா தர்மங்களின் பகுத்தறிவோடு கூடி முக்திக்கு ஸாதனமான கர்மத்தை அநுஷ்டித்தல் யோகமென்பதாம், அது விஷயமான நிச்சய புத்தி தான் யோக புத்தியென்பது; அது ஸ்வகர்மத்தைச் செய்யவேண்டிய அதிகாரிகளாகிய எவர்களுக்கு உறியதாயுள்ளதோ அவர்கள் தான் யோகிகளென்பவர். கர்தாவென்னும் உணர்வையும் அனேகம் என்னும் உணர்வையும் சார்ந்து நிற்பதான ஞானமானது, அகர்த்தா என்னும் உணர்வையும் ஏகம் என்னும் உணர்வையும் சார்ந்து நிற்பதான ஞானத்தோடு ஒன்று சேர்ந்து நிற்கக் கூடாமையைக்கண்டு பகவான் ஸாங்கியபுத்தி யோகபுத்தியென்று இருவகை

நிஷ்டைகளைத்தனித்தனியாகப் பிரித்துக்கூறுகிறார். ஸம்ஸாரத்திற்குக் காரணமான அக்ஞானத்தை நேராகப் போக்குகின்ற ஸாங்கியமாகிய இந்த ஆத்ம ஞானமானது பரம்பொருளை உள்ளபடி ஆராயுமாறு முன் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட ஞானத்தை அடைவதற்கு வழியாய் த்வந்தங்களை பாராட்டாமல் பற்றின்றி ஈசுவரனை ஆராதிக்கும் பொருட்டுசெய்யும் கர்மானுஷ்டானமான கர்மயோகமும் ஸமாதி யோகமுமாகிய யோகத்தைப்பற்றிய புத்தியானது இதுமுதல் சொல்லப்படுகிறது. ஆனால் 31-வது சுலோகம் முதல் 38-வது சுலோகம் வரையில் உலக நடையான நியாயமானது அர்ஜுனன் சோக மோகங்களைப் போக்குவதற்காக நடுவில் எடுத்துச் சொல்லப்பட்டதே யொழிய அவைகளினால் ஆத்மதத்தவத்தை விளக்கினதாக கொள்ளக்கூடாது. ஆனால் பரம்பொருளைக்காட்டுவதே. எடுத்துக்கொண்ட விஷயமாதலின் இந்த சுலோகத்தில் அதை, யோகத்தி நின்று பகுத்துக்காட்டி முடிக்கிறார். இவ்விதம்நூலின் விஷயத்தை பகுத்துக் காட்டினால்தான் கேட்பவருக்குதெரிந்து கொள்ள எளிதாக விருப்பதுமன்றியில் பின்வருகிற 3-வது அத் 3-வது சுலோகத்திற்கும் பொருந்தும்.

சுவேதாசுவதரோபநிஷத் 6-வது அத்தியாயம் 13-வது மந்திரத்தில் "நித்யோ, நித்யாநாம்......தத்காரணம் ஸாங்கியயோகாதி கம்யம்" என்று பிரயோகிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க. (39)

---

௪0. 𑌨𑍇𑌹𑌾𑌭𑌿𑌕𑍍𑌰𑌮𑌨𑌾𑌶𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌮𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇 𑌮𑌹𑌤𑍋 𑌭𑌯𑌾𑌤𑍍 ॥

40. ந-இஹ-அபிக்ரமநாஶ:-அஸ்தி-ப்ரத்யவாய:-ந-வித்யதே |
ஸ்வல்பம்-அபி-அஸ்ய-தர்மஸ்ய-த்ராயதே-மஹத:-பயாத் ||

𑌇𑌹	இந்தமோக்ஷமார்க்கமாகிய கருமயோகத்தில்
𑌅𑌭𑌿𑌕𑍍𑌰𑌮𑌨𑌾𑌶𑌃 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	தொடங்குவது வீணாகாது
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌃	தோஷமானது (குற்றமானது)
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	வராது
𑌅𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯	இந்த கருமயோகமாகிய தருமத்தினுடைய
𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌮𑌪𑌿	சுவல்ப பாகமுங்கூட
𑌮𑌹𑌤𑌃	மிகப்பெரிதான
𑌭𑌯𑌾𑌤𑍍	ஜநநமரணமாகிய பயத்திலிருந்து
𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇	ரக்ஷிக்கின்றது.

முக்திக்கு வழியாயுள்ள இந்த கருமயோகத்தில் ஆரம்பம்செய்வது வீணாகாது (அதாவது இதில் செய்யும் பிரயத்தினத்திற்கு நிச்சயமாய் பலன் கிடைக்கும்). தோஷமானது உண்டாகாது (அதாவது வைத்தியம் செய்வதில் சிலவேளை அனர்த்தம் நேரிடுவதுபோல் நேரிடாது). இந்த கருமயோகமாகிய தருமத்தினுடைய சிறிய பாகமுங்கூட (அதாவது இந்த யோகத்தை சிறிது அனுஷ்டித்தலும்) மிகப்பெரிதான ஜநநமரண பயத்திலிருந்து ரக்ஷிக்கும்.

(ஸ்ரீதரர்) வியவசாயம் முதலிய கருமங்களைச் செய்ய ஆரம்பித்து நடுவில் விட்டுவிடுவதினால் அல்லது இடையூறு நேரிட்டு அதினால் நடத்தக்கூடாமை யாவதினால் எப்படி யந்தப்பயிர் பிரயோஜனத்தைக் கொடுக்காமல் வீணாய்ப் போய்விடுமோ அப்படி நிஷ்காமகருமம் வீணாகாது. செய்தவரையில் மோக்ஷ ஸாதனமாகிய பெரிய பிரயோஜனத்தை யுண்டாக்குமென்பது தாத்பரியம்.

(இராகவேந்திரர்) 40-வது சுலோகம் முதல் 44-வது சுலோகம் வரையில் காம்மிய (பலன் வேண்டுமென்கிற ஆசையுடன் கூடின) கருமம் நிந்திக்கப்படுகிறது. (40)

சக. வ்யவஸாயாத்மிகா பு³த்³தி⁴ரேகேஹ குருநந்த³ந |
ப³ஹுஶாகா² ஹ்யநந்தாஶ்ச பு³த்³த⁴யோऽவ்யவஸாயிநாம் ||

41. வ்யவஸாயாத்மிகா (1)-புத்திஃ-ஏகா (2)-இஹ (3)-குருநந்தந |
பஹுசாகாஃ ஹி-அநந்தாஸ்ச-புத்தயஃ-அவ்யவஸாயிநாம் (4)

ஹே குருநந்த³ந	ஓ குருவம்சத்திற் பிறந்தவனே!
இஹ	இந்த சிரேயோமார்க்கத்தில்
வ்யவஸாயாத்மிகா	நிச்சயஸ்வரூபமான
பு³த்³தி⁴ஃ	புத்தியானது
ஏகா ஹி	ஒன்றே தான்
அவ்யவஸாயிநாம்	நிச்சய புத்தியில்லாதவர்களுடைய
பு³த்³த⁴யஃ	புத்திகள்
ப³ஹுஶாகா²ஃ	பலபிரிவுள்ளவைகளாயும்
அநந்தாஶ்ச	அநேகங்களாயு மிருக்கின்றன

ஓ! அர்ஜுனா! இந்த சிரேயோமார்க்கத்தில் நிச்சய ஸ்வரூபமான புத்

தியானது ஒன்றேதான். நிச்சப புத்தியில்லாதவர்களுடைய புத்திகள் பல பிரிவுள்ள வைகளாயு மநேகங்களாயு மிருக்கின்றன.

---

(1) வ்யவஸாயபுத்தி-என்றால் (ஸ்ரீதரா) ஈசுவர பக்தியினாலே நான் சம்சாரமாகிய சமுத்திரத்தைத் தாண்டுவேன் என்கிற நிச்சயமான புத்தி; (ரமாநுஜர்)பரமாத்மாவைத் தெரிந்து நான் செய்யப்பட்ட வேதோக்தமான சகல கருமங்களையும் அந்தப் பரமாத்மாவுக்கு அர்பணஞ்செய்து அதினாலே யேநான் கடைத்தேறுகிறேனென்கிற நிச்சயமான புத்தி;(இராகவேந்திரர்) சாஸ்திரப் பிரமாணங்களினால் நிர்ணயிக்கப்பட்ட பரமார்த்தமானதும் ஈசுவர விஷமானதுமான புத்தி.

(2) ஏக- (ராமாநுஜர்) ஒன்றே, என்றால் மோக்ஷமாகிய பலனு மொன்றே, அதற்குச் ஸாதனமுமொன்றேயென்று தாத்பரியம்.

(3), இஹ-என்றால் (ரர்மர்நுஜர்) சாஸ்திரோக்தமான கருமத்தில்,

(4) அவ்யவஸாயிநாம்-(ஸ்ரீதரர்) பக்தியற்ற காம்மிய கருமிகள்.

(சங்கரபாஷ்யம்) ஸாங்கியத்தைப்பற்றியும் யோகத்தைப்பற்றியும் முன் கூறியுள்ள புத்தியின் லக்ஷணம் இதில் சொல்லப்படுகிறது. இந்த சிரேயோமார்க்கத்தில் நிச்சய சுவரூப புத்தி ஒன்றுதான். அது சரியான ப்ரமாணத்தினின்றும் உண்டானதால், மற்ற பல கிளைகளையுடைய விபரீத புத்திகளை வரவொட்டாமல் தடுக்கிறது. ஆனால் எந்த விபரீத புத்திகள் பல கிளைகளாகப் பிரிந்து செல்வதனால் ஸம்ஸாரம் முடிவில்லாமல் எப்பொழுதும் பரவிநிலை பெருகின்றதோ, சரியான ப்ரமாணத்தால் உண்டாகும் விவேக புத்தியினால் எந்த அளவிறந்த பேதபுத்திகள் ஒழிந்து ஸம்ஸாரமும் ஒழிந்திடுகின்றதோ அந்த விபரீத புத்திகள் அளவிறந்தனவே. எவர்களுக்கு இவை உள்ளனவெனில், உறுதியற்றவர்களுக்கு சரியான ப்ரமாணத்தால் உண்டான விவேகஞானம் இல்லாதவர்களுக்கு என்றபடி.

(ஹூா) நிச்சயபுத்தி யொன்றே யென்றும், அநிச்சயபுத்தி பலவென்றும் இதிற் சொல்லப்பட் டிருக்கிறது. அநிச்சய புத்திஎன்பது காம்ய கரும விஷயத்திற்குக் சம்பந்தப்பட்டது. அதெப்படி யென்றால், ஸ்வர்க்கமடைய இச்சையுள்ளவன் ஜ்யோதிஷ்டோமமென்கிற யாகத்தையும், பசுக்கள் அதிகமாய் வேண்டுமென்கிற இச்சையுள்ளவன் சத்திரயாகத்தையும், செய்ய வேண்டியதென்றும்,இப்படியே ஒவ்வொரு கருமத்திற்கு மொவ்வொரு பலன் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பலன் றனக்குக்கிடைக்க வேண்டுமென்கிற விச்சையுடையவன், எந்தக்கருமத்திற்கு விசேஷ பலனும் கருமஞ் செய்

வதில் பிரயாசை சொற்பமுமுள்ள தென்பதைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். பிறகு அதைச் செய்ய இடம், பொருள், ஏவல் இவைகளைத் தேட வேண்டும். இவைகளெல்லாமநுகூலமாய் யக்ஞாதி கருமங்களை யாரம்பித்தால் அதில் யாதொரு இடையூறில்லாமல் முடியவேண்டும். யாதொரு இடையூறு நேரிட்டால் செய்த காரியம் பிரயோஜன மற்றுப்போவது மாத்திரமல்ல, பாவமுமுண்டாகும்; காம்மியகருமமாகிய விதில் இவ்வளவு நிர்ப்பந்தமிருப்பதால், இதைச்செய்பவனுக்குப் பலபிரிவுள்ள அநேக புத்திகளென்று சொல்லப்பட்டது. இவ்வளவு பிரயாசைப்பட்டுச் செய்வதற்குப் பலன்கொடுக்குந் தேவதையானது ஒன்றேயென்றால், அப்படியுமில்லை. இந்திரன், அக்கினி, வாயு முதலான பல தேவர்களாயிருக்கிறார்கள். அவர்களாற் கொடுக்கப்படும் பலனோ, சுவர்க்கமு மதற்குத் தாழ்ந்தவைகளுமேயன்றி யதைவிடச் சிரேஷ்டமானதுமல்ல, பலனுமொன்றல்ல, சுவர்க்க முதலியவைகளை யனுபவிப்பவன் குறித்த காலம்வரையில் அவ்விடமிருந்து பிறகு ஜன்மமெடுக்க வேண்டியதேயாகிறது. ஜநநமரணங் களிவைகளைவிட்டு நீங்குவதேயில்லை. ஆகையாலொரு நிச்சயமில்லாத பல புத்திகளை யுடையவனுக்கு இப்படிப்பட்ட பலன்றான் கிடைக்கும். இதே கருமங்களை யவைகளுக்குள்ள பலன்களை யிச்சிக்காமல் ஈசுவரார்ப்பணமாகச் செய்வானாகில், அவனுக்கெந்த கருமத்திற்கு என்னபலன் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியதுமில்லை. பிரயாசை யதிகமா, சுலபமா வென்பதை விசாரிக்க வேண்டியதுமில்லை. இடம், பொருள், யேவல், கிடைக்கவில்லையே யென்கிற விசாரமுமில்லை. தொடங்கின கருமம் முடிவு பெறாவிட்டால் பாவம் வருமென்ற பயமுமில்லை. யாதொரு விசாரமு மில்லாமல் தன்னா லியன்ற மாத்திரம் சற்கருமங்களைச்செய்து ஈசுவரார்ப்பணஞ் செய்துவிட்டால் ஈசுவரனவர் சித்த சுத்தியையும் ஞானத்தையுமுண்டாக்கி ஜநநமரண துக்கத்தைப் போக்கடித்து நித்தியாநந்தமான மோக்ஷத்தையடைவிக்கிறார். இப்படிப்பட்ட கருமயோகிக்கு, தான் செய்கிற கருமம் எப்படிப்பட்டது, அதை எப்படிச் செய்கிறது என்னென்ன வஸ்துக்கள்வேண்டியது என்பது முதலிய பல புத்திகளுக்கு இடமின்றி சத்கருமங்களைச்செய்து ஈசுவரார்ப்பணஞ் செய்து மோக்ஷமடையவேண்டியதென்கிற ஒரே புத்திதான். ஆகையாலிவன், ஒரே நிச்சயபுத்தி யுடையவனாகச் சொல்லப்பட்டான்.

ஒருவன் கருமத்தின் பலனை யபேக்ஷிக்கவுமில்லை, செய்கிற கருமத்தை ஈசுவரார்ப்பண புத்தியாய்ச்செய்யவுமில்லை. அப்படிப்பட்ட கருமத்திற்கு என்ன பலனென்கிற கேள்வி யிதிலிருந்துண்டாகிறது, தனக்காவது பிறருக்காவது பிறயோஜனமற்றதாகிய காரியஞ்செய்வது எப்படி வீணாதோ. அப்

படி வீணனதென்று தானுத்தரஞ் சொல்லவேண்டும். (41)

---

௪௨ யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஶ்சித꞉ ।
வேதவாதரதா꞉ பார்த² நாந்யதஸ்தீதி வாதிந꞉ ॥
௪௩. காமாத்மாந꞉ ஸ்வர்க³பரா ஜந்மகர்மப²லப்ரதா³ம் ।
க்ரியாவிஶேஷப³ஹுளாம் போ⁴கை³ஶ்வர்யக³திம் ப்ரதி ॥
௪௪. போ⁴கை³ஶ்வர்யப்ரஸக்தாநாம் தயாபஹ்ருதசேதஸாம் ॥
வ்யவஸாயாத்மிகா பு³த்³தி⁴꞉ ஸமாதௌ⁴ ந விதீ⁴யதே ॥

42. யாம்-இமாம்-புஷ்பிதாம்-வாசம்-ப்ரவந்தி- அவிபஶ்சித꞉
வேதவாதரதா꞉-பார்த-ந-அந்யத்-அஸ்தி-இதி-வாதிந꞉.
43. காமாத்மாந꞉-ஸ்வர்கபரா꞉ ஜந்மகர்மபலப்ரதாம்
க்ரியாவிஶேஷபஹுளாம்-போகைஶ்வர்யகதிம்-ப்ரதி.
44. போகைஶ்வர்யப்ரஸக்தாநாம்-தயா-அபஹ்ருதசேதஸாம்
வ்யவஸாயாத்மிகா-புத்தி꞉-ஸமாதௌ ந-விதீயதே.

ஹே பார்த²	ஓ! அர்ஜுநா!
வேதவாதரதா꞉	வேதத்திற் பலத்தைச் சொல்லுகிற வாக்கியங்களில் (அர்த்தவாதத்தில்) பிரீதியை யுடையவும்
நாந்யதஸ்தீதிவாதிந꞉	சுவர்க்காதி பலன்களுக்கு சாதநமான கர்மங்களைக் காட்டிலும் வேறு மோக்ஷமாவது ஈசுவரனாவது இல்லையென்று சொல்லுகிறவும்
காமாத்மாந꞉	காமஸ்வரூபமுடையவும் (ஆசையினால் நிறைந்த மனதையுடையவும்)
ஸ்வர்க³பரா꞉	ஸ்வர்க்கத்தையே மேலான புருஷார்த்தமென்றெண்ணி யிருக்கிறவுமான
அவிபஶ்சித꞉	அவிவேகிகள்
போ⁴கை³ஶ்வர்யக³திம் ப்ரதி	போகைசுவரியங்களை யடைவதற்கு ஸாதனமான
க்ரியாவிஶேஷ ப³ஹுளாம்	கர்ம விசேஷங்கள் மிகுந்ததும்
ஜந்மகர்மப²லப்ரதா³ம்	ஜநநத்தையும் கருமத்தையும் கருமபலன்களையுங் கொடுப்பதுமான

புஷ்பிதாம்	(பலமில்லாத) புஷ்பத்தையுடைய மரங்களைப்போல் விளங்குவதுமான
இமாம்	இப்படிப்பட்ட
யாம் வாசம்	எந்த வார்த்தையை
ப்ரவதந்தி	சொல்லுகிறார்களோ
தயா	அந்த வார்த்தையினால்
அபஹ்ருதசேதஸாம்	அபகரிக்கப்பட்ட மனதை யுடையவர்களாயும்
போகைச்வர்யப்ரஸக்தானாம்	போகைசுவரியங்களில் ஆசையை யுடையவர்களாயு மிருக்கிறவர்களுக்கு
வ்யவஸாயாத்மிகா புத்தி:	ஸாங்கியத்திலாயினும் யோகத்திலாயினும் நிச்சயசுவரூபமான புத்தியானது
ஸமாதௌ	மனதில்
ந விதீயதே	உண்டாகவே மாட்டாது.

ஓ! அர்ஜுனா! வேதத்திற் பலனைச் சொல்லுகிற வாக்கியங்களாகிய அர்த்தவாதத்தில் பிரீதியை யுடையவர்களும், சுவர்க்காதி பலன்களை அடைவதற்கு சாதனமான கர்மங்களைக்காட்டிலும் வேறு மோக்ஷமாவது ஈசுவரனாவது இல்லையென்று சொல்லுகிறவர்களும், காமஸ்வபாவமுடையவர்களும் (அதாவது புத்திரமித்திர களத்திராதிகளி லாசையுடையவர்களும்) சுவர்க்கமே மேலான புருஷார்த்தமென்று எண்ணி யிருக்கிறவர்களுமாகிய அவிவேகிகள் போகைசுவரியங்களை அடைவதற்கு சாதனமான அநேக கர்மபேதங்களைச் சொல்லுகிறவும், அதனால் ஜநநத்தையும் கருமத்தையும் கருமபலன்களையுங் கொடுக்கிறவுமான, பலமில்லாத புஷ்பத்தையுடைய மரங்களைப்போல் விளங்குகிற யாதொரு விப்படிப்பட்ட இந்த வார்த்தையைச் சொல்லுகிறார்களோ அந்த வார்த்தையினாலே மயங்கிய மனதை யுடையவர்களாயும், போகை சுவரியங்களில் ஆசை யுடையவர்களாயு மிருக்கிறவர்களுடைய மனதிலே ஸாங்கியத்திலாவது யோகத்திலாவது நிச்சய சுவரூபமான புத்தியான துண்டாகவே மாட்டாது.

---

(1) வேதவாதரதா:- என்பதற்கு வேதங்கள் முழுவதும் பகவானைப்பற்றியே சொல்லுகிறதென்று அறியாதவர்கள் என்று, **மத்துவாசாரியரும்,** ஈசுவரனாவது மோக்ஷமாவது இல்லையென்று வாதிப்பவர்கள் என்று, **இராகவேந்திரரும்** அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(2) ஸமாதௌ-என்றால், அந்தக்கரணத்தில் என்று சங்கரரும், ராமாநுஜரும், யோகஸமாதியில் என்று ஸ்ரீதரரும், ஈசுவரத்தியான விஷயத்தில் என்று, மத்துவாசாரரும், பகவானிடத்தில் என்று, இராகவேந்திரரும், அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(ஸா) யக்ஞம் முதலிய கருமங்களுக்குச் சிரேஷ்டமான பலன் ஸ்வர்க்காதிகளென்றும், புத்திரமித்திர களத்திர தனதான்ய வஸ்துவாகனாதி பலன்களுமுண்டாகுமென்றும், வேதங்களிற் பலன்களைச் சொல்லுகிற அர்த்தவாதங்களைக் கேட்டுப் போகைசுவரியாதிகளில் ஆசைகொண்டு அவைகளாலிழுக்கப்பட்டிருக்கிற மனதையுடைய வனுக்கு ஆத்மஸ்வரூப ஞானத்தில் பிரவிர்த்தியே யுண்டாகமாட்டாதென்பது இந்தச் சுலோகங்களின் கருத்து. (42-43-44)

---

௪௫. 𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾 𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑍋 𑌭𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑍋 𑌨𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮 𑌆𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ‖

45. த்ரைகுண்யவிஷயா:-வேதா:-நிஸ்த்ரைகுண்ய:-பவ-அர்ஜுன, நிர்த்வந்த்வ:-நித்தியஸத்வஸ்த:-நிர்யோகக்ஷேம:-ஆத்மவான்.

𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨	ஓ! அர்ஜுனா!
𑌵𑍇𑌦𑌾𑌃	வேதங்கள் (கர்ம காண்டம்)
𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾𑌃	முக்குணங்களாலாகிய ஸம்ஸாரத்தை விஷயமாக வுடையன
𑌤𑍍𑌵𑌂	நீ
𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌃	முக்குணங்களும் அற்றவனாகவும் அதாவது ஆசையற்றவனாகவும்
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌃	(சுக துக்கம் லாபநஷ்டம் முதலான) த்வந்த்வங்க ளற்றவனாகவும்
𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌃	நித்திய சத்துவநிலையை யுடையவனாகவும்
𑌨𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌃	யோகக்ஷேமங்க ளற்றவனாகவும்
𑌆𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 (𑌚)	அப்பிரமத்தனாகவும் (ஆத்ம ஞானத்தில் ஜாக்கிரதை யுடையவனாகவும்)
𑌭𑌵	ஆகக்கடவாய்.

ஓ! அர்ஜுனா! வேதங்கள் (கர்மகாண்டம்) சத்துவாதி முக்குணங்களாலாகிய ஸம்ஸாரத்தை விஷயமாக வுடையன (என்றால், காம்மிய கருமிகளுக்

காக ஏற்பட்டன;) நீ ஆசையற்றவனாகவும், த்வந்த்வங்களற்றவனாகவும், நித்தியசத்துவ நிலையையுடையவனாகவும், யோகக்ஷேமங்க ளற்றவனாகவும், அப்பிரமத்தனாகவும் (ஆத்மஞானத்தில் ஜாக்கிரதையுடையவனாகவும்) இருக்க வேண்டும்.

(ஸ்வதர்மத்தை நீ அநுஷ்டிக்கும் பொழுது கைக்கொள்ளவேண்டிய உபதேசமிது).

---

(1) த்ரைகுண்யவிஷயா:- ஸ்வர்க்காதிகளைத் தெருவிக்கின்றன என்று, இராகவேந்திரர், அர்த்தம் செய்கிறார்.

(2) நிஸ்த்ரைகுண்ய:- முக்குணங்களை விட்டவனாகவும், என்றால், முக்குணங்களால் உண்டாகும் காரியங்களை விட்டவனென்பது, இராகவேந்திரர், தாத்பரியம்.

(3) நிர்த்வம்த்வ:-ஸுகதுக்கங்களுக்குக் காரணமான சீதம் உஷ்ணம், இலாபம் நஷ்டம், ஜயம் அபஜயம், நன்மை தீமை, இப்படிப்பட்ட வொன்றற்கொன்று விரோதமான இரண்டுபொருள்கள் த்வந்த்வங்களென்று சொல்லப்படும்.

(4) நித்யஸத்வஸ்த:-என்பதற்கு, எப்பொழுதுஞ் சுத்தஸத்வ குணத்தையே ஆசிரயித்தவனாகவும் என்று, சங்கரரும், ராமாநுஜரும்; எப்பொழுதும் தைரியத்தை யுடையவனாகவும் என்று ஸ்ரீதரரும்; எப்பொழுதும் ஹரித்தியானத்தையே யுடையவனாகவும் என்று இராகவேந்திரரும் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(5) நிர்யோகக்ஷேம:-'யோகம்' என்பது ஸம்பாதியாததைச் ஸம்பாதித்தல்; க்ஷேமம் என்பது தேடினதைக் காப்பாற்றுதல். யோகக்ஷேமங்களை முக்யமாய்க் கொண்டவன் முக்தியை நாடுவது அருமையாதலின் யோகக்ஷேமங்களற்றவனாயிரு என்று சொல்லப்பட்டது.

(6) ஆத்மவாந்-என்பதற்கு, ஆத்ம ஞானியாகவும் என்று, ராமாநுஜரும், ஹரியே சுவாமியென்கிற நம்பிக்கையை யுடையவனாகவும் என்று இராகவேந்திரரும், அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(ராமாநுஜர்) முக்குணங்களுடைய வதிகாரிகளுக்கு அவரவர்களுடைய கருமங்களினாலுண்டாகும் பலனிதிற் சொல்லப்பட்டது.

(இராகவேந்திரர்) இந்தச் சுலோகம் முதல் 6 வது அத்தியாயம் முடியும் வரையில் நிஷ்காம கருமயோக முபதேசிக்கப் படுகிறது. ஆனால் சில சுலோகங்களில் வேறேசங்கதிகள் சொல்லப்படுகின்றனவே யென்றால், அவை மத்தியிலுண்டான கேழ்விக்கு உத்தரமாக விருக்கும்.

(ஸ்வ) முன் சுலோகங்களில் சொல்லப்பட்ட காம ஸ்வபாவமுடைய, அவ்யவஸாயிகளுக்கு, அதாவது வேதப்பிரமாணங்களினால் உண்டாகிற விவேகபுத்தி யில்லாதவர்களுக்கு, ஜனனமரணமாகிய ஸம்ஸாரந்தான் பயன் என்பது இந்த சுலோகத்தில் கூறப்பட்டது. (45)

---

௪௬. யாவாநர்த² உத³பாநே ஸர்வத꞉ ஸம்ப்லுதோத³கே ।
தாவாந்ஸர்வேஷு வேதே³ஷு ப்³ராஹ்மணஸ்ய விஜாநத꞉ ॥

46. யாவந்-அர்த²꞉-உதபாநே-ஸர்வத꞉-ஸம்ப்லுதோதகே,
தாவாந்-ஸர்வேஷு-வேதேஷு-ப்ராஹ்மணஸ்ய-விஜாநத꞉.

உத³பாநே	ஸ்நாநபாநாதிகளுக்கு சொற்பஜலமுள்ள கிணறுமுதலியவைகளில்
யாவாநர்த²꞉	எவ்வளவு பிரயோஜனமுள்ளதோ
தாவாநர்த²꞉	அவ்வளவு பிரயோஜனமும்
ஸர்வத꞉ஸம்ப்லுதோத³கே	எங்கும் பெருகிய மஹத்தான நீர்ப்பிரவாகத்தில்
(ப⁴வதி யதா²).	(உள்ளடங்கி) இருப்பது போல
ஸர்வேஷு வேதே³ஷு	வேதங்கள் முழுவதிலும் சொல்லப்பட்ட கர்மங்களில்
(யாவாநர்த²꞉)	எவ்வளவு பிரயோஜன முள்ளதோ
(தாவாநர்த²꞉)	அவ்வளவு பிரயோஜனமும்
விஜாநத꞉	பரமார்த்ததத்வத்தை அறிகிற
ப்³ராஹ்மணஸ்ய	பிரம்மநிஷ்டனுக்கு
(ப⁴வதி)	(ப்ரஹ்மாநந்தத்தில் அடங்கி)உள்ளது

ஸ்நாநபானாதிகளுக்குச் சொற்பத் தண்ணீருள்ள கிணறு முதலியவைகளில் எவ்வளவுபிரயோஜனமுள்ளதோ அவ்வளவு பிரயோஜனமும் எங்கும் பெருகிய சமுத்திரம்போன்ற மஹத்தான நீர்ப்பிரவாகத்தில் உள்ளடங்கியிருப்பதுபோல் வேதங்களிலெல்லாம் சொல்லப்பட்ட சகல கருமங்களினாலேயும் எவ்வளவு பிரயோஜனமுள்ளதோ அவ்வளவு பிரயோஜனமும் பரமார்த்ததத்வத்தை அறிகிற ப்ரஹ்மநிஷ்டனுக்கு ப்ரஹ்மாநந்தத்தில் அடங்கியிருக்கிறது.

(சங்கரபாஷ்யம்) வேதங்களில் சொல்லப்பட்ட ஸகல கர்மங்களினுடைய அளவற்ற பயன்கள் எல்லாம் விரும்பப்படாதனவானால், அந்தக்கர்

மங்கள் எதற்காக ஈச்வரனுக்கென்று நிஷ்காமமாக அநுஷ்டிக்கப்படவேண்டும் என்பது இந்த சுலோகத்தினால் சொல்லப்படுகிறது.

உலகத்திலே கிணறு குளம் போன்ற பலவாயுள்ள சொற்பஜலமுடைய நீர் நிலைகளில் ஸ்நாநபாநம் முதலிய எவ்வளவுபிரயோஜனங்கள் உள்ளனவோ அவ்வெல்லாப் பிரயோஜனங்களும் எங்கும் பெருகிய மஹாப்பிரவாகத்திலும் உண்டாகின்றன. அப் பிரயோஜனங்கள் இதில் உள்ளடங்கி நிற்கின்றன என்பது பொருள். இவ்வாறே வேதங்கள் முழுவதிலும் சொல்லப்பட்ட கர்மங்களில் யாதொரு பிரயோஜநம் (கர்மபலன்) உள்ளதோ அந்தப் பிரயோஜநம் முழுவதும் பரமார்த்ததத்வத்தை கண்டறிந்த துறவியான ப்ராஹ்மணனுக்கு உண்டாவதாய் எங்கும் பெருகிய மஹாப்பிரவாகத்தை ஒத்ததான ஞானப் பயனிலே அதாவது ப்ரஹ்மாநந்தத்திலே ஆகின்றது. அதாவது அந்த ஆநந்தத்தினுள் அடங்குகின்றது.

“யதாக்ருதாய விஜிதாயா யரேயாஃ ஸம்யந்த்யேவ மேநம் ஸர்வம் தத்ஸமபிஸமேதி யத்கிஞ்ச ப்ரஜாஃ ஸாது குர்வந்தி யஸ்தத்வேத யத்ஸவேத” அதாவது சூதாட்டத்திலே வெல்லப்பட்ட கிருதமென்னும் வருமானத்திற்கு, அதற்கு கீழான திரேதா முதலான வருமானங்கள் வந்துசேர்வதுபோல, ஜனங்கள் செய்யும் நற்செய்கை யெல்லாம் அவனை (ரைக்வனைச்) சேர்கின்றது. அவன் அறிந்ததை அறிபவன் எவனோ அவனும் அதனையே அடைகிறான் என்கிற சாந்தோக்யோபநிஷத், 4-வது ப்ரபாடகம், 1-வது கண்டம் 4-வது மந்திரமாகிய, சுருதியினால், இதை உணர்க. இதே விஷயத்தை பகவான் பின்வருகிற 4-வது அத்-33-வது சுலோகத்தில் “ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே” ஓ! பார்த்த! முக்திக்கு ஸாதனமான ஞானத்திலே ஸகல கர்மமும் முடியப் பெருகின்றன (அடங்கி நிற்கின்றன)’ என்று சொல்வதைப் பார்க்க. ப்ரஹ்மாநந்தத்தை அடைவதற்கு நிஷ்காம கர்மம் பரம்பரையான காரணம் ஆதலால் கர்மமானது கிணற் குளம் முதலிய வற்றை ஒத்ததாயிருந்தாலும், ஞான நிஷ்டைக்கு அதிகாரத்தை அடைவதற்கு முன், கர்மத்தில் தான் அதிகாரமுள்ளவன் கர்மத்தைச் செய்ய வேண்டும்.

(ராமாநுஜபாஷ்யம்) பல திக்கிலிருந்தும் வருகிற வதிக ஜலமுள்ள ஏரி முதலியவைகளில் தாகத்திற்குத் தண்ணீர் குடிக்கப்போனவன் தனக்கெவ்வளவு வேண்டியதோ அவ்வளவு உபயோகம் செய்வதுபோல் வேதங்கள் எவ்வளவு விரிவாகவிருந்தாலும் வேதோக்த கருமாநுஷ்டான முள்ள வேதார்த்தங்களை யறிந்தவன் றனக்கு வேதத்திலிருந் துபயோகஞ் செ

ய்துகொள்ள வேண்டிய தெவ்வளவோ அவ்வளவு மட்டுந்தானுபயோகஞ் செய்து கொள்ளுவானென்பது தாத்பரியம்.

இராகவேந்திரர் முதலில் அந்வயஞ்செய்து எழுதப்பட்டிருக்கிற அர்த்தத்தையே சொல்லி மறுபடி யடியிற்கண்ட விதமாய் வேறொரு அர்த்தஞ் செய்திருக்கிறார். எப்படி யென்றால் ஸவஃதஸ்ஸம்ஸ்ஸுதொவகெ= பிரளய ஜலத்திலிருக்கிற, உஃவாநெ=உகு= உத்தமனும், கவ= ஒருவரானு மிரக்ஷிக்கப்படாதவனும், கநெ= சகல பிரபஞ்சங்களையும்நடத்துகிறவனு மிருக்கிற பரமாத்மாவே (ஸஃவஸெநவஸதி) பிரசன்னனானால், ஸவெஃஷுவெஷு-யாவாநயஃ=காம்மிய கருமங்களைச் செய்பவனுக்கு வேதங்களிற் சொல்லியிருக்கிற பலன்க ளெவ்வளவுண்டோ, தாவாநு= அவ்வளவும், விஜாநதஃ= சாஸ்திராசாரியோப தேசத்தினால் ப்ரஹ்மத்தையறிந்தவனும், ஸ்ராஹ்மணஸ= ப்ரஹ்மத்தை நேராய்ப்பார்த்தவனு மிருக்கிறவனுக்கு, (ஹவதி) உண்டாகும்.

(ஸூ)ஸ்வல்ப ஜலமிருக்கிற கிணறுகுட்டை முதலியதை யாசிரயம்பண்ணுகிறவனுக்குண்டாகும் பிரயோஜனம் மிகவுஞ் சொற்பமாகவே தானிருக்கும். பெரிய ஏரி நதி முதலியவைகளை ஆசிரயிக்கிறவனுக்குக் கிணறு குட்டை முதலியவைகளினா லுண்டாகும் பிரயோஜனத்தைவிட அநேகமடங் கதிகமாயிருக்கும். எப்படி யென்றால், கிணற்றின் தண்ணீர் சில வற்ப காரியங்களுக் காகுமேயன்றி நஞ்சை வயலுக்கும் பாச்சலாமா? எந்த வேலைக்கு முபயோகமாய் நிரந்தரமாயுபயோகிக்கத்தான் கூடுமோ? நதி யேரிகளோ, இப்படிப்பட்ட சகல காரியங்களுக்கு முபயோகமாகும். அந்த உபயோகத்தில் கிணறுகளினுபயோகங்கூட அடங்கியே யிருக்கிறது. அப்படிப்போல பிரம்மஞானிக்குப் பெரிதானதும் நித்திய சுகமானது மான மோக்ஷபலமானது, வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிற ஸ்வர்க்காதி பலன்களைவிட எவ்வளவோ மேலான தாகையால் அதைவிட அற்பமாகிய காம்மிய கருமபலனை ப்ரஹ்மஞானி விரும்பமாட்டான். ப்ரஹ்மாநந்தமான மோக்ஷமானது அற்பமான ஸ்வர்க்காதிபலனை யடக்கிக்கொண்டிருக்கிற தென்பதுதான் கருத்து.

இந்த சுலோகத்திற்கு வேறு ஒரு விதமாயும் அர்த்தம் செய்கிறார்கள். அதாவது எல்லா வேதங்களிலும் அனேகமான கர்மங்கள் சொல்லப்பட்டிருக்க, ஸ்வதர்ம மென்று அவனவனுக்கு யேற்பட்டிருக்கிற சுவல்ப கர்மங்களை மட்டும் அநுஷ்டிப்பது போதும் என்று சொல்வது சரியா? என்றால், தாகத்தைத் தீர்த்துக்கொள்ள அபேக்ஷை உள்ளவன் ஒரு மஹா பெரிய சமுத்திரம் போன்ற நீர் பிரவாகத்தை அடைந்தால் அதிலுள்ள

ஜலம் எல்லாம் அவனுக்கு அவசியமற்றதாய் அவன்தாகத்தைத் தீர்க்கக் கூடிய சுவல்ப ஜலம்மட்டும் தான் எப்படி பிரயோஜனப்படுகின்றதோ அவ் விதமே ஆத்மஞானத்தை அடைய வேண்டுகிற ப்ராஹ்மணனுக்கு எல்லா வேதோக்த கர்மங்களுக்குள் அவனுக்கு ப்ரஹ்மஞானத்தைக் கொடுப்பதாகிய ஸ்வகர்மாநுஷ்டானத்திற்குரிய கர்மங்கள் மட்டும் போதுமானது, மற்ற வேதத்திலுள்ள கர்மங்களினால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை அவைகள் அவனுக்கு நிஷ் பிரயோஜனம் என்பது கருத்து. (46)

சஎ. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨 |
𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑍂𑌰𑍍𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ||

47. கர்மணி-ஏவ-அதிகார:-தே-மா-பலேஷு-கதாசந,
மா-கர்மபலஹேது:-பூ:-மா-தே-ஸங்க:-அஸ்து-கர்மணி.

𑌤𑍇	உனக்கு
𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵	கருமஞ் செய்வதிற்றானே
𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃	அதிகாரமிருக்கிறது
𑌕𑌦𑌾𑌚𑌨	ஒருபோதும்
𑌫𑌲𑍇𑌷𑍁	பலன்களிலே
(𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃)	அதிகாரமானது
𑌮𑌾	இல்லை
𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌃 𑌮𑌾𑌭𑍂𑌃	கருமபலனுக்குப் பாத்திரனாகாதே
𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿	கருமஞ்செய்யாமலிருப்பதில்
𑌤𑍇	உனக்கு
𑌸𑌙𑍍𑌗𑌃	ஆசையானது
𑌮𑌾𑌸𑍍𑌤𑍁	கூடாது.

(அர்ஜுனா!) உனக்கு கருமஞ்செய்வதிற்றானே யதிகாரமிருக்கிறது. (ஆனால்) ஒருபோதும் (கரும) பலனி லதிகாரம் வேண்டாம். (ஜநந மரணத் திற்கு ஹேதுவாகிய) கருமபலத்தை வருவித்துக் கொள்பவனாகாதே. கரு மஞ் செய்யாமலிருப்பதில் ஆசை வைக்காதே.

(சங்கரர்) கர்மத்திலேயே உனக்கு அதிகாரம், ஞாநநிஷ்டையிலன்று. அப்படி கர்மம் செய்கின்ற உனக்கு அதன் பலனிலே ஆசையானது எந்த நிலையிலும் வேண்டாம். கர்மபலனில் ஆசைகொண்டு கர்மத்தைச் செய்கிற

வன் கர்மத்தின் பயனாகிய பிறப்புக்குக் காரணமாவான். கர்மத்தின் பயனை விரும்பாவிடில் துன்ப வடிவமான கர்மத்தால் என்ன? என்று நினைத்து கர்மத்தைச் செய்யாமலிருப்பதில் விருப்பங்கொள்ளக்கூடாது.

(ராமானுஜர்) கருமத்தை ஈசுவராதீனமாக நீ செய்யவேண்டியவன். அதின் பலனை யபேக்ஷிக்காமலும், கர்த்ருத்வாபிமான மில்லாமலும், கருமத்தைச் செய்வாயானால், அதின் பலனை யடையாமல் மோக்ஷபலனை யடைவாய். கருமத்தை விட்டுவிட உனக்கதிகாரமில்லை. ஏனென்றால், ஈசுவராதீனமாகச் செய்யவேண்டியவன் என்பது தாத்பரியம்.

(இராகவேந்திரர்) கருமஞ்செய்வதி லுனக்கு அதிகாரமென்று சொன்னதினால் கருமபலனை யடைவதிற்கூட வதிகாரமுண்டென்று நினைக்காதே. நீ செய்த கருமத்திற்குப் பலன் கொடுப்பது என்னுடைய விச்சையாக விருக்கிறது. நீ ஞானியாகிறவரையில் கருமங்களை விடாமலே செய்ய வேண்டும். ஞானியுங்கூட பலாபேக்ஷையின்றி கருமஞ் செய்தால், அப்படிச் செய்த கருமம் சத்கருமமானால், மோக்ஷத்தி லதிக ஆனந்தமுண்டாகும். ஆகையால் ஞானிகூடச் செய்யவேண்டியதாயிருக்கிற கருமத்தை நீ செய்யாமல் விட்டுவிட யோக்கியனல்ல. ஆனால் பலனைமட்டு மபேக்ஷிக்காதே, பலனையடைய நீ சுவதந்திரனென்று மெண்ணாதே, ஈசுவரன் எஜமானனென்றும் நீ தாசனென்று மெண்ணி ஐக்கிய பாவத்தைவிட்டு ஈசுவராராதனை ரூபமாக கருமங்களைச் செய்யென்பது தாத்பரியம். (47)

---

௪௮. 𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌃 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌃 𑌸𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌤𑍍𑌵𑌂 𑌯𑍋𑌗 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

48. யோகஸ்த:(1)-குரு-கர்மாணி-ஸங்கம்(2)-த்யக்த்வா-தனஞ்ஜய ஸித்த்யஸித்த்யோ:3-ஸம:-பூத்வா-ஸமத்வம்-யோக:-உச்யதே||

𑌹𑍇 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯	ஓ! பொருளாசையற்ற அர்ஜுனா!
𑌤𑍍𑌵𑌂 𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌃	நீ யோகத்திலிருந்துகொண்டு
𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	அபிமானத்தைவிட்டு
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌃	பலனை யடைந்தாலு மடையாவிட்டாலும்
𑌸𑌮𑌃 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾	ஸமமாக இருந்துகொண்டு
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍁	கர்மங்களைச்செய்
𑌸𑌮𑌤𑍍𑌵𑌂	ஸமமாக யிருத்தலே
𑌯𑍋𑌗 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇	யோகமென்று சொல்லப்படுகின்றது.

ஓ! பொருளாசை யற்ற அர்ஜுனா! நீ யோகத்திலிருந்து கொண்டு அபிமானத்தைவிட்டு கருமபலனாகிய ஞாநஸித்தியை யடைந்தாலு மடையா விட்டாலு மதில் ஸமமாயிருந்துகொண்டு (என்றால், ஞாநஸித்தியை யடைந்து விட்டோமென்று சந்தோஷத்தினால் கர்வப்படாமலும் ஸித்தியை யடையவில்லையேயென்று துக்கத்தினாலே மயங்கிப் போகாமலும்) கர்மங்களைச் செய்; ஸித்தி அஸித்தி இரண்டிலும் ஸமமாயிருப்பது யோகமென்று சொல்லப்படும்.

---

(1) யோ𑌗ஸ்த꞉-கர்மயோகம் அதாவது ஞானோபாயம் (இராகவேந்திரர்).

(2) ஸங்𑌗ம்-இராஜ்ஜியம், பந்துக்கள், புத்ரமித்ர களத்திராதிகளில் அபிமானம்விட்டு, (ராமாநுஜர்); பலாபேக்ஷையைவிட்டு (இராகவேந்திரர்)

(3) ஸித்𑌧ி அஸித்𑌧ி -யுத்தத்தில் ஜயம் வந்தாலும் அபஜயம் வந்தாலும் (ராமாநுஜர்).

(சங்கரபாஷ்யம்) கர்மத்தின் பலனிலே ஆசையினால் ஏவப்பட்டு கர்மத்தைச் செய்யவேண்டாமென்றால் அப்பொழுது எதை உத்தேசித்துக் கர்மம் செய்யவேண்டும் என்பது சொல்லப்படுகிறது. ஈசுவரன் பொருட்டே கர்மங்களை யோகத்திலே நிலைத்து நின்று செய்யவேண்டும். அதிலும் கூட "ஈசுவரன் எனக்கு ப்ரஸன்னராக வேணும்" என்கிற பற்றையும் விட்டுவிடவேண்டும். பலனிலே ஆசையில்லாதவன் கர்மத்தைச் செய்து கொண்டிருக்கும் பொழுது அவனுக்குண்டாகின்ற சித்த சுத்தியினால் ஞானத்தைப் பெறுவது ஸித்தியாம். அதற்கு எதிரிடையான மன அழுக்கினால் உண்டாவது அஸித்தியாம். அந்த ஸித்தி அஸித்திகள் இரண்டிலும் ஸமமாயிருத்தல் தான் யோக மென்னப்படுகின்றது.

𑌶𑍍𑌲𑍋. 𑌦𑍂𑌰𑍇𑌣 𑌹𑍍𑌯𑌵𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌧𑌨𑌂𑌜𑌯 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑍌 𑌶𑌰𑌣𑌮𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛 𑌕𑍃𑌪𑌣𑌾𑌃 𑌫𑌲𑌹𑍇𑌤𑌵𑌃 ॥

49. 𑌦ூரேண-ஹி- அவரம்-கர்ம-𑌬ுத்𑌧ியோ𑌗ாத்-𑌧நஞ்ஜய |
𑌬ுத்𑌧ௌ(1)-𑌶ரணம்-அந்விச்𑌛-க்ருபணா꞉ (2)-𑌫லஹேதவ꞉ ||

ஹே 𑌧நஞ்ஜய	ஓ! அர்ஜுனா!
𑌬ுத்𑌧ியோ𑌗ாத்	{ ஸமத்வ புத்தியோடுகூடிய புத்தியோகமாகிய கர்மத்தைக் காட்டிலும்

கஉ௲	{ பலாபேக்ஷையோடு செய்யப்படுங் காம்மிய கர்மமானது
உ௵ரேண ஹ்யவரம்	மிகவு மிழிவானது அல்லவா ?
(அத:)	ஆகையினாலே
புத்தௌ	(அந்த) புத்தியிலே
சரணம்	அடைக்கலத்தை
அந்விச்ச	தேடிக்கொள்.
பலஹேதவ:	பலனை யிச்சிக்கிறவர்கள்
க்ருபணா:	ஹீனர்கள (கீழோர்)

ஓ! அர்ஜுனா! ஸமத்வபுத்தியோடு கூடிய புத்தியோகமாகிய கர்மத்தைப் பார்க்கினும் பல இச்சையினாலே செய்யப்படுங் காம்மிய கருமமானது மிகவு மிழிவானது அல்லவா? ஆகையினாலே, (அந்த) புத்தியிலே உனக்கு அடைக்கலத்தைத் தேடிக்கொள். பலனை யிச்சிக்கிறவர்கள் ஹீனர்களாவார்கள் (துக்கத்தை யடைவார்கள்.)

---

(1) புத்தியௌ - ஞானத்தின்பொருட்டு, சரணம்=காரணமாகிய கர்மயோகத்தை அல்லது இரக்ஷிக்கிற ஈசுவரனை, அந்விச்ச—ஆசிரயிக்கக் கடவாய்என்று ஸ்ரீதரர்; காம்மிய கருமமானது ஜநநமரணத்திற் கேதுவானதென்றும் நிஷ்காம கருமமானது மோக்ஷத்திற் கேதுவானதென்கிற அறிவை யடையக்கடவாய் என்று ராமாநுஜர்; புத்தௌ=ஞானத்திற்குக் காரணமான நிஷ்காம கருமயோகத்தில், என்று இராகவேந்திரர், இவர்கள் அர்த்தம் செய்கிறார்கள்.

(2) க்ருபணா:— (மதுஸூதந ஸரஸ்வதி) ஜநநமரண துக்கத்தை யடைவார்கள். பலஹேதவ:க்ருபணா: ஈசுவர ஐக்கிய ஞாநத்தை யிச்சிக்கிறவர்கள் அந்தகாரத்தை யடைவார்கள். (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) ஸித்தி அஸித்திகளில் ஸமத்வ புத்தியோடு கூடி ஈசுவராராதனையின் பொருட்டு செய்யும் புத்தியோகமாகிய நிஷ்காமகர்மத்தைவிட, பலாபேக்ஷையோடு செய்யப்படும் காம்யகர்மமானது மிகவும் தாழ்ந்தது. ஏனென்றால், இக்காம்ய கர்மம் பிறப்பு இறப்பு முதலியவற்றிற்கு காரணமாவதால். இவ்வாறிருத்தலின், யோகத்தைப்பற்றிய புத்தியிலாயினும், அதன் பரிபாகத்தால் உண்டாகும் ஸாங்கிய புத்தியிலாயினும் பயமில்லாமைக்குக் காரணமான அடைக்கலத்தைத் தேடிக்கொள். பரமார்த்த ஞானத்தையே சரணமாக அடைந்தவனாக விரு என்பது பொருள். ஏனெ

னில் பலா பேக்ஷயினுல் தூண்டப்பட்டவர்களாய்க் கொண்டு தாழ்ந்த கர்மத்தைச் செய்கிறவர்கள் க்ருபணர்கள் (ஹீனர்கள்); இதை “யோவா ஏதத³க்ஷரம் கா³ர்க்³யவிதி³த்வாऽஸ்மால்லோகாத் ப்ரைதி ஸ க்ருபண:” ஓ! கார்க்கி! எவன் இந்த அழிவில்லாப் பொருளை அறியாமலே இவ்வுலகத்தினின்றும் போகிறானே அவன் க்ருபணன், என்னும், பிரஹதாரண்ய கோபநிஷத் 5 வது அத்-8 வது ப்ராம்மணம்-10-வது சுருதிவாக்கியத்தினால் அறிக. (49)

ந்ரு ப³ுத்³தி⁴யுக்தோ ஜஹாதீஹ உபே⁴ ஸுக்ருதது³ஷ்க்ருதே |
தஸ்மாத்³யோகா³ய யுஜ்யஸ்வ யோக³: கர்மஸு கௌஶலம் ||

50. புத்தியுக்த:(1)-ஜஹாதி-இஹ (2) உபே-ஸுக்ருததுஷ்க்ருதே,3 தஸ்மாத்-யோகாய(4)-யுஞ்யஸ்வ-யோக:-கர்மஸு-கௌஶலம் (5) ||

ப³ுத்³தி⁴யுக்த:	ஸமத்வ புத்தியோடு கூடினவன்
இஹ	இந்த லோகத்திலேயே
உபே⁴	புண்ணியபாபங்கள் இரண்டையும்
ஸுக்ருதது³ஷ்க்ருதே	
ஜஹாதி	நீக்கிக்கொள்ளுகிறான்
தஸ்மாத்	ஆகையினாலே
யோகா³ய	(ஸமத்வபுத்தி) யோகத்தை
யுஜ்யஸ்வ	கூடுவாயாக
யோக³:	யோகமானது
கர்மஸு	கருமங்களிலேயுள்ள
கௌஶலம்	ஸாமர்த்தியமாம்

ஸமத்வபுத்தி யுடையவன் புண்ணியபாபங்க ளிரண்டையு மிந்த லோகத்திலேயே விலக்கிக்கொள்ளுகிறான். ஆகையினாலே, ஸமத்வபுத்தி யோகத்தின் பொருட்டு முயற்சி செய். யோகமானது கருமங்களிலுள்ள ஸாமர்த்தியமாம்.

---

(1) புத்தியுக்த:-பகவத் ஞானத்துடன் கூடினவன் (இராகவேந்திரர்.)

(2) இஹ-இந்த ஜன்மத்திலே (ஸ்ரீதரர்).

(3) ஸுக்ருதம்-புண்ணியமுங்கூடப் பாபத்தைப்போலவே மறுபடி

ஜநநமரணத்தை யுண்டாக்கப்பட்டதாகையால் ஞானியானவன் பாபங்களின் பலனை எப்படி யபேக்ஷிக்கமாட்டானோ வப்படியே புண்ணியபலனையுமபேக்ஷிக்கமாட்டான். புண்ணியபலனை விடலாகாதென்று சொல்லுவார்கள், அப்படிச் சொல்லுகிறவர்க ளவிவேகிகள் (மத்வாசாரியர்); புண்ணிய கரும பலன்களுக்குள்ளே மறுபடி ஜநநத்தை யுண்டாக்கப்பட்ட புண்ணிய கருமங்களுடைய பலன்களை விட்டுவிடவேண்டும். மோக்ஷத்தி லாநந்தத்தை விருத்திசெய்கிற புண்ணிய கருமங்களுடைய பலன்களை விடக்கூடாது (இராகவேந்திரர்).

(4) யோகாய-ஞானோபாயமாகிறநிஷ்காமகருமயோகத்தின்பொருட்டு.

(5) கௌஶலம்-சமத்துவ புத்தியினாலே பந்த ஸ்வபாவமுள்ள கருமத்திலிருந்து நிவர்த்திக்கிற ஸாமர்த்தியம் (சங்கரர்); கருமங்களுக்குள் சிரேஷ்டமானது (இராகவேந்திரர்).

(சங்கரபாஷ்யம்) ஸமத்வ புத்தியோடு கூடினவனாய் ஸ்வதருமத்தை அனுஷ்டிப்பவன் எந்தப்பலனை அடைகிறானோ அதை இதில் சொல்லப்படுகிறது. இவ்வுலகத்திலே கர்மங்களில் ஸமத்துவ விஷயமான புத்தியோடு கூடிய அவன் சித்த சுத்தியையும் ஞானத்தையும் பெற்று அதன் மூலமாக புண்ணிய பாபங்கள் இரண்டையும் தன்னைச்சாராதபடி நீக்கிக் கொள்ளுகிறான். ஆகையால் ஸமத்வ புத்தி யோகத்தைக் கூடவேண்டும். யோகமானது கர்மங்களில் ஸாமர்த்திய மல்லவா? அதாவது ஈசுவரனிடத்தில் மனஸை அர்ப்பித்திருப்பதால் ஸ்வதர்மமெனப் படுகின்ற கர்மங்களி லிருப்பவனுக்கு, பயன் கை கூடுவதிலும் கை கூடாமையிலும் உள்ள ஸமத்வபுத்தியாம். கர்மங்கள் பிராணிகளை ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்துகின்ற ஸ்வபாவமுடையனவாயினும், ஸமத்வபுத்தியோடு செய்யப்படும்பொழுது அப்படிக் கட்டுப்படுத்துகின்ற தம் ஸ்வபாவத்தினின்றும் நீங்கிவிடுகின்றன என்ற அதுவன்றோ ஸாமர்த்தியம். ஆகவே நீ ஸமத்வபுத்தியை யுடையவனாக இரு, என்பது பொருள்.

(ஸ்ரீதரர்) "கருமங்களிலுள்ள ஸாமர்த்தியமானது" என்றால், கருமங்களுடைய சுவபாவமானது பந்தத்தைக் கொடுக்கப்பட்ட தானபோதிலும் அந்தக்கருமத்தையே பலாபேக்ஷையின்றி ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்து அதையே மோக்ஷத்திற்குச் ஸாதனமாய்ச் செய்துகொள்ளுவது தான்.

(ராமாநுஜர்) யோக꞉ கர்மஸு கௌஶலம் = கருமஞ்செய்யும் விஷயத்தில் சமத்துவ புத்தியானது பிரயாசையினா லடையத்தகுந்ததென்று தாத்பர்யம். (50)

௫௧. 𑌕𑌰𑍍𑌮𑌜𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌫𑌲𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 ।
𑌜𑌨𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌦𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌾𑌮𑌯𑌮𑍍 ॥

51. கர்மஜம்-புத்தியுக்தா:-ஹி-ஃபலம்-த்யக்த்வா-மநீஷிண: |
ஜந்மபந்தவிநிர்முக்தா:-பதம் கச்சந்தி-அநாமயம் ||

𑌹𑌿	ஏனென்றால்
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃	ஸமத்துவ புத்தியுடையவர்கள்
𑌕𑌰𑍍𑌮𑌜𑌂	கருமத்தினலுண்டாகிற
𑌫𑌲𑌂	பயனை
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	விட்டு (ஒழித்து)
𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 (𑌸𑌾𑌧𑌵𑌃)	ஞாநிகளாய்
𑌜𑌨𑍍𑌮𑌬𑌨𑍍𑌧 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃	பிறப்பாகிய கட்டினின்று முற்றும்விடுபட்டு
𑌅𑌨𑌾𑌮𑌯𑌂	துன்பமற்ற
𑌪𑌦𑌂	பதவியை (ஸ்தானத்தை)
𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿	அடைகிறார்கள்

ஏனென்றால் ஸமத்துவ புத்தியுடையவர்கள் கருமத்தினலுண்டாகிற பயனையொழித்து ஞாநமுடையவர்களாகிப் பிறவித் துன்பத்திலிருந்து முற்றும் விடுபட்டுத் துன்பமற்ற பதவியை (மோக்ஷத்தை) அடைகிறார்கள்.

(சங்கரபாஷ்யம்)-கர்மத்தினால் உண்டாகும் பயன், கர்மத்தினின்று வரும் நல்லன தீயனவான சரீரங்களை எடுத்தல். ஸமத்வ புத்தியுள்ள ஸாதுக்கள் அப்பயனை விரும்பாமல் ஒழித்துவிட்டு ஞானிகளாய் ஜனனமாகிய பந்தத்தினின்றும் உயிரோடிருக்கும்பொழுதே முற்றும் விடுபட்டவராய் ஸகல ஸங்கடமு மற்றதான மோக்ஷமெனப்படுகின்ற விஷ்ணுவின் பரமபதத்தைச் சேருகிறார்கள்.

அல்லது பின்வருகிறமாறும் உரைக்கலாம். எங்கும் பெருகிய (பெரிய) நீர்ப்பெருக்கை ஒத்ததாய்க் கர்மயோகத்தால் வரும் சித்தசுத்தியினால் உண்டாவதாய்ப் பரம்பொருளைக் கண்டுணர்தலேயான புத்தியானது, "புத்தி யோகத்தைக்காட்டிலும்" என்பது முதல் இதுவரையிலும் எடுத்துக்காட்டப் பட்டது; (அது) புண்ய பாபங்களை நீக்கிக்கொள்ளுதல் முதலிய வற்றிற்கு நேரே காரணமானதென்று சுருதி கூறுதலால்.

(𑌸𑍍𑌵𑌾) சுவர்க்காதிகளுக் கழிவுண்டு என்பதையும், மோக்ஷத்திற் கழி

வில்லை, அதை யடைந்தால் துக்கமில்லையென்பதையும் குறித்துக் காட்டும் பொருட்டு (𑌅𑌨𑌾𑌮𑌯𑌂) என்கிற விந்தபதம் ப்ரயோகிக்கப்பட்டதாக விருக்கிறது. (51)

---

௫௨. 𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌮𑍋𑌹𑌕𑌲𑌿𑌲𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌦𑌾 𑌗𑌨𑍍𑌤𑌾𑌸𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚 ॥

52. யதா-தே-மோஹகலிலம்-புத்திர்-வ்யதிதரிஷ்யதி ।
ததா கந்தாஸி-நிர்வேதம்-ஶ்ரோதவ்யஸ்ய-ஶ்ருதஸ்ய-ச ॥

𑌯𑌦𑌾	எப்போது
𑌤𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃	உன்னுடைய புத்தியானது
𑌮𑍋𑌹𑌕𑌲𑌿𑌲𑌂	மோஹஸ்வரூபமான அவிவேக மென்னும் கலக்கத்தை
𑌵𑍍𑌯𑌤𑌿𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿	கடக்குமோ அல்லது தாண்டுமோ
𑌤𑌦𑌾	அப்போது
𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯	கேட்கவேண்டிய வேதாந்தார்த்தத்திலும்
𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚	கேட்ட வேதாந்தார்த்தத்திலும்
𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂	வைராக்கியத்தை அல்லது வெறுப்பை
𑌗𑌨𑍍𑌤𑌾𑌸𑌿	அடைவாய்.

எப்போ துன்னுடை புத்தியானது மோஹஸ்வரூபமான அவிவேக மென்னும் தோஷத்தைக் கடக்குமோ அப்போதிதுவரையிற்கேட்ட வேதாந்தார்த்தத்திலும் இனிக் கேட்கப்போகிற வேதாந்தார்த்தத்திலும் வெறுப்பை யடைவாய்.

(சங்கரபாஷ்யம்)-யோகத்தை அனுஷ்டிப்பதினாலே உண்டாவதான சித்த சுத்தியால் வரும் புத்தியைப்பெருவது எப்பொழுதென்று இந்த சுலோகத்தினால் சொல்லப்படுகின்றது. ஆத்மா அநாத்மாக்களைப் பகுத்தறியும் அறிவைக்கலக்கி மனதை விஷயங்ளிற் செலுத்துகின்ற மோஹ ஸ்வரூபமாகிய அவிவேகமெனும் கலக்கத்தை எப்பொழுது உன்புத்தியானது கடந்துவிடுமோ, அதாவது பரிசுத்தமான தன்மையை அடையுமோ, அப்பொழுது நீ கேட்கவேண்டியதிலும் கேட்டதிலும் ஆசையின்மையை அடைவாய். அப்பொழுது உனக்கு கேட்கவேண்டியதும் கேட்டதும் நிஷ்ப்ரயோஜனமெனத்தோன்றும்.

(ராமாநுஜர்) எப்போதுன் புத்தியானது அக்ஞானத்தைக் கடக்குமோ அப்போது நானிதுவரையில் எதைவிடச் சொன்னேனே இனியெதைச் சொல்லப் போகிறேனே அவைகளில் வைராக்கியத்தை யடைவாய்.

(இராகவேந்திரர்) எப்போ துன்னுடைய புத்தியானது விபரீத ஞாநமாகிற தோஷத்தைத் தாண்டிநிற்குமோ வப்போது இதுவரையிற் பெரியோர்களாற் கேட்டதற்கும் கேட்கப்போகிறதற்கும் பலனை யடைவாய், நிஷ்காம கருமயோகத்தினு லுண்டாகிறவும் மோக்ஷ ஹேதுவுமான ஞானத்தையடைவாயென்பது தாத்பரியம்.

(ஸ்வா) இதுவரையில் செய்திருக்கிற வேதாந்த விசாரத்திலும் இனிச் செய்யவேண்டிய வேதாந்த சிரவணத்திலும் உனக்கு இப்போது வெறுப்புண்டாகக்கூடாது. ஏனென்றால், நீ அக்ஞாந நிலைமையி லிருக்கிறபடியால் வேதாந்தார்த்தங்களை யறிந்து அதின்படி நடக்கவேண்டியவனாக விருக்கிறாய். கருமத்தையு மதைச் செய்யவேண்டிய விவரத்தையும் சொல்வதாகிய வேதவாக்யங்களில் வெறுப்படைவது பிரம்மஞாநிக்குத் தகுமானாலும் நீ யப்படி வெறுப்படையத் தகுந்தவனாகமாட்டாய். உனக்கு ஞாநாதிகார மின்னும் வரவில்லையென்பது தாத்பரியம். (52)

---

௫௩. 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾 𑌤𑍇 𑌯𑌦𑌾 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌾 ।
𑌸𑌮𑌾𑌧𑌾𑌵𑌚𑌲𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌤𑌦𑌾 𑌯𑍋𑌗𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥

53. ஶ்ருதிவிப்ரதிபந்நா-தே-யதா-ஸ்தாஸ்யதி-நிஶ்சலா ।
ஸமாதௌ-அசலா-புத்திஃ- ததா-யோகம்-அவாப்ஸ்யஸி ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾	அநேக அர்த்தங்களைக் கேட்டதினால் கலங்கியிருக்கிற
𑌤𑍇	உன்னுடைய
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃	புத்தி அல்லது அந்தக்கரணமானது
𑌯𑌦𑌾	எப்போது
𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌾	கலங்காத அல்லது சலிக்காததாய்
𑌸𑌮𑌾𑌧𑍌	ஆத்மாவினிடத்தில்
𑌅𑌚𑌲𑌾	நிலையாய்
𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿	நிற்குமோ
𑌤𑌦𑌾	அப்போது
𑌯𑍋𑌗𑌂	விவேகபுத்தியாகிய ஸமாதியோகத்தை
𑌅𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿	அடைவாய்

அநேக சாஸ்திரார்த்தங்களைக் கேட்டதினால் பலவாறாய் கலங்கியிருக்கிற உன் புத்தி அல்லது அந்தக்கரணமானது ஆத்மாவினிடத்தில் ஸம்சய விபரீதமற்றதாய் எப்பொழுது நிலையாய் நிற்குமோ அப்பொழுது நீ ஸமாதி யோகத்தை அடைவாய்.

(சங்கர பாஷ்யம்) மோஹஸ்வரூபமாகிய கலக்கம் நீங்குவதனால் ஆத்ம விவேக புத்தியைப் பெற்று கர்மயோகத்தின் பயனாக உண்டாகும் பரமார்த்த யோகத்தை (ஞான யோகத்தை)ப் பெறுவது எப்பொழுது என்பது இதில் சொல்லப்படுகிறது.

அநேக பயன்களையும் அவற்றைப் பெறுதற்கான பல கருவிகளையும் அவ்விரண்டின் ஸம்பந்தங்களையும் பிரகாசப்படுத்தி, ப்ரவிருத்தி, நிவிருத்திகளை உணர்த்தும் சாஸ்திரங்களின் கேள்விகளால் பலவிதமாய் மயங்கிக் கலங்கிய உன் அந்தக்கரணமானது, சித்தத்தை தன்னிடத்தில் வைக்கப்பெறுவதாகிய ஆத்மாவினிடத்து ஸம்சய விபரீதமற்றதாய் எப்பொழுது ஸ்திரமாய் நிற்குமோ அப்பொழுது நீ யோகத்தை அதாவது விவேக புத்தியாகிய ஸமாதியைப் பெறுவாய்.

(ராமாநுஜர்) ஶ்ருதி=இதுவரையிற் சொல்லிவந்த சாஸ்திரார்த்தத்தை நீ கேட்டதினால், வி=விசேஷமாய், ப்ரதிபந்நா=ஆத்மாவை, பிரபஞ்சத்தைக் காட்டிலும் விலக்ஷணனென்றும் நித்தியனென்றும் நிரதிசயனென்றும் ஸூக்ஷ்மனென்றும் கிரகித்திருக்கிற, தே=உன்னுடைய, புத்தி:=புத்தியானது, யதா=எப்போது, ஸமாதௌ=கருமாநுஷ்டானத்தினால் சுத்தியை யடைந்திருக்கிற மனசில், நிஶ்சலா=சலிக்காமல், அசலா=ஒரேவிதமாய், ஸ்தாஸ்யதி=நிற்குமோ, ததா=அப்போது, யோகம்=ஞாந யோகமாகிற ஆத்ம தெரிசனத்தை, அவாப்ஸ்யஸி=அடைவாய். (53)

அர்ஜுந உவாச.

௫௪. ஸ்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேஶவ ।
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் ॥

54. ஸ்திதப்ரஜ்ஞஸ்ய-கா-பாஷா-ஸமாதிஸ்தஸ்ய-கேஶவ,
ஸ்திததீ:-கிம்-ப்ரபாஷேத-கிம்-ஆஸீத-வ்ரஜேத-கிம்.

அர்ஜுந உவாச=அர்ஜுனன் சொன்னது.

ஹே கேஶவ — ஓ! கேசவா!

ஸமாதிஸ்தஸ்ய — ஸமாதியிலிருக்கிற

ஸ்தித ப்ரஜ்ஞஸ்ய	நிலைத்த ஞானமடைந்தவனுடைய
பாஷா	லக்ஷணம் சொல்வது எவ்வாறு
ஸ்திததீ:	நிலைத்த ஞானமுடையவன்
கிம் ப்ரபாஷேத	எவ்வாறு பேசுவான்?
கிம் ஆஸீத	எவ்வாறு இருப்பான்?
கிம் வ்ரஜேத	எவ்வாறு நடப்பான்?

அர்ஜுனன் சொன்னது.

ஓ! கேசவா! ஸமாதியிலிருக்கிற நிலைத்த ஞானமடைந்தவனைச் சொல்வது எவ்வாறு? அதாவது அவன் லக்ஷண மெப்படிப்பட்டது? நிலைத்த ஞானமுடையவ னெவ்வாறு பேசுவான்? எவ்வாறு யிருப்பான்? எவ்வாறு நடப்பான்?

(சங்கரபாஷ்யம்) கேள்வி கேட்க ஸமயம் வாய்த்தது கண்டு அர்ஜுனன், ஆத்மஞானத்தை அடைந்தவனுடைய லக்ஷணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்கிற விருப்பத்தால் இந்த சுலோகத்தில் கண்டபடி கேட்கிறான்.

"நான் ப்ரஹ்மமாய் யிருக்கிறேன்" என்னும் ஞானம் நிலைத்து ஸமாதியில் நிற்பவனைச் சொல்லுதல் எவ்வாறு? அதாவது பிறரால் இவன் எவ்வாறு பேசப்படுகிறான்? இவனுடைய லக்ஷணம் என்ன?

(ராமானுஜர்) நிலைத்த ஞானமுடையவன் வாசிகம் (வாயினால் பேசுவது முதலியன) எப்படி யிருக்கும்? மானஸிகம் (மனோவிருத்தி) எப்படி யிருக்கும்? காயிகம் (தேகத்தினால் செய்யும் செய்கை) எப்படிப்பட்டதாய் யிருக்கும்?

(ஸ்ரீ) இதில் நான்கு கேள்விகள் அடங்கியிருப்பதாகச் சொல்லலாம்; அல்லது இலக்ஷணமென்பதைப் பொதுவான கேள்வியாகவும் மற்ற மூன்றையு மதற்கு விவரமாயும் சொல்லலாம். நான்கு கேள்விகளாக பாஷியக்காரர்களும் வியாக்கியாதாக்களும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (54)

ஸ்ரீபகவாநுவாச.

௫௫. ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த்த மநோகதாந் ।
ஆத்மந்யேவாத்மநா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ்ததோச்யதே ॥

55. ப்ரஜஹாதி-யதா-காமாந் (1)-ஸர்வாந்-பார்த-மநோகதாந்,
ஆத்மநீ (2)-ஏவ-ஆத்மநா (3)-துஷ்ட:-ஸ்திதப்ரஜ்ஞ:-ததா-உச்யதே.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚	ஸ்ரீகிருஷ்ணபகவான் சொன்னது
𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ ! அர்ஜுனா !
𑌯𑌦𑌾	எப்போது
𑌮𑌨𑍋𑌗𑌤𑌾𑌨𑍍	மனதிலிருக்கிற
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍	சகலமானவிருப்பங்களை
𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿	முழுதும் விட்டொழிக்கிருனோ
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵	ஆத்மாவினிடத்திலேயே
𑌆𑌤𑍍𑌮𑌨𑌾	தன்னாலேயே
𑌤𑍁𑌷𑍍𑌟𑌃	சந்துஷ்டி யுள்ளவனாக
(𑌭𑌵𑌤𑌿)	ஆகிருனோ
𑌤𑌦𑌾	அப்போது
𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 (𑌇𑌤𑌿)	நிலைத்த ஞாநியென்று
𑌉𑌚𑍍𑌯𑌤𑍇	சொல்லப்படுகிருன்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனைநோக்கிச் சொன்னது.

ஓ ! பார்த்தா ! எப்போது மனதிலிருக்கிற சகல விருப்பங்களையும் முழுதும் விட்டொழித்து, ஆத்மாவி னிடத்திலேயே தானாகவே சந்துஷ்டி யுள்ளவனாக வாகிருனோ வப்போது நிலைத்த ஞாநியென்று சொல்லப் படுகிருன்.

---

(1) **காமாந்**-காமக்குரோதம் முதலியவைகளை (**இராகவேந்திரர்.**)

(2) **ஆத்மநீ**-பிரத்தியகாத்ம ஸ்வரூபத்திலேயே, என்று மூன்று பாஷ்யகாரர்களும் அர்த்தம் செய்திருக்கிறார்கள்: தன் ஸ்வரூபானந்தத்திலேயே (**ஸ்ரீதரர்.**)

(3) **ஆத்மநா**-மனதிலே (**ராமாநுஜர்**) பரமாத்துமாவினுடைய பிரசாதத்தில் (**இராகவேந்திரர்.**)

(**சங்கரபாஷ்யம்**) எவனொருவன் முதலிலிருந்தே கர்மங்களைத் துறந்து ஞானயோக நிஷ்டையில் ப்ரவிருத்தித்திருக்கின்றானோ, மற்றுமெவன் கர்மங்களைத் துறவாது கர்மயோகத்தில் ப்ரவிருத்திக்கிருனோ அந்த இருவர்க்கும் ஞானம் நிலைத்தவனுடைய லக்ஷணமும் அவனுடைய நிலையைப்பெறுவதற்கான ஸாதநமும் இதுமுதல் இந்த அத்தியாயமுடிவுவரையிலும் உபதேசி

க்கப்படுகின்றன. ஏனெனில் முக்திகைகூடப் பெற்றவனுடைய லக்ஷணங்கள் எவைகளோ அவைகளே வேதாந்த நூல்களில் எங்கும் ஸாதனங்களாக உபதேசிக்கப்படுகின்றன. முயற்சினால் ஸாதிக்கக்கூடியவையாதலின், முயற்சியால் ஸாதிக்கக்கூடிய ஸாதநங்களும், ஞானத்தின் வல்லமையினால் வரக்கூடிய லக்ஷணங்களும் எவைகளோ அவைகளை ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

எப்பொழுது ஒருவன் தன் மனதில் புகுந்து கிடைக்கின்ற எல்லா ஆசைகளை முற்றிலும் விட்டொழிக்கின்றானோ உள்ளேயுள்ள ஆத்ம ஸ்வரூபத்திலேயே தானாகவே திருப்தனாய், வெளிலாபங்களை வேண்டாதவனாய் பரமார்த்த தர்சனத்தினாலாகிய அமிருதரஸம் கிடைக்கப் பெற்றமையால் மற்றப பொருள்கள் வேண்டாம் என்ற எண்ணம் வந்தவனாய் இருக்கின்றானோ அப்பொழுது அவன் ஆத்மா அநாத்மாக்களின் ஆராய்ச்சியினாலான ஞானம் நிலைத்திருக்கப் பெற்றவன், வித்வான் எனப்படுகிறான். ஸகல ஆசைகளையும் ஒழித்திட்ட அளவிலே ஸந்தோஷத்தை உண்டாக்க ஒன்றும் இல்லாமையாலும் தேகத்தோடு கூடிநிற்பதற்குக் காரணமான கர்மத்தின் மிச்சம் பின்னும் இருப்பதனாலும் ஞானம் நிலைத்தவனுடைய நடக்கையானது பித்தன் வெறியன் இவர்களுடைய நடக்கைபோல ஆகும் என்றதனால்தான் “தானாக ஆத்மாவினிடத்தே ஸந்தோஷித்திருப்பவனாய்” என அருளிச்செய்கிறார். மக்கள் பொருள் உலகம் என்பவற்றினிடத்துப் பற்றைவிட்டு முற்றும் துறந்தவனாய் ஆத்மாவினிடத்தே மகிழ்பவனாய் ஆத்மாவொடு விளையாடுபவன் ஞானம் நிலைத்தவன் என்பது தேர்ந்த பொருள்.

ஶ்லோ. து:கேஷ்வநுத்விக்நமநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ: ।
வீதராகபயக்ரோத: ஸ்திததீர் முநிருச்யதே ॥

56. து:கேஷு-அநுத்விக்நமநா:-ஸுகேஷு-விகதஸ்ப்ருஹ:,
வீதராகபயக்ரோத:-ஸ்திததீ:-முநி:(।)-உச்யதே॥

து:கேஷு	துக்கம்வந்தாலும்
அநுத்விக்நமநா:	துடிக்காத மனதையுடையவனாயும்
ஸுகேஷு	சுகம்வந்தாலும்
விகதஸ்ப்ருஹ:	பற்றற்றவனாயும்
வீதராகபயக்ரோத:	விருப்பம், பயம், கோபம் இதுகளற்றவனாகவுமிருக்கிற

முநி:	மௌனி அல்லது சந்நியாசியானவன்
ஸ்திததீ:	நிலைத்த ஞானியாக
உச்யதே	சொல்லப் படுகிறான்.

துக்கம்வந்தாலும் துடிக்காத மனதை யுடையவனும், சுகம் வந்தாலு மதிற்பற்றற்றவனும், விருப்பம், பயம், கோப மிவைகளில்லாதவனுயு மிருக்கிற முனியானவன் நிலைத்த ஞானியாகச் சொல்லப்படுகிறான்.

---

(1) முநி:- ஆத்மதியானமுள்ளவன் (ராமாநுஜர்).

(சங்கரபாஷ்யம்) ஆத்யாத்மிகம்முதலிய துன்பங்கள் வந்தபொழுது மனம் நிலைகுலைந்து நொந்து போகாமலும், அப்படியே ஸுகங்கள் வந்தபொழுது, விறகு முதலியவற்றை வைக்கும்பொழுது அக்கினி மென்மேலும் வளர்வதுபோல, ஆசையானது ஸுகங்களை ஓட்டி மென் மேலும் அதிகப்படாமலும், பய கோபங்கள் நீங்கப்பெற்றவன் எவனோ அவன் முனி, ஸந்நியாஸி எனப்படுகிறான்.

(ஸ்ரீதரர்) இந்த சுலோகத்தினுலு மிதற்கு முந்திய சுலோகத்தினுலும் முதலாவது கேள்வியான நிலைத்த ஞாநியின்லக்ஷணஞ் சொல்லப்பட்டது.

(ராமாநுஜர்) முந்திய சுலோகத்தி லெவனைக்குறித்துச் சொல்லப்பட்டதோ, அவன் முதல் அந்தஸ்துள்ளவன். பிரபஞ்சவாஸனை முற்றிலுமற்றவன். இதிற் சொல்லப்பட்டவனோ இரண்டாவ தந்தஸ்துள்ளவன், பிரபஞ்சவாஸனை முற்றிலு மற்றுப்போகாமல் சில பற்றுதலுட னிருப்பவன். (56)

---

௫௭. யஸ் ஸர்வத்ராநபிஸ்நேஹஸ் தத்தத் ப்ராப்ய ஶுபாஶுபம் ।
நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥

யஃ-ஸர்வத்ர(1)-அநபிஸ்நேஹஃ-தத்-தத்-ப்ராப்ய-ஶுபாஶுபம் ।
ந-அபிநந்ததி-ந-த்வேஷ்டி-தஸ்ய-ப்ரஜ்ஞா-ப்ரதிஷ்டிதா.

யஃ	எவன்
ஸர்வத்ர	சகலத்திலும்
அநபிஸ்நேஹஃ	அபிமானமற்றவனோ
தத்தத் ஶுபாஶுபம்	அந்தந்த இஷ்டாநிஷ்டங்களை
ப்ராப்ய	அடைந்தாலும்
நாபிநந்ததி	சந்தோஷப்படுகிறதில்லையோ

ந த்வேஷ்டி	வெறுப்படைகிறதில்லையோ
தஸ்ய	அவனுடைய
ப்ரஜ்ஞா	ஞானமானது
ப்ரதிஷ்டிதா	நிலைத்தது.

எவன் சகலத்திலுமபிமானமற்றவனாயு மந்தந்த இஷ்டாநிஷ்டங்களை யடைந்தாலும் சந்தோஷப்படாதவனாயும், வெறுப்பு அல்லது த்வேஷமற்றவனாயு மிருக்கிறானோ அவனுடைய ஞானமானது நிலைத்ததென்று சொல்லப்படும்.

---

(1) ஸர்வத்ர-புத்திரமித்ராதிகள் (ஸ்ரீதரர்;) இஷ்டமான வஸ்துக்களில் (ராமாநுஜர்).

(சங்கரபாஷ்யம்) முனியென்பவன் சரீரஜீவனம் முதலியவற்றிலும் கூட பற்றில்லாதவனாய் நல்லதையும் கெட்டதையும் அடைந்தாலும் சந்தோஷிப்பதில்லை வெறுப்படைவதுமில்லை. இவ்வாறு ஸந்தோஷமும் வ்யஸநமு மில்லாதவனுக்கு விவேகத்தால் பிறந்த ஞானமானது நிலை பெற்று நிற்கின்றது.

(ஸ்ரீதரர்) இதிற் சொல்லப்பட்டவன் உதாஸீநஃ= அலக்ஷியமாயிருப்பவன்; எப்படி யென்றால், துக்கமுண்டானால் துக்கப்படாமலிதில் எனக்கென்ன சம்பந்தமென்றும், சுகமுண்டானாலதில் சந்தோஷப்படாமல் இந்தப் பிரபஞ்சத்தின் சுகம் சுகமாகுமா? இது எனக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கமாட்டாதென்றும் சொல்லுவான். இதானது 54-வது சுலோகத்திலுள்ள விரண்டாவது கேள்வியான 'எப்படிப்பேசுவான்' என்பதற்கு உத்தரஞ் சொல்லப்பட்டதா யிருக்கிறது.

(ராமாநுஜர்) இதிற் சொல்லப்பட்டவன் மூன்றாவது வகுப்பில் சேர்ந்தவன். பிரபஞ்சவிஷயத்தில் மனப்பிரவிர்த்தி யுள்ளவனாயும், ஆனால் அப்படிப்பட்ட பிரவிர்த்தியினாலுண்டாகும் சுகதுக்காதிகளில் தான் சம்பந்தமற்றவனென்று உதாஸீனனாயு மிருப்பவன். (57)

ருஅ. யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோ(அ)ங்காநீவ ஸர்வஶ꞉ |
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ் தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||

58. யதா-ஸம்ஹரதே-ச-அயம்-கூர்மஃ-அங்காநி-இவ-ஸர்வஶஃ |
இந்த்ரியாணி-இந்த்ரியார்த்தேப்யஃ-தஸ்ய-ப்ரஜ்ஞா-ப்ரதிஷ்டிதா.

𑌅𑌯𑌂	இவன் (நிலைத்த ஞானமுடைய யோகியானவன்)
𑌕𑍂𑌰𑍍𑌮𑌃	ஆமையானது
𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑍀𑌵	அவயவங்களை (உள்ளுக் கிழுத்துக்கொள்வது) போல
𑌸𑌰𑍍𑌵𑌶𑌃	ஸகலமான
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌃	விஷயங்களிலிருந்து
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿	இந்திரியங்களை
𑌯𑌦𑌾	எப்பொழுது
𑌸𑌂𑌹𑌰𑌤𑍇	இழுத்துக்கொள்ளுகிருனே
(𑌤𑌦𑌾)	அப்பொழுது
𑌤𑌸𑍍𑌯	அவனுடைய
𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾	ஞானமானது
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾	நிலைத்தது.

நிலைத்த ஞானமுடைய யோகியானவன் ஆமையானது (அச்சத்தினுல் தன்னுடைய) அவயவங்களை யுள்ளுக்கிழுத்துக் கொள்வதுபோல ஸகல விஷயங்களிலிருந்தும் இந்திரியங்களை யெப்போதிழுத்துக் கொள்ளுகிருனே வப்போ தவனுடைய ஞானமானது நிலைத்ததென்று சொல்லப்படும்.

(ஸ்ரீதரர்) ஆமை தன்னவயவங்களை வருத்தமின்றி யிழுத்துக்கொள்வதுபோல இவனும் விஷயங்களிற் பிரவிர்த்தித்திருக்கிற விந்திரியங்களை வருத்தமின்றிச் சுவாதீனஞ் செய்துகொள்ளுவா னென்பதைச் சுட்டிக் காட்ட ஆமையானது உதாரணமாய்ச் சொல்லப்பட்டது.

(ராமாநுஜர்) இவன் இந்திரியங்களை விஷயங்களிலிருந்து இழுப்பதும் மறுபடி விடுவதுமாய் இந்திரியங்களைத் தன் சுவாதீனமாக வைத்துக் கொண்டு முயற்சி செய்துக்கொண்டிருப்பவன், ஆகையால் நான்காவது வகுப்பில் சேர்ந்தவன். (58)

---

௫௯. 𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 ।
𑌰𑌸𑌵𑌰𑍍𑌜𑌂 𑌰𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

59. விஷயா:(1)-விநிவர்தந்தே-நிராஹாரஸ்ய(2)-தேஹிந:(3) ।
ரஸவர்ஜம்-ரஸ:(4)-அபி-அஸ்ய பரம்(5)-த்ருஷ்ட்வா-நிவர்த்ததே ॥

𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌯	ஆஹாரமில்லாமலிருக்கிற
𑌦𑍇𑌹𑌿𑌨𑌃	தேஹிக்கு
𑌰𑌸𑌵𑌰𑍍𑌜𑌂	இச்சையைத்தவிர
𑌵𑌿𑌷𑌯𑌾𑌃	விஷயானுபவங்கள்
𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌂𑌤𑍇	நிவர்த்தியாய்விடும்
𑌅𑌸𑍍𑌯	இவனுக்கு
𑌰𑌸𑍋𑌪𑌿	(விஷய) இச்சையுங்கூட
𑌪𑌰𑌂	பரமாத்மாவை
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾	பார்த்து
𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇	நிவிர்த்தியாகிறது.

ஆஹார மில்லாமலிருக்கிற தேஹத்தோடு கூடி நிற்கும் ஆத்மாவுக்கும் அதாவது மனிதனுக்கும் இந்திரியங்கள் விஷயங்களினின்று நிவர்த்தி அடைகின்றன. ஆனால் விஷயங்களிலுள்ள அவனுடைய ஆசைமட்டும் நீங்குவதில்லை. அந்த இவனுடைய ஆசையும் ப்ரஹ்மத்தைக் கண்டுணர்ந்த பின்பு ஒழிந்துபோகின்றது.

---

(1) **விஷயா:**-என்றால் விஷயங்களால் உணர்த்தப்பட்ட இந்திரியங்கள்.

(2) **நிராஹாரஸ்ய**-என்பதற்கு பதப்பொருள் ‘சாப்பாடில்லாத’ என்பது. ஆனால் பாஷ்யக்காரர்களும் வியாக்யாதாக்களும், ‘இந்திரியங்களின் ஆஹாரமாகிய விஷயானுபவமற்ற’ என்பதாக தாத்பரியம் செய்திருக்கிறார்கள்.

(3) **தேஹிந:**-தேகத்தை யுடையவனென்று பொதுவான அர்த்தம். தேகத்தை யுடையவன் யாரென்றால், ஜீவனென்று த்வைதிகளுடையவும் விசிஷ்டாத்து வைதிகளுடையவும் அர்த்தம், அத்துவைதிகளுக்கு அவித்தையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறவரையில் ஜீவனென்று வியவகாரமேயன்றி வாஸ்தவத்தில் ஜீவன்வேறே பரமாத்மா வேறேயல்லவென் றர்த்தம் ஆத்மாவென்பது ஜீவாத்மா பரமாத்மா இருவருக்கும் பொதுவானபதம். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி யர்த்தஞ் செய்யவேண்டும்.

(4) **ரஸ:**-ரஸம் என்ற சொல்லானது ‘**ராகம்**’ அதாவது ‘**ஆசை**’ என்னும் பொருளில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

(5) **பரம்**- தன்னையே பரமாத்மாவாக (**சங்கரர்**); (**ராமாநுஜர்**)

விஷயங்களைப் பார்க்கினும் அன்னியமாகவும் சுகஸ்வரூபமாகவு மிருக்கிற ஆத்மஸ்வரூபத்தை.

(**சங்கரபாஷ்யம்**) விஷயங்களைக் கிரகிக்காத நோயாளிக்கும் இந்திரியங்கள் ஒடுங்குகின்றனவாயினும் விஷயங்களின்மீது உள்ள ஆசை ஒடுங்குவதில்லை. அது ஒடுங்கும்வகை எப்படி என்று இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. இங்கே 'விஷயங்கள்' என்னும் சொல்லால் கூறுவது அந்த விஷயங்களால் உணர்த்தப்பட்ட இந்திரியங்கள். விஷயங்களை ஒழித்து கடும் தவம் புரிகின்ற மூடமனிதனுக்கும் இந்திரியங்கள் தம் தம் விஷயங்களினின்று ஒழிகின்றனவாயினும் விஷயங்களிலுள்ள ரஸத்தைத் தவிர மற்றது ஒழிகின்றது, அதாவது ஆசைமாத்திரம் நீங்குவதில்லை. 'ரஸம்' என்ற சொல்லானது 'ஆசை' என்னும் பொருளில் பயன்று வழங்குவது. ஸ்வரஸேந ப்ரவ்ருத்த꞉, ரஸிக꞉, ரஸஜ்ஞ꞉' ஸ்வரஸமாகப் புகுந்தவன், ரஸிகன், ரஸஜ்ஞியன், என்பனவற்றால் காண்க. பரமார்த்த உண்மையாகிய ப்ரஹ்மத்தைக் கண்டுணர்ந்து "நானே அது" என்றிருக்கின்ற இந்த யதிக்கு இன்பத்திலே ருசியாகிய அந்த ஆசையும் நீங்குகின்றது. விஷயங்களின் உணர்வு வேரோடு அற்றுப்போகின்றது என்பது பொருள். நல்லறிவு என்னும் ஞானத்தை நிலைத்திருக்கச் செய்துகொள்ளவேண்டும் என்பது கருத்து.

(ஸ்வா) இந்திரியங்கள் வெளியிலுள்ள விஷயங்களாகிய வஸ்துக்களையே யெப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிற படியால் இந்திரியங்களுக்கு விஷயங்க ளாகாரமாயிருக்கின்றன. ஆகையால், முதலி லிந்திரியங்களை யடக்கவேண்டும். இந்திரியங்களை யடக்கினாலும் இச்சாஸ்வரூபமான மனதடங்காது. பரமாத்ம தெரிசனத்தினால் அந்த மனதினுடைய விச்சையும் அடங்கிவிடு மென்பதொரு அர்த்தம். மற்றொரு அர்த்தமாவது, ஆகாரமில்லாம லிருக்கிறவனுக்குப் பசியினால் வருத்தப்படும்போது தேகபலங்குறைந்து கண்,வாய் முதலிய விந்திரியங்கள் சோர்பு அடைந்து இந்திரியங்கள் விஷயங்களிற் பிரவிர்த்திக்காமல் விஷயங்களைவிட்டு இந்திரியங்கள் பிரிந்துவிடக் கூடுமானாலும், மனதிலுள்ள வாசையாகிய விச்சை போகிறதில்லை. இப்படி விந்திரியங்கள் அடங்குவதால் மனதிலுள்ள வாசையை நிவர்த்தியாகிறதாவது, பரமாத்ம தெரிசனத்திற்கு யோக்கியமாகவாகிறதாவது இல்லை. ஞானியோ இந்திரியங்களை சுயேச்சையாய் அடக்கி மனதைப் பரமாத்மாவிடத்திற் செலுத்துகிறபடியால் பரமாத்ம தெரிசனத்திற்கு யோக்கியனாயிருக்கிறான். இந்த அர்த்தத்தையும் **ஸ்ரீதரர்** ஆதரிக்கிறார். (59)

சு0. 𑌯𑌤𑌤𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌨𑌃 ॥

60. ***யதத:-ஹி-அபி-கௌந்தேய-புருஷஸ்ய-விபஶ்சித:,***
இந்த்ரியாணி-ப்ரமாதீநி-ஹரந்தி-ப்ரஸபம்-மந:.

𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! குந்திபுத்திரா!
𑌹𑌿	ஏனென்றால்
𑌯𑌤𑌤𑌃	(மோக்ஷமடைய) பிரயத்தினஞ்செய்கிற
𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃	விவேகியான
𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯	புருஷனுடைய
𑌮𑌨𑍋𑌽𑌪𑌿	மனதையுங்கூட
𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿	கலங்கச்செய்கிற
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿	இந்திரியங்கள்
𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑍍	வலுமையாக (பலவந்தமாக)
𑌹𑌰𑌨𑍍𑌤𑌿	இழுத்துக்கொண்டு போகின்றன.

ஓ! குந்திபுத்திரா! ஏனென்றால் மோக்ஷமடையப் பிரயத்தினஞ் செய்கிற விவேகியான புருஷனுடைய மனதையுங்கூடக் கலங்கும்படிசெய்கிற இந்திரியங்கள் (அந்தமனதை) பலவந்தமாக யிழுத்துக்கொண்டு போகின்றன.

(***சங்கரபாஷ்யம்***) நல்லறிவு என்னும் புத்தியை ஸ்திரப்படுத்தக் கருதியவன் முதலில் இந்திரியங்களைத் தன் ஸ்வாதீனத்திலிருக்கும்படி செய்யவேண்டும். ஏனென்றால் இந்திரியங்களை அடக்காததினால் வரும் தீங்கு இன்னதென்று இதில் சொல்லப்படுகிறது. எதையும் கலங்கச் செய்யும் தன்மையை யுடைய இந்திரியங்கள் விஷயங்களிலே நோக்கமுள்ள புருஷனைக்கலக்கி, பின்னும் விஷயங்களின் கெடுதிகளை அவன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே விவேகபுத்தியோடு தெளிந்தே நிற்பதான் அந்த புத்தி சாலியினுடைய மனதை பலவந்தமாய் அவை இழுத்துக் கொண்டு போகின்றன.

(***இராகவேந்திரர்***) இந்திரியங்களை வைராக்கியத்தினு லடக்கினால் மனதும் சுவாதீனமாய் ப்ரஹ்மதெரிசனத்திற் கநுகூலமாகுமேயன்றி (முந்திய சுலோகத்திற் சொல்லியிருக்கிறபடி) ஆகாரஞ் செய்யாததினால் இந்திரியங்கள் அடங்கி யிருக்கிறவனுக்கு மனது சுவாதீனமாவதாவது பரமாத்ம தெரிசனமுண்டாவதாவது சாத்தியமானதே யல்லவென்பது தாத்பரியம்.

(ஸூா) விவேகிகளின் மனதையுங்கூட இந்திரியங்கள் பலவந்தமா யிழுத்துக்கொண்டு போகுமென்றதினல், அவிவேகிகளுடைய மனதை இழுத்துக்கொண்டு போகிறது ஆச்சரியமல்ல வென்கிற அர்த்தம் த்வநிக்கிறது. (60)

ஸ்ரீ. தாநிஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர: ।
வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥

61. தாநி-ஸர்வாணி-ஸம்யம்ய-யுக்த:-ஆஸீத-( )-மத்பர:,
வஶே-ஹி-யஸ்ய-இந்த்ரியாணி-தஸ்ய-ப்ரஜ்ஞா-ப்ரதிஷ்ட்டிதா.

ஹி	ஆகையினலே
தாநிஸர்வாணி	அவைகளை (இந்திரியங்களை) எல்லாம்
ஸம்யம்ய	அடக்கிக்கொண்டு
யுக்த:	மனநிலை யுள்ளவனும்
மத்பர:	என்னையே ஆச்ரயித்தவனும்
ஆஸீத	இருக்கவேண்டியது
யஸ்ய	எவனுடைய
வஶே	சுவாதீனத்திலே
இந்த்ரியாணி	இந்திரியங்கள்
(வர்த்தந்தே)	இருக்கின்றனவோ
தஸ்ய ப்ரஜ்ஞா	அவனுடைய ஞானமானது
ப்ரதிஷ்டிதா	நிலையுள்ளதா யிருக்கிறது.

ஆகையினலே அந்த (முன்சொன்ன) இந்திரியங்களையெல்லா மடக்கிக்கொண்டு மனநிலை யுள்ளவனுயு மென்னையே உத்கிருஷ்டமாக ஆச்ரயித்தவனுயு மிருக்கவேண்டியது. எவனுடைய சுவாதீனத்தி லிந்திரியங்களிருக்கின்றனவோ அவனுடைய ஞானமானது நிலையுள்ளதென்று சொல்லப்படும்.

---

(1) ஆஸீத-ஞானஸமாதியி லிருக்கவேண்டியது (இராகவேந்திரர்).

(சங்கரபாஷ்யம்)- அந்த இந்திரியங்க ளெல்லாவற்றையும் வசப்படுத்திக்கொண்டு அடக்கமுடையவனுய் ஸகலத்திற்கும் உள்ளேயுள்ள ஆத்மாவாகிய வாஸுதேவனை என்னிடத்து ஈடுபட்டவனுய் நிற்கவேண்டும். "நான் அவனைவிட வேறு அல்லேன்" எனக்கொண்டு இருக்கவேண்டும் என்பது பொருள். இவ்வாறு இருக்கின்ற எந்த யதிக்குத்தன் இந்திரியங்கள் அப்பியாஸத்தினல் தன் வசத்திலிருக்கின்றனவோ அவனுடைய ஞானம் நிலைத்தது.

(ஸ்ரீதரர்) அர்ஜுனனுடைய மூன்றாவது கேள்வியான "கிமாஸீத= எப்படியிருப்பான்" என்பதற்கு உத்தரஞ் சொல்லப்பட்டது.

(ஸ்வா) இந்திரியங்களைச் சுலபமாய் சுவாதீனப்படும்படி செய்துக் கொள்ள வேண்டுமென்பதை முன் ருஅ-வது சுலோகத்திலும், ஆனால் அந்த விந்திரியங்கள் விவேகியின் மனதைக்கூடக் கலங்கச்செய் திழுத்துக்கொண்டு போகும் சக்தியுள்ளன வென்பதை ருகூ-சுo-வது சுலோகங்களிலும், அவ் விதமான விந்திரியங்களை யடக்குவதற்கு மன நிலையும் பரமாத்மாவினிடத் தில் நம்பிக்கையும் காரணமா யிருக்கின்றனவென்று இந்த சுலோகத்திலுஞ் சொல்லப்பட்டதாக விருக்கிறது. (61)

---

௬௨. 𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍋 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌪𑍁𑌂𑌸𑌃 𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑍇𑌷𑍂𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

௬௩. 𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌃 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶𑌾𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿

62. த்யாயதஃ-விஷயாந்-பும்ஸஃ-ஸங்கஃ-தேஷு-உபஜாயதே,
ஸங்காத்-ஸஞ்ஜாயதே-காமஃ-காமாத்-(1)-க்ரோதஃ-அபிஜாயதே.

63. க்ரோதாத்-பவதி-ஸம்மோஹஃ-(2)
ஸம்மோஹாத்-ஸ்ம்ருதிவிப்ரமஃ,(3)
ஸ்ம்ருதிப்ரம்சாத்-புத்திநாசஃ-(4)
புத்திநாசாத்-ப்ரணச்யதி.(5)

𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍	விஷயங்களை
𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑌃	சிந்திக்கிற
𑌪𑍁𑌂𑌸𑌃	புருஷனுக்கு
𑌤𑍇𑌷𑍁	அவைகளில்
𑌸𑌙𑍍𑌗𑌃	பற்றுதல் (பிரியம்)
𑌉𑌪𑌜𑌾𑌯𑌤𑍇	உண்டாகிறது
𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍	பற்றுதலிலிருந்து
𑌕𑌾𑌮𑌃	ஆசையானது
𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇	உண்டாகிறது
𑌕𑌾𑌮𑌾𑌤𑍍	ஆசையிலிருந்து
𑌕𑍍𑌰𑍋𑌧𑌃	கோபமானது
𑌅𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇	உண்டாகிறது
𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌤𑍍	கோபத்திலிருந்து

ஸம்மோஹ:	மோஹமும் (கார்யாகார்ய விவேகமின்மையும்)
பவதி	உண்டாகிறது
ஸம்மோஹாத்	மோஹத்திலிருந்து
ஸ்ம்ருதிவிப்ரம:	நினைவின்மை
(பவதி)	உண்டாகிறது
ஸ்ம்ருதிப்ரம்சாத்	நினைவின்மையிலிருந்து
புத்திநாச:	புத்திக்கேடானது
(பவதி)	உண்டாகிறது
புத்திநாசாத்	புத்திநாசத்தினால்
ப்ரணச்யதி	முழுதுங் கெட்டவனாவான், அதாவது, உபயோகமற்ற புருஷனாவான்.

விஷயங்களைச் சிந்திக்கிற (உலகத்திலுள்ள வஸ்துக்களி லெப்போதும் நினைப்புள்ள) புருஷனுக்கு அந்த வஸ்துக்களில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலினாலாசையும், ஆசையினாற் கோபமும், கோபத்தினால் மோஹமும் (கார்யா கார்யவிவேகமின்மையும்), மோஹத்தால் நினைவின்மையும், நினைவின்மையினாற் புத்திநாசமு முண்டாகி, புத்திநாசத்தால் முழுதுங் கெட்டவனாகிறான்.

---

(1) **காமாத்**-ஆசைப்பட்ட வஸ்துவையடைவதில் தடையுண்டானாலதிலிருந்து (**சங்கரர்**) (**இராகவேந்திரர்**).

(2)**ஸம்மோஹ:**-பாபகாரியத்தில் இச்சையானது (**இராகவேந்திரர்**)

(3) **ஸ்ம்ருதிவிப்ரம:**—சாஸ்திரம் ஆசாரியோபதேச மிவைகளினால் தெரிந்துக் கொண்ட அர்த்தத்தை மறந்து போகிறது.

(4) **புத்திநாச:**—காரியாகாரிய விவேகத்திற்கு யோக்கியமான அந்தக்கரணம் மலினமடைதல் (**சங்கரர்**)

(5) **ப்ரணச்யதி**-புருஷார்த்தத்திற்கு யோக்கியமற்றவனாகிறான் (**சங்கரர்**); ஸம்ஸாரத்தை யடைகிறான் (**ராமாநுஜர்**); நரகத்தை யடைகிறான் (**இராகவேந்திரர்**).

(**சங்கரபாஷ்யம்**) இனி கெட்டழிந்து போகின்றவனுடைய அநர்த்தத்திற்கெல்லாம் காரணம், விஷயங்களை சிந்திப்பது தான் என்பது கூறப்படுகிறது. ஓசை முதலிய விஷய விசேஷங்களில், அதாவது அவ்விஷயங்களின்மேல்தானாக பாவித்துக் கொண்ட அழகு முதலியவற்றிலே, கருத்தைச்செலுத்துகிற புருஷனுக்கு அந்தவிஷயங்களின்மேல் பிரியம்உண்டாகின்றது. எதா

வது ஒரு காரணத்தால் ஆசை தடைப்பட அதனின்று கோபம் உண்டாகின்றது. கோபத்தினின்று மோஹம் உண்டாகின்றது. செய்யத்தக்கனவற்றையும் செய்யத்தகாதனவற்றையும் பற்றிய ஆராய்ச்சியில்லாமை, மோஹம். கோபம்கொண்டவன் ஒன்றும் தெரியாமல் மயங்கினவனாய்க் குருவையும்பழித்திடுகின்றானன்றோ? இம்மயக்கத்தினின்று நினைவுதவறுதலுண்டாகின்றது. அதாவது சாஸ்திரம், ஆசாரியன் இவர்களின் உபதேசத்தால் புத்திக்குள் உண்டாகின்ற பயிற்சியாலாகும் தர்ம நியாயங்களின் நினைவு தவறிப் போகின்றது. அந்த நினைவு உண்டாவதற்குக் காரணமமைந்திருந்தும், தான் கேட்டுள்ள நல்ல உபதேசம் ஒருவனுடைய நினைவுக்கு வரக்கூடியதாயிருந்தும், கோபம் வந்தபோது அவன் மயக்கத்தால் மூடப்படுகின்றமையால், அவனுக்கு அந்த நினைவு உண்டாவதில்லை. அந்த நினைவுதவறுதலால் அறிவுக்குக் கேடுவருகின்றது. அந்தக்காரணத்திற்கு, கார்ய அகார்யங்களைப் பகுத்தறிய முடியாமை அறிவு கேடெனப் படுகின்றது. அறிவு கேட்டினால் முற்றும் அழிந்து விடுகிறான். எவ்வளவு காலம் அவனுடைய அந்தக்கரணம் காரியாகாரியங்களைப் பகுத்தறிய சக்தியுள்ளதோ அவ்வளவு காலமேயன்றோ புருஷனென்பது ? அப்படிப் பகுத்தறிவதற்குத் தகுதியற்றால் புருஷன் அழிந்தவனாகவே ஆகிறான். அதாவது அவனுடைய அந்தக்கரணத்தின் அறிவு கேட்டினால் அழிந்து விடுகிறான். புருஷார்த்தத்திற்குத் தகாதவனாகிறான் என்பது பொருள்.

(ஸ்வா) இந்த சுலோகங்களின் அர்த்தத்தைத் தாத்தக்க பிரகத் நாரதீயபுராணம் ௩௧-வது அத்தியாயத்திலுள்ள அடியில்கண்ட சுலோகங்களைப்பார்க்க. 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌦𑍇𑌹𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌦𑍇𑌹𑍀 𑌕𑌾𑌮𑍇𑌨 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌾𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌭𑌾𑌭𑌿𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌭𑌾𑌤𑍍𑌕𑍍𑌰𑍋𑌧𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ ௪ ॥ 𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌨𑌾𑌶𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌧𑌰𑍍𑌮𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌮𑌤𑌿𑌭𑍍𑌰𑌮𑌃 । 𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌨𑍁𑌜𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌪𑌾𑌪𑌂𑌕𑌰𑍋𑌤𑌿 𑌚 ॥ ௫ ॥ 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌦𑍇𑌹𑌃 𑌪𑌾𑌪𑌹𑍇𑌤𑍁𑌃 𑌪𑌾𑌪𑌕𑌰𑍍𑌮𑌰𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ தேகிக்கு (ஜீவனுக்கு) கருமத்தினால் தேகமுண்டாகிறது. (ஜீவனுக்கு) காமம் (ஆசை) விருத்திபடைகிறது (என்றால்காமத்தினால் உலகவியாபாரங்களைச் செய்கிறான்). காமத்தினால் லோபம் உண்டாகிறது. லோபத்தினால் குரோதம் (கோபம்) உண்டாகிறது. குரோதத்தினால் தருமம் நசிக்கிறது. தருமநாசத்தினால் புத்திப்பிரமை உண்டாகிறது. புத்தி பிரமையடைந்த மனிதன் மறுபடிபாபத்தைச் செய்கிறான். ஆகையினால் தேகமானது பாபத்திற்குக் காரணமாயிருக்கிறது. அதனால் பாபத்தைச்செய்ய முயல்கிறான். (என்றால் பூர்வ கர்மத்தினால் தேகமுண்டாகிறதும் அந்ததேகத்தினால் பாபம்செய்கிறதுமா யிருக்கிறது. தேகமே

லது செய்கை யெப்படி யிருக்கும்" என்கிறதற்கு உத்தரமாக விருக்கிறது. டுத்தவன் பாபம்செய்தா லதினால் பின்னும் பின்னும் பாபசுவரூபமான தேகத்தையடைவானென்பது தாத்பரியம்.) (62-63)

ராமதெவஷவியுக்தெஸ்து விஷயா நிஷ்ரியெய்ஸ்வரந் ।
ஆத்மவெஸ்ய விதெயாத்மா வ்ரஸாதமயிமக்ஷதி ॥

64. ராகத்வேஷவியுக்தைஃ-து-விஷயாந் இந்த்ரியைஃ-சரந்,
ஆத்மவச்யைஃ விதேயாத்மா-ப்ரஸாதம் அதிகச்சதி.

விதெயாத்மா	சுவாதீனமான மனதையுடையவனே
ராமதெவஷவியுக்தெஃ	விருப்பு வெறுப்பற்றும்
ஆத்மவெஸ்யஃ	தனக்கு ஸ்வாதீனங்களாயுமிருக்கிற
இஷ்ரியெஃ	இந்திரியங்களினாலே
விஷயாநு	விஷயங்களை
வரநு	அனுபவித்துக்கொண்டு
வ்ரஸாதம்	மனச்சமாதானத்தை (தெளிவை)
அயிமக்ஷதி	அடைகிறான்.

ஸ்வாதீனமான மனதை யுடையவனே விருப்பு வெறுப்பற்று தனக்கு சுவாதீனமா யிருக்கிற விந்திரியங்களினாலே அன்னபானாதி விஷயங்களை யனுபவித்துக்கொண்டு மனச்சமாதானத்தை யடைகிறான்.

(**சங்கரபாஷ்யம்**) விஷயங்களைத் தியானம்செய்வது எல்லா அநர்த்தங்களுக்கும் காரணம் என்று முன் சுலோகத்தில் சொல்லப்பட்டது. இனி மோக்ஷத்திற்கு எதுவழியோ அது இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. இந்திரியங்களுடைய இயற்கையான போக்கானது விருப்பு வெருப்புகளை முன்னிட்டன்றோ இருப்பது? இனி ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்புகிறவன் எவனோ அவன் விருப்பு வெருப்பினின்றும் நீங்கினவனாய்த் தன் வசப்பட்ட செவி முதலிய இந்திரியங்களால் ஆஹாரம் முதலிய நீக்கமுடியாத விஷயங்களை நாடிக்கொள்பவனாய், தன் இஷ்டப்படி நடக்கக்கூடிய அந்தக்கரணத்தைப் பெற்றுத் தெளிவை அடைகிறான். தெளிவு என்பது கலங்காமை, நிலைபெற்ற தன்மை, அமைதியுடைமை.

(**ஸ்ரீதரர்**) முந்திய விரண்டு சுலோகங்களு மிந்தச் சுலோகத்திற்குச் சம்பந்தப்பட்டவைகள்தான். விஷயங்களை விடவேண்டுமென்று முன் சொல்லப்பட்டிருந்தாலும் அவசியமானவரையில் விஷயங்களை யநுபவிக்கிறதினால் பாதகமடையானென்பது இதிற் சொல்லப்பட்டது. இதாவது அர்ஜுனனுடைய நான்காவது கேள்வியான "வ்ரஜேத கிம்=எப்படி நடப்பான் அல்

(ஸ்வா): ஞானியானவன் இந்திரியங்களையும் மனதையும் விஷயங்களிற் பிரவேசிக்கவிடாமல் தடுக்கவேண்டுமென்று முன்னாலே சொல்லப்பட்டதல்லவா? அப்படியிருந்தாலு மிடைவிடாமல் ப்ரஹ்மத்தியானஞ் செய்பவனுங்கூடத் தேகத்தைக் காப்பாற்றாமல் போனால் ப்ரஹ்மத்தியானத்திற்கிடையூறுண்டாகும், ஆகையால், தேக ஸம்ரக்ஷணார்த்தமாக அவசியமெவ்வளவு வேண்டியதோ அவ்வளவுவரையி லன்னாதிகளைச் சம்பாதிக்க விஷயங்களிற் பிரவிர்த்திக்கலாம். அப்படிப் பிரவிர்த்தித்திருப்பதினாலே இந்திரியங்கள் மனது இவைகளைச் சுவாதீனப்படுத்திக் கொண்டவனுக்கு அன்னபானாதிகளின் நிமித்தமுண்டான விஷயாநுபவமானது தியானத்திற்குத் தடையாகமாட்டாதென்பது தாத்பரியம். (64)

சுலோ. ப்ரஸாதே ஸர்வது:கானாம் ஹாநிரஸ்யோபஜாயதே ।
ப்ரஸந்நசேதஸோ ஹ்யாஶு புத்தி: பர்யவதிஷ்டதே ॥

65. ப்ரஸாதே-ஸர்வது:கானாம்-ஹாநி:-அஸ்ய-உபஜாயதே,
ப்ரஸந்நசேதஸ:(1)-ஹி-ஆஶு-புத்தி:-பர்யவதிஷ்டதி(2)

ப்ரஸாதே (ஸதி)	மனச்சமாதான மானபின்பு
அஸ்ய	இவனுக்கு
ஸர்வது:கானாம்	சகல துக்கங்களுடைய
ஹாநி:	நாசமானது
உபஜாயதே	உண்டாகிறது
ஹி	ஏனெனில்
ப்ரஸந்நசேதஸ:	சமாதானமான மனதை யுடையவனுக்கு
ஆஶு	சீக்கிரம்
புத்தி:	புத்தியானது
பர்யவதிஷ்டதி	ஸ்திரமாய் நிற்கும்.

மனச்சமாதானம் (தெளிவு அல்லது அமரிக்கை) உண்டானவனுக்கெல்லாத் துக்கங்களும் நாசமடையும். ஏனெனில் ஸமாதானமான மனதையுடையவனுடைய புத்தியானது சீக்கிரமாய் ஸ்திரத்தையடையும்.

---

(1) **ப்ரஸந்நசேதஸ:** - சுத்தாந்தக்கரண முடையவனுக்கு (**சங்கரர்**); ஆத்ம தெரிசனத்திற்கு விரோதமான தோஷங்களை நிவர்த்தித்த மனதை யுடையவனுக்கு (**ராமாநுஜர்**):

(2) **பர்யவதிஷ்டதி** - புத்தியானது அகண்ட பிரம்மாகாரமாய் நிற்கும் அதாவது, ப்ரஹ்மந்தவிர வேறொன்றுந் தோன்றாது (**சங்கரர்**); ஸ்வா

𑌦𑍍𑌧𑌿𑌃=ஆத்ம தெரிசனமானது, **வ்யவதிஷ்ட²தி**=உண்டாகும் (**ராமாநுஜர், இராகவேந்திரர்**); **வ்யவதிஷ்ட²தே**, யென்று மொருபாடம். இதுதான் சரியானபாடமென்று தோற்றுகிறது. (**ஸ்ரீதரர்**)

(**சங்கரபாஷ்யம்**) தெளிவுண்டானல் பிறகு என்ன உண்டாகும் என்பது சொல்லப்படுகிறது. தெளிவுண்டாகும்பொழுது இந்த யதியின் ஆத்யாத்மிகம்முதலான துன்பங்களெல்லாவற்றிற்கும் அழிவு உண்டாகின்றது. அன்றியும் சுத்தமான அந்தக்கரணமுள்ளவனுக்கு எதனல் புத்தியானது விரைவாக நிலைநிற்கின்றதோ, அதாவது ஆகாசம் போல எங்கும் நிலைபெறுகின்றதோ, ஆத்மாவின் ஸ்வரூபமாகவே அலையாது அமைந்து நிற்கின்றதோ அதனல் புத்தித் தெளிவுக்காக முயற்சி செய்யவேண்டும்.

இவ்வாறு மனம் தெளிந்து புத்திநிலைத்தவனுக்குப் புருஷார்த்தம் கைகூடுகின்றமையால் ஸம்ஸாரத்தினின்றும் விடுபடவிரும்புகின்றவன் விருப்பு வெருப்புகள் நீங்கிய இந்திரியங்களால் சாஸ்திர விருத்தமல்லாத உணவு முதலிய தவிர்க்கமுடியாத விஷயங்களை அமைதியோடு நாடவேண்டும் என்பது இந்த ஸந்தர்ப்பத்தில் கூறப்பட்ட பொருளாம். (65)

சுசு. 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌚𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌨𑌾 ।
𑌨𑌚𑌾𑌭𑌾𑌵𑌯𑌤𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑌸𑍍𑌸𑍁𑌖𑌮𑍍 ॥

66. ந-அஸ்தி-பு³த்³தி⁴:-அயுக்தஸ்ய-ந-ச-அயுக்தஸ்ய பா⁴வநா।
ந-ச-அபா⁴வயத:-ஶாந்தி:-அஶாந்தஸ்ய-குத:-ஸுக²ம் ॥

𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯	மனம் ஒருநிலைப்படாதவனுக்கு
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃	ஆத்ம ஸ்வரூபஞானமானது
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	இல்லை
𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯	மனம் நிலைப்படாதவனுக்கு
𑌭𑌾𑌵𑌨𑌾 𑌚	ஆத்மத்தியானமும்
𑌨	இல்லை
𑌅𑌭𑌾𑌵𑌯𑌤𑌃	ஆத்மத்தியான மற்றவனுக்கு
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌨 𑌚	சாந்தியும் (ஸமாதானம்) இல்லை
𑌅𑌶𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯	ஸ்மாதானமற்றவனுக்கு
𑌸𑍁𑌖𑌂 𑌕𑍁𑌤𑌃	சுகமேது.

மனம் நிலைப்படாதவனுக்கு ஆத்மஸ்வரூப ஞானமாவது ஆத்மத்தியானமாவது உண்டாகமாட்டாது. ஆத்மத்தியானமற்றவனுக்கு சாந்தி (மனஸ்ஸமாதானம்) இல்லை. மனஸ் ஸமாதானமற்றவனுக்கு சுகமேது?

---

(1) பு³த்³தி⁴:-ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட ஆத்மஸ்வரூப ஞானமானது. (ராமானுஜர்).

(2) அயுக்தஸ்ய - மனச்சமாதானமற்றவனுக்கு (சங்கரர்); மனதை என்னிடம்வைக்காமலே இந்திரியசுவாதீனஞ் செய்பவனுக்கு(ராமானுஜர்).

(3) பா⁴வநா-ஆத்மஞானத்தில் முயற்சி அல்லது எண்ணம்(சங்கரர்). ஆத்மஸ்வரூபத்தை ஆராய்ந்தறிதலானது (ராமானுஜர்).

(4) சா²ந்தி:-விஷய ஆசைபற்றுப்போகுதல் (ராமானுஜர்).

(5) குத: ஸுக²ம்-இந்திரிய நிக்கிரகசுகம் இல்லை. என்றால், இந்திரியங்களை விஷயங்களிற் பிரவிர்த்திக்கும்படி விட்டிருக்கிறவரையிற் சுகமேயிருக்கமாட்டாதென்பதே (சங்கரர்); மோக்ஷாநந்தமேது. (ராமானுஜர்).

(சங்கரபாஷ்யம்) இந்த மனத்தெளிவை இதில் ஸ்ரீபகவான் புகழ்ந்து சொல்லுகிறார். மனம் ஒருநிலைப்படாதவனுக்கு ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிய அறிவு உண்டாகாது; ஒரு நிலைப்படாதவனுக்கு ஆத்மாவை அறிதலிலே மிக்க ஊக்கம் உண்டாகாது. அவ்வாறே ஆத்மாவை அறிதலிலே மிக்க ஊக்கம் கொள்ளாதவனுக்கு ஒழிவு உண்டாவதில்லை. ஒழிவற்றவனுக்கு ஸுகம் ஏது? இந்திரியங்கள் விஷயானுபவ ஆசையினின்றும் நீங்குதலன்றோ ஸுகம், விஷயங்களைப்பற்றிய ஆசை துன்பமேயன்றோ? ஆசையுள்ளவிடத்து ஸுகத்தின் வாஸனையும் கூட உண்டாகாது என்பது பொருள்.

இராகவேந்திரர், இந்த ஸ்லோகத்திற்கு செய்திருக்கும் அர்த்தம்:—

அயுக்தஸ்ய=மனோநிக்ரகமில்லாதவனுக்கு, பா⁴வநா நாஸ்தி=த்⁴யானமில்லை, அபா⁴வயத: பு³த்³தி⁴: ந=தியானமற்றவனுக்கு அபரோக்ஷஞானமில்லை; அபு³த்³தே⁴: சா²ந்தி: ந=அபரோக்ஷ ஞானமில்லாதவனுக்கு மோக்ஷமில்லை, அசா²ந்தஸ்ய ஸுக²ம் குத:=மோக்ஷமடையாதவனுக்குச் சுகமேது. (66)

மூ. இந்த்³ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீ⁴யதே |
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்ப⁴ஸி ||

67. இந்த்³ரியாணாம்-ஹி-சரதாம்-யத்-மந:-அநுவிதீயதே
தத்-அஸ்ய-ஹரதி-ப்ரஜ்ஞாம்-வாயு:-நாவம்-இவ-அம்ஹஸி ||

ஹி	ஏனெனில்
சரதாம் இந்த்³ரியாணாம்	(விஷயங்களில்) திரிகின்ற இந்திரியங்களை
யத் மந:	யாதொரு மனதானது
அநுவிதீ⁴யதே	அநுசரித்துப்போகிறதோ
தத்	அந்த மனதானது.

தஸ்ய ப்ரஜ்ஞாம்	இவனுடைய விவேகத்தை
அம்பஸி நாவம்	ஜலத்தில் கப்பலை
வாயுரிவ	காற்றுப்போல
ஹரதி	இழுத்துக்கொண்டு போகிறது.

விஷயங்களில் பிரவிருத்தித்திருக்கிற இந்திரியங்களை யாதொரு மனதானது அநுஸரித்துப்போகிறதோ அந்த மனதானது புருஷனுடைய விவேகத்தை ஸமுத்திரத்திற் கப்பலைக் காற்றுஎப்படி இழுத்துக்கொண்டு போகுமோ அப்படி இழுத்துக்கொண்டு போகிறது.

(சங்கரபாஷ்யம்) மனம் ஒரு நிலைப்படாதவனுக்கு ஏன் ஞானம் உண்டாவதில்லை என்பது இதில் சொல்லப்படுகின்றது. ஏனெனில் தம் தம் விஷயங்களிற் செல்லுகின்ற இந்திரியங்களை எந்த மனம் பின்பற்றுகின்றதோ, அதாவது இந்திரிய விஷயங்களை ஆராய்ந்துகொண்டு செல்லுகிற மனமானது ஆத்மா அநாத்மாக்களின் ஆராய்ச்சியால் வருவதானஇந்த யதியின் அறிவை அழிக்கின்றது. எப்படி காற்றானது ஜெலத்திலே சொல்லப்புகுந்த கப்பற்காரர்களுடைய வழியினின்றும் கப்பலை விலக்கி தப்புவழியிலே செலுத்துகின்றதோ அப்படியே மனமானது ஆத்மாவைப்பற்றிய அறிவைக் கவர்ந்து விஷயங்களை நோக்கும்படி செய்கின்றது.

ஸ்ரீதரர் முதலான சில வியாக்கியாதாக்கள் செய்யும் அர்த்தம்:—

சரதாம்= விஷயங்களிற் பிரவேசிக்கிற, இந்த்ரியாணாம்= இந்திரியங்களுடைய மத்தியில் (என்று விந்திரியங்களுக்குள்ளே), யத்= எந்த இந்திரியத்தை, மந:= மனதானது, அநுவிதீயதே= அநுசரித்துப்போகிறதோ, தத்= அந்த ஒரே இந்திரியமானது, அஸ்ய= இப்புருஷனுடைய ப்ரஜ்ஞாம்= விவேகத்தை, அம்பஸி= சமுத்திரத்தில், நாவம்= கப்பலை, வாயுரிவ= காற்றுப்போல, ஹரதி= அபகரிக்கிறது.

(ஸ்வ) ஒரு இந்திரியமே இவ்வளவு அநர்த்தத்தை விளைவிக்கக் கூடியதானால் எல்லா இந்திரியங்களும் சேர்ந்த விடத்து உண்டாகக் கூடிய அநர்த்தத்தைச் சொல்லவும் வேண்டுமா என்பது கருத்து.

மேற்படி அர்த்தத்தை அனுசரித்து இதிலுள்ள உபமான உபமேயங்களை அடியில் கண்டபடி சொல்லலாம்:—ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தைத் தாண்டிக் கரையேற உத்தேசித்து, ப்ரஜ்ஞையாகிய கப்பலை ஆதாரமாகக்கொண்டு திடபந்தனம் செய்து, சாஸ்திரோக்தமான நேர்வழியில், மனஸாகிய நாவிகனால் (கப்பலோட்டுபவனால்) அக்கப்பலை நடத்திக் கொண்டுபோகும் கால், அம்மனசாகிய நாவிகன் இந்திரியங்களாகிய பிரதிகூல வாயுவின் வசமாய் அதைப்

பின் தொடருவானானால் அந்த இந்திரியங்களாகிய பிரதிகூல வாயு பிரஜ்ஞை யாகிய கப்பலை வழிதப்பி இழுத்துக்கொண்டு போய் அங்கும் இங்கும் தள்ளி நாசப்படுத்துகின்றது. ஆனால் ப்ரஜ்ஞையை, மனம் இழுத்துக் கொண்டு போவதாக சங்கரர், சொல்லுகிறபடி வைத்துக்கொண்டால் இந்திரியங்களை அனுசரித்துப்போகிற மனசு, பிரதிகூல வாய்வுக்கும், இந்திரியங்களினின்றும் இழுக்கப்பட்ட மனது அனுகூலவாய்வுக்கும் ஸமானம்.

மதுசூதன ஸரஸ்வதி வியாக்கியானப்படி, இந்திரிய விஷயங்களில் போகிற சஞ்சல மனசு ஸமுத்திர ஜலத்திற்கும் ஆத்மாவை நாடுகிற திருட மனசு பூமிக்கும் ஸமானம். இந்திரியங்களாகிய காற்று, ப்ராஜ்ஞையாகிய கப்பலை பூமியிலிருக்கும்போது அசைக்க முடியாது. சஞ்சலமனஸாகிய ஜலத்தில் அந்தக் கப்பல் அகப்பட்டால் அதை இழுத்துக் கொண்டு போவதற்கு ஸாமர்த்தியம் இந்திரியமாகிய வாய்வுக்கு உண்டாகிறது. (67)

சுலோ. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌨𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥

68. **தஸ்மாத்-யஸ்ய-மஹாபாஹோ-நிக்ருஹீதாநி-ஸர்வஸ: இந்த்ரியாணி-இந்த்ரியார்த்தேப்ய:-தஸ்ய-ப்ரஜ்ஞா-ப்ரதிஷ்ட்டிதா ||**

𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋	ஓ! தோள்வலிமையுடைய அர்ஜுனா!
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
𑌯𑌸𑍍𑌯 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿	எவனுடைய இந்திரியங்கள்
𑌸𑌰𑍍𑌵𑌶𑌃	ஸகலமான
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌃	விஷயங்களிலிருந்து
𑌨𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌨𑌿	அடக்கப்படுகின்றனவோ
𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾	அவனுடைய ஞானமானது
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾	நிலைத்திருக்கிறது.

ஓ! அர்ஜுனா! (இந்திரியங்கள் இப்படி இழுத்துக்கொண்டுபோகுஞ் சக்தியை யுடைத்தா யிருக்கின்றன) ஆகையினாலே, எவனுடைய இந்திரியங்கள் ஸகலமான விஷயங்களிலிருந்தும் அடக்கப் படுகின்றனவோ அவனுடைய ஞானமானது நிலைத்திருக்கிறதென்று சொல்லப்படும்.

(**சங்கரபாஷ்யம்**) "𑌯𑌤𑌤𑍋𑌹𑍍𑌯𑌪𑌿" என்று முன் 60-வது சுலோகத்தில் கூறிய விஷயத்திற்குப் பலவாறாகப் பொருத்தத்தைக்கூறி பின்பு அதே விஷயத்தை பகவான் நிரூபித்து முடிக்கிறார். எதனால் இந்திரியங்கள் விஷயங்களில் செல்வதனால் வரும் தீங்கு உணர்த்தப்பட்டதோ அதனால்

மனஸ் முதலிய பலவகையாலும் (மனஸ், வாக்கு, காயங்களாலும்.) எந்த யதியினுடைய இந்திரியங்கள் ஓசை முதலிய விஷயங்களிலிருந்து அடக்கப் பட்டனவோ அவனுடைய ஞானம் நிலைத்தது. (68)

---

௬௯. 𑌯𑌾 𑌨𑌿𑌶𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌸𑌂𑌯𑌮𑍀 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌾 𑌨𑌿𑌶𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍋 𑌮𑍁𑌨𑍇𑌃 ॥

69. யா-நிஶா-ஸர்வபூதாநாம் தஸ்யாம்-ஜாகர்தி-ஸம்யமீ ।
யஸ்யாம்-ஜாக்ரதி-பூதாநி-ஸா-நிஶா-பஶ்யத:-முநே:॥

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂	பிராணிகளுக்கெல்லாம்
𑌯𑌾	எது (எந்த பரமார்த்த உண்மை)
𑌨𑌿𑌶𑌾	இராத்திரியோ (இரவுபோலிருக்கிறதோ)
𑌤𑌸𑍍𑌯𑌾𑌂	அதில் (அந்த பரமார்த்த உண்மையில்)
𑌸𑌂𑌯𑌮𑍀	இந்திரியங்களை யடக்கிய யோகியானவன்
𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿	விழித்துக்கொண்டிருக்கிறான்
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂	எதில் (எந்த உலகத்தோற்றமாகிய பேத புத்தி ரூபமான அஜ்ஞானத்தில்)
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿	பிராணிகள்விழித்திருக்கின்றனவோ
𑌸𑌾	அது (அந்த அஜ்ஞாநாவஸ்தையானது)
𑌪𑌶𑍍𑌯𑌤𑌃	பரமார்த்த உண்மையைக் காண்கிறவனான
𑌮𑍁𑌨𑍇𑌃 𑌨𑌿𑌶𑌾	முனிக்கு இரவு (இராத்திரிபோல.)

எந்த பரமார்த்த உண்மையானது பிராணிகளுக்கெல்லாம் இரவுபோலிருக்கின்றதோ, அதாவது இரவில் வஸ்து விளங்காததுபோல் விளங்குகிறதில்லையோ, அந்த பரமார்த்த உண்மையில், இந்திரியங்களை ஜயித்த யோகியானவன் அஜ்ஞானநித்திரை தெளிந்து, விழித்துக்கொண்டிருக்கிறான். (அதாவது அந்த பரமார்த்த உண்மை இவனுக்கு விளங்குகின்றது என்பது பொருள்). எந்த் பேத ரூப உலகத்தோற்றமான அஜ்ஞானத்தில், பிராணிகள் விழித்துக்கொண்டிருக்கின்றதுகளோ அந்த அஜ்ஞாநாவஸ்தையானது, பரமார்த்த உண்மையைக் காண்கிறவனான முனிக்கு இரவுபோலாத்தது.

(**சங்கரபாஷ்யம்**) லௌகிகமாகவும் வைதிகமாகவுமுள்ள இந்த வ்யவஹாரம் எதுவோ அது, அஜ்ஞானத்தின் கார்யமாதலால் விவேகபுத்தி பிறந்து ஞானம் நிலைத்தவனுக்கு அஜ்ஞானம் நீங்கினவுடனே நீங்கிவிடுகின்றது. அஜ்ஞானம் ஞானத்திற்கு விரோதமானதாலும் அதன் முன் நிற்காததாலும் நீங்குகின்றது, என்கிற விஷயத்தைத் தெளிவாக்குவதற்காக பக

வான் இந்த சுலோகத்தை அருளிச்செய்கிறார். ஞானம் நிலைத்தவனுக்கு எட்டுவதான பரமார்த்த உண்மையானது ஸகலப் பிராணிகளுக்கும், ஒவ்வொரு பொருளையும் வெவ்வேறாகப் பகுத்தறிய முடியாமையைச் செய்வதான தமஸ்ஸ்வபாவத்தையுடைய இரவாகவிருக்கிறது. அதாவது எப்படி இரவில் திரிவனவாகிய கோட்டான்முதலியவற்றிற்குப்பகலாகவேயிருப்பது மற்ற காக்கை முதலியவற்றிற்கு இரவாகவே எப்படி ஆகின்றதோ அப்படியே பரம் பொருளின் உண்மையானது இரவில் திரிவனவற்றை ஒத்த அஜ்ஞானிகளான ஸகலப் பிராணிகளுக்கும் இரவு போன்றுள்ளமையால் இரவாகவே இருக்கின்றது. அது அறிவில்லாதவர்க்கு எட்டாததலின் என்க. அந்த பரமார்த்த உண்மையிலே அடக்க முடையவனாய் இந்திரியங்களை ஜயித்த ஞான யோகியானவன் அஜ்ஞான உறக்கம் தெளிந்து, விழித்துக்கொண்டிருக்கிறான். உணரப்படுவதும் உணர்வதுமான பேதலக்ஷணமாகிய எந்த அஜ்ஞான இரவிலே தூங்கிக்கொண்டேயிருக்கும் பிராணிகள் விழித்துக்கொண்டிருக்கின்றன என்று சொல்லப்படுகின்றனவோ, எந்த அஜ்ஞான இரவிலே அவை உறங்கினவை போலக் கனவு காண்கின்றனவோ, அது அஜ்ஞானவடிவமாதலால் பரமார்த்த உண்மையைக் காணும் முனிவனுக்கு இரவென்பதாம். (ஜீவன்முக்தனுக்கு இந்தப்ரபஞ்சவியவஹாரம் ஸ்வப்னம்போலொத்தது என்பது கருத்து.) ஆகவே இந்த பேதக்கூட்டமாகிய உலகத் தோற்றமெல்லாம் இரவுபோல அஜ்ஞானமேதான் என்று எண்ணும் ஆத்மஞானிக்கு ஸகல கர்மங்களையும் விடுவதிலேதான் அதிகாரம்; கர்மத்தைச் செய்வதிலன்று.(69)

---

௭௦. 𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌾𑌪𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌂𑌤𑌿 𑌯𑌦𑍍𑌵𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑌾𑌮𑌾 𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌂𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑍀 ॥

70. ஆபூர்யமாணம்-அசலப்ரதிஷ்டம்-
ஸமுத்ரம்-ஆப:-ப்ரவிசந்தி-யத்வத்,
தத்வத்-காமா:-யம்-ப்ரவிசந்தி-ஸர்வே-
ஸ:-சாந்திம்-ஆப்நோதி-ந-காமகாமீ ||

𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌂	ஜலங்களினாலே பூர்ணமாய் நிறைந்தவும்
𑌅𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂	நிலைமாறாத இருப்பை யுடையவுமான
𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂	ஸமுத்திரத்தை
𑌆𑌪𑌃	(நதிமுதலியவைகளின்) ஜலங்கள்
𑌯𑌦𑍍𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌂𑌤𑌿	எப்படி பிரவேசிக்கின்றனவோ
𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑌾𑌮𑌾𑌃	அவ்விதமே ஸமஸ்த ஆசைகளும்
𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌂𑌤𑌿	எந்த முனிவனை பிரவேசிக்கின்றனவோ

𑌸𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 அவன் மோக்ஷத்தை அடைகிறான்
𑌨 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑍀 விஷய ஆசையுள்ளவனடைகிறதில்லை.

ஜலங்களினால் பூர்ணமாய் நிறைந்து ஸ்திரமான இருப்பை யுடைய ஸமுத்திரத்தை நதி முதலிய ஜலங்கள் எப்படிப்போயடையுமோ (நதிகள்போய் அடைவதினால் ஸமுத்திரம் கரை கடக்கவாவது யாதொரு விகாரத்தை யடையவாவது எப்படி மாட்டாதோ) அப்படியே ஸகல ஆசைகளும் பிரம்ம நிஷ்டனைப்போயடைந்தபோதிலும் அவன் (அதினால் விகாரமடையாமல்) மோக்ஷமடைவான். விஷய இச்சையுள்ளவன் மோக்ஷமடைகிறதில்லை.

(**சங்கரபாஷ்யம்**) ஆசையை விட்ட ஸ்திதப்ராஜ்ஞனான யதிக்குத்தான் முக்தி கைகூடும், கர்மத்தைத் துறக்காமல் கர்மத்தை விரும்பியுள்ளவனுக்கு அன்று, என்கிற விஷயத்தை திருஷ்டாந்தத்தால் உணர்த்த ஸ்ரீபகவான் மறுபடியும் அருளிச் செய்கிறார். ஜலங்களால் எல்லாப் பக்கங்களும் நிரம்பியதாய், மாறாத நிலையுள்ளதாய், வேறுபாடில்லாமலே ஒரே தன்மையாகத் தன் நிலையிலே நிற்பதான ஸமுத்திரத்தை, எங்குமுள்ள நதி முதலிய ஜலங்கள் எவ்வாறு பிரவேசிக்கின்றனவோ, அதாவது அந்த ஜலங்கள் பிரவேசிப்பதினால் ஸமுத்திரத்திற்கு எவ்விதமாறுதலும் உண்டாக்க முடியாமல் அந்தர்கதமாய் விடுகின்றனவோ, அவ்விதமாகவே பலவகைப்பட்ட ஆசைகளெல்லாம் எந்த முனிவனை விஷயங்களின் முன்னிலையிலும் விகாரப்படுத்தாமல் புகுகின்றனவோ, அதாவது எந்த முனியைத் தம்வசமாகச் செய்ய முடியாமல் ஆத்மாவினிடத்திலேயே ஒடுங்குகின்றனவோ, அவன் சாந்தியை (முக்தியைப்) பெறுகிறான். விஷயங்களை விரும்பும் தன்மையன் மோக்ஷத்தைப் பெறுவதில்லை என்பது பொருள்.

(**ஸ்வ**) இந்தசுலோகம்அவதாரதோப நிஷத்திற் காணப்படுகின்றது.(70)

---

௭௧. 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍁𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌨𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

71. விஹாய-காமாந்-ய:-ஸர்வாந்-புமாந்-சரதி(1)-நிஸ்ப்ருஹ:
(2)நிர்மம:-நிரஹம்கார:-ஸ:-ஶாந்திம்-அதிகச்சதி ॥

𑌯𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍	எந்த (பிரம்மநிஷ்டனான) புருஷன்
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌵𑌿𑌹𑌾𑌯	ஸமஸ்தவிஷயங்களையும் விட்டு
𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃	ஸகலத்திலுமாசையற்றும்
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃	(தன்னுடையதென்கிற) மமதையற்றும்
𑌨𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌃	(தானென்கிற) அகங்காரமற்றும்

चरति (எவ்விடத்திலும்) சஞ்சரிக்கிறானோ
स शान्तिमधिगच्छति அவன் மோக்ஷத்தை அடைகிறான்.

எந்தப்பிரம்மநிஷ்டனான புருஷன் ஸமஸ்த விஷயங்களையும் விட்டு ஸகலத்திலும் ஆசை, மமதை, அகங்காரங்களற்று சஞ்சரிக்கிறானோ அவன் ஸகல துக்கங்களிலிருந்தும் விடுபட்டு மோக்ஷத்தையடைகிறான்.

---

(1) சரதி-பிராரப்தத்தினால் வந்ததை அனுபவிப்பவன் (ஸ்ரீதரர்)

(2) நிர்மம:- தேகமே ஆத்மாவென்று எண்ணாதவன் (ராமாநுஜர்)

(சங்கரபாஷ்யம்) எந்தத் துறவியான புருஷன் கர்மங்களைச் சிறிதும் மிச்சமில்லாமல் முழுதும் ஒழித்துத்திரிகின்றானோ, அதாவது ஜீவித்திருப்பதற்கு வேண்டிய செய்கைகளை மாத்திரம் வைத்துக்கொண்டவனாகத் திரிகின்றானோ, பற்றற்றவனாய் அதாவது கேவலம் சரீரம் ஜீவித்திருப்பதிலும் கூட பற்று நீங்கினவனாய், மமகாரமற்றவனாய் அதாவது சரீரம் ஜீவித்திருப்பதற்கு மாத்திரம் வேண்டிய உடைமையிலும் கூட 'இது' எனது என்னும் பிடிப்பபற்றவனாய், அகங்காரமில்லாதவனாய் அதாவது கல்வியுடைமை முதலியவற்றாலுண்டாகும் 'நான்' எனத்தன்னையே தான் மதித்தலில்லாதவனாய் இருக்கின்றானோ, அவன் இவ்வாறிருப்பவனாய், ஞானம் நிலைத்தவனாய், ப்ரஹ்மத்தை அறிந்தவனாய் ஸம்ஸார துன்பமெல்லாம் ஒழிந்திடுதலாகிய நிர்வாணமென்னும் பெயருடைய சாந்தியை, மோக்ஷத்தைப் பெறுகிறான்; ப்ரஹ்மமாகவே ஆகிறான்.

(இராகவேந்திரர்) எந்த பிரம்ம நிஷ்டையுள்ள புருஷன் நிஷித்தமான கருமத்திலாசையற்றும், மமதையற்றும், அகங்காரமற்றும் ஸகல விஷயங்களிலும் பற்றற்றும் சஞ்சரிக்கிறானோ அவன் சாந்தியை அடைவான். (71)

---

௭௨. एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वास्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥

72 ஏஷா-ப்ராஹ்மீ-ஸ்திதி:-பார்த-ந-ஏநாம்-ப்ராப்ய-விமுஹ்யதி ஸ்தித்வா-அஸ்யாம்-அந்தகாலே-அபி-ப்ரஹ்மநிர்வாணம் ருச்சதி

हे पार्थ	ஓ! குந்திபுத்திரா!
ब्राह्मी स्थितिः	பிரம்மஞான நிஷ்டையானது
एषा	இதுவரை சொல்லிவந்ததாக விருக்கிறது
एनां प्राप्य	இந்த(பிரம்மஞான நிஷ்டையை)அடைந்து
न विमुह्यति	ஸம்ஸாரமோஹத்தை யடைகிறதில்லை
अस्यां	இந்தபிரம்மஞானநிஷ்டையில்
अन्तकालेऽपि	மரணகாலத்தில் இருந்தபோதிலும்

ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி பிரம்மத்தில் லயத்தை அடைகிறான்.

ஓ! குந்திபுத்திரா! பிரம்மஞான நிஷ்டையானது இதுவரை சொல்லி வந்ததாக விருக்கிறது. இந்த பிரம்மஞான நிஷ்டையை அடைந்து (பிறகு) ஸம்ஸாரமோஹத்தை அடைகிறதில்லை. இந்த பிரம்மஞான நிஷ்டையில் மரண காலத்தி விருந்தபோதிலும் பிரம்மத்தில் லயத்தை அடைகிறான்.

---

(1) ப்ராஹ்மீ-ஸ்திதி:=ஆத்ம சுவரூபநிச்சயத்தோடு கூடின கர்மயோக ஸ்திதியானது-ப்ராஹ்மீ-பிரம்மத்தையடை விக்கும் (ராமானுஜர்)

(2) ப்ரஹ்மநிர்வாணம்-ஆநந்தரூபமான பிரம்மத்தை (ராமானுஜர்) பிராகிருத சரீரமற்ற பிரம்மத்தை (இராகவேந்திரர்)

(சங்கரபாஷ்யம்) முன் சொன்னது ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை, ப்ரஹ்மஸ்வரூபமாகவே இருத்தல் என்பது. ஓ! பார்த்த! இந்த நிலையைப் பெற்று ஒருவனும் மோஹத்தை அடையமாட்டான். ப்ரஹ்மத்தைப்பற்றிய இந்த நிலையில் ஒருவன் கடைசிவயதில் இருந்தாலும் ப்ரஹ்மாநந்தமாகிய மோக்ஷத்தை அடைகிறான். எவன் ப்ரஹ்மசர்யத்திலிருந்தே ஸந்நியாஸத்தை அடைந்து ஜன்மமுழுவதும் ப்ரஹ்மத்திலேயே நிற்கிறானோ அவன் ப்ரஹ்மாநந்தத்தைப் பெறுவதைச்சொல்லவும் வேண்டுமோ?

(ஸு) ஜனனமுதல் மரணம் வரையில் ப்ரஹ்மஞான நிஷ்டையிலிருந்தால்தான் மோக்ஷமென்பது இராகவேந்திரர் அபிப்பிராயம். மரணகாலத்திலாவது ப்ரஹ்மநிஷ்டையிலிருந்தால் மோக்ஷம் கிடைக்குமென்பது மற்றவர்கள் அபிப்பிராயம்.

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
ஸாங்க்யயோகோ நாம
த்விதீயோऽத்யாய:.

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துகளாக, ப்ரஹ்ம
வித்தையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே
ஸாங்க்யயோகம் என்னும்
இரண்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.

த்ருதீயாத்யாயப்ராரம்ப:.

மூன்றாவது அத்தியாயம்.

கர்மயோகம்.

அர்ஜுந உவாச.

௩. ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்திர்ஜநார்தந ।
தத் கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேசவ ॥

1. ஜ்யாயஸீ-சேத்-கர்மணஃ-தே-மதா-புத்திஃ-ஜநார்த்தந (1)
தத்-கிம்-கர்மணி-கோரே-மாம்-நியோஜயஸி-கேசவ (2)

அர்ஜுந உவாச	அர்ஜுனன் சொன்னது
ஹே ஜநார்தந	ஓ ஜனார்த்தன!
கர்மண:	(நிஷ்காம) கர்மத்தைப்பார்க்கிலும்
புத்தி:	ஞானமானது
ஜ்யாயஸீ	சிரேஷ்டமென்பது
தே மதா சேத்	உமக்கு சம்மதமானால்
தத்	அப்போது
ஹே கேசவ	ஓ! கேசவா!
கிம்	என்னகாரணத்தினால்
கோரே	பயங்கரமான (பிராணி ஹிம்ஸாகரமான)
கர்மணி	கர்மத்தில்
மாம்	என்னை
நியோஜயஸி	பிரவிருத்திக்கும்படி ஏவுகிறீர்.

அர்ஜுனன் (ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியை நோக்கிச்) சொன்னது.

ஓ! ஜனார்த்தன! ஞானம் நிஷ்காம கர்மத்தைப்பார்க்கிலும் சிரேஷ்டமென்பது உம்முடைய அபிப்பிராயமானால், அப்போது, ஓ! கேசவா! என்ன காரணத்தினால் பிராணி ஹிம்ஸாகரமான கொடிய கர்மத்தில் என்னை பிரவிருத்திக்கும்படி ஏவுகிறீர்?

---

(1) ஜநார்த்தந—ஜநம் = ஜநநம், தத் காரணம் அஜ்ஞானம்ச, ஸ்வ ஸாக்ஷாத்காரேண, அர்த்தயதி = ஹிநஸ்தீதி ஜநார்த்தந:, அதாவது ஜனனத்தை

யும் அதற்குக் காரணமான அஜ்ஞானத்தையும் தன் சாக்ஷாத்காரத்தினால் நாசம் செய்கிறவர் என்று, சங்கரானந்தர், அர்த்தம் செய்திருக்கிறார். அதாவது அஜ்ஞானத்தைப் போக்கடிக்கிற நீர் ஏன் என்னை அஜ்ஞான மாகிய கர்மத்தில் ஏவுகிறீர் ?

(2) கேஶவ—கேசவஃ க்லேசநாசநா, என்பது புராணப்பிரசித்தம். எல்லாருடைய கிலேசத்தையும் போக்கடிக்கிற நீர் என்னுடைய இந்த கிலே சத்தையும் நிவிர்த்தி செய்யும் என்பது தாத்பரியம்.

(சங்கரபாஷ்யம்) சாஸ்திரப்படி பிரவிருத்திபுத்தி, அதாவது யோக புத்தி, நிவிருத்திபுத்தி, அதாவது ஸாங்க்யபுத்தி, என இரண்டு மார்க்கங் கள் உள்ளன. "அஶோச்யாநந்வஶோசஸ்த்வம்" என்பது முதல் "ஏஷா தே(அ)பிஹிதா ஸாங்க்யே" என்பது வரையில் ஸாங்கியமாகிய நிவிருத்தி புத்தி, அதாவது, கர்ம ஸந்நியாஸத்தினாலே கிருதார்த்தனாகலாமென்று இரண்டாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டது. "கர்மண்யேவாதி காரஸ்தே—மா தே ஸங்கோ(அ)ஸ்த்வகர்மணி" என்பதில் யோக புத்தியை ஆஶ்ரயித்து கர்மத்தையே (நீ) செய்யவேண்டுமென்று (பிரவிருத்தி புத்தியை) பகவான் அர்ஜுனனுக்குச் சொன்னார். ஆனால் அதினாலேயே சிரேயஸ் பிராப்தியைச் சொல்லவில்லை. அதையும் இதையும் ஆலோசித்து புத்தி கலங்கிய அர்ஜுனன் 'எது சிரேயஸை அடைவதற்கு நேரான ஸாதநமோ அந்த ஸாங்க்ய புத்தி நிஷ்டையை சிரேயஸை நாடும் பக்த னுக்கு உபதேசித்து, பிரத்தியக்ஷமாய் பல அநர்த்தங்களோடு கூடியதும், பரம்பரையாகவாயினும் சிரேயஸ் பிராப்தி பலன் நிச்சிதமில்லாததுமான கர்மத்தில் எப்படி என்னை ஏவக்கூடும்'? என்று மனக் கலக்கம் அடைந்தது ஏற்கும். அதை அனுசரித்தே 'நீர் கர்மத்தைக்காட்டிலும் ஞானம் நன்மை செய்வதாகச் சொன்னீர். கர்மத்தைத்தான் நீ செய்யக்கடவாய் என்றும், உபதேசித்தீர். ஓ! கேசவா! என்ன காரணத்தால் ஹிம்ஸாலக்ஷணமான கொடிய கர்மத்தில் ஏவுகிறீர்' என்று பகவானைப் பழிக்கிறவன் போல் அர்ஜுனன் கேட்கிறான்.

சிலர், மோக்ஷமடைவதற்கு ஞானம், கர்மம், (இரண்டும்) இரண்டும் வேண்டியதாகச்சொல்லுகிறார்கள். இதுதான் கிருதார்த்தம் யென்கிறார் கள். இந்த அபிப்பிராயம் தப்பானது. சுருதி ஸ்மிருதிகளிலே சகல ஆச்ரமிகளுக்கும் (ஸந்யாஸி, வானப்ரஸ்தன், பிரம்மசாரி கிரகஸ்தன் இவர்களுக்கு) கர்மஸந்நியாஸம் சொல்லப்பட்டிருக்கிறது. அஸந்நியா ஸிக்குமட்டுந்தான் கர்மம் செய்யவேண்டியதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. மோக்ஷ இச்சையுள்ள ஞான நிஷ்டனுக்கு கர்மம் அவசியமில்லை யென்ப

தற்கு அநேகப்பிரமாணங்களுண்டு. ஆகையால், ஞானம் கர்மம், இரண்டும் ஒருவனே செய்யவேண்டியதென்று சொல்லப்பட்டதாக நினைக்கக் கூடாது. ஒவ்வொரு அதிகாரிக்கு ஒவ்வொன்று சொல்லப்பட்டதாகக் கொள்ள வேண்டியது. இரண்டுமொருவனுக்குச் சொல்லப்பட்டதல்லவாகையால் மோக்ஷமடைய ஞானம் காரணமேயன்றி, ஞானம் கர்மமிரண்டுங் காரண மல்ல, என்பது தாத்பரியம். (அத். கஅ-சுலோ. கூகூ-ல் இந்த தாத்பரியம் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.)

(ராமாநுஜர்) இந்திரியங்களை யடக்கிக்கொண்டு செய்வதாகிய ஆத்ம ஞான நிஷ்டையும் சொன்னீர்; இந்திரியங்களை விஷயங்களில் பிரவிருத்தி செய்துக்கொண்டு செய்யப்படுவதாகிய நிஷ்காம கர்மமானது ஞானத்திற் குக் காரணமானதென்றுஞ் சொன்னீர். ஞான நிஷ்டைக்கு விரோதமான தும் இந்திரியங்களை விஷயங்களில் பிரவிருத்திக்கச்செய்வதுமாகிய பயங்க ரமான கர்மத்தை ஏன் என்னைச் செய்யச் சொல்லுகிறீர் என்பது, அர்ஜுனன் தாத்பரியம்.

(இராகவேந்திரர்) கர்மத்தைப் பார்க்கிலும் புத்தியோகமாகிய ஞானம் விசேஷமானதென்று (உ-அத். சகூ. சுலோ.) சொல்லப்பட்டிருக் கிறது. ஸ்வர்க்காதிப் பிராப்தியை அடைவிக்கும்படியான காம்மிய கர்மத் தைச் செய்யும்படியும் (ஷை அத். ௩எ - சுலோ.) சொல்லப்பட்டிருக்கிறது. கடைத்தேற வேண்டுமென்று கேட்ட வெனக்கு காம்மிய கர்மத்தைச் செ ய்யச்சொல்லியது, என்னை ஸம்ஸாரத்தில் கொண்டுவந்து விடுகிறதாக விரு க்கிறது. ஷை அத். ௩கூ-சுலோகத்தில் நிஷ்காமகர்மயோகமே சகல பந்தங் களை நிவர்த்தித்து மோக்ஷத்தை அடைய ஹேதுவென்றுஞ் சொல்லப்பட்டி ருக்கிறது. இப்படிப் பலவிதமாய்ச் சொன்னதினால் கலக்கமுற்றிருக்கி றேன். நிஷ்காம கர்மம் மோக்ஷ ஹேதுவா ? ஆத்மஞான நிஷ்டை மோக்ஷ ஹேதுவா ? என்று ஸந்தேகப்பட்டு அர்ஜுனன் கேட்கிறான்.

(ஸ்வ) முன் இரண்டாவது அத்தியாயத்தில் பகவான் முதலில் ஆத்ம ஞானத்தையும், பிறகு கர்மயோகத்தையும் சுருக்கமாகச் சொன்னார். ஆ னால் அவை இரண்டையும் ஒருவனே அநுஷ்டிப்பதா அல்லது ஒவ்வொன் றும் வேறு வேறு அதிகாரிகள் அநுஷ்டிக்கவேண்டியதா என்று அதிகாரி பேதம் முதலான பிரிவு விஸ்தரிக்கப்படவில்லை. சுருக்கமாய்ச்சொல்லியதைக் கொண்டு ஞானம் சிரேஷ்டமென்று அர்ஜுனன் தாத்பரியங் கொண்டான். ஆகிலும் "நீ கர்மயோகத்திற்குத்தான் அதிகாரி" என்று பகவான் அவ னுக்கு கண்டோக்த்தமாகச் சொல்லியு மிருக்கிறார். இவைகளை யோசித்து மனம் கலங்கி, பகவான் சுலபமானதும் சிரேஷ்டதரமானதுமான நிவிருத்தி

மார்க்கமாகிய ஞானமார்க்கத்தை அனுஷ்டிக்கும்படி என்னைச் சொல்லாமல் அதிக துக்கத்தோடு கூடிய ஹிம்ஸாரூபமான கோர கர்மத்தில் பிரவிருத்திக்கும்படி ஏன் சொன்னீர், நான் ஏன் ஞானயோகமாகிய நிவிருத்திமார்க்கத்தை அனுஷ்டிக்கக் கூடாது என்று வியாகூல புத்தியை அடைந்து இந்த சுலோகத்தில் கேட்பதாகத் தோற்றுகிறது. (1)

உ. 𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑍀𑌵 𑌮𑍇 । *
𑌤𑌦𑍇𑌕𑌂 𑌵𑌦 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌹𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍 ॥

2. வ்யாமிஸ்ரேண-இவ-வாக்யேந-புத்திம்-மோஹயஸீ-இவ-மே,
தத்-ஏகம்-வத-நிஸ்சித்ய-யேந-ஸ்ரேய:-அஹம்-ஆப்நுயாம் ||

𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍇𑌵	ஸம்சயத்தை யுண்டாக்குகிறதுபோலுள்ள
𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨	வாக்யத்தினாலே
𑌮𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂	என்னுடைய புத்தியை
𑌮𑍋𑌹𑌯𑌸𑍀𑌵	மோகிக்கச்செய்கிறவர்போல் காண்கிறீர்
𑌯𑍇𑌨	எதனாலே
𑌶𑍍𑌰𑍇𑌯𑌃	சிரேயஸை
𑌅𑌹𑌂 𑌆𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍	நான் அடைவேனோ
𑌤𑌦𑍇𑌕𑌂	அவ்வொன்றையே
𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌵𑌦	நிச்சயித்து சொல்லும்.

ஸம்சயத்தை யுண்டாக்குகிறதுபோலுள்ள வாக்கியத்தினாலே என்னுடைய புத்தியை மோகிக்கச் செய்கிறவர்போல் காண்கிறீர். எதனாலே மோக்ஷத்தை நான் அடைவேனோ அவ்வொன்றையே நிச்சயித்துச் சொல்லும்.

(சங்கரபாஷ்யம்) பகவான் தெளிவாகச் சொல்லுபவராயினும் மந்தபுத்தியான் எனக்கு பகவான் வார்த்தையானது சந்தேகிக்கச்செய்வதுபோலத் தோற்றுகின்றது. அதனால் 'என் புத்தியை மோகிக்கச்செய்கிறவர் போல் காண்கிறீர்: மந்த புத்தியாகிய என்னுடைய மோகத்தைப் போக்கடிப்பதற்காகவே பிரவிருத்தித்த நீர் எப்படி மோகிக்கச்செய்வீர் அதாவது செய்யமாட்டீர், ஆதலால்தான் என்புத்தியை மோகிக்கச்செய்கிறவர் போல் தோன்றுகிறீர்' என்று சொன்னேன். ஆனால் ஞானத்தை அநுஷ்டிப்ப

---

* '𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍈𑌵' என்று ஒரு பாடம்; (ராமாநுஜர்). ஸம்சயத்தையே உண்டாக்குகிறீர் என்பது அர்த்தம்.

வன் வேறு, கர்மத்தை அனுஷ்டிப்பவன் வேறு, ஒருவனே ஒரே காலத்தில் இரண்டையும் ஒருமித் தனுஷ்டித்தல் முடியாது என நீங்கள் நினைத்தால் அப்போது அவற்றில் ஏதாவது ஒன்றை 'இதுதான் அர்ஜுனனுக்குத் தக்கது அவனுடைய புத்திவல்லமைக்கும் நிலைமைக்கும் ஏற்றது' என்று நிச்சயித்து அருள்செய்யவேண்டும். ஞானத்தினாலாயினும் கர்மத்தினாலாயினும் எந்த ஏதாவது ஒன்றினால் நான் நன்மையைப் பெறுவேனோ அதைச் சொல்லும் என்பது பொருள். (2)

ஸ்ரீபகவாநுவாச.

௩. லோகே'ஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாநக |
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம் ||

3. லோகே-அஸ்மி-த்விவிதா-நிஷ்டா-புரா(1)-ப்ரோக்தா-மயா-அநவ,
ஜ்ஞாநயோகேந-ஸாங்க்யாநாம்-கர்மயோகேந-யோகிநாம்.

ஸ்ரீபகவாநுவாச	ஸ்ரீ பகவான் சொன்னது
ஹே அநக	ஓ! பாபமற்றவனே!
புரா	முன்பு
அஸ்மிந் லோகே	இந்த உலகத்திலே
ஸாங்க்யாநாம்	ஸாங்க்யர்களுக்கு
ஜ்ஞாநயோகேந	ஞானயோகத்தினாலேயும்
யோகிநாம்	யோகிகளுக்கு
கர்மயோகேந	(நிஷ்காம) கர்மயோகத்தினாலேயும்
த்விவிதா நிஷ்டா	இரண்டுவிதமான நிஷ்டையானது
மயா ப்ரோக்தா	என்னாலே சொல்லப்பட்டது.

பகவானான ஸ்ரீ கிருஷ்ணசுவாமியானவர் அர்ஜுனனை நோக்கிச் சொன்னது.

ஓ! பாபமற்றவனே! முன்பு (சிருஷ்டிகாலத்தில்) இந்த உலகத்திலே ஞானயோகமானது ஸாங்க்யர்களுக்கும், கர்மயோகமானது யோகிகளுக்குயாக இரண்டுவிதமான நிஷ்டை என்றுற் சொல்லப்பட்டது.

---

(1) புரா - முன்பு நான் சிருஷ்டிசெய்தகாலத்தில் (சங்கரர்); முன் சொன்ன அத்தியாயத்தில் என்று ஸ்ரீதரர் அர்த்தம் செய்கிறார்-

(சங்கரபாஷ்யம்) ஸர்வஜ்ஞியனான ஈசுவரனாகிய நான் சிருஷ்டித் துவக்கத்தில் ஜனங்களைப் படைத்து அவர்களுக்கு செல்வமும், முக்தியும் கிடைப்பதற்கு ஸாதநமான, வேதப்பொருளின் ஸம்பிரதாயத்தை வெளிப் படுத்தியபொழுது இவ்வுலகத்திலே சாஸ்திரார்த்தத்தை அனுஷ்டிக்க அதி

காரம் பெற்ற மூன்று வருணத்தாருக்கும் இரண்டு விதமான நிஷ்டையை அதாவது அனுஷ்டிக்கவேண்டிய நிலைமையைச் சொன்னேன். அந்த இரு வகையான நிஷ்டை யாதென்று கூறுகிறார் :— அவற்றுள் ஆத்மா அநாத்மாக்களைப் பகுத்தறியும் ஞானமுடையவராய் ப்ரஹ்மசர்ய ஆஶ்ரமத்திலிருந்தே ஸந்நியாஸத்தை அடைந்தவராய், வேதாந்த ஞானத்தால், நன்றாய் வஸ்து நிர்ணயித்தவராய், பரமஹம்ஸரென்னும் ஸந்நியாஸிகளாய், ப்ரஹ்மத்திலேயே நிற்கின்ற ஸாங்க்யர்களுக்கு, ஞானமாகிய யோகத்தால், ஞான நிஷ்டையைச் சொன்னேன். கர்மமாகிய யோகத்தால் யோகிகளாகிய கர்மிகளுக்கு கர்மநிஷ்டையைக் கூறினேன் என்பது பொருள்.

ஒரே புருஷனாலே ஒரே புருஷார்த்தத்தின்பொருட்டு ஞானமும் கர்மமும் ஒன்றுசேர்த்து அநுஷ்டிக்கவேண்டியதென்பது கீதையிலே பகவானாலே தமது கருத்தாகச் சொல்லப்பட்டதாகவும், வேதங்களிலும் ஓதப்பட்டதுமாகவிருந்தால், பகவான் தன்னைச் சரணாகதி அடைந்த அன்பனான அர்ஜுநனுக்கு, ஞானநிஷ்டையை அநுஷ்டிப்பதற்கு உரிய புருஷன் வேறு கர்மநிஷ்டையை அனுஷ்டிப்பதற்கு உரிய புருஷன்வேறு என்று இங்கு எப்படிக் கூறுவார்? ஆகையால் எவ்விதத்திலும் ஞான கர்மங்கள் ஒன்று சேர்தல் அமையாதென்க. (3)

---

௪. 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌨𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌨𑍍𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ।
𑌨 𑌚 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑍇𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

4 ந-கர்மணாம்-அநாரம்பாத்-நைஷ்கர்ம்யம்-புருஷ:-அஶ்நுதே,
ந-ச-ஸந்ந்யஸநாத்-ஏவ-ஸித்₃தி₄ம்-ஸமதி₄க₃ச்ச₂தி.

𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 புருஷனானவன்
𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 கர்மங்களுடைய
𑌅𑌨𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌤𑍍 அநுஷ்டானமில்லாமையால்
𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 கர்மம் நீங்கிய நிலையை
𑌨𑌾𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 அடைகிறதில்லை
𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑍇𑌵 { ஞானமற்ற வெறும் கர்ம பரித்தியாகத்தினாலே (விட்டுவிடுவதினாலே) யே
𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨 𑌸𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ஸித்தியையும் அடைகிறதில்லை.

புருஷன் (ஒருவன்) கர்மங்களைச் செய்யாமையினால், நைஷ்கர்ம்யத்தை அதாவது கர்மமற்ற நிலையை (ஞானயோகத்தால் நிஷ்டையை) அடைகிறதில்லை. ஞானமற்ற வெறும் கர்மபரித்தியாகத்தினாலேயே (கர்மத்தை விட்டுவிடுவதினாலேயே) மோக்ஷத்தையும் அடைகிறதில்லை.

(சங்கரபாஷ்யம்) ஞானம் கர்மத்தைவிட மேலானதென்று அர்ஜுனன் சொன்னது நிலைத்தது. ஏன் என்றால் பகவான் அதை மறுக்காமையால். பின்னும், ஞான கர்மங்கள் வெவ்வேறு புருஷர்களால் அனுஷ்டிக்கத் தக்கவை என்று சொல்லும் பகவானுடைய வாக்கியத்தினால், அந்த ஞான நிஷ்டையானது ஸந்நியாஸியினாலேயே அநுஷ்டிக்கத் தக்கதென்பதும் நிலைத்தது. இவ்விதமே பகவான் கருத்தென்று தெரிகின்றது. இனி 'ஸம்ஸார பந்தத்திற்குக்காரணமான கர்மத்திலே என்னை ஏன் ஏவுகிறீர்' என்று மனம் வருந்திய அர்ஜுனன் 'கர்மத்தைச் செய்யமாட்டேன்' என நினைத்திருப்பதாகக் கண்டு பகவான் "நகர்மணாமநாரம்பாத்' என்கிற இந்த சுலோகத்தை அருளிச்செய்கிறார். அல்லது பின் வருமாறு தாத்பரியம் கொண்டாலும் அமையும் :—ஞான கர்ம, நிஷ்டைகள் ஒன்றற்கொன்று மாறுபட் டிருப்பதால் ஒரே புருஷன் அவற்றை ஒரே ஸமயத்தில் அநுஷ்டிக்கக் கூடாமையின் அவை ஒன்றை யொன்று சார்ந்து நிற்காமலே புருஷார்த்தத்தைத் தருவன என்பதாயிற்று. ஆகவே கர்ம நிஷ்டையானது ஞான நிஷ்டையைப் பெறக் காரணமாவதால் புருஷார்த்தத்தைத் தருவதென்பது ; ஸ்வதந்திரமாகவே (தானாகவே) அது புருஷார்த்தத்தைத் தருவது அன்று. ஞான நிஷ்டையோ கர்ம நிஷ்டையாகிய உபாயத்தால் அடையத் தகுந்ததாய் பிற உதவி இல்லாமல் நேராகவே புருஷார்த்தத்தைத் தருவது என்கிற இந்த விஷயத்தைத் தெளிவாக விளக்கும்பொருட்டு பகவான் இந்த சுலோகத்தைக் கூறுவதாகச் சொல்லலாம்.

இப்பிறப்பிலாயினும் முன் பிறப்பிலாயினும் அநுஷ்டிக்கப்பட்ட யஜ்ஞம் முதலிய கர்மங்கள் முன் செய்த பாபத்தைப் போகப்பண்ணுவதால் சித்த சுத்தியை உண்டாக்குகின்றன, அதனால் ஞானமுண்டாதல் மூலமாக ஞான நிஷ்டைக்குக் காரணமாகின்றன ; அவை அவ்வாறு ஞானத்திற்குக் காரணமாகிறதென்பதை 'ஜ்ஞானமுத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத் பாபஸ்ய கர்மண: | யதாதர்சதலப்ரக்யே பச்யத்யாத்மானமாத்மனி ||' 'பாப கர்மம் தேய்வதினாலே மனிதர்க்கு ஞானம் உண்டாகின்றது ; அப்பொழுது ஒருவன் துலக்கமான கண்ணாடியிற்போலத் தன்னில் தன்னைக் காண்கிறான்' என்கிற ஸ்ரீமஹாபாரதம், சாந்திபர்வம், 204 வது அத்தியாயம், 8 வது சுலோகமாகிய ஸ்மிருதி வசநங்களால் காண்க.

கர்மங்களைச் செய்யாமையினால் நைஷ்கர்ம்யத்தை, அதாவது கர்மம் நீங்கியதன்மையை, பிரவிருத்தி அற்ற நிலையை, ஞானயோகத்தால் நிஷ்டையை, அகர்த்தாவாகிய ஆத்மஸ்வரூபமாகவே நிற்றலை ஒருவன் அடைய மாட்டான் என்பது பொருள். "நகர்மணாமநாரம்பாத் நைஷ்

புருஷோऽஶ்நுதே” என்னும் வசனத்தினாலே அதன் பொருளை யால் அதாவது ‘கர்மத்தை அனுஷ்டித்தலால் கர்மம் நீங்கிய நிலையைப்பெறுவான்’ என்று தோன்றுகிறது; மற்று என்னகாரணத்தால் கர்மங்களைச் செய்யாமையினால் கர்மங்களினின்றும் நீங்கிய நிலையைப் பெறமாட்டானென்றால் கர்மத்தைச்செய்தலே கர்மமற்ற நிலையைப்பெறுவதற்கு உபாயமாதலினால் என்க. உபாயமின்றி ஒருபயனையும் பெறுவதில்லையன்றோ? நைஷ்கர்ம்ய நிலைமையாகிய ஞானயோகத்திற்குக் கர்மயோகம் உபாயமாகும். அவ்வாறே ஶ்ருதியிலும் இங்கு கீதையிலும் உணர்த்தப்படுகின்றன. ஶ்ருதியிலோ இங்கு பேசிவருகின்றதும் அறியவேண்டியதுமான ஆத்மாவாகிய உலகத்தை அறிவதற்கு உபாயமாக “தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந” என்கிற ஶ்ருதியினால் கர்மயோகம் ஞானயோகத்திற்கு உபாயமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கீதையிலும் 5-வது அத்தியாயம் 6-வது சுலோகத்தில் “ஸந்ந்யாஸஸ்து மஹாபாஹோ து:கமாப்துமயோகத:” ஸந்நியாஸமோ கர்மயோகமின்றிப் பெறுவது கஷ்டமே. ‘யோகிந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே’, யோகிகள் பற்றைவிட்டு சித்த சுத்திக்காக கர்மத்தைச் செய்கிறார்கள் என்று ஷை அத்தியாயம் 11 வது சுலோகத்திலும், ‘யஜ்ஞோ தாநம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம்’ ‘யஜ்ஞமும், தானமும், தபசும், பயனை எதிர்பார்க்காதவர்களுக்கு பரிசுத்தத்தைச் செய்வனவாம்’ என்று 18-வது அத்தியாயம் 5-வது சுலோகத்திலும் பின் சொல்லப்படுகின்றது. ஆனால் இனி வேறொரு சந்தேகம் உண்டாகக்கூடும். அதாவது ‘ஸர்வபூதேப்யோऽபயம் தத்த்வா நைஷ்கர்ம்யமாசரேத்’, ‘சகலப் பிராணிகளுக்கும் அபயமளித்த பின்பு நைஷ்கர்ம்யத்தை மேற்கொள்ள வேண்டும்’ என்பது முதலானவற்றிலே ஒருவன் தான் செய்யவேண்டிய கர்மங்களை விடுதலாலும் நைஷ்கர்ம்யத்தைப் பெறலாமென்று காட்டப்படுகின்றது. உலகத்திலும் கர்மங்களைச் செய்யாமையினால் கர்மம் நீங்கிய தன்மை என்பது யாவரும் அறிந்த விஷயம், ஆகவே நைஷ்கர்ம்யத்தைத் தேடுகிறவனுக்கு கர்மத்தைச் செய்வதினால் ஆவதென்ன வென்றாலோ, அதற்காகத்தான் ஸ்ரீ பகவான் ‘ந ச ஸந்ந்யஸநாதேவ’ துறவினாலேயே இல்லையென்று கூறுகிறார். அதாவது கர்மத்தை விட்டிடுதல் மாத்திரமேயாகிய ஞானமில்லாத வெறுந் துறவினாலேயே ஸித்தியை, ஞானயோக நிஷ்டையை அடையமாட்டான், அத். 18-ச்லோ. 49. பாஷ்யம் பார்க்க.

(ஸ்வ) அர்ஜுனன், கர்மங்களைச் செய்யாமல் விடுவதுதான் ஞானத்தின் லக்ஷணமென்று தப்பாகக்கொண்ட எண்ணத்தை பகவான் பரிகரிக்கிறார். (4)

௫. 𑌨𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌵𑌶𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ॥

5. ந-ஹி-கஶ்சித்-க்ஷணம்-அபி-ஜாது-திஷ்டதி-அகர்மக்ருத் ।
கார்யதே-ஹி-அவஶ:-கர்ம-ஸர்வ:-ப்ரக்ருதிஜை:-(1)குணை: ॥

𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍	ஒருவனும்
𑌜𑌾𑌤𑍁	ஒருகாலத்திலும்
𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿	க்ஷணப்பொழுதாவது
𑌅𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍	கர்மம் செய்யாதவனாக
𑌨𑌹𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿	இருக்கிறதில்லை
𑌹𑌿	ஏனென்றால்
𑌸𑌰𑍍𑌵𑌃	ஸகலப்பிராணியும்
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌃	ப்ரகிருதியிலிருந்துண்டான
𑌗𑍁𑌣𑍈𑌃	(ஸத்வ ரஜஸ் தமோ) குணங்களால்
𑌅𑌵𑌶𑌃	ஸ்வாதீனமற்று
𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇	கர்மத்தைச் செய்விக்கப்படுகிறது.

ஒருவனும் எக்காலத்திலும் க்ஷணப்பொழுதாவது கர்மம் செய்யாமலிருக்கிறதில்லை. ஏனென்றால் ஸகலப் பிராணியும் ப்ரகிருதியிலிருந்துண்டான ஸத்வரஜஸ்தமோ குணங்களால் அவசமாய் அதாவது ஸ்வாதீனமற்று கர்மத்தைச் செய்யும்படி செய்யப்படுகிறது.

---

(1) 𑌗𑍁𑌣𑍈𑌃-ப்ராசீன கர்மாநுஸாரமாய் விருத்தியடைந்திருக்கிற ஸத்வாதி குணங்களினாலே (ராமாநுஜர்); ஆசை துவேஷம் முதலிய குணங்களினாலே (ஸ்ரீதரர்).

(சங்கரபாஷ்யம்)-மற்று என்ன காரணத்தினால் ஒருவனும், ஞானமில்லாமல் கேவலம் கர்மத்தை விடுவதினாலே மாத்திரம் நைஷ்கர்ம லக்ஷணமாகிய ஸித்தியை பெருவதில்லை என்பதின் காரணம் சொல்லப்படுகிறது.

𑌸𑌰𑍍𑌵𑌃=ஒவ்வொரு பிராணியும் என்பதற்குமுன், "அஜ்ஞானியான" என்னும் பதம் தொக்கி நிற்பதாய்க் கொள்ளவும். ஏனெனில் "𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌯𑍋 𑌨 𑌵𑌿𑌚𑌾𑌲𑍍𑌯𑌤𑍇" 'எவன் குணங்களால் அசைக்கப்படுகிறதில்லையோ' என்று ஞானியைப்பற்றி, பின்வருகிற 14-வது அத்தியாயம் 23-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருப்பதால், ஞானியை

ஸத்வாதி குணங்கள் அசைக்கிறதில்லை. ஆகையால் இந்த சுலோகம் அஜ்ஞானிகளைக் குறித்தே சொல்லப்பட்டது. அஜ்ஞானிகளுக்கே கர்ம யோகமல்லது ஞானிகளுக்கன்று. குணங்களால் அசைக்கப்படாத ஞானிகளுக்கு தங்களிடத்தில் அசைவு அதாவது யாதொரு விகாரமு மில்லாமையால், கர்மயோகம் பொருந்தாது. இவ்விதமே ,,𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂'' என்கிற, 2-வது அத். 21-வது சுலோகத்தின்கீழ் சொல்லப்பட்டிருக்கிறது.

(இராகவேந்திரர்)-𑌜𑌾𑌤𑍁=ஜாக்கிர சுவப்ந சுஷுப்தி அவஸ்தைகளிலும், 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍=ஞானியானாலும் அக்ஞானியானாலும் 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿= ஒருக்ஷணங்கூட 𑌅𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍=கர்மம் செய்யாமல் 𑌨𑌹𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿= சும்மாயிருக்கிறதில்லை. 𑌅𑌵𑌶𑌃=விஷ்ணுவின் அதீனமான 𑌸𑌰𑍍𑌵𑌃= (𑌸𑌰𑍍𑌵𑍇𑌣) சகல ஜனங்களால், 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃= பிரகிருதியிலிருந்துண்டான சத்துவாதி குணங்களினாலே 𑌕𑌰𑍍𑌮=கர்மமானது 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇=செய்யப்படுகிறது. (5)

ஸ்ரீ. 𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌮𑌨𑌸𑌾 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

6. கர்மேந்த்ரியாணி-(1)ஸம்யம்ய-ய:-ஆஸ்தே-மநஸா-ஸ்மரந்,
இந்த்ரியார்தாந்-விமூடாத்மா-மித்யாசார:-(2)ஸ:-உச்யதே.

𑌯𑌃 𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾	எந்த அஜ்ஞானியானவன்
𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿	கர்மேந்திரியங்களை
𑌸𑌂𑌯𑌮𑍍𑌯	அடக்கி
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍	இந்திரிய விஷயங்களை
𑌮𑌨𑌸𑌾	மனதினால்
𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌆𑌸𑍍𑌤𑍇	நினைத்துக்கொண்டிருக்கின்றானோ
𑌸𑌃	அவன்
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇	பொய்யாசாரமுள்ளவனாகச் சொல்லப்படுகி[றான்.

எவன் கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு இந்திரியங்களின் விஷயங்களை மனதில் நினைத்துக்கொண்டிருக்கின்றானோ மோகமடைந்த அந்தக்கரணத்தையுடைய (மூடனான) அவன் பொய்யாசாரமுள்ளவனாகச் சொல்லப்படுகிறான்.

---

(1) *கர்மேந்த்ரியாணி*-ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை (*இராகவேந்திரர்*).

(2) *மித்யாசார:*-டம்பாசாரி (*ஸ்ரீதரர்*); கர்மபிரஷ்டன் (*ராமாநுஜர்*).

(*சங்கரபாஷ்யம்*) ஆத்மாவை அறியாதவன் தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய்யாதிருப்பது சரியன்று, அப்படிச் செய்யாதிருப்பதினால் தன்னையேதான் கெடுத்துக் கொள்ளுகிறவனாகிறான், என்பது இதில் சொல்லப்படுகிறது. கை முதலிய கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரிய (கர்மேந்திரிய ஞானேந்திரிய) விஷயங்களை மனதில் கருதிக் கொண்டு அந்தக்கரணம் மயங்கி நிற்பவன் ஆசாரக்கள்ளன் பொய்யாசாரமுடையவன், பாபமான ஆசாரமுடையவன் என்று சொல்லப்படுகிறான். (6)

---

7. யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதே(அ)ர்ஜுன |
கர்மேந்த்ரியை: கர்மயோகமஸக்த: ஸ விசிஷ்யதே ||

7. *ய:-து இந்த்ரியாணி*(1)-*மனஸா*(2)-*நியம்ய*(3)-*ஆரபதே-அர்ஜுன, கர்மேந்த்ரியை:-கர்மயோகம்*(4)-*அஸக்த:-ஸ:*-(5)*விசிஷ்யதே.*

ஹே அர்ஜுன	*ஓ! அர்ஜுன!*
யஸ்து	*மற்று எவன்*
இந்த்ரியாணி	(ஞான) *இந்திரியங்களை*
மனஸா	*மனதினால்*
நியம்ய	*நியமித்துக்கொண்டு*
அஸக்த:	*பலாபேக்ஷை யற்று*
கர்மேந்த்ரியை:	*கர்மேந்திரியங்களினால்*
கர்மயோகம்	*கர்மயோகத்தை*
ஆரபதே	*ஆரம்பிக்கின்றானோ*
ஸ: விசிஷ்யதே	*அவன் சிரேஷ்டனாகிறான்.*

ஓ! அர்ஜுனா! மற்று எவனொருவன் ஞான இந்திரியங்களை மனதினால் (சாஸ்திரோக்தப்படி) நியமித்துக் கொண்டு பலாபேக்ஷை அற்றவனாய் கர்மேந்திரியங்களினால் கர்மயோகத்தை அநுஷ்டிக்கின்றானோ அவன் சிரேஷ்டனாகிறான்.

---

(1) **இந்த்ரியாணி**-இது பொதுவாக எல்லா இந்திரியங்களை யும் குறிக்குமானாலும் இங்கு ஞானேந்திரியத்தை மட்டும்தான் குறிப்ப தாகக்கொள்ளவேண்டும். ஏனென்றால் கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் செய்வதாக அடுத்தவரியில் சொல்லப்படுகிறது.

(2) **மனஸா**-ஆத்மாவை அறிய பிரவிருத்தித்த மனதினால் (**ராமா நுஜர்**)

(3) **நியம்ய**-ஈச்வர விஷயமாகச் செய்து (**ஸ்ரீதரர்**).

(4) **கர்மயோகம்**-வருணாசிரமயுக்தமானதும் ஞானஸாதனமானது மான கர்மத்தை (**இராகவேந்திரர்**).

(5) **விசிஷ்யதே**-பொய்யாசாரமுடையவனைவிட சிரேஷ்டன் (**சங்கரர்**); ஞானவானாகிறான் (**ஸ்ரீதரர்**).

(**சங்கரபாஷ்யம்**). ஆனால் கர்மத்திற்கு உரியவனாகிய அஜ்ஞானி யானவன் மனதினால் ஞானேந்திரியங்களை நியமனம் செய்துகொண்டு பயனை எதிர்பாராதவனாய் வாய் கை முதலிய கர்மேந்திரியங்களால் கர்ம யோகத்தை அநுஷ்டிக்கின்றானோ அவன் முன் சுலோகத்தில் சொன்ன பொய்யாசாரமுடையவனைவிட சிறந்தவனாகிறான்.

(**ஸ்வ**) இந்த சுலோகத்திலும் இதற்கு முன் சுலோகத்திலும் இந் திரியங்கள்,அவைகளின் விஷயங்கள்,குறிக்கப்பட்டன. அவையாவன:—

கர்மேந்திரியங்கள்.	அதின்விஷயங்கள்.	ஞானேந்திரியங்கள்	அதின்விஷயங்கள்.
வாய்	பேசுதல்	கண்	பார்த்தல்.
கை	எடுத்தல்	காது	கேட்குதல்
கால்	நடத்தல்	மூக்கு	வாசனையறிதல்
பாயு	மலம்விடுதல்	நாக்கு	உருசியறிதல்.
உபஸ்தம்	ஜலம்விடுதல்	த்வக்கு	உணருதல்.

முன் 6வது சுலோகத்தில், கர்மேந்திரியங்களை மட்டும் அவைகளின் விஷயங்களில் பிரவிருத்திக்காமல் அடக்கிக் கொண்டு, மனதினால் இந்தி ரியங்களின் அதாவது கர்மேந்திரிய ஞானேந்திரியங்களின், விஷ யங்களை ஸ்மரித்துக் கொண்டேயிருப்பவன் பொய்யாசாரம், பாபா சாரமுடையவன் என்று சொல்லப்பட்டான். கர்மேந்திரிய வியாபாரங் களில்லாமலிருப்பதினால் மற்றவர்கள் இவனை கர்ம மற்றவனாக நினைக்க இடமுண்டானாலும், இவனுக்கு ஆத்மஞானமில்லாவிடில் மனஸானது ஒரு நிலைப்படாமல் அலைந்து கொண்டே விஷயங்களைச் சிந்தித்துக் கொண்டிருக்கும். இதைக் கர்மமற்றநிலை என்று எப்படிச் சொல்லக்

கூடும்? ஆகையால் ஆத்மஞானத்தை இனி அடையவேண்டினவன் ஞானேந்திரியங்களை சாஸ்திரோக்தமாக நியமனம் செய்துகொண்டு பயனை எதிர்பாராமல் வாய் முதலிய கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைச் செய்துவருவனேயாகில் அதனால் சித்த சுத்தியை அடைந்து பிறகு ஆத்ம ஞானத்தை அடைவான். இப்படியிருப்பதினால்தான் இவன் முன் சொன்ன மித்தியாசாரனைவிட சிரேஷ்டன் என்று சொல்லப் பட்டான். (7)

---

௮. 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌜𑍍𑌯𑌾𑌯𑍋 𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚 𑌤𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ॥

8. நியதம்-(1)குரு-கர்ம-த்வம்-கர்ம-ஜ்யாய:-ஹி-அகர்மண:,
ஶரீரயாத்ரா-அபி-ச-தே-ந-ப்ரஸித்த்யேத்-அகர்மண:.

𑌤𑍍𑌵𑌂	நீ
𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮	நித்தியகர்மத்தை
𑌕𑍁𑌰𑍁	செய்
𑌹𑌿	ஏனென்றால்
𑌕𑌰𑍍𑌮	கர்மம் செய்வது
𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌃	கர்மம் செய்யாததைவிட
𑌜𑍍𑌯𑌾𑌯𑌃	சிரேஷ்டமானது
𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌃	கர்மம் செய்யாதிருப்பதினால்
𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚	சரீரத்தை நடத்துவது (ரக்ஷிப்பது) கூட
𑌤𑍇	உனக்கு
𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌤𑍍	சித்திக்கமாட்டாது (முடியாது).

நீ நித்தியகர்மத்தைச் செய். ஏனென்றால் கர்மம் செய்வது கர்மம் செய்யாதிருப்பதைவிட சிரேஷ்டமானது. கர்மம் செய்யாதிருப்பதினால் சரீரத்தை நடத்துவது அதாவது ரக்ஷிப்பதுங்கூட உனக்கு சித்தியாது, அதாவது ஸாத்தியப்படாது.

---

(1) நியதம்-வருணாசிரமங்களுக்கு யேற்பட்ட கர்மங்கள் (இராகவேந்திரர்)

(சங்கரபாஷ்யம்) எவன் எந்த கர்மத்திற்கு அதிகாரியோ, உரியவனோ, வேதத்தில் எவனுக்கு எந்த கர்மமானது, யாதொரு பயனைப் பெறும்பொருட்டன்று என்று, செய்யவேண்டியதாய்க் கூறப்பட்டுள்

ளதோ அவனுடைய அந்த நித்தியகர்மமானது அவனுக்கு அவசியமான கர்மமென்று சொல்வது. அதனை அதற்கு அதிகாரி செய்யவேண்டும். ஏனெனில் கர்மம் செய்தல் செய்யாமையைக்காட்டிலும் பயன் விஷயத்திலே மிக்க அதிகமானது. கர்மம் செய்யாமையினால் வரும் பயனைக் காட்டிலும் கர்மம் செய்வதிலுள்ள பயன் அதிகம் என்பது எப்படியென்றால், எவ்வித கர்மமும் ஒருவன் செய்யாதிருப்பானானால், சரீரம் நிற்பதும்கூட அமையாது. ஆகவே உலகத்தில் செய்தற்கும், செய்யாமைக்கும் இவ்வாறு வேறுபாடு கண்டு வைக்கப்பட்டுள்ளது.

(சங்கரானந்தர்)-முமுக்ஷுவானவன் நித்தியகர்மம் முதலியவைகளை, நைஷ்கர்ம சித்தியின்பொருட்டும், மித்தியாசார தோஷ நிவிருத்தியின்பொருட்டும் செய்யவேண்டுமென்பது சொல்லப்படுகிறது.

புருஷனுக்கு கர்மபந்தம் எதனால் யேற்படாதோ, அதுதான் அகர்மம் அல்லது கர்மசந்நியாசமென்பது. "நான் கர்மம் செய்கிறதில்லை" என்கிற அபிமானங்கொண்ட மூடன் சொல்லுகிற, கர்ம சந்நியாஸத்தைக் காட்டிலும், ஈசுவரார்ப்பணமாய் கர்மங்களை அபிமானமற்று செய்கிற முமுக்ஷுவின் கர்மமானது சிரேஷ்டமென்று சொல்லப்பட்டது. ஆனால் ஸந்நியாஸமே எல்லாவற்றிலும் மேலானது, சர்வோத்கிருஷ்டமானது என்று சுருதியே சொல்லுகிறதே, என்றாலோ, எந்தெந்த காரியத்திற்கு எந்தெந்த புருஷன் அதிகாரியோ அதாவது யோக்கியதையுள்ளவனோ, அந்தப்படி அவன் தனக்கு யோக்கியமான ஸாதனத்தை உபயோகித்தால்தான், அது கர்மஸித்தியைக் கொடுக்கும். ஆகையால் ஆத்மதத்வத்தை அறியாத அவிவிதிஷுவான புருஷன் கர்ம சந்நியாஸம் செய்தால் அதனால் முதலில் ப்ரத்தியவாயம் என்கிற அநர்த்தமும், இரண்டாவது நரகஹேதுவும், மூன்றாவது நீசயோனிப் பிராப்தியும், நான்காவது மோக்ஷஹானியும் ஏற்படுகிறது. முமுக்ஷு நித்திய நைமித்திக கர்மங்களை கிரமப்படி செய்துவந்தால் மேல் சொன்ன அநர்த்தங்களில்லாமற் போவதுமன்றியில் ஈசுவரப் பிரஸாதமும் சித்த சுத்தியும், ஞானமும், மோக்ஷமும ஸித்திக்கும். ஆகவே கர்மம் செய்வதில் பலன் அதிகமென்பது யேற்பட்டது:

மேலும் கர்மம் செய்வதினால் பரலோக சுகமன்றியில் இஹலோக சுகமுமுண்டென்று சொல்லப்படுகிறது. பெரிய கல்லைப்போல் சரீரம் அசையாமல் ஒரு புருஷன் யிருப்பானேயானால் சரீர சம்ரக்ஷணை கூட முடியாது. அதற்காகவாவது கர்மம்செய்தே ஆகவேண்டும். அப்படியானால் தேக சம்ரக்ஷணைக்கு எவ்வளவு கர்மம் அவசியமோ

அதைச் செய்தால் போதுமே என்றாலோ, அப்போது நீ மூடன், சந்நியாஸத்திற்கு அநர்கன் என்பதைக் காட்டுகிறது. ஏனென்றால் அனாத்மாவாகிய தேகத்தைமட்டும் ரக்ஷிக்க வழிதேடிக்கொண்டு, ஜனன மரணப் பிரவாகத்திலிருந்து உன் ஆத்மாவை ரக்ஷிக்க வழிதேடாதவனாகிறாய். ஆகையால் கர்மத்தினால் சரீர ரக்ஷணையை அதிக ஆஸ்தையுடன் எப்படி செய்கிறாயோ அப்படியே விஹிதமான கர்மங்களைச் செய்து சித்த சுத்தியையும் அதனால் ஞானத்தையும், அந்த ஞானத்தால் மோக்ஷத்தையும் அடைய முயலவேண்டும். சரீரத்தை ரக்ஷிப்பது இதற்காகத்தான்.

(ராமாநுஜர்)-ஒவ்வொருவனும் தான் நியாயமான விஷயமாய் ஸம்பாதித்த திரவியாதிகளைச் செலவுசெய்து யஜ்ஞம் முதலிய சத்கர்மங்களை நடத்தி யஜ்ஞசேஷத்தை புஜிப்பதினால் சித்தசுத்தியும் சித்த சுத்தியினால் ஞானமுமடையவேண்டியது. இந்த ஞானமானது கர்மத்தினா லுண்டாகிறபடியால் கர்மம் சிரேஷ்டமென்று சொல்லப்பட்டது. ஞானமானது கர்மத்திலும் சிரேஷ்டமென்ற வாக்கியமானது ஞானாதிகாரி விஷயத்தில் சொல்லப்பட்டதே யன்றி ஞானமடையாதவன் விஷயமாய்ச் சொல்லப்பட்டதல்ல. அப்படி ஞானநிஷ்டையை யுடைய ஞானாதிகாரியுங்கூட ஞானநிஷ்டைக் கனுகூலமான 'தேகம் நிலைத்திருப்பதின் பொருட்டு' அவசியமான கர்மங்களைச் செய்யவேண்டியவனாக விருக்கிறான்; ஆகையால், கர்மமானது ஞானநிஷ்டைக்கு முந்திய ஸாதனமாயிருப்பதால் கர்மம் சிரேஷ்டமென்று சொல்லப்பட்டது.

(ஸ்ரீ) உண்பது, உடுப்பது, உறங்குவது முதலியவைகளும் கர்மமல்லவா? அவைகளைச் செய்யாமலிருந்தால் தேகம் நிலைக்குமோ? தேகம் நிலைக்காவிட்டால் எந்தகாரியமு மில்லை. ஆகையால் கர்மங்களைச் செய்யாமலிருக்க ஒருவனாலுங் கூடாது. இதற்காகத்தான் நித்திய கர்மமானது விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, உண்பதற்கு முந்தி ஸ்நானம், சந்தியாவந்தனம் முதலிய ஆந்நீகங்களும் தேவ, பிதுரு, அதிதி, பூஜை, சுவாமி நைவேத்தியம், அக்கினிஹோத்திரம், பலிகரணம் முதலியவைகளுமே. இவைகளை விதித்த உத்தேசமென்னவென்றால், தினமும் இப்படிப்பட்ட நித்திய கர்மங்களைச் செய்து அவைகளின் பலனை இச்சிக்காமல் ஈசுவரார்ப்பணஞ் செய்துவிடுவானாகில் சித்தம் சுத்தியாய் ஞானமடைந்து அதிசீக்கிரத்தில் மோக்ஷமடைவானென்பதே. ஆகாராதி அவசியமான கர்மங்களைத்தவிர மற்றவைகளை விட்டுவிடுவது, ஞானிக்குத் தகுமானாலும் முமுக்ஷுவுக்குத் தகுதியல்ல. அக்ஞானிவிஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? (8)

௯. 𑌯𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌲𑍋𑌕𑍋𑌽𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 ।
𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰 ॥

9. யஜ்ஞார்தாத்(1). கர்மணஃ-அந்யத்ர. லோகஃ-அயம்-கர்மபந்தநஃ
தத்அர்தம்-கர்ம-கௌந்தேய-முக்தஸங்கஃ-ஸமாசர(?).

𑌯𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍	யஜ்ஞத்திற்கான
𑌕𑌰𑍍𑌮𑌣𑌃	கர்மத்தினின்று
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰	மற்றகர்மத்தினால்
𑌅𑌯𑌂𑌲𑍋𑌕𑌃	இந்த லோகம்
𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑌃	கர்மபந்தத்தை அடைகிறது
𑌤𑌦𑌰𑍍𑌥𑌂𑌕𑌰𑍍𑌮	அந்த யஜ்ஞார்த்தமானகர்மத்தை
𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! குந்தி புத்திரா!
𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃	பலாபேக்ஷையைவிட்டு
𑌸𑌮𑌾𑌚𑌰	செவ்வையாகச்செய்.

யஜ்ஞத்திற்கான அதாவது ஈசுவர ஆராதனை ரூபமான கர்மத்தைத் தவிர மற்ற கர்மத்தினால்தான் இந்த உலகம் கர்மபந்தத்தை (கட்டை) அடைகிறது. (ஆகையினாலே) ஓ! குந்திபுத்திரா! அந்த ஈசுவரார்ப்பணமான கர்மத்தை பலா பேக்ஷையை விட்டு செவ்வையாகச் செய்.

(**சங்கரபாஷ்யம்**) மேலும் கர்மமானது பந்தத்திற்குக் காரணமாதலால் அதைச் செய்யக்கூடாதென்று நினைப்பது சரியன்று. "யஜ்ஞோ வை விஷ்ணுः"—'யஜ்ஞமேவிஷ்ணு' என்னும் சுருதியினால், யஜ்ஞம் என்பதற்கு ஈசுவரன் என்று பொருள். எது ஈசுவரன்பொருட்டு செய்யப்படுகின்றதோ அது யஜ்ஞத்திற்கான கர்மம். கர்மத்திற்கு அதிகாரியானவன் அவனுக்கு விதித்த கர்மம் தவிர மற்ற கர்மத்தினாலே பந்தத்தை அடைகிறான். ஈசுவரனுக்கான கர்மத்தினாலோ இவ்வித பந்தத்தை அடைகிறதில்லை. ஆகவே கர்மபலனில் பற்றில்லாதவனாய் ஈசுவரார்ப்பணமாகக் கர்மத்தைச் செய்து வரவேண்டும்.

(**ஸ்ரீதரர்**) கர்மமானது புநர் ஜனனத்தையும் சமுசாரத்தையுமுண்டாக்கத்தக்கதாகையால் கர்மஞ்செய்யக் கூடாதென்று சிலர் சொல்லும் ஆக்ஷேபணையை நிவிர்த்திக்க பகவானுரைவர், யஜ்ஞமென்பது விஷ்ணுவாகையாலும் யஜ்ஞம்செய்வது விஷ்ணு ஆராதனையாகிறதாகை

யாலும் யஜ்ஞாதி கர்மங்களைச்செய்து பலனை ஈசுவரார்ப்பணஞ் செய்வதினல்பந்த ஹேதுவாகாதென்பதை இதில் விவரித்ததாக தாத்பரியம்.

(ராமாநுஜர்) 𑌯𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑌃=யஜ்ஞம் செய்யும்பொருட்டு திரவியம் சம்பாதிப்பது முதலிய கர்மங்களைக்காட்டிலும் அந்நியமான தாகியதேகசம்ரக்ஷணை முதலியவைகளுக்காக திரவியம் சம்பாதிப்பது முதலிய கர்மங்கள் பந்த ஹேதுவாகையால்-𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃=தனக்கு வேண்டுமென்கிற அபிமானங்களை விட்டுக் கர்மம்செய்யவேண்டிய தென்பது தாத்பரியம். (9)

---

௧௦. 𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌅𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌷𑍍𑌯𑌧𑍍𑌵𑌮𑍇𑌷 𑌵𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ॥

10. ஸஹயஜ்ஞா:-ப்ரஜா:-ஸ்ருஷ்ட்வா-புரா-உவாச-ப்ரஜாபதி:,
அநேந-ப்ரஸவிஷ்யத்வம்-ஏஷ:-வ:-அஸ்து-இஷ்டகாமதுக். (1)

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃	ப்ரஜாபதியானவர்
𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃	யஜ்ஞத்தோடுகூட
𑌪𑍍𑌰𑌜𑌾𑌃	ஜனங்களை
𑌪𑍁𑌰𑌾	ஆதிகாலத்தில்
𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾	சிருஷ்டித்து
𑌅𑌨𑍇𑌨	இந்த யஜ்ஞத்தினலே
𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌷𑍍𑌯𑌧𑍍𑌵𑌂	விருத்தியடையுங்கள்
𑌏𑌷𑌃	இந்த யஜ்ஞமானது
𑌵𑌃	உங்களுக்கு
𑌇𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍	ஹிதமானபோகத்தைத் தரப்பட்டதாக
𑌅𑌸𑍍𑌤𑍁	ஆகட்டும்
(𑌇𑌤𑌿)	என்று
𑌉𑌵𑌾𑌚	சொன்னர்.

ப்ரஜாபதியானவர், யஜ்ஞத்தோடுகூடவே ஜனங்களை ஆதிகாலத்தில், அதாவது சிருஷ்டித்தொடக்கத்தில் சிருஷ்டித்து, "இந்த யஜ்ஞத்தினலே விருத்தியடையுங்கள், இந்த யஜ்ஞமானது உங்களுக்கு ஹிதமான போகத்தைத் தரப்பட்ட தாகவாகட்டும்" என்று சொன்னர்.

---

(1) இஷ்டகாமதுக்-மோக்ஷப் பிரயோஜனத்தையும் அதற்கு அனுகுணமான மற்ற பிரயோஜனத்தையும் கொடுக்கப்பட்டதாக (ராமாநுஜர்).

(மதுசூதன ஸரஸ்வதி)-இந்த சுலோகத்தில் "யஜ்ஞம்" என்பது அவசியமான கர்மங்களைக் குறிக்கின்றது. ஏனென்றால் இவைகளைச் செய்யாவிட்டால், பிரத்தியவாயம் யேர்ப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "இஷ்டகாமஃ" என்றதினால் காம்மிய கர்மங்களைக் குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. "ஊகசஉுவைஹெதாுஹ-ுஶு:" என்று முன் இரண்டாவது அத். சுலோ. 47-யில் சொல்லியிருப்பதால் காம்யகர்மப் பிரஸ்தாபத்திற்குக் காரணமில்லை; ஆனால் நித்தியகர்மங்களுக்கும் 'ஆநுஷங்கிகமான' பலனிருப்பதால் "இஷ்டகாமஃ" என்று சொன்னது உசிதம்தான். அவ்விதமே, ஆபஸ்தம்பர், தர்மப்பிரச்னத்தில் "எப்படி பலத்திற்காக மாமரத்தை நட்டால் அதன் நிழலும், மணமும் கூடவே தானாகவே உண்டாகின்றனவோ, அப்படியே தர்மத்தை அநுஷ்டானம் செய்தால், அர்த்தங்களும் கூடவே உண்டாகின்றன. அப்படி உண்டாகாமல் போனாலும், கர்மத்திற்கு ஹானியில்லை" என்று சொல்லியிருக்கிறார். காம்மியத்திற்கும், நித்தியத்திற்கும் பலன் ஒன்றுதான்; பலனை அபேக்ஷிப்பதும் அபேக்ஷியாமலிருப்பதும்தான் இரண்டிற்கும் வித்தியாஸம். வஸ்துதத்வத்தினாலேயே, அபேக்ஷித்தாலும் அபேக்ஷிக்காமல் போனாலும் பலன் உண்டாவதில் வித்தியாஸமில்லை.

(ஸ்வா) இந்த சுலோகத்தில் "இஷ்டகாமாந்" என்பதற்கு "ஹிதமான அதாவது மோக்ஷதிற்கு அநுகூலமான பலன்களை" என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் "இஷ்டகாமாந்" என்பதற்கு அபேக்ஷிக்கிற, வேண்டுகிற, பலன்கள் என்று வைத்துக்கொண்டால், காம்மிய கர்மங்களையுங்கூடச் செய்யவேண்டியதற்காகவே யஜ்ஞங்களை சிருஷ்டித்ததாக அர்த்தமாகிறது. ஏனென்றால் "விருத்தியடையுங்கள்" "இஷ்டமான போகங்களைத் தரத்தக்கதாகவாகட்டும்" என்கிற வாக்கியங்கள் காம்மியபலனைக் குறிக்கின்றனவாகக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. முந்திய சுலோகத்தில் காம்மிய கர்மங்கள் பந்தத்தை யுண்டுபண்ணுமாகையால் நிஷ்காம கர்மம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. இவைகள் பரஸ்பர விரோதமாகத் தோற்றப்பட்டாலும் விரோதமல்ல. எப்படியென்றால், யஜ்ஞாதி கர்மங்கள் அவைகளுக்குள்ள பலனை அபேக்ஷித்துச் செய்தால் பந்தஹேதுவான போகத்தைக்கொடுக்கும். பலாபேக்ஷயன்றி ஈசுவரார்ப்பணமாகச் செய்தால் மோக்ஷஹேதுவான ஞானத்தைக்கொடுக்கும். ஒரே கர்மமானது ஒருவிதமாய்ச் செய்தால் பந்தஹேதுவாகவும்

மற்றொருவிதமாய்ச் செய்தால் மோக்ஷஹேதுவாகவும் ஆகிறபடியால் செய்கிறவனுடைய எண்ணப்படி பலன் ஸித்தியாகட்டுமென்கிற உத்தேசத்துடன் யஜ்ஞம் சிருஷ்டிக்கப்பட்டது. அந்த யஜ்ஞமானது போகத்தைக் கொடாமல் ஞானத்தைமட்டும் கொடுக்கும்படி ஏன் பிரம்மாவானவர் விதிக்கக்கூடாதென்றாலோ, ஞானம் மாத்திரம் அதற்குப் பலனாகவிருந்தால் அந்தப்பலனையடைய இச்சிக்கும் ஜனங்கள் வெகுசிலராய்த் தானிருப்பார்கள். ஞானத்திலிச்சையில்லாதவும் சுவர்க்காதி போகங்களை யனுபவிக்க விச்சிக்கிறவுமான மற்றவர்கள் யஜ்ஞத்தினாலுண்டாகும் பிரயோஜனமடைய ஹேதுவிராது. சுவர்க்காதிபோகம் பந்தஹேதுவாயிருக்க அதையேன் அடைய முயலவேண்டுமென்றாலோ, அது கிரமக்கிரமமாய் மோக்ஷஹேதுவாகும். எப்படி என்றால், சுவர்க்காதி போகத்தை யனுபவிப்பவன் அப்படி அநுபவிக்கும் காலத்தில் அந்த சுவர்க்காதி லோகத்திலுள்ளவர்கள், அந்த சுவர்க்காதிகளே முடிவான சுகமென்றெண்ணி யிருக்கிறார்களா? அல்லது அதைவிட விசேஷ சுகமிருப்பதாக எண்ணி அதை யடைய முயலுகிறார்களா? என்பதை உணருவான். அப்போது இந்த சுவர்க்காதிகளைவிட சிரேஷ்டமான சுகமிருப்பதாகத் தெரிந்தால் அந்த சிரேஷ்டமான சுகத்தை அடையவேண்டுமென்கிற எண்ணமுண்டாகும். மேலும் தன்னுடைய புண்ணிய பலனுக்குக் குறித்தகாலம் முடிந்தவுடனே "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி" என்கிற வாக்கியப்படிக்குப் புண்ணியம் நசித்தவுடன் பூலோகத்திற்குத் தள்ளப்படுவதை யறிகிறான். அப்போது அவன் என்ன நினைக்கிறானென்றால், நான் காம்மியமாய் யஜ்ஞம் செய்ததினால் அற்ப பலமான சுவர்க்காதிகளை அடைந்து மறுபடி பூலோகத்தில் ஜனனமெடுக்கவேண்டியதாயிற்று. நிஷ்காமமாய் யஜ்ஞம் செய்வோமாகில் மோக்ஷமடையலாமென் றெண்ணி பலாபேக்ஷையற்ற நிஷ்காம கர்மம் செய்யத்தொடங்குவான். இப்படிச் சில ஜன்மங்களுக்குப்பிறகு அவனுக்கு அது மோக்ஷஹேதுவாகும். ஆகையால் ஜனங்களிடத்தில் கருணையுள்ள பிரம்மாவானவர் யஜ்ஞத்தை ஜனங்கள் நற்கதியடையும்பொருட்டே சிருஷ்டித்தாரென்பதில் சந்தேகமில்லை. (10)

௧௧. தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: ।
பரஸ்பரம் பாவயந்த: ஶ்ரேய: பரமவாப்ஸ்யத ॥

11. தேவாந்-பாவயத-அநேந-தே-தேவா: பாவயந்து-வ:,
பரஸ்பரம் (1)-பாவயந்த:-ஶ்ரேய: (2)-பரம்-அவாப்ஸ்யத.

அநெந	இந்த யஜ்ஞத்தினாலே
தெவாந்	தேவதைகளை
லாவயத	ஆராதியுங்கள், அல்லது, அவிர்பாகாதிகளினால் விருத்தியடையச் செய்யுங்கள்.
தெ தெவாঃ	அந்தத் தேவதைகள்
வঃ	உங்களை
லாவயந்து	இரக்ஷிக்கட்டும். அல்லது, ஹிதங்களைக் கொடுத்து விருத்தியடையச் செய்யட்டும்
பரஸ்பரம் லாவயந்தঃ	ஒருவரை யொருவர் அபிவிருத்தி செய்துகொண்டு
பரம்	உத்கிருஷ்டமான
ஶ்ரெயঃ	சிரேயஸை
அவாப்ஸ்யத	அடைகிறவர்களாவீர்கள்.

இந்த (முன்சொன்ன) யஜ்ஞத்தினால் தேவதைகளை ஆராதியுங்கள் அல்லது அவிர் பாகாதிகளினால் விருத்தி யடையச் செய்யுங்கள்; அந்தத் தேவதைகள் உங்களை இரக்ஷிக்கட்டும். இப்படி (நீங்கள் தேவதைகளை யும், தேவதைகள் உங்களையும்) ஒருவரை யொருவர் அபிவிருத்தி செய்து கொண்டு உத்கிருஷ்டமான சிரேயஸை அடைகிறவர்களாவீர்கள்.

---

(1) **பரஸ்பரம்**-என்பது ஹாவதிற்கு விசேஷணமே ஒழிய ஸ்ரேயஸுக்கு அல்ல என்பது, சங்கராநந்தர் தாத்பரியம்.

(2) *ஶ்ரேய:*—படிப்படியாக ப்ரஹ்மஞானத்தை அல்லது ஸ்வர்கத்தைப் பெறுதல். ஸம்ஸாரத்தினின்று விடுபடவிரும்புவோனுக்கு படிப்படியாக ப்ரஹ்மஞானத்தைப் பெருதல் மேலான நன்மை. ஸம்ஸார விஷயங்களை அனுபவிக்க விரும்புவோனுக்கு ஸ்வர்கமே மேலான நன்மை.

(ஸ்ரீ) இதில் தேவதைகள், மனுஷியாள், இருவகையாருக்கும் அபிவிருத்தியும் சிரேயஸும் சொல்லப்பட்டிருக்கின்றன. தேவதைகள் தங்களை அவிர்ப்பாகம் முதலியவைகளினால் திருப்திசெய்த மனிதர்களுக்கு அவர்கள் அபேக்ஷிக்கிற போகாதிகளைக் கொடுப்பதினால் அந்த மனிதர்களுக்கு சிரேயஸாக சொல்லலாம்; மனிதர்களால் கொடுக்கப்படும் அவிர்பாகாதிகளினால் தேவதைகளுக்கு சிரேயஸ் உண்டாகிறதென்

பது எப்படி என்கிற சங்கையை அடியில் கண்டவிதமாய்ப் பரிகரிக்கலாம். யஜ்ஞாதிகர்மங்களைச் செய்பவர்களுக்கு அந்த அந்த கர்மங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற பலன்களைக் கொடுக்கவும், மனிதர்களுக்கு வேண்டிய மழை வெய்யில் காற்று முதலியவைகளைக் காலங்களில் உதவவும், தேவதைகள் பரமாத்மாவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பரமாத்மாவினுடைய ஆக்ஞையை சரியாய் நிறைவேற்றுவதே தேவதைகளுக்கு சிரேயஸ்; அதாவது அவரவர்களுக்கு யேர்ப்படுத்தப்பட்டிருக்கிற தர்மங்களைச் செய்துவருவதுதான் மோக்ஷத்திற்கு வழி என்பது கருத்து. அல்லது தேவதைகள் அமிருதபானம் செய்தவர்களானதால் தேவதைகளுக்கு மரணமில்லையே அன்றி பசிதாகமில்லையென்று சொல்லக்கூடாதாகையால் மனிதர்களால் செய்யப்படுகிற யஜ்ஞாதி கிரதுக்களின் மூலமாய்க் கொடுக்கப்படும் அவிர்ப் பாகத்தினால் தேவதைகள் திருப்தி அடைகிறார்களென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இரணியகசிபு, பலிசக்ரவர்த்தி, சூரபத்மா முதலிய அசுரர்கள் தேவதைகளுக்கு, மனிதர்கள் அவிர்ப்பாகம் கொடுப்பதைத் தடுத்துவிட்டகாலத்தில் தேவதைகள் பசியால் வருந்தினதாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தேவதைகள் யஜ்ஞாதி கிரதுக்களில் கொடுக்கப்படும் அவிர்பாகத்தை ஆகாரமாயடைந்து தேகபுஷ்டியுண்டாய், போகங்களை யனுபவிக்கிறார்கள். இவைகளினால் அந்தத்தேவதைகளுக்கு சிரேயஸென்றும் சொல்லலாம். (11)

இஷ்டாந்போகாந்ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா:
௧௨. தைர்தத்தாநப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேந ஏவ ஸ:॥

வெ-போகாந்-ஹி-வ:-தேவா:-தாஸ்யந்தே-யஜ்ஞபாவிதா:
12 இஷ்டாந்-தத்தாந்-அப்ரதாய-ஏப்ய:-ய:-புங்க்தே-ஸ்தேந:-ஏவ-ஸ:

தை:-த்தா:	யஜ்ஞங்களினாலே ஆராதிக்கப்பட்ட
யஜ்ஞபாவி	தேவதைகள்
தேவா:	உங்களுக்கு
வ:	ஹிதமான
இஷ்டாந்	போகங்களை
போகாந் தேஹி	கொடுப்பார்களன்றோ
தாஸ்ய	அந்தத் தேவதைகளினாலே
தை:	கொடுக்கப்படும் (அன்னாதி) அவைகளை
தத்தாந்	இந்தத் தேவதைகளின் பொருட்டு
ஏப்ய:	

ப்ரதாய	கொடுக்காமல் (அர்ப்பணம் செய்யாமல்)
ய꞉	எவன்
பு⁴ங்க்தே	(தான்) அனுபவிக்கிறானோ
ஸ꞉	அவன்
ஸ்தேன ஏவ	திருடனே.

(ப்ரஹ்மாவானவர் பின்னும் ஜனங்களைப்பார்த்துச் சொல்வதாவது) யஜ்ஞங்களினாலே ஆராதிக்கப்பட்ட தேவதைகள் உங்களுக்கு ஹிதமான போகங்களைக் கொடுப்பார்களன்றோ? அப்படி தேவதைகளால் கொடுக்கப்பட்டவைகளை அந்தத் தேவதைகளுக்கு கொடாமல், அதாவது அக்கடனைத் தீர்க்காமல் எவன்தானே யனுபவிக்கிறானோ அவன் திருடனே.

(வ்யா) ஒருவன் யஜ்ஞாதி கிரதுக்கள் மூலமாய்த் தேவதைகளுக்கு கொடுத்த அவிர்ப்பாகத்திற்கு பிரதியாய்த் தேவதைகள் அவனுக்குக் கொடுத்ததை அவன் மறுபடி தேவதைகளுக்கு அர்ப்பணம் செய்யாமல் அனுபவித்ததினால் இவனைத் திருடனாக எப்படிச் சொல்லலாமென்றாலோ, இவன் கொடுக்கும் அவிர்ப்பாகத்திற்கு அநேகமடங்கு அதிகமான போகங்களைத் தேவதைகள் இவனுக்குக் கொடுக்கிறார்கள். அப்படி அதிகமாய்க் கொடுக்கக் காரணமென்னவென்றால், இவனால் பின்னும் செவ்வையாய் யஜ்ஞாதிகளினால் ஆராதிக்கப் படுவோமென்பதே. இதனால் தான் சாஸ்திரங்களில் ஒருவன் அனுபவிக்கும் போகங்களில் இவ்வளவு பாகம் தேவதைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தேவதைகளுக்குள்ள ரணத்தைக் கொடாமல் தானே அனுபவிப்பவன் திருடனென்று சொல்லப்பட்டான். (12)

---

௧௩. யஜ்ஞஶிஷ்டாஶிந꞉ ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பி³ஷை꞉ ।
பு⁴ஞ்ஜதே தே த்வக⁴ம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத் ॥

13. யஜ்ஞஶிஷ்டாஶிந꞉-ஸந்த꞉-முச்யந்தே-ஸர்வகில்பிஷை꞉ ।
தே-து-அகம்-புஞ்ஜதே-பாபா꞉-யே-பசந்தி-ஆத்ம[காரணாத்] ॥

யஜ்ஞஶிஷ்டாஶிந꞉ ஸந்த꞉	பஞ்சமஹா யஜ்ஞங்கள் செய்[து] மிச்சமான அமிருதம் என்கிற அன்[ன]த்தை புஜிக்கிற சத்புருஷர்கள்
ஸர்வகில்பி³ஷை꞉	(பஞ்சஸூநாமுதலிய) ஸகல பாபங்களிலிருந்தும்
முச்யந்தே	விடுபடுகிறார்கள்

யெ து	மற்று எவர்
ஆத்மகாரணாத்	தங்களுக்காகவே
பசந்தி	பாகம்செய் (சமயல் செய்து புஜிக்) கிறார்க-
தெ பாபா:	அந்தபாபிகள் [ளோ
அகம் து	பாபத்தையே
பு⁴ஞ்ஜதெ	புஜிக்கிறார்கள்.

பஞ்சமஹா யஜ்ஞங்களைச்செய்து மிச்சமான அமிருதமெனப்பட்ட அன்னத்தை புஜிக்கிற சத்புருஷர்கள் பஞ்சசூனாமுதலிய சகலபாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். மற்று எவர் (ஈசுவரார்ப்பணம் செய்யாமல்) தங்களுக்காகவே பாகம் செய்து புஜிக்கிறார்களோ அந்த பாபிகள் பாபத்தையே புஜிக்கிறார்கள்.

(ஸ்வா) இந்த சுலோகத்தில் யஜ்ஞத்தில் மிச்சமான அன்னத்தைச் சாப்பிடுகிறவன் சகல பாபத்திலிருந்தும் விடுபடுகிறான் என்கிற வாக்கியங்கள் மிகுந்த வியாக்கியானத்தை வேண்டுகின்றன. "யஜ்ஞத்தில் மிச்சமான அன்னம்" என்கிற பொதுவான வாக்கியம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. எவ்வித யஜ்ஞமென்பது தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. (சங்கரர்,) தேவயஜ்ஞ மிச்சான்னமென்றும், (ஸ்ரீதரர்) வைசுவதேவமுதலிய யஜ்ஞ மிச்சான்னமென்றும் (ராமாநுஜர்) பகவந் நிவேதனமான பிரசாதமென்றும் (இராகவேந்திரர்,) விஷ்ணுவுக்கும் இதர தேவதைகளுக்கும் நிவேதனம் செய்த அன்னமென்றும், அர்த்தஞ் செய்திருக்கிறார்கள். இதினால் ஜோதிஷ்டோமதி யக்ஞங்கள் மாத்திரமல்ல மனிதன் தினந்தோறும் செய்யவேண்டிய, ஸம்வயஜ்ஞம், கூடமுக்கியமென்பதையும் சொன்னதாகக் காண்கிறது. ஏனென்றால், "ஸவ்வகில்பி ஷெஃ" என்கிற பதத்திற்கு பஞ்சசூனா என்கிற பாபங்கள் என்று அர்த்தஞ் செய்ததுமல்லாமல் அந்த பாபங்களின் விவரமும் ஷியார்களால் சொல்லப்பட்டிருக்கிறதினால் பஞ்சயஜ்ஞத்தில் மிச்சமான அன்னமென்றும் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. பஞ்சயஜ்ஞங்கள் எவையென்றால், "அத்⁴யாபநம் ப்³ரஹ்மயஜ்ஞஃ பித்ருயஜ்ஞஸ்து தர்ப்பணம்| "ஹொமொ தை³வொ ப³லிர்பௌ⁴தொ ந்ருயஜ்ஞொ அதிதி²பூ - "ஜநம்| ஸம்வெதாநுயொகஹாயஜ்ஞா நுஹாவயதிமுக்தஃ| ஸப்த "ஹெவிவஸ்ரிதம் ஸந்நாதொரெெஷ நயுவிஷ்டதெ ||" வேதமோதலாகிய பிரம்மயஜ்ஞம், ஜல தர்ப்பணத்தினால் பிதுருக்களைத்திருப்தி செய்வதாகிய பிதுருயஜ்ஞம், தேவதைகளைக்குறித்து அக்கினியிலோமம்

செய்வதாகிய தேவயஜ்ஞமும், வாயஸபலி முதலியவை வைப்பதாகிய பூத
“யஜ்ஞமும், அதிதிகளுக்குச் சாப்பாடு போடுவதாகிய மாநுடயஜ்ஞமும் இந்த
“ஐந்து மகாயஜ்ஞங்களையும் தன் சக்திக்குத் தக்கபடி எவன் செய்கிறானோ
“அவன் கிரகஸ்தாசிரமத்தி லிருந்தபோதிலும் பஞ்சசூநா என்கிற ஐந்து
பிராணிஹிம்ஸையாகிய தோஷத்திலிருந்து விடப்படுகிறான்” (மனுஸ்மிருதி மூன்றாவது அத்தியாயம், 70-71-வது சுலோகங்களைப் பார்க்க.)
பஞ்சசூநா தோஷமென்பது தெதுவென்றால், “பஞ்சஸூநா
“க்ருஹஸ்தஸ்ய சுல்லீ பேஷண்யுபஸ்கர: | கண்டநீ சோதகும்பஶ்ச
“பத்யதே யாஸ்து வாஹயந் | தாஸாம் க்ரமேண ஸர்வாஸாம்
“நிஷ்க்ருத்யர்த்தம் மஹர்ஷிபி: | பஞ்ச க்லுப்தா மஹாயஜ்ஞா: ப்ரத்யஹம்
“க்ருஹமேதிநாம்”=கிரகஸ்தனுக்கு விறகு முதலியவைகளை எறிக்கிறதி
“லும், அம்மி, எந்திரமுதலியவைகளில் அறைக்கிறதிலும், உலக்கை
“முதலியவைகளினால் குத்துகிற அல்லது இடிக்கிறதிலும், குடத்தில்
“தண்ணீர் கொண்டுவந்து அந்தத் தண்ணீரை உபயோகிப்பதிலும்,
“பெருக்குவது அல்லது மெழுகுவதிலும் ஜந்துக்கள் கொல்லப்படுகிற
“தோஷம் வருகிறபடியால் இந்த ஐந்துவித பாபங்களையும் போக்குவதற்
“காக மகரிஷிகளால் கிரகஸ்தாசிரமத்தி லிருப்பவனுக்குக் கிரமமாக
“ஐந்து மகாயஜ்ஞங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன” (மநுஸ்மிருதி, 3-வது அத்தியாயம் 68, 69-வது சுலோகங்களையும் ஸ்கந்தபுராணம் காசீகண்டம் முதல்பாகம் 38-வது அத்தியாயம் 23, 24-சுலோகங்களையும் பார்க்க.) “கண்டநீ பேஷணீ சுல்லீ உதகும்பீ ச மார்ஜநீ |
“பஞ்சஸூநா க்ருஹஸ்தஸ்ய தாபி: ஸ்வர்க்கம் ந கச்சதி ||”=குத்துகிறது,
“அறைக்கிறது, எறிக்கிறது, தண்ணீர் கொண்டுவருகிறது, பெருக்கிறது
“இந்த ஐந்துவிதங்களினால் உண்டாகும் ஜீவஹிம்சைகளால், கிரஹஸ்
“தன் சுவர்க்கத்தை யடையமாட்டான்.” ஆகையால் கிரகஸ்தன் தினந்தோறு முண்டாகுமிந்த பாபங்களை நிவர்த்தித்துக்கொள்ள மேற்சொன்ன யஜ்ஞங்களைச்செய்து ஈசுவரார்ப்பணஞ்செய்துவிட்டு மிச்சமான அன்னத்தைப்புஜியாமல் தன்வயிறுநிறையும்பொருட்டே சமயல்செய்து புஜிப்பானானால் பாபத்தைப் புஜிக்கிறான். அதாவது பாப சுவரூபமான அன்னத்தைப் புஜிக்கிறானென்பது தாத்பரியம். ஆனால் தங்களுக்காகவே பாகம்செய்து புஜிக்கிறவர்கள் பாபியாகிறதற்கு (ராமாநுஜர்) சொல்லுகிற காரண மென்னவென்றால், ஈசுவரன் தன்னை ஆராதிப்பதற்காக் மனிதர்களுக்குக் கொடுத்த ஆகாராதி வஸ்துக்களை அந்த ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்யாமல் தனக்காகவே பாகம் செய்து புஜிப்

பவர்கள் பாபத்தைப் புஜிப்பவர்க ளென்பதே (4-வது அத்தியாயம் 31-வது சுலோகத்தைப் பார்க்க.) இந்த அத்தியாயம் 10-வது சுலோகம் முதல் இந்த சுலோகம் உள்பட, ப்ரஜாபதியின் வார்த்தைகள். (13)

---

௧௪. 𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌃 |
𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ||
௧௫. 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 |
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ||
௧௬. 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍀𑌹 𑌯𑌃 |
𑌅𑌘𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑌾𑌮𑍋 𑌮𑍋𑌘𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸 𑌜𑍀𑌵𑌤𑌿 ||

14. அந்நாத்-ஹவந்தி-ஹூதாநி-பர்ஜந்யாத்-அந்நஸம்ஹவ꞉ |
யஜ்ஞாத்-ஹவதி-பர்ஜந்ய꞉-யஜ்ஞ꞉-கர்மஸமுத்ஹவ꞉ ||
15 கர்ம-ப்ரஹ்மோத்ஹவம்-வித்தி-ப்ரஹ்ம அக்ஷரஸமுத்ஹவம் |
தஸ்மாத்-ஸர்வகதம்-ப்ரஹ்ம-நித்யம்-யஜ்ஞே-ப்ரதிஷ்டிதம் ||
16. ஏவம் ப்ரவர்திதம்-சக்ரம்-ந-அநுவர்தயதி-இஹ-ய꞉ |
அகாயு꞉-இந்த்ரியாராம꞉-மோகம்-பார்த-ஸ꞉-ஜீவதி ||

𑌅𑌨𑍍𑌨𑌾𑌤𑍍	அன்னத்திலிருந்து
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	பிராணிகள் (சரீரங்கள்)
𑌭𑌵𑌨𑍍𑌤𑌿	உண்டாகின்றன
𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌤𑍍	மேகத்திலிருந்து (மழையிலிருந்து)
𑌅𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌃 (𑌭𑌵𑌤𑌿)	அன்னமுண்டாகிறது
𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍	யஜ்ஞத்திலிருந்து
𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃	மேகமானது (மழையானது)
𑌭𑌵𑌤𑌿	உண்டாகிறது
𑌯𑌜𑍍𑌞𑌃	யஜ்ஞமானது
𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃	கர்மத்திலிருந்துண்டாகிறது
𑌕𑌰𑍍𑌮	கர்மம்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌂	ப்ரஹ்மத்தில் (வேதத்தில்) இருந்துண்டான [தாகவும்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	ப்ரஹ்மம் (வேதம்)
𑌅𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌂	அழிவில்லாப்பொருளில் (பரமாத்மாவில்) இருந்துண்டானதாகவும்
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿	தெரிந்துகொள்
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆதலால்
𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂	சகலத்தையும் பற்றிய

ப்ரஹ்ம	ப்ரஹ்மமானது (வேதமானது)
நித்யம்	எப்பொழுதும்
யஜ்ஞே	யஜ்ஞத்தில்
ப்ரதிஷ்டிதம்	நிலை பெற்றிருக்கிறது
ஏவம்	இவ்விதமாய்
ப்ரவர்த்திதம்	ப்ரவிர்த்திக்கச் செய்யப்பட்ட
சக்ரம்	(ஜகத்) சக்கிரத்தை
இஹ	இங்கு (இந்த லோகத்தில்)
ய: ந அநுவர்தயதி	எவன் அநுஸரிக்கிறதில்லையோ
ஸ:	அவன்
அகாயு:	பாபஜீவனம் (வாழ்க்கை) உள்ளவனும்
இந்த்ரியாராம:	இந்திரியங்களினால் (விஷயங்களிலே) ரமித்துக்கொண்டுள்ளவனும்
ஹே பார்த்த	ஓ! பார்த்தா!
மோகம்	விருதாவாய்
ஜீவதி	ஜீவிக்கிறான்

அன்னத்திலிருந்து பிராணிகள் உண்டாகின்றன, (அதாவது உட்
கொள்ளும் அன்னம், ரக்தமாகவும் பிறகு ரேதஸ் ஆகவும் திரிந்து அதி
லிருந்து பிராணிகள் சரீரங்களுடன் உண்டாகின்றன.) அன்னம் மழை
யிலிருந்து உண்டாகிறது. மழை, யஜ்ஞத்திலிருந்து உண்டாகிறது. யஜ்
ஞம், கர்மத்தினின்று உண்டாகிறது.

கர்மம், ப்ரஹ்மத்திலிருந்து, அதாவது வேதத்திலிருந்துண்டான
தாகவும், ப்ரஹ்மம், (அதாவது வேதம்,) அழிவில்லாத பரமாத்மாவி
னின்றுண்டானதாகவும் (நீ) தெரிந்துகொள். ஆதலால் ஸகலத்தையும்
பற்றிய, (அதாவது வெளிப்படுத்துகிற அந்த) ப்ரஹ்மமானது, (அதா
வது வேதமானது) யஜ்ஞத்திலே நிலை பெற்றிருக்கின்றது, (அதாவது
யஜ்ஞவிதிகளையே பிரதானமாகவுடையது என்பது பொருள்).

இவ்விதமாய் ப்ரவிர்த்திக்கச்செய்யப்பட்ட, ஜகத் சக்கிரத்தை இந்த
லோகத்தில் எவன் அநுஸரிக்கிறதில்லையோ, (என்றால், யஜ்ஞாதி கர்மங்
களால் ஜகத் நடப்பதற்கு அநுகூலத்தை செய்கிறதில்லையே,) அவன்
பாபஜீவனமுள்ளவனும் இந்திரியங்களினால் விஷயங்களிலே, ரமித்
துக்கொண்டு அதாவது விளையாடிக்கொண்டுள்ளவனும் ஓ! பார்த்தா!
விருதாவாய் ஜீவிக்கிறான்.

(**சங்கரபாஷ்யம்**) கர்மமானது ஜகத்சக்கிரத்தைச் செல்லும்படி செய்கிறது என்கிற இந்தக் காரணத்தினாலும் கர்மத்திற்கு உரியவன் கர்மம் செய்யவேண்டுமென்பதும், அது எப்படி என்பதும் சொல்லப்படுகிறது.

உட்கொண்ட உணவு, ரக்தமாகவும், ரேதஸ் (வீர்யம்) ஆகவும் திரிந்து அதினின்று ஸகலருக்கும் பிரத்தியக்ஷமாகப் பிராணிகள் உண்டாகின்றன. அந்த அன்னம் மழையிலிருந்து உண்டாகின்றது அந்த மழை யஜ்ஞத்தினின்று உண்டாகின்றது. அந்த யஜ்ஞம் கர்மத்தினின்று உண்டாகின்றது.

அக்நௌ ப்ராஸ்தாஹுதி: ஸம்யகாதித்யமுபதிஷ்டதே ।
ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டி: வ்ருஷ்டேரந்நம் தத: ப்ரஜா: ॥

" அக்கினியிலே இட்ட ஆஹுதியானது நேரே சூரியனைச்சேர, சூரியனிடத்தினின்று மழை உண்டாகின்றது. மழையினின்று அன்னமும், அன்னத்தினின்று பிராணிகளும் உண்டாகின்றன" என்னும் மநுஸ்மிருதி வாக்கியத்தையும் பார்க்க.

இந்த சுலோகத்தில் 'யஜ்ஞம்' என்பதற்கு 'அபூர்வம்' என்று பொருள். (அதாவது ஒன்று செய்யப்படுகின்ற காலத்திற்கும், பயனைக் கொடுக்கின்ற காலத்திற்கும், மத்தியகாலத்திலே ஒருவராலும் தான் காணப்படாமல் நிற்கின்ற நிலமை; கர்மத்தின் கார்யமாகிய பயனை, முன் தோன்றாமலே கொடுக்கக்கூடிய ஓர்வகைத் தன்மை). 'கர்மம்' என்பது ரித்விக்குகளும் (அதாவது யஜ்ஞம் செய்யும்பொழுது தேவதைகளுக்கு பிரதிநிதிகளாக யேர்ப்படுத்தப்பட்டு நடத்தவேண்டிய கார்யங்களை நடத்துவோரும்), யஜமானனும், (அதாவது யஜ்ஞத்தைச் செய்பவனும்) ஆகிய இவர்களின் வியாபாரம், (அதாவது ஹோம், மந்திரம், தந்திராதிக்கிரியைகள்). இந்த கர்மத்தினின்று யஜ்ஞமுண்டாகிறது என்றால் மேல்சொன்ன ரித்விக்குகளுடன் கூடி யஜமானன் செய்யும் வியாபாரமாகிய கர்மத்தினால், முன்தோன்றாமலே பின்பு பயனை விளைவிக்கும் தன்மையாகிய, அபூர்வம், அதிருஷ்டம் உண்டாகிறது என்பது பொருள். எப்படி மழையிலிருந்து அன்னமும், அன்னத்திலிருந்து பிராணிகளும், பிரத்தியக்ஷமாக உண்டாகின்றனவோ, அப்படி இது பிரத்தியக்ஷம் அல்லவென்று அறிக. (14)

அந்தக் கர்மமும் ப்ரஹ்மத்தினின்று (வேதத்தினின்று) வெளிப்படுவது. வேதம் என்னும் பெயருடைய, ப்ரஹ்மமோ, அழிவில்லாத பரமாத்மாவினின்று வெளிப்படுகிறது. ப்ரஹ்மம் என்பதற்கு, வேதம் என்று பொருள். மனுஷ்யனிடத்தினின்று, சுவாஸம் வெளிப்படுவது

போல, பரமாத்மா என்னும் அழிவில்லாப் பொருளினின்றும் வேதம் நேரே உண்டானது. அந்த வேதம் ஸகல விஷயத்தையும் வெளிப்படுத்துவதாதலால், ஸகலத்தையும் பற்றியதாம். ஆனால் அது யஜ்ஞாதிகளைப் பிரதானமாகவுடையதாதலால், எப்பொழுதும் யஜ்ஞத்திலே நிலைபெற்றதென்க. (15)

இவ்விதமாய் ஈசுவரனால் வேதங்களையும், யஜ்ஞங்களையும் முன்னிட்டுச் செலுத்தப்பட்டுள்ள, ஜெகத் சக்கிரத்தை அநுஸரியாமல், பாப ஆயுஸையும் (வாழ்க்கையையும்,) இந்திரியங்களினால் விஷயங்களிலே, விளையாடுதலையும், உடையவனாய் எவன் இருக்கின்றானோ அவன் வீணாக ஜீவிக்கிறான்; (கர்மத்தால்,யஜ்ஞமும், யஜ்ஞத்தால் மழையும், மழையினால் அன்னமும், அன்னத்தினால் பிராணிகளும், மறுபடி அவ்வாறே பிராணிகளால், கர்மமும்; கர்மத்தால் யஜ்ஞமும் இப்படி சக்கிரம்போல் சுற்றிவருவதால் ஜகத் சக்கிரம் என்று சொல்லப்பட்டது).

ஆகவே, கர்மத்திற்கு உரிய அஜ்ஞானியானவன் கர்மத்தைச் செய்ய வேண்டும் என்பது இந்த ஸந்தர்பத்தின் கருத்து. கர்மத்திலேயே அதிகாரியான அனாத்மஜ்ஞன், ஆத்மநிஷ்டைக்கேற்ற யோக்கியதையை அடைவதற்கு முந்தி, அது கைகூடும் பொருட்டு, கர்மயோகத்தை அநுஷ்டித்தல் வேண்டுமென்பது "நகர்மணாமநாரம்பாத்" என்பது முதல் "ஶ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண:" என்பது வரையில் சொல்லப்பட்டது. "யஜ்ஞார்த்தாத்கர்மணோ அந்யத்ர" என்பது முதல், "மோகம்பார்த்த ஸஜீவதி" என்பது வரையிலும், கர்மாதிகாரியாய், ஆத்மாவை அறியாதிருப்பவன், கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டிய விஷயத்திலே பல காரணங்கள் நடுவே நேர்ந்த ப்ரஸ்தாபத்தால் சொல்லப்பட்டன. அதைச் செய்யாமலிருப்பதனால் விளையும் தீமைகளும் கூறப்பட்டன. (16)

(ராமாநுஜர்) கர்ம ப்ரஹ்மோத்பவம் = கர்மமானது பிரகிருதி விகாரமான தேகத்திலிருந் துண்டாகிறது. ப்ரஹ்ம = தேகமானது, அக்ஷர ஸமுத்பவம் = ஜீவனாலே யுண்டாகின்றது, எப்படி என்றால், ஜீவன் புஜித்த அன்னாதிகளினால் விருத்தி யடைந்தபடியால் ஜீவனாலே தேகமுண்டாச்சுதென்பது தாத்பரியம். ஸர்வகதம் = சகல ஜீவன்களையும் அடைந்திருக்கிற, ப்ரஹ்ம = தேகமானது, நித்யம் = எப்பவும், யஜ்ஞே ப்ரதிஷ்டிதம் = யஜ்ஞத்திற்கு மூலமா யிருக்கிறது. அகாயு: = பாபத்தினாலுண்டான ஆயுசு, அல்லது பாபத்திற்கு ஹேதுவான ஆயுஸையுடையவன். (இதுதான் பேதப்பட்ட பாகம்).

(இராகவேந்திரர்) கர்ம ப்ரஹ்மோத்பவம் = கர்மமானது பரப்பிரம்மத்திலிருந்துண்டானது, ப்ரஹ்ம = பரப்பிரம்மமானது, அக்ஷரஸமுத்பவம் = வேதத்தினு லறியப்படத்தகுந்தது. ஸர்வகதம் = சர்வவியாபகமான ப்ரஹ்ம = பரப்பிரம்மமானது, நித்யம் = எப்போதும், யஜ்ஞே = யஜ்ஞத்தில், ப்ரதிஷ்டிதம் = இருக்கிறது. யஜ்ஞம் விஷ்ணுவென்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறதினுலும், யஜ்ஞமானது விஷ்ணுவுக்கு அதிப்பிரியமானதாலும் யஜ்ஞத்தில் பரப்பிரம்மமானது எப்போது மிருக்கிறதென்று சொல்லப்பட்டது.

(ஸூா) இந்த சுலோகங்களில் தேகாதிகளை ஒன்றிலிருந்து ஒன்றுண்டாவதாகச் சொல்லி கடைசியில் "ஏவம்ப்ரவர்த்திதம்சக்ரம் = இவ்விதமா யுண்டாயிருக்கிற சக்கிரத்தை" என்று சொல்லப்பட்டிருக்கிறதினுல் அந்தச்சக்கிர மின்னவிதமான தென்பது, ஸ்ரீதரர், இராகவேந்திரர் இவர்கள் சொல்லியிருக்கிற வாக்கியங்களை அனுசரித்துச் சக்கிரங்களாக வரைந்து இதனடியில் காட்டப்படுகின்றன :—





ராமாநுஜர் தாத்பரியம் ஸ்ரீதரைய்யருடையது போலவே. ஆனுல் 'அன்னத்தினுல் சரீரம்' என்பதற்கு பதிலாக 'சரீரம் அன்னத்தினுல்' என்பதுபோல வாசகத்தில் மட்டும் தான் பேதம். மேலே வரைந்திருக்கிற சக்கிரத்தில், ஒன்றிலிருந்து மற்றொன்றுண்டாய்க்கொண்டு ஒரு முடிவையடையாமல் சுத்திக்கொண்டே வருகிறபடியாலும், சுத்திவருகிற சக்கிரம் போலிருக்கிறதாலுஞ் சக்கிரமென்று சொல்லப்பட்டது. இந்தச் சக்கிரத்தைப் பார்த்தால் அதில் கண்டவைகளில் எது முதலிலுண்டானதென்று அறியக்கூடுகிறதில்லை, பீஜாங்குர ந்யாயம் போலிருக்கிறது. அதாவது, விரை முதலிலுண்டாச்சுதா ? மரம் முதலிலுண்டாச்சுதா ? என்று கேட்கும்பக்ஷத்தில், விரையின்றி மரமுமில்லை, மரமின்றி விரையு

மில்லை, ஆகையால் முக்தியுண்டானதென்று சொல்லக்கூடாதது போலொத்தது. இராகவேந்திரர் மற்றொரு அபிப்பிராயமும் சொல்லியிருக்கிறார். அதாவது, இந்தச்சக்கிரத்தை அனுசரிக்கவேண்டியது கிரகஸ்தாசிரமிக்கு மட்டுமென்று நினைக்கக் கூடுமானாலும், சந்நியாசி, வானப்பிரஸ்தன், பிரம்மசாரி, இந்த ஆசிரமிகள் விலக்கப்பட்டிருப்பதாக நினைக்கக்கூடாது. ஏனென்றால், அவர்களுக்கும் மனோவாக்கு காயங்களினால் செய்யத்தக்க பல கர்மங்களுண்டு. ஆகையால் அவர்களும் இந்தச் சக்கிரத்தை அநுசரிக்கவேண்டியதே. (14-16)

---

௧௭. 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌰𑌤𑌿𑌰𑍇𑌵 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌤𑍃𑌪𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑌵𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌚 𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

17. ய:-து-ஆத்மரதி:-ஏவ-ஸ்யாத்-ஆத்மத்ருப்த:-ச-மானவ: |
ஆத்மநி-ஏவ-ச-ஸந்துஷ்ட: தஸ்ய கார்யம்-ந வித்யதே ||

𑌯𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌨𑌵𑌃	மற்று எந்த மனிதன்
𑌆𑌤𑍍𑌮𑌰𑌤𑌿𑌰𑍇𑌵	ஆத்மாவினிடத்தேயே ரமிக்கிறவனும்
𑌆𑌤𑍍𑌮𑌤𑍃𑌪𑍍𑌤𑌶𑍍𑌚	ஆத்மாவினிடத்தே திருப்தியடைந்தவனு[யும்]
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌚	ஆத்மாவினிடத்தேயே
𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌃	சந்தோஷமடைந்தவனும்
𑌸𑍍𑌯𑌾𑌤𑍍	ஆகிறானோ
𑌤𑌸𑍍𑌯	அவனுக்கு
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂	செய்யவேண்டியது
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	இல்லை.

மற்று எந்த மனிதன் ஆத்மாவினிடத்தேயே, ரமிக்கிரவனும், ஆத்மாவினிடத்தே திருப்தியடைந்தவனும், ஆத்மாவினிடத்தேயே சந்தோஷமடைந்தவனும் ஆகிறானோ அவனுக்கு செய்யவேண்டியதாக ஒன்றும் இல்லை. (ஆத்மாவை அறிபவனுக்கு கர்மயோகம் அன்று என்பது பொருள்).

(**சங்கரபாஷ்யம்**) இவ்வாறு செலுத்தப்பட்ட சக்கிரத்தை யாவரும் அனுசரிக்க வேண்டியதா? அல்லது ஆத்மாவை அறியாதவன் கர்மயோக நிஷ்டா உபாயத்தால் அடையக்கூடியதும், ஆத்மாவை அறியும் ஸாங்கியர்களால் அநுஷ்டிக்கத்தக்கதுமான, ஞானயோக நிஷ்டையைப் பெறாதவன் மாத்திரமே அநுஷ்டிக்க வேண்டியதா? என்கிற விஷயத்தை ஸ்ரீபகவான் தாமே அர்ஜுனன் வினவாக சங்கித்து (முன் ஞான

யோகத்தால் ஸாங்கியர்களுக்கு என்று 3-வது சுலோகத்தில் சொன்ன) நூற்பொருள் தெளிவாய்த் தெரியும் பொருட்டு "ஏதம் வை தமாத்மானம் விதித்வா நிவ்ருத்த மித்யாஜ்ஞாநா: ஸந்த: ப்ராஹ்மணா: மித்யாஜ்ஞாநவத்பி: அவஶ்யம் கர்தவ்யேப்ய: புத்ரைஷணாதிப்யோ வ்யுத்தாயாத பிக்ஷாசர்யம் ஶரீரஸ்திதிமாத்ர ப்ரயோஜனம் சரந்தி ந தேஷாம் ஆத்மஜ்ஞாந நிஷ்டாவ்யதிரேகேண அந்யத் கார்யம் அஸ்தி" 'பிராமணர்கள் பிரஸித்தமான இந்த ஆத்மாவை அறிந்து பொய்யறிவு நீங்கப்பெற்று பொய்யறிவுள்ளவரால் அவசியம் பாராட்டப்படுவன வாகிய மக்களாசை முதலியவற்றை விட்டு பின்பு தேகம் நிலைப்பதற்குமாத்திரம் வேண்டிய பிக்ஷை எடுத்தலைச்செய்து திரிகின்றூர்கள். அவர்களுக்கு ஆத்மஞான நிஷ்டையைத்தவிர வேறு கார்யம் இல்லை' என்கிற, பிருஹதாரண்யக உபநிஷத்வாக்கியமாகிய வேதப் பொருளே இங்கு கீதாசாஸ்திரத்திலே உணர்த்தக்கருதிய தென்பது வெளியாகும்பொருட்டு இதைக்கூறுகிறூர். ('து' சப்தம் பிரிநிலைப்பொருளை யுடையது.) மற்று எந்த ஸாங்க்யன் ஆத்மாவை அறிதலிலே உறுதியாக நின்று ஆத்மாவினிடத்தேயன்றி விஷயங்களிலே ரமிக்காதவனுகவும், ஆத்மாவினுலேயே அன்றி, உணவு, ருசி முதலியவற்றால் திருப்தி பெராதவனுகவும் இருக்கின்றூனே, அந்த ஸந்நியாஸியான மனிதன் ஆத்மாவிடத்திலேயே ஸந்தோஷித்திருக்கிறுன். பணம் முதலிய வெளிப்பொருள்களைப் பெறுதலாலன்றே எல்லோருக்கும் ஸந்தோஷமுண்டாகின்றது? இவனே அந்தப் பணம் முதலியவற்றைப் பெறுவதை வேண்டாது ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷமடைந்தவன். எல்லாவற்றிலும் ஆசை நீங்கினவன் என்பதாம். எவன் இவ்வித ஆத்ம ஞானியாக இருக்கின்றூனே அவன் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்பது பொருள்.

(ஸ்ரீதரர்) இந்த அத்தியாயத்தின் 4-வது சுலோகம் முதல் 16-வது சுலோகம் வரையில் அஜ்ஞானி, அந்தக்கரண சுத்தியின்பொருட்டு கர்மங்களைச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த சுலோகத்தினுலும், அடுத்த சுலோகத்தினுலும், பிரம்மஞானிக்கு கர்மத்தினுல் பிரயோஜனமில்லை என்பது சொல்லப்படுகிறது.

(ராமாநுஜர்) (17, 18, 19 இம்மூன்று சுலோகங்களுக்கு ஒரே அந்வயமாகையால் அந்த சுலோகங்களின் தாத்பரியமும் சுருக்கி இவ்விடத்திலேயே எழுதப்படுகிறது). யாதொரு ஸாதனமின்றி பிரம்மதெரிசன மடைந்திருப்பவர்களாயும், நித்தியமுக்தர்களாயு மிருக்கிற (நித்திய

சூரிகள்) வர்களுக்குக் கர்மம் வேண்டியதில்லை. ஸாதனங்களால் முக்தியடையும் பிரம்ம ஞானிகளுக்குச் சொற்ப கர்மமாவதுண்டாகையால் அவர்களுக்குக் கர்மம் கிடையாதென்று சொல்லக்கூடாது. ஆகையால், அர்ஜுனா! நீ பலாபேக்ஷையன்றி கர்மம்செய் என்பது கருத்து.

(ஹா) இந்த சுலோகத்தில் "ஆத்மாவிடத்திலேயே" என்கிற வாக்கியத்திற்கு அத்துவைத பக்ஷத்தில் தனக்குள்ளேயே என்றும் துவைத பக்ஷத்தில் பரப்பிரம்மத்தினிடத்திலேயே என்றும் அர்த்தம் (17)

---

௧௮. 𑌨𑍈𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍇𑌨𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨𑌾𑌕𑍃𑌤𑍇𑌨𑍇𑌹 𑌕𑌶𑍍𑌚𑌨 |
𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ||

18. ந-ஏவ-தஸ்ய-க்ருதேந-அர்த:-ந-க்ருதேந-இஹ-கஸ்சந |
ந-ச-அஸ்ய-ஸர்வபூதேஷு-கஸ்சித்-அர்தவ்யபாஸ்ரய: ||

𑌤𑌸𑍍𑌯	அவனுக்கு (முன்சொன்ன ஆத்மஞானிக்கு)
𑌇𑌹	இந்த லோகத்தில்
𑌕𑍃𑌤𑍇𑌨	கர்மம் செய்வதினாலே
𑌕𑌶𑍍𑌚𑌨 𑌅𑌰𑍍𑌥𑌃	ஒரு பிரயோஜனம்
𑌨𑍈𑌵	இல்லையே இல்லை
𑌅𑌕𑍃𑌤𑍇𑌨	கர்மம் செய்யாததினாலே
𑌕𑌶𑍍𑌚𑌨 (𑌦𑍋𑌷𑌃)	யாதொரு தோஷமும்
𑌨	இல்லை
𑌅𑌸𑍍𑌯	இவனுக்கு
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁	ஸகல பூதங்களினிடத்தும்
𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍	{ பிரயோஜனத்திற்காக ஆச்ரயிக்கவேண்
𑌅𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌨 𑌚	டிய தொன்றுமில்லை

ஆத்மாவிடத்திலேயே திருப்தி முதலியவைகளை அடைந்த ஆத்மஞானியாகிய அவனுக்கு இந்த லோகத்தில் கர்மம் செய்வதினால் யாதொரு பிரயோஜனமும் இல்லையே இல்லை. கர்மம் செய்யாததினால் யாதொரு தோஷமும் இல்லை. இவனுக்கு (இந்த ஆத்ம நிஷ்டனுக்கு) ஸகல பூதங்களினிடத்தும் யாதொரு பிரயோஜனத்திற்காக ஆச்ரயிக்க வேண்டியது ஒன்றும் இல்லை.

(இராகவேந்திரர்) பிரம்மத்தைத்தவிர வேறே யாதொன்றையும் நினைக்காதவனாகிய அஸம்பிரக்ஞாத ஸமாதியிலிருக்கிறவன் தேவதைகள் குரு முதலியவர்களுக்கு வணங்கவேண்டிய காலங்களில் வணங்கா

விட்டாலும் அவனுக்கு யாதொரு பாதக மில்லை. அவனுக்கு ஒருவரா லும் ஆகவேண்டிய பிரயோஜனம் ஒன்று மில்லை. (18)

---

௧௯. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌚𑌰 ।
𑌅𑌸𑌕𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ॥

19. தஸ்மாத்-அஸக்தஃ-ஸததம்-கார்யம்-கர்ம-ஸமாசர ।
அஸக்தஃ-ஹி-ஆசரந்-கர்ம-பரம்-ஆப்நோதி-பூருஷஃ ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே
(𑌤𑍍𑌵𑌂)	நீ
𑌸𑌤𑌤𑌂	எப்பொழுதும்
𑌅𑌸𑌕𑍍𑌤𑌃	பலாபேக்ஷை யற்றவனாக
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂	செய்யவேண்டிய
𑌕𑌰𑍍𑌮	நித்திய கர்மத்தை
𑌸𑌮𑌾𑌚𑌰	நன்றாகச் செய்;
𑌹𑌿	ஏனென்றால்,
𑌅𑌸𑌕𑍍𑌤𑌃	பலாபேக்ஷையை விட்டு
𑌕𑌰𑍍𑌮	கர்மத்தை
𑌆𑌚𑌰𑌨𑍍	அநுஷ்டித்துவருகிற
𑌪𑍂𑌰𑍁𑌷𑌃	புருஷனானவன்
𑌪𑌰𑌂	உத்தமமானதை (மோக்ஷத்தை)
𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿	அடைகிறான்.

நீ, (கர்மத்திற்கு அதிகாரியா யிருக்கிறாய்); ஆகையினாலே எப்பொழு தும் கர்மபலனில் ஆசையை விட்டுச் செய்யவேண்டிய நித்ய கர்மத்தை நன்றாகச் செய். ஏனென்றால், பற்றற்றவனாய்க் கர்மஞ் செய்கிற புருஷ னானவன் உத்தமமானதை (மோக்ஷத்தை) அடைகிறான்.

(சங்கர பாஷ்யம்) "𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌸𑌂𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌦𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑍀யம்" எங்கும் பெருகிய பெரிய ஸமுத்திரம் போன்ற நீர்ப்பெருக்கை ஒத்த தான ஆத்மஜ்ஞானத்தில் நீ இல்லை, என்கிற இந்தக் காரணத்தினால், என்றைக்கும் செய்ய வேண்டிய நித்திய கர்மத்தை, பலாபேக்ஷையை விட்டு நன்றாகச் செய். ஏனெனில், பற்றில்லாதவனாய் ஈசுவரார்ப்பண மாகக் கர்மத்தைச் செய்பவன் சித்த சுத்தியைப் பெற்று அதன் மூல மாக ஞானத்தை அடைந்து, மேலான மோக்ஷத்தை அடைகிறான். (இந்தக் கர்மயோகமாகிய ஸாதனத்தால் மோக்ஷத்தை நிச்சயமாய் அடையலாமாதலால் கர்மயோகமே அபாயமற்ற சுலபமான வழி என்க)."

(இராகவேந்திரர்) "அஸம்பிரஜ்ஞாத ஸமாதியில்லாதவும் (மோக்ஷ இச்சை யுடையவனாகிய) முமுக்ஷுவுமான நீ கர்மம் செய்தே தீர வேண்டும்" என்பது கருத்து. (19)

---

௨௦. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ।
𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

20. கர்மணைவ-ஹி-ஸம்ஸித்₄திம்-ஆஸ்தி₂தா:-ஜநகாத₃ய:। (1)
லோகஸங்க்₃ரஹம் (2) ஏவ அபி ஸம்பஶ்யந்-கர்தும்-அர்ஹஸி ॥

𑌹𑌿	ஏனென்றால்,
𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃	ஜனகர்முதலானவர்கள்
𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵	(நிஷ்காம) கர்மத்தினாலேயே
𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍍	ஸித்தியை (முக்தியை)ப் பெற
𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃	பிரவிருத்தித்தார்கள் (முயன்றார்கள்);
𑌤𑍍𑌵𑌮𑍍	நீ
𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍	லோகத்தை நல்வழியில் நடக்கச்செய்தலை மாத்திரமாவது நன்கு உத்தேசித்து
𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍍	(கர்மத்தைச்) செய்வதற்கு
𑌅𑌰𑍍𑌹𑌸𑌿	தகுந்தவனாக ஆகிறாய்.

நீ இன்னும் எந்தக் காரணத்தினால் கர்மத்தையே செய்யவேண்டும் என்றால், முன்னோர்களான ஜநகர்முதலானவர்கள் (நிஷ்காம) கர்மத்தினாலேயே ஸித்தியை அதாவது முக்தியைப் பெறப் பிரவிருத்தித்தார்கள், அதாவது, முயற்சி செய்தார்கள் (என்பதனால்). நீ உலகத்தை நல்ல வழியில் நடக்கச் செய்து கெட்ட வழியில் செல்லுதலைத் தடுத்தலாகிய இந்தப் பயனை மாத்திரம் நன்றாய் ஆலோசித்தாவதும் கர்மத்தைச் செய்வதற்கு உரியவனாக ஆகிறாய்.

---

(1) ஜநகாதய: - ஜநகர் உன்னைப்போல் க்ஷத்திரியனாகவும் ராஜாவாகவு மிருந்ததோடு விசேஷ ஞானி என்கிற பிரஸித்தி பெற்றவராயிருந்தும், அவரும் கர்மத்தினாலேயே ஸித்தியைப் பெற முயன்றார் என்றால், நீ கர்மம் செய்யவேண்டியவன்தான் என்பது ஸித்தம். அல்லாமலும், ஜநகர்முதலானவர்கள் உண்மையான ஞானிகளாக இருந்தும் ப்ராரப்த கர்மத்தால் க்ஷத்திரிய ஜன்மத்தை எடுத்த காரணத்தைக்

கொண்டு க்ஷத்திரிய தர்மம் அல்லாத ஸந்நியாஸத்தை, ஞானயோக நிஷ்டையைக் கைக்கொள்ளக் கூடாதென்பதைத் தெரிந்து தங்களுடைய ப்ராரப்த கர்மத்திற் கிணங்கி, கர்மத்தை விடாமல் செய்துவந்து ஸித்தியை அடைந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாக வியாக்கியாதாக்கள் தாத்பர்யம். ஜநகர்முதலானவர்கள் என்றதனால் அஸ்வபதி, அம்பரீஷன், பகீரதன், பிரியவிருதன், அஜாதசத்துரு ஆகிய இவர்களையும் குறித்ததாகக் கொள்க.

(2) லோகஸங்க்ரஹம்—என்றால் உலகத்தார் உந்மார்க்கத்தில், அதாவது தப்புவழியில் செல்லாமல் அவர்களைத் திருப்பிச் சுவதர்மத்தில் ப்ரவிருத்திக்கும்படி செய்வது; அதாவது, தான் நல்ல வழியில், தர்ம மார்க்கத்தில் நடந்து காட்டி மற்றவர்களும் தன்னைப் பார்த்துத் தப்பு வழியில் ப்ரவிருத்திக்காமல் திருப்பி ஸந்மார்க்கத்தில் நடக்கும்படி செய்வது. இதை எப்படிச் செய்வது என்பது பின் வருகிற சுலோகங்களினால் வெளிப்படுகிறது.

(சங்கர பாஷ்யம்) "இன்னும் எந்தக் காரணத்தினால் நீ கர்மத்தையே அநுஷ்டிக்க வேண்டுமென்றால், முன்னோர்களான க்ஷத்திரியர்களாகிய ஜநகர் அஸ்வபதிமுதலான ஞானிகள் கர்மத்தினாலேயே மோக்ஷத்தை அடையப் பிரவிருத்தித்தார்கள் என்கிறதினால்தான். அவர்கள் ஆத்ம தரிசனத்தைப் பெற்றவர்களாயின் அப்பொழுது ப்ராரப்த கர்மமிருந்ததால், கர்மஸந்நியாஸம், அதாவது கர்மத்தை விட்டுவிடுதல் இல்லாமலே, கர்மத்தோடுகூடவே மோக்ஷத்தை அடைய முயன்றார்கள். ஜநகர்முதலானவர்கள் ஆத்மதரிசனத்தைப் பெறாதவர்களானாலோ அப்பொழுது சித்தசுத்திக்கு ஸாதனமான கர்மத்தைக்கொண்டு மோக்ஷத்தைப் பெறப் படிப்படியாக முயன்றார்கள் என்று இந்த சுலோகம் வியாக்கியானம் செய்யத்தக்கது. இனி, 'ஜநகாதியரான முன்னோர்கள் அஜ்ஞானிகளாக இருக்கும்பொழுதுதான் நித்திய கர்மத்தைச் செய்தார்கள்; அதனால், ஆத்மதரிசனத்தை உடையவனாய், புருஷார்த்தம் கைகூடப்பெற்ற வேறொருவன் கர்மத்தை அவசியம் செய்யவேண்டியது என்பது அமையாது,' என்று நீ நினைத்தாலும், க்ஷத்திரிய ஜந்மத்தை இப்பொழுது உனக்குத் தந்துள்ள ப்ராரப்த கர்மத்திற்கு உட்பட்டிருக்கின்ற நீ, உலகம் உந்மார்க்கத்தில் அதாவது கெட்ட வழியில் செல்லுதலைத் தடுத்தலாகிய இப் பயனை மாத்திரமாவது நன்றாக ஆலோசித்துக் கர்மத்தைச் செய்ய வேண்டும்."

(ஸ்ரீதரர்) "நீ, 'எனக்கு ஞான முண்டாய்விட்டது; கர்மம் செய்ய வேண்டியதில்லை,' என்று எண்ணினாலுங்கூட ஞானத்தில் பிரவிருத்தி

யற்றவும், கர்மத்திலேயே அதிகார முள்ளவும், அஞ்ஞானத்தி லிருக்கிறவு மாகிய ஜனங்கள் ஸத்கர்மங்களைச் செய்ய இச்சையை அடையவும், துஷ்கர்மங்களில் பிரவிருத்திக்காம லிருக்கவும் வேண்டியதின் பொருட்டு பெரியவர்களாயிருக்கிறவர்கள் தங்களுக்குக் கர்மம் செய்து ஆகவேண்டியது ஒன்று மில்லாவிட்டாலும் லோக ஜனங்களுக்காக ஸத்கர்மங்களைச் செய்து காட்டவேண்டியது.”

(இராகவேந்திரர்) “முக்தியில் ஆநந்தம் அதிகமா யுண்டாகும் பொருட்டுப் பிரஹ்மஞானிகள்கூட நிஷ்காம கர்மஞ் செய்கிறார்கள்.”

(ஸூ) ஜனங்களுக்கு நன்மை செய்பவனிடத்தில் ஈசுவரப்பிரீதி யுண்டாகிறது என்பது தாத்பரியம். ஜனகராஜனைத் திருஷ்டாந்தமாகச் சொன்ன உத்தேச மென்னவென்றால், “அர்ஜுனா! உன்னைப்போல் இராஜாவா யிருந்தது மாத்திரமல்ல; மஹா ஞானியாயுமிருந்த ஜனகமஹாராஜனே கர்மம் செய்திருக்க உனக்குக் கர்மம் வேண்டியதில்லையென்று நீ எண்ணுவதானால் அது பிசகு” என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு என்க. (20)

உக. யத்யதாசரதி ஶ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்ததே ॥

21. யத்யத்-ஆசரதி-ஶ்ரேஷ்ட:-தத்தத்-ஏவ-இதர:-ஜந: ।
ஸ:-யத்-ப்ரமாணம்-குருதே-லோக:-தத்-அநுவர்ததே ॥

ஶ்ரேஷ்ட:	ப்ரதானமானவன்
யத்யத்	எதெதை
ஆசரதி	ஆசரிக்கின்றானோ
தத்ததேவ	அதனையே
இதர: ஜந:	மற்ற ஜனங்கள்
(ஆசரதி)	செய்கிறார்கள்;
ஸ:	அவன்
யத் ப்ரமாணம் குருதே	எதனைப் பிரமாணமாகக் கொள்கின்றானோ
தத்	அதனை
லோக:	உலகம்
அநுவர்ததே	அநுசரிக்கின்றது.

(வயது, யோக்கியதை, ஆசாரம் முதலியவைகளில்) பிரதானமானவன் எந்தெந்தக் கர்மத்தை அநுஷ்டிக்கின்றானோ (செய்கின்றானோ)

அதனையே மற்ற ஜனங்கள் செய்கிறார்கள். அந்தப் பெரியவன் எந்த சாஸ்திராதிகளைப் பிரமாணமாகக் கொண்டு (அதன்படி) செய்கிறானோ, அதனையே உலகம் (உலகத்திலுள்ள ஜனங்கள்) பின்பற்றுகின்றது, அதாவது, பிரமாணமாகக் கொள்ளுகின்றது.

(சங்கர பாஷ்யம்) "லோகஸங்கிரஹத்தை (உலக நன்மையை) யார் செய்யவேண்டும்? எப்படிச் செய்யவேண்டும்? என்பதுசொல்லப்படுகிறது. முதன்மையானவனாகச் சிறந்தவன் எந்தெந்தக் கர்மத்தை அநுஷ்டிக்கின்றானோ அந்தந்தக் கர்மத்தையே அவனைப் பின்தொடர்ந்த மற்ற ஜனங்கள் அநுஷ்டிக்கிறார்கள். அன்றியும், மனிதரிற் சிறந்தவனை அவன் லௌகிகவிஷயத்திலாயினும் வைதிகவிஷயத்திலாயினும் எதனைப் பிரமாணமாகக் கொள்கின்றானோ அதனை உலகம் பின்பற்றுகின்றது, அதாவது, பிரமாணமாகக் கொள்கின்றது." (21)

---

௨௨. 𑌨 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑌿𑌂𑌚𑌨 ।
𑌨𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌤 𑌏𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥

22. ந-மே (1)-பார்த-அஸ்தி-கர்தவ்யம்-த்ரிஷு-லோகேஷு-கிம்சந।
ந-அநவாப்தம்-அவாப்தவ்யம்-வர்தே-ஏவ-ச கர்மணி ॥

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! குந்திபுத்திரா!
𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁	மூன்று லோகங்களிலும்
𑌮𑍇	எனக்கு
𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂	செய்யவேண்டியது
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	ஒன்றும் கிடையாது;
𑌅𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌂	(இப்பொழுது) அடையாததாய்
𑌅𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂	(இனி) அடையவேண்டியது
𑌕𑌿𑌂𑌚𑌨	யாதொன்றும்
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	கிடையாது;
(𑌤𑌥𑌾𑌪𑌿) 𑌚	அப்படியிருந்தபோதிலும்
𑌅𑌹𑌂	நான்
𑌕𑌰𑍍𑌮𑌣𑌿	கர்மத்தில்
𑌵𑌰𑍍𑌤 𑌏𑌵	பிரவிருத்தித்தே யிருக்கின்றேன்.

ஓ! குந்திபுத்திரா! மூன்று லோகங்களிலேயும் எனக்குச் செய்ய வேண்டியது (ஒன்றும்) கிடையாது. இப்பொழுது நான் அடையாதது இனி அடையவேண்டியதாய் யாதொன்றும் கிடையாது. அப்படியிருந்

தும் கர்மத்தில் பிரவிருத்தித்தே யிருக்கிறேன், அதாவது, கர்மத்தைச் செய்துகொண்டே வருகிறேன்.

---

(1) "மே—ஸர்வேசுவரனுயும், ஸர்வஜ்ஞனுயும்,மூன்று லோகங்களில் தேவ மனுஷ்ய ரூபங்களாய் அவதாரஞ் செய்பவனுயும் என்னிடத்தில் இல்லாதது ஒன்று மில்லை யாகையால் அடையவேண்டியது ஒன்று மில்லாதவனுயு முள்ள எனக்கு." (ராமாநுஜர்.)

"ஓ! பார்த்த! லோகசங்கிரகத்தை, அதாவது, உலக நன்மையைச் செய்யவேண்டியதான இந்த விஷயத்திலும் எனக்கு ஸம்சய மிருந்தால் அப்பொழுது நீ ஏன் என்னைத் திருஷ்டாந்தமாகப் பார்க்கவில்லை என்று பகவான் சொல்லுகிறுர்." (சங்கரர்). (22)

---

௨௩. 𑌯𑌦𑌿 𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

23. யதி-ஹி-அஹம்-ந-வர்தேயம் ஜாது-கர்மணி அதந்த்ரித: ।
மம-வர்த்ம-அநுவர்தந்தே-மநுஷ்யா:-பார்த-ஸர்வஶ: ॥

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! குந்திபுத்திரா!
𑌹𑌿	ஏனென்றுல்,
𑌅𑌹𑌂	நான்
𑌜𑌾𑌤𑍁	எப்பொழுதாயினும்
𑌅𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃	சோம்ப வில்லாதவனுய்
𑌕𑌰𑍍𑌮𑌣𑌿	கர்மத்தில்
𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌯𑌦𑌿	பிரவிருத்திக்காமற் போனேனேயானுல
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃	மனிதர்கள்
𑌸𑌰𑍍𑌵𑌶𑌃	எல்லாவிதத்திலும்
𑌮𑌮	என்னுடைய
𑌵𑌰𑍍𑌤𑍍𑌮	மார்க்கத்தையே (வழியையே)
𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇	அனுஸரிப்பார்கள்.

ஓ! குந்திபுத்திரா! நான் ஒரு காலத்திலாவது சோம்ப லில்லாமல் ஜாக்கிரதையாய் (சாஸ்திர விதியை விட்டுப் பிசகாமல்) கர்மத்தில் பிரவிருத்திக்காமற்போனேனேயாகில் மனிதர்கள் எல்லா விதத்திலும் பிராணிகளுக்கெல்லாம் மேலாக இருக்கின்ற என்னுடைய மார்க்கத்தை (நான் எப்படி நடக்கிறேனே அவ்விதமாய்) அனுஸரிப்பார்கள்.

(1) வர்தேயம்-என்கிற பரஸ்மை பதப் பிரயோகத்தை ஆர்ஷமாக வைத்துக்கொள்ளலாம். அல்லது, வர்தே+அயம் என்று இரண்டு பதமாகப் பிரித்து, அயம் என்பதை, அஹம் என்பதோடு சேர்த்து 'அயம் அஹம்' 'இந்த நான்' என்று அர்த்தம் செய்தாலும் செய்யலாம் என்று, வேங்கடநாதர் தாத்பரியம்.

(ஸூ) நான் கர்மத்தில் பிரவிருத்திக்காவிட்டால் மனிதர்கள் ஏன் என்னுடைய மார்க்கத்தை அநுஸரிப்பார்களென்றால், நான் பரமபுருஷனென்று அறியாதவும், அஞ்ஞானிகளுமான ஜனங்கள்: உயர்ந்த குலத்தில் பிறந்தவனும், சக்தி-சாமர்த்தியம்-கீர்த்தி முதலியவைகளினால் பெரியவனென்று எண்ணப்படுகிறவனுமான நானே கர்மஞ் செய்யாமலிருப்பேனேயானால் அதைப் பார்த்து, 'கிருஷ்ணனே கர்மம் செய்யாததனால் நாம் ஏன் செய்யவேண்டும்?' என்று கர்மத்தை விட்டுவிடுவார்களென்பது தாத்பரியம். (23)

உச. உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் ।
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா: ॥

24. உத்ஸீதேயு:-இமே-லோகா:-ந குர்யாம்-கர்ம-சேத்-அஹம் |
ஸங்கரஸ்ய (1) ச கர்தா-ஸ்யாம்-உபஹந்யாம்-இமா:-ப்ரஜா: ||

அஹம்	நான்
கர்ம	கர்மத்தை
ந குர்யாம் சேத்	செய்யாமற்போனால்
இமே லோகா:	இந்த லோகங்கள்
உத்ஸீதேயு:	(கர்ம லோபத்தினால்) அழிந்துபோகும்;
ஸங்கரஸ்ய	(ஜாதிக்) கலப்புக்கும்
கர்தா	கர்த்தாவாய்
ஸ்யாம்	ஆவேன்;
இமா: ப்ரஜா:	இந்த ஜனங்களை
உபஹந்யாம்	கெடுத்தவன் ஆவேன்.

நான் கர்மத்தைச் செய்யாமற்போவேனேயானால் இந்த லோகத்து ஜனங்கள் கெட்டுப்போவார்கள்; ஜாதியின் கலப்புக்குக் காரணம் ஆவேன்; அந்தக் காரணத்தினால் இந்த ஜனங்களைக் கெடுத்தவனாகவும் ஆவேன்.

---

(1) "ஸங்கரஸ்ய—கர்மத்தினுல் வருணுசிரம தர்மங்கள் நிலைத்திருக்கிறபடியால் கர்மம் செய்யாவிட்டால் வருணுசிரம தர்மம் கெட்டு அதனுல் ஜாதிக் கலப்பு உண்டாகும்" (இராகவேந்திரர்).

(சங்கரர்) "அவ்வாறு நான் கர்மத்தை அனுஷ்டிக்காமற் போனுல் வரும் கெடுதி என்ன?' என்றுல், நான் கர்மத்தைக் கிரமமாய் அநுஷ்டிக்காமல் விட்டுவிடுவதால் அந்தப்படி மற்றவர்களும் விட்டுவிடுவார்கள்; அப்பொழுது உலகம் நிலைபெறுவதற்குக் காரணமான கர்மம் இல்லாமையால் இந்த உலகங்கள் எல்லாம் கெட்டுவிடும்; அல்லாமலும், ஜாதிக் கலப்புக்கும் காரணம் (செய்பவனும்) ஆவேன்; அந்தக் காரணத்தினுல் இந்தப் பிராணிகளைக் கெடுத்தவன் ஆவேன். 'பிராணிகளை அநுக்கிரகிக்கப் பிரவிருத்தித்த நான் அவைகளுக்குக் கெடுதி செய்வேன்' என்பது ஈசுவரனுன எனக்குத் தகாததாகும்."

(ராமானுஜர்) "பிரஜைகளை அநுக்கிரகிக்கப் பிரவிருத்தித்திருக்கிற எனக்கு ஜனங்கள் கெட்டுப்போகும்படியான இப்படிப்பட்ட காரியம் செய்வது தகுந்ததல்ல" என்பது கருத்து.

(ஸூா) அர்ஜுனன் இதன் முதல் அத்தியாயத்தில் 'குல ஸ்திரீகள் கெட்டுப்போனுல் ஜாதிச் சேர்க்கை யுண்டாகும்,' என்று சொன்னுன். அதனுல்மாத்திரம் ஜாதிச் சேர்க்கை யுண்டாகிறதாக நினைக்கவேண்டாம்; வருணுசிரம தர்மம் இல்லாமற் போவதனுலும் ஜாதிச் சேர்க்கை யுண்டாகு மென்று சொன்னதாகவும் கொள்ளலாம். (24)

---

௨௫. 𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥

25. ஸக்தா꞉-கர்மணி-அவித்வாம்ஸோ யதா-குர்வந்தி-பாரத ।
குர்யாத்-வித்வாந்-ததா-அஸக்த꞉ சிகீர்ஷு꞉ லோகஸங்க்ரஹம் ॥

𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! பரதவம்சத்திற் பிறந்தவனே!
𑌅𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃	அஞ்ஞானிகள்
𑌕𑌰𑍍𑌮𑌣𑌿	கர்மத்தில்
𑌸𑌕𑍍𑌤𑌾𑌃	பலவிருப்ப முள்ளவர்களாய்
𑌯𑌥𑌾	எப்படி
(𑌕𑌰𑍍𑌮) 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿	கர்மத்தைச் செய்கிறுர்களோ
𑌤𑌥𑌾	அப்படியே
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍	ஆத்மஞானமுள்ள ஞானியானவன்
𑌅𑌸𑌕𑍍𑌤𑌃	பலனை யிச்சிக்காதவனுய்

லோகஸங்ரஹம்	லோக ஸங்கிரகத்தை (நன்மையை)
சிகீர்ஷு:	செய்ய இச்சித்தவனாய்
குர்யாத்	கர்மத்தைச் செய்யவேண்டும்.

ஓ! பாரதா! ஆத்மஞான மில்லாத அஞ்ஞானிகள் கர்மத்தைப் பல விருப்ப முள்ளவர்களாய் எப்படிச் செய்கிறார்களோ, அப்படியே ஆத்ம ஞானமுள்ள ஞானியும் பலனை யிச்சிக்காதவனாய் உலகத்தை நல்வழிப் படுத்த விரும்பிக் கர்மத்தைச் செய்யவேண்டும்.

(சங்கர பாஷ்யம்) "நீயாவது, அல்லது வேறொருவனாவது என்னைப் போல ஆத்மாவை அறிந்தவனாகவும், தனக்குப் புருஷார்த்தம் கைகூடி விட்டதென்னும் புத்தியையுடையவனாகவும் இருந்தால், அப்படிப்பட்டவ னுக்குச் செய்யவேண்டியது ஒன்றும் இல்லாமலிருந்தாலும் அவனும் பிறருக்கு அனுக்கிரகத்தையே செய்யவேண்டும் என்பது சொல்லப்படு கிறது. 'நான் செய்கின்ற இந்தக் கர்மத்தின் பலன் எனக்கு உண்டாகும்' என்கிற இவ்வித பற்றுள்ளவர்கள், கர்மங்களின் பயனை எதிர்பார்ப்பவர்க ளான அஞ்ஞானிகள். அவர்கள் எவ்வாறு கர்மங்களைச் செய்கிறார்களோ அவ்வாறே ஆத்மஞானி பற்றில்லாதவனாய் அவற்றைச் செய்யவேண்டும். அவன் அஞ்ஞானி செய்கிறதுபோல எதற்காகச் செய்கிறான்? உலக நன்மைக்காக. அஞ்ஞானி பலனை உத்தேசித்துக் கர்மங்களை எவ்வளவு சிரத்தையுடன் செய்கிறானோ அவ்வளவு சிரத்தையுடன் ஞானி லோக சங் கிரஹத்தை உத்தேசித்துச் செய்வான்" என்பது கருத்து.

(ராமானுஜர்) (இந்தச் சுலோகமும் அடுத்த சுலோகமும் சேர்த்து ஒரே அந்வயமாய்ச் செய்திருக்கிறதினால் அந்த இரண்டு சுலோகங்களின் அர்த்தமும் இங்கேயே விவரிக்கப்படுகிறது.)

"ஆத்மாவலோகன மில்லாதவர்களாயும், மோக்ஷ அபேக்ஷை யுள்ள வர்களாயும், கர்மத்தில் சிரத்தை யுள்ளவர்களாயும், கர்மத்தைச் செய்து கொண்டே யிருக்கிறவர்களாயு முள்ள ஜனங்களுக்குக் கர்மத்தைக் காட்டிலும் ஆத்மாவலோகனத்திற்கு வேறே ஸாதன மிருப்பதாகத் தோற்றுவித்துப் புத்தி பேதத்தை யுண்டாக்குதல் கூடாது. புத்திபேத முண்டாகக் காரண மென்னவென்றால், ஆத்மாவலோகன சக்தனானவ னுக்குக் கர்மஞ் செய்வதனால் பிரயோஜனம் ஒன்று மில்லை. ஆதலால், இவன் கர்மஞ் செய்கிறதில்லை. அஞ்ஞானியானவன், ஆத்மாவலோகன முள்ளவன் கர்மத்தை விட்ட காரணம் இன்னதென்று தெரியாமல் தானும் கர்மத்தை விட்டுவிடுகிறான். ஆத்மாவலோகன முண்டாகவு

மில்லை; கர்மஞ் செய்வதனு லுண்டாகும் பிரயோஜனமு மில்லை; இரண்டுங் கெட்டவனுக ஆய்விடுவான். ஆகையால், ஞானிகள், இப்படிப்பட்ட அவிவேகிகள் கெட்டுப்போகாம லிருத்தற்பொருட்டுக் கர்மத்தில் பற்றுள்ள அவர்கள் கர்மத்தையாவது கிரமமாய்ச் செய்துவருவதற்காகத் தாங்கள் செய்தும், செய்வித்தும் காட்டவேண்டும்'' என்பது தாத்பரியம்.(25)

---

௨௬. 𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌂।
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍॥ (1)

26. ந-பு3த்3தி4பே4த3ம் (2)-ஜநயேத்-அஜ்ஞாநாம்-கர்மஸங்கி3நாம் |
ஜோஷயேத்-ஸர்வகர்மாணி-வித்3வாந்-யுக்த:(3)-ஸமாசரந் ||

𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍	ஞானியானவன்
𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂	அஞ்ஞானிகளான
𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌂	கர்மத்திற் பற்றுள்ளவர்களுக்கு
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂	புத்தி பேதத்தை (கலக்கத்தை)
𑌨 𑌜𑌨𑌯𑍇𑌤𑍍	உண்டாக்குதல் கூடாது;
𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿	ஸகல கர்மங்களையும்
(𑌸𑍍𑌵𑌯𑌂) 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃	தானே யோகயுக்தனய்
𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍	நன்றாய் அநுஷ்டித்துக்கொண்டு
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍	(அவர்களைக்கொண்டும்) செய்வித்தல் வேண்டும்.

ஞானியானவன், அஞ்ஞானிகளான கர்மத்தில் பற்றுள்ளவர்களுக்குப் புத்தி பேதத்தை உண்டாக்குதல் கூடாது (என்றால், அவர்களுக்குக் கர்மத்தைச் செய்து பலனை அனுபவிக்கவேண்டுமென் றிருக்கிற நிச்சய புத்தியைக் கலங்கும்படி செய்தல் கூடாது). மற்று என்ன செய்ய வேண்டு மென்றால், ஸகல கர்மங்களையும் தான் யோகயுக்தனுக இருந்து நன்றாய் அநுஷ்டித்துக்கொண்டு, (அதே கர்மங்களை) அவர்களையும் அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டும்.

---

(1) இந்தச் சுலோகத்தை, கர்க ஸம்ஹிதை, மாதுரிய கண்டம், அத். 1, சுலோ. 47-ல் காண்க.

(2) 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌮𑍍:—'ஆத்மா கர்த்தா அல்ல, போக்தா அல்ல, எல்லாம் ப்ரஹ்மம்' என்கிற இவை போன்ற உபதேசங்களால், "நான் இந்தக் கர்மத்தைச் செய்தல் வேண்டும்; இந்தக் கர்மத்தின் பலனை அனுபவித்தல் வேண்டும்" என்று சாதாரண ஜனங்களுக்கு இருக்கிற நிச்சய புத்திக்குச் சலநத்தை (கலக்கத்தை) உண்டாக்குவது.

(3) "யுக்தஃ—தேகாதிகளில் அபிமானமற்ற அறிவுள்ளவனாய், அதாவது, யோக நிஷ்டனாய்," என்று (சங்கரானந்தர்.)

(சங்கர பாஷ்யம்) "இவ்வாறு லோகஸங்கிரஹத்தைச் செய்யக் கருதியவனும் ஆத்மாவை அறிந்திருப்பவனுமான எனக்காவது, அப்படிப்பட்ட வேறொருவனுக்காவது உலகத்தை நல்வழிப்படுத்துவதற்காகத் தான் நடந்து காட்டுவதைத் தவிர்த்து ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஆகவே, ஆத்மாவை அறிந்த அவனுக்கு இந்தச் சுலோகத்தில் கண்டபடி உபதேசிக்கப்படுகிறது. கர்மத்தில் பற்றுள்ள அஞ்ஞானி: "நான் இந்தக் கர்மத்தைச் செய்து அதன் பயனை அநுபவிக்கவேண்டும்" என்கிற நிச்சய புத்தி உடையவனாக இருக்கிறான். இவனுடைய இந்த உறுதியான நம்பிக்கையை ஞானியானவன், போக்கடித்தல் கூடாது. மற்று அவன் செய்யவேண்டிய தென்னவென்றால் அஞ்ஞானிகளுடைய அதே கர்மத்தைத் தானும் ஊக்கத்துடன் நன்றாக அநுஷ்டித்துக்கொண்டு அவர்களையும் அக் கர்மங்களை அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டும்." (26)

உஎ. ப்ரக்ருதேஃ க்ரியமாணானி கு³ணைஃ கர்மாணி ஸர்வஶஃ ।
அஹங்காரவிமூடா⁴த்மா கர்தாஹமிதி மந்யதே ॥

27. ப்ரக்ருதேஃ(1)-க்ரியமாணானி-கு³ணைஃ-கர்மாணி-ஸர்வஶஃ ।
அஹங்காரவிமூடா⁴த்மா-கர்தா-அஹம்-இதி-மந்யதே ॥

ப்ரக்ருதேஃ	பிரகிருதியின்
கு³ணைஃ	குணங்களால்
ஸர்வஶஃ	எல்லா விதங்களிலும்
க்ரியமாணானி	செய்யப்படுகின்ற
கர்மாணி	கர்மங்களை
அஹங்காரவிமூடா⁴த்மா	அஹங்காரத்தால் மோஹமடைந்த அந்தக்கரணமுடையவன்
அஹம் கர்தா இதி	நான் செய்கிறவன் என்று
மந்யதே	நினைக்கிறான்.

பிரகிருதியின் குணங்களால் எல்லா விதங்களிலும் செய்யப்படுகின்ற கர்மங்களை, அஹங்காரத்தால் மயங்கியுள்ள மனதை (அந்தக்கரணத்தை) உடையவன் "நான் கர்த்தா" அதாவது, "நான் செய்கிறவன்" என்று நினைக்கிறான்.

(1) "ப்ரக்ருதே:—பரமேச்வர சக்தியைப் 'பிரகிருதி' என்றும், 'மாயை' என்றும் சொல்வது" (வேங்கடநாதர்.)

(சங்கர பாஷ்யம்) ஞானி அஞ்ஞானி ஆகிய இருவரும் கர்மம் செய்தாலும் ஆத்மாவை அறியாத அஞ்ஞானியானவன் கர்மத்தில் எப்படிப் பற்றுக்கொள்ளுகிறான் என்பது இதில் சொல்லப்படுகிறது.

'ப்ரகிருதி' அல்லது பிரதானம் என்பது, ஸத்வம்-ரஜஸ்-தமஸ் என்கிற குணங்களுடைய, ஸமநிலை; அதாவது, ஏற்றத்தாழ்வின்றிச் சேர்ந்திருக்கும் அவஸ்தை. அந்தப் பிரகிருதியின் குணங்கள் என்றால், விகாரங்கள்; அதாவது, சரீரமாகவும், இந்திரியங்களாகவும் தோன்றுதல். இவைகளாலே லௌகிகமாகவும், வைதிகமாகவு முள்ள எவ்வித கர்மங்களும் செய்யப்படுகின்றன.

'சரீர இந்திரியங்களின் சேர்க்கையே ஆத்மா' என்னும் எண்ணம், அஹங்காரம்; இந்த அஹங்காரத்தால் பல வகையாக மயங்கியுள்ள அந்தக்கரண முடையவன்; அதாவது, சரீர இந்திரியங்களுடைய தன்மையை யுடையவனும், தன்னை அத் தன்மையனாகவே நினைப்பவனும், சரீர இந்திரியங்களே தான் என்று எண்ணுகிற இவன் (என்றால், தேகேந்திரியங்கள் தன்னிடத்தி லிருப்பனவாகவும் அவற்றிற்கும் தனக்கு முள்ள வித்யாஸத்தை உணராது அவைகளே தான் என்று நினைப்பவன்), அஞ்ஞானத்தினால் ஆத்மாவினிடத்துக் கர்மங்களை ஏற்றிக்கொண்டு, அந்தந்தக் கர்மங்களுக்குக் 'கர்த்தா நான்' என்று நினைக்கிறான்." (18-வது அத். 14-15-வது சுலோகங்களில் கர்மத்தின் ஐந்து காரணங்கள் சொல்லியிருப்பதைப் பார்க்க.)

(இராகவேந்திரர்) "ப்ரக்ருதே:=மாயையினுடைய, கு³ணை:=சத்வாதிகுணங்களைக் கொண்டு, ப்ரக்ருதே:=ஜீவ சுபாவத்தினுடைய, கு³ணை:=குணங்களினாலே, எனறால் தத்துவஞானம், மித்தியா ஞானம், மிசிரஞானம் ஆகிய இவைகளினாலே, ப்ரக்ருதே:=பரமாத்மாவினுடைய, கு³ணை:=இச்சா சக்திமுதலிய குணங்களினாலே," என்று இப்படி மூன்று விதமாய் அர்த்தம் செய்திருக்கிறார். கர்மங்களென்றால் சாது கர்மம், மிசிர கர்மம், அசாது கர்மம். (27)

உஅ. தத்த்வவித்து மஹாபா³ஹோ கு³ணகர்மவிபா⁴க³யோ: ।
கு³ணா கு³ணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே ॥

28. தத்த்வவித்-து-மஹாபா³ஹோ-கு³ணகர்மவிபா⁴க³யோ: ।
கு³ணா:-கு³ணேஷு-வர்தந்தே-இதி-மத்வா-ந-ஸஜ்ஜதே ॥

ஹே மஹாபாஹோ	ஓ! பெரிய கைகளையுடையவனே!
குணகர்மவிபாகயோ:	குணங்களுடையவும் கர்மங்களுடையவும் பிரிவுகளின்
தத்வவித்து	யதார்த்தத்தைத் தெரிந்தவனோ:
குணா:	'இந்திரியங்களாகிய குணங்கள்
குணேஷு	(சப்தாதி) விஷயங்களாகிய குணங்களில்
வர்த்தந்தே	பிரவர்த்திக்கின்றன'
இதி	என்று
மத்வா	தெரிந்துகொண்டு
ந ஸஜ்ஜதே	பற்றுக் கொள்வதில்லை.

ஓ! பெரிய கைகளையுடைய அர்ஜுனா! குணங்களையுடைய பிரிவும், அவைகளின் தொழில்களாகிய கர்மங்களினுடைய பிரிவும் ஆகிய இவற்றின் உண்மையை அறிந்தவனோ, அதாவது ஞானியோ,'இந்திரிய ரூபங்களாகிய குணங்கள் அவைகளின் விஷயங்களாகிய சப்தாதிரூபமான குணங்களில் பிரவிர்த்திக்கின்றன. ஆத்மா அன்று,' எனத் தெரிந்துகொண்டு,(கர்மங்களில்) பற்று இல்லாதவனாக இருக்கிறான்.

(ஸ்ரீதரர்) "குணகர்மங்களுடைய விபாகத்தின் வாஸ்தவத்தை யறிந்தவனென்றால், 'சத்வம், ரஜஸ், தமஸ் என்கிற குணங்கள் தன்னுடையவையல்ல; ஆத்மாவாகிய தான் அந்தக் குணங்களு மல்ல; கர்மம் தன்னுடையது மல்ல; தான் கர்மங்களைச் செய்கிறவனு மல்ல; குணங்கள், கர்மங்கள் இவைகளுக்குத் தான் வேறானவன் என்பதைத் தெரிந்தவன்தான் குணகர்ம விபாகங்களைத் தெரிந்தவன்,'' என்பது தாத்பர்யம்.

(இராகவேந்திரர்) 'குணகர்மவிபாகயோ:-குணாநாம் = பகவானுடைய இச்சைமுதலிய குணங்களுக்கும், பிரகிருதியின் சத்வாதி குணங்களுக்கும், பிரகிருதி விகாரமான தேகேந்திரிய மனதுகளுக்கும் பரஸ்பர பேதத்தையும், கர்மணாம் = பகவத்சிருஷ்டிமுதலிய கர்மங்களுக்கும், பகவத் அதீனனாகிய ஜீவனால் செய்யப்படும் கர்மங்களுக்கும் பரஸ்பர பேதத்தையும், தத்வவித்து = யதார்த்தமா யறிந்தவன், குணா: = பகவத் இச்சாதி குணங்கள், குணேஷு = ஜீவசுவபாவ கர்மாதிகளிலும், குணா: = இந்திரியங்கள் பகவத் இச்சாநுசாரமாய், குணேஷு = சப்தாதி விஷயங்களிலேயும், வர்த்தந்தே = பிரவிர்த்திக்கின்றன" என்பது தாத்பர்யம். (28)

---

௨௯. 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌗𑍁𑌣𑌸𑌮𑍍𑌮𑍂𑌢𑌾𑌃 𑌸𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑍇 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।
𑌤𑌾𑌨𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌦𑍋 𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌨𑍍𑌨 𑌵𑌿𑌚𑌾𑌲𑌯𑍇𑌤𑍍 ॥

29. ப்ரக்ருதேர்-குணஸம்மூடா:-ஸஜ்ஜந்தே-குணகர்மஸு ।
தாந்-அக்ருத்ஸ்நவிதோ-மந்தாந்-க்ருத்ஸ்நவித்-ந-விசாலயேத் ॥

(𑌯𑍇)	(எவர்கள்)
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃	பிரகிருதியினுடைய
𑌗𑍁𑌣𑌸𑌮𑍍𑌮𑍂𑌢𑌾𑌃 (𑌸𑌨𑍍𑌤𑌃)	குணங்களினால் நன்றாய் மோஹமடைந்தவர்களாய்க்கொண்டு
𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌸𑍁	குணங்களின் கர்மங்களிலே
𑌸𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑍇	பற்று வைக்கிறார்களோ
𑌤𑌾𑌨𑍍	அந்த
𑌅𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌦𑌃	முற்றும் உணராத
𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑍍	மந்த புத்தியோரை
𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌤𑍍	எல்லாம் உணர்ந்த ஆத்மஞானி
𑌨 𑌵𑌿𑌚𑌾𑌲𑌯𑍇𑌤𑍍	கலங்கும்படி செய்தல் கூடாது.

எவர்கள் பிரகிருதியினுடைய குணங்களால் நன்றாக மதி மயங்கினவர்களாய்க் குணங்களுடைய கர்மங்களிலே பற்று வைக்கிறார்களோ அந்த மந்த புத்தியோரை (அஞ்ஞானிகளை) எல்லாம் உணர்ந்த ஆத்மஞானியானவன் கலங்கும்படி செய்யக்கூடாது. (அதாவது, அஞ்ஞானத்தினால், "கர்மத்தைச் செய்கிறோம், அதனுடைய பயனைப் பெறுவதற்காக" என்று கர்மத்தின் பலனிலே திருஷ்டியுள்ள கர்மப் பற்றுள்ளவர்களுக்குக் கர்மம் செய்வதிலுள்ள நிச்சய புத்தியை மாற்றக்கூடாது என்பது பொருள்.)

(ராமானுஜர்) "𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌤𑍍=ஸகல கர்மமும், பிரகிருதி காரியமென்று அறிந்த ஞானியானவன்: ஆத்ம அநாத்ம ஞான மில்லாத மூடர்களுக்குக் கர்மத்தை விட்டு ஞானமார்க்கத்தில் பிரவிருத்திக்கும்படிபோதிக்கக் கூடாது. ஏனென்றால், மூடனும், அவிவேகியுமான அவனுக்கு ஞான மார்க்கம் ஸித்திக்கவேமாட்டாது. இந்த ஞானியானவன் 'கர்மத்தினால் பிரயோஜன மில்லை' என்று சொன்ன வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு மூடன் கர்மத்தைமட்டும் விட்டுவிடுவான். அதனால் கர்மபலன் உண்டாக ஹேதுவு மில்லை; ஞானஸித்திக்கு யோக்கியனுமன்று; இரண்டும் கெட்டவன் ஆவான். ஆகையால், ஞானியானவன், "கர்மமானது ஆத்மதரிசனத்திற்குச் சாதனமானது" என்றும், "அதை விட்டால் உனக்கு வேறே

பிரயோஜனங் கிடைக்கமாட்டாது" என்றும் சொல்லித் தான் கர்மத்தைச் செய்தும், செய்வித்தும் காட்டவேண்டும்," என்பது தாத்பரியம்.

(மத்வாசாரியர்) "இந்திரியங்கள், சப்தாதி விஷயங்கள், சத்வ ரஜஸ் தமஸ்கள், முக்கியம் அல்லாதவைகளெவையோ அவைகள் முதலிய இவைகளுக்கெல்லாம் குணங்கள் என்று பெயர்."

(ஸூ) மாயையினுடைய குணங்களினாலே மூடர்களாயிருக்கிற எவர்கள், இந்திரியங்களினுடைய வியாபாரங்களில் அபிமானம் வைக்கிறார்களோ, ஒன்றுந் தெரியாத அறிவினர்களாகிய அவர்களை ஆத்மஞானியானவன் (கர்மத்தை விட்டு) மாறி நடக்கும்படி செய்யக்கூடாது. (29)

---

௩௦. 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾 ।
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 ॥

30. மயி(1)ஸர்வாணி-கர்மாணி-ஸந்ந்யஸ்ய(2)-அத்யாத்மசேதஸா(3)|
நிராஶீ꞉-நிர்மமோ-பூத்வா-யுத்யஸ்வ-விகதஜ்வர꞉ ||

(𑌪𑌦𑌂)	(ரீ)
𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾	ஆத்மாவைப்பற்றிய மனதோடு
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿	சகல கர்மங்களையும்
𑌮𑌯𑌿	என்னிடத்தில்
𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯	அர்ப்பித்து,
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌃	ஆசை அற்றவனாய்
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃	மமகாரம் அற்றவனாய்
𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾	துயரத்தை விட்டவனாய் இருந்துகொண்டு
𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵	யுத்தத்தைச் செய்.

" (ஓ! அர்ஜுனா!) நீ, ஸகல கர்மங்களையும் என்னிடத்தில் ஒப்பிவைத்து, கர்மங்களின் பலன்களை எனக்கு அர்ப்பணஞ் செய்து, அதாவது, 'நான் பரமாத்மாவினுடைய ஏவற்காரனாக ஸகல கர்மங்களையுஞ் செய்து பரமாத்மாவுக்கு அர்ப்பணஞ் செய்யவேண்டியவன்,' என்கிற இவ் விவேக புத்தியுடன் பலாபேக்ஷையின்றியும், 'இது எனது' என்கிற மமகாரத்தை விட்டும், வியஸனத்தை விட்டவனாயிருந்துகொண்டும் யுத்தத்தைச் செய்."

---

(1) "மயி-எல்லாவற்றினுடைய ஆத்மாவாகவும், ஸர்வஜ்ஞனாகவும், பரமேச்வரனாகவு முள்ள கடவுளாகிய வாஸுதேவனான என்னிடத்து" (சங்கரர்). "பரமாத்மாவாகிய என்னிடத்தில்" (ராமாநுஜர்).

(2) "ஸந்ந்யஸ்ய-நிக்ஷிப்ய ஒப்பிவைத்து, அதாவது அர்ப்பணம் செய்து" (சங்கரர்). "பகவானே என்னுடைய இருதயத்திலிருந்து செய்கிறார் என்கிற எண்ணத்துடன் செய்து அவருக்கு ஒப்பிவைத்து" (இராகவேந்திரர்).

(3) "அத்யாத்மசேதஸா-'நான் செய்பவன்; ஈசுவரனுக்காகத் தொண்டன்போலக் கர்மத்தைச் செய்கிறேன்' என்று விவேக புத்தியோடு" (சங்கரர்). "கிருஷ்ணசுவாமியானவர் சர்வோத்தமனாயிருக்கிற பரமாத்மாவென்கிற புத்தியினாலே," (இராகவேந்திரர்).

(ஸ்ரீ) ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைய விரும்புகிற அஞ்ஞானியாகிய கர்மத்திற்கு உரியவன், கர்மத்தை எப்படிச் செய்யவேண்டு மென்பது இந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்டது. சுருதிகளினால் உண்டாகிய ஆத்மஸ்வரூப விஷயமான ஞானத்தோடு, அதாவது, தான் பகவானுக்குச் சரீர மென்றும், பகவானால் பிரவிர்த்திக்கச் செய்யப்படுகிறவ னென்றும் நினைத்து, 'எல்லோருக்கும் ஈசுவரனும், நியமிப்பவனும், சேஷியும் அதாவது ஆள்பவனும் ஆகிய பரம புருஷனே தம்மவனாகிய ஆத்மாவினால் தனது உபகரணம் (சாதன சாமக்கிரியை)களினால் தன்னுடைய ஆராதனைக்காகத் தானாகவே தனது கர்மங்களைச் செய்வித்துக் கொள்ளுகிறார்' என்று நம்பி, மமகாரம் முதலியன அற்று, 'பரம புருஷனே கர்மங்களினால் ஆராதிக்கப்பட்டு ஸம்ஸார பந்தத்தினின்று விடுவிப்பார்,' என்று எண்ணிக் கர்மம் செய்யப்படவேண்டும்,' என்பது, விசிஷ்டாத்வைதபரமான தாத்பரியம். (30)

---

௩௧. யெமெ மதமிஉம் நித்ய உநுதிஷ்ஷந்தி மாநவாஃ ।
ஶ்ரத்தாவந்தோ நஸூயந்தோ முச்யந்தெ தெபி கர்மபிஃ ॥

31. யே-மே-மதம்-இதம்-நித்யம்-அநுதிஷ்டந்தி-மாநவாஃ ।
ஶ்ரத்தாவந்தஃ-அநஸூயந்தஃ-முச்யந்தே-தே-அபி-கர்மபிஃ ॥

யெ மாநவாஃ	எந்த மனிதர்கள்
மெ	என்னுடைய
இதம் மதம்	இந்த மதத்தை (அபிப்பிராயத்தை)
ஶ்ரத்தாவந்தஃ	சிரத்தையுள்ளவர்களாயும்
அநஸூயந்தஃ	அசூயை யில்லாதவர்களாயும்
நித்யம்	எப்பொழுதும்
அநுதிஷ்டந்தி	அநுசரித்து நடக்கிறார்களோ
தெபி	அவர்களுங்கூட

கர்மபி:　　　　கர்மங்களால்
முச்யந்தே　　　　விடப்படுகிறார்கள்.

எந்த மனிதர்கள் என்னுடைய இந்த மதத்தை (அபிப்பிராயத்தை, கொள்கையை) சிரத்தை விசுவாசத்தோடும் (நம்பிக்கையோடும்) தூஷிக்காமலும், எப்பொழுதும் அநுஸரித்தும் நடக்கிறார்களோ அவர்களும் கூடத் தர்மாதர்மங்கள் என்னும் பெயருடைய கர்மங்களினால் (கர்ம பந்தத்திலிருந்து) விடப்படுகிறார்கள்.

(சங்கரர்) "அஞ்ஞானி கர்மத்தைச் செய்யவேண்டும்' என்று நான் நியாயத்தோடு சொல்லிய என்னுடைய இந்தக் கொள்கையை அவ்வாறு அநுஷ்டிப்பவர்கள் படிப்படியாக முக்தி பெறுகிறார்கள் என்பது சொல்லப்படுகிறது. ஸகலப் பிராணிகளுடைய ஹிருதயத்தில் வஸிப்பவரும், பரம குருவுமாகிய வாஸுதேவனை என்னைப்பற்றி, அறிவின்மையினாலாவது, அஸூயையினாலாவது 'என்னையே அடைக்கலமாகக் கொள் என்று பகவான் தற்புகழ்ச்சி செய்கின்றார்' என்று தூஷிக்காமல், நம்பிக்கையோடு என்னுடைய மேற்சொன்ன மதத்தை அநுஷ்டிக்கிறார்களோ, இவர்களும் தர்மாதர்மம் என்னும் பெயரையுடைய கர்மங்களால் விடப்படுகிறார்கள்." ('அஸூயை' என்பது குணமாய் உள்ளதினிடத்துத் தோஷத்தை ஆரோபித்தல். 'சிரத்தை' என்பது குருவினாலும், சாஸ்திரங்களினாலும் இஹபர விஷயமாகச் சொல்லப்பட்ட உபதேசத்தில் பூர்ணமான நம்பிக்கை வைத்து நடப்பது).

(ராமாநுஜர்) "தேபி—அவர்களுங்கூட" என்கிற வாக்கியத்திலுள்ள, 'அபி' சப்தமானது பின்னுஞ் சிலரைச் சேர்ப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யாரென்றால், சாஸ்திராதிகாரிகளாகிய எந்த மனிதர்கள், 'இந்தக் கீதாசாஸ்திரம்தான் சாஸ்திரார்த்தம்' என்று தெரிந்து அதின்படி அநுஷ்டிக்கிறார்களோ அவர்களும், அல்லது அநுஷ்டிக்காவிட்டாலும் இந்த சாஸ்திரார்த்தத்தைத் தெரிந்து அதில் பக்தி சிரத்தை வைக்கிறார்களோ அவர்களும்,பக்தி சிரத்தை யில்லாவிட்டாலும் இந்த சாஸ்திரத்தை நிந்திக்காமலிருக்கிறார்களோ அவர்களும், அநாதியாய் வந்திருக்கிற ஸகல கர்மங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள்."

(ஸ்ரீதர) "மதம் இதம்='இந்த அபிப்பிராயம்' என்பது இதற்கு முந்திய சுலோகத்தில் சொன்ன அபிப்பிராயமென்று தோற்றுகிறது. அதாவது, கர்மங்களை ஈசுவரார்ப்பணமாகச் செய்து பலனை ஈசுவரனுக்கு ஒப்புவித்துவிட்டுப் பலனைக் கோராமலும், அபிமான மில்லாமலு மிருப்பதே. (31)

27

௩௨. 𑌯𑍇 𑌤𑍍𑌵𑍇𑌤𑌦𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌷𑍍𑌟𑌾𑌨𑌚𑍇𑌤𑌸𑌃 ॥

32. யே-து-ஏதத்-அப்யஸூயந்த:-ந-அநுதிஷ்டந்தி-மே-மதம்(1)।
ஸர்வஜ்ஞாநவிமூடா:-தாந் வித்தி-நஷ்டாந்-அசேதஸ: ॥

𑌯𑍇 𑌤𑍁	மற்று எவர்கள்
𑌮𑍇	என்னுடைய
𑌏𑌤𑌤𑍍 𑌮𑌤𑌮𑍍	இந்த (மேற்சொன்ன) அபிப்பிராயத்தை
𑌅𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑌃	துவேஷிக்கிறவர்களாய்
𑌨 𑌅𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿	அநுஸரித்து நடக்கிறதில்லையோ
𑌅𑌚𑍇𑌤𑌸𑌃	அவிவேகிகளாயும்
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌨𑍍	ப்ரஹ்மவிஷயமாயும் ஸகலகர்மவிஷயமாயுமுள்ள ஞானத்தில் மூடர்களாயுமிருக்கிற
𑌤𑌾𑌨𑍍	அவர்களை
𑌨𑌷𑍍𑌟𑌾𑌨𑍍	கெட்டுப்போனவர்களாக
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿	அறி.

மற்று எவர்கள் என்னுடைய இந்த அபிப்பிராயத்தைத் துவேஷிக்கிறவர்களாய்க் கொண்டு அநுஸரிக்கிறதில்லையோ, அவிவேகிகளாயும்-ப்ரஹ்மவிஷயமாயும்-ஸகல கர்மவிஷயமாயுமுள்ள ஞானமில்லாத மூடர்களாயு மிருக்கிற அவர்களைக் கெட்டுப்போனவர்களாக அறி. (இவர்கள் முந்திய சுலோகத்தில் சொல்லப்பட்டவர்களுக்கு விபரீதமானவர்கள்.)

---

(1) "மதம்-ஸகல வஸ்துக்களும் என்னுடைய சரீரமானபடியால் என்னையே ஆதாரமா யுடையன என்றும், என்னுடைய சேஷபூதங்களென்றும், என்னாலேயே ஏவப்படுகிறவை யென்றுமுள்ள என் மதத்தை" (ராமாநுஜர்). (32)

---

௩௩. 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌤𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑌪𑌿 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

33. ஸத்ருஶம்-சேஷ்டதே-ஸ்வஸ்யா:-ப்ரக்ருதே:-ஜ்ஞாநவாந்-அபி।
ப்ரக்ருதிம்-யாந்தி-பூதாநி-நிக்ரஹ:-கிம்-கரிஷ்யதி ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌅𑌪𑌿	ஞானமுள்ளவனுங்கூட
𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃	தன்னுடைய
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃	பிரக்ருதிக்கு (ஸ்வபாவத்திற்கு)
𑌸𑌦𑍃𑌶𑌮𑍍	தக்கபடியே

வெஷ்டெத	நடக்கிறான்;
ஹூதாநி	பிராணிகள்
ப்ரக்ருதிம்	ஸ்வபாவத்தை (இயற்கையை)
யாந்தி	அநுஸரிக்கின்றன
நிக்ரஹ:	(அதைத்) தடுப்பது
கிம் கரிஷ்யதி	(இவர்களுக்கு) என்ன செய்யும்?

ஞானியுங்கூடத் தன்னுடைய ஸ்வபாவத்திற்கு, அதாவது, பூர்வ ஜன்ம வாசனைக்குத் தக்கபடியே அநுஸரித்து நடக்கிறான். இவ்வாறு எல்லாப் பிராணிகளும் தத்தம் ஸ்வபாவத்தை அநுஸரித்துச் செல்லுகின்றமையால, அதை சாஸ்திரமாவது நானாவது தடுப்பது என்ன பிரயோஜனத்தை உண்டாக்கும்?

(1) "நிக்ரஹ:-சாஸ்திர நிஷேதமானது." (சங்கரர்). "மனோநிக்கிரகமானது, அல்லது தண்டிப்பதானது" (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) "மேற்சொன்ன அவர்கள் எந்தக் காரணத்தினால் உம்முடைய மதத்தை அநுஷ்டியாமல் பரதர்மங்களை அநுஷ்டிக்கிறார்கள்? ஸ்வதர்மத்தையும் அநுஸரிப்பதில்லை? உமக்குப் பிரதிகூலமாக நடப்பவர்கள் உங்களுடைய கட்டளையை மீறுதலாகிய குற்றத்திற்கு ஏன் அஞ்சுவதில்லை?' என்பதற்குக் காரணம் சொல்லப்படுகிறது. ஞானவானுங்கூடத் தன்னுடைய ஸ்வபாவத்திற்கு ஏற்பச் செய்கையைச் செய்கிறான். ஸ்வபாவ மென்பது இந்த ஜன்மத்தின் தொடக்கத்தில் வெளிப்பட்டதாய், முன் ஜன்மங்களிலே செய்யப்பட்ட, தர்ம அதர்மங்களின் ஸம்ஸ்காரம், அதாவது வாஸனை. அதுதான் இந்தச் சுலோகத்தில் 'அவரவர்கள் ப்ரகிருதி' என்று சொல்லப்பட்டது. அதற்கு ஏற்பவே, ஒவ்வொரு பிராணியும், ஞானமுள்ளவனுங்கூட நடக்கிறான். மூடனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே, பிராணிகள் தத்தம் பிரகிருதியைப் பின்பற்றுகின்றன. நானாவது, வேறொருவனாவது அதனைத் தடுத்து ஒடுக்குதல் என்ன செய்யும்? அறிவுள்ளவனுங்கூடப் பூர்வஜன்ம வாஸனைக்கு வசப்பட்டுப் பாவங்களான தீவினைகளை எண்ணாது செய்கிறான் என்க."

(ஆ) 'ப்ரக்ருதே:'—என்கிற பதத்திற்கு: சங்கரர்: இராகவேந்திரர்: "பூர்வகர்ம ஸம்ஸ்காரம்" என்றும், ராமானுஜர்: "பூர்வகர்ம வாசனை" என்றும், ஸ்ரீதரர்: "பூர்வ கர்ம ஸம்ஸ்காரத்திற்கு உட்பட்ட ஸ்வபாவம்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்வயார்த்தத்தில் ஸ்வபாவமென்று போட்டிருக்கிறது. இவைகளெல்லாம் ஒன்றையேதான் குறிக்கின்றன.

அவைகளில் ஒன்றிற்குச் சொல்லும் அர்த்தந்தான் எல்லாவற்றிற்கும் சொன்னதாகும். பூர்வ ஜன்மத்தில் ஒருவன் செய்த புண்ணிய கர்மங்களுக்காகச் சுவர்க்காதி லோகங்களில் சுகபலனையும், பாபங்களுக்காக நரகாதி லோகங்களில் துக்கபலனையும் அடைகிறான். அப்படிச் சுவர்க்க நரகாதி லோகங்களை யடைந்தவன் அந்த லோகங்களில் சுகதுக்கங்களை அனுபவித்து மிச்சமுள்ள கர்மமானது, பாபமோ, புண்யமோ, அதற்குத் தகுந்தபடி இந்த மனுஷ்யலோகத்திலாவது, அல்லது, அதைவிட உயர்ந்த, அல்லது தாழ்ந்தலோகத்திலாவது ஜன்மத்தை எடுக்கிறான். அந்த மிச்சந்தான் 'கர்மசேஷம், கர்மவாசனை, ஸம்ஸ்காரம்,' என்று சொல்லப்படுகிறது. 'அந்த மிச்சமென்பது எப்படிப்பட்டதென்றால், கஸ்தூரி, புனுகு முதலிய வாசனையுள்ள வஸ்துக்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டி முதலானவைகளில் அந்த வஸ்துக்கள் முழுதும் செலவழிந்துவிட்டாலும், பெட்டி முதலானவைகளில் வாசனைமட்டும் எப்படிப் போகாமலிருக்குமோ, எண்ணெய் வைத்திருந்த பாத்திரத்தில் எண்ணெய் செலவழிந்தபிறகும் எண்ணெயின் வாஸனை எப்படியிருக்குமோ, அப்படியே புண்ணிய, பாப கர்மங்களுக்குப் பலன் அநுபவித்த பின்னுங்கூட அந்தக் கர்மங்களின் வாஸனை அவனைத் தொடர்ந்தே அதற்குத் தக்கபடி ஜன்மங்களையும் பிரவிருத்தியையு முண்டாக்குகிறதென்பது சிலர் பக்ஷம்; சங்கரர்: ப்ரஹ்ம ஸூத்திரம்: ௩-௧-அ-க்குச் செய்திருக்கிற பாஷ்யத்தில் 'கர்மசேஷம் என்பது அனுபவிக்காமல் மிச்ச மிருக்கிற ஸஞ்சிதமேயன்றி அனுபவித்த கர்மத்தின் வாசனை யல்ல,'' என்று சொல்லியிருக்கிறார். (33)

---

௩௪. இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ ।
தயோர்ந வசமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ ॥

[தௌ

34. இந்த்ரியஸ்ய இந்த்ரியஸ்ய-அர்த்தே-ராகத்வேஷௌ-வ்யவஸ்திதௌ ।
தயோ:-வசம்-ந-ஆகச்சேத்-தௌ-ஹி-அஸ்ய-பரிபந்திநௌ ॥

இந்த்ரியஸ்ய இந்த்ரியஸ்ய	அந்தந்த இந்திரியத்தினுடைய
அர்த்தே	சப்தாதி விஷயங்களில்
ராகத்வேஷௌ	விருப்பு வெறுப்புக்கள்
வ்யவஸ்திதௌ	அமைந்திருக்கின்றன;
தயோ:	அவைகளுடைய
வசம்	வசத்தை
நாகச்சேத்	அடைதல் கூடாது;
ஹி	ஏனென்றால்,

𑌤𑍌	அவைகள்
𑌹𑍍𑌯𑌸𑍍𑌯	இவனுக்கு
𑌪𑌰𑌿𑌪𑌨𑍍𑌥𑌿𑌨𑍌	சத்துருக்களாக இருக்கின்றன.

விருப்பு வெறுப்புக்கள் அந்தந்த இந்திரியத்தினுடைய விஷயத்திலேயும் அமைந்திருக்கின்றன. அந்த ராகத்வேஷாதிகளின் வசமாக ஒருவனும் ஆதல் கூடாது; அதாவது, அவைகளுக்கு உட்படுதல் கூடாது. ஏனென்றால், அந்த ராகத்வேஷாதிகள் இவனுக்கு (புருஷனுக்கு) விரோதிகளாக இருக்கின்றன.

(சங்கர பாஷ்யம்) "ஸகலப் பிராணிகளும் தத்தம் பிரகிருதிக்கு (ஸ்வபாவத்திற்கு) ஏற்பவே நடப்பனவாகவும், பிரகிருதியற்றதாக ஒன்றும் இல்லை என்பனவாகவும் இருந்தால், அப்பொழுது புருஷப் பிரயத்தினதிற்கு இட மில்லாமற்போவதால், சாஸ்திரம் வீண் என்று அதனைத் தூஷணமாகச் சொல்லவேண்டிவருமே' என்றாலோ, அதற்கு மறுமொழி இந்தச் சுலோகத்தில் பகவானால் சொல்லப்படுகின்றது.

இந்திரியங்களுக்கெல்லாம் விஷயங்களாகிய சப்தாதிகளில், ஒருவனுக்கு இஷ்டமானதிலே விருப்பும், இஷ்ட மில்லாததிலே வெறுப்பும், இவ்வாறாக இந்திரிய விஷயந்தோறும் விருப்பு வெறுப்புகள் அவசியம் உண்டாகின்றன. இங்கேதான் புருஷப்பிரயத்தினத்திற்கும், சாஸ்திர விஷயத்திற்கும் இடமுள்ளதாகச் சொல்லப்படுகிறது. சாஸ்திர விஷயத்தை மேற்கொண்டு நடப்பவன் முதலிலிருந்தே விருப்பு வெறுப்புகளுக்கு உட்படக்கூடாது. ஏனெனில், புருஷனுடைய பிரகிருதி (ஸ்வபாவம்) என்பது ராகத்வேஷங்களின் வழியாகவே, அதாவது, அந்த விருப்பு வெறுப்புக்களை முன்னிட்டே, அப் புருஷனைத் தனது வழிக்கு இழுக்கின்றது.

அப்பொழுது ஸ்வதர்மத்தைக் கைவிடுவதும், பிறர் தர்மத்தைக் கைக்கொள்ளுவதும் உண்டாகின்றன. ஆனால், எப்பொழுது ஒருவன் விருப்பு வெறுப்புக்களை அவற்றின் விரோதியான விவேக புத்தியைக் கொண்டு தடுத்து அடக்குகின்றானோ, அப்பொழுது அப் புருஷன்: சாஸ்திரத்தில் கருத்துள்ளவனாகவே ஆகிறானேயன்றிப் பிரகிருதி வசமாவ தில்லை. ஆகையால், யாவரும் இந்த விருப்பு வெறுப்புக்களுக்கு வசமாகக் கூடாது. ஏனெனில், அவைகள், 'வழியில் திருடர்கள்போல' இப் புருஷனுக்கு நல்வழிக்கு இடையூறு செய்யும் சத்துருக்கள். ஆகவே, சிரேயோமார்க்கத்தை இச்சிப்பவன் சாஸ்திரீயமான விவேக புத்தியினால் நல்லவற்றைத்

தெரிந்து செய்தலும், தீயனவற்றை அறிந்து தவிர்த்தலும்தான் புருஷப் பிரயத்தனத்தினால் ஆகக்கூடியது என்பது கருத்து.''

(ஸ்ரீதரர்) ''ஆசை துவேஷங்களுக்குச் சுவாதீன மாகாமலிருக்க வேண்டுமானால் சாஸ்திரார்த்தங்களை அறிந்து, அநுஷ்டித்து ஈசுவர பஜனை செய்து வரவேண்டியது முக்கியமானது.''

(மத்வர்) ''கர்மவாசனையினால் இழுக்கப்படுகிறவனுக்கு இந்திரிய நிக்கிரகத்தினால் பிரயோஜன மில்லையென்று முன்னமே சொல்லப்பட்டது. காமக்குரோதங்களுக்குச் சுவாதீனமாதல் கூடாதென்று இதில் சொல்லப்படுகிறது. இதனால் கிரமக்கிரமமாய் இந்திரிய நிக்கிரகஞ் செய்து, வந்தால் (பிறகு காமக்குரோதங்களையும் அடக்கிக்) காலாந்தரத்தில் பிரயோஜன மடையலாமென்பது கருத்து.''

(ஸூ) ஸ்ரீதரசுவாமிகளுடைய அபிப்பிராயத்தைச் சொற்பம் விவரித்து அடியிற் கண்டபடி சொல்லலாம்; இந்திரியங்கள் உலகத்திலுள்ள வஸ்துக்களைப் பார்ப்பது, கேட்பது முதலியவைகளினால்; ஆசை கோபம், அல்லது த்வேஷம் இவை யுண்டாகின்றன. எப்படியென்றால், இன்ப முண்டாக்கத் தக்கதான ஒரு வஸ்துவைக் கண் பார்த்தவுடன் அந்த வஸ்துவினிடத்தில் ஆசை யுண்டாகிறது. ஆசைப் பட்ட வஸ்து கிடைப்பதில் யாதொரு தடை செய்யப்பட்டால் அந்தத் தடை யாரா லுண்டாயிற்றோ அவனிடத்தில் கோபம்; அல்லது த்வேஷ முண்டாகிறது. ஆகையால்தான் ஆசையும் துவேஷமும விஷயங்களாகியவஸ்துக்களில் இருப்பதாகச் சொல்லப்பட்டன. ஞானியானவன் வஸ்துக்களில் விருப்பம் வைப்பானாகில் அதிலிருந்து ஆசையும், கோபமு முண்டாய் ஞானப் பிரவிருத்தியைக் கெடுத்துவிடும்; ஆகையால், ஞானிக்குச் சத்துருவென்று சொல்லப்பட்டன. சாஸ்திரார்த்த விசாரமானது பரமேசுவர பஜனையை யுண்டாக்குகிறது. பரமேசுவர பஜனையானது, ராகத்வேஷங்களுக்கு உட்படாமல் காக்கிறது. (34)

---

௩௫. ஶ்ரேயாந்ஸ்வத⁴ர்மோ விகு³ண: பரத⁴ர்மாத்ஸ்வநுஷ்டி²தாத் ।
ஸ்வத⁴ர்மே நித⁴நம் ஶ்ரேய: பரத⁴ர்மோ ப⁴யாவஹ: ॥

35. ஶ்ரேயாந்(1)-ஸ்வதர்ம:(2)-விகுண:(3)-பரதர்மாத்(4)-ஸ்வநு
ஷ்வதர்மே-நியநம்-ஶ்ரேய:-பரதர்ம:-பயாவஹ:॥[ஷ்டிதாத் ॥

ஸ்வநுஷ்டி²தாத் — செவ்வையா யனுஷ்டிக்கப்பட்ட
பரத⁴ர்மாத் — பிறருடைய தர்மத்தைக்காட்டிலும்
விகு³ண: — குண மில்லாத

ஸ்வதர்ம:	தன்னுடைய தர்மமானது
ஶ்ரேயாந்	சிரேஷ்டமாகும்;
ஸ்வதர்மே	தன்னுடைய தர்மத்தில்
(ஸ்திதஸ்ய)	இருந்தவனுக்கு
நிதநம்	மரணமாயினும்
ஶ்ரேய:	சிரேஷ்டமாகும்;
பரதர்ம:	பிறருடைய தர்மமானது
பயாவஹ:	(நரக) பயத்தையுண்டாக்கும்.

பிறர் தர்மம் நன்ருய் அநுஷ்டிக்கப்பட்டபோதிலும் அதைக் காட்டிலும் தன்னுடைய சொந்தத் தர்மமானது குணமில்லாததாயினும் சிரேஷ்டமாகும். பிறர் தர்மத்தை ஆச்ரயித்துக்கொண்டு வாழ்வதைவிட சொந்தத் தர்மத்திலிருந்து மரணமடைந்தாலும் நன்மையாக ஆகும். ஏனென்ருல், பிறருடைய தர்மமானது நரகம் முதலான பயத்தை (அபாயத்தை) விளைவிக்கும்.

---

(1) "ஶ்ரேயாந்—சுவர்க்காதிப் பிராப்தியைக் கொடுக்கும்" (ஸ்ரீதரர்).

(2) "ஸ்வதர்ம:—தன்னுடைய வர்ணுசிரமத்திற்கு உரிய தர்மம்" (இராகவேந்திரர்). கர்மயோகமானது" (ராமாநுஜர்).

(3) "விகுண:-ஸம்யக் அநுஷ்டிக்கப்படாதது என்ருல், பரிபூர்ணமாகாத கர்மம்" (ஸ்ரீதரர், இராகவேந்திரர்).

(4) "பரதர்மாத்—ஞானயோகத்தைக்காட்டிலும்: (ராமாநுஜர்); பிறருடைய வர்ணுசிரமத்திற்கு உரிய தர்மத்தைக்காட்டிலும் (இராகவேந்திரர்).

(ராமாநுஜர்) "அர்ஜுனு! கர்மத்திற்குமாத்திரம் அதிகாரியான நீ, சிரேஷ்டமான ஞானுதிகாரிக்குரிய ஞானநிஷ்டையை அநுஷ்டிக்கலாமென்று எண்ணி யுத்தஞ் செய்வதை விட்டுவிடுவாயாகில் நரகமடைவாய்,' என்று பகவான் சொல்வது."

(ஸ்வ) ராகத்வேஷாதிகளால், அதாவது விருப்பு வெறுப்புக்களால் தூண்டப்பட்டவன், 'பிறருடைய தர்மமும், தர்மந்தான்; அதுவும் அனுஷ்டிக்கத்தக்கதுதான்' என்று சாஸ்திர விஷயத்தைத் தப்பாகக் கிரகித்துக் கொள்கிருன். அது சரியன்று. ஒவ்வொருவனும் அவனவனுடைய பூர்வஜன்ம பரிபாகத்திற்குத் தக்க இயற்கை, அதற்கு அநுகூலமான ஜாதி குலம் தேசம் முதலானவைகளில் இப்போது ஜனிக்கிருன். அந்த ஜாதிவகையருவுக்கு ஏற்ற தர்மங்கள் இவை என்பதை, லோகசங்கிரகத்தை

உத்தேசித்துச் சர்வஜ்ஞனை ஈசுவரன், வேத சாஸ்திராதிகளின் மூலமாய் வெளிப்படுத்தியிருப்பதைத்தான் அவனவன் ஸ்வதர்மமென்று சொல்லப்படுகிறது. இப்படி ஈசுவரன் அவனவனுடைய ஸ்வபாவத்திற்கு ஏற்க ஜனனத்தையும் ஸ்வதர்மத்தையும் கொடுத்திருந்தும், அதற்கு விரோதமாகத் தற்காலத்தில், ஜனங்கள் தங்கள் அற்பபுத்தியினுல், பரதர்மங்கள் தங்களுக்குச் சிரேஷ்டமென்று நிச்சயித்துக் கொண்டு, அந்தப் பரதர்மங்களை அநுஷ்டிக்கிருர்கள். அற்பபுத்தியைக் கொண்டு இவன் தனக்குச் சிரேயஸ் என்று நிச்சயித்துக்கொள்ளும் பரதர்மம், முடிவில் கெடுதியைத்தான் உண்டாக்குமாதலால், இந்தச் சுலோகத்தில் ஒவ்வொருவனும் அவனவனுக்கு எந்த (கர்மம்) தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அதை யநுஷ்டிக்கிறது சிரேஷ்டமேயல்லாது, தன்னுடைய தர்மத்தைவிடப் பிறருடைய தர்மத்தை அநுஷ்டிக்கிறவன் நரகமடைவானென்று சொல்லப்பட்டது. உதாரணம்: வைசியன்: தன்னுடைய கர்மங்களாகிய பயிரிடுதல், பசு ஸம்ரக்ஷணை, வியாபாரம் இவைகளை விட்டு க்ஷத்திரிய தர்மமாகிய யுத்தம், அரசாட்சி முதலானவைகளைச் செய்யவும்; அப்படியே க்ஷத்திரியன்: தன் ஸ்வபாவத்திற்கு ஏற்காத வியாபாரம், பயிரிடுதல் முதலிய தொழில்களைச் செய்யவும் தலைப்பட்டால் உலகம் சீராக நடபெருமல் கெட்டுப்போம். அந்தக் காரணத்தினுல், அது நரகத்தைக் கொடுக்கிறது. ஆனுல், தன்னுடைய ஸ்வதர்மம் குறைவுள்ளதாகத் தோன்றினபோதிலும் அதையே அநுஷ்டித்தால் ஈசுவரன் அதன் மூலமாக நற்கதியை இவன் அடையும்படி செய்கிருன். பின் வருகிற 18-வது அத்தியாயத்தில் நான்கு வருணத்தாருடைய ஸ்வபாவமான கர்மங்கள் இன்னவையென்று சொல்லி, அதில் 47-வது சுலோகத்திலும், "ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண:" என்று சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்க.

மேலும், 'ஸ்வதர்மாசரணம் ஶக்த்யா விதர்மாச்ச நிவர்த்தனம்। தைவாலப்தேந ஸந்தோஷ ஆத்மவிச்சரணார்ச்சனம்॥" — "தன்னுல் கூடியவரையில் சுவதர்மத்தை ஆசரிக்கவேண்டியது; பிறர் தர்மத்தையநுஷ்டிக்காமல் நிவிர்த்தித்தல் வேண்டும்; தெய்வாதீனமாய்க் கிடைத்த வஸ்துக்களில் சந்தோஷமடைந்தவனுயும், ஞானிகளுடைய பாதஸேவை பண்ணுகிறவனுயுமிருத்தல் வேண்டியது." என்று ஸ்ரீ பாகவதம்: ௲-உஉ-அ-ல் சொல்லியிருப்பதையும் பார்க்க. (35)

[𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚]

௩௬. 𑌅𑌥 𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌯𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑌰𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ।
𑌅𑌨𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑌿 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌬𑌲𑌾𑌦𑌿𑌵 𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤𑌃 ॥

36. அத²-கேந-ப்ரயுக்தோ-அயம்-பாபம்-சரதி-பூருஷ: |
அநிச்ச²ந்(1)அபி வார்ஷ்ணேய ப³லாத்-இவ நியோஜித: ||

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚	அர்ஜுனன் சொன்னது:
𑌹𑍇 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯	"ஓ! விருஷ்ணி வம்சத்தில் ஜனித்தவரே!
𑌅𑌥	அப்படியானால்
𑌅𑌯𑌂 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃	இந்தப் புருஷனானவன்
𑌅𑌨𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑌿	(பாபஞ் செய்ய)இச்சை யில்லாதிருந்தாலும்
𑌬𑌲𑌾𑌤𑍍	பலவந்தமாய்
𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤 𑌇𑌵	ஏவப்பட்டவனைப்போல
𑌕𑍇𑌨	எதனால்
𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌃	தூண்டப்பட்டவனாக்
𑌪𑌾𑌪𑌂	பாபத்தை
𑌚𑌰𑌤𑌿	செய்கிறான்

[அர்ஜுனன் சொன்னது]

"ஓ! விருஷ்ணி வம்சத்தில் ஜனித்த கிருஷ்ணா! அப்படியானால், இந்தப் புருஷனானவன் பாபஞ் செய்ய இச்சை இல்லாதிருந்தாலும் எதனால் தூண்டப்பட்டவனாய்ப் பலவந்தம் செய்யப்பட்டவனைப்போல் பாபத்தைச் செய்கிறான்?"

(1). அநிச்ச²ந்நபி—"விஷயாநுபவத்தி லிச்சை யில்லாதிருந்தாலும் விஷயாநுபவரூபமான பாபத்தைச் செய்கிறான்." (ராமாநுஜர்).

(ஸ்வ) மனிதனிடத்துள்ள காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியமாகிய இந்த (𑌅𑌰𑌿𑌷𑌡𑍍𑌵𑌰𑍍𑌗𑌂) ஆறுகளில் பிரதானமானவை காமம் குரோதங்கள். இந்த இரண்டினுடைய சுவாதீனத்தை யடையக்கூடாதென்று முந்தி (34-வது சுலோகத்தில்) சொல்லப்பட்டது. 'அந்த இரண்டில் பாபத்தில் ஏவுவது எது?' என்று அர்ஜுனன் கேட்பதாக மத்துவாசாரியர் தாத்பரியம். ஆனால், சங்கராசாரியர் தமது பாஷ்யத்தில் இந்தச் சுலோகத்திற்கு அவதாரிகை பின் வருகிறபடி எழுதியிருக்கிறார்:—

"𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍋 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌪𑍁𑌂𑌸𑌃" என்கிற இரண்டாவது அத். 62-வது சுலோகத்திலும், இதன் மூன்றாவது அத்யாயம், 34-வது சுலோ.

கத்திலும், கெடுதிக்கு மூலம் கூறப்பட்டுள்ளபோதிலும், பல இடங்களில் சிதறிக் கிடப்பதும், நன்றாகத் தெரியாமலிருப்பதுமான முற் கூறிய விஷயத்தைத் தெளிவாகவும், சுருக்கமாகவும் அறியக் கருதி அக் கெடுதியின் சரியான மூலம் இன்னதென்று தெரிந்தால் அதனை நீக்குவதற்கு முயற்சி செய்யலாமென்று அர்ஜுனன் இந்தப்படி பகவானைக் கேட்கிறான்.”

---

(1) [ஸ்ரீ பகவாநுவாச.]

௩௭. காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: |
மஹாஶநோ மஹாபாப்மா வித்த்யேநமிஹ வைரிணம் ||

37. காம:-ஏஷ:-க்ரோத:-ஏஷ:-ரஜோ-குண-ஸமுத்பவ: |
மஹாஶந:-மஹாபாப்மா-வித்தி-ஏநம்-இஹ (2) வைரிணம் ||

ஏஷ:	இது (நீ கேட்ட காரணமானது)
காம:	காமம்;
ஏஷ:	இதுவே
க்ரோத:	கோபம்;
ரஜோகுணஸமுத்பவ:	(இதுவே) ரஜோகுணத்தினின்று உண்டாவது;
மஹாஶந:	(இது) பெருந்தீனி யுடையது;
மஹாபாப்மா	(இது) மஹா பாபம்;
ஏநம்	இதனை (காமத்தை)
இஹ	இங்கே
வைரிணம்	சத்துருவாக
வித்தி	தெரிந்துகொள்.

[ஸ்ரீ பகவான் சொன்னது]

பிராணிகள் எந்தக் காரணத்தினால் பாபத்தைச் செய்கிறார்கள் என்றால், ஸகல அனர்த்தங்களுக்கும் காரணமான காமத்தினால்தான். இந்தக் காமமே கோபமாக ஆகிறது; அதாவது, ஏதேனும் ஒரு காரணத்தினால் இந்தக் காமம் தடுக்கப்பட்டால் அது கோபமாக மாறுகின்றது. இந்தக் காமம் ரஜோகுணத்திலிருந்து உண்டாவது. இது பெருந் தீனியுடையது; என்றால் காமத்திற்கு வேண்டிய ஆஹாரங்களாகிய விஷயானுபவங்களை அனுபவிக்க அனுபவிக்கத் திருப்தி அடையாமல் மேன்மேலும் விஷயானுபவங்களைக் கோருகின்றது. இந்தக் காமத்தினால் தூண்டப்பட்டுப் பிராணிகள் மஹா பாபத்தைச் செய்கின்றன. ஆகவே,

இங்கே, அதாவது, இந்த லோகங்களிலே, அல்லது, இந்த ஸம்ஸாரத்திலே, இக் காமத்தைச் சத்துருவாகத் தெரிந்துகொள்.

(1) 'ஸமவாநு'—என்கிற சப்தத்தின் தாத்பர்யம் இன்னதென்று 2-வது அத். 2-வது சுலோகத்தின் கீழ்ச் சொல்லப்பட்டிருப்பதைப்பார்க்க.

(2) 'இஹ-இங்கே,' என்றால், 'இந்த ஸம்ஸாரத்தில்' என்று சங்கரரும், 'ஞானயோகத்தில்' என்று ராமாநுஜரும், 'இஹபர புருஷார்த்த விஷயத்தில்' என்று இராகவேந்திரரும் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(ஸ்வ) இரண்டாவது அத்தியாயம் 62-63-வது சுலோகங்களில் விஷய சிந்தனையால் காமமும் காமத்தினால் குரோதம் முதலானவை உண்டாவதாகவும், அச் சுலோகங்களின் கீழ் சங்கரபாஷ்யத்தில் அதை எடுத்துச் சொல்லியிருப்பதையும் பார்க்க.

இந்தச் சுலோகத்தில், பிராணிகளின் ஸகல துன்பங்களுக்கும் மூலகாரணம் காமம் (ஆசை) என்று சொல்லப்பட்டது. இந்த ஆசை நிறைவேறுவது வேறொன்றினால் தடுக்கப்பட்டால் அப்போது கோபம் உண்டாகின்றது. ஆகையால், இந்தக் காமம் 'சர்வலோக சத்துரு' என்று சொல்லப்பட்டது. 'ரஜோகுணஸமுத்பவ:' என்பதற்குச் சங்கரர் வேறு ஒரு விதமாயும் தாத்பரியம் செய்கிறார். அதாவது, 'இந்தக் காமம்' ரஜோகுண முண்டாவதற்குக் காரணம்; அதாவது, இந்தக் காமத்தினாலேயே ரஜோகுண முண்டாகிறது. அது எப்படியெனில், காமம் (ஆசை) உண்டானவுடன் அது ரஜோகுணத்தை தலை எடுக்கச்செய்து ஒருவனைக் கார்யத்தில் செலுத்துகின்றது. ரஜோகுணத்தின் கார்யமான அடிமைத்தனம் முதலியவற்றில் அமைந்து வருந்தும் தௌர்ப்பாக்கியர்கள், "ஆசையாலன்றோ நான் அடிமைத்தொழிலைச் செய்யும்படி பண்ணப்படுகிறேன்" என்று புலம்புதலைக் கேட்கிறோமல்லவா? 'மஹாஶந:' என்றால், 'இந்தக் காமத்திற்கு அநுபவிக்கப்படத் தகுந்த விஷயங்கள் அநேகம்' என்றும் தாத்பர்யம் செய்யலாம். (37)

---

௩௮. தூமேநாவ்ரியதே வஹ்நிர் யதாதர்ஶோ மலேந ச।
யதோல்பேநாவ்ருதோ கர்பஸ் ததா தேநேதமாவ்ருதம்॥

38. தூமேந-ஆவ்ரியதே-வஹ்நி:-யதா-ஆதர்ஶ:-மலேந-ச। [ம்॥
யதா-உல்பேந-ஆவ்ருத:-கர்ப:-ததா-தேந-இதம் (1)-ஆவ்ருத

வஹ்நி: — நெருப்பானது
தூமேந — புகையினாலேயும்

𑌆𑌦𑌰𑍍𑌶𑌃	கண்ணாடியானது
𑌮𑌲𑍇𑌨	அழுக்கினாலேயும்
𑌯𑌥𑌾	எப்படி
𑌆𑌵𑍍𑌰𑌿𑌯𑌤𑍇	மூடப்பட்டிருக்கிறதோ, அல்லது சூழப் பட்டிருக்கிறதோ,
𑌗𑌰𑍍𑌭𑌃	கர்ப்பத்திலிருக்கிற சிசுவானது
𑌉𑌲𑍍𑌬𑍇𑌨	கருப்பையினாலே
𑌯𑌥𑌾	எப்படி
𑌆𑌵𑍃𑌤𑌃	மூடப்பட்டிருக்கிறதோ
𑌤𑌥𑌾	அப்படியே
𑌇𑌦𑌂	இது (ஞானமானது)
𑌤𑍇𑌨	அதனாலே (அந்த ஆசையினாலே)
𑌆𑌵𑍃𑌤𑌂	மூடப்பட்டிருக்கிறது.

அக்கினி புகையினாலேயும், கண்ணாடி அழுக்கினாலேயும், வயிற்றி லிருக்கிற சிசு (குழந்தை) ஆனது கருப்பையினாலேயும் எப்படி மூடப் பட்டிருக்கிறதோ, அப்படியே இந்த ஞானமானது அந்த ஆசையினாலே மூடப்பட்டிருக்கிறது.

(1) 'இதம்'-என்பதற்குப் 'பிராணிகள்' என்று ராமாநுஜரும்;'ஈசு வரன், ஜீவன், அந்தக்கரணம்' என்று இராகவேந்திரரும் அர்த்தம் செய்கிறார்கள்.

(இராகவேந்திரர்) "ஸ்வயம் பிரகாசமுள்ள அக்கினியானது இருளாகிய உடன் பிறந்த புகையினால் மறைக்கப்பட்டிருப்பதுபோல,சர்வஜ்ஞனான ஈசுவரன் ஜீவனுக்குக் காமத்தினால் மறைக்கப்பட்டிருக்கிறான். அதனால், ஈசுவரன் ஜீவனால் அறியப்படுகிறதில்லை. கண்ணாடியானது அழுக்கினால் மறைக்கப்பட்டிருப்பதுபோல், அந்தக்கரணமானது காமத்தினால் மறைக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், அந்தக்கரணம் காமத்தினால் மூடப்பட்டதாய்க்கொண்டு ஈசுவரன், ஜீவன் இவர்களைக் காண்பிக்கிறதில்லை. சிசுவானது கருப்பையி லிருக்கையில் எப்படி ஒரு காரியமும் செய்யச் சக்தியற்றிருக்கிறதோ, அதுபோன்று காமத்தினால் மூடப்பட்டிருக்கிற ஜீவன் ப்ரஹ்மத்தையாவது, ஞானமுதலியவற்றையாவது அடையக்கூடாதவனா யிருக்கிறான்."

(ஸ்வ) இந்தச் சுலோகத்தில் ஸ்ரீபகவான், முன் சொன்ன அந்தக் காமமானது ஞானத்திற்கு எவ்வாறு சத்துருவென்பதை மூன்று திருஷ்டாந்தங்களினால் கூறுகிறார்.

காமமானது ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்கிற இந்த மூன்று குணாம்ச பேதங்களை அநுஸரித்து மூன்றுவித ஸ்வரூபத்தினால் ஞானத்தை மூடுகின்றது. பின் வருகிற 14-வது அத்தியாயம், 6-வது, 7-வது சுலோகங்களில் ஸத்வ ரஜஸ்தமோ குணங்களின் சொரூபம் இன்னதென்றும்; ஷை அத். 17-வது சுலோகத்தில் ஸத்துவத்தினின்று அறிவும், ரஜஸ்ஸினின்று லோபமும், தமஸ்ஸிலிருந்து மோஹமும், அஞ்ஞானமும் உண்டாகின்றன என்றும்; 18-வது அத்தியாயம் 30,31,32-வது சுலோகங்களில் ஸாத்விக, ராஜஸ, தாமச புத்திகளின் சொரூபம் இன்னவைகள் என்றும் சொல்லப்பட்டிருப்பதையும், அவற்றின் வியாக்கியானங்களையும் பார்க்க.

ஞானமானது, சத்துவாம்சம் உள்ள ஆசைகளினால் மூடப்படும் பொழுது, அக்கினியானது எப்படிப்புகையினால் மூடப்பட்டு, அக்கினியின் தேஜஸானது அதன் கீழ்ப்பாகத்தில் பிரகாசிக்கின்றதோ, அப்படியே அந்த ஞானமும் அதன் ஸ்வரூபாம்சத்தோடு பிரகாசிக்கின்றது. ஞானமானது, ரஜோகுணாம்சம் உள்ள காமத்தால் மூடப்படும்பொழுது, அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியின் பிரகாசம் தோன்றாமற் போனபோதிலும் அதன் ஸ்வரூபம் முற்றிலும் மறையாததுபோல, ஞானத்தின் பிரகாசம் மட்டும் தடைப்பட்டு அதன் ஸ்வரூபம் மறையாமலேயிருக்கின்றது. ஆனால், தமோகுணாம்சம் உள்ள ஆசையினால் ஞானமானது மூடப்பட்டாலோ கர்பப் பையினால் மூடப்பட்ட சிசுவின் தேஜஸ் மறைபட்டிருப்பதுதோடுகூட அதன் ஸ்வரூபம் முற்றிலும் மறைபட்டிருப்பதுபோல, ஞானத்தின் பிரகாசம் மறைபட்டுப்போவது மன்றியில் ஞானத்தின் ஸ்வரூபங்கூட விளங்காமற் போய்விடுகின்றது என்று சொல்லலாம். அல்லது, காமமானது ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களைப்பற்றி நிற்கும்போது திருஷ்டாந்தத்தில் கூறியபடி மூன்று வித ஸ்வரூபத்தோடு கூடி ஞானத்தை மறைப்பதாகவும் சொல்லலாம். அல்லது,(ஷூா) இந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்ட மூன்று திருஷ்டாந்தங்களால் ஆசையினால் சூழப்பட்ட அந்தக்கரணத்தையுடைய மூன்று வகை ஜனங்களைக் குறிப்பிட்டதாகக் கொள்ளலாம். அதாவது, ஆசையாகிய புகையினால் ஆத்மஞானமாகிய அக்கினி மூடப்பட்டிருப்பதென்பது ஒருவகை ஜனங்கள். இவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால், ஆத்மஞான முள்ளவர்களே; ஆனால், நிஷ்களங்கமாய், ஆத்மஞானத்திலேயே நிலையாயில்லாமலும் விஷயப்பற்றுதலை முழுதும் விடாமலுமிருப்பவர்கள். இவர்கள் அதி சீக்கிரத்தில் ஆத்மஞான மடைவார்கள். அஃது எதுபோலென்றால், அக்கினியைச் சூழ்ந்திருக்கிற புகையானது

எவ்வளவு வியாபகமானாலும் அக்கினியின் அடிப்பாகமும், காற்றுமுதலானவைகளினால் புகை விலக்கப்பட்டபோது வேறு சில பாகமும் காணக்கூடியதாகவே யிருக்கும். மேலும், அக்கினி செவ்வையாய்ப் பிரகாசிக்கத் தொடங்கினவுடன் புகை இருந்தவிடந் தெரியாமற் போய்விடும். அது போன்று, இவன் கூடிய சீக்கிரத்தில் அப்பியாசத்தினாலே ஆத்மஞானமடைவான். ஆகையால், இவன் முதல் வகுப்பிற் சேர்ந்தவன்.

அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியில் பார்ப்பவனுக்குத் தன் முகமானது பிரகாசமாயும், சுத்தமாயும் தெரியாவிட்டாலும் ஏகதேசம் தெரியும். ஆனால், முகம் பிரகாசமாய்த் தெரியவேண்டுமென்கிற எண்ணம் மட்டு மிருக்கிறது. 'அழுக்கை நீக்கிவிட்டால் கண்ணாடி பிரகாசிக்கும்' என்கிற ஞானமட்டு மில்லை. அதுபோன்று, 'ஆத்மஞானம் ஸம்பாதிக்க வேண்டும்,' என்கிற அபேக்ஷை யிருக்கிறது; ஆனால், 'ஆசையை ஒழித்தாற்றான் ஆத்மஞான மடையலாம்' என்கிற நிச்சயத்தை யடையாமல் கலங்கி நிற்கிறான். இவன் இரண்டாவது வகுப்பிற் சேர்ந்தவன்.

கருப்பைக்குள் இருக்கும் சிசுவானது எப்படித் தானாக அந்தப் பையை விட்டு வெளிப்படச் சக்தியற்றிருக்கிறதோ, அதுபோன்று ஆத்மஞான மில்லாதவன் ஆத்மா இன்னதென்பதையே அறியாமலும் ஆசையாகிற வலையினால் கட்டப்பட்டு மிருப்பானாகையால், ஆசையை நிவிர்த்திக்கச் சக்தியற்றவனாயிருக்கிற இவன் மூன்றாவது வகுப்பிற் சேர்ந்தவன். இம் மூன்று வகுப்பாருக்கு முள்ள தாரதம்மியத்தை விளக்கும் பொருட்டு மூன்று திருஷ்டாந்தங்கள் சொல்லப்பட்டன என்று தோன்றுகிறது. (38)

---

௩௯. ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா |
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணாநலேந ச ||

39. ஆவ்ருதம்-ஜ்ஞாநம்-ஏதேந-ஜ்ஞாநிந:-நித்யவைரிணா |
காமரூபேண(1)கௌந்தேய-துஷ்பூரேண-அநலேந(2)ச-||

கௌந்தேய	ஓ! குந்திபுத்திரா!
ஜ்ஞாநிந: நித்யவைரிணா	ஞானிக்கு எப்பொழுதும் சத்துருவானதும்
காமரூபேண	ஆசாஸ்வரூபமானதும்,
துஷ்பூரேண	நிரம்பாததும்,
அநலேந ச	திருப்தியற்றதுமாகிய
ஏதேந	இந்தக் (காமம்) ஆசையினாலே

ஜ்ஞாநம்　　　ஞானமானது
ஆவ்ருதம்　　　மூடப்பட்டிருக்கிறது.

ஓ, குந்தி புத்திரா! ஞானிக்கு எப்பொழுதும் சத்துருவானதும், விஷயானுபவங்களினால் பூர்த்தி செய்ய முடியாததும், திருப்தி அடையாததுமான ஆசையையே ஸ்வரூபமாகவுடைய இந்தக் காமத்தினால் ஞானமானது (அறிவானது) மூடப்பட்டிருக்கிறது.

---

(1) காமரூபேண-'காமமென்கிற பெயரை யுடையது' (இராகவேந்திரர்); ஆனால் (ராமாநுஜர்) காமாகாரேண='மோகத்தை யுண்டாக்குகிறது' என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

(2) அநலேந - 'அக்கினியைப் போலொத்தது' (என்றால்) "இவ்வளவு விறகு போடுகிறவரையிற்றான் நான் அவைகளை எரிப்பேன்; பின்னும் விறகு போட்டால் நான் எரிக்கமாட்டேன்" என்று எப்படி அக்கினி திருப்தி யடைகிறதில்லையோ, அதுபோன்று திருப்தி யடையாததென்பது தாத்பரியம்.

(சங்கர பாஷ்யம்) "முன் சுலோகத்தில் 'ஏதம்' 'இது' என்கிற சொல்லால் சொல்லப்பட்டதும், காமத்தினால் மூடப்பட்டிருப்பதும் எது? என்பது இதில் சொல்லப்படுகிறது.

ஞானியானவன் "நான் இதனால் அநர்த்தங்களிலே தூண்டப்பட்டிருக்கின்றேன்" என்று அக் கெடுதிகள் வருவதற்கு முந்தியே அறிகிறான்; ஆதலால், எப்பொழுதுமே வருத்தப்படுகிறவனாகிறான். ஆகவே, காமம் எப்பொழுதும் சத்துருவென்பது ஞானிக்கேயன்றி மூடனுக்கு அன்று. ஏனெனில், மூடன் ஒரு விஷயத்தை ஆசைப்பட்டு அனுபவிக்கும் சமயத்திலே காமத்தைத் தோழன்போல் பார்ப்பவனாய், அதனால் துன்பம் வரும்பொழுது "நான் ஆசையினால் இப்படித் துன்பப்படும்படி செய்யப்பட்டேன்" என்று பின்னால் அறிகிறானே யன்றி முன்னமே அறிகிறதில்லை. ஆகையால், காமம் ஞானிக்கே எப்பொழுதும் சத்துரு என்க:—'எந்த ரூபத்தினால் சத்துரு?' விஷயானுபவங்களால் பூர்ணமாகாததும், விஷயானுபவங்கள் 'இவ்வளவு' போதும் என்பது இல்லாததுமான விருப்பம் என்னும் வடிவுள்ள காமரூபத்தால் என்க.

(ஸூ) காமமானது ஞானிக்கு எப்போதுஞ் சத்துருவென்பதனால் அஞ்ஞானிக்கு ஏதோ வொரு காலத்தில்மட்டும் சத்துருவென்று நினைக்கக்கூடியதாக இருக்கிறது. அஞ்ஞானிக்கு ஒரு காலத்தில் சத்துருவாயிருக்கிற காமமானது ஞானிக்கு எப்போதும் சத்துருவாக இருப்பதெப்

படி யென்றால், அஞ்ஞானி ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குகையில் அதனா லுண்டாகும் விரோதம் அல்லது விபரீதத்தைத் தெரியாமல் அந்தக் காரியத்தைச் செய்கிறான். அதனால் துன்பத்தை யடைந்தபின் இந்தக் காரியம் தனக்குச் சத்துருவென்று நினைக்கிறான். ஞானியோ என்றால், பூர்வ கர்மவசத்தினால் தன்னிச்சையன்றியிலேயே ஒரு காரியத்தைச் செய்யப் பலவந்தமாய் இச்சைகொள்ளும்படி செய்யப்படுகிறான். அஃது எப்படியென்றால், ஜடபரதர் என்று மறு பெயரை யடைந்த பரதர் என்பவர் மஹா தபசியாய்ப் பிரஹ்ம நிஷ்டையி லிருந்துவிட்டு நதியில் ஸ்நானத்திற்குப் போனபோது, பூரண கர்ப்பமாயிருந்த ஒரு மானானது, சிங்கநாதத்தினால் பயந்து அதன் கர்ப்பத்திலிருந்து குட்டி நதிக்கரையில் விழுந்தவுடன் (அந்தத் தாய் மான்) நதியில் விழுந்து இறந்துபோனதைப் பார்த்தார். “இந்தக் குட்டியை யார் காப்பாற்றுவார்? இவ்விடத்தில் ஒருவரு மில்லையே! நாம் காப்பாற்றாமற் போனால் இந்தக் குட்டியு மிறக்குமே” என்கிற பரிதாப முண்டாயிற்று. அந்தக் குட்டியைத் தானிருக்கு மிடத்திற்குக் கொண்டுவந்து வளர்க்கத் தொடங்கினார். அப்படிச் சில காலம் சம்ரக்ஷணை செய்து வருகையில் அவருக்கு மரணகாலம் சமீபித்தது. அந்தக் காலத்தில் ‘இந்த மானை யார் இனி சம்ரக்ஷணை செய்யப்போகிறார்கள்’ என்று மனவருத்தத்துடன் இறந்தார். மரணகாலத்தில் மானை ஸ்மரித்தபடியால் மானாக அடுத்த ஜன்ம மடைந்தார். (பாகவதம் 5-வது ஸ்கந்தம், 8-வது அத்தியாயத்தைப் பார்க்க). இவருக்கு மான் குட்டியை முதலி லெடுக்கும்போதும், தன்னிருப்பிடத்திற்குக் கொண்டு வந்தபோதும், அதை சம்ரக்ஷிக்கும்போதும் இதனா லுண்டாகும் துன்ப மின்னதென்று தெரிந்திருந்தும், இது தம்முடைய ஞான நிஷ்டைக்குச் சத்துருவென்று தெரிந்திருந்தும் பூர்வகர்ம சேஷமானது அவருடைய நிஷ்டையைக் கெடுத்தது. ஆகையால், ஞானிக்கு எப்போதும் சத்துருவென்று சொல்லப்பட்டது. (39)

சு:. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 ॥

40. இந்த்ரியாணி-மந:-புத்தி:-அஸ்ய-அதிஷ்ட்டாநம்-உச்யதே ।
ஏதை:-விமோஹயதி-ஏஷ: ஜ்ஞாநம்-ஆவ்ருத்ய-தேஹிநம் ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 இந்திரியங்கள்
𑌮𑌨𑌃 மனது
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 புத்தி

அஸ்ய	இந்தக் காமத்திற்கு (ஆசைக்கு)
அதிஷ்டாநம்	இருப்பிடமாக
உச்யதே	சொல்லப்படுகிறது;
ஏஷ:	இந்தக் காமமானது
ஏதை:	இவைகளினால் (இந்திரியாதிகளினால்)
ஜ்ஞாநம்	ஆத்மஞானத்தை
ஆவ்ருத்ய	மறைத்து
தேஹிநம்	தேஹியை
விமோஹயதி	மோஹிக்கச் செய்கிறது (மயக்குகிறது.)

இந்திரியங்கள், மனம், புத்தி ஆகிய இவைகள் காமத்திற்கு இருப்பிடமாகச் சொல்லப்படுகின்றன. இந்தக்காமமானது இந்திரியங்கள், மனம் புத்தி இவைகளின் வழியாக ஞானத்தை மூடிக்கொண்டு தேஹியை (சரீரியை) மோஹிக்கச் செய்கின்றது (மயக்குகின்றது).

(ஸூ ா) ஞானத்தை மறைப்பதனால் ஸகலலோகத்திற்கும் சத்துருவாய் ஏற்படுகின்ற காமத்தின் இருப்பிடம் யாது? என்று ஆராயுமிடத்து, அது இங்குச் சொல்லப்படுகின்றது. ஏனெனில், சத்துருவின் இருப்பிடம் தெரிந்தால் அவனைக் கொல்வது எளிதல்லவா? ஆகையால், காமத்திற்கு இருப்பிடம் இந்திரியங்கள், மனம், புத்தி இவைகள்தான் என்று சொல்லப்பட்டன. ஏனென்றால், சப்தாதி விஷயங்களை இந்திரியங்கள் கிரகித்து மனதில் சேர்ப்பிக்கின்றன. மனம், தான் விஷயங்களைக் கிரகித்தவுடனே புத்தியினிடத்தில் சேர்ப்பிக்கிறது. புத்தி, ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கிறது. நிஷ்களங்கமான ஆத்மாவினிடத்தில் விஷயங்களாகிற அழுக்குகளைச் (அதாவது காமத்தைச்) சேர்ப்பித்தவை, இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளாகையால் இவைகள் காமத்திற்கு இருப்பிடமென்று சொல்லப்பட்டன; அதாவது, இந்திரியங்கள் முதலான இருப்பிடத்தின் வழியாக ஆத்மாவின் ஸ்வரூபம் விளங்காமல் மறைக்கிறது. அப்பொழுது நிஷ்களங்கமான தன்னுடைய ஸ்வரூபம் (ஆத்மஸ்வரூபம்) மறைபட்டு தேஹி மயங்கி நிற்கிறான். ஸ்ரீதரர், இந்தத் தாத்பரியத்தைச் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறார். (40)

சக. தஸ்மாத்த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப।
பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாநநாசநம்॥

41. தஸ்மாத்-த்வம்-இந்த்ரியாணி-ஆதௌ(1) நியம்ய-பரதர்ஷப|
பாப்மானம்-ப்ரஜஹிஹி-ஏனம்-ஜ்ஞானவிஜ்ஞான நாசனம் (2) ||

ஹே பரதர்ஷப	ஓ! பரதவம்ச சிரேஷ்டனே!
தஸ்மாத்	ஆகையினாலே
த்வம்	நீ
ஆதௌ	முதலில்
இந்த்ரியாணி	இந்திரியங்களை
நியம்ய	அடக்கி
ஜ்ஞானவிஜ்ஞானநாசனம்	ஞானவிஜ்ஞானம் (சாஸ்திர அறிவு, அநுபவ அறிவு) இவைகளை அழிக்கின்ற
பாப்மானம்	பாபஸ்வரூபமான
ஏனம்	இந்தக் காமத்தை (ஆசையை)
ப்ரஜஹிஹி	தள்ளிவிடு.

ஓ! பரத சிரேஷ்டனே! (காமம் இவ்வளவு அநர்த்தத்தை யுண்டாக்குகின்றது.) ஆகையால், நீ முதலில் இந்திரியங்கள், மனம் புத்தி ஆகிய இவைகளையடக்கி ஞான விஜ்ஞானங்களைப் போக்கடிக்கிற, அதாவது சாஸ்திர அறிவையும் அநுபவ அறிவையும் அழிக்கின்ற, பாபஸ்வரூபமான இந்தக் காமத்தை உதறித் தள்ளிவிடு.

---

(1) 'ஆதௌ' என்பதற்கு "மோக்ஷ உபாயத்தைத் தேட ஆரம்பிக்கும் பொழுது முதலில், (ஞானத்திற்குக் காரணமான கர்மயோக ஆரம்பத்தில் முதலில்)" என்று (ராமாநுஜரும்), "ஆசைகளைத் தடுப்பதற்கு முந்தி" என்று சில வியாக்கியாதாக்களும் அர்த்தம் செய்கிறார்கள்.

(2) 'ஜ்ஞான விஜ்ஞாநம் - ஞாநம் என்பது சாஸ்திரங்களினின்றும் ஆசார்யனிடத்தினின்றும் ஆத்மாமுதலான விஷயங்களைப்பற்றிய ஆத்மஞானம்" என்று சங்கரரும், "ஆத்மஸ்வரூபஞானம்" என்று ராமாநுஜரும், 'விஜ்ஞாநம்' என்பது "அவ்விதம் கற்ற பொருள்களைச் சொந்த அநுபவத்தால் அநுபவித்து அறிந்த ஞானம்" என்று சங்கரரும்; ஆத்மஸ்வரூப விவேகஜ்ஞானம்" என்று ராமாநுஜரும் அர்த்தம் செய்கிறார்கள். இந்த ஞானமும், விஜ்ஞானமும் மோக்ஷமடைவதற்கு ஸாதனங்கள்.

---

௪௨. இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்ய: பரம் மன: |
மனஸஸ்து பரா புத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ: ||

42 இந்த்ரியாணி-பராணி-ஆஹு:-இந்த்ரியேப்ய:-பரம்-மந: ।
மநஸ:-து-பரா-புத்தி:-ய:-புத்தே:-பரத:-து-ஸ:(1) ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿	(ஸ்தூல தேகத்தைவிட) இந்திரியங்கள்
𑌪𑌰𑌾𑌣𑌿	மேலானதாக
𑌆𑌹𑍁𑌃	(ஞானிகள்) சொல்லுகிறார்கள்;
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃	இந்திரியங்களைக்காட்டிலும்
𑌮𑌨𑌃	மனஸ்
𑌪𑌰𑌂	சிரேஷ்டமானது;
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁	மனதைக்காட்டிலும்
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃	புத்தியானது
𑌪𑌰𑌾	சிரேஷ்டமானது;
𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃	புத்தியைக்காட்டிலும்
𑌪𑌰𑌤𑌃	மேலானவன்
𑌯𑌸𑍍𑌤𑍁	எவனோ
𑌸𑌃	அவன் (முன் சொன்ன தேஹி, பரமாத்மா.)

"ஸ்தூல தேகத்தைக்காட்டிலும் இந்திரியங்கள் மேலானவைகள்" என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். இந்திரியங்களைக் காட்டிலும் மனஸ் மேலானது. மனதைக்காட்டிலும் புத்தி சிரேஷ்டமானது. எவன் புத்தியைக்காட்டிலும் சிரேஷ்டனாயும் சாக்ஷியாயு மிருக்கிறானோ அவனே முன் சொன்ன தேஹி, பரமாத்மா.

---

(1) 'ஸ:'-என்பதற்கு, "பரமாத்மா" என்று சங்கரரும், இராகவேந்திரரும்; "புத்திக்கு சாக்ஷியாகவும் தேகத்தை உடையவனாகவும் இருக்கிற ஆத்மா" என்று ஸ்ரீதரரும், "காமம்" என்று ராமானுஜரும் அர்த்தம் செய்கிறார்கள்.

(சங்கர பாஷ்யம்) "முதலில் இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு உனது சத்துருவாகிய காமத்தைக் கொல்லு என்று சொல்லப்பட்டது. அப்படிக் காமத்தை எங்கே நின்றுகொண்டு அதாவது யாரை ஆச்சிரயித்து (அண்டிக்) கொல்லலாமென்பது இதில் சொல்லப்படுகிறது.

செவி முதலிய இந்திரியங்கள் ஐந்து வெளிப்படையாய்த் தோற்றுவதும், அளவுக்கு உட்பட்டதுமான ஸ்தூல தேகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த இந்திரியங்கள் சூக்ஷ்மமாகவும், உள்ளே வியாபித்ததாகவும், அதிக சக்தியை உடையனவாகவும், மற்றும் இவைபோன்றனவாகவும் இருப்பதை உத்தேசித்து ஞானிகள் இந்திரியங்களை அந்த

ஸ்தூல்மான தேகத்தைவிட மேலானதாகச் சொல்லுகிருர்கள். அவ்வண்ணமே ஸங்கல்ப விகல்பாத்மகமான, அதாவது எண்ணம் வேற்றுமை முதலிய இவைகளைத் தன் வடிவமாக உடைய மனது என்பது இந்திரியங்களைக்காட்டிலும் மேலானது. நிர்ணய வடிவமுள்ள புத்தியோ மனதைக் காட்டிலும் மேலானது. அவ்வாறே புத்தியுள்பட காணப்படுகின்ற ஸகலத்திற்கும் உள்ளும் அப்பாலுமாய் எவன் உள்ளவனே, காமமானது இந்திரியங்கள் முதலியவற்றை இருப்பிடமாகக் கொண்டு ஞானத்தை மறைத்து எந்தத் தேஹியை மோஹமடையச் செய்வதாகச் சொல்லப்பட்டதோ, அவன் புத்தியைக்காட்டிலும் கூட மேலானவன்; அவன் புத்தியைப் பார்க்கின்ற ஆத்மா; அவனே தெரிந்து கொள்ளும் பரமாத்மா.''

(ராமாநுஜ பாஷ்யம்) ''இந்திரியங்கள் மேலானது என்ருல் ஞானத்திற்கு விரோதமாயிருப்பதில் பிரபலமுள்ள தென்பது கருத்து. இந்திரியங்கள் விஷய வியாபாரத்தில் அமைந்திருந்தால் ஆத்மஞானப் பிரவிர்த்தி உண்டாகாது. இந்திரியங்கள் ஒடுங்கினும், மனது விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தால் ஆத்மஞானத்திற்கு விரோதம் உண்டாவதால் மனது இந்திரியத்தைவிட அதில் மேலானது. மனது அடங்கினபோதிலும் புத்தி விரோதமான நிச்சயத்தைக் கொண்டால் ஸாதகங்களைத் தெரிவிக்காமல் ஞானத்திற்கு தடையுண்டாவதால் மனதைவிட புத்தி அதில் மேலானது. இவை யெல்லாம் பொருந்தியும், விருப்பமென்பது இருந்தால், அது புத்தியுள்பட ஷை எல்லாவற்றையும் தன் விஷயத்தில் நடப்பிவித்து ஆத்மஞானத்தை நாசம் செய்யும் ஆகையால், ஞானத்திற்கு விரோதம் செய்வதில் புத்தியைவிட அந்தக் காமம் மேலானது என்பது தாத்பரியம்.''

(இராகவேந்திரர்) ''இந்திரியங்கள் எதைக்காட்டிலும் பெரியவை என்ருல், 'தேகத்தைக்காட்டிலும்' என்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்திரியங்களுக்கு அபிமானி தேவதைகளான சந்திரன், குபேரன், சூரியன், வருணன், அசுவினி தேவதைகள், அக்கினி, இந்திரன், ஜயந்தன், யமன், தக்ஷன் இவர்களைக்காட்டிலும் விஷயாபிமானி தேவதைகளான ஸௌவணி, வாருணி, வாவுதி இவர்கள் சிரேஷ்டமானவர்கள். இவர்களைக்காட்டிலும் மனோபிமானி தேவதைகளான கருடன், சேஷன், ருத்திரன் இவர்கள் சிரேஷ்டமானவர்கள். இவர்களைக்காட்டிலும் புத்தி அபிமானிதேவதையான ஸரஸ்வதி சிரேஷ்டமானவள். இவளைக்காட்டிலும் மகத்தத்துவாபிமானியாகிய பிரம்ம

சிரேஷ்டர். அந்தப் பிரம்மாவைக் காட்டிலும் பிரகிருதி அபிமானி தேவதையான லக்ஷ்மி சிரேஷ்டமானவள். லக்ஷ்மியைகாட்டிலும் ஸகல குண பரிபூர்ணரான விஷ்ணு சிரேஷ்டமானவர். இவருக்குப் பெரியவர் ஒருவருமில்லை; அவர்தான் அடையத்தகுந்தவர்.''

(ஸ்ரீமாத்வர்) இந்த வியாக்கியானத்திற் காதாரமாய்க் கடோபநிஷத் வாக்கியத்தையும், அதன் பாஷ்யத்தையும் குறிப்பிடுகிறார். கடோபநிஷத், 3-வது வல்லி, 10-11 - வது வாக்கியங்களாவன:—

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾 𑌅𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 |
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌪𑌰𑌃 ||
𑌮𑌹𑌤𑌃 𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃 |
𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌨 𑌪𑌰𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃 || (42)

---

௪௩. 𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 |
𑌜𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍 ||

43. ஏவம்-புத்தே:-பரம்-புத்வா-ஸம்ஸ்தப்ய-ஆத்மாநம் (1)
ஜஹி-ஶத்ரும்-மஹாபாஹோ-காமரூபம்-துராஸதம் ॥ [ஆத்மநா |-

𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋	ஓ! பெரிதான கைகளையுடையவனே!
𑌏𑌵𑌂	இவ்விதமாய்
𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃	புத்தியைக்காட்டிலும்
𑌪𑌰𑌂 (𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂)	மேலான ஆத்மாவை
𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾	அறிந்து
𑌆𑌤𑍍𑌮𑌨𑌾	ஆத்மாவினால்
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂	ஆத்மாவை
𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯	அடக்கி
𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂	வெல்லுதற்கு அரிதான
𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂	காமரூபமான சத்துருவை
𑌜𑌹𑌿	நசிக்கச் செய்.

ஓ! அர்ஜுனா! புத்தியைக் காட்டிலும் சிரேஷ்டமான ஆத்மாவை இவ்விதமாய் அறிந்து ஆத்மாவினால் (தன்னால்) ஆத்மாவை அடக்கி, வெல்லுதற்கு அரிதான காமமே ரூபமான ஆசையாகிய சத்துருவை நசிக்கச் செய்.

(ஸ்ரீதரர்) ''விஷயேந்திரியங்களினால் உண்டாகிற காமாதி விகாரங்கள், புத்திவரையிலுள்ள தத்துவங்களைச் சேர்ந்தன. ஆத்மாவைச் சேர்ந்தனவல்லவென்பது தாத்பரியம்.

(ஸ்வ) சத்துருவைக் கொல்வதற்கு ஆயுதத்தைப் போன்றதாக யிருப்பது ஞானம். எந்த ஞானம் என்றால், புத்தியைவிட உத்கிருஷ்டமான ஆத்மாவைப்பற்றிய ஞானம். இந்த ஞானம் நிலையாய் நிற்பதற்கு மனம் அலையாது நிற்பது, அதாவது மனஸ் ஸமாதானம் வேண்டும். இந்த மனஸ் ஸமாதானத்திற்குப் பரிசுத்தமாகத் தெளிந்த மனம் காரணம். 'ஆத்மாநம் ஆத்மநா' என்பதற்கு "மனதை உன் மனதாலேயே அலையாது நன்கு நிறுத்தி, அதாவது சுத்தமாகத் தெளிந்த மனதால் ஸமாதானப் படுத்தி" என்று சங்கரர் அர்த்தம் செய்திருக்கிறார். சில வியாக்கியாதாக்கள் "மனதைப் புத்தியால் ஸமாதாநப்படுத்தி" என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். இந்தக் காமமானது தெரிந்துகொள்வதற்கு அஸாத்தியமான அநேக விசேஷங்களை, அதாவது, பற்பல ஸ்வபாவத்தை உடையதாதலால் வெல்லுவதற்கு அரியது. 'பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே' என்று 2-வது அத். 59 - வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க. (43)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂
𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇
𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮
𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துகளாக, ப்ரஹ்ம
வித்தையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே
கர்மயோகம் என்னும்
மூன்றும் அத்தியாயம்
முற்றிற்று.

சிவமயம்

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌃

நான்காம் அத்தியாயம்.

ஞான யோகம்.

[𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚]

௧. 𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

1. இமம்-விவஸ்வதே-யோகம்-(|)-ப்ரோக்தவாந்-அஹம்-அவ்யயம்|
விஸ்வவாந்-மநவே-ப்ராஹ-மநு:-இக்ஷ்வாகவே-அப்ரவீத் ||

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚	ஸ்ரீ பகவான் அருளியது:
𑌅𑌵𑍍𑌯𑌯𑌂	அழிவில்லாத (பயனை யுடைய)
𑌇𑌮𑌂 𑌯𑍋𑌗𑌂	இந்த யோகத்தை
𑌅𑌹𑌂	நான்
(𑌪𑍁𑌰𑌾)	(ஆதிகாலத்தில்)
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇	சூரியனுக்கு
𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍	சொன்னேன்;
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍	சூரியன்
𑌮𑌨𑌵𑍇	மநுவுக்கு
𑌪𑍍𑌰𑌾𑌹	சொன்னார்;
𑌮𑌨𑍁𑌃	மநுவானவர்
𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇	(தன் குமாரனான) இக்ஷ்வாகுவுக்கு
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍	சொன்னார்.

[ஸ்ரீ பகவான் அர்ஜுனனுக்குக் கூறியருளியது.]

அழிவிலாப் பயனை, அதாவது மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய (முன் இரண்டு மூன்று அத்தியாயங்களில் கூறிய) இந்த யோகத்தை நான் சிருஷ்டிகாலத்தில் ஸூர்யனுக்குச் சொன்னேன்; ஸூர்யன் மநுவுக்குச் சொன்னார்; மநுவானவர் தன் குமாரனுன இக்ஷ்வாகுவுக்குச் சொன்னார்.

(1) "யோகம்-இந்தக் கர்மயோகத்தை." (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) "கர்மயோகத்தை ஸாதனமாகக் கொண்டு ஸந்யாஸத்தோடுகூடி நிற்கும் ஞானநிஷ்டையாகிய எந்த யாதொரு யோகமானது முந்தின இரண்டு அத்தியாயங்களிற் சொல்லப்பட்டதோ, பிரவிருத்தி லக்ஷணத்தோடுகூடிய கர்மயோகம், நிவிருத்தி லக்ஷணத்தோடு கூடிய ஞானயோகம் ஆகிய வேதப்பொருளானது எதில் முடிந்திருக்கின்றதோ, அந்த இதே யோகந்தான் கீதை முழுவதிலும், ஸ்ரீ பகவான் உபதேசிக்கக் கருதியது. ஆகவே, வேதத்திற் கூறிய பொருளை அந்த ஞானயோகத்திலே முடியப்பெற்றதாகக் கொண்டு ஸ்ரீ பகவான் அதனுடைய ஸம்பிரதாய வரலாற்றைக் கூறி அதனை இங்குப் புகழ்கின்றார்.

"உலகத்தைப் பாதுகாத்து ரக்ஷிக்கும் க்ஷத்திரியர்களுக்குப் பலம் உண்டாக்கும்பொருட்டு முந்திய இரண்டு அத்தியாயங்களால் கூறிய இந்த யோகத்தை, நான் சிருஷ்டித் தொடக்கத்தில் ஸூர்யனுக்குச் சொன்னேன். அந்த யோக வலிமையை யுடைய க்ஷத்திரியரன்றோ, ப்ராஹ்மணரைப் பாதுகாக்க வல்லவராகின்றார். ப்ராஹ்மணரும், க்ஷத்திரியரும் பாதுகாக்கப்பட்டால்தான் ஜகத்தைப் பரிபாலிக்க முடியும். இந்த யோகம் நாசமற்றதென்பது அது அழிவில்லாத பயனை உடையதாதலின் என்க. (ஏனெனில், இந்த யோகம் நஷ்டமா யிருப்பதாக அடுத்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது.) உள்ளதை உள்ளபடி பார்ப்பதிலே நிலைத்து நிற்றலாகிய இந்த யோகத்தினுடைய மோக்ஷமென்னும் பயன், எப்பொழுதும் அழிவில்லாதது. அந்த விவஸ்வான் (ஸூர்யன்) அதை மநுவுக்கும், மநு தன் புத்திரன் இக்ஷ்வாகுவாகிய ஸூர்யவம்சத்து முதல் அரசனுக்கும் சொன்னார்."

(ராமாநுஜர்) "நீ யுத்தஞ் செய்யவேண்டியதின்பொருட்டு இந்தக் கர்மயோகத்தை உனக்குச் சொன்னதாக நினைக்கவேண்டாம். மநுவந்தர ஆதியிலேயே நான் இதைச் சூரியனுக்குச் சொல்லியிருக்கிறேன். (1)

---

௨. 𑌏𑌵𑌂 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌸 𑌕𑌾𑌲𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

2. ஏவம்-பரம்பராப்ராப்தம்-இமம்-ராஜர்ஷய:(1)-விது:।
ஸ:-காலேந- இஹ-மஹதா-யோக:-நஷ்ட:(2)-பரந்தப ॥

𑌪𑌰𑌨𑍍𑌤𑌪	ஓ! சத்துருவைத் தவிக்கச் செய்கிறவனே!
𑌏𑌵𑌂	இவ்விதமாய்
𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂	பரம்பரையாக வந்த

𑌇𑌮𑌂	இந்த யோகத்தை
𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌃	இராஜரிஷிகள்
𑌵𑌿𑌦𑍁𑌃 (𑌸𑍍𑌮)	அறிந்திருந்தார்கள்;
𑌮𑌹𑌤𑌾 𑌕𑌾𑌲𑍇𑌨	வெகுகாலமாய்விட்டதினாலே
𑌸𑌃 𑌯𑍋𑌗𑌃	அந்த யோகமானது
𑌇𑌹	இந்த லோகத்தில், அல்லது இப்பொழுது
𑌨𑌷𑍍𑌟𑌃	நஷ்டமாய்விட்டது.

ஓ! பரந்தப! இவ்விதமாய்ப் பரம்பரையாய் (சொல்லப்பட்டு) வந்த இந்த யோகத்தை இராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். வெகு காலமாய் விட்டதினாலே அந்த யோகமானது இப்பொழுது நஷ்டமாய்விட்டது; அதாவது, பரம்பரையாய் வரும் கிரமம் தப்பிப்போய்விட்டது.

---

(1)"ராஜர்ஷயஃ-ராஜாக்களும், ரிஷிகளும்; அல்லது ராஜ ரிஷிகள்." (இராகவேந்திரர்).

(2)"நஷ்டஃ - நஷ்டமாய்விட்டதென்றால், காலம் செல்லச் செல்ல ஸம்பிரதாயப்படி உபதேசிக்கிறவர்களும், உபதேசத்தைக் கேட்டு அறிந்துகொள்ளுகிற புத்திமான்களும் இல்லாமற்போனதால், பரம்பரையாய் வராமல் விட்டுப்போய்விட்டது என்பது; அல்லது, நஷ்டமானது போலாயிற்று." (ராமாநுஜர்.)

(சங்கர பாஷ்யம்)-"இவ்வாறு க்ஷத்திரிய பரம்பரையாக வந்த இந்த யோகத்தை ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். ராஜரிஷிகள் என்பவர்கள்: ஜநகர்முதலானவர்களைப்போல் ராஜாக்களாயும், ரிஷிகளாயு மிருப்பவர்கள். நீடித்த காலமானமையால் அந்த யோக ஸம்பிரதாயம் இடையில் விட்டுப்போயிற்று. தனக்கு எதிரியாய் யுள்ளவர்கள் 'பரர்கள்'. அவர்களைத் தன் பல பராக்கிரமத்தின் தேஜஸால், ஸூர்யனைப்போல் எரிக்கிறவன் 'பரந்தபன்'. பகைவர்களைத் தவிக்கும்படி செய்கிற அர்ஜுனா!"(2)

---

௩. 𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌸𑌖𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

3. ஸஃ-ஏவ-அயம்-மயா-தே-அத்ய-யோகஃ-ப்ரோக்தஃ புராதநஃ |
பக்தஃ-அஸி-மே-ஸகா-ச-இதி-ரஹஸ்யம்-ஹி-(1)-ஏதத்(2)-உத்தமம் ||

(𑌤𑍍𑌵𑌂)	நீ
𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑌃	என்னுடைய பக்தனாகவும்
𑌸𑌖𑌾 𑌚	தோழனாகவும்

அஸி இதி	இருக்கிறாய் என
ஸ: அயம் புராதந:	இந்தப் பழமையான
ஸ: ஏவ யோக:	அதே யோகமானது
தே	உனக்கு
மயா அத்ய	என்னாலே இப்போது
ப்ரோக்த:	சொல்லப்பட்டது;
ஹி	ஏனென்றால்,
ஏதத்	இதானது
ரஹஸ்யம் உத்தமம்	பரம ரஹஸ்யமும் சிரேஷ்டமுமானது.

நீ என்னுடைய பக்தனையும், தோழனையு மிருக்கிறாய் என்பதனால் இந்தப் பழமையான அதே (சூரியனுக்குச் சொன்ன)யோகமானது என்னாலே இப்போது உனக்குச் சொல்லப்பட்டது. ஏனென்றால், இந்த யோகம் பரம ரஹஸ்யமும், சிரேஷ்டமுமானது.

---

(1) ஹி - ஏனென்றால், இந்த யோகத்தை மற்றவர்களுக்குச் சொல்லாமல் உனக்கு மட்டும் சொன்னதன் காரணம், இது பரம ரஹஸ்யமானதால் மஹா துர்லபமானது. உன்னைப்போன்ற பக்தனையும் பக்குவ முள்ளவனையு மிருப்பவர்கள் தவிர மற்றவர்களுக்குச் சொல்லக் கூடியதல்ல என்பது.

(2) "ஏதத்-இது, முன் அத்தியாயங்களில் சொன்ன யோகம்; அதாவது, ஞானம்." (சங்கரர்).

(ஸ்வ) இந்த யோகமானது, மனோதிட மில்லாதவரால் இந்திரியங்களை அடக்கச் சக்தி யற்றிருந்தவர்களிடம் அகப்பட்டுச் சிதைந்திருந்ததையும், உலகத்தில் ஜனங்கள் புருஷார்த்தத்தை அடையாதிருப்பதையும் கண்டு, ஸ்ரீ பகவான் இந்த ரஹஸ்யத்தைத் தகுதியுள்ள தன் பக்தனுக்குச் சொன்னதாக இந்தச் சுலோகத்திற்குச் சங்கரர் அவதாரிகை செய்திருக்கிறார். இந்த யோகம் ஆதியற்ற வேதத்தின் பொருளானதால், 'புராதநம்' என்று சொல்லப்பட்டது. (3)

[அர்ஜுந உவாச]

௪. அபரம் ப⁴வதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத: ।
கத²மேதத்³விஜாநீயாம் த்வமாதௌ³ ப்ரோக்தவாநிதி ॥

4. அபரம்-ஸவத:-ஜந்ம-பரம்-ஜந்ம-விவஸ்வத: |
கதம்-ஏதத்-விஜாநீயாம்-த்வம்-ஆதௌ-ப்ரோக்தவாந்-இதி ||

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚	அர்ஜுனன் சொன்னது:
𑌭𑌵𑌤𑌃 𑌜𑌨𑍍𑌮	"உம்முடைய பிறவியானது
𑌅𑌪𑌰𑌂	பிந்தினது;
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃 𑌜𑌨𑍍𑌮	சூரியனுடைய பிறப்பு
𑌪𑌰𑌂	முந்தியது;
𑌤𑍍𑌵𑌂	நீர்
𑌆𑌦𑍌	'ஆதிகாலத்தில்
𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 𑌏𑌤𑌤𑍍	சொன்னீர்' என்று இதனை
𑌕𑌥𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌂	எப்படி அறிவேன்!"

[அர்ஜுனன் சொன்னது.]

"ஸூர்யனுடைய உற்பத்தியானது முந்தி சிருஷ்டித் தொடக்கத்தில் உண்டானது; உங்களுடைய பிறப்புப் பிந்தி உண்டானது, (அதாவது, வஸுதேவருடைய வீட்டில் பிறந்த காலத்தில் உண்டானது). இப்படியிருக்க, நீங்கள் இந்த யோகத்தை ஸூர்யனுக்கு ஆதிகாலத்தில் சொன்னீர்கள் என்பதை நான் எப்படித் தெரிந்துகொள்வது?"

---

* 𑌅𑌪𑌰𑌂-𑌅𑌵𑌰𑌂 என்றும் பாடம். அர்த்தம் ஒன்றே.

(சங்கர பாஷ்யம்) "ஸ்ரீ பகவான் சொல்வது ஒன்றற்கொன்று விரோதமாய் இருக்கிறது என்கிற எண்ணம் ஒருவர்க்கும் உண்டாகக் கூடாது' என்று கருதி, அவர் திருவாக்கினாலேயே அவ்வித விரோதத்தைப் பரிகரிக்கும்பொருட்டு அர்ஜுனன் ஆக்ஷேபம் செய்கிறவன்போல் கேட்கிறான். "கிருஷ்ணா! நீர் வஸுதேவருடைய வீட்டில் பிறந்தது இப்போது உண்டானது. ஸூர்யன் உண்டானது சிருஷ்டித் தொடக்கத்தில்; அதாவது, உங்களுடைய பிறப்பிற்கு வெகு காலத்திற்கு முந்தி. அப்படியிருக்க, நீங்கள் இந்த யோகத்தை ஆதிகாலத்தில் அருளிச்செய்தீர்கள்; அப்பொழுது அருளிச்செய்தவரேயான நீங்கள்தான் இப்பொழுது எனக்கு அதை மறுபடியும் அருளிச்செய்தவராக இருக்கிறீர்கள் என்கிற இதை ஒன்றோடொன்று மாறுபடாத விஷயமாக நான் தெரிந்துகொள்ளக்கூடிய விதம் எப்படி? அதாவது, இவ் விரண்டையும் நான் எப்படி ஸமரஸப்படுத்திக்கொள்வேன்?" என்பது. 'கிருஷ்ணஸ்வாமியானவர் ஸர்வேஸ்வரன், அவதார புருஷர்,' என்று அர்ஜுனனுக்குத் தெரிந்திருந்தபோதிலும் 'அதைப் பகவான் வாக்கினாலேயே வெளிப்படும்படி செய்வதனால் ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாய் அவர்கள் கடைத்தேற வேண்டும்' என்பது அர்ஜுனன் கருத்து."

(ராமாநுஜர்)"இருபத்தெட்டு சதுர்யுகத்திற்கு முந்தி உண்டான சூரியனுக்கு இப்போது சொற்பகாலத்திற்கு முந்திப் பிறந்த நீர் எப்படிச் சொல்லியிருக்கக்கூடும்? என்பது அர்ஜுனன் கேள்வி." (4)

[ஸ்ரீ பகவாநுவாச]

௫. பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந ।
தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப ॥

5. ஸஹூனி-மே-வ்யதீதானி-ஜந்மானி-தவ-ச-அர்ஜுந ।
தானி-அஹம்-வேத-ஸர்வாணி-ந-த்வம்-வேத்த-பரந்தப ॥

ஸ்ரீ பகவாநுவாச	ஸ்ரீபகவான் சொன்னது:
ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுந!
மே	என்னுடையவும்
தவ ச	உன்னுடையவும்
பஹூநி	அநேகங்களான
ஜந்மாநி	ஜன்மங்கள்
வ்யதீதாநி	சென்றுபோயின்;
தாநி ஸர்வாணி	அவை யெல்லாவற்றையும்
அஹம் வேத	நான் அறிவேன்;
ஹே பரந்தப	சத்துருக்களைத் தபிக்கச் செய்பவனே !
த்வம் ந வேத்த	நீ அறியமாட்டாய்.

ஸ்ரீ பகவானான கிருஷ்ணசுவாமி அர்ஜுனனை நோக்கிச் சொன்னது: ஓ அர்ஜுனா! உனக்கும் எனக்கும் அனேக ஜென்மங்கள் சென்று போயின. அவற்றை யெல்லாம் நான் அறிவேன். நீ அறியமாட்டாய், பரந்தப !

(சங்கர பாஷ்யம்)"வாஸுதேவர் ஈசுவரன் அல்ல, ஸர்வஜ்ஞன் அல்ல,' என்று மூடர்களுக்கு உண்டாகும் சங்கையைப் போக்குவதற்காக அர்ஜுனன் எண்ணி முன் கேள்வி கேட்டதாதலால் அதை அனுசரித்து ஸ்ரீ பகவான் மறுமொழி கூறுகிறார்: அர்ஜுனா! நீ தர்ம அதர்மங்கள் முதலியவற்றால் மறைக்கப்பட்ட ஞானசக்தி யுள்ளவன். ஆகையால், நீ அவை எல்லாவற்றையும் அறியமாட்டாய். நானோ இயல்பாகவே நித்தியனாயும், சுத்தனாயும், முக்தனாயும், ஸத்திய ஸ்வபாவ முள்ளவனாயுமிருப்பதனால் மறைக்கப்படாத ஞான சக்தியுள்ளவன்; ஆகவே, எல்லா ஜன்மங்களும் எனக்குத் தெரியும் என்பது."

(ராமாநுஜர்) "உனக்கும், எனக்கும் அநேக ஜன்மங்க ளாயின என்று சொன்னதினாலே இந்த ஜன்மங்களெல்லாம் வாஸ்தவமென்று சொன்னதாக ஆகிறது."

(இராகவேந்திரர்) "சுவாமியானவர் தம்முடைய ஜன்மத்தைக் குறித்துமட்டும் பதில் சொல்லவேண்டியதாயிருக்க, அர்ஜுனனுடைய ஜன்மத்தையும் சொல்லி, 'நான் அறிவேன், நீ அறியமாட்டாய்' என்று சொன்னதின் உத்தேச மென்னவென்றால், நான் பரப்ரஹ்மம், நீ ஜீவன்; பரப்ரஹ்மம் சகலத்தையும் அறியும், ஜீவன் சகலத்தையும் அறிய மாட்டான்; ஆகையால், ஜீவன் வேறே, பரப்ரஹ்மம் வேறே யென்கிற பேதத்தைக் காட்டும்பொருட்டுப் பகவானானவர் அர்ஜுனனையும்சேர்த்து உத்தரஞ் சொன்னது."

(ஸூ) பகவானுக்கு ஜன்மங்க ளென்பவை அவதாரங்கள். (5)

ஸ. அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோऽபி ஸந் ।
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥

6- அஜஃ-அபி-ஸந்-அவ்யயாத்மா-பூதாநாம்-ஈஶ்வரஃ-அபி-ஸந் ।
ப்ரக்ருதிம்-ஸ்வாம்-அதிஷ்டாய-ஸம்பவாமி-ஆத்மமாயயா ॥

அஹம்	நான்
அஜோऽபிஸந்	பிறப்பற்றவனானாலும்,
அவ்யயாத்மா (அபிஸந்)	நாசமற்ற ஞானசக்தியையுடையவனானாலும்,
பூதாநாம்	பிராணிகளுக்கு
ஈஶ்வரோऽபிஸந்	ஈசுவரனாயிருந்தாலும்
ஸ்வாம்ப்ரக்ருதிம்	என் சொந்தமான மாயையை
அதிஷ்டாய	வசப்படுத்திக்கொண்டு
ஆத்மமாயயா	என் மாயையினால்
ஸம்பவாமி	பிறக்கிறேன் (அவதாரஞ் செய்கிறேன்).

நான் பிறப்பற்றவனானாலும், நாசமற்ற ஞான சக்தியையுடையவனானாலும், பிராணிகளுக்கு ஈச்வரனானாலும், என் சொந்தமான மாயையை வசப்படுத்திக்கொண்டு, என் மாயையினாலேயே அவதாரம் செய்கிறேன்.

(சங்கர பாஷ்யம்) "நித்யராய் ஈச்வரராய் இருக்கின்ற உங்களுக்குத் தர்மம் அதர்மங்கள் இல்லாதிருந்தும், பிறப்பென்பது எப்படி?' என்றால், பிறப்பில்லாதவனாயினும், இன்னும் இயல்பாகவே குறைவிலா ஞான சக்தி யுடையவனாயினும், மற்றும் ப்ரஹ்மா முதல் புல்வரையிலுமுள்ள

பூதங்களை யெல்லாம் ஆளுந்தன்மையனாயினும், இந்த உலக மெல்லாம் எதற்கு உட்பட்டிருக்கின்றதோ, பின்னும் அது எதனால் மயக்கப்பட்டு வாஸுதேவனை என்னைத் தன் ஆத்மாவாக அறியவில்லையோ, அந்தப் பிரகிருதியை, அதாவது விஷ்ணுவுக்கு உரியதும், முக்குண வடிவமுமான என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்னுடைய மாயையினாலே உடம்போடு நிற்பவன்போல, பிறந்தவன்போல, நான் இருக்கின்றேன். ஆனால், உலகத்தாரைப்போல உண்மையாகவே பிறக்கிறதில்லை.''

(ராமானுஜர்) ''𑌸𑍍𑌵𑌾𑌂𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯=என்னுடைய ஸ்வகீயமான ஸ்வபாவத்தோடு கூடி, 𑌆𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾=என்னுடைய ஆத்மஞானமாகிற சங்கற்பத்தினாலே, 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿=தேவ மனுஷ்யாதி ரூபங்களாய் அப்ராகிருத சரீரத்துடன் அவதரிக்கிறேன். 'அப்ராகிருதம்' என்றால், உலகத்தில் காணப்படுகிறதுபோலல்லாத, உலக விலக்ஷணமான.''

(இராகவேந்திரர்) ''𑌅𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾=நாசமற்ற ஸ்வபாவத்தையுந் தேகத்தையு முடையவனானாலும், 𑌸𑍍𑌵𑌾𑌂=சொந்தமான, என்னா லுண்டாக்கப்பட்ட, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂=வாஸுதேவாதி தேகங்களை, 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯=பிரவேசித்து, 𑌆𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾=சுயேச்சையினாலே அல்லது, சுவஞானத்தினாலே, 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿=உண்டானவன்போ லாகிறேன்.'' (6)

---

௭. 𑌯𑌦𑌾𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

7. யதாயதா-ஹி-தர்மஸ்ய(1)க்லானி:-பவதி-பாரத ।
அப்யுத்தாநம்-அதர்மஸ்ய-ததா-ஆத்மாநம்-ஸ்ருஜாமி-அஹம்॥

𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! பாரதவம்சத்திற் பிறந்தவனே ॥
𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾	எந்தெந்தக் காலங்களில்
𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯	தர்மத்திற்கு
𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌃	குறைவும்
𑌅𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯	அதர்மத்திற்கு
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌂	அபிவிருத்தியும்
𑌭𑌵𑌤𑌿	உண்டாகிறதோ
𑌤𑌦𑌾𑌹𑌿	அப்போதுதான்
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂	என்னை
𑌅𑌹𑌂	நான்
𑌸𑍃𑌜𑌾𑌮𑌿	சிருஷ்டித்துக்கொள்ளுகிறேன்.

ஓ! அர்ஜுனா! எந்தெந்தக் காலங்களில் (வருணாச்ரமாதி) தர்மத்திற்குக் கெடுதியும், அதர்மத்திற்கு அபிவிருத்தியு முண்டாகிறதோ, அப்பொழுது, என்னை நான் சிருஷ்டித்துக்கொள்ளுகிறேன், (நான் ஒரு ரூபத்துடன் வெளிப்படுகிறேன், அல்லது அவதாரஞ் செய்கிறேன்.)

---

(1)" 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯-என்னையே ஆசிரயித்துக்கொண்டும், என் தரிசனத்தை யெதிர்பார்த்துக்கொண்டும், தன்னுடைய தேக சம்ரக்ஷணையிலாசையை விட்டும், என்னைப் பாராத க்ஷணகாலத்தை அநேக கல்பங்களாக எண்ணியும், தேகேந்திரியங்களை யடக்கியு மிருக்கிற வைஷ்ணவ சிரேஷ்டர்களுக்கு." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்)-"இனி, 'அப்படிப் பிறப்பது எக்காலத்தில் எதற்காக?' என்பது சொல்லுவோம். வருணத்தாலும், ஆச்சிரமத்தாலும், மற்றும் இத்தன்மையவற்றாலும் அறியப்படுவதாய், பிராணிகளின் செல்வத்திற்கும், உறுதியான நன்மையாகிய முக்திக்கும் ஸாதநமாயிருக்கின்ற தர்மத்திற்குக் குறைவும், அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் நான் என்னை மாயையினால் படைத்துக்கொள்கிறேன்; ஜனங்களுக்குப் புலப்படுகின்றேன். (7)

---

௮. 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥

8. பரித்ராணாய (1)-ஸாதூநாம்-விநாசாய-ச-துஷ்க்ருதாம்(2)|
தர்மஸம்ஸ்தாபநார்தாய(3)-ஸம்ஹவாமி-யுகேயுகே(4) ||

𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂	ஸாதுக்களுடைய
𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯	இரக்ஷணைக்காகவும்,
𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂	துஷ்டர்களுடைய
𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚	நாசத்திற்காகவும்,
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯	தர்மத்தை நிலைநிறுத்தும்பொருட்டும்,
𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇	யுகந்தோறும்
𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿	அவதாரஞ் செய்கிறேன்.

ஸாதுக்களுடைய ரக்ஷணைக்காகவும், துஷ்டர்களுடைய நாசத்திற்காக (என்றால், அவர்களை சிக்ஷித்து நல்ல மார்க்கத்தில் கொண்டுவருகிறதற்காக)வும், தர்மத்தை நிலைநிறுத்தும்பொருட்டும் யுகந்தோறும் அவதாரஞ் செய்கிறேன்.

---

(1)"பரித்ராணாய-என்னுடைய ஸ்வரூபதரிசனம், லீலாவிசேஷங்களைக் காண்பிப்பதனாலேயும், என்னுடைய ஸம்பாஷணையை அடையும்படி செய்வதனாலேயும் ஸம்ரக்ஷிக்கிறதற்காகவும்." (ராமானுஜர்).

(2)"துஷ்க்ருதாம் - மேற்சொன்ன ஸாதுக்க ளல்லாதவர்களுடைய." (ராமானுஜர்).

(3)"தர்மஸம்ஸ்தாபனார்தாய - வேதோக்தமாயும், என்னுடைய ஆராதனரூபமாயுமுள்ள தர்மத்தை ரக்ஷிக்க." (ராமானுஜர்).

(4)"யுகே யுகே-அந்தந்தக் காலத்தில்."(ஸ்ரீதரர்.)

(ஸ்வ) முன் சுலோகத்தில் பகவான் 'என்னை நான் சிருஷ்டித்துக் கொள்ளுகிறேன்,' என்றது எதற்காக என்பது இந்தச் லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸாதுக்கள் என்பவர்கள் ஸன்மார்க்கத்தி லிருப்பவர்கள். துஷ்கிருதாள் என்பவர்கள் பாபங்களாயினவற்றைச் செய்பவர்கள். பகவான் அவதரித்துத்தான் ரக்ஷணை செய்யவேண்டும் என்கிற நிர்ப்பந்தனை இல்லை. அவருக்கு இஷ்டமான வேறு விதத்திலும் ரக்ஷணை செய்யக்கூடும். (8)

---

௯. 𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌮𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨𑍈𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ॥

9. ஜந்ம-கர்ம-ச-மே-திவ்யம்(1)-ஏவம்-ய꞉-வேத்தி-தத்வத꞉।
த்யக்த்வா-தேஹம்-(2)-புன꞉-ஜந்ம(3)-ந-ஏதி-மாம்-ஏதி-ஸ꞉-அர்ஜுந ||

𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨	ஓ அர்ஜுனா !
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂	திவ்வியமான
𑌮𑍇 𑌜𑌨𑍍𑌮	என்னுடைய அவதாரத்தையும்
𑌕𑌰𑍍𑌮 𑌚	செய்கையையும்
𑌯𑌃 𑌏𑌵𑌂	எவன் இவ்விதமாய்
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿	உண்மையாக அறிகிறானோ
𑌸𑌃	அவன்
𑌦𑍇𑌹𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	தேகத்தை விட்டு
𑌪𑍁𑌨𑌃 𑌜𑌨𑍍𑌮	மறுபடியும் பிறப்பை
𑌨 𑌏𑌤𑌿	அடைகிறதில்லை;
𑌮𑌾𑌮𑍍	என்னை
𑌏𑌤𑌿	அடைகிறான்.

ஓ! அர்ஜுனா! திவ்வியமான என்னுடைய அவதாரத்தையும், செய்கையையும் எவன் இவ்விதமாய் உண்மையாய் அறிகிறானோ, அவன் தன்

தேகத்தை விட்டபின்பு மறுபடியும் பிறப்பை யடைகிறதில்லை. என்னை யடைகிறான்.

---

(1) "திவ்யம்"-என்பதற்கு "அப்ராகிருதம்(ப்ரகிருதி ஸம்மந்த மில்லாத)," "ஐச்வரம்-(ஈசுவர சம்பந்தமானது)" என்று சங்கரர் அர்த்தம் செய்கிறார். "தெய்வ ஸம்பந்தமானது" என்று (ஸ்ரீதரரும்), "அப்ராகிருதமான" என்று (ராமாநுஜரும்) அர்த்தம் செய்திருக்கிறார்கள். "வேறு அபேக்ஷை இல்லாமல் ஸ்வயமாகவே பிரகாசிப்பதான" என்று (சங்கரானந்தர்).

(2) "தேஹம்-தேஹாபிமானத்தை" (ஸ்ரீதரர்).

(3) "ஜந்ம" என்பதற்கு, 'ஸம்ஸாரத்தை" என்று (ஸ்ரீதரர்).

(சங்கர பாஷ்யம்) மனிதர் சரீரம்போல் ப்ரகிருதியினாலாகிய தல்லாததாய் ஈசுவரனுக்கு என்று விசேஷமாய் அமைவதான என்னுடைய அவதாரமானது மாயையினால் ஆகியது எனவும், என்னுடைய செய்கைகளானவை நல்லோரைப் பாதுகாத்தல் முதலியன எனவும், இப்படி முன் சொன்னவாறு உள்ளது உள்ளபடி எவன் அறிகிறானோ, அவன் இந்தத் தேகத்தை விட்டவுடன் மறுபடியும் பிறப்பை அடையமாட்டான்; அவன் என்னை அடைகிறான்; ஸம்ஸாரத்தினின்று முற்றும் விடுபடுகிறான்."

(ராமாநுஜர்) "ஜ=முக்குணங்களோடு கூடிய ப்ரகிருதி ஸம்பந்தமான ஜநநமற்றவனாயும், ஸர்வேசுவரத்துவ - ஸர்வக்ஞத்துவ- ஸத்திய ஸங்கல்பத்துவாதி அநந்த கல்யாண குணங்களுடன் கூடினவனாயு மிருக்கிற என்னுடைய, ஜந்ம=அவதாரத்தையும், கர்ம=ஸாதுக்களுடைய ஸம்ரக்ஷணார்த்தமாகவும், என்னை யாசிரயித்து ஜனங்கள் கடைத்தேறுவதற்காகவும் நான் செய்த அவதார சரித்திரத்தையும், திவ்யம்= அப்ராகிருத மென்பதாக உண்மையாய் எவன் அறிகிறானோ."

(இராகவேந்திரர்) "பகவானுடைய அவதார மஹிமை, சரித்திர மஹிமை இவைகளின் தத்துவத்தை யறிந்து, அதனால் முக்தி யடையத் தகுந்த ஜீவன் எவனோ அப்படிப்பட்ட ஜீவன் முக்தியடையும் விஷயத்தை நிருபித்துக் காட்ட இந்தச் சுலோக முண்டானதாக அறியத்தக்கது."

(ஸூ) இந்தச் சுலோகத்தில் "ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஜந்ம= அவதாரம், கர்ம=செய்கை ஆகிய இவற்றை யறிந்தவனுக்கு மறுபிறப்பு இல்லை" என்று சொல்லியிருக்கிறது. இராமகிருஷ்ணாதி அவதாரங்களையும், இராவண சிசுபாலாதி வதம் முதலிய செய்கைகளையும் சாதாரண ஜனங்கள்கூட அறிவார்களே? அவர்களுக்கெல்லாம் மறுபிறப்பு இல்லையோ? என்றால்—

இதில் சொன்ன அறிவு மேற்கண்ட சாமானியமான அறிவல்ல. ஏனெனில், "தத்வத:=உண்மையாய்" என்கிற பதம் இந்தச் சுலோகத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. 'அதனால் அவதார புருஷன் யார்? அவன் செய்கை எப்படிப்பட்டது?' என்பவைகளை அறியவேண்டியது அவசியமாகிறது. முந்திய சுலோகங்களில் "உலகத்தில் தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் காலத்திலும், துஷ்டர்கள் அதிகரித்து ஸத்துக்களுக்குத் துன்ப முண்டாக்கும் காலத்திலும் அவதாரங்கள் செய்யப்படுகின்றனவாகச் சொல்லப்படுகின்றன. எந்த உத்தேசமாய் அவதாரம் செய்யப்படுகிறதோ அந்த அவதாரத்தில் அந்தக் காரியம் தடையின்றி நிறைவேற்றவும் படுகிறது. இவைகளைச் சாமானியமான தேவதையாவது மனுஷ்யனாவது செய்யத் தகுமோ? ஆகையால், 'ஸாக்ஷாத் பரமேசுவரனே லோகத்தை ரக்ஷிக்கும்பொருட்டு அவதாரம் செய்து துஷ்டர்களை யடக்கி ஸத்துக்களை ரக்ஷிக்கிறார்' என்றும், 'அவர் அநந்த கல்யாணகுண கணநிதி,' என்றும், 'ஸகல உலகத்தையும் படைத்துக் காத்து அதில் தான் லீலாவதாரம் செய்கிறார்,' என்றும், 'அவர் அன்றி அணுவும் அசையாது,' என்றும், 'அவரை ஸ்மரித்தவனின் பாபம் நாசமடையும்,' என்றும் உண்மையா யறிந்து, (அடுத்த சுலோகப்படி) உலகப் பற்றுக்களை நீக்கி மனதை அந்தப் பரமேசுவரனிடத்தில் நிறுத்துகிறவன், மறுபிறப்பற்றதாகிய வைகுண்ட பதவியை யடைவா னென்பதில் சந்தேகமே யில்லை. அப்படியன்றி 'இராமகிருஷ்ணாதி யவதாரங்கள் செய்கிற புருஷனைச் 'சாதாரண இராஜ குமாரர்கள்,' என்றும், 'ஆனால் விசேஷ பலமும் ஸாமர்த்தியமும் உள்ளவர்கள்', என்றும் நினைத்து, உண்மையை யறியாமற்போவார்களாகில், அவர்கள் பிறவியாகிய கடலிலிருந்து கரையேற மாட்டார்கள் என்பது இந்தச் சுலோகத்தின் கருத்து. (9)

---

௧௦. வீதராகபயக்ரோதா மன்மயா மாமுபாஶ்ரிதா: ।
பஹவோ ஜ்ஞானதபஸா பூதா மத்பாவமாகதா: ॥

10. வீதராகபயக்ரோதா:(1)-மன்மயா:(2)-மாம்-உபாஶ்ரிதா:(3) ।
பஹவ:-ஜ்ஞானதபஸா(4)-பூதா:-மத்பாவம்(5)-ஆகதா: ॥

வீதராகபயக்ரோதா: ஆசை, பயம், கோபம் நீங்கினவர்களாய்
மன்மயா: என் மயமானவர்களாய்
மாம் உபாஶ்ரிதா: என்னையே ஆசிரயித்தவர்களாய்
பஹவ: அநேகர்
ஜ்ஞானதபஸா ஞானமாகிற தபஸினாலே

வீதராக: பரிசுத்தர்களாய்,
மத்பாவம் என் பாவத்தை (மோக்ஷத்தை)
ஆகதா: அடைந்தார்கள்.

ஆசை, பயம், கோபம் ஆகிய அவைகள் நீங்கியவர்களாய், என் மய மானவர்களாய் (அதாவது தன் ஆத்மாவுக்கும் ஈசுவரனுக்கும் பேதமில்லை யென்று காண்பவராய்), என்னை ஆசிரயித்தவர்களாய், அதாவது, பரமேசு வரனை என்னையே அடைக்கலமாகக் கொண்டவர்களாய், அநேகர் ஞானமா கிற தபசினாலே பரிசுத்தர்களாய், என்னுடைய ஸாயுச்சியத்தை யடைந்தார் கள்; (என்றால், ஐக்கிய முக்தியை யடைந்தார்க ளென்பது தாத்பரியம்.)

---

(1) "ராகம்"-என்றால் "பலனில் ஆசை" என்று (மதுஸூதன சரஸ் வதியும்), "போகங்களிலும் உபகாரம் செய்கிறவர்களிடத்திலும் உள்ள ஆசை" என்று (சங்கராநந்தரும்), "விஷயங்களிலே ரஞ்சன ரூபமான மனோ விருத்தி" என்று (பாஷ்யோத்கர்ஷ தீபிகைக்காரரும்) அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

(2) "மன்மயா:-தானே ஈசுவரனென்று அறிந்தவர்களா யிருக்கிற" (சங்கரர்). "என்னைத்தவிர மற்ற வஸ்துக்களில் திருஷ்டி யில்லாத" (மத்வர்), "நானே சர்வோத்தம னென்றும், சகல ஜகத்திற்கும் முக் கிய காரணனென்று மறிந்திருக்கிற" (இராகவேந்திரர்).

(3) "உபாஸ்ரிதா:-ஞானநிஷ்டை யினை யுறிகிற" (சங்கரர்); "என் னையே சரணாகதி யடைந்திருக்கிற" (இராகவேந்திரர்).

(4) "ஜ்ஞாந தபஸா-ஞானத்தினாலும், தபசினாலும்," (ஸ்ரீதரர்). "என்னுடைய ஜன்ம கர்மத்தினுடைய தத்துவத்தை யறிகிற ஞான மாகிய தபசினாலே" (ராமாநுஜர்). "ஞானமாகிற தபசினாலே அல்லது ஞானத்தினாலேயும் தபசினாலேயும்" (இராகவேந்திரர்).

(5) "மத்பாவம்-மோக்ஷத்தை," (சங்கரர்). "ஸாயுச்சியத்தை, ஸ்ரீநாராயணனுடைய சமீபத்தி லிருப்பதானது ஸாயுச்சியமென்று சொல்லப்படும்." (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) "இந்த மோக்ஷமார்க்கமானது இக்காலத்தில் ஏற் பட்டதன்று; அது ஆதிகாலத்திலும் கூட உள்ளது என்பதைப் பக வான் சொல்லுகிறார். 'மன்மயா' என்றால் ப்ரஹ்மவித்தாய், அதாவது ப்ரஹ்மத்தை அறிந்தவராய், ஈசுவரனுக்கும் தனக்கும் பேதமில்லையெனக் காண்பவர். மாமுபாஸ்ரிதா:-என்றால் பரமேசுவரனை என்னையே அடைக்கலமாக அடைந்தவர், அதாவது ஞானம் ஒன்றிலேயே உறுதி

யாக நிற்பவர். இப்படி அநேகர் பரமாத்மாவைப்பற்றிய ஞானமென்னும் தபசினால் சிறந்த பரிசுத்தத்தைப் பெற்று என் ஸாவத்தை, அதாவது ஈசுவரன் நிலையை, மோக்ஷத்தை நன்றாய் அடைந்தார்கள். ஞானநிஷ்டையானது மோக்ஷத்தைக் கொடுக்கும் விஷயத்தில் தனக்கு உதவியாக இதர தபஸ்களை அபேக்ஷியாது நிற்பதைக் குறிப்பிடுவதற்காக 'ஞானமாகிய தபசினால்' என்னும் விசேஷணம் சேர்க்கப்பட்டிருக்கிறது."

(ஸூ) 'ஸாவம்' இதற்கு ராமாநுஜர் அர்த்தஞ் சொல்லவில்லை. ஆனால் 8-அத். சுலோ. 5-ல் இந்தப் பதத்திற்கு, "என்னை எந்த ரூபமாய் ஸ்மரிக்கிறானோ அந்த ஸ்வரூபம்" என்றும், 14-அத். 19-20 சுலோகங்களில் "ஆத்மாநுபவத்தை" என்றும் அர்த்தஞ் செய்திருக்கிறதனால் அதி லொன்றை இவ்விடத்தில் சொன்னதாகக் கொள்ளத்தக்கது. (10)

---

௧௧. 𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

11. யே-யதா-மாம்-ப்ரபத்யந்தே-தாந்-தயா-ஏவ-஭ஜாமி-அஹம் ।
மம-வர்த்ம-அநுவர்தந்தே-மநுஷ்யா:-பார்த-ஸர்வஶ: ॥

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! அர்ஜுனா!
𑌯𑍇	எவர்கள்
𑌯𑌥𑌾	எவ்விதமாய்
𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇	என்னை உபாஸிக்கிறார்களோ
𑌤𑌾𑌨𑍍	அவர்களை
𑌤𑌥𑍈𑌵	அவ்விதமாகவே
𑌅𑌹𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿	நான் அநுக்கிரகிக்கிறேன்;
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃	மனிதர்கள்
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮	என்னுடைய மார்க்கத்தை
𑌸𑌰𑍍𑌵𑌶𑌃	ஸகலவிதத்தினாலேயும்
𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇	அநுஸரிக்கிறார்கள்.

ஓ! அர்ஜுனா! எவர்கள் எவ்விதமா யென்னை யுபாஸிக்கிறார்களோ அவர்களை யவ்விதமாகவே நான் அநுக்கிரகிக்கிறேன். மனிதர்கள், என்னுடைய மார்க்கத்தை ஸகலவிதத்திலேயும் அநுஸரிக்கிறார்கள்.

---

(1) "யதா-பலனைக்கோரியாவது, பலனைக்கோராமலாவது" (சங்கரர்).

(2) '஭ஜாமி' இந்தப் பதத்திற்கு 'பஜிக்கிறேன், உபாஸிக்கிறேன்,' என்னும் அர்த்தந்தான் சாதாரணமாய்ச் சொல்லக்கூடுமானாலும், இதுபர

மாத்மாவாகிய கிருஷ்ணஸ்வாமி வாக்கியமாகையால் பாஷ்யக்காரர்கள் 'அநுக்கிரகிக்கிறேன்,' என்று அர்த்தஞ் செய்தார்கள்.

(3) "வர்த்ம - பூஜாரூபமான மார்க்கத்தை" (சங்கரர்). "பஜனை மார்க்கத்தை." (ஸ்ரீதரர்). "ஸ்வபாவத்தை" (ராமாநுஜர்).

(4) "ஸர்வஶ:-ஸத்கர்மத்தினாலாவது, ஞானத்தினாலாவது, கீர்த்தனாதிகளினாலாவது, மற்றெப்படியாவது." (ஷா).

(சங்கர பாஷ்யம்) "அப்படியானால் உங்களுக்கு ஒன்றினிடத்து விருப்பும் மற்றொன்றினிடத்து வெறுப்பும் உண்டு என்று ஆகும். ஏனெனில், நீங்கள் ஆத்மநிலையை, அதாவது மோக்ஷத்தைச் சிலர்க்கு மாத்திரமேயன்றி எல்லோருக்கும் தந்தருளுவதில்லையே? என்றால், அதற்கு உத்தரம் சொல்லுகிறார்.

எவர்கள் எவ்விதமாக எப் பிரயோஜனத்தோடு, அதாவது, எப் பயனை வேண்டி என்னை அடைகிறார்களோ, அவ்விதமாகவே அப் பயனை அளிப்பதனால் அவர்களை அநுக்கிரகிக்கிறேன். எவர்களுக்கு மோக்ஷத்திலே விருப்ப மில்லையோ அவர்கள் அதைக் கோராததனால் அடைவதில்லை. ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விருப்பமுடைமையும், இம்மை மறுமைப் பயன்களிலே விருப்பமுடைமையும் ஒருவனுக்கு ஒரே காலத்தில் நிகழாதன்றோ? ஆதலால், ஸ்வப்பிரயோஜனத்தை நாடுகிறவர்களுக்கு, அவர்கள் இஷ்டபூர்த்தி செய்கிறேன். ஆனால், எவர்கள் சாஸ்திரங்களிற் கூறியபடி ஸகலத்தையும் செய்பவராய், இம்மை மறுமைப் பயன்களை வேண்டாதவராய், ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்புபவராய் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து அருளுகின்றேன். ஞானிகளாயும், ஸந்யாஸிகளாயும், முமுக்ஷுக்களாயும் இருப்பவர்கள் எவர்களோ, அவர்களை மோக்ஷமளிப்பதனால் அருளுகின்றேன். அவ்வண்ணமே, துயருற்றவர்களை அவர்கள் துயரத்தைப் போக்குவதனால் அநுக்கிரகிக்கின்றேன். எவர்கள் என்னை எவ்வாறு அடைகிறார்களோ, அவர்களை அவ்வாறே யான் அநுக்கிரகிக்கின்றேன் என்பது பொருள். மற்று, விருப்பினாலாவது, வெறுப்பினாலாவது, மோஹத்தினாலாவது நான் ஒருவனையும் அநுக்கிரகிப்பதில்லை. எல்லா நிலையையும் உடையவனாய் எங்கும் ஆத்ம ஸ்வரூபமாகவேயுள்ள ஈசுவரனாகிய என்னால் கூறப்பட்டுள்ள ஞான கர்மமார்க்கத்தை மனிதர்கள் எவ்வகையாலும் அநுஸரிக்கிறார்கள். எப்பயனை வேண்டி அதற்கு ஏற்ப எக்கர்மத்தைச் செய்ய உரியவராகி, எவர்கள் முயற்சி செய்கின்றார்களோ, அப் பயனைப் பெறுதற்கு அத் தொழிலைச் செய்யும் அவர்கள்

'மனிதர்கள்' எனப்படுகிறார்கள். இங்கே 'மனிதர்கள்' என்பதற்கு 'மநுஷ்யர்களும், ராக்ஷஸன்-குரங்கு-யானை முதலிய மற்றப் பிராணிகளும் உள்பட' என்பது பொருள். (இங்கு 'மார்க்கம்' என்றது ஞான கர்மரூப மானது)."

(ஸ்ரீதரர்) "என்னையே உபாசிப்பவர்களுக்கு ஸாயுச்சியபதவியைக் கொடுக்கிறேன்' என்பதாக முன் சொல்லப்பட்டதனால், 'மற்ற இந்திராதி தேவதைகளை யுபாசிப்பவர்களுக்குப் பலனைக் கொடுப்பதில்லை' என்றாகிறது. இதனால் ஈசுவரனிடத்தில் பக்ஷபாத மிருப்பதாகக் காணப் படுகிறதே' என்றாலோ, அப்படிப் பக்ஷபாத மில்லையென்பதை இந்தச் சுலோகத்தினால் பகவான் வெளிப்படுத்துகிறார். எப்படியென்றால் 'யதா - எவ்விதமாய்' என்கிற பதத்தினாலே, பலனை இச்சித்தாவது, இச்சிக்காமலாவது, என்னை நேராயாவது, இந்திராதி தேவதாசொரூப மான என்னை அந்தத் தேவதைகளாகவாவது உபாசிக்கிறார்களோ, அவர் களுக்கு அவரவர்கள் கோரிக்கையை யநுசரித்து நானே பலனைக் கொடுக் கிறேன் என்றாகிறது."

(ஸூ) "யஜ்ஞத்தினா லாராதிக்கிற இந்திராதி தேவதாநாமங்கள் என்னுடைய நாமங்களே யாகையால் அந்த நாமங்களினா லாராதிக்கப்படு கிறவனும் நானே ஆகிறேன்" என்பது தவிர மற்றப் பாகங்களுக்கு மேற் சொன்னபடியே மத்வர் தாத்பரியம் செய்கிறார். "என்னை ஆச்ரயிக்கிற வனைமட்டும் அநுக்கிரகிக்கிறே னென்பதல்ல; என்னை ஆச்ரயிக்க மன முள்ளவனாய் எப்பலனைக் கோரியாவது உபாஸிப்பவனையுங்கூட அநுக் கிரகித்துத் தரிசனமும் கொடுக்கிறேன்" என்பது (ராமாநுஜர்) தாத் பரியம். (11)

---

௧௨. காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: ।
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா ॥

12. காங்க்ஷந்த:-கர்மணாம்-ஸித்₃தி₄ம்-யஜந்தே-இஹ-தே₃வதா: ।
க்ஷிப்ரம்-ஹி-மாநுஷே-லோகே-ஸித்₃தி₄:-ப₄வதி-கர்மஜா ॥

இஹ	இந்த லோகத்தில்
கர்மணாம் ஸித்திம்	கர்மங்களுடைய பலனை
காங்க்ஷந்த:	அபேக்ஷிக்கிறவர்கள்
தேவதா:	இந்திராதி தேவதைகளை
யஜந்தே	ஆராதிக்கிறார்கள்;

𑌹𑌿	ஏனென்றால்,
𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃	கர்மத்தின் உண்டாகிற பலனானது
𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇	மநுஷ்யலோகத்தில்
𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌭𑌵𑌤𑌿	சீக்கிரமாக உண்டாகிறது.

இந்த லோகத்தில் கர்மங்களுடைய பலனை அபேக்ஷிக்கிறவர்கள் இந்திராதி தேவதைகளை ஆராதிக்கிறார்கள். ஏனென்றால், கர்மபலனானது மனுஷ்யலோகத்தில் சீக்கிரமாக உண்டாகிறது.

(சங்கர பாஷ்யம்) "ஈசுவரனாகிய உங்களுக்குஆசைமுதலிய குற்றங்கள் இல்லாமையால் பிராணிகளை ஈடேற்றவேண்டுமென்னும் விருப்பம் ஸகலப்பிராணிகள்மேலும் ஸமமாயுள்ளது. தாங்களோ எப்பயனையும் தந்தருள வல்லவர். இவ்வாறுள்ள அளவிலே, ஸகலரும் "எல்லாம் வாஸுதேவனே" என்னும் ஞானத்தினாலேயே ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்பிபவராய் உங்களையே ஏன் அடைகிறதில்லை? என்றால், அதற்குக் காரணங் கூறுகிறேன் கேள்.

இவ் வுலகத்திலே தாம் செய்யும் கர்மங்களின் பயன் தமக்குக் கை கூடுதலை வேண்டுகிறவர்கள், இந்திரன் அக்நி முதலான தேவதைகளைத் தொழுகிறார்கள். இதை, 𑌅𑌥 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌃 𑌏𑌵𑌂 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑍍"— "இனி ஏவன், 'அவன் வேறு நான் வேறு' எனக் கொண்டு வேறு தேவதையை உபாசிக்கிறானோ அவன் மனிதர்கட்கு ஆடு மாடு முதலியன எப்படியோ அப்படியே தேவதைகட்கு அவன் ஆவன்" என்னும் ப்ருஹதாரண்யக உபநிஷத் (1-4-10) சுருதி வாக்கியத்தினால் காண்க. பயனை விரும்பி வேறு தேவதைகளைப் பூஜிப்பவராய், வருணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் உரித்தானவராய், அவ் வருணாசிரமங்கட்கு ஏற்பத் தத்தம் கர்மத்தைச் செய்கின்ற அவர்கட்கு அக் கர்மத்தால் வரும் பயன் விரைவாகக் கை கூடுகின்றது. சாஸ்திரத்தின் அதிகாரம் மநுஷ்யலோகத்தில்தான்; அதாவது, மனுஷ்யலோகத்திற் காகவே ஏற்பட்டது என்பது பொருள். "மநுஷ்யலோகத்திலே விரைவாக" என்னும் விசேஷணத்தால், மற்றைய லோகங்களிலும் கர்மத்தின் பயன் உண்டாகும் என்பதைப் பகவான் எடுத்துக் காட்டுகிறார். ஆனால், வருணம் ஆச்ரமம் முதலானவற்றிற் கேற்கக் கர்மத்திலே அதிகாரம் இந்த மனுஷ்ய லோகத்திலேயன்றி மற்ற உலகங்களி லில்லை என்பது தான், இவ் வுலகத்திற்கும் மற்றைய உலகத்திற்கு முள்ள வேறுபாடு.

(ராமாநுஜர்) "𑌕𑌰𑍍𑌮𑌜𑌾=கர்மத்தினு லுண்டாகிற, 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃=பலனுனது, 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇=இந்த மனுஷ்ய லோகத்திலேயும், சுவர்க்கலோகத்திலேயும், 𑌹𑌿=யாதொரு காரணத்தினுலே, 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂=சீக்கிரமாக, 𑌭𑌵𑌤𑌿=உண்டாகிறதோ, (𑌕𑍁𑌤𑌃)-அந்தக் காரணத்தினுலே, 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂=கர்மத்தினு லுண்டாகிற பசு-புத்திர-சுவர்க்காதி பலனை, 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃=அபேக்ஷிக்கிறவர்கள், 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃=தேவதைகளை, 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇=ஆராதிக்கிருர்கள். இதன் தாத்பரிய மென்னவென்ருல், 'தேவதைகளை ஆராதிப்பவர்களுக்குச் சீக்கிரமாய்ப் பலன் கிடைக்கிறது' என்று சொன்னதனுலேயே, 'என்னை யாராதிப்பவர்களுக்குச் சீக்கிரம் பலன் கிடைக்கமாட்டாது' என்று சொன்னதாக ஆகிறதாகையால், 'நித்திய சுகமான மோக்ஷபலன் சீக்கிரம் கிடைக்கமாட்டாது' என்பதும், 'இந்த மோக்ஷ பலனை அபேக்ஷிக்கிறவர்கள் வெகு சிலர்' என்பதுமே."

(இராகவேந்திரர்) "எந்தத் தேவதைகளை ஆராதித்தாலும் அந்தத் தேவதாந்தர்யாமியாயிருக்கிற நானே பலனைக் கொடுக்கிறேன். (12)

---

௧௩. 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 ॥

13. சாதுர்வர்ண்யம்-மயா-ஸ்ருஷ்டம்-குணகர்மவிபாகசஃ ।
தஸ்ய-கர்தாரம்-அபி-மாம்-வித்தி-அகர்தாரம்-அவ்யயம் ॥

𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂	நாலு வருணங்களும்
𑌮𑌯𑌾	என்னுலே
𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃	குணகர்மங்களின் பிரிவினுல்
𑌸𑍃𑌷𑍍𑌟𑌂	சிருஷ்டிக்கப்பட்டன;
𑌤𑌸𑍍𑌯	அதற்கு
𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿	கர்த்தாவானபோதிலும்
𑌮𑌾𑌂	என்னை
𑌅𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂	கர்த்தாவல்ல என்றும்
𑌅𑌵𑍍𑌯𑌯𑌂	நிர்விகாரியாகவும்
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿	அறி.

(பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர) நான்கு வருணங்களுமென்னுல் குணங்கள், கர்மங்கள், இவைகளின் பிரிவுகளுக்குத் தக்கபடி சிருஷ்டிக்கப்பட்டன. அந்தக் குணகர்ம விபாகமாகிய சிருஷ்டிகளுக்கு நானே கர்த்தாவானுலும் என்னை வாஸ்தவத்தில் கர்த்தா அல்ல என்றும், நிர்விகாரி என்றும், அறி.

---

(1) "சாதுர்வர்ண்யம் - நாலு வருணங்களை முக்கியமாயுடைய பிரம்மா முதல் ஸ்தம்பம்வரையிலுள்ள ஜகத்." (ராமாநுஜர்).

(2) "ஸ்ருஷ்டம் என்பதில் ஸ்திதியும் சங்காரமும் அடங்கியிருக்கின்றன." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "மநுஷ்ய லோகத்திலேதான் வருணம் ஆச்ரமம் முதலானவற்றிற்கு ஏற்பக் கர்மத்திலே அதிகாரம்; இதர லோகங்களில் இவ்வாறு இல்லை' என்னும் நியமம் எதனாலாகியது என்பது இதில் சொல்லப்படுகிறது. அல்லது, ,'வருணம் ஆச்ரமம் முதலிய வேறுபாட்டையுடைய மனிதர்கள் எவ்வகையாலும் என் வழியை அநுஸரிக்கிறார்கள் என்று முன் கூறப்பட்டதே; அவர்கள் எக்காரணத்தால் உம்முடைய வழியையேயன்றி வேறு வழியை அநுஸரிப்பதில்லை' என்பது சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம்.

நான்கேயான ஜாதியானது குணத்தின் பலவிதமான ஏற்றத் தாழ்ச்சியான அளவிற்குத் தக்கபடியும், அவ்வாறே கர்மத்தின் பலவிதமான அளவிற்குத் தக்கபடியும் ஈசுவரனாகிய என்னால் அமைக்கப்பட்டது. இதனை, "ப்ராஹ்மணன் இதனுடைய முகமானான்" (ருக்வேதம்: 10-99) என்பது முதலான சுருதியினால் அறிக. குணங்கள்: ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்பன. அந்த நான்கு வருணங்களுள் ஸத்வகுணத்தை முதன்மையாகவுடைய ப்ராஹ்மணனுக்கு: சாந்தம், அடக்கம், தபஸ் முதலானவை உரிய கர்மங்கள். ஸத்வகுணத்தைத் துணையாகவும், ரஜோகுணத்தை முதன்மையாகவுமுடைய க்ஷத்திரியனுக்கு: பராக்கிரமம் முதலியன உரிய கர்மங்கள். தமோகுணத்தைத் துணையாகப் பெற்றுள்ள ரஜோகுணத்தை முதன்மையாகவுடைய வைசியனுக்கு: வேளாண்மை முதலியவை உரிய கர்மங்கள். ரஜோகுணத்தைத் துணையாகப் பெற்றுள்ள தமோகுணத்தை முதன்மையாகவுடைய சூத்திரனுக்கு உரியது ஊழியம் என்னும் ஒரே கர்மந்தான். 18-ம் அத் - 42, 43, 44 சுலோகங்களைப் பார்க்க.) இவ்வாறு குணம் கர்மம் என்றவற்றின் பலவிதமான அளவிற்கு ஏற்ப நான்கு வருணமும் என்னால் படைக்கப்பட்டன என்பது பொருள். பிரஸித்தமான இந்த நான்கு ஜாதியும் மற்ற உலகங்களில் இல்லை; ஆதலால்தான் 'மனுஷ்ய லோகத்திலே' என்னும் விசேஷம் முன 12-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது,

அப்பொழுது இந்த நான்கு வருணத்தையும் சிருஷ்டித்ததற்கு நீர் கர்த்தாவாதலால் அதன் பயனுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றீர்; ஆகவே, நீங்கள் ஸம்ஸாரத்தினின்று விடுபட்டவராகவும், என்றும் ஈசுவரராக

வும் ஆகமாட்டீர்களே என்றால் அப்படியல்ல. மாயையின் வியவகாரத்தால் நான் அத் தொழிலுக்குக் கர்த்தாவாக வியவகரிக்கப்பட்டாலும் உண்மையாக அகர்த்தாவாதலால் நான் ஸம்ஸாரத்திற்கு உட்படாதவனென்று தெரிந்துகொள்.''

(வ்யா) இந்தச் சுலோகத்தில் முதலில் சிருஷ்டிக்குக் கர்த்தா தான் என்றும், பிறகு சிருஷ்டிக்குத் தான் கர்த்தா அல்லவென்றும் சொல்லப்பட்டது. இஃது ஒன்றுக்கொன்று விரோதம்போல் காணப்பட்டாலும் விரோதமல்லவென்பதை அடியிற் கண்ட பாஷ்யக்காரர்களும் வியாக்கியாதாக்களும் நிரூபித்திருக்கின்றார்கள். எப்படியென்றால், ''மாயையைஸ்வீகரித்துச் சிருஷ்டிகளைச் செய்கிறபடியால் கர்த்தாவாகச் சொல்லப்பட்டபோதிலும் பாரமார்த்திகத்தில் கர்த்தாவல்ல'' என்று சங்கரரும். ''சிருஷ்டி விஷயத்தில் நான் கர்த்தாவானாலும், பலாபேக்ஷயாவது பற்றுதலாவது எனக்கு இல்லாததினால் அந்தச் சிருஷ்டி கர்மபலன் என்னை ஒட்டுகிறதில்லை யாகையால் நான் கர்த்தாவல்ல'' என்று ஸ்ரீதரரும்; ''எனக்கு ஒன்றைச் சிருஷ்டி செய்வதில் யாதொரு பிரயாசையுமில்லை; மற்றவர்கள் ஒன்றை யுண்டாக்கவேண்டுமானால் அதிகப் பிரயாசைப் படவேண்டும்; நான் நினைத்தமாத்திரத்தில் சிருஷ்டியாய்விடு மாகையால் நான் கர்த்தாவல்ல'' என்று மத்வரும், ஸகல சிருஷ்டிக்கும் நான் கர்த்தாவானாலும் எனக்குக் கர்த்தாவில்லை யாகையால், நான் (அகர்த்தா) கர்த்தாவுடையவனல்ல; ஏன் அகர்த்தா வென்பதற்குக் காரணம் அடுத்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது'' என்பதாக இராகவேந்திரரும் சொல்லுகிறார்கள்,

இதில் சொல்லப்பட்டிருக்கிற வருணங்கள் என்பது ப்ராஹ்மணாதி நான்கு ஜாதிகள். குணங்கள் மூன்று வகைப்படும், அவையாவன:— உத்தமமான சத்துவ குணம், மத்தியமான ரஜோ குணம், அதமமான தமோ குணம். கர்மமென்பது ப்ரஹ்ம-க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்களுக்கு விதிக்கப்பட்டிருப்பதும், 18-ம் அத். 42, 43, 44-ம் சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளுந்தான்,குணவிபாகம்மட்டும் பாஷ்யக்காரர்களும் வியாக்கியாதாக்களும் சொல்லியிருக்கிறபடி அடியில் விவரிக்கப்படுகிறது.

(1) ''ப்ராஹ்மணனுக்கு - சத்துவகுணம் அதிகம், ரஜோகுணம் குறைவு'' (சங்கரர், ஸ்ரீதரர், இராகவேந்திரர்). ''சத்துவகுணமுடையவன் ப்ராஹ்மணன்'' (மத்வர்).

(2) ''க்ஷத்திரியனுக்கு - சத்துவகுணம் குறைவு, ரஜோகுணம் அதிகம்.'' (சங்கரர் இராகவேந்திரர்). ''சத்துவ ரஜோகுணங்கள்

அதிகம்'' (ஸ்ரீதரர்). ''சத்துவ ரஜோகுணங்களை யுடையவன் க்ஷத்திரியன்.'' (மத்வர்).

(3)''வைசியனுக்கு - ரஜஸ் தமோகுணங்க ளிரண்டும் அதிகம்.'' (சங்கரர்). ''ரஜஸ் அதிகம், அதைவிட சத்துவம் குறைவு, அதை விட தமஸ் குறைவு.'' (இராகவேந்திரர்). ''ரஜோகுண தமோகுண முள்ளவன் வைசியன்.'' (மத்வர்).

(4)''சூத்திரனுக்கு-ரஜஸ் சொற்பம், தமஸ் அதிகம்,'' (சங்கரர்). ''தமஸ் அதிகம்'' (ஸ்ரீதரர், மத்வர்). ''தமஸ் அதிகம், அதைவிட ரஜஸ் சத்துவம், குறைவு'' (இராகவேந்திரர்).

இந்தத் தாத்பரியங்களைச் சேர்த்துப் பார்ப்போமாகில் ஒவ்வொரு வருணத்தாரும் முக்குணங்கள் உள்ளவர்க ளென்றும், சிலகுணம் சிலரிடத்தில் அதிகமாயும், சிலரிடத்தில் குறைவாயும் இருக்குமென்றும் குறித்துக் காட்டியதாக இருக்கிறது. அந்த வருணங்கள் சிருஷ்டிக்குங்காலத்தில் அவனவனுடைய பூர்வஜன்ம கர்மாநுஸாரமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டன. எப்படியென்றால், ஸத்துவகுணப் பிரதானமான சமம் தமம் முதலிய தர்மங்களையுடையவனைப் பிராஹ்மணனாகவும், ரஜோகுணப் பிரதானமான சௌரியம் முதலிய தர்மங்களை யுடையவனை க்ஷத்திரியனாகவும், மற்று மிப்படியே மற்ற வருணங்களும் சிருஷ்டிக்கப் பட்டனவாகத் தாத்பரியம். இராகவேந்திரர் ''ஸாத்துவிகத்தில் ஸாத்துவிகம், ராஜஸத்தில் ஸாத்துவிகம், தாமஸத்தில் ஸாத்துவிகம்'', என்று பாகித்து மத்தியிலிருப்பதாகிய ராஜஸ ஸாத்துவிகத்தைமட்டும் எடுத்துக் கொண்டு மேற்கண்டவிதமாய்ப் பாகிக்கவேண்டியதாகச் சொல்லியிருக்கிறார். (13)

கச. ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா ।
இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபி: ந ஸ பத்யதே ॥

14. ந-மாம்-கர்மாணி-லிம்பந்தி-ந-மே-கர்மபலே-ஸ்ப்ருஹா ।
இதி-மாம்-ய:-அபிஜாநாதி-கர்மபி:-ந-ஸ:-பத்யதே ॥

கர்மாணி	கர்மங்கள்
மாம்-ந லிம்பந்தி	என்னை ஒட்டுகிறதில்லை;
மே	எனக்கு
கர்மபலே ஸ்ப்ருஹா	கர்மபலத்தில் ஆசையானது
ந	இல்லை;
இதி	இவ்விதமாய்
ய: மாம்	எவன் என்னை

அபிஜாநாதி	தெரிந்துகொள்ளுகிறானோ
ஸ:	அவன்
கர்மபி: நபத்யதே:	கர்மங்களினாலே கட்டப்படுகிறதில்லை.

கர்மங்கள் என்னை ஒட்டுகிறதில்லை; எனக்குக் கர்மபலனில் ஆசையில்லை, என்று இவ்விதமாக என்னை எவன் தெரிந்துகொள்ளுகிறானோ, அவன், கர்மங்களினாலே கட்டப்படுகிறதில்லை. (ஏனென்றால், கர்மங்களுக்குக் காரணமான அகங்காரம் நீங்கிவிடுவதினாலேதான்.)

(சங்கர பாஷ்யம்) "நீ என்னை எந்தக் கர்மங்களுக்குக் கர்த்தாவாக நினைக்கின்றாயோ அவற்றிற்கு நான் உண்மையில் கர்த்தா அல்ல. ஏனெனில், எனக்கு அஹங்காரம் இல்லாமையால் அந்தக் கர்மங்கள் என்னைப் பற்றுவதில்லை; அதாவது, எனக்குத் தேகாதிகளை, ஜன்மத்தை உண்டாக்குவதில்லை. அக் கர்மங்களின் பலன்களிலே எனக்கு ஆசையுமில்லை. ஆனால், ஸம்ஸாரிகளான உலகவாழ்க்கையில் பற்றுள்ள எவர்கட்குக் கர்மங்களிலே 'நான் கர்த்தா' என்ற எண்ணமும், அவற்றின் பலன்களிலே ஆசையும் உள்ளனவோ அவர்களைக் கர்மங்கள் பற்றுகின்றன என்பது ஏற்கும். அவை எனக்கு இல்லாததினால் கர்மங்கள் என்னைப் பற்றமாட்டா. 'நான் கர்த்தா அல்ல, எனக்குக் கர்மத்தின் பலனிலே ஆசை யில்லை' என இவ்வாறாக அறிகிறவன் வேறு எவனானபோதிலும், அவனும் கர்மங்களால் கட்டப்படுவதில்லை. அவனுக்குங்கூட மறுபிறப்பை (சரீரம் முதலானவற்றை) உண்டாக்கும் கர்மங்கள் இல்லை என்பது பொருள்."

(ராமாநுஜர்) "என்னைக் கர்மபலன் ஏன் ஒட்டுகிறதில்லையென்றால், அந்தந்தப் பிராணிகளுடைய பிராசீன கர்மங்களுக்குத் தக்கபடி, தேவ மனுஷ்ய பசு பக்ஷியாதி தேகங்களாய்ச் சிருஷ்டிக்கிறேனேயன்றி யாதொரு வைஷம்யத்தினால் நான் அப்படிச் சிருஷ்டி செய்கிறதில்லை. அந்தந்தப் பிராணிகளுடைய தேகத்திற்குக் காரணம் அவரவர்களுடைய பிராசீனகர்மமாகையால் நான் யாதொரு பக்ஷபாதஞ் செய்தவனாகிறதுமில்லை. யாதொரு தோஷம் என்னை ஒட்டவுமாட்டாது. அப்படியே பிராசீனகர்மத்திற்குத் தக்கபடி அவர்களுக்குப் புசிக்கத்தகுந்த வஸ்துக்களையும் சிருஷ்டிக்கிறேன். அந்தப் பலனில் எனக்கு யாதொரு ஸம்பந்தமு மில்லை. ஆகையால், பலனும் என்னை ஒட்டுகிறதில்லை. சிருஷ்டிக்குக் காரணம் அவரவர்களுடைய பிராசீனகர்மமே. நான் நிமித்தகாரணமாய்மட்டும் இருக்கிறேன். இப்படி என்னை எவன் அறிகிறானோ அவன், தன்னுடைய கர்மயோகத்திற்கு விரோதியான பிராசீன கர்மத்தினால் கட்டப்படுகிறதில்லை.

(மத்வர்) "பக்ஷபாதம் (வைஷம்மியம்) இல்லாததினால் கர்மம் ஒட்டுகிறதில்லை. ஆசை யில்லாததினால் பலன் ஒட்டுகிறதில்லை."

(இராகவேந்திரர்) "ஜீவனைப்போல் நான் பலனை அபேக்ஷித்துக் கர்மங்களைச் செய்கிறதில்லை. ஆகையால், கர்மங்களேனும் பலனேனும் என்னைக் கட்டுப்படுத்துகிறதில்லை. அந்தந்தப் பிராணியின் பிராசீன கர்மத்தை யநுசரித்துச் சிருஷ்டி செய்வதினால் பல விசித்திர சிருஷ்டி செய்த பக்ஷபாத தோஷம் என்னை யடைகிறதில்லை. இப்படி என்னை யறிந்தவனுக்குப் பந்த மில்லை. அவனுக்கே பந்த மில்லாதபோது எனக்குப் பந்தம் எப்படி யுண்டாகும்? 'இப்படி என்னை யறிந்தவன்' என்கிற வாக்கியத்தினால் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பரமாத்மா என்பதும், அறிகிறவன் ஜீவன், அறியப்படுகிறவன் அந்த பரமாத்மா என்பதும், வியக்தமாகிறபடியால் ஜீவேசுவரபேதம் ஸ்தாபிக்கப்பட்டது."

(ஸ்வ) கர்மங்களாவது அவைகளின் பலனாவது பகவானை ஒட்டுகிறதில்லையென்றுமட்டும் தெரிந்துகொண்டவன் கர்மங்களினால் கட்டுப்படுகிறதில்லையென்று சொல்வதானால், ஞானநிஷ்டை முதலியவைகள் அநாவசியமாகும். ஆகையால், முன் சுலோகத்தில் சொல்லியபடி, பகவானைச் சிருஷ்டியாதி கர்மங்களுக்குக் கர்த்தாவாக எண்ணுவது, மாயையின் வியவகாரத்தால் அஜ்ஞானதசையில் கற்பிக்கப்படுகிறது; உண்மையில் ஆத்மா அகர்த்தா என்று ஆத்மதத்துவத்தை அறியவும் வேண்டும். அந்த ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடையவேண்டி, கர்மயோகத்தை அநுஷ்டித்துவருபவன் 'கர்மங்களுக்கு நான் கர்த்தா அல்ல' என்று அகங்காரம் நீங்கி, 'எனக்குக் கர்மத்தின் பலனிலே ஆசை யில்லை' என்று அவன் செய்யும் கர்மங்கள் அவனைப் பந்தப்படுத்தமாட்டா என்பது நிச்சயம்.

---

௧௫. 𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃।
𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍॥

15. ஏவம்-ஜ்ஞாத்வா-க்ருதம்-கர்ம-பூர்வைஃ-அபி-முமுக்ஷுபிஃ ।
குரு-கர்ம-ஏவ-தஸ்மாத்-த்வம்-பூர்வைஃ-பூர்வதரம்-க்ருதம் ॥

𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾	இவ்விதமாய் அறிந்து
𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃	மோக்ஷ இச்சையுள்ள
𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿	முன்னோர்களாலுங்கூட
𑌕𑌰𑍍𑌮 𑌕𑍃𑌤𑌂	கர்மமானது செய்யப்பட்டது;
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே

த்வம்	நீ
பூர்வை꞉ க்ருதம்	முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்டதும்
பூர்வதரம்	வெகு புராதனமுமான
கர்மைவ குரு	கர்மத்தையே செய்.

("நான் கர்த்தா அல்ல; எனக்குக் கர்மத்தின் பலனிலே ஆசையில்லை" என) இவ்விதமாய்த் தெரிந்து முன்னோர்களும், மோக்ஷ இச்சையுள்ளவர்களுமான ஜனகாதிகளினாலேயுங்கூடக் கர்மம் செய்யப்பட்டதாகையினாலே முன்னோர்களாலே செய்யப்பட்டதும் நீடித்து வந்ததுமான கர்மத்தையே நீ செய். (மஹா ஞானிகளான ஜனகன் முதலானவர்கள்கூடக் கர்மஞ் செய்துவந்தார்கள். ஆகையால், நீ, கர்மஞ் செய்யமாட்டேனென்று சொல்ல யோக்கியனல்லவென்பதும், கர்மத்தைச் செய்து பலனை ஈசுவரார்ப்பணஞ் செய்தால், அதனால் சித்தசுத்தியும் ஞானமுமடைந்து ஞானத்தினால் மோக்ஷமடையலாமென்பதும் கருத்து.)

(சங்கர பாஷ்யம்) "நான் கர்த்தாவல்ல, எனக்குக் கர்மத்தின் பலனிலே ஆசை யில்லை" என இவ்விதமாகத் தெரிந்துகொண்டு ஸம்ஸாரத்தினின்று விடுபட விரும்பிய முன்னோர்களாலும் கர்மம் அனுஷ்டிக்கப்பட்டமையால் நீ கர்மத்தையே செய்யவேண்டுமேயன்றி மௌனமாக உட்கார்ந்திருக்கவாவது, கர்மங்களை விட்டுவிடவாவது கூடாது.

நீ ஆத்மஞான மில்லாதவனாயின் அப்பொழுது சித்தசுத்திக்காகக் கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும். நீ ஆத்மஞான முள்ளவனாயின் லோகஸங்க்ரஹத்திற்காக, அதாவது, உலகத்திற்கு நல்வழி காட்டுவதற்காகிலும் கர்மத்தைச் செய்யவேண்டும் அன்றியும், அக் கர்மமானது முற்காலத்திலே ஜனகாதியர்களான முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததேயன்றி இப்பொழுது புதிதாக ஏற்பட்டதன்று."

(ஸ்வ) 'இவ்விதமாய்' அறிந்து என்றால், முன் சுலோகங்களில் சொல்லியபடி என்பது; ஷை சுலோகங்களின் கீழ் (ஸ்வ) அபிப்பிராயத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க. (15)

---

௧௬. கிம் கர்ம கிமகர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா꞉ ।
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽஶுபாத் ॥

16. கிம்-கர்ம-கிம்-அகர்ம-இதி-கவய꞉-அபி-அத்ர-மோஹிதா꞉ ।
தத்-தே-கர்ம-ப்ரவக்ஷ்யாமி-யத்-ஜ்ஞாத்வா-மோக்ஷ்யஸே-
[அஶுபாத்॥

𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌂	கர்மமென்பது எது?
𑌅𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌂	அகர்மமென்பது எது?
𑌅𑌤𑍍𑌰	என்கிற இந்த விஷயத்தில்
𑌕𑌵𑌯𑍋𑌽𑌪𑌿	பண்டிதர்களுங்கூட
𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃	மோஹத்தை அடைந்திருக்கிறார்கள்;
𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾	எதை அறிந்து
𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍	ஸம்ஸாரபந்தமான பாபத்திலிருந்து
𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇	விடுபடுவாயோ
𑌤𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 (𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮)	அந்தக் கர்ம அகர்மங்களை
𑌤𑍇 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿	உனக்குச் சொல்லப்போகிறேன்.

கர்மமென்பது எது? அகர்மமென்பது எது? என்கிற விஷயத்தில் பண்டிதர்களுங்கூட மோஹத்தை அடைந்திருக்கிறார்கள். எதைத் தெரிந்து, அல்லது அநுஷ்டித்து ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுவாயோ, அந்தக் கர்மாகர்மங்களை உனக்குச் சொல்லப்போகிறேன்.

(சங்கர பாஷ்யம்) "இம் மனுஷ்ய லோகத்தில் கர்மத்தைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு நீங்கள் சொல்வதையே பிரமாணமாகக் கொண்டு நான் கர்மத்தைச் செய்வேன். அப்படியிருக்க முன்னோர்களாலே பழைய காலத்திலே கர்மம் செய்யப்பட்டது என்று சிறப்பித்துச் சொல்வதினால் என்ன விசேஷம் என்றால், கர்மம் இன்னதென்று தெரிந்துகொள்வதில் அதிக கஷ்டம் இருக்கின்றது. ஏனெனில், கர்மம் இன்னது, அகர்மம் இன்னது என்பதைத் தெரிந்துகொள்ளும் விஷயத்திலே பண்டிதர்களும் கூட மோஹத்தை அடைகின்றார்கள்; அதாவது, தவறிப் போகிறார்கள். ஆகையால், கர்மம் அகர்மம் ஆகிய இவ் விரண்டினுடைய தத்வம் (உண்மை) இன்னதென்று நான் உனக்கு விவரித்துச் சொல்லுகிறேன். இதைத் தெரிந்துகொள்வதினால் ஸம்ஸாரமாகிய துக்கத்தினின்று நீ விடுவிக்கப்படுவாய்.

(ஸூர்) இந்தச் சுலோகத்தின் இரண்டாவது பாகத்தில், 𑌤𑌤𑍍𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 என்கிற வாக்கியம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதங்களை இராகவேந்திரர்:- 𑌤𑌤𑍍-𑌤𑍇-𑌕𑌰𑍍𑌮 என்று முதலில் பிரித்தார்; அப்படியானால், 𑌤𑌤𑍍=அந்த, 𑌕𑌰𑍍𑌮=கர்மத்தை, 𑌤𑍇=உனக்கு என்று அர்த்தமாகிறது. கர்மத்தை உனக்குச் சொல்லுகிறேனென்றால், அகர்மத்தைச் சொல்லவில்லையென்றாகிறது. அகர்மம் எப்படிப்பட்டதென்று மேலாகக் கேள்வி போடப்பட்டிருக்கையிலும், பிந்திய சுலோகத்திலுத்தரஞ் சொல்

லப்பட்டிருக்கையிலும் அகர்மத்தையுங்கூடச் சொல்லுகிறேனென்பது இந்தச் சுலோகத்தினல் விளங்கவேண்டும். ஆகையால், தத்-தே-கர்ம-தத்-தே-அகர்ம-என்று பிரித்து அந்தக் கர்மா கர்மங்களை உனக்குச் சொல்லுகிறேனென்று பின்னும் ஓர் அர்த்தஞ் செய்தார். சங்கரரும், ஸ்ரீதரரும் அகர்மத்தையும் சேர்த்தார்கள். ராமாநுஜர்: கர்மகிம் முமுக்ஷுக்கள் அநுஷ்டிக்கவேண்டிய கர்ம மெப்படிப்பட்டது, அகர்ம கிம்=அந்தக் கர்மத்திற்குள் அடங்கியிருப்பதாகிய கர்த்தாவினுடைய ஆத்ம ஸ்வரூபஞானமாகிற அகர்ம மெப்படிப்பட்டது என்கிற விஷயத்தில், வித்வான்கள்கூட மோகித்திருக்கிறார்க ளென்பதாக அர்த்தஞ் செய்திருக்கிறார். (அகர்மமென்பது, கர்மஞ் செய்கிறவனுடைய ஆத்ம ஸ்வரூப மிப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்ளுகிற ஞானமெதுவோ அந்தஞான மென்றும், அந்த ஞானம் கர்மத்தி லடங்கியிருப்பதாகவும், ராமாநுஜர் தாத்பர்யம்)

---

௧௭. கர்மணோ ஹ்யபி போத்3த4வ்யம் போத்3த4வ்யம் ச விகர்மண: ।
அகர்மணஶ்ச போத்3த4வ்யம் க3ஹநா கர்மணோ க3தி: ॥

17. கர்மண:-ஹி-அபி-போத்3த4வ்யம்-போத்3த4வ்யம்-ச-விகர்மண: ॥
அகர்மண:-ச-போத்3த4வ்யம்-க3-ஹநா-கர்மண:-க3தி: ॥

ஹி	ஏனென்றால்,
கர்மண: அபி	கர்மத்தைப்பற்றியும்
போத்3த4வ்யம்	தெரிந்துகொள்ளவேண்டியது
(அஸ்தி)	இருக்கின்றது;
விகர்மண: ச	விகர்மத்தைப்பற்றியும்
போத்3த4வ்யம் (அஸ்தி)	தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது;
அகர்மணஶ்ச	அகர்மத்தைப்பற்றியும்
போத்3த4வ்யம் (அஸ்தி)	தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது;
கர்மண: க3தி:	கர்ம, (அகர்ம, விகர்ம)த்தின் போக்கானது
க3ஹநா	அறிதற்குக் கஷ்டமானது.

ஏனென்றால், கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது; விகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு; அகர்மத்தைப்பற்றியும், தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு. கர்ம (அகர்ம, விகர்ம)த்தின் போக்கானது, அதாவது அவற்றின் உண்மையானது அறிவதற்கு அரிதானது.

(1) "கர்மணஃ=சாஸ்திர விஹிதமான கர்மம்." (சங்கரர்); "வேதோக்தமான ஸத் கர்மம்." (ஸ்ரீதரர், இராகவேந்திரர்); மோக்ஷஸாதன கர்மம்." (ராமாநுஜர்).

(2) "விகர்மணஃ= செய்யக்கூடாதென்று வேதத்தினால் நிஷேதிக்கப்பட்ட நிஷித்த கர்மம்." (சங்கரர், ஸ்ரீதரர், இராகவேந்திரர்); "நித்திய நைமித்திக காமிய கர்மங்களும், அவைகளுக்குக் காரணமான திரவிய ஸம்பாதனை முதலிய பலவித கர்மங்களும்." (ராமாநுஜர்).

(3) "அகர்மணஃ=கர்மத்தைச் செய்யாமை." (சங்கரர், ஸ்ரீதரர், இராகவேந்திரர்); "கர்மத்தி லடங்கியிருக்கிற அகர்த்தாவாகிய தன்னுடைய ஆத்ம சொரூபஞானம்." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "கர்மமென்பது உடம்புமுதலியவற்றின் அசைவு என்றும், அகர்மமென்பது அவற்றின் தொழிலின்மை என்றும் உலகத்திலே யாவர்க்கும் தெரிந்ததே. ஆகவே, அதில் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? ஒன்றும் இல்லை, என்று நீ இவ்வாறு கொள்ளவும் கூடாது. ஏனெனில், சாஸ்திரத்தில விதிக்கப்பட்ட கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது; விலக்கப்பட்ட விகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியது இருக்கவே இருக்கின்றது; அவ்வாறே, மௌனமாயிருத்தலாகிய அகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியது இருக்கின்றது. 'கர்மம், விகர்மம், அகர்மம்' என்றவற்றின் போக்கானது, உள்ளபடியான தன்மையானது; ஆதாவது, அவற்றின் உண்மை கஷ்டமானது; அதாவது, அறதற்கு அரிதானது. 'இருக்கின்றது' என்பதை மூன்றிடங்களிலும் வருவித்துக்கொள்க. 'கர்மத்தின்' என்பது உபலக்ஷணத்தினால், விகர்மம் முதலானவற்றையும் குறித்துநிற்கின்றது. உபலக்ஷணம்-ஒருசொல் தன்னோடு தன் இணங்களையும் கொள்ளுதற்கு உரியதாய் நிற்றல். 'சோற்றை உண்டான்' என்றால், 'அதனோடு கறிமுதலியவற்றையும் தின்றான்,' என்பது கூறாமலே அமைதலால், 'சோறு' என்னும் சொல் மற்றைக் கறிமுதலிய தன் இனங்களையும் கொள்ளுதற்கு உரியதாய் நிற்றல்போல் காண்க."

(ஸ்வ) ஸ்ரீதரர் முதலான வியாக்யாதாக்கள் கர்மணஃ= கர்மத்தினுடைய" என்று எடுத்துக்கொண்டு "கர்மணஃ தத்வம் = கர்மத்தினுடைய தத்வம்" என்று அர்த்தம் செய்கிறார்கள். விகர்மத்தில் அறிய வேண்டியதாவது - நித்திய, நைமித்திய, காமிய, திரவியார்ஜனாதி கர்மங்களில் பல பேதத்தை விட்டு மோக்ஷமே பலமென்றும், கர்மங்களுடைய சுவபாவம் ஒன்றென்றும் அநுஸந்தானம்" என்பது ராமாநுஜர்

அபிப்பிராயம். இராகவேந்திரர், "கர்மண:-ந: = நமக்கு, கர்ம= கர்மமானது, உத்தமமானது. விகர்மண:-ந:=நமக்கு, விகர்ம = விகர்மமானது, நிஷித்தமானது. அகர்மண: - ந: = நமக்கு, அகர்ம= ஸகலகர்மமும் ஈசுவராதீனமாயுள்ளது, என்று அறிவது" என்கிறார். (17)

---

௧௮. கர்மண்யகர்ம ய: பஶ்யேதகர்மணி ச கர்ம ய: ।
ஸ புத்திமாந்மநுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்நகர்மக்ருத் ॥

18. கர்மணி-அகர்ம-ய:-பச்யேத்-அகர்மணி-ச-கர்ம-ய: |
ஸ:-புத்திமாந்-மநுஷ்யேஷு-ஸ:-யுக்த:-க்ருத்ஸ்ந கர்மக்ருத்||

ய: கர்மணி	எவன் கர்மத்தில்
அகர்ம பஶ்யேத்	அகர்மத்தைப் பார்க்கிறானோ,
ய:	எவன்
அகர்மணி ச	அகர்மத்திலும்
கர்ம (பஶ்யேத்)	கர்மத்தைப் பார்க்கிறானோ
ஸ:	அவன்
மநுஷ்யேஷு	மனிதர்களுக்குள்
புத்திமாந்	புத்திமான்;
ஸ: யுக்த:	அவன் யோகி;
க்ருத்ஸ்நகர்மக்ருத்	ஸகலமான கர்மங்களையுஞ் செய்தவன்.

எவன், கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் பார்க்கிறானோ அவன் மனிதர்களில் விவேகமுள்ளவனாயும், மனஸ் ஸமாதானமுள்ள யோகியாயும், ஸகலமான கர்மங்களையும் செய்தவனாயுமாகிறான்.

---

(1) அகர்மணிச - என்பதிலுள்ள ச சப்தத்தினால் விகர்மமும் குறிக்கப்படுவதாகக் கொள்ளலாம்.

(சங்கர பாஷ்யம்) "ஆனால் கர்ம அகர்மங்களைப்பற்றி விசேஷமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதும், எனக்குச் சொல்லவேண்டியதாக நீங்கள் நினைப்பதுமான கர்மாகர்மங்களின் உண்மை எது? என்று கேட்பாயாகில அதைக் கேள். கர்மம் என்பது செய்கை, உலகத்தவர் செய்யும் ஸகலமான தொழில், (சொல்லுதல், நிற்றல், நடத்தல், நினைத்தல் முதலிய எல்லாத் தொழிலுமாம்).

"பிரவிருத்தியும் நிவிருத்தியும், செய்பவனாகிய கர்த்தாவைச் சார்ந்து நிற்பதால், கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காணக்

கூடும். (‘பிரவிருத்தி’ என்பது ‘தான் கர்மம் செய்தலாகிய முயற்சி’. ‘நிவிருத்தி’ என்பது ‘அதற்கு எதிரிடையான, அகர்மம், ஓய்தலென்னும் முயற்சி’). செய்கை செய்பவன் என்னும் வியவஹாரமும், மற்றுமிவை போன்ற வியவஹாரமுமாகிய ஸகலமுமே அஞ்ஞான நிலையிலேயே, அதாவது, மெய்ப்பொருளை அடையாதவிடத்தன்றோ உள்ளது. கர்மத்திலே கர்மமின்மையும், கர்மமின்மையிலே கர்மத்தையும் எவன் பார்க்கிறானோ அவன் புத்திமான்; அவன் யோகி; அவன் எல்லாக் கர்மங்களையும் செய்தவன் என இவ்வாறு கொண்டாடப்படுகிறான்.”

(ஆக்ஷேபனை) “கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் பார்க்கிறவன்” என்பது, என்ன ஒவ்வாத விரோதமாக இருக்கின்றது? நிச்சயமாகக் கர்மம் ஒருபொழுதும் அகர்மமாகாது, அகர்மமும் கர்மமாகாது; ஒன்றைக் காண்பவன் அதில் அதற்கு விரோதமானதை எப்படிக் காண்பான்?”

(ஸமாதானம்) “அப்படி அன்று. உண்மையிலே அகர்மமாகவே இருப்பது, விவேகபுத்தி மயங்கிய ஜனங்களுக்குக் கர்மம்போலத் தோற்றுகின்றது; அவ்வாறே கர்மமாகவே இருப்பது அகர்மம்போலத் தோற்றுகின்றது. பகவான் அவற்றை உள்ளபடி உணர்த்தும் பொருட்டு ‘எவன், கர்மத்தில் அகர்மத்தைக் காண்கிறானோ’ என்று தொடங்குகிற சுலோகத்தைச் சொல்லுகிறார். மூடதிருஷ்டியினால் ஆத்மாவினிடத்துத் தோன்றிய கர்மத்திலே அகர்மத்தைக் காணுதல் என்பது, ’பிராந்தியினாலே தோன்றியதாகிய வெள்ளியிலே இப்பியைக் காண்பதுபோல.’ பின்னும் அம் மயக்க உணர்வினால் ஆத்மாவினிடத்துத் தோன்றிய அகர்மத்திலே கர்மத்தைக் காணுதல் என்பதும் அப்படித்தான். எப்படியெனில், ஒரு பொருளின் உணர்ச்சி இருந்தாலன்றி அப்பொருள் இல்லை என்னும் உணர்ச்சி வாராது. இப்பியைப் பார்த்து வெள்ளி என்றவிடத்து, இப்பியிலே வெள்ளி கற்பிக்கப்பட்டது. அவ்விதமே, அதைப் பார்த்து, “இங்கே முன் தோன்றிய வெள்ளி இல்லை,” என்றவிடத்து, ‘இல்லை’ என்னும் உணர்ச்சியானது, கற்பிக்கப்பட்ட வெள்ளியின் உணர்ச்சியைத் தழுவி நிற்பதால், ‘இப்பியிலே வெள்ளி இல்லை’ என்பதும் கற்பனைதான். இதை நுட்பமாக ஆராய்ந்து அறியவேண்டும். இவ்வாறே, ஆத்மாவினிடத்துக் கர்மமும், கர்மமில்லை என்பதும் கற்பனை என்று கண்டுகொள்க. (ஆநந்தகிரி). ஆதலால், பகவான் சொல்வதில் விரோதம் ஒன்றுமில்லை. அறிவுடைமை முதலியவை மற்ற ஞானத்தால் அல்லாமல் ஆத்மஞானம் ஒன்றினால் மாத்திரம் அமையுமாதலாலும், கர்ம

கர்மங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது உண்டு என்று முன் கூறி இருப்பதனாலும், பகவான் உள்ளதை உள்ளபடி உணர்த்துவதற்காக இந்தச் சுலோகத்தைச் சொல்லுகிறார். அன்றியும், தீமையினின்று நீங்குதலும் மயக்க உணர்வினால் அமையாது. ஏனெனில், 'எதனை அறிந்து நீ தீமையினின்றும் நீங்குவாயோ' என்று இந்த 16-வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், பிராணிகளெல்லாம் கர்ம அகர்மங்கள் இரண்டினையும் விபரீதமாகக் கொண்டிருக்கின்றன என்று, அதை நீக்குவதற்காக இந்தச் சுலோகத்தைப் பகவான் கூறுகிறார் என்க. கர்மம் அகர்மம் இரண்டும் ஸாமான்ய ஜனங்களால், 'கானலில் ஜலம்போல' ஆவது, 'இப்பியில் வெள்ளிபோல' ஆவது விபரீதமாகவே கிரகிக்கப்பட்டு இருக்கின்றனவென்பது ஸித்தம். அப்படியானால், 'கர்மம் எல்லார்க்கும் கர்மமாகவேதானிருக்கின்றது. அது ஒரு இடத்திலாயினும் வேறொன்றாக மாறுவதில்லையே?' என்றால் அது சரியல்ல. கப்பலில் இருப்பவனுக்குக் கப்பல் விரைவாகச் செல்லுகையில்,கரையில் நிற்கும் மரங்கள் வாஸ்தவத்தில் நிலை பெயர்ந்து செல்லுதல் இல்லாதனவாயினும், அவனுக்கு அவை அவ்வாறு எதிராகச் செல்லுதல் தோற்றுவதுபோலும், சமீபத்தில் இல்லாது வெகு தூரத்தில் நடக்கின்றவனிடத்து அவ்வாறு செல்லுதலில்லாமல் நிற்றல் கண்ணுக்குத் தோற்றுதல்போலும், ஆத்மாவினிடத்து அகர்மத்திலே கர்மம் தோற்றுதலும், கர்மத்திலே அகர்மம் தோற்றுதலும் விபரீதமான தோற்றமாம் என்க. ஆனால், அவ் விபரீதமான தோற்றம் வாஸ்தவம்போல் இருத்தலால் அதை நீக்கும்பொருட்டுப் பகவான் 'கர்மத்தில் அகர்மத்தை' என்று அருளிச்செய்கிறார்.

இவ்வித ஸந்தேக நிவிர்த்திக்காக, அடிக்கடி பலவிடங்களில் மறுமொழி கூறப்பட்டிருந்தும், மிக்க விபரீதமான உணர்வினால், பொய்ப்பொருளின் வாஸனையே உலகத்தவர் மனதில் ஆழ்ந்திருப்பதால், அடுத்தடுத்து மயக்கமுறும் உலகமானது ஒரு தடவைக்குப் பல தடவையாகக் கேட்கப்பட்டிருக்கிற உண்மையை மறந்து மறந்து, ஏதோ ஒரு பொய்யான மோகத்தில் புகுந்து புகுந்து ஆத்மாவினிடத்துக் கர்மம் உண்டென்று ஆக்ஷேபிக்கின்றதையும், மெய்ப்பொருளையறிதல் மிக அருமை என்பதையும் உத்தேசித்துப் பகவான் மறுபடியும் மறுபடியும் அவ்விஷயத்தை எடுத்துக்கொண்டு உபதேசித்தருளுகிறார்.

ஆத்மாவினிடத்துக் கர்மம் இல்லை என்பது சுருதியினாலும், ஸ்மிருதியினாலும், யுக்தியினாலும் நன்கு விளங்கும். பகவானும் முன் இரண்டாவது அத்தியாயத்திலும், பின் அத்தியாயங்களிலும் அதைக் கூறியிருக்

கிறார். ஆயினும், ஆத்மாவினிடத்துக் கர்ம மின்மையாகிய அகர்மத்தில் கர்மமாகிய விபரீதத்தைக் காணுதலானது பிராணிகளுடைய மனத்தினுள் அளவு கடந்து வேரூன்றி இருப்பதனால்தான், 'எது கர்மம் எது அகர்மம் என்ற இவ் விஷயத்தில் ஞானிகளும் மோக மடைந்திருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டது. "நான் செய்பவன், இது என்னுடைய தொழில், இத் தொழிலின் பயனை நான் அனுபவிக்கவேண்டும்" என உடம்பு முதலியவற்றைச் சார்ந்து நிற்கும் தொழிலை, ஆத்மாவினிடத்து ஏற்றி, அவ்வண்ணமே, "நான் தொல்லை யில்லாது தொழி லில்லாது ஸுகியாயிருக்குமாறு மௌனமா யிருக்கின்றேன்" எனத் தேகம் மனம் இந்திரியங்களென்றவற்றைச் சார்ந்து நிற்கும் ஓய்வையும், அதாவது தொழில் ஓய்ந்து இருத்தலையும், அதனால் உண்டான சௌக்கியத்தையும் (ஸுகமாயிருத்தலையும்), ஆத்மாவினிடத்து ஏற்றி "நான் ஒன்றுஞ் செய்வதில்லை; மௌனமாக ஸுகமாய் இருக்கின்றேன்." என்று உலகம் அபிமானித்து நிற்கின்ற காரணம், நான் என்னும் அஹங்காரம் மேலிட்டிருப்பதனால்தான். இப்படி யிருப்பதனால், ஜனங்களுடைய மயக்க உணர்வைப் போக்குவதற்காகப் பகவான் இதனைக் கூறுகின்றார்.

ஆகவே, தேகம் மனம் இந்திரியங்கள் என்றவற்றைச் சார்ந்து நிற்கும் கர்மம், கர்மமாகவே இருந்துகொண்டு, விவகாரநிலையிலே, எல்லாராலும் கர்மமில்லாத நிர்விகாரியான ஆத்மாவினிடத்து ஏற்றப்பட்டிருக்கின்றது. ஏனெனில், பண்டிதனும் கூட "நான் செய்கிறேன்" என நினைக்கிறான். அப்பொழுது இச் சுலோகத்தின் கருத்து என்னவென்றால், தெப்பத்தி லிருப்பவன், எதிரே செல்லுதலால் விறைந்து நடப்பனபோலத் தோற்றுகின்றனவாய் நதிக்கரையில் நிற்கும் மரங்களினிடத்து, உண்மையில் நடத்தலின்மையைக் காண்பதுபோல, எவன், ஆத்மாவோடு ஸமவேதமாயிருப்பதாக ஸகல ஜனங்களும் விபரீதமாய்த் தெரிந்துள்ள கர்மத்திலே கர்மமின்மையை உள்ளபடி காண்கிறானோ, அவன் அறிவுள்ளவன். (ஸமவேதமாயிருப்பது நூலொடு வெண்மை நிறம்போல ஒற்றித்திருப்பது.) தேகம் மனம் இந்திரியங்கள் என்றவற்றினுடைய தொழிலின் ஓய்வாகிய அகர்மமானது "நான் மௌனமாய் ஒன்றும் செய்யாமல் ஸுகமாயிருக்கிறேன்" என்னும் அஹங்காரத்தோடு கூடியதாகிய தொழிலுக்குக் காரணமாவதால், ஆத்மாவினிடத்துக் கர்மம்போலவே பொய்மையாக ஏற்பட்ட அகர்மத்திலும், எவன், கர்மத்தை, அதாவது "நான் ஒன்றும் செய்யாமல் ஸுகமாய் இருக்

கின்றேன்" என்று அங்கரித்தல் போன்ற தொழிலைக் காண்கின்றானோ, அதாவது, எவன் இவ்வாறாகக் கர்ம அகர்மங்களின் வேறுபாட்டைப் பகுத்தறிகின்றானோ, அவன் மனிதரில் அறிவுடையவன்; அவன் யோகி; அவன் தீமையினின்றும்விடுபட்டவனாய், செய்யவேண்டியதைச் செய்திருப்பவனாய், முக்தி கைகூடப் பெற்றவனாய் இருக்கிறான் என்பது தேர்ந்த பொருள்.

(இனி இந்தச் சுலோகத்தில் 'கர்மம்' என்பது 'நித்திய கர்மம்' என்றும், 'அதைச் செய்யாது இருப்பது அகர்மம்' என்றும், வேறு சிலர் செய்யும் அர்த்தம் பொருந்தாது என்பது இந்தப் பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க). மேலே சொல்லப்பட்டதைச் சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து.—தேகம், மனம் இந்திரியங்கள் இவைகளினுடைய வியாபாரம் அல்லது செய்கை கர்மமென்றும், தேகாதிகளால் எந்தச் செய்கை அல்லது வியாபாரம் செய்யப்படுவதில்லையோ, அந்தச் செய்யாமை அகர்மமென்றுஞ் சொல்லப்படும். ஆத்மாவுக்குச் செய்வதும், செய்யாமலிருப்பதுமாகிய கர்மாகர்மங்களிரண்டு மில்லை, அவிவேகிகள் கர்மாகர்மங்களை ஆத்மாவினிடத்தில் ஆரோபித்து, அகங்கார மமகாரங்களினால் 'நான் செய்கிறேன், 'நான் செய்யாமலிருக்கிறேன்' என்று வியவஹரிக்கிறார்கள். அதனால் 'ஆத்மா கர்மஞ் செய்வதுபோல் தோற்றப்பட்டாலும், கர்மம் செய்வது தேகாதிகள்' என்றும், 'ஆத்மா கர்மஞ் செய்வதில்லை' என்றும் எவன் அறிகிறானோ அவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்க்கிறான். அதெப்படியென்றால், நதியில் ஓடத்தில் வேகமாய் ஒருவன் போகிறான்; அந்நதிக்கரையிலுள்ள மரங்கள் வேகமாய்ப் போவதுபோல அவனுக்குக் காணப்படுகின்றன. வேகமாய்ப் போகிறதாகிய செய்கை ஓரிடத்திலிருக்கிற தன்னிடத்திலிருக்க, செய்கையற்றனவா யிருக்கிற மரங்களில் செய்கையைப் பார்க்கிறான். அதுபோல, தேகாதிகள் செய்யும் கர்மத்தை ஆத்மா செய்வதாகப் பார்க்கிறான். மரங்களில் கர்மம் (செய்கை) இல்லாததுபோல ஆத்மாவிலும் கர்ம மில்லையென்று பார்க்கிறவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்க்கிறான். மனம், தேகம், இந்திரியங்கள் இவைகளின் வியாபார ஒழிவானது, அதாவது ஒன்றும் செய்யாமலிருத்தல் அகர்மமாகவிருக்க அதைத் தான் (ஆத்மா) செய்யவில்லையென்று மூடன் அகங்காரத்தினால் வியவகரிக்கிறான். எப்படியென்றால், "நான் அதைச் செய்யவில்லை; அதனால் சுகியாயிருக்கிறேன்" என்கிறான். அந்தச் செய்யாமலிருப்பதாகிய அகர்மத்தில் "அதை நான் செய்யவில்லை; அதனால் சுகமாயிருக்கிறேன்" என்பதாகிய அகங்காரத்தினுடைய கர்மமிருக்கிறது. இதில்தான் அவிவேகி அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கிறான்.

அதாவது, செய்யாமலிருப்பதிலுங்கூடத் தான் கர்த்தா என்கிற எண்ண மிருக்கிறதென்று விவேகியானவன் அறிகிறு னென்பது கருத்து.

(ராமாநுஜர்) "தன் ஆத்மசொரூபாநுசந்தானத்தோடு கூடிச் செய்யப்படும் கர்மத்தில் ஆத்மசொரூபஞானம் அடங்கியிருப்பதாக அறி கிறவன், கர்மத்தில் ஞானமாகிற அகர்மத்தைப் பார்க்கிறுன். அகர்ம மாகிற தன்னுடைய ஆத்மசொரூபஞானத்தோடு செய்யப்படும் கர்ம மானது ஞானத்துடன் கலந்தபடியால் ஞானமாகிற அகர்மத்தில் கர் மத்தைப் பார்க்கிறுன். இவ்விதமாய் ஞானம்,கர்மம் ஆகிய இரண்டும் ஒன்று டனென்று சேர்ந்திருப்பதால் ஞானம் கர்மாகாரமாயும், கர்மம் ஞான காரமாயு மாகிறதென்பதை அறிந்தவன் விவேகியென்பது தாத்பரியம்,

(மத்வர்) "கஊ=செய்கை, கிரியை, ஸுகஊ: ஸு=விஷ்ணு, கஊ=செய்கை, விஷ்ணுவினுடைய செய்கை, அல்லது விஷ்ணுவைச் சேர்ந்த செய்கை. தான் கர்மம் செய்தாலும் அந்தக் கர்மத்திற்குக் கர்த்தாவும் கர்மத்தைச் செய்விப்பவரும் விஷ்ணுவாகையால், தான் கர்த்தாவல்ல என்றும், கர்மம் விஷ்ணுவைச் சேர்ந்ததென்றும் எவன் அறிகிறுனே அவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்க்கிறுன். ஜீவன் கர்மம் செய்யாதகாலமாகிய நித்திரைகாலத்தி லுண்டாகும் சொப்பனு வஸ்தையில் அநேக கர்மங்களைத் தான் செய்ததுபோல் காண்கிறுன். சொப்பனுவஸ்தையில் காணும் சகல காரியங்களும் ஈசுவர சிருஷ்டியா யிருந்தாலும் தான் செய்ததுபோல் சொப்பனத்தில் காண்கிறுன். சொப் பனுவஸ்தையில் தான் யாதொரு கர்மமும் செய்யாத அகர்மாவாக இருக் கையில் காணப்படும் செய்கையெல்லாம் ஈசுவர சிருஷ்டியென்று எவன் அறிகிறுனே, அவன் அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கிறுன்."

(இராகவேந்திரர்) [இவர் வாக்கியங்கள் வித்தியாஸமானுலும், மத்வர், தாத்பரியத்தை அநுசரித்தே முதலில் ஒருவித அர்த்தம் சொல்லிவிட்டுப் பின்னும் ஒரு அர்த்தஞ் சொல்லியிருக்கிறுர். அதாவது] "கர்மம் பந்தமானதாகையாலும், ஜீவன் பந்தத்தி லகப்பட்டிருக்கிறு னுகையாலும் கர்மம் என்றுல் ஜீவன்; அவனிடத்தில் கர்த்திருத்துவ மில்லை என்று அறிகிறவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்க்கிறுன். கர்மபத்தன் அல்லவாகையால் அகர்மா ஈசுவரன். அவனிடத்தில் பிர பஞ்ச சிருஷ்டி முதலிய கர்ம மிருக்கிறதாக எவன் அறிகிறுனே அவன் அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கிறுன்.

(ஸ்ரீதரர்) "(கஊணாவஙுதெஜஞ:=பிராணியானவன் கர்மத் தால் கட்டப்படுகிறுன், என்கிற பிரமாணத்தினுல்) கர்மத்தின் சுபாவமே

பந்தத்தைக் கொடுக்கிறதாக இருக்கிறது. அப்படிப் பந்தத்தைக் கொடுப்பதாகிய கர்மமே, பலாபேக்ஷயன்றியில், மமகார அகங்காரங்களை விட்டு, ஈசுவரார்ப்பண புத்தியால் செய்பவனுக்குத் தன் ஸ்வபாவமான பந்தத்தைக் கொடாமல் பிராசீன கர்மபந்தத்தையுங்கூட நிவிர்த்தித்து மோக்ஷப்பிரயோஜனத்தை யுண்டாக்குகிறது. ஆகையால், பந்தரூபமான கர்மத்தில் பந்த நிவிர்த்தியான அகர்மத்தைப் பார்க்கிறான். அதாவது, செய்கிற கர்மமே அகர்மமாய்விடுகிறது.

சோம்பலினாலாவது, தோஷபுத்தியினாலாவது ஸத்கர்மங்களை விட்டுவிடுகிறான். சத்கர்மங்களைச் செய்யாமல் விடுவதே தோஷத்தையும், பந்தத்தையு முண்டுபண்ணுவதாக விருக்கிறது. ஆனதால், கர்மத்தை விடுகிறதாகிய அகர்மத்தில் தோஷமாகிய பந்தத்தைக் கொடுக்கிற கர்மம் அடங்கியிருப்பதாகவும், கர்மத்தை விட்டுவிடாமல் செய்யவேண்டியதென்றும் தெரிகிறவன் அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கிறான்.''

(ஸூ ா) கர்மமென்பது பிரபஞ்ச சிருஷ்டி. அகர்மமென்பது பரப்ப்ரஹ்மம். சிருஷ்டி கர்மத்தில் சிருஷ்டிக்குக் கர்த்தா பரப்ரஹ்ம மல்ல. அவருடைய ஸந்நிதி மாத்திரத்தில் ஸகல பிரபஞ்ச சிருஷ்டிகளாகின்றன. ஆகையால், சிருஷ்டி காரியத்தில் பரப்ரஹ்மம், அகர்த்தாவாகிய அகர்மம், என்று பார்க்கிறவனும், அப்படிப்பட்ட அகர்மமாகிய ப்ரஹ்மத்தையன்றிப் பிரபஞ்ச சிருஷ்டிகாரியஞ் செய்யச் சக்தியுள்ள வேறே யொருவருமில்லை; ஆகையால், அகர்மமாகிய ப்ரஹ்மத்தில் சிருஷ்டியாகிய கர்மத்தைப் பார்க்கிறவனும் மனிதர்களுக்குள்ளே விவேகியாயும் யோகியாயும் ஸகலகர்மங்களையும் செய்தவனுயு மாகிறான். இதன் தாத்பர்ய மென்னவென்றால், ப்ரஹ்மத்தில் சக்தியன்றி சிருஷ்டி யாகவில்லை. ஆனால், அந்தப் பிரஹ்மமானது, குசவன் பானை செய்ததுபோல், பிரபஞ்சங்களைச் சிருஷ்டிக்கவில்லை. அவர் இச்சித்த மாத்திரத்திலும், அவர் சந்நிதிமாத்திரத்திலும் ஸகல சிருஷ்டியு மாய்விடுகிற தென்பதே. இந்த அர்த்தத்தைத்தான் பகவானான கிருஷ்ணசுவாமியானவர் இந்த அத். 13-ல்: ''சிருஷ்டிக்கு நான் கர்த்தாவானாலும் நான் கர்த்தாவல்லவென்று அறி'' என்பதாக அர்ஜுனனுக்குச் சொல்லியிருக்கிறதாகத் தோற்றுகிறது.

இப்படிப் பிரஹ்மத்தை யறிவதினால் என்ன பிரயோஜன மென்றால், ப்ரஹ்மசொரூபம், சக்தி, மகிமை இவைகளைத் தெரிவதே மோக்ஷ ஸாதனமாயும், அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தை ஆசிரயித்து பக்தி செய்தால் பந்த நிவிர்த்தி அடையலாமென்கிற திடமுண்டாக ஹேதுவாகவு மிருக்கிறது.

௧௯. 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑌾𑌰𑌂𑌭𑌾𑌃 𑌕𑌾𑌮𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌬𑍁𑌧𑌾𑌃 ॥ *

19. யஸ்ய-ஸர்வே-ஸமாரம்பா:-காமஸங்கல்பவர்ஜிதா: ।
ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்-தம்-ஆஹு:-பண்டிதம்-புதா: ॥

𑌯𑌸𑍍𑌯 — எவனுடைய
𑌸𑌰𑍍𑌵𑍇 — ஸகல
𑌸𑌮𑌾𑌰𑌂𑌭𑌾𑌃 — கர்மங்களும்
𑌕𑌾𑌮𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 — ஆசை, ஸங்கல்பம் இவைகளற்றிருக்குமோ
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 — ஞானமாகிற அக்கினியால் எரிக்கப்பட்ட கர்மத்தையுடைய
𑌤𑌂 — அவனை
𑌬𑍁𑌧𑌾𑌃 — ஞானிகள்
𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 — விவேகியாக்
𑌆𑌹𑍁𑌃 — சொல்லுகிறார்கள்.

எவனுடைய ஸகல கர்மங்களும் ஆசையும், (இன்னதை அடைய வேண்டுமென்கிற இச்சையாகிற) ஸங்கல்பமு மில்லாமலிருக்கின்றனவோ, ஞானமாகிற அக்கினி (நெருப்பு) யினால் எரிக்கப்பட்ட கர்மத்தையுடைய அவனை, ஞானிகள் விவேகியாகச் சொல்லுகிறார்கள்.

---

* இந்தச் சுலோகத்தை கர்க்கஸம்ஹிதை, மாதுரியகண்டம், அத். 1, 6, 48-ல் காண்க.

(1) "காமஸங்கல்பவர்ஜிதா:-பலவிச்சை, கர்மத்தினால் சுவர்க்கத்தை யடைவே னென்கிற உத்தேசம் இவைகளற்றிருக்குமோ. (இராகவேந்திரர்). "பல இச்சை யற்றதாயிருக்கிறதோ". (ஸ்ரீதரர்). "பலவிச்சையில்லாதவர்களும், பிரகிருதி விமுக்த ஆத்ம சொரூபாநுசந்தானமுள்ளவர்களுமாயிருக்கிற.. (ராமாநுஜர்).

(2) ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்-கர்மத்தி லடங்கியிருக்கிற தன்னுடைய சொரூபஞானமாகிற அக்கினியினாலெரிக்கப்பட்ட பூர்வகர்மத்தையுடைய." (ராமாநுஜர்). "நான் கர்த்தாவல்ல; சகலத்திற்கும் கர்த்தா விஷ்ணுவென்று தெரிந்த ஞானியாகிற. (இராகவேந்திரர்). "கர்மம், அகர்மமாகிறதென்பது தாத்பரியம்." (ஸ்ரீதரர்).

(சங்கர பாஷ்யம்) 'ஆதலால், கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பதனை பகவான் இந்தச் சுலோகத்தில் புகழ்ந்து சொல்லுகிறார். அவ்விதமாக உண்மையைக் காண்பவனால் செய்யப்

படும் கர்மங்களெல்லாம், ஆசைகளும் அவற்றிற்குக் காரணமான ஸங்கல்பங்களும் (அபிமானங்களும்) அற்ற வெறும் செய்கைகளாகச் சும்மா அநுஷ்டிக்கப்படுகின்றன. அவன் பிரவிர்த்தி மார்க்கத்தில் இருப்பவனுயின், லோகசங்கரஹத்திற்காகவும், அல்லது அவன் நிவிர்த்திமார்க்கத்தில் இருப்பவனுயின் ஜீவிப்பதற்கு மாத்திரமாகவும், அக் கர்மங்களைச் செய்கிருன். எவனுடைய நல்வினை தீவினைகளெல்லாம் கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பதான ஞானமென்னும் தீயினுல் எரிக்கப்பட்டு உள்ளனவோ, அவனை ஞானிகளான ப்ரஹ்மவித்துக்கள், அதாவது ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் உண்மையான பண்டிதன் என்கிருர்கள்.''

(ஸ்ரீ) ஆசையும், ஸங்கல்பமு மில்லாமல் ஈசுவரார்ப்பண புத்தியாய்க் கர்மம் செய்துவந்தால், சித்தசுத்தியும் பிறகு ஞானேதயமு முண்டாகும். அப்படி உதயமான ஞானமானது, அக்கினியானது குப்பை முதலியவைகளை எவ்விதம் எரித்துவிடுமோ, அவ்விதம் ஸஞ்சிதம் முதலிய கர்மபந்தங்களை யெரித்துவிடுமென்பது கருத்து.

ஸஞ்சிதம் முதலிய கர்மங்களின் விவரம் சிவபுராணம், வாயுஸம்ஹிதை, அத். 29-ல் காணலாம். அவை வருமாறு:—

“கர்ம த்ரிவிதம் ப்ரோக்தம் கிம் தத்ஸம்ஜ்ஞாயதாம் வத ந: ।
ஸஞ்சிதம் க்ரியமாணஞ்ச ப்ராரப்தஞ்ச த்ரியாத்மகம் ॥
பூர்வஜந்மஸமுத்பூதம் ஸஞ்சிதம் ஸமுதாஹ்ருதம் ।
தேந ஜந்மாந்தரம் யச்ச க்ரியதே கர்ம ஸாம்ப்ரதம் ॥
ஶுபாஶுபஞ்ச யச்சைவ க்ரியமாணம் விதுர்புதா: ।
ஸஞ்ஜாதேந ஶரீரேண ப்ராரப்தம் பரிகீர்த்திதம் ॥
ப்ராரப்தகர்மணோ போகாத் க்ஷயஶ்சைவ நசாந்யதா ।
பாபம் விநாஶரீரஸ்ய த்ருவம் நாஸ்தி வதேவதே ॥
யச்ச கிஞ்சித்க்ருதம் த்ருவம் ஸர்வம் பாபஸமுத்பவம் ।
ஸுக்ருதம் சைவ பாபஸ்ய க்ஷயம் ச த்ருவம் பாபஸமுத்பவம் ॥
ஜவாலாஞ்யதாவஸ்தைஶ்ச ஶரீரம் ஸம்வஹாஜநம் ।
ஹோமம் விநா ந ப்ராரப்தம் ஶுத்திஸம்நிஶ்சிதம் ॥”

கர்மம் மூன்று விதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளெவையென்பது கேட்கத்தக்கது. ஸஞ்சிதம், கிரியமாணம் (ஆகாமி), பிராரப்தம், என மூன்று விதம். முன் ஜந்மங்களி லுண்டாயிருக்கிற (முன் ஜந்மங்களில் செய்து அநுபவிக்கப்படாம லாக்கியிருக்கிற)தானது ஸஞ்சிதம் என்று சொல்லப்படுகிறது. ஸஞ்சித கர்மத்தின லடைந்த ஜந்

மத்தி லெப்போது சுபாசுபங்களான எந்தக் கர்மங்கள் செய்யப்படுகின்றனவோ அதையே 'கிரியமாணம்' (ஆகாமி) என்று வித்வான்களறிகிறார்கள். இந்தத் தேகத்தினு லநுபவிக்கப்படுகிறது எதுவோ அது பிராரப்தம் என்று சொல்லப்படுகின்றது. பிராரப்த கர்மமானது அநுபவித்தாலன்றி நசிக்கிறதில்லை. பாபமின்றிச் சரீரத்திற்குத் துக்கமென்பதில்லை. துக்கம் எப்படிப்பட்டதானாலும் அதெல்லாம் பாபத்தினு லுண்டானதே; துக்கமானது பெரியதானாலும், சிறியதானாலும் அது பாபத்தினு லுண்டானதே. எப்போது சரீரமானது பாபமற்றதாகிறதோ அப்போது அதுசுகத்திற்கு இருப்பிடமாகிறது. அநுபவித்தாலன்றிப் பிராப்தமானது நாசமடைகிறதில்லை யென்பது நிச்சயம்."

"ஆவர்தந்தே ஹி ஷோடஶாப்தாச்ச கர்மாணி நியதேந து ।
ஏகாவராணாம் தேஹாநாம் காரணாநி க்ரமேண து ।
க்ஷயம் கர்மக்ஷயாந்முக்தி: கதம் ஸம்பவிஷ்யதி ॥"

"தேகத்தை யுடையவ (ஜீவன்) னுடைய பதினான்காவது வயது முதல் செய்த கர்மங்கள் ஒவ்வொன்றும் பத்து (10) ஜன்மங்களைக் கொடுத்து அப்படிக் கொடுக்கும் ஜன்மங்களில் அதின் பலனை யனுபவிக்கச் செய்வதாயு மிருக்கிறது. இவ்விதமாய்ப் பல ஜன்மங்களில் செய்த பல கர்மங்களின் பலனை யனுபவித்து முடிவுண்டாவதும், மோக்ஷமடைவது மேது?" இதை மத்வபாஷ்யத்தில் காண்க.

ஆவர்தந்தே ஹி கர்மாணி ந பவிஷ்யதி வா ததா ॥
அத: கர்மக்ஷயாதேவ மோக்ஷஸம்பவிஷ்யதி ॥

இதற்கும் முந்திய அர்த்தமே. மஹாபாரதம் 1, 108, 23-ல் காண்க (19)

---

௨௦. த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராஶ்ரய: ।
கர்மண்யபிப்ரவ்ருத்தோ(அ)பி நைவ கிஞ்சித்கரோதி ஸ: ॥

20. த்யக்த்வா-கர்மபலாஸங்கம்-நித்ய த்ருப்த:(1)-நிராஶ்ரய:(2) ।
கர்மணி-அபிப்ரவ்ருத்த:-அபி-ந-ஏவ-கிஞ்சித்-கரோதி(3)-ஸ: ॥

கர்மபலாஸங்கம்	கர்மத்தில் அபிமானத்தையும் பலனில் ஆசையையும்
த்யக்த்வா	விட்டு
நித்யத்ருப்த:	எப்பொழுதும் திருப்தியடைந்தவனும்
நிராஶ்ரய:	ஆஶ்ரயமில்லாதவனும்
ய:	எவன் இருக்கிறானோ
ஸ:	அவன்
கர்மணி	கர்மத்தில்

அபிப்ரவ்ருத்தோபி — பிரவிருத்தித்திருந்தபோதிலும்
கிஞ்சித் — ஒரு கர்மத்தையும்
நைவகரோதி ஸ: — செய்யவேயில்லை.

கர்மத்தில் அபிமானமும், பலனில் ஆசையும் விட்டு எப்போதும் ஆத்மானந்தத்தில் திருப்தியடைந்தவனையும், ஒருவரையும் ஆசிரயிக்காதவனையும் எவனிருக்கிறானோ அவன் கர்மத்தில் பிரவிருத்தித்திருந்தபோதிலும் அவன் ஒரு கர்மத்தையும் செய்யவேயில்லை.

---

(1) "நித்யத்ருப்த:-தன்னுடைய ஆத்ம சுவரூபத்திலேயே திருப்தியுள்ளவனையும்." (ராமானுஜர்).

(2) "நிராஸ்ரய:-ஸ்திரமற்ற பிரகிருதியிடத்தி லாசிரயபுத்தியில்லாதவனையும்." (ராமானுஜர்).

(3) "நகரோதி- கர்மஞ் செய்தாலும் ஞானப்பியாசத்தையே செய்கிறான்; கர்மஞ் செய்யாதவனாகான்." (ராமானுஜர்).

(சங்கர பாஷ்யம்) "கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவன் எவனோ, அவன் ஆத்மா அனாத்மாக்களைப் பகுத்தறிவதற்குமுன் கர்மத்தில் பிரவிர்த்தியுள்ளவனாயினும், அவற்றைப் பகுத்தறிந்தபின் கர்மம் முதலானவற்றிலே அகர்மம் முதலானவற்றைக் காண்பதினாலேயே, கர்மம் நீங்கினவனாய், சந்நியாசியாய், ஜீவிப்பதற்கு மாத்திரம் வேண்டிய செய்கையை யுடையவனாயிருப்பதினால் கர்மத்தில் பிரவிர்த்திக்கிறதில்லை. ஆனால், எவன், கர்மத்தைச் செய்ய ஆரம்பித்து அதன்பிறகு ஆத்மாவை உள்ளபடி அறியும் ஞானியாவனோ அவன் எக்கர்மத்திலும் பயனைக் காணாதவனாய், கர்மத்தையும் அதற்கான கருவிகளையும் துறந்துவிடுகிறான். அவன் ஏதோ ஒரு காரணத்தால் கர்மத்தைத் துறக்கக்கூடாமலிருக்கும்போது, கர்மத்திலும் அதன் பயனிலும் பற்றில்லாமையினால், உலகத்தவருக்கு நல்வழி காட்டும்பொருட்டு, சுவப்பிரயோஜனத்தை நாடாமல் முன்போலவே கர்மத்தை அநுஷ்டித்து வந்தாலும், அவன் உண்மையில் ஒன்றும் செய்கிறவனேயல்லன். ஞானமென்னும் தீயினால் கர்மமெல்லாம் எரிக்கப் பட்டதினால் அவனுடைய கர்மமானது அகர்மமாகவே ஆகின்றது, என்கிற இந்த விஷயத்தை உணர்த்தும்பொருட்டுப் பகவான் இந்தச் சுலோகத்தைச் சொல்லுகின்றார். மேற்சொன்ன ஆத்மஞானத்தினால் ஞானியானவன் கர்மங்களிலே அபிமானத்தையும், பயனிலே பற்றையும் விட்டு எப்பொழுது திருப்தியும், விஷயங்களிலே வெறுப்பும் உள்ளவன் என்பது பொருள். ஆஸ்ரயம்

என்ருல் ஒருவன் எதனைச் சார்ந்து நின்று (நாடி) தனக்கு வேண்டியதைச் சாதித்துக்கொள்ளக் கருதுகின்ருனே அது. இம்மை மறுமைப் பயன்களுக்கான சாதனங்களைத் தேடாதவன் நிராச்ரயன் என்றபடி. இவ்வாறுள்ள அந்த ஞானியானவன் தனக்கு ஒரு பிரயோஜனமும் இல்லையாதலின் கர்மத்தையும் அதற்கான சாதனங்களையும் விட்டு ஒழியவே வேண்டும் என்பது பொருந்தும். அப்படிக் கர்மம் செய்வதினின்றும் நீங்க முடியாதது, நேருமாயின் அவன் லோகசங்கிரஹார்த்தமாயாவது, நல்லோர் பழிப்பை வாராமல் செய்துகொள்ளவேண்டும் என்னும் எண்ணத்தினலாவது; முன்போலவே கர்மத்தை அநுஷ்டித்துவந்தபோதிலும் கர்மமற்ற ஆத்மாவின் காக்ஷியைப் பெற்றிருத்தலால் அவன் உண்மையாகவே ஒன்றும் செய்தவனல்ல.''

(ஸூ) இந்தச் சுலோகத்தின் அர்த்தத்தைத் தெளிவாய் விரித்துரைக்கும் வராகோபநிஷத்து அத். 2-ல் உள்ள அடியிற் கண்ட சுலோகத்தைப் பார்க்க. வம்சவாத்யாதிசப்தேஷு ஸ்வாதீனேஷ்வபி ஸ்திதம் । ஸம்ஸாரம் ஜஹாதியோகீ । ஸங்கீததாலலய வாத்யவசம் கதாபி மௌலிஸ்தகும்ப பரிரக்ஷணதீர்நடீவ ॥ = ''சங்கீத தாளாலய வாத்தியங்களுக்குச் சுவாதீனமாயிருந்தாலும் ஆட்டக்காரியானவள் தன் தலைமேலிருக்கிற குடத்தைச் சம்ரக்ஷணை செய்கிற விஷயத்தில் புத்தியுடையவள்போல், கூட்டம் கூட்டமாயிருக்கிற விஷயங்களைப் பார்த்துக்கொண்டு அதற்குச் சுவாதீனமாயிருந்தாலும் யோகியானவன் பிரஹ்மத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற புத்தியை விடுகிறதில்லை.'' (20)

உக. நிராசீர்யதசித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹ: ।
சாரீரம் கேவலம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம் ॥

21. நிராசீ:-யதசித்தாத்மா(1)-த்யக்தஸர்வபரிக்ரஹ: (2) ।
சரீரம்-கேவலம்-கர்ம-குர்வந்-ந-ஆப்நோதி-கில்பிஷம் (3) ॥

நிராசீ:	ஆசையற்றவனாய்,
யதசித்தாத்மா	அந்தக்கரணம் இந்திரியங்கள் இவைகளை அடக்கினவனாய்,
த்யக்தஸர்வபரிக்ரஹ:	பணம் வீடு முதலிய ஸகலத்தையும் விட்டவனாய்,
சாரீரம் கேவலம் கர்ம	சரீரம் நிலைத்திருப்பதற்குள்ள (ஆகாராதி நிமித்தமான) கர்மத்தைமட்டும்

குர்வந்நு — செய்கிறவன்
கில்பிஷம் நாப்நோதி — பாபத்தை யடைகிறதில்லை.

ஆசை யற்றும், மனம் இந்திரியங்களை யடக்கியும், சகலவித சம்பாத்தியத்தை விட்டும், சரீரம் நிலைத்திருப்பதற்குள்ள ஆகார நிமித்தமாய்ச் செய்யவேண்டிய கர்மமெவ்வளவோ அவ்வளவுமட்டுஞ் செய்கிறவன் பாபத்தை யடைகிறதில்லை,

---

(1) "யதசித்தாத்மா-சித்தம், மனம் இவைகளைச் சுவாதீனஞ் செய்துகொண்டிருப்பவன்." (ராமாநுஜர்), (இராகவேந்திரர்).

(2) "த்யக்தஸர்வபரிக்ரஹஃ-ஆத்மாவையே முக்கியப் பிரயோஜனமாய் எண்ணி; பிரகிருதி, பிரகிருதியினு லுண்டான வஸ்துக்கள் ஆகிய இவைகளில் மமதை யற்றவன்." (ராமாநுஜர்). தேகேந்திரியாதிகளில் அபிமானத்தை விட்டவன்." (இராகவேந்திரர்).

(3) "கில்பிஷம்-பாப புண்ணியங்களின் பலனை சமுசாரத்தை அடைகிறதில்லை." (சங்கரர்). "கர்மயோகத்தினுலேயே ஆத்மாவைப் பார்க்கிறு னென்பது." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "மற்று எவன் முன் சொல்லப்பட்டவனைப்போலல்லாது, கர்மம் செய்யத் தொடங்குவதற்கு முன்னமேயே, எல்லாவற்றிலும் உள்ளே இருக்கின்ற ஆத்மாவான ப்ரஹ்மமே ப்ரத்யகாத்மாவாகிய தான் என்று அறிந்து அநுபவிக்கின்றுனே, அவன் இஹபர விஷயங்களிலே ஆசை யொழிந்தவனுதலால் அவ் விஷயங்களுக்கேற்ற கர்மங்களில் எப் பயன்களையும் காணுது கர்மத்தையும் அதற்கான சாதனத்தையும் துறந்து தேகம் நிற்பதற்குமாத்திரம் வேண்டிய செய்கைகளை உடையவனுய், ஞானத்திலே உறுதியாக நிற்கும் யதியாய், ஸம்ஸாரத்தினின்று விடுபடுகிறுன் என்கிற இவ் விஷயத்தை உணர்த்தும்பொருட்டுப் பகவான் இச் சுலோகத்தை அருளிச்செய்கிருர். எவனிடத்திலிருந்து ஆசைகள் போய்விட்டனவோ, எவனுலே அந்தக்கரணமும் வெளியில் தோற்றுவதான தேஹேந்திரியங்களில் சேர்க்கையுமாகிய இரண்டும் அடக்கப்பட்டனவோ, இன்னும் எவனுலே தனது பொருள் வீடு முதலிய உடைமைகளெல்லாம் துறக்கப்பட்டனவோ, அவன் தனது சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம், அபிமானமற்றுச் செய்பவனுய், தீமையாகிய பாபத்தையும் புண்ணியத்தையும் அடைவதில்லை. ஸம்ஸாரத்தினின்று விடுபட விரும்புவோனுக்குப் புண்ணியமும் பாபமேதான். ஏனெனில், பிறப்பு இறப்பு முதலிய ஸம்ஸார பந்தத்தை அது

விஜுவிக்கின்றது. ஆதலால் அவன் ஸம்ஸாரத்தினின்று விடுபட்டவனாகி றான் என்பது பொருள்.'' (शारीरंकेवलंकर्म என்பது சரீரத்தால் செய்யத்தக்க கர்மம் அல்ல; சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டிய கர்மம் என்று கொள்ளவேண்டியதற்கு உள்ள ஆக்ஷேப சமாதானங்கள் பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன).

(ஹா) முந்திய ச்லோகத்தில் சொல்லப்பட்டவன் கர்மயோக நிஷ்டன்; இவன் ஆருருக்ஷு என்றுஞ் சொல்லப்படுகிறான். இந்தச் ச்லோகத்தில் சொல்லப்பட்டவனோ அவனைவிட மேலந்தஸ்திலிருக்கிற பரஹ்மஞானநிஷ்டன்; இவன் ஆரூடனென்றுசொல்லப்படுகிறான். மேற்கண்ட 20, 21-ம் ச்லோகங்களைக் கூர்மபுராணம், உத்தரபாகம், அத். 11, பக்கம் 59-லும்; 21-ம் ச்லோகத்தை கர்கஸம்ஹிதை, மாதுரியகண்டம், அத். 1, 6, 46-லும் காண்க.

---

௨௨. यदृच्छालाभसन्तुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥

22. யத்ருச்சாலாபஸந்துஷ்ட:(1)-த்வந்த்வாதீத:-விமத்ஸர: ।
ஸம:-ஸித்தௌ(2)அஸித்தௌ-ச-க்ருத்வா(3)-அபி-ந-நிபத்யதே ॥

यदृच्छालाभसन्तुष्टः	விரும்பாமல் கிடைத்த லாபத்தினால் திருப்தி யடைந்தவனாயும்,
द्वन्द्वातीतः	சீதோஷ்ண சுகதுக்காதிகளில் விருப்பு வெறுப்பு அற்றவனாயும்,
विमत्सरः	பொறாமை யில்லாதவனாயும்,
सिद्धौ असिद्धौ च	(ஆகாராதிகள்) கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்
समः	சந்தோஷமாவது, விசனமாவது இல்லாமல் ஸமமாயு மிருக்கிறவன்
कृत्वापि	(கர்மங்களைச்) செய்தபோதிலும்
न निबध्यते	(கர்மங்களினால்) கட்டப்படுகிறதில்லை.

விரும்பாமல் கிடைத்த லாபத்தினால் திருப்தி யடைந்தவனாயும் சீதோஷ்ண சுகதுக்காதிகளில் விருப்பு வெறுப்பற்றவனாயும், மாச்சரியம் அதாவது பொறாமை யற்றவனாயும், ஆகாராதிகள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சந்தோஷம் விசன மில்லாமல் ஸமமாயுமிருக்கிறவன் கர்மங்களை அதாவது சரீர சம்ரக்ஷணைக்கு மாத்திரமுள்ள பிக்ஷாடனாதிகளைச் செய்தபோதிலும் அக் கர்மங்களினால் பந்தத்தை யடைகிறதில்லை.

(1) "யத்ருச்சாலாபஸந்துஷ்ட:-விரும்பாமல் சரீர ஸம்ரக்ஷணைக்காகக் கிடைத்தவரையில் திருப்தி யடைந்தவன்." (ராமாநுஜர்).

(2) "ஸித்தௌ - யுத்தம் முதலிய கர்மங்களில் ஜயம்முதலியன கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்." (ராமாநுஜர்).

(3) "க்ருத்வா-ஞானநிஷ்டை யில்லாமல் கர்மத்தையே செய்த போதிலும்." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "தன்னுடைய உடைமைகள் எல்லாவற்றையும் கைவிட்ட யதிக்குச் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலியன இல்லாமையின் அவன் பிக்ஷாடனம் முதலியவற்றால் சரீரத்தை நிலைத்திருக்கச்செய்யவேண்டும் என்று அமைந்தது. ஆகவே, யதிக்குச் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலியவை,

" அயாசிதம் அஸங்க்ல்ருப்தம் உபபந்நம் யத்ருச்சயா"

" பிக்ஷை பிறரிடம் இரக்கப்படாததாக, முன்னமே அமர்த்தி வைக்கப்படாததாகத் தற்செயலாய்த் தன் பிரயத்னமின்றிக் கொண்டுவரப் பட்டதாக இருக்கவேண்டும்" (போதாயன தர்ம ஸூத்ரம்: 2, 8, 12) என்பது முதலான வசனங்களால் அநுமதி பெற்றதென்பதை வெளிப் படுத்திக் கூறுகிறார்.

தானாகக் கிடைப்பதென்பது (தான் பிறரிடம்) வேண்டாது வருவது. அதனால் (இது) போதுமென்ற எண்ணம் வந்தவன் (ஞானியாவன்). குளிர் வெப்பம் முதலியவற்றால் தாக்கப்பட்டபோதிலும், மனம் கலங்காதவன் த்வந்தங்களைக் கடந்தவன் எனப்படுகிறான். பொறாமை நீங்கினவன் - வைரமில்லாப் புத்தியுடையோன். தற்செயலாய்க் கிடைப்பது (தனக்கு) அமைந்தாலும் அமையாவிட்டாலும்; (அவன்) ஸமமானவன். இவ்வாறான எந்த யோகியானவன் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலியவை கிடைத்தாலும் கிடையாவிடினும் ஸமமாயிருந்து, ஸந்தோஷமும் வருத்தமு மில்லாது, கர்மம் முதலானவற்றிலே அகர்மம் முதலானவற்றைக் கண்டு, ஆத்மாவை உள்ளபடி உணர்தலிலே உறுதியாக நின்று, சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டியனவும், சரீரம் முதலியனவற்றால் செய்யப்படுவனவுமாகிய, பிக்ஷைக்குச் செல்லுதல் முதலான கர்மங்களும், "நான் ஒன்றும் செய்கிறேனில்லை, இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லுகின்றன" என்று இவ்வாறாக எப்பொழுதும் நன்குணர்ந்து, ஆத்மா கர்த்தா இல்லை என்பதைக் காண்பவனாய் இருக்கின்றானோ அவன், பிக்ஷைக்குச் செல்லுதல் முதலிய எந்தக் கர்மத்தையும் செய்வதேயில்லை. ஆனால், (அஞ்ஞானி

யிடத்துப்போல, அவனிடத்தும் ஸ்நாநபாநம் முதலிய) உலக வியவஹாரத்தைச் சமமாகக் காணப்படுகிறபடியால், சாமான்ய ஜனங்கள், "அவனும் நம்மைப்போலக் கர்மத்தைச் செய்யும் கர்த்தாதான்" என ஆரோபிப்பதனுல், அவன் பிக்ஷைக்குச் செல்லுதல் முதலான கர்மத்தில் கர்த்தாவாகிறான். மற்று, சாஸ்திரப் பிரமாணம் முதலியவற்றால் உண்டான தன் அநுபவத்தால் (அவன்) அகர்த்தாதான் என்க. அவன் கர்த்தா என்பதை இவ்வாறு பிறரால் ஏற்றப்பட்டுச் சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டியனவாகிய பிக்ஷைக்குச் செல்லுதல் முதலான கர்மங்களைச் செய்தாலும் (அவன் அவற்றால்) கட்டப்படுவதில்லை; கட்டுக்குக் காரணமான கர்மமும், அதன் காரணமும் ஞானமென்னும் தீயினுல் எரிக்கப்பட்டமையின் என்க. இங் (4, 19, 21-ஆம் சுலோகங்களில்) கூறியுள்ளதின் அநுவாதமே இது. (22)

உ௩. 𑌗𑌤𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌚𑌰𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 ॥

23. கதஸங்கஸ்ய (1) முக்தஸ்ய (2)-ஜ்ஞாநாவஸ்யிதசேதஸ: ।
யஜ்ஞாய (3)-ஆசரத:-கர்ம-ஸமக்ரம்-ப்ரவிலீயதே ॥

𑌗𑌤𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯	பற்றில்லாதவனாய்
𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯	(தர்மம் அதர்மம் என்கிற கட்டினுல்) விடுபட்டவனாய்
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃	ஞானத்திலேயே ஸ்திரமான மனதுடையவனாய்
𑌯𑌜𑍍𑌞𑌾𑌯	பகவத் ப்ரீதிக்காக
𑌆𑌚𑌰𑌤𑌃	செய்கிறவனுடைய
𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂	கர்மம் முழுவதும் அதாவது பலனுடன் கூட
𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇	கரைந்துபோகின்றது.

எல்லாவற்றினின்றும் பற்று ஒழிந்தவனாய், தர்மம் அதர்மம் என்கிற கட்டிலிருந்து தான் நீங்கினவனாய், ஞானத்திலே ஸ்திரமான மனதையுடையவனாய்ப் பகவானுடைய பிரீதிக்காகச் செய்கிறவனுடைய கர்மம் முழுவதும் பலனோடு நசித்துப்போகின்றது. அதாவது, அவனுக்கு அக் கர்மமும், அதன் பலனும் இல்லாமற் போகின்றது என்பது பொருள்.

---

(1) "கதஸங்கஸ்ய=பலாபேக்ஷை யற்றவும்." (இராகவேந்திரர்).

(2) "முக்தஸ்ய=சரீராதிகளில் அபிமானம் விட்டவன்." (இராகவேந்திரர்).

(3) "யஜ்ஞாய=ஜனங்களின் பிரயோஜனத்தை உத்தேசித்து ஞானிகள் செய்கிற யாகங்கள்." என்று ஸ்ரீதரர், பின்னுமொரு அர்த்தஞ் செய்திருக்கிறார்.

(4) "ஸமக்ரம்=பிராசீன கர்மம் முழுவதும்." (ராமாநுஜர்)

(ஸ்வ) எவன், கர்மத்தைச் செய்து வருகையில் நிஷ்கிரீயமான ப்ரஹ்மமே தான் என்பதைக் காண்கிறானே அப்பொழுது அவன் செய்கை என்பதும், செய்பவன் என்பதும், பலன் என்பதும் இல்லாதிருத்தலைக் காண்பதால், அவனுக்குக் கர்மபரித்தியாக நிலைமை வந்திருந்தும் ஏதோ ஒரு காரணத்தால் அவன் முன்போலக் கர்மத்தை அநுஷ்டித்துக்கொண்டிருந்தாலும், அவன் உண்மையாகவே ஒன்றும் செய்வதில்லை என்று முன் 20-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது. எவனுக்கு இவ்வாறு கர்மமின்மையானது சொல்லப்பட்டதோ அவனுக்குத்தான் பந்த மில்லை என்பது இந்தச் சுலோகத்தில் சொல்லப்படுகிறது. (23)

---

௨௪. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌵𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌹𑍁𑌤𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 ॥ *

24. ப்ரஹ்மா-அர்ப்பணம்-ப்ரஹ்ம-ஹவி:-ப்ரஹ்மாக்னௌ [ப்ரஹ்மணா-ஹுதம் ।
ப்ரஹ்ம-ஏவ-தேந-கந்தவ்யம்-ப்ரஹ்மகர்மஸமாதிநா ॥

𑌅𑌰𑍍𑌪𑌣𑌂	ஹவிஸை அக்கினியில் போடுவதற்குச்சாதனமான கருவி
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	ப்ரஹ்மமே;
𑌹𑌵𑌿𑌃	ஹவிஸும் (அன்னம், நெய்முதலியவையும்)
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	ப்ரஹ்மமே;
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌	ப்ரஹ்மரூபமான அக்கினியில்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾	யஜ்ஞகர்த்தவாகிற ப்ரஹ்மத்தினாலே
𑌹𑍁𑌤𑌂	செய்யப்படுகிற ஹோமமும்
(𑌬𑍍𑌰𑌹𑍍𑌮)	ப்ரஹ்மமே;
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾	ப்ரஹ்மமாகிற (இந்த யஜ்ஞ) கர்மத்தில் நிலையுள்ள மனதையுடைய
𑌤𑍇𑌨	அவனால்
𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂	அடையப்படுவதும்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵	ப்ரஹ்மமே.

(ப்ரஹ்மவித்தானவன்) யஜ்ஞத்தில் நெய்முதலிய ஹவிஸ்ஸை அக்கினியில் ஹோமம் செய்வதற்குச் சாதனமாக எக் கருவியை உபயோகிக்கிறானோ அது ப்ரஹ்மமேதான் எனக் காண்கிறான். அவனுக்கு அந்த ஹவிஸ் ப்ரஹ்மமே; அக்கினியும் ப்ரஹ்மமே; யஜ்ஞ கர்த்தாவும் ப்ரஹ்மமே; செய்யப்படுகிற ஹோமமும் ப்ரஹ்மமே; அந்த ப்ரஹ்மமாகிய இந்த யஜ்ஞகர்மத்தில் நிலையுள்ள மனதையுடைய அவனால் அடையப்படுவதும் ப்ரஹ்மமே.

---

* இந்தச் சுலோகத்தைச் சர்போபநிஷத்தில் காண்க.

(1) அர்ப்பணம்=ஸ்ருக், ஸ்ருவ:, (ஸ்ருக்) 'சுருக்' என்றால், யஜ்ஞத்தில் ஹோமம் செய்யவேண்டிய அன்னாதிகள் எதினால் எடுத்து ஹோமம் செய்யப்படுகிறதோ அந்த மரத்தினால் செய்யப்பட்டிருக்கிற பாத்திரம். (ஸ்ருவம்) சுருவம் என்றால், மேற்கண்டபடி ஹோமம் செய்ய நெய் முதலியவற்றை எடுக்கும் பாத்திரம். (நாம் அன்னம், நெய் இவற்றை ஹோமம் செய்ய பிலாசவிலை உபயோகிப்பதுபோல்.)

(சங்கர பாஷ்யம்) "மற்றும் எந்தக் காரணத்தினால் ஞானி செய்யும் கர்மமானது தன் பயனை விளைவிக்காமல் முழுவதும் அற்றுப் போகின்றது என்பதற்குக் காரணம் இந்தச் சுலோகத்தில் சொல்லப்படுகின்றது.

"ப்ரஹ்மத்தை அறிந்தவன் எக் கருவியினால் ஹவிஸ்ஸை அக்கினியில் இடுகின்றானோ அது ப்ரஹ்மம்தான் எனக் காண்கிறான். இப்பியிலே வெள்ளியின்மையை, (இப்பியன்றி வெள்ளி இல்லை யெனக்) காண்பது போல, ஆத்மாவின்றி அஃதில்லை யெனக் காண்கிறான். ஆதலால், ஹவிஸை அர்ப்பிக்கும் கருவி ப்ரஹ்மமே எனப்படுகின்றது. உதாரணமாக, வெள்ளியாகத் தோற்றுவது இப்பியாகவே இருப்பதுதான் என்க. ப்₃ரஹ்ம அர்பணம் என்பன தொகாநிலைச் சொற்கள். உலகத்தில் (ஜனங்கள்) எதனை, ஹவிஸை அர்ப்பிக்கும் கருவியெனக் கொள்கிறார்களோ, அது இந்த ஆத்மஞானிக்கு ப்ரஹ்மமே என்பது பொருள். அவ்வாறே (அவர்கள்) எதனை ஹவிஸ் எனக் கொள்கிறார்களோ அது அவனுக்கு ப்ரஹ்மமேதான். அவ்வண்ணமே (முன்போல் அல்லாது) ப்₃ரஹ்மாக்₃நௌ என்பது தொகைநிலைப்பதம். (யஜமானனாகிய) செய்பவனென்னும் ப்ரஹ்மமானது எதிலே (ஹவிஸை) ஹோமம் செய்கின்றானோ அந்த அக்கினியும் ப்ரஹ்மமேதான். செய்பவன் ப்ரஹ்மமே என்பது (இங்கே சொல்லுவான்) குறிப்பு. அவன் ஹோமம் செய்தலென்னும்

தொழில் ப்ரஹ்மம்தான். அதனால் அடையவேண்டிய பயன் எதுவோ, அதுவும் ப்ரஹ்மம்தான். ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுடையவனால், ப்ரஹ்மத்தைக் காண்பதாகிய கர்மத்திலே தலைப்பட்டு அந்த ப்ரஹ்மத்தையே எங்கும் காண்பவனால் அடையப்படுவதும் ப்ரஹ்மமேதான்.

"இவ்வாறு உலகத்தை நல்வழிப்படுத்த விரும்புவோனும் செய்கின்ற கர்மமானது உண்மையாகவே அகர்மமாம்; ஸகலமும் ப்ரஹ்மமென்ற புத்தியினாலே கர்மமென்னும் புத்தியானது தன்னாண்டு போனமையின். 'இவ்வாறுள்ளதனால் ஒருவன் கர்மத்தினின்றும் ஒழிந்தவனாலும் சகல கர்மங்களையும் துறந்த அவனுடைய மெய்யறிவைப் புகழ்தற்பொருட்டு ஞானத்திலே யஜ்ஞத்தை ஏற்றிக் கூறுதல் நன்றாகப் பொருந்துகின்றது. வாஸ்தவமான யாகத்திலே வழங்கப்படுவனவாகிய ஹவிஸை அர்ப்பிக்கும் கருவிமுதலியன எவைகளோ அவைகள் பரம்பொருளைக் காண்கின்ற இவனுக்குத் தன் ஆத்மாவான ப்ரஹ்மமே தான் என்பது. அவ்வாறில்லாவிட்டால் சகலமும் ப்ரஹ்மமாயிருக்க ஹவிஸை அர்ப்பிக்கும் கருவிமுதலியவற்றை மாத்திரம் ப்ரஹ்மமாகச் சிறப்பித்துக் கூறுதல் பயனில்லாததாகும். ஆகவே, இதெல்லாம் ப்ரஹ்மமேதான் என்று அறிகிறவனுக்குக் கர்ம மில்லை. அன்றியும், காரகத்தைப்பற்றிய எண்ணமே இல்லை யாதலாலும் அவனுக்குக் கர்ம மில்லை."

(ராமாநுஜர்) "கர்மமானது, அதற்குச் சாதனமான சகல வஸ்துக்களும் ப்ரஹ்மமென்கிற அநுசந்தானத்துடன் செய்யப்படுகிறபடியால், ஞானகாரமாக ஆகிறது. இந்தக் கர்மத்தில் பரப்ரஹ்மத்தை ஆத்மாவாக வுடைத்தானவன் ஆத்மசொருபத்தை யடைகிறானென்பது தாத்பர்யம்."

(ராகவேந்திரர்) "யஜ்ஞசாதனமான சகலமும் பரப்ரஹ்மத்தின் அதீனமாகையால், அவைகளும் ப்ரஹ்மமென்றே சொல்லப்பட்டன. அல்லது, சகலத்திற்கும் ப்ரஹ்மம் சுவாமியாகையால், எல்லாம் ப்ரஹ்மமென்று சொல்லப்பட்டது. இதனால் அபிமானத்தியாகம் சொல்லப்பட்டதாகிறது."

(ஸூா) முந்திய சுலோகத்தில், யஜ்ஞாய=என்கிற பதத்திற்கு ஞானிகள் ஜனங்களின் பிரயோஜனத்தை யுத்தேசித்து அல்லது யஜ்ஞஸம்ரக்ஷணார்த்தம் யஜ்ஞம் செய்கிறார்களென்று ஸ்ரீதரர் அர்த்தஞ் செய்திருக்கிறார். அந்த அர்த்தத்தை யனுசரித்தே அவர் இந்தச் சுலோகத்திற்கும் அப்படிப்பட்ட ஞானிகள் செய்யும் யஜ்ஞத்தில் உபயோகிக்கப்படும் சகல வஸ்துக்களும், யஜ்ஞத்தைச் செய்விக்கிற ரித்துவிக்குகள் முதலா

யுள்ள சகலமும் பரப்ரஹ்மமென்ற அநுசந்தானத்தோடு செய்கிறபடி யால் அவர்கள் ப்ரஹ்மமாய்விடுகிறார்களென்று அர்த்தஞ் செய்திருக் கிறார். 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮—எல்லாம் ப்ரஹ்ம சொரூபமே" என் றிருக்கிறதாகையால், தான் செய்கிற ஒவ்வொரு கர்மத்திலும், காணப் படும் சகலமான வஸ்துக்களிலும் ப்ரஹ்மம் நிறைந்திருப்பதாக அநுசந் தானம் செய்துகொண்டு எவன் தான் செய்யு மொவ்வொரு கர்மத்தை யும், அதன் சாதனங்களையும், ப்ரஹ்மமென்றே அறிகிறானோ, அவன் ப்ரஹ்மமாவா னென்பது இச் சுலோகத்தின் கருத்தாகக் காணப் படுகிறது. (24)

உரு. 𑌦𑍈𑌵𑌮𑍇𑌵𑌾𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑌾𑌵𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵𑍋𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ॥

25. தைவம்-ஏவ-அபரே-யஜ்ஞம்-யோகிந:-பர்யுபாஸதே ।
ப்ரஹ்மாக்நௌ-அபரே-யஜ்ஞம்-யஜ்ஞேந-ஏவ-உபஜுஹ்வதி ॥

𑌅𑌪𑌰𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃	சில கர்மயோகிகள்
𑌦𑍈𑌵𑌂 𑌏𑌵	தேவதைகளை உத்தேசித்ததாகவேயிருக்கிற
𑌯𑌜𑍍𑌞𑌂	யஜ்ஞத்தையே
𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇	செய்கிறார்கள்;
𑌅𑌪𑌰𑍇	மற்றவர்கள் (ப்ரஹ்மவித்துக்கள்)
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌	ப்ரஹ்மமாகிற அக்கினியில்
𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵	ஆத்மாவினாலேயே
𑌯𑌜𑍍𑌞𑌂	ஆத்மாவை
𑌉𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿	ஹோமம் செய்கிறார்கள்.

மற்ற கர்மயோகிகள் (இந்திராதி) தேவதைகளை உத்தேசித்ததாக வே யிருக்கிற யஜ்ஞத்தைச் செய்கிறார்கள். ப்ரஹ்மவித்துக்களாகிய மற்றவர்கள் இந்த ப்ரஹ்மமாகிய அக்கினியில் ஆத்மாவை ஆத்மாவினா லேயே ஹோமம் செய்கிறார்கள்.

(சங்கர பாஷ்யம்) "ஞான யஜ்ஞத்தைச் சொன்னபின் இப்பொ ழுது அதைப் புகழும்பொருட்டு மற்ற வேறுவித யஜ்ஞங்களும் இது முதல் சொல்லப்படுகின்றன.

"எந்த யாகத்தால் இந்திரன்முதலிய தேவதைகள் உபாஸிக்கப்படு கிறார்களோ அது தேவ யஜ்ஞம். அதே யஜ்ஞத்தைச் சில கர்மயோகிகள் அநுஷ்டிக்கிறார்கள். "𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" "𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾

நம் ப்ரஹ்ம" "யஸ்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தரஃ" "ப்ரஹ்மம் மெய்ப்பொருளாயும் அறிவாயும் முடிவில்லாததாயு முள்ளது." "ப்ரஹ்மம் அறிவும், ஆநந்தமுமாய் இருப்பது." "எது ஸமீபத்திலும் தூரத்திலு முள்ளதோ, எது எல்லாவற்றிற்கும் உள்ளேயுள்ள ஆத்மாவாக இருக்கின்றதோ அது ப்ரஹ்மம்." என்கிற சுருதி வாக்கியங்களால் கூறப்பட்டுப் பசி, தாகம் முதலிய ஸம்ஸாரத்தன்மையு மின்றி (நேதி நேதி) 'இதன்று, இதன்று' என எவ்வித விசேஷணமு மில்லாதது ப்ரஹ்மம் என்னும் சொல்லால் கூறப்படுகின்றது. ஹோமத்திற்கு இடமாகக் கொண்டதனால் ப்ரஹ்மம் அக்கினியென்க. ப்ரஹ்மத்தை அறிபவரான சிலர் ப்ரஹ்மமாகிய அக்கினியிலே உண்மையாக ப்ரஹ்மமாகவே யுள்ளதாய், புத்திமுதலிய உபாதிகளோடு கூடி அதனால் தன்னிடத்து அவ் வுபாதிகளின் தர்மமெல்லாம் ஏற்றப்பட்டு நிற்கும் ஆத்மாவாகிய ஆஹுதியை, கீழ்க் கூறிய லக்ஷணமுள்ள, அதாவது பசிதாகமுதலிய எவ்வகை ஸம்ஸாரத்தன்மை முதலிய லக்ஷணத்தோடு கூடியதல்லாத ஆத்மாவினாலேயே அர்ப்பிக்கிறார்கள். உபாதியுடைய ஆத்மாவை உபாதியில்லாத ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே கண்டு தெளிதல் எதுவோ, அது அதிலே (ப்ரஹ்மத்திலே) ஹோமம் செய்த லென்பது ; ப்ரஹ்மமும் தானும் ஒன்றெனக் காண்பதிலே உறுதியாக நிற்கும் துறவிகள் அதனைச் செய்கிறார்கள் என்பது (தேர்ந்த) பொருள். (யாஸ்கர்) ஆத்மாவின் பெயர்களுள் யஜ்ஞமென்னும் சொல்லை எடுத்துச் சொல்வதனால் யஜ்ஞமென்னும் சொல்லுக்கு (இங்கு) ஆத்மா என்று பொருள். (எது தன் தன்மையை வேறொன்றனிடத்து இருப்பதாகத் தோற்றுவிக்கின்றதோ அது உபாதி யெனப்படும். ஒரு ஸ்படிகத்தின் அருகிலேயுள்ள செம்பருத்திப் பூவானது தன் தன்மையாகிய சிவப்பு நிறத்தை அந்த ஸ்படிகத்திலே இருப்பதாகத் தோற்றுவிக்கின்றது. அதாவது, அது ஸ்படிகமாகத் தோன்றாது சிவப்புக் கல்லாகவே தோற்றுகின்றது. ஆகவே, ஸ்படிகத்திற்குச் செம்பருத்திப்பூ உபாதியாம். அதுபோல, இங்கும் கண்டு கொள்க)."

(ராமாநுஜர்) "இந்தச் சுலோகம்முதல் கர்மயோகம் பலவித மென்பது சொல்லப்படுகிறது."

அபரே = பின்னும் சில கர்மயோகிகள், ப்ரஹ்மாக்நௌ = அக்கினியையே பிரம்மமாக எண்ணி, யஜ்ஞேநைவ = சுருக், சுருவம் முதலியவைகளினாலே, யஜ்ஞம் = ஹவிஸை, உபஜுஹ்வதி = ஹோமம் செய்கிறார்கள், தைவம் = தேவதார்ச்சனை ரூபமான யஜ்ஞம்.

(மத்துவர்) "அபரே யோகிந:=சில ஞானிகள், தைவமேவ=பகவானையே, யஜ்ஞம்=ஆராதித்து, பர்யுபாஸதே=உபாசனை செய்கிறார்கள்; அபரே=சில ஞானிகள், யஜ்ஞேநைவ=யஜ்ஞமாகிய பசுவினாலே, யஜ்ஞம்=விஷ்ணுவைக்குறித்து, ப்ரஹ்மாக்நௌ=ப்ரஹ்மத்தை அக்கினியாகப் பாவித்து அந்த அக்கினியில், உபஜுஹ்வதி=ஹோமம் செய்கிறார்கள். "விஷ்ணுர்யஜ்ஞேந பஶுநா ப்ரஹ்மாக்நௌ ஜ்ஞைஷ்டேந ஸஜ்ஜநா: । அயஜந்நாநயா யஜ்ஞ விதஸ்ஸம்ப்ருவிதாஸஹ:" (மேற்கண்ட தாத்பரியத்திற்கு ஆதாரமாய் இந்த வாக்கியங்களைக் குறிக்கிருர்.) இந்தச் சுலோகத்தின் பிந்திய பாகமானது மானஸ யஜ்ஞமென்று அறியத்தக்கது."

(இராகவேந்திரர்) "தைவம்=விஷ்ணு, ஆகையால் விஷ்ணு உபாசனையாகிய யஜ்ஞம் செய்கிருர்கள். யஜ்ஞேநைவ=பகவானை நிமித்தமாகக் கொண்டு, ப்ரஹ்மாக்நௌ=சுவாநந்தமான அவிசைப் புஜிக்கிறபடியால் அக்கினியாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தினிடத்தில், உபஜுஹ்வதி=சமர்ப்பிக்கிருர்கள்."

(ஹூா) இதன் தாத்பர்ய மென்னவென்ருல், 'நெய்யானது அக்கினியில் எப்படிச் சேர்க்கப்படுகிறதோ அப்படிப்போல, உபாதியுடைய ஆத்மாவை நிருபாதிகனுன பரமாத்மாவிடத்தில் ஐக்கியம் செய்விப்பதென்பதே. இந்த அத்தியாயத்தின், 25 முதல் 29 வரையிலுமுள்ள சுலோகங்களில் சொல்லிய விஷயங்களை மனு ஸ்மிருதி, 4-வது அத். 22, 23, 24-வது சுலோகங்களில் காண்க. (25)

---

௨௬. ஶ்ரோத்ராதீநீந்த்ரியாண்யந்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி ।
ஶப்தாதீந்விஷயாநந்ய இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி ॥

26. ஶ்ரோத்ராதீநி-இந்த்ரியாணி-அந்யே-ஸம்யமாக்நிஷு-ஜுஹ்வதி
ஶப்தாதீந்-விஷயாந்-அந்யே இந்த்ரியாக்நிஷு-ஜுஹ்வதி ॥ [தி]

அந்யே	மற்றவர்கள்
ஶ்ரோத்ராதீநி	செவி முதலிய
இந்த்ரியாணி	இந்திரியங்களை
ஸம்யமாக்நிஷு	அடக்குதல் என்னும் அக்கினியில்
ஜுஹ்வதி	ஹோமம் செய்கிருர்கள்;
அந்யே	மற்றும் சிலர்
ஶப்தாதீந்	சப்தம் முதலிய
விஷயாந்	விஷயங்களை

இந்த்ரியாக்நிஷு — இந்திரியங்கள் என்கிற அக்கினிகளில்
ஜுஹ்வதி — ஹோமம் செய்கிறார்கள்.

மற்றும் சில யோகிகள் செவிமுதலிய இந்திரியங்களை அவைகளை யடக்குதலாகிய அக்கினியில் அதாவது அவைகளின் விஷயங்களி லிருந்து இழுத்துக்கொள்வதாகிய அக்கினியில் ஹோமம் செய்கிறார்கள். சிலர் சப்தம்முதலிய விஷயங்களை இந்திரியங்கள் என்கிற அக்கினிக ளில் ஹோமம் செய்கிறார்கள்.

(சங்கர பாஷ்யம்) "ப்ரஹ்மார்ப்பணம் என்று தொடங்கும் முன் 24-வது சுலோகத்திலே சொல்லப்பட்ட மெய்யறிவென்னும் அவ்வித இந்த யஜ்ஞத்தைத் 'திரவியங்களால் ஆகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானயஜ்ஞம் மேலானது' என்று பின் 33-வது சுலோகத்தில் சிலா கிக்கும்பொருட்டுத் தைவயஜ்ஞம்முதலிய யஜ்ஞங்களின் நடுவே அந்த ஞான யஜ்ஞத்தைப் பகவான் வைத்தருளுகிறார். அடக்குதல் என்பது பலவாயுள்ள ஒவ்வொரு இந்திரியத்திற்கும் வெவ்வேறாயுள்ள தாகையால் அக்கினிகளில் என்று பன்மையாகவே சொல்லப்பட்டது. சில யோகிகள், செவிமுதலிய அவ்வவ் விந்திரியங்களை அடக்குதல் என் கிற அக்கினியிலே ஹோமம் செய்கிறார்கள் என்றால், இந்திரியங்களின் அடக்கத்தையே செய்கிறார்கள் என்பது பொருள். சிலர், ஓசைமுத லிய விஷயங்களை இந்திரியங்கள் என்னும் அக்கினியில் ஹோமம் செய் கிறார்கள் என்றால், சாஸ்திரத்திற்கு விரோதமில்லாத விஷயங்களைக் காது முதலிய இந்திரியங்களால் கிரஹிப்பதையே ஹோமமாகக் கொள்ளு கிறார்கள். தங்களுக்குக் கிடைத்தவைகளில் விலக்கப்பட்ட விஷயங்களைத் தவிர்த்து மற்றவைகளை அந்தந்த இந்திரியங்களால் விருப்பு வெறுப்பு இல்லாமல் அநுபவிக்கிறார்கள் என்பது கருத்து."

(ஸ்ரீதரர்) "நைஷ்டிக பிரம்மசாரிக்கு, இந்திரியங்களை யடக்குவதே யஜ்ஞமாகிறது. எப்படியென்றால், யஜ்ஞத்தில் பல வஸ்துக்கள் அக்கினி யில் ஆகுதி செய்யப்படுகின்றன. அக்கினியில் போடப்பட்ட அந்த வஸ் துக்கள் நசித்து (வஸ்துக்களின் ரூபந் தெரியாமல்) போகின்றன. அது போல, இந்திரியங்களுடைய வியாபாரத்தை அவைகள் போகிற வழிக ளைத் தடுத்து நிறுத்துவதே அக்கினி; அந்த அக்கினியில் இந்திரியங்க ளுடைய வியாபாரத்தை ஹோமம் செய்துவிட்டால், அந்த வியாபாரம் நசித்துப்போகிறது.

கிருகஸ்தாச்சிரமத்தி லிருப்பவனுக்கு விஷயங்களில் பற்றுதலை விடுவதே யஜ்ஞமாகிறது. எப்படியென்ருல், அவன், சப்தாதி விஷயங்களை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், அந்த விஷயங்களிலுள்ள பற்றுதலை ஹவிஸாகவும், இந்திரியங்களை அக்நியாகவும் பாவித்து, அந்த விஷயப்பற்றுதலாகிய ஹவிஸை இந்திரியங்களாகிற அக்நியில் ஹோமம் செய்கிருன். அந்தந்த இந்திரியங்கள் எந்த வஸ்துவைக் கிரகித்தபோதிலும் அந்த வஸ்துவினிடத்தி லுண்டாகிற பற்றுதலை நசிக்கச்செய்கிறது தான் ஹோமம்.

(இராகவேந்திரர்) "விஷயபோகங்களை அனுபவித்தாலும் அப்படி அனுபவிக்கிற விஷயங்களை ஈசுவராராதனமாக எண்ணுவதே ஹோமம்." (இந்தப் பேதம் தவிர மற்றவைகள் மேற்கண்ட அர்த்தத்தோடு ஒத்திருக்கின்றன).

(ஸ்வ) இந்தச் சுலோகத்தின் முற்பாகம் ப்ரஹ்மசாரியைக் குறித்தது; பிற்பாகம் கிருஹஸ்தனைக் குறித்தது. (26)

உஎ. ஸர்வாணீந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி சாபரே |
ஆத்மஸம்யமயோகாக்னௌ ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே ||

27. ஸர்வாணி-இந்த்ரியகர்மாணி-ப்ராணகர்மாணி-ச-அபரே |
ஆத்மஸம்யமயோகாக்னௌ-ஜுஹ்வதி-ஜ்ஞாநதீபிதே ||

அபரே	வேறு சிலர் (ஞானநிஷ்டர்கள்)
ஸர்வாணி இந்த்ரிய கர்மாணி	எல்லாவிதமான இந்திரியங்களின் வியாபாரங்களையும்,
ப்ராண கர்மாணி ச	பிராணன்களின் வியாபாரங்களையும்
ஜ்ஞாநதீபிதே	ஞானத்தினுல் பிரகாசிக்கப்பட்ட
ஆத்மஸம்யமயோகாக்னௌ	ஆத்மாவினிடத்தில் மனஸை நிறுத்துதலாகிய யோகமென்கிற அக்நியில்
ஜுஹ்வதி	ஹோமம் செய்கிருர்கள்.

ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுடையவும், பிராணவாயுமுதலிய பத்து வாயுக்களுடையவும் வியாபாரங்களைப் பிரஹ்மஞானத்தினுல் பிரகாசிக்கிற ப்ரஹ்மஞான நிஷ்டையில் மனஸை நிறுத்துதலாகிய யோகமென்கிற அக்நியில் ஹோமம் செய்கிருர்கள். ("இந்திரியங்களுடைய வியாபாரத்திலாவது, பிராணன்முதலிய வாயுக்களுடைய வியாபாரத்திலாவது மனதைச் செல்லவொட்டாமல் தடுப்பதுதான் ஹோமம்" என்பது ராமாநுஜர் தாத்பரியம்).

(ஸ்வ) 'ஆத்ம ஸம்யமம்' என்றால் 'ஆத்மாவினிடத்து மனதை அலையாது நிறுத்தல்.' அதுவே யோகமென்னும் அக்நி.

எண்ணெயினால் விளக்குப் பிரகாசிக்கப்பெறுவதுபோல, விவேக அறிவினால் பிரகாசத்தன்மையை அடைவிக்கப் பெற்ற அந்த அக்நியிலே இந்திரியங்கள் பிராணன் இவற்றின் தொழில்களை யெல்லாம் சிலர் அர்ப்பிக்கிறார்கள். அதாவது, ஸகல தொழில்களையுந்தடுத்து ஆத்மாவினிடத்து மனம் சேர்தலைச் செய்கிறார்கள் என்பது தாத்பரியம். இந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்டது ஸந்யாஸிகளின் விஷயம். தீபத்திற்கு எண்ணெய் போன்று ஆத்ம ஸம்யமத்திற்கு ஞானம் ஆகிறது. பிராணன் என்பது ஒவ்வொரு சரீரத்திலுமுள்ள வாயு. அதன் தொழில்: வளைதல், நிமிர்தல் முதலியன. தேகத்திலுள்ள பத்து வாயுக்களையும், அவற்றின் செய்கைகளையும் அடியிற் கண்டபடி ஸ்ரீதரர் சொல்லியிருக்கிறார்.

1. **பிராணன்**—தேகத்திற்குள் இருந்துகொண்டு ஞானேந்திரியங்கள் மூலமாய்ச் சில பாகம் வெளியிற் போவதும் வருவதுமா யிருப்பது.
2. **அபானன்**—அபானத்தின் வழியாய்ச் சில பாகம் வெளியிற்போவதும் வருவதுமா யிருப்பது.
3. **வியானன்**—தேகம் முழுதும் சுற்றிக்கொண்டே யிருப்பது. (இந்த வாயு சுற்றுகிறதினால்தான், இரத்தத்தைத் தேகம் முழுவதும் ஓடும்படி செய்கிறது).
4. **உதானன்**—தேகத்திற்குள் நாபியிலிருந்து தலையுச்சிவரையில் போய் வருகிறதாக இருப்பது.
5. **சமானன்**—ஆகாராதிகளை ஜீரணஞ் செய்வித்து ஆகாரத்தின் சத்துக்களை அவை போய்ச் சேரவேண்டிய இடத்தில் சேர்த்து அசத்தை மலஜலரூபமாய் வெளிப்படும்படி செய்கிறது.
6. **நாகன்**—வாந்தியை யுண்டுபண்ணுகிறது.
7. **கூர்மன்**—கண்களை மலரச் செய்கிறது.
8. **கிருகரன்**—தும்மலை யுண்டாக்குகிறது.
9. **தேவதத்தன்**—கொட்டாவியை யுண்டாக்குகிறது.
10. **தநஞ்சயன்**—தேகத்தில் பிராண னிருக்கையிலும், பிராணன் போன பிறகும், தேகத்தி லிருக்கிறது.

இந்தப் பத்து வாயுக்களின் பெயர்களையும் செய்கைகளையும் **யோக சூடாமணி உபநிஷத்திலும்,** லிங்கபுராணம்: அத். 8: 6 முதல் 66 வரையிலுமுள்ள சுலோகங்களிலும், சிவபுராணம்: வாயுஸம்ஹிதை அத். 29: 39 முதல் 41 வரையிலுள்ள சுலோகங்களிலும் காண்க. (27)

உஅ. த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்ததாபரே ।
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச யதயஸ்ஸம்ஶிதவ்ரதாঃ ॥ [அபரே

28. த்ரவ்யயஜ்ஞா:(1)-தபோயஜ்ஞா:(2)-யோகயஜ்ஞா:(3)-ததா-
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞா:(4)-ச-யதய:(5)-ஸம்ஶிதவ்ரதா:(6)॥

அபரே	சிலர்
த்ரவ்யயஜ்ஞா:	திரவிய தானத்தை யஜ்ஞமாக உடையவர்கள்;
(அபரே)	சிலர்
தபோயஜ்ஞா:	தபஸை யஜ்ஞமாக உடையவர்கள்;
(அபரே)	சிலர்
யோகயஜ்ஞா:	யோகத்தையே யஜ்ஞமாக உடையவர்கள்;
ததா	அப்படியே
(அபரே)	வேறு சிலர்
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச	வேதாத்தியயனத்தையே யஜ்ஞமாக உடையவர்கள்; சிலர், சாஸ்திரத்தின் அர்த்த ஞானத்தையே யஜ்ஞமாக உடையவர்கள்;
(அபரே)	இன்னும் சிலர்
யதய:	நல்ல பிரயத்தனமுள்ளவர்களாய்
ஸம்ஶிதவ்ரதா:	அதிக கடுமையான விரதத்தை உடையவர்கள்.

சிலர் திரவியதானத்தையும், சிலர் தபஸையும், சிலர் யோகத்தையும், சிலர் வேதம் ஓதல் - சிலர் வேதார்த்த விசாரம் செய்தல் இவைகளை யஜ்ஞங்களாக உடையவர்கள். இன்னும் சிலர், நல்ல பிரயத்தின முள்ளவர்களாய் அதிக கடுமையான விரதங்களை உடையவர்கள்.

---

(1)"த்ரவ்ய யஜ்ஞா:—திரவியங்களைப் (பொருள்களை) நல்ல க்ஷேத்திரம், தீர்த்தமுள்ள விடங்களில் ஸத்பாத்திரத்தில் தானஞ் செய்வதையே யஜ்ஞமாக எண்ணுகிறார்கள்." (சங்கரர்). "ஞாயமாய் ஸம்பாதித்த பொருளைச் சுவாமி பூஜை, யாகங்கள், நியமமாய்ச் செய்கிற ஹோமம், தானம் முதலிய விஷயங்களுக்காகச் செலவிடுவதையே யக்ஞமாக எண்ணுகிறார்கள்." (ராமானுஜர்). ஆத்மஸம்யம யோகாக்கினியில் ஹவிஸ்முதலிய திரவியங்களை ஹோமம் செய்கிறது; அல்லது பொருளை யோக்கியர்களுக்குத் தானஞ் செய்வது." (மத்துவர்). "பகவதர்ப்பணமாகத் திரவியத்தைச் செலவிடுவது." (இராகவேந்திரர்).

(2) "தபோயஞ்ஞா: = தபசு செய்வதையே யக்ஞமாக எண்ணுகிறார்கள்." (சங்கரர்). "கிருச்சிர சாந்திராயண விரதம், உபவாசாதி." (ஸ்ரீதரர்) (ராமாநுஜர்) (இராகவேந்திரர்). "தான் செய்யும் தபசைப் பிரமார்ப்பணஞ் செய்வது." (மத்வர்). இந்த அர்த்தத்தையும் (இராகவேந்திரர்) ஒப்புக்கொள்ளுகிறார்.

(3) "யோகயஜ்ஞா: = பிராணாயாமப் பிரத்தியாஹாராதி அஷ்டாங்க யோகம்." (சங்கரர்). "மனதைச் சமாதானமாக ஒரேயிடத்தில் நிறுத்துவது." (ஸ்ரீதரர்). "புண்ணிய க்ஷேத்திரம், புண்ணிய தீர்த்தமுள்ள இடத்தில் வாசம் செய்வது." (ராமாநுஜர்)."பகவத்தியானமாகிற யஜ்ஞம்." (இராகவேந்திரர்.)

(4) "ஸ்வாத்யாயஜ்ஞானயஜ்ஞா:—ஸ்வாத்யாயயஜ்ஞ: = வேதாதி பாராயணம், ஜ்ஞானயஜ்ஞ = வேதார்த்த விசாரம் செய்தறியும்ஜ்ஞானம்." (சங்கரர்) (ஸ்ரீதரர்) (ராமாநுஜர்) (இராகவேந்திரர்). அல்லது, "வேதார்த்த விசாரத்தினால் சம்பாதிக்கிற ஞானமே யஜ்ஞம்." (ஸ்ரீதரர்).

(5) "யதய: = யத்நசீலா:" (சங்கரர்) (ராமாநுஜர்) (இராகவேந்திரர்.)"ப்ரயத்நசீலா:" (ஸ்ரீதரர்). (இந்த இரண்டு வாக்கியங்களுடைய அர்த்தம் ஒன்றுதான். அதாவது, 'பிரயத்னம் அல்லது முயற்சி செய்கிறவர்கள்'.)

(6) "ஸம்சித வ்ரதா:= திடமான நிச்சயமுள்ளவர்கள்" (ராமாநுஜர்).(ஸ்வா) "தினம் ஆயிரம் சிவலிங்கம் செய்து பூஜை செய்தாலன்றிச் சாப்பிடுகிறதில்லை. திரவியம் சம்பாதித்து இந்தக் கோவிலைக் கட்டுகிற வரையில் அரிகண்டம் போட்டுக்கொள்ளுகிறேன். திருப்பதிக்கு அங்கப் பிரதக்ஷணஞ் செய்துகொண்டு போகிறேன்," என்பவைகளைப்போன்ற கடின விரதங்கள் செய்துகொண்டு அவ்விதமாய் நடக்கிறவர்கள்.

(ஸ்வ) இந்தச் சுலோகத்தில் ஆறு யஜ்ஞங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன:—அதாவது, புண்ணிய தீர்த்தம் க்ஷேத்திரம் முதலிய இடங்களில் யோக்கியர்களுக்குப் பொருள் கொடுத்தலை யஜ்ஞம் என்கிற புத்தியோடு செய்வது (1). தவம் புரிகிற சிலர்: தபஸ் என்னும் யஜ்ஞத்தைச் செய்வது (2). சிலர், ப்ராணாயாமம் அதாவது ப்ராண வாயுக்களை அடக்குதல், ப்ரத்யாஹாரம் அதாவது மனதை வெளி விஷயங்களினின்று இழுத்து உள்ளே செலுத்துதல் முதலியவற்றைச் செய்வதாகிய யோகத்தையே யஜ்ஞமாகக் கொண்டு செய்வது (3). சிலர், ரிக்வேதமுதலிய வேதங்களை விதிப்படி அப்யஸித்தலை யஞ்ஜமாகச் செய்வது (4). சிலர், சாஸ்திரார்த்தங்களை நன்றாய் விசாரித்து ஆராய்ந்தறிவதையே யஜ்ஞ

மாகச் செய்வது (5). மற்றும் சிலர், ஊக்கமுள்ள தன்மையோடு கூடிக் கடுமையான விரதங்களை அனுஷ்டிப்பது (6). ஆனால், சில வியாக்கியா தாக்கள் இதில் ஐந்து யஜ்ஞம்தான் சொன்னதாக வைத்துக்கொண்டு 'யதய: ஸம்ஶிதவ்ரதா:' என்பதற்கு "முன்சொன்ன ஐந்து யஜ்ஞமும் அதிக பிரயத்தனமும் கடினமுமான விருத்தத்தோடும் கூடியது" என்று தாத்பரியம் செய்கிறார்கள். (மதுசூதன சரஸ்வதி) "அக்கியில் நெய்முத லிய திரவியங்களை விட்டு ஹோமம் செய்வதுதான் த்ரவ்ய யஜ்ஞம்" என்று அபிப்பிராயப்படுகிறார். தபோயஜ்ஞம்—என்பது கிருச்சிரம், சாந் திராயணம் முதலிய உபவாஸத்தைக் குறிப்பதாகத் துவைதபரமான தாத்பரியம். (28)

உகூ. अपाने जुह्वति प्राणं प्राणेऽपानं तथापरे ।
प्राणापानगती रुद्ध्वा प्राणायामपरायणाः ॥

29. அபாநே-ஜுஹ்வதி-ப்ராணம்-ப்ராணே-அபாநம்-ததா-அபரே।
ப்ராணாபாநகதீ-ருத்த்வா-ப்ராணாயாம பராயணா:॥

अपरे	பின்னும் சிலர்:
अपाने	அபானவாயுவில்
प्राणं	பிராணவாயுவை
जुह्वति	ஹோமம் செய்கிறார்கள்;
तथा	அப்படியே
प्राणे	பிராண வாயுவில்
अपानं	அபானவாயுவை
जुह्वति	ஹோமம் செய்கிறார்கள்;
प्राणापानगती रुद्ध्वा	பிராணாபான வாயுக்களுடைய போக்கைத் தடுத்து
प्राणायामपराय णाः	பிராணாயாமம் செய்வதிலேயே ஆஸக்தி யுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

பின்னும் சிலர், அபானவாயுவில் பிராணவாயுவை ஹோமம் செய் கிறார்கள்; அவ்வாறே பிராணவாயுவில் அபானவாயுவை ஹோமம் செய் கிறார்கள். பிராண அபானன்களுடைய போக்குகளைத் தடுத்துப் பிராணா யாமம் செய்வதிலேயே கருத்துள்ளவர்களா யிருக்கிறார்கள்.

(சங்கர பாஷ்யம்) "மேலும் சிலர், அபானத்தின் செய்கையிலேயே பிராணன் செய்கையை அர்ப்பிக்கிறார்கள். அதாவது, பூரகம் என்னும்

பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். அவ்வாறே சிலர், பிராணனிலே அபானனை அர்ப்பிக்கிறார்கள்; அதாவது, ரேசகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். வாய் மூக்கு இவற்றின் வழியாகக் காற்று வெளியே செல்லுதல் பிராணனுடைய போக்கு என்பது. அதற்கு விபரீதமாக உள்ளே செல்லுதல் அபானனுடைய போக்கு. சிலர் பிராண அபானன்களுடைய அந்தப் போக்குகளைத் தடுத்துப் பிராணாயாமத்திலேயே கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். அதாவது, கும்பகம் என்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள்.

(ஸ்ரீதரர்) 'பூரகம்' என்றால், 'மூக்கினால் சுவாசத்தை உள்ளுக்கு இழுப்பது'. 'கும்பகம்' என்றால், 'மூக்கினால் உள்ளுக்கு இழுத்த சுவாசத்தை உள்ளே நிறுத்துவது'. 'ரேசகம்' என்றால், 'நிறுத்தப்பட்ட சுவாசத்தில் சொற்ப பாகம் வெளியில் விடுவது.' பூரககாலத்தில் ஒரு மூக்கினால் சுவாசம் இழுக்கப்படுகிறது. ரேசககாலத்தில மற்றொரு மூக்கினால் சுவாசம் விடப்படுகிறது. இப்படிச் சுவாசத்தை இழுக்கையிலும், விடுகையிலும் ஹம்ஸ꞉ ஸோஹம் என்று நேராகவும் தலைகீழாகவும் பிரகாசிக்கிற, (அஜபாமந்த்ரம்) அஜபாமந்திரத்தினால், "தத்த்வமஸி" என்கிற இடத்தில் சொல்லப்படுகிற ஜீவப்ரஹ்ம ஐக்கியத்தை மறுபடியும் மறுபடியும் சிந்திக்கிறவர்களாயிருக்கிறார்கள். (இதற்கு ஆதாரமாக யோகசாஸ்திரத்திலிருந்து ஒரு சுலோகம் குறிக்கிறார்). "ஸகாரேண பஹிர்யாதி ஹகாரேண விசேத் புந꞉ ப்ராணஸ்த்வஸௌ வா ஹம்ஹம்ஸாக்ஷாந் நவிஜ்ஞயேத்" இந்தச் சுலோகத்தின் அர்த்தத்தையும் இதன் வியாக்யாந அர்த்தத்தையும் விளக்குகிற ஸ்காந்தபுராணம்-காசிகாண்டம் - முதல் பாகம்-அத். 41-ல் உள்ள அடியிற் கண்ட வாக்கியங்களைப் பார்க்க:—

அபாந꞉ கர்ஷதி ப்ராணம் ப்ராணோऽபாநம் ச கர்ஷதி ।
ஊர்த்வாத꞉ஸ்திதாவேதௌ ஸம்யோஜயதி யோऽபவித் ॥
ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண விசேத் புந꞉ ।
ஹம்ஸஹம்ஸேத்யமும் மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா ॥
ஷட்சதாநி திவாராத்ரௌ ஸஹஸ்ராண்யேகவிம்சதி꞉ ।
ஏதத்ஸங்க்யாந்விதம் மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா ॥
அஜபா நாம காயத்ரீ யோகிநாம் மோக்ஷதாயிநீ ।
அஸ்யா꞉ ஸங்கல்பமாத்ரேண ஸர்வபாபை꞉ ப்ரமுச்யதே ॥

அபான வாயுவானது பிராணவாயுவை இழுக்கிறது; பிரணவாயுவானது அபானவாயுவை இழுக்கிறது. மேலும் கீழுமாயிருக்கிற இந்த (இரண்டு)

வாயுக்களையும் யோகமறிந்தவன் சேர்க்கிறான், (என்றால், அசையவொட்டாமற் செய்கிறான்). ஹகாரரூபமாய் வெளிப்படுத்துகிறதும், ஸகார ரூபமாய் உள்ளுக்கு இழுக்கிறதுமா யிருக்கிறான். இதனால் ஹம்ஸ ஹம்ஸ என்ற மந்திரத்தை ஜீவன் எப்போதும் ஜபம் செய்கிறவனாகிறான். இந்த மந்திரத்தை ஜீவனானவன் இராப்பகல் சேர்ந்த ஒருநாளில் எப்போதும் ஜபிப்பானாகில் 21,600 மந்திரமாகிறது; (என்றால், அவ்வளவு சுவாஸம் விடுகிறா னென்பது தாத்பரியம்). இந்த அஜபா (ஜபிக்காத) மந்திரமாகிய காயத்திரியானது யோகிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கதா யிருக்கிறது. இந்த காயத்திரியைச் செய்ய யெண்ணின் மாத்திரத்தில் மனிதனானவன் பாபங்களிலிருந்து விடுபடுகிறான்.

(ஷா) இந்தச் சுலோகத்தின் அர்த்தத்திற்கு ஒத்ததான அடியிற் கண்ட சுலோகத்தை யோகசூடாமணி யுபநிஷத்திலும், யோகசிகோபநிஷத்: 1, 6 - அத்தியாயங்களிலும், தியானபிந்தூபநிஷத்திலும் காண்க.

“ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண விசேத் புந: ।
ஹம்ஸ ஹம்ஸேத்யமும் மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா ॥”

மற்றொரு பாடம்:

“ஹம்ஸ ஹம்ஸேதி மந்த்ரோயம் ஸர்வைர்ஜீவைச்ச ஜப்யதே ॥”

(ஸ்வ) இந்த 29-வது சுலோகத்திற்குச் சங்கராநந்தர் அடியிற் கண்டபடியும் அந்வயம் செய்திருக்கிறார். ப்ராணாயாம பராயணா:= பிராணாயாமம் செய்கிறவர்களாயிருக்கிற, அபரே=பின்னும் சிலர், ப்ராணாபான கதீ ருத்வா=பிராண அபான வாயுக்களுடைய நடைகளைத் தடுத்து, அபானே ப்ராணம்=அபானவாயுவில் பிராணவாயுவையும், ததா=அப்படியே, ப்ராணே அபானம்=பிராண வாயுவில் அபான வாயுவையும், ஜுஹ்வதி=ஹோமம் செய்கிறார்கள்.

மதுஸூதன சரஸ்வதி முதலான சிலர், பின் வருகிற சுலோகத்தின் முதல் பாதமாகிய “அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி” என்பதை இந்தச் சுலோகத்தோடு சேர்த்து அந்வயப் படுத்தியிருக்கிறார்கள். (29)

---

௩௦. அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி।
ஸர்வேऽப்யேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபித கல்மஷா: ॥

30. அபரே-நியதாஹாரா:-ப்ராணாந்-ப்ராணேஷு-ஜுஹ்வதி ।
ஸர்வே-அபி-ஏதே-யஜ்ஞவித:-யஜ்ஞக்ஷபித கல்மஷா: ॥

अपरे	சிலர்,
नियताहाराः	மிதமான ஆகாரமுள்ளவர்களாய்
प्राणान्	பிராணன்முதலிய வாயுக்களை
प्राणेषु	பிராணன்முதலிய வாயுக்களில்
जुह्वति	ஹோமம் செய்கிறார்கள்;
यज्ञविदः	யஜ்ஞத்தை அறிந்த அல்லது அநுஷ்டித்த
सर्वेऽप्येते	இந்த (முற்சொன்ன) எல்லோரும்
यज्ञक्षपितकल्मषाः	கீழ்க் கூறிய யஜ்ஞங்களினால் பாபம் நசிக்கப்பெற்றவர்கள்.

சிலர், மிதமான ஆகாரமுள்ளவர்களாய்ப் பிராணன்முதலிய வாயுக்களை அப் பிராணன்முதலிய வாயுக்களிலேயே ஹோமம் செய்கிறார்கள். (அதாவது, பலவாயுள்ள வாயுக்களிலே எந்தெந்த வாயுவானது ஜயிக்கப் படுகின்றதோ அந்தந்த வாயுவிலே மற்றைய வாயு விசேஷங்களை அர்ப்பிக்கிறார்கள். அவை அவற்றுள் பிரவேசித்து ஒடுங்கிவிட்டனபோல் ஆகின்றது என்பது கருத்து). மேற் சொல்லப்பட்ட இவர்கள் எல்லோரும் யஜ்ஞ கர்மத்தைத் தெரிந்தவர்கள். இவர்கள் மேற்சொன்ன யஜ்ஞங்களால் தங்கள் பாபங்களைப் போக்கடித்துக்கொண்டவர்கள்.

---

(1) 'ப்ராணாந்' என்பதற்கு 'இந்திரிய வியாபாரங்கள்' என்றும், 'ப்ராணேஷு' என்பதற்கு, 'வசமான இந்திரியங்களிலே' என்றும் ஸ்ரீதரர் அர்த்தம் செய்திருக்கிறார்.

(ஸ்ரீதரர்) "மிதமான ஆகார மென்பது, ஒருவன் தன் வயிற்றை முழுவதும் நிரப்ப எவ்வளவு ஆகாரம் வேண்டியதோ, அந்த அளவை நாலு பங்கு ஆக்கி, இரண்டு பங்கை அன்னாதிகளாலும் ஒரு பங்கை ஜலத்தினாலும் நிரப்பி, மற்றொரு பாகத்தை நிரப்பாமல் விட்டுவிடுவது. (ஏனென்றால், வாயுக்கள் சஞ்சாரஞ் செய்யவேண்டியதற்காகத்தான்). இப்படிப் புசிப்பதுதான் மிதமான ஆகாரம்."

(ஸூ) "இந்திரிய வியாபாரங்களை இந்திரியங்களிலே அடக்குவது" என்று ஸ்ரீதரரும், "பிராணன்முதலிய வாயுக்களை பிராணன்முதலிய வாயுக்களிலே யடக்குவது" என்று சங்கரரும் சொல்லியிருக்கிறார்கள். இந்திரியங்கள், அல்லது வாயுக்கள் இவைகளை ஒன்றையொன்றில் அடக்குவது எப்படியென்றாலோ, யோகாப்பியாசஞ் செய்கிறவர்கள் இந்திரியங்கள், வாயுக்கள் இவைகளை அவைகளின் விஷயங்களில்பிரவேசிக்காம லடக்க வேண்டியது அவசியம். எல்லா இந்திரியங்களையாவது, அல்லது வாயுக்

களையாவது ஒரேகாலத்தி லடக்கிவிடுவது, ஆரம்பத்தில் சாத்தியமல்ல வாகையால், ஒவ்வொன்ருய் அடக்கவேண்டும்; முதலில் எது அடக்கப் படுகிறதோ அதோடு அடக்கப்படாம லிருப்பவைகளை ஒவ்வொன்ருகச் சேர்ப்பதுதான் ஒன்றில் மற்ருென்றைச் சேர்ப்பது, அல்லது ஹோமம் செய்வது. இப்படியடக்கிக்கொண்டேவந்து கடைசியில் எல்லாம் அடங்கி ஞல், அதாவது சர்வப் பிராணன்களையும் ஏகீபவிக்கும்படி செய்தால், பிறகு மனம் சலிக்காமல் ஒரே நிலையில் நிற்கும். இந்த அர்த்தத்தைக் கொடுக்கிற சுலோகத்தை 9-வது அத்தியாயம் 6-வது சுலோகத்தின் வியாக்கியானத்தில் காண்க. (30)

---

௩௧. 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮 ॥

31. யஜ்ஞசிஷ்டாம்ருதபுஜ꞉-யாந்தி-ப்ரஹ்ம-ஸநாதநம் |
ந-அயம்-லோக꞉-அஸ்தி-அயஜ்ஞஸ்ய-குத꞉-அந்ய꞉-குருஸத்தம ||

𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑌃	(முன் சொன்ன) யஜ்ஞத்தின் சேஷமான (மிச்சமான) அமிர்தத்தைப் புசிக்கிறவர்கள்
𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	சாசுவதமான ப்ரஹ்மத்தை
𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	அடைகிருர்கள்;
𑌹𑍇 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮	ஓ ! குருவம்ச சிரேஷ்டனே!
𑌅𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯	யஜ்ஞம் இல்லாதவனுக்கு
𑌅𑌯𑌂 𑌲𑍋𑌕𑌃	(அற்பசுகமாகிய தர்மார்த்த காமாநுபவமுள்ள) இந்த லோகம்
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	கிடையாது ;
𑌅𑌨𑍍𑌯𑌃	(சுவர்க்காதி) மற்றது
𑌕𑍁𑌤𑌃	எது ?

(முன் சொன்ன) யஜ்ஞத்தின் சேஷமான (மிச்சமான) அமிர்தத்தைப் புசிக்கிறவர்கள், அதாவது அந்த யஜ்ஞங்களைச் செய்தவர்கள், சாசுவதமான ப்ரஹ்மத்தை யடைகிருர்கள். ஓ! அர்ஜுனு! மேற் சொன்ன யஜ்ஞங்களில் ஒன்றும் இல்லாதவனுக்கு இந்த லோக மில்லை. மற்றது எது? என்ருல், எவனுக்கு இவ் யஜ்ஞங்களில் ஒன்ருவது இல்லையோ அவனுக்கு இந்த லோகசுகமே யில்லையெனின், ஜ்யோதிஷ்டோமம் முதலிய அருமையான சாதநங்களால் சாதிக்கத்தக்க மற்ற சுவர்க்காதி லோக சுகம் எப்படி உண்டாகும் என்பது பொருள்.

(சங்கர பாஷ்யம்) "இவ்வாறு கீழ்க் கூறிய யஜ்ஞங்களைச் செய்த காலம் போக மிகுதியுள்ள காலத்திலே, தனக்கு விதிக்கப்பட்ட யஜ்ஞம் செய்த பிறகு உள்ள அமிர்தமென்னும் அன்னத்தை எவர்கள் விதிப்படி புசிக்கிறார்களோ அவர்கள், சம்ஸாரத்தினின்று விடுபடவிரும்புபவரானால் நித்தியமான ப்ரஹ்மத்தைக் காலக்கிரமத்தில் அடைகிறார்கள். காலக்கிரமப்படியென்பது யுக்தியினால் வருவித்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. கீழ்க்கூறிய யஜ்ஞங்களுள் எவனுக்கு ஒரு யஜ்ஞமேனு மில்லையோ, அவனுக்கு, எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவான இவ் வுலகமே இல்லையென்றால், ஜ்யோதிஷ்டோமம் முதலிய விசேஷ சாதனங்களால் அடையத்தக்க மற்ற சுவர்க்காதி உலகம் ஏது? அதாவது, இல்லவே இல்லை என்பது கருத்து."

(ஸ்ரீதரர்) "திரவிய யஜ்ஞம், தபோ யஜ்ஞம் முதலிய யஜ்ஞங்கள் முந்திச் சொல்லப்பட்டிருக்கின்றன வல்லவா? அந்த யஜ்ஞங்களில் அன்னம் ஏது? மிச்சந்தான் ஏது? என்றாலோ, எங்கெந்த யஜ்ஞத்தில் அன்னமிச்ச முண்டோ, அவைகளின் விஷயத்தில் அன்னமிச்சம் என்றும், அன்ன சம்பந்த மில்லாத யஜ்ஞவிஷயத்தில், யஜ்ஞம் செய்தகாலம் போக மிச்சமான காலத்தில் விதிப்படி புசிக்கத்தக்க சுத்தமான யாதொரு அன்னமென்றும் தாத்பர்யம்."

(ராமானுஜர்) "அயஜ்ஞஸ்ய = மஹா யஜ்ஞத்துடன் நித்திய நைமித்திக யஜ்ஞம் செய்யாதவனுக்கு, அயம் லோகஃ = சுவர்க்காதி லோகங்களில் தர்மார்த்த காமங்களுடைய அநுபவமாவது, அந்யஃ = மோக்ஷமாவது, குதஃ = ஏது? நாஸ்தி = கிடைக்கமாட்டாது."

(ஸ்வ) முன், மூன்றாவது அத்தியாயம், 9—13 வரை சுலோகங்களை இந்தப் பிரகிருதத்தில் சேர்த்துப் பார்த்தால் இதன் கருத்துத் தெளிவாய் விளங்கும். அங்கு யஜ்ஞமென்றால் ஈசுவரன் என்றும், அந்த ஈசுவரன் பொருட்டுச் செய்யப்படுவதே யஜ்ஞத்திற்கான கர்மமென்றும், அவ்விதமான யஜ்ஞ கர்மங்கள் தவிர மற்றக் கர்மங்களினால் பந்தத்திற்குக் காரண மாகின்றன என்றும், தேவயஜ்ஞம் முதலிய பஞ்சமஹா யஜ்ஞம் செய்து பின்பு அவற்றின் சேஷமான அமிர்தமெனப்படுகின்ற அன்னத்தைப் புசிக்கும் சாதுக்கள், சகல பாபத்திலிருந்தும் விடுபடுகிறார்கள் என்றும், இதே தாத்பர்யம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், இங்கு யஜ்ஞ சேஷமான அமிர்தத்தைப் புசிப்பதென்பது மேற் சொன்ன அநேகவித யஜ்ஞங்களைச் செய்து முடித்தபிறகு அவர்களால் அநுபவிக்கப்படும் அதன் பலனை, அல்லது

அவர்கள் மனதில் உண்டாகும் திருப்தியைக் குறிப்பதாகவும் சொல்லலாமென்று தோற்றுகிறது.

---

௩௨. ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே ।
கர்மஜாந்வித்தி தாந்ஸர்வாநேவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே ॥

32. ஏவம்-பஹுவிதாஃ-யஜ்ஞாஃ-விததாஃ-ப்ரஹ்மணஃ-முகே ।
கர்மஜாந்-வித்தி-தாந்-ஸர்வாந்-ஏவம்-ஜ்ஞாத்வா-விமோக்ஷ்யஸே ॥

ஏவம்	இப்படிப்பட்ட
பஹுவிதாஃ	அநேக விதங்களான
யஜ்ஞாஃ	யஜ்ஞங்கள்
ப்ரஹ்மணஃ முகே	வேதத்தினுடைய முகத்தில் (வேதத்தில்)
விததாஃ	விவரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன;
ஸர்வாந் தாந்	அந்த ஸமஸ்த யஜ்ஞங்களையும்
கர்மஜாந்	(மனம், வாக்கு, தேகங்களின் செய்கையாகிய (கர்மத்தினுலுண்டானவையாக)
வித்தி	அறி;
த்வம்	நீ
ஏவம் ஜ்ஞாத்வா	இவ்விதமாய் அறிந்து (ஞானநிஷ்டனும்)
விமோக்ஷ்யஸே	கர்மபந்தத்திலிருந்து விடுபடுவாய்.

(மேலே விவரித்த) இப்படிப்பட்ட அநேகவிதமான யஜ்ஞங்கள் வேதத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ஸமஸ்த யஜ்ஞங்களையும், மனம் - வாக்கு - தேகம் இவைகளின் செய்கையாகிய கர்மத்தினுலுண்டானவையாக அறி. இவ்விதமாயறிந்து (ஞான நிஷ்டையை யடைந்தால்) கர்மபந்தத்திலிருந்து விடுபடுவாய்.

(சங்கர பாஷ்யம்) "கீழ்க்கூறிய பலவிதமான யஜ்ஞங்கள் வேதத்தின் முகத்திலே விஸ்தாரமாயுள்ளவை; வேதத்தின் வழியாக வேதத்தினின்று அறியப்படுகின்றவையாதலால் வேதத்தின் முகத்திலே விரிந்துள்ளவை எனப்படுகின்றன. அது, வாசி ப்ராணாநுஜுஹுமஃ." "வாக்கிலேயன்றோ பிராணன்களை ஹோமம் செய்கின்றோம்" என்பது முதலான வேதவாக்கியங்களால் காண்க. அவை எல்லாவற்றையும் (அநேகவித கர்மமார்க்கங்களாக), மன மொழி மெய்களின் வியாபாரங்களால் உண்டாவனவாக (அதாவது) ஆத்மா அல்லாதவற்றினின்றும் தோன்றுவனவாக அறிந்துகொள். ஏனெனில், ஆத்மா தொழிலில்லா

தது. ஆதலால், ஆத்மாவினுல் உண்டானவை அல்ல. ஆகவே, நீ இவ்வாறு அறிந்து கெடுதியினின்றும் நீங்குவாய். "இவை எனது செய்கைகள் அல்ல; நான் தொழி லில்லாதவன்; உதாஸீனன்" என நீ இவ்வாறு தெளிந்தவுடன், இந்த மெய்யறிவினுலே, தீமையாகிய சம்சாரக் கட்டினின்றும் விடுபடுவாய் என்பது தேர்ந்த பொருள். (உதாஸீனன்-உபேக்ஷை யுள்ளவன்; அதாவது, விவாதம் செய்கின்ற இருவருடைய வெற்றி தோல்விகளோடு சம்பந்தப்படாது, அவற்ருல் வரும் மகிழ்ச்சி வருத்தங்களையும் அடையாது, யாதொரு விகாரமுமின்றி இருப்பவன்)."

(ராமாநுஜர்) "𑌏𑌵𑌂 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾𑌃=இப்படிப்பட்ட அநேக விதமான, யஜ்ஞா:=கர்மயோகங்கள், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑍁𑌖𑍇 𑌵𑌿𑌤𑌤𑌾𑌃= ஆத்ம சொரூப நிச்சய மடைவதற்குக் காரணங்களா யிருக்கின்றன; 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌤𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍=மேற்சொன்ன சகல கர்மயோகங்களும், பிரதிதினம், தான் அநுஷ்டிக்கிற நித்திய நைமித்திக கர்மங்களா லுண்டாயினவென்று, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 = அறி. 𑌏𑌵𑌂 = இவ்விதமாய், 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 = தெரிந்தும், அநுஷ்டித்தும் வந்தால், 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 = மோக்ஷமடைவாய்."

(இராகவேந்திரர்) "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑍁𑌖𑍇 𑌵𑌿𑌤𑌤𑌾𑌃=யஜ்ஞபோக்தா ப்ரஹ்மமானதினுல், ப்ரஹ்மத்தின் முகத்தில் யஜ்ஞங்கள் விசாலமா யிருக்கின்றன. 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌤𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 = இந்த யஜ்ஞங்களெல்லாம் மனோ வாக்குக் காயங்களுடைய கர்மங்களா லுண்டாயினவென்று அறி. (மற்றவை வித்தியாச மில்லை.)" (32)

---

௩௩. 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 ॥

33. ஶ்ரேயாந்-த்ரவ்யமயாத்-யஜ்ஞாத்-ஜ்ஞாநயஜ்ஞ:-பரந்தப ।
ஸர்வம்-கர்ம-அகிலம்-பார்த-ஜ்ஞாநே-பரிஸமாப்யதே ॥

𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪	ஓ! சத்துருவைத் தபிப்பிக்கிறவனே!
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃	ஞான யஜ்ஞமானது
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌤𑍍	திரவியங்களினுலாகும்
𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍	யஜ்ஞத்தைப்பார்க்கிலும்
𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍	சிரேஷ்டமாகும்;
𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! குந்தி புத்திரா!
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮	சகல கர்மமும்
𑌅𑌖𑌿𑌲𑌂	மிச்ச மில்லாமல்

ஜாநெ (மோக்ஷ சாதனமான) ஞானத்திலே [து.]
பரிஸமாப்யதெ அந்தர்பாவ மாகின்றது (அடங்கி யிற்கின்ற

ஓ! அர்ஜுனா! திரவியங்களால் (பணம், அல்லது யஜ்ஞத்தி லுப யோகிக்கவேண்டிய வஸ்துக்களால்) செய்யக்கூடிய யஜ்ஞத்தைப் பார்க்கி லும், ஞானமாகிற யஜ்ஞமானது சிரேஷ்டமாகும். ஓ! குந்தி புத்திரா! ஈசுவரார்ப்பணமாகச் செய்யப்படும் சகல கர்மங்களும், அதின் பலனுடன் ப்ரஹ்மஞானத்தில் அடங்கியிருக்கிறது. (ஞானத்தைவிட கர்மபலன் மிகவும் அற்பமானதென்பது கருத்து).

(சங்கர பாஷ்யம்) "ப்ரஹ்மார்ப்பணம்" என்று தொடங்கும் சுலோ கத்தினுல், ப்ரஹ்மஞானம், ஸம்யக்தர்சனம் என்பதே ஒரு யஜ்ஞமாகக் கூறப்பட்டது. அதன்பின் பல யஜ்ஞங்களும் உபதேசிக்கப்பட்டன. ஒரு வன் விரும்பிய புருஷார்த்தங்களைப் பெறுதற்குச் சாதனமான அந்த மற் றைய யஜ்ஞங்களைவிட, ஞானம் சிரேஷ்டமானதென்று பகவான் புகழ் கிறுர். திரவியங்களாகிய சாதனங்களால் சாதிக்கப்படும் யஜ்ஞந்தான் பயனை விளைவிப்பது. ஞானமென்னும் யஜ்ஞம் அப்படிப் பயனை விளைவியா தது. ஆதலால், இது மேலானதாம். எப்படியெனில்,—முக்திக்குச் சாதனமான ஞானத்திலே சகல கர்மங்களும் அந்தர்பாவ மாகின்றன, (அடங்கி யிற்கின்றன) என்பது பொருள். ஆகவே, ஞானயஜ்ஞம் உயர்ந் தது. இதனை, "யதாக்ருதாய விஜிதாயாதரேயா:" என்கிற சுருதியி னுல் உணர்க. (இந்த சாந்தோக்யோபநிஷத் வாக்கியமும் அதன் தாத்பரியமும், முன் இரண்டாவது அத்தியாயம் 46-வது சுலோகத்தின் கீழ்ச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க)."

(ராமாநுஜர்) "திரவியம் முதலியவைகளால் செய்யப்படுகிற (கர்ம மாகிய) யஜ்ஞத்தில் ஞானம் அடங்கியிருக்கிறது. எப்படியென்றுல், யஜ்ஞ ரூபமான ஒவ்வொரு கர்மத்திலும், ஒரு பாகம் கர்மமாயும், மற்றொரு பாகம் ஞானமாயு மிருக்கிறது. கர்மபாகத்தைக் காட்டிலும் ஞானபாகம் சிரேஷ்டமானது. ஓ! அர்ஜுனா! சகல கர்மங்களும், அகிலம் = அந்தக் கர் மங்களுக்கு உபயோகமான சகல வஸ்துக்களும், ஞானத்தில் முடிவடையும்; என்றுல். இப்படிக் கர்மம் செய்துவந்தால், அந்தக் கர்மமே ஞானகாரமாய் விடுமென்பது கருத்து."

(இராகவேந்திரர்) "அகிலம் ஸர்வம் க்ருத்ஸ்னம்=பூர்ணமாய் (குறைவி ன்றி) செய்யப்படும் கர்மம், ஞானத்தைப் பலனாகவுடையதாகவாகிறது."

௩௪. தத்3வித்3தி4 ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா ।
உபதே3க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வத3ர்ஶிந: ॥

34. தத்-வித்3தி4-ப்ரணிபாதேந-பரிப்ரஶ்நேந-ஸேவயா ।
உபதே3க்ஷ்யந்தி-தே-ஜ்ஞாநம்-ஜ்ஞாநிந:-தத்வத3ர்ஶிந: ॥

தத்	அதை (அந்த ஞானத்தை)
ப்ரணிபாதேந	சாஷ்டாங்க நமஸ்காரத்தினுலேயும்,
பரிப்ரஶ்நேந	செவ்வையாய்க் கேட்பதினுலேயும்,
ஸேவயா	(குருவுக்குப்) பணிவிடை செய்வதினுலேயும்
வித்3தி4	அறிந்துகொள்!
தத்த்வ த3ர்ஶிந:	தத்துவத்தை யறிந்த
ஜ்ஞாநிந:	ப்ரஹ்மஞானிகள்
தே	உனக்கு
ஜ்ஞாநம்	ஞானத்தை
உபதே3க்ஷ்யந்தி	உபதேசிப்பார்கள்.

முன் சொன்ன அந்த ஞானத்தைச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதினுலும், (பந்தம் மோக்ஷம் முதலியவைகளைப்பற்றி) நன்ருய் ஆராய்ந்து கேட்பதினுலும், ஆசாரியருக்குப் பணிவிடை செய்வதினுலும் நீ தெரிந்து கொள். தத்துவத்தை யறிந்த, அதாவது, உண்மையைக் கண்டுணர்ந்த ஞானிகள் அச் சிறந்த ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள்.

(சங்கர பாஷ்யம்) "முன் சொன்ன இந்தச் சிரேஷ்டமான ஞானமானது எப்படிக் கிடைக்குமோ அந்த வழியைப் பகவான் உபதேசிக்கிருர். ஞானத்தை எப்படிச் சம்பாதிப்பதென்பதைத் தெரிந்துகொள். ஆசாரியரிடம் சென்று நன்ருகக் கீழே விழுந்து வணங்குதல் என்னும் தீர்க்கமான நமஸ்காரம் செய்வதினுலும், "இந்த ஸம்ஸாரபந்தம் வந்தது எவ்வாறு? இதிலிருந்து விடுபடுதல் எப்படி? வித்தை யாது? அவித்தை யாது?" என்று இவ்விதமாய் அவர்களிடம் கேட்பதினுலும், ஆசாரியருக்குப் பணிவிடை செய்தலினுலும், மற்றும் இவைபோன்றவற்ருலும், நீ ஞானத்தைப் பெறுவாய்.

"பக்தி சிரத்தையோடு அமைந்த ஒடுக்க வணக்கமென்னும் சேவையினுல் உள்ளத்தில் அருள் பெறுகப்பெற்ற ஞானிகளான அவ் ஆசாரியர்கள், முன்னமே சிறப்பித்துக் கூறிய ஞானத்தை உனக்கு உபதேசித்து அருள்வார்கள். ஞானவான்களாயினும் தத்துவத்தை உள்ளபடி கண்டு அநுபவிப்பவர்கள் வெகு சொற்பம். மற்றையோர் அப்படிப்பட்டவர்க

ளல்லர். ஆதலால்தான் "தத்வதர்ஶிந:" உண்மையைக் கண்டுணர்ந்த ஞானிகள் என்கிற விசேஷம் சேர்க்கப்பட்டிருக்கிறது. எவர்கள் தத்துவத்தை யறிந்து ஸ்வாநுபவத்தோடு கூடிய ஞானிகளோ அவர்கள் உபதேசிக்கும் ஞானம்தான் மோக்ஷ சித்தியைக் கொடுக்கும் சாதானமாகும், மற்றது அல்ல என்பது கருத்து."

(ராமாநுஜர்) "ஙஹி நாபி தாஜதஸி" (அத்-2. சு-17) முதல், "ஸஷாெதலிஹிதாவஸாஂவெு்ஂ" (அத்-2. சு-39) வரையிலுள்ள சுலோகங்களினல் ஆத்மவிஷயத்தை உனக்கு நான் சொல்லியிருக்கிறேன்; இப்போது நான் சொல்லிவந்த விதமாய்க் கர்மயோகத்தை நீ அநுஷ்டித்துவந்தால் கர்மயோகத்தினுடைய சித்தி யுண்டாகும். அப்படிக் கர்மயோக சித்தி யுனக்கு உண்டாகுங்காலத்தில், பெரியோர்களை யடைந்து சேவை செய்வாயாகில் அவர்கள் உனக்கு ஞானத்தை யுபதேசிப்பார்க ளென்பது கருத்து."

(இராகவேந்திரர்) "நமெவாஹஂஜாதுநாஸஂ" அத்-2. சு-12 முதலுள்ள சுலோகங்களினல் ஆத்மஞானம் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. "ஜாநஂதெஹஂஸவிஜ்ஞாநஂ" (அத்-7. சு-2) முதலுள்ள சுலோகங்களினல் அந்த ஆத்மஞானம் இனி உபதேசஞ் செய்யவும்படுகிறது. அர்ஜுனனுக்கு ஞானோபதேசஞ் செய்யும்பொருட்டே இந்தக் கீதை ஆரம்பிக்கப்பட்ட தாகையால், உவெக்ஷ்஍ஂதி=உபதேசஞ் செய்வார்கள் என்ருல், நாம் (பகவான்) உபதேசிக்கிரு மென்பது தாத்பர்யம்."

(ஸூ) ப்ரஹ்மஞானமானது குரு உபதேசத்தினல் அடையவேண்டிய தென்பதையும், ஞானோபதேசம் பெற்றுக்கொள்ள இச்சிக்கிறவன் உபதேசிக்கும் குருவுக்குப் பணிவிடை, வந்தனம் முதலியவை செய்யவேண்டிய தென்பதையும், ப்ரஹ்ம ஞானோபதேசம் செய்ய ப்ரஹ்ம ஞானிகளே தகுந்தவர்க ளென்பதையும், பகவானவர் வெளிப்படுத்தினதாகவும் சொல்லலாம்.　(34)

---

௩௫. யஜ் ஜ்ஞாத்வா நபுநமோஹ மேவம் யாஸ்யஸி பாண்டவ |
யேந பூதாந்யஶேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மந்யதோ மயி ||

35. யத்-ஜ்ஞாத்வா-ந-புந:-மோஹம்-ஏவம்-யாஸ்யஸி-பாண்டவ |
யேந-பூதாநி-அஶேஷேண-த்ரக்ஷ்யஸி-ஆத்மநி-அதோ-மயி ||

பாண்டவ　ஓ! பாண்டவா!
த்வம்　நீ

யத்	எதை (எந்த ஞானத்தை)
ஜ்ஞாத்வா	தெரிந்துகொண்டால்
ந புந:	மறுபடியும்
ஏவம் மோஹம்	இவ்வித மோஹத்தை
யாஸ்யஸி	அடையமாட்டாயோ,
யேந	எதனால் (எந்த ஞானத்தினால்)
பூதாநி அஶேஷேண	ஸகலப் பிராணிகளையும்
ஆத்மநி	உன்னிடத்திலும்
அதோ	அப்படியே
மயி	என்னிடத்திலும்
த்ரக்ஷ்யஸி	பார்ப்பாயோ,
தத்	அதை (அந்த ஞானத்தை)
உபதேக்ஷ்யந்தி	உபதேசம் செய்வார்கள்.

ஓ! பாண்டவா! தத்துவதர்சிகள் உபதேசிக்கும் ஞானத்தை அடைவதனால் நீ மறுபடியும் இவ்வித மோஹத்தை அடையமாட்டாய். சகலப் பிராணிகளையும் உன்னிடத்தும், அப்படியே பரமேசுவரனாகிய வாஸுதேவனான என்னிடத்தும், அந்த ஞானத்தினால் நேரே காண்பாய்.

(சங்கர பாஷ்யம்) "ததா ச ஸதி இதமபி ஸமர்த்தம் வசநம்" அவ்வாறு உள்ள அளவிலேதான் இந்தச் சுலோகத்தில் சொல்லும் வசனமும் பொருத்தமுடையதாகும் (அடையக் கூடியதாகும்).

"தத்துவதர்சிகள் உபதேசித்த ஞானத்தை யடைந்தால் நீ இப்பொழுது மோஹ மடைந்திருப்பதுபோல் மறுபடி மோஹமடையமாட்டாய். (உனது மோஹம் நீங்கும்.) அன்றியும், ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுள்ள சகலப் பிராணிகளையும் ஆத்மஸ்தாநி இமாநி" இவை என்னிடத்திருக்கின்றன என உன்னிடத்திலும், "மயி பரமேஶ்வரே ச இமாநி" இவை பரமேச்வரரிடத்தும் இருக்கின்றன என்று வாஸுதேவனை என்னிடத்தும் அந்த ஞானத்தினால் ஸாக்ஷாத்தாய் (நேராய்) காண்பாய். உபநிஷத்துக்களிலெல்லாம் மிகத் தெளிவாய் உணர்த்தப்பட்ட ஜீவேச்வர ஐக்யத்தை (ஜீவனும் ஈசுவரனும் ஒன்றென்பதைக்) கண்டு உணர்வாய் என்பது பொருள்."

(ஸ்ரீதரர்) "சகல பூதங்களையும் உன்னிடத்தில் அபேதமாய்ப் பார்த்து, பிறகு உன்னையும் என்னிடத்தில் அபேதமாய்ப் பார்ப்பாய் என்பது தாத்பர்யம்."

(ராமானுஜர்) "எந்த ஞானத்தை யடைந்தால் தேகாதிகளில் ஆத்மாபிமானமும், அதிலுண்டான மமதை முதலியவைகளுமாகிய மோஹத்தை யடையமாட்டாயோ, எந்த ஞானத்தை யடைந்தால் தேவ மனுஷ்ய மிருகாதி ரூபத்தோடிருக்கிற சகல பூதங்களையும் உன்னிடத்தில் பார்ப்பாயோ, என்னால் பிரகிருதியிலிருந்து விடுபட்ட ஜீவாத்ம சொரூபமெல்லாம் ஒரேமாதிரியாய் உன் ஆத்மசொரூபம்போலவே ஞானகார சொரூபமென்று பார்ப்பாயோ, என்பது தாத்பர்யம். இந்த அர்த்தமானது "நிர்தோஷம்ஹிஸமம்ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணிதேஸ்திதா:" (அத். 5, சு. 19) என்கிற இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே என்னிடத்தில் சகலப் பிராணிகளையும் பார்ப்பாயோ, என்னால் பிரகிருதி விமுக்தமான சகல ஜீவசொரூபத்தையும் என்னுடைய சொரூபத்திற்குச் சமமென்று பார்ப்பாயோ, என்பது தாத்பரியம். இந்த அர்த்தமானது "இதம்ஜ்ஞாநமுபாச்ரித்ய மமஸாதர்ம்யமாகதா:" (அத். 14, சு. 2) என்கிறவிடத்திலும் "ததாவித்வாந் புண்யபாபே விதூயநிரஞ்ஜந: பரமம்ஸாம்யமுபைதி" என்கிற சுருதிவாக்கியத்திலும் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வாக்கியங்களினாலே சகல ஜீவாத்ம சொரூபமும் ஒன்றோடொன்று சமமானதென்றும், அப்படியே சகல ஜீவாத்மசொரூபமும் பரமாத்ம சொரூபத்திற்குச் சமமானதென்றும் பார்ப்பாய் என்பது தாத்பரியம்."

(மத்துவர்) "நீ ஞானமடைந்தால், சகல பூதங்களையும் என்னிடத்திலும், உன்னிடத்தில் என்னையும் பார்ப்பாய் என்பது தாத்பர்யம்."

(இராகவேந்திரர்) "நீ ஞானமடைந்தால், ஆத்மநி = அந்தர்யாமியா யிருக்கிற, மயி= என்னிடத்தில், அல்லது ஆத்மநி= சர்வ வியாபகமான, மயி=என்னிடத்தில், சகல பிரபஞ்சமு மிருப்பதாகப் பார்ப்பாய் என்பது தாத்பர்யம்."

(ஸ்வ) இந்தச் சுலோகத்தையும், முன் 34-வது சுலோகத்தையும் சேர்த்து அடியிற் கண்டபடி சிலர் அந்வயமும் செய்திருக்கிறார்கள்:—

ஹே பாண்டவ = ஓ! பாண்டவா!, தத்வதர்சிந:=(ஆத்ம)தத்துவத்தை யறிந்த, ஜ்ஞாநிந:=ப்ரஹ்மஞானிகள், யத் ஜ்ஞாநம்=எந்த ப்ரஹ்மஞானத்தை, தே=உனக்கு, உபதேக்ஷ்யந்தி = உபதேசஞ் செய்வார்களோ, (யத்) ஜ்ஞாத்வா = எந்த ஞானத்தை யடைந்து, புந:=மறுபடியும், ஏவம் மோஹம்=இவ்விதமாய் மோஹத்தை, நயாஸ்யஸி=அடையமாட்டாயோ, யேந=எதினாலே (எந்த ஞானத்தினாலே), பூதாநி அசேஷேண = சகலப் பிராணிகளையும்,

ஆத்மநி=உன்னிடத்திலும், அதோ=அப்படியே, மயி(ச)=என்னிடத்திலும், த்ரக்ஷ்யஸி=பார்ப்பாயோ, தத்=அந்த ஞானத்தை, ப்ரணிபாதேந=சாஷ்டாங்க நமஸ்காரத்தினாலேயும், பரிப்ரச்நேந=செவ்வையாய்க் கேட்பதினாலேயும், ஸேவயா=குருவணக்கத்தினாலேயும், வித்தி=அறிந்துகொள்.

ஆனால் 33-வது சுலோகத்தில் "சகல கர்மங்களும் ஞானத்தில் அடங்கியிருக்கின்றது" என, ஞானத்தின் சிரேஷ்டத்துவத்தைப் பகவான் சொல்லி, 34-வது சுலோகத்தில் அந்தச் சிரேஷ்டமான ஞானத்தை அடையும் வழியையும், 35-வது சுலோகத்தில் அந்த ஞானத்தைத் தத்வ தரிசிகளால் உபதேசிக்கப்பெற்றால் அதனால் அடையும் பலன் ஜீவேச்வர ஐக்கிய ஸாக்ஷாத்காரம் என்றும், உபதேசிப்பதாகத் தாத்பர்யமாகும் படி அன்வயம் செய்வது சிலாக்கியமாகவும், பொருத்தமுள்ளதாகவும் தோற்றுகிறது. ஆதலால்தான் 'யஜ் ஜ்ஞாத்வா' என்று தொடங்குகிற இந்த 35-வது சுலோகத்தைத் தனியாய் அன்வயப்படுத்தி 'தத் உபதேக்ஷ்யந்தி' என்று சேர்த்து முடிக்கப்பட்டிருக்கிறது. (35)

---

௩௬. அபி சேதஸி பாபேப்⁴ய: ஸர்வேப்⁴ய: பாபக்ருத்தம: |
ஸர்வம் ஜ்ஞாநப்லவேநைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி ||

36. அபி-சேத்-அஸி-பாபேப்⁴ய:-ஸர்வேப்⁴ய: பாபக்ருத்தம: |
ஸர்வம்-ஜ்ஞாநப்லவேந-ஏவ-வ்ருஜிநம்-ஸந்தரிஷ்யஸி ||

த்வம் நீ

ஸர்வேப்⁴ய: பாபேப்⁴ய: சகலமான பாபிகளைப்பார்க்கிலும்

பாபக்ருத்தம: அபி சேத் அஸி — அதிக பாபம் செய்தவனாக இருந்தபோதிலும்

ஜ்ஞாநப்லவேந ஏவ ஞானமாகிற தெப்பத்தினாலேயே

ஸர்வம் வ்ருஜிநம் — சகல பாபங்களையும் (ஸகல பாபங்களாகிற ஸமுத்திரத்தை)

ஸந்தரிஷ்யஸி தாண்டிவிடுவாய்.

(முன் சொல்லியபடி ஞான மடைந்தாயாகில்) சகலமான பாபங்களைச் செய்திருக்கிற பாபிகளைப் பார்க்கிலும், நீ அதிக பாபஞ் செய்திருந்தபோதிலும், அந்தப் பாபங்களாகிற சமுத்திரத்தை ஞானமாகிற தெப்பத்தினாலேயே தாண்டிவிடுவாய்.

(ஸூ) முன் சொன்ன ஞானத்தின் மாஹாத்மியத்தை இந்தச் சுலோகத்தில் பகவான் அருளிச்செய்கிறார். சகல பாபங்களையும் என்பதினால், புண்ணியமுங்கூட அதில் சேர்ந்ததாகக் கொள்ளல்வேண்டும். ஏனெனில், ஜனன மரணமாகிய சம்ஸாரத்தினின்று விடுபட விரும்புவோர்களுக்குப் புண்ணியமும் பாபத்தை யொத்ததே; க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி | என்று பின் வருகிற 9-வது அத்தியாயம், 21-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறபடி, புண்ணியம் செய்தவனும் தன் புண்ணியம் நசிக்கும் வரையில் சுவர்க்கலோகாநுபவங்களை அநுபவித்துவிட்டு மறுபடி மநுஷ்ய லோகத்தை அடைகிறான். "ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்=கர்மபந்தமானது ஞானமாகிற அக்கினியினால் எரிக்கப்படுகிறது." என்று (அத்-4, சு-19-ல்) சொல்லப்பட்டிருப்பதை இந்தச் சுலோகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க. இந்த அர்த்தம் அடுத்த சுலோகத்திலேயும் சொல்லப்படுகிறது. (36)

---

௩௭. யதைதாம்ஸி ஸமித்தோ(அ)க்நிர்பஸ்மஸாத்குருதே(அ)ர்ஜுந |
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா ||

37. யதா-ஏதாம்ஸி-ஸமித்த:-அக்நி: பஸ்மஸாத்-குருதே-அர்ஜுந |
ஜ்ஞாநாக்நி:-ஸர்வகர்மாணி-பஸ்மஸாத்-குருதே-ததா ||

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுனா!
ஸமித்த: அக்நி:	நன்றாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்கினியானது
ஏதாம்ஸி	விறகுகளை
யதா	எப்படி
பஸ்மஸாத் குருதே	சாம்பலாகச் செய்கிறதோ,
ததா	அப்படியே
ஜ்ஞாநாக்நி:	ஞானமாகிற அக்கினியானது
ஸர்வ கர்மாணி	சகல கர்மங்களையும்
பஸ்மஸாத் குருதே	சாம்பலாகச் செய்கிறது (நசிக்கச்செய்கிறது).

ஓ! அர்ஜுனா! நன்றாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்கினியானது (அதை யடுத்திருக்கிற) விறகுகளை எப்படி யெரித்துச் சாம்பலாகச் செய்கின்றதோ (என்றால், விறகின் ரூபந் தெரியாமல் நசிக்கச் செய்யுமோ) அப்படியே ஞானமாகிற அக்கினியானது சகல கர்மங்களையும் (அவைகளின் பலனுடன்) நசிக்கச் செய்துவிடும்.

(*சங்கர பாஷ்யம்*) "ஞானமானது பாபத்தை எவ்வாறு போக்குகின்றது என்பதற்கு இந்தச் சுலோகத்தில் திருஷ்டாந்தம் கூறப்படுகின்றது. நன்றாய் ஜ்வலிக்கின்ற அக்கினியானது விறகுகளைச் சாம்பலாக்குவது போல, ஞானமென்னும் தீயானது சகல கர்மங்களையும் சாம்பலாக்குகின்றது. அதாவது, வித்தாகாதபடி, முளைக்கும் சக்தி யற்றுப் போகும்படி செய்கின்றது; பலனற்றவைகளாகச் செய்கின்றது என்பது பொருள். விறகுகளை அக்கினியானது நேரே சாம்பலாக்குவதுபோல், ஞானமென்னும் தீயானது கர்மங்களை உண்மையில் நேரே சாம்பலாக்க முடியாதல்லவா ?

"ஆகவே, சகல கர்மங்களும் பயனைக் கொடுக்காமல், வித்தாகாமல் போவதற்கு மெய்யறிவு காரணம் என்பது கருத்து. எந்தக் கர்மத்தினால் இந்த உடல் வந்ததோ அந்தப் பிராரப்த மென்னும் கர்மமானது தன் பலனைக் கொடுக்க ஆரம்பித்துவிட்டபடியால் அது அநுபவித்தேதான் முடிகின்றது என்பதை யுக்தியினால் காண்க. ஆயினும், தத்தம் பயனைக் கொடுக்கத் தலைப்படாத கர்மங்கள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் தான் ஞானமென்னும் தீயானது சாம்ப லாக்குகின்றது. ஞான முண்டாவதற்கு முன் செய்யப்பட்டவையும், ஞானத்தோடுகூட உண்டானவையும், சென்ற அநேக ஜன்மங்களிலே சம்பாதிக்கப் பெற்றவையுமான கர்மங்களை மாத்திரம் ஞானம் பஸ்மம் செய்யுமே யொழிய பிராரப்தத்தை அன்று. பிராரப்தம் அநுபவித்தே தீரவேண்டு மென்பது கருத்து."

(ஸ்வ) '*ஸர்வ கர்மாணி*' என்பதற்கு சங்கரர், ஸ்ரீதரர், இராகவேந்திரர் இவர்கள் "பிராரப்த கர்மம் தவிர மற்ற ஸகல கர்மங்களையும்" என்றும்; ராமாநுஜர், "அநாதியாய்த் தொடர்ந்து வந்திருக்கிற கர்மங்களுடைய அநேக கூட்டத்தை" என்றும் அர்த்தம் செய்திருக்கிறார்கள். ஏனெனில், பிராரப்தம் அனுபவத்தினால் நசிக்கவேண்டுமே அன்றி ஞானத்தினால் நசிக்கமாட்டாது.

---

௩௮. 𑌨 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌹 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌕𑌾𑌲𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 ॥

38. நஹி-ஜ்ஞாநேந-ஸத்ருசம்-பவித்ரம்-இஹ-வித்யதே ।
தத்-ஸ்வயம்-யோகஸம்ஸித்தஃ-காலேந-ஆத்மநி-விந்ததி ॥

𑌇𑌹 இந்த உலகத்தில்

𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 ஞானத்தோடு

ஸத்ருஶம்	சமானமாய்
பவித்ரம்	பரிசுத்தஞ் செய்யக்கூடியது
நஹிவித்யதே	இல்லவே இல்லை;
தத்	அந்த ஞானத்தை
யோகஸம்ஸித்த:	யோகஸித்தியை அடைந்தவன்
காலேந	காலக்கிரமத்தில்
ஸ்வயம்	தானுகவே
ஆத்மநி	தன்னிடத்தில்
விந்ததி	அடைகிருன்.

இந்த உலகத்தில் ஞானத்திற்குச் சமானமாய்ப் பரிசுத்தஞ் செய்யக் கூடியது வேறு ஒன்று மில்லை. யோக சித்தியை அடைந்தவன் காலக் கிரமத்தில் அந்த ஞானத்தைத் தானுகவே தன்னிடத்து அடைகிருன்; அதாவது, அந்த ஞானத்தைத் தன் ஆத்மாவிடத்துக் காண்கிருன்.

(ஸ்வ) ஸ்ரீதரர் "ஆத்மநிதத்" "ஆத்ம ஸ்வரூப ஞானத்தை" என்று அர்த்தம் செய்திருக்கிருர். ஒருவனைப் பரிசுத்தப் படுத்தும் விஷயத்திலே ஞானத்திற்குச் சமமாக வியவகார நிலையிலே வேருென்று மில்லை. சம்ஸாரத்தினின்று விடுபட விரும்புவோன் கர்மயோகத்தினுலும் சமாதி யோகத்தினுலும் ஞான மடைவதற்கு ஏற்ற தகுதியானவனுய் வெகு காலத்திற்குப் பின் ஞானத்தைத் தானுகவே தன்னிடத்துப் பெறுகின்றுன். ஞானம் அவனுக்குத் தனக்குத்தானே உதிக்கும் என்பது பொருள். (38)

---

௩௯. ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: |
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்திம் அசிரேணாதிகச்சதி ||

39. ஶ்ரத்தாவாந்-லபதே-ஜ்ஞாநம் தத்பர:-ஸம்யதேந்த்ரிய: |
ஜ்ஞாநம்-லப்த்வா-பராம்-ஶாந்திம்-அசிரேண-அதிகச்சதி ||

ஶ்ரத்தாவாந்	சிரத்தையுள்ளவனும்,
தத்பர:	ஞானம் சம்பாதிப்பதிலேயே வேண்டிய சாதனங்களில் முயற்சியுள்ளவனும்,
ஸம்யதேந்த்ரிய:	இந்திரியங்களை யடக்கினவனுயு மிருக்கிறவன்
ஜ்ஞாநம்	ப்ரஹ்மஞானத்தை
லபதே	அடைகிருன்;
ஜ்ஞாநம்	ஞானத்தை

லப்த்வா	அடைந்த பிறகு
பராம் சாந்திம்	உத்தமமான சாந்தியை
அசிரேண	சீக்கிரமாக
அதி கச்சதி	அடைகிறான்.

குருவாக்கியம் சாஸ்திரம் இவைகளில் நம்பிக்கையும், ஞானம் சம்பாதிப்பதிலேயே முயற்சியு முள்ளவனாய், இந்திரியங்களை யடக்கியு மிருக்கிறவன், ஞானத்தை யடைந்து, பிறகு சீக்கிரமாகச் சாந்தியை, மோக்ஷத்தை யடைகிறான்.

(சங்கர பாஷ்யம்) "ஞானத்தைப் பெறுவது எதனால் நிச்சயமாகக் கைகூடுமோ அந்த அந்தரங்கமான வழியைப் பகவான் இதில் உபதேசிக்கிறார். வேதம் முதலியவற்றிலே சிரத்தை, அதாவது நம்பிக்கை யிருந்தவன், ஞானத்தை அடைகிறான். நம்பிக்கையுடைமை யிருந்தாலும், ஒருவன் ஞான சாதனத்திலே செல்ல மந்தனாய் (நோக்க மில்லாதவனாய்) இருக்கிறான். ஆதலால், 'ஞான மடைதற்குச் சாதனமாயிருப்பவையான, குருவை வழிபடுதல் முதலானவற்றிலே ஊக்கமுள்ளவனாய் இருக்கவேண்டும்' என்கிறார். அவற்றிலே ஊக்கமுடையோனாயினும் (அவன் தன்) இந்திரியங்களை ஜயிக்காதவனாக இருக்கலாமென, 'விஷயங்களினின்றும் இந்திரியங்களை உள்ளே அடக்கினவனாக இருக்கவேண்டும்' என்கிறார். குருவினுடைய உபதேசத்திலே நம்பிக்கையும், அவரை வழிபடுதல் முதலானவற்றிலே ஊக்கமும் உடையவனாய், இந்திரியங்களை நன்கு அடக்கி இவ்வாறு நிற்பவன் எவனோ, அவன் அவசியம் ஞானத்தைப் பெறுகிறான். பகிரங்க சாதனமான சாஷ்டாங்க நமஸ்காரம் முதலியவையோ, பயனைக் கொடுக்கத் தவறினாலும் தவறக்கூடும். ஏனெனில், மனதிலொன்றும் வெளியிலொன்றுமாகக் காட்டுபவர்களும் உண்டு. ஆகையால், அவ்வித மாயத்தன்மை முதலியவற்றால் பலன் சித்திக்காமல் போகும். ஆனால், அவ்வித மோசம், நம்பிக்கையுடைமை முதலானவற்றிலே நிகழமாட்டா. ஆகவே, இந்த நம்பிக்கையுடைமை முதலியவை ஞானத்தைப் பெறுதற்குத் தவறாத நிச்சயமான வழியாம். 'இந்த ஞானத்தைப் பெறுதலால் ஆவதென்ன?' என்றாலோ, அவ்வாறு ஞானத்தை யடைந்த பின்னர், மோக்ஷமெனப் படும் உயர்ந்த ஒழிவைத் தாமதமின்றி வெகு சீக்கிரமாகவே அடைகிறான். மெய்யறிவினால் விரைவாகவே, மோக்ஷம் அடைகிறது என்பது எல்லா சாஸ்திரங்களாலும், யுக்தியினாலும் நிரூபித்து நன்கு நிர்ணயிக்கப்பட்டதான விஷயம்.

(இராகவேந்திரர்) "சிரத்தாவான்' என்றால், 'ஆஸ்திக புத்தியுடையவன்'; 'தத்பரஃ' என்றால் 'பகவானிடத்தில் நிஷ்டையுடையவன்."

(ஸ்வ) இந்தச் சுலோகத்தை, கர்கஸம்ஹிதை, மாதுரியகண்டம், முதலாவது அத். 50-வது சுலோகத்தில் காண்க.

இந்தச் சுலோகத்தினுடையவும், இதற்கு முந்திய இரண்டு சுலோகங்களினுடையவும் அர்த்தத்தை விவரிக்கிற சிவபுராணம் - வாயுஸம்ஹிதை - அத். 29-ல் உள்ள அடியிற் கண்ட சுலோகங்களைப் பார்க்க.

"நாஸ்தி ஜ்ஞாநம் விநா த்யாநம் நாஸ்தி த்யாநமயோகிந: |
த்யாநம் ஜ்ஞாநஞ்ச யஸ்யாஸ்தி தீர்ணஸ்தேந பவார்ணவ: ||
ஜ்ஞாநம் ப்ரஸந்நமேகாக்ரமசேஷோபாதிவர்ஜிதம் |
யோகாப்யாஸேந யுக்தஸ்ய யோகிநஸ்த்வேவ ஸித்யதி ||
ப்ரக்ஷீணாசேஷபாபாநாம் ஜ்ஞாநே த்யாநே பவேந்மதி: |
பாபோபஹதபுத்தீநாம் தத்வார்த்தாபி ஸுதுர்லபா ||
யதா வஹ்நிர்மஹாதீப்த: சுஷ்கமார்த்ரஞ்ச நிர்தஹேத் |
ததா சுபாசுபம் கர்ம ஜ்ஞாநாக்நிர்தஹதே க்ஷணாத் ||
அத்யல்போऽபி யதா தீப: ஸுமஹந்நாசயேத்தம: |
யோகாப்யாஸஸ்ததால்போऽபி மஹாபாபம் விநாசயேத் ||
த்யாயத: க்ஷணமாத்ரம் வா ச்ரத்தயா பரமேச்வரம் |
யத்பவேத்ஸுமஹச்ச்ரேயஸ்தஸ்யாந்தோ நைவ வித்யதே |
நாஸ்தி த்யாநஸமம் தீர்த்தம் நாஸ்தி த்யாநஸமம் தப: |
நாஸ்தி த்யாநஸமோ யஜ்ஞஸ்தஸ்மாத்த்யாநம் ஸமாசரேத் ||

தியானமன்றி ஞான மில்லை; யோக மில்லாதவனுக்குத் தியான மில்லை. எவனுக்குத் தியானமும் ஞானமும் இருக்கிறதோ அவன் சம்ஸாரமான சமுத்திரத்தைத் தாண்டுகிறான். யோகாப்பியாசத்தி லிருக்கிற யோகிக்குச் சுத்தமானவும், ஒரே நிலையிலிருக்கிறவும், உபாதி யற்றவுமான ஞானம் சித்திக்கிறது. பாபம் முழுவதும் நசித்தவர்களுக்குத் தியானத்திலேயும் ஞானத்திலேயும் புத்தி யுண்டாகிறது.

பாபத்தினா லடிபட்ட புத்தியுடையவர்களுக்கு அந்த (ஞானத் தியானங்கள்) வார்த்தைகூட அதி துர்லபம். எரிகிற அக்கினியானது காய்ந்த விறகுகளை எவ்விதம் எரித்துவிடுகிறதோ, அப்படியே ஞானமாகிற அக்கினி சுபாசுப கர்மங்களை க்ஷணத்தில் எரித்துவிடுகிறது. தீபம் (விளக்கு) ஆனது மிகச் சிறியதாயிருந்தாலும் பெரிதான இருட்டை எப்படி நாசஞ் செய்கிறதோ, அப்படியே யோகாப்பியாசம் அற்பம் செய்திருந்தாலும் அது பெரிதான பாபத்தை நாசஞ் செய்கிறது. சிரத்தையுடன் பரமேசுவரனை

க்ஷணகாலமாவது தியானம் செய்கிறவனுக்கு அதிகமான எந்த சிரேயஸ் உண்டாகிறதோ அந்த சிரேயஸுக்கு முடிவே கிடையாது. (கங்கை முதலிய) தீர்த்தமாவது, தபஸாவது, யஜ்ஞமாவது தியானத்திற்குச் சமானமாகமாட்டா. ஆகையினால், தியானத்தைச் செய்யவேண்டியது. (39)

---

௪௦. 𑌅𑌜𑍍𑌞𑌶𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌰𑍋 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

40. அஜ்ஞ:-ச-அஶ்ரத்³த³தா⁴ந:-ச-ஸம்ஶயாத்மா-விநஶ்யதி ।
ந-அயம்-லோக:-அஸ்தி-ந அபர:-ந-ஸுக²ம்-ஸம்ஶயாத்மந: ॥

𑌅𑌜𑍍𑌞𑌃	அஞ்ஞானியும், அதாவது ஆத்மாவை அறியாதவனும்,
𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚	(குருவாக்கியத்திலும் சாஸ்திரத்திலும்) நம்பிக்கை யில்லாதவனும்,
𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚	சந்தேகமுள்ள மனதை உடையவனும்
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿	கெட்டுப்போகிறார்கள்;
𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃	சந்தேகமுள்ள மனதை யுடையவனுக்கு
𑌅𑌯𑌂 𑌲𑍋𑌕𑌃	இந்த உலகமும்
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	இல்லை,
𑌪𑌰𑌃	பரலோகம்
𑌨	இல்லை,
𑌸𑍁𑌖𑌂	சுகமும்
𑌨	இல்லை.

ஆத்மாவை அறியாத அஜ்ஞானியும், குருவாக்கியத்திலும் சாஸ்திரத்திலும் நம்பிக்கை யில்லாதவனும், அதினால் கோரிய பலன் உண்டாகுமோ, உண்டாகாதோ' என்கிற சம்சய முடையவனும் கெட்டுப்போகிறார்கள். சந்தேகமுள்ள மனதை உடையவனுக்கு இந்த உலகத்திலாவது, சுவர்க்காதி உலகத்திலாவது பிரயோஜனமு மில்லை, சுகமு மில்லை.

---

(1) "விநஶ்யதி-நரகத்தை அடைவான்." (இராகவேந்திரர்).

(சங்கரர்) "இந்த (முன் சொன்ன) விஷயத்தில், சம்சய முண்டாகக் கூடாது. ஏனென்றால், சம்சயமென்பது மிகப் பெரிய பாபம். அது எப்படி யென்பதைக் கேள். அஞ்ஞானியும், அதாவது ஆத்மஞான மில்லாதவனும், குருவாக்கியத்திலும் சாஸ்திரத்திலும் நம்பிக்கை யில்லாதவனும் கெட்டுப்போகிறார்கள் என்றாலும், சந்தேக மனதினன் ஏவ்வாறு கெட்

டுப்போவானோ அவ்வாறு இவர்கள் கெட்டுப்போவதில்லை. சம்சயமுடையவன்தான் எல்லாரிலும் மிகப் பெரிய பாபி. எப்படியென்றால், அவனுக்குச் சாதாரணமான இந்த லோக மில்லை; என்றால், இந்த லோகப்பிரயோஜன மில்லை; அப்படியே பரலோகமு மில்லை. சந்தேக மனமுள்ளவனுக்கு இம்மை மறுமை இரண்டும் சந்தேகமாகவே யிருப்பதால் சுக மில்லை. ஆகையால், சம்சயப்படுதல் கூடாது (40)

---

௪௧. 𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌂 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌨𑍍𑌤𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌧𑌨𑌂𑌜𑌯 ॥

41. யோகஸந்ந்யஸ்தகர்மாணம்(1)-ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம்(2) |
ஆத்மவந்தம்(3)-ந-கர்மாணி-நிபத்நந்தி-தநஞ்ஜய ||

𑌹𑍇 𑌧𑌨𑌂𑌜𑌯	ஓ! தநஞ்ஜய!
𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂	யோகத்தினால் கர்மங்களை விட்டவனையும்,
𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌂	ஞானத்தால் சம்சயம் நீங்கினவனையும்,
𑌆𑌤𑍍𑌮𑌵𑌨𑍍𑌤𑌂	ஆத்மஞானத்தில் ஜாக்கிரதையுள்ளவனாயு மிருக்கிறவனை
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿	கர்மங்கள்
𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿	கட்டுப்படுத்துவதில்லை.

ஓ! தநஞ்ஜய! யோகத்தினால் கர்மங்களை விட்டவனையும், ஞானத்தால் சம்சயம் நீங்கினவனையும், ஆத்மஞானத்தில் ஜாக்கிரதையுள்ளவனாயு மிருக்கிறவனைக் கர்மங்கள் கட்டுப்படுத்துவதில்லை.

---

(1) "யோக ஸந்ந்யஸ்த கர்மாணம்=ஞானயோகத்தினால் சகல கர்மங்களையும் விட்டவனையும்." (சங்கரர்). "ஞானாகாரமான கர்மத்தை யுடையவனாய்." (ராமாநுஜர்). "பலாபேக்ஷையை விட்டு ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்கிற கர்மயோகியாயும்." (ஸ்ரீதரர்)

(2) "ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம்=ப்ரஹ்மஞானத்தினால் சகல சம்சயத்தையும் போக்கடித்துக்கொண்டவனையும்." (ஸ்ரீதரர்). "குருவினா லுபதேசிக்கப்பட்ட ஞானத்தினால் ஆத்மாவிடத்தில் சகல சம்சயத்தையும் போக்கடித்துக்கொண்டவனையும்."(ராமாநுஜர்).

(3) "ஆத்மவந்தம் = உபதேசிக்கப்பட்ட அர்த்தத்தில் திடமான மனதையுடையவனையும்."(ராமாநுஜர்); "பரமாத்ம பக்தனையும்."(இராகவேந்திரர்); "தவறாதவனை."(ஸ்ரீதரர்).

(சங்கரர்) "பரம்பொருளைக் காண்பவன், அப் பரம்பொருளைக் காணுதலென்னும் யோகத்தினால் தர்மம் அதர்மம் எனப்படுகின்ற கர்மங்களைத் துறந்துநிற்கிறான் என்பது எப்படி? என்று கூறுகிறார்:— (அவன்), தன்னையும் ஈசுவரனையும் ஒன்றாகக் காணுதலென்னும் ஞானத்தினால் சம்சயம் அறப்பெற்றவன். தநஞ்ஜய! எவன் இவ்வாறு (யோகத்தால் கர்மங்களைத் துறந்தவனோ, அந்த ஸாவதாந ஞானியை முக்குணங்களின் செய்கைகளாகக் காணப்பட்ட கர்மங்கள் கட்டுப்படுத்துவதில்லை, தீமை முதலாகிய பயனை விளைவிப்பதில்லை என்க." (41)

---

௪௨. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌹𑍃𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌨𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌭𑌾𑌰𑌤 ॥

42. *தஸ்மாத்-அஜ்ஞாநஸம்பூதம்-ஹ்ருத்ஸ்தம்-ஜ்ஞாநாஸிநா-[ஆத்மநஃ*
சித்வா-ஏநம்-ஸம்ஶயம்-யோகம்-ஆதிஷ்ட-உத்திஷ்ட-பாரத ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	ஆகையினாலே,
𑌤𑍍𑌵𑌂	நீ
𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌭𑍂𑌤𑌂	அஞ்ஞானத்தினா லுண்டானதாய்
𑌹𑍃𑌤𑍍𑌸𑍍𑌥𑌂	புத்தியில் நிலைத்திருக்கிற
𑌆𑌤𑍍𑌮𑌨𑌃	ஆத்மாவைப்பற்றிய
𑌏𑌨𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂	இந்தச் சந்தேகத்தை
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾	ஞானமாகிற கத்தியினாலே
𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾	நறுக்கி
𑌯𑍋𑌗𑌂	(ஞானயோகசாதனமான கர்ம) யோகத்தை
𑌆𑌤𑌿𑌷𑍍𑌠	அநுஷ்டானஞ் செய்!
𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤	ஓ! பரதவம்சத்தி லுதித்தவனே!
𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠	(யுத்தத்திற்கு) எழுந்திரு!

ஆகையினாலே, நீ அவிவேகத்தால் உண்டானதாய், புத்தியிலே நிலைத்திருக்கிற ஆத்மாவைப்பற்றியதான இந்தச் சந்தேகத்தை ஞானமென்கிற கத்தியினால் நாசஞ் செய்து, மெய்யறிவுக்குச் சாதனமான கர்மயோகத்தைக் கைக்கொள் (செய்). ஓ! பாரத! யுத்தத்திற்கு எழுந்திரு!

(சங்கரர்) "கர்மயோகாநுஷ்டானத்தினால் சித்தசுத்தி வந்து, அதன் மூலமாய் ஞானமடைந்து, அந்த ஞானத்தினால் சம்சயத்தைப் போக்

கடித்துக்கொண்டவனுயு மிருக்கிறவனைக் கர்மங்கள் பந்தப்படுத்துவ தில்லை. ஏனெனில், ஞானம் என்னும் அக்கினியினுல் கர்மங்கள் எல்லாம் எரிக்கப்பட்டமையினுலேயே யென்க. அன்றியும், ஞானகர்மங்களை அநுஷ்டிக்கும் விஷயத்திலே சந்தேகமுள்ளவன் கெட்டுப்போகிறுன் என்ற இவ் விரண்டு காரணங்களினுலும், நீ மிகப் பொல்லாததும், அவிவேகத்தால் உண்டானதும், புத்தியிலே நிலைத்திருப்பதும், நீ கெடுவதற்குக் காரணமானதுமாய், ஆத்மாவைப்பற்றியதான உன்னுடைய இந்தச் சம்சயத்தை, துன்பம் மோகம் முதலான தீங்குகளைப் போக்கும் மெய்யறிவு என்னும் அரிவாளால் அரிவி! பரமார்த்த ஞானத்திற்குச் சாதனமான கர்மாநுஷ்டானத்தைச் செய்! போர் புரிய எழுந்திரு! என்று பகவான் உபதேசிக்கிறுர்.

“சம்சயமானது ஆத்மாவைப்பற்றியதாதலின் ‘தன்னுடைய’ சம்சயம் என்று வருவித்துக்கொள்ள வேண்டும். ஒருவனுடைய சம்சயத்தை அவனே விடவேண்டுமே அல்லது வேறொருவன் விடுவது முடியாததாதலின் ‘தன்னுடைய’ என்கிற விசேஷணத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆதலால், சம்சயம் ஆத்மாவைப்பற்றியதாயினும் தன்னுடையதாகவே ஆகின்றது.”

(ஆநந்தகிரி) “தான் என்பது ஆத்மா. ஒருவன் இப்பியைப் பார்த்து ‘இது இப்பியோ, வெள்ளியோ’ எனச் சந்தேகம் உற்றவிடத்து, அச் சந்தேகம் இப்பியைப் பற்றியதாய் அவனிடத்தில் உள்ளது. இங்கேயோ இவ்வாறு இல்லை. சம்சயமானது தன்னைப்பற்றியதாய்த் தன்னிடத்தே உள்ளது. இதை விளக்கும்பொருட்டே ‘தன்னுடைய’ என்பதை வருவித்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டது.” (42)

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதே
ஜ்ஞாநயோகோ நாம
சதுர்த்தோऽத்யாய:

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்ம
வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற
ஸ்ரீகிருஷ்ணர்ஜுந ஸம்வாதத்திலே
ஞானயோகமென்னும் நான்காவது அத்தியாயம்
முற்றிற்று.

ஶ்ரீரஸ்து.

அத² பஞ்சமாத்⁴யாய ப்ராரம்ப⁴꞉.

ஸம்ந்யாஸயோக³꞉

ஐந்தாவது அத்தியாயம்.

ஸந்யாஸ யோகம்

[அர்ஜுந உவாச.]

௧. ஸம்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புநர்யோக³ம் ச ஶம்ஸஸி ।
யச்ச்²ரேய ஏதயோரேகம் தந்மே ப்³ரூஹி ஸுநிஶ்சிதம் ॥

1. ஸந்ந்யாஸம்-கர்மணாம்-க்ருஷ்ண-புந:-யோகம்-ச-ஶம்ஸஸி|
யத்-ஶ்ரேய:-ஏதயோ: ஏகம்-தத்-மே-ப்ரூஹி-ஸுநிஶ்சிதம்||

அர்ஜுந உவாச	அர்ஜுனன் சொன்னது:
ஹே க்ருஷ்ண	ஓ! கிருஷ்ணு!
கர்மணாம்	கர்மங்களை
ஸம்ந்யாஸ	விட்டுவிடும்படியாயும்,
புந꞉	மறுபடியும்
யோக³ஞ்ச	கர்மயோகத்தைச் செய்யும்படியாயும்
ஶம்ஸஸி	சொல்லுகிறீர்;
ஏதயோ꞉	இவ்விரண்டினுள்
யத்	எது
ஶ்ரேய꞉	மிகச் சிரேஷ்டமாக
ஸுநிஶ்சிதம்	நன்றாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ
தத் ஏகம்	அந்த ஒன்றையே
மே	எனக்கு
ப்³ரூஹி	சொல்லும்.

[அர்ஜுனன் சொன்னது.]

ஓ! கிருஷ்ணு! கர்மங்களை விட்டுவிடும்படியாயும், மீண்டும் கர்மயோகத்தைச் செய்யும்படியாயும் சொல்லுகிறீர். இவ் விரண்டில் எது சிரேஷ்டமானதாக நன்றாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஒன்றையே எனக்குச் சொல்லும்.

(சங்கர பாஷ்யம்) “கர்மண்யகர்ம ய: பஶ்யேத்” (அத். 4, சு. 18) என்பது முதல், ‘ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்’ ‘ஶாரீரம் கேவலம் கர்ம குர்வந்’ ‘யத்ருச்சாலாபஸந்துஷ்ட:’ ‘ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவி:’ ‘கர்மஜாந்வித்தி தாந் ஸர்வாந்’ ‘ஸர்வம் கர்மாகிலம் பார்த’ ‘ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி’ ‘யோகஸம்ந்யஸ்தகர்மாணம்’ (அத். 4, சு. 19, 21, 22, 24, 32, 33, 37, 41) வரையிலுள்ள வசனங்களால் சகல கர்மங்களையும் விட்டுவிடுதலைப் பகவான் கூறியருளினர். ‘சித்த்வைநம் ஸம்ஶயம் யோகமாதிஷ்ட’ (அத். 4, சு. 42)என்னும் வசனத்தினல் கர்மாநுஷ்டானமாகிய யோகத்தையும் நீ செய்யவேண்டும் எனக் கூறியருளினர். இனி, கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களை விட்டுவிடுதலுமாகிய இரண்டும், நிற்றலென்பதும் நடத்தலென்பதும்போல, ஒன்றற்கொன்று விரோதித்தலால், அவற்றை ஒருவன் ஒரேகாலத்தில் அநுஷ்டிக்க முடியாது. அன்றியும், அவற்றை வேவ்வேறு காலத்தில் அநுஷ்டிக்கலாம் எனவும் விதிக்கப்படவில்லை. ஆகவே, இவ் விரண்டினுள் ஏதாவதொன்றை அநுஷ்டிக்கவேண்டுமென்பது கருத்தினல் அமைய, ‘கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களை விட்டுவிடுதலுமாகிய இவ் விரண்டினுள் எது சிறந்ததோ, அதனைச் செய்யவேண்டும், மற்றையது இல்லை’ என இவ்வாறுகக் கொண்டு, அர்ஜுனன் சிறந்ததைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் விருப்பத்தினல், ‘கிருஷ்ணு!’ என்று இந்தச் சுலோகத்தில் வினவுகிருன். ஆனல், முன் 3-வது அத்தியாயம். 1,2-வது சுலோகங்களில் ‘ஞானம் கர்மத்தைவிட மேலானதானல் கர்மத்தில் ஏன் ஏவுகிறீர்?’ என்றும், “ நான் எதனல் சிரேயசை அடைவேனே அந்த ஒன்றையே சொல்லும்?’ என அர்ஜுனனல் கேட்கப்பட்ட பகவான், ‘சாங்கியர்களான சந்யாஸிகளுக்கு ஞானயோகத்தால் நிஷ்டையும், யோகிகளுக்குக் கர்மயோகத்தால் நிஷ்டையும் கூறப்பட்டன’ என்று முடிவு செய்தார். மேலும், ‘வெறும் சந்யாஸத்தினல் மாத்திரம் சித்தி அடைவதில்லை.’ (அத்-3, சு-4) என்னும் வசனத்தால் ஞானத்தோடு கூடிய சந்யாஸம்தான் சித்திக்குச் சாதனம் என்பதாகக் கொள்ளப்பட்டது. மற்றும் கர்மயோகத்தைச் செய்யும்படி விதித்தலால் அதுவும் சித்திக்குச் சாதனமெனக் கொள்ளப்பட்டது.

“ஞான மில்லாத சந்யாஸம் மேலானதா? அல்லது கர்மயோகம் மேலானதா? என இவ் விரண்டினுள் மேலானதை அறிய விரும்பி அர்ஜுனன் கேட்டது. இது அஞ்ஞானநிலையில் இருப்பவனைப்பற்றிய கேள்வி, ஞானியைப்பற்றியதன்று. அஞ்ஞானியாயினும் விஷயங்களிலே

வைராக்கியமுள்ளவனுனல் அவனும் கர்ம ஸந்யாஸத்திலே அதிகாரியாவான்; ஞானிக்குத்தான் அதிகாரம் என்பதில்லை. ஆதலின், அஞ்ஞானிக்கும் ஒரு நிலைமையிலே கர்ம ஸந்யாஸம் உண்டு என அறிக.

"சாஸ்திரங்களிற் கூறிய பலவகையான அநுஷ்டானங்களை விடுதலைப் புகழ்ந்து சொல்லுகிறீர்கள்; மறுபடி அவற்றையே அநுஷ்டித்தலையும் அவசியம் செய்யவேண்டுமெனக் கூறுகிறீர்கள். ஆகவே; எது மேலானது என்பது என் சம்சயம். கர்மத்தை அநுஷ்டித்தல் மேலானதா? அல்லது அதனை விட்டுவிடுதல் மேலானதா? என்பது. ஆனுல், மேலானதாயிருப்பதை அநுஷ்டிக்கவேண்டுமாதலால் கர்மஸந்யாஸம், கர்மயோகம் ஆகிய இவ் விரண்டினுள் எது மேலானதோ, எதனை அனுஷ்டிப்பதனுல் நான் நன்மையைப் பெறலாமென்று நீங்கள் நினைக்கின்றீர்களோ, அந்த ஏதாவது ஒன்றையே, அதாவது உங்களுடைய கருத்தை இன்னதுதான் என்று தீர்ந்த முடிவாக எனக்குச் சொல்லவேண்டும். அவை இரண்டையும் ஒரே புருஷன் ஒரேகாலத்தில் அநுஷ்டிக்கக் கூடியதல்ல' என்று அர்ஜுனன் கேட்கிறுன்."

(ஸ்ரீதரர்) "யஸ்த்வாத்மரதிரேவஸ்யாத்" (அத். 3, சு. 17) "ஸர்வம் கர்மாகிலம்பார்த்த" (அத். 4, சு. 33) இவை முதலியவைகளினுல் ஞானிக்குக் கர்மஸந்யாஸம் (கர்மத்தை விட்டுவிடுதல்) சொல்லப்பட்டது. "தஸ்மாதஜ்ஞானஸம்பூதம் ... யோகமாதிஷ்டோத்திஷ்ட பாரத" (அத். 4, சு. 42) என்கிறதனுல் கர்மத்தைச் செய்யும்படியாய்ச் சொல்லப்பட்டது. இவ் விரண்டையும் ஒருகாலத்தில் ஒரு மனிதன் அநுஷ்டிக்கிறது சாத்தியமல்ல வாகையால் இவைகளில் சிரேஷ்டமான ஒன்றைச் சொல்லு மென்பது தாத்பர்யம்."

(ராமாநுஜர்) "4-வது அத்தியாயத்தில் கர்மயோகத்தில் ஞானம் அடங்கியிருக்கிறபடியால் கர்மம் செய்துவந்தால் அந்தக் கர்மமே ஞானகாரமாகிறதாகவும், அந்த ஞானம்தான் சிரேஷ்டமானதென்றும் சொல்லப்பட்டது. 3-வது அத்தியாயத்தில் ஞானுதிகாரிக்குங்கூடக் கர்மயோகத்தில் ஞானம் அடங்கியிருக்கிறதினுலேயும், சுலபமா யிருக்கிறதினுலேயும், ஸுகரம்=தப்பித மில்லாததா யிருக்கிறதினுலேயும் கர்மயோகம் சிரேஷ்டமென்று சொல்லப்பட்டது. இப்போது ஞானநிஷ்டையைக்காட்டிலும் கர்மயோகமானது ஆத்மப் பிராப்தியைச் சீக்கிர முண்டாக்குமென்பதும், கர்மயோகத்தில், தான் கர்த்தாவல்லவென்கிற ஆத்மாநுசந்தானமும், ஆத்மசொரூபத்தை யறிகிறதற்குக் காரணமான ஞானத்தின் விவரமும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது.

இந்தச் சுலோகத்தின் தாத்பரிய மென்னவென்றால், சந்யாசமென்கிற ஞானயோகத்தையும், மறுபடி கர்மயோகத்தையும் சொன்னதாகத் தெரிகிறது. அஃதெப்படியென்றால், 2-வது அத்தியாயத்தில், முமுக்ஷுக்களுக்கு முதலில் கர்மயோகம்தான் செய்யவேண்டு மென்பதையும், கர்மயோகத்தினால் அந்தக்கரண சுத்தியை யடைந்தவனுக்கு ஞானயோகத்தினால் ஆத்மதரிசன மாகிறதென்பதையும் சொல்லி, மறுபடி 3-வது அத்தியாயத்திலும், 4-வது அத்தியாயத்திலும்: ஞானயோக அதிகாரிகளுக்குங்கூட கர்மயோகமே சிரேஷ்டமென்றும், ஏனென்றால், அந்தக் கர்மயோகமானது ஞானயோகத்தை அபேக்ஷிக்காமலே, ஆத்மப்பிராப்தியை யுண்டுபண்ணுகிற தென்றும் சொல்லியிருக்கிறீர். இந்தக் கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இரண்டில், எது சுலபமாயும் சீக்கிரமாயும் ஆத்மப்பிராப்தியை யுண்டாக்குமோ அதைச் சொல்லுமென்பது தாத்பர்யம்.''

(இராகவேந்திரர்) "𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌃 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿" (அத்-2, சு. 48) என்கிறதினால் கர்மங்கள் செய்யவேண்டிய தென்பது, பொதுவாய்ச் சொல்லப்பட்டது. அந்தக் கர்மங்களைப் பலாபேக்ஷையன்றி ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்யவேண்டுமென்பது 3-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டது: மேலாகச் சொன்ன கர்மயோகமே இந்த அத்தியாயத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுகிறது.''

இந்தச் சுலோகத்தின் தாத்பர்ய மென்னவென்றால், (மத்வர்) (இராகவேந்திரர்) "𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌾𑌲𑌾𑌭𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌃" (அத்-4. சு. 22) என்கிற சுலோகத்தினால், கர்மாதிகளை விட்டுவிடுவதாகிய சந்யாசமும், "𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂" (அத்-4. சு. 15) என்கிற சுலோகத்தினால், ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்கிறதும், வருணாசிரம தர்மத்திற்கு யோக்கியமானதுமான கர்மயோகமும்சொல்லப்பட்டன. இவைகளி லெது சிரேஷ்டமோ அதை நிச்சயித்துச் சொல்லுமென்பது தாத்பர்யம். (1)

[𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚]

௨. 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌶𑍍𑌚 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌾𑌵𑍁𑌭𑍌 ।
𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

2. ஸந்ந்யாஸ:(1)-கர்மயோக:-ச-நிஶ்ஶ்ரேயஸகரௌ-உபௌ|
தயோ:-து-கர்மஸந்ந்யாஸாத்-கர்மயோக: விஶிஷ்யதே ||

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறியருளியது:
𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 கர்ம ஸந்ந்யாஸமும் (கர்மத்தை விடுதலும்)

𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌶𑍍𑌚	கர்மயோகமும் (கர்மாநுஷ்டானமும்)
𑌉𑌭𑍌	இரண்டும்
𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑍌	மோக்ஷத்தைக் கொடுப்பவைகள்;
𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁	ஆனால், அவைகளுக்குள்
𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍	வெறும் கர்மஸந்யாஸத்தைக் காட்டிலும்
𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋	கர்மயோகமானது
𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇	சிரேஷ்டமாகின்றது.

[ஸ்ரீ பகவான் கூறியருளியது.]

கர்மஸந்யாஸமும் (பரித்யாகமும்), கர்மயோகமும் (கர்மாநுஷ்டானமும்) ஆகிய இவ்விரண்டும் மோக்ஷ சாதனங்களேயாம். ஆனால், அவற்றுள் கர்மயோகமானது கர்மஸந்யாஸத்தைவிட சிரேஷ்டமானதாகின்றது.

---

(1) "ஸந்யாஸ:-ஞானியானவன் கர்மத்தை விடுவதும்." (ஸ்ரீதரர்), "ஞானயோகமும்." (ராமாநுஜர்), "காமக்குரோதாதி துவந்துவங்களை விடுவதும்." (இராகவேந்திரர்).

(2) "கர்மஸந்யாஸாத்-ஞானநிஷ்டையைக் காட்டிலும்." (ராமாநுஜர்). "கர்மாநுஷ்டான விஷயத்தில் கர்மாதி வர்ஜநரூபமான சந்யாஸத்தைக்காட்டிலும்." (இராகவேந்திரர்).

(சங்கரர்) "அஞ்ஞானிக்கு எது தகுந்தது என்பதை நிச்சயிக்கும் பொருட்டுத் தமது அபிப்பிராயத்தை ஸ்ரீபகவான் இந்தச் சுலோகத்தில் அருளிச்செய்கின்றார். கர்மங்களை விடுதலும் அவைகளை அநுஷ்டித்தலும் ஆகிய இரண்டுமே ஞான முண்டாவதற்குக் காரணங்களா யிருப்பதனால் மோக்ஷத்தைத் தருகின்றன. இவ்விரண்டும் மோக்ஷத்தைத் தருபவைகளானபோதிலும் அவற்றில் கர்மயோகமானது வெறும் கர்ம ஸந்யாஸத்தைவிட மேலானது என்று கர்மயோகத்தைப் புகழ்கின்றார். வெறும் கர்ம ஸந்யாஸம் என்றால் ஞானமில்லாத கர்ம ஸந்யாஸம்."

(ஸ்ரீதரர்) "கர்மயோகமானது நேராய் மோக்ஷத்திற்குக் காரணமாகாவிட்டாலும் ஞானத்திற்குக் காரணமா யிருக்கிறது. அந்த ஞானமானது மோக்ஷத்திற்குக் காரணமா யிருக்கிறது. ஞானி, கர்மத்தை விடக்கூடுமானாலும், அதிகாரி விஷயமாய்ப் பார்க்கையில் உன்னைப்போலொத்தவன் கர்மத்தை விடுதல் கூடாது. (2)

௩. 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌯𑍋 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 ।
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍋 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌸𑍁𑌖𑌂 𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

3. ஜ்ஞேய:-ஸ:-நித்ய ஸந்ந்யாஸீ (2)-ய:-ந-த்வேஷ்டி:-ந-காங்க்ஷதி (1)।
நிர்த்வந்த்வ:-ஹி-மஹாபாஹோ-ஸுகம்-பந்தாத்-ப்ரமுச்யதே: ॥

𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋	ஓ! பெரிதான கைகளையுடையவனே!
𑌯𑌃	எவன் (எந்தக் கர்மயோகி)
𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿	த்வேஷிக்கிறதில்லையோ,
𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿	விரும்புகிறதில்லையோ
𑌸𑌃	அவன்
𑌨𑌿𑌤𑍍𑌯 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 (𑌇𑌤𑌿) 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃	நித்ய சந்யாஸியாக அறியத்தக்கவன்;
𑌹𑌿	ஏனென்றால்,
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌃	சுகதுக்காதி த்வந்தங்கள் அற்றவன்
𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍	கர்மபந்தத்திலிருந்து
𑌸𑍁𑌖𑌂	பிரயாசையின்றி
𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇	விடுபடுகிறான்.

ஓ! அர்ஜுனா! எவன் விருப்பு வெறுப்பு அற்றவனோ அவன் நித்திய சந்யாசியாக அறியத்தக்கவன். ஏனென்றால், சுகதுக்காதி த்வந்தங்களைக் கடந்தவன், கர்மபந்தத்திலிருந்து பிரயாசையின்றி விடுபடுகிறான்.

---

(1) "ந காங்க்ஷதி= கர்மத்திற்குள் அடங்கியிருக்கிற ஆத்மாநுபவத்தில் திருப்தி யடைந்திருக்கிறதினால் அதைத் தவிர மற்றதில் விருப்பற்றவன்." (ராமாநுஜர்).

(2) "நித்யஸந்யாஸி= எப்போதும் ஞானநிஷ்டையி லிருப்பவனாக அறியத்தக்கவன்." (ராமாநுஜர்); "யதிமுதலிய சந்யாஸி விஷயமல்ல, காமிய கர்மங்களை விட்டவனாக அறியத்தக்கவன்." (இராகவேந்திரர்).

(சங்கரர்) "கர்மயோகமானது உறுதியான நன்மையைச் செய்வது எதனால் என்று இதில் சொல்லப்படுகின்றது. எவன் எதையும் பகைப்பதில்லையோ, அதாவது, துன்பத்தையும் அதைக் கொடுக்கும் பொருள்களையும் வெறுப்பதில்லையோ, அவ்வாறே இன்பத்தையும் அதைக் கொடுக்கும் பொருள்களையும் இச்சிப்பதில்லையோ, அந்தக் கர்மயோகியானவன் எப்பொழுதும் சந்யாஸி என்று அறிந்துகொள்க. எவன் இப்படிப்பட்டவனாக இருக்கின்றானோ அவன் கர்மங்களைச் செய்துகொண்

டிருப்பவனுயினும் எப்பொழுதும் சந்யாசியாகக் கொள்ளத்தக்கவன் என்பது பொருள். ஏனெனில், விருப்பு வெறுப்பு முதலிய த்வந்தங்கள் அற்றவன் கர்மமாகிய கட்டினின்று ஆயாச மில்லாமல் எளிதில் விடுபடுகிறுன். (3)

---

௪. ஸாங்க்²யயோகௌ³ ப்ருத²க்³பா³லா: ப்ரவத³ந்தி ந பண்டி³தா: ।
ஏகமப்யாஸ்தி²த: ஸம்யகு³ப⁴யோர்விந்த³தே ப²லம் ॥

4. ஸாங்க்யயோகௌ-ப்ருதக்-பாலா:-ப்ரவதந்தி-ந-பண்டிதா:।
ஏகம்-அபி-ஆஸ்திதஃ-ஸம்யக்-உபயோ:-விந்ததே-பலம் ॥

பா³லா:	சிறுவர்கள் (அவிவேகிகள்)
ஸாங்க்²யயோகௌ³	ஸாங்கியம் யோகம் இவைகளை
ப்ருத²க் (இதி)	வேறு வேறு என்று
ப்ரவத³ந்தி	சொல்லுகிருர்கள்;
பண்டி³தா:	விவேகிகள் (ஞானிகள்)
ந	(அப்படிச்) சொல்லுகிறதில்லை;
உப⁴யோ:	இரண்டில்
ஏகமபி	ஒன்றையாவது
ஸம்யக்	செவ்வையாய்
ஆஸ்தி²த:	அநுஷ்டித்தவன்
(உப⁴யோ:)	இரண்டினுடைய
ப²லம்	பலத்தை (மோக்ஷத்தை)
விந்த³தே	அடைகிறுன்.

ஞானயோகபலன் வேறு, கர்மயோகபலன் வேறு என்று அவிவேகிகள் சொல்லுகிருர்கள்; ஞானிகள் அவ்வாறு சொல்லுகிறதில்லை. ஏனென்றுல், இரண்டி லொன்றையாவது செவ்வையாய் அநுஷ்டித்தவன் இரண்டினுடைய பலனுகிய மோக்ஷத்தை அடைகிறுன்.

(சங்கர பாஷ்யம்) "வெவ்வேறு புருஷர்களால் அநுஷ்டிக்கத் தகுந்தனவாயும், ஒன்றற்கொன்று மாறுபட்டனவாயுமுள்ள கர்மஸந்யாஸமும் கர்மயோகமுமாகிய இரண்டும், அவற்றின் பயன்களிலும் மாறுபடுதல் ஏற்குமேயன்றி, இரண்டும் மோக்ஷமென்னும் உறுதியான நன்மையையே செய்பவைதான் என்பது எப்படியாகும் எனின், அதற்குப் பகவான் சொல்லுகிருர். சிறுவர்கள் அதாவது, நூற்பொருளை ஆராயாதவர்கள், 'ஸாங்கியமும் யோகமும் ஒன்றற்கொன்று மாறுபட்ட வெவ்வேறுன பயன்களை யுடையன' எனக் கூறுகிருர்கள். பண்டிதர்கள் அவ்வாறு கூற

மாட்டார்கள். விவேகிகளான ஞானிகளோ அவைகள் மாறுபாடில்லாத ஒரே பயனை உள்ளனவாகக் கொள்கிறார்கள். எப்படியெனில், ஸாங்கியம் யோகம் இவற்றில் ஒன்றையாவது செவ்வையாக அநுஷ்டித்தவன் இரண்டினுடைய பயனை அடைகிறான். முக்தியாகிய ஒரே பயனன்றோ இரண்டிற்கும் உள்ளது. ஆதலால், பயனில் வேறுபாடு இல்லை என்க. ஆனால், ப்ரகிருதத்தில் சந்யாஸம் கர்மயோகம் இவைகளைப்பற்றிச் சொல்வதாயிருக்க இங்கு ஸாங்கியத்திற்கும் யோகத்திற்கும் பயன் ஒன்று எனச் சொல்வது எப்படிப் பொருந்தும் என்றால்:—

அர்ஜுனன் வெறும் கர்மசந்யாஸத்தையும், வெறும் கர்மயோகத்தையும் மனதிற்கொண்டு கேள்வி கேட்டானென்றாலும், அவை இரண்டும் ஸாங்கியம் யோகம் என்னும் வேறு சொற்களால் கூறத்தக்கன. ஆதலால், பகவான் அவற்றை விடாமலே தாம் கருதியுள்ள விசேஷத்தையும் சேர்த்து மறுமொழி கூறினார். ஞானம் அதன் சாதனமான சமபுத்தி முதலானவற்றோடு கூடிய அந்தக் கர்மசந்யாஸமும் அந்தக் கர்மயோகமுந்தான் ஸாங்கியம் யோகம் என்னும் சொற்களால் கூறுவதற்குத் தகுந்தது என்பது பகவான் கருத்து. (அர்ஜுனன் வெறும் கர்மசந்யாஸத்தையும் வெறும் கர்மயோகத்தையும்பற்றிப் பகவானைக் கேட்க, அவர் அதற்கு மறுமொழி கூறும் வாக்கியத்தில், 'ஞானமாகிய விசேஷத்தோடு கூடிய கர்மசந்யாஸமும் சமத்வ புத்தியாகிய விசேஷத்தோடு கூடிய கர்மயோகமுந்தான் சிறந்தவை' என்னும் தமது கருத்தைத் தெரிவிக்கும்பொருட்டு ஸாங்கியம் யோகம் என்னும் சொற்களை உபயோகித்திருக்கிறார் என்க.)"

(இராகவேந்திரர்) "ஞானத்திற்குப் பலன் வேறு; கர்மத்திற்குப் பலன் வேறு. ஆகையால், 'ஞானத்திற்குக் கர்மம் சாதனமல்ல' என்று அவிவேகிகள் சொல்லுகிறார்கள். விவேகிகள், 'ஞானத்திற்குக் கர்மம் சாதனமாயும், முடிவில் மோக்ஷ பலனைக் கொடுக்கத் தக்கதாயுமிருக்கிறது' என்று சொல்லுகிறார்கள்."

(ஸ்ரீதரர்) "கர்மசந்யாஸம் கர்மயோகம், இவைகளில் எது சிரேஷ்டமென்று அர்ஜுனன் கேட்டதற்குப் பதிலாகச் சாங்கியயோகத்தையும் கர்மயோகத்தையும் சொல்லவேண்டியதென்னவென்றால், சாங்கியமென்பது ஞானம். ஞானமே கர்மசந்நியாசமாகிறது. எப்படியென்றால், ஞானநிஷ்டையுள்ளவனுக்குக் கர்மம் விட்டுப்போகிறது. ஆகையால், சந்யாஸத்திற்குப் பிரதிபதமாக ஞானமாகிற சாங்கியமென்கிற பதம் இதில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது."

(ராமாநுஜர்) "'கர்மயோகத்திற்குப் பலன் ஞானயோகம்' என்றும், 'ஞானயோகத்திற்குப் பலன் ஆத்மதரிசனம்' என்றும், 'ஆகையால், இரண்டிற்கும் பலன் வெவ்வேறு' என்றும் அவிவேகிகள் சொல்லுகிறார்கள்; ஞானிகள் அப்படிச் சொல்லுகிறதில்லை. ஏனென்றால், ஞானயோகம், கர்மயோக மிரண்டிற்கும் ஆத்மதரிசனமாகிய ஒரே பலனாதினால்தான்."

(ஸ்ரீ) ஞானயோகமானது மோக்ஷத்திற்குக் காரணமென்றும், கர்மயோகமானது ஞானத்திற்குக் காரணமென்றும், ஞானயோகமே சிரேஷ்டமென்றும் முன்பு சொல்லப்பட்டு மிருக்கிறது. இனி சொல்லவும் படுகிறது. இவ்விரண்டு மொன்றே, இரண்டுக்கும் பலன் ஒன்றே யென்று சொன்னது எப்படிப் பொருந்து மென்றால், ஞானநிஷ்டைக்கு யோக்கியனாக இல்லாமலும், கர்மயோகத்திற்கு அதிகாரியாயு மிருக்கிறவனைக் குறித்து "ஞானநிஷ்டையே சிரேஷ்டமானது, அதைத்தான் நீ அநுஷ்டிக்கவேண்டியது" என்று சொல்லும்பக்ஷத்தில், ஞானநிஷ்டை செய்யச் சக்தியற்ற அவன் கர்மத்திலும் சிரத்தையற்று இரண்டுங் கெட்டவனாகிவிடுவானாகையால், கர்மத்தைச் சிலாகித்ததாகக் கொள்ளவேண்டும். (4)

---

௫. 𑌯𑌤𑍍𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑍈𑌰𑌪𑌿 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌕𑌂 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌞𑍍𑌚 𑌯𑍋𑌗𑌞𑍍𑌚 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

5. யத்-ஸாங்க்யை:-ப்ராப்யதே-ஸ்தாநம்(1)-தத்-யோகை:-அபி-க
ஏகம்-ஸாங்க்யம்-ச-யோகம்-ச-ய:-பஶ்யதிஸ:-பஶ்யதி ॥ [ம்யதே|

𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍈𑌃	ஞானநிஷ்டர்களாயுள்ள சந்யாஸிகளினாலே
𑌯𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂	எந்த ஸ்தான (மோக்ஷ) மானது
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇	அடையப்படுகின்றதோ
𑌤𑌤𑍍	அந்த ஸ்தானமானது
𑌯𑍋𑌗𑍈𑌰𑌪𑌿	கர்மயோகிகளாலேயும்
𑌗𑌮𑍍𑌯𑌤𑍇	அடையப்படுகின்றது;
𑌯𑌃	எவன்
𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌞𑍍𑌚	சாங்கியயோகத்தையும்
𑌯𑍋𑌗𑌞𑍍𑌚	கர்மயோகத்தையும்
𑌏𑌕𑌂	ஒரே பலனுள்ளதாக
𑌪𑌶𑍍𑌯𑌤𑌿	காண்கின்றானோ
𑌸𑌃	அவன்
𑌪𑌶𑍍𑌯𑌤𑌿	பார்க்கிறான் (சரியாக அறிகிறான்).

ஞானநிஷ்டர்களான சந்யாஸிகளினுலே எந்த ஸ்தானமானது அடையப்படுமோ, அந்த ஸ்தானமானது கர்மயோகிகளினுலேயும் அடையப்படும். ஸாங்கியயோகத்தையும் கர்மயோகத்தையும் ஒரே பலனுள்ளதாக எவன் அறிகிருனே அவன் சரியாக அறிந்தவன்.

---

(1) "ஸ்தானம்-ஆத்ம தரிசனம்." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "மேற்கூறிய இரண்டு மார்க்கங்களில் ஒன்றை மாத்திரம் நேராக அநுஷ்டிப்பதினுல் இரண்டினுடைய பலனையும் ஒருவன் எப்படி அடைகிருன் என்பது இதில் சொல்லப்படுகிறது.

"ஞானத்திலே நிலேத்து நிற்கும் சந்யாஸிகளாலே எந்த நிலேயானது அடையப்படுகின்றதோ அது யோகிகளாலும் அடையப்படுகின்றது. எவர்கள் ஞானத்திற்குச் சாதனமாகக் கர்மங்களே ஈசுவரனிடத்தில் அர்ப்பித்துத் தங்களுக்குப் பலனே எதிர்பார்க்காமல் அநுஷ்டிக்கிருர்களோ அவர்கள் யோகிகள். அந்த யோகிகளும் பரமார்த்த ஞானத்தையும், சந்யாஸத்தையும் பெற்று அவ் வழியாக அதே நிலேயைப் பெறுகிருர்கள் என்பது கருத்து. ஆதலால், பலன் ஒன்ருயிருப்பதினுல் எவன் ஸாங்கியத்தையும் யோகத்தையும் ஒன்ருகப் பார்க்கிருனே அவன் நேராகப் பார்க்கிருன், அதாவது சரியாக அறிகிருன் என்பது பொருள்."

(இராகவேந்திரர்) "ஸாங்கிய மென்பது ஞானம்; யோகமென்பது நிஷ்காம கர்மம்; ஞானத்திற்குப் பலன் மோக்ஷம்; நிஷ்காம கர்மத்திற்குப் பலன் ஞானம். இவ் விரண்டும் ஒரே பலனுக எப்படி யாகுமென்ருல், ஞானம் உடனே மோக்ஷபலனேக் கொடுப்பதாலும், நிஷ்காம கர்மமும் சொற்ப காலவிளம்பத்தின்பேரில் மோக்ஷத்தைக் கொடுக்குமாகையாலும், பலன் ஒன்றென்று சொல்லப்பட்டது. மேலும், ஞான கர்மங்கள் காரிய காரண ரூபமாய் ஒன்ருகவே யிருக்கின்றன." (இதற்கு இவர் மற்ருெரு விதமாயும் அர்த்தஞ் செய்திருக்கிருர். அதாவது) "யதியாகிய ஞானி மோக்ஷத்தில் ஆநந்த விருத்திக்காகக் கர்மஞ் செய்யவேண்டும்; கிருகஸ்தனுன கர்மயோகி மோக்ஷ மடைவதற்காக ஞானத்துடன் கர்மஞ் செய்யவேண்டும்; ஆகையால், அதிகாரக் கிரமமாய்ப் பார்த்தால் ஞானிக்குக் கர்மமும், கர்மயோகிக்கு ஞானமும் வேண்டியிருப்பதால் ஞானமும் கர்மமும் ஒன்ருகச் சொல்லப்பட்டதாகத் தாத்பர்யம்."

(ஹூா) முன்னர் கர்மயோகம் சிரேஷ்டமென்று சொல்லிவிட்டு இப்பொழுது ஞானயோகம், கர்மயோக மிரண்டும் ஒன்றென்றும், ஒரே பலனுள்ளதென்றும் எப்படிச் சொல்லலாமென்ருல், கர்மயோகம்

ஞானத்தை யுண்டாக்கி, முடிவில் மோக்ஷத்தைக் கொடுக்கிறது. ஞான முழ் மோக்ஷத்தைத்தான் கொடுக்கிறது. முடிவான பலன் இரண்டுக்கும் ஒன்றே; ஆகையால், இரண்டும் ஒன்றென்று சொல்லப்பட்டது. ஞான யோகத்தைவிட கர்மயோகம் ஒரு படி தாழ்ந்ததாகவிருக்க, கர்ம யோகம் சிரேஷ்டமென்று எப்படிச் சொல்லலாமென்றால், கர்மம் செய்யாமல் விடுவதாகிய சந்யாஸம் சிரேஷ்டமா? கர்மயோகம் சிரேஷ்டமா? என்று நீ கேட்டபடியாலும், நீ இப்போது கர்மாதிகாரியா யிருக்கிறபடியாலும் உனக்குக் கர்மயோகம் சிரேஷ்டமென்று சொன்னோம். வாஸ்தவத்தில் ஞானயோகந்தான் சிரேஷ்டமானது. (5)

ஸூ. ஸந்ந்யாஸஸ்து மஹாபாஹோ து:க²மாப்துமயோக³த: ।
யோக³யுக்தோ முநிர்ப்³ரஹ்ம நசிரேணாதி⁴க³ச்ச²தி ॥

6. ஸந்யாஸ:(1)-து-மஹாபாஹோ-து:க²ம்-ஆப்தும்-அயோக³த: ।
யோக³யுக்த:-முநி:-ப்³ரஹ்ம(2)-ந-சிரேண-அதி⁴க³ச்ச²தி ॥

ஹே மஹா பாஹோ	ஓ! தோள்வலிமையுடையவனே!
ஸந்ந்யாஸஸ்து	(பரமார்த்த) உண்மையான சந்யாஸமோ
அயோக³த:	(கர்ம) யோகத்தாலன்றி
ஆப்தும்	அடைவதற்கு,
து:க²ம்	(கஷ்டமானது) அரிது;
யோக³யுக்த:	கர்மயோகத்துடன் கூடிய
முநி:	முனிவன் (தியானஞ் செய்கிறவன்)
ப்³ரஹ்ம	ப்ரஹ்மத்தை
நசிரேண	சீக்கிரமாக
அதி⁴க³ச்ச²தி	அடைகிறான்.

பராக்கிரமமுடைய ஓ! அர்ஜுனா! உண்மையான சந்யாஸமோ (கர்ம) யோகத்தாலன்றி அடைவதற்குக் கஷ்டமானது (அரிது). கர்ம யோகத்துடன் கூடிப் பகவானை இடைவிடாது தியானம் செய்யும் முனி வன் சீக்கிரத்தில் ப்ரஹ்மத்தை அடைகிறான்.

---

(1) "ஸந்யாஸ: - பரமார்த்த சந்யாஸம். அதாவது, ஞானநிஷ்டையை நிலையா யடைந்தவனுக்குக் கர்மம் தானாகவே விட்டுப்போகிறது தான்." (ஸ்ரீதரர்). "ஞானயோகமானது." (ராமாநுஜர்).

(2) "ப்³ரஹ்ம-பரமாத்மநிஷ்டை என்னும் உண்மையான சந்யாஸத்தை." (சங்கரர்).

(சங்கர பாஷ்யம்) "இந்தச் சுலோகத்தினால் சந்யாஸந்தான் யோகத்தைக் காட்டிலும் மேலானதென்பதாக ஆகின்றது; அப்படியானால், இந்த அத்தியாயம் 2-வது சுலோகத்தில் 'கர்மசந்யாஸத்தினும், கர்மயோகம் மேலானது' என முன் சொன்னது எவ்வாறு பொருந்தும்? என்றால், அங்கு அர்ஜுனன் (ஞானமற்ற) வெறும் கர்மசந்யாஸத்தையும், வெறும் கர்மயோகத்தையும் மனதில் கொண்டு 'அவைகளில் எது மேலானது?' எனக் கேட்டான். அதை அநுசரித்து, பகவான், 'ஞானமில்லாத வெறும் சந்யாஸத்தைவிட, கர்மயோகம் சிரேஷ்டம்' என்று சொன்னார். ஞானத்தைச் சார்ந்து நிற்கும் சந்யாஸம்தான் ஸாங்கியம் என்பது பகவான் கருத்து; உண்மையான யோகமும் அதுதான். ஆனால், யோகமென்னும் சொல்லும், சந்யாஸம் என்னும் சொல்லும், கர்மயோகம் என்னும் பொருளில் வழங்கிவருகின்றனவே எனில், வேதத்தில் கூறிய கர்மயோகம் எதுவோ அது அதன்பொருட்டாதலால் (உண்மையான சந்யாஸத்திற்குப் பயன்படுவதால்), யோகமெனவும் சந்யாஸமெனவும் உபசாரமாகச் சொல்லப்படுகின்றது. கர்மயோகம் எப்படிச் சந்யாஸத்தின் பொருட்டாகின்றது என்பதைப் பகவான் இதில் அருளிச்செய்கிறார்.

"உண்மையான சந்யாஸத்தைக், கர்மயோகத்தினாலல்லாமல் வேறு வழியால் அடைய முடியாது. ஈசுவரனிடத்து அர்பிக்கப்படுவதும், பலனை எதிர்பார்க்காததும், வேதத்தில் சொல்லப்பட்டதுமான கர்மயோகத்தோடு கூடி, ஈசுவரனுடைய வடிவத்தை இடைவிடாது தியானம் செய்துகொண்டிருப்பவன் பரமார்த்த ஞானநிஷ்டை என்னும் உண்மையான சந்யாஸத்தைச் சீக்கிரமாக அடைகிறான். ஆதலால்தான் கர்மயோகம் மேலானது என்றது. பிரகிருதத்தில் கூறிய சந்யாஸமானது பரமாத்மஞானமாதலால் ப்ரஹ்மம் எனப்படுகின்றது. "ந்யாஸ இதி ப்ரஹ்மா ப்ரஹ்மா ஹி பர:" "ந்யாஸமென்பது ப்ரஹ்மா ப்ரஹ்மாவே மேலானவன்" என்னும் சுருதியினால் (தைத்திரீய உபநிஷத் 4-78) காண்க."

(ராமாநுஜர்) "முநி: = சொருபாநு ஸந்தானத்துடனிருக்கிற, யோகயுக்த:=கர்மயோகியானவன், ப்ரஹ்ம=தன்னுடைய பிரகிருதி விமுக்த ஆத்ம சொருபத்தை, நசிரேண=சீக்கிரமாக, அதிகச்சதி= அடைகிறான். ஞானியானவன் பிரயாசையுடன் ஞானயோகத்தைச் சாதிக்கிறபடியால் அவனுக்கு அதிக காலஞ் செல்லும்."

(மத்வர்) "சந்யாஸமென்பது காமக்குரோதிகளை விடுவதுதான். யோகமென்பது - பலாபேக்ஷையன்றி ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்கிறதாகிய நிஷ்காம கர்மந்தான். ஒருவன், காமக்குரோதாதிகளை

விட்டதினாலேயே ப்ரஹ்மத்தை யடையமாட்டான். காமக்குரோதாதிகளை விட்டு நிஷ்காம கர்மயோகஞ் செய்துவந்தால், சீக்கிரமாக ப்ரஹ்மத்தை யடைவான். ஆகையினால், காமக்குரோதாதிகளை விடுவதாகிய சந்யாஸத்தைப் பார்க்கிலும் கர்மயோகம் சிரேஷ்டமாகச் சொல்லப்பட்டது. காமக்குரோதாதிகளை விடுவதினாலே சித்தசுத்தி முதலிய பல னுண்டாகுமே யென்றால், அவை அற்ப பலமாகையால் அது இவ் விடத்தில் உத்தேசிக்கப்படவில்லை.''

(இராகவேந்திரர்) ''காமக்குரோதாதித் தியாகம்(விடுவது) அன்றியில் கர்மயோகம் மாத்திரமாவது, கர்மயோகமன்றியில் காமக்குரோதாதித் தியாகமாத்திரமாவது மோக்ஷ ஹேதுவாகாது. தியாகமும் கர்மயோகமும் சேர்ந்தால், சீக்கிரமாக மோக்ஷம் கிடைக்குமென்பது தாத்பர்யம்.''

(ஸ்வ) இந்தச் சுலோகத்தின் முதல் பாதத்திற்கு பாஷ்யோத்கர்ஷ தீபிகையின் கர்த்தாவாகிய தனபதி என்பவர் அடியிற் கண்டபடியும் அந்வயம் செய்யலாம் என்கிறார்—𑌅𑌯𑍋𑌗𑌤𑌃 = யோக மில்லாமல், 𑌕𑍃𑌤𑌃 = செய்யப்படுகிற, 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃= வெறும் சந்யாஸமானது, 𑌦𑍁𑌃𑌖𑌂=நரகரூபதுக்கத்தை, 𑌆𑌪𑍍𑌤𑍁𑌂=அடைவதற்காகவே,(𑌭𑌵𑌤𑌿)= ஆகின்றது. (6)

---

௭. 𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌪𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥

7. யோகயுக்த:-விசுத்தாத்மா-விஜிதாத்மா-ஜிதேந்த்ரிய: |
ஸர்வபூதாத்மபூதாத்மா-குர்வந்-அபி-ந-லிப்யதே ||

𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 — கர்மயோகத்துடன் கூடினவனும்,

𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 — பரிசுத்தமான மனதையுடையவனும்,

𑌵𑌿𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 — தேகத்தை ஜயித்தவனும், அதாவது தேகசுவாதீனமுள்ளவனும்,

𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 — இந்திரியங்களை ஜயித்தவனும்,

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 — தன் ஆத்மாவைச் சகல பூதங்களுடைய ஆத்மாவாக அறிந்தவனுமிருக்கிறவன்

𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌪𑌿 — கர்மங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும்

𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 — கர்மத்தினால் ஒட்டப்படுகிறதில்லை, அதாவது கர்மபந்தத்தை அடைகிறதில்லை.

கர்மயோகியாயும் - பரிசுத்தமான மனதையுடையவனும்-தேகத்தை வசப்படுத்திக்கொண்டவனும் - இந்திரியங்களை அடக்கினவனும் - சகல பூதங்களிலுள்ள பரமாத்மாவும் தன் ஆத்மாவும் ஒன்றென்று தெரிந்தவனுமிருக்கிறவன், (லோகசங்கிரகத்திற்காகக்) கர்மங்களைச் செய்து கொண்டிருந்தபோதிலும் கர்மபந்தத்தை அடைகிறதில்லை.

---

(1) "ஸர்வ பூதாத்ம பூதாத்ம - தன் ஆத்மாவைச் சகல பூதங்களுடைய ஆத்மாவாகக் கொண்டவன். தனக்குள்ளே இருக்கின்ற ஆத்மாவை ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுள்ள சகல பூதங்களுடைய ஆத்மாவாகக் காண்கிறவன்; அதாவது, ஸம்யக் தர்சி." (சங்கரர்); "தேவாதி சகல பூதங்களுக்கும் ஆத்மாவா யிருக்கிற சொரூபத்தையே தனக்கும் ஆத்மாவாக அறிகிறவன்; என்றால், ஞானாகாரத்தினால் ஆத்மாக்கள் சமானமானவர்களென்று அறிகிறவன்." (ராமாநுஜர்); "ப்ரஹ்மாமுதலாயுள்ள சகலப் பிரபஞ்சத்திற்கும் ஈசுவரனெவனோ அவனே தனக்கும் ஈசுவரனென்று அறிகிறவன்." (இராகவேந்திரர்). (7)

---

௮. 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍 𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍 𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍 𑌅𑌶𑍍𑌨𑌨𑍍 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍 𑌸𑍍𑌵𑌪𑌨𑍍 𑌶𑍍𑌵𑌸𑌨𑍍 ॥

8. ந-ஏவ-கிஞ்சித்-கரோமி-இதி-யுக்த:-மந்யேத-தத்வவித் । [ஸ ॥
பச்யந்-ச்ருண்வந்-ஸ்ப்ருசந்-ஜிக்ரந்-அச்நந்-கச்சந்-ஸ்வபந்-ச்வ

௯. 𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍 𑌵𑌿𑌸𑍃𑌜𑌨𑍍 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌨𑍁𑌨𑍍𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌪𑌿 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍 ॥

9. ப்ரலபந்-விஸ்ருஜந்-க்ருஹ்ணந்-உந்மிஷந்-நிமிஷந்-அபி ।
இந்த்ரியாணி-இந்த்ரியார்த்தேஷு-வர்தந்த-இதி-தாரயந் ॥

𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍		தத்துவத்தை (உண்மையை) அறிந்தவன்
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍	𑌅𑌪𑌿	பார்த்தாலும் (கண்களின் செய்கை)
𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍	,,	கேட்டாலும் (காதுகளின் செய்கை)
𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍	,,	தொட்டாலும் (துவக்கின் செய்கை)
𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍	,,	முகர்ந்தாலும் (மூக்கின் செய்கை)
𑌅𑌶𑍍𑌨𑌨𑍍	,,	புஜித்தாலும் (நாக்கின் செய்கை)
𑌗𑌚𑍍𑌛𑌨𑍍	,,	நடந்தாலும் (கால்களின் செய்கை)
𑌸𑍍𑌵𑌪𑌨𑍍	,,	தூங்கினாலும் (புத்தியின் செய்கை)

ஶ்வஸந் அபி	ஶ்வாசம் விட்டாலும் (பிராண வாயுவின் செய்கை
ப்ரலபந் ,,	பேசினாலும் (வாயின் செய்கை)
விஸ்ருஜந் ,,	(மலஜலம்) விட்டாலும் (பாயு-உபஸ்தங்களின் செய்கை)
க்ருஹ்ணந் ,,	எடுத்தாலும் (கைகளின் செய்கை)
உந்மிஷந் ,,	கண்களை விழித்தாலும் (கூர்மனென்கிற வாயுவின் செய்கை)
நிமிஷந் ,,	மூடினாலும்
இந்த்ரியாணி	இந்திரியங்கள்
இந்த்ரியார்தேஷு	இந்திரிய விஷயங்களில்
வர்தந்தே இதி	பிரவிருத்தித்திருக்கின்றன என்று
தாரயந்	நிச்சயித்துக்கொண்டவனாக
யுக்த: ஸந்	ஸமாஹிதனாயிருந்துகொண்டு
அஹம் கிஞ்சித்	நான் ஒரு காரியத்தையும்
ந ஏவ கரோமீதி	செய்வதேயில்லையென்று
மந்யேத	நினைப்பான்.

உண்மையை அறிந்தவன் (அதாவது அத்மாவினுடைய உண்மையான தன்மையை அறிந்தவன், பரம்பொருளைக் காண்பவன்) பார்த்தல், கேட்டல், தொடுதல், முகர்தல், புஜித்தல், நடத்தல், தூங்குதல், சுவாசம் விடுதல், பேசுதல், மலஜலம் விடுதல், எடுத்தல், கண்களை விழித்தல், மூடுதல் ஆகிய இச் செய்கைகளைச் செய்தவனாக விருந்தபோதிலும் இந்திரியங்கள் அவைகளின் காரியமாகிய விஷயங்களில் பிரவிருத்திக்கின்றனவென்று நிச்சயித்துக்கொண்டு, மனம் ஒருநிலைப்பட்டவனாகி இருந்து கொண்டு, "ஒரு காரியத்தையும் நான் செய்வதேயில்லை" என்று எண்ண வேண்டும்.

(சங்கரர்) "மந்யேத = எண்ணவேண்டும் என முந்தின வாக்கியத்தோடு இந்த ஒன்பதாவது சுலோகத்தைக் கூட்டிக்கொள்ளவும். அவன் உண்மையை நன்றாகத் தெரிந்தவனாய் எப்பொழுது எவ்வாறு கொள்ள வேண்டுமென்பது சொல்லப்படுகின்றது. இவ்வாறாக உண்மையை உணர்ந்து தேகேந்திரியங்களுடைய சகல செய்கைகளிலும், அதாவது சகல கர்மங்களிலும் அகர்மத்தையே காண்பவனாய், உள்ளதை உள்ளபடி பார்க்கின்ற அவனுக்குச் சர்வகர்ம சந்யாஸத்திலேதான் அதிகாரம்;

அவன் கர்மமில்லாமையைக் காண்கிறபடியா லென்க. 'கானலிலே ஜலம் இருக்கின்றது' என்று எண்ணி நீர் குடிப்பதற்காகச் சென்றவன் 'அங்கு நீர் இல்லை' என்று அறிந்த பின்பும் நீர் குடித்தல் என்னும் பிரயோஜனத்திற்காக மறுபடி அங்கேயே செல்லமாட்டானன்றோ?"

(ஸூ.) இதில் குறிக்கப்பட்டிருக்கிறவனே ஞானநிஷ்டன் என்று அறியத்தக்கது. உண்மையான சந்யாஸம் இதுதான். (8-9)

---

௧௦. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌧𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃 ।
𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌸 𑌪𑌾𑌪𑍇𑌨 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌮𑌿𑌵𑌾𑌂𑌭𑌸𑌾 ॥

10. ப்ராஹ்மணி1-ஆதாய-கர்மாணி-ஸங்கம்(2)-த்யக்த்வா-கரோதி-ய:॥
லிப்யதே-ந-ஸ:-பாபேந-பத்மபத்ரம்-இவ அம்பஸா ॥

𑌯𑌃	எவன்
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿	கர்மங்களை
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿	ப்ரஹ்மத்தினிடத்தில்
𑌆𑌧𑌾𑌯	ஒப்புவித்து (அர்ப்பணஞ் செய்து)
𑌸𑌂𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	பலனில் ஆசையை விட்டு
𑌕𑌰𑍋𑌤𑌿	(கர்மங்களைச்) செய்கின்றானோ
𑌸𑌃	அவன்,
𑌅𑌂𑌭𑌸𑌾	ஜலத்தினால்
𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌮𑌿𑌵	தாமரையிலைபோல
𑌪𑌾𑌪𑍇𑌨	(புண்ணிய) பாபத்தினால்
𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇	ஒட்டப்படுவதில்லை.

எவன் கர்மங்களைப் பரமாத்மாவிடத்தில் ஒப்புவித்து (ஈசுவரார்ப்பண புத்தியோடு செய்து) பலாபேக்ஷையை விட்டுச் செய்கின்றானோ, அவன், தாமரையிலையானது எப்படி ஜலத்தினா லொட்டப்படுகிறதில்லையோ, அதுபோன்று (புண்ணிய) பாபங்களினால் ஒட்டப்படுகிறதில்லை.

---

(1) "ப்ரஹ்மணி=பிரகிருதியினிடத்தில்." (ராமாநுஜர்)

(2) "ஸங்கம்=மோக்ஷபலனில்கூட இச்சையை." (சங்கரர்).

(சங்கர பாஷ்யம்) "ஆனால், எவன் உண்மையை அறியாதவனோ, அன்றியும் கர்மயோகத்தை மேற்கொண்டவனோ, அவன் 'வேலைக்காரன் யஜமானனுக்காக வேலை செய்வதுபோல' 'நான் அவனுக்காக (ஈசுவரனுக்காகக்) கர்மத்தைச் செய்கிறேன்' என்று சகல கர்மங்களையும் ஈசுவர

னிடத்து வைத்து முக்தியாகிய பலனிலும் பற்றைவிட்டுச் செய்வதால் அவனிடத்தில் 'தாமரையிலையிலே ஜலம் போலப்' பாவம் ஒட்டுவதில்லை. கேவலம் மனம் பரிசுத்தப்படுதல்மாத்திரமே அவனுடைய கர்மத்திற்குப் பலனாகின்றது.''

(ஸூா) இதில் குறிக்கப்பட்டிருக்கிறவனைக் கர்மாதிகாரியாக அறியத்தக்கது. இந்தச் சுலோகத்தை, கர்க்கஸம்ஹிதை: மாதுரியகண்டம்: அத். 1, சுலோகம் 54-ல் காண்க. (10)

---

௧௧. 𑌕𑌾𑌯𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑍈𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌪𑌿 ।
𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌂𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

11. காயேந-மநஸா-புத்த்யா-கேவலை:-இந்த்ரியை:-அபி |
யோகிந:-கர்ம-குர்வந்தி-ஸங்கம்-த்யக்த்வா-ஆத்மஶுத்தயே||

𑌯𑍋𑌗𑌿𑌨𑌃	கர்மயோகிகள்
𑌸𑌂𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	பலாபேக்ஷையை விட்டு
𑌆𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇	சித்தசுத்திக்காக
𑌕𑍇𑌵𑌲𑍈𑌃 𑌕𑌾𑌯𑍇𑌨	வெறும் தேகத்தினாலும்
,, 𑌮𑌨𑌸𑌾	,, மனதினாலும்
,, 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾	,, புத்தியினாலும்
,, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌪𑌿	,, இந்திரியங்களினாலும்
𑌕𑌰𑍍𑌮	கர்மத்தை
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿	செய்கிறார்கள்.

கர்மயோகிகள் பலாபேக்ஷையைவிட்டு, சித்த சுத்திக்காக வெறும் தேகத்தாலும், வெறும் மனதாலும், வெறும் புத்தியினாலும், வெறும் இந்திரியங்களாலும் கர்மத்தைச் செய்கிறார்கள்.

(சங்கரர்) ''எனதென்பதை விட்டு 'ஈசுவரனுக்காகவே செய்கிறேன், என்னுடைய பலனுக்காக அன்று' என ஒவ்வொரு செய்கையிலும் எனதென்பது இல்லாதிருத்தற்பொருட்டு கேவலை: = வெறும் (அதாவது மமகார மில்லாத) என்னும் சொல்லைச் சரீரம் முதலியவற்றோடும் தனித்தனியே கூட்டி, கர்மயோகிகள் பலாபேக்ஷையை விட்டு, சித்த சுத்திக்காக (வெறும்) தேகத்தாலும், (வெறும்) மனத்தாலும், (வெறும்) புத்தியினாலும், (வெறும்) இந்திரியங்களாலும் கர்மத்தைச் செய்கிறார்கள் என்று கொள்ளவேண்டும். ஆதலால், அதிலேயே உனக்கு அதிகாரமாதலின் நீ கர்மத்தையே செய்யக்கடவாய்.

(ஸ்ரீதரர்) "சித்த சுத்திக்காகத் தேகத்தினுல் செய்யப்பட்டது ஸ்நானுதிகள், மனதினுல் செய்யப்பட்டது தியானுதிகள், புத்தியினுல் செய்யப்பட்டது தத்துவநிச்சயம், இந்திரியங்களினுல் செய்யப்பட்டது சிரவண கீர்த்தனுதிகள்."

(ஸூ) "കേവലൈരിന്ദ്രിയൈഃ" என்பதற்கு "அபிமானமற்றிருக்கிற இந்திரியங்களினுலே" என்று அர்த்தம் செய்யலாம். அதாவது, தான் செய்யும் கர்மத்தில், இந்திரியங்களால் கிரகிக்கப்படும் வஸ்துக்களில் விருப்பு வெறுப்பு வைக்காமலென்பது கருத்து. (11)

---

௧௨. യുക്തഃ കൎമഫലം ത്യക്ത്വാ ശാന്തിമാപ്നോതി നൈഷ്ഠികീം।
അയുക്തഃ കാമകാരേണ ഫലേ സക്തോ നിബധ്യതേ ॥

12. யுக்தஃ(1)-கர்மஃபலம்-த்யக்த்வா-சாந்திம்(2)-ஆப்நோதி-நைஷ்டிகீம் ॥
அயுக்தஃ-காமகாரேண-ஃபலே-ஸக்தஃ-நிபத்யதே ॥

യുക്തഃ	கர்மயோகத்தைக் கூடியவன் கர்மயோகியானவன்
കൎമഫലം ത്യക്ത്വാ	கர்மத்தின் பலனில் அபேக்ஷையை விட்டு
നൈഷ്ഠികീം	நிஷ்டையினு லுண்டாகிற
ശാന്തിം	சாந்தியை
ആപ്നോതി	அடைகிறுன்;
അയുക്തഃ	யோகயுக்தனுயில்லாமல்
കാമകാരേണ	காமத்தின் தூண்டுதலினுல்
ഫലേ	பலனில்
സക്തഃ	ஆசையையுடையவன்
നിബധ്യതേ	(கர்மத்தால்) கட்டப்படுகிறுன்.

கர்மயோகியானவன், கர்மத்தில் பலாபேக்ஷையை விட்டு, (ஆத்ம) நிஷ்டையினுல் அடையத்தகுந்த சாந்தியை (மோக்ஷத்தை) அடைகிறுன். யோகத்தோடு கூடினவனு யில்லாமல் ஆசையினுல் ஏவப்பட்டுப் பலனில் இச்சையுடையவன் (கர்மத்தால்) கட்டப்படுகிறுன்.

---

(1) "யுக்தஃ=ஈசுவரனுக்காகக் கர்மங்களைச் செய்கிறேன், என்னுடைய பலனுக்காக அன்று' என்னும் சித்த சமாதான முள்ளவன்." (சங்கரர்); "பரமேசுவர நிஷ்டையில் நிலைத்திருக்கிறவன்." (ஸ்ரீதரர்); "ஆத்மப் பிரயோஜனத்திலேயே திருஷ்டியுள்ளவன்." (ராமாநுஜர்).

(2) "ശാന്തിം-ஆத்மாநுபவ சுகத்தை." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "ஈசுவரனுக்காகக் கர்மங்களைச் செய்கிறேன், என்னுடைய பயனுக்காக அன்று' என இவ்வாறு மனச் சமாதானத்தை அடைந்தவனாய், கர்மத்தின் பயனை விட்டுக் கர்மத்தைச் செய்பவன், முதலில் சத்வ சுத்தி (அந்தக்கரண சுத்தி), பிறகு ஞானப் பிராப்தி, பிறகு சர்வகர்ம சந்நியாஸம், பிறகு ஞானநிஷ்டை இவைகளைப் படிப்படியாய் (முறையே) அடைந்து கடைசியாக மோக்ஷமென்னும் சாந்தியைப் பெறுகிறான். சத்வ சுத்தியாதல், பிறகு ஞானமடைதல், பிறகு சகல கர்மங்களையும் விடுதல், பிறகு ஞானநிஷ்டையை அடைதல் என்னும் இவ்வித முறை, வாக்கியத்தில் தொக்கிநின்றதாகக் கொள்ளல் வேண்டும். ஆனால், ஒரு நிலையில்லாத மனத்தினனாய், காமத்தினால் தூண்டப்பட்டு, 'என்னுடைய பயனுக்காக இத் தொழிலைச் செய்கிறேன்' எனப் பயனில் பற்றுள்ளவன் கர்மத்தினால் கட்டுண்டு கிடக்கிறான். ஆதலால், நீ கர்மயோகத்தைக் கூடினவனாய் இரு என்பது பொருள்." (12)

---

௧௩. ஸர்வகர்மாணி மநஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வஶீ ।
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வந் ந காரயந் ॥

13. ஸர்வகர்மாணி-மநஸா-ஸந்ந்யஸ்ய- ஆஸ்தே-ஸுகம்-வசீ ।
நவத்வாரே-புரே-தேஹீ-ந-ஏவ-குர்வந் ந-காரயந் ॥

வஶீ தேஹீ	இந்திரியங்களை ஜயித்த தேகியானவன்
ஸர்வ கர்மாணி	சகல கர்மங்களையும்
மநஸா	விவேகபுத்தியினால்
ஸந்ந்யஸ்ய	ஒழித்துவிட்டு,
நைவ குர்வந்	(ஒன்றும்) செய்யாதவனாகவே
ந காரயந்	செய்விக்காதவனாகவே
நவத்வாரே	ஒன்பது வாயில்களையுடைய
புரே	பட்டணத்திலே அதாவது தேகத்திலே
ஸுகம் ஆஸ்தே	சுகமாகத் தங்கியிருக்கிறான்.

இந்திரியங்கள், மனம் இவைகளைச் சுவாதீனமாயுடைய தேகியானவன், தேகத்தோடு கூடிநிற்பவன், சகல கர்மங்களையும், விவேகத்தையுடைத்தான மனதினாலே ஒழித்துவிட்டு, ஒன்பது வாயில்களையுடைய பட்டணத்தைப்போலிருக்கிற தேகத்தில் ஒன்றும் செய்யாமலும், செய்விக்காமலும் ஆனந்தமாய்த் தங்கியிருக்கிறான்.

---

* 'தேஹிநோ' என்று ஒரு பாடமு முண்டு.

(சங்கர பாஷ்யம்) "ஆனால், பரம்பொருளைக் காண்பவன் எவனோ அவன் எப்படி இருக்கின்றான் என்பது இதில் கூறப்படுகிறது. அவ்விதமாய்ப் பரம்பொருளைக் கண்டவன்: நித்யம், நைமித்திகம், காம்யம், பிரதிஷித்தம் என்னும் சகல கர்மங்களையும் விவேக புத்தியினால் ஒழித்துவிட்டு, அதாவது கர்மம் முதலியவற்றிலே அகர்மத்தைக் கண்டு, கர்மங்களை முற்றும் விட்டுச் சுகமாகத் தங்கியிருக்கிறான். நித்தியகர்மம் என்பது, தவறாமல் அவசியமாய்ச் செய்யவேண்டியவை (ஸந்த்யாவந்தனம் முதலியன). நைமித்திக்கர்மம் என்பது, யாதாயினும் ஓர் நிமித்தத்தால் ஆவது (கிரகண காலங்களில் ஸ்நானம் செய்தல் இவை போன்றது). காம்யகர்மம் என்பது, ஏதேனும் பிரயோஜனத்தை உத்தேசித்துச் செய்யப்படுவது. இவை செய்தே தீரவேண்டும் என்பதில்லை. பிரதிஷித்தம், செய்யத்தகாதென்று விலக்கப்பட்டது.] அவன் தேகம், வாக்கு, மனம் ஆகிய இவைகளின் வியாபாரங்களை விட்டவன்; ஆயாசமில்லாதவன், தெளிந்த (ஸந்தோஷமான) மனதுள்ளவன்; ஆத்மாவைத் தவிர வேறு வெளிப் பிரயோஜனங்களெல்லாம் ஒழிந்தவனாதலின் அவன் சந்தோஷமாகத் தங்கியிருக்கிறான் எனச் சொல்லப்பட்டது. 'வசீ' என்பதற்கு 'இந்திரியங்களை ஜயித்து' என்பது பொருள். அவன் எங்கே எவ்வாறு தங்கியிருக்கிறான் என்பது சொல்லப்படுகிறது. ஒன்பது வாசல் உள்ள பட்டணம் என்பது இந்தத் தேகம். எப்படியெனில், ஆத்மா உணர்வதற்கு வழிகளாய்த் தலையிலுள்ள துவாரங்கள் (வாசல்) ஏழு. (அதாவது, கண் இரண்டு, செவி இரண்டு, மூக்குத் துவாரங்கள் இரண்டு, வாய் ஒன்று. மலஜலங்களை விடுவதற்கான கீழ்த் துவாரங்கள் இரண்டு.) ஆக இந்த ஒன்பது துவாரங்களோடு கூடிய தேகமானது ஒன்பது வாசலுள்ள பட்டணம் எனப்படுகின்றது. அது பட்டணம்போலிருப்பதால் பட்டணமெனப்பட்டது. இந்தப் பட்டணம் ஆத்மாவையே அரசனாகக் கொண்டது. இந்த நகரத்திற்குக் குடிகளாவன: ஐம்புலன்களும், மனம் புத்தி அவற்றின் விஷயங்களுமாம். இக் குடிகள் அனைவரும் ஆத்மாவின் பொருட்டுத் தத்தம் செய்கைகளில் செல்லுபவையாய்த் தங்களுடைய பிரபுவாகிய ஆத்மாவுக்கு வெளி விஷயங்களைத் தெரிவிக்கும் காரணங்களாதலால் குடிகளை ஒக்கும். இவைகள் செய்யும் சகல வேலைகளும் ஆத்மாவின் பிரயோஜனத்திற்காகவேயாம். இந்த ஒன்பது வாசல் பட்டணமான அந்தத் தேகத்தில் தேஹி (ஆத்மாவானவன்) சகல கர்மங்களையும் ஒழித்து ஒரு காரியமும் செய்பவனும் செய்விப்பவனும் அல்லாதவனாய்ச் சுகமாய்த் தங்கியிருக்கின்றான்.

"சந்யாஸியானாலும் சந்யாஸியல்லாதவனானாலும் ஒவ்வொரு ஜீவனும் தேகத்திலேதான் தங்கியிருக்கிறானாகையால், இங்கு 'ஆஸ்தே' என்கிற விசேஷணத்தின் பிரயோஜனமென்னவென்றால், தேகம் இந்திரியங்கள் இவற்றின் சேர்க்கையை ஆத்மாவாக அறியும் அஞ்ஞானியான ஜீவனுக்குத்தான் 'வீட்டிலோ தரையிலோ அல்லது ஆசனத்திலோ தங்கியிருக்கிறேன்' என்னும் எண்ணம் உண்டாவதுபோல' தேகத்தில் தங்கியிருக்கிறேன் என்னும் எண்ணம் உண்டாவதில்லை. ஆனால், தேகம் முதலானவற்றின் சேர்க்கைக்கு வேறாக ஆத்மாவை அறிகிற ஞானிக்குத் தேகத்தில் தங்கியிருக்கிறேன் என்னும் எண்ணம் உண்டாகும். சகல கர்மங்களையும் விட்ட ஞானியானவன் வீட்டில் தான் இருப்பதுபோல, ஒன்பது வாசல் பட்டணமாகிய இந்தத் தேகத்திலே பிராரப்த கர்மம் முடியுமளவும் தங்கியிருத்தல் என்பது பொருந்தும். ஆகவே, இந்த விசேஷணம் ஞானி அஞ்ஞானி இவர்களுடைய எண்ணங்களின் பேதத்தைக் குறித்து நிற்கின்றது. ஞானி: தேகம், இந்திரியம் இவைகளின் தொழில்களைத் துறந்துவிடுகிறான் என்றாலும், 'வெண்மைநிறமான தன்மையானது பாலோடு சேர்ந்திருப்பதுபோலச்' செய்பவனாயும்செய்விப்பவனாயுமிருக்கும் தன்மை ஆத்மாவோடு ஒற்றித்திருக்கலாம் என்று சந்தேகம் உண்டாகாதிருக்கும்பொருட்டு 'நைவ குர்வந்ந காரயந்' என்று சொல்லப்பட்டது. ஆத்மாவுக்கு இவைகள் தானாகவே இல்லை என்பதைக் குறிப்பிக்கிறது. "அவிகார்யோ'யம்" என்று 2-வது அத், 25-சு-லும் "சரீரஸ்தோ'பி ந கரோதி ந லிப்யதே" என்று 13-வது அத்யாயம், 31-வது சுலோகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. "த்யாயதீவ லேலாயதீவ = ஆத்மா நினைப்பதுபோலவும் அசைவதுபோலவும் உள்ளது" என்னும் ப்ரஹதாரண்யகம்(4-3-7)சுருதியினாலும் இதனை அறிக."

(ஸூ) தேகம் ஒன்பது துவாரங்களை யுடையதாகையால் அந்தத் தேகத்தை ஒன்பது வாயில்களையுடைய பட்டணத்திற்குச் சமானமாக வருணிக்கப்பட்டது. தேகத்தில ஒன்பது வாயில்கள் எவையென்றால், கண்-2, காது-2, மூக்கு-2, வாய்-1, பாயு-1, உபஸ்தம்-1, ஆக ஒன்பது. பட்டணத்தை உபமானமாகச் சொன்னதின் கருத்து என்னவென்றால், ஒன்பது வாயில்களையுடைய ஒரு கோட்டையிலிருந்து கொண்டு தானாகவும், தன் மந்திரிமுதலிய பரிவாரங்கள் மூலமாகவும் பல விஷயங்களில் பிரவிருத்தித்தும் - பல செய்கைகளைச் செய்துகொண்டும் செய்வித்துக்கொண்டும் நெடுங்காலம் இராஜ்ஜிய தந்திரம் நடத்திவந்த ஒரு அரசன், இராஜ்ஜியாதிகாரத்தில் வெறுப்புற்று

அந்த அதிகாரத்தை வேறொருவர் வசம் செய்துவிட்டு அந்தப் பட்டணத்திலேயே வாசஞ் செய்துகொண்டிருக்கிறான். அவன் அந்தப் பட்டணத்திற்குள்ளேயே வாசமாயிருந்தாலும், இராஜ்ஜிய தந்திரத்தினு லுண்டாகும் சகல கவலையும் அவ் வரசனை விட்டு நீங்கிக் கவலையற்று அந்த அரசன் எப்படிச் சுகமாக இருப்பானோ, அப்படிப் போல, தேகமாகிற கோட்டைக்குள் இருந்துகொண்டு, இந்திரியங்கள் மனம் புத்தி அகங்காரம் தேகம் இவைகளாற் செய்யப்படும் சகல கர்மங்களையும் தானே செய்வதாகவும் - இந்திரியாதிகளைக் கொண்டு தானே செய்விப்பதாகவும் பிரமை யடைந்து, அதனால் சுகதுக்கங்களைத் தன்னுடையதாகப் பாவித்துவந்த இந்த ஆத்மாவானவன் ஞானம் அடைந்து, தான் அனுபவித்துவந்த சுகதுக்காதிகள் தன்னுடையதுமல்ல, தேகேந்திரியாதிகளின் செய்கைக்குத் தான் கர்த்தாவும் அல்லவென்று அறிவானாகில், அப்படித் தெரிந்த பிறகு தேகாதிகளால் அவைகளின் வியாபாரம் நடந்துகொண்டிருந்தபோதிலும் அவைகளின் சம்பந்தத்தை விட்டுத் தேகத்திற்குள் சுகமாயிருப்பான் என்பதை விளக்கும் பொருட்டுப் பட்டணம் திருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டது. (13)

கச. ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: ।
ந கர்மபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே ॥

14. ந-கர்த்ருத்வம்-ந-கர்மாணி-லோகஸ்ய-ஸ்ருஜதி-ப்ரபு:(1) ।
ந-கர்மபலஸம்யோகம்-ஸ்வபாவஸ்-து-ப்ரவர்த்ததே ॥

ப்ரபு:	பிரபு (ஆத்மா)
லோகஸ்ய	உலகத்திற்கு
கர்த்ருத்வம்	கர்த்ருத்துவத்தை
ந ஸ்ருஜதி	சிருஷ்டிக்கவில்லை;
கர்மாணி	கர்மங்களை
ந (ஸ்ருஜதி)	சிருஷ்டிக்கவில்லை;
கர்மபலஸம்யோகம்	கர்மத்தின் பலனோடு கூடுதலையும்
ந (ஸ்ருஜதி)	சிருஷ்டிக்கவில்லை;
ஸ்வபாவஸ்து	ஸ்வபாவமென்பதுதான்
ப்ரவர்த்ததே	பிரவிருத்திக்கின்றது.

தேகத்தின் அதிபதியான ஆத்மாவாகிய பிரபு உலகத்திற்குக் கர்த்ருத்துவத்தையாவது, கர்மங்களையாவது, கர்ம பலனிற் பற்றுதலையாவது உண்டாக்கவில்லை. ஸ்வபாவமென்பதுதான், அதாவது மாயைதான்

பிரவிருத்திக்கின்றது (கர்த்ருத்துவாதி, மாயையின் குணத்தா லுண் டான தென்பது தாத்பர்யம்).

---

(1) "ப்ரபு:=ஈசுவரன்" (ஸ்ரீதரர்), 'ஆளுகிறவர்' என்பது பொருள். அடுத்த சுலோகத்தில் "விபு:" என்கிற பிரயோகத்தையும் பார்க்க.

(சங்கர பாஷ்யம்) "கர்த்தாவாதலை ஆத்மா உண்டாக்குவதில்லை; அதாவது; 'நீ இதைச் செய்' என்று தானாக ஆத்மா ஒருவனைத் தூண்டுவ தில்லை. ஒருவன் தான் அடைய விரும்பிய வண்டிகள் குடங்கள் மாளிகை கள் முதலியவற்றையும் ஆத்மா உலகத்திற்கு உண்டுபண்ணுவதில்லை. அன்றியும், வண்டி முதலியவற்றைச் செய்தவன் அத் தொழிலின் பய னோடு கூடுதலையும் ஆத்மா உண்டாக்குவதில்லை. ஆத்மா தானாக ஒன்றை யும் செய்வதும் செய்விப்பதும் இல்லையானால் அப்பொழுது எது செய்வ தாயும் செய்விப்பதாயும் இருக்கிறது என்றால், ஸ்வபாவ மென்பதுதான். அதாவது இயற்கை, அவித்தை, பிரகிருதி முக்குணமயமான மாயை யானது சேஷ்டிக்கின்றது. "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா" என்று பின் வருகிற 7-வது அத். 14-வது சுலோகத்தில் சொல்லப்பட் டிருப்பதைப் பார்க்க."

(ராமானுஜர்) "லோகஸ்ய=தேவ, மநுஷ்ய, பசு, பக்ஷி, ஸ்தாவராதி ரூபங்களானதும், பிரகிருதி சம்பந்தத்தோடு கூடியிருக்கிறதுமான இந்த லோகத்திற்கு, கர்த்ருத்வம்=தேவமனுஷ்யாதிகளில் அவரவர்களுக் குத் தனித்தனி கர்த்ருத்துவத்தையும், கர்மாணி = அவரவர்க ளுக்குத் தனித்தனி கர்மங்களையும், கர்மபல ஸம்யோகம்=அந்தந்தக் கர்மங்களா லுண்டான பலன்களில் அவரவர்களுக்குத் தனித்தனி சம் பந்தத்தையும், ப்ரபு:=கர்ம பந்தம் நீங்கித் தன் ஸ்வரூபத்தோ டிருக்கிற ஆத்மாவானவன், ந ஸ்ருஜதி=உண்டாக்குகிறதில்லை, ஸ்வபாவஸ்து=பிரகிருதி வாசனையாகிற அநாதிகாலமாய்த் தொடர்ந்து வந்த பூர்வகர்மங்களா லுண்டான தேவமனுஷ்யாதி ஆகாரங்களாகிய பிர கிருதி சம்பந்தத்தினா லுண்டான தேகாபிமான வாசனையானது, ப்ரவ ர்த்ததே = உண்டு பண்ணுகிறது. கர்த்ருத்துவாதி, சுவபாவத்தினா லுண்டானதே யன்றி ஆத்மாவுக்குக் கர்த்ருத்துவ மில்லை."

(இராகவேந்திரர்) "ப்ரபு:=ஜடவஸ்துக்களைப் பார்க்கிலும் சமர் த்தனான ஜீவன், லோகஸ்ய=ஜனங்களுக்காவது தனக்காவது, கர்த்ரு த்வம்=கர்த்ருத்துவத்தையாவது, கர்மாணி=கர்மங்களையாவது, கர்மபல ஸம்யோகம்=கர்மபலனில் பற்றுதலையாவது, ந ஸ்ருஜதி=சுதந்தரனா

யுண்டாக்கவாவது, தானடையவாவது சக்தனல்ல. ஸ்வபாவஸ்து=சுதந்தரனாய்ச் சகலத்தையுமுண்டுபண்ணுகிறவனாகிய ஈசுவரன், ப்ரவர்த்ததே=சுதந்தரனாயுண்டுபண்ணுகிறார்; அல்லது, ப்ரபு:=ஈசுவரன், லோகஸ்ய=ஜீவர்களுக்கு, கர்த்ருத்வம்=கர்த்ருத்துவம், கர்மாணி=கர்மங்கள், கர்மபல ஸம்யோகம் = கர்மபல சம்பந்தம் இவைகளில், ந ஸ்ருஜதி=சுவாதந்திரியம் கொடுக்கிறதில்லை. (14)

கரு. நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு: |
அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: ||

15. ந-ஆதத்தே-கஸ்யசித்-பாபம்-ந-சைவ-ஸுக்ருதம்-விபு: |
அஜ்ஞாநேந-ஆவ்ருதம்-ஜ்ஞாநம்-தேந-முஹ்யந்தி-ஜந்தவ: ||

விபு:	எங்கும் நிறைந்த ஆத்மா
கஸ்யசித்	ஒருவனுடைய
பாபம்	பாபத்தையும்
ந ஆதத்தே	வாங்கிக்கொள்ளுகிறதேயில்லை;
ஸுக்ருதம்	புண்ணியத்தையும்
ந ஆதத்தே	வாங்கிக்கொள்ளுகிறதேயில்லை;
ஜ்ஞாநம்	ஞானமானது
அஜ்ஞாநேந	அஞ்ஞானத்தினால்
ஆவ்ருதம்	மூடப்பட்டிருக்கிறது;
தேந	அதனால்
ஜந்தவ:	பிராணிகள்
முஹ்யந்தி	மோஹத்தை அடைந்திருக்கின்றன.

எங்கும் நிறைந்த பரமாத்மாவானவர் ஒருவனுடைய பாபத்தையாவது, புண்ணியத்தையாவது வாங்கிக் கொள்ளுகிறதில்லை. ஞானமானது அஞ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கிறது. அதனால் பிராணிகள் மோஹத்தை அடைந்திருக்கின்றன.

(சங்கரர்) "ஒருவன் உண்மையிலே பக்தனாயிருந்தாலும் அவனுடைய நல்வினையையாவது, அல்லது பக்தர்களால் செய்யப்பட்ட தீவினையையாவது சர்வவியாபியான பரமாத்மா வாங்கிக்கொள்வதில்லை. அப்படியானால், பக்தர்களால் பூஜை யாகம் தானம் ஹோமம் முதலான நல்வினைகள் எதற்காகச் செய்யப்படுகின்றன என்றால், விவேக அறிவு அஞ்ஞானத்தால் மூடப்பட்டுக் கிடக்கின்றது; ஆகவே, விவேகமில்லாத

ஸம்ஸாரிகளான பிராணிகள் 'நான் செய்கிறேன், செய்விக்கிறேன், அநுபவிக்கிறேன், அநுபவிக்கும்படி செய்கிறேன்' என்று மோஹத்தினால் நினைக்கிறார்கள்; (இந்த மோஹம் நீங்குவதற்காகத்தான்)."

(ஸ்ரீதரர்) "ஈசுவரன் சர்வத்திர சமமாயிருக்கிறாரென்கிற ஞானமானது, தண்டனையுங்கூட அநுக்கிரகந்தானென்று அறியாமையாகிய அஞ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கிறது. அதனால் தங்கள் பூர்வ கர்மாநுசாரமாய்த் துக்கத்தை அநுபவிக்கும்போது, 'பகவான் பக்ஷபாதி' என்று எண்ணுகிறார்கள்,"

(ராமாநுஜர்) "விபு:=ஆத்மா (ஜீவன்), கஸ்யசித் = புத்திர மித்திரர்களுடைய, பாபம் = பாபபலனாகிய துக்கத்தை, நாதத்தே = போக்கடிக்கிறதில்லை. அதாவது, தன்னுடையவனென்கிற அபிமானத்தால் அந்தப் பாபத்திற்குப் பரிகாரஞ் செய்யவோ அதைத் தான் கிரகித்துக் கொள்ளவோ ஏற்படுகிறதில்லை. கஸ்யசித்=சத்துருவாகிய ஒருவனுடைய, ஸுக்ருதம்=புண்ணியபலமாகிய சுகத்தை, நாதத்தே= போக்கடிக்கிறதில்லை. ஏனென்றால், விபு: = குறித்த ஒரு தேசத்திலிருக்கிறவனல்ல; அதாவது, எங்கும் வியாபித்தவன்; இவனுக்குப் புத்திர மித்திரனென்பதுமில்லை, துவேஷியுமில்லை. ஆகையால், ஒருவனுடைய பாப புண்ணியங்களைப் போக்கடிக்கக் காரணமேயில்லை. ஆனால், உலகத்தில் துவேஷி, பந்து என்று வியவகரிக்கப்படுகிறதேயென்றால், அந்த வியவகாரம் பூர்வ கர்மவாசனையினாலுண்டானது. எப்படியெனில், அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் =சுகஸ்வரூப ஞானமானது அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் பந்து, துவேஷி என்கிற அபிமானமுண்டாகிறது."

(இராகவேந்திரர்) "விபு:= ஜீவனானவன், கஸ்யசித் பாபம் நாதத்தே=ஒரு துஷ்கர்மத்தினுடைய பலனாகிய பாபத்தைச் சுதந்திரமாயடையவாவது, கஸ்யசித் ஸுக்ருதம் = ஒரு சத்கர்மத்தினுடைய பலனாகிய புண்ணியத்தைச் சுதந்திரமாயடையவாவது சக்தனல்ல. ஈசுவரன் தான் அந்தக் கர்மபலன்களைக் கொடுத்தற்குச் சக்தன். அல்லது, விபு:= ஈசுவரனுக்குப் பாபகர்மமாவது புண்ணியகர்மமாவது ஒன்றுமில்லாததினாலே அந்தக் கர்மபலனும் அவனுக்கில்லை. 'பாபபுண்ணிய பலன்களற்ற ஈசுவரன் ஒருவனிருப்பானாகில், ஏன் காணப்படுகிறதில்லை?' என்றால், ஜீவனுடைய ஞானமானது அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டிருப்பதால் ஈசுவரனை யறியவில்லை." (15)

௧௬. ஜ்ஞாநேந து தத³ஜ்ஞாநம் யேஷாம் நாஶிதமாத்மந꞉ * ।
தேஷாமாதி³த்யவஜ்ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத்பரம் ॥

16. ஜ்ஞாநேந-து-தத்-அஜ்ஞாநம்-யேஷாம்-நாஶிதம்-ஆத்மந꞉ ।
தேஷாம்-ஆதித்யவத்-ஜ்ஞாநம்-ப்ரகாஶயதி-தத்-பரம்(1) ॥

யேஷாம்	எவர்களுடைய
தத³ஜ்ஞாநம்	அந்த அஞ்ஞானமானது
ஆத்மந꞉ ஜ்ஞாநேந	ஆத்மாவைப்பற்றிய ஞானத்தினல்
நாஶிதம்	நாசம் செய்யப்பட்டுள்ளதோ
தேஷாம் து ஜ்ஞாநம்	அவர்களுக்குத்தான் ஞானமானது
ஆதி³த்யவத்	சூரியன்போல்
தத் பரம்	அந்தப் பரம்பொருளை
ப்ரகாஶயதி	பிரகாசிக்கச் செய்கின்றது.

எவர்களுடைய அந்த அஞ்ஞானமானது ஆத்மாவைப்பற்றிய ஞானத்தினல் நாசம் செய்யப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்குத்தான் ஞானமானது சூரியனைப்போல பரப்ரஹ்ம சொரூபத்தைப் பிரகாசிப்பிக்கிறது. சூரியனுடைய பிரகாசமானது இருட்டைப் போக்கடித்து வஸ்துக்களைப் பிரகாசிப்பிக்கிறதுபோலப் பிரகாசிப்பிக்கிறது.

---

* 'ஆத்மநாம்' என்றும் பாடம். 'ஆத்மாக்களுடைய' என்று அர்த்தம்.

(1) "தத்பரம்-பரிபூர்ணமான ஈசுவர ஸ்வரூபத்தை." (ஸ்ரீதரர்).

(சங்கரர்) "எந்த அஞ்ஞானத்தினல் மூடப்பட்டுப் பிராணிகள் மயங்குகின்றனவோ அந்த அஞ்ஞானமானது ஆத்மாவைப்பற்றிய விவேக அறிவினல் நசிக்கப்பட்டுப்போனல், அப்பொழுது அந்தப் பிராணிகளுக்கு அந்த ஞானமானது, 'சூரியன் உலகத்திலுள்ள வஸ்துக்களின் கூட்டத்தையெல்லாம் விளங்கத் தோற்றுவிக்கின்றதுபோல' அறிய வேண்டிய பரமார்த்த உண்மையாகிய அப் பரம்பொருளெல்லாம் நன்ருய் விளங்கும்படி செய்கின்றது."

(ராமாநுஜர்) "யேஷாமாத்மநாம் = பிரகிருதியிலிருந்து விடுபட்டிருக்கிற ஆத்மாக்களுடைய, அஜ்ஞாநம் = அநாதிகாலமாய்ப் பிரவிருத்தித்திருக்கிற கர்மக்கூட்டங்களாகிய அஞ்ஞானமானது, ஜ்ஞாநேந = எந்த ஞானத்தினலே, அதாவது ஆத்மசொரூபவிஷய பரிபூர்ண ஞானத்தினலே, நாஶிதம் = நசிக்கப்பட்டதோ, தேஷாம் = அந்த அஞ்ஞானம் நீங்கினவர்களுடைய, தத்பரம் ஜ்ஞாநம் = பரிபூர்ணமானதும் சுபாவமானதுமாகிய

அந்த ஞானமானது, ஆதித்யவத் = சூரியனுடைய பிரகாசம்போல், ப்ரகாசயதி=சகலத்தையும் பிரகாசிப்பிக்கிறது. எவர்களுடைய அஞ்ஞானம் நாச மடைந்ததோ, தேஷாம்=அவர்களுடைய என்கிற பகுவசனமானது, ஜீவஸ்வரூபம் பலவென்பதைக் காண்பிக்கிறது. அவித்தையினல் பலவாகத் தோற்றுகிறதேயன்றி வாஸ்தவத்தி லொன்றுதானென்னும் பக்ஷம் சரியல்ல. ஏனென்றால், அவித்தை நாசமடைந்த பிறகும், பலவென்கிற அர்த்தம் இதில் சொல்லப்பட்டிருப்பதால் ஜீவன்கள் பலவென்பதும், ஜீவேசுவரபேத மென்பதும் ஏற்படுகிறது.'' (16)

கஎ. தத்புத்தயஸ்ததாத்மாநஸ் தந்நிஷ்டாஸ்தத்பராயணா: ।
கச்சந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூதகல்மஷா: ॥ *

17. தத்புத்தய(1)-ஸ்ததாத்மாந:(2)-தந்நிஷ்டா:(3)-தத்பராயணா:(4)
கச்சந்தி-அபுநராவ்ருத்திம்-(5)ஜ்ஞாநநிர்தூதகல்மஷா: ॥

தத்புத்தய:	(பரமார்த்த தத்துவமாகிய) அதிலே புத்தியுள்ளவர்களாயும்,
ததாத்மாந:	அதையே ஆத்மாவாகக் கொண்டவராயும்,
தந்நிஷ்டா:	அதிலேயே நிலைத்திருப்பவர்களாயும்,
தத்பராயணா:	அதையே பரம கதியாக (அடைக்கலமாக) அடைந்தவர்களாயும்,
ஜ்ஞாநநிர்தூதகல்மஷா:	ஞானத்தினல் பாபங்களைப் போக்கடித்துக்கொண்டவர்களாயுமிருக்கிறவர்கள்
அபுநராவ்ருத்திம்	மறுபடி பிறவாமையை (மோக்ஷத்தை)
கச்சந்தி	அடைகிறார்கள்.

ப்ரஹ்மத்தினிடத்து புத்தி நிலைத்தவர்களாயும், ப்ரஹ்மத்தையே தன் ஆத்மாவாக எண்ணுகிறவர்களாயும், ப்ரஹ்ம நிஷ்டர்களாயும், அதாவது ப்ரஹ்மத்தினிடத்தேயே தமது இருப்பைக் கொண்டவர்களாயும், ப்ரஹ்மத்தையே பரமகதியாக (உயர்ந்த புகலிடமாக) அடைந்தவர்களாயும், ஞானத்தினல் சகல பாபங்களையும் போக்கடித்துக்கொண்டவர்களாயு மிருக்கிறவர்கள், திரும்பவும் ஜநந மரணமான சம்சாரத்திற்கு வாராத ஸ்தானமாகிய மோக்ஷத்தை யடைகிறார்கள்.

---

* இந்தச் சுலோகத்தைக் கூர்மபுராணம் 12-வது அத்-ல் காண்க.

(1) ''தத்புத்தய:=தன்னுடைய ஆத்மசொரூப தரிசனத்தில் நிச்சயஞான முள்ளவர்களாயும்.'' (ராமாநுஜர்), ''நிச்சயமான ப்ரஹ்மஞானத்தை யுடையவர்களாயும்.'' (ஸ்ரீதரர்).

(2) "ததாத்மாந:=ப்ரஹ்மமே தன் ஆத்மாவாக வுடையவர்கள், தானே பரஹ்மமென்கிற நிச்சயமுடையவர்கள்." (சங்கரர்), "ஆத்மசொரூப தரிசனத்தில் மனதைச் செலுத்துகிறவர்கள்." (ராமாநுஜர்), "தன்க்குப் பரமாத்மாவே யஜமானனென்று எண்ணுகிறவர்கள்." (இராகவேந்திரர்). "ப்ரஹ்மத்தினிடத்தில் நிலைத்த மனதையுடையவர்கள்." (ஸ்ரீதரர்).

(3) "தந்நிஷ்டா = ஆத்மசொரூபத்தில் எப்போதும் அப்பியாச முள்ளவர்கள்." (ராமாநுஜர்). "அசஞ்சலமான ப்ரஹ்மநிஷ்டையை யுடையவர்கள்." (இராகவேந்திரர்).

(4) "தத்பராயணா:=தன்னுடைய ஆத்மசொரூபத்தை யறிகிறதே பரமப்பிரயோஜனமாக எண்ணினவர்கள்." (ராமாநுஜர்). "ப்ரஹ்மத்தையே ஆசிரியமாய் உள்ளவர்கள்." (ஸ்ரீதரர்).

(5) "அபுநராவ்ருத்திம்-புநர்ஜந்ம மில்லாத தன்னுடைய முக்த சொரூபத்தை." (ராமாநுஜர்).

(சங்கரர்) "ஞானத்தால் பிரகாசிக்கப்பட்ட, பரம்பொருளாகிய, பரமார்த்த உண்மை எதுவோ அதில் புத்தியுடையவர் என்றால், ப்ரஹ்மத்தினிடத்தில் புத்தி சென்றவர்களாயும், அதையே (பரப்ரஹ்மத்தையே) தன் ஆத்மாவாகக் காண்பவர்களாயும், ப்ரஹ்மத்திலேயே நிஷ்டை உடையவர்களாயும், அதாவது, சகல கர்மங்களையும் விட்டு ப்ரஹ்மத்தினிடத்தேயே தமது இருப்பை உடையவர்களாயும், அதுவே எவர்கட்குச் சிறந்த புகலிடமாக இருக்கின்றதோ அவர்கள் அதையே உயர்ந்த அடைக்கலமாகக் கொண்டவர்கள்; ஆத்மா ஒன்றிலேயே மகிழ்ச்சி அடைந்திருப்பவர்கள் என்பது பொருள். எவர்களுடைய அஞ்ஞானமானது ஆத்மாவைப்பற்றிய அறிவினால் நாசம் செய்யப்பட்டுள்ளதோ அவர்கள் மேற்சொன்ன விதமான நிலையை உடையவர்களாகி மறுபடியும் சம்சாரத்திற்கு வராமையை, அதாவது மறுபடியும் தேகத்தோடு கூடுதல் இல்லாமையைப் பெறுகிறார்கள். சம்சார காரணமாகிய தீவினை முதலிய தீங்குகள் முன்சொன்ன ஞானத்தினால் எவர்களுக்கு நசிக்கப்பட்டுள்ளதோ அவர்கள், ஞானத்தினால் பாபம் போக்கடிக்கப் படப் பெற்றவர்கள், எதிகள் என்பது பொருள்." (17)

---

௧௮. 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌗𑌵𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿 ।
𑌶𑍁𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥

18. வித்யாவிநய ஸம்பந்நே-ப்ராஹ்மணே-கவி-ஹஸ்திநி।
ஶுநி-ச-ஏவ-ஶ்வபாகே-ச-பண்டிதா:-ஸமதர்ஶிந: ॥

𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃	ஞானிகள்:
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇	கல்வியும் சாந்தமுமுள்ள
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇	ப்ராஹ்மணனிடத்திலும்,
𑌗𑌵𑌿	பசுவினிடத்திலும்,
𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿	யானையினிடத்திலும்
𑌶𑍁𑌨𑌿𑌚	நாயினிடத்திலும்,
𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇𑌚	நாயைச் சமைத்துப் புஜிக்கிற சண்டாள னிடத்திலும்
𑌸𑌮 𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌏𑌵	சமமாய் ப்ரஹ்மத்தைப் பார்க்கும் ஸ்வபாவமுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள்.

ஞானிகள்: வித்தை சாந்தம் இவைகளோடு கூடிய ப்ராஹ்மண னிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்தி லும், நாயைப் பாகம் செய்து புஜிக்கிற சண்டாளனிடத்திலும், சமதர்சிக ளாகவே, அதாவது சமமாய், நிர்விகாரியாயுள்ள ப்ரஹ்மத்தை அவைக ளில் வித்தியாசமின்றிக் காண்பவர்களாகவே இருக்கிறார்கள்.

---

*இந்தச் சுலோகத்தைப் பிரம்ம புராணம் அத். 126. சு,14-ல் காண்க.

(சங்கர பாஷ்யம்) "எவர்களுடைய அறியாமையானது ஆத்மா வைப்பற்றிய அறிவினால் நாசம் செய்யப்பட்டுள்ளதோ அந்த ஞானிகள் எவ்வாறு அந்தத் தத்துவத்தை (உண்மையை) பார்க்கின்றார்கள் என் பது சொல்லப்படுகிறது.

"கல்வியும், சாந்தமும் கூடிய வித்வானாய் அடங்கிய ப்ராஹ்மணன் எவனோ அவனிடத்தும், அதாவது ப்ரஹ்மவித்தையும் - அடக்கமும் - வைதிக ஸம்ஸ்காரமும் - ஸத்துவகுணமும் - உடைய உத்தமமான ப்ராஹ் மணனிடத்திலும், ரஜோகுணமுடையதாய் - வைதிக ஸம்ஸ்கார மில்லாத தாய் - மத்தியமமான பசுவினிடத்தும், வெறும் தமோகுணத்தை உடைய அதமமாயுள்ள யானை முதலானவற்றினிடத்தும் சமமாய் ப்ரஹ்மமொன்றையே காண்பவர்கள் ஞானிகள்.

"சத்துவம் முதலிய குணங்களும், அவைகளினால் உண்டாகும் சத் துவமான வாசனைகளும், ராஜஸமான வாசனைகளும், தாமசமான வாசனைகளும் ஆகிய இவற்றுள் எதுவும் தன்னைக் கலத்த லில்லாததாய், சமமாய், ஏகமாய், நிர்விகாரியாயுள்ள அந்த ப்ரஹ்மத்தைக் காணும் தன்மையானது எவர்களுக்கு உள்ளதோ அவர்கள் ஞானிகள், சமதர்சிகள்,

(ராமானுஜர்) "பண்டிதா:=பிரகிருதிவிமுக்த ஆத்மசொரூபத்தை யறிந்தவர்கள், ஸமதர்சிந:=சகலஜீவ சொரூபமும், ஞானாகாரமாய்ச் சம மானதென்று அறிகிறார்கள்."

(இராகவேந்திரர்) "ஸமதர்சிந:=உத்தம, மத்தியம, நிகிருஷ்ட பிராணிகளிடத்தில் சகலகுண பரிபூர்ணரான பரமாத்மாவானவர், அந்தர்யாமியாய்ச் சமமாயிருக்கிறாரென்று அறிகிறவர்கள், என்றால், உத்தமமான வஸ்துவில் பரமாத்மா பூர்ணமாயும், நிகிர்ஷ்டமான வஸ்துவில் சொற்பமாயு மிருக்கிறதாக அஞ்ஞானிகள் நினைப்பார்கள்; விவேகிகள் எங்கும் பரமாத்மா சமமாயிருக்கிறதாகப் பார்க்கிறார்க ளென்பது தாத்பர்யம்."

(ஸ்வ) "ப்ராஹ்மணன் முதலான எல்லாரிடத்திலும் ப்ரஹ்மத்தைச் சமமாய்ப் பார்ப்பவர்கள் ஞானிகள் என்று சொல்லப்படுகிறார்கள்," என்று ஸ்ரீதரர் அந்வயப்படுத்தியிருக்கிறார். (18)

---

௧௯. இஹைவ தைர்ஜித: ஸர்கோ யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மந:।
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே ஸ்திதா:॥

19. இஹ (1)-ஏவ-தை:-ஜித:-ஸர்க:-யேஷாம்-ஸாம்யே-ஸ்திதம்-மந:।
நிர்தோஷம்-ஹி-ஸமம்-ப்ரஹ்ம-தஸ்மாத்-ப்ரஹ்மணி-தே-[ஸ்திதா:॥

யேஷாம்	எவர்களுடைய
மந:	மனமானது
ஸாம்யே	சர்வத்திலும் ப்ரஹ்மத்தைச் சமமாகப் [பார்ப்பதில்
ஸ்திதம்	ஸ்திரமாயிருக்கின்றதோ
தை:	அவர்களாலே
இஹைவ	இந்தத் தேகத்துட னிருக்கையிலேயே
ஸர்க:	பிறப்பு (ஜநந மரண ஸம்ஸாரம்)
ஜித:	ஜயிக்கப்பட்டது;
ஹி	ஏனென்றால்,
ப்ரஹ்ம	ப்ரஹ்மமானது
நிர்தோஷம்	தோஷம் அற்றது (குற்றம் அற்றது),
ஸமம்	சமமானது;
தஸ்மாத்	ஆகையினாலே,
தே	அவர்கள்
ப்ரஹ்மணி	ப்ரஹ்மத்தினிடத்தில்
ஸ்திதா:	நிலைத்திருக்கிறவர்கள்.

எவர்களுடைய மனமானது சகலத்திலும் ப்ரஹ்மத்தைச் சமமாகப் பார்ப்பதில் நிலையாகவிருக்கின்றதோ அந்தச் சமதர்சிகளான ஞானிகளால், இந்தச் சரீரத்தோ டிருக்கும்பொழுதே ஜநந மரணமாகிய சம்சாரமானது ஜயிக்கப்பட்டது, வசப்படுத்திக் கொள்ளப்பட்டது. ஏனென்றால், ப்ரஹ்மம் தோஷம் அற்றதாயும், சமமாயும், (ஏகமாயும்) இருப்பதால், ப்ரஹ்மத்திலேயே அவர்கள் நிலைத்திருக்கிறார்கள்.

---

(1) "இஹ" என்பதற்கு, "இந்த லோகத்திலே," என்று சிலர் அர்த்தம் செய்கிறார்கள்.

(2) "ஸாம்யே=கல்யாண குணங்கள், தோஷமின்மை இவைகளில் சமமாயிருக்கிற." (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) "ஸமாஸமாப்யாம் விஷமஸமே பூஜாத:" என்கிற கௌதம ஸ்மிருதி வாக்கியப்படி, தனக்குச் சமமானவர்களைச் சம மில்லாமலும், சமான மில்லாமல் தாழ்ந்தவர்களைத் தனக்குச் சமமாகவும் மரியாதை செய்தவனுடைய அன்னத்தைப் புசித்தல் கூடாது. ஆகையால், முன் சுலோகத்தில் சொன்ன சமதர்சிகள், மற்றவர்கள் புசிக்கக்கூடாத அன்னத்தை உடையவர்களாகிறார்களே, அதனால் அவர்கள் பாபிகளாகிறார்களல்லவா ? என்று கேட்கும் விஷயத்தில், அவர்கள் அப்படி ஆகமாட்டார்கள்; அது என்ன காரணத்தினால் என்பது இந்தச் சுலோகத்தில் சொல்லப்படுகிறது.

"எவர்களுடைய மனதானது, அல்லது அந்தக்கரணமானது, 'ப்ரஹ்மம் சகல பூதங்களிலும் சமமாக இருக்கிறது' என்னும் நிலையிலே, சலிக்காமல் நிற்கின்றதோ, அந்தச் சமதர்சிகளான ஞானிகள், இந்தச் சரீரத்தோடு கூடியிருக்கும்பொழுதே ஜநந மரணத்தை ஜயித்தவர்கள், அதாவது வசப்படுத்திக்கொண்டவர்கள். நாயை உண்ணும் புலையர் முதலானவர்களுடைய அசுத்தமான சரீரத்தோடுகூடி ஆத்மா அவ் வசுத்தங்களால் தோஷப்பட்டதுபோல் மூடர்களால் எண்ணப்பட்டபோதிலும், அது குண பேதங்களினால் உண்டாகும் வேற்றுமை யற்றதாய், தோஷ மில்லாததாய், சுத்தமாய் இருக்கின்றது. அது நிர்க்குணமாதலின் ஸ்வகுண பேதத்தினால் வெவ்வேறானதாக இல்லை, சைதந்நியத்திற்குக் குணமில்லை யாதலின். ஸ்ரீ பகவானும் பின் வருகிற 13-வது அத். 6-வது சுலோகத்தில், "இச்சைமுதலானவைசரீரத்தின் தர்மம்," என்றும், "அநாதித்வாந்நிர்குணத்வாத்" என்று 13-வது அத், 31 - வது சுலோகத்திலும் சொல்லுகிறார். (வைசேஷிகர் சொல்லுகிறபடி) ஆத்மா

வை வெவ்வேறாக வேறுபடுத்தும் அந்திய விசேஷங்களும் இல்லை. ஏனெனில், ஒவ்வொரு சரீரத்திலும் அவை உள்ளன என்பதற்குப் பிரமாணம் அமையாதாதலின் என்க. ஒவ்வொரு சரீரத்திலும் ஆத்மா வேறுவேறாக இருக்கின்றது என்பது அமைந்தால், அப்பொழுது அந்திய விசேஷங்கள் ஆத்மாவினிடத்து உண்டு என அமையும். மேலும், அவை உண்டு என அமைந்தால்தான் ஆத்மா ஒவ்வொரு சரீரத்திலும் வேறுவேறாக உள்ளது என்பது அமையும். ஆகவே, இவ்வாறாக ஒன்றையொன்று பற்றுதல் என்னும் குற்றம் வருதல் காண்க. வைசேஷிகர் மதப்படி, அந்திய விசேஷமென்பது, ஒரு நித்திய வஸ்துவை மற்றொரு நித்திய வஸ்துவினின்றும் வேறுபடுத்தும் லக்ஷணம். உதாரணம்:— நீரின் பரமாணுக்களை நெருப்பின் பரமாணுக்களிலிருந்து வேறுபடுத்துவது எதுவோ அது அந்திய விசேஷம், அதாவது கடைசிக் குறிகளெனப் படுவது. இந்த லக்ஷணம் எடுத்துச் சொல்ல முடியாததாம். (ஆநந்தகிரி).

“ஆகவே ப்ரஹ்மம் சமமாயும், ஏகமாயும் இருப்பது. ஆதலால், பண்டிதர்கள் (ஞானிகள்) ப்ரஹ்மத்திலேயே நிலைத்தவர்கள். தேகம் முதலியவற்றின் சேர்க்கையே ஆத்மாவென்னும் அபிமானமும் ‘நான்’ என்னும் அகங்காரமும் அவர்களுக்கு இல்லாததினால், அசுத்தத்தின் வாசனைகூட ஞானிகளை அணுகாது.

“தேகம் முதலியவற்றின் சேர்க்கையையே ஆத்மாவாக அபிமானங் கொண்டு ‘நான்’ என்னும் அகங்காரத்தோடு கூடியிருக்கிறவர்களுக்கு மாத்திரம் ‘ஸமாஸமாப்⁴யாம்’ என்று முதலில் சொன்ன, (கௌதம) சூத்திரம் உரியது. ஏனெனில், அது பூஜிக்கப்படுபவர்களுடைய விசேஷத் தன்மையைக் குறித்துநிற்கின்றது. ‘இவன் ப்ரஹ்மத்தை அறிந்தவன்,’ ‘இவன் ஆறு சாஸ்திரத்தையும் அறிந்தவன்’, ‘இவன் நான்கு வேதத்தையும் அறிந்தவன்’ என்னும் குணவிசேஷங்கள் பொருந்தியிருக்கின்றது என்னும் பாவனை அன்றோ, மரியாதை செய்வது, தானம் கொடுப்பது முதலானவற்றிலே, முக்கிய காரணங்களாகக் காணப்படுகின்றன. ஆனால், ப்ரஹ்மமோ எவ்வித குணத்தோடும் எவ்வித தோஷத்தோடும் சம்பந்தப் படாததாதலால் அவர்கள் ‘ப்ரஹ்மத்தில் நிலைத்தவர்கள்’ என்னும் காரணம் சொல்லப்பட்டது. அன்றியும், ‘ஸமா, ஸமாப்⁴யாம்’ என்று தொடங்கும் சூத்திரம் கர்ம விஷயத்தைப்பற்றியது’ இந்தப் பிரகரணமோ, ‘ஸர்வகர்மாணி மனஸா’ என்கிற இந்த அத்-13-வது சுலோகம்முதல் அத்தியாயமுடிவு வரையில், சர்வ கர்ம சந்யாஸத்தைச் சொல்லப்புகுந்ததா யிருக்கிறது.”

(ஸ்ரீதரர்) "தனக்குச் சமமானவர்களைத் தாழ்வாகவும், தாழ்வான வர்களைச் சமானமாகவும் மரியாதை செய்பவனுக்கு இந்த லோகத்திலும், பரலோகத்திலும் நிந்தனையே யுண்டாகிறதென்று கௌதம மஹரிஷி சொல்லியிருக்கிறாரே! அப்படியிருக்க, சகலத்தையும் சமமாய் எப்படிப் பார்க்கலாமென்றாலோ, ஆத்மசொரூபஞானம் எவனுக்கு உண்டாகவில்லையோ அவனுக்குத் தாரதம்மிய ஞானம் சொல்லப்பட்டதேயன்றி, ஆத்ம சொரூபஞானமுடையவனுக்குத் தாரதம்மியஞானம்சொல்லப்படவில்லை."

(ராமாநுஜர்) "ஸாம்யே = பிரகிருதி விமுக்த ஆத்ம சொரூபமெல்லாம் சமமானதென்கிற விஷயத்தில், யேஷாம் மந: ஸ்தி தம் = எவர்களுடைய மனதானது ஸ்திரமாயிருக்கிறதோ, தை: = அவர்களாலே, இஹைவ = சாதன அநுஷ்டான சமயத்திலேயே, ஸர்க்க: ஜித: = ஜநந மரணமானது ஜயிக்கப்பட்டது. நிர்தோஷம் = பிரகிருதி சம்பந்த தோஷமற்றதும், ஸமம் ஹி = சகலத்திலும் ஞான சொரூபமாகவே யிருக்கிறதுந்தான் ஆத்ம வஸ்து. அதுதான், ப்ரஹ்ம = ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது. தஸ்மாத் = அந்தப் பிரகிருதி விமுக்த ஆத்மசொரூபிகள், ப்ரஹ்மணி ஸ்தி தா: = ஞானாகார சொரூபத்தோடிருக்கிறார்கள்." (19)

---

௨௦. ந ப்ரஹ்ருஷ்யேத்ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத்ப்ராப்ய சாப்ரியம்।
ஸ்திரபுத்திரஸம்மூடோ ப்ரஹ்மவித்ப்ரஹ்மணி ஸ்தித:॥ [அப்ரியம்।

20. ந-ப்ரஹ்ருஷ்யேத்-ப்ரியம்-ப்ராப்ய-ந-உத்விஜேத்-ப்ராப்ய-ச-
ஸ்திரபுத்தி:-அஸம்மூட:-ப்ரஹ்மவித்-ப்ரஹ்மணி-ஸ்தித:॥

ஸ்திரபுத்தி:	ப்ரஹ்மத்தினிடத்தில் ஸ்திரமான புத்தியையுடையவனும்,
அஸம்மூட:	மோஹம் அற்றவனும்,
ப்ரஹ்மவித்	ப்ரஹ்மத்தை அறிந்தவனும்,
ப்ரஹ்மணி ஸ்தித:	ப்ரஹ்மத்தில் நிலைத்திருப்பவனுமிருக்கிறவன்
ப்ரியம் ப்ராப்ய	பிரியமானதை யடைந்தால்
ந ப்ரஹ்ருஷ்யேத்	சந்தோஷிக்கமாட்டான்;
அப்ரியம் ப்ராப்ய ச	பிரிய மில்லாததை யடைந்தும்
நோத்விஜேத்	வியஸனப்படமாட்டான்.

ப்ரஹ்மத்தினிடத்தில் ஸ்திரமானபுத்தியை யுடையவனும், மோஹமற்றவனும், ப்ரஹ்மத்தை அறிந்தவனும், ப்ரஹ்மத்தில் நிலைத்திருப்பவனுமிருக்கிறவன் இஷ்டமானதை யடைந்ததினால் சந்தோஷமாவது, இஷ்டமில்லாததை யடைந்ததினால் விசனமாவது படமாட்டான்.

(1) "அஸம்மூட:=தேகமே ஆத்மா என்று எண்ணுதவன்." (ராமாநுஜர்). "தான் சுதந்திரனென்கிற அஞ்ஞான மில்லாதவன்." (இராகவேந்திரர்).

(2) "ப்ரஹ்மவித்=பரமாத்மாவே சுதந்திரனென்று அறிந்தவன்." (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) "ஆத்மாவான ப்ரஹ்மமானது தோஷமற்றதாயும், சமமாயு மிருத்தலால், 'சகல பூதங்களிலும் ஆத்மா அப்படி ஏகமாய், சமமாய் இருக்கின்றது' என்கிற சம்சயமற்ற உறுதியான புத்தியானது எவனுக்கு உள்ளதோ, அவன் மோஹம் அற்றவன்; ப்ரஹ்மத்தை அறிந்தவன்; ப்ரஹ்மத்தில் நிலைத்திருப்பவன்; கர்மங்களைச் செய்யாதவன்; சர்வ கர்ம சந்நியாஸி. தேகத்தையே ஆத்மாவாக எண்ணுகிறவர்களுக்கன்றோ இஷ்டமான பொருள் இஷ்டமில்லாத பொருள் என்பதும், அவைகளினால் சந்தோஷம் துக்கம் என்பதும் உண்டாகக்கூடும். கேவலம் ஆத்மாவையே உள்ளபடி பார்க்கிறவனுக்குச் சந்தோஷமாவது துக்கமாவது உண்டாகமாட்டாது. ஏனெனில், ஆத்மாவுக்கு ஒருபொழுதும் பிரியமுள்ளதென்பது, பிரியமில்லாததென்பது கிடையாது. ஆகையால்தான் ப்ரஹ்மத்தில் நிலைத்திருப்பவன் பிரியமானதை அடைந்து சந்தோஷிப்பதும் முடியாது, பிரிய மில்லாததை அடைந்து துக்கிப்பதும் முடியாது என்று சொல்லப்பட்டது."

(ராமாநுஜர்) (முந்திய சுலோகத்தில் செய்ததுபோலவே ப்ரஹ்மபரமாக சொல்லியிருக்கிறவைகளையெல்லாம் ஆத்மபரமாக இந்தச் சுலோகத்திலும் அர்த்தஞ் செய்திருக்கிறதுதான் வித்தியாசம்; மற்றவைகள் வித்தியாச மில்லை.)

(ஸ்ரீ) இப்படிப்பட்ட ப்ரஹ்ம நிஷ்டனுக்கு இஷ்ட அநிஷ்டம் எப்படி யுண்டாகுமென்றாலோ, அவனுக்கு இஷ்டமானதும், அநிஷ்டமானது மில்லையென்பது நிச்சயமே. ஆனால், பிராரப்த கர்மமானது அவனை இந்தத் தேக முள்ளவரையில் விடாது. அதை அவன் அநுபவித்தே தீரவேண்டும். அப்படி அநுபவிக்கும் விஷயத்தில் அந்தத் தேகத்திற்கு உண்டாகிற இஷ்ட அநிஷ்டங்களை அவன் அநுபவிப்பதே யில்லை. ஆனால், அவன் அநுபவிப்பதுபோல் பிறருக்குக் காணப்படும். (20)

உக. பாஹ்யஸ்பர்சேஷ்வஸக்தாத்மா விந்தத்யாத்மநி யத்ஸுகம் ।
ஸ ப்ரஹ்மயோகயுக்தாத்மா ஸுகமக்ஷயமச்நுதே ॥ [ஸுகம் ।

21. பாஹ்யஸ்பர்சேஷு-அஸக்தாத்மா-விந்ததி-ஆத்மநி(1)-யத்-(2)
ஸ:-ப்ரஹ்மயோகயுக்தாத்மா-ஸுகம்-அக்ஷயம்-அச்நுதே॥

ஸ:	அவன் (ப்ரஹ்மநிஷ்டன்)
பாஹ்யஸ்பர்ஶேஷு	வெளி விஷயங்களிலே
அஸக்தாத்மா	பற்றில்லாத அந்தக்கரணமுடையவனாய்
ஆத்மநி	ஆத்மாவினிடத்து
யத் ஸுகம்	எந்தச் சுகமுண்டோ
தத் ஸுகம்	அந்தச் சுகத்தை
விந்ததி	அடைகிறான்;
ஸ:	அவன்
ப்ரஹ்மயோகயுக்தாத்மா	ப்ரஹ்ம சமாதியுடன் கூடிய அந்தக் கரண முடையவனாய்
ஸுகமக்ஷயம் ஸுகம்	குறைவில்லாத சுகத்தை
அஶ்நுதே	அடைகிறான்.

ப்ரஹ்மநிஷ்டனான அவன்: சப்தாதி வெளி விஷயங்களிலே பற்றில்லாத அந்தக்கரணமுடையவனாய், ஆத்மாவினிடத்தில் எந்தச் சுகம் உள்ளதோ அந்தச் சுகத்தை அடைகிறான். அவன் ப்ரஹ்ம சமாதியுடன் கூடிய அந்தக்கரண முடையவனாய், முடிவில்லாத சுகத்தை அநுபவிக்கிறான்.

---

(2) "ஆத்மநி=தன்னுடைய ஆத்மசொரூபத்தில்." (ராமாநுஜர்), "தன்னுடைய அந்தக்கரணத்தில்." (ஸ்ரீதரர்).

(2) "யத்ஸுகம்-யஸ்ஸுகம்-என்றும்பாடம். ய:=எவன், ஸுகம்= சுகத்தை, விந்ததி=அடைகிறானோ, ஸ:=அவன்." (ராமாநுஜர்).

(சங்கரர்) அன்றியும், ப்ரஹ்மத்தில் நிலைத்திருப்பவன் இந்திரியங்களால் ஸ்பரிசிக்கப்படுவனவாகிய சப்தாதி வெளி விஷயங்களிலே பற்றில்லாதவனாய் ஆத்மாவினிடத்து எந்தச் சுக முள்ளதோ அதைப் பெறுகிறான். அவன் ப்ரஹ்ம சமாதியிலே மனம் நிலைத்தவனாய் முடிவில்லாத சுகத்தை முழுவதும் வியாபிக்கிறான்; அதாவது, ஆத்ம சுகாநுபவரூபமாகவே யாகிறான் என்பது பொருள். ஆதலால், ஆத்மாவினிடத்துள்ள அழிவில்லாத இன்பத்தைத் தேடுபவன் க்ஷணப்பொழுது மாத்திரம் நிற்கும் வெளி விஷய சுகங்களினின்றும் இந்திரியங்களைத் திருப்பி இழுக்கவேண்டும் என்பது கருத்து."

(ஸ்ரீ) உலகத்திலுள்ள விஷயங்களில் ஆசையற்ற மனதையுடையவன் தன்னுடைய அந்தக்கரணத்தில் எந்தச் சுகமுண்டோ அந்தச் சுகத்தை யடைகிறான். ப்ரஹ்மத் தியானத்தில் மனதை யுடையவனானால், அவன் நாசமற்ற சுகத்தை யடைகிறான். என்றால், விஷயங்களில் ஆசையுள்ளவ

னுக்கு எப்போதும் மனதில் கவலை யுண்டாகிக்கொண்டே யிருக்கும். ஆசையற்ற மனதை யுடையவனுக ஆனுல் கவலையற்ற அந்தக்கரணத்தை யடைகிறுன். அப்படிக் கவலையற்றிருப்பதே சுகமல்லவா? ஆனுல்; இது அற்ப சுகமே. கவலையற்ற அந்த அந்தக்கரணம் ப்ரஹ்மத்தியானத்தில் நின்றுவிட்டால் நாசமற்ற மோக்ஷசுகம் கிடைக்குமென்பது. (21)

உஉ. யெ ஹி ஸம்ஸ்பர்ஶஜா ஹோகாஃ து:ஃவயோநய ஏவ தெ ।
ஆத்யந்தவந்தஃ கௌந்தெய ந தெஷு ரமதெ பு:ஃ ॥

22. யே-ஹி-ஸம்ஸ்பர்ஶஜா:-போகா:-து:கயோநய:-ஏவ-தே|
ஆத்யந்தவந்த:-கௌந்தேய-ந-தேஷு-ரமதே-புத:||

ஹி	ஏனென்றுல்,
ஸம்ஸ்பர்ஶஜாஃ ஹோகாஃ	(இந்திரிய) விஷயங்களின் சம்பந்தத்திஞலுண்டாகும் போகங்கள்
யெ	எவையோ
தெ	அவை
து:ஃவயொநய ஏவ	(இஹத்திலும், பரத்திலும்) துக்கத்திற்கே காரணமானவைகள்,
ஆத்யந்தவந்தஃ	ஆதி அந்தமுள்ளவைகள்;
ஹெ கௌந்தெய	ஓ! குந்தி புத்திரா!
பு:ஃ	ஞானி (உண்மை தெரிந்த விவேகி)
தெஷு ந ரமதெ	அவைகளில் ரமிக்கிறது இல்லை.

ஏனெனில், இந்திரியங்களும் அவைகளின் விஷயங்களாகிய ஓசை முதலியவைகளும் சம்பந்தப்படுவதிஞல் உண்டாகும் போகங்கள் எவையோ அவை (இந்த லோகத்தில் எப்படியோ அப்படியே பரலோகத்திலும்) துக்கத்திற்கே காரணமானவைகள். அல்லாமலும், அவை ஆதியும் அந்தமும் உடையவையுமாம்; அதாவது, அநித்தியமானவைகள், நிலையில்லாதவைகள். ஓ! குந்தி புத்திரா! உண்மையைக் கண்ட விவேகத்தோடுள்ள ஞானியானவன் அந்தப் போகங்களில் ரமிக்கமாட்டான், மகிழ்ச்சி அடையமாட்டான்.

(1) "ஸம்ஸ்பர்ஶஜா:=விஷயேந்திரிய சம்பந்தத்திஞ லுண்டான." (ராமாநுஜர்); இரண்டாவது அத்தியாயம், 14-வது சுலோ. "மாத்ராஸ்பர்ஶா" பார்க்க.

(சங்கர பாஷ்யம்) "இந்திரியங்களை அவைகளின் விஷயங்களினின்றும் இந்தக் காரணத்திஞலும் நிவிர்த்தித்தல்வேண்டும்; ஏனெனில்,

இந்திரியங்களும் அவைகளின் விஷயங்களும் சம்பந்தப்படுவதினால் உண்டாகும் போகங்கள் எவையோ அவை துக்கத்தை உண்டாக்குவனவேயாம். அவித்தையினால் உண்டானவை யாதலின் என்க. ஆத்யாத்மிகம் முதலிய துக்கங்கள் அந்த நிமித்தம் வருவனவாகவே காணப்படுகின்றனவன்றோ? அவற்றால் துக்கம் உண்டாவது இவ்வுலகத்தில் எப்படியோ அப்படியே பரலோகத்திலும் என்பது, 'ஏவ' சப்தத்தினால் தெரிய வருகின்றது. சம்ஸாரத்திலே சுகம் என்பதின் வாசனை மாத்திரம் கூட இல்லை என்று தெரிந்து விஷயங்களாகிய கானலினின்றும் இந்திரியங்களை நிவிர்த்தித்தல் வேண்டும். போகங்கள் துக்கத்தை உண்டாக்குவது மாத்திரமல்ல; அவை ஆதியும், அந்தமும் உள்ளவையாம். போகங்களுக்கு ஆதி என்பது, விஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப்படுவதுதான். இந்திரியம் அதன் விஷயத்தினின்று பிரிவது தான் அந்தப் போகங்களுக்கு முடிவு என்பது. இப்படி ஆதிக்கும் முடிவுக்கும் நடுவிலுள்ள நிமிஷ மாத்திரம் அவை உள்ளனவாதலால், அநித்தியமானவைகள். கௌந்தேய! பரமார்த்த தத்துவத்தை அறிந்து விவேகத்தோடிருப்பவன் அந்தப் போகங்களினால் மகிழ்ச்சி அடையமாட்டான். ஆடு மாடு முதலானவைகளைப் போன்ற தன்மையையுடைய முழு மூடர்களுக்கேயன்றோ விஷயங்களில் ருசி காணப்படுகின்றது. (22)

---

௨௩. 𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑍀𑌹𑍈𑌵 𑌯𑌃 𑌸𑍋𑌢𑍁𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌶𑌰𑍀𑌰𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 ।
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌵𑍇𑌗𑌂 𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌸𑍁𑌖𑍀 𑌨𑌰𑌃 ॥

23 சக்நோதி-இஹ(1)-ஏவ-ய:-ஸோடும்-ப்ராக்-சரீரவிமோக்ஷணாத் |
காமக்ரோதோத்பவம்-வேகம்-ஸ:-யுக்த:-ஸ:-ஸுகீ (2)-நர: ||

𑌯𑌃 𑌨𑌰𑌃	எந்த மனிதனானவன்
𑌇𑌹𑍈𑌵	இங்கேயே அல்லது உயிர் வாழும்பொழுதே
𑌶𑌰𑍀𑌰𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍	சரீரத்தை விடுவதற்கு முன்
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌵𑍇𑌗𑌂	காமம் (ஆசை) கோபம் இவைகளினாலுண்டாகும் வேகத்தை (விசையை)
𑌸𑍋𑌢𑍁𑌂	சகிப்பதற்கு
𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑍀	சக்தியுடையவனோ
𑌸𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃	அவன் யோகி,
𑌸𑌃 𑌸𑍁𑌖𑍀	அவன் சுகி

எந்த மனிதனானவன் இங்கேயே, அதாவது உயிர் வாழும்பொழுதே, சரீரத்தை விடுவதற்கு முன், காமம் (ஆசை) கோபம் என்றவற்றால் உண்டாகின்ற வேகத்தைச் சகிப்பதற்குச் சக்தியுடையவனாகிறானோ அந்த மனிதன் யோகியாம். அவன் இவ்வுலகத்தில் சுகியுமாம்.

---

(1) "இஹ=சாதனங்களை அநுஷ்டிப்பதற்கு அநுகூலமான பருவத்திலே". (ராமாநுஜர்).

(2) "ஸுகீ=ஆத்மாநுபவத்தினா லுண்டாகும் சுகத்தை யடைந்தவனாகிறான்." (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) "ஶ்ரேயோ மார்க்கத்திற்கு, அதாவது நல்ல கதிக்குத் தடையாகக் குறுக்கே நிற்கின்ற சத்துருவான, (காமம், கோபம் என்கிற) தோஷமொன்றுள்ளது. அது மிகப் பொல்லாதது; எல்லா அநர்த்தங்களையும் உண்டாக்குகின்றது; அதை ஒழித்துத் தள்ளுவது வெகு பிரயாசை. அதைப் பரிஹரிக்கும் விஷயத்திலே பலமான பிரயத்தனம் செய்யவேண்டுமென்று பகவான் சொல்லுகிறார். 'இஹைவ' என்றால் 'ஜீவித்திருக்கும்பொழுதே, உயிர் வாழும்பொழுதே, சரீரம் நீங்கிப் போவதற்கு முந்தி, அதாவது மரணம் வரையில்' என்று மரணத்தை எல்லையாகக் குறிப்பதனால், உயிர் வாழ்பவனுக்குக் காமம் கோபம் என்பவைகளால் உண்டாகும் வேகமானது தவறாமல் வரும் என்றும், அதற்குக் காரணங்கள் அளவற்றன என்றும், 'மரணக்ஷண பரியந்தம் காமத்தையும் கோபத்தையும் அடக்கிவிட்டோம்' என்று நம்பக்கூடாது என்றும் கருத்து. காமமென்பது, இந்திரியங்களால் உணரப்பெற்று இன்பத்தைத் தருவதாய் அநுபவிக்கப்பட்ட பிரியமான பொருள் ஒன்றைக் கேட்கும்பொழுதாவது, நினைக்கும்பொழுதாவது எந்த ஆசையானது அதன்மேல் செல்லுகின்றதோ அது. குரோதம் அல்லது கோபமென்பது, துன்பத்தை விளைவிப்பதாய், தனக்குப் பிரியமில்லாத வஸ்துக்களைப் பார்க்கும்பொழுதும், கேட்கும்பொழுதும், நினைக்கும்பொழுதும் எந்தத் துவேஷம் அல்லது வெறுப்பு அவற்றின்மேல் செல்லுகின்றதோ அது.

'இவற்றின் வேகம்' என்பது 'இவைகளினால் உண்டாகும் அந்தக்கரணத்தின் சஞ்சலம், மனக்கலக்கம்'. காமவேகத்திற்கு மயிர் சிலிர்த்தல், கண் மலர்ச்சி, மகிழ்ந்த முகம் முதலானவைகள் அறிகுறிகளாம். கோபத்தின் வேகத்திற்கு உடல் பதைப்பு, வியர்த்தல், உதட்டைக் கடித்தல், கண் சிவத்தல் முதலியன குறிகளாம், காமம் குரோதம் என்றனவற்றால்

பிறக்கின்ற அந்த வேகத்தை எவன் சகித்துக்கொள்ளக் கூடுமோ, அவற்றிற்கும் இடம் கொடாமல் அவைகளை ஜயிப்பவனெவனோ அம் மனிதன் யோகி; அவனே இவ் வுலகத்தில் சுகியுமாம்.''

(ஸ்ரீதரர்) ''பிராணவியோகமான பிறகு ஸ்திரீகள் ஆலிங்கனஞ்செய்வதினாலும், புத்திரன் தகனஞ் செய்வதினாலும், எப்படி மனோவிகாரமுண்டாகிறதில்லையோ, அதுபோல, உயிரோ டிருக்கையிலேயே தன் தேக விஷயமாயுண்டாகும் சுகதுக்கங்களிலும் விகாரமடையாம லிருக்கவேண்டு மென்பது கருத்து.'' (இதற்கு ஞானவாஸிஷ்ட சுலோகத்தை உதாகரிக்கிறார். அதாவது) ''ப்ராணே கதே யதா தேஹ: ஸுகம் து:கம் ந விந்ததி। ததா சேத் ப்ராணயுக்தோऽபி ஸ கைவல்யாஶ்ரமே வஸேத்॥''

(இராகவேந்திரர்) ''பசு பக்ஷி முதலிய தேகத்தை யடைந்தால் காமக்குரோதாதிகளை யடக்குவது சாத்தியமல்ல. ஆகையால், இந்த மனுஷ தேகத்தி லிருக்கையிலேயே அவற்றை அடக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. (23)

ஶ்லோ.

௨௪. யோऽந்த:ஸுகோऽந்தராராமஸ் ததாந்தர்ஜ்யோதிரேவ ய:।
ஸ யோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோऽதிகச்சதி॥

24. ய:-அந்தஸ்ஸுக:-அந்தராராம:(1)-ததா-அந்தர்ஜ்யோதி(2)-[ஏவ-ய:।
ஸ:-யோகீ-ப்ரஹ்மநிர்வாணம்(3)-ப்ரஹ்மபூத:-அதிகச்சதி॥

ய:	எவன்
அந்த:ஸுக:	(தனக்கு) உள்ளே (ஆத்மாவினிடத்தே) சுகமுடையவனாயும்,
ததா	அப்படியே
அந்தராராம:	உள்ளே (ஆத்மாவினிடத்தே) ரமிக்கிறவனாயும்,
ததா	அதுபோலவே
அந்தர்ஜ்யோதிரேவ	உள்ளேயே (ஆத்மாவினிடத்தே) பிரகாசத்தை உடையவனாயும்
ய:	எவன் இவ்விதமாக இருக்கின்றானோ
ஸ: யோகீ	அந்த யோகி
ப்ரஹ்மபூத:	(தானே) ப்ரஹ்மமாகி
ப்ரஹ்மநிர்வாணம்	ப்ரஹ்மானந்தத்தை
அதிகச்சதி	அடைகிறான்.

எவன் தனக்குள்ளே (அதாவது ஆத்மாவினிடத்தே) சுகத்தைக் காண்பவனும், அப்படியே தனக்குள்ளே (அதாவது ஆத்மாவினிடத்தே) ரமிக்கிறவனும் (விளையாடுகிறவனும்), அவ்வாறே தனக்குள்ளே (அதாவது ஆத்மாவினிடத்தே) பிரகாசத்தை உடையவனும், இவ்விதமாக எவன் இருக்கின்றானோ, அந்த யோகி தானே ப்ரஹ்மமாகி, ப்ரஹ்மாநந்தத்தை, அதாவது மோக்ஷத்தைப் பெறுகிறான்.

---

(1) "அந்தராராம:=தன் விளையாடல் ஆத்மாவினிடத்திலேயேயன்றி வெளிவஸ்துக்களிடத்திலுண்டாவதில்லை." (ஸ்ரீதரர்); "ஸுக:=பரமாத்மதரிசனம், ஸ்பரிசனம், ஸல்லாபம் முதலிய பலவிதமாயுண்டாக்கப்பட்ட, ஸுக:=சுகமுடையவன்." (மத்துவர்); "பகவத்தரிசனத்தினாலுண்டான சுகத்தையுடையவன்." (இராகவேந்திரர்)

(2) "அந்தர்ஜ்யோதி:= தனக்குள்ளே பிரகாசித்துக்கொண்டிருக்கிற பகவானாகிற ஜோதியையுடையவன்." (இராகவேந்திரர்)

(3) "ப்ரஹ்மநிர்வாணம் = தன்னுடைய ஆத்மாநுபவசுகத்தை." (ராமாநுஜர்). "ப்ரஹ்மத்தில் லயத்தை". (ஸ்ரீதரர்).

(4) "ப்ரஹ்மபூத:=ப்ரஹ்மத்தினிடத்தில் நிஷ்டையையுடையவனாய்." (இராகவேந்திரர்); "ஜீவன் முக்தனாய்." (ஸ்ரீதரர்).

(ஸூ.) இந்தச் சுலோகத்தில், எப்படிப்பட்டவன் ப்ரஹ்மத்தில் நிலைத்து, ப்ரஹ்மத்தை அடைகிறான் என்பது பகவானால் சொல்லப்படுகிறது. ஆத்மாவிலேயே சுகம், ரமித்தல், பிரகாசம் இவைகளை அநுபவிப்பவன் தானே ப்ரஹ்மம் என்பதாகத் தெளிந்து, இந்த உலகத்தில் உயிரோடிருக்கும்பொழுதே மோக்ஷத்தை அடைகிறான். சாதாரண ஜனங்களுக்குச் சுகம் முதலானவை வெளிவிஷயங்களிலிருந்து உண்டாகின்றனவல்லவா? [illegible] ||=நானே சுகம், வேறொன்றல்ல; வேறே (சுகம்) ஒன்று உண்டென்றால் அது சுகமல்ல. என் பிரயோஜனத்தின் பொருட்டன்றிப் பிரேமை என்பது கிடையாது. என்பொருட்டாக இருக்கிற அந்தப் பிரியமானது என்னுடைய சுவபாவமல்ல. (24)

---

௨௫. லபந்தே ப்ரஹ்மநிர்வாணம் ருஷய: க்ஷீணகல்மஷா: |
சிந்நத்வைதா யதாத்மாந: ஸர்வபூதஹிதே ரதா: ||

25. லபந்தே-ப்ரஹ்மநிர்வாணம்(1)-ருஷய: (2)-க்ஷீணகல்மஷா:|
சிந்நத்வைதா:(3)-யதாத்மாந:-ஸர்வபூதஹிதேரதா: ||

க்ஷீணகல்மஷா:	பாபங்களைப் போக்கடித்துக்கொண்டவராயும்,
சி²ந்நத்³வைதா⁴:	சம்சயம் அற்றவராயும்,
யதாத்மாந:	இந்திரியங்களை அடக்கினவராயும்
ஸர்வபூ⁴தஹிதே ரதா:	சகலப் பிராணிகளுக்கும் ஹிதந்தையே கோரினவராயுமிருக்கிற
ருஷய:	ரிஷிகள் (ஞானிகள்)
ப்³ரஹ்ம நிர்வாணம் லப⁴ந்தே	ப்ரஹ்மாநந்தத்தை (மோக்ஷத்தை) அடைகிறார்கள்.

பாபங்களையும் சம்சயத்தையும் நிவர்த்தித்துக்கொண்டும், இந்திரியங்களைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டும், சகலப் பிராணிகளுக்கும் ஹிதத்தையே கோரிக்கொண்டும், அதாவது ஒருவருக்கும் ஹிம்ஸை செய்யாது மிருக்கிற ரிஷிகள், ஞானிகள் ப்ரஹ்மாநந்த (மோக்ஷ)த்தை அடைகிறார்கள்.

(1) "ப்ரஹ்ம நிர்வாணம் = தன்னுடைய ஆத்மாநுபவ சுகத்தை." (ராமாநுஜர்); 'ப்ரஹ்மத்தினால் கொடுக்கப்பட்ட சுகத்தை." (மத்துவர்);"பிராகிருத சரீரமில்லாத ப்ரஹ்மத்தை,"(இராகவேந்திரர்).

(2) "ருஷய:=உள்ளதை உள்ளபடி காணும் சந்யாஸிகள்." (சங்கரர்); "ஆத்மதரிசன முள்ளவர்கள்." (ராமாநுஜர்).

(3) "சி²ந்நத்³வைதா⁴:=சீதோஷ்ணாதி த்வந்த்துவங்க ளற்றவர்களெனினும் பொருந்தும்." (ராமாநுஜர்); "சி²ந்நத்³வைதா⁴யதாத்மாந:=சி²ந்நத்³வைதா⁴:=சமுசயம், விபரீதஞான மிவைகள் அற்றவர்களாயும், ஆயதாத்மாந:=விசாலமான மனதையுடையவர்களாயு மிருக்கிறவர்கள்." (மத்துவர்); "மன சுவாதீன முடையவர்கள்." (இராகவேந்திரர்). (25)

உ௬. காமக்ரோத⁴வியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம் |
அபி⁴தோ ப்³ரஹ்மநிர்வாணம் வர்ததே விதி³தாத்மநாம் ||

26. காமக்ரோத வியுக்தாநாம்-யதீநாம்(1)-யதசேதஸாம்|
அபிதः(2)-ப்ரஹ்மநிர்வாணம்-வர்த்ததே-விதிதாத்மநாம்(3)||

காமக்ரோத⁴வியுக்தாநாம்	ஆசை கோபங்கள் நீங்கினவராயும்,
யதசேதஸாம்	மனதை யடக்கினவராயும்,
விதி³தாத்மநாம்	ஆத்மாவை அறிந்தவராயுமிருக்கிற
யதீநாம்	யதி (சகல கர்மங்களையும் விட்ட ப்ரஹ்ம நிஷ்டர்) களுக்கு

ப்ரஹ்ம நிர்வாணம் ப்ரஹ்மாநந்தம் அதாவது மோக்ஷம்
அபித: { இருவகையிலும் அதாவது ஜீவித்திருந்தாலும் இறந்துபோனாலும்
வர்த்ததே இருக்கின்றது.

ஆசை கோபங்கள் இல்லாதவராய், மனதை யடக்கி, ஆத்மதத்துவத்தை யறிந்தும் சகல கர்மங்களும் விட்டுப்போனவராயு மிருக்கிற ப்ரஹ்ம நிஷ்டர்களான யதிகளுக்கு ப்ரஹ்மாநந்தம், மோக்ஷம் எவ்விடத்திலு மிருக்கின்றது.

(1) "யதீநாம்=முயற்சி செய்கிறவர்களுக்கு." (இராகவேந்திரர்).

(2) "அபித:=எவ்விடத்திலும்." (மத்துவர்); "எந்தக் காலத்திலும், இடத்திலும்." (ராமாநுஜர்).

(3) "விதிதாத்மநாம் = விஜிதாத்மநாம்-என்று பாடம் — மனதை ஜயித்தவர்கள்." (ராமாநுஜர்). (26)

உஎ. ஸ்பர்சாந் க்ருத்வா பஹிர்பாஹ்யாம் ச்சக்ஷுச்சைவாந்தரே [ப்ருவோ: ।
ப்ராணாபாநௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்யந்தரசாரிணௌ ॥

உஅ. யதேந்த்ரிய மநோபுத்திர் முநிர்மோக்ஷபராயண: ।
விகதேச்சாபயக்ரோதோ ய: ஸதா முக்த ஏவ ஸ: ॥

27. ஸ்பர்சாந்-க்ருத்வா-பஹி:-பாஹ்யாந்-சக்ஷு:-ச-ஏவ-
[அந்தரே(1)-ப்ருவோ:।
ப்ராணாபாநௌ-ஸமௌ-க்ருத்வா-நாஸாப்யந்தரசாரிணௌ॥

28. யதேந்த்ரிய மநோபுத்தி:-(2) முநி:-மோக்ஷபராயண: ।
விகதேச்சாபயக்ரோத:-ய:-ஸதா-முக்த:-(3)-ஏவ-ஸ:॥

பாஹ்யாந் ஸ்பர்சாந் வெளியிலுள்ள சப்தாதி விஷயங்களை
பஹி: க்ருத்வா வெளியே நிறுத்தி,
ப்ருவோ:அந்தரே ச ஏவ புருவங்களின் மத்தியிலேயே
சக்ஷு: க்ருத்வா கண்களை நிறுத்தி,
நாஸாப்யந்தரசாரிணௌ { மூக்கின் வழியாகச் சஞ்சரிக்கிற
ப்ராணாபாநௌ பிராண அபான வாயுக்களை
ஸமௌ க்ருத்வா சமமாகச் செய்து
யதேந்த்ரிய மநோ புத்தி: { இந்திரியங்கள் - மனம் - புத்தி இவைகளை யடக்கி,

விகதேச்சாபயக்ரோத:	ஆசை, பயம், கோபம் இவைகளை விட்டு
மோக்ஷபராயண:	மோக்ஷத்தையே நல்ல கதியாகக் கொண்ட
முநி: ய:	(பகவானைத் தியாநம் செய்துகொண்டிருக்கிற) முநி எவனோ
ஸ:	அவன்
ஸதா	எப்பொழுதும்
முக்த ஏவ	முக்தனே (விடுபட்டவனே) தான்.

இந்திரியங்களின் விஷயங்களாகிய வெளியிலுள்ள ஓசை முதலியவற்றை உள்ளே புத்திக்குள் பிரவேசிக்காமல் வெளியே நிறுத்தி, புருவங்களுக்கு மத்தியிலே கண்களை (அதாவது, கண்களின் பார்வையை,) நிறுத்தி, மூக்கின் வழியாக உள்ளேயும் வெளியிலும் போகும் மூச்சுக்களாகிய ப்ராணன் அபானன் என்னும் வாயுக்களைச் சமமாக நிறுத்தி, இந்திரியங்கள் - மனம் - புத்தி இவைகளை அடக்கி, ஆசை - பயம்- கோபம் இவைகளை விட்டு, மோக்ஷத்தையே சிரேஷ்டமான கதியாக நம்பி, பகவானை எப்பொழுதும் மநநம் செய்துகொண்டிருக்கும் முநி எவனோ அவன் முக்தனேதான், அதாவது ஜநந மரணத்திலிருந்து விடுபட்டவன்தான்.

---

(1) "அந்தரே ப்ருவோ: = என்பதற்கு "நாஸிகாக்ரே, மூக்கு நுனி," என்று ராமாநுஜர் அர்த்தம் செய்கிறார். மூக்கு நுனி—'நுனி' என்பது புருவத்திற்குச் சமீபத்தில் சிறுத்திருக்கிற பாகமென்றும், அல்லது இதை அடியாக வைத்துக்கொண்டால், மற்றொரு முனையாயிருப்பதற்கு நுனி என்றும் சொல்லலாம். ஆனால், புருவத்தின் மத்தியென்று இந்தச் சுலோகத்திலிருக்கிறதினாலும், அதற்கே-நாஸிகாக்ரே என்று ராமாநுஜர் அர்த்தஞ் செய்திருக்கிறதினாலும், மூக்கு நுனி புருவத்திற்குச் சமீபத்தில் சிறுத்திருக்கிற பாகமென்றுதான் அர்த்தமாகிறது. 6-வது அத். 13, 8-வது அத் - 10 - இந்தச் சுலோகங்களையும் பார்க்க.

(2) "யதேந்த்ரியமனோபுத்தி:—ஆத்மதரிசனத்தின் பொருட்டு இந்திரியம், மனம், புத்தி இவைகளையடக்கி" என்றும்; "முநி" என்பதற்கு, "ஆத்மதரிசனத்திலேயே விருப்பவன்" என்றும்; "ஸதா" என்பதற்கு, சாதனாநுஷ்டான சமயத்திலும்" என்றும் ராமாநுஜர் அர்த்தம் செய்திருக்கிறார்.

(3) "முக்த:—முக்தன்போலுள்ளவனே; அதாவது, காமக்ரோதாதிகளிலிருந்து விடுபட்டவனானதினாலே முக்தனுக்குச் சமானமானவன்." (ராகவேந்திரர்).

(சங்கரர்) "ஸம்யக் தரிசன நிஷ்டையுள்ள, அதாவது நல்லறிவின் மேல் நிலைத்து நிற்கும் ஸந்யாஸிக்கு, ஸத்யோமுக்தி அதாவது உடனே மோக்ஷம் கிடைக்குமென்றும், ஈசுவரனுக்கே அர்ப்பிக்கப்பட்ட தேகேந்திரியாதிகள் முதலான எல்லாவற்றின் செய்கையோடு, ஈசுவரனை ப்ரஹ்மத்தினிடத்து வைத்துச் செய்கின்ற கர்மயோகிக்குக் கிரமமுக்தி படிப்படியாய், அதாவது முதலில் சத்வசுத்தி - அதாவது மனம் பரிசுத்தமாதல், பிறகு ஞானமடைதல், பிறகு சர்வகர்ம சந்யாஸம் இவ்விதம் முறைமைப்படி கடைசியாக முக்தி கிடைக்கின்றது என்பதைப் பகவான் அடிக்கடி சொல்லியுமிருக்கிறார்; இனியும் சொல்லப்போகிறார். இப்பொழுது, மெய்யறிவுக்கு அந்தரங்க சாதனமான தியானயோகத்தை விஸ்தரித்துச் சொல்ல உத்தேசித்து அதற்குச் சூத்ரம் போன்ற இச் சுலோகங்களை உபதேசிக்கிறார்.

"ஓசைமுதலிய விஷயங்கள், செவிமுதலியவற்றின் வழியாக உள்ளே புத்தியில் பிரவேசிக்கும்படி செய்யப்படுகின்றன. இந்தச் சப்தம் முதலிய வெளி விஷயங்களை நினையாதவனுக்கு, ஓசைமுதலிய வெளி விஷயங்கள், வெளியிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை இவ்வாறு நிறுத்தி, கண்களையும் இரண்டு புருவத்தின் மத்தியிலே 'க்ருத்வா' 'நிறுத்தி' என்று சேர்த்துக்கொள்ளவும். இதில் சொல்லப்பட்டிருக்கிற நிலையிலேயே உடம்பை நிறுத்தியுள்ள சந்யாஸி மோக்ஷத்தையே மேலான கதியாகக் கொண்டவனாய்ப் பகவானை இடைவிடாது நினைப்பவனாவான். எவன் இப்படிப்பட்ட சந்யாஸியோ அவன் முக்தன் விடுபட்டவன்தான். மோக்ஷத்திற்காக அவனால் செய்யவேண்டியது வேறொன்றுமில்லை."

(ஷூரா) ஸ்ரீதர ஸ்வாமிகளுடைய வியாக்கியானத்தை ஆதாரமாய்க் கொண்டு இந்தச் சுலோகங்களிலுள்ள அடியில் விவரித்த பதங்களுக்கு விரிவாய் அர்த்தம் எழுதப்படுகிறது. "வெளியிலுள்ள விஷயங்களை வெளியில் தள்ளி" என்றால், இந்திரியங்களுக்குப் புலப்படுவதாகிய சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களும் இவைகளையுடைய வஸ்துக்களுந்தான் விஷயங்களென்று சொல்லப்படுகின்றன. இந்த விஷயங்களை இந்திரியங்கள் கிரகித்துக்கொண்டுபோய் மனதினிடத்தில் சேர்க்கின்றன. மனம் அந்த விஷயங்களைப் புத்தியினிடத்தில் சேர்க்கிறது. ஆத்மா அதன் உபாதியாகிய புத்தி முதலானவைகளின் மூலமாய் அந்த விஷயங்களைக் கிரகித்தானானால் அவைகளினால் உண்டாகிற சுகதுக்கங்களை ஆத்மா அடைகிறான்; அந்தச் சுகதுக்கங்களை ஆத்மா கிரகித்துக்

கொண்டிருக்கிறவரையிலும் நிஷ்டை செய்ய யோக்கியனாகமாட்டான். ஆகையினாலேயே தேகத்திற்கு வெளியிலிருப்பதாகிய விஷயங்களை வெளியிலிருந்து தன்னிடத்திற்குக் கொண்டுவந்து சேர்க்க இடம் கொடாமல், வெளியிலேயே தள்ளிவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. தன் சமீபமாக வந்துவிட்ட விஷயங்களை யநுபவிக்காமலே தள்ளிவிடுவதற்கு நல்ல ஞானி தகுந்தவனானாலும் யோகாப்பியாசி தகுந்தவனல்ல. ஆகையால், அவனுக்கு உபாயம் இந்தச் சுலோகத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, விஷயங்களை எதெது தன்னிடம் கொண்டுவந்து சேர்க்கிறதோ அந்தப் புத்தி, மனம், இந்திரியங்களை அடக்குவதுதான். இவைகளில் முதலில் அடக்கவேண்டியது இந்திரியங்கள் தான். ஏனென்றால், அவைகள்தான் முதலில் விஷயங்களைக் கிரகிக்கின்றன. அப்பியாசத்தினால் முதலில் இந்திரியங்களையும், பிறகு மனதையும், பிறகு புத்தியையும் கிரமமா யடக்குதல்வேண்டும். இவைகள் அடங்கிவிட்டால் சுகதுக்காதிகள் ஆத்மாவுக்கு உண்டாக ஹேதுவே யில்லை. இந்திரியங்களில் பிரதான இந்திரியங்களாகிய கண், மூக்கு, வாய்களை அடக்கும் மார்க்கமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், கண்களை மூடிக்கொண்டால் தூக்கம் வரும், திறந்திருந்தால் விஷயங்களைக் கிரகிக்குமாகையால், அரைக்கண்கள் மூடியும், அரைக்கண்கள் திறந்து மிருக்கும்படி செய்து, அவைகளின் பார்வையைப் புருவங்களின் மத்தியில் நிறுத்தும்படிக்கும், பிராண அபான வாயுக்கள் மூலமாய் மூக்கு வாசனை முதலியவைகளைக் கிரகிக்கிறபடியால் அந்த வாயுக்களை வெளியிலும், உள்ளேயும் அதிகமாய்ச் சஞ்சரிக்கவிடாமல் மூக்குக்குள்ளாகவே அடக்கும்படிக்கும், (ஏனென்றால், அப்படி வாயுக்களை முழுதும் அடக்கிவிட்டால் பிராணன் நிற்கமாட்டாதாகையாலும், முழுதும் விட்டும் இழுத்தும் வந்தால் வாசனை முதலியவைகளைக் கிரகித்துக்கொண்டுவருமாகையாலும்தான்.) மௌநம் = மௌனமானது வாக்கு, நாக்கு இவைகளின் பிரவிருத்தியைத் தடுக்குமாகையால் மௌனத்தினால் வாக்கை நிறுத்தும்படிக்கும் சொல்லப்பட்டது.

(27-28)

உ௯. போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதானாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம்ருச்சதி ॥

29. போக்தாரம்-யஜ்ஞதபஸாம்-ஸர்வலோக மஹேச்வரம் ।
ஸுஹ்ருதம்-ஸர்வபூதாநாம்-ஜ்ஞாத்வா-மாம்-சாந்திம்-ருச்சதி ॥

யஜ்ஞ தபஸாம்	யக்ஞும், தபசு இவைகளை
போக்தாரம்	அனுபவிக்கிறவனையும்,
ஸர்வலோக மஹேச்வரம்	ஸகல லோகங்களுக்கும் மேலான ஈசுவரனையும்,
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்	ஸகலப் பிராணிகளுக்கும் தோழனையும்
மாம்	என்னை
ஜ்ஞாத்வா	அறிந்து (இருக்கிறவன்)
ஶாந்திம்	சாந்தியை (மோக்ஷத்தை)
ருச்சதி	அடைகிறான்.

யஜ்ஞும், தபசு இவைகளை அனுபவிக்கிறவனையும் ஸகலலோகங்களுக்கு மேலான ஈசன் (எஜமானன் அல்லது பிரபு) ஆயும், ஸகலப் பிராணிகளுக்கும்பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரம் செய்யும் தோழனையும் என்னை யெவன் அறிகிறானோ, அவன் மோக்ஷத்தை யடைகிறான்.

(சங்கரர்) "இவ்விதமாக, மனதை ஒரு நிலையில் நிறுத்தி ஸமாதியோடு கூடியவன் எதை அறியவேண்டியது?" தியான யோகத்தில் அவன் தியானிக்கத் தக்கது யாது? என்பதை பகவான் இதில் சொல்லுகிறார்.

நாராயணனாகிய நான்தான் யஜ்ஞங்களையும், தவங்களையும், அவற்றைச் செய்யும் கர்த்தாவாகவும், அவைகளினால் ஆராதிக்கப்படும் தேவதையாகவும் அநுபவிப்பவன்; எல்லா உலகங்களுக்கும் மேலான ஈசுவரன்; பதில் உபகாரத்தை விரும்பாமல், ஸகல பிராணிகளுக்கும் உபகாரம் செய்யும் நண்பன்; ஸகல பூதங்களினுடைய ஹிருதயத்தினுள் வஸிப்பவன்; ஸகல கர்மங்களுடைய பயன்களுக்கும் தலைவன்; அதாவது. அப் பயன்களை மேல் பார்த்துப் பகிர்ந்து கொடுப்பவன். எல்லா அறிவுக்கும் சாக்ஷி; அதாவது, அறிவுக்கும் அறிவானவன் என்று நாராயணனாகிய என்னை அவன் இவ்வாறு தெரிந்துகொண்டு, சாந்தியைப் பெறுகிறான்; அதாவது, ஸம்ஸாரம் முழுதும் ஒழிந்திடுதலாகிய மோக்ஷத்தை அடைகிறான்."

(ராமாநுஜர்) "நான் ஸகல லோகங்களுக்கும் ஈசனென்றும் ஸகல பிராணிகளுக்கும் சுகிருத்தென்றும் அறிந்து கர்மயோகம் செய்வதிலேயே சுகத்தை யடைகிறான்."

(ஸ்ரீ) யஜ்ஞும், தபசு இவைகளின் பலனை, தான் அனுபவிக்கிறதாகப் பகவான் சொன்னதின் கருத்து என்னவென்று மத்வாசாரி

யர் அபிப்பிராயத்தை அனுசரித்து அடியில் விவரமாய்ச் சொல்லப்படு கிறது. அதாவது, "ஸர்வப் பிராணிகளுக்கும் ஈசனான பரமாத்மாவான வர், அவர் அதீனர்களாகிய ஜீவர்கள் செய்கிற யஜ்ஞ தபசுகளின் பூர்ண மான பலன்களில் அந்தந்த ஜீவ சுவபாவத்திற்குத் தகுந்தபடி அவர்களுக்கு எவ்வளவு கிடைக்கத் தகுமோ அவ்வளவை அவர்களுக்குக் கொடுத்து மிச்சத்தை ஈசுவரனே யனுபவிக்கிறார். அஃது எப்படியென்றால், இராஜா வினால் அந்நிய தேசத்திற்கு யுத்தத்தின் பொருட்டு அனுப்பப்பட்ட சேனைத்தலைவன் அவ்விதமாகப் போய்த் தேசத்தை ஜயித்துச் சம்பாதித் துக் கொண்டுவந்த பொருள்களை முழுதும் அந்த இராஜாவே புசிக்கிறான். ஆனால், அந்தச் சேனாதிபதி முதலியவர்களில் அவரவர்களின் யோக்கிய தாநுசாரமாய் அந்தப் பொருளில் சில பாகம் அவர்களுக்குக் கொடுப்பது போல, ஜீவனுக்குச் சொற்ப பலனை ஈசுவரன் கொடுக்கிறார்" என்பது கருத்து. (29)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
கர்மஸந்யாஸயோகோ நாம
பஞ்சமோऽத்யாய:

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துகளாக, ப்ரஹ்ம வித்தையாக,
யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந
ஸம்வாதத்திலே கர்ம ஸந்நியாஸயோகம் என்னும்
ஐந்தாம் அத்தியாயம்
முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁

𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌰𑌂𑌭𑌃

[𑌧𑍍𑌯𑌾𑌨 𑌯𑍋𑌗𑌃]

ஆறாவது அத்தியாயம்

[தியானயோகம்]

[𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚]

க. 𑌅𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃।
𑌸 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌚 𑌯𑍋𑌗𑍀 𑌚 𑌨 𑌨𑌿𑌰𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌨 𑌚𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌃॥

1. அநாஶ்ரித:-கர்மபலம்-கார்யம்-கர்ம-கரோதி-ய: ।
ஸ:-ஸந்யாஸீ-ச-யோகீ-ச-ந-நிரக்நி:-ந-ச-அக்ரிய: ॥

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚	ஸ்ரீ பகவான் அருளியது:
𑌯𑌃	எவன்
𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌅𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃	கர்மபலனை அபேக்ஷியாதவனாய்
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮	செய்யவேண்டிய கர்மத்தை
𑌕𑌰𑍋𑌤𑌿	செய்கிறானோ
𑌸𑌃	அவன்
𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌚	சந்நியாசியும்
𑌯𑍋𑌗𑍀 𑌚	யோகியும்
(𑌭𑌵𑌤𑌿)	ஆகிறான்;
𑌨𑌿𑌰𑌗𑍍𑌨𑌿𑌃	அக்நி இல்லாதவன்
𑌨	அல்ல
𑌅𑌕𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚	கர்மமில்லாதவனும்
𑌨	அல்ல.

[ஸ்ரீ பகவான் அருளியது]

கர்மபலனில் அபேக்ஷை வைக்காதவனாய்ச் செய்யவேண்டிய (நித்திய நைமித்திக) கர்மத்தை எவன் செய்கிறானோ, அவன் சந்நியாசி, அவன் யோகி. அக்நி யில்லாதவனாயும், அதாவது கர்மத்திற்குத் துணையான தக்ஷிணாக்னி முதலிய அக்னி நீங்கினவனாயும், கர்ம மில்லாதவனாயும், அதாவது

அக்நி ஸாதனமில்லாத மற்ற தானம், தபஸ் முதலிய கர்மங்களை விட்டவனு யுமிருப்பவன்தான் ஸந்யாஸியும் யோகியும் ஆகிறான் என்பது அல்ல.

(சங்கர பாஷ்யம்) "முன் ஐந்தாம் அத்தியாயத்தின் முடிவிலே, உண்மையான ஞானத்தைப் பெறுவதற்கு அந்தரங்க ஸாதனமான தியான யோகம் ஸூத்திரம் போன்ற ஐ அத்-27-29-ம் சுலோகங்களில் உபதேசிக்கப்பட்டது.

அதையே விரிவாகச் சொல்லும் வியாக்யானம்போல் உள்ளது இப்பொழுது தொடங்கப்படும் இந்த ஆறும் அத்தியாயம். இனி, கர்மமானது, தியான யோகத்திற்குப் பகிரங்க ஸாதனமாதலால், கர்மத்திற்கு உரிய கிருஹஸ்தன், தியானயோகத்தைச் செய்வதற்குச் சமர்த்தனுகும் வரையில் கர்மத்தைச் செய்யவேண்டும் என்பதை உத்தேசித்து, பகவான் இவ்வாறு கர்மத்தை ஸ்துதிக்கின்றார். அதாவது, ஸந்யாஸியாகவும், யோகியாகவு முள்ளவன், கேவலம் அக்நியும் கர்மமு மில்லாதவன் மாத்திரமல்ல, கர்மத்தையுடையவனும்கூடக் கர்மத்தின் பலனிலே பற்றை விட்டுச் சித்தசுத்திக்காகக் கர்ம யோகத்தை அனுஷ்டிப்பவனாய், ஸந்யாஸியும், யோகியு மாகிறான் என்று கொண்டாடப்படுகின்றதே ஒழிய, உண்மையான ஸந்யாஸிக்கு அக்நியும் கர்மமும் இல்லை என்பதை மறுதளிப்பதாகக் கொள்ளுதல் கூடாது: ஏனெனில், அக்நியும் கர்மமு மில்லாத பரமார்த்த ஸந்யாஸிக்குச் சுருதிகளிலும், ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும், இதிஹாஸங்களிலும் யோக சாஸ்திரங்களிலும், ஸந்யாஸி நிலையையும், யோக நிலையையும், தெளிவாக விதிக்கப்பட்டிருப்பதைப் பகவான் மறுக்கமாட்டார். அன்றியும், பகவானே "ஸர்வகர்மாணி மநஸா ஸந்ந்யஸ்ய... நைவ குர்வந் ந காரயந் ஆஸ்தே", (5-ம் அத்-13-ம் சுலோ), "மௌநீ... ஸந்துஷ்டோ யேந கேநசித்" (12-ம் அத்-19-ம் சுலோ.) "விஹாய காமாந் ய: ஸர்வாந்" (2-ம் அத்-71-ம் சுலோ.), "ஸர்வாரம்ப பரித்யாகீ" (12-ம் அத்-16-ம் சுலோ.), என இவ்வாறு கீதையில் சொல்லியிருக்கிறார். நான்காவது ஆச்ரமத்தை மறுத்தல் அவ் வாக்கியங்களுக்கு விரோதமாகும். ஆகவே, கிருகஸ்த நிலையை அடைந்தவனாய், யோகத்தைக் கூடுவதிலே கருத்துடைய முனிவனுக்குப் பயனை வேண்டாது அநுஷ்டிக்கப்படும் அக்நிஹோத்ரம்முதலிய கர்மமானது, தியானயோகத்தைக் கூடுவதற்குச் சாதனமாவதை, சித்தசுத்தி வழியாகப் பெறுகின்றதாதலின் அப்படிப்பட்டவனை ஸந்யாஸி யென்றும், யோகி யென்றும் ஸ்துதிக்கப்படுகிறது.

அநாஸ்ரித: — என்றால், சார்ந்திடாதவன்; எதைச் சார்ந்திடாதவன் என்றால், கர்மத்தின் பயனை; அதாவது, கர்மத்தின் பயனிலே ஆசை யில்லாதவன். எவன் கர்மத்தின் பலனிலே ஆசை யுடையவனோ அவன் கர்ம பலனை ஆசிரயித்தவ னாகிறான். இவனோ அவனுக்கு எதிரிடையான வன். எவனொருவன் இவ்வாறு கர்மத்தின் பலனை வேண்டாதவனாய் காமிய கர்மத்திலிருந்து மாறுபட்டதும், அவசியம் செய்யவேண்டியது மான அக்நிஹோத்ரம்முதலிய நித்திய கர்மத்தைச் செய்து முடிக்கின்றானோ, இப்படிப்பட்ட அந்தக் கர்மி, மற்றக் கர்மிகளைக் காட்டிலும் மேலானவன் என்கிற இந்தத் தாத்பரியத்தைக் காட்டும்பொருட்டு 'அவன் ஸந்யாஸியும், யோகியுமாகிறான்' என்று சொல்லப்பட்டது. ஒழிவு எவனுக்கு உள்ளதோ அவன் ஸந்யாஸி. சித்த ஸமாதானம் எவனுக்கு உள்ளதோ அவன் யோகி. மேற்சொன்ன இவன் இவ்வித குணமுள்ளவன் எனக் கொள்ளல் வேண்டும். 'கேவலம் அக்நியில்லாதவனாயும் கர்மமில்லாதவனாயும் இருப்பவன் மாத்திரமே ஸந்யாஸியும் யோகியு மாகிறான்' என்று கொள்ளுதல் கூடாதென்பது இந்தச் சுலோகம் இரண்டாவது பாதத்தின் தாத்பரியம். கர்மங்களுக்கு அங்க பூதங்களாகிய தக்ஷிணாக்நி முதலிய அக்நிகள் எவனிடத்திலின்று போய்விட்டனவோ அவன் அக்நி யில்லாதவன். அக்நியை ஸாதநமாக வுடையவை அல்லாத தபஸ், தானம் முதலிய கர்மங்கள் எவனுக்கு இல்லையோ அவன் கர்ம மில்லாதவன்." (அக்நியை ஸ்வர்க்க ஸாதனமாக கடோபநிஷத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்க).

(ஸூ) ஞானம் அடைகிறதற்கு முந்தி அக்நிஹோத்திரம், வைசுவ தேவம் முதலிய கிரியைகளை விடுதல் கூடாது; ஏனென்றால், ப்ராம்மண க்ஷத்திரிய வைசியர்களுக்கு அவைகள் அவசியமென்று விதிக்கப்பட்டிருக்கின்றன. "அக்நிர்தேவோ த்விஜாதீநாம் முநீநாம் ஹ்ருதி தைவதம் । ப்ரதிமாஸ்வல்பபுத்தீநாம் ஸர்வத்ர ஸமதர்சிநாம்" — "துவிஜர்களுக்கு (பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களுக்கு) த் தெய்வம் அக்நி யில்லா முனிவர்களுக்குத் தெய்வம் ஹிருதயத்தில், அஞ்ஞானிகளுக்கு (ஆத்மஞான மில்லாதவர்களுக்கு)த் தெய்வம் பிரதிமைகளில், சமதிருஷ்டியுள்ளவர்களுக்கு எங்கும் தெய்வம்" என உத்தரகீதையில் சொல்லியிருப்பதைப் பார்க்க. ஆகையால், துவிஜர்கள் ஞான மடைவதற்கு முந்தி அக்நியைக் கர்மாங்கபூதமாக வைத்துச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்யாவிட்டால், அதனால் கெடுதி யடைவார்களே யன்றி ஸந்யாஸி யாக மாட்டார்கள். (1)

௨. யம்ஸந்ந்யாஸமிதி ப்ராஹுர்யோகம் தம் வித்தி பாண்டவ । *
ந ஹ்யஸந்ந்யஸ்தஸங்கல்போ யோகீ பவதி கச்சந ॥

2. யம்-ஸந்யாஸம்-இதி-ப்ராஹு:-யோகம்(1)-தம்-வித்தி-பாண்
ந-ஹி-அஸந்யஸ்தஸங்கல்ப:-யோகீ-பவதி-கச்-சந॥ [டவ।

ஹே பாண்டவ	ஓ! அர்ஜுனா!
யம்	எதை
ஸந்ந்யாஸமிதி	ஸந்நியாஸமென்று
ப்ராஹு:	சொல்லுகிறார்களோ
தம்	அதை
யோகம்	யோகமாக
வித்தி	அறி;
ஹி	ஏனென்றால்,
அஸந்ந்யஸ்த ஸங்கல்ப:	ஸங்கல்பத்தை (எண்ணங்களை) விட்டொழியாத
கச்சந	ஒருவனும்
யோகீ	யோகியாக
ந பவதி	ஆகிறதில்லை.

ஓ! அர்ஜுனா! எதை ஸந்ந்யாஸமென்று சொல்லுகிறார்களோ அதுவே யோகமென்று அறி. ஏனென்றால், ஸங்கல்பத்தை அதாவது,பலனைப்பற்றிய விருப்பத்தை விடாத ஒருவனும் யோகியாக ஆகிறதில்லை.

'ஸந்ந்யாஸ இதி' என்றும் பாடம். "ஞானயோகமென்று அர்த்தம்." (ராமானுஜர்) "காமக்குரோதாதிகளை விடுவது." (இராகவேந்திரர்).

(1) "யோகம் = தியானயோகத்திற்குக் காரணமானவும், காமக்குரோதாதிகளை விட்டுச் செய்யப்படுகிறவுமான கர்மயோகத்தில் அடங்கியிருக்கிறதாக அறி." (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்)"அக்நியில்லாதவனும் கர்மமில்லாதவனுமிருப்பவன்தான் ஸந்யாஸியும், யோகியு மாகிறான்' என்பது சுருதி ஸ்மிருதி யோக சாஸ்திராதிகளில் பிரஸித்தமாயிருக்க, 'அக்நியை யுடையவனும் கர்மத்தையுடையவனுமிருப்பவன்கூட, ஸந்யாஸியும் யோகியும் ஆகிறான்' என்று அப்பிரஸித்தமானதைச் சொல்லுவது கிரமமா?, என்றால் கர்ம பலனில் விருப்பத்தை விட்டுவிடுவதால் ஸந்யாஸியாத லென்பதும்

தியான யோகத்திற்குச் சாதநமாகக் கர்மங்களை அநுஷ்டித்தலாலும், சித்தம் அலைவதற்குக் காரணமான கர்மத்தின் பலனிலேயுள்ள எண்ணத்தை ஒழித்தலாலும் யோகியாதல் என்பதும் ஒருவித உபசார வழக்கினல் அவ் விரண்டையும் ஏற்றிக் கூறவேண்டும் என்னும் கருத்தால் என்க. மற்று, கர்மயோகியானவன் முதன்மையான சந்யாஸியும் முதன்மையான யோகியு மாகிறுன் என்பது கருத்தன்று, என்கிற இந்தத் தாத்பரியத்தை உணர்த்தும்பொருட்டுப் பகவான் இந்தச் சுலோகத்தை அருளிச்செய்கிறுர்.

சுருதிகளையும், ஸ்மிருதிகளையும் அறிந்தவர்கள் ஸகல கர்மங்களையும், அவற்றின் பயன்களையும் விட்டுவிடுதலாகிய எதை உண்மையான சந்யாஸ மென்கிறுர்களோ அந்தப் பரமார்த்த ஸந்யாஸமே, கர்மங்களை அநுஷ்டித்தலாகிய யோகமென்று அறியத்தக்கதாகப் பகவானுல் சொல்லப்படுகிறதே? அப்படியானுல் கர்மத்தை அனுஷ்டிப்பதாகிய, கர்மயோகத்திற்கு அதன் எதிரிடையான கர்மத்தை விட்டுவிடுவதாகிய நிவிருத்தி லக்ஷணத்தோடு கூடிய பரமார்த்த ஸந்யாஸத்தோடு எவ்வித ஸமத்துவ மிருப்பதாக அங்கீகரித்து, ஸந்யாஸத்தின் தன்மையானது அதற்குக் கூறப்படுகின்றது என்பதை யோசிக்குமிடத்து, கர்த்தா அதாவது செய்பவன் வழியாய், கர்மயோகத்திற்குப் பரமார்த்த ஸந்யாஸத்தோடு ஒப்புமையானது இருக்கின்றது. எப்படியெனில், பரமார்த்த ஸந்யாஸி ஸகல கர்மங்களையும் அவற்றிற்கான ஸாதானங்களையும் விட்டுள்ளமையால் ஸகல கர்மங்களையும் அவற்றின் பயன்களையும் பற்றிய நினைப்பை, அதாவது, கர்மத்தில் பிரவிர்த்திப்பதற்குக் காரணமாயுள்ள ஆசைக்கு ஹேதுவா யிருப்பதைத் துறந்துவிடுகிறுன். இந்தக் கர்மயோகியும்கூடக் கர்மத்தைச் செய்பவனுகவே இருந்தபோதிலும் முன் சொன்ன ஸந்யாஸியைப்போலவே அக் கர்மங்களின் பயன்களைப்பற்றிய நினைவைத் துறந்துவிடுகின்றுன் என்கிற இந்த விஷயத்தில்தான் ஸமத்துவம் என்பது பொருள். பயனை நினைத்தலானது, மனம் அலைதற்குக் காரணமாவதால், பயனைப்பற்றிய எண்ணத்தை விட்டுவிடாத எந்தக் கர்மியும் யோகியாகமாட்டான். ஆதலால், பலனைப்பற்றிய எண்ணத்தை விட்டவன் எந்தக் கர்மியானுலும் அவன் யோகியாக, மனம் அலையாதவனுக ஆகிறுன். மனம் அலைவதற்குக் காரணமாயிருப்பதை அதாவது, பலனை நினைத்தலைத் துறந்துவிட்டமையால் என்பது கருத்து.” (2)

௩. 𑌆𑌰𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍋𑌰𑍍𑌮𑍁𑌨𑍇𑌰𑍍𑌯𑍋𑌗𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌯𑍋𑌗𑌾𑌰𑍂𑌢𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌶𑌮𑌃 𑌕𑌾𑌰𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

3. ஆருருக்ஷோ:-முநே:-யோகம்(1)-கர்ம-காரணம்-உச்யதே।
யோகாரூடஸ்ய-தஸ்ய-ஏவ-ஶம:(2)-காரணம்-உச்யதே॥

𑌯𑍋𑌗𑌂	யோகத்தை
𑌆𑌰𑍁-𑌰𑍁-𑌕𑍍𑌷𑍋𑌃	அடைய இச்சிக்கிற
𑌮𑍁𑌨𑍇𑌃	முனிவனுக்கு
𑌕𑌰𑍍𑌮	கர்மமானது
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇	காரணமாக, அதாவது ஸாதனமாகச் சொல்லப்படுகிறது;
𑌯𑍋𑌗𑌾𑌰𑍂𑌢𑌸𑍍𑌯	யோகத்தை யடைந்த
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵	அவனுக்கே
𑌶𑌮𑌃	சமம் அல்லது ஒழிவு
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇	காரணமாக, அதாவது ஸாதனமாகச் சொல்லப்படுகிறது.

(தியான) யோகத்தை அடைய இச்சிக்கிற முனிவனுக்குக் கர்மமானது ஸாதன மெனப்படுகின்றது. ஆனல் (தியான) யோகத்தை அடைந்துவிட்டபொழுது அவனுக்கே ஸகல கர்மங்களினின்றும் ஒழிதலாகிய ஒழிவுதான் ஸாதன மெனப்படுகின்றது. அதாவது, யோகத்தைக் கூடி நிற்கும் நிலைக்கு ஒழிவுதான் ஸாதன மென்க.

---

(1) "𑌯𑍋𑌗𑌂 = தன்னுடைய ஆத்ம ஸ்வரூப தரிசனம்." (ராமானுஜர்); "ஞானயோகம்" (ஸ்ரீதரர்).

(2) "𑌶𑌮𑌃 = பகவத் ஞானத்தில் எப்போதும் நிஷ்டையும், ஸ்தோத்திரம் - கீர்த்தனம் - நமஸ்காரம் - அர்ச்சனை முதலியனவும், 𑌕𑌾𑌰𑌣𑌂 = முக்திக்கு உபாயமாக, 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 = சொல்லப்படுகின்றன." (மத்துவர், இராகவேந்திரர்). "ஸமாதி, சித்தவிக்ஷேபகர்ம உபரமம்" (ஸ்ரீதரர்). "𑌶𑌮𑌃 = 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 = அதாவது, மனம்-புத்தி-சித்தம் - அகங்காரம் ஆகிய இந்நான்கையும் அவைகளின் விஷயங்களில் பிரவேசிக்கவொட்டாமல் தடுப்பது." (ஹூா).

(சங்கர பாஷ்யம்) "உண்மையான ஸந்நியாஸத்திற்கும் கர்மயோகத்திற்கும் பலனை விட்டிவிடுவதிலே, செய்பவன் மூலமாயுள்ள ஸமத்துவத்தை உத்தேசித்து முன் சுலோகத்தில் "எதனை ஸந்நியாஸமாகக் கூறுகிறார்களோ அதனை யோகமாகத் தெரிந்துகொள்" என்று கர்ம

யோகத்தைக் கொண்டாடும் பொருட்டு அதைப் பகவான் சந்யாஸ மென்று கூறினர். பலாபேட்சை அற்ற கர்மயோகமானது தியான யோகத்திற்குப் பகிரங்கமான சாதனமென்று அதனைச் சந்யாஸமாகப் புகழ்ந்துவிட்டு இப்பொழுது கர்மயோகம் தியானயோகத்துக்குச் சாதன மாதலை இச் சுலோகத்தில் உணர்த்துகிருர்.

'யோகத்தைக் கூடுவதிலே கருத்துடைய முநிவனுக்கு' என்பதனுல் 'தியான யோகத்திலே நிற்றற்குத் தகுதியை இன்னும் அடையாதவன்' என்பது பொருள். 'முநிவனுக்கு' என்பது இனிமேல் முநிவனுகப் போகிறவனுய், இப்பொழுது கர்மத்தின் பயனைத் துறந்திடும் கர்மவ யோகியை உபசார வழக்கால் முநிவனெனக் கூறியது. 'எதனைக் கூடு திலே கருத்துடையவன்' என்ருல், தியான யோகத்தை. கர்மமானது அவனுக்கு முதலில் சித்தசுத்தியையும், பின்பு தியானயோகத்தில் விருப் பத்தையும், பின்பு அந்தத் தியான யோகத்திற்கு ஏற்ற தகுதியையும் உண்டாக்குகின்ற சாதனம் எனப்படுகின்றது. ஆனல், யோகத்தைக் கூடிவிட்டால் அப்பொழுது அவனுக்குச் சகல கர்மங்களினின்றும் ஒழிதலாகிய ஒழிவுதான் சாதனம். அவன் எவ்வளவுக் கெவ்வளவு கர்மங்களி னின்றும் ஒழிகின்ருனே அவ்வளவுக் கவ்வளவு தொல்லை யில்லாதவனுய் இந்திரியங்களை வென்ற அவனுக்கு மனம் ஒருநிலைப்படுகின்றது. அவ்வா றுள்ள அவன் சீக்கிரத்தில் யோகத்தைக் கூடினவனுகிருன்."

"[Grantha-script verse, largely illegible] ...ஸத்யதா வ । ஸ்ரீலம் ஸ்திதிர் ... தண்ட ... நிதானம் க்ரியா ..." "ப்ரஹ்மமானது எங்கும் ஒன்ருயும் சமமாயும் உள்ளது என்னும் அறிவும், உண்மையுடைமையும், ஒழுக்கமும், நல்வழியிலே உறுதியும், அஹிம்ஸையும், நேர்மையும், அநேக கர்மங்களினின்று ஒழிவும் எப்படிப்பட்டனவோ அப்படிப்பட்ட ஐசுவரியம் ப்ராஹ்மணனுக்கு வேறு ஒன்றும் இல்லை." என மஹாபாரதம்-சாந்திபர்வம்-மோக்ஷதர்மம்-175-38-ல் சொல்லப்பட்டிருக்கின்றது.

(ஸ்ரீதரர்) "நிஷ்காம கர்மமானது ஞானத்திற்குக் காரணமாயும், ஞானமடைந்தவனுக்கு மனதை நிறுத்தலானது நிலைத்த தியானத்திற்குக் காரணமாயு மிருக்கிறது."

(ராமாநுஜர்) "ஶம=கர்மத்தை விட்டுவிடுவது, காரண உச்யதே=காரணமாகச் சொல்லப்படுகிறது. ஏனென்ருல், ஆத்மாவலோகனம் வரையில்தான் கர்மம் செய்யவேண்டியது. தன் ஆத்மசொரூப தரிசன மாகிய மோக்ஷத்தை யடைந்தவன் பிறகு கர்மத்தை விட்டுவிடலாம்."(3)

௪. யதா ஹி நேந்த்ரியார்தேஷு ந கர்மஸ்வநுஷஜ்ஜதே ।
ஸர்வஸங்கல்பஸந்ந்யாஸீ யோகாரூடஸ்ததோச்யதே ॥

4. யதா-ஹி-ந-இந்த்ரியார்த்தேஷு-ந-கர்மஸு-அநுஷஜ்ஜதே ।
ஸர்வ ஸங்கல்ப ஸந்ந்யாஸீ (1)-யோகாரூட:-ததா-உச்யதே ॥

யதா	எப்போது
இந்த்ரியார்தேஷு	இந்திரிய விஷயங்களில்
நாநுஷஜ்ஜதே	இச்சை வைக்கிறதில்லையோ,
கர்மஸு ந	கர்மங்களைச் செய்கிறதில் இச்சை வைக்கிறதில்லையோ,
ஸர்வஸங்கல்ப ஸந்ந்யாஸீ	சகலமான சங்கற்பங்களையும், எண்ணங்களையும் விட்டுவிடுகிறானோ
ததா ஹி	அப்போதுதான் (அவன்)
யோகாரூட:	யோகாரூடனென்று
உச்யதே	சொல்லப்படுகிறான்.

(ஒருவன்) எப்பொழுது இந்திரிய விஷயங்களின்மீது இச்சை வைக்கிறதில்லையோ, கர்மங்களில் பற்றுக்கொள்வதில்லையோ, எல்லா சங்கல்பங்களையும், அதாவது எண்ணங்களையும் விட்டவனாகிறானோ அப்பொழுதுதான், (அவன்) யோகாரூடனென்று சொல்லப்படுகிறான்.

---

(1) "ஸர்வ சங்கல்ப ஸந்யாஸீ=சகல கர்மங்களையும் விடுகிறவன். என்றால், தன்னுடைய பிரயத்தனமின்றிக் கிடைத்த வஸ்துக்களிலும்கூட அபிமானத்தை விட்டவனென்பது கருத்து." (இராகவேந்திரர்).

(சங்கர பாஷ்யம்) "இனி, ஒருவன் எப்பொழுது யோகாரூடன், அதாவது யோகத்தைக் கூடினவனாகிறான் என்பது சொல்லப்படுகிறது.

"யோகியானவன் மனதை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு இந்திரியங்களின் விஷயங்களாகிய ஓசைமுதலானவற்றிலும், நித்தியம்-நைமித்திகம்-காம்யம்-பிரதிஷித்தம் என்னும் கர்மங்களிலும் பிரயோஜனமில்லையென்று உணர்ந்து பற்றுக்கொள்வதில்லையோ, அதாவது அவை தனக்கு அவசியம் வேண்டியவை என்னும் புத்தியைக் கொள்வதில்லையோ, மற்றும் அவன் எப்பொழுது இம்மை மறுமைப் பொருள்களை விரும்புவதற்குக் காரணமான எண்ணங்கள் எல்லாவற்றையும் துறந்திடுந் தன்மையனாகின்றானோ அப்பொழுது அவன் யோகத்தைக் கூடினவன், அதாவது யோகத்தை அடைந்தவன் எனப்படுகிறான். 'ஸர்வ ஸங்கல்ப ஸந்ந்யாஸீ' என்னும் வசனத்தினால் சகல ஆசைகளையும், சகல கர்மங்

களையும் துறந்துவிடவேண்டுமென்பது பொருள். ஏனெனில், சகல ஆசைகட்கும் எண்ணங்கள்தான் காரணம்.

“ஸங்கல்ப மூல: காமோ வை யஜ்ஞா: ஸங்கல்ப ஸம்பவா:” (மநு ஸ்மிருதி: 2-அத்-2-சுலோ), எண்ணமென்பது கர்மத்தின் வேர்; யஞ்ஞங்கட்கு எண்ணமே பிறப்பிடம்.” “காம ஜாநாமி தே மூலம் ஸங்கல்பாத் கில ஜாயஸே। ந த்வாம் ஸங்கல்பயிஷ்யாமி ஸமூலோ ந பவிஷ்யஸி ||” (மஹாபாரதம்-சாந்திபர்வம்-மோக்ஷ தர்மம்-177-25) “ஏ! ஆசையே! உன்னுடைய வேர் எனக்குத் தெரியும்; நீ எண்ணத்திலின்றன்றோ பிறக்கின்றாய்; நான் உன்னை நினைக்கமாட்டேன்; நீ வேரோடு கூட இருக்கமாட்டாய், அதாவது வேர் அற்றுப்போவாய்.” இவை முதலிய ஸ்மிருதிகளால் காண்க. இனி, ஆசைகள் எல்லாம் விட்டவுடன், சர்வ கர்மங்களையும் விட்டுவிடுதல் தானே உண்டாகின்றது என்பதை— “ஸ யதா காமோ பவதி தத் க்ரதுர் பவதி யத் க்ரதுர் பவதி தத் கர்ம குருதே” “அவன் எதை விரும்புகிறவனாய் இருக்கின்றானோ அதைச் செய்யவேண்டியவனாகிறான்; எதைச் செய்யவேண்டியவனாக இருக்கின்றானோ அந்தக்கர்மத்தை வெளிப்படையாய்ச் செய்கிறான்.” என்கிறப்ரஹதாரண்யகசுருதிமுதலியவைகளாலும், “யத்யத்தி குருதே கிஞ்சித் தத்தத் காமஸ்ய சேஷ்டிதம்||” “பிராணியானது எதெதைச் செய்கின்றதோ அதது ஆசையின் செய்கை.” என்னும் மநு ஸ்மிருதி முதலியவைகளாலும் அறிக. இன்னும் யுக்தியினாலும் அவ்வாறே அறிந்துகொள்ளலாம். ஏனெனில், சங்கற்பங்கள் எல்லாவற்றையும் துறந்திடுமளவிலே, ஒருவன் ஆசையவுங்கூட முடியாது. ஆகவே ‘ஸர்வ ஸங்கல்ப ஸந்ந்யாஸீ’ என்னும் வசனத்தினால், பகவான், சகல ஆசைகளையும், சகல கர்மங்களையும் விட்டொழிக்கும்படி சொல்லுகிறாரென்பது விளங்குகிறது. (4)

---

௫. உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத் |
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந: ||

5. உத்தரேத்-ஆத்மநா(1)-ஆத்மாநம்-ந-ஆத்மாநம்-அவஸாதயேத்
ஆத்மா(2)-ஏவ-ஹி-ஆத்மந:-பந்து:-ஆத்மா-ஏவ-ரிபு:-ஆத்மந: ||

ஆத்மாநம் — தன்னை
ஆத்மநா — தன்னாலே
உத்தரேத் — கரையேற்றிக்கொள்ளவேண்டியது;
ஆத்மாநம் — தன்னை
ந அவஸாதயேத் — கெடுத்துக்கொள்ளல் கூடாது

ஹி ஏனென்றால்,
ஆத்மந: தனக்கு
ஆத்மைவ பந்து: தானே பந்து,
ஆத்மந: தனக்கு
ஆத்மைவ ரிபு: தானே சத்துரு.

தன்னை (சம்ஸார சமுத்திரத்திலிருந்து) தானே கரையேற்றிக் கொள்ள வேண்டும். அதில் மூழ்கிப் போகும்படி தன்னைக் கெடுத்துக் கொள்ளல் கூடாது. ஏனென்றால், தானே தனக்கு நண்பன், தானே தனக்குச் சத்துரு.

---

(1) "ஆத்மநா=விவேகத்தோடு கூடிய மனதினாலே." (ஸ்ரீதரர், மதுசூதந ஸரஸ்வதி, வேங்கடநாதர்); "மனதினாலே, அல்லது பரமாத்மாவினாலே." (இராகவேந்திரர்); 'ஆத்மைவ' என்பதற்கும் இவர்கள் இப்படியே அர்த்தம் செய்கிறார்கள்.

(2) "ஆத்மைவ=உலகத்திலுள்ள பந்துக்கள் சிநேக பாசத்திற்கு இடமாவார்களேயன்றி மோக்ஷத்திற்கு அவர்கள் விரோதிகளே; ஆகையால், அவர்கள் பந்துக்களல்ல; தானே தனக்குப் பந்துவாகவும் சுகிருத்தாகவு மாகவேண்டும்" என்று சங்கரரும், "தன் மனமே தனக்குப் பந்து; எப்படிப்பட்ட மனதென்றால், விஷயத்தில் பற்றுதலற்ற மனது" என்று இராமாநுஜரும், "மனமே பந்து, அல்லது பரமாத்மாவே பந்து; ஏனென்றால், அவரிடத்தில் பக்தி செய்தால், பந்துவைப்போல் ஆகிறார்" என்று இராகவேந்திரரும் சொல்லுகிறார்கள்.

(3) "ரிபு:=தன் ஆத்மாவே பிறரைச் சத்துருவாக எண்ணக் காரணமாயிருப்பதால் தனக்குத் தன் ஆத்மாவே சத்துருவாகிறது." என்று சங்கரரும்; "தன் மனமே தனக்குச் சத்துரு; எப்படிப்பட்ட மனதென்றால், விஷயத்தில் பற்றுதலையுடைய மனது." என்று இராமாநுஜரும், "பரமாத்மாவிடத்தில் பக்தி செய்யாவிட்டால் பரமாத்மா இவனைச் சத்துருவைப்போல் எண்ணுகிறார்." என்று இராகவேந்திரரும் சொல்லுகிறார்கள்.

(சங்கர பாஷ்யம்) "ஒருவன் முன் சொன்னபடி யோகாரூடனான அளவிலே, சம்ஸார அனர்த்தக் கூட்டத்தினின்றும் தானே தன்னால் கரையேற்றப் பட்டவனாகிறான் என்பது சொல்லப்படுகிறது. சம்ஸாரமாகிய சமுத்திரத்திற்குள் மூழ்கிக் கிடக்கின்றவர்கள், தங்களை அதினின்றும் தாங்களே மேலே கிளப்பிக் கரையேற்றிக் கொள்ளவேண்டும், அதாவது யோகத்தைக் கூடியிற்றலே அடையச் செய்யவேண்டும் என்பது.

கருத்து. அந்தச் சம்ஸாரக் கடலுள் தன்னைக் கீழே மூழ்கிப் போகும்படி செய்வித்துக்கொள்ளல் கூடாது. ஏனென்றால், தனக்குத் தானே பந்து. சம்ஸாரத்தினின்றும் விடுபடுவதற்குப் பிரயோஜனப்படக்கூடிய நண்பன் தன்னைக் காட்டிலும் வேறொருவன் இல்லையன்றோ? பந்து என்பவனும்கூட மோக்ஷ விஷயத்திலே சத்துருவேதான். சிநேகம் முதலிய கட்டுக்கு அவனால் இட முண்டாவதினால் என்க.

ஆகவே 'தானே தனக்குப் பந்து' என்கிற உறுதியான நிர்ணயமானது சரியான தென்க. அப்படியே 'தானே தனக்குப் பகைவன்.' தீமை செய்பவனாய், தன்னைக் காட்டிலும் வேறாய் வெளியிலுள்ள பகைவன் எவனோ அவனையுங்கூடத் தானேதான் ஒருவன் தனக்குப் பகைவனாகச் செய்துகொள்ளுகிறான்; அதாவது, வெளிச் சத்துருக்களும் ஆத்மாவை அநுசரித்தே இருப்பதால், 'தானே தனக்குச் சத்துரு' என்னும் நிர்ணயம் பொருந்தியதேதான்,"

(ஸ்லோ) ஒவ்வொருவனும் மோக்ஷம் அல்லது நரகமாவது, சுகம் அல்லது துக்கமாவது அடைவதற்கு அவனுடைய சுவ பிரயத்தினம் காரணமென்று குறித்துக் காட்டப்பட்டது. இந்தச் சுலோகத்திற்குச் சங்கராநந்தர் அடியிற் கண்டபடி விரிவான அர்த்தம் செய்கிறார்:— ஆத்மநம்= சம்ஸார சாகரத்தில் மூழ்கி ஜந்ம மிருத்து ஜராதி துக்கங்களினால் ஹதம் செய்யப்பட்டவனாயிருக்கிறேன் என்று கதறிக்கொண்டிருக்கிற தன்னை, ஆத்மநா=சிரத்தா பக்தியினால் ஆராதித்து அடைந்த பரமேச்வரப் பிரசாதமும், வைராக்கிய சாதநமும், சிரவண மனனாதி செய்து ஆத்ம ஞானத்தில் நிலைத்துமுள்ள தன்னாலே கரையேற்றிக் கொள்ள வேண்டும்; ஆத்மநஃ=தன்னுடைய அவித்தையினால் ஜநந மரணமாகிய துக்கப் பிரவாகத்தில் வீழ்ந்து, ஆத்தியாத்மிகம் முதலிய தாபத்திரய அக்கினியினால் தபிக்கப்பட்ட தனக்கு, பந்து=சம்ஸார துக்கத்திலிருந்து நிவிர்த்தித்து நிரதிசயமான மோக்ஷ சுகத்தில் சேர்ப்பிவிக்கிற பந்து தானே. சாந்தி தாந்தி முதலிய சாதன சம்பத்தினால் ஆத்மோத்தாரணத்திற்காகச் சமாதி யோகம் செய்யாதிருக்கிற தான் தனக்குச் சத்துரு. (5)

ஸ்லோ. ப³ந்து⁴ராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜித꞉ ।
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்தேதாத்மைவ ஶத்ருவத் ॥

6. பந்து꞉-ஆத்மா-(1)ஆத்மந꞉-தஸ்ய-யேந-ஆத்மா-ஏவ-ஆத்மநா-ஜித꞉ ।
அநாத்மந꞉-து-ஶத்ருத்வே-வர்தேத-ஆத்மா-ஏவ-ஶத்ருவத் ॥

யேந ஆத்மநா	எந்த ஆத்மாவினாலே
ஆத்மா ஜித:	ஆத்மா (தேக இந்திரியங்களின் சேர்க்கை) ஜயிக்கப்பட்டிருக்கிறதோ
தஸ்ய ஆத்மந:	அந்த ஆத்மாவுக்கு
ஆத்மைவ	ஆத்மாவே
பந்து:	பந்து;
அநாத்மநஸ்து	ஆத்மாவை (தேகேந்திரியங்களின் சேர்க்கையை) ஜயிக்காதவனுக்கோ
ஆத்மைவ	ஆத்மாவே
ஶத்ருவத்	(வெளி)சத்துருவைப்போல
ஶத்ருத்வே வர்தேத	சத்துரு பாவத்தில் அதாவது பகைமையிலே இருக்கும்.

எந்த ஜீவாத்மாவினாலே தேகம் இந்திரியங்கள் என்றவைகளின் சேர்க்கையான ஆத்மா வசப்படுத்தப்பட்டிருக்கின்றதோ, அதாவது எவன் தேகேந்திரியங்களை வென்றிருக்கின்றானோ அவனுக்கு அவன் தான் சிநேகிதன். மற்று இந்திரியங்களை ஜயிக்காதவனுக்கு வெளிச்சத்துருவைப்போல் தானே பகைமையிலே இருக்கின்றான். அதாவது, தன்னைக்காட்டிலும் வேறாய் வெளியிலுள்ள சத்துரு தனக்கு எவ்வாறு தீமை செய்பவனோ அவ்வாறே தனக்குத் தானே தீமை செய்துகொள்வதிலே இருக்கிறான் என்பது பொருள்.

---

(1) "ஆத்மா=விவேக மனஸ்." (மதுசூதன ஸரஸ்வதி).

(இராகவேந்திரர்) "எந்த ஜீவனாலே பரமாத்மாவானவர் ஜயிக்கப்பட்டாரோ என்றால், பக்தியினால் சுவாதீனம் செய்துகொள்ளப் பட்டவரானாரோ, அந்த ஜீவனுக்கு அந்தப் பரமாத்மா பந்து. பரமாத்மாவினிடத்தில் பக்தி செய்யாதவனுக்கு அந்தப் பரமாத்மாவே சத்துருவைப்போல அபகாரஞ் செய்கிறார்."

(ஸ்வ) முன் சுலோகத்தில் தனக்கு ஆத்மாவே பந்து, ஆத்மாவே சத்துரு என்று சொல்லப்பட்டது. தனக்குத் தான் பந்து என்பவனுக்கு லக்ஷணம் என்ன? தனக்குத் தான் சத்துரு என்பவனுக்கு லக்ஷணம் என்ன? என்பது இதில் சொல்லப்படுகிறது. இந்திரியங்களை ஜயித்தவன் தனக்குத் தானே பந்து. அப்படி ஜயிக்காதவன் தனக்குத் தானே சத்துருவாக இருக்கிறான் என்பது கருத்து. (6)

எ. ஜிதாத்மந: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித: ।
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு ததா மாநாபமாநயோ: ॥

7. ஜிதாத்மந:-ப்ரஶாந்தஸ்ய-பரமாத்மா-ஸமாஹித:।
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு-ததா-மாநாபமாநயோ:॥

ஜிதாத்மந:	தேகேந்திரியங்களை ஜயித்தவனும்
ப்ரஶாந்தஸ்ய	மனந் தெளிந்தவனுமிருப்பவனுக்கு
பரமாத்மா	பரமாத்ம சொரூபமானது
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு	சீதம், உஷ்ணம், சுகம், துக்கங்களிலும்
ததா	அப்படியே
மாநாபமாநயோ:	மான அவமானங்களிலும்
ஸமாஹித:	ஒருநிலைப்பட்டிருக்கின்றது.

ஒருவன் தேகம் இந்திரியங்கள் இவற்றை ஜயித்து மனம் தெளிந்திருக்கும் (ஸந்யாஸியாய் இருக்கும்) பொழுது பரமாத்ம சொரூபமானது: குளிர் வெப்பங்களிலும், இன்பதுன்பங்களிலும், அவ்வாறே மரியாதை அவமரியாதைகளிலேயும் (அவற்றால் தாக்கி அசைக்கப்படாததாய் அவனுடைய சித்தத்திலே எப்பொழுதும்) ஒரு நிலைப்பட்டு நிற்கின்றது. அது அவனுடைய உள்ளபடியான ஆத்மசொரூபமாகவே இருக்கின்றது என்பது கருத்து.

(ஸ்ரீதரர்) "சீதோஷ்ண சுகதுக்கங்களிலும், மானவமானங்களிலும் சமமாயிருந்தும், காமக்குரோதங்களை யடக்கியும், மனம் இந்திரியங்கள் இவற்றை ஜயித்து மிருக்கிறவனுடைய ஹிருதயத்தில், பரமாத்மா ஸமாஹித:=பரமாத்மா பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்."

(ராமாநுஜர்) "பரமாத்மா ஸமாஹித:" ஆத்மா=தன்னுடைய சொரூபமானது, ஸமாஹித:=பிரகாசிக்கிறது; இப்படிப்பட்ட ஆத்ம சொரூபமானது பிரகிருதி பந்தத்தைப் போக்கடித்துக்கொண்டு சுத்தமாயிருப்பதால், பரமாத்மா=பரமாத்மாவென்று சொல்லப்பட்டது. அல்லது, ஆத்மா=ஆத்மாவானது, பரம்=அதிகமாய், ஸமாஹித:=பிரகாசிக்கிறது என்றும் சொல்லலாம்." (7)

அ. ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய: ।
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந: ॥

8. ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா(1)-கூடஸ்த:-(2)விஜிதேந்த்ரிய:।
யுக்த:-(3)இதி-உச்யதே-யோகீ-(4)ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:(5)॥

ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா	அறிவு, அறிந்தபடி அனுபவம் இவைகளி னுல் திருப்தியான மனதையுடையவனு யும்,
கூடஸ்த:	(எதற்கும்) அசையாதவனுயும்,
விஜிதேந்த்ரிய:	இந்திரியங்களைச் செவ்வையாய் ஜயித்தவ னுயும்,
ஸமலோஷ்டாஸ்மகாஞ்சந:	மண்கட்டி, கல், தங்கம் ஆகிய இவைகளைச் சமமாக நினைக்கிறவனுயு மிருக்கிற
யோகீ	யோகியானவன்
யுக்த இத்யுச்யதே	சமாதியைக் கூடினவன் (யோகாரூடன்) என்று சொல்லப்படுகிறுன்.

சாஸ்திர அறிவினுலும் அனுபவ அறிவினுலும் மனம் திருப்தி அடைந்து, 'ஞான விக்ஞானங்கள் போதும்' என்னும் எண்ணம் வந்த மனத்தினனுகி, எதற்கும் அசையாதவனுய், இந்திரியங்களை ஜயித்து, மண் கட்டி கல் தங்கம் என்பனவற்றை சமமாகக் கொண்ட யோகியானவன், சமாதியைக் கூடினவன், யோகாரூடன் என்று சொல்லப்படுகிறுன்.

---

(1) "ஜ்ஞாந விஜ்ஞாந த்ருப்தாத்மா-ஞானமென்பது, ஆத்மஸ்வரூபஞானமே; விக்ஞானமென்பது, சகல கிரியைகளையும் நடத்துகிறது பிரகிருதியேயன்றி ஆத்மாவுக்குச் சம்பந்த மில்லையென்று தெரிகிறதுதான். இப்படிப்பட்ட ஞானத்தினுல் திருப்தியடைந்த மனதையுடையவனுயும்." (ராமானுஜர்). "ஞானமென்பது பகவத் சொரூபத்தை யறிகிற ஞானம்; அல்லது பகவத் விஷயமான சிரவண மனனுதிகளா லுண்டாவது; விக்ஞானமென்பது, பகவத் மஹிமைகளை விசேஷமா யறிவது; அல்லது, சிரவணுதிகளா லுண்டான ஞானத்தினுல் கிடைக்கும் பகவத் தரிசனம்." (மத்துவர்). "பகவான் சர்வோத்தம னென்பதை வேதங்களினு லறிவதுதான் ஞானம். பகவானுடைய மஹிமைகளை வேதத்தினுல் அறிவது விஞ்ஞானம்." (இராகவேந்திரர்).

(2) "கூடஸ்த:=தேவ மனுஷ்யாதி தேகங்களி லிருந்தாலும் ஞானுகாரமான ஆத்ம சொரூபத்துட னிருப்பவன்." (ராமானுஜர்). கூடம்=ஆகாசம், ஆகாசத்தைப்போ லிருப்பவன், அதாவது சிதோஷ்ணுதிகளால் விகார மடையாதவன்." (மத்துவர், இராகவேந்திரர்).

(3) "யுக்த:=ஸ்வரூபத்தை யறிகிற யோகாப்பியாசத்திற்குத் தகுந்தவ னென்று சொல்லப்படுகிறுன்." (ராமானுஜர்). "ஸம்பூர்ணமான

யோகத்தையுடையவனைச் சொல்லப்படுகிறான்." (இராகவேந்திரர்). "யோகாரூடன்." (ஸ்ரீதரர், மதுஸூதன ஸரஸ்வதி).

(4) "யோகீ=கர்மயோகி." (ராமாநுஜர்); "ஞானயோகி." (மத்வர்).

(5) "ஸமலோஷ்டாச்மகாஞ்சந: = மண்முதலிய சகல வஸ்துக்களையும் அததினுடைய சுபாவ மெய்ப்படியோ அப்படியே சரியாய் அறிவது." (மத்வர்). இந்த மத சித்தாந்தப்படிக்கு ஐந்துவித பேத ஞானம் மோக்ஷ ஹேதுவானது. பேதங்களாவன:—(1) ஜீவேசுவர பேதம். (2) ஜீவபரஸ்பர பேதம். (3) ஜீவஜட பேதம். (4) ஜடபரஸ்பர பேதம். (5) ஜடேசுவர பேதம். இந்த நான்காவது வகுப்பில் இந்த மண், கல், தங்கம் முதலியவை சேர்கின்றன. தங்கத்தைத் தங்கமாகவும், கல்லைக் கல்லாகவும், மண்ணை மண்ணாகவும் இப்படியே மற்றுமுள்ள ஜட வஸ்துக்களை அததின் சுபாவப்படி அறிவதுதான் சமமான ஞானம். அப்படியன்றி மண்ணைக் கல்லாகவும் கல்லைத் தங்கமாகவும் இப்படிப்போல ஒன்றை வேறொன்றாக அறிவதுதான் விபரீதஞானம். (ஷா)

(ஸ்வ) "ஞானம் என்பது, சாஸ்திரத்திற் கூறியுள்ள பொருள்களைத் தெரிந்துகொள்ளுதல்; விஜ்ஞானம் என்பது சாஸ்திரத்தினின்றும் தெரிந்துகொண்டவைகளை அவ்வாறே தன் அநுபவத்திற்குக் கொண்டு வருதல்," என்று சங்கரரும்; "ஞானம் என்பது ஆத்ம சொரூபத்தைத் தெரிந்துகொள்ளுதல்; விஜ்ஞானம் என்பது ஆத்மசொரூபம் பிரகிருதியைவிட வேறு லக்ஷணங்களுள்ள உருவமுடையது என்று தெரிந்து கொள்ளுதல்," என்று, ராமாநுஜரும்; "விஜ்ஞானம்" என்பதற்கு, "சாதாரணமானவர்கள் அறியாத விசேஷங்களை அறியும் ஞானமென்றும் சொல்லலாம்," என்று மத்வரும் தாத்பரியப்படுகிறார்கள். (8)

ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீநமத்யஸ்தத்வேஷ்யபந்துஷு |
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விசிஷ்யதே || *

9. ஸுஹ்ருத்-மித்ரம்-அரி:-உதாஸீந:-மத்யஸ்த:-த்வேஷ்ய:-
(இவைகள் சேர்ந்து ஒரே பதம்.) [பந்துஷு|
ஸாதுஷு-அபி-ச-பாபேஷு-ஸமபுத்தி:-விசிஷ்யதே||

ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீநமத்யஸ்தத்வேஷ்யபந்துஷு	நல்ல ஹிருதய முள்ளவன், சிநேக முள்ளவன், பகைவன், உதாஸீநன், மத்தியஸ்தன், த்வேஷ்யன், உறவினன் ஆகிய இவர்களிடத்திலும்,
ஸாதுஷு	ஸாதுக்களிடத்திலும்

பாபேஷு	பாபிகளிடத்திலும்
ஸமபுத்தி:	சமமான புத்தியுள்ளவன்
விசிஷ்யதே	சிரேஷ்டனாகிறான்.

ஸுஹ்ருத் (பதில் உபகாரத்தை வேண்டாது உபகாரம் செய்பவன்), சிநேகமுள்ளவன், சத்துரு, உதாஸீநன் (எவர் கக்ஷியிலும் சேராதவன்), மத்தியஸ்தன் (இரு கக்ஷிக்கும் நன்மை நாடுபவன்), த்வேஷ்யன் (வெறுக்கத்தக்கவன்), தனக்கு வேண்டாதவன், உறவினன் ஆகிய இவர்களிடத்திலும், ஸாதுக்களிடத்திலும் (சாஸ்திரத்தை யநுஸரித்து நடப்பவர்களிடத்திலும்), பாபிகளிடத்திலும் (செய்யத்தகாதது என்று சாஸ்திராதிகளினால் விலக்கியதைச் செய்யும் தீயோர்களிடத்திலும்), இவர்களெல்லோரிடத்திலும் சமமான புத்தியை உடையவன் மேலானவனாகிறான்.

* "விசிஷ்யதே" என்பதற்கு "விமுச்யதே" என்று பாடம். 'ஸம்ஸாரத்தினின்று விடுபடுகிறான்' என்பது அர்த்தம்.

(சங்கரர்) "ஸம திருஷ்டி யுள்ளவன் என்றால்-'இவன் யார்? இவனுடைய தொழில் என்ன?' என்கிற ஆலோசனையில் புத்தியைச் செல்ல விடாதவன். இதில் சொல்லப்பட்டவன் யோகாரூடர்களுக்குள் உயர்ந்தவன் என்பது பொருள்." (மற்றப் பதங்களின் அர்த்தம் பொழிப்புரையிலேயே இவர் பாஷ்யப்படி போடப்பட்டிருக்கிறது).

(ராமாநுஜர்) "ஸுஹ்ருத் = வயோவிசேஷாநங்கீகாரேண ஸ்வஹிதைஷிண:=சுஸுஹ்ருத் என்றால், வயதின் விசேஷத்தைக் கவனியாமலே தனக்கு எவன் உபகாரஞ் செய்கிறானோ அவன்தான் சுகிருத். மித்ரம்=தனக்குச் சமவயதுள்ளவனும், தனக்கு உபகாரஞ் செய்கிறவனுமிருப்பவன்தான் மித்திரன். அரி:=ஒரு நிமித்தியத்தைக்கொண்டு தனக்கு அபகாரஞ் செய்பவன் அரி. உதாஸீந:= உபகார அபகாரங்களுக்கு நிமித்திய மில்லாததினால் உபகார அபகாரங்கள் செய்யாமலிருப்பவன் உதாசீநன். மத்யஸ்த: = பிறவிமுதல் உபகார அபகாரங்கள் செய்யாதவன். த்வேஷ்ய:=பிறவிமுதல் தீங்கு நினைக்கிறவன். பந்து: = பிறவிமுதல் நன்மையைக் கோருகிறவன். ஸாதுஷு அபி = தர்மத்தை யுடையவர்களிடத்திலும், பாபேஷு= அதர்மம் செய்கிறவர்களிடத்திலும் இவர்கள் எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பவன்."

(இராகவேந்திரர்) மித்ரம் = தன் சிநேகிதனுக்கு இன்ன காரியத்தைச் செய்தால் கெடுதி யுண்டாகுமென்று சொல்லி அதிலிருந்து ரக்ஷிக்

கிறவன் மித்திரன், 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌃= அபகார உபகாரங்கள் செய்வதற்கு நிமித்திய மிருந்துஞ் செய்யாதவன். 𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌃 = உபகாரம் அபகார மிரண்டும் செய்கிறவன். 𑌬𑌨𑍍𑌧𑍁𑌃=பிரதிப் பிரயோஜனத்தை யெதிர் பார்த்து உபகாரஞ் செய்கிறவன், 𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌂=சுகிருத்துவம், மித் திரத்துவம் முதலியவைகள் அந்தக்கரணத்தினு லுண்டானவையே யன்றி ஜீவசொருபத்திற்கு இல்லையென்றும், எல்லா ஜீவ சொருபமும் சைதன்ய அம்சத்தில் ஒரே மாதிரியாய்ச் சமமாயிருக்கிறதென்றும் தெரி கிறவன்." (9)

---

௧௦. 𑌯𑍋𑌗𑍀 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌸𑌤𑌤 𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌹𑌸𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌏𑌕𑌾𑌕𑍀 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

10. யோகீ-யுஞ்ஜீத-ஸததம்-ஆத்மாநம்-ரஹஸி-ஸ்திதஃ ।
ஏகாகீ-யதசித்தாத்மா-நிராசீஃ-அபரிக்ரஹஃ ॥

𑌯𑍋𑌗𑍀	யோகியானவன்:
𑌰𑌹𑌸𑌿	ஏகாந்தமான இடத்திலே
𑌏𑌕𑌾𑌕𑍀	தனியாய்
𑌸𑍍𑌥𑌿𑌤𑌃	ஸ்திரமாயிருந்துகொண்டு,
𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾	அந்தக்கரணத்தையும் தேகத்தையும் சுவாதீனப்படுத்திக்கொண்டவனாய்,
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌃	ஆசைகளை விட்டவனாய்,
𑌅𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃	உடைமை, அதாவது தனது என்பது ஒன் றும் இல்லாதவனாயு மிருந்துகொண்டு
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂	மனதை
𑌸𑌤𑌤𑌂	எப்பொழுதும்
𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤	சமாதியில் நிறுத்தவேண்டும்.

யோகியானவன் (தியானஞ் செய்பவன்): குகைமுதலான ஏகாந்த மான இடத்திலே, தனியாய் (துணை இன்றி) ஸ்திரமாய் இருந்துகொண்டு, அந்தக்கரணத்தையும் தேகத்தையும் வசப்படுத்திக்கொண்டவனாய், ஆசைகளை எல்லாம் விட்டொழித்தவனாய், தனது உடைமை என்பது ஒன்று மில்லாதவனாய் அதாவது பற்றில்லாதவனாய், எப்பொழுதும் மனதைச் சமாதியில் நிறுத்தவேண்டும்.

(சங்கரர்) "ஆகவே, முன் சொன்ன உத்தமமான பயனை அடை வதற்காகச் செய்யவேண்டியது இதில் சொல்லப்படுகிறது. தியானஞ் செய்பவன் மலையில் குகைமுதலான இடத்திலே துணை ஒருவரு மில்

லாதவனாய் யோகத்தைக் கூட்ட வேண்டும். "ரஹஸி ஸ்தித:, ஏகாகீ" என்னும் விசேஷத்தினால், சந்யாஸம் செய்துகொள்ள வேண்டும் என்பது தாத்பரியம். அப்படித் துறவியாயிருந்தாலும் ஆசைகளையும் எல்லா உடைமைகளும் விட்டொழித்தவனாயிருத்தல்வேண்டும். கௌபீநம் முதலியவற்றிலும் எனதென்னும் பற்றை வைத்தல் கூடாது என்பது பொருள்."

(ராமாநுஜர்) "இதுவரையில் சொல்லப்பட்ட 'யோகீ' கர்மயோக நிஷ்டன், ஸததம்=தினம் யோகாப்பியாசகால முழுவதும், யுஞ்ஜீத= தன்னுடைய ஆத்ம தரிசன நிஷ்டையையுடையவனாகச் செய்து கொள்ளல் வேண்டியது. நிராசீ: அபரிக்ரஹ:= ஆத்மாவைத் தவிர மற்றெதனிடத்தும் இச்சையும் மமகாரமும் அற்றவன்."

(இராகவேந்திரர்) யோகீ=ஞானோபாயத்தை அநுஷ்டிக்கிறவன்; யுஞ்ஜீத= அகண்ட தியானத்தில் நிறுத்த வேண்டியது."

(ஸ்வ) இனி, சமாதி யோகக்கிரமம் சொல்லப்படுகின்றது. மனதைச் சமாதியோகத்தோடு கூடினதாகச் செய்வதுதான். (10)

கக. சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸநமாத்மந: |
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜிநகுசோத்தரம் ||

கஉ. தத்ரைகாக்ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய: |
உபவிச்யாஸநே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிசுத்தயே ||

11. சுசௌ-தேசே-ப்ரதிஷ்டாப்ய-ஸ்திரம்-ஆஸநம்-ஆத்மந: |
ந-அத்யுச்ச்ரிதம்-ந-அதிநீசம்-சைலாஜிந குசோத்தரம் ||

12. தத்ர-ஏகாக்ரம்-மந:-க்ருத்வா-யதசித்தேந்த்ரியக்ரிய:|
உபவிஶ்ய-ஆஸநே-யுஞ்ஜ்யாத்-யோகம்-ஆத்மவிசுத்தயே||

(யோகீ)	(யோகியானவன்) :
நாத்யுச்ச்ரிதம்	அதிக உயரமில்லாததும்,
நாதிநீசம்	அதிகத் தாழ்வாயில்லாததும்,
சைலாஜிந குசோத்தரம்	வஸ்திரம், (மான்) தோல், தர்ப்பை இவற்றை மேலேயுடையதும்,
ஸ்திரம் ஆஸநம்	ஸ்திரமானதுமாகிய ஆஸனத்தை
சுசௌ தேசே	பரிசுத்தமான இடத்தில்
ஆத்மந: ப்ரதிஷ்டாப்ய	தனக்காக அமைத்துக்கொண்டு
தத்ர ஆஸநே	அந்த ஆஸனத்தில்
உபவிச்ய	உட்கார்ந்து

உந்:	மனதை
வனகாறு கூருகவா	ஒரேநிலையாகச் செய்து
யதசித்தேந்திரியக்ரியஃ	சித்தம், இந்திரியங்கள் இவைகளுடைய செய்கைகளை அடக்கினவனாய்
ஆத்மவிஶுத்தயெ	அந்தக்கரண சுத்திக்காக
யொகம் யுஞ்ஜ்யாத்	யோகத்தைக் கூடவேண்டியது.

(யோகியானவன்) மிகவும் உயரமாயில்லாததும், மிகவும் தாழ்வாயில்லாததும், வஸ்திரம் தோல் தர்ப்பை இவைகளை மேலே உடையதும், ஸ்திரமானதுமாகிய ஆஸனத்தைப் பரிசுத்தமான இடத்தில் தனக்காக அமைத்துக்கொண்டு, அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து மனதை ஒரே நிலையாகச் செய்து, சித்தம் இந்திரியங்கள் இவற்றின் செய்கைகளை அடக்கினவனாய், அந்தக்கரண சுத்திக்காக யோகத்தைச் செய்யவேண்டியது

(சங்கரர்) "இனி யோகத்தைக் கூடுகிறவனுக்கு அவன் உட்காரத்தக்க ஆஸனம், அவன் உட்கொள்ளத்தக்க உணவு, அவனுடைய பொழுதுபோக்குக்குரிய விநோதம் முதலியவற்றின் ஒழுங்கை யோகத்திற்குச் ஸாதனமாகக் கூறவேண்டியதோடு யோகத்தையுடைந்தவனுடைய லக்ஷணத்தையும், அந்த யோகத்தின் பயன் முதலானவற்றையும் எடுத்துரைக்கவேண்டுமாதலால் அவை யெல்லாவற்றையும் உபதேசிக்கத் தொடங்கி, அவற்றுள் முதன்மையான ஆஸனத்தின் கிரமத்தை முதலில் பகவான் சொல்லுகிறார்."

"'பரிசுத்தமான இடம்' என்பது 'இயற்கையினாலாயினும், மொழுகுதல் முதலியவற்றாலாயினும் பரிசுத்தப்பட்ட இடம்' என்பது கருத்து. அப்படிப்பட்ட இடம் நிர்ஜனமானப் பிரதேசமாக இருத்தல்வேண்டும். வஸ்திரம் முதலியவற்றின் கிரமமானது பாடத்தின் முறைப்படி முதலில் வஸ்திரம், பின்பு தோல், பின்பு தர்ப்பையென மாறியிருக்கின்றது. அதாவது, முதலில் தர்ப்பை, அதன் மேல் தோல், அதன்மேல் வஸ்திரம் என்பது கருத்து. (தோல் ஆஸனம் என்று சொன்னது மான்தோல் அல்லது புலித்தோல் என்பதாகக் கொள்ளல் வேண்டும்).

"இவ்வித ஆஸனத்தை அமைத்துக்கொண்டு என்ன செய்யவேண்டுமென்றால், அந்த ஆஸனத்திலே உட்கார்ந்துகொண்டு யோகத்தைக் கூடவேண்டும். எப்படியென்றால், சகல விஷயங்களினின்றும் மனதை இழுத்து ஒரு நிலைப்படுத்தி, சித்தம் இந்திரியங்கள் இவற்றை அடக்கினவனாய்க் கூடல் வேண்டும். அவன் எதற்காக அவ்விதம் யோகத்தைக் கூடவேண்டுமென்றால் அந்தக்கரண சுத்திக்காக."

(ராமாநுஜர்) "பரிசுத்தர்கள் அல்லாதவர்கள் சேராததும், அவர்கள் சூழாததும், பரிசுத்தமல்லாத வஸ்துக்களின் சம்பந்த மில்லாத பவித்திர மான இடத்தில் மரத்தினால் செய்யப்பட்டதும், அதன்மீது தர்ப்பை மான்தோல் வஸ்திரம் ஆகிய இவை முறையே ஒன்றன்மீது ஒன்றாய் விரிக்கப்பெற்றதுமான ஆஸனத்தை ஏற்படுத்திக்கொண்டு, பந்த நிவிருத்திக்காக யோகம் அதாவது ஆத்மாவலோகனத்தைச் செய்தல் வேண்டும்."

(ஸ்ரீ) இந்த 11-12 சுலோகங்களையும், முன் 10-வது சுலோகத்தின் உத்தரார்த்தத்தையும் வராஹபுராணம் 187-வது அத்தியாயத்தில் காண்க.

(11-12)

கங. ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந்நசலம் ஸ்திர: |
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சாநவலோகயந் ||

கச. ப்ரஶாந்தாத்மா விகதபீ: ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித: |
மந: ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர: ||

13. ஸமம்-காயஶிரோக்ரீவம்-தாரயந்-அசலம்-ஸ்திரம் |
ஸம்ப்ரேக்ஷ்ய-நாஸிகாக்ரம்(1)-ஸ்வம்-திஶ:-ச-அநவலோகயந் ||

14. ப்ரஶாந்தாத்மா-விகதபீ:-ப்ரஹ்மசாரிவ்ரதே(2)-ஸ்தித: |
மந:-ஸம்யம்ய-மச்சித்த:-யுக்த:-ஆஸீத-மத்பர: ||

(யோகீ)	(யோகியானவன்):
காயஶிரோக்ரீவம்	தேகம், கழுத்து, தலை இவைகளை
ஸமம்	ஸமமாகவும் (நேராகவும்)
அசலம்	சலிக்காமலும் (அசையாமலும்)
தாரயந்	வைத்துக்கொண்டும்,
ஸ்திர:	ஸ்திரமாயிருந்துகொண்டும்,
ஸ்வம் நாஸிகாக்ரம்	தன்னுடைய மூக்கு நுனியை
ஸம்ப்ரேக்ஷ்ய	பார்த்துக்கொண்டு
திஶ: ச	திக்குகளையும்
அநவலோகயந்	பாராமலும்
ப்ரஶாந்தாத்மா	மிகவும் சாந்தமான அந்தக்கரணத்தை யுடையவனாகவும்,
விகதபீ:	பயம் நீங்கினவனாயும்,
ப்ரஹ்மசாரிவ்ரதே	ப்ரஹ்மசாரி விரதத்தில்
ஸ்தித:	இருப்பவனாயும்
மந: ஸம்யம்ய	மனதை அடக்கி

உஷித்தஃ சித்தத்தை என்னிடத்தில் வைத்தவனும்,
உத்பரஃ என்னையே உத்கிருஷ்டமாகக் கொண்டவனு
யுக்தஃ ஸமாஹிதனுயும் [யும்,
ஆஸீத உட்கார்ந்திருத்தல் வேண்டும்.

யோகியானவன்: தேகம், கழுத்து, தலை இவைகளைச் சமமாகவும் நேராகவும் அசையாமலும் வைத்துக்கொண்டும், ஸ்திரமா யிருந்துகொண்டும், தன்னுடைய மூக்குநுனியை உற்றுப் பார்த்துக்கொண்டும், திக்குகளை (சுற்றுப்புறங்களைப்) பாராமலும், மிகவும் சாந்தமான அந்தக்கரணத்தை யுடையவனும், பயம் நீங்கினவனுயும், ப்ரஹ்மசாரி விரதத்திலிருந்துகொண்டும், மனதின் விருத்திகளை ஒடுக்கி, அதாவது மனதை விஷயங்களில் போகாமல் திருப்பி, சித்தத்தை யென்னிடத்தில் வைத்து, என்னையே உத்கிருஷ்டமாகவும் ஸமாஹிதனுயும் அதாவது தியான யோகத்தோடு கூடினவனுயும் உட்கார்ந்திருத்தல்வேண்டும்.

(1) "நாஸிகாக்ரம்=மூக்கு நுனியென்பது புருவங்களுக்குஅடுத்தும், சிறுத்து மிருக்கிற மூக்கின் பாகமென்று அர்த்தம். 5-வது அத். 27-வது சுலோகத்தினுடைய குறிப்பையும் பார்க்க. புருவங்களின் மத்தியைப் பார்ப்பதுபோலத் திருஷ்டியை வைத்து என்பது கருத்து. (ஷூா)

(2) ப்ரஹ்மசாரி வ்ரதே = ஸ்த்ரீவிஷயத்தைப்பற்றிச் சிந்திக்காமை, பிக்ஷை யெடுத்த அன்னத்தைப் புஜிப்பது, குரு சுச்ருஷை செய்வது, வேதாத்தியயனஞ் செய்வது, ப்ரஹ்மவிசாரஞ் செய்வது, இவைகள் ப்ரஹ்மசாரி விருதங்கள். (ஷூா)

(சங்கர பாஷ்யம்) "முன் சுலோகங்களில் வெளி ஆஸனத்தின் கிரமம் சொல்லப்பட்டது. இனி, சரீர தாரண, அதாவது உடம்பை வைத்துக்கொள்ளவேண்டிய நிலை எவ்வாறு என்பது முதலியன கூறப்படுகின்றன. உடம்பு, தலை, கழுத்து இவற்றைக் கோணுது நேரே வைத்துக்கொள்ளல் வேண்டும். அப்படி வைத்துக்கொண்டும் அவனுக்கு அசைவு உண்டாகக் கூடுமாதலால், 'அசலம்' என்னும் விசேஷணம் சேர்க்கப்பட்டது. 'ஸ்திரஃ' என்றதனுல் 'நிலையுள்ளவனுய் அதாவது தேகேந்திரிய விஷயங்களால் தாக்கப்பட்டு அலையாதவனுய் ஸ்திரமா யிருந்துகொண்டு' என்பது பொருள். 'மூக்கு நுனியை நேரே நோக்கிக்கொண்டு' என்பதற்கு 'நோக்குவது போல இருந்துகொண்டு' எனக் கொள்ளல் வேண்டும்; 'இவ=போல' என்னும் சொல்லை ஏன் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்றுல், இங்கே, பகவான்

விதிக்கக் கருதியது மூக்கு நுனியையே உண்மையாய் உற்று நோக்க வேண்டும் என்பது அன்று. மற்று, கண்களின் பார்வை வெளி விஷயங்களில் செல்லாமல் இரண்டு கண்களையும் ஒன்றாய்க் கூட்டி அந்தர்முகமாகும்படி செய்தல் என்க. மேலும், அது அந்தக்கரணத்தினுடைய அமைதியான நிலையைப் பொருந்தி நிற்பது என்பது பகவான் உபதேசிக்க விரும்பிய குறிப்பு. அல்லாது, மூக்கு நுனியைப் பார்ப்பதே உபதேசிக்கக் கருதியதானால், மனம் அங்கேதான் லயப்பட்டுவிடுமேயன்றி ஆத்மாவினிடத்து நிலைப்படாது. ஆனால், உண்மையில் ஆத்மாவினிடத்தன்றோ மனம் ஒரு நிலையாய் நிற்றலை இந்த அத்தியாயம் 25-வது சுலோகத்தில் பகவான் சொல்லுகிறார். ஆகவே, 'போல' என்னும் சொல் இல்லாதிருத்தலால், கண்களின் பார்வையை ஒன்றாய்க் கூட்டி உள்ளே வீழ்த்துதல்தான் 'ஸம்ப்ரேக்ஷ்ய' என்று கூறப்படுகின்றது. 'ப்ரஹ்மசாரி விரதம்' என்பது குருவிற்குப் பணிவிடை செய்தல், பிக்ஷை அன்னம் புஜித்தல் முதலியவற்றிலே இருத்தல். அவன் அவற்றை அநுஷ்டிப்பவனாக இருத்தல்வேண்டும் என்பது பொருள். 'மனதை அடக்கி' என்பது 'மனதின் விருத்திகளை (போக்குகளை) ஒடுக்கி' என்றபடி; 'என்னிடத்து' பரமேசுவரனை என்னிடத்து, காமவிகாரமுடையவனொருவன் ஸ்திரீயினிடத்துச் சித்தத்தை வைத்தவனாய் அவளையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருப்பவனாய் இருக்கிறான். ஆனால், அவன் அவளையே எல்லாரிலும் மேலானவளாகக் கொள்ளுகிறதில்லை. அவன் தன் அரசனையாவது, மஹாதேவனையாவது மேலாக, பிரபுவாகக் கொள்ளுகிறான். இந்த யோகியோவெனின், என்னையே எப்போதும் நினைக்கின்றான்; என்னையே மேலாக, பிரபுவாகக் கொண்டவனுமாக விருக்கிறான்.'' (13-14)

---

௧௫. யுஞ்ஜந்நேவம் ஸதா³த்மாநம் யோகீ³ நியதமாநஸ꞉ ।
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தா²மதி⁴க³ச்ச²தி ॥

15. யுஞ்ஜந்(1)-ஏவம்-ஸதா-ஆத்மாநம்(2)-யோகீ꞉ நியதமாநஸ꞉ ।
ஶாந்திம்-நிர்வாணபரமாம்(3)-மத்ஸம்ஸ்தாம்(4)-அதிகச்சதி ॥

ஏவம்	இவ்விதமாய் (மேலே சொன்ன விதமாய்)
ஆத்மாநம்	மனதை
ஸதா	எப்பொழுதும்
யுஞ்ஜந்	தியானத்தில் நிறுத்தினவனாய்,
நியதமாநஸ꞉	அந்தக்கரணத்தை அடக்கின
யோகீ	யோகியானவன்

மத்ஸம்ஸ்தாம்	என்னிடத்துள்ள (நானாகவேயுள்ள)
நிர்வாணபரமாம்	மோக்ஷத்தில் முடிவதான
சாந்திம்	சாந்தியை (ஒழிவை)
அதிகச்சதி	அடைகிறான்.

, மேற்சொன்ன விதமாய் மனதை எப்பொழுதும் தியானத்தில் நிறுத்தினவனாய், அந்தக்கரணத்தை அடக்கின யோகியானவன், என்னிடத்துள்ள, அதாவது நானாகவேயுள்ள மோக்ஷத்தில் சேர்ப்பிப்பதாகிய சாந்தியைப் பெறுகிறான்.

---

(1) "யுஞ்ஜந்=ஆத்மாநம் ஸமாதாநம் ஸமாதானம்செய்துகொண்டு." (சங்கரர்). "தியானஞ் செய்பவனாய்." (இராகவேந்திரர்).

(2) "ஆத்மாநம்=பரமாத்மாவை." (இராகவேந்திரர்).

(3) "நிர்வாணபரமாம்=அடையத் தகுந்ததாயிருக்கிற மோக்ஷத்தை யுடையது." (ஸ்ரீதரர்); "சுகத்தை முடிவானதா யுடைத்தா யிருக்கிற." (ராமானுஜர்); "சரீரம் போனவுடனே." (மத்துவர்).

(4) "மத்ஸம்ஸ்தாம் = என் அதீனத்தை" (சங்கரர்); "என்னிடத்திலிருப்பை." (ராமானுஜர்) (மத்துவர்); "என்னுடைய சொரூபமாக இருத்தலாகிய." (ஸ்ரீதரர்).

(ஸ்வ) முன் சொன்ன விதமாய்ச் செய்யப்பட்ட யோகத்தின் பலன் இன்னதென்பது இந்தச் சுலோகத்தில் சொல்லப்படுகிறது. (15)

கசு. நாத்யச்நதஸ்து யோகோऽஸ்தி ந சைகாந்தமநச்நத: |
நசாதிஸ்வப்நசீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுந ||

16. ந-அத்யச்நத:-து-யோக: அஸ்தி-ந-ச-ஏகாந்தம்-அநச்நத: |
ந-ச-அதிஸ்வப்நசீலஸ்ய-ஜாக்ரத:-ந-ஏவ-ச அர்ஜுந ||

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுனா!
யோக:	தியானயோகமானது
அத்யச்நத:	அதிகமா யுண்பவனுக்கு
நாஸ்தி	(கூடுவது) இல்லவே இல்லை ;
ஏகாந்தம் அநச்நத:	கொஞ்சம்கூட உண்ணாதவனுக்கும்
ந	இல்லை;
அதிஸ்வப்நசீலஸ்ய	அதிக தூக்கமுள்ளவனுக்கும்
நைவ	இல்லை;
அதிஜாக்ரத:	அதிகமாய் விழித்திருக்கிறவனுக்கும்
நைவ	இல்லை.

ஓ! அர்ஜுனா! தியானயோகமானது: அதிகமாய் உண்பவன், முற்றும் உணவை விட்டவன், அதிக தூக்கமுள்ளவன், முற்றும் தூக்கம் அற்றவன் இவர்களுக்கு இல்லை; அதாவது சித்திக்கமாட்டாது.

(சங்கர பாஷ்யம்) "இதில் யோகி அநுசரிக்க வேண்டிய ஆஹாரம் முதலிய நியமம் சொல்லப்படுகின்றது.

"அளவைவிட அதிகமாக உண்பவனுக்கு யோகம் சித்திக்கமாட்டாது. அதாவது, தன் ஆத்மஸம்மிதமான அந்நத்தைவிட அதிகமான உணவு தான் அளவைவிட அதிகமானது என்பது. எவ்வளவு அந்நம் சாப்பிட்டால் அஜீர்ணமாகாதிருக்குமோ, வேலை முதலியவைகளுக்கும் அநுகூலமாகவிருக்குமோ அதுதான் ஆத்ம ஸம்மிதமான அளவு. "யது ஹவா ஆத்மஸம்மிதமந்நம் ததவதி தந்ந ஹிநஸ்தி, யத்பூயோ ஹிநஸ்தி தத்யத்கநீயோ ந ததவதி" = "எந்த அந்நம் தன் அளவிற்கு ஏற்றதோ (தன் தேகத்திற்குப் போதுமானதோ) அந்த அந்நம் காப்பாற்றுகின்றது; அது கெடுதி செய்வதில்லை; அதைவிட அதிகமானது கெடுதி செய்கின்றது; அதைவிடக் குறைந்தது காப்பாற்றுவதில்லை" என்னும் சதபத ப்ராஹ்மணம் முதலிய சுருதிகளால், ஆஹாரத்தின் கிரமத்தைக் கண்டுகொள்க. ஆகையால், யோகியானவன் தன் தேகத்திற்குப் பொருந்திய அளவுக்கு அதிகமாகவாயினும் குறைவாகவாயினும் அந்நம் புஜிக்கக்கூடாது. அல்லது, "அந்நேந குக்ஷேர்த்வாவம்ஸௌ பாநீயேநைகமேவ ச | வாயோ: ஸஞ்சரணார்த்தம் து சதுர்த்தமவஸேஷயேத் ||" "அந்நத்திற்கும் கறிமுதலானவற்றிற்கும் பாதி வயிறு; ஜலத்திற்கு மூன்றுவது கால் வயிறு; காற்று ஸஞ்சரிப்பதற்காக மிகுந்த நான்காவது கால் வயிற்றை மிச்சப்படுத்திக் காலியாய் விடவேண்டும்" என்கிற யோகசாஸ்திர விதியின் அளவின்படி என்றும் சொல்லலாம்."

(ஸ்ரீதரர்) "த்வௌ பாகௌ பூரயேதந்நைஸ்தோயேநைகம் ப்ரபூரயேத் | மாருதஸ்ய ப்ரசாரார்த்தம் சதுர்த்தமவஸேஷயேத்." (யோகசாஸ்திரம்). (இந்தச் சுலோகத்தின் அர்த்தம் 4-வது அத்தியாயம் 30-வது சுலோகத்தி னடியில் காண்க.)

(மத்வர்) "நித்ராபயாஹாரச்வாஸ சேஷ்டாலஸ்யாதிவர்ஜநம் | க்ருத்வா நிமீலிதாக்ஷஸ்ஸந் யோகமப்யஸ்யேத் ||" (நாரதீய புராணம்) = சக்தி யுள்ளவன்: நித்திரை, உணவு, பயம், சுவாசம், சேஷ்டை, சோம்பல் முதலியவைகளை விட்டு, கண்களை மூடிக்கொண்டு யோகம் செய்யவேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஆனால்,

இந்தக் கீதா சுலோகமானது, ஆகாரம் முதலியவைகளை முற்றிலும் விடச் சக்தியற்ற யோகிவிஷயமாய்ச் சொல்லப்பட்டதாக அறியவேண்டியது.)

(ஸூ) இந்த ஆகாரவிஷயமாய், 4-வது அத்தியாயம், 30-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்க. (16)

கஎ. 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌵𑌿𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤𑌚𑍇𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।
𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌵𑌬𑍋𑌧𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌦𑍁𑌃𑌖𑌹𑌾 ॥

17. யுக்தாஹாரவிஹாரஸ்ய-யுக்தசேஷ்டஸ்ய-கர்மஸு |
யுக்தஸ்வப்நாவபோதஸ்ய-யோக:-பவதி-து:கஹா (1) ||

𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌵𑌿𑌹𑌾𑌰𑌸𑍍𑌯	சரியான ஆஹாரம் நடை இவையுடையவனும்,
𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌯𑍁𑌕𑍍𑌤𑌚𑍇𑌷𑍍𑌟𑌸𑍍𑌯	கர்மங்களில் சரியாய்ப் பிரவிருத்திக்கிறவனும்,
𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌵𑌬𑍋𑌧𑌸𑍍𑌯	சரியான தூக்கமும், விழிப்பும் உடையவனும் உள்ளவனுக்கு
𑌯𑍋𑌗𑌃	தியானயோகமானது
𑌦𑍁𑌃𑌖𑌹𑌾	துன்பத்தைப் போக்குகிறதாக
𑌭𑌵𑌤𑌿	ஆகின்றது.

சரியான (விதிக்கப்பட்ட அளவு) ஆஹாரமும், உலாவுதலுமுள்ளவனும், அவ்வாறே விதிக்கப்பட்ட காலத்திலே கர்மத்தில் பிரவிருத்திக்கிறவனும், அப்படியே விதிக்கப்பட்ட காலத்தில் தூக்கமும் விழிப்புமுடையவனுமிருக்கிற யோகிக்குத் தியானயோகமானது சகலமான சம்ஸார துன்பத்தையும் போக்குகிறதாக ஆகின்றது.

---

(1) "𑌦𑍁𑌃𑌖𑌹𑌾=சம்சார துக்கமென்னும் பிறவித் துன்பத்தைப் போக்குகிறதாக ஆகிறது." (மத்துவர்).

(ஸ்வ) சுலோகத்தில் யோக சித்திக்குப் பிரதிகூலமானவைகளைச் சொல்லி, இதில் யோகத்தை அடைவதற்கு அநுகூலமான ஆஹாராதி நியமமும் அதன்பிரயோஜனமும் சொல்லப்படுகின்றது. (17)

கஅ. 𑌯𑌦𑌾 𑌵𑌿𑌨𑌿𑌯𑌤𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ।
𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑍇𑌭𑍍𑌯𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑌾 ॥

18. யதா-விநியதம்-சித்தம்-ஆத்மநி(1)-ஏவ-அவதிஷ்டதே |
நிஸ்ப்ருஹ:-ஸர்வகாமேப்ய:-யுக்த: (2) - இதி-உச்யதே-ததா ||

யதா	எப்பொழுது
சித்தம்	சித்தமானது
விநியதம்	நன்றாய் அடக்கப்பட்டு
ஆத்மந்யேவ	ஆத்மாவினிடத்திலேயே
அவதிஷ்டதே	நிற்கின்றதோ
ததா	அப்பொழுது
ஸர்வகாமேப்ய: நிஸ்ப்ருஹ:	சகல விஷயங்களிலிருந்தும் ஆசை நீங்கினவனாய்,
யுக்த இதி	சமாதியை அடைந்தவனென்று
உச்யதே	சொல்லப்படுகிறான்.

எப்பொழுது சித்தமானது நன்றாய் அடக்கப்பட்டு, அதாவது வெளி விஷயங்களின் நினைவை விட்டு ஒரு நிலைப்பட்டு, ஆத்மாவினிடத்தில் மாத்திரம் நிற்கின்றதோ அப்பொழுது அவன் சகல விஷயங்களி னின்று ஆசை நீங்கினவனாய்க்கொண்டு சமாதியை அடைந்தவனென்று சொல்லப்படுகிறான்.

---

(1) "ஆத்மநி=தன் ஆத்ம ஸ்வரூபத்திலே." (சங்கரர்).

(2) "யுக்த:=யோகம் செய்ய அருகனென்று." (ராமாநுஜர்).

(ஸ்வ) அவன் யோகத்தைக் கூடினவனாக எப்பொழுது ஆகிறான் என்பது இதில் சொல்லப்படுகிறது. (18)

---

௧௯. யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா ।
யோகினோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மந: ॥

19. யதா-தீப:-நிவாதஸ்த:-ந-இங்கதே-ஸா உபமா-ஸ்ம்ருதா |
யோகிந:-யதசித்தஸ்ய-யுஞ்ஜத:-யோகம்-ஆத்மந: ||

நிவாதஸ்த:	காற்றில்லாதவிடத்திலிருக்கிற
தீப:	விளக்கானது (தீபமானது)
யதா	எப்படி
நேங்கதே	அசையாமலிருக்குமோ
ஸா	அது
ஆத்மந: யோகம்	ஆத்மசமாதியை
யுஞ்ஜத:	அநுஷ்டிக்கின்ற
யோகிந:	யோகியின்

யதசித்தஸ்ய — அடங்கிய சித்தத்திற்கு
உபமா — உபமானமாக
ஸ்ம்ருதா — நினைக்கப்படுகிறது.

'காற்றில்லாத இடத்திலிருக்கிற தீபமானது எப்படி அசைவற்றிருக்குமோ' அது ஆத்ம சமாதியை அநுஷ்டிக்கின்ற யோகியின் அடங்கிய சித்தத்திற்கு உபமானமாக, யோகத்தை அறிந்தவர்களால், எண்ணப்படுகிறது.

(சங்கரர்) "எந்த யோகியினுடைய சித்தமானது சமாதியைக் கூடியுள்ளதோ அந்த நிலையான சித்தத்திற்கு உவமை இதில் சொல்லப்படுகிறது. யோகத்தை அறிபவராய்ச் சித்தத்தின் போக்குகளைக் காணும் தன்மையையுடையவர்கள்; அந்தக்கரணம் அடங்கி ஸமாதியை அநுஷ்டிக்கின்ற யோகியின் சித்தத்திற்குக் 'காற்றில்லாதவிடத்திலே இருக்கின்ற தீபமானது எப்படி அசையாமலிருக்குமோ,' அதை உபமானமாகச் சொல்லுகிறார்கள்."

(ராமாநுஜர்) "யதசித்தஸ்ய=மனசுவாதீனமுடைய, யோகிந:=யோகியினுடைய, யோகம் யுஞ்ஜத:=யோகத்தைச் செய்கிற, ஆத்மந:=ஆத்ம சொருபத்திற்கு." (மற்றப் பாகத்தின் அர்த்தத்தில் வித்தியாசமில்லை).

(ஸ்வ) மதுசூதந ஸரஸ்வதி: இதற்கு ராமாநுஜர் மாதிரியே அந்வயம் செய்துகொண்டு 'ஆத்மந:' என்பதற்கு 'சித்தத்திற்கு' என்று அர்த்தம் செய்திருக்கிறார். ஆநந்தகிரி சொல்வதில், காற்றில்லாத இடத்திலிருக்கிற யோகியின், சித்தத்தினுடைய நிச்சலமான ஸ்திதிக்கு, உபமானமென்கிறார். ராமாநுஜர் முதலானவர்கள்: ஆத்மாவுக்கும், தீபத்திற்கும் உபமானம் என்கிறார்கள். (19)

உ०. யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா ।
யத்ர சைவாத்மநாத்மாநம் பஶ்யந்நாத்மநி துஷ்யதி ॥

20. யத்ர(1)-உபரமதே-சித்தம்-நிருத்தம்-யோகஸேவயா ।
யத்ர-ச-ஏவ-ஆத்மநா-ஆத்மாநம்-பஶ்யந்-ஆத்மநி-துஷ்யதி ॥

சித்தம் — சித்தமானது
யோகஸேவயா — யோகாநுஷ்டானத்தினால்
நிருத்தம் — அடக்கப்பட்டு
யத்ர — எப்பொழுது
உபரமதே — ஓழிவை அடைகின்றதோ

யத்ர	எப்பொழுது
(யோகீ)	(யோகியானவன்)
ஆத்மநா	சுத்தமான அந்தக்கரணத்தினால்
ஆத்மாநம்	பரமாத்மாவை
பச்யந்	பார்த்து (அநுபவித்துக்கொண்டு)
ஆத்மநி	தன் ஆத்மாவினிடத்திலேயே
துஷ்யதி	சந்தோஷிக்கின்றானோ
(தத்ர)	(அப்பொழுது)
(யோகஸித்திர்பவதி)	(யோகஸித்தி உண்டாகிறது.)

எப்பொழுது சித்தமானது யோகத்தை அனுஷ்டிப்பதனால் வேறு ஒன்றிலும் செல்லாமல் அடக்கப்பட்டு ஒழிவை அடைகின்றதோ, எப்பொழுது (யோகியானவன்) பரிசுத்தமான அந்தக்கரணத்தினால் பரமாத்மாவைக் கண்டு தெளிந்து, அதாவது அநுபவித்து, தன் ஆத்மாவினிடத்திலேயே சந்தோஷத்தைப் பெறுகின்றானோ அப்பொழுது அவனுக்கு யோகம் சித்திக்கின்றது.

---

* இந்த 20-21-22, சுலோகங்களை யோகசிரோபநிஷத்தில் அத். 3-ல் காண்க.

(1) "யத்ர=எந்த அவஸ்தையில்." (ஸ்ரீதரர், மதுசூதன ஸரஸ்வதி).

(சங்கரர்) "இவ்வாறு யோகப்பயிற்சியின் வலிமையினால் ஒரு நிலைப்பட்டு, 'காற்றில்லாத இடத்திலேயுள்ள தீபம்போன்று' இருப்பதாய், யோகாநுஷ்டானத்தினால் சித்தம் எவ்விடத்தும் செல்லாதபடி அடக்கப்பட்டு ஒழிவை அடைகின்றதோ, எப்பொழுது அவன் எங்கும் ஜோதிமயமாய் விளங்குகிற அறிவான ஆத்மாவாகிய பரமசைதந்யத்தை, சமாதியினால், பரிசுத்தமான அந்தக்கரணத்தினால் கண்டு தெளிந்து, தன் ஆத்மாவினிடத்தேயே சந்தோஷத்தைப் பெறுகின்றானோ."

(மத்துவர்) "ஆத்மநி=தன்னுடைய தேகத்திலேயே யிருக்கிற, ஆத்மாநம்=பரமாத்மாவை, ஆத்மநா=மனதினாலே, பச்யந்=பார்க்கிறவனாய், துஷ்யதி=சந்தோஷிக்கிறானே."

(ஸ்வ) இந்த 20-வது சுலோகம் உள்ளபடி பூர்த்தியாயில்லாததால் அதைப் பின் வருகிற 21, 22, 23 இந்தச் சுலோகங்களுடன் ஒன்று சேர்த்தே அநேகமாய் எல்லோரும் அந்வயப்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால், ஆனந்தகிரியும், பாஷ்யோத்கர்ஷ தீபிகைக்காரரும் "தத்ரை யோகஸித்திர்பவதி" என்பதை வாக்கிய சேஷமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்படியே இந்த 20-வது சுலோகத்தையும்

அடுத்த சுலோகங்களையும் தனியாய் அந்வயப்படுத்துவது சற்றுத் தெளிவாயிருக்கலாமென்று தனி அந்வயமே செய்யப்பட்டிருக்கிறது. (20)

உக. ஸுகமாத்யந்திகம் யத்தத் புத்³தி⁴க்³ராஹ்யமதீந்த்³ரியம் |
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்தி²தஶ்சலதி தத்த்வத: ||

21. ஸுகம்-ஆத்யந்திகம்-யத்-தத்-புத்தி³க்ராஹ்யம்-அதீந்த்ரி[யம்]
வேத்தி-யத்ர-ந-ச-ஏவ-அயம்-ஸ்தி²த:-சலதி-தத்வத:(1) ||

புத்³தி⁴க்³ராஹ்யம்	புத்தியினாலேயே கிரகிக்கத்தக்கதும்,
அதீந்த்³ரியம்	இந்திரியங்களைக் கடந்துநிற்பதும்,
ஆத்யந்திகம்	முடிவில்லாததுமான
ஸுகம் யத்	சுகம் எதுவோ
தத்	அதை (அந்தச் சுகத்தை)
(அயம்)	(யோகியானவன்)
யத்ர வேத்தி	எப்பொழுது அனுபவித்து அறிகின்றானோ,
(யத்ர)	(எப்பொழுது)
அயம்	இவன்
ஸ்தி²த:	ஆத்மஸ்வரூபத்தில் நிலைத்தவனாய்
தத்த்வத:	(அந்தத்) தத்வஸ்வரூபத்திலிருந்து
நைவ சலதி	அசைவதே இல்லையோ,
(தத்ர)	(அப்பொழுது)
(யோக³ஸித்³தி⁴ர்ப⁴வதி)	(யோகசித்தி உண்டாகின்றது.)

(இந்திரியங்களை வேண்டாத) புத்தியினால் மாத்திரம் கிரகிக்கப்படுவதும், இந்திரியங்களுக்கு எட்டாது அப்பால் உள்ளதும், முடிவில்லாததுமான அந்த இவ்வித இன்பத்தை யோகியானவன் எப்பொழுது அநுபவித்தறிகின்றானோ, எப்பொழுது இந்தஞானி ஆத்மஸ்வரூபத்திலே நிலைத்தவனாய் அந்த தத்வஸ்வரூபத்தினின்றும் அசைவதேயில்லையோ, அதாவது நழுவவே மாட்டானோ அப்பொழுது யோகசித்தி உண்டாகின்றது.

---

(1) "தத்த்வத:=பகவானுடைய ரூபத்திலிருந்து." (மத்துவர்). (21)

உஉ. யம் லப்³த்⁴வா சாபரம் லாப⁴ம் மந்யதே நாதி⁴கம் தத: |
யஸ்மிந்ஸ்தி²தோ ந து³:கே²ந கு³ருணாபி விசால்யதே ||

22. யம்(1)-லப்³த்⁴வா-ச-அபரம்-லாப⁴ம்-மந்யதே-ந-அதி⁴கம்-தத: |
யஸ்மிந்-ஸ்தி²த:-ந-து³:கே²ந-கு³ருணா-அபி-விசால்யதே ||

(அயம்)	(இவன்)
யம்	எதை (ஆத்ம லாபத்தை)
லப்த்வா	அடைந்து
அபரம் லாபம்	வேறு லாபத்தை
ததஃ	அதைக்காட்டிலும்
அதிகம்	மேலானதாக
ந மந்யதே	எண்ணுகிறதில்லையோ,
யஸ்மிந் ஸ்திதஃ	எதில் நிலைத்துநிற்கிறவன்
குருணா	மிகப் பெரிய
துஃகேந அபி	துக்கத்தினாலும்
ந விசால்யதே	அசைக்கப்படுகிறதில்லையோ
(ஸஃ யோகஃ)	(அதுவே யோகம்).

எந்த ஆத்ம லாபத்தை அடைந்திருக்கிறவன் பின்பு அதைக் காட்டிலும் (ஆத்மாவை அடைதலைக் காட்டிலும்) மேலானதாய் மற்றொன்றானது இருக்கின்றதென்று எண்ணுகிறதில்லையோ, எதில் (எந்த ஆத்மதத்துவத்தில்) நிலைத்து நிற்கிறவன், மிகப் பெரிய துன்பத்தாலும் அசைக்கப்படுவதில்லையோ அதுவே யோகம் என்பது.

---

(1)"யம்=எந்த யோகத்தை." (ராமானுஜர்). (22)

---

௨௩. தம் வித்யாத் துஃகஸம்யோக வியோகம் யோகஸம்ஜ்ஞிதம் ।
ஸ நிஶ்சயேந யோக்தவ்யோ யோகோऽநிர்விண்ணசேதஸா ॥

23. தம்-வித்யாத்(1)-துஃகஸம்யோகவியோகம்-யோகஸம்ஜ்ஞிதம்
ஸஃ-நிஶ்சயேந-யோக்தவ்யஃ-யோகஃ-அநிர்விண்ணசேதஸா||[தம்|

துஃகஸம்யோக வியோகம் தம்	துக்கத்தின் சேர்க்கையினின்றும் பிரிதலாகிய முன் சொன்ன அதை
யோகஸம்ஜ்ஞிதம்	யோகமென்கிற பெயரையுடையதாக
வித்யாத்	தெரிந்துகொள்ளவேண்டியது;
ஸஃ யோகஃ	அந்த யோகமானது
நிஶ்சயேந	நிச்சயத்தினாலும்,
அநிர்விண்ணசேதஸா	கலங்கி வருந்தாத மனதினாலும்
யோக்தவ்யஃ	அடையவேண்டியது.

துக்கத்தின் சேர்க்கையினின்றும் பிரிவதாகிய அதை, அதாவது துக்க சம்பந்தமில்லாமற் போவதை யோகம் என்கிற பெயரையுடைய

தாகத் தெரிந்துகொள்ளவேண்டியது. அந்த (முன் சொன்ன பயனை யுடைய) யோகத்தை நிச்சய புத்தியோடும், கலங்கி வருந்தாத மன தோடும் அதாவது உத்சாகத்தோடு கூடிய மனதோடும் அடையவேண் டும்; அதாவது, அப்படிப்பட்ட மனோநிலைதான் யோகசித்தியை அடை வதற்கு அநுஷ்டிக்கவேண்டிய ஸாதநம் என்பது கருத்து.

---

(1) 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍-'விந்த்யாத்,' என்று ஒரு பாடம்; அர்த்தமொன்றே.

( ) 'அநிர்விண்ணசேதஸா' என்பதை 'நிர்விண்ணசேதஸா' என்று பதம் பிரித்துக்கொண்டு, அதற்கு 'விஷயவைராக்கியத்தை யடைந்த மனதை யுடையவனாலே' என்று இராகவேந்திரர் அர்த்தம் செய்திருக்கிறார்.

(சங்கரர்) "இந்த அத்தியாயம் 20-வது சுலோகம்முதல் அநேக அடைமொழிகளால் சிறப்பித்துக் கூறப்பட்ட ஒருவித ஆத்மநிலை யாகிய எந்த யோகமானது உபதேசிக்கப்பட்டதோ அதனை, அதாவது, துக்கத்தின் சேர்க்கையினின்றும் பிரிவதையே, யோகமென்னும் பெய ருடையதாகத் தெரிந்துகொள்ளல்வேண்டும். 'யோகம்' என்றால், 'சேர்க்கை' 'கூடுதல்'; 'வியோகம்' என்றால், 'பிரிதல்'; துக்கத்தின் சேர்க்கையினின்று பிரிதற்கு, விபரீத லக்ஷணையால், 'யோகம்' என்று பெயரிடப்பட்டது. ('விபரீத லக்ஷணை' என்பது, மடையனைப் பார்த்து 'அதிபுத்திசாலி' என்பதுபோல. லக்ஷணையாவது-பெயராக வினையாக நிற்கும் சொற்கள் தம்தம் பொருளை உணர்த்தாது, அதன் தாத்பர்யப் பொருளை அறி வித்தல். உதாரணம்: 'இவன் மாடு' என்றவிடத்து, 'மாடு' என்னும் சொல் தன் பொருளை உணர்த்தாது, 'மடையன்' என்னும் தாத்பர்யத் தைக் காட்டிநிற்பது காண்க).

பகவான் யோகத்தின் பயனைக் கூறி முடித்து, பின்பு உறுதியும்-மனங்கலங்கி வருந்தாமையும்-அதாவது, உத்சாகமும் யோகத்திற்குச் சாத னங்கள் என்பதை விதிக்கும்பொருட்டு மறுபடியும் அந்த யோகத்தை யடையும் வழியை உபதேசிக்கத் தொடங்கி யோகத்தை உத்சாகத்தோ டும் நிச்சயத்தோடும் அநுஷ்டிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்." (23)

---

௨௪. 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌮𑌨𑌸𑍈𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌵𑌿𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ॥

௨௫. 𑌶𑌨𑍈𑌃 𑌶𑌨𑍈𑌰𑍁𑌪𑌰𑌮𑍇𑌦𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌧𑍃𑌤𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌯𑌾 ।
𑌆𑌤𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌂 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥

24. ஸங்கல்பப்ரபவாந்-காமாந்(1)-த்யக்த்வா-ஸர்வாந்-அசேஷத:(2)।
மநஸா(3)-ஏவ-இந்த்ரியக்ராமம்-விநியம்ய-ஸமந்தத:(4) ॥
25. சநை:-சநை:-உபரமேத்-புத்த்யா-த்ருதிக்ருஹீதயா ।
ஆத்மஸம்ஸ்தம்(5)-மந:-க்ருத்வா-ந-கிஞ்சித்-அபி-சிந்தயேத் ॥

ஸங்கல்ப ப்ரபவாந்	சங்கற்பத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட
ஸர்வாந்	சகலமான
காமாந்	காமங்களையும், ஆசைகளையும்
அசேஷத:	பாக்கியில்லாமல், அதாவது பற்றில்லாமல்
த்யக்த்வா	விட்டு
மநஸைவ	மனதினாலேயே
இந்த்ரியக்ராமம்	ஸகலமான இந்திரியக் கூட்டத்தை
ஸமந்தத:	எல்லாப் பக்கங்களினின்றும்
விநியம்ய	அடக்கி
த்ருதிக்ருஹீதயா	தைரியத்தினால் பற்றப்பட்ட
புத்த்யா	புத்தியினாலே
சநை: சநை:	மெள்ள மெள்ள (சிறுகச் சிறுக)
உபரமேத்	ஒழிவை அடையவேண்டும்;
மந:	மனதை
ஆத்மஸம்ஸ்தம் க்ருத்வா	ஆத்மாவினிடத்திலே நிற்பதாகச் செய்து
கிஞ்சிதபி	ஒன்றையும்
ந சிந்தயேத்	சிந்திக்கக்கூடாது.

ஸங்கல்பத்தை (நினைப்பைப்) பிறப்பிடமாகக் கொண்ட ஆசைகள் எல்லாவற்றையும் நிச்சேஷமாய், அதாவது பற்றில்லாமல் விட்டு, மனதினாலேயே இந்திரியக்கூட்டத்தை எல்லாப் பக்கங்களினின்றும் அட க்கி, தைரியத்தோடு கூடிய புத்தியினால், மெள்ள மெள்ள (சிறுகச் சிறுக) ஒழிவை அடையவேண்டும். மனதை ஆத்மாவினிடத்து நிலைத்த தாகச் செய்து, அதாவது ஸகலமும் ஆத்மா, அதைவிட வேறொன்று மில்லை என்கிற நிச்சயத்தோடு அவன் ஒன்றையும் சிந்திக்கக் கூடாது.

---

(1) "காமாந்=காமங்கள், சங்கற்பத்தினாலுண்டாவது; ஸ்பரிசத்தினா லுண்டாவது என இருவகைப்படும். சங்கற்பமென்பது இன்ன காரியத் தைச் செய்யவேண்டும், அதனால் இவ்வித பலனை யடையலாமென்று மனதி லுண்டாகும் தோற்றம், அல்லது மனதினால் உத்தேசிப்பது; இதனா லுண்டாவது புத்திராதிகள்மீது பற்று. ஸ்பரிசமென்பது ஞானேந்திரிய

கர்மேந்திரியங்கள் விஷயங்களில் சம்பந்தப்படுவது; இதனாலுண்டாவது ஸ்தோஷ்ணாதிகள். இவ்விரண்டு விதமாய்த்தான் காமங்களுண்டாகின்றன. முந்தியதை விட்டுவிடுதல்வேண்டும்; பிந்தியதை முழுதும் விடுவது அசாத்தியமானதால் அதன்மூலமா யுண்டாகும் சுகதுக்கங்களை விடவேண்டியது." (ராமாநுஜர்).

(2) "அஶேஷத꞉=சிறிதும் பற்றில்லாமல்." (சங்கரர்).

(3) "மநஸா=விவேகத்தோடு கூடின மனதினால்." (சங்கரர்).

(4) "ஸமந்தத꞉ = ஸகல விஷயங்களினின்றும்." (மதுசூதன ஸரஸ்வதி).

(5) "ஆத்ம ஸம்ஸ்தம்=ஸகலமும் ஆத்மாதான். அதைத் தவிர வேறொன்று மில்லை' என மனதை ஆத்மாவிடத்து நிலைத்ததாகச் செய்து." (சங்கரர்); "பரமாத்மாவிடத்து இருக்கும்படி". (மத்துவர்)

(ஸூ) இந்த 25-வது சுலோகத்தைத் தியான பிந்தூபநிஷத்தில் காண்க. இந்தச் சுலோகத்தில் விதிக்கப்பட்டிருக்கிற மனோநிலையே, அதாவது, மனம் அலையாது ஆத்மாவினிடத்து நிற்றல்தான் யோகத்தின் உயர்ந்த நிலை, பரம ரஹஸ்யம். 'மெள்ள மெள்ள' என்று சொல்வதினால், சாதாரணமாய் நாம் இவ் விஷயத்தில் படும் அவசரம் கூடாது என்று சுட்டிக் காட்டுவதைக் கவனிக்கவும். (24-25)

உ௬. யதோ யதோ நிஶ்சரதி மநஶ்சஞ்சலமஸ்திரம் ।
ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வஶம் நயேத் ॥

26. யத꞉-யத꞉-நிஶ்சரதி-மந꞉-சஞ்சலம்-அஸ்திரம் ।
தத꞉-தத꞉-நியம்ய-ஏதத்-ஆத்மநி-ஏவ-வஶம்-நயேத் ॥

சஞ்சலம்	அதிக சஞ்சலமானதும்
அஸ்திரம்	ஸ்திரமில்லாததுமான
மந꞉	மனமானது
யதோ யத꞉	எங்கெங்க நிமித்தம்
நிஶ்சரதி	அலைகின்றதோ
ததஸ்தத꞉	அததினின்றும்
ஏதத்	இந்த மனதை
நியம்ய	அடக்கி (திருப்பி)
ஆத்மந்யேவ வஶம்	ஆத்மாவிடத்திலேயே வசமாக
நயேத்	செய்துகொள்ளவேண்டும்.

அதிக சஞ்சலமானதும், ஆதலால் ஸ்திர மில்லாததுமான மனமானது எங்கெங்க விஷயங்களின் காரணமாக அலைகின்றதோ அந்தந்தக்

காரணமான விஷயங்களினின்றும் இந்த மனதைத் திருப்பி ஆத்மாவி னிடத்திலேயே வசமாக இருக்கும்படி செய்துகொள்ளவேண்டும்.

(சங்கரர்) ''மனதை ஆத்மாவினிடத்தில் நிலைக்கச் செய்வதற்கு முயலுகின்ற யோகியானவன் மற்றும் தெரிந்துகொள்ளவேண்டிய தென்ன வென்றால், மனம் நிலையற்று ஓடுவதற்குக் காரணம் சப்தம்முதலிய விஷயங்கள். இவ்வாறு சப்தாதி விஷயங்களினால் இழுக்கப்பட்டு அலைவது, பொய்யறிவைச் சார்ந்து நிற்கின்ற ஆசைமுதலிய மனதி னுடைய இயற்கையான குற்றத்தால் என்க. இந்திரிய விஷயங்கள், அவற்றின் உண்மையான தன்மை, இவைகளின் ஆராய்ச்சியினாலும், வைராக்கியத்தைப் பாராட்டுவதினாலும், அவை வாஸ்தவ மல்லவென்று நிச்சயித்துக்கொண்டு, இந்த மனதை விஷயங்களினின்றும் திருப்பி ஆத்மாவின் வசமாக ஆக்கவேண்டும். இவ்வாறு யோகப்பயிற்சியின் வலி மையினால் மனம் ஆத்மாவினிடத்திலேயே சாந்த மடைகின்றது.'' (26)

---

௨௭. 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌸𑌂 𑌹𑍍𑌯𑍇𑌨𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌂 𑌸𑍁𑌖𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌉𑌪𑍈𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌜𑌸𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌮𑌕𑌲𑍍𑌮𑌷𑌮𑍍 ॥

27. ப்ரசாந்தமநஸம்-ஹி-ஏநம்-யோகிநம்-ஸுகம்-உத்தமம் |
உபைதி-சாந்தரஜஸம்(1)-ப்ரஹ்மபூதம்(2)-அகல்மஷம் ||

𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌸𑌂	அதிக சாந்தமான மனதையுடையவனும்,
𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌜𑌸𑌂	இரஜோகுணம் அடங்கியும்,
𑌅𑌕𑌲𑍍𑌮𑌷𑌂	பாபம் அற்றவனும்,
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌂	ப்ரஹ்மமே தானாக (ஜீவன்முக்தனாக) இருக் [கிற
𑌏𑌨𑌂	இப்படிப்பட்ட
𑌯𑍋𑌗𑌿𑌨𑌂 𑌹𑌿	யோகியைத்தான்
𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌸𑍁𑌖𑌂	உத்தமமான சுகமானது
𑌉𑌪𑍈𑌤𑌿	வந்து அடைகின்றது.

அதிக சாந்தமடைந்த மனதையுடையவனும், இராஜோகுணம் அடங்கியும், பாபம் அற்றவனும், பரஹ்மமே தானும் அதாவது ஜீவன் முக்தனும் இருக்கிற இப்படிப்பட்ட யோகியைத்தான் பேரின்பம் நிச்சய மாய் வந்து அடைகின்றது.

---

(1) ''சாந்தரஜஸம்=மோஹம் முதலிய வருத்தங்களுக்குக் காரண மான ரஜோகுணம் நீங்கி.''(சங்கரர்).

(2) "ப்ரஹ்மபூதம்=ப்ரஹ்மமே தானாய் நிற்கின்ற யோகி,' ஸகலமும் ப்ரஹ்மம்தான்" என இவ்வித நிச்சயமுள்ளவன், ஜீவன்முக்தன் (அதாவது உயிருட னிருக்கும்போழுதே முக்தியடைந்தவன்". (சங்கரர்); "பிரகிருதி சம்பந்தம் அற்றுத் தன் சொரூபத்துட னிருக்கிற." (ராமாநுஜர்); "ப்ரஹ்மத்தியானத்தில் நிலைத்திருக்கிற." (இராகவேந்திரர்.)

(3) "அகல்மஷம்=தர்மம், அதர்மம் முதலியன; அதாவது புண்ணியம், பாபம் முதலியன அற்று." (சங்கரர்). (27)

---

௨௮. யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ விகதகல்மஷ: ।
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம் அத்யந்தம் ஸுகமஶ்நுதே ॥

28. யுஞ்ஜந்(1)-ஏவம்-ஸதா-ஆத்மாநம்(2)-யோகீ-விகதகல்மஷ:(3) ।
ஸுகேந-ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம்-அத்யந்தம்-ஸுகம்-அஶ்நுதே ॥

ஏவம்	இவ்விதமாய் (மேற்சொல்லிவந்த விதமாய்
ஸதா	எப்பொழுதும்
ஆத்மாநம் } யுஞ்ஜந் }	{ அந்தக்கரணத்தை ஆத்மாவினிடத்தில் ஸ்திரப்படுத்தி
விகதகல்மஷ:	பாபம் நீங்கிய
யோகீ	யோகியானவன்
ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம்	ப்ரஹ்ம சம்பந்தமுடைய
அத்யந்தம் ஸுகம்	முடிவில்லாத சுகத்தை
ஸுகேந	ஆயாசமின்றி (எளிதில்)
அஶ்நுதே	வியாபிக்கிறான்.

மேற்சொன்ன விதமாய் எப்பொழுதும் அந்தக்கரணத்தை ஆத்மாவினிடத்தில் ஸ்திரப்படுத்திக்கொண்டு பாபமெல்லாம் நீங்கினவனாகிய யோகியானவன் ப்ரஹ்மத்தோடு சேர்க்கையாகிய, ப்ரஹ்மமாகவே ஆதலாகிய முடிவில்லாத மேலான சுகத்தை ஆயாசமின்றி அதாவது சுலபமாக வியாபிக்கிறான்; அதாவது, ப்ரஹ்மாநந்த அநுபவ ரூபமாகவே இருக்கிறான் என்பது பொருள்.

(1) "யுஞ்ஜந்=தியானம் செய்கிற." (இராகவேந்திரர்).

(2) "ஆத்மாநம்=பரமாத்மாவை." (இராகவேந்திரர்).

(3) "விகதகல்மஷ:=ஸகலமான பிராசீன கர்மங்களையும் போக்கடித்துக்கொண்டிருக்கிற." (ராமாநுஜர்); "காமக்குரோதங்களைப் போக்கடித்துக்கொண்டிருக்கிற." (இராகவேந்திரர்).

(4) "ப்ரஹ்மஸம்ஸ்பர்சம் = ப்ரஹ்ம ஐக்கியமாகிய." (சங்கரர்); ப்ரஹ்மாநுபவரூபமான." (ராமாநுஜர்); "பகவானையடைந்தபிறகு தனக்குண்டாகும்." (இராகவேந்திரர்). (28)

---

௨௯. 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ।
𑌈𑌕𑍍𑌷𑌤𑍇 𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ॥

29. ஸர்வபூதஸ்தம்-ஆத்மாநம்-ஸர்வபூதாநி-ச-ஆத்மநி |
ஈக்ஷதே-யோகயுக்தாத்மா-ஸர்வத்ர-ஸமதர்சந: || [வனாய்

𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾	யோகத்துடன்கூடிய அந்தக்கரணமுடைய
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰	(ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுமுள்ள) சகல வஸ்துக்களிலும்
𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌃	சமமான பார்வையையுடையவன்
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂	(தன்) ஆத்மாவை
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌂	சகல பூதங்களிலு மிருப்பதாகவும்,
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	சகல பூதங்களும்
𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌚	ஆத்மாவினிடத்திலிருப்பதாகவும்
𑌈𑌕𑍍𑌷𑌤𑍇	காண்கிறான் (பார்க்கிறான்).

யோகத்துடன் கூடிய அந்தக்கரணமுடையவனாய் ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுள்ள எல்லா வஸ்துக்களையும் சமமாய்ப் பார்க்கிறவன் (தன்) ஆத்மாவைச் சகல பூதங்களினிடத்து இருப்பதாகவும், சகல பூதங்களும் (தன்) ஆத்மாவினிடத்து இருப்பதாகவும் காண்கிறான்.

(சங்கரர்) "எங்கும் ப்ரஹ்மம் ஒன்றுதான்' எனக் காண்பது யோகத்தின் பயன். சம்ஸாரம் முழுவதும் அற்றுப்போவதற்குக் காரணமானது என்னும் ஞானமானது இதில் உபதேசிக்கப்படுகிறது. யோகியானவன் தன் ஆத்மாவைச் சகல பூதங்களினிடத்தும் இருப்பதாகக் காண்கிறான். ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுமுள்ள சகல பூதங்களையும் ஆத்மாவினிடத்து ஒன்றாயிருப்பனவாகக் காண்கிறான். ப்ரஹ்மாமுதல் ஸ்தாவரம் வரையிலுமுள்ள வெவ்வேறான சகல பூதங்களினிடத்தும் வேற்றுமையில்லாத ஓரே பார்வையானது, அதாவது ப்ரஹ்மமும் தன் ஆத்மாவும் ஒன்றுதான் என்கிற அறிவானது எவனுக்கு உள்ளதோ, அவன்தான் '𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌃' 'எங்கும் ஓரே பார்வையை யுடையவன்.'

(ராமாநுஜர்) "பிரகிருதியிலிருந்து விடுபட்ட (பிரகிருதி விமுக்தமான) மற்ற ஜீவசொரூபமும், பிரகிருதி விமுக்தமான தன்னுடைய ஜீவ சொரூபமும் சமமானது என்பதாகவும், பிரகிருதி விமுக்தமான தன்னுடைய ஜீவ சொரூபமானது, பிரகிருதி விமுக்தமான மற்ற ஜீவ சொரூபத்திற்குச் சமமானது என்பதாகவும் பார்க்கிறவன் யோகி. (என்றால்) தன்னுடைய பிரகிருதி விமுக்த சொரூபத்தைப் பார்க்கிறவன், மற்றவர்களும் பிரகிருதி விமுக்தர்களானால் தன்னுடைய விமுக்த சொரூபத்திற்குச் சமானமானவர்களென்று நிச்சயங் கொள்ளுகிறவன் என்பது தாத்பர்யம். இந்த அர்த்தமானது, 5-வது அத்தியாயம் 19: இந்த அத்தியாயம் 33-சுலோகங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது."

(மத்துவர்) "பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களிலும் ப்ரஹ்மமானது ஒரேவிதமாயிருப்பதாகவும், சகல வஸ்துக்களும் ப்ரஹ்மத்தினிடத்திலிருக்கிறதாகவும் அறிகிறவன் யோகி என்பது தாத்பர்யம்."

(ஸூர) சகல பூதங்களிலுமுள்ள ஆத்மா தானே என்பதாயும், தன்னிடத்தில் சகல பூதங்களைச் சமமாயும் (என்றால்), ஆத்மா ஒன்றே என்பதாயும் பார்க்கிறவன்தான் யோகி என்பது தாத்பர்யம். அடுத்த சுலோகத்தையும் பார்க்க. இந்தச் சுலோகத்தின் அர்த்தத்தையே சொல்லுகிற சுருதிகள் அடியிற் குறிக்கப்படுகின்றன:—

"𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇 ॥" (ஈசாவாஸ்யோபநிஷத், 6-வது வாக்கியம்); "𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 । 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾 ॥" (கைவல்யோபநிஷத்)　(29)

---

௩௦. 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌮𑌯𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸 𑌚 𑌮𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

30. யோ-மாம்-பச்யதி-ஸர்வத்ர-ஸர்வம்-ச-மயி-பச்யதி |
தஸ்ய அஹம்-ந-ப்ரணச்யாமி-ஸ-ச-மே-ந-ப்ரணச்யதி ||

𑌯𑍋 𑌮𑌾𑌂	எவன் என்னை
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰	சகல பூதங்களினிடத்திலும்
𑌪𑌶𑍍𑌯𑌤𑌿	பார்க்கிறானோ,
𑌸𑌰𑍍𑌵𑌂	சகல பூதங்களை
𑌮𑌯𑌿	என்னிடத்திலும்
𑌪𑌶𑍍𑌯𑌤𑌿	பார்க்கிறானோ

தஸ்ய	அவனுக்கு
அஹம்	நான்
ந ப்ரணஶ்யாமி	பிரத்தியக்ஷமாகாமலிருக்கிறதில்லை;
ஸ ச	அவனும்
மே	எனக்கு
ந ப்ரணஶ்யதி	பிரத்தியக்ஷமாகாமலிருக்கிறதில்லை.

எவன், (பரமாத்மாவாகிய)என்னைச் சகல பூதங்களினிடத்தும் பார்க்கிறானோ, சகல பூதங்களை என்னிடத்திலும் பார்க்கிறானோ அவனுக்கு நான் காணப்படாமலிருப்பதுமில்லை, எனக்கு அவன் காணப்படாமலிருப்பது மில்லை.

(சங்கரர்) "எங்கும் ஆத்மா ஒன்றுதான்,' என்று காண்பதின் பயன் இதில் சொல்லப்படுகின்றது. சகலத்திற்கும் ஆத்மாவான வாசுதேவனாகிய என்னை, சகல பூதங்களிலும் எவன் காண்கிறானோ, ப்ரஹ்மா முதலான எல்லா பூதவர்க்கங்களையும், ஸர்வ ஆத்மாவான என்னிடத்தும் காண்கிறானோ அவனுக்கு அதாவது இவ்விதமாக, 'எங்கும் ஆத்மா ஒன்றுதான்' எனக் காண்பவனுக்கு, ஈசுவரனான நான் பிரத்தியக்ஷமாகாமலிருக்கமாட்டேன். அந்த ஞானியும் வாசுதேவனான எனக்குப் பிரத்தியக்ஷமாகாதவனாக இருக்கமாட்டான். நான் அவனைவிட்டும், அவன் என்னைவிட்டும் வேறுபடோம். நானே அவன், அவனே நான்; அவனுடைய ஆத்மாவும் என்னுடைய ஆத்மாவும் ஒன்றாதலின் என்க. தன் ஆத்மாவென்பது தனக்கு விளங்குவதாகவே இருக்கின்றதல்லவா?"

(ராமாநுஜர்)"ஸர்வபூத=பிரகிருதி விமுக்தர்களாயிருக்கிற சகலப் பிராணிகளுடைய சொரூபங்களுக்கு, ஸாம=சமமான சொரூபத்தை யுடையவனாக என்னை, ய:= எவன், பஶ்யதி= பார்க்கிறானோ அல்லது அறிகிறானோ, மயி=என்னுடைய சொரூபத்திற்குச் சமமான சொரூப முடையதாக, ஸர்வஞ்ச=பிரகிருதி விமுக்தமான சகல ஆத்ம சொருபத்தையும், ய:= எவன், பஶ்யதி= பார்க்கிறானோ, தஸ்ய= அப்படிப்பட்ட ஆத்மதரிசனமுள்ள யோகிக்கு, அஹம்=நான், ந ப்ரணஶ்யாமி=பிரத்தியக்ஷமாகவே யிருக்கிறேன். ஸ ச=அவனும், மே=எனக்கு, ந ப்ரணஶ்யதி=பிரத்தியக்ஷமாகவே யிருக்கிறான்."

(மத்துவர்)" என்னிடத்தில் சகல பூதங்களையும், சகல பூதங்களில் என்னையும் பார்க்கிறவனுடைய; ந ப்ரணஶ்யாமி= யோகக்ஷேமங்களுக்கு நான் பாத்தியப்படாமல் போகிறதில்லை; அவனும் என்னுடைய, ந ப்ரணஶ்யதி=பக்தனாகாமற் போகிறதில்லை.

(இராகவேந்திரர்) "𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌿=சகலமான பூதங்களும் என்னுடைய அதீனமானதென்று பார்க்கிருனே." (மற்றவை மத்துவர் போலவே). (30)

---

௩௧. 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌤𑍍𑌯𑍇𑌕𑌤𑍍𑌵𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌮𑌯𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

31. ஸர்வபூதஸ்திதம்-யஃ-மாம்-பஜதி-ஏகத்வம்(1)-ஆஸ்திதஃ ।
ஸர்வதா(2)-வர்தமாநஃ-அபி-ஸஃ-யோகீ-மயி(3)-வர்ததே ॥

𑌯𑌃	எவன்
𑌏𑌕𑌤𑍍𑌵𑌂 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃	(ஆத்மா ஒன்றுதான் என்கிற) ஏகத்துவத்தை நிலையாகக் கொண்டு
𑌮𑌾𑌂	என்னை
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂	சகல பூதங்களிலு மிருப்பதாக
𑌭𑌜𑌤𑌿	பஜிக்கிருனே
𑌸𑌃 𑌯𑍋𑌗𑍀	அந்த யோகியானவன்
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿	எப்படியிருந்தாலும், அதாவது எந்த மார்க்கத்தி லிருந்தபோதிலும்
𑌮𑌯𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇	என்னிடத்தில் இருக்கின்ருன்.

எவன் ஆத்மா எங்கும் ஒன்றுதான் என்கிற ஏகத்துவத்தை நிலையாகக் கொண்டு என்னைச் சகல பூதங்களிலு மிருப்பவனுகப் பஜிக்கின்ருனே அந்த யோகியானவன் எவ்விதமா (எந்த மார்க்கத்தில்) யிருந்தபோதிலும் என்னிடத்திலே இருக்கின்ருன்.

---

(1) "ஏகத்வம்=பூர்ணமான ஞானகாரமாய் ஒரேவிதமா யிருக்கிற." (ராமாநுஜர்).

(2) "ஸர்வதா-𑌸𑌰𑍍𑌵𑌥𑌾=எந்தக்காலத்திலும், என்ருல், தியான காலத்திலும், தியானம்விட்டு எழுந்திருந்த காலத்திலும்." (ராமாநுஜர்); "நன்மை தீமைகளைச் செய்தபோதிலும்." (இராகவேந்திரர்).

(3) "மயி வர்ததே=விஷ்ணுவின் பரமபதமாகிய என்னுடைய உயர்ந்த நிலையிலே நித்திய முக்தனுகவிருக்கிருன்." (சங்கரர்); "முக்தியை யடைகிருன்." (ஸ்ரீதரர்); "தன்னையும், மற்றப் பிராணிகளையும் என் ரூபத்திற்குச் சமமான ரூபமுடையவர்களாய்ப் பார்க்கிருன்." (ராமாநுஜர்); "மோக்ஷத்தி லிருக்கிருன்." (மத்துவர்).

(சங்கரர்) "நானே சகலத்திற்கும் ஆத்மாவாய், ஆத்மா ஒன்று எனக் காண்பவன் நானுகவே ஆதலின், அவ்வாறு ஒன்றெனக் கண்டு

அநுஷ்டிக்க முயலவேண்டும்' என்று முன் சுலோகத்தில் சொல்லிய ஸம்யக்தர்சநத்தையே மறுபடியும் குறித்துச் சொல்லி அந்த ஞானத்தின் பயன் மோக்ஷமேதான் எனப் பகவான் கூறுகிருர். உள்ளதை உள்ளபடி காணும் யோகியானவன் எவ்விதமாக இருப்பவனுயினும் என்னிடத்திலே, அதாவது விஷ்ணுவின் நிலையாகிய பரமபதத்திலே இருக்கிருன். அவன் நித்திய முக்தனே. எப்பொழுதும் மோக்ஷமடைந்தவனே. அவன் மோக்ஷமடையும் விஷயத்திலே ஒன்றினுலும் தடுக்கப் பட்டமாட்டான் என்பது பொருள்." (31)

---

௩௨. ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோऽர்ஜுந ।
ஸுகம் வா யதி வா து:கம் ஸ யோகீ பரமோ மத: ॥

32. ஆத்மௌபம்யேந-ஸர்வத்ர-ஸமம்-பஶ்யதி-ய:-அர்ஜுந |
ஸுகம்-வா-யதி-வா-து:கம்-ஸ:-யோகீ-பரம:-மத: ||

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுனு!
ய:	எவன்
ஆத்மௌபம்யேந	தன்னை உபமானமாகக் கொண்டு
ஸர்வத்ர	எங்கும் (சகல பூதங்களிடத்தும்)
ஸுகம் வா	சுகத்தையும்
யதி வா து:கம்	துக்கத்தையும்
ஸமம் பஶ்யதி	சமமாகப் பார்க்கிருனே
ஸ: யோகீ	அந்த யோகியானவன்
பரம: மத:	மேலானவனுக எண்ணப்படுகிருன்.

ஓ! அர்ஜுனு! எவன் தன்னையே திருஷ்டாந்தமாக்க் கொண்டு சகல பூதங்களிடத்திலும், சுகத்தையும் துக்கத்தையும் தன்னிடத்தில் போலவே சமமாகப் பார்க்கிருனே அவன் யோகிகளுக்குள் மேலானவனுக எண்ணப்படுகிருன். (அதாவது, சகல பூதங்களுடைய சுக துக்கங்களும் தன்னுடையதாகவே சம திருஷ்டியினுல் பார்க்கிறவன் உத்கிருஷ்டமான யோகி என்பது கருத்து.)

(சங்கரர்) "தானே உபமானமாக விருக்கும் தன்மையால், அதாவது தன்னையே திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு, சகல பூதங்களிடத்தும் எவன் சமமாய்ப் பார்க்கிருனே, அவன் சமமாக எதனைப் பார்க்கிருன்? என்ருல், எப்படித் தனக்குச் சுகம் இஷ்டமோ, அப்படியே சகலப் பிராணிகளின் சுகமும் அநுகூலம், (அதாவது, தன்னுடைய சுகத்தைத்

தான் எப்படி விரும்புகிருனே அப்படியே சகலப் பிராணிகளுடைய சுகமும் தனக்கு அநுகூலமானதென்று சமமாய்ப் பார்ப்பது). "வா" சப்தமானது "வ" என்கிற உம்மைப் பொருளில் நிற்பது. மேலும், எந்தத் துக்கமானது தனக்கு எப்படிப் பிரதிகூலமோ, அதாவது இஷ்டமில்லாததோ, அந்தத் துக்கமானது சகலப் பிராணிகளுக்கும் அவ்வாறே பிரதிகூலமானதே, கோரக்கூடாததே என்று இவ்விதமாகத் தன்னையே திருஷ்டாந்தமாக வைத்துகொண்டு, சகல பூதங்களிடத்தும் அவன் சுகத்தை அநுகூலமாகவும் துக்கத்தைப் பிரதிகூலமாகவும் தன்னிடத்தில் போலவே சமமாகப் பார்க்கிருன்.

ஒருவனுக்கும் தீங்கு செய்வதில்லை; ஹிம்ஸை செய்யாதவன் என்பது பொருள். எவன் இவ்வாறு ஹிம்ஸை செய்யாதவனாய் ஸம்யக்தர்சன நிஷ்டையில் நிலைத்துவிட்டானே அவன் யோகிகளுக்குள்ளே உயர்ந்தவனாக எண்ணப்படுகிருன்.

(ராமாநுஜர்) "பிரகிருதி விமுக்தமான தன்னுடைய ஆத்மசொரூபத்தில் பிரகிருதி சம்பந்தமான சுகதுக்கங்கள் எப்படி ஒட்டுகிறதில்லையோ, அது போன்று, மற்றப் பிராணிகளுடைய பிரகிருதி விமுக்த ஆத்ம சொருபத்தில் சுகதுக்கங்கள் ஒட்டுகிறதில்லை யென்று அறிகிறவன் சிரேஷ்டன். அல்லது பிறருக்கு உண்டாகும் சுகதுக்கங்களினல் எப்படித் தான் விருப்புவெறுப்புக்களை யடைகிறதில்லையோ, அப்படிப் போலவே, தனக்கு உண்டாகும் சுகதுக்கங்களினல் தான் விருப்புவெறுப்புக்களை யடையாமலிருக்கிறவன் சிரேஷ்டனென்பது என்னுடைய அபிப்பிராயம்."

(ஸ்ரீதரர்), (இராகவேந்திரர்) "தனக்குச் சுகத்தில் விருப்பும், துக்கத்தில் வெறுப்பும் எப்படியோ அதுபோல, மற்றப் பிராணிகளுக்கும் சுகம் உண்டாகவும், துக்கம் உண்டாகாமலிருக்கவும் கோரி, அவ்விதமாய் நடக்கிறவன் எவனே, அவன் சமமாய்ப் பார்க்கிற யோகியாயும், சிரேஷ்டனுயு மிருக்கிருனென்பது கருத்து."

(ஸ்வ) இந்தச் சுலோகத்தின் அந்தரங்கமான தாத்பர்ய மின்னதென்று நன்ருய் ஆலோசித்து அறியத்தக்கது. இதில் சொல்லப்பட்ட யோகியானவன், எல்லா யோகிகளுக்குள்ளும் அதிக மேலானவன் எனப்படுகிருன். முன் இந்த அத். 29-வது சுலோகத்தில் சொல்லப்பட்ட 'ஸமதர்சியை'விட, இவன் எவ்விதத்தில் உத்கிருஷ்டனுகிருன் என்பதை விசாரிப்போம். 'எங்கும் ஆத்மா ஒன்றுதான்,' எனப் புத்தி யுக்தியினல் அறிந்து தெளிந்து, நம்பிக்கைகொண்டு, ஆத்மாவினிடத்து மன்தை

எப்பொழுதும் நிலைக்கச் செய்வதற்கு முயலும் யோகிகளுக்குள், இங்குச் சொல்லப்பட்டவன், சர்வப்பிராணிகளுடைய ஆத்மாவும் தன் ஆத்மாவும் ஒன்றுதான் என்கிற சமத்வத்தை, ஸாக்ஷாத்தாய்க் கண்டு அனுபவிப்பவன். அவன் அச் சமத்வத்தை எதில் பார்க்கிறான் என்றால், சகலப் பிராணிகளுடைய சுகமும் துக்கமும் தன்னுடையதாகவே பிரத்யக்ஷமாய்ப் பார்க்கிறான். இது எவ்வளவு துர்லபம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? இப்படிப்பட்டவன் 'பரமயோகி' என்பதில் சந்தேகமும் உண்டோ? இந்தச் சமத்வத்தை சாக்ஷாத்தாய்க் கண்டு அனுபவித்து ஆத்மதர்சநத்தில் எப்பொழுதும் நிலைத்து நிற்கச் சுலபமான வழியைக் காட்டக் கருதி, பரமகிருபாளுவாகிய பகவான் சகலருக்கும் பிரத்யக்ஷமான ஒரு உபமாநத்தைக்கொண்டு அதைத் தெளிவாக மனதில் பதியும்படி செய்கிறார். "ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி" தன்னையே உபமானமாக வைத்துக்கொண்டு, சர்வ பூதங்களிடத்தும் சமமாய்ப் பார்ப்பது, அதாவது அவைகளுக்கு உண்டாகும் சுகதுக்கங்களைத் தன்னுடையதாகவே பார்ப்பது ஸம தர்சனம்.

எப்படியென்றால், இந்தத் தேகத்தோடுகூடி நிற்கும் நாம், சற்று ஆலோசித்துப் பார்ப்போமாகில் இதில் பலவித நாமரூபங்களால் வேறுபட்ட அநேக அவயவங்கள், உத்கிருஷ்டமென்றும், நிகிருஷ்டமென்றும் வியவகரிக்கிற அநேக பாகங்கள், அநேககோடி அணுக்கள் அமைந்திருந்தும், அவைகளில் ஒன்றுக்கு உண்டாகும் சுகதுக்கங்கள் மற்றவைகளுக்கு உண்டானதாகவே சமமான பாவனை இருக்கிறதல்லவா? 'காலில் முள் தைத்தால், கையானது அந்தத் துன்பத்தைத் தன்னுடையதாகவே நினைத்து உடனே பிடுங்குவதுபோல,' இந்தப் பிரபஞ்சமாகிய ஈசுவரனுடைய தேகத்தில் அமைந்திருக்கிற நாம் மற்றச் சகல பூதங்களுக்கும் உண்டாகிற சுகதுக்கம் நம்முடையதாகவே சமமாகப் பார்த்து, இவ்வுபமானத்தைக்கொண்டு இடைவிடாமல் ஸ்மரித்து, அதில் நிலைத்து நிற்பவன் பரமயோகி என்பது பகவான் கருத்து. 'அண்டத்திலுள்ளபடி பிண்டத்தில்' என்கிற பழமொழியை நாம் எல்லோரும் கேட்டிருக்கிறோமல்லவா ?

[அர்ஜுந உவாச]

௩௩. யோயம் யோகஸ்த்வயா ப்ரோக்த: ஸாம்யேந மதுஸூதந।
ஏதஸ்யாஹம் ந பஶ்யாமி சஞ்சலத்வாத் ஸ்திதிம் ஸ்திராம்॥

33. ய:-அயம்-யோக:-த்வயா-ப்ரோக்த:-ஸாம்யேந-மதுஸூதந।
ஏதஸ்ய-அஹம்-ந-பஶ்யாமி-சஞ்சலத்வாத்-ஸ்திதிம்-ஸ்திராம்॥

அர்ஜுந உவாச	அர்ஜுனன் சொன்னது:
ஹே மதுஸூதந	ஓ! மதுசூதன !
ஸாம்யேந	சமமாகப் பார்த்தலாகிய
யோऽயம் யோக:	யாதொரு இந்த யோகமானது
த்வயா ப்ரோக்த:	உம்மால் உபதேசிக்கப்பட்டதோ
ஏதஸ்ய	அந்த யோகத்தின்
ஸ்திராம்	நிலையான அல்லது ஸ்திரமான்
ஸ்திதிம்	இருப்பை
சஞ்சலத்வாத்	(மனம்) மிகச் சஞ்சலமுள்ளதாயிருப்பதனால்
அஹம்	நான்
ந பஶ்யாமி	பார்க்கிறதில்லை (அறியவில்லை.)

[அர்ஜுனன் சொன்னது]

ஓ! மதுசூதன! சமமாகப் பார்த்தலாகிய யாதொரு இந்த யோகமானது உம்மால் உபதேசிக்கப்பட்டதோ, அந்த யோகத்தினுடைய ஸ்திரமான இருப்பை, மனம் மிகச் சஞ்சலமுள்ளதாயிருப்பதனால், நான் தெரிந்துகொள்ளவில்லை; அதாவது, இதற்கு நிலையான இருப்பை நான் காணவில்லை.

(ராமாநுஜர்) (33, 34- சுலோகங்களைச் சேர்த்துப் பாஷ்யம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது,) "பிரகிருதி சம்பந்தத்தினால் தேவதைகள் வேறு, மனிதர்கள் வேறு, மற்ற ஜந்துக்கள் வேறு என்று தோற்றுகிறது. பிரகிருதி சம்பந்தம் நீங்கினால் எல்லா ஆத்மசொரூபங்களும் ஞானாகாரங்களானதினாலே தேவ மனுஷ்யாதி பேதமில்லாமல் சமமாகவேயிருக்கும். அப்படிப் பிரகிருதி சம்பந்தம் நீங்கிய ஞானாகாரமாயிருக்கிற ஆத்மாவும், பரமாத்மாவும் பேதமுள்ளவர்களானாலும், பரமாத்மாவுக்கு எப்படிப் பிரகிருதி சம்பந்தமும் கர்மாதிகளு மில்லையோ, அப்படிப்போல் பிரகிருதி விமுக்த ஆத்மாக்களுக்கு மில்லை. ஆகையால், ஜீவேசுவர ஆகாரபேதமான சமத்துவம் சொல்லப்பட்டது. அதை யறிகிறதுதான் சமதரிசனயோக மென்பதாகவும் சொன்னீர். இது அசாத்தியமாக எனக்குத் தோற்றுகிறது. ஏனென்றால், ஜீவனுடைய கர்மவாசனையினாலே அவனுடைய மனதானது வெகுகாலமாய் எப்போதும் விஷயங்களில் முழுகி, அந்த விஷயங்களிலுங்கூட ஒரு நிலையை அடையாமல் சஞ்சலமாகவே யிருக்கிறது. இப்படி வெகுகாலப் பழக்கத்தினால் வைரமேறி யிருக்கிற இந்த மனதை என்றைக்கும் காணாததும், கேட்காததும், நினைக்காததுமாகிய பிரகிருதி விமுக்த ஆத்மசொரூப சாம்யதரி

சனமாகிற தியானயோகத்தில் நிலையாய் வைத்திருக்கவேண்டுமென்றால், எப்படிச் சாத்தியமாகும்? பெருங்காற்றைத் தடுத்து நிறுத்துவது எப்படி அசாத்தியமோ, அப்படிப்போலத் தடுக்கக்கூடாததாயும், பலவந்தமாய்த் தன்னிச்சைப்படிப் பிரவேசிக்கிறதாயுமிருக்கிற மனதை நிறுத்துவது அசாத்தியமென்பது அர்ஜுனன் தாத்பர்யம்.''

(ஸ்ரீதரர்)''ப்ரஹ்மத்தியானத்தில் சலிக்காமலும் ஸ்திரமாயும் மனதை நிறுத்தவேண்டுமென்று சொன்னது அசாத்தியமானதென்பது அர்ஜுனன் தாத்பர்யம்.''

(இராகவேந்திரர்)'' சகலப் பிராணிகளிடத்தும் பரமாத்மாவை ஒரேவிதமாய்ப் பார்க்கிறதாகிற சமதரிசனயோகமும், சுகதுக்கங்களில் தன்னைப்போலவே சகலப் பிராணிகளையும் பார்க்கிறதாகிய சமதரிசன யோகமும் சொன்னீர். அதில் மனது நிலைத்திருப்பது அசாத்திய மென்பது அர்சுனன் தாத்பர்யம்.''

(ஹூ) சகல வஸ்துக்களையும், ப்ரஹ்மமாகவும், ப்ரஹ்மத்தைச் சகல வஸ்துக்களாகவும் சமமா யறியவேண்டுமென்பதாய்ச் சொன்னீர். மனது சஞ்சலமானதால் அப்படிப்பட்ட அபேதபுத்தி ஸ்திரமாயுண்டாவதுமிருந்த பிரயாசை யென்பது அர்ச்சுனன் தாத்பர்யம். (33)

---

௩௪. 𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿 𑌬𑌲𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥

34. சஞ்சலம்-ஹி-மந:-க்ருஷ்ண-ப்ரமாதி-பலவத்-த்ருடம் ।
தஸ்ய-அஹம்-நிக்ரஹம்-மந்யே-வாயோ:-இவ-ஸுதுஷ்கரம்॥

𑌹𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣	ஓ! கிருஷ்ண!
𑌮𑌨𑌃	மனமானது;
𑌚𑌞𑍍𑌚𑌲𑌂	மிகவும் சலனமுள்ளது;
𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿	கலங்கச்செய்கிற சுபாவமுடையது,
𑌬𑌲𑌵𑌤𑍍	அதிக பலமுடையது,
𑌦𑍃𑌢𑌂 𑌹𑌿	த்ருடமுடையது என்பது பிரஸித்தம்;
𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂	அதனுடைய அடக்குதலை
𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵	காற்றை (அடக்குவதை)ப்போல
𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌂	மிகவும் அஸாத்யமாக
𑌅𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇	நான் நினைக்கிறேன்.

ஓ! கிருஷ்ணசுவாமியே! மனதானது, சுபாவமாகவே அதிக சஞ்சலமுள்ளதாகவும், தேகேந்திரியாதிகளைக் கலங்கச்செய்கிற ஸ்வபாவ

முள்ளதாகவும், பிரபலமானதாகவும் அதாவது அடக்க முடியாததாகவும் த்ருடமுடையதாகவு மிருக்கிறது என்பது பிரஸித்தம். அந்த மனதை அடக்குதலானது காற்றை அடக்குவதுபோல் மிகவும் அசாத்தியமான தாக நான் எண்ணுகிறேன்.

(சங்கர பாஷ்யம்) "இதுவரையில் விவரித்துச் சொல்லப்பட்ட ஸம திரிசன லக்ஷணத்தோடு கூடிய இந்த யோகநிலையை அடைவது அருமையென்று கண்டு அதனைப் பெறுதற்கு வழியைத் தெரிய விரும்பி இந்த 33-34 ச்லோகங்களில் அர்ஜுனன் பகவானை வினவுகிறான்.

'க்ருஷ்ண' என்பது சுரண்டுதல் என்னும் பொருளையுடைய க்ருஷ் என்னும் பகுதியின் அடியாய்ப் பிறந்த சொல். பக்த ஜனங்களுடைய பாபம் முதலிய தோஷங்களைத் தேய்ந்துபோகும்படி சுரண்டிவிடுவதால் அவருக்கு 'க்ருஷ்ணன்' என்று பெயர். மனம் மிகவும் சஞ்சலமுள்ளது மாத்திரம் அன்று, கலக்கம் விளைவிக்கும் தன்மையதுமாம். தேகம் இந்திரியங்கள் முதலியவைகளைக் கலங்க அடித்து, நிலைகுலைந்து கெடுமாறும்படி பண்ணுகின்றது; பிறவற்றிற்கு வசமாகும்படி செய்கின்றது. அன்றியும், அது பிரபலமானது, என்றால் ஒருவனாலும் அடக்க முடியாதது. அதனைத் தடுத்து ஒடுக்குதல் மிக அரிது. மற்றும் அது த்ருடமானது. தந்து நாகம் அல்லது வருணபாசம் என்கிற மீனைப்போல வெட்ட முடியாதது. 'காற்றை யடக்குதல் முடியாதவாறுபோல' மேற் சொன்னவிதமான அந்த மனதை யடக்குதல் முடியாதது என்று எண்ணுகிறேன். காற்றை யடக்குவதைக்காட்டிலும் மனதை யடக்குவது அதிக அஸாத்தியமானதாக நினைக்கிறேன் என்பது கருத்து." (34)

[ஶ்ரீ ப⁴க³வாநுவாச]

அஸம்ஶயம் மஹாபா³ஹோ மநோ து³ர்நிக்³ரஹம் சலம் ॥
அப்⁴யாஸேந து கௌந்தேய வைராக்³யேண ச க்³ருஹ்யதே ॥

35. அஸம்ஶயம்-மஹாபாஹோ-மந:-துர்நிக்ரஹம்-சலம் |
அப்யாஸேந-து-கௌந்தேய-வைராக்யேண-ச-க்ருஹ்யதே ||

ஶ்ரீ ப⁴க³வாநுவாச	ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளியது:
மஹாபா³ஹோ	நீண்ட புஜங்களை உடையவனே!
மந:	மனதானது
து³ர்நிக்³ரஹம்	அடைவதற்கு மிகவும் பிரயாசையானது,
சலம்	சஞ்சலமுள்ளது,
அஸம்ஶயம்	இதிற் சந்தேக மில்லை;

𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! குந்தி புத்திரா! (அர்ஜுனா)
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌤𑍁	ஆனால், பழக்கத்தினாலும்
𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑍇𑌣 𑌚	வைராக்கியத்தினாலும்
𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇	அடக்கப்படுகின்றது.

[ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளியது]

ஓ! அர்ஜுனா! மனம் மிகச் சஞ்சலமானது. ஒருவனாலும் அடக்க முடியாதது. இதில் சந்தேகமில்லை. ஆனால், ஓ! குந்தி புத்ரா! அப்யாஸத்தினாலும் வைராக்கியத்தினாலும் அது அடக்கப்படுகின்றது.

(சங்கரர்) "ஓ! அர்ஜுனா! நீ சொல்லுகிறபடி மனமானது அடக்க முடியாதது, சஞ்சலமானது என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், அலைந்து திரிவதாகிய மனத்தின் போக்கானது அப்யாஸத்தினாலும் வைராக்யத்தினாலும் அடக்கப்படுகின்றது. அப்யாஸம் என்பது சித்தத்தினுடைய ஏகாக்ரம் என்கிற ஓர் நிலையிலே ஓரேவிதமான எண்ணத்தைத் திரும்பத் திரும்ப நினைத்தல், அதாவது தியானித்தல். வைராக்யம் என்பது இம்மை மறுமைகளில் வேண்டப்படும் இன்பங்களிலே அடிக்கடி தீங்குகளைக் காணும் பயிற்சியினால் உண்டாகும் நிராசை, அதாவது ஆசையின்மை. இவ்விதமாக அந்த மனம் அடக்கப்படுகின்றது, அதாவது தடுத்து ஒடுக்கப்படுகின்றது என்பது பொருள்."

(ராமாநுஜர்) "ஆத்மா குணஸ்வரூபமானதென்று அடிக்கடி நினைப்பதினால் அதனிடத்து உண்டாகும் விசேஷத்தினாலும், ஆத்மா அல்லாத மற்றவைகளிடத்துள்ள தோஷங்களைத் தெரிந்துகொள்வதனாலுண்டாகும் ஆசையின்மையினாலும் ஒருவிதமாய் மனம் நிக்கிரகிக்கப்படும்."

(ஸூ) "𑌉𑌪𑌰𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌨𑌸𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌕𑌾𑌰𑌤𑌯𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 । "𑌯𑍋𑌽𑌸𑌂𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑌨𑌾𑌮𑌾𑌸𑍌 𑌸𑌮𑌾𑌧𑌿𑌰𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ = "பிரவிருத்தியற்ற மனதினுடைய பிரம்ம சொரூபமாயிருக்கிற ஸ்திதி யெதுவோ அது, ஸம் ப்ரஜ்ஞாத=அசம்பிரஜ்ஞாத சமாதியென்று சொல்லப்படுகிறது." (யோகசாஸ்திரம்)

𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌚𑌾𑌕𑍍𑌷𑌯𑌂 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌮𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 । 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌤𑌵𑌿𑌰𑌤𑌿𑌂 𑌸𑌾𑌧𑍍𑌯𑍋 𑌯𑍇𑌨𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑌸𑌃 ॥ 𑌸𑍂𑌤𑌸𑌂𑌹𑌿𑌤𑌾 ॥

---

௩௬. 𑌅𑌸𑌂𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌾𑌪 𑌇𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 ।
𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌤𑍁 𑌯𑌤𑌤𑌾 𑌶𑌕𑍍𑌯𑍋𑌽𑌵𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑍁𑌪𑌾𑌯𑌤𑌃 ॥

36. அஸம்யதாத்மநா-யோக:-து:ஷ்ப்ராப-இதி-மே-மதி: |
வஶ்யாத்மநா-து-யததா-ஶக்ய:-அவாப்தும்-உபாயத: ||

அஸம்யதாத்மநா	அடக்கப்படாத மனதையுடையவனாலே (மனதை அடக்காதவனால்)
யோகஃ	யோகமானது
துஷ்ப்ராப இதி	அடைய முடியாதது என்பது
மே	என்னுடைய
மதிஃ	அபிப்பிராயம்;
து	ஆனால்,
வஶ்யாத்மநா	மனதை அடக்கி
யததா	முயற்சி செய்கிறவனால்
(யோகஃ)	(யோகமானது)
உபாயதஃ	(அப்பியாஸ, வைராக்கிய) உபாயத்தினால்
அவாப்தும்	அடைகிறதற்கு
ஶக்யஃ	சாத்தியமானது (முடியும்).

அடக்கப்படாத மனதையுடையவனாலே, அதாவது மனதை அடக்காதவனாலே யோகமானது அடைய முடியாதது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால், மனதை அடக்கி முயற்சி செய்கிறவனால் யோகமானது அப்பியாசம், வைராக்கியம் ஆகிய இவ் வுபாயங்களினால் அடைகிறதற்குச் சாத்தியமானது.

(ராமானுஜர்) "யோகம் என்று இங்குச் சொன்னது சமதர்சன யோகம். 'உபாயம்' என்பது முன் சொல்லப்பட்டிருக்கிற என்னுடைய ஆராதன ரூபமானதும், ஞானத்தை யடக்கிக்கொண்டிருக்கிறதுமான கர்மயோகமாகிற உபாயம்."

(ஸ்வா) அப்பியாஸத்தினாலும், வைராக்கியத்தினாலும் அடக்கப் படாத அந்தக்கரணத்தை யுடையவனால் யோகம் அடைய முடியாதென்பதும், ஆனால் அவ்வித அப்பியாஸ வைராக்கியங்களினால் அந்தக்கரணத்தை யடக்கிச் சுவாதீனம் செய்துகொண்டு மீண்டும் முயற்சியைச் செய்கிறவன், முன் சொன்ன உபாயத்தினால் யோகநிலையை அடையக் கூடியவன் என்பதும் பொருள். (36)

[அர்ஜுந உவாச]

௩௭. அயதிஃ ஶ்ரத்தயோபேதோ யோகாச்சலிதமாநஸஃ ।
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி ॥

37. அயதிஃ-ஶ்ரத்தயா-உபேதஃ-யோகாத்-சலிதமாநஸஃ।
அப்ராப்ய-யோகஸம்ஸித்திம்-காம்-கதிம்-க்ருஷ்ண-கச்சதி ॥

அர்ஜுந உவாச	அர்ஜுனன் சொன்னது:
ஹே க்ருஷ்ண	ஓ ! கிருஷ்ணா !
ஶ்ரத்தயா உபேத꞉	சிரத்தையுடன் கூடினவனாய்,
அயதி꞉	ஸ்வல்பப் பிரயத்தனமுள்ளவனாய்,
யோகாத் சலிதமாநஸ꞉	மரணகாலத்தில் யோகத்திலிருந்து தவறிய மனதையுடைய அவன்
யோகஸம்ஸித்திம் அப்ராப்ய காம் கதிம் கச்சதி	யோகத்தின் பலனான ஸம்யக்தர்சனத்தை (மெய்யறிவை) அடையாமல் என்ன கதியை யடைகிறான்?

[அர்ஜுனன் சொன்னது]

ஓ ! கிருஷ்ணா ! சிரத்தையுடன், அதாவது நம்பிக்கையுடன் கூடினவனாய், யோகத்தில் ஸ்வல்பப் பிரயத்தன முள்ளவனாய், மரணகாலத்தில் யோகத்திலிருந்து தவறிய மனதையுடையவன் யோகத்தின் பலனான ஸம்யக்தர்சனத்தை (மெய்யறிவை) அடையாமல், என்ன கதியை யடைகிறான் ?

(சங்கரர்) "ஒருவன், யோகாப்பியாஸத்தைக் கைப்பற்றுவதனால், இம்மையிலும், மறுமையிலும் மேன்மை யடைவதற்குக் காரணமான தர்மங்களை எல்லாம் துறக்கின்றான் ; யோகசித்தியின் பயனாகிய மோக்ஷ சாதனமான ஸம்யக்தர்சனமும் அவனுக்கு இன்னம் உண்டாகவில்லை. இப்படிப்பட்ட நிலையிலுள்ள யோகியானவன் மரணகாலத்தில் யோக மார்க்கத்தினின்றும் மனம் சலித்துத் தடுமாறுகிறவனாக ஆகவும் ஆக லாம். அப்படியாகும்விஷயத்தில் அவனுக்கு என்ன கேடு வருமோ என்று அர்ஜுனன் சந்தேகித்து, இதிற் கண்டபடி கேட்கிறான். யோகத்திலே பயனுண்டு என்னும் எண்ணமாகிய நம்பிக்கையை உடையவ னாய், ஆனால் யோகமார்க்கத்தில் (அதிக) பிரயத்தன மில்லாதவனாய், அதாவது சொற்ப முயற்சியுள்ளவனாய், மரணகாலத்தில் யோகமார்க் கத்தினின்று நினைவு தவறிய அவன், யோகத்தின் பயனாகிய ஸம்யக்தர் சனத்தை அடைகிறதில்லையன்றோ? மற்று அவன் என்ன கதியை அடை கிறான்? அதாவது, அவன் எல்லாம் கெட்டு நாசமடைந்துபோகி றானா ? என்று அர்ஜுனன் கேட்பது, அவ்விதமான அபாயம் இதி லில்லை என்பதை வெளிப்படுத்தும் பொருட்டு." (37)

---

௩௮. 𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑍋𑌭𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌶𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑍍𑌰𑌮𑌿𑌵 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑍋 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌵𑌿𑌮𑍂𑌢𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌥𑌿 ॥

38. கச்சித்-நோபயவிப்ரஷ்ட꞉-ச்சிந்நாப்ரம்-இவ-நச்யதி |
அப்ரதிஷ்டோ-மஹாபாஹோ-விமூட꞉-ப்ரஹ்மண꞉-பதி ||

𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋	ஓ ! புஜபலமுடையவனே!
𑌉𑌭𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌃	(கர்மமார்க்கம், யோகமார்க்கம்) இரண்டினின்றும் தவறி,
𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌃	ஆச்ரயம் (தங்கும் நிலே) அற்று,
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌥𑌿	ப்ரஹ்மத்தை யடையும் வழியில்
𑌵𑌿𑌮𑍂𑌢𑌃	மோஹம் அடைந்திருக்கிறவன்
𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑍍𑌰𑌮𑌿𑌵	சிதறிய மேகம்போல
𑌨 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍	அழிந்துபோவதில்லையா?

ஓ! புஜபலமுடைய கிருஷ்ணு! கர்மமார்க்கம், யோகமார்க்கம் இவை இரண்டினின்றும் தவறி, அதாவது இரண்டும் கெட்டு, ஆச்ரய மில்லாது அதாவது தான் தங்குவதற்கு நிலே யில்லாமல் ப்ரஹ்மத்தை அடையக் கூடிய மார்க்கத்திலே மயங்கிநிற்பவன் 'சிதறிய மேகம்போல' அழிந்து போகிறுனல்லவா ?

(ஸ்ரீதரர்) "எப்படி இரண்டும் கெட்டவனுகிறுன் என்ருல், யோகத்தில் பிரவேசித்ததிஞல், இப்போது கர்மாநுஷ்டானமு மில்லை. முன் செய்த கர்மங்களினுடைய பலனை ஈசுவரார்ப்பணஞ் செய்துவிட்டபடியால், கர்மங்களுடைய பலனுகிய சுவர்க்காதி சுகபலனு மில்லை. அப்பியாசம், வைராக்கியம் முதலிய சாதனங்களிலே முயற்சி யின்மையால் ஞானயோக சித்தியை யடைந்து மோக்ஷபலனை யடைய ஹேதுவுமில்லை யென்பதே. 'ஆச்ரயமற்ற' என்ருல், 'கர்மத்தில் பிடிப்புமில்லை, ஞான மடையும் வழியான யோகத்தில் பிடிப்புமில்லை' என்பதே. 'ப்ரஹ்மத்தை யடையு முபாயம்' என்பது 'மனேநிக்கிரகம் இந்திரிய நிக்கிரகம், சமதமாதிகள், விடாமுயற்சி, வைராக்கியம் முதலியவைகளே'. 'சிதறிப்போன மேகம்போல நாசமடைவது' என்ருல், 'கூட்டமாய்ச் சேர்ந்திருக்கிற மேகங்கள் காற்றிஞல் பிரிக்கப்பட்டுப் பல பிரிவுகளாய் விடுகின்றன. அப்படிப் பிரிந்த (சிதறின) மேகமானது தான் எதிலிருந்து பிரிந்ததோ அந்த மேகத்துடன் மறுபடியும் போய்ச் சேராமலும், அல்லது வேறே மேகங்களுடன் சேராமலும், அதன் சொரூபம் காணப்படாமலே நாசத்தை யடையும். ஆகையால், இது தியானத்திலிருந்து நழுவின யோகப்ரஷ்டனுக்குத் திருஷ்டாந்தமாய்ச் சொல்லப்பட்டது."

(ராமாநுஜர்) "𑌉𑌭𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌃=இரண்டும் கெட்டவன். எப்படி யென்றால், 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌃=சுவர்க்காதிப் பிராப்திக்கு ஹேதுவான கர்மபல னத் தியாகம் செய்வதினாலே சுவர்க்காதிகள் கிடைக்கும்படிச் செய்து கொள்ளாதவன். 𑌵𑌿𑌮𑍂𑌢𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌥𑌿=ப்ரஹ்மத்தை அடையத் தகுந்த யோகமார்க்கத்தை விட்ட அஞ்ஞானி."

(இராகவேந்திரர்) "𑌉𑌭𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌃=சுவர்க்கமு மில்லை, மோக்ஷமு மில்லை; அல்லது, சுவர்க்கப் பிராப்திக்குச் சாதனமான காமியகர்மமு மில்லை; மோக்ஷத்திற்குச் சாதனமான பூர்ணமான தியாநயோகமு மில்லை; அல்லது, இந்த உலக சுகமு மில்லை, பரலோக சுகமு மில்லை. ஆகை யால், இரண்டும் கெட்டவனென்று சொல்லப்பட்டது." (38)

---

௩௯. 𑌏𑌤𑌨𑍍𑌮𑍇 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌛𑍇𑌤𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌃 𑌸𑌂𑌶𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌛𑍇𑌤𑍍𑌤𑌾 𑌨 𑌹𑍍𑌯𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

39. ஏதத்-மே-ஸம்ஶயம்-க்ருஷ்ண-சேத்தும்-அர்ஹஸி-அஶேஷத:
த்வத்-அந்ய:-ஸம்ஶயஸ்ய-அஸ்ய-சேத்தா-ந-ஹி-உபபத்யதே॥

𑌹𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣	ஓ! கிருஷ்ண!
𑌏𑌤𑌤𑍍	இந்த
𑌮𑍇 𑌸𑌂𑌶𑌯𑌂	என்னுடைய சந்தேகத்தை
𑌅𑌶𑍇𑌷𑌤𑌃	மிச்ச மில்லாமல் (முழுவதும்)
𑌛𑍇𑌤𑍍𑌤𑍁𑌮𑍍	அறுக்க (நீக்குவதற்கு)
𑌅𑌰𑍍𑌹𑌸𑌿	தகுந்தவராயிருக்கிறீர்;
𑌹𑌿 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌃	ஏனென்றால், உம்மைவிட வேறொருவன்
𑌅𑌸𑍍𑌯 𑌸𑌂𑌶𑌯𑌸𑍍𑌯	இந்தச் சந்தேகத்தை
𑌛𑍇𑌤𑍍𑌤𑌾	நீக்குகிறவனாக
𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇	இல்லை.

ஓ! கிருஷ்ண! இந்த என்னுடைய சந்தேகத்தைப் பூர்த்தியாய் நீக்குவதற்கு நீங்களே தகுந்தவர். ஏனெனில், உங்களைக் காட்டிலும் வேறொருவர் (ரிஷியாவது தேவராவது) இந்தச் சந்தேகத்தைப் போக்கக் கூடியவனாக இல்லை. (39)

[𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚]

௪௦. 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌵𑍇𑌹 𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌰 𑌵𑌿𑌨𑌾𑌶𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌨 𑌹𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌕𑍃𑌤𑍍 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌤𑌾𑌤 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

40. பார்த-ந-ஏவ-இஹ-ந-அமுத்ர-விநாஶ:(1)-தஸ்ய-வித்யதே।
ந-ஹி-கல்யாணக்ருத்(2)-கஶ்சித்-துர்கதிம்-தாத-கச்சதி॥

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚	ஸ்ரீபகவான் அருளியது:
𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! அர்ஜுனா!
𑌤𑌸𑍍𑌯	அவனுக்கு (யோகப்பிரஷ்டனுக்கு)
𑌇𑌹	இந்த லோகத்தில்
𑌵𑌿𑌨𑌾𑌶𑌃	நாசமானது
𑌨𑍈𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	உண்டாகிறதேயில்லை;
𑌅𑌮𑍁𑌤𑍍𑌰	பரலோகத்திலும்
𑌨	நாசமானது உண்டாகிறதேயில்லை;
𑌹𑌿	ஏனென்றால்,
𑌤𑌾𑌤	அப்பா !
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌕𑍃𑌤𑍍 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍	சத்கர்மத்தைச் செய்த எவனும்
𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌂	இழிவான கதியை
𑌗𑌚𑍍𑌛𑌤𑌿	அடையமாட்டான்.

[ஸ்ரீ பகவான் அருளியது]

ஓ! அர்ஜுனா! யோகப்பிரஷ்டனுக்கு இந்த லோகத்தில் நாசமானது உண்டாகிறதே யில்லை; பரலோகத்திலும் அவனுக்குக் கேடு உண்டாகிறதே யில்லை; ஏனென்றால், அப்பா!(குழந்தாய்!) ஸத்கர்மத்தைச் செய்த எவனும், (முந்தின ஜன்மத்தைக் காட்டிலும்) இழிவான கதியை அடையவேமாட்டான்.

---

(1) "விநாஶ:=இந்த ஜன்மத்தைப் பார்க்கிலும் தாழ்ந்த ஜன்மமானது." (சங்கரர்); "தோஷமாவது,நரகப்பிராப்தியாவது." (ஸ்ரீதரர்); "சுவர்க்காதி அனுபவம், ப்ரஹ்மப் பிராப்தி இவைகளில் தான் கோரினது கிடைக்காமற் போகிறதாகிய விநாசம்; அல்லது, ஆரம்பித்த காரியத்தை மத்தியில் விட்டுவிட்டதினா லுண்டான தோஷம்." (ராமானுஜர்); "இந்த லோகத்தில் மிருகாதி ஜன்மங்களாவது, பரலோகத்தில் நரகமாவது." (இராகவேந்திரர்).

(2) "கல்யாணக்ருத்=ஆஸ்திக புத்தியுடன் கொஞ்சக் காலமாவது ஈசுவரத்தியானாதி செய்த." (இராகவேந்திரர்).

(சங்கரர்) "தாத' என்னும் சொல் தந்தையை (அப்பனைக்) குறிப்பது. தகப்பன் தன்னை மகன் வடிவமாகச் செய்கிறான்; ஆதாவது, தன்னுடைய இந்திரியத்தின் மூலமாகத் தானே தன் வடிவமான புத்திரரூபமாகப் பரிணமிக்கிறான். ஆதலின், 'தாத' 'அப்பன்' எனப்படுகிறான். இவ்வாறாக, தகப்பனே மகன் ஆதலால், மகனும் 'தாத' 'அப்பன்' என

அழைக்கப்படுகிறான். சிஷ்யன், மகன் அல்லாதவனாயிருந்தாலும் புத்திரன்போலுள்ளமையால் இங்குப் பகவான் அர்ஜுனனைத் 'தாத' என்று சொன்னது."

சக. ப்ராப்ய புண்யக்ருதாம் லோகாந் உஷித்வா ஶாஶ்வதீஸ்ஸமா:
ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே ‖

41. ப்ராப்ய-புண்யக்ருதாம்-லோகாந்-உஷித்வா-ஶாஶ்வதீ:-ஸமா: |
ஶுசீநாம்-ஶ்ரீமதாம்-கேஹே-யோகப்ரஷ்ட:-அபிஜாயதே ‖

யோகப்ரஷ்ட:	யோகத்தினின்றும் தவறினவன்
புண்யக்ருதாம்	புண்ணியம் செய்தவர்களுடைய
லோகாந்	உலகங்களை
ப்ராப்ய	அடைந்து
ஸமா: ஶாஶ்வதீ:	நீடித்த வருஷங்கள்
உஷித்வா	வஸித்து
ஶுசீநாம்	பரிசுத்தர்களான
ஶ்ரீமதாம்	ஐசுவரியமுள்ளவர்களுடைய
கேஹே	வீட்டில்
அபிஜாயதே	பிறக்கிறான்

யோகப் பிரஷ்டனானவன் (அசுவமேதாதி கிரதுக்கள் செய்த) புண்ணியமுடையவர்கள் எந்த லோகத்தை யடைவார்களோ அந்த லோகத்தை யடைந்து வெகுகாலம் சுகமாயிருந்து, (பிறகு) சதாசாரமுள்ள ஐசுவரியவான்களுடைய வீட்டில் மறுபடியும் பிறக்கிறான்.

(சங்கரர்) "ஆனால், இந்த யோகப்பிரஷ்டனுக்கு என்ன கதி ஆகின்றது என்பது சொல்லப்படுகின்றது. சந்தர்ப்பத்தை யனுசரித்து நோக்குமிடத்து, இதில் யோகமார்க்கத்தில் பிரவிர்த்தித்த சந்யாஸியைப் பற்றிச் சொல்வதாகத் தெரியவருகிறது. அவன் புண்ணியம் செய்தவர்களுடைய, அதாவது அஸ்வமேதயாகம் முதலிய நல்வினை செய்தவர்களுடைய உலகங்களுக்குப் போய், அங்கே அநேக வருஷங்கள் வாசம் செய்து, அங்குள்ள அனுபவிக்க வேண்டிய சுகங்களை அனுபவித்து முடிந்தபிறகு, சம்பத்தும் சுசியும், அதாவது சாஸ்திரத்திற் சொன்னபடி எதையும் செய்கிறவர்களின் வீட்டிலே மறுபடியும் பிறக்கிறான்."

(ராமானுஜர்) "எந்த விஷயாநுபவத்தை யிச்சித்து யோகத்தை விட்டுவிட்டானோ, அந்த விஷயாநுபவத்தைப் புண்ணிய லோகங்களில் தனக்கு இஷ்டமான காலம்வரையி லனுபவித்து, பிறகு இந்த லோகத்தில்

சுத்தமும், ஐசுவரியமுமுள்ள யோகத்திற்கு யோக்கியமான குலத்தில் பிறக்கிறான். (41)

---

௪௨. அயவா யொகிநாமெவ குலெ ஹவதி யீமதாம் ।
ஏதத்ஹி தூர்லஹதரம் லொகெ ஜந்ம யதீஜூரும் ॥

42. அய்வா-யோகிநாம்-ஏவ-குலே-ஹவதி-யீமதாம் ।
ஏதத்-ஹி-தூர்லஹதரம்-லோகே-ஜந்ம-யத்-ஈத்ருசம் ॥

அயவா	அல்லது
யீமதாம்	ஞானிகளான
யொகிநாம் ஏவ	யோகிகளாகவேயுள்ளவர்களுடைய
குலெ	குலத்தில்.
ஹவதி	ஜனிக்கிறான் (பிறக்கிறான்);
ஈஜூஸம்	இப்படிப்பட்ட
ஜந்ம	பிறவியானது
யத்	எதுவோ
ஏதத்ஹி	அது தான்
லொகெ	இந்த லோகத்தில்
தூர்லஹதரம்	கிடைப்பது மிக அரிது (துர்லபம்).

அல்லது, அவன் ஞானவான்களான யோகிகளாகவே யுள்ளவர்களுடைய வம்சத்தில் பிறக்கிறான். இப்படிப்பட்ட ஜன்மம் எது உள்ளதோ அது கிடைப்பதுதான் இவ்வுலகத்தில் மிகவும் துர்லபமானது; அதாவது அடைவதற்கு வெகு அரிது.

(சங்கரர்) “அல்லது, சம்பத்துள்ளவர்களுடைய வீட்டில் பிறவாமல் அவர்களினின்று வேறுபட்ட ஞானிகளான யோகிகளாகவேயுள்ள தரித்திரர்களுடைய குலத்தில் அவன் பிறக்கிறான். இப்படித் தரித்திரர்களான யோகிகளின் குலத்திலே பிறத்தலென்பது முந்தினதை யுத்தேசித்துப் பெறுவதற்கு மிக்க அரிதானது, மிக துர்லபமானது.”

(ராமாநுஜர்) முந்திய ஸ்லோகத்தில் குறிக்கப்பட்டவன்: சொற்ப காலம் யோகாப்பியாசஞ் செய்து பிறகு விட்டவன். இந்தச் ஸ்லோகத்தில் குறிக்கப்பட்டவனோ, வெகுகாலம் யோகம் செய்துவந்து சித்தியுடையும் சமயத்தில் விட்டுவிட்டவன். ஏதத்=இதானது, என்றால், முந்திய ஸ்லோகத்தில் சொன்ன பிறவியும், இந்தச் ஸ்லோகத்தில் சொன்ன பிறவியும் உலகத்தில் பிரகிருதியை நாடி நடப்போர்க்குக் கிடைப்பது துர்லபம்.

(ஸ்வ) இந்தச் சுலோகத்தில் 'ஏதத்' என்பதற்கு, 'தரித்திரர்களான யோகிகள் குலத்தில் பிறத்தல்' என்றும், 'இப்படிப்பட்ட பிறவிதான் அதிக துர்லபம்' என்றும் பகவான் சொல்வதாகச் சங்கரர் செய்திருக்கிற தாத்பர்யம் மிகவும் உசிதமும் அனுபவத்தோடு பொருந்தியுதாயு மிருப்பதாகத் தோற்றுகிறது. ஏனெனில், ஆத்மஞான நிலையை அடைய முயற்சி செய்யும் யோகிக்கு ஐசுவர்யம் முதலிய இந்தச் சம்பத்துகள், பிரதிபந்தங்களாக ஆகுமே யன்றி, சாதனங்களாக ஆகமாட்டா. ஆனால், தாரித்திரியமோ, அனுபவ ஞானத்தை அடைவித்து, அதில் உறுதியாக நிற்கும்படி செய்வதில் நிகரற்ற சாதனமாக இருக்கின்றது. ஐசுவரியத்தில் மூழ்கிக் கிடக்கிறவனுக்கு, புழுமுதல் சகலப் பிராணிகளுக்கும், 'ஈசுவரன்தான் அமுதளிக்கின்றான்' என்பது பிரத்யக்ஷமாக விளங்கும்படியான பிரகிருத மெங்கே? மற்று, நித்திய தரித்திரனாய், அன்று சாப்பாட்டுக்கே எதிர்பார்க்க இடமில்லாதவனாய், ஆனால் ஈசுவரனையே கதியாக நம்பி இருக்கிற ஒருவனுக்கு எதிர்ச்சையாய், ஈசுவரனுடைய பிரேரபணையினால் மற்றொருவன் வலுவில் ஆகாரம் கொண்டு வந்து கொடுக்கும்போதல்லவோ ? 'பகவான், தன்னையே அடைக்கலமாகக் கொண்டவர்களுடைய யோக க்ஷேமத்தை வகிப்பதாக வாக்களித்திருப்பது ஏட்டெழுத்தல்ல' என்று பிரத்தியக்ஷமாய் விளங்கவும் திடப்படவும் பிரகிருதம் ஏற்படுகின்றது.

இந்தச் சுலோகத்தின் முதலுள்ள 'அதவா' என்பதற்கு 'முன் தேகம் போனவுடன்' என்று சங்கரானந்தர் தாத்பர்யம் செய்கிறார். அதாவது, 41-வது சுலோகத்தில் சொன்னவன்போல் அநேக காலம் கழிந்த பிறகு பிறவாமல் உடனே யோகியின் குலத்தில் ஜனிக்கிறான் என்பது கருத்து. (42)

ஸ்ரீ. தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம் ।
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தந ॥

43. தத்ர(1)-தம்-புத்₃தி₄ஸம்யோக₃ம்-லப₄தே-பௌர்வதை₃ஹிகம்।
யததே-ச-தத:-பூ₄ய:(2)-ஸம்ஸித்₃தௌ₄-குருநந்த₃ந ॥

ஹே குருநந்தந	ஓ! குருவம்சத்தில் ஜனித்தவனே!
தத்ர	அதில்
பௌர்வதேஹிகம்	பூர்வதேகத்தில் உண்டான
தம்	அந்த
புத்திஸம்யோகம்	ஆத்மவிஷய புத்தியோடு சேர்க்கையை
லபதே	அடைகிறான்;

ச	மேலும்
ஸம்ஸித்தௌ	மோக்ஷவிஷயத்திலே
தத꞉	அதைக்காட்டிலும்
பூ⁴ய꞉ யததே	அதிகமாகப் பிரயத்தினஞ் செய்கிறான்.

ஓ! குருவம்ஸத்திய அர்ஜுனா! (அந்த யோகப் பிரஷ்டன்) முந்தின சரீரத்தி லுண்டான, அந்த ஆத்மவிஷயபுத்தியோடு சேர்க்கையை மறுபடி அடைகிறான். மேலும், மோக்ஷ விஷயத்திலே, முந்தின ஜன்மத்தில் செய்த பிரயத்தினத்தைவிட அதிகமான பிரயத்தினத்தை (இப்போது) செய்கிறான்.

---

(1) "தத்ர=அங்கே என்பது யோகிகளுடைய குலத்திலே." (சங்கரர்;) "அந்த ஜன்மத்திலே." (மதுசூதன ஸரஸ்வதி), (ஸ்ரீதரர்).

(2) "பூ⁴ய꞉=அதிகமாய்." (சங்கரர்), (இராகவேந்திரர்); "மறுபடியும்." (சங்கரானந்தர்).

(ஸ்ரீ) ராமாநுஜர் தவிர மற்றப் பாஷ்யக்காரர்களும், வியாக்கியானதாக்களும், 44-வது சுலோகத்தின் முந்திய அரைச்சுலோகத்தை இந்தச் சுலோகத்துடன் சேர்த்து அந்வயம் செய்திராவிட்டாலும், இந்தச் சுலோகத்துடன் சேர்ந்ததாகவே அர்த்தஞ் செய்திருக்கிறார்கள். மேலும், பிந்திய அரைச் சுலோகத்திற்குச் செய்திருக்கிற அர்த்தமானது, இந்த 43-வது சுலோகத்திற் குறிக்கப்பட்டவனைக் குறிக்காமல் வேறே தனியான ஜிஜ்ஞாஸுவைக் குறிக்கிறது. அடுத்த சுலோகத்தின் முந்திய பாகத்தை ராமாநுஜர் இத்துடன் சேர்த்து அர்த்தஞ் செய்திருக்கிறார். (43)

---

௪௪. பூர்வாப்⁴யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஸோ(அ)பி ஸ꞉ ।
ஜிஜ்ஞாஸுரபி யோக³ஸ்ய ஸ²ப்³த³ப்³ரஹ்மாதிவர்ததே ॥

44 பூர்வாப்⁴யாஸேந-தேந-ஏவ-ஹ்ரியதே-ஹி-அவஸ²꞉-அபி-ஸ꞉ ।
ஜிஜ்ஞாஸு꞉-அபி-யோக³ஸ்ய-ஸ²ப்³த³ப்³ரஹ்ம-அதிவர்ததே ॥

ஹி	ஏனென்றால்,
ஸ꞉	அவன் (யோகப்பிரஷ்டன்)
அவஸோ²(அ)பி	(யோகத்தை நாடுவதிலே) விருப்பமில்லாதவனாயினும்
பூர்வாப்⁴யாஸேந தேநைவ	அந்தப் பூர்வ (ஜன்ம) அப்பியாஸத்தினாலேயே
ஹ்ரியதே	இழுக்கப்படுகிறான்;

யோகஸ்ய ஜிஜ்ஞாஸுரபி	யோகத்தை அறிய விரும்புகிறவனும் கூட
சப்தப்ரஹ்ம	சப்தப்ரஹ்மத்தை (வேதோக்தகர்மபலனை)
அதிவர்த்ததே	அதிக்கிரமிக்கிறான் (கடந்து நிற்கிறான்).

ஏனெனில், அந்த யோகப்பிரஷ்டன் யோகத்தை நாடுவதிலே விருப்ப மில்லாதவனாயினும், முந்திய பிறவியில் செய்யப்பட்ட அப்பியாஸத்தினாலேயே யோகமார்க்கத்தில் இழுக்கப்படுகிறான். யோகத்தை அறிய விரும்புகிறவனும்கூட சப்தப்பிரஹ்மத்தை, அதாவது வேதத்திற் கூறிய கர்மங்களை அனுஷ்டித்தலின் பயனை, அதிக்கிரமிக்கிறான், (கடந்துவிடுகிறான்.)

(சங்கர பாஷ்யம்) "யோகப்ரஷ்டன் முந்தின சரீரத்தி லுண்டான ஞானத்தோடு கூடுதல் எப்படி என்பது இதிற் சொல்லப்படுகிறது. அந்த யோகப்பிரஷ்டனுக்கு யோகத்தை மறுபடி அனுஷ்டிப்பதில், இஷ்ட மில்லாவிடினும், முந்தின ஜன்மத்திற் செய்த பலமான அந்த அப்பியாஸத்தினாலேயே, சித்தியை யடையும் வழியில் பலவந்தமாய் இழுத்துக்கொண்டு போகப்படுகிறான். யோகாப்பியாஸத்தினா லுண்டாகும் ஸம்ஸ்காரத்தை (வாஸனையைப்) பார்க்கிலும் அதிக வலியதான அதர்மம் முதலிய கர்மத்தைச் செய்யாதவனாயின், அப்பொழுது அவன் முன் யோகாப்பியாஸத்தினா லுண்டான வாசனையினால் இழுக்கப்படுகிறான். அதர்மத்தைப் பலமாகச் செய்து, அது மேலிட்டிருந்தால் யோகாப்பியாஸ வாசனை பயன்படாமல், கீழ்ப்படுத்தப்பட்டு நிற்கின்றது. ஆனால், அந்த அதர்மத்தின் பலன் தேய்ந்துபோனவுடனே யோகாப்பியாஸத்தினா லுண்டான வாசனையானது, தானே தன் கார்யத்தை (பலனைச்) செய்யத் தொடங்குகின்றது. அதாவது, அது வெகுகாலம் தடைப்பட்டு நிற்பதாயினும், அதற்கு அழிவில்லை. பலகோடி ஜன்மங்கள் சென்றாலும் பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரமானது (வாசனையானது) தனக்கு உரிய காலத்திலே தன் பயனைக் கொடுத்தே தீரும் என்பது கருத்து. இதிற் சொல்லப்பட்ட யோகப்பிரஷ்டன் என்பவன் சந்நியாஸி என்று யுக்தியினால் தெரிகின்றது என்க. யோகஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள விரும்பியவனும்கூட, அதாவது யோகமார்க்கத்தில் பிரவிருத்தித்த அந்த சந்நியாஸியும்கூட (மற்றவர்களல்ல), சப்தப் பிரஹ்மத்தை அதாவது வேதத்திற் கூறிய கர்மங்களின் பயனைக் கடந்துவிடுகிறான். அதைவிட மேலான பதவியை அடைகிறான். இவனே யிப்படியாவானாயின், எவன் யோகத்தை யறிந்து, அதில் உறுதியாக நின்று அப்யாஸம் செய்கிறானோ

அவன் கர்மத்தையும் அதன் பயனையும் கடந்து நிற்கிறான் எனக் கூறவும் வேண்டுமோ?"

(ஸ்ரீதரர்) "ஜிஜ்ஞாஸுரபி = யோகத்தை யறியவேண்டுமென்று இச்சித்து, அதிற் பிரவிருத்தித்த சந்நியாசியுங்கூட. முன்பு சொல்லப்பட்டிருக்கிற யோகப்பிரஷ்டனைக் காட்டிலும் இவனுக்கு முக்தியடையுங் காலம் நீடித்ததாகும். ஶப்³த³ப்³ரஹ்மாதிவர்ததே = வேதோக்த கர்மங்களுடைய பலனைக்காட்டிலும், அதிக பலனை யடைகிறான். கைமுத்யந்யாயம் = என்று கிரகிக்கத்தக்கது (அதாவது, ஜிஜ்ஞாஸுவுக்கு இந்தப் பலனானால் முக்தினவனுக்குப் பலன் சொல்லவும் வேண்டுமோ?)"

(ராமாநுஜர்) (இந்தச் சுலோகத்தின் பிந்திய அரைச் சுலோகத்திற்கு) யோக³ஸ்ய = யோகத்தை, ஜிஜ்ஞாஸு: = தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற இச்சையுள்ளவன், அந்த ஜன்மத்தில் தெரிந்துகொள்ளாவிட்டால், அடுத்த ஜன்மத்தில் தெரிந்து, அநுஷ்டித்து, ஞானியாய், ஶப்³த³ = தேவ - மனுஷ்ய - பூமி-சுவர்க்காதி சப்தங்களால் (பெயர்களால்) சொல்லத்தகுந்த, ப்³ரஹ்ம = பிரகிருதியை, அதிவர்ததே = அதிக்கிரமிக்கிறான், ஞானானந்த சொரூபத்தை யடைகிறான்."

(மத்துவர்) "ஶப்³த³ப்³ரஹ்ம = பரமாத்மாவை, அதிவர்ததே = கிரமக் கிரமமாய் அடைகிறான். எப்படிக் கிரமக்கிரமமா யடைகிறானென்பது அடுத்த சுலோகத்தினால் சொல்லப்படுகிறது."

(இராகவேந்திரர்) "ஶப்³த³ப்³ரஹ்ம = வேதத்திலுள்ள விதி நிஷேதங்களை, அதிவர்ததே = அதிக்கிரமிக்கிறான், என்றால், முக்தனாய்விடுகிறானென்பது தாத்பர்யம். இது கைமுத்திய நியாயம். (44)

---

௪௫. ப்ரயத்நாத்³யதமாநஸ்து யோகீ³ ஸம்ஶுத்³த⁴கில்பி³ஷ: |
அநேகஜந்மஸம்ஸித்³த⁴ஸ்ததோ யாதி பராம் க³திம் ||

45. ப்ரயத்நாத்-யதமாந:-து-யோகீ³-ஸம்ஶுத்³த⁴கில்பி³ஷ: |
அநேகஜந்மஸம்ஸித்³த⁴:-தத:-யாதி-பராம்-க³திம் ||

ப்ரயத்நாத் யதமாந: யோகீ³ து	அதிக பிரயத்தனத்தோடு முயற்சி செய்கிற யோகியோ
ஸம்ஶுத்³த⁴கில்பி³ஷ:	பாபங்களினின்றும் பரிசுத்தனானவனாய்,
அநேகஜந்மஸம்ஸித்³த⁴:	அநேக ஜன்மங்களாலே ஞான பரிபக்குவத்தை யடைந்தவனாய்
தத:	அதனால், அல்லது அதற்குப் பிறகு
பராம் க³திம் யாதி	உயர்ந்த கதியை அடைகிறான்.

ஊக்கத்தோடு முயற்சி செய்கின்ற யோகியோ பாபங்களினின்றும் பரிசுத்தனாய் அநேக ஜன்மங்களாலே ஞானபரிபக்குவத்தை யடைந்தவனாய், அந்த யோக வாசனையினால் மெய்யறிவைப் பெற்று அதனால், அல்லது அதற்குப் பிறகு, உத்தமமான கதியை யடைகிறான்.

(சங்கரர்) "மற்றும் எந்தக் காரணத்தால் யோகியாயிருக்கும் தன்மை ஸ்ரேயஸ்கரமானது என்பது இதிற் சொல்லப்படுகிறது. அதிகமாக யோகத்தில் முயற்சி செய்கின்ற ஞானியாகிய யோகியானவன், அநேக ஜன்மங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் ஸம்ஸ்காரங்களை, அதாவது யோக வாசனைகளின் கூட்டத்தைச் சம்பாதித்துச் சேர்த்துக் கொண்டு, அவ்வாறு சம்பாதித்துச் சேர்த்துவைக்கப்பட்ட அதனால், பரிபக்குவத்தை யடைந்து, சித்தியைப் பெற்று, ஸம்யக்தர்சனத்தை அதாவது மெய்யறிவைப் பெற்றவனாய், மேலான கதியை அடைகிறான்."

(ராமாநுஜர்) "அநேக ஜந்ம=அநேக ஜன்மங்களில் சம்பாதித்த புண்ணிய கர்மங்களால், ஸம்ஶுத்தகில்பிஷ:=பாபங்களைப் போக்கடித்துக்கொண்டவனாயும், ஸம்ஸித்த:=சித்தியையடைந்தவனாயும், ப்ரயத்நாத் யதமாநஸ்து=மறுபடியும் யோகத்தில் பிரயத்தினஞ் செய்கிறவனாயுமிருக்கிற, யோகீ=யோகியானவன், யோகத்திலிருந்து சலித்துப்போதினும், தத:= யோகாப்பியாச மஹிமையினாலே, பராம் கதிம் யாதி=மோக்ஷத்தை யடைகிறான்."

(இராகவேந்திரர்) "முந்திய சுலோகத்தில் குறிக்கப்பட்ட ஜிஜ்ஞாஸா விஷயமாய் இந்தச் சுலோகம் பிரவிருத்தித்தது" (45)

சகூ. தபஸ்விப்யோऽதிகோ யோகீ ஜ்ஞாநிப்யோऽபி மதோऽதிக: ।
கர்மிப்யஶ்சாதிகோ யோகீ தஸ்மாத்யோகீ பவார்ஜுந ॥

46. தபஸ்விஹ்ய:(1)-அயிக:-யோகீ-ஜ்ஞாநிஹ்ய:(2)-மத:-அயிக:।
கர்மிஹ்ய: (3)-வ-அயிக:-யோகீ-தஸ்மாத்-யோகீ-ஹவ-அர்ஜுந॥

யோகீ	யோகியானவன்
தபஸ்விப்ய:	தபஸ் உடையவர்களைக்காட்டிலும்
அதிக:	மேலானவன்;
ஜ்ஞாநிப்யோऽபி	ஞானமுடையவர்களைக்காட்டிலும்கூட
அதிக: மத:	மேலானவனாக எண்ணப்படுகிறான்;
யோகீ	யோகியானவன்
கர்மிப்ய:	கர்மமுடையவர்களைக்காட்டிலும்

அதிக: மேலானவன்;
தஸ்மாத் யோகீ பவார்ஜுந ஆகையால், ஓ! அர்ஜுனா!
(த்வம்) யோகீ பவ (நீ) யோகியாகக்கடவாய்.

யோகியானவன் தபஸ் உடையவர்களைக்காட்டிலும் மேலானவன்; ஞானமுடையவர்களைக்காட்டிலும்கூட மேலானவனாக எண்ணப்படுகிறான்; யோகியானவன் கர்மமுடையவர்களைக்காட்டிலும் மேலானவன். ஆகையால், ஓ! அர்ஜுனா! நீ யோகியாகக் கடவாய்.

---

(1) "தபஸ்-கிருச்சிர சாந்திராயணாதி விரதங்கள். அதாவது, தேகபுஷ்டியைக் குறைப்பதற்குச் செய்யப்படும் விரதங்கள். இந்த விரதங்களுடன், மந்திரங்களை உருவேற்றுகிறது முண்டு. இதுதான் தபஸ்." (ஸ்ரீதரர்). ஸ்ரூயதாம்... நிராஹாரா... ஸஹிம்ஸா... ... ॥ (...).

(2) "ஜ்ஞாநி=இங்கே ஞானமென்பது சாஸ்திரங்களின், அதாவது நூற்பொருளின் அறிவு." (சங்கரர்).

(3) "கர்மி=இங்குக் கர்மம் என்பது அக்நிஹோத்திரம் முதலிய கர்மங்கள்." (சங்கரர்).

(ஸா) தபஸ், சாஸ்திரஞானம், கர்மம் இவைகளைக்காட்டிலும் யோகம் எப்படிச் சிரேஷ்டமென்றால், இம் மூன்றும் தியானயோகியினிடத்திலே யிருக்கின்றன; அத்துடன் தியானயோகமுஞ் சேர்வதினால் தியானயோகி சிரேஷ்டனே. ஏனென்றால், இவன் இராகத்துவேஷம் அற்றவன். (46)

மூ. யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா ।
ஸ்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத: ॥

47. யோகிநாம்-அபி-ஸர்வேஷாம்-மத்-கதேந-அந்தராத்மநா ।
ஸ்ரத்தாவாந்-பஜதே-ய:-மாம்-ஸ:-மே-யுக்ததம:-மத: ॥

ஸர்வேஷாமபி யோகிநாம் } சகலவிதமான யோகிகளுக்குள்ளே
ய: எவன்
ஸ்ரத்தாவாந் சிரத்தையுள்ளவனாயும்
மத்கதேந அந்தராத்மநா } என்னிடம் நிறுத்தப்பட்ட அந்தக்கரணத்தோடு
மாம் பஜதே என்னைப் பஜிக்கிறானோ

ஸஃ	அவன்
மெ யுக்ததமஃ	எனக்குச் சிரேஷ்டமான யோகியாக
மதஃ	அங்கீகரிக்கப்படுகிறான்.

சகலவிதமான யோகிகளுக்குள்ளே எவன் சிரத்தை யுள்ளவனாயும், என்னிடம் நிறுத்தப்பட்ட அந்தக்கரணத்தோடு என்னைப் பஜிக்கிறானோ, அவன் தியானத்தோடு கூடினவர்களுக்குள் மேலானவன் என்பது என் கருத்து.

(சங்கரர்) "சகல யோகிகளுக்குள்ளும், என்றால், ருத்ரன்-ஆதித்யன் முதலானோர்களைத் தியானிப்பதிலே, கருத்துக்கொண்ட ஸகல விதமான யோகிகளுக்குள்ளும் என்பது பொருள். இவர்களுள் வாசுதேவனாகிய என்னிடத்தில் செலுத்திய அந்தக்கரணத்தோடு எவன் என்னைச் சேவிக்கிறானோ அவன் மிகவும் யுக்தனுவான் என்பது பொருள்."

(ராமாநுஜர்) "மதந்யநாஹரூஹநா=எனக்குப் பிரியஞ் செய்கிறதைத் தவிர மற்றச் சகல வியாபாரங்களையும் விட்டிருக்கிற மனதினாலே, என்றால், பாகியாந்தர (வெளி உள்) விருத்தி யிரண்டிலும் என்னையே அதிகப் பிரியமான வஸ்துவென்று அடுத்து, என்னைவிட்டு ஒரு க்ஷணங் கூடப் பிரியாமலும், என்னைவிட்டுப் பிரிந்திருந்தால் நசித்துப்போவோமென்கிற எண்ணங்கொண்டதாயு மிருக்கிற மனதினாலே, ஶ்ரத்தாவாநு= என்னைச் சீக்கிரமாக அடையவேண்டு மென்பதில் அதிக பரபரப்போடு கூடியிருக்கிறான். ஆகையால்தான் இவன் சிரேஷ்டன்."

(ஸ்ரீ) "யோகிநாமபி ஸவேஷாம்= யோகிகளுக்குள்ளே சிரேஷ்டனாக இவனைச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட யோகிகளுக்குள்ளே சிரேஷ்டனென்கிற கேள்வி யுண்டாகிறது. இது விஷயமாய் வியக்தமாய்ச் சொல்லாவிட்டாலும் இதின் 4-வது அத். 25-முதல் 30-வரையிலுள்ள சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிற, யஜ்ஞமென்கிற பெயரினால் அழைக்கப்படும். பதினொருவகைக் கர்மங்களைச் செய்யும் கர்யோகிகளுக்குள்ளே நேராய் ஈசுவரபக்தி செய்து ஈசுவரனையே பஜிக்கிற தியானயோகி சிரேஷ்டனென்று ஸ்ரீதரர் அபிப்பிராயப்பட்டதாகத் தோற்றுகிறது. இந்த அத்தியாயம் 29-வது சுலோகத்தில் குறித்த யோகியைவிட, 30-வது சுலோகத்திற்குறித்தயோகி சிரேஷ்டன். இவனைவிட, 31-வது சுலோகத்தில் குறித்த யோகி சிரேஷ்டன். இவனைவிட, 32-வது சுலோகத்தில் குறித்த யோகி சிரேஷ்டனென்று அந்தந்தச் சுலோகத்தில் அவதாரிகையில் (ராமாநுஜர்) சொல்லியிருக்கிறது மல்லாமல், அந்த நால்வகை யோகிகளைக் காட்டிலும் இவன் சிரேஷ்டனென்று

இதிலும் சொல்லியிருக்கிறார். இராகவேந்திரர்: "ஞானயோகி, பக்தி யோகி, இவர்களுக்குள்ளே பக்தியோகி சிரேஷ்டன். ஏனென்றால், பக்தியோடு பகவானைச் சேவிக்கிறவனாதலால்தான்" என்று சொல்லியிருக்கிறார். சில யோகிகள், யோக சமாதியில், தியானத்திற்கு விஷயமாக, ருத்திரன், இந்திரன், சூரியன், சுப்பிரமணியன், கணபதி முதலிய தேவதைகளில் ஒன்றைக் குறித்துக் கொள்ளுகிறார்கள். சில யோகிகள், தியானத்திற்கு விஷயமாகப் பரமாத்மாவையே குறித்துக்கொண்டு அதிக பக்திவிசுவாசத்துடன் தியானஞ் செய்கிறார்கள். இவர்களுக்குள்ளே 'பரமாத்ம தியானமுள்ள யோகியே சிரேஷ்டன்' என்று சங்கரர் தாத்பரியப்படுகிறார். இந்த அர்த்தத்தை இதன் அடுத்த ஏழாவது அத்தியாயம், 23-வது சுலோகமாகிய "அந்தவத்து ஃபலம் தேஷாம் தத் பவத்யல்பமேதஸாம்। தேவாந்தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி॥" என்பதில் காண்க.

இந்தக் கீதையில், 'யோகம்' என்கிற பதம் பலவிடங்களில் பிரகிருதத்திற்குத் தக்கபடி கர்மயோகம், தியாநயோகம், ஞானயோகம் இவைகளில் ஏதாவதொன்றைமட்டும் குறிப்பதற்காக உபயோகப்பட்டிருப்பதால், அவ் யோகங்களின் சொரூப பின்னமென்று பாஷ்ய வியாக்கியானாதிகளில் சொல்லியிருப்பதைத் தெரிந்துகொள்ளவேண்டிய தவசியமாகிறது. யோகம்=வழி, ஸாதநம்-உபாயம். கர்மயோகம் என்றால் கர்மமாகிய வழியை அநுஷ்டித்தல்; இது கர்மநிஷ்டை என்றும் கூறப்படும்; அதாவது, கர்மமார்க்கத்திலே உறுதியாக நிற்றல். இதை அநுஷ்டிப்பவன் கர்மயோகி. ஞானயோகி தியானயோகி என்பதும் இவ்வாறே. ஆகவே, கர்மயோகி என்பவன், தனக்கு விதிக்கப்பட்ட சாஸ்திரோக்தமான கர்மங்களை ஈசுவரார்ப்பண புத்தியோடு, பலாபேக்ஷை இல்லாமல் அநுஷ்டிப்பவன். தியாநயோகி என்பவன், ஸாதந சதுஷ்டய ஸம்பந்நநாகி, இயமம் - நியமம்-ஆஸநம் முதலியவற்றால் சித்தத்தின் விருத்திகளை ஒடுக்கி அடக்கியிருப்பவன். இதற்கு யோகமார்க்கமென்று பெயர். ஸாங்கிய மார்க்கமென்பது, சாதன சதுஷ்டய சம்பத்தோடு கூடி, மெய்ப்பொருளை, ஆத்மாவை ஆராய்ந்தறிதல். (ஸாங்கியம் என்றால் மெய்ப்பொருளின் ஆராய்ச்சி). ஞானயோகி என்பவன் உள்ளேயுள்ள ஆத்மாவைப்பற்றிய உணர்வின், யாரைபோலொத்த இடைவிடாத தொடர்ச்சியை நிலைக்கச் செய்வதிலே மிகுந்த ஊக்கமுள்ளவன்.

இனி, கர்மயோகத்தால் சித்தம் பரிசுத்தமான அளவிலே, தீவிரமான வைராக்கியம் பிறக்கின்றது. அதனால் 'மெய்ப்பொருளை அறிய வேண்டும்' என்னும் கருத்து உறுதியாக நிலைபெறுகின்றது. இத் கரு

ணத்தில்தான், ஸாங்கிய மார்க்கத்திற்காவது யோகமார்க்கத்திற்காவது வேண்டிய அவகாசத்தைத் தந்து உதவி புரிகின்ற சந்யாஸமானது அவசியமாகின்றது. இதுதான் அஞ்ஞான நிலையிலுள்ளவன், சந்யாஸத்தைக் கூடுவதற்கு உரிய காலம். சந்யாஸத்தில் வித்வத் ஸந்யாஸம், விவிதிஷா சந்யாஸம் என இருவகை. வித்வத் சந்யாஸம் - ஜீவன்முக்தி சுகத்திற்காக ஞானி அடைவது. விவிதிஷா என்றால் பொருளை அறிய வேண்டுமென்னும் விருப்பம். விவிதிஷா சந்யாஸம்: அஞ்ஞானி, ஸாங்கிய யோகமார்க்கங்களுக்குச் சாதனமாய்த் தனக்கு மெய்யறிவு கைகூடும் பொருட்டுச் செய்துகொள்வது. ஆகவே, இப்படிச் சகல கர்மஸந்யாஸத்தை அடைதற்குரிய சந்யாஸியானவன்: உத்தமாதிகாரியாயின், ஸாங்கிய மார்க்கத்தை அநுஷ்டிக்கிறான்; மத்தியமாதிகாரியாயின், யோக மார்க்கத்தை அநுஷ்டிக்கிறான்; இரண்டிற்கும் உரியவனாயின், இரண்டையும் அநுஷ்டிக்கிறான். ஏனெனில், அவை தனித்தனியாகவாயினும், ஒன்று சேர்ந்தாயினும், ஞானயோகத்திற்குச் சாதனமாம்.

இவ்வாறாக, மந்தாதிகாரியானவன், கர்மயோகத்தைக் கைப்பற்ற வேண்டும். கர்மயோகமானது ஸாங்கிய மார்க்கத்திற்கும் யோகமார்க்கத்திற்கும் பகிரங்க சாதனம். சந்யாஸமானது அவற்றிற்கு அந்தரங்க சாதனம். 5-வது அத், 1-வது சுலோகத்தில் அர்ஜுனன் கேட்டது அஞ்ஞானியைப்பற்றிய விவிதிஷா சந்யாஸம். இந்த 6-வது அத்தியாயத்தில் சொன்ன யோகப்பிரஷ்டன் ஸாங்க்ய மார்க்கத்தினின்றாயினும் யோக மார்க்கத்தினின்றாயினும் நழுவினவன்; அதாவது, கர்மாநுஷ்டானத்தைத் துறந்து, அடையவேண்டிய ஞானயோகத்தை அடையாமலும், இரண்டுங் கெட்டவனாக இடையே நிற்பவன் என்பது பொருள். (47)

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
த்யாநயோகோ நாம
ஷஷ்டோऽத்யாய:.
ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்தையாக,
யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந
ஸம்வாதத்திலே, தியானயோகம் என்னும்
ஆறாம் அத்தியாயம்
முற்றிற்று.

ஶ்ரீரஸ்து

ஸப்தமோऽத்யாய:

விஜ்ஞானயோக:

ஏழாவது அத்தியாயம்.

விஜ்ஞான யோகம்.

ஶ்ரீபகவானுவாச

1 மய்யாஸக்தமனா: பார்த்த யோகம் யுஞ்ஜன் மதாஶ்ரய: |
அஸம்ஶயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ச்ருணு ||

1. மயி-ஆஸக்தமநா: - பார்த்த – யோகம் – யுஞ்ஜந் – மத் – ஆஶ்ரய: |
அஸம்ஶயம் – ஸமக்ரம் | – மாம் – யதா – ஜ்ஞாஸ்யஸி – தத் ஶ்ருணு

ஶ்ரீபகவானுவாச	பகவான் சொன்னது
பார்த்த	ஓ! குந்தி புத்ரா!
த்வம் மயி	நீ என்னிடத்தில்
ஆஸக்தமனா:	பற்றுள்ள மனதையுடையவனும்
மதாஶ்ரய:	என்னையே ஆஶ்ரிதமாகவுடையவனும்
யோகம் யுஞ்ஜன்	யோகத்தைக்கூடுகிறவனுயுமிருந்துகொண்டு
ஸமக்ரம் மாம்	ஸம்பூர்ணமாயிருக்கிற என்னை
யதா	எவ்விதமாய்
அஸம்ஶயம் ஜ்ஞாஸ்யஸி	ஸம்ஶயமில்லாமல் அறிவாயோ
தச்ச்ருணு	அதைக்கேள்.

ஸ்ரீபகவான் கிருஷ்ணசுவாமி சொன்னது. ஓ! பார்த்தா! பரமேச்வரனுகிய என்னிடத்தில் மனதை வைத்து, என்னையே அடைக்கலமாகக் கொண்டவனுய் யோகத்தைக் கூடினவனுயும் இருந்துகொண்டு, ஸம்பூர்ணனுயிருக்கிற என்னை யெவ்விதமாய் சமுசயமன்றி யறிவாயோ அதைச் சொல்லுகிறேன் கேள்.

(1)ஸமக்ரம்—சகல விபூதி, பலம், சக்தி, ஐசுவரியம் முதலிய குண சம்பன்னராயிருக்கிற (ஸ்ரீதரர்)

(சங்கரர்) "ஸகல யோகிகளுள்ளும் எவன் நம்பிக்கையுடன் என்னிடம் சென்ற அந்தக் கரணத்தோடு என்னைத் தொழுகின்றுனே, அவன் தியானத்தைக் கூடினவரனைவரிலும் மேலானவன் என்பது என் கருத்து"

என்று பகவான் 6-வது அத்தியாயம் 47-வது சுலோகத்தில் சொன்னதி லிருந்து, அப்படி ஆவது எவ்வாறு? ஒருவன் தனது அந்தக்கரணம் அவ னிடம் சென்றவனாக எவ்வாறு? ஆகலாம்? என்னும் வினாக்களுக்கு இடமுண் டாயிற்று. ஆகவே அந்த பகவானுடைய உண்மை இவ்வாறானது, ஒருவன் தன்னுடைய அந்தக்கரணம் பகவானிடம் சென்றவனாக இவ்வாறு ஆகலாம், என்கிற விஷயங்களைத் தானே சொல்லக் கருதியவராய் இதை அருளிச் செய்கிறார். எவன் ஒருவன் ஒரு புருஷார்த்தத்தை வேண்டுகிறானோ அவன் அதற்கு ஸாதனமாகிய அக்னிஹோத்ரம் முதலிய கர்மத்தையாவது தபஸை யாவது தானத்தையாவது ஏதாவது ஒன்றை அடைக்கலமாக அடைகிறான். இந்த யோகியோ, என்னையே அடைக்கலமாகக் கொள்ளுகிறான். மற்றவேறு ஸாதனங்களை விட்டு, என்னிடத்திலேயே மனம்பற்றியவனாக ஆகிறான். எவன் இப்படி மனம் என்னிடம் பற்றியவனோ அவன், அதாவது அப்படிப்பட்ட நீ, இவ்வித ஸமஸ்த விபூதியும் பலமும் சக்தியும் உலகத்தை ஆளுவதிலே முழுத்திறமையும் ஆகிய இவை முதலான ஸகல குணங்களோடும் கூடிய என்னை, பகவான் இப்படித்தான் இருக்கிறார் என சம்சயம் இல்லாமல் எவ் விதமாய் அறிவாயோ அதை நான் சொல்லுகிறேன் கேள். யோகத்தைக் கூடு கிறதென்றால் மனம் ஒரு நிலைப்படுவதை செய்வது.

(ஸ்ரீதரர்) இதுவரையில் ஆத்ம தத்துவத்தைச் சொல்லி இனிப்புரா சிக்க யோக்யமான ரூபத்தைச் சொல்லப்போகிறார்.

(ராமாநுஜர்) முதலாறு அத்தியாயங்களால், பரமாத்மாவாகிய நாரா யணனை யடைவதற்குக் காரணமாகிய உபாசனையைச் சொல்லுவதின் பொருட்டு, தன்னுடைய (ஜீவனுடைய) ஆத்ம சுவரூப நிச்சயத்துடன் கூடிய கர்மாநுஷ்டானஞ் சொல்லப்பட்டது: இதுமுதல் ஆறு அத்தியாயங் களால், பரமாத்ம சுவரூபமும், பரமாத்மாவை யடைகிறதற்குக் காரண மாகிய யுபாசனையென்று சொல்லப்படுகிற பக்தியும், சொல்லப்படும். இந்த ஏழாவதத்தியாயத்தில், பரமாத்ம சுவரூப நிச்சயமும், பிரகிருதியினால் பர மாத்ம சுவரூபமானது ஜீவனுக்கு மறைபட்டிருக்கிற விதமும், பிரகிருதி யைப் போக்கடித்துக் கொள்வதற்குச் செய்யவேண்டிய சரணாகதியின் விவரமும், சரணாகதி செய்யப்பட்டவர்களுக்குள் பேதமும், ஞானம் சிரேஷ்டமென்பதும் சொல்லப்படுகின்றன.

இந்த சுலோகத்தினர்த்தமாவது:—மய்யாஸக்த மநா:—என்னை யெதிர் பார்த்தும், என்னிடத்தில் பிரியம் வைத்தும், என்னுடைய சுவரூபம், குணம், செய்கை, மகிமை, இவைகளிலெல்லாவும் பற்றியிருக்கிற மனதை யுடையவனாயும், மதாச்ரய:—என்னையே ஆதாரமா யுடையவனாயும்

யோமம்—என் விஷயமான யோகத்தை, யுஞ்ஜந்—ஆரம்பஞ் செய்கிற வனுமிருக்கிற நீ, அஸம்ஶயம்—சமுசயமில்லாமல், ஸமக்ரம்—பூர்ணமாயிருக்கிற, மாம்—என்னை, யதா—எப்படி, ஜ்ஞாஸ்யஸி—அறிவாயோ, தச்ச்ருணு—அதைக்கேள்.

(இராகவேந்திரர்) மய்யாஸக்த மனா:—என்னிடத்தில் பிரீதிவைத்த மனதை யுடையவும், மதாஶ்ரய:—"பகவானே என்னைக்கொண்டு சகலத்தையும் செய்விக்கிறார். அவரே ஶரணமடையத் தகுந்தவர், சகலத்திற்கும் கர்த்தா அவரே" என்கிற நிச்சயமுடையவும் யோமம்யுஞ்ஜந்—யோகத்தில் பிரவேசிக்கிறவனும் (மற்றதில் வித்தியாஸமில்லை.) (1)

௨ ஜ்ஞானம் தேஹம் ஸவிஜ்ஞானமிதம் வக்ஷ்யாம்யஶேஷத: |
யஜ்ஜ்ஞாத்வா நேஹ பூயோ(அ)ந்யஜ்ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே ||

2. ஜ்ஞாநம்1–தே–அஹம்–ஸவிஜ்ஞாநம்2–இதம்–வக்ஷ்யாமி–அஶேஷத: |
யத்–ஜ்ஞாத்வா–ந–இஹ(3)பூய:–அந்யத்–ஜ்ஞாதவ்யம்–அவஶிஷ்யதே

யத்	எதை
ஜ்ஞாத்வா (ஸ்தி தஸ்ய)	அறிந்து இருக்கிறவனுக்கு
இஹ பூய:	இங்கே மறுபடியும்
ஜ்ஞாதவ்யம் அந்யத்	அறியவேண்டியது வேறொன்று
நாவஶிஷ்யதே	மிச்சமாயிராதோ
ஸவிஜ்ஞானம்	அநுபவ ஞானத்தோடுகூடின
இதம் ஜ்ஞாநம்	இப்படிப்பட்ட ஞானத்தை
அஶேஷத:	ஶேஷமில்லாமல், முழுவதும்
அஹம் தே வக்ஷ்யாமி	நான் உனக்கு சொல்லப்போகிறேன்.

எதை அறிந்து இருப்பவனுக்கு இங்கே மறுபடியும் அறியவேண்டியது வேறு ஒன்றும் மிச்சம் இருக்கமாட்டாதோ அதை, அதாவது விஜ்ஞானத்தோடுகூடிய இந்த ஞானத்தை, நான் உனக்கு சேஷமின்றி அதாவது முழுவதும் சொல்லப்போகிறேன்.

---

(1) ஜ்ஞாநம்-பகவத் சுவரூபஞானம் (ராமாநுஜர்), என் விஷய ஞானம் (மத்வர்), ஸாமான்னிய மாகாத்மியஞானம் (இராகவேந்திரர்).

(2) ஸவிஜ்ஞாநம் — ஜீவஜடங்களுக்கு விலக்ஷணமான பகவானுடைய மகிமைகளையும் குணாதிசயங்களையும் அறிகிற ஞானத்தோடு கூடின (ராமாநுஜர்) பகவானுடைய விசேஷமாகாத்மிய ஞானத்தோடு கூடின (மத்வர்)

(3) இஹ—என்பதற்கு "உயி" என்னிடத்தில் (ராமாநுஜர்); இந்த மோக்ஷமார்க்கத்தில் (ஸ்ரீதரர்).

(சங்கரர்) என்னைப்பற்றிய அந்த ஞானத்தை நான் உனக்குத் தெரியும்படி சொல்லுகிறேன் என்கிறார் பகவான். தான் உபதேசிக்க விரும்பிய அந்த ஞானத்தை, "எந்த ஞானத்தை அறிந்தபின்பு இங்கே மறுபடியும் அறியவேண்டிய புருஷார்த்த சாதனம் வேறு ஒன்றும் மிச்சமாயில்லையோ" எனப்புகழ்வது கேட்பவனை அபிமுகமாக்கும் பொருட்டு, அதாவது கேட்பதிலே அவனுடையமனம் பற்றும்பொருட்டு என்க. பகவானுடைய உண்மையை அறிபவன் எவனோ அவன் சகலமும் அறிந்தவன் என்பது பொருள். ஆகவே ஞானமானது சிறந்த பயனையுடையதாதலால் கிடைப்பதற்கு மிக அறிதாம். விஜ்ஞானத்தோடென்றால் தன் அனுபவ ஞானத்தோடு. (2)

ங. மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே ।
யததாமபி ஸித்தாநாம் கச்சிந்மாம் வேத்தி தத்த்வத: ॥

3. மநுஷ்யாணும்(1)—ஸஹஸ்ரேஷு—கச்சித்—யததி—ஸித்தயே ।
யததாம்—அபி—ஸித்தாநாம்—கச்சித்—மாம்—வேத்தி—தத்வத:

மநுஷ்யாணாம்	மனிதர்களுடைய
ஸஹஸ்ரேஷு	அநேக ஆயிரங்களில்
கச்சித்	ஒருவன்
ஸித்தயே	ஸித்திக்காக (ஞானமடைவதற்காக)
யததி	முயற்சி செய்கிறான்
யததாமபி	முயற்சி செய்கின்ற
ஸித்தாநாம்	ஸித்தர்களானவர்களுக்குள்ளும்
கச்சித்	எவனோ ஒருவன் தான்
மாம் தத்த்வத: வேத்தி	என்னை உண்மையாய் அறிகிறான்.

அனேக ஆயிரம் மனிதர்களுக்குள் ஒருவன்தான் ஸித்தியின் பொருட்டு அதாவது ஞானமடைவதின் பொருட்டு முயற்சி செய்கிறான். அப்படி முயன்று சித்தர்களானவர்களுக்குள்ளும் எவனோ ஒருவன் தான் என்னை உள்ளபடி அறிகிறான்.

(1) மநுஷ்யாணும்—சாஸ்திர அதிகாரிகளானவர்கள் (ராமாநுஜர்).

(சங்கரர்) எப்படி என்றால், பல ஆயிரம் மனிதர்களுக்குள் ஒருவன் ஸித்திக்காக ஞானமுண்டாவதற்காக முயற்சி செய்கிறான். எவர்கள் முக்திக்காக முயலுகிறார்களோ அவர்கள் ஸித்தர்கள், ஞானத்தை யடைந்தவர்

கள் தான். ஞானத்தை அடையப்போகிறவர்களை அடைந்தவர்கள் என்பது உபசாரவழக்கு. முயன்று ஸித்தர்களான அவர்களுக்குள்ளும், எவனே ஒருவன் தான் என்னை உள்ளபடி அறிகிறான். (3)

சு 𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌖𑌂 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 𑌚 ।
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 ॥

4. பூமி:-ஆப:-அநல:-வாயு: -கம்-மந:-புத்தி:-ஏவ-ச |
அஹங்கார:-இதி-இயம்-மே-பிந்நா-ப்ரக்ருதி:-அஷ்டதா

𑌮𑍇 𑌇𑌦𑌂	என்னுடைய இந்த
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚	மாயையேதான்
𑌭𑍂𑌮𑌿𑌃	பூமி
𑌆𑌪𑌃	ஜலம்
𑌅𑌨𑌲𑌃	அக்கினி
𑌵𑌾𑌯𑍁𑌃	காற்று
𑌖𑌂	ஆகாசம்
𑌮𑌨𑌃	மனது
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃	புத்தி
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌃	அஹங்காரம்
𑌇𑌤𑌿 𑌅𑌷𑍍𑌟𑌧𑌾	இப்படிஎட்டுவிதமாய்
𑌭𑌿𑌨𑍍𑌨𑌾	பிரிந்திருக்கிறது.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 28396

என்னுடைய இந்த பிரகிருதியே (மாயையே) தான் பூமி, ஜலம், அக்கினி, காற்று, ஆகாசம், மனசு, புத்தி, அஹங்காரம், இப்படி எட்டு விதமாய்ப் பிரிந்திருக்கிறது.

(சங்கரர்) பகவான் தன்னுடைய உபதேசத்தில் ருசியை உண்டாக்குவதனால், கேட்பவனை ஸந்நத்தனைச் செய்துகொண்டு தன்னுடைய பிரகிருதியினின்றும் பிரபஞ்சம் பரிணமித்ததைச் சொல்லுகிறார். பிரகிருதி எட்டு விதமாகப் பிரிந்ததாகச் சொல்லப்படுவதால் இதில் பூமி, நீர், அக்கினி, காற்று, ஆகாசம் என்பன ஸ்தூலமான பிருதிவி (பூமி) முதலியவைகளைக் குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. மற்று பூமி என்பது பிருதிவிதந்மாத்திரத்தை இங்கு குறிப்பிட்டதாகக் கொள்ளவேண்டும். அப்படியே நீர், முதலிய வற்றிற்கும் அவைகளின் தந்மாத்திரங்களையே கொள்ளவும், தந்மாத்திர மென்பது மஹாபூதங்களுடைய மிக்க நுண்ணியநிலை. 'மனம் என்பது மனதின் காரணமாகிய அஹங்காரத்தைக் குறிப்பதாக கிரகிக்கத்தக்கது. 'புத்தி'

என்பது அஹங்காரத்தின காரணமாகிய, மஹத்தத்துவம். 'அஹங்காரம்' என்பது அவித்யையோடு கூடி அவித்யை வடிவமான, அவ்யக்தம், விஷத் தோடுகூடிய அன்னத்தை, விஷம் என்று சொல்வதுபோல் அஹங்காரத் தின் வாஸனையோடு கூடியதாய் மூலகாரணமாய் நிற்கும் அவ்யக்தமானது அஹங்காரம், எனப்படுகின்றது. அஹங்காரமன்றோ? ஸகலப்பிராணி களும் பிரவிருத்திப்பதற்குக் காரணமாகவே உலகத்தில் காணப்படுகின் றது. இவ்வாறு சொல்லப்பட்டதான என்னுடைய இந்த பிரகிருதியானது ஈச்வரனுக்குச் சொந்தமான மாயையாகவும் சக்தியாகவுமுள்ளது. எட்டு விதமாக வேறுபாட்டை அடைந்திருப்பது.

(ராமாநுஜர்) 'புத்தி' என்பது மனது முதலிய இந்திரியங்கள்.

(ஸ்ரீதரர்) பூமி, ஜலம், அக்கினி, காற்று, ஆகாசம் என்பன அப்பூதங் களுடைய சூக்ஷ்மமாகிய தன் மாத்திரைகள் அல்லது ஸ்தூலசூக்ஷ்ம பூதங் கள். 'மனது' என்பது மனதுக்குக் காரணமான அஹங்கார தத்துவம், அல்லது, பிரதானம். 'புத்தி' என்பது, மஹத்தத்துவம். அஹங்காரமென் பது, அவித்தை அல்லது, அஹங்காரமும், இந்திரியங்களும்.

(மத்வர்) அஹங்கார தத்துவமும் மகத்தத்துவம். அஹங்காரதத்து வத்தில் மகத்தத்துவம் அடங்கியேயிருக்கிறதினுல், மகத்தத்துவம் பிரத்தி யேகமாய்ச் சொல்லப்படவில்லை.

(ஸ்வா) இதில் பிரகிருதி (தத்துவம்) எட்டுவிதமென்று சொல்லப் பட்டிருக்கிறது. சில புராணங்களில், தத்துவங்கள் 17 - என்றும், 23 - என் றும், 24-என்றும் 36-என்றும் 96-என்றும் இப்படிப் பலவிதங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனுல், அப்படிச்சொன்னது பிசகானதென் றெண்ண இடமில்லை. ஏனென்றால், இந்த சுலோகத்தின் அர்த்தத்திலேயே (ஸ்ரீதரர்) சொல்லியிருக்கிற படிக்கு இதின் 13-வது அத்தியாயம், 6-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற 24-தத்துவங்களைச் சுருக்கி இதில் எட்டாகச் சொல்லப்பட்டது போல், சுருக்கியும் விரித்தும் சொல் வதினுல் புராணுதிகளில் அப்படி வித்தியாஸம் தோற்றப்படுகிறது. இந்த பூத தத்துவங்களி னுற்பத்திக் கிரமத்தையும் சிருஷ்டிக்கிரமத்தையும் குறித்து, விஷ்ணுபுராணம் முதலாவது அம்சம், 2-வது அத்தியாயத்திலும், பாகவதம் 2-வது ஸ்கந்தம் 5-வது அத்தியாயத்திலும், வாசுதேவமனனம், என்னும் கிரந்தத்திலும், சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க. (4)

ரு அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் ।
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் ॥

5. அபரா—இயம்—இத:—து—அந்யாம்—ப்ரக்ருதிம்—வித்தி—மே—பராம் |
ஜீவபூதாம்—மஹாபாஹோ—யயா—இதம்—தார்யதே—ஜகத்

மஹாபாஹோ	ஓ ! புஜபலமுள்ளவனே !
இயம் அபரா	இது நிகிருஷ்டமானது(தாழ்ந்தது)
யயா து	மற்றுஎதனாலே
இதம் ஜகத்	இந்தஜகத்தானது
தார்யதே	தரிக்க அல்லது தாங்கப்படுகிறதோ
தாம்	அதை
இத: அந்யாம்	இதைப்பார்க்கிலும்வேறாகவும்
பராம்	சிரேஷ்டமான
மே ப்ரக்ருதிம்	என்னுடையபிரகிருதியாகவும்
ஜீவபூதாம்	ஜீவஸ்ரூபமானதாகவும்
வித்தி	அறி

ஓ! புஜ பலமுள்ள அர்ஜுநா! இது (முன் சொன்ன பூமி முதலியன) நிகிருஷ்டமான (அதாவது தாழ்ந்த) பிரகிருதி. மற்று எதனால் இந்த பிரபஞ்சமானது தரிக்க அல்லது தாங்கப்படுகின்றதோ அதனை இதைப்பார்க்கிலும் வேறானதாகவும் சிரேஷ்டமான என்னுடைய பிரகிருதியாகவும் ஜீவஸ்வரூபமானதாகவும் தெரிந்துகொள்.

(சங்கரர்) முன்சொன்ன பூமி முதலிய அசேதன பிரகிருதியானது உயர்ந்ததன்று. தாழ்ந்தது! அசுத்தமானது, அநர்த்தங்களை (தீங்குகளைச்) செய்வது, ஸம்ஸாரபந்த வடிவமாயுள்ளது. மற்று எந்தப் பிரகிருதியானது உள்ளே நின்று இந்த ஜகத்தைத் தாங்குகின்றதோ அந்தப் பிரகிருதி முன் சொன்ன பிரகிருதியினின்றும் வேறானது, பரிசுத்தமானது, என்னுடைய ஆத்மாவாகவே உள்ளது, உயர்ந்தது; க்ஷேத்ரஜ்ஞனுபிருப்பது; உயிர் தங்கி நிற்பதற்குக் காரணமானது என்று அறிந்துகொள். (பின்வருகிற 13-வது அத். 1, 2, 5-சுலோகங்களைப் பார்க்க)

(ராமாநுஜர்) என்னுடைய ஜடப்பிரகிருதியை என்னுடைய சேதனப் பிரகிருதியானது தரித்துக் கொண்டிருக்கிறது.

(மத்வர்) சேதனப் பிரகிருதியான இலக்ஷ்மியினாலே ஜடப்பிரகிருதியான இந்தப் பிரபஞ்சமானது தரிக்கப்பட்டிருக்கிறது. பிராணன்களை தரிக்கிறதினாலும், எப்போதும், எவ்விடத்திலும் வியாபித்திருக்கிறதினாலும், இந்த இலக்ஷ்மி ஜீவபூதமென்று சொல்லப்பட்டாள். (5)

ஸ்ரீ. ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய |
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா ||

6. ஏதத்-யோநீநி-பூதாநி-ஸர்வாணி-இதி-உபதாரய |
அஹம்-க்ருத்ஸ்நஸ்ய-ஜகத:-ப்ரபவ:-ப்ரளய:-ததா

ஸர்வாணி பூதாநி	ஸகல பூதங்களும்
ஏதத்யோநீநி	இவற்றைபிறப்பிடமாகஉடையவை
இதி உபதாரய	என்று அறிந்து கொள்
(தஸ்மாத்)	அந்தக்காரணத்தினலே
அஹம்	நான்
க்ருத்ஸ்நஸ்ய ஜகத:	ஸகலமான ஜகத்திற்கும்
ப்ரபவ:	உத்பத்திக்குக் காரணம்
ததா ப்ரளய:	அப்படியே நாசத்திற்கும் காரணம்

ஸகல பூதங்களையும், இந்த (ஜட, சேதன) இருவகைப் பிரகிருதியிலுலே யுண்டானவைகளாகத் தெரிந்துகொள். அவைகளின் மூலமாய் ஸகல ஜகத்திற்கும் உற்பத்தி லயங்களுக்குக் காரணம் நானே.

(சங்கரர்) உயர்ந்ததும் தாழ்ந்ததுமான க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் என்னும் லக்ஷணத்தோடு கூடிய இவ்விரண்டு பிரகிருதிகளும் ஸமஸ்தபூதங்களுக்கும் பிறப்பிடம். எனது பிரகிருதியானது ஸகல பூதங்களுக்கும் பிறப்பிடமாதலால் நான் ஸகல ஜகத்திற்கு உற்பத்தியாகவும் நாசமாகவும் இருக்கிறேன், நான் இந்த இரண்டு பிரகிருதிகளின் வழியாக ஸர்வஜ்ஞன ஈச்வரன், ஜகத்திற்குக் காரணமானவன் என்பது பொருள் (13-வது அத். 27 சுலோ. பார்க்க).

எ. மத்த: பரதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய |
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ ||

7. மத்த:-பரதரம்-ந-அந்யத்-கிஞ்சித்-அஸ்தி-தநஞ்ஜய |
மயி-ஸர்வம்-இதம்-ப்ரோதம்-ஸூத்ரே-மணிகணா:-இவ

ஹே தநஞ்ஜய	ஓ ! தனஞ்ஜய!
மத்த:	என்னைக்காட்டிலும்
பரதரம்	மிக்க சிரேஷ்டமானது
அந்யத்கிஞ்சித்	வேறு ஒன்றும்
நாஸ்தி	இல்லை
ஸூத்ரே	நூலிலே
மணிகணா:	மணி நிரைகள் (கோர்க்கப்பட்டிருக்கிற)
இவ	போல
இதம் ஸர்வம்	இதெல்லாம் - மயி = என்னிடத்தில்

ப்ரோதம் = கோர்க்கப்பட்டிருக்கின்றன.

ஓ ! அர்ஜுனா ! என்னைவிட சிரேஷ்டமானது வேறு யாதொன்றுங் கிடையாது. ஆனால் காணப்படுகிற பிரபஞ்சமெல்லாம், நூலில் மணிகள் கோர்க்கப்பட்டிருப்பது போல, என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

(சங்கரர்) ஆதலால் பரமேசுவரனான என்னைக் காட்டிலும் வேறு காரணம் ஒன்றுமில்லை, அதாவது நானேதான் ஜகத்திற்குக் காரணம் என்க. இவ்வாறிருத்தலால் என்னிடத்து ஸகல பூதங்களும், இந்த ஸகல ஜகத்தும் நீண்ட நூல்களிலே ஆடைகள் போலவும், நூலிலே ரத்நவரிசைகள் போலவும் கோர்க்கப்பட்டிருக்கின்றன, பிணைக்கப்பட்டிருக்கின்றன; அதாவது தொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது பொருள்.

(ராமாநுஜர்) “ மஹாசிரேஷ்டமானது ” எப்படியென்றால், பரமாத்மா ஜடசேதனங்களுக்கு சேஷியாயும், அவைகளுக்குக் காரணமாயு மிருக்கிறதினாலேயும், ஞானம், சக்தி, பலம் முதலிய குணங்களுடன் கூடியிருக்கிறதினாலேயும் சிரேஷ்டமாகச் சொல்லப்பட்டது. “ நூலில் மணிகள்போல் என்னிடத்தில் ஸகலப் பிரபஞ்சமும் கோர்க்கப்பட்டிருக்கிறது. ” எப்படி என்றால், காரிய காரண அவஸ்தைகளோடு கூடியிருக்கிற இந்த ஜடசேதன ரூபமான ஸகலப் பிரபஞ்சமும் எனக்கு சரீரம் ; ஸகலத்திற்கும் ஆத்மாவான (சரீரியான) என்னிடத்தில் ஸகலப் பிரபஞ்சமும் ஆசிரயித்திருக்கிறதென்பது தாத்பர்யம். இந்த அர்த்தமானது ‘ யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் | யஸ்ய ஆத்மா ஶரீரம் ஏஷ ஸர்வபூதாந்தராத்மா | அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண இதி ’’ இந்த ஶ்ருதி வாக்யங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(ஸ்வா) சேஷி என்பது எப்படியென்றால், ஜீவன் சேஷி. அவனுக்குத் தேகேந்திரியங்களும், சப்தாதி விஷயங்களும், மற்றுமுள்ள வஸ்துக்களும், போக்கியவஸ்துக்களாயிருப்பதால், இவைகள் சேஷம். இப்படிப் போலவே, பரமாத்மா சேஷி. ஜீவனும், மற்ற சகல அசேதனப் பிரபஞ்சமும், பரமாத்மாவுக்கு போக்கியமானதால், அந்தச் சேதனாசேதனங்கள் சேஷம் (7)

ரஸோஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி ஶஶிஸூர்யயோ: |
ப்ரணவ: ஸர்வவேதேஷு ஶப்த: கே பௌருஷம் ந்ருஷு ||

8. ரஸ:—அஹம்—அப்ஸு—கௌந்தேய—ப்ரபா—அஸ்மி—ஶஶிஸூர்யயோ: |
ப்ரணவ:—ஸர்வவேதேஷு—ஶப்த:—கே—பௌருஷம்—ந்ருஷு

கௌந்தேய — ஓ ! குந்திபுத்திரா !

அஹம் — நான்

அப்ஸு ரஸ:	ஜலங்களில் ருசியும்
ஶஶிஸூர்யயோ:	சந்திர சூரியர்களிடத்திலே
ப்ரபா	காந்தி அல்லது ஒளியாகவும்
ஸர்வவேதேஷு	ஸகல வேதங்களுக்குள்ளே
ப்ரணவ:	பிரணவமென்கிற ஓங்காரமாகவும்
கே ஶப்த:	ஆகாசத்தினுள் சப்தமாகவும்
ந்ருஷு	மனிதர்களுக்குள்
பௌருஷம்	மானிடத்தன்மையாகவும்
அஸ்மி	இருக்கிறேன்.

ஓ! குந்திபுத்திரா! நான் ஜலத்தினுள் ருசியாகவும், சந்திர சூரியர்களில் ஒளியாகவும், எல்லா வேதங்களுக்குள் ப்ரணவமாகவும் (ஓம்காரமாகவும்) ஆகாசத்தினுள் ஓசையாகவும், மனிதர்களுக்குள் மானிடத்தன்மையாகவும் இருக்கிறேன்.

———

(சங்கரர்) எந்தெந்த தன்மையையுடைய அவரிடத்து இதெல்லாம் கோர்க்கப்பட்டிருக்கின்றது என்பது சொல்லப்படுகிறது. நீரினுள் எது ஸாரமோ அதுதான் ரஸம், அந்த சுவையாகவுள்ள என்னிடத்து ஜலமானது கோர்க்கப்பட்டிருக்கின்றது, என்பது பொருள். இவ்வாறே ஸகலத்திலுமெனக்கண்டு கொள்ளுக. நான் நீரினுள் சுவையாகவிருப்பது போலசந்திர சூரியர்களுக்குள் ஒளியாக இருக்கின்றேன். எல்லா வேதங்களுக்குள்ளும் ஓம்காரமாக இருக்கின்றேன். அந்த ஓம்காரமாகவுள்ள என்னிடத்து ஸகல வேதங்களும் கோர்க்கப்பட்டிருக்கின்றன. அவ்வண்ணமே ஆகாசத்தினுள் ஸாரபூதமாகிய சப்தமாக இருக்கின்றேன். அந்த வடிவமாயுள்ள என்னிடத்து ஆகாசம் கோர்க்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறே ஒருவனுக்குத் தான் மனிதன் என்னும் எண்ணம் எதனால் உண்டாகின்றதோ அந்த மானிடத் தன்மையாக மனிதர்களுக்குள் இருக்கின்றேன். அந்த மானிடத் தன்மையின் பொதுமையாகவுள்ள என்னிடத்து மனிதர்கள் கோர்க்கப்பட்டிருக்கிறார்கள். (8)

(ஸ்வா) இதுமுதல் 11-வது வரையிலுள்ள சுலோகங்களுக்கு வியாக்கியானம், 11-வது சுலோகத்தினடியில் காண்க.

———

௯ புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜஶ்சாஸ்மி விபாவஸௌ |
ஜீவநம் ஸர்வபூதேஷு தபஶ்சாஸ்மி தபஸ்விஷு ||

9. புண்ய:—கந்த:—ப்ருதிவ்யாம்—ச—தேஜ:—ச—அஸ்மி—விபாவஸௌ |
ஜீவநம்—ஸர்வபூதேஷு—தப:—ச—அஸ்மி—தபஸ்விஷு

அஹம்	நான்
ப்ருதிவ்யாம்	பூமிக்குள்
புண்ய: கந்த:	நல்ல வாஸனையாகவும்
விபாவஸௌ	அக்னியில்
தேஜ:	பிரகாசமாகவும்
அஸ்மி	இருக்கின்றேன்
அஹம்	நான்
ஸர்வபூதேஷு	ஸகலப்பிராணிகளுக்குள்
ஜீவநம்	ஜீவனமாகவும்
தபஸ்விஷு	தபஸ்செய்கிறவர்களுக்குள்
தப:	தபஸாகவும்
அஸ்மி	இருக்கின்றேன்.

நான் பூமிக்குள் நல்ல வாஸனையாகவும் அக்கினியில் ஒளியாகவும் ஸகலப் பிராணிகளும் எதனால், உயிர்வாழ்கின்றனவோ அந்த அந்நரஸமாகவும் தபஸ் உடையவர்களுக்குள் தபஸாகவும் இருக்கின்றேன்.

(சங்கரர்) நான் பூமிக்குள் உள்ள நல்ல வாஸனையாக இருக்கின்றேன், அந்த வாஸனையாகவுள்ள என்னிடத்து பூமியானது கோர்க்கப்பட்டிருக்கின் றது. வாஸனைக்கு நல்ல தன்மை ஸ்வபாவமானது தான். நீர் முதலியவற்றுள் ருசி முதலானவற்றின் நல்ல தன்மையை உணர்த்துவதற்காக நிலத்தினுள் அந்த வாஸனையின் நல்லதன்மை எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் வாஸனை துர்வாஸனை யாவது, பிராணிகளுடைய அவித்யை அதர்மம் முதலான வற்றிற்கு ஏற்ப சில சில பூதங்களோடு சேர்ந்து விகாரப்படுவதினால் உண் டாகின்றது என்க. எதனால் பிராணிகளெல்லாம் உயிர்வாழ்கின்றனவோ அந்த அமிருத மென்னும் அன்னரஸமாக இருக்கின்றேன். தபஸுடைய வர்களுடைய தபஸாகவுமிருக்கின்றேன். அந்த தபஸாகவுள்ள என்னிடத்து தபஸையுடையவர்கள் கோர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கருத்து. (9)

10 பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த்த ஸநாதநம் |
பு₃த்₃தி₄ர்பு₃த்₃தி₄மதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் ||

10 பீஜம்–மாம்–ஸர்வபூதாநாம்–விஃயி–பார்த–ஸநாதநம் |
புத்தி:–புத்திமதாம்–அஸ்மி–தேஜ:–தேஜஸ்விநாம்–அஹம்

ஹெபார்த	ஓ! குந்திபுத்திரா
(த்வம்)	நீ

மாம் — என்னை
ஸர்வபூதாநாம் — ஸகல பூதங்களுக்கும்
ஸநாதநம்பீஜம் — அழிவில்லாத வித்தாக
வித்தி — அறி
அஹம் — நான்
புத்திமதாம்புத்தி: — புத்திமான்களுடைய அறிவாகவும்
தேஜஸ்விநாம் தேஜ: — தேஜஸ்விகளுடையதேஜஸ்ஸாகவும்
அஸ்மி — இருக்கிறேன்.

ஓ! குந்திபுத்ரா! என்னை ஸகல பூதங்களுக்கும் அழிவில்லாத வித்தாகவறி. நான் புத்திசாலிகளுடைய நிச்சய ஞானமாயும் தேஜஸ் உடையவர்களுடைய தேஜஸாகவும் இருக்கிறேன்.

(சங்கரர்) பீஜம், என்பது முளைப்பதற்குக் காரணமாயிருப்பது. புத்தி, என்பது அந்தக்கரணத்தின் பகுத்தறியும் சக்தி. அப்படி பகுத்தறியும் சக்தியுள்ளவர்களுக்குள் அந்தப் பகுத்தறியும் சக்தியாக நானிருக்கிறேன். தேஜ:ப்ராகல்ப்யம்—வீரத் தன்மை அல்லது மனோ தைரியம். பிறரால் தான் வெல்லலாகாது தான் பிறரை வெல்லும் திறமை. (10)

கக பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம் |
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப ||

11 பலம்-பலவதாம்-ச-அஹம்-காமராகவிவர்ஜிதம் |
தர்மாவிருத்த:-பூதேஷு-காம:-அஸ்மி-பரதர்ஷப

ஹே பரதர்ஷப — ஓ! பரதகுல சிரேஷ்டனே!
அஹம் — நான்
பலவதாம் — பலவான்களுடைய
காமராகவிவர்ஜிதம் — காமமும் ராகமும் அற்ற
பலம் — சாமர்த்தியமாகவும்
பூதேஷு — பிராணிகளுடைய
தர்மாவிருத்த: — தர்மத்திற்கு விரோதமில்லாத
காம:அஸ்மி — ஆசையாகவும் இருக்கின்றேன்.

ஓ! பரதகுலசிரேஷ்டனே! நான் பலவான்களுடைய காமமும், ராகமுமற்ற சாமர்த்தியமாகவும், பிராணிகளுடைய தர்மத்திற்கு விரோதமில்லாத ஆசையாகவும் இருக்கிறேன்.

(சங்கரர்) காமமென்பது இந்திரியங்களோடு தற்காலம் கூட்டரவு படாத (அதாவது அடையாத) விஷயங்களின்மேல் உள்ள ஆசை.

ராகம் என்றால் இந்திரியங்களால் அடைந்திருக்கப்பட்ட விஷயங் களின்மேல் உள்ள ருசி அல்லது பிரியம். இவை இரண்டும் அற்றதாய் உடம்பு முதலியவற்றை மாத்திரம் தாங்குவதற்குவேண்டிய பலம் அதாவது சாமர்த்தியமாக நான் இருக்கின்றேன்; ஆனால் ஸம்ஸாரிகளுடைய அவாவிற்கும் பற்றிற்கும் காரணமான திறமை அல்லது வலிமை எதுவோ அதல்ல. மேலும் பிராணிகளிடத்திலுள்ள சாஸ்திரத்திற்கு விரோதமில்லாத அல்லது சாஸ்திரத்தை அநுஸரித்த ஆசை எதுவோ, அதாவது தேகத்தை சம்ரக்ஷித்தல் முதலியவற்றிற்கு மாத்திரம் வேண்டியதாய் ஆகாரத்தை புஜித்தல் ஜலம் குடித்தல் இவை போன்றவற்றைப்பற்றிய ஆசை எதுவோ அதுவாக இருக்கின்றேன்.

இந்த 8-வது சுலோகத்தினடியில் கண்டபடி அதுமுதல் இந்த 11-வது சுலோகம்வரை ஸ்ரீதரர், முதலானவர்களின் தாத்பரியம்:—

(ஸ்ரீதரர்) ரஸத்தின் சூக்ஷ்மபாகம் என்னுடைய அம்சம். அந்த அம்சமானது விபூதியென்றுஞ் சொல்லப்படும். அந்த என்னுடைய அம்சமாகிய ரஸத்திற்கு நானிருப்பிடமாகையால் "ஜலத்திலுள்ள ரஸம் நான்" என்று சொல்லப்பட்டது. மற்றவைகளுமிதே யர்த்தத்தில் கிரகிக்கப் படவேண்டும். ராகஃ—கிடைத்தது போதாது, பின்னும் வேண்டுமென்கிற அபேக்ஷ, (பலும்பலுவதாஃஷ்ரீ என்று இவர் பாடம்,) யஃஅவிருத்தஃகாமஃ—தன் ஸ்திரீ விஷயத்திலுண்டாகும் காமவிஷயத்திலுங்கூட தர்மத்திற்கு விரோதமா யிருக்கக்கூடாது.

(ராமாநுஜர்) ரஸம் முதலியவைகள் என்னைவிட வேறானதாகிலும் அவைகள் என்னாலுண்டாக்கப் பட்டவைகள். என்னாலுண்டானவைகளாயும் என்னை ஆசிரயித்தவைகளாயும், என்னுடைய சரீரமாயும், என்னுடைய சேஷபூதமாயும், நான் அவைகளுக்குச் சேஷியாயுமிருக்கிறதினால் அவைகள் நானென்று சொல்லப்பட்டன. மற்றவைகளு மிப்படியே.

(மத்வர்) ஸகல வஸ்துக்களும் ஈசுவராதீனமாயும், ஈசுவரனை ஆதாரமாயுடையனவாயு மிருக்கிறதினால், எந்த வஸ்து எவனுடைய அதீனமாயிருக்கிறதோ, அந்தவஸ்து அவனாகவே சொல்லப்படுகிறது. ஆகையால், தன்னுடைய அதீனமான ரஸம் முதலியவைகள், தானே யென்று பகவான் சொன்னார், ஜலம் முதலியவைகளில், ரஸம் முதலியவைகள் எப்படி சிரேஷ்டமோ, அப்படியே நான் எல்லாவிடத்திலும் சிரேஷ்டனாக விருக்கிறேன்.

(இராகவேந்திரர்) ஜலத்திலுள்ள ரஸம் முதலானவைகளை, அதிலிருக்கும் பரமாத்மாவுக்கு பிரதிமையாகப் பாவித்து, உபாசிக்கிற ஞானிகளுண்டு. ஆகையால், ரஸம் முதலியவை நானே என்று பகவான் அபேதமாகச்சொன்னார். "நாம ப்ரஹ்மேத்யுபாஸீத" முதலிய சுருதி வாக்கியங்களில் உபாஸனஸ்தலங்களில், பிரதிமையான நாமங்களையும் உபாசிக்கப் பட்ட பிரம்மத்தையும் அபேதமாய்ச் சொல்லியிருக்கிறதுபோல இவ்விடத்திலும், அபேதமாய்ச் சொன்னதாக வறியவேண்டியது. அல்லது, ஜலம் முதலானவைகளின் அபிமானி தேவதைகளிடத்திலுள்ள பரமாத்ம சுவரூபத்தை உபாசனை செய்யும்பொருட்டு, அபேதமாய்ச் சொன்னதாக வாவது கிரகிக்கவேண்டியது.

---

௧௨ யே சைவ ஸாத்விகா பாவா ராஜஸாஸ்தாமஸாஶ்ச யே ।
மத்த ஏவேதி தாந்வித்தி ந த்வஹம் தேஷு தே மயி ॥

12 யே-ச-ஏவ-ஸாத்விகா:-பாவா:-ராஜஸா:-தாமஸா:-ச-யே ।
மத்த:-ஏவ-இதி-தாந்-வித்தி-ந-து-அஹம்-தேஷு-தே-மயி

ஸாத்விகாஏவ	சத்துவகுணத்தினாலேயேயுண்டான
பாவா:	வஸ்துக்கள்
யே	எவையோ
ராஜஸாஶ்ச	ரஜோகுணத்தினாலுண்டானவும்
தாமஸாஶ்ச	தமோகுணத்தினாலுண்டானவும்
(பாவா:)	வஸ்துக்கள்
யே	எவையோ
தாந்	அவைகளை
மத்தஏவேதி	என்னிடத்திருந்தேயுண்டானவையென்று
வித்தி	அறிந்துகொள்
அஹம்தேஷுந	நான் அவைகளில் இல்லை
து	மற்று
தேமயி(ஸந்தி)	அவை என்னிடத்திருக்கின்றன.

சத்துவ, ரஜஸ்தமோகுணங்களினா லுண்டான வஸ்துக்களெவையோ அவைக ளென்னாலேயே யுண்டானவை யென்றும், நான் அவைகளிலில்லை, என்னிடத்தில் அவைகளிருக்கின்றன வென்றும் நீ அறி.

(சங்கரர்) ஸாத்விகம் - ஸத்வகுணத்தாலானது. ராஜஸம் ரஜோகுணத்தாலானது. தாமஸம் - தமோகுணத்தாலானது. பிராணிகளுடைய

தமது கர்ம வசப்படி ஸாத்விகமாகவும், ராஜஸமாகவும், தாமஸமாகவுமுள்ள எந்தெந்தப் பொருள்கள் உண்டாகின்றனவோ, அவற்றையெல்லாம் என்னிடமிருந்தே உண்டானவையாக, இவ்வாறு தெரிந்துகொள். இப்படி அவை என்னிடமிருந்து உண்டாகின்றனவாயினும் ஸம்ஸாரிகள் இருப்பதுபோல நான் அவற்றைச் சார்ந்து அதற்கு வசமாக இருக்கிறேனில்லை மற்று அவை எனக்கு வசமாக என்னைச் சார்ந்துள்ளன.

(ஸ்ரீதரர்) சத்துவகுணத்தினுலுண்டான சமதமாதிகள், ரஜோகுணத்தினுலுண்டான ஹர்ஷ தர்பாதிகள், தமோகுணத்தினு லுண்டான சோக மோஹாதிகள், இவைகளுக்கு நான் (அதீனம்) சுவாதீனமன்று. அவைகள் எனக்கு அதீனமானவைகள்.

(ராமாநுஜர்) என்னுடைய இருப்பானது சத்துவாதி குணங்களுடைய அதீனமல்ல. ஆனுல் அவைகள் எனக்கு அதீனமானவைகள். அவைகள் எனக்கு சரீரமாய் என்னை யாசிரயித்திருக்கின்றன. இதன் தாற்பரிய மென்னவென்றுல், ஆத்மாவன்றியில் சரீரமிருக்கமாட்டாது. ஆத்மா தேகத்தை விட்டுமிருப்பான். அவன் தேகத்தினுல், போகவிஷயமாய் உபகாரமடைகிருன். எனக்கு தேகத்தினுலாகவேண்டிய தொன்றுமில்லை. லீலையின் பொருட்டு தேகத்தை கிரகித்திருக்கிறேன்.

கங. த்ரிபிர் குணமயைர் பாவைரேபி: ஸர்வமிதம் ஜகத் |
மோஹிதம் நாபிஜாநாதி மாமேப்ய: பரமவ்யயம் ||

13 த்ரிபி: 1-குணமயை:-பாவை:-ஏபி:-ஸர்வம்-இதம்-ஜகத் |
மோஹிதம்2-ந-அபிஜாநாதி-மாம்3-ஏப்ய:-பரம்-அவ்யயம்

ஸர்வம் இதம் ஜகத்	இந்த ஸகல பிரபஞ்சமும்
த்ரிபி: குணமயை:	மூன்றுவித குணவிகாரமாயுள்ள
ஏபி: பாவை:	இந்த வஸ்துக்களினுலே
மோஹிதம்	மயக்கப்பட்டு
மாம்	என்னை
ஏப்ய:	இவைகளினின்றும்
பரம்	வேருனவனுகவும்
அவ்யயம்	விகாரமற்றவனுகவும்
நாபிஜாநாதி	நன்ருய் அறிகிறதில்லை.

இந்த ஸகலமான பிரபஞ்சமும் (பிராணிகளும்) ஸத்வரஜஸ் தமஸ்ஸென்கிற மூன்று விதங்களாயுள்ள குணவிகாரங்களான இந்த (முன்சொன்ன) வஸ்துக்களினுலே மயக்கத்தை (அவிவேகத்தை) அடைவிக்கப்

பெற்று என்னை இவைகளின்றும் வேறானவனாகவும் அதாவது இக்குணங்களுக்கு அப்பால் உள்ளவனாகவும், விகாரம் அல்லது மாறுபாடு இல்லாதவனாகவும் அறிகின்றதில்லை.

(1) த்ரிபி:—தேகம், இந்திரியங்கள், போக்கியசுவரூபமான வஸ்துக்கள், என, மூன்று விதம் (ராமாநுஜர்).

(2) மோஹிதம் — குணரூபத்துடனிருக்கிற ஜீவர்கள் தங்களைப் போல் பரமாத்மாவும், குணரூபத்துடனிருப்பதாக மோகத்தை யுடையவர்களாயிருக்கிறார்கள் (மத்வர்.)

(3) மாம்—அப்பிராகிருத தேகத்தையுடைய என்னை (மத்வர்)

(சங்கரர்) பரமேஸ்வரனான நான் இயல்பாகவே நித்தியனும் சுத்தனும் புத்தனும் முக்தனும் ஸகல பூதங்களுடைய ஆத்மாவாயும், நிர்குணனும், ஸம்ஸார தோஷமாகிய விதையை வருத்தற்குக் காரணமாயும் இவ்வாறு இருந்தபோதிலும், என்னை இந்தஜகத்தானது அறிகின்றதில்லையே என பகவான் இரக்கத்தைக் காட்டுகிறார். அந்த அறியாமை இந்த ஜகத்திற்கு எதனால் உண்டானதென்று, காரணத்தையும் சொல்லுகிறார். இந்தப் பிராணி வர்க்கமானது விருப்பு வெருப்பு மயக்கம் முதலான இவ்விதமாயுள்ள. முன் சொன்ன ஸத்வாதி குணவிகாரங்களால் உண்டான இப்பொருள்களால் அவிவேகமுடைமையை அடைவிக்கப்பெற்று என்னை முன்சொன்ன இக்குணங்களுக்கு அப்பால் உள்ளவனாகவும் வேறானவனாகவும் அவ்யயனாகவும் அதாவது உலகத்திலுள்ள பொருள்களுக்கு உரிய பிறப்பு முதலான எவ்வித விகாரமும் இல்லாதவனாகவும் அறிகின்றதில்லை.

(ஸ்வா) "வஸ்துக்களின்றும் வேறாயிருக்கிற" "நாசமற்ற" என்கிற இந்த விசேஷணங்களினால், காணப்படுகிற ஸகலப் பிரபஞ்ச சுவரூபத்தை விட பிரம்ம சுவரூபம் அந்நியமானதென்றும், காணப்படுகிற இந்த ஸகல பிரபஞ்சமும் நாசத்தை யடையுமென்றும், பிரம்மசுவரூபமானது நாசமடையாததென்றும், இந்த ஸகல வஸ்துக்களிலு மிருக்கிற பிரம்மம் 'ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச' என்கிற வேதவாக்கியப்படி அந்த வஸ்துக்களில் ஒட்டாமல் சாக்ஷியாய் மட்டு மிருக்கிறதேயன்றி, வஸ்து சுவரூபாமயில்லாமையால் வஸ்து நாசத்தினால் பிரம்மத்திற்கு நாசமில்லை யென்றும் ஏற்படுகிறது. (ஸ்வ) இந்த சுலோகத்தில் பகவான் தன்னை இந்த ஜகத்தானது ஏன் உள்ளபடி அறிகிறதில்லை என்பதற்கு காரணம் சொல்லியிருப்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளத்தக்கது. ஏகமாகவேயுள்ள ப்ரஹ்மம் ஸத்வரஜஸ்தமோ குணங்களின் விகாரங்களினால் வேறுபட்டதாக அஜ்ஞானத்தினால் தோன்றுகிறதே ஒழிய வேறு அல்ல.

இது மாயையின் காரியம். இந்த தெய்வமாயையைத் தாண்டுவது அதிதுர்லபம். பின்வருகிற 25-வதுசுலோகத்தில் "நான் என்னுடைய யோகமாயையினால் மறைக்கப்பட்டு, என்பக்தர்கள் தவிர மற்றவர்களுக்கு விளங்குகிறதில்லை. ஆகையால் இந்த மாயைக்கு வசமாய் மோஹத்தை இந்தஜகத் அடைந்து என்னை ஆத்மாவாக அறிகிறதில்லை" என்று பகவான் சொல்லுகிருர்.

---

௧௪ 𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾।
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇॥

14 தைவீ–ஹி–ஏஷா–குணமயீ–மம–மாயா–துரத்யயா |
மாம்–ஏவ–யே–ப்ரபத்யந்தே–மாயாம்–ஏதாம்–தரந்தி–தே

𑌗𑍁𑌣𑌮𑌯𑍀	குணங்களால் ஆகிய நான்
𑌏𑌷𑌾 𑌮𑌮	இந்த என்னுடைய
𑌦𑍈𑌵𑍀 𑌮𑌾𑌯𑌾	தேய்வ மாயையானது
𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌹𑌿	தாண்ட அதிதுர்லபமானதாதலால்
𑌯𑍇 𑌮𑌾𑌮𑍇𑌵	எவர்கள் என்னையே
𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇	சரணமடைகிருர்களோ
𑌤𑍇	அவர்கள்
𑌏𑌤𑌾𑌂 𑌮𑌾𑌯𑌾𑌂	இந்த மாயையை
𑌤𑌰𑌨𑍍𑌤𑌿	தாண்டுகிருர்கள்.

முக்குணங்களாலாகியநான் என்னுடைய இந்த (முன் சொன்ன) தெய்வமாயையானதுகடக்க அதிதுர்லபமானதாதலால், எவர்கள் என்னையே சரணாகதியாக அடைகிருர்களோ அவர்கள்தான் இந்த மாயையைத்தாண்டுகிருர்கள்.

(சங்கரர்) ஆனால் முக்குண வடிவமான இதை அதாவது விஷ்ணுவினுடைய தெய்வமாயையை, ஒருவன் எப்படி கடந்து நிற்கலாம் என்பது சொல்லப்படுகிறது. ஸர்வவியாபியாகிய ஈச்வரனான எனக்கு சொந்தமானதும், ஸத்வாதி குண விகாரமானதும், முன் சொல்லப்பட்டதுமான என்னுடைய இந்த மாயையானது கடப்பதற்கு மிக அரிதானது. ஆதலால் (அது இப்படி இருப்பதால்) எவர்கள் சகல கர்மங்களையும் துறந்து, மாயையை உடையவனாய் அவர்களது ஆத்மாவாகவுள்ள என்னையே எவ்வகையினாலும் அடைகிருர்களோ, அவர்கள் சகல பிராணிகளையும் மயக்குகின்ற இந்த மாயையைக் கடந்து விடுகிருர்கள். அதாவது அவர்கள் ஸம்ஸார பந்தத்தினின்று விடுபடுகிருர்கள் என்பது பொருள்.

(ராமாநுஜர்) மாயையானது முக்குணங்களுடன் கூடினது. அது ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டது. அது (மாயை) மித்தை (பொய்) என்பது சரியல்ல. அது சத்தியமானது. எப்படியென்றால், மந்திரங்கள் (வெடி) மருந்துகள், முதலியவைகளில், பலவிசித்திரங்களைக் காண்பிக்கிறவர்கள் மாயாவிகளென்று சொல்லப்படுகிறார்கள். இப்படிப்பட்ட இந்திரஜாலம் முதலிய வித்தைகளினாலும் காணப்படும் விசித்திரங்கள் மித்தையானாலும், அந்த இந்திரஜாலம் முதலிய வித்தைகளில் காணப்படுகிற விசித்திரங்கள் எதனாலாவனவோ, அந்தக் கருவியாகிய மந்திராதிகள் மித்தையல்ல. இந்த சத்தியமாகிய மாயையைத்தான், "மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத்" என்கிற சுருதியில் ஈசுவரமாயை என்று சொல்லியிருக்கிறது. இதெப்படி உலகத்தை மோகிப்பிக்கிறதென்றால், ஈசுவர சுவரூபத்தை மறைத்து விஷயங்களில் பற்றுதலை யுண்டாக்குகிறது. இது அந்த மாயையினுடைய சக்தி. இந்த சக்தியும், அந்த மாயையும் சத்தியமானவையே யன்றி மித்தையல்ல. இந்த மாயையைத் தாண்டுகிறதென்றால், மாயையைப் போக்கடித்துக் கொள்ளுவதல்ல. மாயையினாலுண்டாகும் துன்பங்களை நிவர்த்திசெய்து கொள்வதே.

(இராகவேந்திரர்) மாயையென்பவள் விஷ்ணுவினுடைய ஒரு ஸ்திரீயான துர்க்கை. இவள் உலகத்தை மோகிப்பிக்கிற சக்தியை யுடையவள். அவளாலுண்டாகும் துன்பத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவது கடினமென்பது தாத்பரியம்.

(ஸ்வா) "என்னையே சரணமடைந்தவர்கள்" என்பது பிரபஞ்சவாசனையற்று, பிரம்மத்தைத் தவிர வேறொன்றையும் சிந்திக்காமலிருக்கிற பிரம்ம நிஷ்டர்களென்பது தாத்பரியம். (14)

கரு ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: |
மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ||

15 ந-மாம்-துஷ்க்ருதிந:-மூடா: -ப்ரபத் யந்தே--நராதமா: |
மாயயா—அபஹ்ருதஜ்ஞாநா:—ஆஸுரம்-பாவம்-ஆஶ்ரிதா:

மாயயா அபஹ்ருத ஜ்ஞாநா:	மாயையினாலபகரிக்கப்பட்ட ஞானமுள்ளவர்களாயும்(ஆத்மஞானமற்றவர்கள்)
ஆஸுரம் பாவம்	அஸுர சுவபாவத்தை
ஆஶ்ரிதா:	ஆஶ்ரயித்தவர்களாயும்
நராதமா:	மனிதரில் நிகிருஷ்டராயும்
துஷ்க்ருதிந:	பாபிகளாயுமிருக்கிற

உபாஶ்ரிதா: மூடர்கள்
மாம் ந ப்ரபத்3யந்தே என்னை அடைகிறதில்லை,

மாயையினால் அபகரிக்கப்பட்ட ஞானமுடையவர்களாய் அசுரத்தன்மையை ஆச்ரயித்து (அடைந்து) மனிதர்களில் நிகிருஷ்டராய் (கடைப்பட்டவராய்) பாபங்களைச் செய்கின்ற மூடர்கள் என்னையே சரணாகதி அடைவதில்லை, (உபாஸிக்கிறதில்லை).

---

(1) ஆஸுரம் – பரஹிம்ஸையும், அசத்தியமுமுள்ள சுவபாவத்தை (சங்கரர்); "த3ம்போ4 த3ர்போ(அ)பி4மாநஶ்ச" என்கிற (16-வது அத். 4-வது) சுலோகத்தில் சொல்லியிருக்கிற சுபாவத்தை (ஸ்ரீதரர்). தேகேந்திரிய பிராணன்களை இரக்ஷிக்கிறதில் திருஷ்டியுள்ளவர்கள், அசுரர்கள். அவ்வித சுவபாவமுள்ளவர்கள் அசுரசுவபாவமுள்ளவர்கள். (இராகவேந்திரர்).

(ராமாநுஜர்) பாபிகளில் நால்வகையாவன:—

(1) மூடர்கள்:—ஒன்றை மற்றொன்றாக கிரகிக்கிற விபரீதஞானமுள்ளவர்கள். அதாவது ஈசுவரனுக்கே சேஷமாயிருக்க வேண்டிய (ஜீவ) ஆத்மாவையும், போகத்திற்குபயோகமான வுலகத்திலுள்ள வஸ்துக்களையும், தன்னுடைய சேஷமாக நினைக்கிறவர்கள்.

(2) நராதமர்கள்.— சாமான்னியமாய் ஈசுவர சுவரூபஞானமிருந்தாலும் அதிலேயே பிடிமானம் வைக்க யோக்கியதை யில்லாதவர்கள்.

(3) மாயையினால் அபகரிக்கப்பட்ட ஞானமுடையவர்கள்,— ஈசுவரனுடைய சுவரூபஞானம், ஐசுவரியம் மகிமை முதலிய ஞானம், இவைகளை குதர்க்கங்களினால் அசம்பாவிதமென்றெண்ணுகிறவர்கள்.

(4) அசுர சுபாவமுடையவர்கள்.— ஈசுவரனுடைய மகிமை ஐசுவரியம் முதலியவைகளைத் தெரிந்தும், அந்த மகிமை முதலியவைகளைத் தூஷித்து ஈசுவரனிடத்தில் துவேஷஞ் செய்கிறவர்கள்.

இவர்கள் முறையே ஒருவரைவிட ஒருவர் அதிக பாபிகள். (ஸ்வ) உம்மை அடைந்தவர்கள் இந்த மாயையைக் கடந்து விடுகிறார்கள் என்றால் எக்காரணத்தினால் எல்லோரும் உம்மையே அடைவதில்லை, என்பது இந்த சுலோகத்தினால் சொல்லப்பட்டது. (15)

கசு சதுர்விதா4 ப4ஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோ(அ)ர்ஜுந ।
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தா2ர்தீ2 ஜ்ஞாநீ ச ப4ரதர்ஷப4 ॥

16 சதுர்வியா:—ஹஜந்தே-மாம்-ஜநா:—ஸுக்ருதிந:-அர்ஜுந |
ஆர்த: 1—ஜிஜ்ஞாஸு:2-அர்யார்யீ3-ஜ்ஞாநீ4—சஹரதர்ஷஹ

𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭	ஓ! பரதகுல சிரேஷ்டனுன
𑌅𑌰𑍍𑌜𑌨	அர்சுனு!
𑌆𑌰𑍍𑌤𑌃	வியாதி முதலிய துன்பத்தையடைந்தவன்
𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌃	சுவரூபஞானமடையவிச்சையுள்ளவன்
𑌅𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑍀	பொருளைக்கோருகிறவன்
𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌚	ஞானி
(𑌇𑌤𑌿)	இந்த
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾𑌃	நான்கு விதமான
𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌜𑌨𑌾𑌃	புண்ணியசாலியான ஜனங்கள்
𑌮𑌾𑌂 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇	என்னை பஜிக்கிறுர்கள்.

பரதகுல சிரேஷ்டனுன ஓ! அர்ஜுனு! வியாதி முதலிய துன்பத்தையடைந்தவன், (ஆத்ம) சுவரூபஞானமடைய விச்சையுள்ளவன், பொருளைக் கோருகிறவன், பிரம்மஞானி, இப்படிப்பட்ட நான்குவித புண்ணியசாலிகளான ஜனங்கள் என்னை பஜிக்கிறுர்கள்.

---

(1) ஆர்த:— துன்பத்தால் கவரப்பட்டவன், திருடர், புலி, நோய் முதலியவற்றுல் தாக்கப்பட்டவன், ஆபத்தை அடைந்தவன் (சங்கரர்).

போக்கடித்துக்கொண்ட ஐசுவரியத்தை மறுபடியும் கோருகிறவன் (ராமாநுஜர்).

(2) ஜிஜ்ஞாஸு:—எவன் பகவானுடைய உண்மையை அறிய விரும்புகின்றுனே அவன் (சங்கரர்); தாரித்திரியத்திலிருந்து பாக்கியத்தைக் கோருகிறவன் (ராமாநுஜர்);

(3) அர்த்தார்த்தீ— திரவ்வியத்தின் மேல் ஆசையுள்ளவன் (சங்கரர்); பிரகிருதி விமுக்தமான தன்னுடைய சுவரூபஞானத யடைய விச்சிக்கிறவன். (ராமாநுஜர்)

(4) ஜ்ஞானி— விஷ்ணுவினுடைய உண்மையை அறிந்தவன் (சங்கரர்); இந்த அத்தியாயம், 5-வது சுலோகம் முதல் சொல்லிவந்திருக்கிறபடி பகவானுக்குச் சேஷமாயிருக்கிற தன்னுடைய ஆத்ம சுவரூபத்தைத் தெரிந்து, தன்னுலடையவேண்டியவர் பரமாத்மாவென்று அறிகிறவன் (ராமாநுஜர்)

(ஸா) இவன் ஆத்மஞானி, 6-வது அத்தியாயம், 46-வது சுலோகத்தில் சொன்ன ஞானியல்ல, மூன்று அதிகாரிகளென்பது, (ராமாநுஜர்) அபிப்பிராயம். (16)

கள தெஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விஶிஷ்யதே ।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த²மஹம் ஸ ச மம ப்ரிய: ॥

17 தேஷாம்—ஜ்ஞாநீ—நித்யயுக்த: 1—ஏகபக்தி:2—விஶிஷ்யதே ।
ப்ரிய:—ஹி—ஜ்ஞாநிந:—அத்யர்த²ம்—அஹம்—ஸ:—ச—மம—ப்ரிய:

தெஷாம்	அவர்களுக்குள்
ஏகபக்தி:	ஒன்றிலேயே பக்தியுடையவனாய்
நித்யயுக்த:	எப்பொழுதும் யோகத்தோடு கூடிய
ஜ்ஞாநீவிஶிஷ்யதெ	ஞானியானவன் சிரேஷ்டனாகிறான்
ஹி	ஏனென்றால்
அஹம்	நான்
ஜ்ஞாநிந:	ஞானிக்கு
அத்யர்த²ம் ப்ரிய:	மிகவும்பிரியமானவன்
ஸ ச மம ப்ரிய:	அவனும் எனக்குப் பிரியமானவன்.

முன் சொன்ன நால்வருக்குள் ஆத்மாவாகிய என்னிடத்திலேயே பக்தியுடையவனாய் எப்பொழுதும் யோகத்தோடு கூடியிருக்கிற ஞானியானவன் சிரேஷ்டனாகிறான். ஏனெனில் அந்த ஞானிக்கு நான் மிகவும் பிரியமுள்ளவன், அவனும் எனக்கு மிகவும் பிரியமுள்ளவன்.

---

(1) நித்யயுக்த:—ஒரு காரியமாகிறவரையில் மற்றவர்கள் என்னிடத்தில் பக்திசெய்வார்கள். இவன் நித்தியமாய் ஆசிரயித்துக் கொண்டிருக்கிறவன் (ராமாநுஜர்).

(2) ஏகபக்தி:—பரமாத்மாவைத்தவிர வேறே வஸ்து இல்லாததினால் ஒரே பக்தியுடையவன். (சங்கரர்); என்னிடத்திலேயே பக்தியுடையவன் (ராமாநுஜர்).

(சங்கரபாஷ்யம்) முன் சொன்ன அந்த நால்வருள் ஞானியானவன் உண்மையை அறிந்துள்ளமையால் பகவானாகிய ஆத்மாவினிடத்திலேயே எப்பொழுதும் ஒரு நிலைப்பட்டவனும் ஒன்றிலேயே அதாவது அந்த ஆத்மாவினிடத்திலேயே பேரன்பையுடையவனும் இருக்கிறான். அவன் அன்பைச் செலுத்த வேறு ஒன்றையும் காணுமையினால் என்க. ஆகவே அவ்வொன்றிலேயே பேரன்பையுடைய அவன் மேலாகின்றான். (சிறப்பை அடைகிறான்). நான் ஞானியினுடைய ஆத்மாவாதலின் அவனுக்கு நான் மிகவும் பிரியமானவன். எவனுக்கும் தன் ஆத்மா பிரியமாயிருக்கின்றதென்பது உலகத்தில் எல்லோருக்கும் தெரிந்ததன்றோ? வாசுதேவனாகிய நான் ஞானியினுடைய ஆத்மாவாதலால் ஞானிக்கு மிகப்பிரியமானவன்.

அந்த ஞானியும் வாசுதேவனை என்னுடைய ஆத்மாவாகவே இருப்பதால் எனக்கு மிகவும் பிரியமானவன், என்பது கருத்து.

(ஸா) விஷயங்களைவிட, அதாவது, உலகத்திலுள்ள வஸ்துக்களைப்பார்க்கிலும், சுஹ்ருத்—நாள், ப்ரிய:—இஷ்டன், என்றும் அர்த்தமாகலாம். (17)

---

௧௮ 𑌉𑌦𑌾𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵𑍈𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌂 ।
𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸 𑌹𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂 ॥

18 உதாரா:-ஸர்வே-ஏவ-ஏதே-ஜ்ஞாநீ-து-ஆத்மா-ஏவ-மே-மதம் |
ஆஸ்தி²த:-ஸ:-ஹி-யுக்தாத்மா-மாம்-ஏவ-அநுத்தமாம்-க³திம்

𑌏𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇	இந்த எல்லோரும்
𑌉𑌦𑌾𑌰𑌾𑌃 𑌏𑌵	சிலாக்கியமானவர்களே
𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍁	ஞானியோ
𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 (𑌇𑌤𑌿)	ஆத்மா தான் என்பது
𑌮𑍇 𑌮𑌤𑌂	என்னுடைய நிச்சயம்
𑌹𑌿	ஏனென்றால்
𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌃	மனம் ஒரு நிலைப்பட்ட அவன்
𑌮𑌾𑌮𑍇𑌵	என்னையே
𑌅𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂	சர்வோத்தமமானகதியாக
𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃	அடைந்திருக்கிறான்.

மேலே சொன்ன நால்வரும் சிலாக்கியமானவர்களே, (அவர்களுக்குள்ளே) ஞானியோ, நானே என்பது என்னுடைய நிச்சயம். ஏனென்றால், அவன் (அந்தஞானி) என்னிடத்தில் மனதை நிலையாய் நிறுத்தினவனும், என்னையே சர்வோத்தமமான கதியாக நம்பினவனுமிருக்கிறான்.

(சங்கரர்) அப்படியானால் துன்பமுற்றவன் முதலிய மற்ற மூவரும் வாசுதேவனுக்குப் பிரியமானவர்கள் அல்ல என்பதா? என்றால், அப்படியன்று. இவர்கள் எல்லோருமே உயர்ந்தவர்கள். மற்ற மூவர்களும் எனக்குப் பிரியமானவர்கள்தான். என்னுடைய எந்த பக்தனும் வாசுதேவனை எனக்குப் பிரியமில்லாதவனாக இருக்கமாட்டானன்றோ. ஆனால் ஞானியானவன் மிகவும் பிரியனாய் இருக்கிறான் என்கிற இவ்வேறுபாடு உண்டு. அது எதனால் என்றால், ஞானியோ ஆத்மாதான். என்னைக் காட்டிலும் வேறானவனன்றென்பது என் நிச்சயம். ஏனெனில் அந்த ஞானியானவன் "நானே பகவான் வாசுதேவன், வேறு அல்லன்" என இவ்வாறு

ஸமாஹித சித்தனுய் அடைய வேண்டியதான பரப்ரஹ்மத்தையே மிக்க உயர்ந்த கதியாக நாடத் தலைப்பட்டவன்.

(ராமாநுஜர்) என்னையன்றியில் அந்த ஞானிக்குப் பிராண தாரணை யில்லை யாகையால் எனக்கு அந்த ஞானியைத் தவிர ஆத்மதாரணையில்லை.

(இராகவேந்திரர்) ஆத்மைவ—நானே யென்றதினுல், அதிகப் பிரீயத்தினுல், ஒருவனைக்குறித்துப் பேசும்போது, "அவன் நானே" யென்று சொல்லப் படுகிறதுபோல, பகவான் ஞானிகளிடத்திலுள்ள பிரியத்தினுல், "நானே" யென்று சொன்னதாக கிரகிக்கவேண்டும். அல்லது ஆஸ்தித:—முயற்சிசெய்து, மாமேவ—என்னையே, ஆஸ்தா—அடைந்திருக்கிருன், என்றுவது அர்த்தஞ் செய்யலாம். (18)

கக பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே।
வாஸுதேவ ஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:॥

19 பஹூநாம்–ஜந்மநாம்–அந்தே–ஜ்ஞாநவாந்–மாம்–ப்ரபத்யதே।
வாஸுதேவ:–ஸர்வம்–இதி–ஸ:–மஹாத்மா–ஸுதுர்லப:

பஹூநாம்	அனேகஜன்மங்களின்
ஜந்மநாமந்தே	முடிவிலே
ஜ்ஞாநவாந்	ஞானமடைந்தவன்
ஸர்வம்	ஸகலமும்
வாஸுதேவ: இதி	வாசுதேவ சுவரூபமென்று
மாம் ப்ரபத்யதே	என்னை அடைகிருன்
ஸ மஹாத்மா	அப்படிப்பட்டவன் மஹாத்மா
ஸுதுர்லப:	கிடைப்பது மிகவும்துர்லபம்.

வெகு ஜன்மங்க ளெடுத்தபின் ஞானியானவன் ஸகலமும் வாசுதேவ சுவரூபமென்று என்னை அடைகிருன். அப்படிப்பட்ட நல்ல மஹாத்மா கிடைப்பதுமிகவும் அரிது.

(சங்கரர்) மறுபடியும் ஞானியைப் புகழ்கின்றுர். ஞானத்திற்கு வேண்டிய நல்லவாஸனை உண்டாவதற்கு இடமாயுள்ள பல ஜன்மங்களை எடுத்து முடிவிலே ஞானத்தின் பரிபக்குவத்தை அடைந்தவன், ப்ரத்யகாத்மா (உள்ளேயுள்ள ஆத்மா) வாகிய வாஸுதேவனுன என்னை அடைகிருன். எவ்வாறு ?—"எல்லாம் வாசுதேவன்" என்று, எவன் இவ்வாறு, எல்லாவற்றின் ஆத்மாகவுள்ள என்னை அடைகின்றுனே அவன் மஹாத்மா, அதாவது எல்லாவற்றிலும் மேலான வைபவத்தைப் பெற்ற

வன். அவனுக்கு ஒப்பாகவாயினும், உயர்வாகவாயினும் வேறொருவன் இல்லை. இப்படிப்பட்டவன் கிடைப்பது அதிக துர்லபம். “மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு” என்று இந்த அத்தியாயம் 3-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா ?

(ராமாநுஜர்) ஜ்ஞாநவாந்—வாசுதேவனுக்கு, “நான் சேஷ பூதன் என்னுடைய ஸ்வரூபத்தினிருப்பு, பிரவிருத்தி இவைகள் அவருடைய அதீனமானவை. அவர் சகல கல்யாணகுணங்களால் சிரேஷ்டர்” என்று ஞானமடைந்தவனாய். வாஸுதேவ ஸர்வமிதி— நானடையத் தகுந்த சிரேஷ்டமானவஸ்து வாசுதேவன்தான்” என்றும், “என்னை யடைவிப்பது மவர்தான்” என்றும், “என் மனதிலுள்ள சகல கோரிக்கைகளும் அவர்தான்” என்றும், மாம் ப்ரபத்யதே—என்னை யுபாசிக்கிறான். இந்த அர்த்தத்திற்காதாரம், இந்த அ௯. 4-5-6-7-12-17-18 சுலோகங்கள்.

(இராகவேந்திரர்) ஸகலப் பிரபஞ்சத்தி னிருப்புமுதலானது வாசுதேவாதீனம், அல்லது, ஸர்வம்—பூர்ணமான வஸ்துவானது வாஸுதேவ:—வாசுதேவனே.

(ஸா) சகலத்திலும் நான் வசிக்கிற படியினாலும், சகலத்தையும் தன்னிடத்தில் வசிக்கும்படி செய்வதினாலும், சகலத்தையும் மறைக்கிறதினாலேயும் (வாசு) என்கிற பெயர், மோக்ஷமடைய விரும்பும் முமுக்ஷுக்களாலே பிரார்த்திக்கப் படுகிறவனாயும், சர்வ சுவதந்தரனாயு மிருக்கிறதினால் தேவனென்கிற பெயர்; ஆகையால், வாசுதேவன் என்று சங்கரர் ஸஹஸ்ர நாம பாஷியத்தில் அர்த்தஞ் செய்திருக்கிறார். (19)

20 காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தேऽந்யதேவதா:
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ॥

20 காமை:--தை:-தை:-ஹ்ருதஜ்ஞாநா:-1ப்ரபத் யந்தே-அந்யதேவதா: |
தம்-தம்-நியமம்-ஆஸ்தாய-ப்ரக்ருத்யா2-நியதா:-ஸ்வயா

தைஸ்தை:	அந்தந்த
காமை:	ஆசைகளினால்
ஹ்ருதஜ்ஞாநா:	ஞானம்அபகரிக்கப்பட்டவர்கள்
தம் தம்	அந்தந்த
நியமம்	நியமத்தை
ஆஸ்தாய	கைப்பற்றி
ஸ்வயா ப்ரக்ருத்யா	தங்களுடைய ஸ்வபாவத்தினாலே
நியதா:	ஏவப்பட்டவர்களாய்

அந்யதேவதா: இதர தேவதைகளை

ப்ரபத்யந்தே அடைகிறார்கள், பஜிக்கிறார்கள்.

எதெதுகளில் இச்சையோ அந்தந்த ஆசைகளினால் அபகரிக்கப் பட்ட ஞானத்தை உடையவர்கள், அந்தந்த நியமத்தைக் கைப்பற்றி தங்களுடைய ஸ்வபாவத்தினாலே ஏவப்பட்டவர்களாய் வேறு தேவதைகளை அடைகிறார்கள்.

(1) ஹ்ருதஜ்ஞாநா:—என் சுவரூபஞான மற்றவர்கள் (ராமாநுஜர்).

(2) அந்யதேவதா:— தன்னுடைய ஆத்ம சுவரூபியான பிரம்மத்தை விட்டு இதர தேவதைகளை (சங்கரர்); பூதப்பிரேத பிசாசம் முதலிய அற்ப தேவதைகளை (ஸ்ரீதரர்). இந்திராதி தேவதைகள் என்னுடைய சரீரமென்று தெரியாமல் அவர்களை (ராமாநுஜர்).

(சங்கரர்) ஸகலமும், வாஸுதேவனாகிய ஆத்மாதான், என்னும் ஞானம் ஏன் உண்டாகிறதில்லை என்பதற்குக் காரணம் இதில் சொல்லப் படுகின்றது. புத்திரன், பசு, ஸ்வர்க்கம் முதலிய வற்றைப் பற்றிய அந்தந்த ஆசையால் அபகரிக்கப்பட்ட விவேக சக்தியை யுடையவர்கள், வேறு தெய்வங்களை ஆராதிப்பதற்கு வேண்டிய நியமம் எதெதுவோ அதைக் கைக்கொண்டு, தமது ஸ்வபாவத்தினாலே, அதாவது முன் ஜந்மங்களில் ஸம்பாதித்து வைக்கப்பட்ட ஸம்ஸ்கார விசேஷத்தினாலே, அடக்கி ஆளப்பட்டவராய், ஆத்மாவாகிய வாஸுதேவனைக் காட்டிலும் வேறாய் தெய்வங்களைத் தொழுகிறார்கள்.

(ஸ்வா) தேவதைகளைப் பஜிப்பதற்கு நியமத்தோடு கூடிய யஜ்ஞாதிகளைச் செய்ய வேண்டியதல்லவா? அந்த யஜ்ஞாதிகளுக்கு வேதத்தில் விதிக்கப்பட்டநியமங்களில் அல்பமாவது பிசகாமல்செய்யவேண்டியது. பிசகினால் பலன் கெடுவது மாத்திரமல்ல, அதினால் தோஷங்களுமுண்டாகும். அந்த யஜ்ஞாதிகளுக்குப் பலனோ அற்பமானது. ஈசுவரனைப் பஜிக்கிற விஷயத்தில், அப்படிப்பட்ட யாதொரு நியமமு மவசியமில்லை. இந்திரியங்கள், மனது இவைகளை விஷயங்களில் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்து, ஈசுவரனிடத்தில் மனதை வைத்து தியானஞ்செய்தல் பிரயோஜனமாயும், சுலபமானதாயு மிருக்கிறது. எப்படி சுலபமென்றால், யஜ்ஞாதிகளைச்செய்ய எவ்வளவு வஸ்துக்களும், மனுஷ்ய சகாயமும், திரவியங்களும் வேண்டுமோ, எவ்வளவு தேகப்பிரயாஸையும், இந்திரியங்கள், மனது முதலியவைகளுக்கு வருத்தமுமுண்டோ, அவ்வளவு வருத்தம் பிரம்மத்தியானத்தில் இல்லை. இதுவுமல்லாமல் பிரம்மத்தியானத்தைச் சொற்பஞ்செய்து விட்டுவிட்டாலும் செய்தவரையில் பலனுண்டேயன்றி, தோஷமுண்டாகாது.

(யோகப்பிரஷ்டன் விஷயத்தில், 6-வது அத்தியாயம், 40-வது சுலோகம் முதல் 44-வது சுலோகம்வரையில் பார்க்க.) பூர்ணமாய்த் தியானஞ் செய்தாலோ நாசமற்ற பலன் கிடைக்கும். (20)

உக யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயார்சிதுமிச்சதி |
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ||

21 ய:-ய:-யாம்-யாம்-தநும்-பக்த:-ச்ரத்தயா-அர்சிதும்-இச்சதி |
தஸ்ய-தஸ்ய-அசலாம்-ச்ரத்தாம்-தாம்-ஏவ-விததாமி-அஹம்

ய: ய:	எவன் எவன்
யாம்யாம் தநும்	எந்த எந்த தேவதா மூர்த்தியை
பக்தஸ்ஸந்	பக்தியோடும் கூடினவனுயிருந்துகோண்டு
ச்ரத்தயா அர்சிதும் இச்சதி	சிரத்தையுடன் பூஜிக்க இச்சிக்கிருனே
தஸ்ய தஸ்ய	அவனவனுடைய
தாமேவ ச்ரத்தாம்	அதிலேயேயுள்ள சிரத்தையை
அஹம் அசலாம் விததாமி	நான்ஸ்திரமாகச்செய்கிறேன்.

எவன் எவன் எந்தெந்த தேவதா மூர்த்தியை பக்தியோடும் கூடினவனுய் சிரத்தையுடன் பூஜிக்க விரும்புகிருனே, அவனவனுடைய அந்தந்த தேவதா மூர்த்தியிலுள்ள அதே சிரத்தையை, (நம்பிக்கையை) சலிக்காமல் நிலைக்கச் செய்கிறேன்.

(ராமாநுஜர்). ய: ய:பக்த:—இந்திராதி தேவதைகள் என்னுடைய சரீரமென்று தெரியாத எந்தெந்த தேவதாபக்தன், யாம்யாம் தநும்—என்னுடைய சரீரமாகிய இந்திராதி தேவதை என்பது தாத்பரியம். ஏனென்ருல், "யஸ்யாத்மா சரீரம்" "யஸ்ய ப்ருதிவீ சரீரம்" முதலிய சுருதி வாக்கியங்களால் சகலமான தேவதைகளும் ஈசுவரனுடைய சரீரமென்று ஏற்படுகிறது. எந்த தேவதையைப் பூஜித்தாலும் ஈசுவர தேகத்தைப் பூஜித்ததாகவே யாகிறது. அப்படிப் பூஜிப்பதை ஈசுவரன், தன்னைப் பூஜித்ததாகவே கிரகித்து அதற்குள்ள பலனைக்கொடுக்கிருர். ஆகையால் இப்படிப்பட்ட ஆராதனம் ஈசுவராராதனமே என்பது தாத்பரியம். (21)

உஉ ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ் தஸ்யாராதநமீஹதே |
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் |

22 ஸ:-தயா-ச்ரத்தயா-யுக்த:-தஸ்ய-ஆராதநம்-ஈஹதே |
லபதே-ச-தத:-காமாந்-மயா-ஏவ-விஹிதாந்-ஹி-தாந்

ஸ:	அவன் (மேல்சொன்ன பக்தன்)
தயா ஶ்ரத்தயா யுக்த:	அந்த சிரத்தையோடு கூடினவனாய்
தஸ்யாராதநம்	அந்த மூர்த்தியினுடையபூஜையை
ஈஹதே	செய்கிறான்
மயைவ விஹிதாந்	என்னாலேயே ஏற்படுத்தப்பட்ட
தாந் காமாந் ஹி	அந்த விரும்பிய பொருள்களைத்தான்
தத:	அந்த தேவதா மூர்த்திகளிடத்தினின்றும்
லபதே	அடைகிறான்.

அந்த மேல் சொன்ன பக்தன் ஸ்திரமான அந்த நம்பிக்கையோடு கூடினவனாய் அந்த தேவதா மூர்த்தியினுடைய பூஜையைச் செய்கிறான். உண்மையிலே என்னாலேயே ஏற்படுத்தப்பட்ட அந்த இச்சித்த பொருள்களை அந்த தேவதாமூர்த்தியினின்றும் பெருகிறான்.

(சங்கரர்) எவனெவன் எந்த நம்பிக்கையோடு இவ்வாறு முன்னமே இயற்கையாகத் தலைப்பட்டு, எந்தெந்த தேவதாவடிவத்தை ஆராதிக்க விரும்புகிறானோ, அவன் என்னால் நியமிக்கப்பட்ட அந்த நம்பிக்கையோடு கூடினவனாய் அந்த தேவதாமூர்த்தி யினுடைய உபாஸனையைச் செய்து நிறைவேற்றுகிறான். நான் கர்மமும் அதன் பயனுமாகிய அவற்றின் வியாபகத்தை அறிந்து உள்ளமையால் முற்றுமுணர்ந்த பரமேஶ்வரனான என்னாலேயே அமைக்கப்பட்ட அந்தக்கர்மங்களை அதாவது அவன் அடைய விரும்பிய பொருள்களைத்தான் அந்த ஆராதித்த தேவதாமூர்த்தியினின்றும் பெறுகிறான். அந்தக்கர்மங்கள் பகவானாலேயே நியமிக்கப்பட்டனவாதலால், அவற்றை அவன் அவசியம் அடைகிறான், என்பது பொருள். (ஒருவன் எப்பொருளை வேண்டி வேறுதெய்வத்தை உபாஸிக்கிறானோ, அப்பொருள் அவனது உபாசனையின் பயனாம். இனி இன்னதற்கு இன்னது பயன் என்று அமைப்பவனும், அப்பயனை அளிப்பவனும் முற்றுமுணர்ந்த சர்வேஶ்வரனானபகவானாதலால் அந்த வேறு தெய்வத்தினுள்ளும் அந்தர்யாமி யாகவுள்ள அப்பகவான், அவன் வேண்டின பொருள்களை அவனுடைய உபாசனைக்குத் தக்கவாறு தானே அமைத்து, ஆனால் தானே நேராக அல்லாமல் அத்தெய்வத்தின் மூலமாகவே கொடுத்தருளுகிறான் என்பது தேர்ந்த கருத்து.)

"ஹிதாந்" என்று பதம் பிரித்தால் நலமான கர்மங்களை என்று பொருள்படும் ; அப்போது கர்மங்கள் நலமானவை என்பதை உபசார வழக்காகக் கொள்ளவேண்டும். கர்மங்கள் தீங்கானவையே அன்றி ஒரு

வனுக்கும் நலமானவை யல்லவன்றோ? ஆகவே அதனை உபசார வழக்காகவும் கொள்ளப்படாதென்க. (22)

———

௨௩ அந்தவத்து ஃபலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் |
தேவாந்தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி ||

23 அந்தவத்–து-ஃபலம்-தேஷாம்–தத்-ஃபவதி–அல்பமேதஸாம் |
தேவாந்-தேவயஜ:–யாந்தி–மத்ஃபக்தா:–யாந்தி–மாம்-அபி

அல்பமேதஸாம்	அற்ப புத்தியுள்ள
தேஷாம்	அவர்களுடைய
தத்ஃபலம்	அந்த தேவதாபூஜையினுலுண்டாகும்பலன்
அந்தவத்ஃபவதி	முடிவையுடையதாகவே ஆகிறது
தேவயஜ:	தேவதைகளைப் பூஜிக்கிறவர்கள்
தேவாந் யாந்தி	தேவதைகளை அடைகிறார்கள்
மத்ஃபக்தா:	என்னுடைய பக்தர்கள்
மாம் அபி யாந்தி	என்னை அடைகிறார்கள்

அற்ப புத்தியுள்ள அவர்களுடைய அந்த தேவதா பூஜையினுல் அடையப்படும் பலன் முடிவை யுடையதாகவே ஆகிறது. தேவதைகளை (யக்ஞாதி கிரதுக்களினுல்) பூஜிக்கிறவர்கள் தேவதைகளை யடைகிறார்கள். என்னுடைய பக்தர்களோவென்றால் (அவர்கள் நேராய் என்னையே பூஜக்கிறபடியால்) என்னையே அடைகிறார்கள்.

———

(சங்கரர்) அவர்கள் முடிவுள்ள பயனைப் பெறுதற்கான வழியிலே முயல்பவராயும் விவேகமில்லாதவராயும், காமிகளாயும் இருக்கிறார்கள். ஆதலால் பகவானை ஆராதிப்பதிலும் வேறு தெய்வத்தை ஆராதிப்பதிலும் ஆயாஸமானது ஸமமாயிருந்தும் அழியும் பயனுக்காக அவர்கள் அந்நிய தேவதைகளை அடைகிறார்களேயன்றி அழிவிலாப்பயனுக்காக என்னையே அடைவதில்லை, ஆ! என்னே! மிகப்பரிதாபமாக இருக்கிறார்கள், என பகவான் இரக்கத்தைக் காட்டுகிறார். (ஸகலமும் அழிந்து போகின்ற பிரளய காலத்திலே தேவதைகளும் அவர்களது உலகங்களும். அழிந்து போகின்றமையால் அவர்களை உபாஸித்தவர்கட்கு அவ்வுலகங்களிலே சுகமாக வாழ்தல் அப்பொழுது முடிந்துபோகின்றது. போகவே மீண்டும் அவர்கள் தமது கர்மகதிப்படி மநுஷ்ய லோகத்தில் பிறக்கிறார்கள் (அத். 9–ல், 21-24-25-ம் சுலோகங்களைப்பார்க்க.) ஆனால் பகவானுடைய பக்தர்கள் "என்னையும் அடைகிறார்கள்" என்ற அபிசப்தத்தினுல் முதலையினுல் விழுங்கப்பட்ட

கஜேந்திரம் முதலாயினோர்போல முதலில் தாம் வேண்டியதைப் பெற்று, பின்பு, பிறவாமையைக் கொடுக்கும் அழியாப்பயனாகிய முக்தியைப்படிப்படி யாகப் பெறுகிறார்கள் என்று கண்டுகொள்க.)

(இராகவேந்திரர்) 𑌮𑌾𑌮𑌪𑌿 — என்னையும், 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿—அடைகிறார்கள். என்றால் அந்தந்த தேவதைகளைக் கிரமக்கிரமமாயடைந்து கடைசியில் என்னையும் அடைகிறார்களென்பது தாத்பரியம். இந்திராதி தேவதைகள் பரமாத்மாவுக்குச் சரீரமென்கிற ஞானமில்லாமல் அந்த தேவதைகளைப் பூஜிக்கிறவர்கள் அற்ப புத்தியுள்ளவர்கள், அற்பமான பலனில் புத்தியுள்ளவர்கள்.

(ஸ்ரீ) எந்தெந்த தேவதையைப் பூஜிக்கிறார்களோ அந்தந்த தேவதையின் லோகத்தையும், அந்தந்த லோகத்தின் சுகமெதுவோ அந்த சுகத்தையும் அடைகிறார்கள், அந்த லோகமும் சுகமும் முடிவையுடையன. தேவதைகளுக்கே முடிவுண்டாகையால் அவர்களை யடைந்தவர்களுக்கும் முடிவுண்டென்பது, ஸ்ரீதரர், தாத்பரியம். என்னை யடைந்தாலோ சாசுவதமான பலன் உண்டு என்பது கருத்து. (23)

---

௨௪ 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮𑌾𑌵𑍍𑌯𑌯𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

24 அவ்யக்தம்—வ்யக்திம்—ஆபந்நம்—மந்யந்தே—மாம்—அபுத்³ய: |
பரம்—பா⁴வம்—அஜாநந்த:—மம—அவ்யயம்—அநுத்தமம்

𑌮𑌮	என்னுடைய
𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 𑌅𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌂	நாசமற்ற ஸர்வோத்தமமான
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌂	மேலான ஸ்வரூபத்தை
𑌅𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌃 𑌅𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃	அறியாத அவிவேகிகள்
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌮𑌾𑌂	காணப்படாத என்னை
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌂 𑌆𑌪𑌨𑍍𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇	இந்திரியங்களுக்குப் புலப்படுதலை அடைந்தவனாக எண்ணுகிறார்கள்.

என்னுடைய நாசமற்ற ஸர்வோத்தமமான பரமாத்ம ஸ்வரூபத்தை அறியாத அவிவேகிகள் இந்திரியங்களால் காணப்படாத என்னை இந்திரியங்களுக்குப் புலப்படுதலை யடைந்த ஒரு மநுஷ்ய ஜீவனாக எண்ணுகிறார்கள்.

(சங்கரர்) எந்தக்காரணத்தினால் அவர்கள் என்னையே அடைகிறதில்லை என்பது இதில் சொல்லப்படுகிறது. நான் என்றும் பிரஸித்தனான ஈசுவரனாயிருந்தாலும் விவேகமில்லாதவர்கள் என்னுடைய நிர்விகார

மான ஸர்வோத்தம பரமாத்ம ஸ்வரூபத்தை அறியாதவர்களாய் இத்தேகத்தை எடுத்ததற்கு முன் இந்திரியங்களுக்குப் புலப்படாதிருந்த என்னை இப்பொழுது (வஸுதேவர் வீட்டிலே அவர் புத்திரனாக தேகத்தோடு இருக்கும் பொழுது இந்திரியங்களுக்கு)ப் புலப்படுதலை அடைந்த (கிருஷ்ணனென்னும் பெயருடைய ஒரு மநுஷ்ய ஜீ) வனாகக்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீதரர்) அவ்யக்தம்—பிரபஞ்சா தீதனாயும், மாம்—ஜகத் ரக்ஷணார்த்தம் லீலையினாலே பிரகாசிக்கிற பலவித ரூபமுடையவனாயும், சுத்த சத்துவ ஸ்வரூபனாயுமிருக்கிற என்னை, வ்யக்திமாபந்நம்—கருமத்தினாலுண்டான பாஞ்சபௌதிக தேகத்தை யுடையவனாயும் தேவதைகளுக்குச் சமானனாயும், மந்யந்தே—நினைக்கிறார்கள்.

(ராமாநுஜர்) என்னுடைய அனந்த கல்யாண குணங்களையும், ஸ்வரூபத்தையும், லோகசம்ரக்ஷணார்த்தம் அவதாரஞ் செய்திருக்கிறேனென்பதையும் அறியாதவர்கள், உலகத்திலுள்ள இராஜகுமாரர்களில் ஒருவனாக என்னை யெண்ணுகிறார்கள்.

(மத்வர்) சச்சிதானந்த தேகத்தையுடையவனான என்னை அவிவேகிகள் குணத்திரயங்களினா லுண்டான தேகத்தை யுடையவனாக வெண்ணுகிறார்கள்.

(இராகவேந்திரர்) அவ்யக்தம்—ஒருவருக்குந் தெரியாத மகாமகிமையோடு கூடிய, மாம்—என்னை, வ்யக்திமாபந்நம்—இப்போது நான் பிரகாசிப்பிவிக்கிற அற்பமான மகிமையை மாத்திரந்தானுடையவ னென்று, மந்யந்தே—நினைக்கிறார்கள், (24)

௨௫ நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத: |
மூடோऽயம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் ||

25 ந–அஹம்-ப்ரகாச:–ஸர்வஸ்ய–யோக–மாயாஸமாவ்ருத: |
மூட:–அயம்–ந–அபிஜாநாதி–லோக:–மாம்–அஜம்–அவ்யயம் |

யோகமாயாஸமாவ்ருத:	யோகமாயையினாலே நன்றாய் மறைக்கப் பட்டிருக்கிற
அஹம்	நான்
ஸர்வஸ்ய ப்ரகாஶ: ந	எல்லோருக்கும் காணப்படுகிறதில்லை
(அதனால்)	ஆனபடியினாலே தான்
மூட:	விவேகமற்ற
அயம் லோக:	இந்த லோகமானது
மாம்	என்னை

அஜம்அவ்யயம் — பிறப்பற்றவனுகவும் நாசமற்றவனுகவும்
நாபிஜாநாதி — அறிகிறதில்லை.

யோகமாயையினுல் மறைக்கப்பட்டிருக்கிற நான் எல்லோருக்குங் காணப்படுகிறதில்லை. ஆகையால், அவிவேகிகளான இந்த ஜனங்க்ள் என்னைப் பிறப்பற்றவனுகவும், நாசமற்றவனுகவும், அறிகிறதில்லை.

---

(1) யோகமாயா ஸமாவ்ருத:—குணங்களுடைய சேர்க்கையானது மாயை; அல்லது ஸங்கல்பவஶாநுஸாரம் என்பது யோகம், அதினுலுண்டானது மாயை, (சங்கரர்); ஜீவனடையத்தகுந்த மனுஷ்ய தேகமடைவது யோகம். அதுதான் மாயை, இப்போது நானந்த தேகத்தை யடைந்திருக்கிறதினுல், யோகமாயையினுல் மறைந்திருக்கிறேனென்பது தாத்பரியம் (ராமாநுஜர்). யோகசாமர்த்தியமாகிய வேருபாயம். அதினுலும் மாயையினுலும், ஸமாவ்ருத: — சூழப்பட்டிருக்கிறேன். (இராகவேந்திரர்); மனிதனுலுண்டாக்கத் தக்கதல்லாததும், இன்னவிதமாயுண்டாக்கலா மென்றுமனிதன் மனதினுல் நினைக்க முடியாததுமாகிய விசித்திரமான சிருஷ்டியாதி சக்தி (ஸ்ரீதரர்).

(சங்கரபாஷ்யம்) முன் சொன்ன அவர்களுடைய அறியாமை எந்தக் காரணத்தினுல் ஆகியது என்பது இதில் சொல்லப்படுகிறது. நான் எல்லா ஜனங்களுக்கும் வெளிப்படையாக காணப்படுகிறதில்லை. என்றுல் என்பக்தர்களான சிலர்க்கு மட்டும், நான் பிரகாசமாயிருக்கிறேன் என்பது கருத்து. யோகம் முக்குணங்களின் சேர்க்கை. அதுதான் மாயை யென்பது யோகமாகிய மாயை யோகமாயை யென்க. அந்த யோகமாயையினுல் நான் நன்ருக மூடப்பட்டிருக்கிறேன். அதாவது முழுவதும் மறைக்கப்பட்டிருக்கின்றேன் என்றபடி, ஆதலால் தான் மயக்கத்தை யடைந்த இவ்வுலகமானது என்னை பிறப்பில்லாதவனுயும் அழிவில்லாதவனுயும் அறிவதில்லை. (25)

உ௬ வேதாஹம் ஸமதீதாநி வர்தமாநாநி சார்ஜுந ।
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கஶ்சந ॥

26 வேத-அஹம்-ஸமதீதாநி-வர்தமாநாநி-ச-அர்ஜுந |
பவிஷ்யாணி-ச-பூதாநி-மாம்-து-வேத|-ந கஶ்சந

ஹே அர்ஜுந — ஓ! அர்ஜுனு!
ஸமதீதாநி ச — சென்று போனதும்
வர்தமாநாநி ச — இருக்கிறவும்(இப்போதுகாணப்படுகிற)

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌿 𑌚	வரப்போகிறவும்(உண்டாகப்போகிற)
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦	பிரபஞ்சங்களை நான்அறிவேன்
𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌕𑌶𑍍𑌚𑌨 𑌨 𑌵𑍇𑌦	என்னையோ ஒருவனும் அறியமாட்டான்.

ஓ! அர்ச்சுனா! சென்றுபோன, இருக்கிற, வரப்போகிற பிரபஞ்சங்களை நானறிவேன். என்னையோ ஒருவனும் அறியமாட்டான்.

---

(1) வேத-லோகோபகாரமாக. கிருஷ்ணாவதாரஞ் செய்திருக்கிறதாக அறிவது (ராமாநுஜர்); தன்சுவசக்தியினாலறிகிறது (மத்வர்).

(சங்கரர்) உலகமானது எந்த யோக மாயையினால் சூழப்பட்டுள்ள என்னை அறிவதில்லையோ, அந்த யோக மாயையானது என்னுடையதா யிருக்குமளவிலே, அந்தமாயையையுடைய ஈசுவரனை என்னுடைய அறிவைத்தடுக்கமுடியாது. உதாரணமாக, (உலகத்திலே இந்திரஜால) மாயையையுடைய வேறொருவனுக்குங்கூட அவனுடை அவ்விந்திரஜாலமாயையானது அவனது அறிவைத் தடுத்து மயக்காது. அதுபோல் என்க. இவ்வாறிருத்தலால் என்னையே அடைக்கலமாகக் கொண்ட என் பக்தனொருவனைத் தவிர வேறு எவனும் என்னை அறியமாட்டான். என்னுடைய உண்மையை அறிவதில்லை; ஆதலினால் தான் என்னை வழிபடுவதில்லை. (26)

---

௨௭ 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌂 𑌸𑌰𑍍𑌗𑍇 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥

27 இச்சாத் வேஷஸமுத்தேந-த் வந்த் வமோஹேந-பாரத |
ஸர்வபூதாநி-ஸம்மோஹம்-ஸர்கே-யாந்தி-பரந்தப

𑌪𑌰𑌂𑌤𑌪 𑌭𑌾𑌰𑌤	ஓ! சத்துருவைத் தவிப்பிக்கிற பாரத!
𑌸𑌰𑍍𑌗𑍇	பிறக்கும் பொழுதே
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	சகலபிராணிகளும்
𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨	விருப்பு வெறுப்புகளால் உண்டாகும்
𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑍇𑌨	த்வந்த்வ மயக்கத்தால்
𑌸𑌂𑌮𑍋𑌹𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	மோகத்தை அடைகின்றன.

ஓ! சத்துருவை தவிப்பிக்கிற பாரத! பிறக்கும்பொழுதே சகல பிராணிகளும் விருப்பு வெறுப்புகளாகிய த்வந்த்வங்களால் உண்டாகும் மயக்கத்தால் மோஹத்தை அடைகின்றன.

(சங்கரபாஷ்யம்) மற்றும், பிறக்கின்ற ஸகல பூதங்களும் பகவானுடைய உண்மையை அறிதற்குத் தடையாயுள்ள எதனால் தடுக்கப்பட்டுக்

கொண்டு அவரை அறிவதில்லை? என ஆலோசிக்குமிடத்து அதற்கு பகவான் இதனைக் கூறுகிறார். விருப்பு வெறுப்புகளால் உண்டாகின்ற ஏதனால்? என அச்சிறப்புப்பொருள்களை நோக்குமிடத்து "த்வந்தமயக்கத்தால்" என்ற இதனைக்கூறுகிறார். த்வந்தங்களாலாகும் மயக்கம், த்வந்த மயக்கம். குளிர் வெப்பங்கள்போல ஒன்றற்கொன்று மாறுபட்டவையாய் இன்பதுன்பங்களையும் அவற்றின் காரணமான குளிர் வெப்பம் முதலியவற்றையும் பற்றி வருபவையாய், காலத்திற்கு ஏற்ப ஒவ்வொரு பிராணியோடும் கூடுகின்ற, அதாவது தமக்கு வாய்க்கும் ஸமயங்களிலே ஒவ்வொரு பிராணிக்கும் அடிக்கடி திரும்பத் திரும்ப முளைக்கும் விருப்பு வெறுப்புகள் என்ற அவைகள் தான் "த்வந்தங்கள்" என்னும் சொல்லால் கூறப்படுகின்றன. ஒவ்வொரு பிராணியினிடத்தும் விருப்பு வெறுப்புக்களும், இன்பதுன்பங்களும் அவற்றின் காரணங்களும் வந்தடைவதனால் தமது வடிவத்தைப்பெற்று. தோன்றி நிற்கும் பொழுது, அந்தவிருப்பு வெறுப்புக்கள் இரண்டும் ஸகலப்பிராணிகளுடைய அறிவைத் தம் வசப்படுத்திக் கொண்டு அவ்வழியாக பரமார்த்த ஆத்மாவைப்பற்றிய ஞானம் உண்டாவதற்குத் தடைசெய்வதான மயக்கத்தைப் பிறப்பிக்கின்றன. விருப்பு வெறுப்புக்களால் வசப்படுத்தப்பட்ட சித்தத்தினை யுடையவனுக்கு வெளியிலுங்கூட ஒரு பொருளைப்பற்றிய அறிவு உள்ளபடி உண்டாவதில்லை யன்றோ? அவை புகுந்து கிடக்கும் புத்தியை யுடையவனாய் மயக்க முற்றிருப்பவனுக்கு, அஹங்காரம் முதலிய பலதடைகளையுடைய உள்ளேயுள்ள ஆத்மாவினிடத்து அறிவு உண்டாகமாட்டாது என்று கூறவும் வேண்டுமோ? ஆகவே பரதகுலத்தில் தோன்றிய பரந்தப! பிறக்கும் பொழுதேயே ஸகலப்பிராணிகளும் மயக்கப்பட்டு அந்த மயக்கிய நிலையை அடைகின்றன. பிறக்கின்ற எந்தப்பிராணிகளும் மயக்கத்திற்கு வசமாகியே பிறக்கின்றன, என்பது கருத்து. இவ்வாறுள்ளதனால் அந்த த்வந்தமயக்கத்தால அறிவு தடைப்பட்டு மயக்கப் பெற்ற ஸகலபூதங்களும் ஆத்மாவாகவுள்ள என்னை அறிவதில்லை, ஆதலால்தான் என்னை ஆத்மாவாகத் தொழுவதில்லை.

(ஸ்வா) விஷயாபிமான மென்பது உலகத்திலுள்ள ரூப, ரஸ, கந்தாதி ஸ்வரூபமான வஸ்துக்களிலுண்டாகும் பற்றுதல். அப்படிப்பட்ட பற்றுதலுக்குக் காரணம் சுக துக்கங்கள். சுக துக்கங்களுக்குக் காரணம் விருப்பு வெறுப்பு. இவைகள் தேகத்தை யடையும்போதே பூர்வஜந்ம கரும வாசனைக்குத் தகுந்தபடி யுண்டாகின்றன. ஆத்மாவுக்குச் சுக துக்காதிகள் வாஸ்தவத்தில் சம்பந்தப்பட்டவையல்ல. (27)

---

௨௮ யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம் |
தே த்வந்த்வமோஹநிர்முக்தா: பஜந்தே மாம் த்ருடவ்ரதா: ||

28 யேஷாம்–து-அந்தகதம்–பாபம்–ஜநாநாம்–புண்யகர்மணாம் |
தே–த்வந்த்வமோஹநிர்முக்தா:–பஜந்தே–மாம்–த்ருடவ்ருதா:

து	ஆனால்
புண்யகர்மணாம்	நல் வினையுடைய
யேஷாம் ஜநாநாம்	எந்த ஜனங்களுக்கு
பாபம்அந்தகதம்	பாபமானது முடிவடைந்ததோ
தே	அவர்கள்
த்வந்த்வமோஹ நிர்முக்தா:	த்வந்தமோஹத்தால் விடப்பட்டவராய்
த்ருடவ்ரதா:	திருடமான விரதத்தை யுடையவர்களாய்
மாம் பஜந்தே	என்னை பஜிக்கிறார்கள்.

ஆனால் நல்வினையுடைய புண்ணியசாலிகளான எந்த ஜனங்களுக்கு பாபமானது முடிவடைந்ததோ, நசித்ததோ, அந்த ஜனங்கள் த்வந்த மோஹத்திலிருந்து விடுபட்டவராய் திருடமான விரதத்தை யுடையவர்களாய் என்னை பஜிக்கிறார்கள், தொழுகிறார்கள்.

புண்ய கர்மணா — என்று பாடம்; புண்ணிய கருமங்களால் என்று அர்த்தம்.

(சங்கரபாஷ்யம்) ஆனால், எவர்கள் இந்த த்வந்தமயக்கத்தால் விடப்பட்டவராய், உங்களை அறிந்து, ஆத்மாவாக சாஸ்திரப்படி பஜிக்கிறார்கள்? என்னும் வினவிற்கு, எதிர்பார்க்கக்கூடிய பதிலை உணர்த்தும் பொருட்டு, பகவான் இதைச் சொல்லுகிறார்:—

சித்த சுத்திக்குக் காரணமான புண்ணிய கர்மமானது எந்த ஜனங்களுக்கு உள்ளதோ, அவர்களுடைய பாபமானது பெரும்பாலும் தேய்ந்து முடிந்தது. அவர்கள் முன் சொன்ன த்வந்தமோஹத்தால் விடுபட்டவராய், திருடமான விருதத்தையுடையவராய் என்னைப் பரமாத்மாவாக பஜிக்கிறார்கள். எல்லாவற்றையும் முழுதும் பரித்தியாகம் செய்தல் என்னும் விரதத்தோடு "பரமார்த்த தத்வம் இப்படித்தான் உள்ளது வேறு விதமாக இல்லை" என அநுபவ அறிவை இவ்வாறு நிச்சயித்துக் கொண்டவர்கள், திருடவிருதர்கள். (28)

---

௨௯ ஜராமரண மோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே |
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம் ||

29 ஜராமரணமோக்ஷாய-(1)மாம்-ஆஶ்ரித்ய-யதந்தி-யே |
தே-ப்ரஹ்ம-தத்-விது:-க்ருத்ஸ்நம்-அத்யாத்மம்-கர்ம-ச-அகிலம் ॥

யே	எவர்கள்
ஜராமரணமோக்ஷாய	மூப்பு இறப்பைப் போக்குவதற்கு
மாம் ஆஶ்ரித்ய	என்னை ஆசிரயித்து
யதந்தி தே	முயலுகிறார்களோ அவர்கள்
தத் ப்ரஹ்ம	அந்தப் ப்ரஹ்மத்தையும்
க்ருத்ஸ்நம் அத்யாத்மம்	ஸகல அத்தியாத்மத்தையும்
அகிலம் கர்ம ச	ஸகல கர்மத்தையும்
விது:	அறிகிறார்கள்.

எவர்கள் மூப்பு (கிழத்தனம்), இறப்பு இவைகளை நீக்கிக்கொள்வதின் பொருட்டு என்னை அடைக்கலமாகக் கொண்டு, முயற்சி செய்கிறார்களோ அவர்கள் அந்த ப்ரஹ்மத்தையும், ஸகல அத்தியாத்மத்தையும், அதாவது ஆத்மாவைப்பற்றிய சகல உண்மையையும் சகலகர்மத்தையும் அறிகிறார்கள்.

(1) ஜராமரணமோக்ஷாய-பிரகிருதி விமுக்த ஆத்மசுவரூபதரிசனத்தின் பொருட்டு. (இவன் தான் ஜிஜ்ஞாஸு) (ராமாநுஜர்); பக்தர்களில் உத்தமன், மத்தியமன், அதமன், என மூன்றுவித பக்தர்களுண்டு. அவர்களில் உத்தமபக்தன் யாரென்றால், ஸ்ரீ நாராயணனுடைய சரணாரவிந்த பக்தியைத்தவிர, மோக்ஷம்முதலிய வொன்றிலும் அபேக்ஷையேயில்லாதவன்; மத்தியம பக்தன் யாரென்றால், மோக்ஷாபேக்ஷையுடையவன். அதமபக்தனென்றால், சுவர்க்காதிபலனை யபேக்ஷிப்பவன். இம்மூவரில் இவனை மத்தியம பக்தனாகச்சொல்லலாம். (இராகவேந்திரர்.)

(சங்கரபாஷ்யம்) - அவர்கள் என்னை எதற்காக தொழுகிறார்கள் என்பது சொல்லுவோம். விருத்தாப்பியத்தையும் மரணத்தையும் நீக்கிக்கொள்ளுவதற்காக எவர்கள் பரமேஸ்வரனான என்னை அடைக்கலமாகக் கொண்டு சித்தம் என்னிடத்திலேயே ஒரு நிலைப்பட்டவராய் முயற்சி செய்கின்றார்களோ அவர்கள் பரபிரம்மத்தையே அறிகிறார்கள். உள்ளேயுள்ள ஆத்மாவைப் பற்றிய அந்த சகல உண்மையும் அறிகிறார்கள். கர்மம் முழுவதையும் அறிகிறார்கள். (29)

30 ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞம் ச யே விது: |
ப்ரயாணகாலே(அ)பி ச மாம் தே விதுர் யுக்தசேதஸ: ॥

30 ஸாதிபூத-அதிதைவம்-மாம்-ஸாதியஜ்ஞம்-ச-யே-விது: |
ப்ரயாணகாலே-அபி-ச-மாம்-தே-விது:-யுக்தசேதஸ:

யெ	எவர்கள்
ஊாஂ	என்னை
ஸாயிஹூதாயிெதெவஂ	அதிபூத அதிதேய்வத்தோடு கூடினவனுகவும்
ஸாயியஜ்ஞஞு	அதியஜ்ஞுத்துடன் கூடினவனுகவும்
விஃடுஃ	அறிகிருர்களோ
தெ	அவர்கள்
ப்ரயாணகாலெவிச	மரணகாலத்திலும்
யுக்ுெதஸஃ	மனம் ஒருநிலேப்பட்டவர்களாய்
ஊாஂ விஃடுஃ	என்னை அறிக்ருர்கள்.

எவர்கள் அதிபூத, அதிதெய்வங்களுடன் கூடினவும், அதியக்ஞுத்துடன் கூடினவுமான வென்னை யறிகிருர்களோ, அவர்கள் மரணகாலத்திலும், ஸமா ஹித சித்தமுள்ளவர்களாய் அதாவது என்னிடத்தில் மனதை வைத்தவர்க ளாய், என்னை யறிகிருர்கள்.

(ராமாநுஜர்) "ஜராமரண மொக்ஷாய—பிரகிருதி விமுக்த ஆத்ம தரிசனத்தின் பொருட்டு" முயலுகிறவர்கள் என்று முந்திய சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறவர்கள், கர்மம் அத்தியாத்மம், பிரம்மம், இவைகளையறிய முயலுகிருர்கள். சிலர் ஐசுவரியத்தையடையும் பொருட்டு(ஸாயிஹூதஂ) ஸாதிபூதனும் (ஸாயிெதெவஂ) ஸாதிதெய்வனுமான என்னை அறியமுயலு கிருர்கள். இந்த இரு வகையாரும், ஞானியும்(ஸாயியஜ்ஞஂ) ஸாதியக்ஞுமா கிய நாராயணனை யுபாசிக்கிறவர்களா யிருக்கிருர்கள். இம்மூவகையாரும் மரணகாலத்தில் எவ்விதமான வென்னுடைய ரூபத்தை யடைய விரும்பு கிருர்களோ, அவ்விதமாயவரவர்கள் கோரும் ரூபத்தையவரவர்கள் கோரிய படி யறிகிருர்கள் (பார்க்கிருர்கள்.)

(ஸ்வா) முந்திய சுலோகத்திலு மிந்தசுலோகத்திலும் சொல்லப்பட்டி ருக்கிற கர்மம், அத்தியாத்மம், பிரம்மம், அதிபூதம், அதிதைவம், அதியக் ஞம், பிரயாணகாலம், இவைகள் இப்படிப்பட்டன வென்பது பகவானுல் எட்டாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருப்பதைப்பார்க்க. (30)

இதி ஸ்ரீஹவவதீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவிஃயாயாஂ

யொமஶாஸ்த்ரெ ஸ்ரீக்ருஷ்ணாஜ்ஜுநஸஂவாதெ

விஜ்ஞாநயொமொநாஂ

ஸப்தமொஃயாயஃ

ஸ்ரீக்ருஷ்ணாயபரப்ரஹ்மணெ நமஃ

விஞ்ஞானயோகமென்கிற ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁

𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

எட்டாவது அத்தியாயம்.

அப்யாஸ யோகம்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚

௧ 𑌕𑌿𑌂 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌕𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

1 கிம்-தத்-ப்ரஹ்ம-கிம்-அத்யாத்மம்-கிம்-கர்ம-புருஷோத்தம |
அதிபூதம்-ச-கிம்-ப்ரோக்தம்-அதிதைவம்-கிம்-உச்யதே

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚	அர்ஜுனன் சொன்னது
𑌹𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮	ஓ ! புருஷர்களிலுத்தமா !
𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂	(முன்) சொல்லப்பட்ட
𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑌿𑌂	அந்த பிரம்மமென்பது யாது ?
𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌕𑌿𑌂	அத்தியாத்மமென்பதுயாது?
𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌂	கர்மமென்பது யாது ?
𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌕𑌿𑌂	அதிபூதமென்பது யாது ?
𑌅𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌚 𑌕𑌿𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇	அதிதெய்வமென்று எது சொல்லப்படுகிறது ?

அர்ஜுனன் சொன்னது. ஓ ! புருஷோத்தமா ! முன்சொன்ன அந்த பிரம்மமென்பதுயாது ? அத்தியாத்ம மென்பதுயாது ? கர்மமென்பது யாது ? அதிபூதமென்பதுயாது ? அதிதெய்வமென்று எது சொல்லப்படு கிறது ?

(சங்கரர்) பகவான், அர்ஜுனன் வினவுதற்குக் காரணமான விஷயங்களை முன் 7-வது அத்தியாய கடைசியில் ‘ 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 ’ என்று உபதேசித்தார். ஆகவே அவற்றை அர்ஜுனன் கேட்கும்பொருட்டு இதைச் சொல்லுகிறான்.

(ராமாநுஜர்) பிரகிருதி விமுக்தாத்ம த்ரிசனத்தின்பொருட்டு முயலுகிறவர்கள் அறியவேண்டிய பிரம்மம், அத்தியாத்மம், கர்மம், இவை

கள் எப்படிப்பட்டவை? ஐசுவரியாதிகளைக் கோருகிறவர்கள் அறிய முயலுகிற அதிபூதம், அதிதைவம் எப்படிப்பட்டவை? மூவகையாரும் அறிய வேண்டிய அதியஜ்ஞ சப்தத்திற்கு விஷயமானவர் யார்? அவர் சுவபாவமெப்படிப்பட்டது? இம் மூவகையாராலும் மரணகாலத்தில் நீர் எப்படி யறியப்பட வேண்டியவர்? (1)

உ அதியஜ்ஞ꞉ கத²ம் கோ(அ)த்ர தே³ஹே(அ)ஸ்மிந் மது⁴ஸூத³ந ।
ப்ரயாணகாலே ச கத²ம் ஜ்ஞேயோ(அ)ஸி நியதாத்மபி⁴꞉ ॥

2 அதியஜ்ஞ꞉-கத²ம்-க꞉-அத்ர-தே³ஹே-அஸ்மிந்-மது⁴ஸூத³ந ।
ப்ரயாணகாலே-ச-கத²ம்-ஜ்ஞேய꞉-அஸி-நியதாத்மபி⁴꞉

ஹே மது⁴ஸூத³ந	ஓ! மதுசூதனு!
அதியஜ்ஞ꞉	அதியஜ்ஞும் என்பது
அத்ர தே³ஹே க꞉	இந்த சரீரத்தில் யாது?
அஸ்மிந்	இதில் (இந்த தேகத்தில்)
கத²ம்	எவ்வாறு (சிந்திக்கக் கூடியவன்)
ப்ரயாண காலே ச	மரண காலத்திலும்
நியதாத்மபி⁴꞉ கத²ம்	மனதையடக்கினவர்களாலே எவ்வாறு
ஜ்ஞேய꞉ அஸி	அறியத் தகுந்தவராகிறீர்

ஓ! மதுசூதனு! அதியஜ்ஞுமென்பது இந்த சரீரத்தில் யாது? இதில், அதாவது, இந்த தேகத்தில், அதியஜ்ஞுன் எவ்வாறு சிந்திக்கக் கூடியவன்? அன்றியும் மனம் ஒரு நிலைப்பட்டவர்களாலே, மரண சமயத்திலும் நீங்கள் எவ்வாறு அறியத்தக்கவர் ஆகிறீர்?

(இராகவேந்திரர்) அதியஜ்ஞ꞉—அதியஜ்ஞுன், க꞉—யார்? அதியஜ்ஞ꞉—அதியஜ்ஞுன், கத²ம்—எப்படிப்பட்டவன்? இவ்விரண்டுஞ் சேர்ந்து எட்டுவிதக் கேள்வியாகிறது. முதல்சுலோகம் சுவரூபத்தைப்பற்றிய கேள்வி. இந்த சுலோகம் தருமத்தைப்பற்றிய கேள்வி. (2)

ஸ்ரீ ப⁴க³வாநுவாச

3 அக்ஷரம் ப்³ரஹ்ம பரமம் ஸ்வபா⁴வோ(அ)த்⁴யாத்மமுச்யதே ।
பூ⁴தபா⁴வோத்³ப⁴வகரோ விஸர்க³꞉ கர்மஸம்ஜ்ஞித꞉ ॥

3 அக்ஷரம்-ப்³ரஹ்ம-பரமம்-ஸ்வபா⁴வ꞉-அத்⁴யாத்மம்-உச்யதே ।
பூ⁴தபா⁴வோத்³ப⁴வகர꞉-விஸர்க³꞉-கர்மஸம்ஜ்ஞித꞉

ஸ்ரீ ப⁴க³வாநுவாச ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொன்னது

𑌅𑌕𑍍𑌷𑌰𑌂	நாசமற்றதாயும்
𑌪𑌰𑌮𑌂	மேலானதாயுமிருப்பது
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	ப்ரஹ்மம்
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇	ஸ்வபாவம் (ப்ரஹ்மம் ஜீவஸ்வரூபமாயிருத்தலே) அத்தியாத்ம மென்று சொல்லப்படுகிறது
𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌕𑌰𑌃 𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌃	பூதங்களாகிய வஸ்துக்களுக்கு உத்பத்தியைச் செய்யும் யாகம் முதலிய தியாகமானது
𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃	கர்மமென்னும் பெயருடையது.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொன்னது. அழியாததாயும் மேலானதாயுமிருப்பது, ப்ரஹ்மம். அந்த ப்ரஹ்மமானது தேகம் தோறும் உள்ளேயுள்ள ஆத்மாவாயிருத்தலே அதாவது ஜீவஸ்வரூபமாயிருத்தலே அத்யாத்மம் என்கிறார்கள். பூதங்களாகிய ஸ்தாவரஜங்கம வஸ்துகளுக்கு, உத்பத்தியை உண்டாக்குவதாகிய, தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படும் யாகம் ஹோமம் முதலிய பரித்தியாகமானது, கர்மம் என்கிற பெயருடையது.

(சங்கரபாஷ்யம்) மேற்கண்ட இந்தக் கேள்விகளை விளக்குவதற்காக, அதாவது அவற்றின் விடைகளை உறுதியாக உணர்த்தும் பொருட்டு ஸ்ரீ பகவான் இந்த (3, 4, 5) சுலோகங்களை அருளிச்செய்கிறார்:—

(1) 'ப்ரஹ்மம்' என்பது, அழியாதது, அக்ஷரம்-அது பரமாத்மா. '𑌏𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌅𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌨𑍇 𑌗𑌾𑌰𑍍𑌗𑌿' "கார்க்கி! இந்த அழியாப் பொருளினுடைய கட்டளையினாலன்றோ "(சூரியனும் சந்திரனும், மண்ணும் விண்ணும் நிலைபெற்று நிற்கின்றன)" என்கிற (ப்ரஹதாரண்யகம் 5—வது அத்தியாயம், 8—வது ப்ராம்மணம், 9—வது) சுருதியினால் அறிக, '𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்று பின்வருகிற, 13—வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருந்த போதிலும் இங்கு 'அக்ஷரம்' என்பதற்கு, 'ஓங்காரம்' என்றுபொருள் கொள்ளக்கூடாது. ஏனெனில் ப்ரஹ்மம் என்னும் பெயரால் ஓங்காரத்தை விசேஷித்தலின் என்க. அன்றியும், '𑌪𑌰𑌮𑌂' 'மேலானது' என்னும் விசேஷணமானது, ஓங்காரம் முதலியவற்றினும் மேம்பட்ட அழிவில்லா ப்ரஹ்மத்தின் விஷயத்திலேதான் நன்றாகப் பொருந்தி யுள்ளது.

(2) அத்யாத்மம்:— அந்தப்ரஹ்மமானது தேகம் தோறும் உள்ளேயுள்ள பிரத்தியகாத்மாவா யிருத்தலே அத்தியாத்மம் என்கிறார்கள். சரீரத்

தைப்பற்றி உள்ளேயுள்ள ஆத்மாவாகத் தலைப்பட்டு, முடிவிலே உண்மையான ப்ரஹ்மமாகவேயுள்ள பொருளானது அத்யாத்மம் என்னும் சொல்லால் கூறப்படுகின்றது. அத்யாத்மம் என்றால் உடம்பிலிருப்பது, தேகத்தையிருப்பிடமாயுடைத்தான தெதுவோ அந்த ஜீவஸ்வபாவம்.

(3) விஸர்க:—அதாவது தேவதைகளைக் குறித்து சரு, புரோடாசம் முதலிய பொருள்களைக் கொடுத்தல். (அதுதான்) ஸ்தாவர ஜங்கமப்பொருள்களை உண்டாக்குவது. ஆகவே, இந்தத் தியாகமென்னும் யாகமானது கர்மமென்னும் பெயருடைத்து, அதாவது கர்மமென்னும் சொல்லால் கூறப்படுவது. வித்தாயுள்ள இதிலிருந்தன்றோ ஸ்தாவர ஜங்கமப் பொருள்கள் மழை முதலிய கிரமத்தால் உண்டாகின்றன.

(ஸ்ரீதரர்) ஸ்வபாவ:—தேகத்தை யாசிரத்து அல்லது அனுசரித்துக் கொண்டும், நான் செய்கிறேன், நானனுபவிக்கிறேன், என்பது முதலிய அபிமானத்தைக் கொண்டும், விளங்குகிற பிரம்மத்தினுடைய அம்சமாகிய ஜீவஸ்வரூபமானது சுவபாவம். அந்த சுவபாவந்தான் அத்தியாத்மம், பூதபாவோத்பவகர:—பூத—வஸ்துக்களுக்கு, பாவ:—உற்பத்தி உத்பவ:—விருத்தி, கர: — உண்டுபண்ணுகிற. விஸர்க: — தேவதைகளையுத்தேசித்து மந்திர பூர்வமாய் யஞ்ஞத்தில் கொடுக்கப்படும் ஆகுதிதான் கர்மம்.

(ராமாநுஜர்) அக்ஷரம்-நாசமற்ற க்ஷேத்திரஜ்ஞ சமஷ்டி ரூபமான, பரமம் — பிரகிருதி விமுக்தாத்ம ஜீவ ஸ்வரூபமானது, ப்ரஹ்ம - பிரம்மமென்று சொல்லப்படுகிறது, (அதாவது முக்தஜீவஸ்வரூபம்.)
ஸ்வபாவ: — பிரக்ருதி, அத்யாத்மம் - ஜீவனுக்கு சாதகமாயிருக்கிற சூக்ஷ்ம பூதங்கள். அதாவது, ஆத்மாவல்லாதவும் ஆத்மாவை யொட்டியு மிருக்கிற பூதசூக்ஷ்மாதிகள்.. இது தான் அத்தியாத்மம்.
பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித: - பூதபாவ:—மனுஷிய, பசு, பக்ஷியாதிகளுடைய, உத்பவகர:—உற்பத்தியைச் செய்கிற, விஸர்க:—புருஷ சம்பந்தத்தினாலுண்டாகிற ரேதஸ் ஸ்கலனமானது, கர்மஸம்ஜ்ஞித:-கர்மமென்று சொல்லப்படுகிறது. இம்மூன்றும் முமுக்ஷுக்களறிந்துகொள்ளும் பொருட்டு சொல்லப்பட்டது. ஏனென்றால், முதலிற் சொன்ன முக்த ஜீவசுவருபத்தை யடையவும், பிந்திச் சொன்ன இரண்டையும் விடவும் வேண்டியதென்பதை முமுக்ஷுக்களறியவேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

(இராகவேந்திரர்) உத்தமமானவும் நாசமற்றவுமான விஷ்ணுவே ப்ரஹ்மம்.

ஜீவனுக்குச் சேர்ந்த வஸ்துவானது, ஸ்வபாவம் - அதாவது, அவனுக்குபகாரமான தேகேந்திரியாந்தக்கரண முதலியவைகள். இதுதான் அத்தியாத்மமென்று சொல்லப்படுகிறது. அல்லது ஜீவனுடைய நிலையான இருப்பே ஸ்வபாவம், அதுதான் அத்தியாத்மம்.

பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித:— பூத ஜீவர்களுக்கும், பாவ — ஜட பதார்த்தங்களுக்கும், உத்பவ - உற்பத்தியை, கர: — செய்கிற, விஸர்க: — ஈசுவரசிருஷ்டியானது, கர்ம ஸம்ஜ்ஞித: — கர்மமென்று சொல்லப்படுகிறது. (3)

ஶ்ரீ அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஶ்சாதிதைவதம் |
அதியஜ்ஞோऽஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம்வர ||

4 அதிபூதம்(1)–க்ஷர:–பாவ:-புருஷ:–ச–அதிதைவதம்(2) |
அதியஜ்ஞ:(3)–அஹம்-ஏவ–அத்ர-தேஹே-தேஹப்ருதாம்வர

பாவ: க்ஷர:	உண்டாய் நசிக்கிற வஸ்துக்கள்
அதிபூதம்	அதிபூதம் என்பது
புருஷ:	சரீரத்திலும் தங்கியிருப்பவன்
அதிதைவதம்	அதி தைவமேன்பது
தேஹப்ருதாம்வர	தேகத்தையுடையவரில்உத்தமனே!
அத்ர தேஹே	இந்த தேகத்தில்
அஹமேவ அதியஜ்ஞ:	நானே தான் அதியஜ்ஞன்

உண்டாய் நாசமடைகின்ற வஸ்துக்கள், அதிபூதம் என்று சொல்லப்படுவது. புருஷன், அதாவது சரீரத்தில் தங்கி யிருப்பவன், அதிதைவம் எனப்படுகிறான். தேகத்தை தரித்திருப்பவரில் உத்தமமான ஓ! அர்ஜுனா! இந்த சரீரத்தில் நானேதான் அதியஜ்ஞன் என்று சொல்லப்படுபவன். அதாவது இந்த சரீரத்தால் செய்து முடிக்கத்தக்க எந்த யாகமுள்ளதோ அதற்கு வாசுதேவனான நான் தான் யஜ்ஞதேவதை.

---

(1) அதிபூதம் — பிறப்பு இறப்புள்ள வஸ்துக்களெல்லாம் அதிபூதம் (சங்கரர்); நாசமடையத்தக்க தேகாதிகள் அதிபூதம் (ஸ்ரீதரர்); ஐசுவரியத்தைத் கோருகிற ஜனங்களினால் அறியவேண்டியதாய் சொல்லப்பட்ட அதிபூதமானது அழியத்தக்கதாயும், பஞ்ச மகாபூதங்களிலிருக்கிறதாயும், பஞ்சமகாபூதங்களினால் உண்டானதாயுமுள்ள, ஸ்தூல சப்த ஸ்பரிசாதிகள் (ராமாநுஜர்); நாசமடையத்தக்க சகலவஸ்துக்களும் அதிபூதமென்று சொல்லப்படுகின்றன. ஏனென்றால், அந்தச் சகல வஸ்துக்களும்

ஜீவனைச் சேர்ந்தவைகளே. ஜீவனுக்குபயோக மில்லாத வஸ்துக்களொன்று மில்லை என்பது தாத்பரியம் (மத்வர்).

(2) அதிதைவதம் — சூரியமண்டலத்தி லிருக்கிறவனும் இந்திராதிகளைப் பிரேரேபிக்கப்பட்டவனுமுள்ள ஹிரண்யகர்ப்பனே அதிதெய்வதம் (சங்கரர்); சூரியமண்டலத்தி லிருக்கிறவனும், தன்னுடைய அம்சங்களான தேவதைகளுக்கு அதிபதியா யிருக்கிறவனுமான (பிரம்மா) விராடபுருஷனே அதிதெய்வம் (ஸ்ரீதரர்); பிரம்மாதி தேவதைகளுக்கு மேற்பட்டவனும், அவர்கள் அனுபவிக்கிற விஷயங்களை விட விசேஷமான விஷயங்களை யனுபவிக்கிறவனுமுள்ள புருஷனே அதிதெய்வம் (ராமாநுஜர்); தேவேந்திரன்முதலான தேவதைகளுக்கு அதிபதியான பிரம்மாவே அதிதெய்வதம். அல்லது ஜீவாபிமானியான சங்கர்ஷண மூர்த்தியே (மத்வர்).

(3) அதியஜ்ஞ:—தேகங்களினாலே நடத்தப்படுகிற யக்ஞங்களுக்கு அபிமானியான விஷ்ணு அதியஜ்ஞன், அவனே நான் (சங்கரர்); தேகத்திலே அந்தரியாமியாயிருந்து கொண்டு யஜ்ஞத்தில் பிரவிருத்திக்கும்படி ஏவுகிறவனும் பலனைக்கொடுப்பவனும் இருக்கிற நானே அதியஜ்ஞன் (ஸ்ரீதரர்); இந்திராதி தேவதைகளுக்குச் சரீரியானவும் சகல யஜ்ஞங்களினாலும் ஆராதிக்கப்படுகிறவுமான நானே அதியஜ்ஞன் (ராமாநுஜர்); சகல தேகத்திலும் அந்தரியாமியாயிருக்கிற நான் யஜ்ஞபலனைப் புஜிக்கிறவனானதால் நானே அதியஜ்ஞன். இவன்றான், ஸகஷாாம ஸ்வஹ வாாஉம—என்ற பரமாத்மா. அதியஜ்ஞன் எப்படிப்பட்டவன்? அவன்யார்? என்ற கேள்விகளுக்கு இதினால் பதில்சொல்லப்பட்டதாக கிரகிக்கவேண்டியது. (இராகவேந்திரர்).

(சங்கரபாஷ்யம்) அதிபூதம் என்பது பிராணிவர்க்கத்தைப்பற்றி நிற்பது. அது யாது என்றால் அழியும் பொருள். பிறப்பற்ற எல்லாப்பொருளும் என்றபடி. புருஷன் என்றால் எதையும் நிரம்ப வியாபித்திருப்பவன் அல்லது சரீரத்தில் தங்கி யிருப்பவன். சூரியமண்டலத்திலுள்ள ஹிரண்யகர்பன், எல்லாப் பிராணிகளுடைய இந்திரியங்களுக்கு அருள்புரிபவன். அதாவது அவ்விந்திரியங்களை செம்மையான நிலையிலே நிறுத்துபவன். அவன் தான் அதிதைவம் என்க. அதியஜ்ஞம் என்பது எல்லா யாகங்களையும் அபிமானிக்கின்ற விஷ்ணு என்னும் தேவதை.

“ யஜ்ஞோ வை விஷ்ணு: — யஜ்ஞமே விஷ்ணு ” என்னும் சுருதியினால் காண்க. அந்த விஷ்ணுவே நான்-தான். இந்த சரீரத்தில் எந்த யாகம் உள்ளதோ அதற்கு நான் யஜ்ஞதேவதை. யாகமானது, சரீரத்தால் செய்துமுடிக்கத் தக்கதாதலின், சரீரத்தோடு ஒற்றிருப்பதாம்; ஆகவே சரீரத்தை இடமாகக்கொண்டது. சரீரத்திலே தங்கியிருப்பதென்க. (4)

———

ரு அந்தகாலே ச மாமேவ ஸ்மரந்முக்த்வா கலேவரம் |
யஃ ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஸய꞉ ||

5 அந்தகாலே–ச–[1]–மாம்–ஏவ–ஸ்மரந்–முக்த்வா–களேவரம் |
ய:–ப்ரயாதி–ஸ:–[2]மத்பாவம்–யாதி–நாஸ்தி–அத்ர–ஸம்ஸய:

ய꞉ அந்தகாலே ச	எவன் அந்தியகாலத்திலும்
மாமேவ ஸ்மரந்	என்னையே ஸ்மரிக்கிறவனாய்
முக்த்வா கலேவரம்	சரீரத்தை விட்டு
ப்ரயாதி	போகிறானோ
ஸ꞉ மத்பாவம் யாதி	அவன் என் சுவரூபத்தைஅடைகிறான்
அத்ர ஸம்ஸய꞉ நாஸ்தி	இதில் சந்தேகம் இல்லை.

எவன் மரணகாலத்தில் என்னையே நினைக்கிறவனாய் சரீரத்தை விட்டுப் போகின்றானோ அவன் என் சுவரூபத்தை அடைகிறான். இதில் சந்தேகமில்லை, அதாவது என்னிலையை அடைவானோ அடையமாட்டானோ என்னும் விஷயத்தில் சந்தேகமில்லை.

(1) மாம்—பரமேஸ்வரனாயும், விஷ்ணுவாயுமிருக்கிற என்னையே (சங்கரர்); அந்தர்யாமி ரூபமாயிருக்கிற பரமேஸ்வரனாகிய என்னையே (ஸ்ரீதரர்).

(2) மத்பாவம்— விஷ்ணுவினுடைய (எங்குமுள்ள பொருளினுடைய) உண்மைநிலையை (சங்கரர்); என்னை எவ்வித சுவரூபமாய் ஸ்மரிக்கிறானோ அதைப் போலொத்த ஆகாரத்தை (ராமாநுஜர்), என்னிடத்தில் நித்தியானந்தமான இருப்பை (மத்வர்). (5)

சா யம் யம் வாபி ஸ்மரந்பாவம் த்யஜத்யந்தே கலேவரம் |
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித꞉ ||

6 யம்–யம்–வா–அபி–ஸ்மரந்–பாவம்–த்யஜதி–அந்தே–களேவரம் |
தம்–தம்–ஏவ–ஏதி–கௌந்தேய–ஸதா–தத்பாவபாவித:

ஹே கௌந்தேய	ஓ! குந்திபுத்திரா!
(ய꞉) அந்தே	எவன் அந்தியகாலத்தில்
யம் யம் வாபி	எந்தெந்த
பாவம் ஸ்மரந்	பொருளை ஸ்மரிக்கிறவனாய்
கலேவரம் த்யஜதி	தேகத்தை விடுகின்றானோ
(ஸ꞉) ஸதா	அவன்எப்பொழுதும்
தத்பாவபாவித꞉	அதனையே சிந்திப்பவனாய்
தம் தமேவ ஏதி	அதனையே அடைகிறான்.

ஓ! குந்திபுத்திரா! எவன் அந்தியகாலத்தில் எந்தெந்த வஸ்துவை ஸ்மரித்தவனாய் தேகத்தை விடுகின்றானோ, அவன் எப்போதும் அந்தந்த பாவத்தின் ஸ்மரணையோடு கூடினவனாய் அந்தந்த பாவத்தையே யடைகிறான்.

———

(சங்கரர்.) மேல்சொன்ன இந்த நியமமானது என்னைப்பற்றி மாத்திரம் உள்ளதல்ல. மற்ற எல்லா ஹாவங்களுக்கும் இதே நியமம்தான் என்பது சொல்லப்படுகிறது. ஹாவம் என்றால் தெவதா விஶேஷம்—ஒருவன் யாதாயினும் ஓர் விசேஷ தெய்வத்தை, பிராணன் தேகத்தைவிட்டுப் பிரிந்து போகுங்காலத்திலே சிந்தித்துக்கொண்டு மரண மடைகிறானோ அவன் அந்தத்தெய்வ விஷயமான வாசனையை இடைவிடாது ஸ்மரித்து அப்பியாஸம் செய்து கொண்டவனாய் அத்தையே அடைகிறான். அதாவது நினைத்த பொருளையேயன்றி வேறொரு பொருளை அடைவதில்லை என்க.

(ஸ்ரீதரர்) எவன், மரண காலத்தில் ஈசுவரத் தியானமன்றியில் தேவதைகள், (மனுஷியாள், மிருகங்கள்,) முதலிய எந்த ரூபத்தில் மனதை வைக்கிறானோ, அல்லது மனதிலே எந்த ரூபத்தை நினைத்துக்கொண்டிருக்கிறானோ, அந்த மாதிரியான தேகந்தான் அடுத்த ஜன்மத்தி லுண்டாகுமென்பது கருத்து. இராகவேந்திரரிந்த அபிப்பிராயத்தை ஆதரிக்கிறார்.

(ஹா) மரண காலத்தில் மானை ஸ்மரித்த ஜடபரதருக்கு மான் ஜன்மம் வந்ததை இதற்கு திருஷ்டாந்தமாய்க் கொள்ளலாம். (விஷ்ணுபுராணம் இரண்டாவது அம்சம், 13—வது அத்தியாயம், 32, 33-சுலோகங்களைப்பார்க்க). பரமாத்ம ஸ்மரணையாவது தேவதா ஸ்மரணையாவது ஒருவனுக்கு அந்திய காலத்தி லுண்டாக வேண்டுமானால், ஸதாகாலத்திலும் ஸ்மரணைசெய்து அப்பியாசப்படுத்தியிருந்தா லன்றியி லுண்டாகமாட்டாது. அந்தியகாலத்தில் பரமாத்ம ஸ்மரணை எவனுக்குண்டாகிறதோ அவனுக்கு மறுபடி ஜனனமென்பது கிடையாதாகையால் முமுக்ஷுவான ஒவ்வொருவனும் எப்போதும் பரமாத்மாவை பஜித்துக்கொண்டே யிருக்கவேண்டியது அவசியம். (6)

———

எ தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர யுத்ய ச |
மய்யர்பிதமநோபுத்திர் மாமேவைஷ்யஸ்யஸம்ஶயஃ ||

7 தஸ்மாத்—ஸர்வேஷு—காலேஷு—மாம்-அநுஸ்மர—யுத்ய(1)-ச |
மயி-அர்பிதமநோபுத்தி:-மாம்-ஏவ-ஏஷ்யஸி—அஸம்ஶய:

தஸ்மாத்	ஆகையினாலே
ஸர்வேஷு காலேஷு	எல்லாக்காலங்களிலும்
மாம் அநுஸ்மர	என்னை ஸ்மரித்துக் கொண்டிரு

யுத்⁴ய ச	யுத்தத்தையுஞ்செய்
மயி	என்னிடத்தில்
அர்பிதமநோபு³த்³தி⁴꞉	மனசு புத்தி இவைகளை வைத்தவனாக
மாமேவ	என்னையே
ஏஷ்யஸி	அடைவாய்
அஸம்ஶய꞉	ஸம்சயமில்லை.

(என்னிடத்தில் எப்போதும் மனதை வைத்துக்கொண் டிருப்பவன் மரணகாலத்திலும் என்னிடத்திலே மனதுள்ளவனாக விருப்பான்) ஆகையினாலே எல்லாக் காலங்களிலும் என்னை ஸ்மரித்துக் கொண்டிரு. யுத்தத்தையுஞ்செய். என்னிடத்தில் மனசு புத்தி இவைகளை வைத்தவனாக வானால், என்னையே யடைவாய் ஸம்சயமில்லை.

அஸம்ஶயம் என்றும் பாடம், அர்த்த பேதமில்லை (இராகவேந்திரர்)

(1)யுத்⁴ய ச – யுத்தத்தையும், நித்தியநைமித்திக கர்மங்களையுஞ்செய்.

(சங்கரர்.) மரணகாலத்தில் கடைசியாயுள்ள பாவனம் அதாவது எண்ணமானது, அடுத்த தேகத்தை அடைவதற்கு இவ்வாறு காரணமாகின்றது, இனி வரும் சரீரம் இன்ன தென்பதை நிச்சயப் படுத்துகின்றது, என்கிற இந்தக் காரணத்தினால், நீ எப்பொழுதும் சாஸ்திரப்படி என்னை தியானம் செய்யவேண்டும். அன்றியும் சுவதர்மமாகிய யுத்தத்தையும் செய்ய வேண்டும். நீ வாசுதேவனான என்னிடத்தே மனதையும் புத்தியையும் வைத்தவனாய்க் கொண்டு நீ தியானம்செய்த பிரகாரம் என்னையே வந்தடைவாய். இதில் ஸம்சயமில்லை.

(ராமாநுஜர்) எக்காலத்திலு மென்னையே ஸ்மரித்துக் கொண்டிருவென்று பகவானால் சொல்லப்பட்டது. பகவானிடத்தில் எப்போதும் மனதை வைத்துக்கொண் டிருக்கவேண்டிய தானதினால், இனி யுத்தஞ் செய்ய வேண்டியதில்லை யென்பதாக அர்ச்சுனன் எண்ணுவானென்று நினைத்து, நீ என்னை ஸ்மரித்துக்கொண்டே யுத்தத்தைக் செய்யென்று பகவான் சொன்னார். எப்படி யும்மை ஸ்மரித்துக்கொண்டு யுத்தஞ்செய்கிறதென்று கேட்பாயானால், யுத்தம் முதலிய செய்கையினா லுண்டாகும் ஜயாபஜயத்தில் மனதை வைக்காமல் ஈசுவர கைங்கரியமாக ஸ்மரித்துக் கொண்டு யுத்தஞ்செய் என்பது கருத்து. (7)

அ அப்⁴யாஸயோக³யுக்தேந சேதஸா நாந்யகா³மிநா ।
பரமம் புருஷம் தி³வ்யம் யாதி பார்தா²நுசிந்தயந் ॥

8 அப்⁴யாஸயோக³யுக்தேந[1]-சேதஸா-ந-அந்ய-கா³மிநா |
பரமம்-புருஷம்-[2]தி³வ்யம்-யாதி-பார்த²-அநுசிந்தயந்

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! பார்த்தா!
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨	அப்யாஸ மென்னும் யோகத்தோடு கூடி
𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌾𑌮𑌿𑌨𑌾	வேறு விஷயங்களில் பிரவேசமற்ற
𑌚𑍇𑌤𑌸𑌾	மனதினாலே
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂	பிரகாச ரூபமான
𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂	பரமபுருஷனை
𑌅𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍	தியானிக்கிறவன்
(𑌤𑌮𑍇𑌵) 𑌯𑌾𑌤𑌿	அவனையே அடைகிறான்.

ஓ! பார்த்தா! அப்பியாசமாகிற யோகத்தோடு கூடியவும், வேறு விஷயங்களில் பிரவேசமற்றவுமான மனதினாலே பிரகாசரூபமான பரம புருஷனை (பிரம்மத்தை) கிரமப்படி தியானிக்கிறவன், அந்த பரம புருஷனையே அடைகிறான்.

---

(1) அப்⁴யாஸ யோக³யுக்தேந—முதலில் எந்த வஸ்துவை தியானஞ் செய்யத் தொடங்கினானோ, அதையே விடாமல் தியானிப்பதுதான் அப்பியாசம். இதுவே யடைகிறதற்குபாயமாகிறது (ஸ்ரீதரர்). நித்திய நைமத்திக கர்மானுஷ்டானங்களுக்கு விரோதமில்லாத காலங்களில், தான் நினைத்துக்கொண்டிருக்கிற மூர்த்தியைத்தியானஞ்செய்ய மனதைப் பழக்குவது அப்யாசம், அந்த மூர்த்தித்தியானமே யோகம். (ராமானுஜர்).

12-வது அத்யாயம் சுலோ. 9-வது, பார்க்க.

(2) புருஷம்—சூரியமண்டல மத்தியிலுள்ள புருஷனை (சங்கரர்); நாராயணனாகிய என்னை, 𑌅𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍—அந்தியகாலத்தில் ஸ்மரிக்கிறவன்; எனக்கு சமானமான ரூபத்தை, யாதி—அடைகிறான். (ராமானுஜர்)

(சங்கரர்) அப்யாஸமென்பது சித்தத்தை வைத்திருப்பதற்கு இடமாயுள்ள என்னை மாத்திரம்பற்றிய ஒரே எண்ணமானது அடுத்தடுத்து இடையே வேறு எண்ணம் உதிக்காமல், தொடர்ச்சியாகவருவது. அதுவேதான் யோகமென்பது. யோகியினுடைய சித்தமானது இந்த அப்யாஸத்தையே மேற்கொண்டது. எல்லாவற்றிலும் மேலானவனாய் சூர்ய மண்டலத்திலுள்ள, அதாவது அங்கு விசேஷமாய் விளங்குகின்ற புருஷனை வேறு விஷயங்களிற் செல்லும் வழக்கமில்லாத அந்த மனதினால், சாஸ்திரம், ஆசாரியர் இவர்களுடைய உபதேசத்தின்படி த்யானம் செய்கிறவன் அப்புருஷனையே அடைகிறான்.

(ஸ்வா) இந்த சுலோகத்தை முந்திய சுலோகத்துடன் ஒட்டிப் பொருள்செய்தால், மனதை ஈசுவரத்தியானத்தில் நிறுத்தப் பழகினவன், வேறு விஷயங்களில் பிரவேசித்தபோதிலும், மனது ஈசுவரத்தியானத்திலேயே யிருக்குமென்கிற அர்த்தங் கிடைக்கிறது. (8)

---

௯ 𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍁𑌸𑍍𑌮-
𑌰𑍇𑌦𑍍𑌯𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌤𑌾𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯-
𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥

9 கவிம்-புராணம்-அநுஶாஸிதாரம்(1)-அணோ:-அணீயாம்ஸம்(2)-அநுஸ்மரேத்-ய: | ஸர்வஸ்ய-தாதாரம்(3)-அசிந்த்யரூபம்(4)-ஆதித்யவர்ணம் (5)-தமஸ:(6)-பரஸ்தாத்

𑌯𑌃	எவன்
𑌕𑌵𑌿𑌂	கவியாய் (முற்றுமுணர்ந்தவனும்)
𑌪𑍁𑌰𑌾𑌣𑌂	அநாதிகாலமாயுள்ளவனுய்
𑌅𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌂	ஸகல ஜகத்தையுமாளுபவனுய்
𑌅𑌣𑍋𑌃	அணுவைக் காட்டிலும்
𑌅𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌂	அதிசூக்ஷ்மமாய்
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌤𑌾𑌰𑌂	ஸகலத்தையும் அமைப்பவனுய்
𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌂	சிந்திக்கமுடியாத ரூபமுடையவனுய்
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂	சூர்யனைப்போல் ஒளியுடையவனுய்
𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍	அஜ்ஞான இருட்டைக் கடந்தவனுயிருப்
𑌅𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍	பவனை இடைவிடாமல் ஸ்மரிக்கிருனே
𑌸𑌃 𑌤𑌂 𑌯𑌾𑌤𑌿	அவன் அவ்வித புருஷனை அடைகிருன்.

முற்று முணர்ந்தவனும் அநாதிகாலமாயுள்ளவனும் ஸகல ஜகத்தையும் ஆளுபவனும் அணுவைக் காட்டிலும் ஸூக்ஷ்மமான அணுவாயும், ஸகலத்தையும் அமைப்பவனும் அதாவது ஸகலப் பிராணிகளுக்கும் கர்மங்களின் பலனை பாகித்துக் கொடுப்பவனும், இப்படிப்பட்ட ரூபமுடையவனென்று சிந்திக்க முடியாதவனும், சூர்யனுடைய ஒளியைப்போன்ற நித்திய அறிவு ஒளியையுடையவனும், அஜ்ஞான மென்னும் இருட்டைக் கடந்து நிற்பவனும் இருப்பவனை எவனொருவன் இடைவிடாது தியானிக்கிருனே அவன், அப்படிப்பட்ட புருஷனைச் சிந்திக்கிறவனுய்க் கொண்டு அவ்வித புருஷனையே அடைகிருன்.

---

(1) அநுஶாஸிதாரம்—சகலலோக நியாமகன் (இராகவேந்திரர்.)

(2) அணீயாம்ஸம்— ஜீவனைப்பார்க்கிலும் அணுவாயிருக்கிறவன் (ராமாநுஜர்).

(3) ஶ்ரீதாரம்-சகல கருமங்களின் பலன்களையும் பாகித்துக் கொடுப்பவன் (சங்கரர்); சகலப் பிரபஞ்சங்களையும் சிருஷ்டிக்கிறவன் (ராமாநுஜர்); சகலப். பிரபஞ்சங்களையும் தரிக்கிறவும், போஷிக்கிறவுமானவன் (இராகவேந்திரர்).

(4) அசிந்த்யரூபம் - பிரபஞ்ச விலக்ஷண ரூபமுடையவன் (ராமாநுஜர்).

(5) ஆதித்ய வர்ணம்—அப்பிராகிருத, சுவாபாவிக, அசாதாரண திவ்விய ரூபமுடையவன் (ராமாநுஜர்).

(6) தமஸ: பரஸ்தாத்— மோஹாந்த காரமற்றவன் (சங்கரர்); மாயையை அல்லது பிருத்திவியைக் கடந்தவன்(இராகவேந்திரர்).

(சங்கரபாஷ்யம்) முன்சொன்னபடி தியானம் செய்பவன் எப்படிப்பட்ட புருஷனை அடைகிறான் என்பது சொல்லப்படுகிறது. கவி, அதாவது சென்றவை வருபவை முதலியவற்றையெல்லாம் அறியும் தன்மையன், முற்று முணர்ந்தவன், ஸகல ஜகத்தையும் ஆளுபவன், ஸகலத்தையும் அமைப்பவன் அதாவது கர்மங்கள், அவற்றின் பயன்கள் என்பனவற்றை எல்லாம், பிராணிகளுக்கு பற்பல விதமாய்ப் பகிர்ந்து கொடுப்பவன். இவனுக்கு ரூபம் உள்ளதாயினும் அது எப்படிப்பட்டதுதான் என்று ஒருவனாலும் நினைக்க முடியாதது. இவன் சூர்யனுடைய ஒளிபோன்றுள்ள நித்திய சைதந்யப் பிரகாசத்தை, நித்திய அறிவு ஒளியையுடையவன். அஜ்ஞானம் அறியாமை, என்னும் மோஹாந்த காரத்திற்கு, இருட்டிற்கு, அப்பால் நிற்பவன். எவன் ஒருவன் இப்படிப்பட்ட புருஷனை இடைவிடாமல் தியானம் செய்கின்றானோ அவன் அவனை சிந்திக்கின்றவனுப் அப்புருஷனை அடைகிறான். அநுசிந்தயந் யாதி — என்று முன் சுலோகத்தோடு (9) கூட்டுக.

---

௧0 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾𑌽𑌚𑌲𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈𑌵 । 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸 𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 ॥

10. ப்ரயாண காலே-மநஸா-அசலேந-பக்த்யா-யுக்த:-யோகபலேந-ச-ஏவ | ப்ருவோ:-மத்யயே-ப்ராணம்-ஆவேஶ்ய-ஸம்யக்-ஸ:-தம்-பரம்-புருஷம்-உபைதி-திவ்யம்

அசலேந மநஸா	சஞ்சலமற்றமனதோடும்
பக்த்யா	பக்தியோடும்
யோகபலேந	யோகபலத்தோடும்
யுக்த: ஸ:	கூடிய அவன்
ப்ரயாணகாலே	அந்திய காலத்தில்
ப்ராணம்	பிராணனை
ப்ருவோர்மத்யே	இரு புருவங்களுக்கு மத்தியில்
ஸம்யக் ஆவேச்ய	செவ்வையாக நிறுத்தி
தம் திவ்யம்	(முன்சொன்ன) அந்த திவ்யமான
பரம் புருஷம் ஏவ	பரமபுருஷனையே
உபைதி	அடைகிறான்.

சஞ்சலமற்ற மனதோடும், பக்தியோடும், யோக பலத்தோடும் கூடிய முன்சொன்ன அவன் அந்தியகாலத்தில் பிராணவாயுவை இருபுருவங்களின் மத்தியில் செவ்வையாய் நிறுத்தி, அந்த முன் சொன்ன லக்ஷணத்தை யுடைய பரமபுருஷனை அடைகிறான்.

---

(1) பரம்புருஷம்—பரமபுருஷனுடைய ஐசுவரியத்திற்குச் சமமான ஐசுவரியத்தை யுடைத்தான ரூபத்தை, ஆகாரத்தை, (ராமாநுஜர்).

(சங்கரபாஷ்யம்) யோக பலம் என்பது சித்தம் அலையாது திருடமாய் நிற்றல். அது ஸமாதியினுலாகும் ஸம்ஸ்காரம், அல்லது அப்பியாஸத்தினுலுண்டாவது. முதலில் ஹிருதயபத்மத்திலே சித்தத்தை வசப்படுத்தி, பின்பு மேலே செல்லுகின்ற 'ஸுஷும்நை' என்னும் நாடியினுல், பூமி முதலிய பஞ்சபூதங்களையும் படிப்படியாக வென்று, பிராணனை இருபுருவங்களுக்கும் மத்தியில் ஸாவதாநனுய் நிறுத்தி, இவ்வாறு அந்த ஞானியாகிய யோகியானவன் முன் சுலோகத்தில் சொன்ன லக்ஷணத்தோடும் ஒளி வடிவத்தையுமுடைய பரம புருஷனைச் சேருகிறான்.

(ஸ்ரீதர) இந்த சுலோகங்களினுல் இந்த தேகம் போனபின் உத்தமமான தேகத்தை யடையு முபாயம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

மனது சலனமற்று ஒரு வஸ்துவையேபற்றி நிற்கவேண்டும். பக்தி (விசுவாசம் அல்லது பிரியம்) யில்லாதவஸ்துவை மனம் பற்றுதாகையால் பக்தியும் வேண்டும். அவ்விரண்டும் சிலசில காலத்திலிருந்தால் அது மரணகாலத்தில் உதவுவது அசாத்தியமாகையால், பலமானதும் ஸ்திரமானதுமாகிய நீண்டகால அப்பியாசம் வேண்டும். பிராணவாயுவை (மற்ற வாயுக்களும் அதற்குளடக்கம்) தடுத்து நிறுத்தினுலன்றி தியானம் நிலைக்கா

தாகையால் வாயுக்களைத்தடுத்து புருவத்தின் மத்தியில் நிறுத்தவேண்டும். இவ்வளவு பிரயாஸைப்பட்டும் தியானவஸ்து அர்ப தேவதையானால் புனர் ஜனனமில்லாத ஆனந்தானுபவ மிராதாகையால் இந்த சுலோகங்களில் சொல்லப்படுகிற உத்தம குணங்களையுடைய (பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரர்க ளாகிய) சகுண பிர்ம்மோபாசனையா யிருக்கவேண்டும். இந்த உபாசனை யினால் உபாசிக்கிற சகுணபிர்ம்ம சுவரூபத்தை யடைகிறான். அந்த சுவ ரூபத்துடன் ஆனந்தத்தை அனுபவித்து பிறகு மோக்ஷமடைகிறான். இது கிரமமுக்தி மார்க்கமென்று சொல்லப்படும். இதுதான் பரமாத்மாவை யடைகிறதாக சொல்லப்பட்டது. (10)

கக யதக்ஷரம் வேதவிதோ வதந்தி விஶந்தி யத்யதயோ வீத ராகா: । யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே ॥

11. யத்-(1) அக்ஷரம்-வேதவித:-வதந்தி-விஶந்தி-யத்-யதய:(2) -வீதராகா:-யத்-இச்சந்த:-ப்ரஹ்மசர்யம்-சரந்தி-தத்-தே -பதம்-ஸங்க்ரஹேண-ப்ரவக்ஷ்யே ।

வேதவித:	வேதார்த்தங்களை அறிந்தவர்கள்
யத் அக்ஷரம் வதந்தி	எதனை நாசமற்றதாகசொல்லுகிறார்களோ
யதய: வீதராகா:	யதிகள் ஆசை நீங்கினவர்களாய்
யத் விஶந்தி	எதனைப் புகுகின்றார்களோ
யத் இச்சந்த:	எதனை விரும்புகிறவர்கள்
ப்ரஹ்மசர்யம் சரந்தி	ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிக்கிறார்களோ
தத் பதம் தே	அந்த நிலையை உனக்கு
ஸங்க்ரஹேண	சுருக்கமாக
ப்ரவக்ஷ்யே	சொல்லுவேன்.

வேதார்த்தங்களைப் யறிந்தவர்கள் எதை நாசரகிதமானதென்று சொல்லு கிறார்களோ, காமக்குரோதங்களை விட்டிருக்கிற சந்நியாசிகள் எதை யடை கிறார்களோ, எதையறிய விரும்பி பிரம்மசாரி விருத்தத்தை யநுஷ்டிக் கிறார்களோ அந்த நிலையை (அதெப்படிப்பட்டதென்பதை) சுருக்கமா யுனக்குச் சொல்லுவேன்.

---

(1) அக்ஷரம்—ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்களற்றதாக (ராமாநுஜர்).

(2) பதம்—மனசினாலே அறியத் தகுந்ததான என் சுவரூபத்தை (ராமாநுஜர்).

(சங்கர பாஷ்யம்) ப்ரஹ்ம வித்தையில்லாமலும் கூட, லோக மார்க்கத்தைப் பின்பற்றுதலாலேயே ப்ரஹ்மமானது அடையப்படுகின்றது, என இவ்வாறு அமைந்துள்ளளவிலே இதைச் சொல்லப்படுகிறது. பின் 13-வது சுலோகத்தில் மறுபடியும் கூறப்படுகின்ற ஓம் என்கிற பிரணவமாகிய உபாயத்தினால் யோகியானவன் அடையக் கருதியதாய் வேதத்தை அறிந்தவர்கள் கூறுதல் அதாவது வேதத்தை அறிந்தவர்களால்; "அழியாததாகச் சொல்லப் படுகின்ற" என்பது முதலான விசேஷங்கட்கு விசேஷ்யமாயுள்ள ப்ரஹ்மத்திற்கு பகவான் பெயரிடுகிறார். (யோகமார்க்கத்திற் புகுந்த மத்யமாதிகாரியும் சாங்கிய மார்க்கத்திற் புகுந்த உத்தமாதிகாரியுமாகிய இருவரும் முறையே தியான யோகத்தின் முதிர்ச்சியினாலும் நிதித்யாசனத்தின் முதிர்ச்சியினாலும் வேதாந்த மகா வாக்கியங்களினால்தான் மோக்ஷத்தை அடைகிறார்களென்பது உபநிஷத்துகளின் ரஹஸ்யம்). வேதத்தின் பொருளை அறிந்தவர்கள் அக்ஷரம் என்னும் அழியாப்பொருளை, புத்தி முதலியவற்றால் உணரத்தக்க எவ்விதவிசேஷத்தன்மையும் இல்லாததாகக்கூறுகிறார்கள். "ஏதத்வை தத் அக்ஷரம் கார்கி ப்ராஹ்மணா அபிவதந்தி" (ஓ கார்கி நீ அறிய வேண்டியது எதுவோ) அந்த அக்ஷரம் இது தான். ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் அது ஸ்தூலமன்று ஸூக்ஷ்மமன்று என்பது முதலியவற்றைக் கூறுகிறார்களா' என்னும் ப்ரஹதாரண்ணியக சுருதியினால் காண்க. அன்றியும் ஆசை நீங்கியவராய் முயற்சியோடுகூடிய துறவிகள் மெய்யறிவு வந்தவுடன் அழியாப்பொருளைப் புகுகிறார்கள். அதாவது அப்பொருளாக இருக்கிறார்கள். மேலும் அக்ஷரத்தை அறிய விரும்புகிறவர்கள் ஆசாரியனிடத்து ப்ரஹ்மசர்யத்தை அதாவது குருகுலவாஸம் முதலியவற்றை அநுஷ்டிக்கிறார்கள். எதனை "அறிய" விரும்புகிறவர்கள் என்று வாக்கிய சேஷமாக வைத்துக்கொள்ளவும், நீ அடையவேண்டிய அந்த அக்ஷரமென்னும் பெயருடைய நிலையை சுருக்கமாய்ச் சொல்வேன் என்கிறார் பகவான். (11)

---

௧௨ ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்ய ச |
மூர்த்ந்யாதாயாத்மந: ப்ராணமாஸ்திதோ யோகதாரணாம் ||

௧௩ ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் ||
ய: ப்ரயாதி த்யஜந் தேஹம் ஸ யாதி பரமாம் கதிம் ||

12. (1) ஸர்வத்வாராணி–ஸம்யம்ய–மந:–(2) ஹ்ருதி–நிருத்ய–ச |
(3)மூர்த்நி–ஆதாய–ஆத்மந:ப்ராணம்–ஆஸ்தித:–4யோகதாரணாம்

13. ஓம்–இதி–ஏகாக்ஷரம்–ப்ரஹ்ம–வ்யாஹரந்–மாம்–அநுஸ்மரந் |
ய:–ப்ரயாதி–த்யஜந்–தேஹம்–ஸ:–யாதி–பரமாம்–5கதிம்

𑌯𑌃	எவன்
𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿	ஸகல இந்திரிய துவாரங்களை
𑌸𑌂𑌯𑌮𑍍𑌯	அடக்கி
𑌮𑌨𑌃 𑌹𑍃𑌦𑌿 𑌨𑌿𑌰𑍁𑌧𑍍𑌯	மனதைஹிருதயகமலத்தில்நிறுத்தி
𑌆𑌤𑍍𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌾𑌣𑌂	தன்னுடைய பிராணனை
𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌯𑌾𑌧𑌾𑌯 𑌚	சிரஸில் நிறுத்தியும்
𑌯𑍋𑌗𑌧𑌾𑌰𑌣𑌾𑌂	யோகத்தை தரிப்பதற்கு
𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃	பிரவிர்த்தித்தவனாய்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	பிரஹ்மத்தின் பெயராகிய
𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂	ஓம் என்கிற ஒரு அக்ஷரத்தை
𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌨𑍍	உச்சரித்துக் கொண்டு
𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍	என்னைஇடைவிடாமல்ஸ்மரித்துகொண்டும்
𑌦𑍇𑌹𑌂 𑌤𑍍𑌯𑌜𑌨𑍍	தேகத்தை விட்டு
𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿	போகின்றானோ
𑌸𑌃 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂	அவன் உயர்ந்த நிலையைப் பெறுகிறான்.

எவன் தன்னுடைய ஸகல இந்திரியதுவாரங்களையும் அடக்கி, மனதை ஹிருதய கமலத்தில் நிலையாக நிறுத்தி தன்னுடைய பிராணனை சிரஸில் நிறுத்தி, ஸ்திரமான யோகத்தை தரிப்பதற்குப் ப்ரவிர்த்தித்தவனாய், ப்ரஹ்மத்தின் பெயராகிய ஓம்காரம் என்னும் ஓர் அக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு என்னை இடைவிடாமல் ஸ்மரிப்பவனாய், இந்த தேகத்தை விட்டுப் போகிறானோ அவன் சிரேஷ்டமான கதியையடைகிறான்.

———

(1) ஸர்வத்வாராணி— ஞானேந்திரியங்களை (ராமாநுஜர்). ஸுஷும்ந நாடி தவிர மற்ற நாடிகளை (இராகவேந்திரர்).

(2) ஹ்ருதி—ஹிருதயத்திலிருக்கிற என்னிடத்தில் (ராமாநுஜர்; மத்வர்).

(3) மூர்த்நி—புருவங்களின் மத்தியில் (ஸ்ரீதரர்); பிரம்மரந்திரத்தால் (இராகவேந்திரர்).

(4) யோகதாரணம்—யோகமாகிய தாரணை, அதாவது அகண்டத்தியானம் (இராமாநுஜர்).

(5) பரமாம் கதிம்—பிரகிருதி விமுக்தமானவும், எனக்குச் சமானமான ஆகாரமுடையவும் புநர் ஜனனமற்றவுமான ஆத்மாவை (இராமாநுஜர்).

(சங்கரபாஷ்யம்)ப்ரஸ்நோபநிஷத் 5–வது ப்ரச்நம் 1–2 மந்திரங்களில் பிப்பலாதரரை சிபியின் குமாரராகிய சத்தியகாமர் என்பவர் ‘ஓ! பகவானே மநுஷ்யர்களுக்குள் அதற்கு அதிகாரியான எவனொருவன் ஓங்காரத்தை (ப்ரணவத்தை) மரணபர்யந்தம் அப்படி தியானம்செய்து உபாஸிக்கின்றானோ அவன் அதனால் எந்த லோகத்தை ஜயிக்கிறான் அதாவது அடைகிறான்" என்று கேட்டதற்கு பிப்பலாதர் சத்தியகாமருக்குச் சொல்லுகிறார் "ஓ! சத்தியகாமா ஸகுணமும் நிர்குணமுமான இந்த ப்ரஹ்மமானது ஓம் காரந்தான்" என்று துடங்கி "மூன்று மாத்திரைகளையுடைய ஓம்கார மென்னும் அக்ஷரத்தினாலேயே எவன் இந்த பரமபுருஷனை தியானம் செய்கின்றானோ அவன் ஸாமகானங்களால் மேலே ப்ரஹ்ம லோகத்திற்குக் கொண்டுபோகப்படுகிறான்" என்பது முதலாகவுள்ள வசனத்தினாலும், "தர்மத்தை தவிரவும் அதர்மத்தைத் தவிரவும் நீ எதைக் காண்கின்றாயோ அதை எனக்குச்சொல்" என்று கடோபநிஷத் 2-வது அத்தி. 14-வது மந்திரத்தில் எமதர்மராஜனை நசிகேதஸ் கேட்க அவர் அதற்கு "வேதங்களெல்லாம் எந்த நிலையைக் கூறுகின்றனவோ, தவங்களெல்லாம் எதனைச் சொல்லுகின்றனவோ எதனை விரும்புகிறவர்கள் ப்ரஹ்மசரியத்தை அநுஷ்டிக்கின்றார்களோ அந்த நிலையை உனக்கு சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். இது ஓம்காரமென்பது தான்" என்று சொல்வதாகவுள்ள சுருதி வாக்கியங்களாலும், ஓங்காரமாகிய ப்ரணவ உபாஸனமானது சொல்லப்படுகிறது. ஆகவே ஓங்காரமானது, ப்ரஹ்மத்தை உணர்த்தும் சொல்லாகவாவது, பிரதிமைபோல அதாவது விக்கிரஹம் போல அறி குறியாகவாவது கொள்ளப்பட்டு, மந்தமான புத்தியையும் நடுத்தரமான புத்தியையும் உடையவர்கள், ப்ரஹ்மத்தை அறிவதற்கு ஸாதனமாகக் கருதப்பட்டிருக்கின்றது.

எந்த ஓங்காரத்தினுடைய தியானமானது காலாந்தரத்திலே, முக்தியைக் கொடுப்பதாகக் கூறப்பட்டதோ அதே தான் இங்கும் இவ்வத்தியாயத்தில் சொல்லப்படுவது. ‘‘கவிம் புராணமநுஸாஸிதாரம்’’ ‘‘யதக்ஷரம் வேதவிதோ வதந்தி’’ என்று கூறப்பட்ட ப்ரஹ்மத்தை அறிவதற்கு முன் சொன்னபடி, ஸாதனமாயுள்ள ஓங்காரத்தின் உபாஸநமானது, அதாவது காலாந்தரத்தில் முக்தியைக் கொடுப்பதாய், யோகத்திலே சித்தம் உறுதியாக நிற்றலோடு கூடிய தியானமானது முக்கியமாய் உபதேசிக்க வேண்டியது. முக்கியமான ஓங்காரத்தியானத்தை ஒட்டி வந்த மற்றுஞ் சில விஷயங்களும் உபதேசிக்கத் தக்கன. இப்படிப்பட்ட உத்தேசத்தோடு இந்த சுலோகங்கள் தொடங்கப் படுகின்றன.

உணர்ச்சிக்கு வழிகளாயுள்ள எல்லா இந்திரியங்களையும் அடக்கி மனதை ஹ்ருதய பத்மத்தில் ஒடுக்கி, அதாவது அலையாது நிற்கச்செய்து இவ்வாறு அங்கே வசப்படுத்தப்பட்ட மனதோடு ஹ்ருதயத்திற்கு மேலே செல்லும் ஸுஷும்னை என்னும் நாடியினால் ஹ்ருதயத்திற்கு மேலே ஏறி பிராணவாயுவை சிரஸிலே நிறுத்தி யோகதாரணையை நிலைபெறச் செய்யத் தலைப்பட்டவனாய் ப்ரஹ்மத்தின் பெயராகிய ஓங்காரமென்னும் ஓர் அக்ஷரத்தை உச்சரிப்பவனாய், அந்த ஓங்காரத்தின் பொருளாகிய ஈசுவரனான என்னையும் இடைவிடாது தியானிப்பவனாய், எவன் சரீரத்தைவிட்டு இறந்து போகின்றானோ, அவன் இவ்வாறு சரீரத்தை விடுபவனாய் மேலான கதியை யடைகிறான். போகுதல் என்பது சரீரத்தை விடுவதனால் அமைவதே யன்றி ஆத்மசுவரூபம் அழிதலாலன்று என்பது பொருள். தாரணை என்பது மனதை ஒன்றிலே நிறுத்தல். அக்ஷரம் என்கிறபதம் அசைநிலை. சரீரத்தை விட்டு, என்பது போகுதலை விசேஷித்தற்காக அதாவது போகும் விதத்தைக் காட்டுவதற்காக கூறப்பட்டது.

(ஸ்வா) 17-வது அத்தியாயம் 23-வது சுலோகத்தையும், சாந்தோக்கிய உபநிஷத் முதலாவது பிரபாடகம் 1-முதல் 10-வரை கண்டங்களையும் பார்க்க. (12-13)

அநந்யசேதாஃ ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶஃ ।
தஸ்யாஹம் ஸுலபஃ பார்த² நித்யயுக்தஸ்ய யோகி³நஃ ॥

14. அநந்யசேதா:-ஸததம்-ய:-மாம்-ஸ்மரதி-நித்யஶ: |
தஸ்ய-அஹம்-ஸுலப:-பார்த²-(1) நித்யயுக்தஸ்ய-யோகி³ந:

ஹே பார்த²	ஓ! அர்ஜுனா!
யஃ	எவன்
ஸததம் மாம்	இடைவிடாது என்னை
அநந்யசேதாஃ	வேறு விஷயத்தில் மனம் பற்றாதவனாய்
நித்யஶஃ ஸ்மரதி	நீடித்து ஸ்மரிக்கின்றானோ
தஸ்ய	அப்படிப்பட்ட
நித்யயுக்தஸ்ய	எப்பொழுதும் ஒரு நிலைப்பட்ட
யோகி³நஃ	யோகிக்கு
அஹம் ஸுலபஃ	நான் எளிதில் அடையத் தகுந்தவன்.

ஓ! அர்ஜுனா, எவன் வேறு விஷயங்களில் மனம் பற்றாமல் இடைவிடாது என்னை நீடித்து ஸ்மரிக்கிறானோ, அப்படிப்பட்ட எப்பொழுதும், ஸ்திரமான மனதையுடைய யோகிக்கு, நான் (சுலபன்) எளிதாய் அடையத் தகுந்தவன்.

(1) நித்யயுக்தஸ்ய—ஸ்திரமாய் என்னை யடையவேண்டுமென்கிற ஆசையுடன் கூடியிருக்கிற (ராமாநுஜர்)

(சங்கரபாஷ்யம்) வேறு விஷயங்களிலே மனம் பற்ருத எந்த யோகியானவன் எப்பொழுதும் இடைவிடாது பரமேசுவரனை என்னை நீடித்து ஸ்மரிக்கின்ருனோ அந்த எப்பொழுதும் மனம் ஒரு நிலைப்பட்ட யோகிக்கு நான் எளிதாய் அடையத்தக்கவன். நீடித்து என்றதினுல் நெடுங் காலமானது உணர்த்தப்படுகின்றது. ஆறு மாதமாவது ஒரு வருஷமாவது அன்று. மற்றென்னவெனில், தனது உயிர்வாழ்க்கை முழுவதும் இடைவிடாது எவன் நினைக்கின்ருனே என்றபடி. இவ்விதமாகவே ஒருவன் வேறென்றிலும் மனமில்லாதவனுய் பகவானை என்னிடத்திலே எப்பொழுதும் ஒரு நிலைப்பட்டிருக்க வேண்டும்.

(ராமாநுஜர்) இதுவரையில் ஐசுவரியத்தைக் கோரப்பட்டவர்களும், விமுக்தாத்ம சுவரூபத்தை யடையப்பட்டவர்களும், உபாசிக்கும் மார்க்கத்தைச்சொல்லி, இப்போது இதில் ஞானியைப்பற்றிச் சொல்லுகிருர். (14)

---

௧௫ 𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌦𑍁𑌃𑌖𑌾𑌲𑌯𑌮𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 |
𑌨𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌾𑌃 ||

15. மாம்–உபேத்ய–புந:–ஜந்ம–து:காலயம்–அசாச்வதம் |
ந–ஆப்நுவந்தி–மஹாத்மாந:–ஸம்ஸித்திம்–பரமாம்–கதா:

𑌮𑌾𑌂 𑌉𑌪𑍇𑌤𑍍𑌯	என்னை அடைந்து
𑌪𑌰𑌮𑌾𑌂 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂	சிரேஷ்டமான மோக்ஷத்தை
𑌗𑌤𑌾𑌃 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃	அடைந்த மஹாத்துமாக்கள் (யோகிகள்)
𑌪𑍁𑌨𑌃	மறுபடியும்
𑌦𑍁𑌃𑌖𑌾𑌲𑌯𑌂	துக்கங்களுக்கிருப்பிடமும்
𑌅𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂	அநித்தியமுமான
𑌜𑌨𑍍𑌮 𑌨𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿	பிறப்பை அடைகிறதில்லை.

என்னை அடைந்து சிரேஷ்டமான மோக்ஷத்தைப்பெற்ற மாஹாத்மாக்கள் (யோகிகள்) மறுபடியும் துக்கங்களுக்கு இருப்பிடமாயும் அநித்தியமாயும் இருக்கிற மறுபிறப்பை அடைவதில்லை.

(சங்கரபாஷ்யம்) பகவானுடைய எளிதாய் அடையக்கூடிய தன்மையினுல், அதாவது பக்தர்களுக்கு எளிதாய் அடையத் தக்கவர் என்பதினுல் ஆவதென்ன என்பது இதில் சொல்லப்படுகிறது. அவர்கள் ஈசுவரனுன என்னை அடைந்து எந்நிலையைப்பெற்ற பின்பு மறு பிறப்பைப் பெறுவ

தில்லை. எப்படிப்பட்ட மறுபிறப்பைப் பெறுவதில்லை என்று அதன் விசேஷத்தை கூறுகிறார். பிறப்பு என்பது ஆத்யாத்மிகம் முதலிய துன்பங்களுக்குத் தங்குமிடம் மாத்திரமன்று. நிலையில்லாத தன்மையது மாம். மஹாத்மாக்களான யதிகள் மோக்ஷமென்னும் மேலான ஸ்திதியைப் பெற்றவராய் இப்படிப்பட்ட மறுபிறப்பை அடைவதில்லை. ஆனால் எவர்கள் என்னை அடைவதில்லையோ, அவர்கள் மீண்டும் திரும்பிவருகிறார்கள் (மறுபடியும் பிறக்கிறார்கள்). ரஜஸ்தமோ குணங்கள் நீங்கி சுத்தமாய்த் தெளிந்துள்ள ஸத்வ குணத்தை மாத்திரமுடையவர்கள், என்னை அடைந்து, பின்பு மோக்ஷத்தை அடைந்து விட்டார்கள் எனவே ஸகுண ப்ரஹ்ம உபாஸகர்களுக்கு கிரம முக்தியானது காட்டப்பட்டது.

(ஸ்வா) இந்த சுலோகத்தில் மோக்ஷமடைந்த மகாத்மாக்கள் "என்னையடைந்து பிறப்பை யடைகிறதில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறதினாலே மோக்ஷம் என்கிறது வேறேயாயும் என்னை யென்கிறது வேறேயாயும் தோற்றுகிறது; அப்படி வேறு அல்ல. பிரம்மத்தை யடைவது தான் மோக்ஷமடைவது; மோக்ஷமடைவது தான் பிரம்மத்தை யடைவது; இதில் யாதொரு பேதமுமில்லை யென்பதைக் காண்பிக்கும் பொருட்டு "மோக்ஷமடைந்தவன் என்னை யடைந்தவனாகிறான்" என்று சொன்னதாகக் கொள்ளவேண்டியது. பாஷ்யக்காரர்களும் வியாக்கியாதாக்களும், "என்னை யடைந்தபின் பிறப்பையடைகிறதில்லை; ஏனென்றால், சிரேஷ்டமான மோக்ஷ மடைந்தவர்களானதினால்,தான்" என்று அர்த்தஞ் செய்திருக்கிறார்கள். இதினாலேயும் முந்திய அத்தியாயம் முதலானவைகளினாலேயும், பிரம்மமாவதுதான் மோக்ஷமென்று தெளிவா யிருக்கிறது. (15)

—·—·—

கசு ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்திநோऽர்ஜுந ।
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே ॥

16. ஆப்ரஹ்ம-ஸுவநாத்-லோகா: புநராவர்திந:-அர்ஜுந ।
மாம்-உபேத்ய-து-கௌந்தேய-புந:-ஜந்ம-ந-வித்யதே

ஹே அர்ஜுந	ஓ! அர்சுனா!
ஆப்ரஹ்மபுவநாத்	பிரம்மலோகம் உள்பட
லோகா:	சகல லோகங்களும்
புநராவர்திந:	மறுபடி உற்பத்தியுடையனவாம்
ஹே கௌந்தேய	ஓ! குந்திபுத்திரா!
மாம் உபேத்ய து	என்னை அடைந்தாலோ
புநர்ஜந்ம நவித்யதே	மறுபிறப்பானது கிடையாது.

ஓ! அர்ஜுனா! ப்ரஹ்ம லோகம் முதலாக உள்ள சகல லோகங்களும் மறுபடி உற்பத்தியை யுடையனவாம்; அதாவது திரும்பி உண்டாகும் தன்மையனவாம். ஓ! குந்திபுத்திரா! மற்று என்னை அடைந்தவர்களுக்கோ மறு பிறப்பானது இல்லை.

(சங்கரர்) ஆனால் உங்களைக் காட்டிலும் வேறொன்றை அடைந்தவர்கள் மறுபடியும் திரும்பிவருகிறார்களா? என்னும் கேள்விக்கு உத்தரம் இதில் சொல்லப்படுகிறது. புவனம், என்றால் பொருள்கள் உண்டாகும் இடம். உாம்-என்னை ஒருவனையே, அடைந்தவர்களுக்கு புநர்ஜன்மம், அதாவது மறுபடியும் உண்டாவதில்லை.

(ஸ்ரீதரர்) பிரம்மலோகத்தை முக்திக்குப்போகிற வழியாக மாத்திரமுடைய கிரமமுக்தி யடையப்பட்டவர்களுக்கு மறுபிறப்புக் கிடையாது. அவர்களுக்குப் புநர்ஜநநம் சொன்னதாக எண்ணக்கூடாது.

(இராகவேந்திரர்) "பிரம்மலோகமுத லுள்ள" என்றதினால், பிரம்மலோகத்திற்குக் கீழ்ப்பட்ட சகல லோகங்களுக்கும், அவ்விடத்திலுள்ள ஜனங்களுக்கும் புநர்ஜநந முண்டு என்பது தாத்பரியம். இப்படிச் சொன்னதினால் பிரம்மலோகத்திலிருக்கிறவர்களுக்குப் புநர்ஜநநமில்லையென் றுகிறது. "என்னை யடைந்தவர்களுக்குப் புநர்ஜந்மமில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறதினால், பிரம்மலோகத்திலுள்ளவர்களுக்கு மறுபிறப்புண்டென்று தோன்கிறது. இப்படி ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றுகிறதேயென்றால், "பிரம்மலோகத்தில் என்னை யுபாசித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு மறு பிறப்பில்லை" என்பது தான் "என்னை யடைந்தவர்களுக்கு" என்பதின் தாத்பரியம். மற்றவர்களுக்கு ஜநநமுண்டு.

(வ்யா) பிரம்மலோகம் முதலுள்ள சகல லோகங்களும் மறுபிறப்புடையன வென்பதற்கு, பிரம்மலோகமும், அதற்குத் தாழ்ந்ததாகவுள்ள லோகங்களும் என்றாவது, பிரம்மலோகம் வரையிலென்றாவது அர்த்தமாகலாம். புநர்ஜந்ம மடைவிப்பது லோகங்களா? என்றாலோ, அதின் தாத்பரியம் அப்படியல்ல. கிரமமுக்திக்கு யோக்கியர்களல்லாதவர்கள் பிரம்மலோகத்தையாவது அல்லது மற்றெந்த லோகத்தையாவது அடைந்தால், மறுபடியும் ஜந்மத்தை யடைவார்கள். மேலு மந்த லோகமுங்கூட நாசமடையத்தக்கதே. நாசமடையத்தக்க லோகத்தையே புருஷார்த்தமாக வெண்ணி அடைந்தவர்களும் நாசமடையத்தக்கவர்களே. ஆகையால் மோக்ஷமடைந்தாலன்றி புநர்ஜந்மம் விடாதென்பது தாத்பரியம். (16)

---

17. 𑌸𑌹𑌸𑍍𑌰𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌹𑌰𑍍𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌤𑍇𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋 𑌜𑌨𑌾𑌃 ॥

17. ஸஹஸ்ரயுகபர்யந்தம்-அஹ:-யத்-ப்ரஹ்மண:-விது: ।
ராத்ரிம்-யுகஸஹஸ்ராந்தாம்-தெ-அஹோராத்ரவித:-ஜநா: ॥

𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑌃 𑌜𑌨𑌾𑌃	பகல் ராத்ரியின் அறிவை அறிந்த ஜனங்கள்
𑌯𑍇 𑌤𑍇	எவர்களோ அவர்கள்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌅𑌹𑌃	ப்ரஹ்மாவினுடைய பகல்
𑌯𑌤𑍍 𑌤𑌤𑍍	எதுவோ அதை
𑌸𑌹𑌸𑍍𑌰𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂	ஆயிரம் யுகங்களை முடிவாயுடையதாகவும்
𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂	இரவை
𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂	ஆயிரம் யுகங்களை முடிவாயுடையதாகவும்
𑌵𑌿𑌦𑍁𑌃	அறிகிறார்கள்

பகலையும் இரவையும் அதாவது காலக்கணக்கை அறிகின்ற ஜனங்கள் எவர்களோ அவர்கள் ப்ரஹ்மாவினுடைய பகல் எதுவோ அது ஆயிரம் யுகங்களை எல்லையாகவுடைய தெனவும், இரவு எதுவோ அதுவும் ஆயிரம் யுகங்களை எல்லையாக உடையதெனவும் நிர்ணயித்து அறிந்திருக்கிறார்கள்.

(சங்கரர்) ப்ரஹ்மலோகம் உள்பட சகல லோகங்களும், எதனால் மறுபடியும் திரும்பி வரும் தன்மையை யுடையன என்றால், காலத்தை வரம்பாய் உடைத்தானமையால். அது எப்படி என்பது சொல்லப்படுகிறது. ப்ரஹ்மாவுக்கு அதாவது விராட் ப்ரஜாபதிக்கு இரவும் பகலினுடைய அளவையே கொண்டது. எவர்கள் பகலையும் இரவையும் அறிகிறார்கள் என்பது கூறுகிறார். பகலையும் இரவையும் அறிகின்ற அவர்கள், அதாவது காலக் கணக்கை அறியும் ஜனங்கள் ப்ரஹ்மாவினுடைய ஒரு பகல் ஆயிரம் சதுர் யுகம் கொண்டதென்றும், இரவும் அதேகாலம் உள்ளதென்றும் அறிகிறார்கள். இவ்வாறு அந்த உலகங்கள் காலத்தால் வரையறுக்கப்பட்டனவாதலின் மறுபடியும் திரும்பி உண்டாகும் தன்மையை யுடையனவாம் என்பது கருத்து.

(ஸ்ரீதரர்) இந்த சுலோகத்திற்கு அன்வயம்:—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃=ப்ரஹ்மாவுக்கு, **𑌯𑌦𑌹𑌃**=எந்தப் பகலை, 𑌸𑌹𑌸𑍍𑌰𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 = ஆயிர யுகங்களை முடிவாக உடையதாகவும், 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂=இரவை, 𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂=ஆயிரம் யுகங்களை முடிவா யுடையதாகவும், 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃=எந்த ஜனங்கள், 𑌵𑌿𑌦𑍁𑌃=அறிந்திருக்கிறார்களோ, 𑌤𑍇=அவர்கள் 𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑌃=

பகலிரவை யறிந்தவர்கள் என்பது கருத்து. பிரம்மலோகமானது வெகுகாலம் நீடித்திருக்கிற தென்பதையும், சிரேஷ்டமான தென்பதையும் காண்பிக்கும் பொருட்டு இந்த சுலோகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயிரம் யுகங்களென்றால், ஆயிரம் சதுர் யுகங்களென் றர்த்தம்.

(மத்வர்) ப்ரஹ்மண:=பரப்பிரம்மத்தினுடைய, ஸஹஸ்ரயுகபர்யந்தம் யுகஸஹஸ்ராந்தம் ‖ அநேக ஆயிர யுகங்களை, என்றுவிரண்டு பாரர்த்த மல்லது சதுர்முக பிரம்மாவி னாயுளை அளவாகவுடைய காலம். பரப்பிரம்மத்துக்கு இப்படிப்பட்ட அனேக ஆயிரம் சதுர்யுகங்களை ஒரு பகலாகவும், அநேக ஆயிரம் சதுர்யுகங்களை ஒரு இரவாகவும் அறிந்தவர்கள் இராப்பகலை யறிந்தவர்கள். என்றால், பிரம்மலோகம் முதல் அதற்குக் கீழ்ப்பட்ட சகலலோகங்களும் பிரளயத்தில் முழுகும் காலமாகிய மகா விஷ்ணுவினுடைய யோகநித்திரைக் காலத்தை இரவாகவும், சகலப் பிரபஞ்சங்களும் சிருஷ்டியாகும் காலத்தைப் பகலாகவும் உபசாரமாகச் சொன்னதென்று கிரகிக்கவேண்டியது.

(ஸ்வ) ஒரு பிரம்மாவினுடைய ஆயுளை (சகாப்தத்தை) கணக்கிடுவது எவ்விதமெனில் :—

௧௮	கண்ணிமைப்பொழுது	கொண்டது	காஷ்டை	௧
௩0	காஷ்டை	,,	கலை	௧
௩0	கலை	,,	முகூர்த்தம்	௧
௩0	முகூர்த்தம்	,,	இராப்பகலுள்ள நாள்	௧
௧௫	நாள்	,,	பக்ஷம்	௧
௨	பக்ஷம்	,,	மாதம்	௧
௨	மாதம்	,,	இருது	௧
௩	இருது	,,	அயனம்	௧
௨	அயனம்	,,	வருஷம்	௧
௧	மனித வருஷம்	,,	தேவ நாள்	௧

உத்தராயண 6-மாதம்பகல், தக்ஷிணாயன 6-மாதம்இரவு.

௩௬0	தேவ நாட்கள்		கொண்டது	தேவ வருஷம்	௧
௪௮00	தேவ வருஷங்கள் அல்லது	௧௭௨௮000	மனித வருஷங்கள்	கிருதயுகம்	௧
௩௬00	,,	௧௨௯௬000	,,	திரேதாயுகம்	௧
௨௪00	,,	௮௬௪000	,,	துவாபரயுகம்	௧
௧௨00	,,	௪௩௨000	,,	கலியுகம்	௧

இப்படிப்பட்ட நாலு யுகங்கள் சேர்ந்தது, அதாவது தேவவருஷங்கள்

பன்னிரெண்டாயிரம், மனுஷிய வருஷங்கள் ௪௩௨0000 கொண்டது சதுர் யுகம் - ௧. இப்படிப்பட்ட சதுர்யுகம் - ௧000 கொண்டது சதுர்முகப் பிரம்மாவினுடைய ஒருபகல். இந்தப் பகல்காலத்தில் பதினான்கு மனுவந் திரங்களாகின்றன. (எக) எழுபத்தோரு சதுர் யுகங்கள் கொண்டது ஒரு மனுவந்திரம். சதுர்யுகம் ௧000 - கொண்டது, பிரம்மாவினுடைய ஒரு இரவு. இப்படிப்பட்ட பகல் இரவு சேர்ந்த நாள் ௩௬0 கொண்டது பிரம் மாவினுடைய ஒரு வருஷம். இப்படிப்பட்ட ௧00 - வருஷம் கொண்டது ஒரு பிரம்மாவினுடைய ஆயுஸ். இந்த ஆயுஸ் காலமானது பராவென்று சொல்லப்படுகிறது. ஒரு பராவுக்கு (௩௧௧0௪000000000) மூன்றுகோடி பதினொருலக்ஷத்து நான்காயிரம் கோடி மனுஷிய வருஷங்களாகின்றன.

மேலே சொன்ன கிருதயுகத்தில் ௮00-வருஷங்களும், திரேதாயுகத் தில் ௬00 - வருஷங்களும், துவாபரயுகத்தில் ௪00 - வருஷங்களும், கலி யுகத்தில் ௨00 - வருஷங்களும், சந்தியென்று சொல்லப்படும். இந்த ஒவ் வொரு சந்தி வருஷங்களிலும், பாதி பூர்வ சந்தி யென்றும், மற்றொரு பாதி உத்தர சந்தியென்றும் சொல்லப்படுகிறது. விஷ்ணுபுராணம் பிரதம அம்சம், ௩-வது அத்தியாயமும், லிங்கபுராணம் அத்-௪, கூர்மபுராணம் அத்-௫, பத்ம புராணம் சிருஷ்டி கண்டம் அத்-௩௬, இவைகளையும் பார்க்க.

மேற்சொன்ன சந்தியென்பது எப்படிப்பட்டதென்றால், முதல் யுக மாகிய கிருதயுகத்தின் கடைசியில் ௪00 - வருஷங்களும், இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்தின் துவக்கத்தில் ௪00 - வருஷங்களும், சேர்ந்த ௮00 - வருஷங்கள், முதல் யுகத்தின் சந்தி. அப்படியே இரண்டாவது யுகத்தின் கடைசியில் ௩00 - வருஷங்கள், மூன்றாவது யுகத்தின் துவக்கத் தில் ௩00 - வருஷங்கள் ஆக அறுநூறு வருஷங்கள் இரண்டாவது யுகத் தின் சந்தி. இப்படியே மற்ற யுகங்களுக்கும் சந்தி வருஷங்களைக் கணக்கிட வேண்டியது. இப்படிப்பட்ட சந்திவருஷங்களின் பிரயோஜன மென்ன வென்றால், கிருதயுகத்தின் கடைசியிலுள்ள ௪00 - வருஷங்களாகிய சந்தியி லேயே திரேதாயுகத்தின் தர்மம் முதலிய குணங்கள் காணப்படும். திரேதா யுகத்தின் முதல் ௪00 - வருஷங்களாகிய சந்தியில் கிருதயுகத்தின் தர்மம் முதலிய குணங்க ளிருந்துகொண்டே யிருக்கும். அந்த சந்தி வருஷங்கள் முடிவானபிறகு அந்த யுகத்தின் சுவபாவமான தர்மம் முதலிய குணங்கள் மாத்திர மிருக்கும். இந்த சந்தி வருஷங்களைக் கழித்து மிச்சமுள்ள வருஷங் கள்தான் யுகமென்று சொல்லப்படுகின்றன. மற்ற யுகங்களுக்கும் இப் (17)
படியே சந்தி வருஷங்களை யறியவேண்டியது.

18. 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌹𑌰𑌾𑌗𑌮𑍇 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑍇 ॥

18. 1அவ்யக்தாத்-வ்யக்தய:-ஸர்வா:-ப்ரபவந்தி-அஹராகமே |
ராத்ரியாகமே-ப்ரலீயந்தே-தத்ர-ஏவ-அவ்யக்தஸஜ்ஞகே ||

𑌅𑌹𑌰𑌾𑌗𑌮𑍇	பகல் வரும்பொழுது
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍	அவ்யக்தத்திலிருந்து
𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌯𑌃	சராசரத் தோற்றங்களெல்லாம்
𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌿	வெளிப்படுகின்றன
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇	இரவு வரும்பொழுது
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑍇	அவ்யக்தமென்னும் பெயருடைய
𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇	அதனுள்ளேயே மறைகின்றன.

ப்ரஹ்மாவினுடைய பகற் காலத்தில் அதாவது விழிப்புக் காலத்தில் சராசரங்களாகிய தோற்றங்களெல்லாம் அந்த அவ்யக்தத்தினின்றும் வெளிப்படுகின்றன. ப்ரஹ்மாவுக்கு இரவு வரும்போது அதாவது தூக்க சமயத்திலே, அந்த அவ்யக்தமென்னும் பெயரையுடைய அதனுள்ளேயே அதாவது நித்திராவஸ்தையிலுள்ள பிரஜாபதியினிடத்திலேயே அவைகள் மறைகின்றன.

(1) அவ்யக்தாத்-ப்ரஜாபதியினுடைய தூக்க நிலைமை (மாயை அன்று) (சங்கரர்); காரணத்திலிருந்து (ஸ்ரீதரர்); சதுர்முக ப்ரஹ்மாவினுடைய தேகத்திலிருந்து (ராமாநுஜர்); விஷ்ணுவினிடத்திலிருந்து (மத்வர்).

(சங்கரர்) ப்ரஜாபதியினுடைய பகலிலும் இரவிலும் எது நிகழ்கின்றதோ அது இதில் சொல்லப்படுகின்றது.

(ஸ்ரீதரர்) முந்திய சுலோகத்தில் "யதஹ:=எந்தப் பகலோ" என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? இந்த இடத்தில் அந்தப் பிரம்மாவினுடைய பகலென்றும் இரவென்றும் கிரகித்துக்கொள்ளவேண்டியது. (18)

---

19. 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌃 𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌤𑍇 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇𑌽𑌵𑌶𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍍𑌯𑌹𑌰𑌾𑌗𑌮𑍇 ॥

19. பூதக்ராம:-ஸ:-ஏவ-அயம்-பூத்வா-பூத்வா-ப்ரலீயதே |
ராத்ரியாகமே-அவஶ:(1)-பார்த-ப்ரபவதி-அஹராகமே ||

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 ।	ஓ! பார்த்தா!
𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌃	(முன்கல்பத்திலிருந்த) அதே இந்த பூதவர்க்கங்கள் தான்

அவஶ: பூத்வா பூத்வா அவசமாய்ப் பிறந்து பிறந்து
ராத்ர்யாகமே இரவு வரும்பொழுது
ப்ரலீயதே மறைகின்றது
அஹராகமே பகல் வரும்பொழுது
ப்ரபவதி வெளிப்படுகின்றது

ஓ! பார்த்தா! (ஸ்தாவர ஜங்கமங்களாகிய எந்த பூதவர்க்கங்கள் முன் கல்பத்திலிருந்தனவோ) அதே இந்த (இப்பொழுதுள்ள) பூதவர்க்கங்கள் தான் அவசமாய்ப் பிறந்து பிறந்து (ப்ரஹ்மாவுக்கு) இரவு வரும் காலத்தில் அழிந்து மறைந்துபோய் பகல் வரும் காலத்தில் அவசமாகவே உண்டாய் வெளிப்படுகின்றன.

---

(1) அவஶ:=கர்மாதீனமாய் (ராமாநுஜர்); பகவத் அதீனமாய் (இராகவேந்திரர்) அத்-9, சுலோ-8 பார்க்க. (ஸ்வா)

(சங்கரர்) ஒருவன் தான் செய்யாதவற்றின்பயனை அநுபவிக்கிறான், தான் செய்தவற்றின் பயனை அநுபவிப்பதில்லை, என்று சொல்லும் குதர்க்கத்தை நீக்கும்பொருட்டும், பந்தம் மோக்ஷம் இவைகளைப்பற்றி சாஸ்திரப் பிரவிருத்திக்குப் பயன் உண்டு என்பதைக் காட்டும்பொருட்டும், அவித்யை முதலிய தோஷங்களை மூலமாகவுடைய தர்மாதர்மமென்னும், கர்மத்தின் வலிமையினால் சுதந்தரமற்ற பிராணி வர்க்கமானது, பிறந்து பிறந்து இறக்கின்றதாகையால், அவற்றிற்கு ஸம்ஸாரத்தில் வைராக்கியத்தை உண்டாக்கும்பொருட்டும் பகவான் இந்த சுலோகத்தை அருளிச் செய்கிறார்.

ஸ்தாவரஜங்கமங்களாகிய எந்த பூதவர்க்கமானது, ப்ரஹ்மாவினுடைய முந்தின கல்பத்திலே இருந்ததோ, அதேதான் இப்பொழுது உள்ளதும். இது வேறான தன்று. கல்பமென்பது ப்ரஹ்மாவினுடைய ஒரு நாள். ப்ரஹ்மாவுக்கு பகல் வரும்பொழுது அவசமாக வெளிப்பட்டு பகலினுடைய முடிவிலே மறுபடியும் அவசமாகவே மறைந்துபோகின்றது, அதாவது அழிந்துபோகின்றது.

(ராமாநுஜர்) ஐசுவரியத்தைக் கோரி பிரம்மலோகம் முதலிய லோகங்களை யடைந்தவர்கள், அவர்களடைந்த அந்த லோகமும் அந்த லோகத்திலுள்ள ஐசுவரியமும் நாசமடைகிறபடியால் மறுபடி பூலோகத்தில் ஜநநமடைவார்களென்பது இதினால் வெளியிடப்பட்டது.

(ஸ்வா) இந்த அத்தியாயம், 16-முதல் 19-வரையிலுள்ள சுலோகங்களினால் தெரிந்துகொள்ளவேண்டிய தென்னவென்றால், சகல தேவதைகளுக்கும் முந்தியவரும், அவர்களுக்கு நியாமகருமான பிரஹ்மாவுக்கும்

கூட கால அளவு ஏற்பட்டிருக்கிறதினாலும், சிருஷ்டியி லடங்கிய சகல லோகத்திற்கும் மேலானதாகிய பிரம்மலோகமுங்கூட அழியத்தக்கதா யிருக்கிறதினாலும், மற்றப்பிராணிகளுடையவும் மற்ற லோகங்களுடையவும் கதி இப்படிப்பட்டதென்பது தானாய் விளங்கும். ஆகையா லிப்படிப்பட்ட பிரபஞ்சத்தில் நித்தியமான அல்லது அழிவற்றப் பிரயோசனமில்லையென்று விரக்தியை யடைந்து, சாசுவதமான மோக்ஷமடைய முயற்சி செய்ய வேண்டுமென்பதே.

---

20. 𑌪𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑌾𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ।
𑌯𑌸𑍍𑌸𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

20. பர:-தஸ்மாத்-து-பாவ:-அந்ய:-அவ்யக்த:-அவ்யக்தாத்-ஸநாதந:|
ய:-ஸ:-ஸர்வேஷு பூதேஷு-நஶ்யத்ஸு-ந-விநஶ்யதி||

𑌤𑍁	ஆனால்
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍	அந்த அவ்யக்தத்தைக்காட்டிலும்
𑌅𑌨𑍍𑌯𑌃	விலக்ஷணமாயும்
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌃	இந்திரியங்களுக்கு காணப்படாத அவ்யக்தமாயும்
𑌪𑌰𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃	உத்கிருஷ்டமாயும், நித்தியமாயும்
𑌯𑌃 𑌭𑌾𑌵𑌃	எந்த வஸ்து உள்ளதோ
𑌸𑌃	அது
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁	எல்லா பூதங்களும்
𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁	நாசமடைந்தாலும்
𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿	நாசமடைகிறதில்லை.

ஆனால் முன்சொன்ன அந்த ப்ரகிருதியாகிய அவ்யக்தத்தைக் காட்டிலும் விலக்ஷணமாயும், அதாவது வேறானதாயும் இந்திரியங்களுக்கு காணப்படாத அவ்யக்தமாயும், உத்கிருஷ்டமாயும், எக்காலத்திலு முள்ளதாயும் இருக்கிற பொருள் அதாவது பரப்ரஹ்மம் எதுவோ: அது ஸகல பூதங்களும் அழிந்துபோகும்பொழுதும் தான் நாசத்தை அடைவதில்லை.

(சங்கரபாஷ்யம்) "𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" என்பது முதலிய சுலோகங்களினால், முன் எந்த அழியாப் பொருளானது விவரித்துச் சொல்லப்பட்டதோ, அதை அடைவதற்கு வழியானது குறிப்பித்துக் காட்டி, உணர்த்தப்பட்டது. இனி இப்பொழுது அந்த அழியாப்பொருளையே இன்ன

தென்று குறிப்பிட்டுக் காட்டி உணர்த்தவேண்டும் என்னும் கருத்தோடு, இந்த யோகமார்க்கத்தால் அடையவேண்டியது இன்னது என்று பகவான் இதில் அருளிச் செய்கிறார்.

ப்ராஹ்மமானது எதைக் காட்டிலும் வேறானது என்றால், முன் சொன்ன அந்த அவ்யக்தத்தைக் காட்டிலும். “து”, சப்தம், இங்கு சொல்லக் கருதிய அழியாப் பொருளாகிய ப்ராஹ்மமானது, அவ்யக்தத்தினும் வேறானது என்னும் விசேஷணத்தைப் பொருளாக வுடையது. “பாவ:” என்பது அக்ஷரமென்னும் பெயருடைய பரப்ரஹ்மம்; அது அவ்யக்தத்தைக் காட்டிலும் வேறாயிருந்தாலும் ஒரே தன்மை உடையதாகவிருக்கலாம் என்னும் சந்தேக முண்டாகலாம். அதை நீக்கும்பொருட்டு, “அந்ய:” = விலக்ஷணமானது என்று சொல்லப்பட்டது. “அவ்யக்த:” என்றால் இந்திரியங்களுக்கு எட்டாதது. “பரஸ்தஸ்மாத்” = “அதனினும் வேறானது” என்று சொல்லப்பட்டதே, எதனினும் வேறானது? பூதவர்க்கத்திற்கு வித்தாய் முன்சொன்ன அவித்யை ஆகிய அவ்யக்தத்தினும் வேறானது. ப்ராஹ்மமானது இதைவிட முற்றும் வேறான பொருள் என்பது கருத்து. எது என்றைக்கு முள்ளதோ அது, ப்ராஹ்மா முதலிய ஸகல பூதங்களும் அழிந்துபோகும்பொழுதும், தான் அழிவதில்லை. அவ்யக்தம் வெளிப்படையாக இல்லாதது.

(ராமானுஜர்) 20-21, சுலோகங்களுக்கு ஒரு அந்வயம். தஸ்மாத் அவ்யக்தாத்= அந்த அசேதன பிரகிருதியைக்காட்டிலும் (பிரம்மாவினுடைய தேகத்தைக் காட்டிலும்) பர:= புருஷார்த்தமாகையால் உத்தமமாயும், அந்ய:=ஞானகாரத்தினாலே வேறாயும், அவ்யக்த:=ஒரு பிரமாணத்தினாலும் தெரியக்கூடாததினாலே காணப்படாததாயும், ஸநாதந:= நித்தியமாயுமிருக்கிற, ய:பாவ:=எந்த வஸ்துவானது, ஸர்வேஷு பூதேஷு= காரிய காரணங்களுடன் கூடிய பஞ்சமகாபூதம் முதலியவை, நச்யத்ஸு= நாசமடையுங்காலத்திலும், ந விநச்யதி=நாசமடைகிறதில்லையோ, ஸ:= அந்தச் சேதன பிரகிருதியான புருஷன், அவ்யக்த: அக்ஷர இத்யுக்த: = அக்ஷரனென்று சொல்லப்படுகிறான். தம்=அவனை, பரமாம் கதிம் = பிரகிருதி விமுக்தாத்ம ஸ்வரூபமாகிய பரமமான கதியென்று, ஆஹு:=வேதத்தை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். யம்=எந்தப் பிரகிருதி விமுக்தமான (ஜீவ) ஆத்மசுவரூபத்தை, ப்ராப்ய=அடைந்து, ந நிவர்த்தந்தே = திரும்புகிறதில்லையோ (புநர்ஜநந மடைகிறதில்லையோ), தத்=அந்த சுவரூபம், மம=எனக்கு, பரமம் தாம=ஏவுதலுக்கு முக்கியமான பாத்திரமானது. அதாவது மற்ற ஜடசேதனங்களும் என்னுடைய ஏவுதலுக்குப் பாத்திரமானாலும், பிர

கிருதி விமுக்தாத்மா, என்னுடைய ஏவுதலுக்கு முக்கிய பாத்திர மென்பது கருத்து.

(ஶ்ரீ,வி) * தஸ்மாத்வ்யக்தாத்=அந்த பூதக்கூட்டங்களைக் காட்டிலும், அந்ய:=விலக்ஷணனும், பாவ:=சுவதந்திரனும், பர:=உத்தமனும், ஸநாதந: = அநாதியாயுமிருக்கிற, ய: அவ்யக்த:=எந்த பகவானானவர், ஸர்வேஷு - பூதேஷு=சகல பூதங்களும் நஶ்யத்ஸு = நசித்தபோதிலும், ந விநஶ்யதி=நாசமடைகிறதில்லையோ, ஸ:=அவன்தான், அக்ஷர இத்யுக்த:=அக்ஷரனென்று சொல்லப்படுகிறான். தம்=அவனை, பரமாம் - கதிம்=அடையவேண்டிய உத்தமமான ஸ்தானமென்று, ஆஹு:=ஞானிகள் சொல்லுகிறார்கள். யம்=எதை, ப்ராப்ய=அடைந்து, ந நிவர்தந்தே=திரும்புகிறதில்லையோ, தத்=அதானது, மம=என்னுடைய, பரமம் - தாம=சிரேஷ்டமான ஸ்வரூபம். (20)

* 20-21, சுலோகங்களுக்கு ஒரு அந்வயம்.

---

21. அவ்யக்தோऽக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் கதிம் |
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம ||

21. அவ்யக்த:=அக்ஷர:=இதி=உக்த:=தம்=ஆஹு:
பரமாம்=கதிம்=யம்=ப்ராப்ய=ந=நிவர்தந்தே
=தத்=தாம=பரமம்=மம=

ய:	எந்த (ப்ரஹ்மமானது)
"அவ்யக்த:, அக்ஷர:"	"அவ்யக்தம், அக்ஷரம்"
இதி உக்த:	} என்று சொல்லப்பட்டதோ
தம்	அதை அந்த (ப்ரஹ்மத்தை)
பரமாம் கதிம்	உயர்ந்த கதியாக
ஆஹு:	(வேதங்கள்) சொல்லுகின்றன
யம்	எதை
ப்ராப்ய	அடைந்து
ந நிவர்தந்தே	திரும்பிவருகிறதில்லையோ
தத்	அது
மம	என்னுடைய
பரமம் தாம	மேலான இடம் (பரமபதம்.)

எவர் காணப்படாதவரென்றும், நாசரகிதரென்றும், வேதத்தில் சொல்லப்படுகிறாரோ, அவரை பரம புருஷார்த்தமாக வேதங்கள் சொல்லுகின்றன. எதை யடைந்து திரும்புகிறதில்லையோ, (மறுபடி ஜனன மடைகிறதில்லையோ) அந்த உத்தமமான சுவரூபமானது என்னுடையது. (21)

22. 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸 𑌪𑌰𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍 ॥

22. புருஷ:=ஸ:=பர:=பார்த்த=பக்த்யா=லப்ய:=
து=அநந்யயா=யஸ்ய=அந்தஸ்தாநி=
பூதாநி=யேந=ஸர்வம்=இதம்=ததம்=

𑌪𑌾𑌰𑍍𑌥 !	ஓ ! பார்த்தா !
𑌯𑌸𑍍𑌯	எவனுக்குள்ளே
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	பிராணிகளெல்லாம்
𑌅𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌿	இருக்கின்றனவோ
𑌯𑍇𑌨	எவனாலே
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌇𑌦𑌂	இந்த சகலப் பிரபஞ்சமும்
𑌤𑌤𑌂	வியாபிக்கப்பட்டிருக்கிறதோ
𑌸𑌃 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃	அந்தப் பரமபுருஷனானவன்
𑌅𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 *	வேறொன்றில்லாத
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾	பக்தியினாலேயே
𑌲𑌭𑍍𑌯𑌃	அடையத்தக்கவன்.

ஓ! பார்த்தா! பிராணிகள் எவனுக்குள்ளே (அடங்கி) இருக்கின்றனவோ, எவனாலே இந்த சகலப்பிரபஞ்சமும் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தப் பரமபுருஷன் வேறு பற்றில்லாத பக்தியினாலே அடையத்தக்கவன்.

(ஸ்வ) இந்த சுலோகத்திற்கு (ரா) பரமாத்ம பரமாயும் முந்திய சுலோகத்திற்கு முக்தாத்மபரமாயு மர்த்தஞ்செய்திருக்கிறார். (22)

* (ரா) ஆத்மவிஷயமான.

---

23. 𑌯𑌤𑍍𑌰 𑌕𑌾𑌲𑍇 𑌤𑍍𑌵𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚𑍈𑌵 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 ।
𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥

23. யத்ர - காலே - து - அநாவ்ருத்திம் - ஆவ்ருத்திம் - ச - ஏவ - யோகிந: - ப்ரயாதா: - யாந்தி - தம் - காலம் - வக்ஷ்யாமி - பரதர்ஷப.

ஹெ ஹாரதஷூஹ	ஓ! பரதரிற் சிறந்தவனே!
யத்ரகாலெது *	எந்தக்காலத்தில்
ப்ரயாதாஃ	(தேகத்தைவிட்டு) போன
யொகிநஃ †	யோகிகள்
அநாவ்ருத்திம்	அபுனர் ஜனனத்தையும் (திரும்பி வராமையும்)
ஆவ்ருத்திம்செவ	புனர்ஜனனத்தையும் (திரும்பிவருதலையும்)
யாந்தி	அடைகிறார்களோ
தம் காலம் ‡	அந்தக்காலத்தை
வக்ஷ்யாமி	சொல்லுகிறேன்.

ஓ! அர்ச்சுனு! எந்தக்காலத்தில் தேகத்தைவிட்டுப்போகிற யோகிகள் புனர் ஜன்மத்தை யடையார்களோ, (எந்தக்காலத்தில் தேகத்தைவிட்டுப் போகிற யோகிகள்) புனர் ஜனனத்தை யடைவார்களோ, அந்தக் காலத்தைச் சொல்லுகிறேன் கேள்.

* (ஸ்ரீ) (ரா) (உ) (மீ,வி) காலாபிமானி தேவதைகள் வாசஞ்செய்யப் பட்ட உலகங்களின் மார்க்கமாய்.

† (ஸம்) (ஸ்ரீ) (ரா) ஞானயோகிகள், கருமயோகிகள்.

‡ (ஸ்ரீ) (ரா) (உ) (மீ,வி) காலாபிமானி தேவதைகள் வாசஞ்செய்யப் பட்ட உலகங்களின் மார்க்கத்தை.

---

24. அக்நிர்ஜ்யோதிரஹஃ ஶுக்லஃ ஷண்மாஸா உத்தராயணம் ।
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநாஃ ॥

24. அக்நிஃ - ஜ்யோதிஃ - அஹஃ - ஶுக்லஃ - ஷண்மாஸாஃ - உத்தராயணம் - தத்ர - ப்ரயாதாஃ - கச்சந்தி - ப்ரஹ்ம - ப்ரஹ்மவிதஃ - ஜநாஃ -

அக்நிஃ §	அக்னி
ஜ்யோதிஃ ¶	ஒளி
அஹஃ ‖	பகற்காலம்
ஶுக்லஃ +	சுக்கிலபக்ஷம்.

§ - ¶ (மீ,வீ) அர்ச்சிஸ் என்கிற தேவதை.

‖ (மீ,வி) அபிசித் தேவதை, அதாவது, மத்தியானகாலத்திற்கு அபிமானி தேவதையுள்பட பகல்காலத்திற்கு அபிமானிதேவதை.

+ (மீ,வி) பௌர்ணமியின் அபிமானிதேவதை யுள்பட சுக்கிலபக்ஷாபிமானி தேவதை.

உத்தராயணம் ஷண்மாஸாஃ	*	உத்தராயண ஆறுமாதங்கள்
தத்ர		அதில்
ப்ரயாதாஃ		போன
ப்ரஹ்மவிதஃ		பிரம்மஞானிகளான
ஜநாஃ		ஜனங்கள்
ப்ரஹ்ம		பரப்பிரம்மத்தை
கச்சந்தி		அடைகிருர்கள்

அக்கினிக்கும், பிரகாசத்திற்கும், பகற்காலத்திற்கும், சுக்கிலபக்ஷத்திற்கும், ஆறுமாதங்களடங்கிய உத்தராயணத்திற்கும், அபிமானி தேவதைகளுடைய லோகங்களின் மார்க்கமாய்ச் செல்லும் ஞானிகள் பரம்பிரம்மத்தை (கிரமமாய்) அடைகிருர்கள்.

(ஶம்) (ஸ்ரீ) உபாசகர்கள் கிரமக்கிரமமாய் அந்தந்த லோகங்களை யடைந்து, பிறகு பிரம்மத்தை யடைகிருர்கள். இவர்கள்தான் கிரமமுக்தியை யடையப்பட்டவர்கள்.

* (உ) (மீ, வி) உத்தராயணத்திலுள்ள ஆறுமாதங்களில் ஒவ்வொரு மாசாபிமானி தேவதைகளுடைய லோகத்தையும், பிறகு உத்தராயணுபிமானி தேவதையின் லோகத்தையும். (மீ, வீ) விஷுவ-அபிமானி தேவதையுங்கூட இதில் சேர்ந்ததாக கிரகிக்கத்தக்கது.

---

25. தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ணஃ ஷண்மாஸா தக்ஷிணாயநம் |
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்த்ததே ||

25. தூமஃ = ராத்ரிஃ - ததா - க்ருஷ்ணஃ - ஷண்மாஸாஃ - தக்ஷிணாயநம் - தத்ர - சாந்த்ரமஸம் - ஜ்யோதிஃ - யோகீ - ப்ராப்ய - நிவர்த்தே -

தூமஃ		புகை
ராத்ரிஃ		இரவு
ததா		அப்படியே
க்ருஷ்ணஃ		கிருஷ்ணபக்ஷம்
தக்ஷிணாயநம் ஷண்மாஸாஃ		தெக்ஷிணுய ஆறுமாதங்கள்
தத்ர		அதில்
(ப்ரயாதாஃ)		போன
யோகீ		யோகியானவன்
சாந்த்ரமஸம் ஜ்யோதிஃ		சந்திரனுடைய ஒளியை

ப்ராப்ய	அடைந்து
நிவர்த்ததே	திரும்பி வருகிறான்

புகைக்கும், இரவுக்கும், கிருஷ்ணபக்ஷத்திற்கும், தக்ஷிணாயனத்திற்கும், அபிமானியான தேவதைகளுடைய லோகங்களின் மார்க்கமாய்ச் செல்லும் யோகியானவன், சந்திரப்பிரகாசமுள்ள சுவர்க்கலோகத்தை யடைந்து திரும்புகிறான். (புநர் ஜந்மத்தை யடைகிறான்.)

(ரா) இந்த தூமாதிமார்க்கத்தில் பிதுருலோகாதிகளும் சேர்ந்ததாகக் கொள்ளவேண்டியது.

(ஸ்ரீ, வீ) முந்திய 24-வது சுலோகத்திற் சொன்ன அர்ச்சிராதி மார்க்கத்தில் போகிறவன் யாரென்றால், அந்தியகாலத்தில் பிரம்மத்தை ஸ்மரித்துக்கொண்டு தேகத்தை விடுகிறவன். அவன் மோக்ஷமடையத் தகுந்தவனே. முந்திய 25-வது சுலோகத்திற்சொன்ன தூமாதிமார்க்கத்தில் போகிறவன் யாரென்றால், கருமயோகியாயிருந்து அந்தியகாலத்தில் பிரம்மத்தை ஸ்மரிக்காமல் தேகத்தை விடுகிறவன். அவன் சுவர்க்காதி லோகங்களை யடையத்தகுந்தவனே. இஷ்டமான காலத்திலும், இஷ்டமான மார்க்கத்திலும், பிரம்மலோகம் முதலிய லோகங்களில் சஞ்சரிக்கிற அல்லது, அந்தந்த லோகங்களில் வாசஞ்செய்கிற மற்ற ஞானிகள் கருமிகள் இவர்கள் இந்த இரண்டு மார்க்கங்களிலொன்றிற்றான் போகவேண்டுமென்ப தவசியமல்ல. (25)

---

26. ஶுக்லக்ருஷ்ணே க³தீ ஹ்யேதே ஜக³த꞉ ஶாஶ்வதே மதே |
ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாவர்ததே புந꞉ ||

26. சுக்லக்ருஷ்ணே - கதீ - ஹி - ஏதே - ஜகதஃ - சாச்வதே - மதே - ஏகயா - யாதி - அநாவ்ருத்திம் - அந்யயா - ஆவர்த்ததே - புநஃ -

ஶுக்லக்ருஷ்ணே *	வெளிச்சமும், இருட்டும் ஆகிய சுக்கில கிருஷ்ணபக்ஷம் முதலியவற்றின் அபிமானி தேவதைகளின் உலகங்களான
ஏதே ஹி, க³தீ	இந்த பிரசித்தமான வழிகள்
ஜக³த꞉	(ஞானிகள் கருமிகளான அதிகாரிகளடங்கிய) ஜகத்திற்கு
ஶாஶ்வதே மதே	சாசுவதமானவையென் றெண்ணப்பட்டிருக்கின்றன
ஏகயா	(முந்திய) ஒரு மார்க்கத்தினாலே
அநாவ்ருத்திம்	அபுநர் ஜன்மத்தை
யாதி	அடைகிறான்
அந்யயா	(பிந்திய) மற்றொரு மார்க்கத்தினாலோ

வாநஃ மறுபடியும்
ஆவதுதெ ஜன்மத்தையடைகிறான்.

(முன் சொல்லப்பட்ட) சுக்கில, கிருஷ்ணபக்ஷம் முதலிய அபிமானி தேவதைகளின் உலகங்களாகிய மார்க்கங்கள் ஞானிகளுக்கும் கருமிகளுக்கும் (தனித்தனியாய்) சாசுவதமா யுள்ளனவென்பது என் அபிப்பிராயம். முந்திய மார்க்கத்தில் போகிற ஞானிகள் புநர்ஜன்மத்தை யடைகிறதில்லை. பிந்திய மார்க்கத்தில் போகிற ஸகாம கருமிகள் புநர்ஜன்மத்தை யடைகிறார்கள்.

* (ஸ) ஶுக்ல=ஞானப்பிரகாசம். க்ருஷ்ண—அக்ஞானம் (ஸ்ரீ) ஶுக்ல = பிரகாசமுள்ளது. க்ருஷ்ண = இருட்டுள்ளது.

(வ்யா) இந்த அத்தியாயத்தின் 24-வது சுலோகத்தில் பிரகாசம் பொருந்திய (அர்சிராதி) அர்ச்சிராதி மார்க்கமொன்றும் 25-வது சுலோகத்தில் அந்தகாரம்பொருந்திய (தூமாதி) தூமாதி மார்க்கமொன்றும் சொல்லி இந்த சுலோகத்தில் அந்த விரண்டு மார்க்கங்களில் போகத்தக்கவர்கள் இன்னார், அவர்கள் அடையும்பலன் இன்னதென்று சொல்லப்பட்டது. (24-சு-த்தில்) ப்ரஹ்மவிதோஜநாஃ—பிர்ம்மஞானிகளான ஜனங்களென்றும் (25-சு-த்தில்) யோகீ—யோகி என்றும் சொல்லியிருக்கிறதினாலே வியாக்கியாதாக்கள் அவர்களை முறையே ஞானியென்றும் கருமயோகியென்றும் அர்த்தஞ்செய்திருக்கிறார்கள். அத்வைத சித்தாந்தப்படிக்கு விதேக கைவல்லியமாகிய சத்தியோ முக்தியடையத்தகுந்த பரமார்த்த ஸந்நியாஸியாகிய ஜீவன்முக்தனானவன் மேற்கண்ட அர்ச்சிராதி மார்க்கத்தில் போகவேண்டியவனாகிறானா? (க்ஷாந்த்ர கர்மி) பாபபுண்ணிய மிசிரகருமிகள் மேற்கண்ட இரண்டு மார்க்கங்களில் எந்த மார்க்கத்திலாவது போக யோக்கியர்களாகிறார்களா? என்கிற சந்தேகம் ஜனிக்கலாம். சத்தியோ முக்தியென்பது ஜீவன் முக்ததசையிலிருந்து பிராரப்ததேகம் போனதும் விதேக கைவல்லியமடைவது. இவனுக்குப் போகவேண்டிய மார்க்கமென்பதேயில்லை. "யத்ரயத்ரம்ருதோஜ்ஞாநீயேநவாகேநவர்த்மநா। யதாஸர்வகதம்வ்யோமதத்ர தத்ரலயம்கதஃ। கடாகாஶமிவாத்மாநம்விலயம்வேத்திதத்வதஃ ஸகச்சதி நிராலம்பம்ஜ்ஞாநாலோகம்ஸமந்ததஃ ॥ — ஞானியானவன் எந்தெந்த விடத்தில் எவ்விதமாய் மரணமடைந்தாலும் எங்கும் பரவிய ஆகாசம்போல் அந்தந்த விடத்திலேயே லயமடைகிறான். வாஸ்தவமாய் கடாகாசம் போல் (கடமுடைந்தவுடனே கடாகாசமானது மகாகாசத்தில் லயமடைவதுபோல்) ஆத்மாவானவன் லயமடைகிறதாக அறியத்தக்கது, அவன் நிராலம்பமாகிய (தனக்கு ஆசிரயமான வஸ்துவையுடையவ னல்லாதவனாய்) ஞானப்பிரகாசத்தை எவ்விடத்திலு மடைகிறான்." (பைங்கலோபநிஷத் நாலாவதத்தியாயம் பார்க்க) (க்ரமமுக்தி) கிரமமுக்தியடையத் தகுந்தவனும் நிஷ்காம கருமத்தினால் சித்தசுத்தி துவாரா ஞானமடைந்தவனு மெவனோ அவன்தான் அர்ச்சிராதி மார்க்கமாய்ப் போகிறவன். இவ் விருவகை முக்தி

விஷயமாய் வராஹோபநிஷத் நான்காவது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறதாவது :

" ஶுகோ முக்தோ வாமதேவோ(அ)பி முக்தஸ்தாப்யாம் விநா முக்தி
பாஜோ நஸந்தி। ஶுகமார்கம் யே(அ)நுஸரந்தி தீராஃ ஸத்யோ
முக்தாஸ்தே பவந்தீஹ லோகே। வாமதேவம் யே(அ)நுஸரந்தி நித்யம்
ம்ருத்வா ஜநித்வா ச புநஃ புநஸ்தத்। தே வை லோகே க்ரமமுக்தா
பவந்தி யோகேந ஸாங்க்யேந கர்மபிஃ ஸத்த்வயுக்தாஃ। ஶுக
ஶ்ச வாமதேவஶ்ச த்வே ஸ்ருதீ தேவநிர்மிதே। ஶுகோ விஹங்கமஃ
ப்ரோக்தோ வாமதேவஃ பிபீலிகா। அதத்வ்யாவ்ருத்திரூபேண
ஸாக்ஷாத்விதிமுகேந வா। மஹாவாக்யவிசாரேண ஸாங்க்ய
யோகஸமாதிநா। விதித்வா ஸ்வாத்மநோ ரூபம் ஸம்ப்ரஜ்ஞாதஸமா
திதஃ। ஶுகமார்கேண விரஜாஃ ப்ரயாந்தி பரமம் பதம்। யமாத்யா
ஸநஜாயாஸ ஹடாப்யாஸாத் புநஃ புநஃ। விக்நபாஹுல்ய
ஸஞ்ஜாத அணிமாதிவஶாதிஹ। அலப்த்வாபி பலம் ஸம்யக் புந
ர்பூத்வா மஹாகுலே। புநர்வாஸநயைவாயம் யோகாப்யா
ஸம் புநஶ்சரந் அநேகஜந்மாப்யாஸேந வாமமார்கேண வை ஶநைஃ
। ஸோ(அ)பி முக்திம் ஸமாப்நோதி தத்விஷ்ணோஃ பரமம் பதம்।
த்வாவிமாவபி பந்தாநௌ ப்ரஹ்மப்ராப்திகரௌ ஶிவௌ। ஸ
த்யோமுக்திப்ரதஶ்சைகஃ க்ரமமுக்திப்ரதஃ பரஃ ॥ சுகர் முக்தர். வாமதேவர் முக்தர். அவர்களைத்தவிர முக்தியடைந்தவர்களில்லை. (இவ்விருவருடைய மார்க்கத்தைத்தவிர முக்திக்கு வேறே மார்க்கமில்லை யென்பது தாத்பரியம்) இந்த லோகத்தில் சுகமார்க்கத்தை யெந்த தைரியசாலிகள் அனுசரிக்கிறார்களோ அவர்கள் ஸத்தியோ உடனே (என்றால், இந்தத் தேகம்போன உடனே) முக்தர்களாகிறார்கள். இந்த லோகத்தில் வாமதேவ மார்க்கத்தை எப்போதும் அனுசரிக்கிறவர்கள் மறுபடி மறுபடி பிறப்பையடைந்து சத்துவத்தோடு கூடின யோகமார்க்கங்களினாலேயும் ஸாங்கிய (ஞான) மார்க்கங்களினாலேயும் கருமங்களினாலேயும் கிரமமுக்தர்களாகிறார்கள். சுகமார்க்கம் வாமதேவ மார்க்கமென இரண்டு மார்க்கங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டன. சுகமார்க்கமானது பக்ஷிமார்க்கம் (அதாவது, குறித்த விடத்திற்கு பக்ஷியானது அதிசீக்கிரம் பறந்துபோவதுபோல் தேகம் போனவுடனே முக்தியடைவது) என்றும், வாமதேவ மார்க்கமானது எறும்பு மார்க்கம் (அதாவது, குறித்தவிடத்திற்கு எறும்பு போகவேண்டுமானால் ஊர்ந்துபோவதுபோல ஒவ்வொரு லோகமாகபோய் கடைசியில் மறுபிறப்பற்ற பிர்மலோகம் வைகுண்டம் முதலியவைகளையடைவது) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விதிவாக்கியங்களினாலேயாவது நிஷேத வாக்கியங்களினாலேயாவது அஸம்பிரக்ஞா சமாதியினாலேயாவது தன் ஆத்ம சுவரூபத்தை யறிந்து நிர்மலமானவர்கள் சுகமார்க்கத்

னாலே பரமபதத்தை (மோக்ஷத்தை) அடைகிறார்கள். யமம் முதலிய ஆசனங்களினாலேயுண்டாகிற ஆயாசமாகிய அப்பியாசத்தினாலே அடிக்கடி அநேக தடைகளினா லுண்டான அணிமாதி (சித்தி) களுக்குள்பட்டவனாப் நல்லபலனை யடையாமல் (அதாவது, அர்ச்சிராதி மார்க்கங்களாகிய தேவதைகளுடைய லோகத்தை யடைந்து) மறுபடி நல்லகுலத்தில் பிறந்து முந்திய (ஜன்மத்தின்) வாசனையினாலேயே மறுபடி யோகாப்பியாசத்தினால் வாமதேவ மார்க்கத்தினாலே அந்த விஷ்ணுவினுடைய பரமபதமாகிய முக்தியை யடைகிறான். பிரம்மபிராப்தியை கொடுக்கத்தக்கவும் மங்களகரமானவும் இந்த இரண்டு மார்க்கங்களிருக்கின்றன. இவைகளி லொன்று சத்தியோ முக்தியையும் மற்றொன்று கிரமமுக்தியையும் கொடுக்கத்தக்கது."

இதில்கண்ட வாமதேவமார்க்கம்தான் அர்ச்சிராதி மார்க்கமென்று கொள்ளத்தக்கது. தூமாதி மார்க்கமானது பலாபேக்ஷையுடன் கருமம் செய்த கருமயோகி செல்லும்மார்க்கம், அவர்கள் அந்தக் கருமபலனை அனுபவித்தவுடன் தாழ்ந்த ஜன்மங்களை யடைவார்கள். க்ஷுத்திர கருமிகள் (பாபபுண்ணிய மிசிரகருமம் செய்தவர்கள்) சுவர்க்காதி லோகங்களையாவது நரகாதிலோகங்களையாவது அடையாமல் அந்தந்த கரும பலனுக்குத் தக்கபடி இந்த உலகத்தில் மறுபடிமறுபடி பிறப்பை யடைகிறார்கள். (26)

---

27. நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந ।
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந ॥

27. ந - ஏதே - ஸ்ருதீ - பார்த்த - ஜாநன் - யோகீ - முஹ்யதி - கஃ - ச - ந - தஸ்மாத் - ஸர்வேஷு-காலேஷு - யோகயுக்தஃ - பவ - அர்ஜுந -

பார்த்த	ஓ! குந்திபுத்ரா!
ஏதே ஸ்ருதீ	இந்த இரண்டு மார்க்கங்களையும்
ஜாநந்	அறிகிற
கஶ்சந யோகீ	(ஞான) யோகியான ஒருவனும்
ந முஹ்யதி *	மோகத்தை யடைகிறதில்லை
தஸ்மாத்	ஆகையினாலே
ஹே அர்ஜுந	ஓ! அர்ச்சுனா!
ஸர்வேஷு காலேஷு	எல்லாக்காலங்களிலும்
யோகயுக்தஃ †	(ஞான) யோகியாக
பவ	ஆகக்கடவாய்

ஓ! குந்திபுத்திரா! (அர்ச்சிராதி தூமாதி) இவ்விரண்டு மார்க்கங்களை யறிந்திருக்கிற ஞானயோகியான ஒருவனும் அக்ஞானத்தை யடைகிற தில்லை. ஆகையினாலே, ஓ! அர்ச்சுனா! எல்லாக் காலங்களிலும் ஞானயோகி யாகக்கடவாய். (என்றால், புநர்ஜனனத்தைக் கொடுக்கும்படியான காமிய கருமத்தைச் செய்யாதே யென்பது தாத்பரியம்.) (27)

* (ஸ்ரீ) சுவர்க்காதி சுகங்களை யபேக்ஷிக்காமல் பரமேசுவர நிஷ்டனாக வாகிறான். (ஸ்ரீ,வி) மரணகாலத்தில் பகவானை மறக்கிறதில்லை.

† (ரா) அர்ச்சிராதி மார்க்கங்களில் போகவேண்டுமென்கிற எண்ண மாகிய யோகத்துடன் கூடினவனாக. (ஸ்ரீ,வி) பக்தியோடு ஞானகருமம் இரண்டையு மனுஷ்டிக்கிறவனாக.

---

28. வேதேஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ தாநேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் | அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா யோகீ பரம் ஸ்தாநமுபைதி சாத்யம் ||

28. வேதேஷு = யஜ்ஞேஷு = தபஸ்ஸு = ச = ஏவ = தாநேஷு = யத் = புண்யபலம் = ப்ரதிஷ்டம் = அத்யேதி = தத்= ஸர்வம் = இதம் = விதித்வா = யோகீ = பரம் = ஸ்தாநம் = உபைதி = ச = ஆத்யம் =

வேதேஷு	வேதங்களை நன்றாக ஓதிய விடத்தும்
யஜ்ஞேஷு	யக்ஞங்களை ஸாங்கோபாங்கமாக அனுஷ்டித்த விடத்தும்
தப:ஸு	தபசுகளை நன்றாக செய்த விடத்தும்
தாநேஷு சைவ	தானங்களைச் செவ்வையாகக் கொடுத்த விடத்தும்
யத்	எந்த
புண்யபலம்	புண்ணிய பலனானது
ப்ரதிஷ்டம்	சொல்லப்பட்டிருக்கிறதோ
தத்ஸர்வம்	அந்த சகல பலனையும்
யோகீ	(ஞான) யோகியானவன்
அத்யேதி	அதிக்கிரமிக்கிறான் (இதைவிட மேலான பலனை யடைகிறான் அல்லது இது அற்ப பலமென்று நினைக்கிறான்)
(கிம்) ச	பின்னும்
இதம் விதித்வா *	இதைத் தெரிந்து
ஆத்யம்	மூலகாரணமான

வாஸ }
ஸாநம் } † உத்தமமான ஸ்தானத்தையும்
உபைதி அடைகிறான்.

வேதங்களிலேயும், யக்ஞங்களிலேயும், தபசுகளிலேயும், தானங்களிலேயும், எந்தெந்தப் புண்ணியபலன் சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த சகல பலனையும் ஞானயோகியானவன் அற்பமாக நினைக்கிறான். பின்னு மிதைத் தெரிந்து, மூலகாரணமானவும், உத்தமமானவும் உள்ள ஸ்தானத்தை யடைகிறான். (28)

* (பாஂ) இந்த அத்தியாயத்தில், அர்ச்சுனன் கேட்ட ஏழு கேள்விகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிற உத்தரங்களைத் தெரிந்து அநுஷ்டித்து. (ஸ்ரீ) எட்டு கேள்விகளுக்குச் சொல்லியிருக்கிற உத்தரங்களைத் தெரிந்து அந்தப்படி யநுஷ்டித்து ஞானியாய் (ரா) (ஏழாவது - எட்டாவது) இரண்டத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிற பகவானுடைய மகிமைகளை யறிந்து. (ஸ்ரீ,வி) அத்தியாத்ம முதலியவைகளையும், சுக்கிலகிருஷ்ண மார்க்கங்களையும் அறிந்து.

† (பாஂ) பிரம்மத்தை. (ஸ்ரீ) (ஸ்ரீ,வி) விஷ்ணுவினுடைய பரமபதமாகிய ஸ்தானத்தை.

இதி ஸ்ரீஹமவத்கீதா ஸூபநிஷத்ஸு ஹ்ரஹவித்யாயாம்
யொமமாஸ்த்ரெ ஸ்ரீ க்ருஷ்ணாஜுநஸம்வாதெ
அக்ஷரஹ்ரஹ்மயொமொ நாம
அஷ்டமொऽத்யாயஃ
ஸ்ரீ க்ருஷ்ணாய பரஹ்ரஹ்மணே நமஃ.

அக்ஷர பரப்பிரம்மயோக மென்கிற எட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

ஒன்பதாவது அத்தியாயம்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚.

1. 𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌤𑍇 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌽𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 ॥

1. இதம் - து . தே - குஹ்யதமம் - ப்ரவக்ஷ்யாமி - அநஸூயவே - ஜ்ஞாநம் - விஜ்ஞாநஸஹிதம் - யத் - ஜ்ஞாத்வா - மோக்ஷ்யஸே - அஶுபாத்.

𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚	பகவான் சொல்லுவது
𑌯𑌤𑍍	எதை
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 *	அறிந்து
𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 †	சம்சாரத்திலிருந்து
𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇	நீ விடுபடுவாயோ
(𑌤𑌤𑍍)	அப்படிப்பட்ட
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌂 §	அநுபவஞானத்தோடுகூடிய
𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 ‡	அதிரகசியமாயுள்ள
𑌇𑌦𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 ¶	இந்த ஞானத்தையே
𑌅𑌨𑌸𑍂𑌯𑌵𑍇 ‖	அசூயையற்ற (பொறாமையற்ற)
𑌤𑍇	உன்பொருட்டு
𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿	செவ்வையாய்ச் சொல்லுகிறேன்.

எதை யறிந்து சம்சார (பந்த)த்தி லிருந்து விடுபடுவாயோ, அப்படிப்பட்ட அதிரகசியமானவும், உபாசனையோடு கூடினவுமான இந்தப் பிரம்மஞானத்தை, அசூயையற்ற உன்பொருட்டு செவ்வையாய்ச் சொல்லுகிறேன்.

(ஶ்ரீ,வி) ஏழாவது அத்தியாயத்தின் கடைசியில் சொன்ன, ஸாதிபூதம்ஸாதியஜ்ஞம் - முதலிய பகவானுடைய மகிமைகள் இந்த அத்தியாயத்தில் விஸ்தரித்துச் சொல்லப்படுகின்றன. எட்டாவது அத்தியாயத்திலேயே ஏன் அவை சொல்லப்படவில்லை யென்றாலோ, அர்ச்சுனன், ஸாதிபூதம், ஸாதியஜ்ஞம், முதலியவை எவையென்று கேழ்க்காமல், அதிபூதம், அதியஜ்ஞம், முதலியவை எவையென்று கேட்டதினால்,

அவைகளுக்குமட்டும் அந்த எட்டாவது அத்தியாயத்தில் உத்தரஞ் சொல்லப்பட்டது.

* (ரா) அறிந்து அனுஷ்டித்து.

† (ரா) என்னை யடைய விரோதமான சகல பாபங்களி லிருந்தும்.

‡ (ஸ்ரீ) கு3ஹ்யம் - தருமஞானம், கு3ஹ்யதரம் - ஆத்மஸ்வரூபஞானம், கு3ஹ்யதமம் - பரப்பிரம்மஞானம்.

§ ((ஶம்) அநுபவஞ்ஞானத்தோடு கூடின. (ரா) உபாசனை இவ்விதமாகச் செய்யவேண்டுமென்பதை யறிவது விக்ஞானம். அதோடு கூடின. ஸ்ரீ,வி) விசேஷமா யறியவேண்டியதோடு கூடியிருக்கிற.

¶ (ஶம்) இதுவரையில் சொல்லிவந்ததும், இனி சொல்லப்போகிறதுமாகிய ஞானத்தை. (ரா) இத3ம் - பக்திரூபமான உபாசனையென்கிற பெயரையுடைய, ஜ்ஞாநம் - ஞானத்தை. (ஸ்ரீ,வி) இனி சொல்லப்போகிற ஞானத்தை.

|| (ஸ்ரீ) அடிக்கடி தன்மகிமையையே கிருஷ்ணசுவாமி சொல்லிக்கொள்ளுகிறாரென்று பொறுமைகொள்ளாத. (ரா) பகவான் சொல்லுகிற அவருடைய மகிமைகள் அவ்வளவும் வாஸ்தவமென்று நம்பியிருக்கிற.

---

2. ராஜவித்3யா ராஜகு3ஹ்யம் பவித்ரமித3முத்தமம் |
ப்ரத்யக்ஷாவக3மம் த4ர்ம்யம் ஸுஸுக2ம் கர்துமவ்யயம் ||

2. ராஜவித்3யா = ராஜகு3ஹ்யம் = பவித்ரம் = இத3ம் = உத்தமம் = ப்ரத்யக்ஷாவக3மம் = த4ர்ம்யம் = ஸுஸுக2ம் = கர்தும் = அவ்யயம் =

இத3ம்	இந்த ஞானமானது
ராஜவித்3யா	வித்தைகளுக்கெல்லாம் ராஜா
ராஜகு3ஹ்யம்	இரகசியங்களுக்கெல்லாம் அரசன்
உத்தமம் பவித்ரம்	மேன்மையாக பரிசுத்தப்படுத்துவது
ப்ரத்யக்ஷாவக3மம் *	பிரத்தியக்ஷமா யறியத்தக்கது
த4ர்ம்யம் †	தர்மத்தினின்று நீங்காதது
கர்தும்	செய்கிறதற்கு (அநுஷ்டிப்பதற்கு)
ஸுஸுக2ம்	மிகவும் சுலபமானது
அவ்யயம் ‡	அழிவற்றது.

(முந்திய சுலோகத்தில் சொன்ன அதிரகசியமான) இந்த ஞானமானது வித்தைகளுக்கெல்லாம் சிரேஷ்டம், இரகசியங்களுக்கெல்லாம் சிரேஷ்டம், உத்தமமானது, பரிசுத்தமானது, பிரத்தியக்ஷமா யறியத்தக்கது,

தருமத்தோடு கூடினது, அனுஷ்டிப்பதற்கு மிகவும் சுலபமானது, அழிவற்ற பலத்தைக் கொடுப்பது. (2)

* (ரா) (உ) பிரத்தியக்ஷமாய் என்னைக் காண்பிவிக்கத் தகுந்தது.

† (ரா) மோக்ஷசாதனமானது. (உ) (வி, ஸ்ரீ) சகல ஜகத்தையும் தரிக்கிறதினாலே, (𑌧𑌰𑍍𑌮𑌃) தருமம் பகவான். பகவத் விஷயமான ஞானமானதால் 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂, என்று சொல்லப்பட்டது.

‡ (ஸ்ரீ, வி) அழிவற்ற பலத்தைக் கொடுப்பது.

---

3. 𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 ॥

3. அஶ்ரத்³த⁴தா⁴நா꞉ = புருஷா꞉ = த⁴ர்மஸ்ய = அஸ்ய = பரந்தப - அப்ராப்ய - மாம் - நிவர்தந்தே - ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி -

𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪	ஓ! அர்ச்சுனா!
𑌅𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 *	இந்த (ஆத்மஞானமாகிற) தர்மத்தை
𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 †	நம்பாமலிருக்கிற
𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌃	புருஷர்கள்
𑌮𑌾𑌂 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯	என்னை அடையாமல்
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿	மிருத்தியுவுடன்கூடிய சம்சார மார்க்
𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇	நிலைத்திருக்கிறார்கள். [கத்தில்

ஓ! அர்ச்சுனா! இந்த பக்தியோடுகூடிய ஞானமாகிற தருமத்தை நம்பாமலிருக்கிற புருஷர்கள் என்னை யடையாமல், மிருத்தியுவுடன் கூடிய சம்சார மார்க்கத்தில் நிலைத்திருக்கிறார்கள். (என்றால், துக்கமாகிற சம்சாரத்தை யடையும்பொருட்டே மறுபடி ஜனனமடைகிறார்கள்.) (3)

* (ஶம்) இந்த ஆத்மஞான சுவரூப விஷயத்திலேயும், அதினுடைய பலன் விஷயத்திலேயும், (ரா) இந்த உபாசனையாகிற தருமத்தில்.

† (ஶம்) (ரா) விசுவாச மற்றிருக்கிற. (ஸ்ரீ, வி) மோக்ஷ ஏதுவானதென்கிற விஷயத்தில் சிரத்தையற்றிருக்கிற.

---

4. 𑌮𑌯𑌾 𑌤𑌤𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾 ।
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

4. மயா - ததம் - இத³ம் - ஸர்வம் - ஜக³த் - அவ்யக்த-மூர்த்திநா - மத்ஸ்யாநி - ஸர்வபூ⁴தாநி - ந - ச - அஹம் - தேஷு - அவஸ்தி²த꞉.

5. 𑌨 𑌚 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑌐𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌭𑍂𑌤𑌭𑍃𑌨𑍍𑌨 𑌚 𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑍋 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃 ॥

5. ந - ச - மத்ஸ்தானி - 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - பஶ்ய - மே - யோகம் - ஐஶ்வரம் - 𑌭𑍂𑌤𑌭𑍃த் - ந - ச - 𑌭𑍂𑌤ஸ்த꞉ - மம - ஆத்மா - 𑌭𑍂𑌤𑌭𑌾வந꞉.

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾	வியக்தமில்லாத ஸ்வரூபத்தையுடைய
𑌮𑌯𑌾 ‡	என்னாலே
𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌤𑍍 } *	இந்த சகல ஜகத்தும்
𑌤𑌤𑌂	வியாபிக்கப்பட்டிருக்கிறது
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 †	சகலபூதங்களும்
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 ‡	என்னிடத்திலிருக்கின்றன
𑌅𑌹𑌂 § 𑌤𑍇𑌷𑍁 ¶	நான் அவைகளில்
𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ‖	இருக்கிறதில்லை
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 +	பூதங்கள்
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌨 } ×	என்னிடத்திலிருப்பதேயில்லை
𑌐𑌶𑍍𑌵𑌰𑌂 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑌶𑍍𑌯 } %	ஈசுவரனுக்குரியதாகிய என்னுடைய யோகத்தைப் பார்
𑌮𑌮 𑌆𑌤𑍍𑌮𑌾 } [*]	என்னுடைய ஆத்மாவானது
𑌭𑍂𑌤𑌭𑍃𑌤𑍍	பூதங்களைத்தரிக்கிறது (தாங்குகிறது)
𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃 *	பூதங்களை யுண்டாக்குவது
𑌚	ஆனால்
𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌃 𑌨 } †	பூதங்களிடத்தி லில்லை.

தெரியப்படாமலிருக்கிற ரூபத்தை யுடைய என்னாலே இந்த சகலப் பிரபஞ்சமும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. சகல பூதங்களு மென்னிடத்தி லிருக்கின்றன. நான் அவைகளிடத்திலே யிருக்கிறதில்லை. பூதங்க ளென்னிடத்தி லிருப்பதில்லை. என்னுடைய அற்புதமான சக்தியைப்பார். என்னுடைய ஸ்வரூபமானது பூதங்களைத் தரிக்கிறதும், பூதங்களை யுண்டாக்குகிற அல்லது இரக்ஷிக்கிறதுமானபோதிலும், பூதங்களிடத்திலிருப்பதன்று.

(ஸ்வா) இந்த சுலோகங்களில் பரஸ்பர வித்தியாசங் காணப்படும். எப்படியென்றால், பூதங்கள் என்னிடத்தி லிருக்கின்றனவென்று ஒரு இடத்

திலும், இல்லையென்று ஒரு இடத்திலும், நான் பூதங்களி லில்லை யென்று ஒரு இடத்திலும், நான் பூதங்களைத் தரிக்கிறேனென்று ஒரு விடத்திலும், சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விரோதமல்ல. பிரம்மம் தனக்குச் சுவாதீன மான மாயாசக்தி மூலமாய்ப் பிரபஞ்சங்களுடைய சிருஷ்டி, ஸ்திதி, லயாதிக ளுக்குக் காரணமாயிருக்கிறபடியால், அந்தப் பிரபஞ்சங்களெல்லாம் பிரம்மத் துக்குள்ளாகவே யிருக்கின்றன. பரமார்த்தமாய்ப் பார்த்தால் அந்த நிர்குண மானதும், அசங்கமானதுமான பிரம்ம ஸ்வரூபத்துக்கும் மாயாகாரியங்களுக் கும் சம்பந்தமில்லாததினாலே வஸ்துக்கள் பிரம்மத்தினிடத்திலு மில்லை, பிரம்மம் வஸ்துக்களிடத்திலு மில்லையென்பது தாத்பரியம். (4-5)

‡ (ரா) அந்தரியாமியா யிருக்கிற என்னாலே. (ஸ்ரீ) ஜகத்காரணமா யிருக்கிற வென்னாலே.

* (ரா) ஸ்ரீ,வி) சேதனா சேதனமான இந்த சகலப்பிரபஞ்சம்.

† (ஸ்ரீ) சேதனா சேதனமான சகலப் பிரபஞ்சங்கள்.

‡ (ஸம்) என்னை ஆத்மாவாக வுடைத்தா யிருக்கின்றன. (ரா) அந்தரி யாமியான என்னுடைய அதீனமான ஸ்திதியை யுடைத்தா யிருக்கின்றன. (ஸ்ரீ,வி) என்னுடைய ஆதாரத்தின்பேரில் நிற்கின்றன.

§ - ¶ - || (ஸம்) (ஸ்ரீ) நான் அவைகளின்மேல ஒட்டி யிருப்பதில்லை. எப்படி யென்றால், ஆகாசத்தைப்போல. (ரா) நான் அவைகளுடைய அதீனமான ஸ்திதியை யுடையவனல்ல. என்றால், என்னுடைய இருப்புக்கு அவைகள் ஆதாரமல்ல. (உ) (ஸ்ரீ,வி) ஜலமானது பூமியை எப்படி ஆதாரமாக வுடைய தோ, அப்படி என்னுடைய இருப்புக்கு ஆதாரம் வேண்டியதில்லை யென்பது கருத்து.

+ - × (ரா) ஜலம் பூமியிலொட்டி யிருப்பதுபோல பூதங்கள் என்னி டத்திலொட்டி யிருப்பதில்லை. (ஸ்ரீ,வி) நான் அப்ராகிருதன். பிராகிருத மான வஸ்துக்க ளென்னை யொட்டமாட்டா. ஆகையால், பூதங்கள் என்னி டத்தி லொட்டியிருக்கவில்லை.

% (ஸ்ரீ) அகடிதகடனா சாதுரியமாகிய யோகமாயா வைபவம். அல்லது, (ரா) (ஸ்ரீ) அசாதாரணமான (வேறெங்கு மில்லாத) யோகத்தை.

[*] (ரா) என்னுடைய சங்கற்பமானது. (ஸ்ரீ,வி) என்னுடைய தேக மானது

* (ரா) பூதங்களைத் தரிக்கிறதும், நியமிக்கிறதும்.

† (ரா) பூதங்களின் ஆதாரத்தின்பேரில் நானிருக்கவில்லை. (ஸ்ரீ,வி) பூதங்களிலொட்டி யிருக்கவில்லை.

6. 𑌯𑌥𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌤𑍍𑌯𑍁𑌪𑌧𑌾𑌰𑌯 ॥

6. யதா = ஆகாஶஸ்தித꞉ = நித்யம் = வாயு꞉ = ஸர்வத்ரக꞉ = மஹாந் = ததா = ஸர்வாணி = பூதாநி = மத்ஸ்தாநி = இதி = உபதாரய =

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑌃	சர்வவியாபியாயிருக்கிறதும்
𑌮𑌹𑌾𑌨𑍍	நிறைந்திருக்கிறதுமான
𑌵𑌾𑌯𑍁𑌃	வாயுவானது
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	எப்போதும்
𑌯𑌥𑌾	எப்படி
𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌥𑌿𑌤𑌃	ஆகாசத்தி லிருக்கிறதோ (ஆகாசத்திலொட்டாம லிருக்கிறதோ)
𑌤𑌥𑌾	அப்படியே
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿	சகல பூதங்களும்
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌇𑌤𑌿 *	என்னிடத்திலிருப்பதாக
𑌉𑌪𑌧𑌾𑌰𑌯	தெரிந்துகொள்.

சர்வ வியாபகமாயும், நிறைந்து மிருக்கிற வாயுவானது எப்போதும் எப்படி யாகாசத்தில் (ஒட்டாமல்) இருக்கிறதோ அப்படி சகல பூதங்களும் என்னிடத்தி லொட்டாம லிருப்பதாகத் தெரிந்துகொள்.

(ஸ்ரீ,வி) எப்படி யொட்டாம லிருக்கலாமென்ருலோ, ஜலத்தின் ரேணுக்களை வாயு கிரகித்துவந்து நமக்கு சீதளத்தை யுண்டுபண்ணினுலும், அந்த ஜலரேணுக்கள் வாயுவி லொட்டாததுபோல. (6)

* (ரா) காணப்படாத மூர்த்தியையுடைய என்னிடத்தி லிருப்பதாக.

---

7. 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌕𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍌 𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

7. ஸர்வபூதாநி = கௌந்தேய = ப்ரக்ருதிம் = யாந்தி = மாமிகாம் = கல்பக்ஷயே = புந꞉ = தாநி = கல்பாதௌ = விஸ்ருஜாமி = அஹம் =

𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! குந்திபுத்ரா!
𑌕𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑌯𑍇 †	பிரளயகாலத்தில்

ஸர்வபூதாநி ‡	சகலபூதங்களும்
மாமிகாம் § ப்ரக்ருதிம் ¶	என்னுடைய மாயையை
யாந்தி ‖	அடைகின்றன
கல்பாதௌ	சிருஷ்டிகாலத்தில்
தாநி	அவைகளை
புந:	மறுபடியும்
அஹம்	நான்
விஸ்ருஜாமி *	சிருஷ்டிக்கிறேன்.

ஓ! கௌந்தேயா! பிரளய காலத்தில் சகல பூதங்களும் என்னுடைய மாயையை யடைகின்றன. (மாயையில் லயத்தை யடைகின்றன.) சிருஷ்டி காலத்தில் மறுபடியும் அவைகளை நான் சிருஷ்டிக்கிறேன். (7)

† (ரா) சதுர்முகப் பிரம்மாவினுடைய முடிவுகாலத்தில்.

‡ (ரா) (ஸ்ரீ,வி) ஸ்தாவர ஜங்கம ரூபங்களான சகல பூதங்கள்.

§ (ரா) என்னுடைய சரீரமான. (ஸ்ரீ,வி) என்னுடைய அதீனமான.

¶ (ரா) தமஸ் என்கிற பெயரையுடைய பிரகிருதியை. (ஸ்ரீ,வி) முக்குணமயமான பிரகிருதியை.

‖ (ரா) என் சங்கற்பத்தா லடைகின்றன.

* (ரா) சங்கற்பத்தினால் சிருஷ்டிக்கிறேன். (ஸ்ரீ,வி) பலவிதமாக சிருஷ்டிக்கிறேன்.

---

8. ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந: ।
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத் ॥

8. ப்ரக்ருதிம்—ஸ்வாம்—அவஷ்டப்ய—விஸ்ருஜாமி—புந:=புந:=
பூதக்ராமம்—இமம்—க்ருத்ஸ்நம்—அவஶம் ப்ரக்ருதே:—
வஶாத்—

ப்ரக்ருதே: வஶாத்	பிராசீன கர்மசுபாவத்தை யநுசரித்து
அவஶம் §	பிராசீனகர்மாதீனமான
க்ருத்ஸ்நம் இமம் பூதக்ராமம்	சகலமான இந்த பூதக்கூட்டங்களை
அஹம்	நான்
ஸ்வாம் †	என்னுடைய (சுவாதீனமான) தான

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂	மாயையை
𑌅𑌵𑌷𑍍𑌟𑌭𑍍𑌯 ‡	ஆசிரயித்து (ஸ்வீகரித்து)
𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃	மறுபடிமறுபடி
𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑌿	சிருஷ்டிக்கிறேன்.

என்னுடையதான மாயையை சுவீகரித்து பிராசீன கர்மாதீனமான சகலபூதங்களையும் அந்த பிராசீன கர்மத்தை யநுசரித்தே மறுபடி மறுபடி சிருஷ்டிக்கிறேன்.

(ரா) என்னுடைய சுவாதீனமான பிரகிருதியை, 𑌅𑌵𑌷𑍍𑌟𑌭𑍍𑌯 = எட்டுவிதமாய்ப் பரிணமிக்கச் செய்து, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌵𑌶𑌾𑌤𑍍 = பிரகிருதிக்கு சுவாதீனமா யிருக்கிறதினாலே, 𑌅𑌵𑌶𑌃 = பராதீனமா யிருக்கிற, 𑌇𑌮𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 = இந்த தேவ மனுஷ்ய திர்யங் முதலிய சகலமான பூதங்களை மறுபடி மறுபடி சிருஷ்டிக்கிறேன்.

§ (ஶம்) அவித்யை முதலிய தோஷங்களுக்கு வசப்பட்டிருப்பதினாலே அசுவதந்திரமான. (ஸ்ரீ,வி) பிரகிருதிக்கு சுவாதீனமானதால் பராதீனமான. அல்லது 𑌅 = விஷ்ணு, 𑌵𑌶𑌂 = சுவாதீனமாயிருக்கிற. என்றால், விஷ்ணுவினுடைய சுவாதீனமான பிரகிருதிக்கு சுவாதீனமாயிருப்பதினாலே விஷ்ணுவினுடைய சுவாதீனமாயிருக்கிற என்றும் அர்த்தம். (ஸ்வா) அத் - 8, 19, பார்க்க.

† (ஸ்வா) அத் - ச, சு - சு, பார்க்க.

‡ (உ) பிரகிருதியை யாசிரயித்து - ஆசிரயிக்காமலே சிருஷ்டிக்க நான் வல்லவனானாலும், திடமாயுள்ள ஒருவன் விளையாட்டுனிமித்தம் கையில் தடிபிடிப்பதுபோல். (ஸ்ரீ,வி) உபாதானகாரணமா யாசிரயித்து.

---

9. 𑌨 𑌚 𑌮𑌾𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌦𑌾𑌸𑍀𑌨𑌮𑌸𑌕𑍍𑌤𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ॥

9. ந = ச = மாம் = தாநி = கர்மாணி = நிபத்நந்தி = தநஞ்ஜய = உதாஸீநவத் = ஆஸீநம் = அஸக்தம் = தேஷு = கர்மஸு =

𑌹𑍇 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯	ஓ! அர்ச்சுனா!
𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿	அந்த சிருஷ்டிகருமங்கள்
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌤𑍍 𑌆𑌸𑍀𑌨𑌂 †	உதாஸீனனைப்போ லிருக்கிறவும்
𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁	அந்தக் கருமங்களிலே

அஸக்தம் *	அபிமானமற்று மிருக்கிறவுமான
மாம்	என்னை
ந நிபத்நந்தி	பந்திக்கமாட்டா.

ஓ! அர்ச்சுனா! அந்த சிருஷ்டி கருமங்களில் அபிமானமற்றும், கர்மங்களைச் செய்யாதவனைப் போலவும், அல்லது சம்பந்தமற்றவனைப்போலவும் இருக்கிற என்னை யந்த சிருஷ்டிகர்மங்கள் பந்திக்கிறதில்லை.

(ரா) மேற்சொன்ன பலவித சிருஷ்டியானது விஷம சிருஷ்டியாயிருக்கிற (அதாவது சகல பிராணிகளைச் சமமாய் சிருஷ்டிக்காமல் தேவ மனுஷ்யாதி பலவிதங்களா யிருக்கிற) தினாலே எனக்குப் புண்ணிய பாபங்களையாவது தயவற்றவன் பக்ஷபாத முள்ளவன் என்கிற அபவாதத்தையாவது உண்டாக்குகிறதில்லை. ஏனென்றால், அந்தந்தப் பிராணிகளுடைய பூர்வகருமத்திற்குத் தக்கபடி சிருஷ்டிப்பதினாலும், பலாபேக்ஷயாவது கர்த்திருத்வாபிமானமாவது இல்லாததினாலுந்தான். (9)

* (மா) பந்தத்திற்கு ஏதுவான கர்மபலனில் அபேக்ஷயாவது கர்த்திருத்துவாபிமானமாவது இல்லாம லிருக்கிற.

† (ஸ்ரீ,வி) கர்மங்கள் செய்தபோதிலும் கர்மஞ் செய்யாதவனுக்கு எப்படிப் பலனில்லையோ, அப்படி எனக்குப் பலனில்லை. ஆகையால், செய்யாதவனைப்போ லிருக்கிற.

---

10. மயாத்யக்ஷேண ப்ரக்ருதி ஸூயதே ஸசராசரம் ।
ஹேதுநாநேந கௌந்தேய ஜகத்விபரிவர்த்ததே ‖

10. மயா=அத்யக்ஷேண=ப்ரக்ருதி:=ஸூயதே=ஸசராசரம்=
ஹேதுநா=அநேந=கௌந்தேய= ஜகத் = விபரிவர்த்ததே=

ப்ரக்ருதி: ‡	மாயையானது
அத்யக்ஷேண *	சாக்ஷியாயிருக்கிற
மயா †	என்னாலே (என்னுடைய சந்நிதி நிமித்தியத்தினாலே)
ஸசராசரம்	ஸ்தாவர ஜங்கமரூபமான ஜகத்தை
ஸூயதே	உண்டுபண்ணுகிறது
கௌந்தேய	ஓ! குந்திபுத்திரா!
அநேந ஹேதுநா	இந்த நிமித்தியத்தினாலே
ஜகத்	ஜகத்தானது
விபரிவர்த்ததே	திரும்பிக்கொண்டே யிருக்கிறது

ஓ! குந்திபுத்திரா! சாக்ஷியாயிருக்கிற என்னுடைய சந்நிதான விசேஷத்தினாலே மாயையானது ஸ்தாவர ஜங்கமத்தோடு கூடின இந்தப் பிரபஞ்சத்தை யுண்டுபண்ணுகிறது. (இந்த சந்நிதான விசேஷமாகிற) நிமித்தியத்தினாலே பிரபஞ்சமானது திரும்பிக்கொண்டே யிருக்கிறது.

கௌந்தேயா! என்று சம்போதனையின் தாத்பரியம், குந்திதேவி பாண்டுவை சாக்ஷியாக வைத்துக்கொண்டு உன்னை உண்டுபண்ணியபடி, மாயையானது என்னை சாக்ஷியாய் வைத்துக்கொண்டு ஜகத்தை சிருஷ்டி செய்கிறது. (10)

* - † - ‡ (𑌰𑌾) பிராணிகளுடைய பூர்வஜன்ம கருமத்தை யனுசரித்து சத்திய சங்கற்பத்தோடுகூடிய என்னால் பார்க்கப்பட்ட பிரகிருதியானது. (ஸ்ரீ,வி) முக்கிய கர்த்தாவாயிருக்கிற என்னாலேவப்பட்ட என் ஆதீனமான பிரகிருதியானது. அல்லது, (புருஷனாகிய) அதிபதியாகிய என்னால் (ஸ்திரீயாகிய) பிரகிருதியானது, 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 𑌸𑍂𑌯𑌤𑍇 = சராசரப் பிரபஞ்சத்தைப் பிரசவிக்கிறது. அதாவது பிரசவிக்கிறான்.

11\. 𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

11\. அவஜாநந்தி = மாம் = மூடாஃ = மாநுஷீம் = தநும் = ஆஶ்ரிதம் = பரம் = பாவம் = அஜாநந்தஃ = மம = பூதமஹேஶ்வரம் =

𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌂	பூதங்களுக்கு ஈசுவரனை
𑌮𑌮	என்னுடைய
𑌪𑌰𑌂 } §	(என்மேலான நிலையை) பரமதத்துவத்தை
𑌭𑌾𑌵𑌂 }	(சிரேஷ்டமான சுவரூபத்தை)
𑌅𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌃	அறியாத
𑌮𑍂𑌢𑌾𑌃	மூடர்கள்
𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌂	மனுஷிய தேகத்தை
𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌂 𑌮𑌾𑌂	ஆசிரயித்திருக்கிறதாக என்னை
𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 *	அவமதிக்கிறார்கள்.

என்னுடைய பரம தத்துவத்தை அறியாத மூடர்கள், பூதங்களுக்கெல்லாம் மகா ஈசனாயிருக்கிற என்னை, மனுஷியதேகத்தை யாசிரயித்திருக்கிறதாக அவமதிக்கிறார்கள்.

(𑌸𑍍𑌵𑌾) அவதார ரூபங்களை மனுஷ்ய ரூபங்களாக எண்ணுகிறவர்கள் மூடர்களென்பது கருத்து.

பக்தர்களை அநுக்கிரஹிப்பதற்காக மனுஷ்யதேகத்தை சுவீகரித்து வியவ கரித்துக்கொண்டிருக்கிற என்னை தேகாபிமானமுள்ள கேவல மனுஷிய னென்றும், ஈசுவரனல்லவென்றும் இந்தமாதிரியாக அவமதிக்கிறார்கள்.

§ (ரா) ஜனங்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் பொருட்டு தயவுடன் நான் செய்திருக்கிற இந்த அவதாரத்தின் கருத்தை .(ஸ்ரீ,வி) என்னுடைய சிரேஷ்டமான உண்மையை.

* (ரா) சாதாரண மனுஷியனாக வெண்ணி அவமதிக்கிறார்கள்.

---

12. 𑌮𑍋𑌘𑌾𑌶𑌾 𑌮𑍋𑌘𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍋 𑌮𑍋𑌘𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌵𑌿𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌮𑌾𑌸𑍁𑌰𑍀𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥

12. மோகாசா: = மோககர்மாண: = மோகஜ்ஞாநா: = விசேதஸ: = ராக்ஷஸீம் = ஆஸுரீம் = ச = ஏவ = ப்ரக்ருதிம் = மோஹினீம் = ஶ்ரிதா: =

(𑌤𑍇)	அவர்கள்
𑌮𑍋𑌘𑌾𑌶𑌾𑌃 †	வீணாசையையுடையவர்கள்
𑌮𑍋𑌘𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌃 ‡	வீணான கர்மங்களையுடையவர்கள்
𑌮𑍋𑌘𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 $	வீணான ஞானமுடையவர்கள்
𑌵𑌿𑌚𑍇𑌤𑌸𑌃 ¶	விவேகமில்லாதவர்கள்
𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌂 ‖	மோகிக்கச்செய்கிற
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌂	இராக்ஷஸமாயும்
𑌆𑌸𑍁𑌰𑍀𑌂 *	ஆசுரமாயுமிருக்கிற
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑍇𑌵	சுவபாவத்தையே
𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃	அடைந்தவர்கள்.

வீணான ஆசையையும், வீணான கர்மங்களையும், வீணான ஞானங்களையு முடைய அவிவேகிகள் மோகிக்கச் செய்கிறதாகிய இராக்ஷஸ ஆசுர சுவபா வத்தையே ஆசிரயிக்கிறதினால் என்னை அவமதிக்கிறார்கள்.

† (ஸ்ரீ) அந்நிய தேவதைகளை யாசிரயித்தால் சீக்கிரம் பலன் கிடைக்கு மென்கிற வீணான ஆசை. (உ) தான் செய்கிற கருமமே தனக்குப் பலன் கொடுக்குமென்கிற ஆசை.

‡ (ஸ்ரீ) வீணாசையினால் செய்கிற கருமமானது என்னுடைய ஆராதனை யல்லவாகையால் அது வீணானது.

$ (ஸ்ரீ) தான் கற்றறிந்த சாஸ்திராதி ஞானங்களை, குயுக்தி வாதங்களி னால் வீணாக்கிக்கொள்ளுகிறது. (ரா) என்னுடையதா யிருக்கிற (என்றால், என்னுடைய சேஷபூதமாயும் சரீரமாயுமிருக்கிற) சகல சராசரப் பிரபஞ்சத் தில் விபரீத ஞானமுடைய.

¶ (ஸ்ரீ) (ஸ்ரீ,வி) கெட்டவழியில் பிரவிருத்தித்திருக்கிற மனதை யுடையவர்கள். (ரா) சகலத்திலும் யதார்த்த ஞானமற்றவர்கள்.

|| (ஸ்ரீ) புத்தியைக்கெடுக்கிற. (ரா) மனுஷ்யாவதாரஞ் செய்திருக்கிற என்னுடைய பூர்ணகருணை, சர்வோத்தமத்துவம், முதலியவைகளை மறைக்கிற.

+ (ஸ்ரீ) பிறருக்கு உபத்திரவம் செய்ய எண்ணமுடையதான தாமச சுவபாவம். (ரா) என்னுடைய மகத்தான குணங்களை மறக்கடிக்கிற சுபாவம்.

* (ஸ்ரீ) அதிகாசை, அகங்காரம், கோபம் முதலிய குணங்களையுடைய ராஜஸ சுவபாவம். (ஸ்ரா) (காமது) காசியபப்பிரஜாபதிக்கு திதி என்பவளிடத்தி லுண்டானவர்கள் அசுரர். புலஸ்தியமகரிஷியின் சந்ததிகள் இராக்ஷஸர் என்று சொல்லப்படுகிறார்கள்.

---

13. 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌦𑍈𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌭𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌮𑌨𑌸𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

13. மஹாத்மாநஃ=து=மாம்=பார்த=தைவீம்=ப்ரக்ருதிம்=ஆஶ்ரிதாஃ=பஜந்தி=அநந்யமநஸஃ=ஜ்ஞாத்வா=பூதாதிம்=அவ்யயம்=

𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! பார்த்தா!
𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁	மகாத்மாக்கள் தான்
𑌦𑍈𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃	தேவர்களுடைய ஸ்பாவத்தை யாசிரயித்தவர்களாய்
𑌮𑌾𑌂	என்னை
𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌂	பூதங்களுக்கு காரணமாகவும்
𑌅𑌵𑍍𑌯𑌯𑌂	நாசமற்றவனாகவும்
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾	அறிந்து
𑌅𑌨𑌨𑍍𑌯𑌮𑌨𑌸𑌃	வேறொன்றில் மனதை வைக்காதவர்களாய்
𑌭𑌜𑌨𑍍𑌤𑌿	பஜிக்கிறார்கள்.

ஓ! அர்ச்சுனா! மஹாத்மாக்கள், தேவர்களுடைய சாத்துவிக ஸ்வபாவத்தையே யாசிரயித்து, என்னைப் பூதங்களுக்குக் காரணமாகவும் நாசமற்றவனாகவும் அறிந்து, வேறொன்றிலும் மனதை வைக்காமல் என்னிடத்திலேயே மனதை வைத்து, (என்னையே) பஜிக்கிறார்கள். (13)

(1) 𑌦𑍈𑌵𑍀𑌂 = முக்தியோக்கியமாகிய உத்தம சுவபாவத்தை யாசிரயித்தவர்கள் (இராகவேந்திரர்)

இந்த தெய்வசம்பத்து விஷயம், அத் - 16, பார்க்க.

(2) ஜ்ஞாத்வா = பூர்ணதயவோடு கூடி சாதுக்களை இரக்ஷிக்கும்பொருட்டு மனுஷ்யரூபமா யவதாரஞ் செய்திருக்றேனென்று அறிந்து (ராமாநுஜர்)

(3) அவ்யயம் = வாக்கு மனசுகளுக்கெட்டாத நாமகருமங்களையுடைய (ராமாநுஜர்)

(சங்கரர்) மற்றும் எவர்கள் நம்பிக்கையுள்ளவராய் பகவத்பக்தியென்னும் மோக்ஷ வழியிலேயே சென்றிருக்கிறார்களோ அந்த மஹாத்மாக்கள் அதாவது ஈனபுத்தி யில்லாதவர்கள், எஜ்ஞ முதலியவற்றால் சித்தம் பரிசுத்தமானவர்கள் தேவர்களுடைய ஸ்வபாவத்தை அதாவது மனசு, வாக்கு, காயம் இவைகளின் அடக்கமும், இந்திரியங்களின் அடக்கமும், தயையும், நம்பிக்கையும் முதலாகியதை உடையவர்களாய் மனதை வேறொன்றிலும் செலுத்தாதவராய் என்னை அதாவது ஈசுவரனை பூதங்களுக்கு அதாவது ஆகாசம் முதலியவற்றிற்கும் உயிருள்ள பிராணிகளுக்கும் காரணமாகவும் அழிவற்றவனாகவும் அறிந்து தொழுகிறார்கள். (13)

---

14. 𑌸𑌤𑌤𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑌤𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ।
𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

14. ஸததம் = கீர்தயந்த: = மாம் = யதந்த: = ச = த்ருடவ்ரதா: = நமஸ்யந்த: = ச = மாம் = பக்த்யா = நித்யயுக்தா: = உபாஸதே =

(𑌤𑍇)	அவர்கள்
𑌸𑌤𑌤𑌂	எப்போதும்
𑌮𑌾𑌂	(பகவானாகிய) என்னை
𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑌃	கீர்த்தனஞ் செய்கிறவராயும்
𑌯𑌤𑌨𑍍𑌤𑌃	தருமவழியில் முயர்ச்சி யுடையவராயும்
𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃	உறுதியான விரதமுடையவராயும்
𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃	எப்பொழுதும் ஒருநிலை யுள்ளவர்களாயும்
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌃	பக்தியினாலே நமஸ்காரஞ் செய்கிறவர்களாயும்
𑌮𑌾𑌂 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇	என்னை உபாசிக்கிறார்கள்.

அவர்கள் பிரஹ்ம ஸ்வரூபியாகிய பகவானான என்னை எப்பொழுதும் கீர்த்தனஞ் செய்கிறவர்களாயும், (இந்திரிய நிக்கிரஹம், சமம், தமம், தயை, அஹிம்சை முதலிய தர்மங்களோடு கூடி) முயற்சிக்கிறவர்களாயும், திடமான விரதத்தை அனுஷ்டிக்கிறவர்களாயும், எப்பொழுது ஒரே நிலையுள்ளவர்களாயும், பக்தியோடு ஹிருதய கமலவாசியாகிய ஆத்மாவான என்னை நமஸ்காரஞ்செய்து உபாசிக்கிறார்கள்.

(ஸ்ரீதரர்) சிலர் ஈசுவரபூஜைமுதலியவைகளில் பிரயத்தினஞ் செய்கிறவர்களாயும், திடமான விரதத்தை யுடையவர்களாயும், சிலர் எப்போதும் என்னை ஜாக்கிரதையோடும் பக்தியோடும் கீர்த்தனஞ் செய்கிறவர்களாயும், சிலர் ஜாக்கிரதையோடு பக்தியினாலே எப்போதும் என்னை நமஸ்காரஞ் செய்கிறவர்களாயும் உபாசிக்கிறார்கள்.

(ராமாநுஜர்) ஸததம்கீர்த்தயந்த:=எப்பொழுதும் என்னுடைய குண விசேஷங்களைச் சொல்லுகிற என்னுடைய நாமங்களை ஸ்மரிக்கிறதினால் உண்டாகிற மயிர்க்கூச்சம், தழதழத்த ஸ்வரம், இவைகளோடு கூடினவர்களாயும், நாராயண கிருஷ்ண வாசுதேவாதி நாமங்களை யுச்சரிக்கிறவர்களாயும், யதந்தச்ச த்ருடவ்ரதா:= என்னுடைய ஆராதனைகளிலேயும், ஆராதனைக் குபயோகமாய்க் கோவில் கட்டுவது நந்தவனம் வைப்பது முதலிய காரியங்களிலேயும், உறுதியான முயற்சி யுள்ளவர்களாயும் பக்த்யாசமாம் நமஸ்யந்த:=அதிக பக்தியால் வணக்கமுடைய மனது, புத்தி அகங்காரம், கால்கள், கைகள், சிரசு, முதலிய இந்த எட்டு அங்கங்களினால் கல், முள்ளு, புழுதி முதலிய இடங்களென்று பாராமல் தெண்டாகாரமாய் நமஸ்காரஞ் செய்கிறவர்களாயும், மாம்=என்னை, நித்யயுக்தா:=எப்போதும் என்னையே யடையவேண்டு மென்கிற எண்ணத்தோடு கூடியும் தங்களையும், தங்களைச் சேர்ந்த சகல வஸ்துக்களையும் பரமாத்மாவுக்கு அர்ப்பிதஞ் செய்கிறோமென்கிற நிச்சயத்தோடு கூடியும், உபாஸதே= உபாசிக்கிறார்கள்.

(இராகவேந்திரர்) அவர்கள் ராமகிருஷ்ணாதி நாமங்களைக் கீர்த்தனம் செய்கிறவர்களாயும் உபவாஸாதி திட விருதங்களை யுடையவர்களாயும், எப்பொழுதும் என்னிடத்தில் மனதை வைத்தவர்களாயும் என்னை உபாஸிக்கிறார்கள். (14)

---

15. ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோ மாமுபாஸதே ।
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விச்வதோமுகம் ॥

15. ஜ்ஞாநயஜ்ஞேந = ச = அபி = அந்யே = யஜந்த:=மாம்=உபாஸதே; ஏகத்வேந = ப்ருதக்த்வேந = பஹுதா = விச்வதோமுகம் ॥

ஜ்ஞாநயஜ்ஞேந	ஜ்ஞானமாகிற யஜ்ஞத்தினாலே
யஜந்த: அந்யே	பூஜிக்கிற மற்றவர்கள்
மாம், ச, அபி	ஈஶ்வரனான என்னையே
ஏகத்வேந	ஒன்றாக (அபேதமாக)
உபாஸதே	உபாஸிக்கிறார்கள்.

(அபேதேந) ப்ருதக்த்வேந	சிலர் வேருக (பேதபாவனையோடு)
(உபாஸதே)	உபாஸிக்கிருர்கள்
விஶ்வதோமுகம்	விஸ்வரூபியான என்னை
பஹுதா	அனேகவிதமாக
உபாஸதே	சிலர் உபாஸிக்கிருர்கள்.

ஜ்ஞானமாகிய எஜ்ஞத்தினாலேயே பூஜிக்கிற மற்றவர்கள் எல்லாம் வேறு தேவதையின் உபாஸனையைவிட்டு ஈஸ்வரனாகிய என்னையே ஒன்ருன ப்ரஹ்மமாக அபேதமாய் உபாஸிக்கிருர்கள். சிலர் என்னை வெவ்வேருக அதாவது சூரியன் முதலிய வெவ்வேறு வடிவமாயிருப்பதாக பேதபாவனையோடு உபாஸிக்கிருர்கள். சிலர் விஸ்வரூபியான என்னை அனேகவிதமாய் உபாஸிக்கிருர்கள்.

(1) **ஜ்ஞாநயஜ்ஞேந** = பகவத்விஷய ஞானமாகிற யக்ஞத்தினாலே (**சங்கரர்**) சகலமும் பிரம்மசுவரூபமென்கிற ஞானமாகிய யக்ஞத்தினாலே. (**ஸ்ரீதரர்**)

(2) **ஏகத்வேந** = பரமாத்மா ஒருவனே யென்கிற பரமார்த்த தரிசனத்தினாலே (**சங்கரர்**) தானே பிரம்மம், பிரம்மமேதான்; என்கிற அபேத பாவனையினாலே. (**மதுசூதன சரஸ்வதி**)

(3) **ப்ருதக்த்வேந** = விஷ்ணுவானவர், சூரிய, சந்திராதிதேவதா ரூபியா யிருக்கிருரென்கிற பாவனையினாலே. (**சங்கரர்**) நான் ஈசுவரனுடைய தாசன் என்கிற பாவனையினாலே. (**ஸ்ரீதரர்**)

(**சங்கரர்**) அவர்கள் எங்ஙெந்தவிதமாய் உபாஸிக்கிருர்கள் என்பது கூறப்படுகிறது. பகவானைப்பற்றிய ஜ்ஞானமே எஜ்ஞம்தான், மற்றவர்கள் அதாவது பிரஹ்ம நிஷ்டர்கள் அந்த ஜ்ஞானம் என்னும் எஜ்ஞத்தால் ஈசுவரனாகிய என்னையே பூஜிப்பவராய், வேறு தேவதையை உபாஸித்தலைத் தள்ளிவிட்டு என்னையே உபாஸிக்கிருர்கள். இனி அந்த ஜ்ஞானம் அனேகவிதமாயுள்ளது:—சிலர் சகலமும் பரப்ரஹ்மம் ஒன்றுதான் என்னும் பரமார்த்த தரிசனத்தோடு பஜித்து உபாஸிக்கிருர்கள். சிலர் விஷ்ணுவாகிய அந்த பகவானே ஸூரியன் சந்திரன் முதலிய பேதத்தோடு ஸூரியன் முதலான வடிவமாக இருக்கிருரென்னும் ஜ்ஞானத்தோடு உபாஸிக்கிருர்கள். சிலர் பலவகையாய் அக்நி ஸூரியன் முதலான வடிவத்தால் ஸகல ரூபியாகவும் ஸகல ஆத்மாவாகவும் உள்ள அவரை பலவகையுள்ள அந்த பகவான்தான் எங்கும் உள்ளவராயும் ஸகல ரூபியாயும் இருக்கிருர் என்னும் ஜ்ஞானத்தோடு உபாஸிக்கிருர்கள்.

(**ராமாநுஜர்**) சில மகாத்மாக்கள் முந்திய சுலோகத்திற் சொல்லியபடி கீர்த்தன நமஸ்காராதிகளினாலேயும், ஞானமாகிய யஜ்ஞத்தினாலேயும், என்னை பஜித்து உபாசிக்கிருர்கள். எப்படியென்ருல், **ப்ருதக்த்வேந** =

ஜகதாகாரத்திஞலே, விஶ்வதோமுகம் = சகலசேஷியான மாம் = என்னை, பஹுதா = அநேகவிதமாய், ஏகத்வேந = ஒன்றேயென்றறிந்து உபாசிக்கிறுர்கள். அதெப்படியென்றுல், பகவாஞன வாசுதேவன் நாமரூபங்களற்றிருந்த ஸூக்ஷ்மசிதசித் வஸ்துக்களை சரீரமா யுடைத்தாயிருந்து சத்திய சங்கற்பஞன அவர் ஸ்தூல சிதசித்வஸ்துக்களின் தேகியாகத் தாஞக வேண்டுமென்று சங்கற்பித்த மாத்திரத்தில், தேவ - மனுஷ்ய - பசு - பக்ஷி - மிருக - ஸ்தாவராதி வெவ்வேறு விசித்திரமான வஸ்துக்களை சரீரமாக உடைத்தானவராய் அவரொருவரே யிருக்கிருரென்று அநுசந்தானஞ்செய்து உபாசிக்கிறுர்கள்.

(மத்வர்) ஏகத்வேந = எங்கும் நிறைந்திருக்கிற நாராயணன் ஒருவர்தானென்று சிலரும், ப்ருதக்த்வேந = அந்த நாராயணன் சகல வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணனென்று சிலரும், பஹுதா = அந்த நாராயணன் அநேக ரூபங்களை யுடைத்தானவரென்று சிலரும், உபாசிக்கிறுர்களென்பது இந்த சுலோகத்தின் கருத்து. (15)

---

16. அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹமஹமௌஷதம் |
மந்த்ரோஹமஹமேவாஜ்யமஹமக்நிரஹம் ஹுதம் ||

16. அஹம் = க்ரது: = அஹம் = யஜ்ஞ: = ஸ்வதா = அஹம் = அஹம் = ஔஷதம் | (1) மந்த்ர: = அஹம் = அஹம் = ஏவ = ஆஜ்யம் = அஹம் = அக்நி: = அஹம் = ஹுதம் ||

அஹம் க்ரது:	நானே க்ரது என்கிற வேதோக்த கர்மம்
அஹம் யஜ்ஞ:	நானே யஜ்ஞம்
அஹம் ஸ்வதா	நானே ஸ்வதா என்கிற பித்ருக்களுக்குக் கொடுக்கப்படும் அன்னம்
அஹம் ஔஷதம்	நானே ஔஷதம்
அஹம் மந்த்ர:	நானே மந்திரம்
அஹம் ஆஜ்யம்	நானே ஹவிஸ்
அஹம் அக்நி:	நானே அக்னி
அஹமேவ ஹுதம்	நனே ஹோமகர்மா.

நானே வேதத்தில் விதித்த க்ரது என்னும் கர்மம்; நானே வைஶ்வதேவம் முதலிய யஜ்ஞம். நானே ஸ்வதா என்கிற பித்ருக்களுக்குக் கொடுக்கப்படும் அன்னம்; நானே ஔஷதம் மருந்து; நானே மந்திரம்; நானே ஹோமம் செய்யப்படும் ஹவிஸாகிய நெய்; அந்த ஹவிஸ் ஹோமம் செய்யப்படுகிறதாகிய அக்நி நானே; நானே அந்த ஹோமகர்மா, அதாவது நானே அந்த ஹவிஸை அர்பித்தல் என்னும் தொழில்.

(1) ஒளஷயம்=ஹவிஸ் (ராமாநுஜர்.)

(சங்கரர்) முன் சொன்ன அவர்கள் பலவாராக உபாஸித்தால் அதனுல் பகவானுன உங்களையே உபாஸிக்கிருர்கள் என்பது எப்படி ஆகும் என்னும் சங்கை உண்டாகுமாதலால் பகவான் இதை அருளிச்செய்கிருர். க்ரது என்பது வேதத்தில் விதித்த கர்மங்களுள் ஒரு வகுப்பு. யஜ்ஞம் என்பது ஸ்ம்ருதியில் விதித்த வைஸ்வதேவம் முதலிய யஜ்ஞம். ஸ்வதா என்பது பித்ருக்களுக்கு ஸ்ராத்தாதிகளில் கொடுக்கப்படும் அன்னம், அல்லது ஸாமான்யமான அன்னம். ஒளஷயம் என்பது எல்லாப் பிராணிகளாலும் புசிக்கப்படுகின்றவையாய் ஓஷதி என்னும் சொல்லால் கூறப்பட்ட ஸாதாரணமான நெல், வாற் கோதுமை முதலியன; அல்லது வியாதியைத் தணித்து ஆற்றுதற்கான மருந்து என்றும் கொள்ளலாம். மந்தரம் பித்ருக்களுக்கும் தேவதைகளுக்கும் எந்த மந்திரத்தினுல் ஹவிஸானது கொடுக்கப்படுகின்றதோ, அந்த மந்திரம் நானே. ஹோமம் செய்யப்படும் ஹவிஸாகிய நெய் நானே. அக்நி: எதிலே ஹவிஸானது ஹோமம் செய்யப்படுகின்றதோ அந்த அக்னி நானே. ஹுதம் ஹவிஸை அக்னியில் அற்பித்தல் என்னும் தெளிவாகிய ஹோமகர்மாவும் நான் தான்.

(இராகவேந்திரர்) யஜ்ஞ: = முக்கிய தேவதையை யுத்தேசித்துச் செய்யப்பட்ட பிரதான ஹோமம். இந்த சுலோகத்தில் "க்ரது முதலியவைகள் நான்" என்று சொன்னதின் தாத்பரியமென்னவென்ருல் அவைகளுக்கு நான் நியாமகனுயும், அவைகளின் ஹவிஸ் முதலியவைகளைப் புசிப்பவனுயு மிருப்பதினுலே, அவைகள் நானென்ற அபேதமானது, உபசாரமாகச் சொல்லப்பட்டது. இதின் எழாவது அத்தியாயம், 11-வது, சுலோகத்தின் வியாக்கியானத்தைப் பார்க்க. (16)

---

17. பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: ।
வேத்யம் பவித்ரமோங்கார ருக்ஸாம யஜுரேவ ச ॥

17. பிதா=அஹம்=அஸ்ய = ஜகத:=மாதா = தாதா = பிதாமஹ: ।
வேத்யம்=பவித்ரம்=ஓம்கார:=ருக்=ஸாம=யஜு:=ஏவ=ச ॥

அஸ்ய ஜகத:	இந்த ஜகத்திற்கு
பிதா, மாதா	தகப்பனும் தாயும்
பிதாமஹ:	பாட்டனும்
தாதா	கர்ம பலனைப் பகுத்து கொடுப்பவனும்
வேத்யம் பவித்ரம் ஓங்கார:	அறியவேண்டியபொருளும் பரிசுத்தமாக்கும் வஸ்துவும் ஓம்காரமும்
ருக், ஸாம, யஜு:, ச	ரிக்வேதம் ஸாமவேதம் எஜுர்வேதமும்
அஹமேவ	நானே தான்.

இந்த ஜகத்திற்கு தகப்பனும் தாயும் பாட்டனும், கர்மபலனை பகிர்ந்து கொடுப்பவனும், அறியவேண்டிய பொருளும், பரிசுத்தமாக்கும் வஸ்துவும், ஓங்காரமும், ரிக்வேதமும் ஸாமவேதமும் யஜுர்வேதமும் நானேதான்.

(1) 𑌧𑌾𑌤𑌾=விதாதா=கர்மபலனை யுண்டாக்குகிறவனும் (ஸ்ரீதரர்); ரக்ஷகனும் (இராகவேந்திரர்.)

(2) பிதாமஹ:=பூஜ்ஜியனும் (இராகவேந்திரர்.)

---

18. 𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌬𑍀𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

18. 𑌗𑌤𑌿𑌃 = (1) 𑌭𑌰𑍍𑌤𑌾 = (2) ப்ரபு: = ஸாக்ஷீ = (3) நிவாஸ: (4) சரணம் = (5) ஸுஹ்ருத் । (6) ப்ரபவ:=ப்ரளய:= ஸ்தானம்=நிதானம்= (7) பீஜம்= (8) அவ்யயம் ॥

𑌗𑌤𑌿𑌃	அடையப்படுகிறதும்
𑌭𑌰𑍍𑌤𑌾	போஷகனும்
𑌪𑍍𑌰𑌭𑍁𑌃	பிரபுவும்
𑌸𑌾𑌕𑍍𑌷𑍀	சாக்ஷியும்
𑌨𑌿𑌵𑌾𑌸𑌃	இருப்பிடமும்
𑌶𑌰𑌣𑌂	சரணமடையத் தகுந்தவனும்
𑌸𑍁𑌹𑍃𑌤𑍍	ஸுஹிருத்தும்
𑌪𑍍𑌰𑌭𑌵𑌃	உத்பத்தி ஸ்தானமும்
𑌸𑍍𑌥𑌾𑌨𑌂	நிலைகொள்ளுமிடமும்
𑌪𑍍𑌰𑌲𑌯𑌃	அழியுமிடமும்
𑌨𑌿𑌧𑌾𑌨𑌂	களஞ்சியமும்
𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 𑌬𑍀𑌜𑌂	அழிவில்லாத விதையும்
(𑌅𑌹𑌮𑍇𑌵)	நானே.

அடையப்படுகிறதும் அதாவது கர்ம பலனும், போஷகனும், பிரபுவும் அதாவது சுவாமியும், சாக்ஷியும், பிராணிகள் வஸிக்கும் இடமும், சரணமடையத் தகுந்தவனும் அதாவது தன்னை வந்தடைந்தவர்கள் துக்கத்தைத் தீர்ப்பவனும், ஸுஹிருத்தும் அதாவது பதிலுபகாரத்தை எதிர்பாராது உதவி புரிவோனும், சிருஷ்டி ஸ்திதி லய ஸ்தானமும், களஞ்சியமும் அதாவது பிராணிகளின் பிற்காலத்தில் அநுபவிக்க வேண்டியவைகளை வைக்குமிடமும், அழிவில்லா விதையும் நானே.

(1) 𑌗𑌤𑌿𑌃=கர்மங்களுடைய பலன் (சங்கரர்) (ஸ்ரீதரர்). அடைய வேண்டிய ஸ்தானம் (ராமாநுஜர்); முமுக்ஷுக்களா லறியத் தகுந்தது. (இராகவேந்திரர்).

(2) ஹர்தா=தரிக்கிறவன் (ராமாநுஜர்).

(3) ஸாக்ஷீ=பிராணிகள் செய்வது செய்யாமல் விடுவது இவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பவன் (சங்கரர்), (ஸ்ரீதரர்).

(4) நிவாஸ꞉=பிராணிகளுக் கிருப்பிடம் (சங்கரர்) (ஸ்ரீதரர்); ஆசிரயன் (இராகவேந்திரர்);

(5) ஶரணம்=தன்னை வந்தடைந்தவர்கள் துக்கத்தைப் போக்கடிக்கிறவன் (சங்கரர்); ஆசிரயிக்கத் தகுந்தவன் (ராமாநுஜர்); சம்சார பயத்திலிருந்து இரக்ஷிப்பவன் (இராகவேந்திரர்);

(6) ஸுஹ்ருத்=பிரதிப்பிரயோஜனத்தை யெதிர்பாராமல் உபகாரஞ் செய்கிறவன் (சங்கரர்), (இராகவேந்திரர்);

(7) நியாநம்=நிக்ஷேபம் பிராணிகளால் காலந்தரத்தில் அநுபவிக்கப்படும் பொருள்கள் வைக்குமிடம் (சங்கரர்); உத்பாத்யம்=உண்டுபண்ணத்தக்க வஸ்துவும், உபஸம்ஹார்யம்=சங்கரிக்கப்படுகிற வஸ்துவும் (ராமாநுஜர்); பிரளயகாலத்தில் சகலத்திற்கும் இருப்பிடமும் (இராகவேந்திரர்).

(8) பீஜம்=விதை, முளைக்கும் தன்மையுள்ள பொருள்கள் முளைத்தற்கு காரணம், அவ்விதையானது ஸம்ஸாரமுள்ள வரையிலும் உள்ளதனால் அழிவில்லாதது. விதையில்லாது ஒன்றும் முளைப்பதில்லை. எப்பொழுதும் முளையைக் காண்பதினால் விரையின் தொடர்ச்சியானது அற்றுப்போகவில்லை என்று தெரிகின்றது. (ஸ்வா) (18)

---

19. தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்ருஹ்ணாம்யுத்ஸ்ருஜாமி ச ।
அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச ஸதஸச்சாஹமர்ஜுந ॥

19. தபாமி (1) = அஹம் = அஹம் = வர்ஷம் = நிக்ருஹ்ணாமி = உத்ஸ்ருஜாமி = ச । அம்ருதம் = ச = ஏவ = ம்ருத்யு꞉ = ச = ஸத் (2) = அஸத் = ச = அஹம் = அர்ஜுந ॥

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுன!
அஹம் தபாமி	நான் வெப்பத்தை உண்டாக்குகின்றேன்
அஹம்	நான்
வர்ஷம் உத்ஸ்ருஜாமி	மழையை உண்டாக்குகின்றேன்
நிக்ருஹ்ணாமி ச	வர்ஷிக்காமல் நிறுத்துகின்றேன்
அம்ருதம், ச	சாகாமையும்
ம்ருத்யு꞉	சாவும்

𑌸𑌚𑍍, 𑌅𑌸𑌚𑍍𑌚 — சத்தும் அசத்தும்
𑌅𑌹𑌮𑍇𑌵 — நானே.

ஓ! அர்ஜுன! நான் வெப்பத்தை உண்டாக்குகின்றேன். நான் மழையை வருஷிக்கிறேன். அதை வருஷிக்காமல் நிறுத்தவும் நிறுத்துகிறேன். சாகாமையும், சாவும், சத்தும், அசத்தும் நானே,

(1) தபாமி=நான் சூரியனாக விருந்து வெப்பத்தை யுண்டாக்குகிறேன் (ஸ்ரீதரர்); நான் அக்கினி, சூரியன், இந்த ரூபத்தினால் தபிப்பிக்கிறேன். (ராமாநுஜர்);

(2) ஸத்=தத்காலத்திலிருக்கும் வஸ்துக்கள். அசத், என்பது முன்னிருந்தவை, இனி வரப்போகிறவை (ராமாநுஜர்); ஸத், காரியம்; அஸத், காரணம் (இராகவேந்திரர்);

(சங்கர பாஷ்யம்) நான் ஸூர்யனாக விருந்துகொண்டு, கடுமையான சில கிரணங்களால் வெப்பத்தைத் தருகிறேன். சில கிரணங்களால் மழையை உண்டாக்குகிறேன். உண்டாக்கின பின்பு சில கிரணங்களால் மழையை எட்டுமாதம் நிறுத்துகின்றேன். மறுபடியும் அதை மற்ற நான்கு மாதங்களாகிய மாரிகாலத்தில் உண்டாக்குகின்றேன். நான் தேவர்களுடைய சாகாமையும், மனிதர்களுடைய சாவாகவு மிருக்கிறேன். எந்த காரியமானது எந்தக் காரணத்தோடுகூடி உள்ளதாகவாகின்றதோ, அதாவது வெளிப்படுகின்றதோ அது ஸத், (உள்ளது.) அதற்குமாறானது அஸத், (இல்லாதது) என்பது. பகவான், தான் உள்ளதாகவும், இல்லாததாகவு மிருக்கிறேன் என்றதினால், அவர் முற்றுமே இல்லாப் பொருளாக ஆகார். அவரது காரியமும் காரணமும் முறையே உண்மைப் பொருளும் இன்மைப் பொருளுமாக ஆகா. (இங்கே கார்யமென்பது, வெளிப்பட்ட நாமரூபங்கள், அதாவது பெயரையும் ரூபத்தையும்) காரணமென்றது வெளிப்படாத நாமரூபங்களை. ஆதாரமாகிய ப்ரஹ்மம் இல்லாவிட்டால் கார்ய காரணமென்னும் கற்பனையே நிலையாது. ஆதாரமாகிய கயிறு இல்லாவிட்டால், பாம்பு என்னும் கற்பனை நிகழாதவாறுபோல. ஸத், அஸத் என்பதைப்பற்றி 2-வது அத். சுலோ, 16, 11-வது அத்-சுலோ 37, 13-வது அத்-சுலோ 12-ம் பாஷ்யமும் பார்க்க. (19)

---

20. 𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌾𑌂𑌸𑍋𑌮𑌪𑌾𑌃 𑌪𑍂𑌤𑌪𑌾𑌪𑌾
𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑌿𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍇 ।
𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌲𑍋𑌕
𑌮𑌶𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 ॥

20. த்ரைவித்யா: = மாம் = ஸோமபா: = (1) பூதபாபா: = யஜ்ஞை: = இஷ்ட்வா = ஸ்வர்கதிம் = ப்ரார்த்தயந்தே | தே=புண்

யம் = ஆஸாத்ய = ஸுரேந்த்ரலோகம் = அஶ்நந்தி = திவ்யாந் = திவி = தேவபோகாந் ||

(யெ)	எவர்கள்
த்ரைவித்யா:	மூன்று வேதங்களையும் அறிந்தவர்களாய்
ஸோமபா:	சோமபானஞ் செய்தவர்களாய்
பூதபாபா:	பாபமற்றவர்களாய்
யஜ்ஞை:	யக்ஞங்களினுல்
மாம் இஷ்ட்வா	என்னை பூஜித்து
ஸ்வர்கதிம்	ஸ்வர்க்கமாகிய கதியை
ப்ரார்த்தயந்தே	பிரார்த்திக்கிருர்களோ
தே, புண்யம், ஸுரேந்த்ரலோகம், ஆஸாத்ய	அவர்கள் புண்ணியமான தேவேந்திர லோகத்தை அடைந்து
திவி, திவ்யாந்	ஸ்வர்க்கத்திலே திவ்வியமான
தேவ போகாந்	தேவர்களுடைய போகங்களை
அஶ்நந்தி	அனுபவிக்கிருர்கள்.

எவர்கள் மூன்று வேதங்களையும் அறிந்தவர்களாய் சோமபானஞ் செய்தவர்களாய் பாபத்தினின்று பரிசுத்தமானவர்களாய், ஸ்வர்க்கமாகிய கதியை வேண்டுகிருர்களோ அவர்கள் புண்ணிய பலனை தேவேந்திர லோகத்தை அடைந்து ஸ்வர்க்கத்திலே தேவர்களுடைய திவ்வியமான போகங்களை அநுபவிக்கிருர்கள்.

(1) ஸோமபா:—ஆட்டாங் கொடியிலிருந்து பிழிந்தெடுக்கப்படும் இரசத்தை வேத மந்திரங்களினுல் ஹோமஞ்செய்து மிச்சமானதை யஜமானன், ரித்விக்குகள் சாப்பிடுகிறதுண்டு. அப்படிச் சாப்பிட்டவர்கள் சோமபானஞ் செய்தவர்களென்று சொல்லப்படுகிருர்கள். (ஸ்வா)

(சங்கரர்) ஞானத்தை உணர்ந்த எந்த நிஷ்காமர்கள், ஒன்று என்னும் ஞானமும் வேறு என்னும் ஞானமுமாகிய இவைபோன்ற கீழ்க்கூறிய நிவிருத்தி வகையான ஞானயஜ்ஞங்களால் என்னைப் பூஜிப்பவராய்த் தொழுகிருர்களோ, அவர்கள் தம்தம் அநுபவ அறிவிற்கு ஏற்ப என்னையே அடைகிருர்கள். ஆனுல் எவர்கள் அஜ்ஞானிகளாய் ஆசா விஷயங்களை விரும்புகிறவர்களோ அவர்கள் ருக், யஜுஸ் ஸாமங்களை அறிந்தவர்களாய் ஸோமபானஞ் செய்தவராய் அந்த ஸோமபானத்தினுலேயே பாவத்தினின்றும் பரிசுத்தமானவராய் வஸுக்கள் முதலிய தேவர்களது வடிவத்தையுடைய என்னை அக்நிஷ்டோமம் முதலிய யாகங்களால் பூஜித்து ஸ்வர்க்கமாகிய கதியை விரும்புகிருர்கள். அவர்கள், நூறு யாகங்களினுல் அடைக்கூடிய இந்திரனது உலகைத்தாம் செய்த புண்ணியத்தின் பயனுக அடைந்து, மனிதர்கட்குக் கிடையாத தேவ போகங்களை அநுபவிக்கிருர்கள்.

(ஸ்ரீதரர்) மூன்று வேதங்களையும் அத்தியயனம் செய்கிறவர்கள் அல்லது அதின் அர்த்தவிசாரம் செய்கிறவர்கள் திரைவித்தியாள். என்றால், அந்த வேதங்களில் சொல்லியிருக்கிற விதமாய் யஜ்ஞாதிகளை அனுஷ்டிக்கிறவர்கள் தேவதாஸ்வரூபமாய் நானிருக்கிறே னென்பதை யறியாமல் பூஜிக்கிறார்கள். (மற்றவைகளில் வித்தியாசமில்லை).

(ராமாநுஜர்) வேதங்களை யறிந்தும், வேதாந்தத்தை (பிரம்மவித்தையை) அறியாமல் வேதோக்த கருமங்களை யனுஷ்டித்து என்னை தேவதா சுவரூபமா யறியாமல் பூஜிக்கிறார்கள். **𑌪𑍂𑌤𑌪𑌾𑌪𑌾𑌃** = சுவர்க்கத்தை யடைய விரோதமான பாபமற்றவர்களாய்.

(இராகவேந்திரர்) மூன்றுவேதங்களை யறிந்தவர்கள் விஷ்ணு சர்வோத்தமனென்று தெரிந்திருந்தபோதிலும், வேதத்தில் முதலெடுப்பில் சொல்லப்பட்டிருக்கிற சுவர்க்காதி பலனை உத்தேசித்து அந்நிய தேவதைகளை பஜிக்கவேண்டுமென்று தெரிந்து அனுஷ்டித்துக் கடைசியில் விஷ்ணுவாகிய எனக்கு சமர்ப்பணை செய்கிறார்கள். அவர்கள் சுவர்க்காதிகளை யடைய என்னைப் பிரார்த்திக்கிறார்கள். (20)

---

21. 𑌤𑍇 𑌤𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂
𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 ।
𑌏𑌵𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾
𑌗𑌤𑌾𑌗𑌤𑌂 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 ॥

21. தே = தம் = புக்த்வா = ஸ்வர்கலோகம் = விஶாலம் = க்ஷீணே = புண்யே = மர்த்யலோகம் = விஶந்தி | ஏவம் = த்ரயீ தர்மம் = அநுப்ரபந்நா: = கதாகதம் = காமகாமா: = லபந்தே ||

𑌤𑍇, 𑌤𑌂	அவர்கள் அந்த
𑌵𑌿𑌶𑌾𑌲𑌂, 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌂, 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	விசாலமான ஸ்வர்க்கலோகத்தை அநுபவித்து
𑌪𑍁𑌣𑍍𑌯𑍇, 𑌕𑍍𑌷𑍀𑌣𑍇	புண்ணியம் கழிந்துபோனவுடன்
𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂	மனுஷிய லோகத்தை
𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿	பிரவேசிக்கிறார்கள்
𑌏𑌵𑌂, 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑌂	இப்படி மூன்று வேதோக்த தர்மத்தை
𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌃	அநுஸரிப்பவர்களாய்
𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾𑌃	விஷய இச்சையுள்ளவர்களாய்
𑌗𑌤𑌾𑌗𑌤𑌂, 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇	போவதையும் வருவதையும் அடைகிறார்கள்.

அவர்கள் அந்த விஸ்தாரமான சுவர்க்கலோகத்தை யனுபவித்து புண்ணியம் நசித்தபின் மனுஷியலோகத்தை யடைகிறார்கள். இந்தப்படி வே

தோக்த தருமத்தை யனுசரித்தவராய் விஷய இச்சை யுள்ளவர்கள் ஜனன மரணத்தை யடைகிறார்கள்.

(சங்கரர்) அந்த ஸகாமர்கள் விஸ்தாரமான அந்த ஸ்வர்க்கலோகத்தில் அவர்கள் புண்ணியத்திற்குத்தக்க போகங்களை அநுபவித்து முடிந்தவுடன் மனுஷ்ய லோகத்தில் பிரவேசிக்கிறார்கள். அதாவது ஜனிக்கிறார்கள். முன் சொன்னபடி மூன்று வேதங்களில் விதிக்கப்பட்ட கேவலம் வைதிக கர்மத்தை மட்டும் அநுஷ்டித்து அவர்கள் போவதையும் வருவதையும் அதாவது ஜனனத்தையும் மரணத்தையும் அடைகிறார்கள். அதாவது ஸ்வதந்திரமான நிலையை ஓரிடத்தும் பெறுவதில்லை என்பது பொருள்.

(ஸ்வா) இதின் அத் - 8, சு - 25 ல் சொல்லப்பட்டிருக்கிற 𑌯𑍋𑌗𑍀 = புகைமார்க்கத்தில் போகிறவன் இந்த சுலோகத்தில் குறிப்பிடப்பட்டவனாகக் காணப்படுகிறான். (21)

---

22. 𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 ॥

22. அநந்யா: = (1) சிந்தயந்த: = மாம் = யே = ஜநா: = (2) பர்யுபாஸதே | தேஷாம் = நித்யாபியுக்தாநாம் = (3) யோகக்ஷேமம் = (4) வஹாமி = அஹம் ||

𑌯𑍇, 𑌜𑌨𑌾𑌃	எந்த ஜனங்கள்
𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌃	என்னைவிட அன்னியரல்லாதவராய்
𑌮𑌾𑌂, 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑌃	என்னையே தியானிப்பவராய்
𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇	எங்கும் உபாஸிக்கிறார்களோ
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂	எப்பொழுதும் தியானத்தில் நிலைத்திருக்கிற
𑌤𑍇𑌷𑌾𑌂, 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂	அந்த ஜனங்களுடைய யோகக்ஷேமத்தை
𑌅𑌹𑌂, 𑌵𑌹𑌾𑌮𑌿	நான் வஹிக்கிறேன்.

எந்த ஜனங்கள் தாங்கள் என்னை அன்றியில் வேறானவரல்லர் என்பதாய் என்னையே தியானித்து இடைவிடாமல் எங்கும் உபாசிக்கிறார்களோ, எப்போதும் தியான நிஷ்டையுள்ள அவர்களுடைய யோகக்ஷேமத்தை நானே வஹிக்கிறேன்.

(1) அநந்யா:—என்னை அந்நியமாயெண்ணாமல் நாராயணனானே அவர்களாத்மாவென்று சிந்தித்து(சங்கரர்)என்னைத்தவிர வேறே யாதொரு பிரயோஜனத்தை யிச்சிக்காமலென்னையே பரமபிரயோஜனமாக எண்ணித் தியானித்து (ராமாநுஜர்); என்னைக் காட்டிலும் பஜிக்கத்தகுந்த அன்னிய தெய்வமில்லை என்று எண்ணமுள்ளவர்களாய் (ஸ்ரீதரர்); சிந்தையற்று என்னையே சிந்தித்து (இராகவேந்திரர்).

(2) ஜநா:—ஸந்நியாஸிகளான ஜனங்கள் (**சங்கரர்**); மஹாத்மாக்கள் (**ராமாநுஜர்**).

(3) **நித்யாபியுக்தாநாம் = நித்யாபியோகிந:** (**சங்கரர்**) எப்போதும் என்னை யடையவேண்டுமென்று கருதிக்கொண்டிருக்கிற (**ராமாநுஜர்**); ஸர்வகாலத்திலும், சர்வ அவஸ்தையிலும் என்னை மறவாம லிருக்கிற (**மத்வர்**); ஸகலதேச காலங்களிலும், மனோவாக் காயங்களிலு விடைவிடாமல் என்னுடைய ஸேவையிலிருக்கிற (**இராகவேந்திரர்**).

(4) **யோகக்ஷேமம்**—அடையாததை யடைகிறது யோகம். அடைந்ததை ரக்ஷிக்கிறது க்ஷேமம், (**சங்கரர்**); தனிகளை யடைவது யோகம். அடைந்ததை ரக்ஷிப்பது க்ஷேமம். இப்படிப்பட்டதை அல்லது மோக்ஷத்தை (**ஸ்ரீதரர்**) என்னையடைவது யோகம். மறுபடி ஜனனமற்றுப்போவது க்ஷேமம் (**ராமாநுஜர்**) கிடையாதது கிடைத்தால் யோகம். அதை ரக்ஷிப்பது க்ஷேமம். அல்லது, மோக்ஷத்தில் சாசுவதமாயிருக்கிறது யோகக்ஷேமம், (**இராகவேந்திரர்**) (ஷூ) அத் - 2, சு - 45, பார்க்க.

(**சங்கரபாஷ்யம்**) இனி எவர்கள் ஆசை நீங்கினவர்களாய் ஸம்யக் தர்சினமுடையவர்களோ, அந்த ஸங்யாஸியான ஜனங்கள் அன்னிய பாவமில்லாதவராய், அதாவது பரமதேவரான ஸ்ரீநாராயணனை தங்கள் ஆத்மாவாகக் கொண்டவராய் அந்த ஆத்மாவையே தியானிப்பவராய் என்னை எங்குமுள்ள பொருளாகக் காண்கிறார்களோ அப்படிப்பட்ட, எப்பொழுதும் தியானத்தில் விடாமுயற்சியுள்ள பரமார்த்த தரிசிகளான அவர்களுக்கு, யோகக்ஷேமத்தை நான் நடத்துகிறேன். யோகம் என்பது அடையாததை அடைதல் க்ஷேமம் என்பது அதைக் காப்பாற்றுதல். "ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம்" "ஸசமமப்ரிய:" (7 வது அத் - சுலோ 18, 17) என்கிற காரணத்தினால் அவர்கள் என்னுடைய ஆத்மாவாகவும் எனக்குப் பிரியர்களாயும் இருக்கிறார்கள் என்க.

மற்ற பக்தர்களுக்கும் தான் பகவான் அவர்கள் யோகக்ஷேமத்தை நடத்தவே நடத்துகின்றார் என்பதும் உண்மைதான். ஆனால் இதுதான் அதில் வித்தியாஸம். மற்ற பக்தர்கள் எவர்களோ, அவர்கள் தங்களுக்காக யோகக்ஷேமத்தை தாங்களும் முயற்சிக்கிறார்கள். ஆனால் தங்களைக் காட்டிலும் வேறானதைக் காணாதவர்கள் தங்களுக்காக யோகக்ஷேமத்தை முயற்சிப்பதில்லை. அவர்கள் ஆத்மஞானிகள். ஜீவித்திருப்பதிலாயினும் மரணமடைவதிலாயினும் தாங்கள் ஆசை கொள்வதில்லையன்றோ? அவர்கள் பகவானை மாத்திரமே அடைக்கலமாகக் கொண்டவர்கள். ஆகவே பகவானே தான் அவர்களது யோகக்ஷேமத்தை நடத்துகிறார் என்பது. (22)

23. 𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 । *
𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ॥

23. யே = அபி = அந்யதேவதாஃ = பக்தாஃ = யஜந்தே = ச்ரத்தயா = அந்விதாஃ । தே = அபி = மாம் = ஏவ = கௌந்தேய = யஜந்தி = அவிதிபூர்வகம் ॥ (1)

𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯	ஓ! குந்திபுத்திரா!
𑌯𑍇𑌽𑌪𑌿	எவர்களும்
𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌭𑌕𑍍𑌤𑌾𑌃	வேறு தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய்
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌅𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃	நம்பிக்கையுடன் கூடினவர்களாய்க் கொண்டு
𑌯𑌜𑌨𑍍𑌤𑍇	(இதர தேவதைகளை) பூஜிக்கிறார்களோ
𑌤𑍇𑌽𑌪𑌿	அவர்களும்
𑌅𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂	விதிதப்பிய அஜ்ஞான பூர்வமாய்
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑌜𑌨𑍍𑌤𑌿	என்னையே பூஜிக்கிறார்கள்.

ஓ! குந்திபுத்திரா! எவர்களும் இதர தேவதைகளிடத்தில் பக்தியை உடையவர்களாய், நம்பிக்கையுடன் அதாவது ஆஸ்திக புத்தியோடு கூடினவர்களாய்க் கொண்டு அந்த அன்னிய தேவதைகளை பூஜிக்கிறார்களோ அவர்களும் அறியாமையோடு என்னையே பூஜிக்கிறார்கள், அதாவது நான் ஸகலத்திற்கும் ஆத்மாவாக யிருக்கிறேன் என்பதை அறியாமல், இந்திராதி தேவதைகளை என்னைக் காட்டிலும் அன்னியமென்று கற்பித்துக்கொண்டு பூஜித்தபோதிலும், வாஸ்தவத்தில் என்னையே பூஜிக்கிறார்கள்.

(1) அவிதிபூர்வகம்=வாஸுதேவனைக்காட்டிலும் வேறான வஸ்து கிடையாது என்கிற ஞானம்தான், விதிபூர்வகம் (பாஷ்யோத்கர்ஷதீபிகை) 16-வது அத்-சுலோ 17, பார்க்க.

(சங்கரர்) வேறு தேவதைகளும் நீங்களேயானால், அப்போது அவர்களுடைய பக்தர்களும் உங்களையேதான் பூஜிக்கிறார்கள் என்றால், அது எவ்வாறு உண்மை என்பது இதில் சொல்லப்படுகிறது. எந்த ஜனங்களும்கூட அன்னிய தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய் (பலன் கிடைக்கிறதென்கிற) நம்பிக்கையுடன்கூடி அந்த தேவதைகளைப் பூஜிக்கிறார்களோ, அவர்களும் என்னையே ஆராதிக்கிறவர்களானாலும், அஜ்ஞானபூர்வமாய் அறியாமையோடு என்னை ஆராதிக்கிறார்கள்.

(ராமாநுஜர்) இந்திராதி தேவதைகளிடத்தில் பக்தி சிரத்தையோடு கூடின யாதொரு ஜனங்கள் அந்த தேவதைகளை ஆராதித்தாலும் அவர்களும் என்னையே ஆராதித்தவர்களாகிறார்கள். எப்படியென்றால், இந்திராதி தேவதைகள் என்னுடைய சரீரமாகையாலும், இந்திராதி சப்தங்களுக்கு

நானே விஷயனுகையாலும், அந்த தேவதாசரீர ஆராதனையானது சரீரியான என்னை யாராதித்ததாகிறது. ஆனால், அவர்கள் சாக்ஷாத்தாக ஆத்மாவான என்னை யாராதிக்கவுமில்லை ; அந்த தேவதைகள் என்னுடைய சரீரமென்று தெரிந்து ஆராதிக்கவுமில்லை ; ஆகையால், கிரமமான விதமாய் ஆராதிக்க வில்லையென்று சொல்லப்பட்டது. (23)

* "𑌯𑌜𑌨𑍍𑌤𑌿", என்றும் பாடம் (ராமானுஜர்).

---

24. 𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚 |
𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ||

24. அஹம் = ஹி = ஸர்வயஜ்ஞாநாம் = போக்தா = ச = ப்ரபு: = ஏவ = ச | ந = து = மாம் = அபிஜாநந்தி = தத்வேந = அத: = ச்யவந்தி = தே ||

𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂	ஸகல யஜ்ஞங்களுக்கும்
𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚, 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃	போக்தாவும் பிரபுவும்
𑌅𑌹𑌮𑍇𑌵, 𑌹𑌿	நானே அன்றோ
𑌤𑍁	ஆனால்
𑌤𑍇	அவர்கள்
𑌮𑌾𑌂, 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨	என்னை உண்மையானபடி
𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿	அறிகிறதில்லை
𑌅𑌤𑌃, 𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿	ஆகையினாலே (யஜ்ஞபலனிலிருந்து அவர்கள்) நழுவுகிறார்கள்.

ஸகல யஜ்ஞபலன்களை யனுபவிப்பவனும், பலனைக்கொடுக்கிற சுவாமி யும், நானே. ஆனால் ஜனங்கள் என்னை எதார்த்தமாக அறிகிறதில்லை. ஆகை யால், (அன்னிய தேவதைகளைப் பூஜிக்கிற) அவர்கள் யஜ்ஞபலனிலிருந்து நழுவுகிறார்கள். அதாவது புநர்ஜன்மத்தை யடைகிறார்கள்.

(சங்கரர்) எதனால் அவர்கள் அவிதிபூர்வகமாக பூஜிக்கிறார்கள் என் பது இதில் சொல்லப்படுகிறது.

நான் சுருதியிலும் ஸ்மிருதியிலும் விதிக்கப்பட்ட ஸகல யஜ்ஞங்களையும், அந்தந்த தேவதா வடிவமாகப் புசிக்கின்றவனும், சொந்தக்காரனுமாக இருக் கின்றேன். நானன்றோ யஜ்ஞத்திற்குச் சொந்தக்காரன், "இச்சரீரத்திலே நானே தான் அதியஜ்ஞும் என்று எட்டாவது அத்தியாயம் நாலாவது சுலோ கத்தில் கூறப்பட்டுள்ளது. மற்று, அவர்கள் என்னை அவ்வாறு அறிவதில்லை; ஆகவே, அறியாமையோடு யாகஞ்செய்து யாகப்பயனிலிருந்து தவறுகிறார் கள். ("ஸகல யஜ்ஞங்களையும் வஸுக்கள் முதலிய அந்தந்த தேவதா வடிவ மாகப் புசிக்கிறவன் நான்தான்; அந்தர்யாமி வடிவமாக அந்தயஜ்ஞங்கட்குச் சொந்தக்காரனும் நான்தான்" என்பதைத் தெரிந்துகொள்ளாத வேறு தேவ

தாபக்தர்கள் அறியாமையினால் என்னிடத்துக் கர்மங்களை அர்பியாது, அக் கர்மங்கட்கு அழியும் பயனைப்பெற்று, அந்தந்த உலகங்கட்குச் சென்று மீண்டும் திரும்பி வருகிறார்களென்பது கருத்து.) (24)

---

25. 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ।
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌭𑍂𑌤𑍇𑌜𑍍𑌯𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑍋𑌽𑌪𑌿𑌮𑌾𑌮𑍍 ॥

25. யாந்தி = தேவவ்ரதா: = தேவாந் = பித்ரூந் = யாந்தி = பித்ருவ்ரதா: | பூதாநி = யாந்தி = பூதேஜ்யா: = யாந்தி = மத்யாஜிந: = அபி = மாம் || (1)

𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	தேவதைகளை யுத்தேசித்து விரதங்களைச் செய்கிறவர்கள் தேவதைகளை அடைகிறார்கள்
𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	பிதுருக்களைகுறித்து விரதத்தைச் செய்கிறவர்கள் பிதுருக்களை அடைகிறார்கள்
𑌭𑍂𑌤𑍇𑌜𑍍𑌯𑌾𑌃	பூதங்களைப் பூஜிக்கிறவர்கள்
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	பூதங்களை அடைகிறார்கள்
𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑍋𑌽𑌪𑌿	என்னை பூஜிக்கிறவர்களும்
𑌮𑌾𑌂, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	என்னையே அடைகிறார்கள்.

தேவதைகளை யுத்தேசித்து விரதங்களைச் செய்கிறவர்கள் தேவதைகளையும், பிதுருக்களைக் குறித்து விரதங்களைச் செய்கிறவர்கள் பிதுருக்களையும், விநாயகாதி (பூதக்கூட்டங்களின் பெயர். விக்கினேசுவரரல்ல) பூதங்களைப் பூஜிப்பவர்கள் அந்த பூதங்களையு மடைகிறார்கள். என்னைப் பூஜிப்பவர்கள் என்னையே யடைகிறார்கள். (தேவதை முதலியவர்களை யடைகிறார்களென்றால், அந்த தேவதைகள் முதலியவர்களுடைய லோகத்தை யடைகிறார்களென்பது தாத்பரியம். இதின் 7-வது அத்தியாயம், 23-வது சுலோகம் பார்க்க.)

(1) மாம்=நாசமற்ற பரமாத்மஸ்வரூபமான நாராயணனாகிய என்னை (ஸ்ரீதரர்).

(சங்கரர்) மற்று எவர்களும் வேறு தேவதைகளின்மேல் பக்தியுடைமையால், அறியாமையோடு என்னையே பஜிக்கிறார்களோ அவர்களுக்கும் யஜ்ஞத்தின் பயன் அவசியம் உண்டாவது, அதாவது அவர்களுக்கு திரும்பி வாராமை என்னும் பயன் இல்லையாயினும், அவர்கள் செய்கின்ற அந்தந்த தேவதா பூஜைக்குத் தக்கபடி நிச்சயமாகப் பயன் உண்டாவது எப்படி? என்பது சொல்லப்படுகிறது.

தேவர்களிடத்தில் வணங்குதல் பிரதக்ஷிணஞ் செய்தல் முதலிய நியமத்தையும், பக்தியையும் உடையவர்கள் தேவர்களை அடைகிறார்கள். சிரார்த்தம், முதலிய கர்மங்களிலே கருத்துள்ளவர்களாய் பிதிருக்களிடத்தில் பக்தி

யுள்ளவர்கள், அக்நிஷ்வாத்தர் முதலிய பிதிருக்களை அதாவது பிதிர்லோகத்தை அடைகிறார்கள். பூதங்களை பூஜிக்கிறவர்கள், விநாயகர்கள், மாதிரு கணங்கள், நான்கு பகினிகள் முதலான பூதங்களை அதாவது அவற்றின் உலகத்தை அடைகிறார்கள். என்னை பூஜிக்கும் தன்மையரான விஷ்ணுபக்தர்கள் என்னையே அடைகிறார்கள். சிரமம் ஒன்றாயிருந்தும் பேதையர்கள் என்னையே பூஜிப்பதில்லை. அறியாமையினாலென்க. ஆதலால் அவர்கள் அற்பப் பயனை அடைபவராயிருக்கிறார்கள் என்பது தேர்ந்த பொருள்.

(ராமாநுஜர்) இந்திராதி தேவதைகளைக் குறித்து யக்ஞஞ் செய்கிறேனென்று சங்கற்பம் செய்துகொண்டும், பிருதுக்களைக்குறித்து சிராத்தாதி செய்கிறேனென்று சங்கற்பஞ் செய்துகொண்டும், யக்ஷராக்ஷஸாதி பூதங்களைப் பூஜிக்கிறேனென்று சங்கற்பஞ் செய்துகொண்டும், தேவதாசரீரியும், பரமாத்மாவும், வாசுதேவனும், பகவானுமான என்னை உபாசிக்கிறதாக சங்கற்பஞ் செய்துகொண்டு மிருக்கிறவர்கள் யாரை யுபாசிக்கிறார்களோ, அவர்களையே யடைகிறார்கள். (25)

26· பத்ரம்புஷ்பம்ஃபலம்தோயம் யோமேபக்த்யாப்ரயச்சதி ।
ததஹம்பக்த்யுபஹ்ருதமச்நாமிப்ரயதாத்மந: ॥

26· பத்ரம் = புஷ்பம் = ஃபலம் = தோயம் = ய: = மே = பக்த்யா = (1) ப்ரயச்சதி । தத் = அஹம் = பக்த்யுபஹ்ருதம் = அச்நாமி = (2) ப்ரயதாத்மந: ॥ (3)

ய:, பத்ரம், புஷ்பம்	எவன், இலை, புஷ்பம்
ஃபலம், தோயம்	பழம், ஜலம் இவற்றை
மே, பக்த்யா	என்பொருட்டு பக்தியோடு
ப்ரயச்சதி	கொடுக்கின்றானோ
ப்ரயதாத்மந:	(அந்த) பரிசுத்த புத்தியுள்ளவன்
பக்த்யுபஹ்ருதம் தத்	பக்தியோடு கொடுக்கப்பட்ட அதை
அஹம் அச்நாமி	நான் புசிக்கின்றேன்.

எவன் என்பொருட்டு பக்தியோடு பத்திரம், புஷ்பம், பழம், ஜலம், இவைகளை நிவேதனஞ் செய்கிறானோ, சுத்தமாயிருக்கிற மனதை யுடையவனான அவனுடைய பக்தியினாலே கொடுக்கப்பட்ட அவைகளை நான் புசிக்கிறேன் அதாவது கிரஹித்து திருப்தியடைகிறேன்.

(1) பக்த்யா—எனக்கு அர்ப்பணஞ் செய்யாவிட்டால் தன்பிராணதாரண மாகமாட்டாதென்கிற எண்ணத்தோடு (ராமாநுஜர்).

(2) அச்நாமி=ம்ருஹ்ணாமி=வாங்கிக்கொள்ளுகிறேன். (சங்கரர்) நான் சர்வேசுவரனாயும், யாதொரு அபேக்ஷை முதலியவை யற்றவனாயுமிருந்தாலும், கிடைக்காதவஸ்து கிடைத்ததுபோல அங்கீகரிக்கிறேன்.

(இதற்கு ஆதாரம் மோக்ஷ தருமத்திலுள்ள அடியில்கண்ட சுலோகம்பார்க்க, "யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யுரேகாந்தகதபுத்திபி: | தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்" ஏகாந்த பக்தியுள்ளவர்களால் (ஈசுவரன்பொருட்டு) எந்தக்கிரியைகள் சமர்ப்பிக்கப்படுகின்றனவோ, அவைகளை பகவான் சிரசினல் அங்கீகரித்துக்கொள்ளுகிறார் (ராமானுஜர்).

(3) ப்ரயதாத்மந:=பரிசுத்த புத்தியுள்ளவன் (சங்கரர்); பகவானுக் கர்ப்பணஞ் செய்வதையே பரமப்பிரயோஜனமாக வெண்ணியிருக்கிற சுத்தமான மனதையுடைய (ராமானுஜர்); வைராக்கியத்தையுடைய (இராகவேந்திரர்).

(ஸார) என்னையே பூஜிக்கிற என்பக்தர்கள், மறுபடியும் திரும்பி வராமையென்னும் லக்ஷணத்தோடுகூடிய முடிவில்லாப்பயனை அடைவதுமாத்திரமல்ல, நானும் எளிதாகப் பூஜிக்கத்தக்கவன் அதாவது என்னைப் பூஜித்தலும் அவர்களுக்கு எப்படி சுலபமானது என்பதை பகவான் இதில் சொல்லுகிறார். பகவானைப் பூஜிக்க விசேஷ திரவியம் முதலானவைகள் சம்பாதிக்கவும், செலவுசெய்யவும், பிரயாசையடையவும் அவசியமில்லை. பலாபேக்ஷையன்றி பக்திபூர்வமாய் சுத்தமான மனதுடன் ஒரு பக்தனால் கொடுக்கப்படும் வஸ்துக்கள் எவ்வளவு அற்பமானாலும், பகவான் அந்த வஸ்துக்களை அதிகப் பிரியத்துடன் கிரகிக்கிறாரென்பது இதனால் வெளியிடப்பட்டது. விதுரர் அதிகப் பிரீதியுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்குக் கஞ்சிகொடுத்த விஷயத்தில் பகவான் அடைந்த சந்தோஷத்தைப்பற்றி மகாபாரதம் உத்தியோக பருவத்தையும், ஸுதாமா - என்கிற மறுபெயருடைய குசேலர், அதிகப் பிரீதியுடன், கிருஷ்ணபகவானுக்கு அவல் கொடுத்த விஷயத்தில் பகவான் அடைந்த சந்தோஷத்தைப்பற்றியும், பாகவதம் 10-வது ஸ்கந்தம், 81-வது அத்தியாயத்தையும் பார்க்க. (26)

* இந்த சுலோகத்தை ஸ்ரீபாகவதம் 10 - - 81 - 5 - ல் காண்க.

---

27. யத்கரோஷி யதச்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் |
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம் ||

27. யத் = க்ரோஷி = யத் = அஶ்நாஸி = யத் = ஜுஹோஷி = ததாஸி = யத் | யத் = தபஸ்யஸி = கௌந்தேய = தத்=குருஷ்வ = மதர்பணம் ||

கௌந்தேய	ஓ! குந்திபுத்திரா!
யத் கரோஷி	எதை செய்கிறாயோ
யத் அச்நாஸி	எதை புசிக்கிறாயோ
யத் ஜுஹோஷி	எதை ஹோமஞ் செய்கிறாயோ

യദ്ദദാസി	எதை தானமாகக் கொடுக்கிறாயோ
യത്തപസ്യസി	எந்தத் தபசைச் செய்கிறாயோ
തത് മദർപ്പണം	அதை எனக்கர்ப்பிதமாக
കുരുഷ്വ	செய்யக்கடவாய்.

ஓ! குந்திபுத்திரா! எதைச் செய்தாலும், எதைப் புசித்தாலும், எந்த ஹோமம் செய்தாலும், எதை தானஞ் செய்தாலும், எந்தத் தபசு செய்தாலும் அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்யக்கடவாய்.

(**சங்கரர்**) இவ்வாறு இருப்பதனால் ஓ! குந்திபுத்திரா நீ தானாக அமைந்த, அதாவது சாஸ்திரத்தால் அல்லாமல் பிராணிகளுடைய இயற்கைவசத்தால் அமைந்த நடத்தல் உண்ணுதல் முதலிய எதை செய்கின்றாயோ எதை புசிக்கின்றாயோ எந்த போகத்தை அனுபவிக்கின்றாயோ சுருதியிலாயினும் ஸ்மிருதியிலாயினும் விதிக்கப்பட்ட எந்தஹோமத்தைச்செய்து முடிக்கின்றாயோ பிராமணர் முதலானோருக்கு எந்தப் பொன்முதலியவற்றை கொடுக்கின்றாயோ எந்தத் தவத்தை அனுஷ்டிக்கின்றாயோ அவற்றையெல்லாம் எனக்கு அர்ப்பணமாகச் செய்யக்கடவாய்.

(**ஸ்ரீதரர்**) முந்திய சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற புஷ்பாதிகளைச் சம்பாதிக்கச் சொற்பப்பிரயாசை யாவதுண்டு; அந்தப் பிரயாசைகூட அவசியமில்லை எவனெவனுக்கு எதெது கிடைக்கிறதோ, எவனெதைச்செய்கிறானோ அதையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாய்ச் செய்யலாமென்பது கருத்து.

(**ராமானுஜர்**) லௌகிக வைதிகமான சகல விஷயங்களிலும் செய்யப்படும் காரிய மெல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணஞ் செய் என்பது கருத்து. (27)

---

28. ശുഭാശുഭഫലൈരേവം മോക്ഷ്യസേ കർമബന്ധനൈഃ ।
സംന്യാസയോഗയുക്താത്മാ വിമുക്തോ മാമുപൈഷ്യസി ॥

28. ശുഭാശുഭഫലൈഃ = ஏவம் = மோக்ஷ்யஸே = கர்மபந்தனைஃ । ஸந்யாஸயோகயுக்தாத்மா = விமுக்தஃ = மாம் = உபைஷ்யஸி ॥

ഏവം	இவ்விதமாய் (செய்வாயாகில்)
ശുഭാശുഭഫലൈഃ	சுபாசுபங்களைப் பலனாகவுடைய
കർമബന്ധനൈഃ	கர்மக் கட்டுகளினால்
മോക്ഷ്യസേ	விடப்படுவாய்
(ത്വം) സംന്യാസയോഗയുക്താത്മാ	நீ ஸந்யாஸயோகத்தோடு கூடியமனதை உடையவனாய்

𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃	கர்மக்கட்டினுல் விடுபட்டு
𑌮𑌾𑌮𑍁𑌪𑍈𑌷𑍍𑌯𑌸𑌿	என்னை வந்தடைவாய்.

இவ்விதமாய்க் கர்மங்களை என்னிடத்தில் அர்ப்பணம் செய்வாயானுல் சுபாசுப (புண்ணியபாப)ங்களை பலனுகவுடைய கர்மபந்தத்திலிருந்து விடுபட்டு என்னை வந்தடைவாய்.

(சங்கரர்) இவ்வாறு நீ செய்வாயாகில் அதனுல் உனக்கு எது உண்டாகும் என்பதைக் கேள். நீ சகலத்தையும் எனக்கு அர்ப்பணமாகச் செய்யும்பொழுது இஷ்ட அநிஷ்டபலன்களையுடைய கர்ம பந்தத்திலிருந்து விடுபடுவாய். ஸகலத்தையும் பகவானுன எனக்கு அர்ப்பிப்பதாயிருப்பதினுல் இது ஸந்யாஸம் என்பது (ஸந்யாஸம்-துறத்தல் இப்பதத்தின் அர்த்தத்தை 6-வது அத், 2-வது சுலோகம், 18-வது அத். 2-வது சுலோ-லும் காண்க;) கர்மமாயுள்ளதனுல் இது யோகமுமாம். ஆதலால் இதை ஸந்யாஸ யோகமெனப்பட்டது. நீ அந்த ஸந்யாஸ யோகத்தோடு கூடிய மனதை உடையவனுய் உயிரோடிருக்கும்பொழுதே பந்தத்தால் விடப்பட்டு சரீரம் மாய்ந்தவுடன் என்னை வந்து அடைவாய்.

(ராமாநுஜர்) நீ என் சேஷபூதனென்றும், என்னுல் ஏவப்படுகிறவனென்றும் தெரிந்து சகல கர்மங்களும் பகவதாராதன மென்கிற அநுசந்தானத்தோடு வைதிக லௌகிக கர்மங்களைச் செய்துகொண்டுவந்தால், பந்த நிவிருத்தி யடைந்து மோக்ஷமடைவாய் என்பது கருத்து. (28)

---

29. 𑌸𑌮𑍋𑌽𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌮𑍇 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌯𑍇 𑌭𑌜𑌨𑍍𑌤𑌿 𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌯𑌿 𑌤𑍇 𑌤𑍇𑌷𑍁 𑌚𑌾𑌪𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ *

29. ஸம: = அஹம் = ஸர்வபூதேஷு = ந = மே = த்வேஷ்ய: = அஸ்தி = ந = ப்ரிய: । யே = பஜந்தி = து = மாம் = பக்த்யா = மயி = தே = தேஷு = ச = அபி = அஹம் ॥

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁	ஸகலப் பிராணிகளிடத்திலேயும்
𑌅𑌹𑌂, 𑌸𑌮𑌃	நான் ஸமமாயிருக்கிறேன்
𑌮𑍇, 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑌃 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	எனக்கு சத்துருவில்லை
𑌪𑍍𑌰𑌿𑌯𑌃, 𑌨	பிரியமானவன் இல்லை
𑌤𑍁, 𑌯𑍇, 𑌮𑌾𑌂	ஆனுல் எவர்கள் என்னை
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾, 𑌭𑌜𑌂𑌤𑌿	பக்தியோடு பஜிக்கிறுர்களோ
𑌤𑍇, 𑌮𑌯𑌿 (𑌵𑌰𑍍𑌤𑌂𑌤𑍇)	அவர்கள் என்னிடத்திலிருக்கிறுர்கள்
𑌅𑌹𑌮𑌪𑌿	நானும்
𑌤𑍇𑌷𑍁𑌚 (𑌵𑌰𑍍𑌤𑍇)	அவர்களிடத்திலேயு மிருக்கிறேன்.

நான் சகலப்பிராணிகளிடத்திலும் சமமா யிருக்கிறேன், எனக்குச் சத்துருவுமில்லை, மித்திரனுமில்லை. யார் என்னை பக்தியினாலே பஜிக்கிறார்களோ அவர்கள் என்னிடத்தி லிருக்கிறார்கள். நானும் அவர்களிடத்தி லிருக்கிறேன்,

(**சங்கரபாஷ்யம்**) அப்படியானால் பகவான் விருப்பு வெறுப்புக்களை யுடையவர். ஏனெனில் அவர் பக்தர்களை அநுக்கிரகஞ்செய்கிறாரேயன்றி மற்றவர்களை அநுக்கிரகிக்கிறதில்லை, என்னும் ஆக்ஷேபணைக்கு ஸமாதானம் இதில் பகவானால் சொல்லப்படுகிறது.

நான் அக்நிபோல் இருக்கின்றேன். அதாவது எப்படி நெருப்பானது தூரத்திலுள்ளவர்களுக்குக் குளிரைப் போக்குவதில்லையோ, ஆனால் ஸமீபத்தில் செல்லுகிறவர்கள் குளிரைப் போக்குகின்றதோ அப்படியே நான் என்னுடைய பக்தர்களுக்கு அருள்புரிகின்றேன். மற்றையோர்க்கு இல்லை. ஈசுவரனாகிய என்னை எவர்கள் பக்தியோடு பஜிக்கிறார்களோ, அவர்கள் இயற்கையாகவே என்னிடத்தில் இருக்கிறார்கள். எனக்கு அவர்களிடத்திலுள்ள ஒருவிதபற்றினாலும் இல்லை. அவர்களிடத்தும் நான் இயல்பாகவே இருக்கின்றேன். மற்றவர்களிடத்திலில்லை. இவ்வளவினால் எனக்கு அவர்களிடத்தில் வெருப்பு இல்லை யென்க.

(**ஸ்ரீதரர்**) சகலப்பிராணிகளுக்கும் சமமாயிருக்கிற ஈசுவரன் அவருடைய பக்தர்களுக்குமட்டும் பலனைக்கொடுப்பது பக்ஷபாதமல்லவோ என்றால், அல்ல. அக்னியானது சகலருக்கும் பொதுவானாலும், அதை அடுத்துப் போனவனுடைய குளிரைப் போக்குகிறதும் அதை ஆசிரயித்தவனுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறதும் எப்படியோ, பொதுவான கற்பகவிருக்ஷமானது தன்னை விரும்பிவந்தவனுக்குமட்டும் பலனைக் கொடுப்பது எப்படியோ அப்படிப்போல பகவானுடைய மகிமையானது அவரை யடுத்தவனை ரக்ஷிக்கும்.

(**ராமாநுஜர்**) தேவ, மனுஷிய, பசு, பக்ஷிமுதலிய பிராணிகளில் நான் சமமாயிருக்கிறேன். அவர்களுடைய (ஆகார) ஆகாரம், சுவபாவம், ஞானம் இவைகளினாலே இவன் சிரேஷ்டனென்று ஒருவனைச் சேர்த்துக் கொள்ளுகிறதில்லை நிகிருஷ்டனென்று ஒருவனை விலக்குகிறதுமில்லை. (இதின் தாத்பரிய மென்னவென்றால், தேவதைகள் சிரேஷ்டர்கள் மனுஷியன் நிகிருஷ்டனென்பதும், மனுஷியன் சிரேஷ்டன் மிருகாதிகள் நிகிருஷ்டமென்பதும், பகவானுக்கில்லை யென்பதுதான்.)

(**இராகவேந்திரர்**) அவரவர்களுடைய பக்தி, துவேஷ மிதுகளுக்குத் தக்கபடி பலனைக் கொடுப்பதால், நான் பக்ஷபாதியல்ல. "அவர்கள் என்னிடத்தி லிருக்கிறார்கள்" என்றால், அவர்கள் என்னுடைய அதீனமா யிருக்கிறார்கள். "நான் அவர்களிடத்தி லிருக்கிறேன்" என்றால், நான் அவர்களுக்கு இஷ்டனாயும், பிரியனாயு மிருக்கிறேன். அல்லது அதீனனா யிருக்கிறேன்.

(ஸ்வ) பகவானை பஜித்தலென்பது, வர்ணம் ஆச்ரமம் முதலியவற்றின் தர்மங்களை, ஈசுவரார்ப்பணமாக அநுஷ்டிப்பது. இதற்கு பகவத்பக்தி என்று பெயர். இந்த பக்தியின் மஹிமையை நினைக்கவும் முடியாது. இது தான் மனதிலுள்ள அழுக்கை நீக்கி, புத்தியை சுத்தமாகத் திருத்துவது, இவ்வாறு இதனால் புத்தி திருந்தியவர்களுடைய சித்தமானது, பகவான் தோன்றி விளங்குவதற்கு ஏற்ற தகுதியைப் பெறுகின்றது. ஆகவே, 'அவர்கள் என்னிடத்தில் இருக்கிறார்கள்' என்றால், ரஜஸ், தமஸ், என்னும் அழுக்கு நீங்கி அதி ஸ்வச்சமாயுள்ள அவர்களுடைய அவ்வித அந்தக்கரணமானது எனது வடிவத்தை உள்ளபடி வாங்கிப் பிடித்துக்கொள்ளுகின்றது என்றபடி 'நான் அவர்களிடத்திலும் இருக்கிறேன்' என்றால் ஸூர்யனுடைய ஒளியானது எங்கும் உள்ளதாயினும் ஸ்வச்சமான கண்ணாடியில் பட்டமாத்திரத்தில் எப்படி விசேஷமாய் பிரதிபலிக்காமல் போகாதோ அப்படியே அவர்களுடை ஸ்வச்சமான சித்தத்திலே பகவான் அவசியம் விசேஷமாய் பிரதிபலிக்கிறார் என்றபடி. பகவான் எங்குமுள்ளவராயினும் பக்தர்களுடைய ஸ்வச்சமான சித்தத்திலே வெளிப்படுகிறார். பக்தர்களல்லாதவர்களுடைய அசுத்தமான சித்தத்திலே வெளிப்படுவதில்லை. ஆதலால் ஸூர்யனுக்கு கண்ணாடியில் விருப்பும், மண்ணாங்கட்டியில் வெறுப்பும் இல்லாதவாறுபோல, பகவானுக்கும் ஒருவனிடத்தில் விருப்பும், மற்றொருவனிடத்தில் வெறுப்புமில்லை யென்க. (29)

---

30. 𑌅𑌪𑌿 𑌚𑍇𑌤𑍍𑌸𑍁𑌦𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑍋 𑌭𑌜𑌤𑍇 𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌯𑌭𑌾𑌕𑍍 ।
𑌸𑌾𑌧𑍁𑌰𑍇𑌵 𑌸 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑍋 𑌹𑌿 𑌸𑌃 ॥ *

30. அபி=செத்=ஸுது³ராசார: = ஹஜதே=மாம்=(1) அநந்ய ஹாக் | ஸாது:=ஏவ=ஸ: = மந்தவ்ய: = ஸம்யக்=(2) வ்யவஸித:=ஹி=ஸ: ||

𑌸𑍁𑌦𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑍋𑌽𑌪𑌿	ஒருவன் அதிகதுராசாரமுடையவனானாலும்
𑌅𑌨𑌨𑍍𑌯𑌭𑌾𑌕𑍍	அன்னியதேவதையைப் பஜிக்காதவனாய்
𑌮𑌾𑌂, 𑌭𑌜𑌤𑍇𑌚𑍇𑌤𑍍	என்னை பஜிப்பானானால்
𑌸𑌃, 𑌸𑌾𑌧𑍁𑌰𑍇𑌵	அவனை நல்லவனாகவே
𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃	நினைக்கவேண்டும்
𑌹𑌿, 𑌸𑌃	ஏனென்றால் அவன்
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍, 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌃	நல்ல நிச்சயத்தை உடையவன்.

ஒருவன் அதிக துராசாரமுடையவனானாலும் அன்னிய தேவதைகளைப் பஜிக்காமல் என்னையே பஜிப்பானானால் அவனைச் சிரேஷ்டனாகவே தெரிந்து கொள்ளத்தக்கது. ஏனென்றால் அவன் நல்ல நிச்சயத்தை உடையவன்.

(1) மாம்=நாராயணனாகிய என்னை (ஸ்ரீதரர்).

(2) ஸம்யக்=ஈசுவரபஜனை செய்வதினாலேயே நான் கிருதார்த்தனாகவேண்டுமென்கிற நிச்சயமுடையவன் (ஸ்ரீதரர்).

(சங்கரர்) என்னிடத்தில் வைக்கும் பக்தியின் மஹிமையைக் கேள். அதிக துராசாரத்தை உடையவனாயிருந்தபோதிலும் அன்னிய பக்தியற்றவனாய், என்னையே பஜிக்கிற அவனை ஸதாசாரமுடையவனாகவே தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் அவன் நேரான உறுதியை உடையவன். துராசாரமுடையவனை ஸதாசாரமுடையவனாக எப்படி நினைப்பது என்றால் அவன் தனக்குள்ளேயுள்ள நேரான நிச்சயத்தின் வலிமையினால் வெளியிலுள்ள தீயொழுக்கமுடைமையை விட்டு சீக்கிரம் நல்லொழுக்கத்திலே மனமுடையவனாகிறான் என்று அடுத்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது.

(ராமாநுஜர்) வருணாசிரம தருமங்களுக்கு விரோதமாய் நடக்கிறதாகிய துராசாரமுடையவனானாலும், பஜனைதவிர வேறே பிரயோஜனமில்லையென்கிற நிச்சயத்துடன் என்னைப் பஜிப்பானானால், அவன் வைஷ்ணவ சிரேஷ்டன். (ஸஹ:) ஸாதுவ:=வெகுமானிக்கத் தகுந்தவன். முந்திய சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிற மகாத்மாக்களில் சேர்ந்தவன். நல்ல நிச்சயத்தோடு கூடினவன். இதின் தாத்பரிய மென்னவென்றால், சகல ஜகத்காரணனும், பரமாத்மாவாயும், சராசர சகலப் பிரபஞ்சத்திற்கும் சுவாமியாயுமிருக்கிற பகவானான நாராயணனனவர் எனக்கு குரு, சிநேகிதர் போக்கிய வஸ்துக்கள் என்கிற நிச்சயத்துடனே என்னைப் பஜிக்கிறதினால் சிரேஷ்டன்.

(இராகவேந்திரர்) சதாசாரமுள்ள சந்திரஸூரியாதிதேவதைஅம்சமான ரிஷிமுதலியவர்கள் தெய்வாதீனமாய் அதிகப் புண்ணியங்களைப் போக்கடிக்கும்படியான துராசாரமுள்ளவர்களாய்விட்டாலும், வேறே தேவதைகளைப் பஜிக்காமல், என்னையே பஜிப்பார்களாகில் அவர்களே சிரேஷ்டர்கள். ஏனென்றால், பகவத்தத்துவ நிச்சயமுள்ளவர்க ளானதினாலே.

(ஸ்வ) துராசாரமுடையவன் பகவானை பஜிப்பது துர்லபம். (30)

* இந்த சுலோகத்தை கருடபுராணம் அத் 219-6, 27-ல் காண்க.

---

31. க்ஷிப்ரம்஭வதிர்தர்மாத்மா ஶஶ்வச்சாந்திம்நிகச்சதி ।
கௌந்தேயப்ரதிஜாநீஹி நமேபக்தஃப்ரணஶ்யதி ॥ *

31. க்ஷிப்ரம் = ஭வதி = தர்மாத்மா = (1) ஶஶ்வத் = ஶாந்திம் = (2) நிகச்சதி । கௌந்தேய = ப்ரதிஜாநீஹி = (3) ந = மே = பக்தஃ = ப்ரணஶ்யதி ॥ (4)

(ஸஃ) க்ஷிப்ரம் — அவன் சீக்கிரமாக
தர்மாத்மா, ஭வதி — தர்மத்தில் மனமுடையவன் ஆகிறான்

ஶஶ்வத், ஶாந்திம்	எப்பொழுதும் ஒழிவை
நிக³ச்ச²தி	அடைகிறான்
கௌந்தேய	ஓ! குந்திபுத்திரா!
மே, ப⁴க்த:	என்னுடைய பக்தன்
ந ப்ரணஶ்யதி (இதி)	கெட்டுப்போகமாட்டான் என்று
ப்ரதிஜாநீஹி	நிச்சயமாய் பிரதிஜ்ஞை செய்.

முன்சொன்ன பக்தனானவன் சீக்கிரமாக தருமத்தில் மனமுடையவனாகிறான். ஸ்திரமான ஒழிவை யடைகிறான். ஓ! குந்தி புத்திரா! என்னுடைய பக்தன் கெட்டுப் போகமாட்டான் என்று நிச்சயமாய் நீ பிரதிஜ்ஞை செய்.

(1) *தர்மாத்மா*=தர்மத்தில் மனதுடையவனாகவே (*சங்கர்*) பஜனையிலேயே மனதுடையவனாக (*ராமாநுஜர்*).

(2) *ஶாந்திம்நிக³ச்ச²தி*=சாசுவதமாயும், புனர் ஜநநமற்றதாயுமிருக்கிற என்னுடைய பிராப்திக்குத் தடையாயுள்ள துராசாரத்திலிருந்து நிவிருத்தியை அடைகிறான். (ராமாநுஜர்); சாசுவதமான மோக்ஷத்தை யடைகிறான். (*இராகவேந்திரர்*).

(3) *ப்ரதிஜாநீஹி*=நிச்சயமான பிரதிக்ஞைசெய் (*சங்கரர்*) வாதஞ் செய்கிற சபையில் நகாரா அடித்துக்கொண்டும், கையை உயரவெடுத்துக் கொண்டும், துராசாரமுடையவனானாலும் என்பக்தன் கெட்டுப்போகிறதில்லையென்று சத்தியஞ்செய் (*ஸ்ரீதரர்*).

(4) *நப்ரணஶ்யதி*=பரிபூர்ணமான பக்தியையுடையவனாகவாகிறான். (*ராமாநுஜர்*) நரகம் முதலிய அநர்த்தத்தை யடைகிறதில்லை. (*இராகவேந்திரர்*).

(*சங்கரர்*) அந்தமுன்சொன்ன துராசாரமுடையோனாயினும் என்னையன்றி வேறு ஒன்றையும் பஜிக்காத என்பக்தன் அவ்வித அந்தரங்கமான அவனுள்ளேயுள்ள நல்ல நிச்சய சாமர்த்தியத்தினால், வெளி அநுஷ்டானத்தில் காணப்பட்ட துராசாரங்களை விட்டு, சீக்கிரம் தர்மத்தில் சித்தமுடையவனாகவே நித்தியமான உபசமனத்தை (தீயொழுக்கத்தின்றும் ஒழிதலை)அடைகிறான். ஓ! கௌந்தேயா! இதன் உண்மையைக் கேள்.

என்னிடத்தில் அந்தக்கரணத்தை நன்றாக வைத்திருக்கின்ற என்பக்தனானவன் ஒருபொழுதும் கெட்டுப்போகமாட்டான் என்று நீ நிச்சயமாய் பிரதிஜ்ஞை செய்.

(*மத்வர்*) இதில் சொல்லப்பட்டிருக்கிற பக்தன் தேவாம்சமுள்ளவன்.

* இந்த சுலோகத்தை கருடபுராணம் 4, 28-ல் காண்க.

32. 𑌮𑌾𑌂𑌹𑌿𑌪𑌾𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌽𑌪𑌿𑌸𑍍𑌯𑍁𑌃𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌪𑌿𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌪𑌰𑌾𑌂𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

32. மாம் = ஹி = பார்த = வ்யபாஶ்ரித்ய = யே = அபி = ஸ்யு: = பாபயோநய: । ஸ்த்ரிய: = வைஶ்யா: = தயா = ஶூத்ரா: = தே = அபி = யாந்தி = பராம் = கதிம் ॥

𑌹𑌿, 𑌪𑌾𑌰𑍍𑌥	ஏனென்றால், ஓ! பார்த்தா!
𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃	பாப ஜன்மங்களான
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃, 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌃	ஸ்திரீகளாகவும் வைச்யர்களாகவும்
𑌤𑌥𑌾, 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃	அப்படியே சூத்திரர்களாகவும்
𑌯𑍇𑌽𑌪𑌿, 𑌸𑍍𑌯𑍁𑌃	எவர்கள் இருக்கிறார்களோ
𑌤𑍇𑌽𑌪𑌿, 𑌮𑌾𑌂	அவர்களும்கூட, என்னை
𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯	ஆச்ரய அடைக்கலமாகக்கொண்டு
𑌪𑌰𑌾𑌂, 𑌗𑌤𑌿𑌂, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	உத்தமமான கதியை அடைகிறார்கள்.

ஏனென்றால் ஓ! பார்த்தா! எவர்கள் பாபப்பிறவிகளாகிய ஸ்திரீ ஜன்மம் வைசிய ஜன்மம் அப்படியே சூத்திரஜன்மம் இவைகளை அடைகிறார்களோ அவர்களும் கூட என்னையே அடைக்கலமாகக் கொண்டு, உத்தமமான கதியை அடைகிறார்கள்.

(**ஸ்வ**) இந்த சுலோகத்தில் பிரயோகிப்பட்டிருக்கிற "பாப யோநய:" என்கிற பதத்தை விசேஷணமாக எடுத்துக்கொண்டு பாபத்தினாலுண்டான ஜன்மங்களாகிய ஸ்திரீ, வைச்ய சூத்திரன் ஆகிய இந்தப் பிறவிகள் அதாவது ஸ்திரீ முதலிய ஜன்மங்கள் பாபத்தாலுண்டானதாக சங்கரர், ராமானுஜர், இராகவேந்திரர் முதலானவர்கள் தாத்பரியம் செய்திருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீதரர், தாத்பரியம் **𑌯𑍇𑌽𑌪𑌿**=எவர்கள், **𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃𑌸𑍍𑌯𑍁𑌃**=நிகிருஷ்ட ஜன்மங்களான அந்நியஜாதிகளாக விருக்கிறார்களோ **𑌯𑍇𑌽𑌪𑌿**=எவர்கள் **𑌤𑌥𑌾** அந்த மாதிரியான அதாவது வேதாத்தியயனம் முதலானது இல்லாததினால் அதிக நிகிருஷ்டர்களான, **𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃, 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃** = ஸ்திரீகளாகவும் சூத்திரர்களாகவும், **𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌃**=கேவலம் வைச்யர்களாகவும், அதாவது கிருஷி முதலிய தொழில்மாத்திரம் செய்துகொண்டிருக்கிற வைச்யர்களாகவுமிருக்கிறார்களோ, என்பது.

ஸ்திரீ முதலிய ஜன்மம் நிகிருஷ்ட ஜன்மம் என்பதற்கு, **𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌤𑌾𑌪𑌿𑌨𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍**, பார்க்க.

ஸ்திரீ முதலிய ஜன்மம் நிகிருஷ்டமென்பதின் தாத்பரியம், அவர்கள் ஆத்ம ஞானத்தை அடைவதற்கு அனுகூலமான ஸாதனம் ஸந்தர்பங்கள் அதிகமாக இல்லை என்பது. (32)

33. 𑌕𑌿𑌂𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃𑌪𑍁𑌣𑍍𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌸𑍁𑌖𑌂𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌭𑌜𑌸𑍍𑌵𑌮𑌾𑌮𑍍 ॥ *

33. கிம்=புநஃ = ப்ராஹ்மணாஃ = புண்யாஃ = பக்தாஃ = ராஜர்ஷயஃ= தথா । அநித்யம் = அஸுகம் = லோகம்=இமம்= ப்ராப்ய=பஜஸ்வ=மாம் ॥

𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃	புண்ணியவான்களாயும்
𑌭𑌕𑍍𑌤𑌾𑌃	பக்தியுடையவர்களாயுமுள்ள
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃	ப்ராஹ்மணர்களும்
𑌤𑌥𑌾	அப்படியே
𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌃	இராஜரிஷிகளும்
(𑌪𑌰𑌾𑌂, 𑌗𑌤𑌿𑌂, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿) 𑌇𑌤𑌿, 𑌕𑌿𑌂𑌪𑍁𑌨𑌃	மேலான கதியை அடைவார்களென்று சொல்லவும் வேண்டுமோ ?
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌂, 𑌅𑌸𑍁𑌖𑌂	நிலையற்றதும் சுகமற்றதுமான
𑌇𑌮𑌂, 𑌲𑍋𑌕𑌂	இந்த லோகத்தை
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯	அடைந்து (அடைந்திருக்கிற நீ)
𑌮𑌾𑌂 𑌭𑌜𑌸𑍍𑌵	என்னை பஜிக்கக்கடவாய்.

(ஸ்திரீ, சூத்திராதிகளே முன்சொன்னபடி நற்கதி யடைவார்களாகில்) புண்ணியவான்களாயும், பக்தியுடையவர்களாயுமுள்ள பிராமணர்களும், அப்படியே இராஜரிஷிகளும், உத்தம கதியை யடைவார்களென்று சொல்ல வேண்டுமோ? நிலையற்றவும், சுகமற்றவுமான இந்த உலகத்தை யடைந்திருக்கிற நீ என்னை பஜிக்கக்கடவாய்.

(சங்கரர்) பரிசுத்தமான பிறவியையுடைய பிராமணர்களான பக்தர்களும், அரசராயும் ரிஷிகளாயுமுள்ள ராஜரிஷிகளான பக்தரும் மேலான நிலையை பெருகிறார்களென்பது சொல்லவும் வேண்டுமோ? இவ்வாறுள்ளதனால், அநித்தியமான அதாவது க்ஷணப்பொழுதில் அழியும் தன்மையதாய், ஸுகமில்லாததுமான மனுஷ்யலோகத்தை அடைந்து, மோக்ஷத்திற்கு ஸாதனமானதும் கிடைப்பதற்கு அரிதானதுமான மனுஷ்யத் தன்மையைப் பெற்றவுடனே நீ என்னை ஸேவிக்கவேண்டும். (மனுஷ்ய தேகமில்லாமல் மற்ற பசு பக்ஷி தேகங்களிலே பகவானைத் தொழுவதற்கு யோக்கியதை இல்லை என்பது பொருள்.)

(இராகவேந்திரர்) (இவர் இந்த சுலோகத்தை முந்திய சுலோகத்துடன் சேர்த்து அந்வயஞ் செய்திருக்கிறார். அதாவது) பாபத்தினால் ஸ்திரீ ஜன்மமடைந்த புருஷர்களும், வைசிய சூத்திர ஜன்மமடைந்த பிராமணர்களும், பகவத் பக்தியினால் உத்தம கதியை யடைவார்கள், சுவபாவத்தினால் சூத்திராதி தாழ்ந்தவருணத்தார்களே பகவத் பக்தியினால் பிராமண, க்ஷத்திரிய ரிஷிமுதலிய உயர்ந்த பிறப்பையடைந்து கதியடையும் பக்ஷத்தில் பாபத்

தினுல் தாழ்ந்த ஜன்மமடைந்த, உயர்ந்த வருணத்தாராகிய பகவத் பக்தர்களுக்கு நற்கதியில் சந்தேகமென்ன? "𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌃" என்கிறவிடத்தில் சுவபாவத்தில் புருஷன் முதலியவர்களாயிருந்து, பாவத்தினுல் ஸ்திரீ முதலிய ஜன்மமடைந்தவர்கள் என்று அர்த்தமேயன்றி சுவபாவத்திலேயே ஸ்திரீ முதலியவர்களென்றர்த்தமல்ல. "𑌨 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌯𑌾𑌂 𑌤𑌿𑌵𑌾𑌂𑌸𑍍𑌵𑌸𑌾 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌚𑍈𑌵𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃" என்ற பிரமாணத்தினுல் சுவபாவத்தில் ஸ்திரீகளுக்குப் புருஷஜன்மங் கிடையாது. (33)

---

34. 𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 ।
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ *

34. மந்மநா:=பவ=மத்பக்த:=மத்யாஜீ=மாம்=நமஸ்குரு ।
மாம்=ஏவ=ஏஷ்யஸி=யுக்த்வா=ஏவம்=ஆத்மாநம்=
மத்பராயண: ॥

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌃	என்னிடத்தில் மனதைவைத்தவனும்
𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃	என்னிடத்தில் பக்தியுடையவனும்
𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀	என்னை யாராதிக்கிறவனும்
𑌭𑌵	ஆகக்கடவாய்
𑌮𑌾𑌂, 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁	என்னை நமஸ்காரஞ் செய்
𑌏𑌵𑌂, 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾	இவ்விதமாய் மனதை நிறுத்தி
𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃	என்னையே மேலான கதியாகக் கொண்டவனாய்
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂, 𑌮𑌾𑌮𑍇𑌵	ஆத்மாவாகிய என்னையே
𑌏𑌷𑍍𑌯𑌸𑌿	அடைவாய்.

என்னிடத்தில் மனதை வைத்தவனுகவும், என்னிடத்தில் பக்தியையுடையவனுகவும், என்னை பூஜிக்கும் தன்மையனுகவும் ஆகக்கடவாய். என்னை நமஸ்காரஞ்செய். இவ்விதமாய் மனதை என்னிடத்தில் வைத்து என்னையே மேலான கதியாகக் கொண்டவனு யாவாயானுல் ஸகலத்திற்கும் ஆத்மாவாகிய என்னையே வந்து அடைவாய்.

(சங்கரர்) என்னிடத்து, அதாவது வாசுதேவனுன என்னிடத்தில் மனதைத் திரடமாக நிறுத்தி, அப்படியே என்னிடத்து பக்தியுள்ளவனுகவும், என்னை பூஜிக்கும் தன்மை உடையவனுகவும் இருக்கவேண்டும். இவ்விதமாய் சித்தத்தை ஒரு நிலைப்படுத்தி பகவானிடத்திலே வைப்பாயாகில் என்னையே அடைவாய். நான் அன்றே ஸகல பூதங்களுக்கும் ஆத்மாவாகவும் அடையவேண்டிய மேலான கதியாகவும் இருக்கிறேன். அந்த இவ்வாறுள்ள என்னை, அதாவது ஈசுவரனுகிய ஆத்மாவை வந்தடைவாய் என்று கூட்டுக,

(ராமாநுஜர்.) மந்மநா: = சர்வேசுவரன், குற்றமற்றவன், அநந்த கல்யாண குணமுடையவன், சர்வக்ஞன், சத்தியசங்கற்பன், ஜகத்காரணன், பரப்பிரம்மம், புருஷோத்தமன், அரவிந்தாக்ஷன், நீலமேகவண்ணன், ஒரே காலத்தில் உதயமான அநேக சூரியர்களுடைய பிரகாசத்தைவிட அதிகப் பிரகாசமுள்ளவன், மகா அழகுள்ளவன், சிரேஷ்டமான நான்கு கைகளையுடையவன், மின்னற்கொடிபோலொத்த பீதாம்பரம் தரித்தவன், நிர்மலமான நவரத்தினங்களாலிழைத்த கிரீடகுண்டல ஹார கேயூர கடகங்கள் முதலிய ஆபரணங்களைத் தரித்தவன், அபாரகாருண்ணியம், சௌந்தரியம், நன்னடை, மதுரவாக்கு, கெம்பீரம், ஔதாரத்துவம், பக்தவாச்சல்லியம், இவை முதலிய அநேககுண சாகரன், சரணமடையத் தகுந்தவன், சர்வசுதந்திரன் ஆகிய என்னிடத்தில் ஒருபாத்திரத்தி லிருந்து மற்றொருபாத்திரத்தில் எண்ணெயை விட்டால் அந்த எண்ணெய்த் தாரையானது இரண்டு பாத்திரத்திற்கும் மத்தியில் இடைவிடாமல் ஒரேதாரையாயிருப்பதுபோல மனசை வைத்தவனாய், மத்யாஜீ பவ = உனக்கிஷ்டமான சகல வஸ்துக்களையும் எனக்கு ஒப்பிவித்துவிடு. மாம் நமஸ்குரு = பரமாத்மாவாயும் சர்வசேஷியாயுமிருக்கிற என்னிடத்தில் எப்போதும் அதிக வணக்கத்துடனிரு. மத்பராயண: = என்னையே எப்போதும் ஆசிரயித்திரு, என்பது தாத்பரியம்.

* இந்த சுலோகத்தைப் பவிஷ்யபுராணம் அத்-62, 4-18-19-ல், காண்க.

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்

யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே

ராஜவித்யா ராஜகுஹ்யயோகோ நாம

நவமோऽத்யாய:.

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துகளாக, ப்ரஹ்ம

வித்தையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற

ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே

இராஜவித்தியா இராஜகுஹ்ய யோகமென்கிற

ஒன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஶ்ரீரஸ்து

ஓம் ஸச்சிதாநந்தாய ஸர்வேஶ்வராய நம:.

விபூதியோக:

பத்தாவது அத்தியாயம்.

விபூதியோகம்.

ஶ்ரீபகவாநுவாச.

1. பூய ஏவ மஹாபாஹோ ஶ்ருணு மே பரமம் வச: |
யத்தே(அ)ஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா ||

1. பூய: = ஏவ = மஹாபாஹோ = ஶ்ருணு = மே = பரமம் = (1) வச: | யத் = தே = அஹம் = ப்ரீயமாணாய = (2) வக்ஷ்யாமி = ஹிதகாம்யயா || (3)

ஶ்ரீபகவாநுவாச	ஸ்ரீ பகவான் சொன்னது
மஹாபாஹோ	ஓ! தோள்வலியுடையவனே!
ப்ரீயமாணாய, தே	(என்வார்த்தையினால்) மகிழ்கின்ற உனக்கு
ஹிதகாம்யயா	நன்மையைக் கருதி
அஹம், யத், வக்ஷ்யாமி	நான் எதைச் சொல்லப்போகிறேனோ
தத், மே	அந்த என்னுடைய
பரமம், வச:	சிரேஷ்டமான வார்த்தையை
பூய ஏவ, ஶ்ருணு	மறுபடியும் கேள்.

ஸ்ரீ பகவான் சொன்னது:—ஓ! தோள்வலிமையுடைய அர்ஜுனா! என் வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சி யடைகின்ற உனக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்கிற பிரியத்தினால் நான் எதைச் சொல்லப்போகிறேனோ அந்த சிரேஷ்டமான என்னுடைய வார்த்தையை மறுபடியும் கேள்.

(1) **பரமம்**=பரமாத்ம சுவரூபத்தைப் பிரகாசிப்பிவிக்கிற (**சங்கரர்**); என்னுடைய மகிமையை யதிகமாய்த் தெரிவிக்கிற (**ராமாநுஜர்**).

(2) **ப்ரீயமாணாய**=என்வார்த்தையைக் கேட்டு, அமிருதபானம் செய்தவன்போல் சந்தோஷிக்கிற (**சங்கரர்**); என் மகிமைகளைக் கேட்டு பிரீதியடைந்திருக்கிற (**ராமாநுஜர்**); என் வார்த்தையைக்கேட்டு சந்தோஷித்திருக்கிற (**மத்வர்**); ப்ரியமாணாய = என்றும் சில பாடம்.

(3) **ஹிதகாம்யயா**=பக்தி அதிக விருத்தியாகிறதினாலே யுண்டாகும் பலனை நீ யடையவேண்டுமென்கிற இச்சையினாலே (**ராமாநுஜர்**).

(**சங்கரபாஷ்யம்**) 7-வது அத்தியாயத்திலும், 9-வது அத்தியாயத்திலும் பகவானுடைய தத்வமும், விபூதியும் எடுத்து விளக்கப்பட்டன. இனி இப்பொழுது எந்த எந்த பாவங்களில் பகவானை தியானிக்கத்தக்கவரோ அந்தந்த பொருள்களைக் கூறவேண்டும். பகவானுடைய உண்மை முன்னமேயே சொல்லப்பட்டதாயினும் அது அநுபவத்தால் கிரஹிப்பதற்கு (அறிவதற்கு) துர்லபமானதால் அதை மறுபடி சொல்லவேண்டுமென்று கருதி, பகவான் இதை ஆரம்பிக்கிறார்.

மஹாபாஹோ! நீ என்னுடைய வார்த்தையினால் அமிருதத்தை பானம் செய்தாற்போல் மிகவும் மகிழ்ச்சியடைகின்றாய். ஆதலின் நான் உனக்கு மேலான அதாவது எல்லாவற்றினும் உத்கிருஷ்டமான நிரதிசயவஸ்துவை வெளிப்படுத்துகின்ற வார்த்தையைச் சொல்லுகிறேன். அது உன் நன்மையைக் கருதி அதாவது அநுபவத்தால் அறிவதற்கு அரிதான மெய்யறிவை உனக்கு உண்டாக்கும் பொருட்டு. (1)

---

2. 𑌨 𑌮𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌨 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ।
𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌰𑍍𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

2. ந=மே=விது:=ஸுரகணா:= ப்ரபவம்=ந=மஹர்ஷய:।
அஹம் = ஆதி: = ஹி =தேவாநாம்= மஹர்ஷீணாம்=ச=
ஸர்வஶ: ॥

𑌮𑍇, 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂	என்னுடைய உத்பத்தியை
𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃	தேவர்களது கூட்டங்கள்
𑌨𑌵𑌿𑌦𑍁𑌃	அறியவில்லை
𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃, 𑌨	மஹர்ஷிகளும் அறியவில்லை
𑌹𑌿, 𑌅𑌹𑌂	ஏனென்றால், நான்
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂	தேவதைகளுக்கும்
𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂𑌚	மஹரிஷிகளுக்கும்
𑌸𑌰𑍍𑌵𑌶𑌃, 𑌆𑌦𑌿𑌃	எல்லாவிதங்களினாலும் முதலானவன்.

என்னுடைய உத்பத்தியை (அல்லது) பிரபாவத்தை தேவதைகளும் மகரிஷிகளும் அறியவில்லை. ஏனென்றால், நான் அவர்களுக்கு எல்லாவிதத்திலும் காரணமாயிருக்கிறேன்.

(**சங்கரர்**) எதற்காக இதைக் கூறுகிறேன் என்பதற்கு இதில் பகவான் காரணம் சொல்லுகிறார். ப்ரஹ்மா முதலிய தேவர்களது கூட்டங்கள் என்னுடைய பிரபு சக்தியின் அதிசயத்தை அல்லது உத்பத்தியை அறியவில்லை. ப்ருகு முதலான மகரிஷிகளும் அறியவில்லை. அவர்கள் எதனால் அறியவில்லை என்பது சொல்லுவோம். ஏனெனில், நான் தேவர்களுக்கும் மகரிஷிகளுக்கும் எவ்விதத்தாலும் முதலானவன் காரணமானவன் என்க.

(ராமாநுஜர்) தேவதைகளும் ரிஷிகளும் கண்ணுக்குக் காணாத வஸ்துக்களையும், சென்றகாலம் வரும் காலங்களில் நடந்த நடக்குஞ் சங்கதிகளையும் அறிய சக்தியுள்ளவர்கள். அவர்களுடைய ஞானமும் சக்தியும் மற்றவர்களைவிட அதிகமானது. அப்படியிருந்தும் அவர்கள் என்னுடைய நாம கரும சுவரூப சுவபாவாதி மகிமைகளை அறியவில்லை. ஏனென்றால், அவர்களுக்கு நான் ஆதிகாரணமா யிருக்கிறேன். என்னால் கொடுக்கப்பட்ட அவர்களுடைய ஞானாதிகள் அற்பமானவை. என்னுடைய சகல மகிமைகளையும் அறியப் போதுமானவையல்ல, என்பது தாத்பரியம். (2)

---

3. 𑌯𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌸𑌂𑌮𑍂𑌢𑌃 𑌸 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

3. *யஃ = மாம் = அஜம் = (1) அநாதிம் = ச = வேத்தி = லோகமஹேஶ்வரம் | அஸம்மூடஃ = ஸஃ = மர்த்யேஷு = ஸர்வபாபைஃ = ப்ரமுச்யதே ||*

𑌯𑌃, 𑌮𑌾𑌮𑍍	எவன் என்னை
𑌅𑌜𑌮𑍍, 𑌅𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚	பிறப்பற்றவனாகவும், அநாதியாகவும்
𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍	உலகங்களுக்கு பரமேச்வரனாகவும்
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿, 𑌸𑌃	அறிகின்றானோ, அவன்
𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁	மனிதர்களுக்குள்
𑌅𑌸𑌂𑌮𑍂𑌢𑌃	மயக்கமில்லாதவன்
𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃	சகல பாபங்களினாலும்
𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇	விடப்படுகிறான்.

எவன் என்னை ஆதியற்றவன் பிறப்பற்றவன் சகல உலகத்திற்கும் ஈசன் என்று இவ்வாறு அறிகிறானோ, அவன் மனிதர்களிலே மோஹம் நீங்கினவன். அதாவது, அஞ்ஞானமில்லாதவன்; சகல பாபங்களினின்றும் விடுபடுகிறான். (என்றால், இவ்விதமாகத் தியானித்து வந்தால், கர்மபந்தத்தினின்றும் விடுபடுவானென்பது).

(1) *அஜம்*—பிறப்பற்றவனுமல்லாமல், உற்பத்தியையுடைய அசேதன வஸ்துக்கள், சமுசாரியான சேதனவஸ்துக்கள், இவைகளுக்கும் வேறானவன். *(ராமாநுஜர்).*

(2) *அநாதிம்*—ஆதியற்றவனென்பது மல்லாமல், பிறப்பற்றுப்போன முக்தாளைப் பார்க்கிலும் வேறானவன். முக்தாளுக்குப் பிறப்பற்றுப்போனது, முக்தியை யடைந்த பின்பேயன்றி அவர்கள் அநாதியாய்ப் பிறப்பற்றவர்களல்ல. *(ராமாநுஜர்)*; *அநாதி*—*அ-ந-ஆதி*-*அ-ந*—சகல லோகங்களையும் சேஷ்டிப்பிக்கிறவன். *ஆதி*—சகல உலகங்களுக்கும் காரணன். *(மத்வர்)*.

அல்லது, அஸூநாம் = முக்கியப் பிராணனுக்கும் (வாயுவுக்கும்) ஆதி: = காரணன் *(இராகவேந்திரர்)*.

(3) லோகமஹேஶ்வரம் = பிரம்மா இந்திரன் முதலிய லோகாதிபதிகள் கருமங்களினாலே ஒவ்வொரு காலங்களிலே ஒவ்வொரு லோகாதிபத்தியத்தை யடைந்தார்கள்; அப்படியே யோகிகள் அணிமாதி அஷ்ட ஐசுவரியங்களை அடைந்தார்கள்; பகவானோ, அநாதியாய் சகல லோகங்களுக்கும் அந்த லோகாதிபதிகளுக்கும் ஈசுவரன் என்றும் *(ராமாநுஜர்.)*

(சங்கரர்) மேலும் நான் தேவர்களுக்கும், மகரிஷிகளுக்கும் ஆதியாதலால் எனக்கு வேறு ஒரு ஆதி என்பது இல்லை. ஆதலால் நான் பிறவாதவன், ஆதியு மில்லாதவன், ஆதியில்லாமை என்பது பிறவாமைக்குக் காரணம் என்க.

அஸம்மூட: = மயக்க மில்லாதவன். ஸர்வ பாபை:-என்றால், புத்தியோடும், புத்தி யில்லாமலும், அதாவது தெரிந்தும், தெரியாமலும் செய்யப்பட்ட ஸகல பாபங்களாலும் விடப்படுகிறான். (3)

---

4. புத்திர்ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: ஶம: |
ஸுகம் து:கம் பவோऽபாவோ பயம் சாபயமேவ ச ||

5. அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்தபோ தாநம் யஶோऽயஶ: |
பவந்தி பாவா பூதாநாம் மத்த ஏவ ப்ருதக்விதா: ||

4. புத்தி: = (1) ஜ்ஞாநம் = (2) அஸம்மோஹ: = (3) க்ஷமா = ஸத்யம் = தம: = ஶம: | ஸுகம் = து:கம் = பவ: = அபாவ: = பயம் = ச = அபயம் = ஏவ = ச ||

5. அஹிம்ஸா = ஸமதா = துஷ்டி: = தப: = தாநம் = யஶ: = அயஶ: | பவந்தி = பாவா: = பூதாநாம் = மத்த: = ஏவ = ப்ருதக் விதா: ||

புத்தி:, ஜ்ஞாநம்	புத்தி, ஞானம்
அஸம்மோஹ:	மோஹமின்மை
க்ஷமா, ஸத்யம்	பொறுமை, ஸத்தியம்
தம:, ஶம:	வெளி இந்திரிய அடக்கம், அந்தக்கரண ஒழிவு
ஸுகம், து:கம்	ஸுகம், துக்கம்
பவ:, அபாவ:	உத்பத்தி, நாசம்
பயம், ச அபயம் ச	பயமும், பயமில்லாமையும்
அஹிம்ஸா	பிராணிஹிம்ஸை செய்யாமை

ஸமதா, துஷ்டி꞉	சித்தம் ஸமமாயிருப்பது, திருப்தி
தப꞉, தா³நம்	தபசு, தானம்
யஶ꞉, அயஶ꞉	கீர்த்தி, அபகீர்த்தி (ஆகிய)
ப்ருத²க்³விதா⁴꞉, பா⁴வா꞉	பலவகையான, தன்மைகள்
பூ⁴தாநாம் ஏவ ச	பிராணிகளுக்காகவே
மத்த ஏவ, ப⁴வந்தி	என்னிடத்திலிருந்தே, உண்டாகின்றன.

புத்தி, ஞானம், மோகமின்மை, பொறுமை, சத்தியம் இந்திரிய நிக்கிரகம், அந்தக்கரண நிக்கிரகம், சுகம், துக்கம், உற்பத்தி, நாசம், பயம், அபயம், பிராணிகளுக்கு துன்பஞ் செய்யாமை, சித்தம் சமமாயிருத்தல், சந்தோஷம், தபசு, தானம், கீர்த்தி, அபகீர்த்தி இவைகள் பிராணிகளுக்கு என்னிடத்திலிருந்தே யுண்டாகின்றன.

(சங்கரர்) இந்தக் காரணத்தினுலும், லோகங்களுக்கு தான் பரமேசுவரன் என்பதை பகவான் இதில் கூறுகிருர்.

புத்தி=என்பது சூக்ஷ்மமான விஷயங்களை கிரகித்துக் கொள்ளும்படியான, அந்தக்கரணத்தின் ஸாமர்த்தியம் அல்லது திறமை. அதனை யுடையவனை யன்றோ, புத்திமான் என்று சொல்வது? **ஜ்ஞானம்** = என்பது ஆத்மா முதலிய பதார்த்தங்களை உணரும்படியான அறிவு. **மோஹமின்மை**= என்பது, தத் ஸமயத்தில் செய்யவேண்டியவற்றிலும், அறியவேண்டியவற்றிலும், விவேகத்தோடு பிரவிருத்தித்தல். **பொறுமை**=என்பது ஒருவன் வைதாலும் அடித்தாலும் அதனுல் மாருத மனமுள்ள தன்மை. **ஸத்யம்**= என்பது பிறனுடைய புத்தியில் படுவதற்காக, தனது அநுபவத்தைத் தான் பார்த்தபடியாயினும் கேட்டபடியாயினும் அப்படியே சொல்லப்படும் வார்த்தை. **த³மம்**=என்பது வெளி இந்திரியங்களை அமர்த்தி அடக்குதல். **ஶமம்**= என்பது அந்தக்கரணத்தின் உபசமனம் அதாவது அமைதியின் ஒழிபு. **ஸுகம்** = என்பது ஆஹ்லாதம் அதாவது களிப்பு. **து³꞉க²ம்** = என்பது ஸந்தாபம் அதாவது வருத்தம். (4)

அஹிம்ஸை = என்பது பிராணிகளுக்கு துன்பம் செய்யாமை. **ஸமதா** = விருப்பு வெறுப்புகளினுல் மாறுபடாமல் ஸமனுக நிற்கும் சித்தத்தை யுடைமை. **துஷ்டி꞉** = திருப்தி, ஸந்தோஷம் அதாவது கிடைத்த பொருள்களில் போதும் என்னும் எண்ணம். **தபசு** = இந்திரியங்களை ஒடுக்குதலோடுகூட தேகத்தை கஷ்டப்படுத்துவது. **தா³நம்** = சக்திக்குத்தக்கபடி பொருளைப் பிறருக்குப் பகுத்துக் கொடுத்தல். **யஶ꞉** = தர்மத்தாலுண்டாகும் புகழ்ச்சி **அயஶ꞉**=அதர்மத்தாலுண்டாகும் பழிப்பு அபகீர்த்தி, இந்த முன் சொன்ன பலவகையான தன்மைகள், ஈசுவரனுகிய என்னிடத்திலிருந்தே பிராணிகளுக்கு அவற்றின் கர்மத்திற்குத் தக்கபடி உண்டாகின்றன. (5)

(ராமாநுஜர்) புத்தி=என்பது மனதினுடைய நிரூபண சாமர்த்தியம். **ஜ்ஞாநம்** = சித சித் வஸ்துக்களுடைய நிச்சயம். **அஸம்மோஹ:**விபரமை நிவிருத்தி. **ஸுக:** = அநுகூலமான அநுபவத்தினு லுண்டாகிய மனநிலைமை. **பயம்** = இனி வரப்போகிற துக்கத்திற்கு ஏதுவான வஸ்துக்களைப் பார்ப்பதினுலுண்டாகும் துக்கம். **துஷ்டி:** = காணப்படும் சகல ஆத்மாக்களிடத்திலும் சந்தோஷப்படுதல். **தப:** = ஏற்பட்டிருக்கிற போகங்களைக் குறைத்து சாஸ்திரப்படி விரதங்களினுல் தேகத்தை வருந்தச் செய்தல். **தாநம்** = தனக்குச் சுகத்தைக் கொடுக்கிறதாகிய தன் சொந்தமான வஸ்துக்களைப் பிறருக்குக் கொடுத்தல். **யச:** = பிறர் நல்லவனென்று சொல்லுதல். **மத்த ஏவ** = என் சங்கற்பத்தினுலேயே உண்டாகின்றன.

(இராகவேந்திரர்) புத்தி = என்பது கார்யா கார்யங்களை நிச்சயிக்கிறது. **ஜ்ஞாநம்** = சாமான்னிய ஞானம். **அஸம்மோஹ:**=காரியங்களில் இச்சையின்மை. அல்லது மித்தியாஜ்ஞான மின்மை. **க்ஷமா** = துவேஷமற்றிருப்பது மல்லாமல், அபகாரம் செய்தாலுங் கூட உபகாரமே செய்வது. **ஸத்தியம்** = உண்மையான ஞானத்துடன் அநுஷ்டானஞ் செய்வது அல்லது, உண்மையான வசனம். **தம:** = இந்திரிய நிக்கிரகம். **சம:** = பகவன் நிஷ்டை. **தப:**=பிரம்மசாரி விருதம் முதலியவை 6 வது அத் - 46 வது சுலோகம் பார்க்க. **தாநம்**=தருமமாய் சம்பாதித்த வஸ்துக்களைப் பிறருக்குக் கொடுத்தல்.

---

6. மஹர்ஷய: ஸப்த பூர்வே சத்வாரோ மநவஸ்ததா |
மத்பாவா மாநஸா ஜாதா யேஷாம் லோக இமா: ப்ரஜா: ||

6. **மஹர்ஷய: = ஸப்த = பூர்வே = சத்வார: = மநவ: = ததா |
மத்பாவா: = மாநஸா: = ஜாதா: = யேஷாம் = லோகே =
இமா: = ப்ரஜா: ||**

லோகே	உலகத்திலுள்ள
இமா:, ப்ரஜா:	இந்தப் பிராணிகளெல்லாம்
யேஷாம் (ஸ்ருஷ்டி:)	எவர்களுடைய (சிருஷ்டியோ)
(தே) ஸப்த மஹர்ஷய:	(அந்த) ஏழுமஹரிஷிகளும்
ததா பூர்வே	அப்படியே பூர்வீகர்களான
சத்வார: மநவ:	(சாவர்ணிமுதலிய) நான்கு மனுக்களும்
மத்பாவா:	என்னுடைய தியானத்தை யுடையவர்களாய்
மாநஸா ஜாதா:	என்மனச் சங்கற்பத்தினு லுண்டாகி பிறந்தவர்கள்.

உலகத்திலேயுள்ள பிராணிகளெல்லாம் எவர்களால் உண்டானுர்களோ அப்படிப்பட்ட ப்ருகு முதலிய ஏழு மஹரிஷிகளும் அந்தப்படியே சென்ற காலத்தைச் சேர்ந்தவர்களான சாவர்ணி முதலிய நான்கு மநுக்களும் என்

னுடைய தியானத்தை உடையவர்களாய் என் மனச் சங்கற்பத்திலுலே உண்டாக்கப்பட்டவர்களாய்ப் பிறந்தவர்கள்.

(சங்கரர்) ப்ருகு முதலிய மஹரிஷிகள் ஏழு. சென்ற காலத்தைச் சேர்ந்த நான்கு மநுக்களும் "ஸாவர்ணர்கள்" என்று பிரஸித்தமானவர். அவர்கள் அனைவரும் என்னிடத்தில் கருத்தைச் செலுத்தியவர்கள். விஷ்ணுவினுடைய வல்லமையை உடையவர்கள். என்னால் மனதிலுலேயே உண்டாக்கப்பட்டவர்கள். உலகத்திலே இந்த சராசரங்களாகிய பிராணிகள், அந்த மநுக்கள். மஹரிஷிகள் என்பவர்களுடைய சிருஷ்டி என்க.

(ஸ்ரீதரர்) யேஷாம் லோகே இமா: ப்ரஜா:=உலகத்திலுள்ள பிரஜைகளெல்லாம், யேஷாம்=எவர்களுடைய சம்பந்தமாய், (எவர்களிடத்திலிருந்து,) ஜாதா வர்த்தந்தே=உண்டாயிருக்கிறார்களோ, தே=அந்த, ஸப்த மஹர்ஷய:=ஏழுரிஷிகளும், பூர்வே=அவர்களுக்கு முந்திய வர்களான, சத்வார:=ஸநகாதி நால்வரும், ததா=அப்படியே, மநவ:=சுவாயம்புவர் முதலிய மனுக்களும், மத்பாவா:=என்னுடைய பிரபாவத்தை யுடையவர்களாய், மாநஸா ஜாதா:=இரண்ணிய கர்ப்பரூபனன என் மனச் சங்கற்பத்தினு லுண்டானவர்கள். இவர்கள் உலகங்களைப் புத்திர, பௌத்திர, சிஷியாதி மூலமாய் சிருஷ்டித்தார்கள்.

(ராமாநுஜர்) பூர்வீகர்களும், கடந்துபோன மனுவந்தரத்தி லிருந்தவர்களுமான ப்ருகு முதலான ஏழு ரிஷிகளை எப்போதும் சிருஷ்டி நடந்து வரவேண்டியதற்காக பிரம்மாவானவர் மனதினுலே சிருஷ்டித்தார். சிருஷ்டியான பிரஜைகளின் சம்ரக்ஷணார்த்தம் நான்கு மனுக்களையும் பிரம்மாவானவர் மனதினுலேயே சிருஷ்டித்தார். சிருஷ்டிகாலம் தொடங்கி பிரளயகாலம் வரையில் அந்த ஏழு ரிஷிகள் சிருஷ்டித்துக்கொண்டும், அந்த நான்கு மனுக்கள், சிருஷ்டியான பிரஜைகளை சம்ரக்ஷணை செய்துகொண்டும் வருகிறார்கள். மத்பாவா: = அவர்கள் என்னுடைய சங்கற்பத்தை யநுசரித்து நடப்பவர்கள்.

(இராகவேந்திரர்) ஸப்த மஹர்ஷய: பூர்வே = பூர்வீகர்களான, "மரீசிரத்ர்யங்கிரஸௌ புலஸ்த்ய: புலஹ: க்ரது: வஸிஷ்டஶ்ச மஹாதேஜா: பூர்வே ஸப்தர்ஷய: ஸ்ம்ருதா:" என்றபடி மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலகர் *, கிரது, வசிஷ்டர், இந்த ஏழு ரிஷிகளும், சத்வார: மநவ: பூர்வே = பூர்வீகர்களான சுவாயம்புவர், சுவாரோசிஷர், ரைவதர், உத்தமர், இந்நான்கு மநுக்களும், மத்பாவா: மாநஸா ஜாதா: = என்னுடைய மனச்சங்கற்பத்தால் என்னிடத்திலிருந்து பிறந்தவர்கள். இவர்கள் சதுர்முகப்பிரம்மாவினிடத்திலிருந்து பிறந்ததாகச் சொல்லும் புராணாதிகளுக்கு, பிரம்மாவினுடைய அந்தர்யாமியான நான் பிரம்மா மூலமா யுண்டாக்கினே னென்பது தாத்பரியம்.

(வ்யா) விஷ்ணுபுராணம் முதலாவது அம்சம் 7-வது அத்தியாயத்தில் இந்தப் புலகரைச் சொல்லவில்லை; மற்ற 6-பெயர்களையும் ப்ருகு, தக்ஷர், நாரதர், இம்மூவரையும் சேர்த்து ஒன்பது பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நவப்பிரஜாபதிகளாக சொல்லப்பட்டிருக்கிறார்கள். மநுக்கள் பதினன்கு பெயர்கள் - அவர்களில் நாலுபெயர்களைப்பற்றி மட்டும் மேலாகச்சொல்லப்பட்டிருக்கிறதாகையால் அவர்களுடைய பெயர்களும்மற்றவர்களுடைய பெயர்களும் அடியில் குறிப்பிடப்படுகின்றன. (1) சுவாயம்புவர், இவர் வெளியிட்ட ஸ்மிருதிதான் இந்நாள்வரை மநுஸ்மிருதி என்று பிரசித்தமாய் வழங்கி வருகிறது. (2) சுவாரோசிஷர், (3) உத்தமர், (4) தாமஸர், (5) ரைவதர், (6) சாக்ஷுஷர், (7) வைவசுவதர், இவருடைய மனுவந்தரம் தான் இப்போது நடக்கிறது. இனி வரப்போகிற மநுக்களாவன— (8) சாவர்ணி, (9) தக்ஷசாவர்ணி, (10) பிரம்மசாவர்ணி, (11) தருமசாவர்ணி, (12) ருத்திரசாவர்ணி, (13) ரௌச்சியர், (14) ஹௌத்தியர். விஷ்ணுபுராணம் மூன்றாவது அம்சம், 1-2-அத்தியாயங்களைப் பார்க்க.

(ஸ்வ) இந்த சுலோகத்தின் தாத்பரிய மென்னவென்றால், பகவான் ஸகலத்திற்கும் காரணமானவர் மாத்திரமல்லர். முற்று முணர்ந்தவர், ஸகலத்தையும் ஆளுகிறவருமாம். அவர் மஹர்ஷிகளையும், மநுக்களையும் படைத்தார். ப்ருகு முதலாக வசிஷ்டர் வரையிலுள்ள மஹர்ஷிகள் முற்று முணர்ந்தவராய் வித்தியா ஸம்பிரதாயத்தை முதலில் உபதேசித்தவர்கள். மநுக்கள் தாமே ஆளுபவராய் பிராணிகளைக் காப்பாற்றினர்கள். மநுக்களும், மஹரிஷிகளும் ஆதிகாலத்தி லிருந்தார்கள். பகவானுடைய மனதிலிருந்து உண்டானவர்கள். தமது கருத்தை பகவானிடத்தில் செலுத்தி அதனால் விஷ்ணுவினுடைய வல்லமையைப்பெற்று ஞானத்தையும் அடைந்தார்கள். இவ்வுலகத்திலுள்ள இந்தப் பிராணிகளெல்லாம் பிறவியினாலும் வித்யையினாலும் அவருடைய ஸந்ததியாக விருக்கின்றன என்பது. (6)

---

7. ஏதாம் விபூதிம் யோகஞ்ச மம யோ வேத்தி தத்த்வத꞉ ।
ஸோऽவிகம்பேந யோகேந யுஜ்யதே நாத்ர ஸம்ஶய꞉ ॥

7. ஏதாம் = விபூதிம் = (1) யோகம் = (2) ச = மம = ய꞉ = வேத்தி = தத்வத꞉ । ஸ꞉ = அவிகம்பேந = யோகேந = (3) யுஜ்யதே = ந = அத்ர = ஸம்ஶய꞉ ॥

ய꞉, மம	எவன், என்னுடைய
ஏதாம், விபூதிம்	இந்த விபூதியையும் (வைபவத்தையும்)
யோகம், ச	யோகத்தையும்
தத்த்வத꞉, வேத்தி	உண்மையாக அறிகின்றனே
ஸ꞉, அவிகம்பேந	அவன், அசையாத

𑌯𑍋𑌗𑍇𑌨, 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 **யோகத்தோடு, கூடுகிறான்**
𑌅𑌤𑍍𑌰, 𑌸𑌂𑌶𑌯𑌃, 𑌨 **இதில், ஸந்தேகம், இல்லை.**

எவன் என்னுடைய மேற்சொன்ன விபூதி ரூபத்தையும், யோகைசுவரியத்தையும் வாஸ்தவமாக அறிகின்றானோ, அவன் நிச்சயமான யோகத்தோடு கூடினவனாகிறான். இந்த விஷயத்தில் சந்தேகமில்லை.

(1) 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂=விஸ்தாரம் **(சங்கரர்)**; சிருஷ்டி முதலிய பிரவிருத்தி **(ராமாநுஜர்)**; அநேக விபூதிரூபங்கள் **(ராகவேந்திரர்)**.

(2) 𑌯𑍋𑌗𑌂=யுக்தி, யோகைசுவரிய சாமர்த்தியம், **(சங்கரர்)**; அநந்த கல்யாண குணங்கள் **(ராமாநுஜர்)**; புத்தி முதலியவைகளை சிருஷ்டிக்கும் சாமார்த்தியம் **(இராகவேந்திரர்)**.

(3) 𑌯𑍋𑌗𑍇𑌨=மெய்ஞானத்தோடு **(சங்கரர்)**; பக்தி யோகத்தோடு **(ராமாநுஜர்)**; தியானம் செய்கிற உபாயத்தோடு **(இராகவேந்திரர்)**.

(சங்கரபாஷ்யம்) எவன் முன்சொன்னவிதமான என்னுடைய இந்த விபூதியையும் அதாவது விஸ்தாரத்தை அல்லது வைபவத்தையும், யோகத்தையும் உள்ளபடி அறிகின்றானோ அவன் மெய்யறிவிலே உறுதியாக நிலைத்தலென்னும் சலிக்காத யோகத்தோடு கூடுகிறான். இந்த விஷயத்தில் சந்தேகமில்லை. யோகம் என்பது, "யுக்தி" அமைப்பு, அந்தந்தப் பொருள்களைச் சிருஷ்டிக்கும் ஸாமர்த்தியம், யோக ஐச்வர்ய ஸாமர்த்தியம் அல்லது யோகத்தினால் உண்டாவது, பகவானை தியானிப்பதனால் உண்டாவது யோகமெனவும் சொல்லலாம். அந்த யோகம், பொருள்களைப் படைக்கும் வல்லமையும், ஆளுந்தன்மையின் வல்லமையும், ஸகலத்தையும் அறியுந்தன்மையுமாம் என்க.

(ஆனந்தகிரி) "பகவான் எங்குமுள்ளவராய் எல்லா வடிவமாக இருக்கிறார்" என்றும், மநுக்களும், மஹரிஷிகளும் அப்பகவானுடைய அறிவு வல்லமைகளின் ஒரு சிறு துளியைப் பெற்று அதனால் ஞானிகளாயும், ஸாமர்த்தியவான்களாயும் ஆனார்கள் என்றும் எவன் அறிகிறானோ அவன் ஸமாதி யோகத்தைக் கூடுகிறான். ஆகவே ஸகுண ப்ரஹ்மத்தை உணர்தல் நிர்க்குண பிரஹ்மத்தை உணர்தற்கு வழி என்பதாம். (7)

* **𑌅𑌵𑌿𑌕𑌂𑌪𑍇𑌨**=என்றும் ஒரு பாடம். ஒருவராலும் அசைக்கக் கூடாத, என்று அர்த்தம்.

---

8. 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌬𑍁𑌧𑌾 𑌭𑌾𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥

8. **அஹம்=ஸர்வஸ்ய=(1) ப்ரபவ:=(2) மத்த:=ஸர்வம்=(3) ப்ரவர்த்தே| இதி=மத்வா=(4) பஜந்தே = (5) மாம்=புதா: = பாவஸமந்விதா:||**

அஹம், ஸர்வஸ்ய,	நான், ஸகலத்திற்கும்
ப்ரபவ꞉	உற்பத்திஸ்தானம்
மத்த꞉, ஸர்வம்	என்னிடத்திலிருந்தே, ஸகலமும்
ப்ரவர்த்ததே	பிரவிருத்திக்கின்றது
இதி, மத்வா, புதா⁴꞉	இவ்வாறு, அறிந்து, ஞானிகள்
பா⁴வஸமந்விதா꞉	தியானத்தோடு கூடினவராய்
மாம், பஜந்தே	என்னை பஜிக்கிறார்கள்.

நான் சகல ஜகத்திற்கும் உற்பத்திகாரணன்; என்னிடத்திலிருந்தே சகலமும் பிரவிருத்திக்கின்றது. இவ்விதமாகத் தெரிந்து ஞானிகள் தியானத்தோடு கூடியவராய் என்னை பஜிக்கிறார்கள்.

(1) ஸர்வஸ்ய = விசித்திர சித் - அசித் - பிரபஞ்சங்களுக்கு (ராமாநுஜர்)

(2) ப்ரபவ꞉=ப்ருகு மநுமுதலியவர்கள் மூலமா யுற்பத்திகாரணன் (ஸ்ரீதரர்).

(3) ஸர்வம்=புத்திஞானம் அஸம்மோகம் முதலியன (ஸ்ரீதரர்).

(4) மத்வா = என்னுடைய அநந்த கல்யாண குணகெணயோகத்தைத் தெரிந்து (ராமாநுஜர்).

(5) பஜந்தே=அர்ச்சனை தியானம் முதலியவைகளினால் பஜிக்கிறார்கள் (இராகவேந்திரர்)

(சங்கரர்) அவ்வித சலிக்காத யோகத்தோடு கூடுகிறான் என்பது இதில் சொல்லப்படுகிறது. வாஸுதேவனென்னும் பெயருடைய, பரப்ரஹமமாகிய நான் எல்லா ஜகத்திற்கும் உற்பத்தியிடம். இருப்பு, நாசம், தொழில், கர்மபலன்கள், அவைகளின் அநுபவம் என்னும் விகாரரூபமான பிரபஞ்சமெல்லாம் என்னிடத்திலிருந்தே தோன்றி விரிகின்றன. பரமார்த்த உண்மையை உணர்ந்த ஞானிகள் இவ்விதமாக பகவானுடைய மஹிமையை அறிந்து, பரமார்த்த உண்மையிலே அதிக ஆவலோடு விடாமுயற்சியுள்ளவராய் என்னை பஜிக்கிறார்கள், சேவிக்கிறார்கள்.

(இராகவேந்திரர்) இந்த சுலோகத்தின் முந்திய அரைசுலோகத்திலேயே, மாம் (என்னை) என்கிற அர்த்தம் கிடைத்திருக்கையில், பிந்திய அரைசுலோகத்தில், மாம் (என்னை) என்று பிரயோகித்ததின் உத்தேசமென்னவென்றால், ஜீவேசுவர பேதத்தைக் குறிப்பிடும் பொருட்டே.

---

9. மச்சித்தா மத்³க³தப்ராணா போ³த⁴யந்த꞉ பரஸ்பரம் ।
கத²யந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥

9. மச்சித்தா: = மத்கதப்ராணா: = போதயந்த: = (1) பரஸ்பரம் | கதயந்த: = ச = மாம் = நித்யம் = துஷ்யந்தி = (2) ச = ரமந்தி = ச ||

மச்சித்தா:	(அவர்கள்) என்னிடத்து சித்தத்தை வைத்தவர்களாயும்
மத்கதப்ராணா:	என்னிடத்து பிராணனை அர்ப்பித்தவர்களாயும்
மாம், பரஸ்பரம்	என்னை, ஒருவர்க்கொருவர்
போதயந்த:	போதனை செய்துகொள்பவராயும்
கதயந்தஶ்ச	என்னை கீர்த்தனஞ் செய்கிறவர்களாயும்
நித்யம், துஷ்யந்தி ச	எப்பொழுதும் சந்தோஷிக்கிறார்கள்
ரமந்தி ச	மகிழ்ச்சியு மடைகிறார்கள்.

(முன்சொன்ன அவர்கள்) என்னிடத்து சித்தத்தை வைத்தவர்களாயும் என்னிடத்தில் பிராணன்களை அர்ப்பித்தவர்களாயும், என்னைக் (குறித்து) ஒருவருக்கொருவர் போதித்துக்கொண்டும் என்னைக் கீர்த்தனம் செய்கிறவர்களாயும், எப்போதும் சந்தோஷிக்கிறார்கள். மகிழ்ச்சியும் அடைகிறார்கள்.

(1) போதயந்த:=தாங்கள் அநுபவித்த பகவானுடைய குணங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் (ராமாநுஜர்).

(2) துஷ்யந்தி=விஷயங்களி லிருந்து நிவிருத்தி யடைகிறார்கள் (இராகவேந்திரர்); பகவத்குணங்களைச் சொல்வதினால் சந்தோஷப்படுகிறார்கள்; ரமந்தி=பகவத்குணங்களைக் கேட்பதினால் அதிகமான பிரீதியுடன் ஆனந்தமடைகிறார்கள் (ராமாநுஜர்).

(சங்கரர்) அன்றியும் முன்சொன்ன அவர்கள் என்னிடத்து சித்தத்தை வைத்தவர்கள். மத்கதப்ராணா:=என்னை வந்தடைந்த பிராணன்களை, கண்முதலிய இந்திரியங்களை யுடையவர்கள், அதாவது இந்திரியங்கள் என்னிடத்து ஒடுங்கியவர்கள். அல்லது என்னிடத்து உயிரை அர்ப்பித்தவர்கள் என்க. ஞானம், பலம், வீர்யம் முதலிய தர்மங்களையுடைய என்னை, ஒருவர்க்கொருவர் போதிக்கிறவர்கள், கீர்த்தனம் செய்கிறவர்கள். இவ்விதமாக அவர்கள் சந்தோஷிக்கிறார்கள். திருப்தி யடைகிறார்கள்; ரமந்தி=காதலருடைய சேர்க்கையினால்போல, மகிழ்ச்சியையும் அடைகிறார்கள். (9)

---

10. தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் |
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ||

10. தேஷாம் = ஸததயுக்தாநாம் = ஭ஜதாம் = ப்ரீதிபூர்வகம் |
ததாமி = புத்தியோகம் = தம் = யேந = மாம் = உபயா
ந்தி = தே ||

யேந, யேந	(முன்சொன்ன) அவர்கள், எதனுல்
மாம், உபயாந்தி	என்னை அடைகிருர்களோ
தம், புத்தியோகம்	அந்த, புத்தியோகத்தை
ப்ரீதிபூர்வகம், ஭ஜதாம், ஸததயுக்தாநாம்	அன்போடு பஜிக்கிறவர்களாயும் எப்பொழுதும் என்னிடத்தில் மனதை உடையவர்களாயுமிருக்கிற
தேஷாம் ததாமி	அவர்களுக்கு (நான்) கொடுக்கிறேன்.

(முன்சொன்ன) அவர்களுக்கு, அதாவது அப்பொழுதும் என்னிடத்தில் மனதை உடையவர்களாய் அன்போடு பஜிக்கிறவர்களுக்கு, எதனுல் என்னை அவர்கள் அடைகிருர்களோ அந்த புத்தியோகத்தை நான் கொடுக்கிறேன்.

(1) புத்தியோகம் = புத்தி = ஆத்மதத்துவ விஷயமான நிச்சயஞானம். யோகஃ = அந்த ஞானத்தில் பற்றுதல் (சங்கரர்); ஞான யோகத்தை (ஸ்ரீதரர்); ஞானரூபமாகிற முக்தியினுபாயத்தை (இராகவேந்திரர்) பரிபக்குவ தெசையை அடைந்திருக்கிற புத்தியோகத்தை. ஸத்தயுக்தாநாம்=எப்போதும் என்னிடத்தில் சேர்ந்திருக்கவேண்டுமென்கிற கோரிக்கையை யுடையவர்களாயு மிருக்கிற அவர்களுக்கு, ததாமி-பிரீதபூர்வகமாக புத்தியோகத்தை நான் கொடுக்கிறேன். (ராமாநுஜர்).

(சங்கரர்) முன்சொன்ன பிரகாரம் எவர்கள் பக்தியோடு கூடினவர்களாய் என்னை பஜிக்கிருர்களோ அவர்களுக்கு. திரவியத்தை வேண்டுதல் முதலிய காரணத்தினுலே இவர் பகவானைத் தொழுகிறவர்கள் அன்று, மற்று அன்பினுல்; எப்பொழுதும் விடாமுயற்சியுள்ளவராய், சினேகத்தினுல் என்னைத் தொழுகிறவர்களுக்கு, அவர்கள் மெய்யறிவாகிய எந்த ஞான யோகத்தினுல், பரமேசுவரனுன ஆத்மாவாகிய என்னைத் தமது ஆத்மாவாக அறிகிருர்களோ, அந்த புத்தியோகத்தை, அதாவது ஞானயோகத்தை, என் உண்மையைப்பற்றிய மெய்யறிவோடு கூடுதலைக் கொடுக்கிறேன். இந்த யோகத்திற்கு உரியவர், யார்? என்றுல், எவர்கள் இந்த 9-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறபடி என்னிடத்தில் சித்தத்தை உடையவராதல் முதலிய விதங்களால் என்னைத் தொழுகிருர்களோ, அவர்கள். (10)

---

11. தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தமஃ |
நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா ||

11. தேஷாம் = ஏவ = அநுகம்பார்த்தம் = அஹம் = அஜ்ஞாநஜம் = (1) தம: । நாஶயாமி = ஆத்மபாவஸ்த: = ஜ்ஞாநதீபேந = பாஸ்வதா ॥

𑌤𑍇𑌷𑌾𑌂, 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂, 𑌤𑌮𑌃	அவர்களுக்கு, அக்ஞானத்தினுலுண்டான இருட்டை
𑌅𑌹𑌂 𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌃	நான் அவர்கள் அந்தக்கரணவிருத்தியிலிருந்துகொண்டு
𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨	ஒளியையுடைய ஞானமாகிற தீபத்தினுல்
𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵	கருணையினுலேயே
𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑌿	போக்கடிக்கிறேன்.

அந்த பக்தர்களுக்கு அக்ஞானத்தினுல் உண்டாயிருக்கிற ஸம்சாரமாகிய அந்தகாரத்தை (இருட்டை) நான் அவர்களுடைய புத்தியிலிருந்துகொண்டு பிரகாசித்துக்கொண்டிருக்கிற ஞானமாகிற தீபத்தினுல் கருணையினுலேயே போக்கடிக்கிறேன்.

(1) **அஜ்ஞானஜம்**—என்னுடைய ஞானமடைவதற்குவிரோதியான பிராசீன கருமரூபமாகிய அக்ஞானத்தினுலுண்டான. **தம:**— அசத்தியத்தைச் சத்தியமாக கிரகிக்கிறதாகிய மோகாந்தகாரத்தை **(சங்கரர்)**; சுகதுக்கரூபமான பந்தத்தை **(இராகவேந்திரர்)** நெடுநாளாய் அனுசரித்து வந்த விஷயாபிமானமாகிற அக்ஞானத்தை. **ஜ்ஞாநதீபேந**—அவர்களுடைய மனேவிருத்தியில் தியானத்திற்கு விஷயனுக விருந்து கொண்டும், என்னுடைய அநந்தகல்யாணகுணங்களை பிரகாசிப்பித்துக்கொண்டும்.

(சங்கரர்) எதற்காக, உங்களுடைய அந்த பக்தர்களுக்குப் புத்தியோகத்தை தந்தருளுகிறீர்? இந்த புத்தியோகமானது உம்மை அடைவதற்கு தடை செய்கின்ற எதனை நாசம் செய்கின்றது? என்று கேட்கும் விஷயத்தில் அதற்கு பகவான் இதில் அருளிச் செய்கிறுர். நான், கருணையினுலே, அதாவது பக்தர்களுக்கு எவ்வாறு நன்மை உண்டாகுமோ என்கிற இரக்கத்தினுலே, அவிவேகத்தினுலுண்டான பொய்யறிவாகிய மோஹ இருட்டை, என்னிடத்தில் நிலைத்ததான அவர்களுடைய அந்தக்கரண விருத்தியிலே இருந்துகொண்டு ஞானமாகிற விளக்கினுல் தொலைக்கிறேன். அந்த ஞானமாகிற விளக்கானது, விவேக உணர்வை உருவாக உடையது; பக்தியினுல் வருவதான பகவானுடைய அநுக்கிரகமென்னும் எண்ணெயினுல் நனைக்கப்பெற்றது. என்னை தியானிக்க வேண்டுமென்கிற விடாமுயற்சி என்னும் (விளங்கச் செய்கிற) காற்றினுல் விசிறப்பெற்றது. ப்ரஹ்மசர்யம் முதலிய ஸாதன ஸம்ஸ்காரத்தினுலுண்டான பிரக்ஞை (விவேகம்) யாகிற திரி (வர்த்தி அல்லது வத்தி) யாகவுடையது. விரக்தியையுடைய அதாவது ஆசைநீங்கிய அந்தக்கரணமாகிற பாத்திரத்தை (அகல் தாளிபோ

லொத்தனைத) ஆதாரமாகவுடையது. விஷயங்களில் பற்றுமதும் இராகத் துவேஷங்களாகிற காற்றினால் கலக்கப்படாமலிருக்கிற சித்தமாகிற காற்றடக்கமான அறையிலே இருப்பது. நிரந்தரமாயுள்ள ஐகாக்ர்யத்தாலமைந்த தியானத்தினலுண்டாகிற நிச்சய ஞானமாகிற பிரகாசம், ஒளியையுடையது. இவ்வித லக்ஷணங்களோடு கூடியது அந்த தீபம். (11)

அர்ஜுந உவாச.

12. பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவாந் ।
புருஷம் சாஶ்வதம் திவ்யம் ஆதிதேவம் அஜம் விபும் ॥
13. ஆஹுஸ்த்வாம் ருஷய: ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ்ததா ।
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே ॥

12. பரம், ப்ரஹ்ம=பரம், தாம = (1) பவித்ரம் = (2) பரமம் = பவாந் । புருஷம் = சாச்வதம் = திவ்யம் = (3) ஆதிதேவம் = அஜம் = விபும் ॥

13. ஆஹு: = த்வாம் = ருஷய: = ஸர்வே = தேவர்ஷி: = நாரத: = ததா । அஸித: = தேவல: = வ்யாஸ: = ஸ்வயம் = ச = ஏவ = ப்ரவீஷி = மே ॥

அர்ஜுந உவாச	அர்சுனன் சொன்னது
பரம்ப்ரஹ்ம	பரப்ரஹ்மமும்
பரம்தாம	உத்கிருஷ்டமான தேஜஸும்
பரமம்பவித்ரம்	உத்தமமான பரிசுத்தமுள்ளவஸ்துவும்
பவாந்	நீங்களே
ஸர்வேருஷய:, த்வாம்	வசிஷ்டர் முதலிய ஸகலமான ரிஷிகளும் உங்களை
திவ்யம், புருஷம்	திவ்யமான புருஷராகவும்
சாஶ்வதம், ஆதிதேவம்	நித்தியராகவும், முதல் கடவுளாகவும்
அஜம், விபும், ஆஹு:	பிறவாதவராகவும் ஸர்வ வியாபியாகவும் சொல்லுகிறார்கள்.
ததாதேவர்ஷி: நாரத:	அப்படியே தேவரிஷியான நாரதரும்
அஸித:, தேவல:	அஸிதரும், தேவலரும்
வ்யாஸ:. ஆஹு:	வ்யாஸரும் சொல்லுகிறார்கள்
ஸ்வயம், ஏவ	மேலும் தாங்களும் சாக்ஷாத்தாகவே
மே, ததா, ப்ரவீஷி	எனக்கு அப்படியே சொல்லுகிறீர்.

அர்ஜுனன் சொன்னது— பரப்ரஹ்மமும், உத்கிருஷ்டமான தேஜசும் (ஒளியும்) உத்தமமான பரிசுத்த வஸ்துவும், நீங்களே உங்களை வசிஷ்

டர் முதலிய ஸகல மஹரிஷிகளும் நித்தியனாகவும், திவ்யபுருஷராகவும் தேவதைகளுக் காதியாகவும், பிறப்பற்றவனாகவும், சர்வவியாபியாகவும் சொல்லுகிறார்கள். அவ்வாறே தேவரிஷியான நாரதரும், அஸிதர், தேவலர், வியாஸர், இந்த ரிஷிகளும் சொல்லுகிறார்கள். தாங்களும் அப்படியே எனக்குச் சொல்லுகிறீர்கள்,

(1) பரம்தாம = உத்தமமான தேஜஸ் (சங்கரர், ராமானுஜர்).

(2) பவித்ரம் = ஸ்மரிக்கிறவர்களுடைய சகல பாபங்களையும் போக்கடிப்பவர் (ராமானுஜர்).

(3) திவ்யம் = உலகவிலக்ஷணமானவர்; ஶாஶ்வதம் = விகாரமற்றவர் பரமம் = பரிபூர்ணன், புருஷம் = பூர்ணஷட்குணன். (இராகவேந்திரர்).

(4) விபும் = விபவநஶீல: = ஆளும் தன்மையுடையவர் (சங்கரர்; பலவிதரூபமாய்க் காண்கிறவர் (மத்வர்); விஶிஷ்டதயா விவிததயா ச பவநேந ஹேதுநா விபுஶப்தவாச்ய: = எல்லாவற்றிலும் வியாபித்தும் வெவ்வேறாயு மிருக்கிறபடியால் விபு = சப்தத்தினால் சொல்லப்படத் தகுந்தவர் (இராகவேந்திரர்). (12—13)

---

14. ஸர்வமேதத்ருதம் மந்யே யந்மாம் வதஸி கேஶவ ।
ந ஹி தே பகவந் வ்யக்திம் விதுர்தேவா ந தாநவா: ॥

14. ஸர்வம் = ஏதத் (1)= ருதம் = மந்யே = யத் = மாம் = வதஸி= கேஶவ । ந = ஹி = தே = பகவந் = வ்யக்திம் = விது: = தேவா: = ந = தாநவா: ॥

ஹே கேஶவ	ஓ! கேசவா!
மாம், யத், வதஸி	எனக்கு எதைச் சொல்லுகிறீர்களோ
ஏதத், ஸர்வம்	இந்த ஸகலத்தையும்
ருதம், மந்யே	உண்மையாக நம்புகிறேன்
ஹே பகவந்	ஓ! பகவானே!
தே வ்யக்திம்	உம்முடைய உத்பத்தியை
தேவா: ந விது: ஹி	தேவர்கள் அறிகிறதேயில்லை
தாநவா:, ந	அஸுரர்களும் அறியவில்லை.

ஓ! கேசவா! (நீங்கள்) எனக்கு எதைச் சொல்லுகிறீர்களோ, அந்த சகலத்தையும் நான் வாஸ்தவமென்று அறிகிறேன். ஓ! பகவானே! உம்முடைய உத்பத்தியை அவதார மகிமையை தேவதைகளு மறியவேயில்லை; தானவர்களு மறியவில்லை; (என்றால், தங்களுடைய அனுக்கிரகத்தின் பொருட்டு நீர் அவதாரஞ்செய்திருப்பதாக தேவதைகளு மறியவில்லை; தங்க

ளுடைய நாசத்தின்பொருட்டு நீர் அவதாரஞ்செய்திருப்பதாக அசுராளான தானவர்களு மறியவில்லை என்பது தாத்பரியம்).

(1) ஏதத் = ரிஷிகளும், நீங்களும் சொன்னதாக முன் சுலோகத்தில் சொன்னதை.

(2) பகவந் = நிரதிசயஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் இவைகளுக்கிருப்பிடமானவரே! (14)

---

15. 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨 𑌭𑍂𑌤𑍇𑌶 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 ॥

15. ஸ்வயம் = ஏவ = ஆத்மநா = ஆத்மாநம் = வேத்த = த்வம் = புருஷோத்தம | பூதபாவந = பூதேஶ = தேவதேவ = ஜகத்பதே ||

𑌹𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 — ஓ! புருஷோத்தமரே!

𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨, 𑌭𑍂𑌤𑍇𑌶 — பூதங்களை உண்டாக்கினவரே, பூதங்களுக்கு ஈசா!

𑌹𑍇 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵, 𑌹𑍇 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 — ஓ! தேவர்களுக்கு தேவா! ஜகத்திற்கு பாலகரே!

𑌤𑍍𑌵𑌂, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂, 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 — நீங்கள், தன்னை தன்னால்

𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵, 𑌵𑍇𑌤𑍍𑌥 — தானாகவே அறிகிறீர்கள்.

ஓ! புருஷர்களிலுத்தமரே! பூதங்களை யுண்டாக்கினவரே; பிராணிகளுக்கு நியாமகரே! சூரியாதி தேவதைகளைப் பிரகாசிப்பிக்கிறவரும், சகலப் பிரபஞ்சத்தையும் பரிபாலனஞ்செய்கிறவரே! நீங்கள் உம்மை உம்மாலேயே, தானாகவே அறிகிறீர்கள்.

(சங்கரர்) நீங்கள் தேவர் முதலானவர்களுக்கு முதலானவராதலால், யாவற்றினும் மேம்பட்ட ஞானம், ஆளுந்தன்மை, வல்லமை முதலிய சாமர்த்தியங்களையுடைய ஈசுவரனாகத் தன்னைத்தானே அறிகிறீர்கள். (பகவானுடைய ஸகுணவடிவத்தையுங்கூட பிறரால் அறியமுடியவில்லை என்பது - ஆநந்தகிரி). (15)

---

16. 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ।
𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 ॥

16. வக்தும் = அர்ஹஸி = அஶேஷேண = திவ்யா: = ஹி = ஆத்மவிபூதய: | யாபி: = விபூதிபி: = லோகாந் = இமாந் = த்வம் = வ்யாப்ய - திஷ்டஸி ||

𑌯𑌾𑌭𑌿𑌃, 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌃 — எந்த விபூதிகளினாலே

𑌤𑍍𑌵𑌂, 𑌇𑌮𑌾𑌨𑍍, 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 — நீங்கள் இந்த உலகங்களை

வ்யாப்ய, திஷ்டஸி	வியாபித்துக்கொண்டு இருக்கிறீர்களோ
இமாம்ல்லோகாந்	அத்யர்புதங்களாகவே யிருக்கிற
யாபி: விபூதிபி: (யா:)	உங்களுடைய விபூதிகள் எவைகளோ
(தா:) அஶேஷேண	அவைகளை முழுவதும் மிச்சமில்லாமல்
வக்தும், அர்ஹஸி	சொல்வதற்கு நீர் யோக்கியராயிருக்கிறீர்.

எந்த விபூதி ரூபங்களினாலே இந்த உலகங்களை நீங்கள் வியாபித்துக் கொண்டிருக்கிறீர்களோ அத்யர்புதங்களாகவேயுள்ள உங்களுடைய விபூதி ரூபங்கள் எவைகளோ அவைகளை முழுதும் சொல்வதற்கு நீங்கள் யோக்கிய ராக விருக்கிறீர்கள்.

யாபி: விபூதிபி:—எந்த ஆத்மாவினுடைய மாகாத்மிய விஸ்தாரங்க ளினாலே (சங்கரர்); எந்த நியமன விசேஷங்களினாலே (ராமாநுஜர்) இராமகிருஷ்ணாதி அநேக ரூபங்களினாலே, அல்லது, சந்நிதி மகத்துவத்தால் அந்தந்த வஸ்துக்களுக்கு யோக்கியதையைக் கொடுத்த விஷ்ணுரூபங்க ளினாலே (இராகவேந்திரர்).

(ஆநந்தகிரி). என்னைப் போன்றவர்களுக்குத் தெரியாததான உங்க ளுடைய வடிவத்தை அவர்கள் அறியவேண்டியதனால், நீங்கள் உங்களுடைய எந்த மாஹாத்மிய விஸ்தாரத்தால் வியாபித்திருக்கிறீரோ அதையெல்லாம் சொல்லும். (16)

---

17. கதம் வித்யாமஹம் யோகிம் ஸ்த்வாம் ஸதா பரிசிந்தயந் |
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோஸி பகவந்மயா ||

17. கதம் = வித்யாம் = அஹம் = யோகிந் = த்வாம் ஸதா = பரி சிந்தயன் | கேஷு = கேஷு = ச = பாவேஷு சிந்த்ய: = (1) அஸி = பகவந் = மயா ||

ஹே யோகிந்	ஓ! யோகியே!
அஹம், ஸதா, த்வாம்	நான், எப்பொழுதும், உங்களை
பரிசிந்தயந்	தியானிப்பவனாய்
கதம், வித்யாம்	எப்படி அறிவேன்?
ஹே பகவந்	ஓ! பகவானே!
கேஷு, கேஷு ச பாவேஷு	எந்தெந்த வஸ்துக்களில்
மயா, சிந்த்ய:, அஸி	என்னால், தியானிக்கத்தக்கவராக, இருக் கிறீர்.

ஓ! சகல ஐசுவரிய பூர்ணனான பகவானே! நானெப்பவும் உங்களை தியா னிப்பவனாய் எப்படியறிவேன்? ஓ! பகவானே! எந்தெந்த வஸ்துக்களில் என் னாலே தியானிக்கத் தகுந்தவராக விருக்கிறீர்?.

(1) சிந்த்ய:=எந்தெந்த விபூதி ரூபங்களாய் (என்னாலே) சிந்திக்கத் தக்கவராக (ஸ்ரீதரர்.)

(ராமாநுஜர்) யோகீ=பக்தியோக நிஷ்டனாய், த்வாம்=உம்மை, ஸதா = எப்போதும், பரிசிந்தயந் = சிந்திக்கத்தொடங்கி யிருக்கிற அஹம்=நான், த்வாம்=பரிபூர்ண ஐசுவரியம், அநந்த கல்யாண குணங்கள், இவைகளை யுடைத்தான உம்மை, கதம் வித்யாம் = எப்படியறிவேன், கேஷு கேஷு பாவேஷு=முந்தி நீர் சொன்ன, புத்தி, ஞானம், அஸம்மோஹம் முதலிய வஸ்துக்களைக்காட்டிலும் அந்நியங்களான வஸ்துக்களிலே எந்தெந்த வஸ்துக்களிடத்தில் எவ்விதமாய் ஏவுகிறவனாய், மயா= என்னாலே, த்யேய:=தியானிக்கத் தகுந்தவராக, அஸி=இருக்கிறீர்?

(ஆநந்தகிரி) மிதந்த புத்தியுள்ள நான் எவ்விதத்தால் உங்களை எப்பொழுதும் தியானித்து அதனால் புத்தி திருந்தியவனாய், நிர்குணமான உங்களை அறிவேன் என்று அர்ஜுனன் கேட்கிறான். (17)

* யோகீ த்வாம்=என்றும் ஒருபாடம் (ராமாநுஜர்).

---

18. விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம் ச ஜநார்தந ।
பூய: கதய த்ருப்திர்ஹி ச்ருண்வதோ நாஸ்தி மேऽம்ருதம் ॥

18. விஸ்தரேண = ஆத்மந: = (1) யோகம் = விபூதிம் = ச = ஜநார்தந । பூய: = கதய = த்ருப்தி: = ஹி = ச்ருண்வத:= ந = அஸ்தி = மே = அம்ருதம் ॥

ஹே ஜநார்தந	ஓ! ஜநார்த்தனா!
ஆத்மந:, யோகம்	தங்களுடைய, யோகத்தையும்
விபூதிம்ச, பூய:	விபூதியையும், மறுபடியும்
விஸ்தரேண, கதய	விரிவாகச் சொல்லவேண்டும்
ஹி, அம்ருதம்	ஏனென்றால், அமிருதத்தை
ச்ருண்வத: மே	கேட்கிறவனாகிய எனக்கு
த்ருப்தி: நாஸ்தி	திருப்தியானது இல்லை.

ஓ! ஜநார்த்தனா! உம்முடைய யோகத்தையும், விபூதியையும், விஸ்தாரமாக மறுபடியும் சொல்லும். ஏனென்றால், உம்முடைய முகாரவிந்தத்திலிருந்துண்டாகிற வாக்கியமாகிற அமிருதத்தைக் கேட்கிறவனாகிய எனக்குத் திருப்தியானது உண்டாகவேயில்லை.

(சங்கரர்) தங்களுடைய அதிரஹஸ்யமான யோக ஐசுவரியமாகிய ஸாமர்த்தியம், ஆளும் தன்மை ஆகிய இச்சக்திகளின் சிறப்பையும், தியானிக்கத் தகுந்த வஸ்துக்களின் விஸ்தாரத்தையும் (கூட்டத்தையும்) விரிவாகச் சொல்லவேண்டும். ஜநார்தந என்பது, சொல்லுதல் என்னும் தொழிலை,

அர்த்தமாக உடைய 𑌅𑌰𑍍𑌦𑍍, என்னும் வினைபகுதியினின்றும் பிறந்த சொல். தேவர்களுக்கு எதிரிகளான அஸுர ஜனங்களை நரகம் முதலியவற்றுள் செலுத்துவதினால் ஜநார்த்தனன்; அல்லது சுவர்க்கம், மோக்ஷம் என்னும் புருஷார்த்தங்களுக்காக பகவான் ஸகல ஜனங்களாலும் யாசிக்கப்படுகிறார். ஆதலால் ஜநார்த்தநன், என்றுவது கொள்ளலாம். யோகமும் விபூதியும் முன் சொல்லப்பட்டனவாயினும் அவற்றை மறுபடியும் சொல்லவேண்டுகிறேன். ஏனெனில் உங்களுடைய திருவாயினின்றும் வெளிவருகின்ற வார்த்தையாகிய அமிருதத்தைக் கேட்கின்ற எனக்கு திருப்தி உண்டாகவில்லை.

(**ராமாநுஜர்**) **யோகம்** என்பது சிருஷ்டி சாமர்த்தியம். **விபூதி**= நியமனம். **அமிருதம்**, பகவானுடைய மஹாத்மியமாகிற அமிருதம்.

(**இராகவேந்திரர்**) **யோக³ம்** வஸ்துக்களுக்கு யோக்கியதையைக் கொடுக்கிறதாயும், **விபூ⁴திம்** அநேகவிதமாயுமிருக்கிற பரமாத்ம சுவரூபத்தை. (18)

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚

19. * 𑌹𑌨𑍍𑌤 𑌤𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌤𑌃 𑌕𑍁𑌰𑍁𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍋 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌸𑍍𑌯 𑌮𑍇 ॥

19. **ஹந்த = (1) தே = கத²யிஷ்யாமி = தி³வ்யா: = ஹி = ஆத்ம விபூ⁴தய: | ப்ராதா⁴ந்யத: = குருஸ்ரேஷ்ட² = ந = அஸ்தி = அந்த: = விஸ்தரஸ்ய = மே ||**

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚	**ஸ்ரீபகவான் சொன்னது**
𑌹𑍇 𑌕𑍁𑌰𑍁𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠	**ஓ! குருகுல சிரேஷ்டனே!**
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 (𑌯𑌾𑌃)	**திவ்வியமான என் விபூதிகள் எவைகளோ**
𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌤𑌃	**அவைகளில் முக்கியமானவைகளை**
𑌹𑌨𑍍𑌤 𑌤𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿	**இப்பொழுது உனக்குச் சொல்லுவேன்**
𑌹𑌿, 𑌮𑍇, 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌸𑍍𑌯	**ஏனென்றால் என்னுடைய விபூதிகளுக்கு**
𑌅𑌨𑍍𑌤𑌃, 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿	**முடிவு இல்லை.**

கிருஷ்ணபகவான் சொன்னது:—ஓ! குருகுல சிரேஷ்டனே! அற்புதங்களான என்னுடைய விபூதி ரூபங்கள் எவைகளோ அவைகளில் முக்கியமானவைகளை இப்பொழுது உனக்குச் சொல்லுவேன். ஏனென்றால் என்னுடைய விபூதி ரூபங்களுடைய விஸ்தாரத்திற்கு முடிவானது இல்லை.

* **𑌹𑌨𑍍𑌤 𑌤𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌭𑍂𑌤𑍀𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌶𑍁𑌭𑌾𑌃** என்று ஒருபாடம்; தயவுக்குப் பாத்திரனாகிய உனக்கு, மங்களகரங்களான என்னுடைய நியாம்மிய ரூபங்களைச் (என் ஏவுதலுக்குரித்தான வஸ்துக்களை) சொல்லுகிறேன். (**ராமாநுஜர்**).

(1) ஹந்த=இப்பொழுது (சங்கரர்); தயவுக்குப் பாத்திரனுன் (ஸ்ரீதரர்); சந்தோஷம் (இராகவேந்திரர்).

(2) ஆத்மவிபூ⁴தய:=வஸ்துக்களுக்கு மேன்மையைக் கொடுக்கத்தக்க என்னுடைய பலவித ரூபங்கள் (இராகவேந்திரர்).

(சங்கரர்) ப்ராதா⁴ந்யத: என்றால் எங்கெங்கே என்னுடைய எந்தெந்த விபூதி வைபவம் முதன்மையாயுள்ளதோ அவைகளை நான் சொல்லுகிறேன். ஆனால் அவற்றை நூறு வருஷத்திலும் கூட மிச்சமில்லாமல் சொல்லமுடியாது. ஏனென்றால் என்னுடைய விபூதி விஸ்தாரத்திற்கு எல்லை என்பது இல்லை. (19)

---

20. அஹமாத்மா கு³டா³கேஶ ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த: ।
அஹமாதி³ஶ்ச மத்⁴யம் ச பூ⁴தாநாமந்த ஏவ ச ॥

20. அஹம் = ஆத்மா = கு³டா³கேஶ = ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த: । அஹம் = ஆதி³: = ச = மத்⁴யம் = ச = பூ⁴தாநாம் = அந்த: = ஏவ = ச ॥

ஹே கு³டா³கேஶ	ஓ! குடாகேச!
அஹமேவ, ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த:, ஆத்மா	நானே தான் ஸகலப் பிராணிகளுடைய ஹிருதயத்தில் இருக்கிற பரமாத்மா
அஹம், பூ⁴தாநாம் ஆதி³:, மத்⁴யம், அந்த:	நான் பூதங்களுக்கு ஆதியாகவும், ஸ்திதியாகவும், முடிவாகவும் (இருக்கிறேன்).

ஓ! நித்திரையை ஜயித்த அர்ஜுனா! நானே ஸகலப்பிராணிகளுடைய ஹிருதயத்தில் ஏவுகிறவனுயிருக்கிற பரமாத்மா. பூதங்களுக்கு ஆதியும் நிலையும் முடிவும் நானே.

(சங்கரர்) இனி முதலில் இதைக் கேட்டுக்கொள், கு³டா³கேசா! ஈஶ: = ஆளுபவன்; அதாவது கு³டா³கா = நித்திரையை ஆளுபவன்; அதாவது சோம்பலை வென்றவன்; அல்லது 'க⁴நகேஶ:'=அடர்ந்த மயிருள்ளவன். ஆத்மா= ப்ரத்யகா³த்மா அதாவது உள்ளேயுள்ள ஆத்மாவாகிய நான் ஸகலப்பிராணிகளுடைய ஹிருதயத்தினுள் இருப்பவனுக (உத்தமாதிகாரிகளால்) எப்பொழுதும் தியானிக்கத்தக்கவன். அதற்குத் தகுதியில்லாத (மத்தியமாதிகாரியும், மந்தாதிகாரியும்) இனிமேல் சொல்லப்படும் பொருள்களில் என்னை தியானம் செய்யவேண்டும். ஏனெனில் நான் பிராணிகளுக்குக் காரணமும், ஸ்திதியும் (இருப்பும் நிலையும்) முடிவுமாக இருக்கின்றேன். (20)

21. 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌹𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂𑌰𑌵𑌿𑌰𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍।
𑌮𑌰𑍀𑌚𑌿𑌰𑍍𑌮𑌰𑍁𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌹𑌂𑌶𑌶𑍀 ॥

21. ஆதித்யாநாம் - அஹம் - விஷ்ணுঃ - ஜ்யோதிஷாம் - ரவிঃ - அம்ஶுமாந் | மரீசிঃ - மருதாம் - அஸ்மி - நக்ஷத்ராணாம் - அஹம் - ஶஶீ ||

𑌅𑌹𑌂, 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂	நான் ஆதித்யர்களுக்குள்
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃	விஷ்ணு என்கிற ஆதித்யனாகவும்
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂	வஸ்துக்களை விளங்கச் செய்வனவற்றுள்
𑌅𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍, 𑌰𑌵𑌿𑌃	பரவியகிரணங்களையுடைய சூரியனாகவும்
𑌮𑌰𑍁𑌤𑌾𑌂, 𑌮𑌰𑍀𑌚𑌿𑌃, 𑌅𑌸𑍍𑌮𑌿	மருத்துக்களுக்குள் மரீசியாகவு மிருக்கிறேன்
𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂	நக்ஷத்திரங்களுக்குள்
𑌅𑌹𑌂 𑌶𑌶𑍀 (𑌅𑌸𑍍𑌮𑌿)	நான் சந்திரனாக (இருக்கிறேன்.)

பன்னிரண்டு ஆதித்யர்களுக்குள்ளே விஷ்ணுவென்கிற ஆதித்யனும், பிரகாசமான வஸ்துக்களுக்குள்ளே எங்கும் பரவிய கிரணங்களையுடைய சூரியனும், ஏழுமருத்துக்களுக்குள்ளே மரீசி என்கிற வாயு அல்லது மருத்தும், நக்ஷத்திரங்களுக்குள்ளே சந்திரனும், நானாகவிருக்கிறேன்,

ஆதித்யர்களுக்குள்ளே உத்கிருஷ்டனான விஷ்ணு என்கிற ஆதித்யன் நானே. மற்றவைகளுக்கும், உத்கிருஷ்டம், என்கிற பதத்தைச் சேர்த்துக் கொள்ளத்தக்கது. நக்ஷத்திரங்களுக்கு (பதி) எஜமானனான சந்திரன் நானே.

இந்த விபூதிரூபங்கள், காணப்படுகிற (பிரத்தியக்ஷ) ரூபமென்றும், காணப்படாம லிருந்துகொண்டு வஸ்துக்களுக்கு உத்கிருஷ்டத்தைக் (மேன்மையை) கொடுத்துக்கொண்டிருக்கிற ரூபமென்றும் இருவகைப்படும். விஷ்ணு, கபில, வியாச, வாசுதேவ, இராமாதி ரூபங்கள் பிரத்தியக்ஷங்கள். மற்றவைகள் காணப்படாதவைகள். இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற விஷ்ணு என்பவர் சர்வ வியாபியாயும், சர்வாந்தர்யாமியாயு மிருக்கிற மகாவிஷ்ணுவே. மருத்துக்கள் நாற்பத்தொன்பது பெயர்கள்.

(𑌵𑍍𑌯𑌾) இந்த ஆதித்யர்கள் பன்னிரண்டுபெயர்கள். அவர்களுடைய பெயர்களாவன:—𑌧𑌾𑌤𑌾 - 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾 - 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 - 𑌵𑌰𑍁𑌣𑌃 - 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 - 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 - 𑌪𑍂𑌷𑌾 - 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃 - 𑌅𑌂𑌶𑍁𑌃 - 𑌭𑌗𑌃 - 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 - 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 இவர்கள் முறையே சித்திரைமாத முதல் பங்குனிமாதம் வரை ஒவ்வொரு மாதத்திற்கு ஒவ்வொருவர் (விஷ்ணுபுராணம் 2-வது அம்சம் 10-அத்தியாயம் பார்க்க.) இந்த சூரியர்களில்—𑌧𑌾𑌤𑌾 (தாதா) வைகாசி மாதத்திற்கும், அரியமா ஆடிமாதத்திற்கும், மித்திரன் மார்கழிமாதத்திற்கும், வருணன் மாசி மாதத்திற்கும், இந்திரன் ஆனிமாதத்திற்கும், விவசுவான் ஆவணிமாதத்திற்கும், பூஷா பங்குனிமாதத்திற்கும், பர்ஜ்ஜந்நியன் ஐப்பசி

மாதத்திற்கும், அம்சு சித்திரை மாதத்திற்கும், 𑌭𑌗𑌃 (பகன்) புரட்டாசி மாதத்திற்கும், த்வஷ்டா கார்த்திகை மாதத்திற்கும், விஷ்ணு தைமாதத்திற்கும், சூரியர்களாக இலிங்க புராணம் 1-பாகம் 59-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பன்னிரண்டு பெயர்களைத் தவிர பின்னும் பலபெயர்கள் ஸ்காந்தம் காசிகாண்டத்தில் காண்க.

மருத், என்பவர் தேவதைகளின் ஒரு வகுப்பினர். ஸ்ரீதரர் ஏழு மருத்துக்கள் என்கிறார். அவர்கள் பெயர்:—𑌆𑌵𑌹𑌃, 𑌪𑍍𑌰𑌵𑌹𑌃, 𑌵𑌿𑌵𑌹𑌃, 𑌪𑌰𑌾𑌵𑌹𑌃, 𑌉𑌦𑍍𑌵𑌹𑌃, 𑌸𑌂𑌵𑌹𑌃, 𑌪𑌰𑌿𑌵𑌹𑌃. (21)

---

22. 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿𑌵𑌾𑌸𑌵𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿𑌚𑍇𑌤𑌨𑌾 ॥

22. வேதாநாம் - ஸாமவேத: - அஸ்மி - தேவாநாம் - அஸ்மி - வாஸவ: | இந்த்ரியாணாம் - மந: - ச - அஸ்மி - பூதாநாம் - அஸ்மி - சேதநா (1) ||

𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂, 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿	வேதங்களுள் ஸாமவேதமாக இருக்கிறேன்
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂, 𑌵𑌾𑌸𑌵𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿	தேவதைகளுக்குள் இந்திரனாக இருக்கிறேன்
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂, 𑌮𑌨𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿	இந்திரியங்களுக்குள் மனதாக இருக்கிறேன்
𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌚𑍇𑌤𑌨𑌾 𑌅𑌸𑍍𑌮𑌿	பிராணிகளுக்குள் உணர்ச்சியாக இருக்கிறேன்.

வேதங்களில் ஸாமவேதமும், தேவதைகளில் இந்திரனும், இந்திரியங்களில் மனசும், பிராணிகளுள் உணர்ச்சியும் அதாவது ஞான சக்தியும் நானாகயிருக்கிறேன்.

(1) சேதநா=பூதங்களுக்குள்ளே அறிவுள்ள பூதங்களெவைகளோ அந்த பூதங்களின் அறிவும் நானே (ராமாநுஜர்.)

(சங்கரர்) தேவர்களுக்குள் என்றால், ருத்திரர், ஆதித்யர் முதலானவர்களுக்குள் நான் வாஸவந், தேவராஜனான இந்திரன், கண் முதலிய பதினொரு இந்திரியங்களில், நான் மனஸாகிய இந்திரியம். பூதங்களிடத்திலுள்ள, சேதநம், அதாவது உணர்ச்சி, தேகம் இந்திரியங்கள் இவற்றின் சேர்க்கையிலே வெளிப்பட்ட புத்தியின் விருத்தி. (22)

---

23. 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌶𑌙𑍍𑌕𑌰𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌶𑍋𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌮𑍍 ।
𑌵𑌸𑍂𑌨𑌾𑌂𑌪𑌾𑌵𑌕𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌮𑍇𑌰𑍁𑌃𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

23. ருத்ராணாம் - ஶங்கர꞉ - ச - அஸ்மி - வித்தேஶ꞉ - யக்ஷ ரக்ஷஸாம் । வஸூநாம் - பாவக꞉ - ச - அஸ்மி - மேரு꞉ - ஶிகரிணாம் - அஹம் ॥

𑌅𑌹𑌂, 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂	நான், ருத்திரர்களுக்குள்
𑌶𑌂𑌕𑌰𑌃, 𑌅𑌸𑍍𑌮𑌿	சங்கரரென்கிற ருத்திரனுக இருக்கிறேன்
𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌶𑌃 𑌚	யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் இவர்களுள் குபேரனுகவும்
𑌵𑌸𑍂𑌨𑌾𑌂, 𑌪𑌾𑌵𑌕𑌶𑍍𑌚	வசுக்களுக்குள் அக்னியாகவும்
𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌂, 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿	சிகரமுள்ள பர்வதங்களில் மேருவாகவும் இருக்கிறேன்.

நான் பதினொரு, ருத்திரர்களுக்குள்ளே சங்கரர் என்கிற ருத்திரரும், யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் இவர்களுக்குள்ளே திரவ்யத்திற்கு அதிபதியான குபேரனுகவும், எட்டு வஸுக்களுக்குள்ளே அக்கினியாகவும், சிகரமுள்ள பருவதங்களுக்குள்ளே மேருபருவதமாகவும் இருக்கிறேன்,

(𑌸) பதினொரு ருத்திரர்களின் பெயர்:—(1) 𑌅𑌜𑌨𑍁, (2) 𑌏𑌕𑌪𑌾𑌦𑌨𑍁, (3) 𑌅𑌹𑌿𑌰𑍍𑌬𑍁𑌧𑍍𑌨𑍍𑌯𑌨𑍁, (4) 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾, (5) 𑌰𑍁𑌦𑍍𑌰𑌨𑍁, (6) 𑌹𑌰𑌨𑍁, (7) 𑌶𑌂𑌭𑍁, (8) 𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍𑌬𑌕𑌨𑍁, (9) 𑌅𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌨𑍁, (10) 𑌈𑌶𑌾𑌨𑌨𑍁, (11) 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌨𑍁, ஆனால் சில கிரந்தங்களில் 4-வது ருத்திரன் 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌨𑍁, 5-வது 𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌨𑍁, 7-வது 𑌜𑌯𑌨𑍍𑌤𑌨𑍁, 10-வது 𑌬𑌹𑍁𑌰𑍂𑌪𑌨𑍁, 11-வது 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑌨𑍁 என்னும் சொல்லப் பட்டிருக்கின்றன. இதில் குறித்த 𑌶𑌂𑌭𑍁 தான் சங்கரரென்று சுலோகத்தில் சொல்லப்படுகிறார். (23)

---

24. 𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂 𑌚 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌮𑍍।
𑌸𑍇𑌨𑌾𑌨𑍀𑌨𑌾𑌮𑌹𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 𑌸𑌰𑌸𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌾𑌗𑌰𑌃 ॥

24. புரோதஸாம் - ச - முக்யம் - மாம் - வித்தி - பார்த - ப்ருஹஸ்பதிம் । ஸேநாநீநாம் - அஹம் - ஸ்கந்த꞉ - ஸரஸாம் - அஸ்மி - ஸாகர꞉॥

𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥	ஓ! குந்திபுத்திரா
𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂, 𑌮𑌾𑌂	புரோகிதர்களுக்கு என்னை
𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿	முதன்மையான பிரகஸ்பதியாகவும் அறிந்துகொள்
𑌅𑌹𑌂, 𑌸𑍇𑌨𑌾𑌨𑍀𑌨𑌾𑌂	நான் சேனாதிபதிகளுக்குள்

ஸ்கந்த:, ஸரஸாம் ஸாகர:, அஸ்மி — சுப்பிரமணியனுக்கவும், ஜலாசயங்களுக்குள் ஸமுத்திரமாகவும் இருக்கிறேன்.

ஓ! குந்திபுத்திரா! புரோகிதர்களுக்குள் சிரேஷ்டரான பிரகஸ்பதியாக என்னை யறிந்துகொள். நான் சேனாதிபதிகளுக்குள் ஸ்கந்தனாகவும் (ஏரி, குளம், முதலிய) ஜலாசயங்களுக்குள்ளே சமுத்திரமாகவு மிருக்கிறேன்.

(சங்கரர்) புரோஹிதர்களுக்குள் என்றால் ராஜ புரோகிதர்களுக்குள். பிருகஸ்பதியானவர் இந்திரனுக்குப் புரோஹிதர் ஆனதால், புரோஹிதரில் சிறந்தவராம். ஸ்கந்தர் (சுப்பிரமணியர்) தேவர்களது சேனைக்குத் தலைவர். தேவர்கள் தோண்டிய நீர்நிலைகளுள் நான் ஸமுத்திரமாக இருக்கிறேன். (24)

---

25. மஹர்ஷீணாம் ப்ருகுரஹம் கிராமஸ்ம்யேகமக்ஷரம் ।
யஜ்ஞானாம் ஜபயஜ்ஞோஸ்மி ஸ்தாவராணாம் ஹிமாலய: ॥

25. மஹர்ஷீணாம் - ப்ருகு: - அஹம் - கிராம் - அஸ்மி = ஏகம் - அக்ஷரம் । யஜ்ஞானாம் - ஜபயஜ்ஞ: - அஸ்மி - ஸ்தாவராணாம் - ஹிமாலய: ॥

அஹம், மஹர்ஷீணாம் ப்ருகு: — நான் மகரிஷிகளுக்குள் பிருகுமகரிஷியாகவும்
கிராம், ஏகம் அக்ஷரம், அஸ்மி — பதங்களுக்குள் ஒரு அக்ஷரமாகிய ஓங்காரமாகவும் இருக்கிறேன்
யஜ்ஞானாம், ஜபயஜ்ஞ: — யக்ஞங்களுக்குள் ஜபமாகிற யக்ஞமாகவும்
ஸ்தாவராணாம் ஹிமாலய: அஸ்மி — ஸ்தாவரங்களுக்குள் ஹிமவத்பருவதமாகவும் இருக்கிறேன்.

மகரிஷிகளுக்குள்ளே பிருகுமகரிஷியும், வாக்குகளுக்குள்ளே ஓரெழுத்தான ஓங்காரமும், யக்ஞங்களுக்குள்ளே ஜபயக்ஞமும், ஸ்தாவரங்களுக்குள்ளே ஹிமாசல பருவதமும் நானே. (25)

---

26. அச்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் ச நாரத: ।
கந்தர்வாணாம் சித்ரரத: ஸித்தானாம் கபிலோ முனி: ॥

26. அஶ்வத்த: - ஸர்வவருக்ஷாணாம் - தேவர்ஷீணாம் - ச - நாரத: । கந்தர்வாணாம் - சித்ரரத: - ஸித்தானாம்-கபில:-முநி: ॥

ஸர்வவ்ருக்ஷாணாம் அச்வத்த: — சகல விருக்ஷங்களுக்குள் அசுவத்தவிருக்ஷமாகவும்
தேவர்ஷீணாம் நாரத: — தேவரிஷிகளுக்குள் நாரதமகரிஷியாகவும்

𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌰𑌥𑌃	கந்தர்வர்களுக்குள் சித்திரரதனுகவும்
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂	சித்தர்களுக்குள்
𑌕𑌪𑌿𑌲𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃, (𑌅𑌸𑍍𑌮𑌿)	கபிலமுனியாகவும் இருக்கிறேன்.

விருக்ஷங்களுக்குள்ளே அசுவத்த விருக்ஷமாகவும், தேவரிஷிகளுக்குள்ளே நாரதராகவும், கந்தர்வர்களுக்குள்ளே சித்திரரதனுகவும் பிறவி தொடங்கி ஞானமுடையவர்களாகிய சித்தர்களுக்குள் கபிலரென்கிற முனியாகவும் நான் இருக்கிறேன்.

(**சங்கரர்**) தேவரிஷிகள் என்பவர் தேவர்களாகவே இருப்பவர்கள். அவர்கள் மந்திரங்களைக் காண்பவராயிருத்தலால், ரிஷித்தன்மையை அடைந்தவர்கள். **ஸித்தர்கள்** என்பவர் பிறக்கும்பொழுதேயே தர்மத்தையும், ஞானத்தையும், வைராக்கியத்தையும், ஐசுவரியாதிசயத்தையும் மிகுதியாகப் பெற்றவர்கள். (26)

---

27. 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌮𑌶𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌮𑌮𑍃𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌐𑌰𑌾𑌵𑌤𑌂 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ॥

27. உச்சைஶ்ஶ்ரவஸம் - அஶ்வாநாம் - வித்தி - மாம் - அம்ருதோத்பவம் | ஐராவதம் - (1) கஜேந்த்ராணாம் - நராணாம் - ச - நராதிபம் ||

𑌅𑌶𑍍𑌵𑌾𑌨𑌾𑌂, 𑌮𑌾𑌂	குதிரைகளுக்குள் என்னை
𑌅𑌮𑍃𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌂	அமிருதத்தோடு உண்டான
𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌂	உச்சைசிரவஸ் என்கிற குதிரையாகவும்
𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂	சிரேஷ்டமான யானைகளுக்குள்
𑌐𑌰𑌾𑌵𑌤𑌂	ஐராவதமென்கிற யானையாகவும்
𑌨𑌰𑌾𑌣𑌾𑌂	மனிதர்களுக்குள்
𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌂 𑌚, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿	ராஜாவாகவும் அறிந்துகொள்.

என்னை குதிரைகளுக்குள் அமிருதத்திற்காக கடலைக் கடைந்தபொழுது உண்டான உச்சைசிரவஸ் என்கிற குதிரையாகவும், சிரேஷ்டமான யானைகளுக்குள்ளே ஐராவதமென்கிற யானையாகவும், மனிதர்களுக்குள்ளே இராஜாவாகவும் அறிந்துகொள்.

(1) **ஐராவதம்** - இராவதியின் குழந்தை (**சங்கரர்**).

(ஸ்வா) தேவதைகளும் அசுரர்களும் திருப்பாற்கடலை கடைந்தபோது அதிலிருந்து அமிருதத்துடன் 14 வஸ்துக்களுண்டானதாகப் பொதுவாய்ச் சொல்லப்படுகிறது. இராமாயணத்தில் 9, மகாபாரதத்தில் 9, பாகவதத்தில் 10, பாத்மபுராணத்தில் 9, வாயுபுராணத்தில் 12, மச்சியபுராணத்தில் 14,

இப்படி மொத்தசங்கையில் வித்தியாசப்படுகிறது. ஆனால், உண்டான அநேக வஸ்துக்கள் எவையென்றால், (1) ஆலகாலவிஷம். (2) வாருணீ அல்லது ஸுரா. (3) உச்சைசிரவஸ் என்கிற குதிரை. (4) கௌஸ்துபாபரணம். (5) சந்திரன். (6) அமிருத கலசத்துடன் தந்வந்தரி. (7) இலக்ஷ்மி. (8) அப்ஸரஸ்கள். (9) காமதேநு. (10) பாரிஜாத விருக்ஷம். (11) ஐராவதம். (12) வருணன் குடை. (13) இந்திரனால் அதிதிக்குக் கொடுக்கப்பட்ட கர்ணகுண்டலங்கள். (14) சூரியனுடைய வெள்ளைக் குதிரை (இதை, பச்சைக்குதிரையென்றும் சொல்வதுண்டு.) இவைகளில் சூரியனுடைய குதிரையைச் சேர்க்காமல் தன்வந்தரியை வேறாயும் அமிருதகலசத்தை வேறாயும் வைத்துப் பதினான்காகக் கணக்கிடுவது முண்டு. வாயுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பன்னிரண்டுக்குள் துளசி யொன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வருணன் குடையையும் கர்ணகுண்டலங்களையும் பற்றி மச்சபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாத்மபுராணம் உத்தரகண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒன்பது அடியில்கண்டவைகள்; (1) விஷம். (2) ஜேஷ்டாதேவி. (3) ஸுரா: (4) நித்திரை. (5) அப்ஸரஸ்கள். (6) ஐராவதம். (7) இலக்ஷ்மி. (8) சந்திரன். (9) துளசி. (27)

---

28. ஆயுதாநாமஹம் வஜ்ரம் தேநூநாமஸ்மி காமதுக்|
ப்ரஜநஶ்சாஸ்மி கந்தர்ப: ஸர்பாணாமஸ்மி வாஸுகி: ||

28. ஆயுதாநாம் = அஹம் = வஜ்ரம் = தேநூநாம் = அஸ்மி = காமதுக் (1) | ப்ரஜந: = ச = அஸ்மி = கந்தர்ப: = ஸர்பாணாம் (2) = அஸ்மி = வாஸுகி: ||

அஹம், ஆயுதாநாம் வஜ்ரம்	நான் ஆயுதங்களுக்குள் வஜ்ஜிராயுதமாகவும்
தேநூநாம், காமதுக், அஸ்மி	பசுக்களுக்குள் காமதேநுவாகவும் இருக்கிறேன்
ப்ரஜந: கந்தர்ப: அஸ்மி	பிறஜைகளைப் பிறப்பிக்கின்ற மன்மதனாக இருக்கிறேன்
ஸர்பாணாம், வாஸுகிஶ்ச அஸ்மி	ஸர்ப்பங்களுக்குள் வாஸுகி என்கிற பாம்பாகவும் நான் இருக்கிறேன்.

நான் ஆயுதங்களுக்குள் வஜ்ஜிராயுதமாகவும், பசுக்களுக்குள் காமதேனுவாகவும் இருக்கிறேன். பிரஜைகளின் உற்பத்திக்குக் காரணமான மன்மதனாகவும் இருக்கிறேன். பாம்புகளுக்குள் வாசுகி என்கிற பாம்பாகவும் நான் இருக்கிறேன்.

காமதுக் = இஷ்டமானதைக் கொடுப்பதினால், காமதேநு என்று பெயர் வந்தது (ஸ்ரீதரர்).

(2) **ஸர்பாணும்**=விஷமுள்ள பாம்புகளுக்குள்ளே (**ஸ்ரீதரர்**) ; ஒரு தலையையுடைய பாம்புகளுக்குள் (**ராமாநுஜர் : இராகவேந்திரர்**)

(**சங்கரர்**) **வஜ்ஜிராயுதம்** என்பது ததீசி (ததீசி) என்கிறவருடைய எலும்பினலானது. **காமதுக்** என்பது விரும்பியவற்றை எல்லாம் கொடுக்கின்றதான வஸிஷ்டருடைய காமதேநு என்கிற பசு; அல்லது மிகுதியாகப் பாலைக்கொடுக்கின்ற ஸாமாந்யமான பசு; **கந்தர்பக்** என்றால் **காமன்**. ஸர்ப்பமென்னும் வகுப்பில் நான் ஸர்ப்பங்களுக்கு அரசனான வாஸுகி.

விஷ்ணு சக்கரம்முதலிய மகா மகிமைபொருந்திய ஆயுதங்களைச் சொல்லாமல் வச்சிராயுதத்தை சிரேஷ்டமாகச் சொல்லவேண்டிய தென்னவென்றாலோ, சக்கரமுதலிய ஆயுதங்கள் என்றைக்கு முள்ளவை; உண்டாக்கப்பட்டனவல்ல; உண்டாக்கப்பட்ட ஆயுதங்களில் வச்சிராயுதம் சிரேஷ்டமானதால், இவ்விடத்தில் சொல்லப்பட்டது. (28)

---

29. 𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍁𑌣𑍋 𑌯𑌾𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑌰𑍍𑌯𑌮𑌾 𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌯𑌮𑌃 𑌸𑌂𑌯𑌮𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

29. **அநந்த꞉ = ச = அஸ்மி = (1) நாகாநாம் = வருண꞉ = யாதஸாம் = அஹம் । பித்ரூணாம் = அர்யமா = ச = அஸ்மி = யம꞉ = ஸம்யமதாம் = அஹம் ॥**

𑌅𑌹𑌂, 𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌃	**நான் நாகங்களுக்குள் அநந்தனாகவும்**
𑌯𑌾𑌦𑌸𑌾𑌂, 𑌵𑌰𑍁𑌣𑌃, 𑌚, 𑌅𑌸𑍍𑌮𑌿	**ஜல தேவதைகளுக்குள் வருணனாகவு மிருக்கிறேன்**
𑌅𑌹𑌂, 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂, 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾	**நான் பிதிருக்களுக்குள் அர்யமாகவும்**
𑌸𑌂𑌯𑌮𑌤𑌾𑌂, 𑌯𑌮𑌃, 𑌚, 𑌅𑌸𑍍𑌮𑌿	**தண்டிப்பவருள் யமனாகவுமிருக்கிறேன்.**

நான் நாகங்களுக்குள்ளே அநந்தனான சேஷனாகவும், ஜலதேவதைகளுக்குள் வருணனாகவு மிருக்கின்றேன். பிதுருதேவதைகளுக்குள் அரியமாவாகவும், தண்டனை விதிப்பவர்களுக்குள் யமனாகவும் நான் இருக்கிறேன்.

(1) **நாகாநாம்** - விஷமில்லாத பாம்புகளுக்குள்ளே (**ஸ்ரீதரர்**) ; ஒன்றுக்கதிகமான தலையுள்ள பாம்புகளுக்குள்ளே (**ராமாநுஜர் : இராகவேந்திரர்**) ; சர்ப்பங்களை நல்லபாம்பென்றும் நாகப்பாம்பென்றும் சொல்வதுண்டு. மேலும் புராணங்களில் நாககன்னிகையென்றும் நாகராஜாவென்றும் இந்த நாகங்கள் வாசம்செய்யுமிடம் நாகலோகமென்றும் வியவகரிக்கப்படுகிறது. இந்த நாகங்களுக்குத் தலைமுதல் இடுப்புவரையில் மனிதர்களைப் போலவும் இடுப்புக்குக் கீழாகப் பாம்புகளைப்போலவும் ரூபம் சொல்லப்படுகிறது. (ஸ்வா) (29)

30. ப்ரஹ்லாதஶ்சாஸ்மி தைத்யாநாம் கால: கலயதாமஹம் |
ம்ருகாணாம் ச ம்ருகேந்த்ரோऽஹம் வைநதேயஶ்ச பக்ஷிணாம் ||

30. ப்ரஹ்லாத: = ச = அஸ்மி = தைத்யாநாம் (1)= கால: = கலயதாம் = அஹம் | ம்ருகாணாம் = ச = ம்ருகேந்த்ர: = அஹம் = வைநதேய: = ச = பக்ஷிணாம் ||

தைத்யாநாம், ப்ரஹ்லாத:	தைத்தியர்களுக்குள் பிரஹ்லாதனாகவும்
கலயதாம், கால:,ச அஹம், அஸ்மி	கணனம் செய்கிறவர்களுள் காலமாகவும் நானிருக்கிறேன்
ம்ருகாணாம் ம்ருகேந்த்ர:	மிருகங்களுள் ராஜாவான சிம்ஹமாகவும்
பக்ஷிணாம், வைநதேய:	பக்ஷிகளுள் விநதாபுத்திரனான கருடனாகவும்
அஹம் அஸ்மி	நான் இருக்கிறேன்.

நான் தைத்தியர்களுக்குள் பிரஹ்லாதனும், கணனஞ் செய்பவர்களுக்குள் காலமாகவும் இருக்கிறேன். மிருகங்களுக்குள் இராஜாவான சிம்ஹமாகவும் பக்ஷிகளுக்குள் ராஜாவான விநதைபுத்திரனான கருடனாகவும் நான் இருக்கிறேன்.

(1) தைத்யாநாம்திதி என்பவளுடைய வம்சத்தில் உற்பத்தியானவர்களானதால் தைத்தியர்கள் (சங்கரர்).

(2) கலயதாம்=ஜனங்களுக்குத் துன்பம் செய்ய எண்ணமுள்ளவர்களுக்கு கால: - மிருத்தியு, அஹம் - நான் (ராமாநுஜர்); பந்தத்தையுண்டுபண்ணுகிறவர்களுக்குள்ளே காலன் நான் (இராகவேந்திரர்).

(3) ம்ருகேந்த்ர:=மிருகங்களுக்கு ராஜாவான சிம்ஹம் அல்லது புலி (சங்கரர்). (30)

---

31. பவந: பவதாமஸ்மி ராம: ஶஸ்த்ரப்ருதாமஹம் |
ஜஷாணாம் மகரஶ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ ||

31. பவந: = பவதாம் = அஸ்மி = ராம:= ஶஸ்த்ரப்ருதாம் = அஹம் | ஜஷாணாம் = மகர: = ச = அஸ்மி = ஸ்ரோதஸாம் = அஸ்மி = ஜாஹ்நவீ ||

பவதாம், பவந:	பரிசுத்தஞ்செய்கிற வஸ்துக்களுக்குள், வாயுவாகவும்

ஶஸ்த்ரப்⁴ருதாம், ராம: அஹம், அஸ்மி	ஆயுதந்தரித்த சூரர்களுள் (தாசரதீ) ராமனுகவும் நான் இருக்கிறேன்
ஜ²ஷாணாம், மகர: ச அஸ்மி	மீன்களுள் மகர மீனுகவும் இருக்கிறேன்
ஸ்ரோதஸாம், ஜாஹ்நவீ, அஸ்மி	நதிகளுக்குள் கங்காநதியாக இருக்கிறேன்.

நான் பரிசுத்திசெய்யும் வஸ்துக்களுக்குள் வாயுவாகவும், ஆயுதந் தரித்தவர்களுக்குள் தசரத புத்திரனை இராமனுகவும் மீன்களுக்குள் மகரமீனுகவும், நதிகளுக்குள் கங்காநதியாகவும் இருக்கின்றேன்.

(ராமானுஜர்) ஆயுதந் தரித்தவர்களுக்குள் இராமனென்று சொன்னவிடத்தில், ஆயுத மெடுத்ததாகிய கிரியையே பகவானுடைய விபூதி. சூரியர்களுக்குள்ளே விஷ்ணு என்றது முதல் இதுவரையில் சொல்லிவந்த சகலமும் பகவானுடைய விபூதியே என்று அறியத்தக்கது.

(மத்துவர்) அநந்த ரூபியாயும், பூர்ணனுயும், பார்ப்பவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவனுயு மிருப்பதால் இராமன் என்று சொல்லப்படுகிறுர்.

(இராகவேந்திரர்) உலகத்தை சந்தோஷிப்பிக்கிறவரானதால் ராமன்.

---

32. ஸர்கா³ணாமாதி³ரந்தஶ்ச மத்⁴யம் சைவாஹமர்ஜுந |
அத்⁴யாத்மவித்³யா வித்³யாநாம் வாத³: ப்ரவத³தாமஹம் ||

32. ஸர்கா³ணாம் = ஆதி³: = அந்த: = ச = மத்⁴யம் = ச = ஏவ = அஹம் = அர்ஜுந | அத்⁴யாத்மவித்³யா = வித்³யாநாம் = வாத³: = ப்ரவத³தாம் = அஹம் ||

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுனு!
அஹமேவ, ஸர்கா³ணாம்	நானே தான், சிருஷ்டிகளுக்கு
ஆதி³:, மத்⁴யம்ச, அந்தஶ்ச	முதலாகவும், மத்தியமாகவும், முடிவாகவுமிருக்கிறேன்
அஹம், வித்³யாநாம்	நான், வித்தைகளுக்குள்
அத்⁴யாத்மவித்³யா	ஆத்மாவைப்பற்றிய வித்தையாகவும்
ப்ரவத³தாம் வாத³: அஸ்மி	தர்க்கிப்பவர்களுடைய வாதமாகவு மிருக்கிறேன்.

ஓ! அர்ஜுனு! நானேதான் சிருஷ்டிகளுக்கு உத்பத்தியும், மத்தியும் அதாவது ஸ்திதியும்: இருப்பும். லயமும் முடிவும் அதாவது நாசமுமாகவிருக்கிறேன். நான் வித்தைகளுக்குள் ஆத்மாவைப்பற்றிய வித்தையாகவும், தர்க்கம் செய்கிறவர்களுடைய வாத, ஜல்ப, விதண்டை, ஆகவும் இருக்கிறேன்.

(சங்கரர்) ஓ! அர்ஜுனா! ஸர்காணாம்—சிருஷ்டிகளுக்கு ஆதியும், நடுவும், அந்தமும் அதாவது உத்பத்தி, ஸ்திதி, லயமும் நானேதான். இந்த அத்தியாயம் 20-வது சுலோகத்தில் பூதங்களுக்கு அதாவது (ஜீவனுள்ள) உயிருள்ள பொருள்களுக்கு பகவான் ஆதியாகவும், அந்தமாகவும் இருக்கிறார் எனச் சொல்லப்பட்டது. இந்த சுலோகத்தில் சிருஷ்டி ஸாமான்னிய மான ஸகலத்திற்கும் பகவான் ஆதியும் அந்தமுமாக இருக்கிறார் என்று குறிக்கப்படுகின்றது. பலவிதமான அறிவுகளுக்குள் ஆத்மாவைப்பற்றிய அறிவு முக்தியைத் தருகின்றமையால் முதன்மையானது. 'தர்க்கம் செய்கிற வர்களுள்' என்றமையால், தர்க்கம் செய்கிறவர்கள் மூலமாக அவர்களுடைய ஒருவகைப் பேச்சுகளாகவேயுள்ள, 'வாதம்', 'ஜல்பம்', 'விதண்டை' என் பனவற்றை இங்கே லக்ஷணையால் கொள்ளவேண்டும். இவற்றுள், வாதம் என்பது உண்மையை நிச்சயிப்பதற்கு ஸாதனமாய் இருப்பதால் மேலானது. ஆதலால், அந்த வாதமாகத்தான் இருப்பதாக பகவான் சொல்லுகிறார்.

(ஸ்ரீதரர்) வாதமென்பது மூன்றுவிதம். அதாவது வாதம், ஜல்பம், விதண்டாவாதம். வாதமென்றால், இராகத்துவேஷமற்றிருக்கிற குரு சிஷ்யா ளாவது அல்லது வேறேயாராவது தத்துவநிர்ணயத்தின்பொருட்டு உத்தரப் பிரத்தியுத்தரரூபமாய்ப் பிரமாணங்களோடு செய்கிற சம்பாஷணை. ஜல்ப மென்றால், சாஸ்திரப் பிரமாணங்கள் யுத்திகள் இவைகளினாலே தன்வாதத்தை ஸ்தாபித்துக்கொண்டு எதிரிபக்ஷத்தைக் கண்டிப்பதான இருகக்ஷியாருடைய வாதம். விதண்டாவாதமென்றால்,தன் மதமின்னதென்பதைச் சொல்லாமலும் நிலைநிருத்தாமலும் பிரமாணங்களைக்கொண்டு எதிரியினுடைய மதத்தைத் தூஷணையினால் நிராகரிப்பது.

இம்மூன்றில், காமக்குரோதங்களையுடைய பிந்திய இரண்டைவிட காமக் குரோதமற்றதாகிய முந்தியது சிரேஷ்டமானது.

(ராமாநுஜர்) பிராணிகளை சிருஷ்டிக்கிறவர்கள் சம்ரக்ஷணை செய்கிற வர்கள் சம்ஹாரம் செய்கிறவர்கள் யாராருண்டோ அவர்களும் நானே என் பது கருத்து. (32)

---

33. 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌾𑌮𑌕𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌃 𑌸𑌾𑌮𑌾𑌸𑌿𑌕𑌸𑍍𑌯 𑌚 ।
𑌅𑌹𑌮𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌯𑌃 𑌕𑌾𑌲𑍋 𑌧𑌾𑌤𑌾𑌹𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌃 ॥

33. அக்ஷராணாம் = அகார: = அஸ்மி = த்வந்த்வ: = (1) ஸாமா ஸிகஸ்ய = ச | அஹம் = ஏவ = அக்ஷய: = கால: = (2) தாதா= (3) அஹம் = விஶ்வதோமுக: (4) ||

𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌅𑌕𑌾𑌰𑌃 } அக்ஷரங்களுள், 'அ' என்கிற எழுத்தாகவும்

𑌸𑌾𑌮𑌾𑌸𑌿𑌕𑌸𑍍𑌯 ஸமாஸக் கூட்டத்திற்குள்

த்வந்த்வ:, அஸ்மி	'த்வந்த்வம்' என்கிற ஸமாஸமாகவும் இருக்கிறேன்
அக்ஷய:, கால:, அஹமேவ	ஓயாத காலமும் நானே
விச்வதோமுக:, தாதா அஹம்	எங்கும் முகமுள்ளவனாய், கர்மபலனைப் பகிர்ந்து கொடுப்பவன் நான்.

அக்ஷரங்களுக்குள், 'அ' என்கிற எழுத்தாகவும், ஸமாஸங்களுக்குள், அதாவது இரண்டு பதங்களை ஒரே பதமாகச் சேர்த்துச் சொல்வதுள், 'த்வந்த்வம்' என்கிற பெயருள்ள ஸமாஸமாகவும் நான் இருக்கிறேன். ஓயாமல் செல்லுகின்ற எல்லை இல்லாத 'காலம்' என்பதும் நானே. அனேக முகமாக யிருந்துகொண்டு, கர்மங்களின்பலனை பகிர்ந்துகொடுக்கிற, 'தாதா' நானே.

(1) ஸாமாஸிகஸ்ய=பதங்களை ஒன்றோடொன்று சேர்த்து ஒரே பதமாக்குவதற்கு ஸமாஸம் என்று பெயர். அவைகளில் முக்கியமான ஆறு ஸமாஸங்களாவன—1 - தத்புருஷ:, 2 - த்வந்த்வ:, 3 - ஏகசேஷ:, 4 - உபபதஸமாஸ:, 5 - அவ்யயீபாவஸமாஸ:, 6 - பஹுவ்ரீஹிஸமாஸ:. ஏகசேஷத்தைச் சேர்க்காமல், த்விகுஸமாஸத்தைச் சேர்த்துக் கணக்கிடுவதுமுண்டு. (ஸ்வா)

(2) அக்ஷய: கால:=ஓயாதகாலம், அதாவது க்ஷணமென்னும் பெயருடைய பிரஸித்தமான காலநுட்பமானது க்ஷணவடிவமாய் இடையறாது செல்லுகின்ற எல்லையில்லாக்காலம். அதிநுட்பமான மிகச் சிறிய பொழுதை க்ஷணமென்பது, அல்லது காலத்திற்கு காலமாகிய பரமேசுவரன் என்றாவது கொள்க. (சங்கரர்) கால: கலயதாமஹம் - என்று சொன்னவிடத்தில் நாசத்தையடையும் காலமென்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் நாசமடையாத காலமென்றதினால் பிரவாகரூபமாய் நாசமற்றதென்று தாத்பரியம் (ஸ்ரீதரர்).

(3) தாதா=எல்லா ஜகத்திற்கும் எங்கும் முகமுள்ளவனாய் கர்மத்தின் பலனை பகிர்ந்துகொடுப்பவன் (சங்கரர்); கர்மபலனைக் கொடுக்கப்பட்டவர்களுக்குள்ளே அநேகமுகமாயிருந்து கர்மபலனைக் கொடுக்கிறவன் (ஸ்ரீதரர்); சிருஷ்டிசெய்யும் சதுர்முகபிரம்மா (ராமாநுஜர்); தரிக்கிறவனும், இரக்ஷிக்கிறவனுமிருக்கிற எங்கும் வியாபித்த முகாதி அவயவங்களையுடையவன் (இராகவேந்திரர்).

(4) விச்வதோமுகம்=பதினோராவது அத்தியாயம் - 11 சுலோ, 9 - வது அத்தியாயம் - 15, சுலோகம் பார்க்க. (ஸ்வா) (33)

34. 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌹𑌰𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑍍 𑌉𑌦𑍍𑌭𑌵𑌶𑍍𑌚 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌾𑌂 |
𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌚 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑍇𑌧𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 ||

34. (1) ம்ருத்யு: = ஸர்வஹர: = ச = அஹம் = உத்பவ: = ச = (2) பவிஷ்யதாம் | கீர்த்தி: = ஸ்ரீ: = வாக் = ச = நாரீணாம் = ஸ்ம்ருதி: = மேதா = த்ருதி: = க்ஷமா ||

𑌸𑌰𑍍𑌵𑌹𑌰𑌃, 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	சகலத்தையும் அபகரிக்கும் மிருத்யுவும்
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌾𑌂 𑌉𑌦𑍍𑌭𑌵𑌃	செல்வவந்தர்களாகப் போகிறவர்களுக்கு, ஓங்கும் செல்வமும்
𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂, 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃, 𑌶𑍍𑌰𑍀𑌃	ஸ்திரீகளுள், கீர்த்தியும், ஐசுவரியமும்
𑌵𑌾𑌕𑍍, 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃, 𑌮𑍇𑌧𑌾	வாக்கும், நினைவும், அறிவும்
𑌧𑍃𑌤𑌿𑌃, 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌚, 𑌅𑌹𑌂	தைரியமும், பொறுமையும், நானே.

ஸகலத்தையும் அபகரிக்கின்ற மிருத்யுவும் செல்வத்தை அடையப் போகிறவர்களுக்கு ஓங்கும் செல்வமும், ஸ்திரீ தேவதைகளில் கீர்த்தியும், ஐசுவரியமும், வாக்கும், நினைவும், மேதையும் அதாவது அறிவும், தைரியமும், பொறுமையும் நானே.

(1) மிருத்யு:—சம்ஹாரம் செய்பவர்களுக்குள்ளே சர்வசம்ஹாரகனாகிய மிருத்தியுவும் (ஸ்ரீதரர்); சகலப் பிராணிகளேயு மபகரிக்கிற மிருத்தியுவும் (ராமானுஜர்); மிருத்தியுவுக்குள் ளிருந்துகொண்டு சகலத்தையு மழிக்கிறவனும் (இராகவேந்திரர்).

(2) பவிஷ்யதாம்—சுபத்தை யடையத்தகுந்த நல்லப் பிராணிகளுடைய சுபப் பிராப்தியும் (ஸ்ரீதரர்).

(சங்கரர்) மிருத்யுவானது இரண்டு வகை. பொருள் முதலியவற்றை அபகரிப்பது ஒன்று; பிராணனை அபகரிப்பது மற்றொன்று. அவற்றுள் எது உயிரை அபகரிப்பதோ அது ஸகலத்தையும் அபகரிப்பது எனப்படுகின்றது. நான் அதுவாக இருக்கிறேன். அல்லது பிரளய காலத்திலே ஸகலத்தையும் நாசம் செய்வதால், பரமேஶ்வரன் ஸர்வஹாரன், அந்த பரமேச்வரனாக நான் இருக்கிறேன் என்றுவது கொள்ளலாம். நான் ஓங்கும் செல்வமாகவும் அதை அடைவதற்கு ஸாதநமாகவும் இருக்கிறேன். எவர்களுக்கு என்றால், இனிமேல் செல்வத்தை அடையப்போகிறவர்களுக்கு அதாவது செல்வத்தை அடையத் தகுந்தவர்களுக்கு. நாரீணாம் - ஸ்திரீகளுக்குள் எதனுடைய ஸம்பந்தம் கிஞ்சித் இருப்பதாகத் தொற்றுதல் மாத்திரத்தினாலேயே ஜனங்கள் தங்களை மிகப்பேறு பெற்றவர்களாக, அதாவது தங்களுக்கு ஸகலமும் கைகூடி விட்டதாக, எண்ணுகிறார்களோ அந்த கீர்த்தி, முதலிய இவ்வுயர்ந்த ஸ்திரீ தேவதைகளைக் குறிப்பதாகத் தோற்றுகிறது 'திருதி' என்பது மனதைக் கற்புநெறியில் நிறுத்தும் உறுதி.

(மத்துவர்) கீர்த்தி முதலிய ஏழுகளிலும் நான் அந்தர்வியாபியாக இருக்கிறேன் என்பது கருத்து

(ஸ்வா) இந்த சுலோகத்தில் "நாரீணாம் அஹம் கீர்த்தி:" என்பதற்கு ஸ்திரீ தேவதைகளுக்குள் கீர்த்தி முதலியவைத் தேவதைகளாக நான் இருக்கிறேன் என்று ஸ்ரீதரர், மது சூதன சரஸ்வதி, சங்கரானந்தர் முதலியவர்கள் அர்த்தம் செய்கிறார்கள். (34)

---

35. 𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮 𑌤𑌥𑌾𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌽𑌹𑌮𑍃𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃 ॥

35. ப்ருஹத்ஸாம = தயா = ஸாம்நாம் = காயத்ரீ = சந்தஸாம் = அஹம் । மாஸாநாம் = மார்கசீர்ஷ: = அஹம் = ருதூநாம் = குஸுமாகர: ॥

𑌤𑌥𑌾 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂, 𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮	அப்படியே ஸாமங்களில் ப்ருஹத் ஸாமமும்
𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌂, 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀, 𑌅𑌹𑌂	சந்தஸ்களில், காயத்திரியும் நான்
𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂, 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑌃	மாஸங்களுள் மார்கழி மாஸமும்
𑌋𑌤𑍂𑌨𑌾𑌂, 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃, 𑌅𑌹𑌂	ருதுக்களுள் புஷ்பிக்கும் காலமும் நானே.

அப்படியே ஸாமவேதத்தினுடைய கானங்களில் ப்ருஹத்ஸாமமென்கிற ஸாமமும், சந்தஸ்ஸுகளில் காயத்திரீ என்கிற சந்தஸ்ஸும், நான். மாதங்களில் மார்கழிமாதமும், ஆறு ருதுக்களில் புஷ்பங்களுண்டாகும் காலமாகிய வசந்தருதுவும் நானே.

(ஸ்வா) ஸாமங்களுள், 'ப்ருஹத்' என்னும் ஸாமம் சிறந்தது. காயத்திரீ முதலான 26 சந்தஸ்ஸுகளையுடைய ரிக்குக்களுள் நான் காயத்திரி என்னும் ரிக்காக இருக்கிறேன்.

(ஸ்வ) மாதங்களுக்குள், மார்கசீர்ஷமாஸம் நான் என்று பகவான் சொல்வதினால் அந்தமாஸம் விசேஷமென்று ஏற்படுகிறது. மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தோடுகூடிய பௌர்ணமி எந்த மாஸத்தில் வருகிறதோ அந்தமாஸம், மார்க்கசீர்ஷமாஸம் அதாவது மார்கழிமாதம் இதற்கு ஆக்ரஹாயணிகம், என்றும் பெயருண்டு. அதாவது ஹாயந: வருஷம், அக்ரம் துவக்கம் என்றால், வருஷம் துடங்குகிற முதல் மாசமென்பது அர்த்தம் - ஆதலால் முன் காலத்தில் இது வருஷத்தின் முதல் மாதமாக இருந்திருக்கிறது. இந்த மார்கழி மாதத்தில் தான் புது தான்யங்கள், நெல், முதலியவைகள் ஆகிறபடியாலும், இந்த புது தான்யத்தினால், இந்த மாதம் பௌர்ணமியில் ஸம்வத்ஸர முதலில், ஹவிர்யாகம் செய்கிறபடியாலும், வைத்திய சாஸ்திரப்படி இந்த ஹேமந்தருதுவில், பிராணிகளுக்கு, பலம் விருத்தியடைவதாக யிருப்ப

தாலும், இந்த மாஸம் விசேஷமென்றும் அதிக சீதமும், அதிக உஷ்ணமு மில்லாமல் சமமாயும் சுகமாயிருக்கக் கூடிய மாதம் என்றும் மதுஸூதன ஸரஸ்வதி முதலிய வியாக்கியாதாக்கள் சொல்லுகிறார்கள்.

முன் 8-வது அத்தியாயம் 17-வது சுலோகத்தின் கீழ்சொல்லி யிருக்கிற படி நம்முடைய ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாள் தைமாதம் முதலாக வுள்ள ஆறுமாதங்களாகிய, உத்தராயணம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளில் பகலாகிறது அவர்களுக்கு ராத்திரியாகிய மற்ற ஆறுமாதங்களில் மார்கழி கடைசியானதால் நமக்கு எப்படி பகலுக்கு முன் உள்ள இரவின் முடிவு விசேஷமான உஷக்காலமோ அப்படியே இந்த மார்கழிமாதம் தேவர் களுடை பகலாகிய உத்தராயணத்திற்கு உஷக்காலம், ஜபம், தபம் முதலிய வற்றிர்க்கு சிரேஷ்டமான காலமாதலால் பகவான் தான் இந்தமாஸம் என்று சொல்லுவதாகக் கொள்ளலாம்.

> கொாதண்டே ஸ்ரவஸி தநி ஷுத்த்ரேஷேகாரகாவபெ்தஃ ।
> ஸஹஸ்ர வார்ஷிகீபூஜா திநெநெகெந லஹ்யதெ ॥
> ஹெமந்தந்ஷ்யமெகாஸி நத்வ ஜகந்நாரிகாஃ ।

என்கிற பிரமாணத்தால் இந்த மாதத்தில் பூஜைசெய்வது மிகுந்த பலனோடுகூடிய தானதால் சிரேஷ்டமென்பது ஏற்படுகிறது.

மேலும் இந்த மாதத்தில் தான் கர்போட்ட ஆரம்பம் என்பது எல்லோ ரும் அறிந்த விஷயம். ஆனால் தத்கால அனுபவத்தில் மார்கழிமாதம் அவ் வளவு அநுகூல மற்றதாக விருப்பது பர்வங்களின் லக்ஷணம் வரவர மாறுப் பட்டு வருவதால் என்று தோற்றுகிறது. (35

---

36. த்யூதம் ச²லயதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் ।
ஜயோऽஸ்மி வ்யவஸாயோऽஸ்மி ஸத்த்வம் ஸத்த்வவதாமஹம் ॥

36. த்யூதம் = ச²லயதாம் = அஸ்மி = தேஜ: = தேஜஸ்விநாம் = அஹம் । ஜய: = அஸ்மி = வ்யவஸாய: = அஸ்மி = ஸத்வம் = ஸத்வவதாம் (1) = அஹம் ॥

அஹம் ச²லயதாம் த்யூதம்	நான் வஞ்சகர்களுடைய சூதாகவும்
தேஜஸ்விநாம், தேஜ: அஸ்மி	தேஜஸ்விகளுடைய தேஜஸாகவு மிருக் கிறன்
அஹம், ஜய:, அஸ்மி	நான் வெற்றியாக இருக்கிறேன்
அஹம் வ்யவஸாய:	நான் முயற்சியாகவும்
ஸத்வவதாம் ஸத்வம் அஸ்மி	சாத்துவிகர்களுடைய சத்துவகுணமாகவு மிருக்கிறேன்.

நான் பலவித மோசங்களுக்குள்ளே சூதாடலாகிற மோசமாகவும், தேஜஸ்ஸையுடையவர்களுடைய தேஜஸ்ஸாகவும், ஜயத்தையுடையவர்களுடைய ஜயமாகவும், பிரயத்தின முடையவர்களுடைய பிரயத்தினமாகவும், சாத்துவிகர்களுடைய சத்துவகுணமாகவும், இருக்கிறேன்.

(1) ஸத்வவதாம்=நல்ல மனதை யுடையவர்களுடைய மனமும் (ராமாநுஜர்) ; பலமுள்ளவர்களுடைய பலம் (இராகவேந்திரர்).

---

37. வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோ஽ஸ்மி பாண்டவாநாம் தநஞ்ஜய: ।
முநீநாமப்யஹம் வ்யாஸ: கவீநாமுசநா கவி: ॥

37. வ்ருஷ்ணீநாம் = வாஸுதேவ: = அஸ்மி = பாண்டவாநாம்=தநஞ்ஜய: । முநீநாம் = அபி = அஹம் = வ்யாஸ: = கவீநாம் = உசநாகவி: ॥

வ்ருஷ்ணீநாம், வாஸுதேவ:	யாதவர்களுக்குள், வாஸுதேவனாகவும்
பாண்டவாநாம், தநஞ்ஜய:	பாண்டவர்களுக்குள், தநஞ்ஜயனாகவும்
முநீநாம், வ்யாஸ:	முனிவர்களுக்குள் வேதவியாசராகவும்
கவீநாம், உசநாகவி:	கவிகளுக்குள்சுக்ரனென்ற கவியாகவும்
அஹம், அஸ்மி	நான் இருக்கிறேன்.

யாதவர்களுக்குள்ளே வாசுதேவனும், பாண்டவர்களுக்குள்ளே அர்சுனனும், முனிவர்களுக்குள்ளே வியாசரும், கவிகளுக்குள்ளே அதாவது சூக்ஷ்மதர்சிகளுக்குள்ளே சுக்ர கவியும் நானாகவே இருக்கிறேன்.

(சங்கரர்) வ்ருஷ்ணீநாம் என்றால் யாதவவம்சத்தில் தோன்றியவர்களுக்குள் நான் வாசுதேவன், உனது தோழனான இந்த நானேதான் தநஞ்ஜயன் நீயேதான். முனிவர்கள் என்பவர் ஆலோசிக்கும் தன்மையாய் ஸகலப் பொருள்களையும் அறிபவர்கள். கவிகள் என்றால் க்ராந்ததர்சிகள், கடந்து நிற்கின்றவற்றைக் காண்பவர்கள் சூக்ஷ்மதர்சிகள் அதாவது அதிருட்டமான வற்றை ஆராய்ந்து உணருபவர்கள்.

(ராமாநுஜர்) முநிகள் என்றால் வஸ்துக்களை ஆராய்ந்தறிந்த நிச்சய ஞானமுள்ளவர்கள் ; கவிகள் என்றால் வித்வான்கள். (37)

---

38. தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம் ।
மௌநம் சைவாஸ்மி குஹ்யாநாம் ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாமஹம் ॥

38. தண்ட: = தமயதாம் = அஸ்மி = நீதி: = அஸ்மி = ஜிகீஷதாம் । (1) மௌநம்=ச = ஏவ = அஸ்மி = குஹ்யாநாம் = ஜ்ஞாநம் = ஜ்ஞானவதாம் = அஹம் ॥

தமயதாம் தண்ட: அஸ்மி	தண்டிப்பவருள் தண்டனையா யிருக்கிறேன்
ஜிகீஷதாம், நீதி: அஸ்மி	ஜெயத்தை விரும்புகிறவர்களுள் நீதியாக யிருக்கிறேன்
குஹ்யாநாம், மௌநம் ச	ரகஸ்யங்களுள், மௌநமும்
ஜ்ஞாநவதாம், ஜ்ஞாநம்	ஞானிகளின் ஞானமும்
அஹமேவ அஸ்மி	நானாகவே இருக்கிறேன்.

தண்டிக்கிறவர்களுடைய தண்டனையும், ஜயிக்க இச்சையுள்ளவர்களுடைய சாமதான பேததண்டமென்கிற உபாயமும், இரகசியங்களுக்குள்ளே மௌநமும், தத்துவஞானிகளுடைய ஞானமும் நானே.

(1) மௌநம்=இரகஸ்யத்தை வெளிப்படுத்தாமலடக்க மௌனம் ஹேதுவாக விருக்கிறதாகையால், மௌனத்தை விசேஷமாகச் சொல்லியது (ஸ்ரீதரர்).

---

39. யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந ।
நததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் ॥

39. யத் = ச = அபி = ஸர்வபூதாநாம் = பீஜம் = தத் = அஹம் = அர்ஜுந। ந = தத் = அஸ்தி = விநா = யத் = ஸ்யாத் = மயா = பூதம் = சராசரம் ॥

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுநா!
ஸர்வபூதாநாம் ச	ஸகல பூதங்களுக்கும்
யத், பீஜம், அபி	யது விதையோ
தத், அஹம்	அது நான்
சராசரம்	ஜங்கம ஸ்தாவரமான
யத், பூதம், ஸ்யாத்	எந்தவஸ்து இருக்கிறதோ
தத், மயா, விநா, நாஸ்தி	அது என்னையன்றி இல்லை.

ஓ! அர்ஜுநா! சகல பூதங்களும் உண்டாவதற்கு காரணம் வித்து எதுவோ அது நான். ஜங்கமஸ்தாவரமான எந்தவஸ்து உள்ளதோ, அது என்னையன்றி இல்லை.

(சங்கரர்) ஸகலமான பொருள்களுக்கும் உத்பத்திகாரணமானவிதை அதாவது முளைக்கச் செய்வது எதுவோ, அது நானே. பிரகிருதத்தில் சொல்லிவந்த விஷயத்தை முடிக்கும் பொருட்டு தமது வைபவத்தின் சுருக்கத்தைச் சொல்லி முடிக்கிறார்:—ஜங்கமமாக வாயினும், ஸ்தாவரமாக வாயினும் எந்த வஸ்து உள்ளதோ அதெல்லாம் என்னையன்றி இல்லை என்றால் வியாபிக்கப் படாப்பொருள் ஆத்மா இல்லாததாகப் பாழாகவன்றோ நிற்கும். ஆகவே

எல்லாம் என்னையே ஆத்மாவாகவுடையன என்பது கருத்து. ஆத்மா இல்லாததாக ஒன்றும் இருக்கவே முடியாது என்பது தேர்ந்த பொருள்.

(ராமாநுஜர்) சேதனுசேதனமான சலகப் பிரபஞ்சமும் என்னைச் சரீரியாயும், சேஷியாயுமுடையதானதால், என்னை யன்றி யாதொரு பூதங்களுக்கு மிருப்பு கிடையாதென்பது கருத்து. (39)

---

40. நாந்தோऽஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப ।
ஏஷ தூத்தேஶத꞉ ப்ரோக்தோ விபூதேர்விஸ்தரோ மயா ॥

40. ந = அந்த꞉ = அஸ்தி = மம = திவ்யாநாம் (1) = விபூதீநாம் = பரந்தப । ஏஷ꞉ = து = உத்தேஶத꞉ = ப்ரோக்த꞉ = விபூதே꞉ = விஸ்தர꞉ = மயா ॥

ஹே பரந்தப	ஓ! பகைவரை தபிக்கச்செய்கிறவனே !
மம திவ்யாநாம்	என்னுடைய திவ்வியமான
விபூதீநாம்	வைபவங்களுக்கு
அந்த꞉ நாஸ்தி	முடிவு இல்லை
விபூதே꞉	விபூதிரூபத்தினுடைய
ஏஷ து விஸ்தர꞉	இந்த விரிவானது
உத்தேஶத꞉	ஏகதேசம் (அதாவது சுவல்பம்)
மயா ப்ரோக்த꞉	என்னால் சொல்லப்பட்டது.

ஓ! அர்ச்சுனு! அற்புதங்களான என்னுடைய விபூதி ரூபங்களுக்கு முடிவானது கிடையாது. விபூதி ரூபத்தினுடைய இந்த விஸ்தாரமானது, சுருக்கமாய் என்னாலே சொல்லப்பட்டது.

(1) திவ்யாநாம் = மங்களகரமான *(ராமாநுஜர்)*.

(சங்கரர்) ஸகலத்திற்கும் ஆத்மாவான ஈசுவரனுடைய திவ்வியமான வைபவங்கள் இவ்வளவு என்று சொல்லவாவது, அறியவாவது ஒருவனுலும் முடியாதன்ருே. (40)

---

41. யத்யத்விபூதிமத்ஸத்த்வம் ஶ்ரீமதூர்ஜிதமேவ வா ।
தத்ததேவாவகச்ச²த்வம் மம தேஜோம்ஶஸம்ப⁴வம் ॥

41. யத் = யத் = விபூதிமத் (1) = ஸத்வம் = ஶ்ரீமத் (2) = ஊர்ஜிதம் (3) = ஏவ = வா । த் = தத் = ஏவ = அவகச்ச² = த்வம் = மம = தேஜோம்ஶஸம்பவம் (4) ॥

விபூதிமத் ஶ்ரீமத்	பெருமஹிமையுள்ளதாகவாயினும் ஐசுவரியமுடையதாகவாயினும்

ஊர்ஜிதமேவ வா	உச்சாஹத்தோடு கூடியதாகவாயினும் (உள்ள)
ஸத்த்வம், யத் யத்	வஸ்து எதெதுவோ
தத் தத்	அதது
மம, தேஜோம்ஶ ஸம்பவமேவ	என்னுடைய தேஜஸினுடைய ஓர் அம்சத்தினுல் உண்டானதாகவே
த்வம் அவகச்ச	நீ அறிந்துகொள்.

மஹிமையுள்ளதாகவாவது (ஸ்ரீ) ஐசுவரியத்தை யுடையதாகவாவது, உத்ஸாஹத்தோடு கூடியதாகவாவது உள்ளவஸ்து எதெதுவோ அது எல்லாம் ஈசுவரனுன என்னுடைய தேஜஸின் ஓர் அம்சம் அதாவது ஒருபாகத்தினுல் உண்டானதாகவே நீ அறிந்துகொள்.

(1) விபூதிமத்= விபூதியோடுகூடின (சங்கரர்); என்னைத் தவிர வேறில்லாத (மத்வர்).

(2) ஸ்ரீமத்=ஸம்பத்துடைய (ஸ்ரீதரர், ராமாநுஜர், இராகவேந்திரர்).

(3) ஊர்ஜிதம்=உற்சாகத்தோடு கூடியவும் (சங்கரர்); சுபகாரியங்களைச் செய்ய எத்தினமுடையவும் (ராமாநுஜர்); அபிவிருத்தியை யுடையவும் (இராகவேந்திரர்).

(4) தேஜோம்ஶ ஸம்பவம்=என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானதாக (சங்கரர்; ராமாநுஜர்); கபிலர், இராமர், வாசுதேவர் முதலிய ரூபங்கள் பூர்ணமான ரூபங்கள் மற்றவைகள் அம்சங்கள் (மத்வர்). (41)

---

42. அதவா பஹுனைதேன கிம் ஜ்ஞாதேன தவார்ஜுன।
விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்னமேகாம்ஶேன ஸ்திதோ ஜகத்॥

42 அதவா = பஹுனா = ஏதேந = கிம் = ஜ்ஞாதேந = தவ = அர்ஜுந। விஷ்டப்ய = அஹம் = இதம் = க்ருத்ஸ்நம்=ஏகாம்ஶேந = ஸ்திதஃ = ஜகத்॥

ஹே அர்ஜுந	ஓ! அர்ஜுனு!
அதவா	அப்படிக்கின்றி
ஜ்ஞாதேந பஹுனா	அறியப்பட்ட, அனேகமான
ஏதேந, தவ, கிம்	இதனுல், உனக்கு, என்ன?
அஹம், இதம், க்ருத்ஸ்நம், ஜகத்	நான், இந்த, ஸகலமான, ஜகத்தை
ஏகாம்ஶேந	ஒரு அம்சத்தினுல்
விஷ்டப்ய, ஸ்திதஃ	தரித்துக்கொண்டு, இருக்கிறேன்.

ஓ! அர்ஜுநா! அறியப்பட்ட அனேகமான இந்த விபூதிகளினாலே உனக்கென்னப் பிரயோசனம்? நான் சகலமான இந்த ஜகத்தை ஒரு அம்சத்தினாலே வியாபித்துக்கொண்டு அல்லது, தரித்துக் கொண்டிருக்கிறேன்.

(சங்கரர்) ஓ! அர்ஜுநா! இத்தகைய அறிவுபோன்ற விஸ்தாரமான ஆனால் நிறைவற்ற அதாவது குறைவோடுகூடிய அறிவினால் உனக்கு ஆவதென்ன? நான் இந்த விஷயத்தை முழுவதும் சொல்லுகிறேன் கேள். நான் இந்த ஜகத் முழுவதையும் ஒரு அம்சத்தினால், ஒரு உருப்பினால் அதாவது பொருள் எல்லாவற்றினுடைய வடிவமாயுள்ள ஒரு பாதத்தினால் நன்றாகத் தாங்கிநிற்கிறேன். அவ்வாறே ‘பாதோஸ்ய விச்வா பூதாநி’ பொருள்களெல்லாம் இதனுடைய பாதகமாயிருக்கின்றன’ என்று மந்திர வர்ணம் கூறுகின்றது (தைத்திரீய ஆரணீகம் 3,—12 பார்க்க).

(ராமாநுஜர்) என்னுடைய கோடானுகோடி அம்சங்களில் ஒரு அம்சத்தினால் இந்தப் பிரபஞ்சம் வியாபிக்கப்பட்டு விளங்கிக்கொண்டிருக்கிறதென்று அறிந்து உபாசிப்பாயானால், அதுதான் முக்கியப் பிரயோஜனமென்பது கருத்து.

(ஸ்வா) பிரம்மகைவர்த்தபுராணம் இரண்டாவது பாகம் அத். 73. வராகபுராணம் முதலாவது பாகம் அத். 113. கூர்மபுராணம் உத்தரபாகம் அத். 7. பத்மபுராணம் சிருஷ்டிகாண்டம் அத். 36. ஸ்கந்தபுராணம் காசி காண்டம் பூர்வபாகம் அத். 21. இவைகளில் இந்த 10-வது அத்தியாயத்தைப் போலுள்ள விபூதியோகத்தைக் காண்க. (42)

* ஜ்ஞாநேந - என்று ஒரு பாடம், ஞானத்தினாலே என்று அர்த்தம் *(ராமாநுஜர்)*.

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
விபூதியோகோ நாம தசமோऽத்யாய:.
ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக
ப்ரஹ்மவித்தையாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே
விபூதியோகம் என்கிற
பத்தாவது அத்தியாயம்
முற்றிற்று.